Vol. XV. 1936—1937

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

பதினைந்தாம் சிலம்பு

இதழாசிரியர் கூட்டத்தலைவர்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை
யவர்கள், பி. ஏ.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்

தாது-ஈசுவரஹூ

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,
Tinnevelly & Madras

 [Price Rs. 3-8.

The Progressive Printers, 2/17, Coral Merchant St., Madras.

உள்ளுறை

[* இக் குறியிடப்பட்டவை இத் தொகுதியில் முடிவுபெறாது தொடர்வன.]

உருவப் படங்கள்



மயிலைத் திருவள்ளுவர் கோயில்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௧௫] தாது—ஆவணி [பரல்-௧

திருவாசகம்

கோயிற்றிருப்பதிகம்

சோதியாய்த் தோன்று முருவமே யருவா
மொருவனே சொல்லுதற் கரிய
வாதியே நடுவே யந்தமே பந்த
மறுக்கு மானந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் னிணையடி தந்தே.

பதவுரை:—

சோதியாய்த் தோன்றும் உருவமே (சிறப்புஇயலில்)—ஒளியாய் (அடியார்களுக்கு)த் தோன்றுகின்ற வடிவ முடையவனே

சொல்லுதற்கு அரிய அருவாம் ஒருவனே-அவ்வொளிவடிவமு மின்றி உருவமுடையவனென்று எவராலும் சொல்லமுடியாத ஒப்பற்ற தனிப்பொருளே

பந்தம் அறுக்கும் மா ஆநந்தம் கடலே-உயிர்களுடைய மலக்கட்டினை ஒழிக்கின்ற பேரின்பக்கடலே

ஆதியே நடுவே அந்தமே—(பொது இயலில்) உலகத்தைத் தோற்றுதற்கு முதலாயும் காத்தற்கு நடுவாயும் அழித்தற்கு முடிவாயுமிருப்பவனே

தீதிலா நன்மைத் திருவருட்குன்றே (உயிர்களுக்குப் பேரின்ப மளித்தற்கண்) தீது கலவாத நலமே செய்தற்குக் காரணமா யமைந்துள்ள திருஅருள் மலையே

திருப்பெருந்துறை யுறை சிவனே—திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் சிவபெருமானே

வந்து நின் இணைஅடி தந்து—(திருப்பெருந்துறைக்கு நீ அந்தணன் வடிவில்) வந்து உன் இரண்டு திருவடிகளையும் (எனது தலைமேல்) வைத்து ஆண்டருளிய பின்

நீ போவதோர் வகை யாது எனக்கு அருளாய்—நீ என்னைத் தனியே விட்டுப் பிரிந்து போவதற்குரிய முறைமை என்ன என்று எனக்குச் சொல்லியருளாய்.

விளக்கவுரை :—

சோதியாய்த்தோன்றும் உருவமே—மெய்யுணர்வுடைய அடிகளுக்கு உருவம் ஒளிக்குள் சூக்கும சத்தியாய் மறைந்து ஒளி மாத்திரம் அவரது அகக் கண்ணுக்குத் தோன்றுதலால் சோதியா முருவமே என்னாது 'சோதியாய்த் தோன்றும் உருவமே' என்றார்.

புறக் கண்ணால் உலக உருவங்களை நோக்குவார்க்கு அவ்வுருவங்கள் பூதாகாச ஒளியால் காணப்படுகின்றன. அகக்கண்ணால் நோக்கும் அடிகளுக்கு உலக உருவங்களெல்லாம் தூவெளியில் (ஞான ஆகாசத்தில்) சூக்குமசத்திகளாக அடங்கித் தோன்றுமே அன்றி உலக உருவங்களாகத் தோன்றா. இக்கருத்தைத் திருமூலர் திருமந்திரம் 2681-வது பாட்டில்,

"ஒளியை யறியி லுருவு மொளியும்
ஒளியு முருவ மறியி லுருவாம்
ஒளியி லுருவ மறியி லொளியே
ஒளியு முருக வுடனிருந் தானே"

என்று கூறியருளினர்.

அருவாம் ஒருவனே—அருவம் என்ற சொல் இங்கே உருவமின்மையைக் குறிக்கிறது.

மேலே கூறப்பட்ட தூவெளி ஒளியும் (ஞானகாச ஒளியும்) அதற்கு உள்ளொளியாய் இறைவனோடு பிரியாமலிருக்கிற அருட்சத்திக்குள் அடங்கும் இயல்புடையது. அவ்வாறு தூவெளி ஒளியானது

அருட்சத்திக்குள்ளடங்கி யிருக்குங்கால் இறைவன் அருட்சத்தியோடு அத்துவிதமாய்க் கலந்து ஒருவனேயாய் இருத்தலால் 'அருவாம் ஒருவனே' என்றார். அருட்சத்தியோடு அத்துவிதமாய்க் கலந்திருக்கிற இறைவன் இன்ன உருவமுடையவன் என்று சொல்லப்படாதவன் ஆதலின் 'சொல்லுதற்கரிய அருவாம் ஒருவனே' என்றார். அருட்சத்தியாகிய பராசத்தி தூவெளி ஒளிக்கு உள்ளொளியாயிருக்கிறது என்பதைத் திருமூலர் திருமந்திரம் 2388-வது பாட்டில்,

"அண்டங்க ளேழுங் கடந்தகன் றப்பாலும்
உண்டென்ற பேரொளிக் குள்ளா முள்ளொளி
பண்டுறு நின்ற பராசத்தி யென்னவே
கொண்டவ னன்றிநின் றானெங்கள் கோவே"

என்று கூறியருளினர்.

பந்தம் அறுக்கும் மா ஆநந்தக்கடலே—தூவெளிஒளி தன்கண் அடங்கியிருக்கும் அருட்சத்தியி னொளியி லொடுங்கிய உயிர் கட்டு முழுவதும் ஒழிந்து இறைவனில் அடங்கிப் பேரின்ப முணர்தலால் 'பந்தமறுக்கும் மா ஆநந்தக்கடலே' என்றார். ஆநந்தமானது அளவிலடங்காத தாதலின் (Infinite Bliss) 'மா ஆநந்தக் கடலே' என்றார்.

ஆதியே நடுவே அந்தமே—ஆதி நடு அந்தம் என்பன இறைவன் உலகத்தைத் தோற்றுவித்துக் காத்து அழிக்கும் முத்தொழில்களையும் குறிக்கின்றன. முத்தொழில்களைச் செய்தல் இறைவனுடைய பொது இயல். "ஆதியனு யந்தம் நடுவாகி யல்லானே" என்று சிவபுராணம் அகவலிலும் 'முந்திய முதல் நடு இறுதியுமானாய்' என்று திருப்பள்ளி யெழுச்சி 8-வது பாட்டிலும் அடிகள் கூறியருளினமை காண்க.

தீதிலா நன்மைத் திருவருட்குன்றே—இஃது இறைவன் தீவிரதரசத்திநிபாதமடைந்த உயிர்களுக்குப் பேரின்பமளித்தலாகிய அநுக்கிரகத் தொழிலைக் குறிக்கிறது. இத்தொழிலை உயிர்களுக்குச் செய்தலில் அவன் மறக்கருணை சிறிதுமின்றி அறக்கருணையே உடையனாதலான் 'தீதிலா நன்மைத் திருஅருள்' என்றார். அவனது கருணை உயிர்களுக்கு அருள் செய்தலில் என்றும் மாறாது சலிப்பில்லாத நிலையை உடையது ஆதலின் 'திருஅருட் குன்றே' என்றார்.

இணை அடி தந்து—தந்தபின் என்பது தந்து எனத் திரிந்துநின்றது. ஏ-அசை.

நீ போவதோர் வகை யாது எனக்கருளாய்—வகை என்பது இங்கே முறைமையைக் குறிக்கிறது. அடிகள் தம்மை இறைவன் திருப் பெருந்துறைக்குவந்து ஆண்டருளியபின் தம்மை அடியார் கூட்டத்தோடு உடன்கூட்டிச் செல்லாது உலகிலிருக்கும்படி விட்டு விட்டுப் பிரிந்துபோனது என்ன முறைமை என்று அடிகள் இறைவனைக் கேட்கின்றார். தமது பிரிவாற்றாமையை அடிகள் வாழாப்பத்து முதலிய பல பதிகப் பாட்டுக்களிற் கூறியிருக்கின்றார். இந்தப்பாட்டிலும் அவர் தமது பிரிவாற்றாமையைக் கூறுகின்றார்.

'பார்பதமண்ட மனைத்துமாய்' என்ற முதற்குறிப்புப் பாட்டிற் போல இந்தப்பாட்டிலும் அடிகள் மூன்று ஒளிகளையுங் கூறுகின்றார். அடிகள் இறைவனைச் 'சோதியாய்த்தோன்றும்' உருவமே என்று விளித்தலால் சத்தின் ஒளியும், 'அருவாம் ஒருவனே' என்று விளித்தலால் சித்தின் ஒளியும், 'பந்தமறுக்குமானந்த மாகடலே' என்று விளித்தலால் ஆநந்தத்தின் ஒளியும் கூறப்பட்டன. இம்மூன்று ஒளிகளும் முறையே மலம் நீங்கிய ஒளிவிளங்கும் அறிவையும், பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கும் அன்பையும், பேரின்பமடைதலாகிய செயலையும் குறிக்கின்றன. இவை பேரின்ப அநுபோக இலக்கணங்களாம்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

உலகப் பெருநூல்நிலையங்கள்

மாஸ்கோவிலுள்ள லெனின் அரசாங்க நூல் நிலையத்தில் உள்ள புத்தகங்களின் தொகை 6,000,000. லெனின்கிராட் பொதுநூல் நிலையத்திலுள்ள நூல்களின் தொகை 4,832,948. பாரியிலுள்ள பிப்ளியோதே நேஷனல் என்ற நூல் நிலையத்தில் 4,000,000 நூல்கள் உள. ஏறக்குறைய அதே தொகையான நூல்கள் பிரிட்டிஷ் மியூசிய நூல் நிலையத்திலுள்ளன. பிற சில நூல் நிலையங்களிலுள்ள நூல்கள்:—

ஸ்டர்லிங் மெமோரியல் நூல் நிலையம், ஏல்,	3,500,000
வாஷிங்டன் நூல் நிலையம்	2,500,000
பெர்லின் ஸ்டேட் நூல் நிலையம்	2,300,000
மூனிச் ஸ்டேட் நூல் நிலையம்	1,670,000
போடெலியன் நூல் நிலையம், ஆக்ஸ்போர்டு	1,250,000
யூனிவர்ஸிட்டி நூல் நிலையம், கேம்பிரிட்ஜ்	1,250,000

புதுக் கவிகள் - Original Poetry

தமிழ்த் தெய்வம் பராவல்

[திரு. பெ. கோவிந்தன் அவர்கள்]

1. வழிவழித் தமது நாடுக ளாண்டு
வடபுலங் காத்திசை கொண்ட
செழியநற் சோழ சேரரை யீன்று
சிறப்புறுஞ் செந்தமிழ்ச் செல்வீ
மொழிமலர் புனைந்து திருவடி தொழுதும்
முன்புபோல் வன்மையும் அறிவும்
ஒழிவரும் உழைப்பும் வென்றியும் எமக்கீந்
துலகினை யாளுமா றருளாய்.

2. இல்லையென் றுரையா திரவலர் புலவர்க்
கீந்தவேள் பாரியே முதலாம்
நல்லிசை வள்ளல் எழுவரை யீன்று
நலம் பெறுஞ் செந்தமிழ்ச் செல்வீ
முல்லைநல் மலரால் திருவடி தொழுதும்
முத்தமிழ் வளர்ச்சிக்கு நெஞ்சக்
கல்லையு முருக்கிச் செல்வங்கள் நல்கிக்
களிக்குமா றுலகினுக் கருளாய்.

3. பண்டங்கள் கொண்டு காலினும் கலத்தும்
பலநிலம் புகுந்துவிற் றரும்பொன்
கொண்டிவண் மீண்ட வணிகரை யீன்று
குலவுறுஞ் செந்தமிழ்ச் செல்வீ
இண்டைகள் கொண்டு திருவடி தொழுதும்
எமதுபல் தொழிலையும் பெருக்கிப்
பண்டுபோல் என்றும் வாணிபம் புரிந்து
பலபொருள் கொள்ளுமா றருளாய்.

4. பட்டுநூல் மயிரால் பார்மிசை முதலில்
பலவுடை நெய்தலே முதலாம்
ஒட்பமார் தொழில்செய் தவர்களை யீன்று
உயர்வுறும் சேந்தமிழ்ச் செல்வீ
வெட்சிமா மலரால் திருவடி தொழுதும்
வினைசெயுந் திறமையும் வினைக்கு
நுட்பமா ரறிவுஞ் செப்பமார் பயனும்
நூலறி வோடெமக் கருளாய்.

5. வள்ளுவன் னெடுதொல் காப்பியன் இளங்கோ
வண்டமிழ்ச் சாத்தனே முதலாம்
தெள்ளிய புலமைச் செல்வரை யீன்று
சிறப்புறுஞ் சேந்தமிழ்ச் செல்வீ
கள்ளவிழ் மலரால் திருவடி தொழுதும்
கள்ளமி லுள்ளமாம் வயலில்
ஒள்ளிய கல்வி விதைவிதைத் துணர்வாம்
உயர்பயிர் விளைத்தெமை யுயர்த்தாய்.

6. நல்லிசைப் புலவ ராடவர் போன்று
நயமிகுந் தொடைபல தொடுத்த
மெல்லியல் மகளிர் பற்பலரீன்று
மேம்படுஞ் சேந்தமிழ்ச் செல்வீ
மல்லிகை மலரால் திருவடி தொழுதும்
மகளிர்க்கு மடமையா மிருளைக்
கல்வியாம் விளக்கா லகற்றிநூ லுணர்வுக்
கதிரினால் நூற்கலை காட்டாய்.

7. பிள்ளைகள் பெற்று மகிழ்தலிற் பகைக்குப்
பிறக்கிடா திறந்தபிள் ளையைக்கண்
டுள்ளுவப் புற்ற தாயரை யீன்றிங்
குயர்வுறுஞ் சேந்தமிழ்ச் செல்வீ

வெள்ளை நன் மலரால் திருவடி தொழுதும்
வீரத்தைப் பாலூட டூட்டிப்
பிள்ளையை வளர்க்கும் முறையினை யிந்நாட்
பெண்களுக் குளமகிழ்ந் தருளாய்

8. பிறப்பினுள் பொருளே கடவுளாம் மக்கட்
பிரிவின ரொருகுல மென்னும்
அறத்திற முணர்ந்த அறிஞரை யீன்றிங்
கழகுறுஞ் செந்தமிழ்ச் செல்வீ
நிறத்துநீள் மலரால் திருவடி தொழுதும்
நினைப்புக்கும் வாழ்க்கைக்கும் ஒவ்வாத்
திறத்தினைப் போக்கி அகத்தினும் புறத்துஞ்
செம்மையோ டிருக்குமா றருளாய்.

9. ஆரியப் படையைப் பலகளத் தோட்டி
அடிபணித் தருளினால் விடுத்த
சீரிய தானை வேந்தரை யீன்று
சிறப்புறுஞ் செந்தமிழ்ச் செல்வீ
நாரிடு மலரால் திருவடி தொழுதும்
நற்றமிழ் நாட்டிற்கும் நினக்கும்
பேரிடர் புரியும் பூரியர் தம்மைப்
பிறக்கிட எமக்கருள் புரியாய்.

10. அறஞ்செயு முறையும் பொருள்செயு முறையும்
அன்பினு லின்புறு முறையும்
திறம்பட வுரைத்த தேவரை யீன்று
சிறப்புறுஞ் செந்தமிழ்ச் செல்வீ
நறுஞ்சுனை மலரால் திருவடி தொழுதும்
நற்றமிழ் நாடும் அந்நாட்டின்
புறங்களுங் குறளின் நெறிவழி யொழுகிப்
பொய்யெலாம் போக்குமா றருளாய்.

தமிழும் இந்தியும்

[ஈழத்துச் சிவாநந்த அடிகளார்]

இப்போது இரண்டு மூன்று ஆண்டுகளாக நந் தமிழகத்தில், வட நாட்டில் ஒரு சாராரால் பேசப்படும் 'இந்தி' என்னும் மொழியைப் பரப்புதல் செய்வான் சிலர் கொண்டுள்ள பயனற்ற கிளர்ச்சியைக் கண்டு அவர்தம் அறியாமைக்காகப் பெரிதும் வருந்தி, இதனடியிற் காணப்படும் என் உள்ளக்கிடக்கைகள் சிலவற்றை வெளியிட்டு நம் மக்கட்குப் பயன் படுத்த வேண்டுமென்ற பேரவாவானது என்னை அறியாமலே என் உள்ளத்தில் நுழைந்துவிட்டது. எனவே, இவ்வித கிளர்ச்சி செய்வதன் நோக்கம் யாதென வினவுபவர்கட்கு, அவர்கள், இப்போது பல்வேறு வகைகளிற் சிதறிக் கிடக்கும் நம் இந்திய மக்கள் அவரவர்களின் குறைபாடுகளை ஒருவருக்கொருவர் எடுத்தியம்பி, அக்குறைகளை நீக்கிக் கொள்ளுதற்கு இமயமலைக்கும் குமரி முனைக்கும் இடையே வாழும் மக்களுக்குப் பொதுவான ஒரு மொழி இல்லை என்றும்; அதனாலேயே மக்கள் கவலையும் வறுமையும் நிறைந்து, பிறருக்கு அடிமைகளாயும். தம் வாழ்க்கைக்கு இன்றியமையாத நலன்களைப் பெறமுடியாதவர்களாயும் இருக்கிறார்களென்றும் இன்னும் பொருத்தமற்றதும் பொருளற்றதுமான பலவகை மேற்கோள்களைக் காட்டியும் விடை அளிக்கின்றார்கள்.

இனி, இவர்கள் கூறுவதுபோல இந்தியையே நாவலந்தீவிற்குப் பொதுமொழியாக ஏற்படுத்தி அதைக் கற்று அதன்வழித்தாய் மக்கள் தம் குறைகளெல்லாம் நீங்கப்பெற்று நன்மைகள் எய்தப் பெறலாம் என்று கருதுவதானது "மலையைக் கல்லினால் எலியைப் பிடிக்கலாம்" என்று நினைப்பதை ஒத்திருக்கின்றது. நிற்க.

பொதுவாக, மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட குறைகளைத் தங்களை ஆளும் அரசரிடமே முறையிட்டு அக்குறைகள் நீங்கப்பெற்றுத் தாம் விரும்பிய நலன்களை அடைவதென்று பண்டைய சரித்திரங்களால் அறியக்கிடக்கின்றது. அரசரை நேரிற் கண்டு தம் குறைகளைச் சொல்லமுடியாதவர்கள் அரசரின் அமைச்சர் வழியாலும், அதுவும்முடியாதவர்கள் குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசரால் அதிகாரம் பெற்ற தலைவர்களாலுமே தங்கள் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ள இயலுமென்பதே பொருந்தும்.

அங்ஙனமன்றி. இப்போது இவர்கள் கூறுவதுபோல மக்களெல்லாரும் ஒரு பொதுமொழியைக் கற்று அதன்வழித்தாய் நலமடையப் பெறலாமென்பதும், மக்கள் ஒருவருக்கொருவர் தங்கள் குறைகளைச் சொல்லுவதினால் அவர்கள்தம் குறைபாடுகள் நீங்கிவிடுமென்பதும் எவ்விடத்தும் எக்காலத்தும் நாம் கண்டுங் கேட்டுமில்லாதனவாம்.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் கருவூரில் உள்ள குடிகள் தங்களுக்கிருக்கும் குறைகளைக் கருவூரிலுள்ள தலைவரிடம் முறையிட்டு நீக்கிக்கொள்ள முடியுமே யொழிய. கருவூரில் உள்ளவர்கள் வடநாட்டில் லாகூரிலுள்ள தலைவரிடம் தங்கள் குறைகளைச்சொல்லி நீக்கிக்கொள்ள முடியாதென்பது எப்பேர்ப்பட்டவர்களுக்கும் நன்கு விளங்குவ தொன்றன்றோ! அன்றியும், கருவூரிலுள்ளவர்கள் லாகூரிலுள்ள தலைவரிடஞ்சென்று முறையிட்டால், அவர் "நீங்கள் உங்கள் குறைகளை உங்கள் ஊரிலுள்ள தலைவரிடமே சொல்லி நீக்கிக்கொள்ளுங்கள்" என்று கூறுவரே அல்லாமல் தாம் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ளமாட்டார் என்பதும், அப்படி அவர் அப்பொறுப்பை ஏற்று நடத்துவதென்று ஒப்புக்கொண்டால், உடனே நாட்டின் தலைவர்களுக்குள் பிளவுகள் ஏற்பட்டுப் பெரிய சச்சரவு உண்டாகுமென்பதும் ஒருதலை.

ஆனால், இப்பொழுது நம்மை ஆளும் அரசினர் பண்டைய அரசர் போன்று குடிகள் முறையிடும் குறைபாடுகட்குச் செவி சாய்க்காது இருக்கின்றார்களே என்று சொல்லுவீர்களானால், அங்ஙனம் அவர்கள் இருப்பதற்குக் காரணம் நம் நாட்டுக்கு நலம் பல செய்பவர்களென்று நம்பி நம்மவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் கவனக் குறைவும், ஆற்றலின்மையும், தன்னலப் பிரியமுமே யொழிய, அரசர்பால் குற்றம் சுமத்துவதும் அவர்தம்மைக் குறைகூறுவதும் தவறாகும்.

நான் இங்ஙனம் கூறுவதினின்றும் தமிழ் மக்கள் இந்தி முதலிய அயல்மொழிகளைக் கற்கக் கூடாதெனச் சொல்லுவதாகப் பொருள் படுத்தி விடக்கூடாது. நம் மக்கள் தாய்மொழியாகிய தமிழைத் திருந்திய அறிவு விளங்கக் கற்றபின்பே வேண்டுமானால் பிறமொழிகளையுங் கற்கலாமென்பதே எனது நோக்கம்.

நந் தமிழ் மக்களுள்ளும் தாய் மொழியைப் படித்தவர்கள் நூற்றுக்கு மூன்று நாலு பேர்தான் காணப்படுகிறார்கள்; ஆகையால் முதலில் தாய் மொழியைப் படித்து அதில் திருந்திய அறிவை அடைந்தபின் இந்தியைப் படியுங்கள் என்ற கிளர்ச்சியை நம்மவர்கள் கடைப்பிடிப்பார்களானால், இப்போது ஏற்பட்டிருக்கும் நாட்டு வறுமை நகர்ந்து பலதிறப்பட்ட நலன்களை நம் மக்கள் பெற்று இனிது வாழ்தல் முடியுமென்பதும் ஒருதலை.

எனவே, என் உள்ளத்தில் நிகழ்ந்த அடியிற் காணப்படும் ஐயப்பாடுகளுக்குக் கற்று அறிவிற் சிறந்தோர் தக்க சான்றுகளுடன் தெளிவான விடைகள் எழுதி உதவுவதோடு, நான் இக்கட்டுரையில் எழுதியவற்றின் பொருட்களை நன்கு ஆராய்ந்து, நம் நாடு முன்னேற்றமடையக் கூடிய முறையில் தக்க நெறிகளைக் கையாண்டு வருவார்களானால் அவை எல்லார்க்கும் பெரும் பயன் தருவதாகும்.

1. தாய்மொழியைக் கல்லாது வேறு அயல் மொழிகளைக் கற்று அவற்றால் திருந்திய அறிவைப்பெற முடியுமா?

2. தமிழக மருங்கினருள் நூற்றுக்கு எத்தனைபேர் தம் தாய் மொழியைக் கற்றிருக்கின்றனர்? அவருள்ளும் செவ்விதான முறை

யில் தமிழைக் கற்றுத் திருந்திய அறிவைப் பெற்றுள்ளவர்கள் ஆயிரத்துக்கு எத்தனை பேர் இருக்கின்றனர்? அங்ஙனம் ஒழுங்கான கல்வி படித்தவர்கள் நூறாயிரவரில் ஒருவர்தான் காணப்படுவர் என்றால், இப்போது இந்தி முதலிய அயல் மொழிகளைக் கட்டாயம் கற்கத்தான் வேண்டுமென்று கூச்சலிடுபவர்களது வெற்றாரவாரத்துக்கு அறிவாப்புக் கொடுத்து அவ்வயல்மொழிகளின் மணம் நந் தமிழ்மக்கள் வாழும் இடங்களில் வீசப்பெறாது தொலைவில் அகலும்படி செய்ய வல்ல போதிய தமிழறிஞர் ஆங்காங்கு அவ்வப்பொழுது காணப் பெறாமையே என்றும், அங்ஙனம் காணப்படும் ஒரு சில அறிஞர்க்கும் தக்க உதவி அளித்து ஆதரிப்போர் இல்லாமையே என்றும் நான் சொல்லுவதைத் தடுப்பவர்களும் உண்டா நந் தமிழகத்தில்?

3. நந் தாய்மொழியாகிய தமிழைப் படித்து அதன் வழியாகப் பெறமுடியாதது யாதாயினும் உளதா? அங்ஙனம் உளதாயின் அவை யாவை?

4. தமிழகத்தார் வடநாட்டவருள்ளும் ஒரு சிலராற் பேசப்படும் "இந்தி" என்னும் அயல்மொழியை எதன்பொருட்டுக் கற்க வேண்டும்?

5. பழத்தைவிட்டுப் பச்சைக் காயைத் தின்பது போல, நாவினாற் சொல்லுதற்கு எளிதாயும், செவியினாற் கேட்பதற்கு இனிதாயும், மனத்தினால் நுகர்வதற்கு மகிழ்ச்சியைத் தருவதாயும் உள்ள தீஞ்சுவைத் தமிழை விட்டு, நாவினாற் சொல்லுதற்கு வலிதாயும், செவியினாற் கேட்டற்கு உரப்புதல், கனைத்தல் முதலிய வல்லோசைகளை உடைத்தா யிருத்தலால் துன்பமாயும், மனத்தினால் நுகர்வதற்கு எவ்வித நலனையும் தரவல்லதல்ல வாகையால் வெறுப்பாயும் இருக்கின்ற இந்தியைக் கல்லாததினால் நந் தமிழ்மக்கள் நடாத்தும் இம்மை மறுமை வீடுகட்குரிய நெறிகட்கு இன்றியமையாத நலனைத் தரவல்ல யாதாயினும் ஒன்று "நான் எனது இன்ப நலத்தை அவர்கள் மாட்டுச் செலுத்த முடியாத நிலைமையில் இருக்கின்றேன்" என்று முறையிடுகின்றதெனை இப்போது இந்தியைக் கட்டாயங் கற்கத்தான் வேண்டுமென்று கூறுபவர்கள் தங்களின் நுணுகிய ஆராய்ச்சியால் அறிந்தார்களா?

6. அவர்கள்தம் ஆராய்ச்சி அங்ஙனமாய் அவர்களது அறிவில், "இந்தி" கட்டாயம் கற்கவேண்டியதென எழுந்த நோக்கமாகிய முளையானது தான் வளர்ந்தோங்குவதற்குத் தடையாக, நிலைபெற்ற தமிழ் என்று சொல்லப்படும் பெரிய கற்பக தருவானது நந் தமிழக முழுவதும் சீரிய இன்பத்தைத் தரவல்ல தனது குளிர்ந்த நிழலைப் பரப்பி நிற்பதால், அது ("இந்தி" கட்டாயம் கற்கவேண்டிய தொன்றென எழுந்த நோக்கமாகிய முளை) வாடி வதங்கித் தனது பயனை அளிக்க இயலாது போவதோடு, இவ்வித ஆராய்ச்சிக்காரரும் நிலைபெற்ற தமிழ்த் தாயின் புதல்வரால் "ஏ! ஏ! இவர்கள் அறிவிருந்தவாறென்னை!" என்று எள்ளி நகைக்கப் படுவார்களென்றும் கூறுவதில் என்ன குற்றம் இருக்கிறது?

7. தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழைக் கல்லாது இந்தி முதலிய அயல் மொழிகளைப் படித்து அவற்றிலே தம் வாழ்க்கையை நடாத்தி அதன்வழித்தாய் முன்னேற்ற மடைந்த தமிழ் மக்கள் யாராயினும் உண்டாயிருந்தால், அவர்கள் யார்? எக்காலத்தில் எவ்வித முன்னேற்றத்தை அடைந்தார்களென்பதைத் தக்க சான்றுகளுடன் விளக்கிக்காட்டுக.

8. அறிவாற்றலிற் சிறந்து விளங்கிய வடநாட்டவருள் ஒருவரான சுவாமி விவேகானந்தா அவர்களும் தாம் அமெரிக்காவில் இருந்த காலத்தில், அங்குள்ளவர்க்கு நாவலந் தீவின் பெருமையை எடுத்துக்காட்டுதற் பொருட்டு அவர் ஆராயவேண்டியிருந்த நூல்கள் பலவற்றுள் உபநிடதமும் ஒன்றாயிருந்ததால், அவ்வுபநிடதப் பொருள்களை எல்லாம் ஒருங்கமைத்து ஒரே புத்தகமாக அச்சிடப் பெற்றிருப்பது தமிழ்மொழி ஒன்றிலேதா னென்றும், அப்படிப்பட்ட புத்தகமும் மைசூர் அரச அவைப் புத்தக நிலையத்தில் இருக்கின்றதென்பதைத் தாம் முன் மைசூருக்குச் சென்றிருந்த பொழுது பார்த்துள்ள நினைவு தோன்றலும், உடனே அப்புத்தகத்தைத் தமக்கு அனுப்பி உதவுமாறு அரசருக்கு ஒரு கடிதம் எழுதிப் பெற்றதோடு, சென்னையின்கண் உள்ள சில தமிழறிஞர்கட்குத் தமிழ் எழுத்துக்களின் ஒலி வடிவு முதலியனவற்றை எழுதி அனுப்புமாறு எழுதிப் பெற்றும், கற்றற்கு மிக எளிதாயுள்ள இனிய தமிழை விரைவில் கற்று, அதன் வழித்தாய் நம் நாட்டைப்பற்றியும், நம் மக்களின் சீரிய ஒழுக்கங்களைப் பற்றியும் செவ்வனே சொல்லி அவர்கள் எல்லாரையும் உவகைக் கடலுள் ஆழ்த்தின ரென்றும், அவருடைய சரித்திரத்தினுலே வெள்ளிடை மலைபோலத் தெள்ளிதில் அறியக் கிடக்கின்றதென்பதை இப்போது இந்தியைப் படிக்கத்தான்வேண்டுமென்று வாய்ப்பறை அறைபவர்கள் ஏன் தெரியாது போய் விட்டார்கள்?

9. தமிழ்த் தாயின் அருமந்த குழந்தைகளாகிய திருக்குறள், நாலடியார் போன்ற ஒரு நூலாவது வேறு எந்த நாட்டின் எந்தமொழியிலாவது இருக்கின்றதெனச் சொல்ல யாராவது முன்வருவார்களா? அல்லது திருக்குறள் மொழிபெயர்க்கப்பட் டிருப்பதுபோல வேறு எந்த மொழியின் நூலாவது பல வேறு நாட்டின் பல்வேறு மொழிகளாற் சிறப்பிக்கப் பெற்றும், எல்லாரும் தத்தம் வேதம் என்று சொல்லும் மாண்பு வாய்ப்பப் பொருள் செறியப் பெற்றும் அங்ஙனம் மொழி பெயர்க்கப்பட்டுச் சிறப்புற்று விளங்குகின்றதா?

10. "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் பாட்டு உமச்சோமற்றச் சமயமெங்குமாம்" என்று எமது கண்ணுடைய வள்ளல் கூறியதற்கேற்ப அறம், பொருள், இன்பத்தைப் பயப்பதாயும், வீடு பேற்றினைத் தரவல்லதுமாகிய நன்னெறிகளைத் திருக்குறளாகிய தமிழ் மறையில் காண்பதுபோல வேறு எந்த மொழியின் எந்த நூலிலாவது காணுதல் இயலாதென்பதை மறுத்துச்சொல்ல எவரேனும் முன்வருவார்களா?

11. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியாரும்; "Sage Tiruvalluvar should not be styled the unknown sage of Mylapore, for he has long been known far beyond the borders of his Mother Country"—Prof: M. WINTERNITZ. அதாவது, "திருவள்ளுவ முனிவரை மைலாப்பூரைச் சேர்ந்த யாரோ ஒருவர் என்று கூறுதல் தகாது; அவர் புகழ் அவர் பிறந்த நாட்டைக்கடந்து தொலைவிலுள்ள வெளிநாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே பரவிவிட்டது" என்று பேராசிரியரான வின்டர்னிட்ஸ் துரை அவர்களும்; "To those, who labour for the salvation of the Tamil people, the Kural must be a work of peculiar nay, intense interest"—Rev. Dr. J. LAZARUS. அதாவது, "தமிழ் மக்களின் விடுதலைக்காகப் பாடு படுவோர்க்குத் திருக்குறள் தனிப்பட்ட பேருதவி நல்குவதாகும்" என்று ரெவரண்டு, டாக்டர் ஜே. லாசரஸ் அவர்களும் இன்னும் பல மேனாட்டு அறிஞர்களும் புகழ்ந்து போற்றியதுபோல வேறு எம்மொழியின் நூலாவது போற்றப்பட்டதுண்டா?

திருக்குறளின் பெருமையை எடுத்தியம்ப வேண்டின், அதற்கென ஒரு தனி நூல் எழுதினாலன்றி இயலாது.

இன்னும், நந் தமிழின் பெருமையைப் பற்றி, இராமபிரான் கிட்கிந்தையிலிருந்து இலங்கைக்கு அனுமாரைத் தூது போக்கிய காலத்தில், அனுமாரைப் பார்த்து "நீ போகவிருக்கும் வழியிலுள்ள தமிழ் நாட்டின் ஊடே செல்ல வேண்டா மென்றும், சென்றால் அவ்விடத்தவர்கள் பேசும், படிக்கும், பாடும் இனிய தமிழ்ச் சுவை உன் செவியிற் பட்டால் நீ அதில் இலயப்பட்டு எனது வேலையை மறந்து விடுவா யென்றும், தமிழ் ஓசை உன் செவியிற் படாத தொலைவிற் போக வேண்டும்" என்றும் தமிழின் சிறப்பை இராமபிரான் எடுத்துச் சொன்னது போல வேறு யார் சொன்னார்கள்?

எனவே, இங்ஙனம் அளவிட்டுச் சொல்ல இயலாத தமிழ்க் கடலின் தீஞ்சுவை பொருந்திய தெவிட்டாத அமிழ்தத்தை எனது சிற்றறிவாகிய நாழி கொண்டு எத்துணை முகத்தல் இயலுமோ அத்துணை அளவில் முகந்து கூறினேன். ஆகையால் இப்போது இந்தியைக் கற்கத்தான் வேண்டுமென்று சொல்லுபவர்களின் பயனற்ற கூற்றுக்கு ஈடுபட்டிருக்கும் நந்தமிழ் மக்கள் இனிமேலாவது "தக்கன் சாபத்திற்கு அஞ்சிய வான்மதி சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்ததுபோல"ப் பல மொழிகளாலும் விழுங்கப்பட்டு ஒருசிறிது எஞ்சி நிற்கும் தமிழானது திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடமும், தமிழ்மொழிப் பாதுகாவலராகிய திருவாளர் மறைமலை அடிகள் அவரிடமும், இன்னும் சில தமிழறிஞர்களிடமும் அடைக்கலம் புகுந்துநிற்கின்ற தென்பதை உணர்ந்து, தமிழ்நாட்டிற்கு உள்ளும் புறம்பும் ஒத்த உரிமையுடையதாய் இருக்கின்ற தமிழ் மொழியை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று "ஒருவன் தான் இச்சித்துள்ள பொருளைப் பெறுவதில் எத்துணைத் தாழ்வு வந்தபோதிலும் அவற்றைப் பொறுத்துத் தான் இச்சித்த பொருளையே பெறு

தல் போன்று" நான் எத்துணைத் தாழ்மையுடன் கேட்க முடியுமோ அத்துணைத் தாழ்மையுடனும் தமிழுக்கு உரிமைபூண்ட தக்கார் எல்லாரையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

"கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததாய் எண்ணவும் படுமோ."

—(திருவிளையாடற் புராணம்)

தமிழ்! தமிழ்!! தமிழ்!!!

செந்தமிழ்ப் பெருமை

[வேலணைகிழார் க. வேந்தனார்]

பன்னூற்றாண்டுகளாக நிலைத்துப் பெரும்புகழ் பரப்பி வரும், நம் செந்தமிழ் மொழியானது இடைப்பட்டகாலத்தில் ஆரியமொழிக் கலப்பினாற் றனது தூயதன்மை யிழந்து மாசு படிந்த மாணிக்கம் போல, விளங்குன்றுவதாயிற்று. இதனை அஞ்ஞான்று, தமிழ்மொழிக்கெனத் தொண்டு பூண்டு, உழைத்து வந்த பெருந்தகையாளர்களில், ஒருவராதலுணர்ந்திலர்; அவர்களுட் பெரும்பாலர், ஆரியமொழிக் கலப்பினாற் றமிழ்மொழி பெரிதுஞ் செம்மை பெறுமென வெண்ணினர். இங்ஙனம், எண்ணியதோ டமையாது, இவ்வெண்ணத்தின் முதிர்ச்சிப்பாட்டினால், தம்மாற் றமிழ் மொழியில் எழுதப்பட்ட நூல்களினும், உரைகளினும், ஆரிய மொழியையும் அம்மொழியாளர்களின் கொள்கைகளையும் மிக மிகக் கலந்தெழுதி வந்தனர். இவற்றினிற் கெடுத்துக்காட்டாக மணிப்பிரவாள வுரை நடையினையும், ஆசிரியர் 'பரிமேலழகியார்' தமிழ்ப்பெரும் மறையாகிய திருக்குறளினிற் கெழுதிய வுரையினையும் நோக்குக.

இனி, இங்ஙனம் ஆரிய மொழியினையும் அம்மொழியாளரின் கொள்கைகளையும் தமிழ்மொழிக்கண் கலந்தெழுதி மாசுறுத்தினதுமன்றித் தமிழ்மொழியின் கடவுட்டன்மையினையும் மொழியாக்க நுண்மையினையும், தனிப் பெருந்தூய்மையினையும், அதன்கண்ணுள்ள பொருணலந்துறுமிய தொன்னூல்களின் செவ்வியினையுஞ் சிறிதும் ஆயாது, தமது ஆரியமொழிப்

பற்றினால் தமிழ்மொழியை மிகவும் வெறுத்திகழுவாராயினர்.

இங்ஙனந்தமிழ் மொழியை வெறுத்திகழ்ந்தவர்களுட் டலையாயவர் திருவாவடுதுறை யாதீனத்துச் சுவாமி நாத தேசிகரே யென்பதைத் தமிழ்ப் பேரறிஞர்கள் நன்குணர்வார். இச்சுவாமிநாத தேசிகர், தாமாக்கிய இலக்கணக்கொத்து எனும் நூலின்கண்,

> "அன்றியுந் தமிழ் நூற்களவிலை யவற்றுள்
> ஒன்றே யாயினுந் தனித் தமிழுண்டோ
> அன்றியு மைந்தெழுத்தா லொரு பாடையென்
> றறையவே நாணுவ ரறிவுடை யோரே
> யாகையால் யானு மதுவே யறிக
> வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும்
> இலக்கண மொன்றே யென்றே யெண்ணுக."

எனக் கூறியிருத்தல் தமிழ்மொழிப்புலத்துறை முற்றிய நகைச்சுவை யாளர்கட்குப் பெரிதும் நகைவிளைப்ப தொன்றாகும். ஆரியர் கூறுந் தமிழை நகைச்சுவைக்கெடுத்துக்காட்டிய பேராசிரியர், தேசிகரவர்களின் காலத்திற்குப் பிந்தின வராகவிருப்பின், வடமொழிப்பற்றினால், தமிழ்மொழியை யிகழ்தல் எனவெடுத்துக்காட்டியிருப்பா ரென்பதில் எட்டுணை யுமையமின்று. என்னை? தேசிகரவர்களின் கூற்று நகைச் சுவைக் கொருகொள்கலமா யிருத்தலினென்பது. மிகவுஞ் சிறந்ததொரு மாணிக்கக்கல்லை யொளியற்ற கருங்கல்லென வொருவன் கூறியிகழின் யாருக்குத்தான் நகைவராது? இது போலவே தேசிகர் அவர்களும் "அன்றியுந்தமிழ்நூற்களவிலை யவற்றுள் ஒன்றேயாயினுந் தனித்தமிழ் உண்டோ?" எனக் கேள்வி யெழுப்புகின்றார். இக்கேள்விக்குத் தமிழ் அன்பர் களின், விழுமிய முயற்சியினால் பழந்தமிழ் நூல்கள் பல வெளி வந்துள்ள இஞ்ஞான்றில் விடைகூறல் வேண்டுவதின்று. கலித் தொகை முதலிய பழந்தமிழ் நூற்பயிற்சி சிறிதேயுடையார்க் கும், தமிழ்மொழியின்கண் வடமொழி கலவாதநூல் ஒன்று மிலையென்று, நாக்கூசாதுரைத்த தேசிகர் அவர்களின், வெற் றுரைப்போக்கு நன்கு புலனாகும். அன்றியும் இஞ்ஞான் றைத் தமிழ்ப் பேரறிஞர்களும், மொழிநூலறிஞர்களும் ஆராய்ந்து எழுதுந் தமிழ்க்கட்டுரைகளானும், நூல்களானும் தமிழ்மொழி தனித்தியங்கும் பெருந்தகைப் பாடுடையதென் பது சிறுமகார்க்கும் நன்கு தெரிந்த தொன்றாகும்.

இன்னுமவர் "ஐந்தெழுத்தாலொரு பாடையென்றறை யவே நாணுவரறிவுடையோரே" எனக்கூறி ஆசிரியர் தொல் காப்பியனார் நக்கீரனார் முதலிய கடவுட்டன்மை விரவிய பெரியார்க்கும் அறியாமை யேற்றுகின்றார். என்னை?

"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்" தெனவும்,
"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு"

எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் நுதலி நூல்செய்தமை, பனம்பாரனார் பகர்ந்தமையின், அறிஞர்க்கு நாணுத் தருவ தொன்றாகும் எனத் தேசிகர் அவர்கள் கூறிய கூற்றுப் பொருந்தாக் கூற்றாமென அறிக. "தமிழ் கூறு நல்லுலக மெனவும்," "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு" என வுங் கூறியதிலிருந்து தமிழெனவோர்மொழி யுண்டெனவும், அஃது இன்ன எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பிடை வழங்கிற் றென்றும், ஆசிரியர் தொல்காப்பியனார் இலக்கணஞ் செய் துள்ளார். தேசிகரவர்கள், "ஐந்தெழுத்தால் ஒருபாடை யென்று அறையவே நாணுவ ரறிவுடையோரே" எனக்கூறின மையால், தமிழ்மொழியெனவேறு கண்டு, இலக்கணஞ்செய்த தொல்காப்பியனாருக்கும் அவரின் முன்னூலாருக்கும் அறி யாமையேற்றுகின்றா ரெனக் கூறன்மிகையாகாது. இனி இங்ங னமே நக்கீரனாரும் இறையனார் களவியலுரையில் தமிழ்மொழி யென வொன்று கொண்டு அதன் சிறப்புக்களை நன்கெடுத் தியம்பி யிருத்தலின், அவருக்கு மிவரறியாமை யேற்றுகின்றா ரென்றல் மிகையாகாது; சுருங்கக் கூறின், தமிழ்மொழி யைப் பண்டிருந்தே போற்றிவந்த பெருந்தகையாள ரெல் லார்க்கும் இவர் அறியாமை யேற்றுகின்றாரென்றே கூறலாம்.

இனி வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவாயுள வெழுத்துக்கள், வடமொழிக்கே யுரியவாமாறு எங்ஙனம்? ஐந்தெழுத்துக்கள், தமிழ்மொழிக்கே சிறப்பாக வுடைத் தெனக் கண்டது வடமொழிக்கண் அவ்வெழுத்துக்கள் இல் லாமையினன்றே! அங்ஙனமிருப்ப, இவர், தமிழ்மொழிக்கண் ஐந்தெழுத்தே யுடைத்தெனக் கூறல் எங்ஙனம் பொருந்தும்? ஆரியமொழியாளர்கள் தங்கள் மொழியை வரிவடிவில் அமை யாது எழுதாமறையெனப் போற்றிவந்தனரென்றும், தமிழ் மக்கள் பண்டிருந்தே தமக்கென வரிவடிவினை யுடையாரென் றும், தமிழ்மக்கள் தம்மொழிக்கு வரிவடிவு கண்ட பலவாண்டு கட்குப் பின்பே வடமொழியாளர்கள் வரிவடிவு கொண் டார்களென்றும் ஆராச்சியாளர், தக்க சான்றுகளுடன் நிறுவியிருக்கின்றனர். அவையெல்லாம் மீண்டுரைப்பின் விரியுமென்று விடுக்கின்றேன். எனவே இக்கூற்றினால், தேசிகர் அவர்களின், எழுத்தெண்முறைகள் யாவும், ஆராய்ச்சியில்லாத வெற்றுரையாதல் காண்க.

இனித் தேசிகரவர்கள், "வடமொழி தமிழ்மொழி யெனு மிருமொழியினும், இலக்கணமொன்றே யென்றே யெண்ணுக"

எனக்கூறியிருத்தலை யெண்ணுந்தோறும், எண்ணுந்தோறும், உண்மைத் தமிழன்பர்களாயுள்ள எவருங் கண்ணீர்வடியாது விடார்கள். என்னை? தொன்மையும், பொருணலச் செவ்வியுப், கடவுட்டன்மையும் மொழியாக்க நுண்மையும் மிகமிகப் பொதுளித் தன்னுடன் ஒத்த பழமையுடையனவாக் கருதப் பட்ட ஆரியம், இலத்தீன், கிரீக் முதலிய மொழிகளல்லொம், பேச்சுவழக்கில் நின்று இறந்துபடவும், தான் இன்றும் பல கோடி மக்களினுற் பேசப்பட்டும், பிற எம்மொழிகட்கு மில்லாத பொருளிலக்கணமும், இயற்கையை ஓவியமெடுத்தாற் போல் உணர்ச்சி வாய்ந்த புலவர் பெருமக்களாற் பாடப்பெற்ற இலக்கிய நூல்களையும் கடவுளுண்மைகளைக் கூறும் நூல்களையும், கடவுளரும் விழையும் கனிந்த வினிமையும் பொருந்தி, என்றும் இளமையுடன் நிலைபெற்றுள இனிய தமிழ் மொழிக்கும், பேச்சுவழக்கிறந்து பொருணலச்செவ்வியற்ற வடமொழிக்கும், இலக்கண மொன்றெனு எட்டுணையும், அஞ்சாது கூறிப்போந்த தேசிகர் அவர்களின் துணிவே துணிவு!

இனி, இங்ஙனம் மாட்சிமை மிகமிகப் பொதுளிய செந்தமிழ் மொழியையிகழ்ந்து தேசிகர் அவர்கள் கூறியது பொருத் திருவாவடுதுறை யாதீனத்துச் சிவஞான யோகிகள் மிகவும் வருந்தித் தேசிகரவர்கள், தம்பாதீனத்துப் புலவரென்பதையு மெண்ணுது நடுநின்றுய்ந்து, தமிழ்மொழிக்கும் வடமொழிக்கும் இலக்கணம் வேறு என்பதை மிகமிகத் தெளிவாகத் தாமாக்கிய தோல்காப்பியப் பாயிர விருத்தியிற் கூறியிருக்கின்றூர். என்னை?

"தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும், செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும் அகம், புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும்; இன்னோரன்னபிறவும் வடமொழியிற் பெறப் படாமையானும்" என்பது.

இதில் மாதவச் சிவஞானயோகிகள் எத்துணை விழிப்புடன், தமிழ்மொழியின் தனிப்பெரும் சிறப்பியல்களை மிகமிக நுணுகியெடுத்தியம்பியிருக்கின்றூரென்பதை யெண்ணிப் பாருங்கள்.

இனி இத்தேசிகர் அவர்களைப்போலவே வடமொழியின் கண்ணுள இலக்கண முடிபுகளைத் தமிழ்மொழியின் கட் புகுத்திப் பிற்றைஞான்றைப் பல தமிழ் இலக்கண நூல்களெழுந்து தமிழ் மொழிக்குக் கேடு சூழ்ந்தன. அந்நூல்கள்,

நன்னூல், சின்னூல், வீரசோழியம், பிரயோக விவேகம் என்பன. இந்நூல்களும், இன்னும் இவைபோன்ற பன்னூல்களும் எழுந்தாலும் முழுமுதலிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின், செவ்வியை யழித்துத் தமிழ்மொழிக்குக் கேடுசூழ முடியுமா? முடியாது.

இனி, இங்ஙனம் தமிழ் மொழியை யிகழ்ந்தும், அதன்கண் வடமொழி இலக்கணமுடிபுகளைப் புகுத்தியும் அதன் இலக்கணச் செவ்விக்குக் கேடுசூழ்ந்ததுமன்றித் தமிழ்மக்களையு மிகழ்ந்து, வேசிமக்கள், அடிமைகள், போரிற் புறங்கொடுத்தோர் எனும் பொருள்களைத்தரும் சூத்திரர் எனுஞ் சொல்லாற் குறித்தும் வந்தனர். ஆரியமொழியி லென்ன வெழுதியிருப்பினும், அவை யெல்லாம் கடவுளாணையென நம்பும் ஒரு பிழையான எண்ணமும் தமிழ்மக்களிடையே யுண்டாதற்கேற்ற சூழ்ச்சிகளை ஆரியர் செய்தனர்; ஒரு குலத்திற்கொருமுறை கூறும், மனு முதலிய நூல்களைப் பெரிதும் போற்றி அவற்றையெல்லாந் தமிழ் மக்கட்கும் அறிவுறுத்தி அவர்களிடையே உயர்வு தாழ்வுக் கொள்கைகளைப் பிறப்புப்பற்றியே யுண்டாகச் செய்தனர். ஆனாற் பண்டிருந்தே தமிழ்மக்கள் ஒழுக்கங்கருதியே உயர்வு தாழ்வு குறித்து வந்தனர். ஈண்டொழுக்கமென்றது மக்கட்பண்பாகிய ஆறும் அறிவினிற்கேற்ப வொழுகலே. இவ்வுணர்ச்சியின் முதிர்ந்த நிலையை மெய்யறிவெனப் பெரியார்கள் கூறுவர். இம்மெய்யறிவு இல்லாத மக்களை ஆசிரியர் தொல்காப்பியனார் மாக்களெனவே கருதுகின்றார். இதனை,

> "மாவும் மாக்களும் ஐயறி வினவே
> மக்கள் தாமே ஆறறி வுயிரே

எனவரூஉம்நூற்பாவானறிக. இக்கருத்துப் பற்றியே ஆசிரியர் திருவள்ளுவரும்,

> "அரம்போலக் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பில்லா தவர்"

எனக் கூறியருளினார்.

ஆகவே, தாய்மொழிப் பற்றற்ற சிலர் வடமொழியாளர்களின் கொள்கைகளையும், பழக்கங்களையும் தமிழ்மொழிக்கண் புகுத்திக் கேடு விளைக்கத் துணிந்த நுட்பமறிந்து உண்மை கண்டு செந்தமிழ்ப் பெருமை யுணர்தல் சீரியோர் கடனாம்.

வரலாற்றுப்பகுதி: History & Biography

புதியது புனைந்த அறிவியற் புலவர்கள்

[திரு. N. குழந்தைவேலன் அவர்கள், B.A.]

கலீலியோ (Galileo)

அறிவியற் றுறையில் முதற்படியில் வைத்து எண்ணப் படுபவர் இத்தாலிய தேயத்துக் கலீலியோ ஆவர். இவர் பிளாரன்ஸ் (Florence) பட்டினத்தில் 1564 - ஆம் ஆண்டில் ஓர் எளிய குடும்பத்திற் றோன்றியவர். இவர்தம் தந்தையார் வின்சென்சோ (Vincenzo) என்னும் பெரிய இசை நூலாசிரியர். இவர் பொருட்செல்வம் மிகுதியும் இல்லாதவர். கலீலியோ இளமையிலேயே ஓவியம் வரைதல், இசை பாடுதல், புதிய விளையாட்டுக்கருவி யமைத்தல் ஆகிய இவற்றில் திறமை யுற்றிருந்தார். தந்தையாரின் தூண்டுதலால் இவர் மருத்துவக்கல்வி பயிலவேண்டுவதாயிற்று. அக்காலத்துக் கிரேக்க மக்கள் (Greeks) அரிஸ்டாட்டில் (Aristotle) என்ற புலவர் கூறிய அறிவுரைகளில் குருட்டு நம்பிக்கை வைத்திருந்தனர். கலீலியரோ இப் புலவர் கூறிய உரைகளை நன்கு ஊன்றிப் பார்த்து முரண்பாடுள்ளனவற்றை அச்சமின்றி எடுத்துக் காட்டும் இயல்புடையவர். இதன்பொருட்டே கல்லூரியில் இவரை மிண்டர் (Wrangler) என்றழைத்தனர்.

கலீலியரே முதன் முதலில் தாமறிந்த உண்மைகளை ஆய்வுகளால் (Experiments) விளக்கிக்காட்டினவர். தமது 19-ஆம் ஆண்டிலேயே தொங்கட்டம் (Pendulum) அசைந்து ஆடுவதன் நுட்பங்களைக் கண்டறிந்தார். ஒருநாள் கோவிலில் தொங்கவிட்டிருந்த விளக்குக் கூண்டு காற்றில் அசைந்து ஆடுவதைக்கண்டு தமது நாடியின் உதவியால் கணக்கெடுத்துப் பார்த்தார். விளக்குக்கூண்டு நெடுந்தொலை வீசி ஆடினாலும் குறுகி ஆடினாலும் ஒவ்வொரு ஆடலுக்கும் காலம் எப்பொழுதும் மாறுபடாது ஒன்றேபோல் இருத்தலைக் கண்டுணர்ந்தார். தொங்கட்டம் கடிகாரம் சரியான நேரத்தைக் காட்டப் பயன் படுகிறது. தொங்கட்டத்தின் ஒவ்வொரு அசைவிற்கும் கடிகாரத்தில் பற்களோடியைந்த ஒரு சக்கரம் ஒரு பல் திரும்புகிறது. கடிகாரத்தின் சுருள் கம்பி (Main Spring) ஒரே அளவான ஓட்டத்தில் விரிவடையவும், அதனுதவியால் சக்கரங்கள் சுழலவும் தொங்கட்ட மின்றியமையாததாக இருக்கின்றது. கலீலியோ இம்முறையைக் கையாண்டதன் பயனாய் நாடியளக்கும்



கலீலியோ (Galileo)



சர் ரிச்சார்ட் ஆர்க்ரைட்

கருவியைப் புதிதாகக் கண்டுபிடித்தனர். இது நோயாளியின் குருதி ஓட்டத்தை மிக எளிதில் காட்டினமையால் எல்லா மருத்துவர்களும் இவரைப் போற்றிப் புகழ்ந்தனர்.

வறுமையால் பிணிப்புண்ட கலீலியோ மருத்துவப் பட்டம் பெறுதற்குப் போதிய பொருளின்றி அப்பட்டமு மில்லாது தம் பெற்றோர் இருக்குமிடம் சேர்ந்தார். நல்வினைப் பயனால் தமது 24-ஆம் ஆண்டில் பைசா (Pisa) பல்கலைக் கழகத்தில் கணித நூலாசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இவர் தமது ஆராய்ச்சியின் பயனாக இக்கிரேக்க நாட்டுப் பெரியார் அரிஸ்ட்டாட்டிலின் அறிவு மொழிகளையும் உண்மையன்று என மறுக்கலாயினார். பெரிதொன்றும் சிறிதொன்று மான இரண்டு குண்டுகளை ஒரேகாலத்தில் உயரத்திலிருந்து விழச்செய்தால் பெரிதுதான் முதன் முதலில் நிலத்திற்போய் விழுமெனவும், பெரியது சிறியதைக்காட்டிலும் பதின்மடங்கு பருமனுள்ளதாயின் சிறியதைவிடப் பத்துப்பங்கு விரைவுடன் கீழ்நோக்கிச் செல்லுமெனவும் அரிஸ்டாட்டில் கூறியிருந்தார். இதை நன்கு ஆராயாது கிரேக்கர்கள் அவர்தம் உரைகளைப் பொன்னே போல் போற்றிவந்தனர். ஒருநாள் கலீலியோ பைசா பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் மாணவர் முதலியோ ரனைவரையும் ஒருங்கழைத்துச்சென்று அவர்கள் முன்னிலையில் அவ்வூர்க் கோபுரத்தின் உச்சியினின்று சிறு குண்டு ஒன்றையும் அதைவிடப் பத்துமடங்கு மிகுந்த எடையுள்ள மற்றொரு குண்டையும் ஒரே நேரத்தில் விழச்செய்தார். இரு குண்டுகளும் ஒரேநேரத்தில் நிலத்தைச் சார்ந்தன. ஆங்குக் குழுமியிருந்த மக்களனைவரும் இதனைக்கண்டு இறும்பூதெய்தினர். பின்னர், அரிஸ்ட்டாட்டிலைப் பொய்யராக்கிய கலீலியரே மாயக்காரரோவென ஐயுற்று மக்கள் அவரை மிக்க துன்புறுத்தலாயினர். ஆகவே கலீலியோ பைசா நகரை விட்டகன்று படுவா (Padua) என்ற இடத்தில் கணித நூலாசிரியராய் அமர்ந்தனர். அவர் தளரா ஊக்கமும் சிறந்த மனவலியுமுடையவராயிருந்தார். அவர் கற்றவை யனைத்தையும் கசடறக்கற்று எவரினும் மேம்பட விளங்கினார். அவர் எப்பொருளையும் மிக நுட்பமாய் ஆராயும் வல்லமைபெற்றிருந்தார். அக்காலத்துக் கணித நூற் புலவர்களிற் தலைசிறந்து விளங்கினதுமன்றி அவர் வான நூற் புலமையினும் இயற்கை நூல் ஆராய்ச்சியினும் மிக வல்லுநராயிருந்தார். அவர்தம் பேராற்றல் நாடெங்கும் பரவத் தலைப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் அவர்தம் அரும் பெருஞ் சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புற்றனர். உரோம தேயத்துக் காவியங்கள் பலவற்றையும் அவர் மனப்பாடமாகக் கற்றறிந்தவராகலின் எல்லாராலும் நன்கு மதிக்கப்பெற்றார்.

அவர் தமக்கு ஐயம் நிகழ்ந்தபோதெல்லாம் கற்றறிந்த அறிவாளிகளிடம் எளிமையோடு கேட்டுத் தம் ஐயப்பாடுகளை அவ்வப்போது நீக்கிக்கொள்ளும் இயல்புவாய்ந்தவரா யிருந்தார்.

சின்னாட் கழித்து இவர்தம் தந்தையார் இறந்துபடவே குடும்பச் சுமையை இவர் தாங்கவேண்டியவரானார். தமது குடும்பத்திற்குப் பொருள்தேடவேண்டிய முதன்மையும் இவர்க்கு ஏற்பட்டது. இவர்தம் அரிய ஆராய்ச்சியின் பயனாக வானநூற் புலவர்களுக்கு இன்றியமையாததாகவுள்ள தொலைநோக்காடி (Telescope) இவரால் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பெற்றது. இக்கருவி சேய்மையிலுள்ள பொருளை அண்மையிலுள்ளதுபோற் காட்டுவதற்கு மிகுதியும் பயன் பட்டது. கலீலியோ ஓர் ஈயக் குழாயின் முனைகளில் வளைந்த கண்ணாடி (Lens) வில்லைகளை அமைத்து அக்குழாய்வழி நோக்கியபோது சந்திரன் மும்முறை அருகிலும் பன்முறை பெரிதுமாகத் தோன்றிற்று. இந்நிலப் பரப்பைப்போன்று திங்கள் மண்டிலத்திலும் மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்திருத்தலையும், வியாழ (Jupiter) மண்டிலத்தைச் சுற்றிலும் நான்கு கோளங்க ளிருத்தலையும், சனி (Saturn) மண்டிலத்தைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் (Ring) தோன்றுவதையும் கலீலியோ கண்டறிந்தார். கண்ணுக்கெட்டாத தொலைவிலுள்ள எண்ணிறந்த விண்மீன்களையும் அவர் தமது கண்ணாடியி னுதவியால் ஆராய்ந்து பார்த்தார். அதுவுமன்றி அவர் தாம் கண்ட உண்மைகளை மக்கட்குப் பயன்படுமாறு வெளியிட்டார். இவ் வற்புதத்தைக் காண நகர மாந்தர் பலர் அவர் வீட்டு வாயிலிற் குழுமியிருந்தனர். கலீலியோ மக்க ளனைவரும் தமது கண்ணாடியால் வானத்தின் காட்சிகளை நேரிற் காணுமாறு செய்தனர். யாவரும் அவ் வளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சியைக்கண்டு வியப்புற்றனர். ஆயினும் அரிஸ்ட்டாட்டிலின் உண்மைகளைப் பின்பற்றிய அம்மக்கள் தம் அகவிருள் நீங்காராகி அக்காட்சிகள் கண்ணாடி இல்லாத போது கண்ணுக்குப் புலப்படாதிருந்தமையால் கலீலியோ தங்களை ஏமாற்றுதற்பொருட்டு ஏதோ சூழ்ச்சிசெய்வதாகவே எண்ணினர். மக்கள் அவர் கூறிய உண்மைகளைச் சிறிதும் நம்பாமல் எள்ளி நகையாடினர்.

கலீலியோ தாம் கண்ட உண்மைகளைப் பரப்புதற் பொருட்டு உரோம் நகரடைந்தார். வானத்திலுள்ள வியத்தகு காட்சிகளைக் கண்டு பலரும் வியப்பெய்தினர். ஆயினும் கிறித்தவ மதக்கோட்பாட்டின்படி இந்நிலவுலகே பிறவற்றினும் நனி சிறந்ததென்றும், அஃது அசைவற்றதென்றும், வானில் தோன்றும் ஞாயிறு திங்கள் முதலியன இப்பூவுலகைச்

சுற்றி வருகின்றன என்றும் மக்கள் நம்பியிருந்தனர். கலீலியோ ஞாயிறு பூமியைச் சுற்றவில்லை என்றும், பூமியும் மற்ற கோள்களுமே பகலோன் மண்டிலத்தைச் சுற்றிவருகின்றன வென்றுங் கூறி அவ்வுண்மையை விளக்கிக்காட்டினார். கிறித்து சமயவாதிகள் கலீலியோவால் கண்டுபிடிக்கப்பட்ட வானக் காட்சிகளின் உண்மைகளை அறியாராகி, தங்கள் வேதத்திற் கூறியுள்ள பூமியின் பெருமைக்கே அழிவு நேர்ந்து விட்டதென நினைத்து இவற்றைக் குறிக்கும் புத்தகங்க ளனைத்தையும் மக்கள் படிக்கக்கூடாதெனத் தீயிலிட்டுக் கொளுத்தி விட்டனர். கலீலியரோ தாம் கண்டுபிடித்துக் கூறியவை முற்றிலும் உண்மையென நிலைநாட்டினர். இறைவன் பேரருட்டிறத்தினுல் மக்கள் பெற்றிருக்கும் பகுத்தறிவை நல்வழியிற் பயன்படுத்திப் புதுப் புனைவுகளின் உண்மையை அவர்கள் உணரும் வண்ணம் எத்துணை முயன்றும் தமதெண்ணம் வீணாய்ப்போனமையால் கலீலியோ மனம் உடைந்து உரோம் நகரைவிட்டு அகன்றார்.

இக்காலத்தில் கலீலியோவின் ஆராய்ச்சிகளுக்கு டஸ்கனி (Tuscany) நாட்டுச் சிற்றரசரின்ஆதரவு கிடைத்தது. அவ்வரசனின் வேண்டுகோளுக்கிணங்கி அவர் தமது உறைவிடமாகிய பிளாரன்சுக்குச் சென்றார். அரசன் ஆதரவுபெற்றிருந்தும் அவர் தம் கொள்கைகள் கிறித்துவமதக் கோட்பாட்டிற்கு முரண்பட்டிருந்தமையின் அவருக்கு அளவிறந்த இன்னல்கள் உண்டாயின. பிளாரன்சில் ஏழு ஆண்டுகள்வரை வான நூலாராய்ச்சியிற் காலங்கழித்தனர். அதுகாறும் மக்கள் அறியாத பல வியத்தகு செயல்களைக் காட்டுவித்தார். பல்வேறு புதிய கருவிகளையும் கண்டுபிடித்தார். தெர்மாமீட்டர் (Thermometer) என்னும் சூடறி கருவியையும், கம்பாஸ் (Compass) என்னும் திசையறி கருவியையும் புதிதாக அமைத்தார். திணிப்பொருள்களின் ஏணை (மையத்தை) (Centre of gravity of solids)க் கண்டுபிடிக்கும் நுட்பங்களை எடுத்துக் காட்டினார். அவர் கண்டுபிடித்த உண்மைகள் பிற்காலத்திய அறிவுநூல் ஆராய்ச்சிகட்கும், அதன் வளர்ச்சிக்கும் பற்றுக் கோடுகளாய் அமைந்தன.

கலீலியோ தமது அறுபதாம் ஆண்டில் மீண்டும் உரோம் நகருக்குச்சென்று புதிதாய் முடிசூட்டப்பெற்றிருந்த கிறித்துவப் பெருங்குருவை (Pope)க் கண்டு தாம் ஆய்ந்துணர்ந்த உண்மைகளை ஏற்றுக்கொள்ளுமாறு மிகவும் வேண்டினார். அப்பெருங்குரு இதற்கு இணங்காவிடினும் அவர்தம் கருத்துக்களை ஒரு நூலில் வெளியிடுமாறு கட்டளையிட்டருளினர். பல்லாண்டுகளாய்த் தாம் அரும்பாடுபட்டு ஆராய்ந்த நுட்பங்

களைத் தொகுத்து அறிவு நூல் ஒன்று எழுதி வெளியிட்டனர். பின்னர் உரோம மக்களனைவரும் கலீலியோவின் ஆராய்ச்சித் திறத்தைக்கண்டு பேருவகை யடைந்தனர். இஃதிவ்வாறாக ஒரு சாரார் கலீலியோ கிறித்துவ சமயத்திற்கே பெருந் தீங்கிழைத்துவிட்டதாக முறையிட்டனர். முடிவில் திடீரென உரோமநாட்டு நீதிமன்றத்திலிருந்து ஓர் ஆணை பிறந்தது. கலீலியோவின் புத்தகங்கள் கிறித்துவமதக் கோட்பாட்டிற்குப் பொருத்தமற்றவையென்று கூறி அவை யனைத்தையும் ஒன்று விடாமல் தொகுத்து எடுத்து உரோம் நகருக்கு அனுப்பினர். கலீலியோ கூறிய உண்மைகள் தங்கள் கிறித்துவமதக் கோட்பாட்டிற்கு மாறானவையென்று அவர் குற்றம் (Charge of heresy) சாற்றப்பட்டார். வயது முதிர்ந்துநடக்கவும் ஏலாதவராயிருந்த கலீலியோவை நீதிமன்றத்திற்குத் தாங்கிச்சென்றனர். ஆங்கு அவரை மண்டியிடச்செய்து பூமி சூரியனைச் சுற்றிவருகிறதெனத் தாம் மறுமுறை நினைப்பதும், சொல்வதும் இல்லையென வாக்களிக்கும்படி வற்புறுத்திக் கேட்டனர். இக்கட்டளையை மறுத்துரைக்கின் தம்மைப் பல கொடுமைக்குட்படுத்தித் தம் உயிரையும் மாய்த்திருப்பாராகலின் வெளித் தோற்றத்திற்கு ஒருவாறு ஒப்புக்கொண்டவர்போல் அவர் நடித்துக்காட்டி மண்டியிட்டு எழுவதன்முன், "எப்படியாயினும் இவ்வுலகம் அசைந்தே தீரும்" எனக் கூறினரெனின் இவர் தம் ஊற்றத்தை என்னென்று கூறுதும்! உரோம அதிகாரிகள் கலீலியோவுக்கு உயிர்ப்பிச்சை யளித்து அவரை அரசியற் கைதியாக்கித் தமதில்லத்தைவிட்டு அயலிடம் செல்லாது தடுத்துவிட்டனர்.

இக்காலத்திற்றான் ஆராய்ச்சி யுரைகள் நிறைந்த பல அரிய புத்தகங்கள் இவரால் இயற்றப்பட்டன. கலீலியோ தமது வாழ்நாள்முழுவதும் இயற்கைப் பொருள்களின்இயல்புகளை ஆராய்வதிலேயே செலவிட்டுத் தமது 78 - ஆம் ஆண்டில் விண்ணுலகெய்தினர். அவர் மறைந்தபின்னரே உலகிற்கு அவரது நன்மதிப்புத் தெரியலாயிற்று. பிளாரன்ஸ் நகரத்து மாந்தரனைவரும் 3000 கிரவுன் நாணயங்கள் செலவிட்டுப் பளிங்குக்கல்லால் அவருக்கு ஒரு சமாது அமைத்தனர். அவர் நினைவுக்கு அறிகுறியாகச் சிறந்த கட்டிடம் ஒன்று நிறுவப்பெற்றது. இத்தாலிய தேயத்தில் கற்றோரனைவரும் ஒருங்குசேர்ந்து கலீலியோவின் திருவிழாவைக் கொண்டாடினர். உள்ளத்தாற் பொய்யாதொழுகிய கலீலியோ உலகத்தார் உள்ளத்துளெல்லாம் நிலைபெற்றிருத்தலை இற்றைக்கும் கண்கூடாகக் காண்கின்றோம்.

"ஊடலும் கூடலும்"

[வித்வான் மா. இராசமாணிக்கம் அவர்கள் B. O. L.]

உத்தம இலட்சணங்கள் அமைந்த காதலர் தம்முள் ஊடல் முன்னும் கூடல் பின்னும் நிகழ்வது இயல்பு. இவ்வுண்மையைப் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் இன்புற இயம்புகின்றன. இதனை நமது வாழ்க்கையிலுங் காணலாம். இக்காலக் காதலிமார் ஊடினல் உண்மையறியா ஆடவர் பலர் அக்காதலியரை அடித்துத் துன்புறுத்துவர். இஃது அறியாமையேயன்றி வேறன்று. காதலியர் ஊடுதல், கூடுதலில் இன்பம் பயக்கும். ஒரு காரணத்தைக் கற்பித்து அதனல் தலைவி வீணுகச் சீற்றங்கொள்ளலும், தலைவனை வெறுத்தலும் ஊடலாம். அவ்வேளை, தலைவன் இதம் பல கூறி அவள் ஊடலைத் தீர்ப்பன்; உதையும் படுவன். ஆனல், அது குற்றமன்று. இங்ஙனம் நிகழ்வன காதலில் நிகழும் குறும்புகள். இவை கூடலுக்கு இன்பந்தருவன. இவ்வுண்மையைக் காதலர் பரீட்சித்து இன்பத்தை நுகர்வாராக. 'ஊடல் கூடல்' என்பதைப் பற்றிப் புவியர சேத்தும் கவியரசாய கம்பர் பெருமான்யாது அறைந்துள்ளார் என்பதைக் காண்போம்.

ஒரு மாது தன் நாயகன்பால் ஊடல் கொண்டவுடனே தான் அணிந்துள்ள ஆபரணங்களைக் கழற்றிச் சாளர வழியே வீதியில் எறிந்து விடுகின்றுள். பின்னர், அவள் சீற்றத்தைத் தணிக்க நாயகன் படும்பாடு சொல்லத்தரமன்று. நாயகி ஊடல் தீர்ந்ததும் இருவரும் மாறிமாறிச் சந்தனக்குழம்பைப் பூசிக் கொள்கின்றனர். அது அளவுகடந்து வழிந்து வீதியில் தேங்கியிருக்கும். ஒவ்வோர் இல்லத்திலும் இந்நிகழ்ச்சி ஒவ்வொரு நாளும் நடத்தலால் வீதியில் மாலைகளும் சந்தனச் சேறும் ஒவ்வொருநாட் காலையிலும் காணலாம். காலையில் குதிரைமீது செல்லும் மக்கள் இவற்ருல் இடர்ப்படுவர். வீதியிற் கிடக்கும் ஊடி நீத்த மாலைகள் குதிரையின் கால்களில் அகப்பட்டுச் சுற்றிக்கொள்வதால் அவை, மேற்செல்ல முடியாது தவிக்கின்றன. குதிரை வீரர் கீழிறங்கி நடந்து செல்ல முயல்கின்றனர். ஆனல், அவர் விருப்பமும் நிறைவேறல் எளிதன்று. ஏன்? வீதியில் தேங்கிக் கிடக்கும் சந்தனக் குழம்பு அவர்களை வழுக்கி விழச் செய்கிறது. 'இவ்வாறு, காதலர் முன்னுள் ஊடினும் கூடினும்-மறுநாள் காலை அவ்வீதி வழியே செல்வோர்க்குத் துன்பமே' என்று காதலர் செய்தியைக் கம்பர் குறுநகையோடு நமக்குக் கூறுகின்ற நயம் பாராட்டத் தக்கதே!

"ஆடுவார் புரவியின் சூரத்தை யார்ப்பன
சூடுவார் இகழ்ந்தவத் தொங்கன் மாலைகள்
ஓடுவார் இழுக்குவ வூட லூடுறக்
கூடுவார் வனமுலை கொழித்த சாந்தமே"

—(க. ரா. நகரப் படலம்)

'ஊடல் கொண்ட மாதர், காதலர் எத்துணை வேண்டி னும் சிறிதுநேரம் தம் ஊடலைத் தீரார்; ஊடல்தீர்ந்து கூடல் வயப்பட்ட மாதர் ஆடவர் கரங்களில்கொடிகள்போல் துவள் வர்' என்ற உண்மையைக் கம்பர் உவமைவாயிலாகக் காட்டும் திறம் கவனிக்கத்தக்கது: 'வலிபொருந்திய திண்ணிய தோள் களையும் மிக்க ஒளிவிளங்குகின்ற மேனியையும், மலர்ந்த பூமாலைகளையும் உடைய ஆடவர் இடத்தில் கூடினரான மயில் போன்ற சாயலையுடைய மாதர்போலச் சில கொடிகள் அசைந்து துவண்டன; சில பூங்கொம்புகள் ஊடல் கொண்ட மாதர்களைப்போல் கைக்கெட்டாமல்நின்றன' என்று கூறு முகத்தான் யாம் முற்கூறிய உண்மையைப் புலவர் புகன் றுள்ளார்.

"உலந்தரு வயிரத் திண்டோள் ஒழுகிவா ளொளிகொள் மேனி
மலர்ந்தபூந் தொடையல் மாலை மைந்தர்பால் மயிலி னன்னார்
கலந்தவர் போல ஒல்கி யொசிந்தன; சிலகை வாராப்
புலந்தவர் போல நின்ற உளசில பூத்த கொம்பர்."

(க. ரா. பூக்கோய் படலம்)

இனி, தலைவி ஊடல் கொள்ளவிருக்கும் காரணங்கள் யாவை? எனக் கம்பர் கூறுகின்றார் என்பதைக் காண்போம். சீராமன் திருமணத்திற்காகத் தயரதன் அயோத்திவிட்டுப் பரிவாரத்துடன் மிதிலை நோக்கிச் செல்கையில் வழியில் தங்கு கிறான். அங்கு, அப்பரிவாரத்தில் உள்ள காதலர் புரியும் திருவிளையாடல்களைக் கம்பர் கூறிப் பெண்கள் ஊடலுறும் காரணங்களையும் கழறுகின்றார்.

'ஒருத்தி, தன் காதலன் பின்புறமாக அவனறியா வண்ணம்சென்று அவன் கண்களை மூடுகின்றாள். கண்களை மூடி யவர் இன்னார் என்பதறியாத் தலைவன் 'யார் அது?' என்று வினவுகின்றான். அவ்வளவே: தலைவிக்கு அக்கேள்வியில் ஐயம் பிறக்கின்றது. 'நம்மையன்றி இவன் கண்களைமூட வல்லவர் யார் இருக்கின்றார்? ஒருவரும் இல்லையே. அங்ங னம் இருக்க, இவன் 'யார்?' என்று கேட்க வேண்டிய அவ சியம் இல்லையே! இவன் கண்களைப் பொத்தும் உரிமை எனக் கன்றி வேறு ஒருத்திக்கும் உண்டுபோலும்! ஓஹோ!

இதென்ன விந்தை !' என்று நினைத்து அதுபற்றி அவனிடம் ஊடல் கொள்கிறாள். (உண்மையில் தலைவன் வேறு மகளிரை நினைத்தவன் அன்று; தலைவியின் ஐயமே அவள் ஊடல் கொள்ளக் காரணம்.) 'இவ்வாறெல்லாம் தலைவி ஊடல் கொள்ளுதலைக் காண்க' என்று கம்பர் குறுநகையோடு நவில்கின்றார்.

"போரென்ன வீங்கும் பொருப்பன்னபொலங்கொள் திண்டோள்
மாரன் அனையான் மலர்கொய்திருந் தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்பு தைப்ப
ஆரென்ன லோடு மனலென்ன அயிர்த் துயிர்த்தாள்."

—(க. ரா. பூக்கோய் படலம்)

ஒரு தலைவன் இளநீர்க்காய் ஒன்றை நோக்கி, 'அம்மா! இது, மங்கையர்தம் கொங்கைகளை ஒத்திருக்கிறது' என்று ஆச்சரியத்தால் கூறுகிறான். அவ்வளவில் தலைவி சினங்கொண்டு, 'இவ்விளநீர்க்காய் எந்த மாதர்களுடைய கொங்கைகளை நிகர்க்கும்?' என்று விம்மிக்கொதித்து முகம் வியர்க்கப் பெருமூச்சு விடுகின்றாள். என்னே! நமது கொங்கையைச் சுட்டிக்கூறாது பொதுப்பட மாதர் கொங்கைகள் என்று சொல்கின்றான். "மாதர்" என்னும் பன்மைச்சொல் இவன்வாய்வழிவரலாமோ? இவன் மாதர் பலரிடம் நட்புக் கொண்டுளன் போலும். நாம் இதனை அறியாமற் போனோமே! ஆ!!" என்று மனம் புண்ணுகின்றாள். இஃது, அவள் மடமையாற்கொள்ளும் வீண் ஐயமே யன்றி வேறென்? தலைவன் 'மாதர் கொங்கை' எனப் பொதுப்படக் கூறின் இவள் சீற்றம் கொள்ளக் காரணம் இல்லை, இருந்தும் இவள் அறியாமையாற் சீற்றமும் ஐயமும் கொள்கின்றாள். 'மாதர் இயல்பு அஃது' என்று கம்பர் கூறுகின்றார்.

"செம்மாந் தெங்கின் இளநீரையொர் செம்மல் நோக்கி
அம்மா! இவைமங் கையர்கொங் கைக ளாகும்" என்ன
எம்மாதர் கொங்கைக் கிவையொப்பன? என்றோர் ஏழை
விம்மா வெதும்பா வெயரா முகம்வெய் துயிர்த்தாள்.

—(க. ரா. பூக்கோய் படலம்)

மாதர் ஊடல் கொள்ளும் பரிசைக் கூறிய கம்பர், அம்மாதர் ஊடல் தீர்ந்து காதலர்பால் காதல் விஞ்சி அவரை அடைய அவர் செய்யும் முயற்சியையும் முறுவலோடு விளக்குகின்றார்.

தன் தலைவனோடு ஊடல் கொண்ட ஒருத்தி, அவனைச் சேர விரும்பியவளாய்த் தான் பறித்துக் கொள்ளக்கூடிய

மலர்கள் பலவிருந்தும், அவற்றைப் பறியாமல், எட்டாதிருந்த மலரைப் பார்த்து 'இதனைப் பறித்துக்கொடு' என்று குயிலைக் கரங்குவித்து வேண்டுகின்றாள். தான் படும் துன்பத்தைச் சகியாத் தலைவன் போந்து மலர் பறித்துத் தன்னுடன் கூடுவான் என்பதே அவளது விருப்பம். இது கூடலுக்கு மாதர் செய்யும் சூழ்ச்சிகளில் ஒன்று.

"மைதாழ் கருங்கண்கள் செவப்புற வந்து தோன்ற
நெய்தாவும் வேலானொடுநெஞ்சு புலந்து நின்றாள்
எய்தாது நின்ற மலர்நோக்கி யெனக்கி தீண்டுக்
கொய்தீதி யென்றோர் குயிலைக்கரங் கூப்பு கின்றாள்."

—(க. ரா. பூக்கோய் படலம்)

மற்றொருத்தி, தன் நாயகன் தன்னைப் பணிந்து வேண்டிய போதெல்லாம் ஊடல் தீராது, பிறகு அவன்பால் விருப்பம் மேலிட்டவளாய் அவனை அடைய வழியறியாமல் தயங்குகின்றாள். இருக்கும் இடத்திற்குத் தன் கிளியைப் பறக்கவிட்டு அதனைத் தொடர்பவள்போல் அவன் இருக்கும் இடத்தை அடைவாள். மாதர் மடமையை நோக்குங்கள்! கணவன் பணியும்போது மிடுக்குடன் இருக்கும் மாதரார், பின் அவனை யடையத் தாமே சூழ்ச்சி செய்து போகும் விந்தை சால அழகியதே!

யாழொக் குஞ்சொற் பொன்னனை யாளோர் இகல்மன்னன்
தாழத் தாழாள் தாழ்ந்த மனத்தாள் தளர்கின்றாள்;
ஆழத் துள்ளுங் கள்ள நினைப்பால் அவனின்ற
சூழற் கேதன் கிள்ளையை யேவித் தொடர்வாளும்.

—(க. ரா. பூக்கோய் படலம்)

ஒருத்தி தன் தலைவனை யழைத்துவரத் தோழியை ஏவுவாள். தோழி மீண்டுவராமையைக்கண்டு மனம் புண்ணுவாள். மலர்ப் படுக்கையில் படுத்துள்ள வேறு ஒருத்தி, தன் தலைவனின் பெயர்களைச் சொல்லும் கிளியை மனமகிழ்ந்து தழுவுவாள். ஒருத்தி, தனக்குத் துணையாயிருக்கும் கிளியைத் தழுவி "என் ஆவிபோன்ற நாயகனை நீ அழைத்து வரவில்லை. நீ இருந்து எனக்கு என் பயன்? துன்பம் செய்வதில் நீ எனக்கு அன்றிலையே யொப்பாவாய்" என்று அழுது சீறினாள். தன் கணவனோடு ஊடல்கொண்டு அமளியில் அவனுடன் இருந்த ஒருத்தி ஊடல் தீர்ந்து கூடல்கொள்ள விரும்பினாள். அதனைக் கணவன் உணர்ந்தானில்லை. தான் இன்னும் தூங்கவில்லை யென்பதையும் உரையாடுவதற்கு ஏற்றவளாய் இருக்கிறாள் என்பதையும்அவனுக்கு அறிவிக்க, அரைத் தூக்கத்தில் சோம்பல்முரிப்

பவளப்போல் பாவனைசெய்து 'இப்போது எத்தனை நாழிகை சென்றன?' எனக் கேட்டாள்.

'கலையை யுருவிப் பூரிக்கின்ற அல்குலையுடைய ஒரு தலைவி, தன் கணவனை இறுக அணைத்து, மலையும் உருவழியும்படி திண்ணியதாகவுள்ள அவன் மார்பில் தன் முலைகள் ஊடுருவிச் சென்றனவோ என அவனது முதுகைப் பார்த்தாள்' என்று கூறுமுகத்தான் ஊடல் தீர்ந்து கூடும் மாதர் காதலரிடத்துக் கொண்ட கரைகடந்த காதல் நுண்மையைக் கவின் பெறக் கம்பர் காட்டுகின்றார். இறுக அணைத்தலே காதல் இன்பத்தில் கூடும் தலைவன் தலைவியர் செய்யத்தக்க இன்பச் செயல்.

"கொலையுரு வமைந்தெனக் கொடிய நாட்டத்தோர்
கலையுரு அல்குலாள் கணவற் புல்குவாள்
சிலையுரு வழிதரச் செறிந்த மார்பிற்றன்
முலையுரு வினவென முதுகை நோக்கினாள்."

—(க. ரா. உண்டாட்டுப் படலம்)

மற்றொரு தலைவி தன் ஊடலைத் தீர்த்துக் கணவனைக் கலந்தணைய விரும்பியவளாய்ப் பொய்யாகச் செய்யும் தன் நித்திரையில் கனவுகண்டதாகப் பாவித்து அதன் உதவியால் கணவனை அணைத்துக்கொண்டாள். இஃது ஊடல் கொண்ட மாதர் கூடல் கொள்ளற்குச் செய்யும் சூழ்ச்சியே. இது நம்மவர் வாழ்க்கையிலுங் காணலாம். இதனைக் கம்பர் குறுநகையோடு கூறும் திறம் வியக்கத் தக்கதே!

" துனியுறு புலவியைக் காதற் சூழ்சுடர்
பனியெனத் துடைத்தலும் பதைக்குஞ் சிந்தையாள்
புனைகுழல் ஒருமயில் பொய்யு றங்குவாள்
கனவெனு நலத்தினாள் கணவற் புல்லினாள் "

—(க. ரா. உண்டாட்டுப் படலம்)

ஊடியபின் கூடலே இன்பத்திற்கு ஏற்றதாகும். ஊடல் இல்லாக் கூடல் கூடலாகாது.

"ஊடுதல் காமத்திற் கின்பம்; அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்" என்ற வள்ளுவர் வாய்ச்சொல்லும் இதற்குச் சான்றுதல் கண்டு களிக்க.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

பாலை

தலைவன் பிரிந்து சென்றனனாக, அவனது பிரிவிற்கு ஆற்றாது வருந்தும் தலைவியைக் கண்டு வருந்திய தோழிக்குத் தலைவி கூறியது.

வெள்ளிவீதியார் பாடியது

27. கன்று முண்ணாது, கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டுந்
திதலை யாகத்தெம் மாமைக் கவினே.

என்பது பிரிவிடை யாற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

பதவுரை:—

கன்றும் உண்ணாது—கன்றும் அருந்தாமல், கலத்தினும் படாது—பாத்திரத்திலும் கொள்ளாமல், நல் ஆன் தீம் பால்—நல்ல பசுவின் இனிய பாலானது, நிலத்து உக்காங்கு—வெறுந்தரையிற் சொரிந்துவிட்டாற் போல, திதலை ஆகத்து எம் மாமை கவின்—சுணங்கு பரந்த மார்பிடத்துளதாகிய எம்முடைய மாந்தளிர்போன்ற அழகியநிறத்தின் விளக்க மாந்தன்மை, எனக்கும் ஆகாது—எனக்கும் பயன்படாமல், என்னைக்கும் உதவாது—என் தலைவனுக்கும் பயன்படாமல், பசலை உணீஇய வேண்டும்—பசலை என்னும் நோயால் உண்ணப்படல் வேண்டும்போலும்!

இனிய பாலை நிலத்திற் சொரிந்தாற்போல் என் அழகு வறிதாயிற்று.

கலம்—பாத்திரம். பசலை—மகளிர்க்குத் தலைவர் பிரிவால் காதலின் வேகத்தால் காணப்படும் நோய். ‘பசலை மெய்யாட்டி’—

என்பதுஞ் சாண்க. கண்ணுடியின்மேல் ஆவிபோல் தோன்றும் மேனியின் நிறம். மாமை மாந்தளிரின் நிறம். என்ஐ=என்னை= தலைவன். கவின்—அழகு. திதலை—சுணங்கு, தேமல்.

பசத்தல் மகளிர்க்குத் தலைவர் பிரிவால் நேர்வது. பசத்தலால் மகளிர்மேனி நிறம் மாறும்.

1. "என் அணிநலம் போர்ப்பதுபோலும் பசப்பு."
—(கலி.—33—5)

2. "வான்றருங் கற்பினுள் நிறனேடிப்
பசப்பூர்த லுண்டென" —(கலி.—16—20—21)

3. "பன்னுளும் படரப் பசலையா லுணப்பட்டாள்"
—(கலி.—48—16)

4. "பாயின பசலையாற் பகற்கொண்ட சுடர்போன்ருள்"
—(கலி.—132—10)

5. "மேனி மறைத்த பசலையாள்" —(கலி.—143—6)

என்பவற்ருலறியலாம்.

"கன்றுமுண்ணுது ....நிலத்துக்காங்கு" என்பது பயனின்றிக் கழிதற்கு வந்த உவமை.

'பசலையுணீய வேண்டும்'—"உண்டற்குரிய அல்லாப் பொருளை உண்டன போலக் கூறலு மரபே"—(தொல்.—பொருளியல்—19) என்பதனுல் மரபுபற்றி வந்தது.

உணீய வேண்டும்—இருசொற்கள் ஒருசொல் நீர்மைத்தாய் வந்த ஒருவகை வியங்கோள்.

மேற்கோள் விளக்கம்:—

1. "கன்று முண்ணுது ....கவினே"—

"இது வெள்ளி வீதியார் பாட்டு."மள்ளர் குழீஇய......மகனே" இது காதலற்கெடுத்த ஆதிமந்தி பாட்டு. இவை, தத்தம் பெயராற் கூறிற் புறமாம் என்று அஞ்சி வாளாது கூறினுர்"
—(தொல்.—அகத்.—பக்.—146)

இதனுல் இச்செய்யுள் வெள்ளிவீதியார் என்பவரால் பாடப்பட்டது என்பது வெளிப்படை. இதனைக் கொல்லன் அழிசி பாடியது என்று சில பிரதிகள் அறிவிக்கின்றன.

2. 'எனக்கு மாகா தென்னைக்கு முதவாது'

—"இது தலைவி என்னை என்றதற்கு மேற்கோள்"
—(தொல்—பொருள்.—பக். 859)

3. "கன்றுமுண்ணாது......கவினே"
அது பசலை பாய்தல்—பசலை பரத்தல்.

—(தொல்.—மெய்.—54)

4. "பசலையுணீஇயர் வேண்டும்" —(நன்—மயிலை. 218 பக்)

"செய்யியர் என்னும் எச்சமும் எதிர்காலமும் இருதொழிலும் கொண்டன" என்பதற்கு மேற்கோள்.

5. "பசலை யுண்ணியர் வேண்டும்'—

"இடையினர்தும் வினைமுதலுங் கொண்டன" என்பதற்கு மேற்கோள். —(நன்—சங்கர. பக் 181)

6. "கன்றுமுண்ணாது......கவினே"—பசலை பரத்தல், பசலை பாய்தல் என்பதற்கு மேற்கோள்.

—(இலக்கணவிளக்கம்.—பக். 537)

1. 'பசலை யுணீஇய வேண்டும்'—
(1) "பசலை யுணீஇயர் வேண்டும்"—பிரதிபேதம்.
(2) "பசலை யுண்ணியர்வேண்டும்"—பிரதிபேதம்.

2. 'திதலை ஆகத்தெம்'—'திதலை அல்குலெம்'—பிரதிபேதம்.

"கன்றுமுண்ணாது......மாமைக்கவினே"—இது காதல் கைம்மிகுதற்கு மேற்கோள். —(தொல்.—களவு, இளம். பக் 180)

மெய்ப்பாடு—அசைவுபற்றிய அழுகை.
பயன்—செலவழுங்குவித்தல்.

பாலை

தலைவனது பிரிவால் வருந்திய தலைமகளது ஆற்றாமையைக் கண்டு கவன்ற தோழிக்குத் தலைவி கூறியது.

ஔவையார் பாடியது

28. முட்டு வேன்கொல் தாக்குவேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவு வேன்கொல்
அலமர லசைவளி யலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே.

என்பது வரைவிடை ஆற்றாளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

பதவுரை:—

முட்டுவேன் கொல்—நான், என் தலையை முட்டிக்கொள்வேனோ? தாக்குவேன்கொல்—பிறரை எதிர்த்துத் தாக்குவேனோ? ஓர் பெற்றி மேலிட்டு—ஓர் காரணத்தை மேலாகக் காட்டி, ஒல் எனக் கூவுவேன் கொல்—ஒல் என்று உரக்கக் கத்துவேனோ? அலமரல் அசைவளி அலைப்ப—துன்பத்தைத் தரும் சுழன்றுவீசுங் காற்று அடிக்க, என் உயவு நோய் அறியாது—என்னுடைய வருத்தம் செய்யும் காமநோயை அறியாது, துஞ்சும் ஊர்க்கு—தூங்குகின்ற இவ்வூராரைக் குறித்து, ஆ,அ—அந்தோ! ஒரேன் யானும்—நானும் செய்வது அறியேனாயினேன்.

பெற்றி—காரணம். ஆ அ—இரக்கக்குறிப்பு; அளபெடுத்துத் தனித்து ஒரு சீராயிற்று. கொல்—இடைச்சொல்; இரக்கப் பொருள். அலமரல்—துன்பம். ஊர்க்கு—இடவாகுபெயர், உருபு மயக்கம். ஓர்தல்—அறிதல்.

இச்செய்யுள், தலைவி, தலைவன் பிரிவாற்றாமைக்கு வருந்துவதையும். அவளது மனநிலையும், அவள் துஞ்சாமையும், ஊரார் இனிய உறக்கம் கொள்வதையும், மென்காற்றேயாயினும் அவளுக்குத் துன்பந்தருதலால் காமநோயால் வருந்தும் அவளுக்குத் தேகத்திற்குத் துன்பந்தரும் சுழற்காற்றெப்ப விளங்குவதையும் கூறுகின்றது.

முட்டுவேன்கொல், தாக்குவேன்கொல், கூவுவேன்கொல் என்பன காமநோயால் வருந்தும் தலைவி மனத்தெழுந்த வேகத்தால் கூறிய சொற்களாகும். இதனை,

"இவ்வளவிற் செல்லுங்கொல், இவ்வளவிற் காணுங்கொல் இவ்வளவிற் காதல் இயம்புங்கொல், இவ்வளவில் மீளுங்கொல் என்றுரையா விம்மினான்" என்பதனோடு ஒப்பிட்டுக்காண்க.

"முட்டுவேன் கொல்"—இதனை, 'மூட்டுவேன்கொல்' என்று பாடங்கொள்வாருமுண்டு. அலமரல்—சுழலல்—அலமா - பகுதி.

"அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி"

—(தொல்—சொல்—உரிச்—13)

மெய்ப்பாடு—பிணிபற்றிய இளிவரல்.
பயன்—ஆற்றாமை யறிவித்தல்.

தழுவுதொடரும், தழாத்தொடரும்

[வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர்]

வேற்றுமை யைம்முத லாறு மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடக் கெனவீ ரேழே.

இதன் உரையில், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும்,

"இவை தழுவுதொடர் எனவே, அவ்விருவழியினும், தழாத்தொடரும் சில உள என்றாராயிற்று. 'நீர்க்குடம்' என்பது நீரையுடைய குடம் என விரிதலால், நீர் என்பது உடைய என்பதைத் தழுவிக் குடம் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனால், இது தழாத்தொடராகிய வேற்றுமைத் தொகை. .... 'மரத்தைச் சாத்தன் வெட்டினான்' என்பதில், மரத்தை என்பது வெட்டினான் என்பதைத் தழுவிச் சாத்தன் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனால், இது தழாத் தொடராகிய வேற்றுமை விரி. "சுரையாழ அம்மி மிதப்ப" என்பது சுரைமிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டப்படுதலால், சுரை என்பது ஆழ என்பதையும் அம்மி என்பது மிதப்ப என்பதையும் பொருளால் தழுவாமல் தொடர்ந்தன. இவை தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி. தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியோடு பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர். பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர் தழுவு தொடர்" எனக் கூறியுள்ளனர்.

தழுவு தொடர், தழாத்தொடர் என்பன இலக்கணப் பொருத்தமுறத் தழுவுகின்ற தொடர், இலக்கணப் பொருத்தமுறத் தழுவாத தொடர் என்றே பொருள்படுமன்றி, பொருட் பொருத்தமுறத் தழுவுகின்ற தொடர், பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர் என்று பொருள்படா.

சூத்திரத்துட் கூறப்பட்ட பதினான்கு தொடர்களுள், முதற் பதின்மூன்றும் தழுவுதொடரும், கடையொன்றும் தழாத்தொடருமாகும் என்பதைக் குறித்தற்கே, அடுக்குத் தொடர்க்குமுன் தழுவுதொடர் என்பதைக் கூறிப் பிரித்தனர். ஏனைப் பதின்மூன்றும் தழுவுதொடர் எனவே, இறுதியொன்றும் அதற்கெதிராகிய தழாத்தொடரென்பது அறியப்படும், மெய்ம் மயக்குச் சூத்திரத்தில் ஒன்றை உடனிலை என்ற

தினல், இன்னென்று வேற்றுநிலையென் றறியப்பட்டாற்போல. இது சூத்திர மாதலின் சொற்சுருங்கற்கு இங்ஙனம் யாக்கப் பட்டது.

வேற்றுமைத்தொகை முதலிய ஆறு தொகைகளும், எழுவாய்த்தொடர் முதலிய எட்டுத் தொடர்களும், நிலைமொழியும் வருமொழியும் இலக்கணத்திற் சம்பந்தப்பட்டிருப்பதும், அடுக்குத்தொடர் ஒன்றுமட்டும் சம்பந்தப் படாது நிலைமொழி வருமொழிகள் தனித்தனி நிற்பதும் உதாரணவாயிலாய்க் கண்டுகொள்க.

(உம்.) சோறுண்டான்—வேற்றுமைத்தொகை } தழுவு
இராமன் வந்தான்—எழுவாய்த்தொடர் } தொடர்
பாம்பு பாம்பு—தழாத்தொடர்

நீர்க்குடம் என்பது நீரையுடைய குடம் என்று விரியும் போது, நீரை என்பது உடைய என்பதையும், உடைய என்பது குடம் என்பதையும் தழுவுகின்றமை காண்க. நீர்க்குடம் என்று தொகையாய் நிற்கும்போதும், நீர் என்பது (தொக்கு நிற்கும்) உடைய என்னுஞ் சொல்லையே அவாய் நிலையால் தழுவும். அல்லாக்கால், வந்தேன் என்னும் தொகை வாக்கியத்தில் நான் என்னும் எழுவாய் அவாய்நிலையால் வருவிக்கப்படாமை காண்க. சாத்தன் மரத்தை வெட்டினன் என்பதே இயல்பான தமிழுரை முறையாதலின், மரத்தைச்சாத்தன் என்பது ஒரு பயன் நோக்கிய முறை மாற்றும். சாத்தன் மரத்தை என்பதில் சாத்தன் என்பது எழுவாயும், மரத்தை என்பது எழுவாயின் தொழிலையடைகின்ற செயப்படு பொருளாயும் எங்ஙனம் இயையுமோ, அங்ஙனமே மரத்தைச் சாத்தன் என்பதிலும் இயையும்.

வந்த சாத்தன் மகன் என்னுந்தொடரில் வந்த என்பது மகனைத் தழுவுமாயின், அஃது இடைப்பிறவரல் எனப் பொதுவியலில் வேறிலக்கணமாகக் கூறப்படுதலின் ஈண்டைக் கேலாதாகும். ஏற்பின், பொருவியலின் கூறும் இடைப்பிறவரல் கூறியது கூறலாய்க் குற்றந்தங்கும்.

'சுரை யாழ அம்மி மிதப்ப' என்பது செய்யுட்குரிய மொழிமாற்றுப் பொருட்கோளாதலின், அதுவும் ஈண்டைக் கேலாது.

ஆங்கிலத்திலும் தழுவுதொடர் தழாத்தொடர்கட்கு இலக்கணப்பொருத்த முண்மை யின்மைகளையே இலக்கணமாகக் கொள்வர்.

Compound words (தொடர்மொழிகள்) are subdivided into two classes:—

I. Unrelated (தழாத்தொடர்) or those in which the simple words are not connected together by any grammatical relation. (These have been also called Juxta-positional.)

II. Related, (தழுவுதொடர்) or those in which there is some grammatical relation between the component words. (These have been also called syntactical.)

—Nesfield: Book IV.

பதினான்கு தொடர்களிலும் தழுவுதொடரும் தழாத் தொடரும் உண்டென்று நன்னூலார் கொண்டிருப்பின், அதை ஒரு தனிச் சூத்திரத்தில் விளங்கவைத் திருப்பாரே யன்றி, இத்துணை உய்த்துணர்விற்கும் மயக்கத்திற்கும் இடந் தந்திரார் என்க.

கம்பரும் வள்ளுவரும்

[காரை நகர் திரு. சு. அருளம்பலம் அவர்கள்]

(சிலம்பு ௧௪: பரல் ௧௨: ௰௩௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்

தசரத சக்கரவர்த்தி ஸ்ரீராமபிரானுக்கு முடிபுனைய எண்ணி உரைதெரிகணிதரை ஒருங்குநோக்கி 'வடிமழுவாள வற் கடந்த மைந்தற்கு முடிபுனை முதன்மைநாண் மொழிமின்' என்று வினவ, அச்சோதிடர்களும் நல்லநாளை ஆராய்ந்து 'உம் புதல்வற்குப் பொருந்துநாள் நாளை' என்றலும் அவர் மிக மகிழ்ந்து வசிட்டரை வரவழைத்து 'நல்லியன் மங்கல நாளும் நாளையாதலின் இன்று இராமனுக்குச் செய்யவேண்டிய விர தம் முதலாயவற்றை ஒல்லையினியற்றி நல்லுறுதி வாய்மையும் பெரிதும் சொல்லுதி' என்று வசிட்டரை வேண்ட, அவர் இராச்சியத்தை நடத்தவேண்டிய முறையை ஸ்ரீராமபிரானுக் குக் கூறிய முறையாக இராமாவதாரத்தில் அரசியல் அமைந் துள்ளது. இவ்வரசியன் முறையோடு திருவள்ளுவர் கூறிய அரசியல் ஒப்புமை யுடைத்தாயிருத்தலைக் காட்டுதும்.

வசிட்டர் உவகை நிரம்பியவராய் மனுகுலநாயகனாகிய ஸ்ரீராமனை நோக்கி, "போர்வலாய்! நினக்குப் புல்கு காதற்புர

வலன் நானிலத்தை நாளே நல்கும்'' என்று கூறிப் பின்னும் ''நான் கூறவேண்டிய உறுதிப்பொருள் ஒன்று உண்டு'' அதனை நன்றுகேட்டு நன்கு கடைப்பிடி என்று ஸ்ரீராமபிரானுக்கு அரசியன் முறைகூறத்தொடங்கி முதற்கண் அரசியல் நடாத்தற்கு அருந்துணையாகிய அந்தணரைப் பேணுமாறு கூறுகின்றார்.

> ''கரிய மாலினுங் கண்ணுத லானினு
> முரிய தாமரை மேலுறை வானினும்
> விரியும் பூதமொ ரைந்தினு மெய்யினும்
> பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்''

என்று, 'திருமால், பரமசிவன், பிரமன், உலகம், சத்தியம் முதலாய அனைத்தினும் உயர்ந்தோர் அந்தணர். அவரை இன்றியமையாதது உலகமாதலின் அவ்வந்தணரைப் பேணுதல் உலகினைக் காப்பாற்றுகின்ற அரசர்க்கு உரிய கடமையாகும்' என்று கூறி,

> ''அந்த ணாளர் முனியவு மாங்கவர்
> சிந்தை யாலருள் செய்யவுந் தேவரி
> னொந்து ளாரையு நொய்துயர்ந் தாரையு
> மைந்த வெண்ண வரம்பு முண்டாங் கொலோ'

என்று, அந்தணாளர் முனிவினால் தேவர்களில் துன்புற்றோரையும், அவர் அருளினால் மேனிலையடைந்து இன்புற்றோரையும் கூறி,

> ''அனைய ராதலி னையவிவ் வெய்யதீ
> வினையி னீங்கிய மேலவர் தாளினைப்
> புனையுஞ் சென்னியை யாய்ப்புகழ்ந் தேத்துதி
> யினிய கூறிநின் றேயின செய்தியால்''

> ''ஆவ தற்கு மழிவதற் கும்மவ
> ரேவ நிற்கும் விதியுமென் றாலினி
> யாவ தெப்பொரு ளிம்மையு மம்மையுந்
> தேவ ரைப்பர வுந்துணை சீர்த்ததே''

என்று அவர் வலிமை கூறுவாராய் அவர் ஏவலின்படி விதி நிற்பதால் அவ்வந்தணரைக் காட்டிலும் சிறந்த பொருள் பிறிதொன்றின்மையின் அவர் தாளிணைப் புனையுஞ் சென்னியைப் புகழ்ந்தேத்தி அவர் துணையைக் கொள்ளுதல் அரசியல் நடத்துவார்க்கு இன்றியமையாத முறைமையாகும் என்று வசிட்டர் இராமபிரானுக்குக் கூறினார்.

இவ்வாறு அந்தணரை அரசர் பேணுவதாகிய முறையை வள்ளுவரும் பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரத்தாற் கூறினார். இஃது பெரியார் என்பதற்குத் 'தீநெறி

விலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையார் என்றும், அப்பேரறிவுடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மாறுடத் தெய்வக் குற்றங்கள் வாராமற் காத்தற்குரிய அமைச்சர், புரோகிதர் என்றும் வரும் பரிமேலழகர் உரையான் அறியலாகும். பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரத்துள் அரசர் அந்தணரைப் பேணல்வேண்டும் என்பதனை வள்ளுவரும்

"உற்றநோய் நீக்கி யுறாமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்"

என்னும் குறளினாற் கூறினர். இதன் உரையிலே "உற்ற நோய் நீக்கி" என்பதற்குத் 'தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறறிந்து நீக்கி' என்றும், "உறா அமை முற்காக்கும் பெற்றியார்" என்பதற்குப் 'பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையுடை அமைச்சரும் புரோகிதரும்' என்றும் வரும் பகுதியானும் அறியலாகும்.

அந்தணாளர் முனிவினால் தேவரில் நொந்துளார் நகுஷன், இந்திரன் முதலாயினார். இந்திர பதவிபெற்றுச் செல்லுகின்ற நகுஷன் அகத்திய முனிவர் சாபத்தினால் மலைப்பாம்பாயினமையும், இந்திரன் துருவாச முனிவர் சாபத்தினால் தன் பதமிழந்து தாமரைத் தண்டினுள்ளே ஒளித்திருந்ததுமாகிய கதைகள் இங்கு அறியத்தக்கன. நகுஷன் தன் பதமிழந்த கதையினை வள்ளுவரும்,

"ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்"

என்னுங் குறளினாற் கூறினார். இதன் உரையில், "நகுடனென்பான் இந்திரன்பதம் பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய அதனாற் சாபமெய்தி அப்பத மிடையே இழந்தானென்பதனை யுட்கொண்டு இவ்வாறு கூறினார்" என்று பரிமேலழகர் இக்கதையைக் குறிப்பிட்டமை காண்க.

அந்தணரை அரசர் பேணிப் போற்றுவதாகிய ஒழுக்கம் பண்டைக்காலத்துள தென்பது

"இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே" (புறம்)

எனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பணித்தமையானும்,

"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே" (பதிற்றுப்பத்து)

எனச் சேரமான் செல்வக் கடுங்கோவாழியாதனைக் கபிலர் பணித்தமையானும் அறியப்படும்.

"ஆவ தற்கு மழிவதற் கும்மவ
ரேவ நிற்கும் விதி"

என்று விதியே ஆக்க வழிவுகளுக்குக் காரணமாகும் என்று கம்பர் கூறியமையை வள்ளுவரும்,

"ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி"

என்னுங் குறளிற் குறிப்பிட்டார்.

இன்னும் வசிட்டர் ஸ்ரீராமபிரானை நோக்கி அறமும், நீதியும், அருளும் முதலாகிய உயரிய குணங்களைத் தவறாது கைக்கொண்டு நடப்பாயாக;

"உருளு நேமியு மொண்கவ ரெஃகமு
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்குந்
தெருளு நல்லற மும்மனச் செம்மையு
மருளு நீத்தபி னுவதுண் டாகுமோ"

என்று கூறினர். இவ்வாறே வள்ளுவரும்,

அறத்தினை,

"அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு"

"இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு"

"பெருங்கோடையான் பேணான் வெகுளியவனின்
மருங்குடையார் மாநிலத் தில்"

என்னுங் குறள்களினும்,

மனச்செம்மை (நீதி)யை,

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு"

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்"

"மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
மன்னுவா மன்னர்க் கொளி"

என்னுங் குறள்களினும்,

அருளினை,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்"

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு"

"தளியின்மை ஞாலத்திற் கொற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழு முயிர்க்கு"

என்னுங் குறள்களினாலும் கூறினர்.

கம்பர்,

"தெருளு நல்லறமும் மனச்செம்மையும் அருளும்"
எனக்கூறிய முறையாக வள்ளுவரும் இறைமாட்சி

என்னும் அதிகாரத்துள்,

கொடை யளி செங்கோல் குடியோம்ப னான்கும்
உடையனாம் வேந்தர்க் கொளி.

என்னுங் குறளினால் அறத்தைக் கொடை என்பதனாலும் மனச்செம்மையைச் செங்கோல் என்பதனாலும் அருளைக் குடியோம்பல் என்பதனாலும் கூறினர்.

அறம், மனச்செம்மை, அருள் முதலாய குணங்கள் அரசர்க் கின்றியமையாத குணங்களாதலே.

"மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" (புறம்)
என்றும்,

"மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தினீடும் என்னெறி"—(பெரிய புராணம்.)

என்றும்,

"முறை வேண்டுநர்க்குங் குறை வேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
யிடைதெரிந் துணரு மிருடீர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துரும்பில் கூற்றமோ டிருந்தோற் குறுகி"

—(பெரும்பாண்.)

என்றும் வரும் பகுதிகளான் அறியலாகும். இங்கு, முறைவேண்டுநர்க்குங் குறைவேண்டுநர்க்கும் வேண்டுப வேண்டுப அருளி என்பதனால் அருளும், இடைதெரிந் துணரு மிருடீர் காட்சி என்பதனால் செங்கோன்மையும், வேண்டினர்க்குக் கொடைக்கட னிறுத்த என்பதனால் அறமும் குறிப்பிடப்பட்டமை காண்க.

(தொடரும்)

அறிவியற் பகுதி - Science

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

[திரு.பா. வே. மாணிக்கநாயகர்-திரு. க.ப. சந்தோஷம், B.A., L.T.]

(சிலம்பு கச: பரல் கக: சஎ௩-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுகாறும் முகவுரையாகக் கூறியவைத நிறுத்தித் தமிழ் எழுத்துக்களும் அவற்றின் நுண்மை விளக்கமும் என்ற பொருளை எடுத்துக்கொள்ளுகிறேன். தமிழ்மொழியிலே மறைத்தன்மையவாகிய பகுதிகள் நிரம்பிக் கிடக்கின்றன. மறைத்தன்மையவாகிய இப்பகுதிகளைத் தமிழ் இலக்கியத்திலிருந்து நீக்கிவிடுவோமாயின், இக்காலத் தெழுதப்படுகின்ற நாவல்களைத்தவிர வேறொன்றும் எஞ்சாது. முப்பது நாற்பதியாண்டுகளுக்குமுன் மொழியின் தோற்றத்தையும் பயனையும் பற்றிப் பல்வேறு கருத்துக்களிருந்தில. ஒரே ஒரு கருத்துத்தானிருந்தது. அக்கருத்தென்னவெனின், தொடங்கற்கண் சிவபிரான் அகத்தியருக்கு மொழியையளித்தார்; அகத்தியர் அதைத் தென்னிந்தியாவிலுள்ள . மக்களுக்கீந்தார்; அதன் பயன் கடவுளையடைவதே என்பதாம். இதைத் திருவள்ளுவர் தமது குறளில் வற்புறுத்துகின்றார்:—

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்.
ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்க்
கெழுமையு மேமாப் புடைத்து.
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

இக்காலத்து உலோகாயதக் கொள்கையினர் மொழியைப் பற்றிய இக்கருத்து அறியாமையின் பாற்படுமென்று இகழ்ந்துரைப்பர்.

இக்காலத்தில் மொழியைப்பற்றித் தமது கருத்தை வெளியிடுகின்ற பழைமை யாராய்ச்சிக்காரர், கல்வெட்டுக்களையும் நாணயங்களையும் ஆராய்பவர், மக்கட் பகுப்பை ஆராய்பவர், முன்னிருந்து மாண்ட உயிர் வகைகளை ஆராய்பவர் ஆகிய பலரும் காரணமின்றி ஒன்றையும் ஏற்றுக்கொள்ள இசைகின்

றிலர். பொது அறிவிற் குடன்பட்டதையே அவர்கள் காணக் கூடியவர்களாதலின், நமது நாட்டுப் பழைய ஆசிரியர்கள் நுட்ப அறிவினற் கண்டவற்றை இவர்கள் மதியார். பொது அறிவென்பது இத்தன்மையதென்று வரையறுக்கப்பட்ட தொன்றன்று; அது காலத்திற்கு மிடத்திற்கு மேற்றவாறு மாறுந்தன்மையது; வெவ்வேறு மக்களில் வெவ்வேறு அளவுடையதாயிருப்பது; ஒரு மகனே ஒரு பொழுதில் சிறந்த அறிவுடையவனுகவும், மற்றொரு பொழுதில் குறைந்த அறிவுடையவனுகவும் விளங்கலாம். முன்னிருந்த ஆசிரியர்கள் மொழியைப்பற்றி ஒரே கருத்துடையவராயிருந்தனர். இப்பொழுது மொழிகளை யொட்டிய பத்து ஆராய்ச்சித்துறைகளிருந்தால் இவ்வாராய்ச்சித் துறையிலுள்ளவர்கள் மொழியின் தோற்றத்தைப்பற்றிப் பதிற்றுப்பத்துக் கருத்துடையவர்களாயிருக்கிறார்கள். சமஸ்கிருத ஆராய்ச்சியாளர் சமஸ்கிருதத்திலிருந்தே எல்லாந்தோன்றின வென்பர்; கீழ்நாட்டார், எல்லாம் கிழக்கிலிருந்தே பிறந்தனவென்பர்; கிறிஸ்தவர்கள் பழைய பாபிலன் நாடே எல்லாவற்றிற்குந் தோற்றுவாயென்பர்; இந்துக்கள் குருக்ஷேத்திரத்தை யாவற்றிற்குந் தாயகமாக்குவர்; என்னைப்போன்ற தமிழர்கள் யாவுந் தமிழிலிருந்துந் தென்னிந்தியாவிலிருந்துமே வந்தன வென்பர்.

இங்ஙனங் கூறப்படுகின்றன வெல்லாம் ஒக்க உண்மையாயிருத்தல் கூடாது; எல்லாந் தவறுயிருக்கலாம். மொழி இறைவனிடத்திருந்து வந்ததென்ற கொள்கை பன்னெடுங்காலம் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. தக்கவை எஞ்சும் மற்றவை அழியும் என்ற கொள்கையைப் பின்பற்றுகின்ற இக்காலத்து ஆராய்ச்சியாளர் மேற்குறித்த கொள்கை மிக நீண்டகாலம் மக்களுளத்தில் ஆட்சிபெற்றதற்குத் தகுந்த காரணங்கள் இருக்க வேண்டுமென்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அக்கொள்கை அறியாமையாற் பிறந்ததென்பது ஒவ்வாது. வானநூல், இசை, மருந்து, உண்மைநூல், இலக்கணம் முதலியவற்றை நன்கறிந்த நம்முடைய பண்டைப் புலவர்கள் மொழி என்ற இவ்வொரு பகுதியில் மாத்திரம் அறியாமைக்காளானுர்கள் என்பது பொருந்துவதொன்றன்று.

மொழி என்பது மக்களை இறைவனிடத்துச் செலுத்துங் கருவி என்ற கொள்கையைப் புறக்கணித் தொதுக்குகின்ற இக்காலத்துப் புலவர் பண்டைக்காலத்துக் கருத்துக்களில் இது பதர், இது மணி என்பதை ஆராய்ந்திருக்கவேண்டும். இவ்வாறவர்கள் செய்யாது முழுவதையும் அவர்கள் இகழ்ந்துரையாடுகின்றனர்.

மொழியைப்பற்றி முன்னோர் கூறியத நுண்மையைக் கண்டு பிடிப்பது முப்பதியாண்டு எனது வேலையாயிருந்தது. அதை முற்றும் யான் கண்டுவிட்டேனென்று சொல்லொணாதாயினும் இத்துறையில் இன்னுமாராய்ச்சிசெய்யுந் திறமையுடையவர்க்குப் பயன்படக்கூடியவற்றைத் தொகுத்து வைத்திருக்கின்றேன். கணக்கு முதலிய மற்ற அறிவுத்துறைகளைப் போலவே இத்துறையும் வளருந்தன்மையது. ஆகவே, இதன் எளியவான பகுதிகளைக் கூறாது நுட்பமானவற்றிற்குச் செல்லுதலியலாது. ஈண்டுக் குழுமியிருக்குங் கற்றோரவையில் இத்துறையின் எளியனவற்றையே யான் எடுத்துரைத்தல் கூடும்.

எழுத்துக்களைப்பற்றிப் பொது முறையிலாவது, நுட்ப முறையிலாவது பேசுதற்கு அவற்றின் இயலை இரண்டாக வகுத்தல்வேண்டும். இவைஒலியியல் வடிவியல் என்பனவாம். இன்று எழுத்துக்களின் வடிவமைதியைப் பற்றிச் சில படங்கள் காட்ட விரும்புகின்றேனாதலின், ஒலியியலைப்பற்றி விரிவாய்க் கூறுதற்கில்லை. தமிழ் எழுத்துக்களின் ஒலி அல்லது உச்சரிப்பு எங்ஙனமிருக்க வேண்டுமென்று பழைய தொல்காப்பிய முதல் நேற்றுத்தோன்றிய சிறு நூல் வரையிலுள்ள எல்லா இலக்கணங்களாலும், மிக நுட்பமாகவும் அறிவியலுக்கொத்த வகையிலும் கூறப்பட்டிருக்கின்றது. இந்த விதிகள் இக்காலத்திற்குப் பொருந்தாவென்று தள்ளப்படவில்லை. என்றாலும், மகாமகோபாத்தியாயர் முதல் பேர்பெரிய திண்ணைச் சட்டம்பியார் வரையில் எல்லோரும் இவ்வெழுத்துக்களின் ஒலியைத்தவறாக எழுப்புவதிற் பிடிவாதமாயிருக்கிறார்கள். தமிழ் எழுத்துக்களின் செவ்விய ஒலி இம்மாகாணத்திலுள்ள கல்வியில்லாதவரென்று கருதப்படுகின்ற தமிழ் மக்களிடத்தும், இலங்கைத் தீவின் வடபகுதியிலுள்ள படித்த தமிழரிடத்துங் கேட்கப்படுகின்றது.


இப்பொழுது தமிழகராதி தொகுப்பதற்குக் கூட்டப்பட்ட குழுவினர், தாங்கள் தொகுக்கப் போகின்ற அகராதியில் தமிழ் எழுத்துக்களின் தவறான உச்சரிப்பைச் சரி என்று பதிவு செய்யப்போவதால் அறிவியல் முறைக்கொத்த வகையில் திருத்தமாக வகுக்கப்பட்ட தமிழ் ஒலியியலுக்குக் கல்வி இல்லாதவரைக் காட்டிலும் பெருங்கேடு விளைப்பாரென்பது திண்ணம். தமிழ்ச் சொற்களின் உச்சரிப்பை ஆங்கிலவெழுத்தில் தவறாக அமைத்துக்காட்டாது விட்டுவிடுவாராயின் அதுவே அவர்கள் தமிழுக்குச் செய்யுமோர் உதவியாகும். தவறான உச்சரிப்பைத் தக்கதென்று அகராதியிற் காட்டல் தமிழ்மொழியின் அடிப்படையை, உண்மை என்ற அதன்

அஸ்திபாரத்தைத் தாக்குவதாகும். (சென்னைச் சர்வ கலா சாலையாரால் நீண்டகாலந் தொகுக்கப்பட்டு அண்மையில் முற்றுப் பெற்ற தமிழகராதியில் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதிக் காட்டியிருப்பது இழுக்குடைத் தென்பதை அப் பெரிய அகராதியின் ஒரு பகுதியைப் பார்த்த எவரும் தெற்றெனக்காணலாம். இதுகுறித்து மாணிக்கநாயக்கர் சொல்வது ஒருபுறமிருக்க, இந்த மாதத் தொடக்கத்தில் (ஆகஸ்டு. 9) வெளிவந்த 'இந்து'ப்பத்திரிகை ஞாயிற்றுக்கிழமைப் பதிப்பில் திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரவர்கள் தமிழகராதியில் தமிழ்ச்சொற்களை ஆங்கில எழுத்தில் பெயர்த்துக் காட்டியிருப்பதன் குறைகளை எடுத்துரைத்துளார்.) தமிழ் எழுத்துக்கள் உண்மை இயலை அடிப்படையாகக் கொண்டவை. தமிழ் இலக்கணங்களில் வகுக்கப்பட்டிருக்கும் ஒலியியல் அறிவியல்முறையைத் தழுவியது. இம்முறையில் வகுக்கப்பட்ட அவ்வொலியியலை நாம் வழங்குவோமாயின் உலகிலுள்ள எம்மொழியையுந் தமிழில் (வேறு எழுத்துக்களைக் கடன் வாங்காமல்) வரைவதற்குப் போதிய எழுத்துக்களிருக்கின்றன. இதைவிட எளியதுந் திருந்தியதுமான முறையொன்று கருதற்கரிது. தமிழ் ஒலி முறையின் இயலையும் அஃது எவ்வொலியையும் வரைந்து காட்டுந் திறமையுடையது என்பதையும் உவெஸ்லி கலாசாலைக் கூட்டத்தில் 1917-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 23-ம் தேதி நிகழ்த்திய சொற்பொழிவில் விளக்கியுள்ளேன். நமதருமைத்தமிழ் மொழியின் பொருட்டு இத்துறையில் ஆர்வத்துடன் ஆராய்வதற்கு எளியேன் என்றும் என்னாலியன்ற உதவியைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

நுரைநாட்டியம்

வழக்காற்றில் "நொர நாட்டியம்" என்று ஒரு சொல் தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. அதுவே "நுரைநாட்டியம்" என்பதாம். ஒருவன் ஒரு நொடிப்பொழுதுகூட ஓரிடத்தில் நில்லாமல் அங்குமிங்கும் ஓடியாடிக் குதித்துக்கொண்டிருப்பானாயின் "என்னடா, நுரைநாட்டியம் பழகுகிறாய்" என்று கூறுவதுண்டு. ஒரு பொருளை விரும்பி அழுங்கால் குழந்தைகள் இவ்வாறு நுரைநாட்டியம் பழகுவது இயல்பு. ஓடும் நீர்ப்பரப்பின்மீது நீர்க்குமிழிகள் சற்றும் ஓயாது அலைதருவதைக் கண்டவர்கள் இச்சொல்லின் வியத்தகு உவமைச் சிறப்பை நன்கறிவார்கள். (நுரை + நாட்டியம் = நுரைநாட்டியம்)

(காழி. சிவ. க.)



சிவஞானபோதக் கருத்து

ஆறுவது சூத்திரம்

[திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளை B. A. அவர்கள்]

பதிப்புரிமை ஆக்கியோர்க் குரியது.

(சிலம்பு 14: பரல் 12: பக்கம் ருருஎ-ன் தொடர்ச்சி.)

[ருருஎ-ம் பக்கத்திற் கூறப்பட்ட 21-ம் பந்தியை அடித்து விட்டு அதற்குப் பதிலாக அடியிற் கண்டவற்றை 21-ம் பந்தியாகக் கொள்க.]

21. இச்சூத்திரம் இரண்டு அதிகரணங்களை யுடையது. அவற்றுள் சூத்திரத்திலுள்ளபடி "உணருரு எனின் அசத்து உணராது எனின் இன்மை" என்று முதல்அதிகரணம் இருத்தல் வேண்டும். இவ்வதிகரணத்தில் "உணருரு எனின் அசத்து" என்றும் "உணராது எனின் இன்மை" என்றும் இரண்டு பகுதிகளுள.

இரண்டாவது பகுதியாகிய "உணராது எனின் இன்மை" அதாவது, முதல்வன் உணரப்படாத இயல்புடையவன் என்றால் சூனியப்பொருளாம் என்பது எல்லாச் சமயத்தாரும் ஒத்துக்கொள்ளு முண்மை யாதலின், அதுபற்றி ஆசங்கை யில்லை. ஆதலின், ஆசிரியர் அப்பகுதியினை விடுத்து உணருரு எனின் அசத்து என்பதை முதல் அதிகரணமாக வைத்துக் கூறினர். இவ்வாறு ஆசிரியர் கூறுதுவிடுத்த இரண்டாவது பகுதியை வழிநூலாசிரியர் மந்த உணர்வுடையார்க்கு "உணரப்படாத முதற்பொருள் சூனியமோ அன்றோ" என்னும் ஆசங்கை (ஐயப்பாடு) நிகழாமைப்பொருட்டு தமது சித்தியார் நூலில் மூன்றாவது அதிகரணமாக வைத்துச் சுட்டறிவினால் அறியப்படாத பொருளும் சூனியப்பொருளும் அல்லாத முதற்பொருளை "அநிர்வசனீயம்" என்றுகூறும் மாயாவாதியை மறுத்துரைக்கின்றார். இருதிறனல்லது சிவசத்தாம் என்னும் இரண்டாவது அதிகரணத்தை வழிநூலாசிரியர் முதனூலாசிரியர் கூறியவாறே கூறுகின்றார். இந்த இரண்டு அதிகரணங்களும் முறையே பின்னர்க் கூறப்படும்.

முதல் அதிகரணம்

22. மேலே அஞ்சாவது சூத்திரத்தில், உயிரானது மனம் ஐம்பொறிகளால் தன்னையும் தன்னைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியமாட்டாது என்று ஆசிரியர் கூறியதனை உடன்படாது, உலகம்போல் முதல்வனும் அளவை அறிவால் அறியப்படும் பொருளாம் என்று கூறும் நையாயிகர் முதலாயினோரையும், சற்காரிய வாதப்படி எல்லாப் பொருள்களும் சத்தேயாகலின் அளவை அறிவால் அறியப்படும் பொருளாகிய உலகமும் சத்தேயாம் என்று கூறும் சாங்கியரையும் மறுத்து மாணவர்க்கு ஐயப்பாடு நிகழாமல் சைவசித்தாந்த உண்மையை அறிவுறுத்தும்பொருட்டு ஆசிரியர் இந்த முதலதிகரணத்தைக் கூறுவான் தொடங்குகின்றார்.

23. ஆசிரியர் முதற்கண் "ஈண்டு அறிவினா லறியப்பட்ட சுட்டு அசத்து" என்பதனை மேற்கோளாகக் கூறுகின்றார். ஈண்டு என்பது இவ்வதிகரணத்தில்; அறிவு என்பது ஒன்றை முந்தி அதுவதுவாக உலகத்தார் காணும் கருவிகளோடு கூடிய அளவை அறிவு. புடைநூலாசிரியர் சிவப்பிரகாசம் 56-வது பாட்டில் "அறிவுதானொன்றை முந்தி யதுவதுவாகக் காணுமறிவு காண்" என்று கூறியது காண்க. முதல்வன் மெய்யறிவினால் (சிவஞானத்தால்) அறியப்படுதலின் அதனின்று நீக்கி அறிவதற்கு ஆசிரியர் 'அறிவினால்' என்றார். சுட்டு என்பது ஆகுபெயராய்ச் சுட்டி யறியப்படும் பொருளைக் குறிக்கிறது. மனதினாற் கருதி அளவை அறிவினாற் சுட்டி அறியப்படும் பொருள்களாகிய உலகம் அசத்து; என்பது மேற்கோளினாற் போந்த பொருளாகும். இங்ஙனம் முதற்கண் ஆசிரியர் அசத்துப் பொருளின் இலக்கணங் கூறினார்.

24. உலகத்தை அசத்துப் பொருள் என அறிந்த ஒருவனே பின்னர் உலகம் அசத்துப் பொருளாயின், அவ்வசத்தினின்று நீங்கிய சத்துப்பொருள் யாதென நாடி அதனைத்தேடி அடைய முயல்வன். ஆதலின், ஆசிரியர் முதற்கண் மாணவர்க்கு உலகத்தின் அசத்துத்தன்மையைக் கூறினார். ஒருவன் அசத்தாகிய உலகின் நிலையாமையை உலக வாழ்வு அநுபவத்தின் பயனாக அறிந்து, பின் அந்நிலையாமையின்றி யென்று மொருதன்மைத்தா யுள்ள சத்தாகிய சிவத்தை அடைய விரும்பி, அதனைத் தேட முயல்வான். வீடுபேற்றைக் காரண வகையாலே, துறவற வியலிற் கூறவந்த ஆசிரியர் திருவள்ளுவர், வீடு பயக்கு மெய்யுணர்தலுக்குக் காரணமாகத் தமது திருக்குறள் நூலில் முதற்கண் நிலையாமை

யைக் கூறிய கருத்தை நோக்குக. இதுபற்றியன்றோ மனவாசகங் கடந்தார் தமது உண்மை விளக்கம் என்னும் நூலில் "போய்காட்டிப் போய்யகற்றிப் போதாந்தப் பொருளாம்—மெய் காட்டு மெய் கண்டாய்" என்று தமது ஞானசிரியரை விளித்துக் கூறினர். உலகினைச் சுட்டி அறியும் ஆராய்ச்சி அறிவே சிவத்தைச் சுட்டிறந்தறியும் மெய்யறிவுக்கு வழியாகும் என்பது கருத்து. மாணிக்கவாசக அடிகளும் தமது திருவாசக நூலில் வீடுபேற்றிற்கு வழியாகச் சுட்டறிவு ஒழித்தலைத் திருவேசறவு என்ற பதிகத்திற் கூறியருளியதூஉங் காண்க.

25. ஆசிரியர் கூறின மேற்கோளைக் கேட்ட நையாயிகன் கூறுவதாவது:—அசத்தாவது இல்லை என்னும் உணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பது. இவ்வாறன்றி 'இது குடம்' 'இது படம்' என்றாற்போல உள்ளது என்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயக்கும் உலகமும் அசத்தேயாயின், சத்து, அசத்து என்னும் பாகுபாடு பெறப்படாது. உலகமானது சுட்டறிவாகிய அளவை அறிவினலறியப்படுதல் மாத்திரையே பற்றி, அதனை அசத்து என்றல் பொருந்தாது.

26. நையாயிகன் கூறிய தடைஉரை (ஆக்ஷேபனை)யைக் கேட்ட ஆசிரியர் தாம் கூறின மேற்கோளை நிலைநாட்டுதற்காய ஏதுவைக் கூறுகின்றார். அந்த ஏதுவானது "அவை தாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான் என்பது. இந்த ஏதுவில் அவை என்ற சுட்டுப்பெயர் மேற்கோளிற் கூறப்பட்ட 'சுட்டு' என்பதைக் குறிக்கிறது; அதாவது அளவை அறிவாற் சுட்டி அறியப்படும் பொருள்களை (உலகத்தை)க் குறிக்கிறது. பிரகாசம் என்பது ஒரு பொருளை உண்டு என்றுணருமுணர்வு. அப்பிரகாசம் என்பது ஒரு பொருளை இல்லை என்றுணருமுணர்வு. அச்சொற்களிரண்டுமிங்கே ஆகுபெயர்களாய் அவ்வுணர்வுகள் நிகழ்தற்கு இடமாகிய பொருளின்மேல் நின்றன. அளவை நூலில் உண்டு என்று உணருமுணர்வு உபலத்தி என்றும், இல்லை என்று உணருமுணர்வு அநுபலத்தி என்றுங் கூறப்படும். உலகமானது என்றும் ஒரு நிலையில் நிற்பதன்று; அது தோற்றமும் ஒடுக்கமும் எய்துந் தன்மையுடையது. நான்முகன் இராசத குணகுறிப்பாட்டால் உலகினைப் படைத்தபொழுது அது நம்மனோர்க்கு உண்டு என்று உணருமுணர்வுக்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பதாயுள்ளது. அதே உலகினை உருத்திரன்

தாமதகுண மிகுதிப்பாட்டால் அழிந்து ஒடுக்கினபொழுது அது நம்மனோர்க்கு இல்லை என்றுணருமுணர்வுக்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பதாயுள்ளது. உலகம் நிலைத்திருப்பதாயுள்ள இடைக்காலத்திலும் அதனிடத்துள்ள பொருள்களும் அடிக்கடி தோன்றியும் அழிந்தும் வருகின்றன. இங்ஙனம் உலகப்பொருள்கள் என்றும் ஒருதன்மைத்தாயிராமல் நிலைமாறிவரும் பெற்றியை உடையனவாயிருத்தல்பற்றியே அவை ஒரு காலத்தில் உண்டு என்றுணருமுணர்வுக்கு விடயங்களாய் நின்றே பிறிதொரு காலத்தில் இல்லை என்று உணருமுணர்வுக்கும் விடயங்களாய் நிற்கின்றமையால் அவை அசத்து என்று கூறப்பட்டன. இவ்வாறன்றி அவை நம்மனோர்க்கு உண்டு என்னுமுணர்விற்கு விடயங்களாயிருக்குங்கால் இல்லை (do not exist) என்பது பொருளன்று. அசத்து என்ற சொல்லுக்கு உண்டு (existence) என்ற சொல்லுக்கு மறுதலையான இல்லை (non-existence) என்று நீ பொருள் கொண்டதால் மயங்கிக் கூறினாய். சைவசித்தாந்த உண்மைப்படி பொருட்டன்மையின் வேறாய் இல்லை என்பதொன்றில்லை என்பதும், பதிபசுபாசப் பொருள்கள் மூன்றும் அநாதிநித்திய சத்துப்பொருள்களேயாம் என்பதும் நீ அறிவாயாக.

27. ஆசிரியர் கூறின விடை உரையைக் கேட்ட நையாயிகன் பின்னுங் கூறுகின்றதாவது:—உலகம் அசத்து என்பதற்கு நீர் கூறியது ஒருவாறு பொருந்தும். ஒருசாரன அங்ஙனமாயினும் அளவை அறிவால் அறியப்பட்டனவெல்லாம் அசத்தாமென்றல் பொருந்தாது. அவ்வாறு கூறுவதற்குப் பிரமாணமில்லை. அன்றியும் அளவை அறிவால் அறியப்பட்டனவெல்லாம் அசத்து என்னும் ஏதுபற்றி முதல்வன் அளவை அறிவால் அறியப்படான் என்பது பொருந்தாது. 'அங்ஙனம் நீர் கூறுதல் அருளினாலாகமத்தே அறியலா மளவினானுந் தெருளலாம்' என்று வழிநூலாசிரியர் சிவஞானசித்தியார் சுபக்கம் பாயிரத்திற் கூறியதற்கு முரணுகும்.

28. நையாயிகன் கூறின தடை உரையைக் கேட்ட ஆசிரியர் மறுமொழி கூறுகின்றார்:—நையாயிகனே! நீ அசத்தினிலக்கணத்தை நன்கு அறியாத காரணத்தால் நாம் சொன்ன உண்மையை அறியாமல் நீ இங்ஙனம் கூறுகின்றாய்! அளவை அறிவால் சத்தினிலக்கணத்தை அறிதல் முடியாது. மெய் யறிவுடையாரே பதி பசு பாசங்களின் சிறப்பிலக்கணத்தை அறிதல் முடியும் (13-வது பந்தி பார்க்க). மெய் யறிவாகிய அநுபவ அறிவு இல்லாத நீ அளவை அறிவு

கொண்டு சத்தினிலக்கணத்தை அறிய முடியாது. அதனால் அசத்தினிலக்கணத்தையும் நீ நன்கு அறியமுடியாது. 'அருளினு லாகமத்தே அறியலா மளவினாலும் தெருளலா'மென்று வழிநூலாசிரியர் கூறியது மெய்யறிவைத் தோற்றுவித்தற்கு அளவைஅறிவு பயன்படுமென்பது பற்றியே யாகும். அஃது அவர் கருத்தென்பது, அளவினாலுந் தெருளலாம் என்று அவர் அந்தப்பாட்டில் பொதுப்படக் கூறியபின் 'ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்' என்று சிறப்பாக விதந்து கூறியதனால் நாம் அறியலாம. இதனை யறியாது நீ அளவினாலுந் தெருளலாமென்று பாட்டில் முதல் வரியிற் கூறப்பட்டதை மாத்திரம் பிரமாணமாக எடுத்துக்கொண்டு நீ கூறுங் கொள்கைக்கு ஆதாரமா மென்றல் சிறிதும் பொருந்தாது. அணுவுக்குள் அணுவாய் உயிர்க்கு உயிராய் அளவு படாமல் எங்கும் நிறைந்திருக்கிற முதல்வனை எங்ஙனம் அளவுபட்ட அளவை அறிவால் அறிய முடியும் என்ற வினாவையும் நீ கருதவில்லை. ஆதலினால் மெய்ஞ்ஞானிகளே முதல்வனை அநுபவ உணர்வாகிய மெய்யுணர்வினாலே தங்கள் சிந்தையுள்ளே கண்டுணரலாமே அன்றி ஏனையோர் தங்கள் அளவை அறிவினா லறியமுடியாது.

இவ்வுண்மை பின்வருகிற உண்மை அதிகாரத்தில் நன்கு கூறப்படும்.

பிரிவாற்றுமை

யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை வழக்கறிஞர் திரு. வ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் B. A. சென்ற 31-8-36 ல் திடுமென இவ்வுலக வாழ்வை நீத்தது பெரிதும் இரங்கற்பாற்று. பண்டைத் தமிழ் நூலாராய்ச்சியில் கழிபற்றுடைய இப்பெரியார் "தண்டிகைக் கனகராயன் பள்ளு", "கதிரைமலைப் பள்ளு" ஆகியவற்றின் பதிப்பாசிரியராவர்: தண்டிகைக் கனகராயர் வழிவந்தவருமாவர். இறக்குந்தருவாயில் பாசுபதரைப்பற்றி ஆராய்ச்சி செய்துவந்தார்; யாழ்ப்பாண வரலாற்று நூலான கைலாய மாலைக்கு ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதி வந்தார். யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பிணைத்தலைவராக விளங்கிய இப்பெரியாரின் திருமகளார் யாழ்ப்பாணத்து இராமநாதன் கல்லூரித் தமிழ்ப் பண்டிதையாக விளங்குகின்றனர். அவ்வம்மையாரே "1800 ஆண்டுகட்கு முன்னுள்ள தமிழர்" என்ற ஆங்கில ஆராய்ச்சி நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவராவர். இறந்த பெரியாரின் குடும்பத்தார்க்கு இறைவன் ஆறுதலளிப்பானாக.

ஆராய்ச்சிப் பகுதி : Research

" வீரரும் வீரரைப் போற்றலும் "

[திருமதி குண ஜனார்த்தனம், M. A., L. T.]

வீரன் என்பான் யாவன்? வாளோ, வேலோ, அல்லது துப்பாக்கியோ கையிலேந்திப் போர்க்கோலத்துடன் அமர்க்களம் புக்குப் போரில் சலியாது நிற்பவன் தானே? அன்னானையே வீரனென என்னுகிறோம். அஃது பொருத்தமன்று. போர்க்களம் புகாமலே ஒருவன் வீரனாகத் திகழ்தலியலாதோ? உலகமே போற்றும் நம் காந்தியடிகள் ஒரு பெரும் வீரரன்றோ?

வீரமென்பது யாது? அதற்குத்தக்க செயல்களிலே உளதாகும் ஒரு மனத்துணிவு எனப் பொருள்கொள்ளுதல் மிகப்பொருந்தும். போர்த் தொழிலேயன்றி எத்தொழிலேனும் மக்களுள் அடங்குவார்க்கு ஏற்றதேல் அஃது தக்க செயலேயாம். மாக்கள் தொழிலில் உளதாகும் மனத்துணிவு வீரமாகாது.

தக்க தொழிலிலே உளதாகும் மனத்துணிவே வீரமாம். எத்தகைய இடையூறுகள் நேர்ந்த போதிலும் அவற்றைச் சற்றும் பொருட்படுத்தாது, தனக்கு உண்மையெனத் தோன்றியதையே உரமாகக் கடைப்பிடித்துத்தான் ஏற்றுக் கொண்ட வினையை ஆற்றலுடன் செய்துமுடிக்க முனைந்து நிற்கும் ஊக்கமே வீரமாகும்.

உண்மையெனக் கண்டதோர் செயலிலே எத்தகைய இடையூறுகள் நேர்ந்தபோதிலும், பலர் கொன்னே தன்மீது அலர் தூற்றியக்கண்ணும், அவமதித்த ஞான்றும், தனது உயிருக் கினியவரால் அச்செயலுக்காக இகழப்பட நேரினும், தானியற்றுஞ் செய்கை தகுதியுடைத்து, தூய்மையுடைத்து எனத் தெளிந்து செய்துமுடிக்குமொருவனே ஒப்பற்ற ஆண்மகனவன்; சிறந்த வீரனவன்; தான் மேற்கொண்ட செயலிலே வெற்றியுற விளங்கவேண்டு மென்பதில்லை; வீழ்ந்தாலும் வீரனே.

ஓர் உண்மைவீரனிடத்தில் வாய்மை, மனத்தூய்மை, கருணை, பொறுமை, தண்ணளி, மனவலிமை முதலியன

பொருந்தியிருக்கும். வீரனென்பானிடத்தில் வாய்மையென்ப தில்லையேல் அவன் வீரனுகான். அவனுக்கு வாய்மையெனக் காணப்படுவது பிறருக்கும் அப்படியே தோற்றவேண்டு மென் பதில்லை. ஆனல் அவன் தன் அறிவிற்கு உண்மையெனத் தோற்றியதைத் தெற்றெனக் கைப்பற்றல் வேண்டும். தான் கண்ட உண்மைக்கு மாறுக நடப்பவன் ஒருபொழுதும் வீர ணுகான்.

ஒருவீரனிடம் ஆணவமென்பதிராது; அவன்பால் கருணை யென்னும் அருங்குணம் பொருந்தாநிற்கும். கருணை யில்லாத மனவலியும் உடலுரமும் மாத்திரம் பெற்றிருந்தால் அஃது அமைவதாமோ? காட்டில்வாழ் விலங்குகளுங்கூட அவற்றைப் பெற்றிருக்கின்றன அல்லவோ? மனத்தூய்மை யுடையா னிடத்தே கருணை நனிவிளங்கும். கருணை யென்பது வீரனுக் கேற்றதோர் அணிகலமாகும். அதுதான் அவனுக்குப் பெரு மையுஞ் சிறப்பையும் பெருக்குகின்றது. கருணையின்றி மன வலிமை பெற்றிருப்பான் கொடியோனுகக் கருதப்படுவானே யொழிய வீரனுகக் கருதப்படமாட்டான் என்பது மிகை யாகாது.

தவிர, வீரனுகிய ஒருவன் தன்உடல், பொருள், உயிர் மூன்றையுந் தான்கண்ட உண்மைக்காகச் சற்றுந் தயங்காது துறக்க முன்னிற்பான். பொறுமையென்பது அவனிடத்தே இன்றியமையாம லிருக்கவேண்டுவ தொன்று. அஃதில்லையேல் தனக்கு நேரும் ஊறுகளுக்கு அவன் எங்ஙனம் ஈடுகொடுக்கக் கூடும்? மேலும் பொறுமை யில்லையேல் கருணையில்லை யன்றே? ஆகவே இக்குணங்களெல்லாம் நிரம்பப் பெற்றவனே வீர னவன்.

இராமாயணக் காதை தெரியாதவர்கள் ஒருவரு மில்லை யென்றே கருதுகிறேன். அக்காதைத் தலைவனும் இராமன் பல கலைகளுங் கற்றுத் தேர்ந்ததொரு வீரனன்றே! அவன் யாவர் மாட்டுந் தோல்வியுற்றுனில்லை. ஆனல் வெற்றி காரணமாகவே அவனை வீரனெனப் போற்றுகிறேமோ? இல்லை. அவன் வாய்மை மனத்தூய்மை, கருணை, பொறுமை, மனவலிமை ஆகிய இன்னேரன்ன இனிய குணங்கள் வாய்ந்தவன்.

அரக்கர் தலைவன், இராவணன், முதல்நாள் போரில் தன் படைகளையும், படைக்கலங்களையும், பத்து முடிகளையுமிழந்து வெறுங்கையோடு தலைகுனிந்து நின்றுன். அதுபோழ்து இரா மன் ஒரே அம்பினல் அவனைக் கொன்று வீழ்த்தியிருக்கலாம். ஆனல், அவ்வாறு செய்யாமல்,

"நின்றவர்நிலை நோக்கிய நெடுந்தகை யிவனைக்
கொன்ற லுன்னிலன் வெறுங்கை நின்றானென"

என்ற கம்பர் கூற்றால் ஓர் படையுமின்றி வெறுங்கையோடு நிற்கின்றானிவன். இச்சமயத்தில் நாம் இவனைக் கொல்வோமாயின், அஃது ஆண்மையாகாது; வீரமாகாது, என வுணர்ந்து "என் வல்லமையை யறிந்த இப்போதாயினும் என் மனையாளை என்னிடம் விடுத்து நின் உறவினரோடும், நின் பொருள்களோடும் வீபீடணனுடனிருந்து வாழ்வாய்; இல்லையேல், இன்று போய்ப் போருக்கு நாளைவா;" என அருளுரை பகர்ந்தான்.

இத்தகைய வீரனும், ஒருகால் வீரத் தன்மையினின்று மிழுக்கினான். அதாவது சுக்கிரீவனுக்கு அரசளிக்கும் பொருட்டு வாலியுடன் போர்புரியச் சென்றான். அதுபோழ்து மெய் வீரன்போல் நேர்நின்று அமர் புரியாது ஓர் மறைவிடத்தே ஒளிந்து வாலிபால் அம்பு எய்தான். தான் செய்வது தகாததென வுணர்ந்தே அவன் அங்ஙனம் அம்பெய்தான். அவன் எவ்வாறு அம்பு விடுத்தானென்பதைக் கம்பர் மிக அழகுபடக் கூறியுள்ளார்.

"எடுத்துப் பாரிடை யெற்றுவாம் பற்றியென்றிளவல்
கடித்தலத்தினுங் கழுத்தினுந் தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேற் கோலொன்று வாங்கித்
தொடுத்து நாணொடு தோளிலுய்த்தி ராகவன் றுரந்தான்"

வீரனுக்குத் தகாததோர் செய்கை தாமியற்றியதால், இராமன் நாணத்தோடு துரந்தான் எனப் பொருள்படக் கிடப்பது கருதற்பாற்று.

வாலியும் இராமன் தன் அறந்தவறிய செய்கையுணர்ந்து அவன்பால் கடுமொழி பகர்வது ஆராயற்பாலது.

"வீரமன்று, விதியன்று மெய்மையின்
வாரமன்று நின்மண்ணினுக் கென்னுடல்
பாரமன்று பகையன்று பண்பொழிந்
தீரமன் றிதுவென் செய்தவாறு நீ"

என வாலி இரக்கங்கூர மொழிந்தான். மேலும் அவன் "நின் செய்கை, நினது மாசற்ற குலத்திற்கே கேடு சூழ்வித்ததே. இது தானோ நின் ஆண்மை, இதுவோ நின் வீரம்' என இடித் திடித் துரைத்தான்.

இது நிற்க, இராவணன் தம்பியாகிய கும்பகர்ணனும் ஒரு பெரும் வீரனே. தன் அண்ணன் அநியாயப்போர் புரிகின்றா

னென அறிந்தும், தான் மடிவது திண்ணமெனத் தெரிந்தும், இராமன் தன் பக்கல் வந்து சேரும்படி கருணையோடு தூது விட் டனுப்பியும், அவன் "என் அண்ணன் என்னை இத்துணை நாள் வளர்த்து இப்போது போர்க்கோலஞ்செய்து 'போர் புரிந்துவா'' என்று அனுப்பியிருக்க இந்த நீர்க்கோல வாழ்வை விரும்பி இராமனைச் சேர்வேனோ? யான் உயிர்துறப்பது திண்ணமேனும் அஃது எனக்குப் புகழேயாம்'' என்றான். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்ற உண்மையை உணர்ந்தவனாதலால் தான் கண்ட உண்மை நெறியை உயிரினும் ஓம்பினான். இஃ தன்றோ வீரம்!! (தொடரும்)

எச். ஜி. வெல்ஸ்

நேற்றுமாலை பாடிங்டன் நோயாளர் விடுதியிற் றம் முடைய 97-ஆம் அகவையில் திடுமென மாரடைப்பினால் உயிர்நீத்த திரு. எச். ஜி. வெல்ஸ் என்னும் பெரியாரைப்பற்றி இக்கால இளைஞர்கள் அதிகமாக அறிந்திருத்தல் அரிது. ஆனால், இந்நூற்றாண்டின் றொடக்கத்தில் வெளிவந்த பலவாய நூல்களையும் விரும்பிப் படித்துள்ள முதியோரிற் பலர் அப் பெரியார் எழுதிய பல நூற்களின் பெயர்களை நினைவுகூர்தற் கூடும்; ஏன்? அந்நூல்களில் இரண்டொன்று அவர்கள்தம் வீட்டுப் பரண்களின் மூலை முடுக்குகளிற் கிடக்கக் காணவுங் கூடும். அக்காலத்தில் கணக்கற்ற நூல்களை யெழுதிக் குவித்த வயிற்றுப் பிழைப்பு நூலாசிரியர்களில் அப்பெரியாரும் ஒருவர். நூலாசிரியராகத் தாமே பல நூல்களை அவர் எழுதியது மட்டுமன்று; அவரைப் பற்றியே பல சிறுநூல் களும், ஆராய்ச்சி யுரைகளும் எழுதப்பட்டிருந்தன. இலண் டன் பிரிட்டிஷ் மியூசியம் என்ற பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலைப் படிப்பறையின் நூலகராதி யட்டவணையில் அவர் பெயரினடியிற் குறிக்கப்பட்டிருந்த நூற்பெயர்கள் அறு நூற்றுக்குக் குறையா.

ஐந்தாண்டுகளுக்குமுன் இலண்டன்மாநகரப் பரப்புரை நிலைய(Broadcasting Station)த்திலிருந்து கன்னி பெல்ப்ஸ் லெமன் (Miss. Phelps Lemon) என்பார் இப்பெரி யாரைப்பற்றிய பரப்புரை (Broadcast) யொன்று நிகழ்த்தி யுள்ளார். அவ்வுரையில் அவர் எடுத்துக்கூறிய ஒவ்

வொன்றும் இன்றளவும் தட்டியுரைக்கவொண்ணாத உண்மை யாகவே இருந்துவருகிறது. "வெல்ஸ் ஒருவகையில் அழிகுறி தெரிப்போரும் மற்றொருவகையில் ஆன்றநல் வழிகாட்டியு மாவர்" என்று அவ்வம்மையார் குறித்துள்ளார்.

1934-ஆம் ஆண்டில் தம்முடைய வரலாற்றை ஒளிமறை வில்லாமல் உள்ளதுள்ளவாறே வெல்ஸ் ஒரு நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூலின் பின்னிணைப்பாக மற்றொரு பகுதியை அவர் பின்னர் எழுதினாரேனும் அதனை அச்சியற் றாது கையெழுத்து வடிவிலேயே பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலைக் கையேட்டு நிலையத்திற் சேமித்து வைத்துள்ளார். இவற்றிலிருந்து அவர் எளிய வாழ்க்கை நடாத்தும் ஒரு குடும் பத்தைச் சேர்ந்தவரென்றும் ஒருசிறிது நிலபுலமுடையவ ரென்றுந் தெரியவருகின்றன. அவர் 1866-ஆம் ஆண்டிற் பிறந்தார். அவர் தந்தையார் ஒரு சிறு தோட்டக்காரராக விருந்து பின் சிறு வணிகராக மாறி அதன்பின் கூலிக்கு ஆடும் கிரிக்கெட் விளையாட்டுக்காரராக விருந்தவர்; தாயாரோ சோற்று விடுதிக்காரர் ஒருவரின் மகளார்; மணமாவதற்குமுன் வண்ணமகளாகவும் சமையற்காரியாகவு மிருந்தவர். இத் தகைய பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறந்த வெல்ஸ் தனிப் பட்ட ஓரியல்பு படைத்தவராக விருந்தார். உலகவாழ்வில் தம் குடும்பத்தினர்க்குக் கற்பிக்கப்பட்டிருந்த தாழ்வை யொத்துக் கொள்ளாதவராய், எட்டியுஞ் சுட்டியுங் கூறப் படாத ஒருயர்ந்த குடும்பத்தின் வழிவந்தவராகவே தம்மை அவர் கூறி நடந்துகொண்டார். பின்வருபவற்றை முன் னோக்கி யுணர்ந்துரைக்கும் நுண்மாண் நுழைபுலம் உடைய வராக வெல்ஸ் விளங்கினர். எனினும், கருதுவதிலும், ஆராய் வதிலும், சொல்லாடுவதிலும், எடுத்துரைப்பதிலும் எத்தகைய கட்டுப்பாட்டிற்கு முட்படாத பெருநோக்குடையவராக அவரிருந்தார். தனியுரிமை, வகுப்புரிமை, நாட்டுரிமை என்ற பல உரிமைகளிலும் ஏகபோக வுரிமை விழைவதை அவர் வன்மையாகக் கண்டித்துவந்தார். ரோஜர் பேக்கன் என்ற அறிஞரோடு தம்மை ஒப்பிட்டுக்கொள்வதில் அவருக்குப் பெருவிருப்பம். "வரலாற்று அளவைக் குறிப்பு" (Outline of History), "தொழில், பொருள், உலகவின்பம்" (Work, Wealth and Happiness of Mankind), "தோல்வி நுணுக் கம்" (Anatomy of Frustration) முதலிய பலநூல்களை அவர் இயற்றினர். இக்காலக் கல்விமுறைக்கு அவை ஏற்றன வன் றாயினும், அவை யெழுந்த காலநிலையை நோக்கின் துணி வுடைய சிறந்த ஆராய்ச்சிகளாகவே அவை கருதப்படுதற்

குரியனவாம். அன்றாடச் செய்திகளைத் திறல்பட எழுது வதிலும், புதுக்கதைகள் எழுதிப் பெருக்குவதிலும் அவர் வல்லவர். அறிவியலுண்மைகள் பொதுள அவர் அக்காலத்தி லேயே பற்பல புனைகதைகளை எழுதியுள்ளார். கால்ஸ் வொர்த்தி (Galsworthy), பென்னெட் (Bennet) என்ற அறிஞர்களின் புனைவுகளை யொத்து மறக்கப்படாத அறிவிய லுண்மைகள் திகழ்வனவாக அந்நூல்களிருந்தன வென்று கூறல் முடியாது. அன்றி, மாகாம் (Maugham) என்பாரின் நூலை யொத்து உண்மைகளைப் பிட்டுப் பிட்டு விளக்கும் பொன்றுப் புகழ்பெறக் கூடியனவாயுமில்லை. வாழ்க்கையின் பெருமாறுதல்கள், அடுபற்றுகள், கட்சிப்பாகுபாடுகள், நாட்டுச் சழக்குகள் முதலியவற்றை வெல்ஸ் விரும்புவதில்லை. அவர் யாவற்றையும் ஆராய்ச்சி யென்னும் நெய்யரிகொண்டு வடிகட்டும் அறிவமைதி வாய்ந்தவர். பற்றுள்ளத்தைப்பற்றி எழுத நேரின் அவர் உண்மையுணர்ச்சி யின்றியே எழுதுவார். அறிவொழுக்க முறைகளிற் பகட்டித்திரியும் இழுக்கர்களைக் கண்டிக்க நேரிட்டாலோ கழிபெருங் கடுமையுடன் கண்டித் தெழுதுவார். நகைச்சுவை பயக்கும் நொடிநூல்களை யெழு தும் ஆற்றல் வாய்ந்தவர்களி லொருவராக அவரைக் கருத லொல்லுமோ என்றுகூட ஓர் ஐயம் எழுந்ததுண்டு. எனி னும், அதைக்குறித்து ஈண்டு விரிக்க வேண்டுவதில்லை. படக் காட்சிக்காக எடுக்கப்படும் படங்களிற் சில நுண்ணிய கருத் துக்களை நுழைக்க அவர் தொடக்கத்தில் முயன்றதுமுண்டு. ஆயினும் படப் பிடிப்புக்குந் தமக்கும் நெடுந்தொலை யென்று பின்னர் அவர் கண்டுகொண்டு அம்முயற்சியை விட்டுவிட்டார். படம்பிடிக்கும் அறிஞரே வெல்ஸ் கூறுங் கருத்தின் திறனை யுணர்ந்து நடிக்கச்செய்து அவற்றைப் படத்திற் பிடித்து விட்டாலும், வெட்டறையில் (Cutting Room) அப்பகுதிகள் தவறாமல் வெட்டி யொதுக்கப்பட்டு வந்தன. அக்கருத்துக்க ளினால் விளையக்கூடிய பயன் இன்னதென்று வெல்சுக்குத் தெ ரிந்ததைவிடப் படமெடுப்போர் நன்கறிவார் போலும்!!

"ஒருநாளும் இல்லாத திருநாள்" என்றபடி 1938-ஆம் ஆண்டில் இப்பெரியார் பாஸிஸ்ட் (Fascist) கட்சியைச் சேர்ந்த ஒரு முரடனுடன் சச்சரவிட்டதில் படுகாயமுற்றார். 1942-ல் "சமதர்ம வாதிகள்" என்ற "கம்யூனிஸ்ட்" கூட்டத் தாரின் ஆட்சியிற் சிக்கியதால் எஞ்சியிருந்த உடல்நலத்திலும் பெரும் பகுதியை யிழந்தார். முன்னுணரும் ஆற்றல்கொண்டு உணர்ந்து அவர் எழுதியிருந்ததுபோலவே சென்ற பத்தாண் டுகளுக்குள் வாழ்வுத்துறையிலும் கலைத்துறையிலும் உண் டான புத்துயிர்ப்பியக்கத்தில் அவருக்குப் பங்கேதும் இருந்த

தாகத் தெரியவில்லை. முன்பெல்லாம் அவர் "பிஞ்சிற் பழுத்த பெரியா" ராகக் கருதப்பட்டு வந்ததெல்லாம் போய் இக்காலை அவரை நினைவுகூர்வதற்கும் ஆளில்லையென்றே கூறலாம். 1955-ஆம் ஆண்டில் அரசியலாரால் அளிக்கப்பட்ட ஒரு சிறு ஆண்டிறுக்கை (Civil list Pension)த் தொகையைக் கொண்டு அவர் தம் காலத்தைக் கழித்து வருவாராயினர். ரீஜெண்ட் நந்தவனத்தைச் சேர்ந்த பழைய வீடொன்றில் அவர் குடியிருந்துவந்தார்; பழுத்து, நரைத்துக், கூனிக் குறுகியுள்ள அவர் அந்த நந்தவனத்திடையுள்ள ஏரியிற் செல்லும் படகு களையோ அன்றி மரங்களிடை மலர்ந்திருக்கும் பூக்களையோ பார்த்து மகிழ்ந்தவண்ணம் உட்கார்ந்திருக்கவோ, அன்றிக் கையிற்பற்றிய தடியை யூன்றித் தட்டுத்தடுமாறிய வண்ணம் இருமிக்கொண்டும் தம்முட்டாமே பேசிக்கொண்டும் செல்லவோ அடிக்கடி பலர் கண்டிருக்கலாம். "எப்படியும் ஓர் "உண்மை" நூலை ஒருநாள் எழுதத்தான் போகிறேன்" என்று அவர் கூறிக்கொள்வார்.

குன்றுகட்டும் பவளச்சிலந்தி என்று அவரைக் கன்னி பெல்ப்ஸ் லெமன் ஒப்பிட்டுக் கூறியது ஒப்புக்கொள்ளக் கூடியதே. அவர் தேர்ந்த ஓவியர் என்று கூறலொண்ணது; ஆனாற் சிறந்த கலைவல்லார். அவரைப்பற்றியவற்றுள் ஏதொன் றும் நினைவுக்குறியாக அமைந்திருக்கிறது என்று எடுத்துக் காட்டுவதற்கில்லை. எனினும், அவரும் அவரை யொத்த பிற ரும் இருந்திலரேல் இக்காலை "நாகரிகம்" என்ற ஒன்று தங்கி யுறையும் "பொதுக்கருத்துக்கள்" என்ற குன்று உரம்பெற் றுத் திகழ்ந்திராது.

[மாபெருமறிஞர் எச். ஜி. வெல்ஸ் இன்றும் உயிரோடும் உடல் நலத்தோடு மிருந்துவருகிறார். தாம் தம்முடைய 97-ம் அகவையில், அதாவது கி. பி. 1963-ல் இறந்து போனதாக வைத்துக்கொண்டு அவ்வாறிறந்தபோது தம்மைப்பற்றிப் பிறர் எவ்வாறன இறப்புக் குறிப்புக்கள் எழுதவேண்டுமென்பதைத் தாமே இவ்வாறெழுதி "தி லிஸெனர்" என்ற தாளில் வெளியிட்டுள்ளார். அதன் மொழி பெயர்ப்பே இஃதாகும்.]

காழி.சிவ. கண்ணுசாமி

குறிப்பு: இப்பாலில் சேர்க்கப்பெற்றிருக்கும் சர் ரிச்சார்டு ஆர்க் ரைட் என்ற பேரறிஞரின் வரலாறு அடுத்த பாலில் வெளிவரும்.

மதிப்புரை

தி ஜார்னல் ஆஃப் தி மேஃட்றஸ் யூனிவர்ஸிட்டி (இண்டியன் லாங்வேஜெஸ் நம்பர்):—இந்த வெளியீட்டின் ஏப்ரல் திங்கள் இதழ் எம்பார்வைக்கு வந்துளது. இத்தகைய ஒரு வெளியீடு மூன்று திங்கட் கொருமுறை வெளிவரும் எனக் கண்டு அகமகிழ்கிறோம். இவ்விதழில் மகாமகோபாத்யாயர் எஸ். குப்புசாமி ஐயர் அவர்களால் ஒரு சமஸ்கிருதக் கட்டுரையும், திருமதி டி. என். தானு அம்மாளால் "பிற்காலச் சோழர் காலத்துத் தமிழ் இலக்கியம்" என்ற தமிழாராய்ச்சி யுரையும், "மலையாளத்து ஸிரியன் கிறித்துவ வகுப்பினரின் மண முறைகளும் பாட்டுகளும்" என்று திரு. பி. ஜே. தாமஸ் என்பவரால் எழுதப்பட்ட மலையாளக் கட்டுரையும், "தென்னிந்திய முகம்மதியப் புலவர் வரலாறு" என்று திரு. முகம்மது முனவார் காகர் என்பவரால் எழுதப்பட்ட உருதுக் கட்டுரையும் வெளிவந்துள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் இச்சீரிய தொண்டு பெரிதும் பாராட்டற்குறித்தாம். இவ் வெளியீட்டின் ஆண்டுக் கட்டணம் ரூ. 6

சூரிய வழிபாடும் கோளறு பதிகமும்:—இச்சிறு செய்யுட் பதிகம் யாழ்ப்பாணத்து நவாலியூர்க் க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் பாடியதாகும். சூரிய வணக்கத்தின் பெருமை தெரிப்பான்வேண்டி இந்நூல் பதிப்பாசிரியர் திரு. க. வேலுப் பிள்ளை அவர்களின் வேண்டுகோட்கிணங்கப் பாடப்பட்டு இரத்தினபுரி திரு. அ. தில்லையம்பலம் பிள்ளை அவர்களின் பொருளுதவியால் அச்சியற்றப்பட்டது. மந்திரத் தமிழ்ச் செறிவுடையதாக இப்பதிகம் விளங்குகின்றது.

இதன் விலை சதம் 10.

கிடைக்குமிடம் க. வேலுப்பிள்ளை, பேராதனை, இலங்கை.

நாணய மாற்று:—மதுரை அமெரிக்கன் கலாசாலைப் பேராசிரியர் ஜே. எஸ். பொன்னையா எம். ஏ., அவர்கள் இயற்றிய இத்தமிழ் நூலின் விலை ரூ. 1. பெருஞ்சிக்கலான இத்துறையில் முதன் முதல் வெளிவந்த தமிழ்நூல் இதுவென்றே கூறலாம். நாணய மாற்று முறையில் உள்ள பலவாய துறைகளும் இதன்கண் நன்கு விளக்கப்பட்டுள்ளன. தமிழர் ஒவ்வொருவரும் இதனைப் படித்தறிதல் இன்றியமையாததாகும். இத்தகைய நூல்கள் இன்னும் எத்தனை வெளிவந்தபோதிலும் நலமே. நம்மிடங் கிடைக்கும்.

மங்கையர்க் கரசியார்:—தெல்லிப்பழை திருமதி அருந்தவ நாயகி கனகராயர் எழுதியது. தமிழ் மணமுஞ் சிவமணமும் ஒருங்கே திகழும் ஆராய்ச்சித் தமிழ் வெளியீடு. தமிழ்ப் பெண்மணிகள் தமிழிற் கட்டுரை யெழுதல் அழகுக்கழகு செய்வதொக்கும் என்பதற் கெடுத்துக்காட்டா யிலகும் இவ் வுயர்ந்த கட்டுரை.

புலியூர்ப் புராணம்:—தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தைய ரவர்கள் இயற்றியது. அவர் மனைவியார் பவள நாயகி அம்மையார் விரும்பியவண்ணம் ஏழாலை ஐ. பொன்னைய பிள்ளை அவர்களால் இஃது அச்சியற்றப்பெற்றது. புலியூர் என்னும் சிதம்பரத்தைப்பற்றி எத்துணைச் செய்யுணூல்கள் வெளிவந்தாலும் அவை உவந்தேற்றுக் கொள்ளற்குரியனவாம் என்பதே சைவர்தந் துணிபாகும். செய்யுணலந்துறுமும் இச் சீரிய நூலைப் படித்துத் தமிழர் இன்புறுவார்களென நம்புகிறோம்.

தமிழ்க்கலைச் சொல்லாக்க மாநாடு

இம் மாநாடு நிகழும் தாது ஆண்டு புரட்டாசித் திங்கள் 5-ம் நாள் (20-9-'36) ஞாயிற்றுக்கிழமை மாலை நான்குமணிக்கு, சென்னை, பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் கூடும். அதனை உயர்திரு. சர். C. P. இராமசாமி ஐயர் Kt., K. C. I. E., அவர்கள் திறந்து வைப்பார்கள். உயர்திரு. சுவாமி விபுலாநந்தர் B. Sc., (Lond.) அவர்கள் தலைமை தாங்குவார்கள்.


சென்னை மாகாணத்

தமிழர் மூன்றாவது மாநாடு

இம்மாநாடும், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவும் நிகழும் தாது ஆண்டு புரட்டாசித்திங்கள் 12-ம் நாள் (27-9-'36) ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு, சென்னை, பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். உயர் திரு. திவான்பகதூர் K. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் (Retired Joint Registrar of Co-operative Societies) தலைமை தாங்குவார்கள்.

வேண்டுகோள்

இச்சீரிய முயற்சிகளுக்குப் பொருளுதவி செய்ய விரும்புவோர் அமைச்சர், தமிழ்க்கலைச் சொல்லாக்க மாநாடு, 6, பவழக்காரத்தெரு, சென்னை என்ற முகவரிக்கு அனுப்பிவைப்பார்களாக.



தமிழ்க் கலைச் சொல்லாக்கன் மாநாடு

103-பக்கம் பார்க்க.

(20—9—36)

ஓ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] தாது—புரட்டாசி [பரல்-உ

திருவாசகம்

கோயிற்றிருப்பதிகம்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா
யானிதற் கிலனொர்கைம் மாறே.

பதவுரை:—

எந்தையே—எமது தந்தையே

ஈசா—என்னை ஆளுமிறைவனே

உடலிடங் கொண்டாய்—என் உடல்களை உனது திருமேனியாகக் கொண்டவனே

சிந்தை கோயில் கொண்ட எம்பெருமான்—(என் உடல்களை நீ திருமேனியாகக் கொண்டதுமல்லாமல்) எனது உள்ளத்தையும் நீ இருக்கும் வீடாகக்கொண்டு அதில் எப்பொழுதும் வீற்றிருக்கிற எமது தலைவனே

திருப்பெருந்துறையுறை சிவனே—(என்பொருட்டு) நீ எனது உடலிலும் உள்ளத்திலும் வீற்றிருப்பதல்லாமல் (எல்லா மக்கள்

பொருட்டும்) திருப்பெருந்துறையிலும் கோயில் கொண்டு வீற்றிருக்கின்றவனே

தந்தது உன்தன்னை—(நீயும் நானும் பண்ட மாற்றுச் செய்ததில்) நீ எனக்குக் கொடுத்தது உனது மெய்யறிவை (சிவபோதத்தை)

கொண்டது என்தன்னை—(நீ என்னிடம் பெற்றுக்கொண்டது) எனது உயிரறிவை (சீவபோதத்தை)

அந்தம் ஒன்று இல்லா ஆநந்தம் பெற்றேன்—(இவ்வாறு நாம் பண்ட மாற்றுச் செய்ததன் பயனாக நான் உன்னிடமிருந்து பெற்ற மெய்யறிவினால்) முடியுமிடம் ஒன்றில்லாத பேரின்பம் பெற்றேன்

என்பால் நீ பெற்றது ஒன்று யாது—என்னிடமிருந்து உயிரறிவால் நீ பெற்றதொருபொருள் யாது? (ஒன்று மில்லை என்றபடி)

சங்கரா—சங்கரனே

சதுரர் யார் கொல்—நம்மிருவரில் சமர்த்தன் யார்? (என்னிடத்திலொருபயனும் பெறாத நீயா? அல்லது உன்னிடத்திலிருந்து எல்லாப் பயன்களுக்கும் மேலாகிய பெரும்பயன் பெற்ற நானா? நீயே சொல்லாய்!)

யான் இதற்கிலன் ஓர் கைம்மாறு—இங்ஙனம் நீ எனக்குப் பேரின்பங் கொடுத்ததற்குப் பதிலாக யான் செய்யுஞ் செயலொன்றுமில்லை.

விளக்கவுரை:—

எந்தையே—அடிகள் தமக்குச் சிவபெருமான் பேரின்பமளித்தது உயிர்த்தந்தை என்னும் கேண்மைபற்றி என்பதைக் குறிப்பிப்பார் முதற்கண் 'எந்தையே' என்றார். எம் + தந்தை = எந்தை. தமக்கு மாத்திரமன்றிப் பருவம் வந்த அடியார்களுக்கெல்லாம் அவ்வாறு பேரின்பம் அளித்தலின் அவர்களையும் தம்மோடு சேர்த்து 'எந்தையே' என்றார். பின்வரும் 'எம்பெருமான்' என்பதற்கும் இந்தக் கருத்தைக் கொள்க.

ஈசா—ஈசன் என்ற வடமொழிச்சொல் ஆளுகிறவன் என்று பொருள்படும். சிவபெருமான் திருப்பெருந்துறைக்கு வந்து தம்மை ஆண்டருளினதைக் குறிப்பிப்பார் 'ஈசா' என்றார்.

உடல் இடம் கொண்டாய்—உடல் என்ற சொல், சாதி ஒருமையாய்ப் பரு உடல், நுண்ணுடல், காரண உடல் ஆகிய மூன்று உடல்களையுங்குறிக்கிறது. ஐம்பூததத்துவங்களாலாகிய உடல்களை உபாதி

களாகக் கொண்டிருக்கிற உயிரானது தத்துவங்களிடத்து இருவினைகளைச் செய்து அதுவதுவாய்ச் சேராது உடற்பிணிப்பினின்று நீங்கிய பருவத்தில் அத்தத்துவங்களெல்லாம் தூவெளி (ஞானுகாசம்) அருளொளியிலடங்கி நிற்கும்பொழுது சிவபெருமான் அவற்றைத் தனது திருமேனியாகக்கொள்கிறுன் என்ற கருத்தை அடிகள் 'உடலிடங்கொண்டாய்' என்றதனுற் கூறினுர். இங்ஙனம் சிவபெருமான் அடிகளுடைய உடலை இடமாகக் கொண்டது அடிகள் மலநீங்கப்பெற்று ஒளிவிளக்க முடையராய் உடற்பற்றினின்றும் பொருட்பற்றினின்றும் நீங்கிச் சிவபெருமானது சத்துத் தன்மையைச் சார்ந்திருத்தலைக் குறிக்கிறது.

சிந்தை கோயில் கொண்ட எம்பெருமான்—மலப்பிணிப்பினின்று நீங்கிய உயிர்தானே, சிந்தை எனும்படி அதனேடொன்றியிருக்கிற சிந்தையானது சீவகரணத் தன்மை நீங்கிச் சிவகரணத் தன்மையடைந்து விளங்குதலால் அத்தூய சிந்தையில் சிவபெருமான் எப்பொழுதும் நீங்காது விளங்கி வீற்றிருக்கின்றுன் என்ற கருத்தைக் கூறுவார், அடிகள் "சிந்தைகோயில் கொண்ட எம்பெருமான்" என்ருர். திருநாவுக்கரசு அடிகள் திருவேகம்பம் திருக்குறுந்தொகை 5-வது பாட்டில் "சிந்தையுட் சிவமாய் நின்ற செம்மையோடு" என்றும், திருக்கைலாயத் திருத்தாண்டகம் 7-வது 10-வது பாட்டுக்களில் முறையே "என் சிந்தை நீங்கா இறைவா " என்றும் "என் சிந்தை கோயிலாகக் கொண்டாய்" என்றும் கூறியருளினமை காண்க. சிவபெருமான் அடிகளது சிந்தையைக் கோயிலாகக்கொண்டது அடிகள் பசுத்துவம் நீங்கப்பெற்றுச் சிவத்துவ விளக்கமுடையவராய் உயிர்ப்பற்றினின்று நீங்கிச் சிவத்தினது சித்துத் தன்மையைச் சார்ந்திருத்தலைக் குறிக்கிறது. அடிகள் குழைத்த பத்து 7-வது பாட்டில் "அன்றே யென்றனுவியு முடலு முடைமை யெல்லாமுங் குன்றேயனையா யென்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ" என்று கூறியதனுல், சிவபெருமான் அடிகளது சிந்தையைக் கோயிலாக்கொண்டது அவர் ஆவியைக் கொண்டதனுலும், உடலை இடமாகக்கொண்டது அவர் உடலைக்கொண்டதனுலும் பெறப்படுகின்றன. உடைமையைக் கொண்டது உடலைக் கொண்டதிலடங்கும். சிவபெருமானுக்கு உயிர் அடிமைப்பொருளாயும் உடலும் பொருளும் உடைமைப் பொருள்களாயும் எப்பொழுதுமிருத்தலால் உயிரானது தான் மலப்பிணிப்பினின்று நீங்கி, வீடு அடையும்பொருட்டு அவனுற் கொடுக்கப்பெற்ற உடல்

பொருள்களை அவனிட மொப்புவித்துத் தானும் தன்முனைப்பி னின்று நீங்கினாலன்றி அவனிடத்து மீளா அடிமையாய்த் தாம் பின்கூறும் "அந்த மொன்றில்லா ஆநந்தம்" பெறுதல் முடியாது என்று தாம் உணர்ந்த உண்மையை மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு அடிகள் "சிந்தை கோயில் கொண்ட எம்பெருமான்" என்றும், 'உடலிடங்கொண்டாய்' என்றும் கூறினார். இந்த உண் மையையே அடிகள் இத்திருப்பதிகம் 5-வது பாட்டில் "சிறை பெருநீர்போ லென்சிந்தைவாய்ப் பாயுந் திருப்பெருந் துறை யுறை சிவனே" என்றும், "இறைவனே நீ யென்னுடலிடங் கொண்டாய்" என்றும் கூறியருளினர். "அவை (பாசங்கள்) உடைமை ஆளாம் நாமங்கு" என்று சிவஞானபோதம் இரண்டா வது சூத்திரம் ஈற்றுவெண்பாக் கூறும் பொருளையும் நோக்கி இவ் வுண்மையை நன்கு அறிக.

தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை—'தந்தது', 'கொண் டது', இரண்டும் அஃறிணை ஒன்றன்பால் முன்னிலை இறந்த கால வினையாலணையும் பெயர்கள். தந்தது=தந்தபொருள்; கொண்டது=கொண்டபொருள். தன்—இரண்டும் அசைகள். மக்களிருவர் தத்தம் மிடத்துள்ள பொருளை ஒருவரோடொருவர் மாற்றிப் பயனடைதலாகிய உலக வழக்கில் வைத்து அடிகள் தமக்குச் சிவபெருமான் மெய்யறிவை (சிவபோதத்தை)த் தந் தருளியதையும், அம்மெய்யறிவைப் பெற்றதனால் தாம் தம் மிடத்து முன்னிருந்த தன்னறிவு (சீவபோதம்) முற்றும் நீங்கிய தையும் உருவகப்படுத்தி ஓதுவோருக்கு நகைச்சுவை பயக்கும் படி, "தந்தது உன்தன்னை" "கொண்டது என்றன்னை" என்று கூறினார். இதனால் சிவஞானபோதம் 10-ம் சூத்திரம் முதலதி கரணம் வெண்பாவில் "நானெனை வொன்று—இல்லென்று தானே எனும்வரைத் தன்னடிவைத் தில்லென்று தானுமிறை" என்று கூறப்பட்ட உண்மை இங்கே கூறப்பட்டது. அறிவு சிவனுக்கும் உயிர்க்கும் பொதுப்பொருளாயிருத்தலால் உன்னை என்பதற்கு உன் அறிவு (மெய்யறிவு) என்றும், என்னை என்ப தற்குத் தன்னறிவு (உயிரறிவு) என்றும் பொருள் உரைக்கப் பட்டது. இருவர்க்கும் அறிவு பொதுப்பொருளாயிருப்பினும் சிவன் அறிவு மலப்பிணிப்பில்லாது நிறைந்த அறிவாயும், உயிரி னுடைய அறிவு, மலப்பிணிப்புடைய குறைந்த அறிவாயுமிருத் தலால் உயிர் வீடடைதலுக்கு அது சிவனைச் சார்ந்து அவனோடு அத்துவிதமாய்க்கலந்து சிவனுடைய நிறைந்த அறிவைப் பெறுத

வின்றியமையாமை நன்கு தெளிவாகும். இதுபற்றியன்றே அடிகள் இத்திருப்பதிகம் 4-வது பாட்டில் "குறைங்கடாமில்லா வின்பமே உன்னைக் குறுகினேற் கினியென்ன குறையே" என்று கூறினர்? உலகவழக்கில் பண்டமாறு மிருவரும் தத்தமிடத் துள்ள புறப்பொருளையே கொடுத்து மற்றொருவரிடத்துள்ள புறப்பொருளொன்றைப் பதிலாகப் பெற்றுப் பயனடைத லானும், சிவபெருமான் உயிரினிடத்துப் பெறத்தக்கதும் பெறு வதுமாகிய பொருளொன்றுமில்லை யாதலானும், உயிர் தன்னி டம் சிவனுக்குக் கொடுக்கும் பொருள் ஒன்றுமில்லாது அவனிட மிருந்து பெறும் பயனாகிய வீட்டின்பத்தை அடைதலானும் இப்பண்டமாற்று உவமை ஒருவாறு தான் ஏகதேச உவமை யாகவுங் கொள்ளத்தக்கது. கட்டு நிலையிலும், கட்டு நீங்கிய நிலையிலும் மலப்பிணிப்புக் குறைவுடைய உயிரானது எஞ்ஞான் றும் நீங்காத புகலிடமாயிருக்கிற சிவபெருமானை அடைந்து தான், முறையே சிற்றின்ப வாழ்வையும் பேரின்பவாழ்வையும் பெறுதற்கு உரியது என்ற கருத்து இதனாலே கூறப்பட்டது. சிவபெருமான் தன்னை உயிர்க்கு ஈதல் அவனது பேராற்றலையும் பேரருளையுங் குறிக்கின்றது. இவ்வுண்மையை உய்யவந்த தேவநாயனார் திருவுந்தியார் 6-வது பாட்டில் "நஞ்செயலற்றிந்த நாமற்றபின்னாதன் தன்செயலாமே யென்றுந்தீபற—தன்னையே தந்தானென் றுந்தீபற—" என்று கூறியருளினர்.

அந்தம் ஒன்று இல்லா ஆநந்தம் பெற்றேன்—வீடுபெற்ற உயிர் சிவ பெருமானைச் சேருந்தோறும் பெருஞ்சிவபோகம் புதிதுபுதிதாய் வளர்ந்துகொண்டே இருத்தலால் அடிகள் 'அந்த மொன்றில்லா வாநந்தம் பெற்றேன்' என்று தமது சிவாநுபவத்தைக் கூறி யருளினார். இதனால் அடிகள் சிவத்தினது ஆநந்தத் தன்மை யைச் சார்தல் கூறப்பட்டது. 'உடலிடங்கொண்டாய்' என்றும், 'சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான்' என்றும் முறையே சத்துத்தன்மைக்கும் சித்துத்தன்மைக்குங் கூறின அடிகள் 'அந்தமொன்றில்லா ஆநந்தம் பெற்றேன்' என்று கூறியதை நோக்குக. இதனால் சிவனுக்கே உரிய ஆநந்தத் தன்மையை உயிர் அவனிடத்திலிருந்தே பெறல் வேண்டும் என்ற உண்மை கூறப்பட்டது.

என்பால் நீ பெற்றது ஒன்று யாது—ஒன்று=ஒரு பொருள். சிவபெரு மான் யாதொரு குறைவுமில்லாது நிறைந்த பொருளே (பரி பூரணப்பொருள்). உயிர் மலப்பிணிப்பினாலே குறைவுடைய

பொருள். சிவபெருமான் அடிகளிடத்துப் பெறத்தக்க பொருள் ஒன்றுமில்லை என்பது கருத்து.

சங்கரன்—இன்பஞ் செய்கிறவன். எல்லா உயிர்களுக்கும் இன்பஞ் செய்கிற வரம்பிலின்பமுடைய நீயே 'சதுரர் யார்' என்பதனை அறிந்து சொல்லுதற்குத் தக்கவன் என்பதைக் குறிப்பிப்பார் 'சங்கரா' என்று விளித்தார்.

சதுரர் யார் கொல்—உலகப்பற்றுடைய மக்கள் பண்டமாறுதல் செய்யுமிருவரில் யாவன் பெரும் பொருட்பய னடைகிறானோ அவனையே சமர்த்தனாக எண்ணுகின்றார்கள். இக்கால உலகமித் தன்மையுடையதாய்த் துயருறுகின்றது. இந்த முறைமையில் வைத்து அடிகள் 'சதுரர் யார்கொல்' என்று நகைச்சுவைபடக் கூறுகின்றார். உண்மையில் யாவன் பொருட்பற்றில்லாது எல்லாப் பொருள்களையு மிழக்கின்றானோ அவனே எல்லாப் பொருள்களையுமுடைய வாழ்வுச் சிறப்பை அடைகின்றான். இதுபற்றி ஆசிரியர் திருவள்ளுவர் "நத்தம்போற் கேடுமுளதா கும் சாக்காடும்—வித்தகர்க் கல்லா லரிது" என்று கூறினார். யார் கொலோ என்பதில் கொல் ஐயப்பொருளை உணர்த்துகின்றது.

ஓ—அசை.

யான் இதற்கு ஓர் கைம்மாறு இலன்—அடிகள் தாம் சிவபெருமானிடத்துத் தம்முடைய உயிர் உடல் உடைமை எல்லாம் ஒப்புவித்து அவனாலாட்கொள்ளப் பெற்றபின், சிவபெருமான் தமக்குச் செய்த கைம்மாறில்லாத உதவிக்குப் பதிலாகக் கொடுப்பதற்கு ஒரு பொருளும் தம்மிடம் இல்லை என்பார் 'யானிதற்குக் கைமாறிலன்' என்று கூறினார். ஓர் என்பது ஒர் எனக் குறுகி நின்றது. கைமாறே என்பதிலுள்ள ஏ—அசை.

இதனோடு அநுபோக இலக்கணம் கூறுகிற கோயிற்றிருப்பதிகம் பத்துப்பாட்டுக்களின் உரைகளும் முடிவுபெறுகின்றன. பிற பாட்டுக்களிற்போல இப்பாட்டினும் அடிகள் சிவபெருமானுடைய சத்து சித்து ஆநந்தம் ஆகிய மூன்று தன்மைகளையுஞ் சார்ந்து அவனோடு அத்துவிதமாய்க் கலந்து வீடடைதலாகிய அநுபோக இலக்கணம் கூறுகின்றார்.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை

புதுக் கவிகள்-Original Poetry

தமிழ்நாட்டு மாணவர் கடமை

[கோடுமுடி வித்துவான் பெ. கோவிந்தன் அவர்கள்]

முந்திவை கறையெழுந்து முகங்கழுவி முன்னின்று
தந்தைதா யரைவணங்கும் தமிழ்நாட்டு மாணவர்காள்!
வந்திறந்த முன்னோர்க்கும் வாழ்வோர்க்கும் தாயாகும்
செந்தமிழ்நற் கன்னிக்குச் செய்வீரோ தலைவணக்கம். 1

பக்கமிருந் துடையுடுத்துப் பார்த்துவக்குந் தாயருக்குத்
தக்கவுடை பின்னுதவுந் தமிழ்நாட்டு மாணவர்காள்!
தொக்கநுண் ணூலும்பண்ணுந் தோய்ந்தபா வுங்கொடுத்து
மிக்குதவுந் தமிழ்த்தாய்க்கு விளங்குகலை செய்வீரோ. 2

உவந்துகல்வி கேள்விகளால் உயர்விக்கும் பெற்றோரைத்
தவஞ்செய்தா ரென்பிக்குந் தமிழ்நாட்டு மாணவர்காள்!
சிவந்துரையா துடனிருந்து செல்வழியும் நல்லறிவும்
உவந்துரைக்குந் தமிழ்த்தாய்க்கிங் குயர்சிறப்புச் செய்வீரோ.

சுட்டாப்பல் பொருள்காட்டாச் சொற்பயிற்றுந் தாயருக்குத்
தட்டாது தொண்டுசெயுந் தமிழ்நாட்டு மாணவர்காள்!
எட்டாத பல்பொருளை எளியமொழி யால்விளக்க
முட்டாத தமிழ்த்தாய்க்கு முதல்தொண்டு செய்வீரோ. 4

உண்ண அறு சுவையுணவும் உயரணியும் உதவியநுந்
தண்ணளித்தா யர்க்குதவுந் தமிழ்நாட்டு மாணவர்காள்!
எண்சுவையும் பலஅணியும் எடுக்குந்தோ றுங்கொடுக்கும்
வண்மைமிகுந் தமிழ்த்தாய்க்கு வலியபணி செய்வீரோ. 5

செம்பொன்னைச் சொல்லார்தஞ் சேயரையே பெற்றோர்கள்
தம்பொருளென் பாருவந்து தமிழ்நாட்டு மாணவர்கள் !
எம்பொருள்நீ ரென்றும்மை ஈன்றோர்க்குந் தமிழ்த்தாய்க்கும்
செம்பொருள்போல் பலபயனும் செய்துசிறப் புறுவீரோ. 6

ஈன்றோரைப் பேணாதா ரெனைத்துணைய ராணும்
சான்றோரென் னுதுலகந் தமிழ்நாட்டு மாணவர்காள் !
தோன்றியதாய் நாட்டினுக்குஞ் சொற்பயிற்றுந் தமிழ்த்தாய்க்கும்
ஈன்றோர்க்குங் குருதியும்விட் டிசைகொள்ள வல்லீரோ. 7

மக்களைப்பெற் றுவத்தலினும் மனமகிழ்வர் தாயரிவர்
தக்காரென் றுலகுரைப்பத் தமிழ்நாட்டு மாணவர்காள்!
மிக்ககல்வி கேள்விகளால் விளங்கித்தொண் டாற்றுவீரோ
தக்கார்நும் மைப்புகழத் தாயர்தமிழ்த் தாய்மகிழ. 8

அடுத்துறையும் பகைவர்களால் ஆமிடையூ றத்தனையுந்
தடுத்துத்தா யரைப்போற்றுந் தமிழ்நாட்டு மாணவர்கள்!
கெடுக்குமனத் தாரியர்செய் கேடுகளெல் லாமெதிர்த்துத்
தடுத்துச்செந் தமிழ்த்தாயைத் தனித்திலங்கச் செய்வீரோ. 9

பாலுணவை யுண்பித்துப் பசியாற்றுந் தாயருக்குச்
சாலப்பின் னுதவிசெயுந் தமிழ்நாட்டு மாணவர்காள் !
மாலறமுப் பாலுதவி வாலறிவு தான்மிகுக்குஞ்
சீலமிகுந் தமிழ்த்தாய்க்குச் சிறப்பாலெப் பணிசெய்வீர். 10

ஈன்றே செய்வார் இன்றே செய்க; நாளை என்பார் நாடார்
நலத்தை; கழிவிரங்கல் என்பது கடந்த ஞான்றின் பேய்த்தோற்றமே.

—ஆங்கிலக் கருத்து.

(கா. சிவ. க)

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழ் மொழியில் சகர முதன்மொழி

[துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்]

செந்தமிழ்: தொகுதி 3: பகுதி 2-ல், சித்தூர் ஜில்லா, நேஷனல் ஐஸ்கூல், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் R. நரசிம்ம ஐயங்கார் B. A. (Hons.) அவர்கள் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கின்றார்கள்:—

1. தொல்காப்பியர் காலத்தே சகர முதற்சொற்கள் தமிழில் வழங்க இல்லை.

2. சங்க இலக்கியங்களில் காணப்படும் சகர முதற்சொற்கள் எல்லாம் வடமொழிச் சிதைவுகள் ஆகும்.

3. பிற்கால இலக்கியங்களிலே சிதைக்காமல் பிறமொழியில் உள்ளபடியே சகர முதற்சொற்கள் உபயோகப்படலாயின.

4. மொழிக்கு முதலாகாத ரகர-லகர முதற்சொற்கள் இலக்கியத்தில் வழங்கும்போது அ-இ-உ என்ற எழுத்துக்களில் ஏதாயினும் ஒன்றை முதலில் சேர்க்கிறோம். இவ்வாறு சகர முதன்மொழிகளை முதலில் பிற எழுத்து ஒன்றையும் சேர்க்காது, சங்கப்புலவர்கள் வழங்குகின்றமையின், அவர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும் தொல்காப்பியருக்கும் தொல்காப்பியத்துக்கும் காலத்தால் மிகமிகப் பிற்பட்டிருக்கலாம் என ஊகிக்கலாம்.

5. தமிழ்மொழியிலுள்ள சகர முதற்சொற்கள் வடசொல்லாகவோ திசைச்சொல்லாகவோ இருத்தல் வேண்டும்.

6. சகரமுதற்சொற்களில் ஒன்றும் தனித்தமிழ்ச் சொல்லாக (தூய தமிழ்ச் சொல்லாக) இருத்தல் இயலாது".

இவர் தாம் கொண்ட கொள்கையை உறுதிப்படுத்தற்கு நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர் முதலிய உரையாசிரியர்களுடைய கூற்றுக்களையும் உதறித் தள்ளி விட்டார்.

சட்டி—சகடம்—சமழ்ப்பு என்றற் றொடக்கத்தன தமிழ்ச் சொற்களே என்று நச்சினார்க்கினியர் முதலியோர் காட்டாமற் காட்டியும் திரு. ஐயங்கார் அவர்களுக்கு அது பிடிக்கவில்லை,

"கடிசொல்லில்லைக் காலத்துப்படினே" என்னும் சூத்திர உரையினும்:—

(உ-ம்) "சட்டி—சள்ளை—சமை" எனவும்,
"சான்றோர் சமழ்த்தனர் நிற்பரே" எனவும்,

"தையலாய் சமழாதுரை யென்றதே" எனவும் சகரம் மொழிக்குமுதலாய் வந்தவாறு காண்க" என்று உரை யாசிரியர் கூறியதையும் ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

இன்னும் "சமழ்ப்பு" என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுங்கள். அதிலுள்ள ழகர ஒற்றுத் தமிழுக்கே சிறப்பாயுள்ள எழுத்து. அவ்வெழுத்துப் பிற பாஷைகளில் இல்லை என்பது எல்லாருக்கும் ஒப்பமுடிந்தது. அதனையும் மறந்து அது வடமொழிச் சொல் என்று அய்யங்கார் அவர்கள் கூறுவாரே யானால் அதனை உலகம் ஏற்காது.

இதனைக் குறித்துச் செந்தமிழ் தொ. 33. ப. 3.-ல் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்பவர் என்ன கூறுகிறார் என்றால், "சகரமுதற் சொற்கள் தமிழிலே ஆதி தொட்டிருந்தனவல்ல என்பது நிச்சயம். தமிழில் மட்டுமல்ல, பிறபாஷைகளினும் சகரம் பின் எழுந்த ஒரு பேச்சொலியே என்பது மொழிநூல் நிபுணர்களின் கருத்து. சகரவரியின் முதலெழுத்து மாத்திரமல்ல, சகர ஆகாரம் ஆதிய மற்றவைகளும் பின்னரே எழுந்தன.......... தொல்காப்பியர் காலத்தில் சகர ஆகாரம் முதலியன வற்றைத் தலையிற்கொண்ட சொற்கள் இருந்தன என்பது ஒருதலை. சகரத்தைத் தலையிற்கொண்ட சொற்களும் பரவை வழக்கில் இருந்தன வாகலாம். ஆயினும், அவை இலக்கியங்களிலே ஏறாதனவாயிருந்தமையால், ஆசிரியர் அவற்றை விலக்கினர் போலும். அல்லது, சில சொற்கள் மாத்திரம் ஏறிக்கொண்டமையால், தமிழ்ச் சொல்லாராய்ச்சி நிரம்பாத அக்காலத்தில் இருந்த அவர் அவற்றைத் தமிழன்று, வடமொழிஎன வைத்தனர் போலும்." என்று கூறிவிட்டு, சட்டி-சகடம்-சமழ்ப்பு-சள்ளை-சமை-சமம் முதலிய சொற்கள் தமிழே என்றும் நிரூபித்துள்ளார்.

இனி, இவ்வித ஆராய்ச்சிக்கு இடந்தந்து நின்ற தொல்காப்பியச் சூத்திரங்களை மேற்சொன்ன இருவரும் எடுத்துக் காட்டினர் இல்லை. அச்சூத்திரங்களை முதலில் எடுத்துக் காட்டிவிட்டு மேற்செல்லுவாம்.

வாசகர்கள் ஒவ்வொருவரும் அச்சூத்திரங்களுக்கு உரையாசிரியர்களுடைய உரையின் உதவியில்லாமலே தம் தம்

சொந்த அறிவின் மாட்சியால் ஆராய்ந்துபார்த்தால் உண்மை விளங்கும்.

தற்காலம் அச்சிடப்பட்டிருக்கும் புத்தகங்களில் உள்ள படி சூத்திரங்கள் வருமாறு :—

"க,த,ந,ப,ம எனு மாம்ஜந் தெழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே"

—(தொல்—எழு-மொழி-28)

"சகரக்கிளவியும் அவற்றோரற்றே
அ,ஐ,ஔ வெனும் மூன்றலங்கடையே"

(தொல்-எழு-மொழி-29)

இவ்விரண்டு சூத்திரங்களும் ஆதியில் அதாவது, ஏட்டுச் சுவடியில் இருக்குங்காலத்து, ஒரே சூத்திரமாகத் திகழ்ந்தன.

சுவடியில் உள்ளபடி ஈண்டுத் தருவாம் :—

க,த,ந,ப,ம, எனுமாம் ஜந்தெழுத்தும்
எல்லா உயிரோடும் செல்லுமார் முதலே
சகரக்கிளவியும் அவற்றோரற்றே
அவை ஔ வெனும் ஒன்றலங்கடையே''

(தொல்-எழு-மொழி-28)

சுவடியினின்றும் படி எடுத்து எழுதிப் புத்தகமாக்கின பெரியார்கள் சூத்திரத்தை இரண்டு படுத்தினதுமல்லாமல், "அவை" என்ற கடைசி அடியிலுள்ள முதற்சொல்லை "அ-ஐ" என மாற்றியும், அதற்குத்தக "ஒன்றலங் கடையே" என்ற தொடரை "மூன்றலங் கடையே" என்றும் எழுதிவிட்டார்கள்.

இஃது எதுபோல இருக்கிறதென்றால், "சுக்குத்-திப்பிலி-மிளகு" என்ற சொற்றொடரை, ஒருவன் "சுக்குத்தீப்-பிலி மிளகு' என்று இரண்டு தொடராகப் பிரித்துக்கொண்டு, அதற்கு "பிலிமிளகு என்ற ஒருவித மிளகைக் கொண்டுவந்து, புதுமண்பாத்திரத்தில் போட்டு, நீர்விட்டு, சுக்கே விறகாகத் தீமூட்டி எரித்து, கசாயம் செய்து சாப்பிட்டால் சகலவிதமான சுரங்களும் நீங்கும்." என்று உரை எழுதுவது போன்றும்.

சுவடியினின்றும் முதல் முதல் பிரித்து எழுதிய எழுத்தாளன்தான் சூத்திரத்தை இரண்டாக்கிக் கடைசி அடியையும் மாற்றினனோ, அல்லது, பதிப்பாசிரியர்கள்தாம் அப்படிச் செய்தார்களோ, அல்லது, உரையாசிரியர்கள் தாம் தம்மதம்

நிறுத்த அவ்வாறு செய்தார்களோ அறியோம். ஆனால், "யார் வைத்த தீயினாலோ, வீடு வெந்தது மெய்".

சூத்திரத்தைப் பிளவுபடுத்திக் கடைசி அடியை மாற்றினதினால் வந்த கெடுதிதான் இவ்வளவும். "சகர முதன்மொழி தமிழில் கிடையாது. அப்படிச் சகர முதன்மொழிச் சொற்கள் தமிழ் இலக்கியங்களில் கலந்திருந்தால் அவையெல்லாம் வடமொழி அல்லது திசைமொழிகளின் திரிபுகளாகும்." எனப் பண்டிதர்களைக் கூறும்படிசெய்தது இவ்வடிமாற்றமே.

அவ்விரண்டு சூத்திரங்களையும் ஒருவன் கூர்ந்து நோக்குவானேயானால், அவ்விரண்டும் ஒரே சூத்திரமாக இருக்க வேண்டும் என்று கருதா நிற்பான். ஏனெனின், இரண்டும் சேர்ந்த விடத்துத்தான் பொருள் முற்றுப்பெறுகிறது.

இப்போது 29-வது ஆக இருக்கும் சூத்திரம் தனிச் சூத்திரமாக இருந்தால் "சகரக் கிளவியும் அவற்றோரற்றே" என்று ஆரம்பித்திருக்கமாட்டார்.

"அவற்றோர் அற்றே" என்பதற்கு 'க-த-ந-ப-ம' என்பவை போன்றதே என்பது பொருளாகிறபடியால் 28-29-வது சூத்திரங்கள் ஒன்றே எனக் கொள்ளக் கிடக்கிறது.

புத்தகங்களில் உள்ள சூத்திரப்பிரகாரம் பொருள் செய்து பார்ப்போம்:—

"க்-த்-ந்-ப்-ம் என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களும் எல்லா உயிரெழுத்துக்களோடும் சேர்ந்து பெருவரவிற்றாய் மொழிக்கு முதலாகவரும்.

ச் என்ற மெய்யெழுத்தும் மேற்சொன்ன ஐந்தெழுத்துக்களைப்போலவே சிறுவரவிற்றாய் வரும்.

ஆனால், க்-த்-ந்-ப்-ம்-ச் என்ற ஆறு மெய்யெழுத்துக்களும், அ-ஐ-ஔ என்னும் மூன்று உயிரெழுத்துக்களுடனும் கூடி மொழிக்கு முதலில் வாரா.!!" என்பதே பொருள்.

சூத்திரத்தினுடைய கடைசி அடி இவ்வாறு இருந்திருக்குமானால் தொல்காப்பியர் இவ்வாறு சூத்திரித்திருப்பாரா? என்று பாருங்கள்.

க்-ச்-த்-ந்-ப்-ம் என்ற ஆறு மெய்களும் அ என்ற உயிரோடுகூடி மொழிக்கு முதலாக வராவிட்டால் ஏனைய உயிர்களோடும் வாரா என்பதே சித்தாந்தம். ஏன் எனில்,

"அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம்" என்பது சாஸ்திரம்.

ஆகையால் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 18 மெய்களில், க்-ச்-த்-ந்-ப்-ம் என்ற மெய்கள் வேண்டியதே இல்லை; 12 மெய்களே போதுமானது. அப்படிக்கு இல்லாமல் தமிழ் நெடுங்கணக்கில் தொல்காப்பியருக்கு முன்னும் பின்னும் உள்ள இலக்கண ஆசிரியர்கள் 12 உயிர்களும் 18 மெய்களும் என வரை அறுத்துள்ளார்கள்.

தொல்காப்பியரும்,

"எழுத்தெனப்படுப, அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்ப" என்று சூத்திரித் திருக்கிறார். ஆகையால், "சகரக்கிளவியும்" என்ற சூத்திரத்தில் உள்ள இரண்டாவது அடி தொல்காப்பியர் கூறியவண்ணம் இல்லை என்பதே தேற்றம்.

"எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்
படித்தவன் பாட்டைக் கெடுத்தான்"

என்பது பழமொழி.

இனிச் சுவடியில் உள்ள சூத்திரப்பிரகாரம் பொருள்செய்து பார்ப்போம்:—

"க்-த்-ந்--ப்-ம் என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களும் எல்லா உயிர் எழுத்துக்களோடும் கூடி பெருவரவிற்றாய் மொழிக்கு முதலாக வரும்.

ச் என்ற மெய்யெழுத்தும் அவ்வைந்து மெய்யெழுத்துக்களைப் போலவே சிறுவரவிற்றாய் எல்லா உயிர் எழுத்துக்களோடுங் கூடி மொழிக்கு முதலாக வரும்.

ஆனால், க்-ச்- த்-ந்-ப்-ம் என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் ஔ என்னும் உயிர் எழுத்தோடுங் கூடிமாத்திரம் மொழிக்கு முதலாக வாரா" என்பதாம்.

(உ-ம்) 1. நாய் கவ்விற்று (கௌவிற்று என வராது)

2. இராமன் தவ்வலுற்றான் (தௌவலுற்றான் என வராது)

3. நவ்வி அழகிது (நௌவி அழகிது என வராது)

4. சிறு திப்பிலிக்கும் பவ்வியத்துக்கும் குணம் வேறு (பவ்வியம்=ஆனைத்திப்பிலி) (பௌவியம் என வராது)

5. மவ்வல் மணம் கமழுகின்றது (மௌவல் எனவராது)

6. சவ்வரிசிக் கஞ்சி நல்லது (சௌவரிசி என வராது)

இன்றுவரை உலகில் வழக்கும் இப்படியே இருப்பதை யாவரும் காணலாம்.

"இலக்கியங் கண்டதற்கிலக்கணமே" யொழிய வேறின்று. தொல்காப்பியர் அவர் காலத்தில் வழங்கிய இலக்கியங்களுக்கு இலக்கணம் செய்தாரே யொழிய வேறில்லை.

(தொடரும்)

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

குறிஞ்சி

இரவுக்குறியில் வந்து களவொழுக்கத்தில் தலைவியைக் கூடற்கு மறுக்கப்பட்ட தலைமகன், அவளை வரைந்துகோடற் கெண்ணாது, பின்னும் களவொழுக்கத்தையே பேணித் தலைவியைக் கூடுதற்கு விருப்புற்றவனாய் நெஞ்சிற்குச் சொல்லியது.

ஔவையார் பாடியது

29. நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்ப்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதயர் வுற்றனை நெஞ்சே என்றும்
பெரிதா லெம்மதின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

என்பது இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன் இவர் எம்மை மறுத்தாரென்று வரைந்து கொள்ள நினையாது பின்னும் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது.

பதவுரை:—

நல்லுரை இகந்து—நன்மையைத் தருவனவாய சொற்களை வெறுத்துத் தள்ளி, புல் உரை தாய்—அற்பமான மொழிகளைப் பற்றிக்கொண்டு, பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம்

போல—பெய்யும் மழைக்குப் பொருந்த வைத்த பசுமையான மட்பாத்திரத்தைப் போல, நெஞ்சே—என் மனமே! உள்ளம் தாங்கா—(மனத்தால்) நின்னால் தாங்க முடியாத, வெள்ளம் நீந்தி—கடல் போன்ற துன்ப வெள்ளத்தைத் தாண்ட முயன்று, அரிது அயர்வுற்றனை—மிகவும் அரிதாகத் தளர்ச்சி யடைந்தாய்; உயர்கோட்டு மகவுடை மந்திபோல—உயர்ந்த மரக்கிளையிலுள்ள குட்டியைத் தன் வயிற்றோடு கட்டிக் கொண்ட பெண் குரங்கைப்போல, அகனுறத்தழீஇ—மார் போடு தழுவிக்கொண்டு, கேட்குநர்ப் பெறின்—நின் வருத் தத்தைக் கேட்போர்களைப் பெற்றால், என்றும்—எப்பொழு தும், நின் பூசல்—உன்னுடைய ஆரவாரம்; பெரிது—மிகப் பெரிதாகும். ஆல்-அசை; அம்ம—முன்னிலையசை.

பெயல்—மழை. பசுங்கலம்—சுடாத மட்கலம். தலைவன் மனத்தைப் பார்த்து, "உன் வருத்தம் மிகப் பெரிது. நின் துன்பத் தைக் களைவோர் இல்லை. ஆயினும் அன்போடு உன்னைத் தழுவிக் கொண்டு உன் துயர் கேட்போர் இருப்பாராயின் உன் துயர் நீங்கும்; அதுவும் பெற்றிலை; வறிதே புலம்புவதால் என் பயன்?" என்று கூறி யதாம்.

பசுங்கலத்தில் பெய்யும் மழைநீர் கசிந்து பாத்திரத்தை அழித்து விடும் என்பது வருந்தி மழைபோல் பொழியும் கண்ணீர் சரீரத்திற்கு ஊறு செய்யும் என்றவாறு.

துயராற்ற வருவோர் மார்போடு தழுவி அன்போடு கேட்பவ ராதல் வேண்டுமென்பதை உயர்ந்த மரக்கிளையில் தாய்க்குரங்கு குட் டியைத் தன் மார்போடு பொருந்த அமைத்துக்கொண்டு வீற்றிருப் பது போல என்று உவமை முகத்தால் விளக்கினர்.

மேற்கோள் விளக்கம்:—

"நல்லுரை.....................பெறினே" 1. தோழி இவ்விடத் துக் காவலர் கடியரெனக் கூறிச் சேட்பட நிறுத்தலிற் றனக்கு உண் டாகிய வருத்தத்தையும் பார்த்துக் கூறுவதற்கு இச்செய்யுள் மேற் கோள். இதுவே மடன்மா கூறுதற்கேதுவாயிற்று.

(தொல்காப்பியம் களவு. 403 பக்கம்)

1. 'பெயல் நீர்க்கேற்ற'—"பெயல் நீர்க்கேற்றன"—பிரதி பேதம்.
2. 'நெஞ்சே என்றும்'—"நெஞ்சே நன்றும்"—பிரதி பேதம்.
3. 'அரிதயர் வுற்றனை'—"அரிதவா வுற்றனை"—பிரதி பேதம்.

பெயனீர்க் கேற்றன—என்புழி 'நீரை' என இரண்டாம் வேற் றுமைப் பொருட்கண் வந்தது வேற்றுமை மயக்கம் என்க. என்னை?

"யாதனுருபிற் கூறிற்றாயினும், பொருள் செல் மருங்கில் வேற் றுமை சாரும்" (தொல்-சொல்-வேற்றுமை மயங்கியல் 23) என்பா ராகலின்,

பசுங்கலத்துள் நீர் நிறையின் கெடும். இதனை, "பசுமட், கலத்துணீர் பெய்திரீஇ யற்று"—(குறள் 660) என்பதனானுங் காண்க.

மேற்கோள் விளக்கம்:—

"வரைதல் வேண்டித் தோழி செப்பிய, புரைதீர் கிளவி புல்லிய வெதிரும்" (தொல்.—களவு-சூ. 105) என்னுமிடத்து, பின்னுங் களவொழுக்கம் வேண்டிக் கூறுதலுக்கு இச்செய்யுள் மேற்கோள்.

(தொல்-களவு. இளம்பூ. 166)

"மகவுடை மந்தி போல வகனுறத் தழீஇ"—
"தாக்குதற் கஞ்சாத் தனிமாவே குட்டி தழீஇ
நீக்குதல் செய்யாத வுயர் மந்தி"

—(கச்சி. ஆ. வண்டுவிடுதூது 322)

மெய்ப்பாடு :—இளிவுபற்றிய அழுகை.
பயன் :—ஆற்றாமை அறிவித்தல்.

பாலை

தலைமகன் தலைமகளை வரைந்து கொள்வான் கருதிப் பொருள் வயிற் பிரிந்தானாகத் தலைவி, அவன் பிரிவிற் காற்றாது கனவிலும் நலிய, தோழி தலைவியை நோக்கி, "நின்னை அவர் வரைந்து கொள்ளற் பொருட்டன்றே பொருள்வயிற் பிரிந்து சென்றது. அவர் வருந்துணையும் நீ ஆற்றியிராது கவல்வதென்னையோ!" என்று தோழி கேட்பத் தலைவி, "யான் ஆற்றியிருந்தேனாயினும் கனவினிகழ்ச்சி யான் கவலலுற்றேன்" என்று சொல்லியது.

கச்சிப்பேட்டு நன்னாகையார் பாடியது.

30. கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே.

என்பது. "அவர் நின்னை வரைந்து கோடல் காரணத்தாற் பிரியவும் நீ ஆற்றியிராது ஆற்றாயாகின்றது என்"னென வினவிய தோழிக்குத் தலைமகள், "யான் ஆற்றியுள்ளேனாகவும் கனவு வந்து என்னை இங்ஙன் நலிந்தது" எனக்கூறியது.

பதவுரை:—

தோழி — தோழியே, கேட்டிசின் — கேட்பாயாக, வாழி—நெடுங்காலம் வாழ்வாயாக; அல்கல்—இரவில், பொய் வலாளன்—பொய்க்கும் தன்மையில் வல்லவனாகிய தலைவன், மெய் உற மரீ—என் சரீரம் பொருந்தத் தழுவியவாறு, வாய்த்தகை பொய்க்கனா மருட்ட—உண்மையில் வாய்த்த தைப் போன்ற பொய்க்கனவு ஒன்று என்னை மயங்கிடச் செய்ய, ஏற்று எழுந்து—அதனை உண்மை என்று கருதிப் படுக்கையினின்றும் எழுந்து, அமளி தைவந்தனன்—படுக் கையைக் கைகளால் தடவினேன்; குவளை—குவளை மலர் போன்ற என் கண்கள், வண்டுபடு மலரிற் சாஅய்—வண்டு கள் வீழ்ந்த மலரைப் போல் அழகு கெட, தமியேன்—யான் தனிமையாய் இருக்கக் கண்டேன்; யான் மன்ற அளியேன்— நான் மிகவும் அளிக்கப்படத் தக்கவள். ஏ, ஏ—அசை.

அல்கல்—இரவு. கேட்டிசின்—இசின்—முன்னிலை இடைச் சொல். பொய்வலாளன் என்று தலைவனைக் கூறியது, கனவில் தன் மெய்யைத் தழுவியது போல் தோன்றத் தலைவி படுக்கையைத் தட விப் பார்த்தபோது இலனாகத் தமியளானதுபற்றி வஞ்சகத் தன்மை யால் கனவில் நலிவு செய்தான் என்பதால் என்க. வாய்த்தகை— உண்மைத் தன்மை; வாய்+மெய்=வாய்மை. குவளை—உவமவாகு பெயர். அளித்தல்—காத்தல். அளி—அன்பு; கருணை.

மேற்கோள் விளக்கம்:—

தலைமகள் கனவு நலிவுரைத்தல் என்பதற்கு மேற்கோள்.
—(நம்பியகப்:—சங்கப்.)

கேட்டிசின்..............................யானே"—இது வலிதற்குப் பிரிய வருந்துகின்றது என் என்றாட்குக் கனவு நலிவுரைத்தது.
(தொல். களவு. பக். 482.)

1. 'வாய்த்தகை'—'வாய்த்தரு'—பிரதிபேதம்.
—வரத்தகை—பிரதிபேதம்.

2. 'வளியன் யானே'—'வளியேன் யானே்'—பிரதிபேதம்.

அல்கல் - இரவு. "பெருநகை யல்க னிகழ்ந்ததொரு நிலையே" —(கலி-குறிஞ்சி. 29) என்றவிடத்தும் இப்பொருளாதல் காண்க.

பொய்வலாளன் என்றது களவிற்கூடியபோது "நின்னிற் பிரி யேன்; பிரியிற்றரியேன்" என்றுரைத்த தலைமகன் பிரிந்து பொய்த் தமை கருதி என்க.

வாய்த்தகை—என்பதற்கு, கணவனைத் தந்ததனால் 'வாய்த்த' என்றும் விரைவில் ஒழிந்ததனால் 'கை' என்றும் கனவிற்கு அடை

தொடுத்தார் என்பாரு முண்டு. கை—சிறுமை. கைவாள், கைத்தடி என்ற விடங்களிலும் அறிக.

மேற்கோள் விளக்கம்:—

"கனவுமுறித்தா லவ்விடத்தான" —(தொல் - பொருளியல் 195ரு.) என்பதற்கு, "கேட்டிசின்..........வளியன்யானே" என்பது தலைவி களுக்கண்டு கூறியதற்கு மேற்கோள்—(தொல்-பொருளியல்-இளம்பூ. பக். 288)

மெய்ப்பாடு:—அசைவுபற்றிய அழுகை.

பயன்:—ஆற்றாமையறிவித்தல்.

"வெண்பாவிற் புகழேந்தி"

[பண்டிதர். திரு. கா. போ. இரத்தினம் அவர்கள்]

(கச-ஆம் சிலம்பு, உருகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கு தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு".

"அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியுந்—திறங்கிடந்த
செங்கண் மாலல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண் மாஞாலத் தவற்கு".

என்பன நளனைப்பற்றிக் கூறும் வெண்பாக்கள். நளன் ஓர் செம்மனத்தன் என்பது புகழேந்திப் புலவரது முடிபு. அதனாற்றான் அவனைப் பிறண்டும் 'செம்மை புரிவான்' 'செம்மையுடைய மனத்தன்' எனப் பலதரம் அழைத்தனர். இன்னும் இச்செய்யுளிற் கூறிய குணங்களையே பின்னரும் கூறியிருத்தல் குறிப்பிடத்தக்கது. 'செங்கோலான்' 'பொய்மை விலக்கினன்' 'மெய்மை விடாதான்' என்றிவை யெலாம் அவர் கூற்றுக்கள். 'அறங்கிடந்த நெஞ்சும் அருள் ஒழுகு கண்ணும்' உடையவன் என ஈண்டுக் கூறியதற் கொப்பப் பின்னரும் 'அறத்தின் பெருந்தவமே, பேரருளின் கண்ணே' என அவனை அழைத்துளர்.

இனித் தமயந்தியைப் பலபடத் தீட்டிக் காட்டியுளராயினும், அவற்றுள் 'அழகு சுமந்திளைத்த ஆகத்தாள்' என்ற தொடர் விஞ்சிய நயமுடையது. இஃது சீதையை வர்ணிக்கும்பொழுது கம்பர் கூறிய 'அழகெனும் அதுவுமோர் அழகு பெற்றதே' என்பதை நினைப்பூட்டாமலிராது.

"..................................வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு"

"நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு"

இவையும் படித்தின்புறுதற்குரியன.

தமயந்திக்கும் நளனுக்குமுள்ள ஒற்றுமையைப் புலப்படுத்தப் புலவர் கூறிய சில சொற்றொடர்களை ஈண்டுக் கூறுதும்: 'வீமன் திருமகளாம் (நளனது) நல்லுயிர்', 'ஒற்றைத்து கிலும் உயிருமிரண்டாக'

"ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
இருவரெனுந் தோற்ற மின்றிப்-பொருவெங்
கனற்கேயும் வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று".

தமயந்தி சுயம்வர மண்டபத்தில் புகுந்ததை, 'வயவேந்தர் சித்தம் மருங்கேவர, வண்டின் பந்தற்கீழ், கொண்டணைந்த மாதர் மருங்கின் வெளிவழியே மன்னவர் கண்புக்கு நெருங்கச் செய்யவாய்ச் சிறையன்னம் செங்கமலப் பொய்கை வாய்ப் போவதே போன்று போய்ப் புக்காள்' என நயம்பட உரைத்திருக்கின்றார். தமயந்தி நளனுக்கு மாலை சூட்டும்பொழுது,

"மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா ளுகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து"

எனப் புகழேந்தியார் அவ்விடத்தும் தமயந்தியின் கற்பை உயர்வுபடுத்தி உரைத்தனர். வில்லிபுத்தூரர் தமது நூலில்,

"ஆண்டெரிப் பிறந்தபோதே யன்பினு லெந்தை நேர்ந்த
பூண்டெரி மார்பனின்றிப் பொன்னவை பொலியத்தோன்றி
ஈண்டெரி முன்னர் மன்னரிழிவுற வேட்டிலானேல்
மீண்டெரி புகுவன் என்னும் எண்ணமே விழையுநீரான்"

எனத் திரௌபதை நினைத்தாளாகவும், கம்பர் தம் காவியத்தில்,

"சொல்லிய குறியினத் தோன்றவே யவன்
அல்லனே யிறப்பனென் றகத்துள் உன்னினள்"

எனச் சீதை நினைத்தாளாகவும் கூறினர். புகழேந்தியார் 'செம்மைசேர் கன்னியானுகில்' என்ற சொற்றொடரால் பின்னைய இரு புலவர்களையும் வென்றுவிட்டமை குறிப்பிடத் தக்கது.

நம் புலவர் பூஞ்சோலைகளையும் அவற்றில் மாதர் செய்வனவற்றையும் நன்கு எடுத்துரைத்திருக்கின்றார்.

* பூக்கொய்கின்ற பெண்ணொருத்தியின் முகத்தைப் பங்கய மென்றெண்ணிப் படிந்த வண்டை அவள் தன் கையால் கலைக்க அவ்வண்டு அவள் கையைக் காந்தள் மலரென்று கருதி அதிற் பாய்ந்தது. அவள் என் செய்வாள்? அவ்வண்டைக் கலைக்க முயன்று தான் களைப்படைந்து வியர்வையுடன் நின்றாள். † கம்பரும் 'ஒரே நேரத்தில் மலராத தாமரையுங் குவளையும் ஒரு பெண்ணாகிய வல்லியில் முகமாகவும் கண்ணாகவும் பூத்திருப்பதைக் கண்ட புதுமையைப் பார்த்துத் திரியும் வண்டு அப்பெண் கலைத்தாலும் போகாது அப்புதுமையைப் பார்த்தது' என அழகுறக் கூறியிருக்கிறார். இதில் அவர் ஒரு நேரத்தில் பூவாத இரு மலர்கள் மங்கை வல்லியில் பூத்தன எனக்கூறிய நயம் தமிழறிஞரை யின்பசாகரத் தமிழ்த்துந் தகையது. நம் புகழேந்தியாரும் அவரினுங் குறைவுபடாமல் கையால் கலைக்க அதனைக் காந்தளென எண்ணி அதிலும் பாய்ந்தது என அழகுறக் கூறினர்:

* மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச் - செங்கையால்
காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து. —புகழேந்தியார்

† நதியினுங் குளத்தும் பூவா நளினங்கள் குவளையோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மாலைத்தும்பி
அதிசய மெய்திப்புக்கு வீழ்ந்தன வலைக்கப்போகா
புதியன கண்டபோழ்து விடுவரோ புதுமை பார்ப்பார். —கம்பர்

என்று ஒருவன் அயிர்த்தான் எனவும் சிறப்பாகக் கூறியிருக்கின்றனர்.

நெற்றியில் குவளைமலர் பொருந்தும்படி யணிந்த தைய லொருத்தி வையத்தார் உண்ணக் கடுவிடத்தை யுண்ட கண் ணுனை யொத்தனள் எனவும், கமலப்பூ இரண்டைக் காதிற் பெய்த ஒரு பெண் மூன்று முகத்தையுடையவன் போன்ருள் எனவும், தன்னுடன் நீராடி எழுந்த தன் மனையாள் முகத் தைத் தாமரை யென்றயிர்த்து, அவளைக் காணவில்லை யென்று ஒருவன் அயிர்த்தான் எனவும் சிறப்பாகக் கூறியிருக்கின்ருர்.

சூதாடலின் தீமையைப் புலவர் மிகச் சிறப்பாக எடுத்து விளக்கியிருக்கின்ருர். செம்மை நினையாமை பூண்டார் நெறி, காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதன் மறுத்தல் என்பன. இவற்றில் கவருடல் அறத்தை வேர் கல்லும், அரு நரகில் சேர்க்கும், அருளைத் தேய்க்கும், கோபத்தை யுண்டாக்கிக் கெடுதிசெய்யும், அழகை யழிக்கும், உண்மையையும் உயர்வையும் அழிக்கும், மானஞ் சிதைக்கும், அன்பை யழிக்கும், ஆயம் பிடித்தார் பொது மகளிர் கேயம் பிடித்தார்போல் மனதில் மாயம் பிடித்தாரே யாவர் என்பன.

இச் சூதின்றன்மையைப் புகலுமிடத்தும் புலவர் முதலாவது செம்மை நினையாமை பூண்டார் நெறியெனக் கூறினர். நளனைச் செம்மனத்தான் எனப் பலவிடங்களிலும் மேம்படுத்துரைத்த அவர் இவ்விடத்து அதனை விதந்து காட்டி யதிலும் ஓர் நயம் இருக்கிறது. செம்மையுடையான் ஒழுகினமை பண்டை விதியின் பயனே! என்பது தொனிப் பதை யறியும்பொழுது புலவரின் புலமை—கவிஞானம்—எத் தகையதென்று எடுத்துரைக்க ஒண்ணுமோ?

புதல்வர்களின் பெருமையையும் புலவர் கூறியிருப்ப தீண்டு கவனித்தற்குரியது.

செய்தவ மெத்தனை செய்தாலும் மைதீர் மகப்பெரு மானிடர்கள் வானவர் தம்மூர்ப் புகப்பெருர்.

இன்னடிசில் புக்களையும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய் மக்களையிங் கில்லாதவர்,

பொன்னுடையவரேனும் புகழுடையவரேனும் ஒன்று முடையரல்லர்.

"சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தா மின்முகத்து-முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச் செவி"

என் றிவ்வாறெல்லாம் மூன்று வெண்பாக்களில் புலவர், வள்ளுவர் புதல்வரைப் பெறுதல் எனும் அதிகாரத்தில் கூறிய வற்றைச் சுருக்கிக் கூறியிருக்கின்றனர்.

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்"

எனும் செய்யுளைப் படிக்கும் பொழுது,

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை அடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே"

எனும் பாண்டியன் அறிவுடை நம்பியின் செய்யுள் நினைப்புக்கு வருகின்றது. இவ்விரண்டின் ஒற்றுமைதானென்னே! ஒருவேளை புலவர் அறிவுடை நம்பியின் செய்யுளைத் தான் வடித்தெடுத் துரைத்தனரோ?

பைபிள்

705 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது

1935—36-ஆம் ஆண்டில் 11,686,131 படிகள் கொடுபட்டிருக்கின்றன. இந்தியாவில் கொடுபட்ட படிகளின், தொகை, 1,182,000. (திருக்குறள் ஆறு, எழு பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதை யெடுத்துக்காட்டிப் பெருமை கூறுவோர் இதனை நன்கு சிந்திப்பார்களாக.)

(கா. சிவ. க.)

வரலாற்றுப்பகுதி: History & Biography

சர். ரிச்சார்டு ஆர்க்ரைட் *

[திரு. N. குழந்தைவேலன் அவர்கள், B. A.]

ரிச்சார்டு ஆர்க்ரைட் என்னும் இப்பேரறிஞர் நூல் நூற்கும் பொறியைப் (இயந்திரத்தைப்) புதிதாகக் கண்டு பிடித்து உலகிற்கு உதவியவர். இவர் மிக்க எளிய நிலையிலிருந்து பொறுமையினாலும் விடாமுயற்சியினாலும் உயர்ந்த நிலையை யடைந்தவர். இவர் 1732-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 23-ம் நாள் ஆங்கிலநாட்டுப் †பிரேஸ்டன் நகரில் பிறந்தவர். இவர்தம் பெற்றோர் வறுமை மிக்கவராதலால் இவருக்குக் கல்விப் பயிற்சி யளித்தற்குப் போதிய பொருளில்லாது வருந்தினர். ரிச்சார்டுக்கு உடன்பிறந்தார் பதின்மூவர் இருந்தனர். கல்வியினும் சிற்றுயிர்க் குற்றதுணை வேறில்லை யென்பதை நன்குணர்ந்த ரிச்சார்டு கல்வி கற்றலில் மிக்க ஆர்வமுடையராக இருந்தனர்.

இவர் தம் 13-ஆம் ஆண்டிலேயே ஒரு நாவிதனிடம் வேலைக்கு அமர்ந்து பொருள்தேட நேர்ந்தது. ஆயினும் தம் ஒழிவு நேரங்களைப் புத்தகங்கள் படிப்பதிலும் அறிவியல் ஆராய்ச்சிகளிலும் கழித்து வந்தார். பகலில் ஒய்வு இல்லாமையினாலே இவர் இரவில் நீண்ட நேரம்வரை நூல்கள் பயில்வதிலும் புதுக்கருவிகள் அமைப்பதிலும் முயற்சி யெடுத்து வந்தார்.

சின்னாட்கழித்துத் தாமே ‡போல்ட்டன் என்னும் நகரில் ஒரு கடை வைத்துச் சிரைத்தற் றொழிலைச் செய்துவந்தார். கடை மிகச்சிறிய ஒரு நிலவறைக்குள் இருந்தது. ரிச்சார்டு வருவாய் மிகுதியில்லாது பசிப்பிணியால் வாடினர். ஆகவே முடிவெட்டுவதற்கு ஏற்பட்ட இரண்டு பென்சை இவர் ஒரு பென்னியாகக் குறைத்தார். இதனால் மக்கள் திரள் திரளாய் இவரது கடைக்கே வரலாயினர். இதனைக் கண்ட ஏனைய கடைக்காரர்கள் தங்களது கூலியையும் ஒரு பென்னியாகக் குறைக்கத் தொடங்க மீண்டும் ரிச்சார்டுக்கு வருவாய் குன்றிற்று. இவர் ஊக்கத்தைக் கைவிடாது தாம் அரைப்பென்னிக்குச் சிரைப்பதாக விளம்பரஞ் செய்தார்.

---

* Sir Richard Arkwright. † Preston. ‡ Bolton.

இதனால் மக்களனைவரும் இவரது கடைக்கே வந்து குவிந்தனர். இதன் வழியாகச் சிறிது பொருள் கூடப்பெற்றார். ஆதலால் நிலவறைக்குள்ளிருந்த தமது கடையை நல்லதோர் இடத்திற்கு இவர் மாற்றிக்கொண்டனர்.

அக்காலத்து மக்கள் செயற்கைக் கூந்தல்களை வாங்கித் தம்மை அழகு படுத்திக்கொள்வது வழக்கம். ரிச்சர்டு பல விடங்களிலும் அலைந்து கூந்தல்களை விலைக்கு வாங்கித் தம் மனைவியின் உதவியால் அவற்றிற்குச் சாயம் ஏற்றிக் கூடுதல் விலைக்கு விற்றுப் பொருள் ஈட்டிவந்தார். ஆயினும் செயற்கைக் கூந்தலணியும் வழக்கம் நாளடைவில் ஒழிந்துபடவே, ரிச்சார்டு வயிற்றுப்பிழைப்புக்கு வேறு வழிதேட வேண்டுவதாயிற்று. இவருக்கு இளம் வயதிலிருந்தே பொறிகள் இயங்குவதைக் காண்பதிலும் அவற்றை ஆராய்வதிலும் விருப்பம் மிகுதி. போல்ட்டன் நகரத்தில் பருத்திவிளைவு மிகுதியாக இருந்தது. அவ்வூரில் ஆண்மக்களும் பெண்மக்களும் நூல் நூற்றலையே தொழிலாகக் கொண்டிருந்தனர். கையால் நூல் நூற்பதைவிட்டுப் பொறியின் உதவியால் நூல் நூற்றால் மிகுந்த நலம் பெறலாம் என ரிச்சார்டு எண்ணினார். அத்தகைய பொறி ஒன்றைக் கண்டுபிடிக்கவேண்டுமென முயற்சி செய்யலானார். இவரது வறுமையே இதற்குத் தூண்டுகோலாயிற்று.

ரிச்சார்டு தம் கையிலிருந்த சிறுதொகைப்பொருளையும் இதன் பொருட்டுச் செலவுசெய்துவிட்டு வறுமையின் கொடுமையால் மிக வருந்தினார். இவர்தம் மனைவியார் இவர் மனதை எவ்வாறாயினும் பழைய தொழிலிற் றிருப்பிவிட எண்ணினார். இவர் அரும்பாடுபட்டுச் செய்து வைத்திருந்த கருவிகள் அனைத்தும் அவ் அம்மையாரால் உடைத்தெறியப்பட்டன. அதனால் இவர் சிறிதும் ஊக்கங்குன்றாது அவைகளை மீண்டும் செய்துமுடித்தார். அப்பொறிகள் உருளைகளின் உதவி கொண்டு இயங்குமாறு செய்தனர். உள்ளூரில் பொறிவலாளரிடம் தாம் செய்து வைத்திருந்த நூல் நூற்கும் பொறியைக் காண்பித்து அவை போன்று பெரிய பொறிகளை அமைப்பதற்கு உதவிசெய்யுமாறு இவர் வேண்டினார். இவரது எழ்மையான நிலைமையையும் கிழிந்த ஆடைகளையுங் கண்ட எவரும் இவருக்கு உதவிபுரிய முன்வரவில்லை. நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொற்களை யாரே பொருட்படுத்துவார்? அதனால் இவர் மனமுடைந்து தமது சொந்த ஊராகிய பிரெஸ்டனுக்குத் திரும்பிச் சென்றார். ஆங்கு உடுப்பதற்கும் உண்பதற்கும் வழியின்றி மிகவருந்

தினர். முடிவில் * ஸ்மாலி என்பாரது ஆதரவு இவருக்குக் கிடைத்தது.

அக்காலத்தில் தொழிலாளர்கள் பொறிகளைக்கொண்டு வேலைசெய்வதை மிகவும் வெறுத்திருந்தனர். பொறிகளே எல்லா வேலைகளையும் செய்தால் தொழிலாளர்கள் தங்களுக்கு வேலை இல்லாது போய்விடுமென்று அஞ்சினர். ஒரு பொறி பத்து ஆட்கள் செய்யக்கூடிய வேலைகளைச் செய்யக்கூடுமெனில் அப்பொறியை ஒட்டுபவன் ஒருவன் தவிர ஏனைய ஒன்பதின்மருக்கும் வேலையிரா தென்பதாகத் தொழிலாளர்கள் முறையிட்டனர். ரிச்சார்டு இவர்களுக்கு அஞ்சித் தமது நூல்நூற்கும் பொறியை ஒரு பாழடைந்த கட்டிடத்திற்குள், அடர்ந்த புதர்களின் பின்னல் மறைத்து வைத்திருந்தார். இவர் தமது புதிய பொறியை ஆராய்ந்து கொண்டிருக்கையில் இவர் அங்கு மந்திரச் செயல்கள் செய்து கொண்டிருப்பதாக மக்கள் எண்ணினர். அருகிற் குடியிருந்த கிழவிகள் இருவர் அக்கட்டிடத்திலிருந்து இரவில் பல்வேறு ஓசைகள் கிளம்புவனவாயும் அவை பேய்கள் அல்லது ஆவிகள் ஒலமிடுவதுபோல் இருந்தனவாயும் கூறினர். அவ்வூரார் பலர் அக்கட்டிடத்தை இடித்து உள்ளே சென்று பார்க்கத் தீர்மானித்தனர். ஆனல் அவ்வாறு செய்தற்கு எவரும் முன்வரவில்லை.

ரிச்சார்டு தமது பொறி செம்மையாக முடிவுபெற்றவுடன் அதனை † நாட்டிங்காம் என்னும் நகரத்திற்கு எடுத்துச் சென்றார். ஆங்கு, ‡ கே, அதர்ட்டன் என்னும் இரண்டு செல்வர்களை அடுத்து அவர்கள் உதவிகொண்டு 1769-ஆம் ஆண்டில் அவர் முதன்முதலாக நூல்நூற்கும் பொறிச்சாலை (Mill) ஒன்று கட்டுவித்தார். இவர் முதன் முதற் பொறிகளை இயக்கும்போது அவைகளிற் குதிரைகளைப் பூட்டி இயங்குமாறு செய்தனர். சில ஆண்டுகள் கழித்து. § ஸ்ட்ரட் என்பாருடன் கூட்டாளியாகச் சேர்ந்து ¶ டேர்பிஷயர் என்னுமிடத்தில் இரண்டாவது தொழிற்சாலை அமைத்தார். இவ்விடத்தில் தமது பொறிகள் வேலைசெய்வதற்கு ஒரு ‖ நீர்ச்சக்கரத்தையும் இயற்றினர். இச்சக்கரத்தைச் சுழற்றுதற்கு நீர்வீழ்ச்சியைப் பயன் படுத்திக்கொண்டமையால் செலவு சுருங்கினதுமன்றி மிகுந்த பொருள் வருவாயுங் கிடைத்தது. ரிச்சார்டு இப்பொறிக்கு $ நீர்ச்சட்டம் எனப்பெயர்சூட்டினர். லங்காஷயரிலிருந்த ஏனைய முதலாளிகள் இதுகண்டு மனம் பொருது ரிச்சார்டு பொறியின்வழி செய்துவந்த நூலை வாங்க மறுத்த

* Smalley. † Nottingham ‡ Kay, Atherton § Strutt ¶ DerbyShire ‖ Water-wheel. $ Water-frame.

னர். ஆகவே, ரிச்சார்டும் இவர்தம் பங்காளிகளும் தாங்களே துணிநெய்து விற்கத்துவங்கினர். இவர் பொறியினுற் செய்த துணிகள் மிக்கஉறுதியாயும் கலப்பில்லாமலும் நேர்த்தியாயிருந்தமையால் மக்கள் இவைகளையே விரும்பி வாங்கத் தலைப்பட்டனர். ரிச்சார்டும் நூல்நூற்கும்பொறியோடு பல்வேறு நுட்பமான கருவிகளை அமைத்து அதை மிகச் சிறந்த நிலைக்குக் கொண்டுவந்தார். பஞ்சிலிருந்துகொட்டைகளை நீக்குதல், நுப்புரவுசெய்தல், சிக்கெடுத்தல் முதலிய எல்லா வேலைகளையும் அப்பொறியே செய்தது. இதனுல் ரிச்சார்டின் பருத்தி ஆலைத்தொழில் விரிவடைந்து செழிப்புற்றது. இவர் இன்னும் பல கூட்டாளிகளுடன் சேர்ந்து பல ஆலைகளைக் கட்டுவித்தார்.

இவர் தொழில் மிகுதி கண்டு இவர்க்குப் பகைவர்களும் நாளுக்கு நாள் மிகுந்தனர். முதலாளிகள் பொறுமையினுலும் தொழிலாளிகள் வேலை யின்மையாலும் ஆத்திரங்கொண்டு ரிச்சார்டுக்குக் கேடு சூழ்வாராயினர். இதனுல் இவர் அரசியற்காவலாளர்கள் உதவியை நாடவேண்டுவதாயிற்று. இவரது ஆலைகளிலொன்றைப் பகைவர்கள் இடித்துத் தகர்த்து விட்டனர். மற்ருேர் ஆலை தீக்கிரையாயிற்று. முதலாளிகள் பலர் ஒருங்கு சேர்ந்து இவருடைய நூல்களையும் துணிகளையும் விற்பனையாகவொட்டாது தடுத்து விட்டனர். இவையுமன்றி ரிச்சார்டு தாம் நூல் நூற்கும் பொறியைக் கண்டு பிடித்ததாகக் கூறுவது பொய்யென்றும், அவர் அதனைத் தமக்கே உரிமையாக்கிக் கொள்வது தகாதென்றும், அவர்மீது குற்றம் சாட்டி அவரை முறைமன்றத்திற்கு இழுத்தனர் பகைவர்கள். பற்பல சூழ்ச்சிகள் செய்து இறுதியில் அவர்கள் வெற்றி யடைந்தனர். ரிச்சார்டை நாங்கள் மீண்டும் பழைய அம்பட்டனுக்கிவிட்டோம் என்று பகைவர்கள் வீறுகூறினர். பகைவர்கள் தம்மை எளனம்செய்வதை இவர் சிறிதும் பொருட்படுத்ாது மேலுமேலும் பொறியமைக்குந் தொழிலிலேயே கண்ணுங் கருத்துமாயினர். இவர் தமக்கு நேர்ந்த இன்னல்களை எவரிடமும் முறையிடாது தாமே தம் குறைபாடுகளைப் போக்குவதற்குரிய முயற்சிகளைச் செய்தார். இவர் அல்லும் பகலும் இடைவிடாது உழைத்துப் பெரும் பொருள் திரட்டினர். இவர் தமது நூல் நூற்கும்பொறியில் நீராவியைப் புகுத்தி அதைச் சிறந்த முறையில் ஒப்புயர்வற்றதாக மாற்றியமைத்தார். ரிச்சார்டுதம் தொழிற்சாலையில் பொறுப்பற்ற தொழிலாளிகள் பலர் தவறு செய்ததால் அடிக்கடி நூல் நூற்கும் பொறி கெட்டுப்போய் வேலைக்கு

இடையூறு நேர்ந்தது. ஆகலின், ரிச்சார்டு தொழிலாளர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேலையைப் பகிர்ந்து கொடுத்தார். ஒவ்வொருவரும் எல்லா வேலைகளையும் செய்வதைவிட்டுத் தத்தமக்கு ஏற்பட்ட வேலைப் பகுதிகளைமட்டுமே திரும்பத் திரும்பச் செய்ததால், அவர்கள் தங்கள் தொழிலில் மிகவும் தேர்ச்சியுற்றனர். ரிச்சார்டு கையாண்ட இப்புதிய முறையால் குறைந்த நேரத்தில் மிகுந்த நூல் உற்பத்தி செய்யப்பட்டது. *கிரம்போர்டு என்னுமிடத்தில் ஒரு பெரிய பஞ்சு ஆலையும் அவர் கட்டுவித்தார். அரசாங்கம் அவருக்குச் சிறந்த பட்டங்களை வழங்கிப் பெருமைபடுத்திற்று. டேர்பிஷயர் என்ற நகருக்கு அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1786-ஆம் ஆண்டில் †மூன்றாம் ஜார்ஜ் மன்னரை வரவேற்கும் பேறு இவருக்குக் கிடைத்தது. பொறுமைக்கு அணிகலனாய் எல்லாராலும் போற்றப்பட்ட இவர் 1792-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 3-ஆம் நாள் இறைவன் திருவடி அடைந்தனர். ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பமென்பதும், பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழென்பதும் இவர்தம் வரலாற்றால் விளங்குகின்றன.


"பப்பரத்தி"

சிறு பெண்கள் தம் பாவாடைகளைப் பரப்பி இடமடைத்து உட்காரக்கண்ட தாய்மார்கள் "என்னடீ, பப்பரத்தி என்று உட்கார்ந்து கொண்டாயே!" எனக் கடிவார்கள். பப்பரம் என்பது குஜராத் என்னும் கூர்ச்சர நாட்டிற்குப் பெயர். அந்நாட்டுப் பெண்கள் அளவுக்கு மிஞ்சிய ஆடைகளை அணிந்திருப்பதைக் கண்டவர்கள் இச்சொல்லின் உட்கிடையை நன்குணர்வார்கள். "அந்திமல்லி, துந்திமல்லி, ஆனைமல்லி, பப்பரத்தி" என்பது தமிழ் நாட்டுப் பழமொழிகளில் ஒன்று.

—(கா. சிவ. க.)

---

* Crumford † George III



எந்நாட்டவர்க்கும் இறையே தென்னாடுடைய சிவன்

[புதுவயல் அரு. சுப்பிரமணியம் அவர்கள்]

மணிமொழி பயந்த திருமொழிச் செழுமறை போற்றித் திருவகவலில் 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' எனவரும் என்பினையுருக்கி அன்பினைப் பெருக்கும் அமுதார் மொழியே இதன் தலைப்பாம். ஆகவே இவ்வகத்தும் புறத்தும் யாண்டும் நிறைந்துள்ள ஏகன் அநேகன் இறைவனே தென்னாடுடைய சிவன். தென்னாட்டார் பன்னாள்தொட் டிந்நாள்காறும் பாலரும் முதியரும் பராவித் தொழுதழுதேத்தித் தெருட்டிய, தெருட்டி வருகிற, இன்பத் தேவே எந்நாட்டவர்க்கும் இறை. இவ்வோத்து முறையை முன்னொடுபின் மொழிந்து பார்க்குமிடத்து எவ்வுலகுக்கும் எவ்வுயிர்க்கும் ஈசன் ஒருவனே தனிப்பெருந் தலைவன் என்பதூஉம் அவனை வழிபடும் மக்களும் ஒரு வகுப்பினரே என்பதூஉம் காட்டவந்த கபிலர் பெருமானும் திருமூலச் செல்வரும்:

"குலமும் ஒன்றே குடியு மொன்றே,
வழிபடுந் தெய்வமு மொன்றே யாதலால்"

என்றும்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே"

என்றும் கூறுமாற்றா னினிதறியப்படும். அத்தலைவனை எண்ணிலாப் பெயர்களால் ஏத்தப்பெற்றமையும் தேவார திருவாசகத் தேம்பாக்களில் நனிகாணலாம். காணவே, அப்பல் பெயருள் சிவம் என்பதொன்று; அச்சொல் 'இன்பம்' 'அன்பு' எனும் பொருளார்ந்ததாகும். அச்சிவனும் கண்ணுதற் கடவுளை—எண்ணுதற் கரியானைப் பண்ணாற் பணிகொண்ட—

கண்ணாற் களிகொண்ட பெருமை தென்னாட்டிற்கே சிறப்பாக உரியது. அக்காட்சியாலும் பணியாலுங் கண்ட பேரின்பப் பெருக்கானே இறைவனை 'இன்ப அன்பு' வடிவினன் என் றழைப்பாராயினார்க ளென்க. அற்றேல், இன்ப வடிவாம் தமிழணங்கின் எழில்கண்ட அன்பு வடிவாம் இறைவன் அவள் பால் வைத்த காதல் ஒழியமாட்டாதாகவே, அவ்வெழிலுறை தென்னாட்டைத் தன்னாடாக்கிக்கொண்டு அவ்வணங்கொலி கேட்டு ஆடிப் பாடி அவள் வலைச் சிக்கிய அன்பாரழகரும் இன்பவழகியும் ஒருவயப்பட்டுப் பெருக்கிய விளைவிற்கண்ட இன்பத்தானுமேதான் எவ்வுலகிற்கும் இறைவனையும், எம் மொழிக்கு மில்லாத ஏற்றமுள்ள தமிழினையும் கண்டனர் ஆன்றோர். "தமிழ்மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்' என்றார் பாரதியாரும். எனவே அவ்விரண்டனையும் ஒருபுடை யாக "இன்பம்" என்று ஆன்றோர் (தென்னாட்டார்) முழங் கினாராகல் வேண்டுமென்பதூஉந் துணியற்பாற்று.

அவ்வரனார் பாடியதும் ஆடியதும் தென்னாட்டையே குடியாக் கொண்டதும் சிவ (இன்ப) லோகமாக்கியது மெல் லாம் எழிலொழுகக் கண்ணெதிர் காட்டும் கன்னல் சாற்றி னுஞ் சுவைமிக்க பாக்களால் அறிமின்கள். :

"தில்லையுட் கூத்தனே" என்றும்
"தில்லை மூதூராடிய திருவடி" என்றும்
"தென்பாண்டி நாட்டானே" என்றும்
"பாண்டிநாடே பழம்பதியாகவும்" என்றும்
"அப்பாண்டிநாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த" என்றும்
முழங்கும் மணியொலியும்,

"............ஆடினார் காளிகாண ஆலங்காட் டடிகளாரே" என்று அப்பரடிகள் கூறுவதுங்காண்க. நிற்க, அவனருளாலே அவன் திருக்காட்சி யெல்லாந் தென்னாட்டார் கண்டது போலவும் கொண்டதுபோலவும் எந்நாட்டாருங் கொள் ளாததென்னை? பலர் பலப்பல நோக்கும் தாக்கும் (ஆற்றல்) உடையவர்; எந்நாடு மொன்றுபோ லிருத்தலு மரிது. ஒரு நாடு செழிப்பும் மற்றொரு நாடு வறுமையும் உற்றிருக்கலாம். அவ்வேறுபாட்டானெல்லாம் மக்கள் மனோ நிலை மாறுபாடுறல் மரபு. ஆகவே, பெற்ற செழுமை நிற்ற லோங்கவும் உற்றவறுமை இற்றே நீங்கவும் செய்யுமாறு வேண்டியதீயுந் தலைவனை நோக்கி:—இன்பம் வேண்டுமென் பாரும், வீரம் வேண்டுமென்பாரும், தாரம் வேண்டுமென் பாரும், வீடு வேண்டுமென்பாரும், நாடு வேண்டுமென்பாரும் இன்னோரன்ன பிறவுமாய் வேண்டாநிற்கக்கண்ட விமலன்

எளிவந்து அவர் வேட்டதருளப் பெற்றேகின அவர்களே இன்று ஒன்றுபலவாய் விரிந்து கிடக்கின்றார்க ளென்றறியற்பாற்று. ஆயினும் ஒன்றுபடுவோம்; இது உறுதி.

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வு."

என்ற விரப்பாரதியார் வாக்கும் இளைஞருள்ளத்தில் நாளுக்கு நாள் வலிவேற்று வாராநிற்கின்றது. நிற்க

உலகமெல்லாம் ஒன்றையே (இன்பமோ-வேறேதுமோ) குறிக்கோளாய் நினைத்தலும்-காண்டலும்-வேண்டலும் அரிதினும் அரிதாகுமன்றோ? இவ்வுண்மையை,

"உலகெலா முணர்ந்தோதற் கரியவன்"என்று சேக்கிழாரும்,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்த னென்றரி யோடு பிரமனுந்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே." என்றும்,

"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஒங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசனெ னாதவர்க் கில்லையே" என்றும்,

"பற்பல் காலம் பயிற்றிப் பரமனைச்
சொற்பல் காலநின் றேத்துமின் தொல்வினை
வெற்பில் தோன்றிய வெங்கதிர் கண்டஅப்
புற்ப னிக்கெடு மாறது போலுமே."

என்றும் அப்பரடிகளும் அருளிச்செய்தவாறே பாறை மனம் போக்கி, கருத்தொருமைப் பாடுற்று எங்கு முள்ளவன் ஈசன் ஒருவனே என்றெண்ணி யேத்துவோமாயின் வெங்கதிர்கண்ட பனியெனப் பழவினைகள் பறந்தோட்டமெடுப்பது திண்ணம். திண்ணமாகவே எதிர்ப்பட்டுக் காண்பதும் இன்பம்! இன்பமே!!

காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகார சிவமென்னும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் வருகுதையோ சேரவாருஞ் செகத்தீரே!

ஆராய்ச்சிப் பகுதி : Research

இளங்கோவும் பாவிகமும்

[வித்துவான் S. ஆறுமுக முதலியார், எம். ஏ., எல். டி.]

(உரிமை ஆசிரியர்க்கே)

1. இயற்கைத் தோற்றங்களாகிய பறவைகள், ஆறு, குளம், பூக்கள், செடிகொடிகள், மரங்கள், சோலைகள், வான மண்டிலங்கள் முதலியவற்றின் வனப்புக்களை, உள்ளபடியே எடுத்துக்கூறும் செய்யுள் ஓவியங்களும், மனித இயற்கையை உள்ளவாறே காவியங்களிற் கவின்பெற அமைக்குந் தன்மையும், உவமை, உருவகம்போன்ற அணிகளும் இன்னோரன்ன பிறவும், ஒரு தொடர்நிலைச் செய்யுளுக்கு ஆங்காங்கே அணியினைச் செய்கின்றன. இவ்வணிகள், எழிலும் அழகும் இயற்கையிலேயே வாய்க்கப்பெற்ற ஒரு நங்கை தன் இயற்கையழகை இன்னும் மிக்குத் தோற்றுவிக்குமாறு, தன் உறுப்புக்களை ஒப்பனைசெய்வான், பல அணிகளை அணிவதை ஒக்கும். இதனாலன்றோ "அணியிலாக்கவிதை பணியிலாவனிதை" என்னும் முதுமொழியும் எழுந்தது! தனித்தனிச் செய்யுட்களிலும், ஒரு செய்யுளிலே சில அடிகளிலும் சீர்களிலுந் தோன்றக்கூடிய அணிகள் உறுப்புக்களிலேஆங்காங்கே அணியப்படும் அணிகலன்களை ஒக்கின்றன. அணிகளைக் கழற்றிப்போடுவதைப் போலவே, பாக்களில் காணப்படும் அணிகளுமுள்ளன. இவ்வணிகள் உறுப்புக்களி லணியப்படும் ஆபரணங்களைப் போல் தனித்துப் பிரித்துப் பார்க்கமுடியும் என்பது உரையாசிரியர் பேராசியருக்கும் ஒப்ப முடிந்தது. தொல்காப்பியருக்கு அணியிலக்கணம் உடன்பாடன்று என்று கருதும் பேராசிரியர், தொல்காப்பியர் உடம்பினின்றும் பிரிக்க முடியாத உறுப்பைப்போன்று, செய்யுளுக்கு அணியை அமைக்கவில்லை என்று கூறிச் சாத்தனல் அணியப்பட்ட முடியும், தொடையும் முதலாயவற்றையும் சாத்தனின்றும் வேறு பிரிப்பதைப் போலவே செய்யுளினின்றும் அணிகளைப் பிரிக்கலாம் என்கின்றனர்.

(2) ஆனால் இவ்வணிகளை நோக்காமல் அம்மங்கையின் இயற்கை எழிலையும். அழகையும், உறுப்புக்களின் திருந்திய வடிவம், நடை, சாயல் முதலிய பலவற்றையும் ஒருங்கே நோக்கி, அத்திரண்ட உருவத்தைக் கண்டு களித்தால், அது

தனிப்பட்ட ஓர் உயர்ந்த இன்பத்தை அளிக்கும். அணிகலன்களாலும் செயற்கை ஒப்பனைகளாலும் கவரப்பட்ட வனப்பைவிட, அவைகளின்றியே விளங்கும் இயற்கையழகே மிகுந்த இன்பம் பயக்கவல்லது என்று பண்டைப்புலவர்கள் கருதியதாகத் தோன்றுகிறது. சீதையைத் திருமணத்திற்கு முன் அணிகலன்களாலும் பிறவற்றாலும் ஒப்பனை செய்வதைக் கூறத்தொடங்கிய கம்பர், அதைச் செய்பவர்களின் அறியாமைக் கிரங்கி "உமிழ்சுடர்க் கலன்கள் நங்கையுருவினை மறைப்பதோரார், அமிழ்தினைச் சுவைசெய்தென்ன அழகினுக் கழகு செய்தார், இமிழ்திரைப் பரவை ஞாலம் ஏழைமை யுடைத்து மாதோ" என்று கூறுவதும் இக்கருத்துப்பற்றியாமென்க.

(3) இதுபோன்றே ஒரு காவியமாகிய தொடர்நிலைச் செய்யுளிலும், தனித்தனி இடங்களில் காணப்படும் அணிகளைச் சுவைப்பதைவிட, நூல் முழுவதும் ஊடுருவிச் செல்கின்ற ஒப்பற்ற அழகைக்கண்டு துய்ப்பது சாலவும் சிறந்தது என்பர். இவ்வாறு நூல் முழுவதும் கூர்ந்து நோக்கிக் காணப்படும் அழகையே பாவிகம் என்பர் இலக்கண ஆசிரியர். "பாவிகமென்பது காப்பியப் பண்பே" என்ற சூத்திரத்தில் தண்டியலங்காரம் ஒரு காவியத்திற்கின்றியமையாப் பண்பாகப் பாவிகத்தை அமைக்கின்றது. பண்பியிலிருந்து பண்பைப் பிரிக்க முடியாதவாறுபோலவே காவியத்தினின்று பாவிகத்தையும் பிரிக்க முடியாது. அதாவது ஒரு நூல் முழுவதையும் படித்தன்றி இன்ன பாவிகம் இந்நூலில் அமைந்திருக்கின்றது என்று கூறமுடியாது. இன்ன பாவிகம் இந்நூலுள் விரிக்கப்படும் என்று முதற்கண்ணே கூறப்படினும், நூல் முழுவதும் படித்து இன்ன இன்ன விதமாக அது விரிக்கப்படுகிறது என்று உணர்ந்தல்லது அதன் முழுச்சுவையையும் அதைப் படிப்போரொருவர் நுகரமுடியாது. தற்குறிப்பேற்றமோ, உவமையோ, உருவகமோ அன்றி வீறுகோளணியோ ஒரே செய்யுளிலேயே கண்டு உணரக்கூடியதாயிருக்கின்றது. பாவிகமோ அத்தன்மைத்தன்று.

(4) இப்பண்பு தொடர்நிலைச்செய்யுள் முழுவதும் ஊடுருவிச்சென்று, படிப்போரால் நோக்கி உணரப்படுவதல்லது தனித்து ஒரு செய்யுளால், அன்றி ஒரே இடத்துப் பல செய்யுட்களால், அன்றி ஒரு படலத்தால் நோக்கிக்கொள்ளப் புலப்படாதாம். ஒரு புலவர் தன் காவியத்தை எழுதத் தொடங்குமுன், தான் கூறப்போகும் பொருள்களைப் பற்றிப்

பன்முறை சிந்தித்து, நோக்கி நோக்கி, தன் உலக அனுபவத்தையும், மனித இயற்கையையும் உள்ளபடியே காவிய பாத்திரங்களின் மூலமாக, கதைப்பகுதிகளுக்கு ஏற்பப் பொருந்தும்படி அமைக்கின்றார். கம்பர் இளங்கோவடிகளைப்போன்ற சிறந்த புலவர்கள் தாங்கள் மேற்கொண்டு உலகத்தவர்களுக்கு அறிவுறுத்தவேண்டிய சில சிறந்த பண்புகளை ஒரு காவியத்தின் மூலமாக எடுத்துக்காட்ட, தங்கள் வாழ்நாள் முழுவதையுமே கழித்திருக்கின்றார்கள். சில சமயங்களில் ஒருவர்தம் வாழ்நாள்கூடப் போதியஅளவற்றதாகப் போய்த், தாம் எழுதத்தொடங்கிய காவியங்களை முடிக்காமலே காலஞ்சென்ற புலவர்கள் உலகில் சிலர் பலர் உளர்.

5. எனவே "உலகியலில் சில பெருமைக் குணங்களும் சிறுமைக் குணங்களும், கவி கருதியாங்கு, காவிய முழுவதிலுமே அமைந்து தோன்றுவதே" பாவிகமென்பர். ஒரு காவியத்தினது பெருமைக்குஞ் சிறுமைக்குங் கட்டளைக்கல் பாவிகமே என்று கூறிவிடலாம். உத்தமகுணங்களும் அதமகுணங்களும் புலவருடைய கற்பனைச்சக்தியால் ஏற்றபெற்றி காவியத்தின் கதைப்போக்கில் இயைத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு இயைத்துக்கொள்ளப்படும் பாவிகங்கள் காவியபாத்திரங்களின் மனநிலையை வெளிப்படுத்தும் உரையாடல்களாலும், தனிமொழிகளாலும், கவிகூற்றுக்களாலும், அவர்களைப்பற்றிப் பிறர்பேசிக் கொள்வதாலும், அவர்கள்செயல்களாலும், புறமொழிகளாலும் பிறவற்றாலும் நன்கு விளங்குவனவாம்.

6. பிறனில் விழையாமை, பொறுமை, வாய்மைபோன்ற பாவிகங்கள் காவியங்களிற் பல புலவர்களால் தத்தம் கற்பனையாற்றல்களுக் கேற்பக் காவியபாத்திரங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

"பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப"
"பொறையிற் சிறந்த கவசமில்லை"
"வாய்மையிற் கடியதோர் வாளியில்லை"

என்ற இவ்வுண்மைகள் முறையே இராமாயணம், பாரதம், அரிச்சந்திரபுராணம் முதலிய காவியங்களின் மூலம் நன்கு விளங்குகின்றன அன்றோ? இப்பண்புகள் இக்காவியங்களில் ஒரு இடம் இரண்டு இடங்களிலன்றி ஒருவர் மூலமாக, இருவர் மூலமாகவன்றிப் பல வழிகளிலும் பலர் மூலமாகவும் காவிய முழுவதிலும் வெளிப்படுத்தப்படுவதை யாவருமறியலாம். ஒரு முத்து மாலையில் பல முத்துக்களையும் ஒன்று சேர்த்து அவற்றிற்குள்ளே ஊடுருவிச் செல்கின்ற நூலிழைபோன்றே பாவிகமாகிய பண்பும், பல பொருள்களையும் ஒன்று சேர்த்துக் காவிய முழுவதும் ஊடுருவிச்சென்று உத்தமப்பண்

பாகிய ஒரு முத்துமாலையை அளிக்கவல்லது என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்.

7. இக்காவியப்பண்பைச் சேர சிகாமணியாகிய இளங்கோவடிகளின் காவியத்திலிருந்து ஓர் உதாரணமூலம் விளக்குவோம். இளமையிலேயே துறவறத்தை மேற்கொண்டு தூயவுள்ளமும், பொது நோக்கமும் உடைய இளங்கோவடிகள், தம்மைச் சுற்றியுள்ள இயற்கைப்பொருள்களையும், மலை நாட்டு வளப்பத்தையும், மக்களது மனப்பான்மையையும், உலக இயல்புகளையும் பழக்கவழக்கங்களையும் இன்னோரன்ன பிறவற்றையும் பார்த்துப் பார்த்து வியப்பும், விம்மிதமும் எய்தித் தாம் கண்கூடாகக் கண்ட சில உத்தமப் பண்புகளை ஒரு காவியத்தின் மூலமாக ஏற்றமுறையில் வெளிப்படுத்திக் காட்டவேண்டுமென்று பேரவா வெய்தியிருந்தனர். உண்மையில் உலகத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் மூலமாகவே தன் குறிக்கோளை உலகத்துக்கு அறிவிக்கவேண்டிய ஆசிரியர் அதற்கு ஏற்ற சமயம் வாய்க்குமென்று ஒரு நற்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டே யிருந்தனர். தம் வாழ்நாள் கழியுமுன்னரே இப்பெருஞ் செயலைச் செய்துமுடிக்கவேண்டி, ஆசிரியர் இராப்பகலாகச் சிந்தித்து வருவாராயினர். பெருங்குடி வாணிகர் மரபிற் றோன்றிய கண்ணகி கோவலர் தம் இல்வாழ்க்கையும், அவர்கள் ஊழ்வினையாற் செல்வத்தை இழந்து, மதுரைக்குச் செல்ல, ஆண்டுக் கோவலன் கொலையுண்ண, கண்ணகி தன் கற்புடைமையால் மதுரையை எரித்துப் பின் மலைநாடு புக்குத் தெய்வமாகிய செய்தியும், ஆசிரியர்க்குத் தம் குறிக்கோள்களை உலகத்தோருக்கு ஒரு காவியத்தின் மூலம் வெளிப்படுத்த ஏற்ற உதாரணங்களா யமைந்தன. மலைநாட்டில் நிகழ்ந்த செயல்களைத் தன் தமையனை செங்குட்டுவனோடும் மலைவளம் பார்த்துக்கொண் டிருந்தபோது நேராகக் கண்ட இளங்கோ, கண்ணகி கோவலர்தம் முன்னையவரலாற்றை, உடனிருந்த செந்தமிழ்ப் புலவராகிய சாத்தனார் கூறக்கேட்டு அகமகிழ்ந்தனர்.

> "அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
> யானறிகுவனது பட்டதென் றுரைப்போன்"

என்று சிலப்பதிகாரப் பதிகம் சாத்தனார் கூற்றாக அமைக்கின்றது. இளங்கோ, வேண்மாளோடும் செங்குட்டுவனோடும், "இயைந் தொருங்கிருந்து" மலைவளங் கண்டபோது கண்ணகி கோவலர்தம் வரலாற்றை "மயக்கத்துக் கள்களிக் காதலோடிருந்த, தண்டமிழ் ஆசான் சாத்தன்", "ஒன்

டொடி மாதர்க் குற்றதை யெல்லாம், திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்'' என்று அரசர்க்குக் கூறியதாகக் காட்சிக் காதையாலும் அறிகின்றோம்.

8. அதைக்கேட்ட அடிகள், ''அரைசியல் பிழைத் தோர்க் கறங்கூற்றாவதூஉ, முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு, மூழ்வினையுருத்து வந்தூட்டு மென்பதூஉஞ், சூழ் வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரமென்னும் பெய ரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'' என்று சாத்தனாரைப் பார்த்துக் கூறினர். தாம் கொண்டிருந்த எண் ணம் நிறைவேறுவதற்குரிய காலமும் இடமும் அதுவே யென்று அவ்வரிய சந்தர்ப்பத்தைக் கைவிடாது ஏற்றுக் கொள்ள முன்வந்தார். தாம் கூறியதற்கு மறுமொழியாக, சாத்தனார்,

''முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது
அடிகள் நீரே யருளுக''………………

என்று கூறவே, இளங்கோவடிகள் தாமாகவே அன்னார் வர லாற்றைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் ஒரு காவிய மாகச் செய்து முடித்தார்.

9. இவ்வினிய காவியத்தில், காவியப் பண்புகளாகிய பல பாவிகங்கள் செறிந்துளவேனும்,

''அரைசியல் பிழைத்தோர்க் கறங் கூற்றாவதூஉ
முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉ''

மாகிய மூன்று பெரும் பண்புகளே முக்கியமாக ஆசிரியராற் கொள்ளப்படுகின்றன. இவற்றுள்ளும் நடுநாயகமாய் விளங்கு கின்ற ''புகழமைந்த கற்புடைமகளை மக்களே யன்றித் தேவரும் முனிவரும் முதலாகவுள்ளோர் சென்றேத்துதல் இயல்பு'' என்னும் பாவிகமாகிய பண்பு நூல் முழுவதும் பரந்து ஊடுருவிச் சென்று விளங்குமாறு ஆசிரியர் அமைத்தி ருக்கும் விதத்தை நோக்குவோம்.

10. உலகத்துமக்களாய்ப் பிறந்தோரை, விலங்குகளி னின்றும் வேறு பிரித்து, விலங்குகளினுஞ் சிறந்தோர் என்று எடுத்துக்காட்டுவன மக்கள்தம் பகுத்தறிவும் அன்னார்தம் ஒழுக்க மேம்பாடுமே யாம்.

''விலங்கொடு மக்கள் அனையர்
இலங்குநூற் கற்றாரோடு ஏனையவர்'',

''ஊணுடையெச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு'',

"குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

என்னும் குறள்கள், மக்களை மக்களாக்குவது அறிவு மிகுதியும் ஒழுக்க மேம்பாடுமே என்பதை நன்றாய் எடுத்துக் காட்டுகின்றன. இதையே சுற்புடைமை என்னும் வேறு பெயராலும் வழங்குவர். (தொடரும்)

வள்ளுவர் வன்சோல்

[திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார், எம். ஏ.,]

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ வன்சொல் வழங்குவது" என்று உரைத்த வள்ளுவர் எக்காலும் எவர்மாட்டும் இன்சொலே வழங்கியிருப்பர் என்று நினைத்தற்கிடமுண்டு அன்றோ? வள்ளுவர் வாழ்க்கையை ஐயமற யாமறியும் நிலையில் இருந்தாலன்றோ அன்னார் தம்மொடு பழகினார்க்கும் அல்லாதார்க்கும் இன்சொல் தந்து வந்தாரா அல்லரா என்ற பொருள்பற்றி ஆராயக்கூடும்? அதனை யறிய உதவும் கருவிகள் நமக்குக் கிட்டாத இக்காலத்திலே, அவர் பெற்றெடுத்த பிள்ளையைக் கேட்டறிதலே அமைவுடைத்து.

வள்ளுவர் எஞ்ஞான்றும் இன்சொலே உரைத்தார் என்று சொல்ல அவர்தம் பிள்ளை யிடந்தரவில்லையாயின் நாமென் செய்வது? "என் தந்தை 'பாவி' யென்றும், 'கூற்று' என்றும், 'மரம்' என்றும், 'பதடி' என்றும் சொல்லிச் சிலரைத் திட்டியிருக்கின்றார். யான் பொய் சொல்ல விரும்பவில்லை" என்று சொல்கின்றது அப்பிள்ளை. "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந்தற்று' எனமொழிந்த உம் முதல்வர் தாமே கூறிய "சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்ற சொல்லின் வாய்மையை நாட்டினர் போலும்!" என மடக்கினாலோ அப்பிள்ளை, ' "நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு' என்றும் 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்' என்றும் எங்கள் தந்தையார் நவின்றன அறியீர்போலும்" என்று விடையிறுத்து நம்மைத் தலைகுனியச் செய்யுமே என வுன்னி அவ்வினாவைக் கேட்கத் துணிவு பிறக்கின்றதில்லை. மேலும், "கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" என்று சொல்லியுள்ளமையாலே, இனிய கனிகள் உளவாகவும் சிலகால் கைக்குங் காயினை ஒரு பயன் கருதி உண்ணுதலும் உலகின்கண் நிகழ்வதுண்டு என்

பது பெறப்படாதோ? பெறப்படின் இனிய சொல் உளவாக வும் ஒரு பயன் கருதி வன்சொல் கூறுதலும் அமையும் என்று ஏற்படாதோ என்று வள்ளுவப் பயன் அறைந்துவிடுமோ என்று அஞ்சியும் அவ்வினுவைப்போட மனம் வருகிறதில்லை.

பின், பாவியென்றும், எமனென்றும் திட்ட வள்ளுவர் வாயெழுந்தது உண்மைதானு? மரம் என்றும் பதடி என் றும் மக்களை வைதுரைக்க அவரினிய நா இடந்தந்தது உண்மைதானு? ஆமென்றுரைக்குமாறு பணிக்கின்றனவே பின் வருவன:—

"இன்மை யென ஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்" (1042)

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்" (168)

"துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்குங் காடிக்குங் கூற்று" (1050)

"உரமொருவற் குள்ள வெறுக்கை; யஃதிலார்
மரம்மக்க ளாதலே வேறு" (600)

"மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்" (576)

"பயனில் சொற் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்" (196)

செல்வத்துப் பயனுகிய ஈதலைப் புரிந்து மறுமை யின்பத் தையும், துய்த்தலைச் செய்து இம்மை யின்பத்தையும் ஒருவன் அடைய முடியாதவாறு கெடுக்கும் கொடியவனுகிய நல்குர வைப் பாவியென்று கூறியது மிகையா? பற்பல துன்பங் களுக்கும் காரணமாய் நின்று, அறிவைக்கொன்று, ஈன்ற தாயாலும் தான் பிறனேபோல் நோக்கப்படுமாறு ஒருவனைச் செய்யும் நிரப்பு நெருப்பினுங் கொடியதாமேல், அதனைப் பாவியென உரைத்தல் பிழையோ? அன்றியும், செல்வம் பெற்றுள்ளவனைச் சார்ந்திருந்து அவனுக்குக் குழிதோண்டி வைத்து அவன்பால் அக்காளை (மூதேவியை)ச் செலுத்தும் அழுக்காற்றினையும் பாவியெனக்கூறல் கொடிதோ?

அன்றன்று. வள்ளுவர் நன்ருக ஊன்றி நோக்கித் தாம் கருதிய பொருளை வலியுறுத்தும் பொருட்டு இன்னோரன்ன சொற்களைச் சில இடங்களிற் பெய்தமைத்தார் என்று கொள்க. கூற்று, மரம், பதர் எனக் கூறப்பட்டவர் மக்கடம் முள் எவர் என்பதையும், எப்பொருட்டான் அவர் அங்ஙனம் கூறப்பட்டனர் என்பதையும் வள்ளுவப் பயனை உசாவி யறி வாராக. அவ்வழி உசாவினுராயின் வள்ளுவர் வன்சொல் பின்னர் இன்சொல் ஆவதை அறிவரென்பது திண்ணம்.

திரு. T. S. நடராஜ பிள்ளை அவர்கள் B.A.,B.L.


வரவேற்புரை*

இந்நாள் தமிழ்த் தாய்க்குப் பெரும் புகழைத் தருமோர் நன்னாளெனக் கருதுகின்றேன். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இதுபோன்ற ஓர் மாநாடு கூடுவதரிது. அக்காலை தமிழ்க்கூட்டமென்றால் நண்பரனைவரும் வெவ்வேறு அலுவல் காட்டி அகலுவர். கூட்டமும், ஆட்களின்றிப் பொலிவிழந்து தோன்றும். யாவராயினும், சற்றே உயரிய நடையிற் பேசுவாராயின், அவருடைய தமிழைக் கொடுந்தமிழென்று சொல்லி அவரை யாவரும் எள்ளி நகையாடுவர். இன்றோ, அவ்வாறின்றி இம்மண்டபம் பண்டைக்காலச் சிறப்பையெய்தி, உண்மையில் 'பன்னருங் கலைதெரி பட்டிமண்டப'மாய் விளங்குகின்றது. தமிழைப் பாராட்டி இலங்கை முதலிய பிற நாடுகளிலிருந்தும் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழின்பால் அவருக்குரிய ஆர்வத்தைக் காட்டி அவர் இங்குக் கூடியிருக்கின்றனர். தமிழ்த்தாயின் வயிற்றிற் பிறந்து எமக்கு உடன் பிறப்பாளர்களாகிய உங்கள் அனைவருக்கும் எனது முகமன் கூறி உங்களை வரவேற்கின்றேன். பெரியீர்! உமது வரவு நல்வரவாகுக!

நீவிர் கைக்கொண்ட காரியம் கவின்பெற முடியுமென்பதற்கு ஐயமே இல்லை. கல்வி கேள்விகளிற் றலைசிறந்து, பற்பல அரசத்துறையில் கைவன்மை பெற்று, இப்போது திருவாங்கூருக்கு அமைச்சராயுள்ள உயர் திருவாளர் ஸர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள் இம்மாநாட்டைத் திறந்துவைக்க ஒருப்பட்டதே நமக்கு வெற்றிபயக்கக் கூடியதற் கறிகுறி. இராமப் பேர் படைத்த பலருள், 'சி. பி' உலகறி அந்தணர். அவரது ஆங்கில வடமொழிப் பயிற்சிகள் அளவுகடந்தன. இப் பச்சையப்பன் கல்லூரிக் காப்பாளர் குழுவில் இவர் ஒரு முக்கிய உறுப்பினராயிருந்து, அதன் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டிருக்கின்றனர். இவர் இச்சமயம் இத் திருவிழாவில் உவப்புடன் கலந்து நமக்கோர் உற்சாகத்தை யூட்டினது, இவர் அமைச்சராய் வேற்றுத்தேயம் அகலினும், சென்னையையும், பழைய நட்பையுட், இந்நகரில் இவருக்குள்ள தொடர்பினையும் மறவாரென்று மதிக்க இடந் தருகின்றது.

நிற்க, ஆங்கிலத்திலும், தமிழிலும் பெரும்புலமை வாய்ந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரா யமர்ந்திருந்து, நமது தொன்னூற்களில் ஆராய்ச்சிகள் பல செய்து,

* இது 20-9-36-ல் சென்னை, பச்சையப்பன் மண்டபத்தில் கூடிய தமிழ்க் கலைச்சொல்லாக்க மாநாட்டின் போது நிகழ்த்தியதாகும்.



தி. சு. நடராஜ பிள்ளை, பி.ஏ., பி.எல்.,
தமிழ்க் கலைச் சொல்லாக்கன் மாநாடு
வரவேற்புக் கழகத் தலைவர்.

தமிழின் 'பழம்பணி புதுக்கியும், புதுப்பணி குயிற்றியும்' தம் புகழை நாடு முழுவதும் நாட்டியுள்ள நமது அவைத்தலைவர் சுவாமி விபுலானந்தர் இம்மாநாட்டிற்குத் தலைமை பூண்டதும், நமது காரியம் தடையின்றிச் செவ்வனே முடியுமென்பதற்குச் சான்றாகும். இவரோடு ஒத்துழைக்க உறுதிகொண்டு, தமது மெய்வருத்தம் பாராது, பற்பல ஊர்களிலிருந்து இங்கே கூடியுள்ள ஆன்றோர் பலருக்கும் எம்முடைய நன்றி உரித்தாகுக. இவர்களை வரவேற்க நாங்கள் செய்துள்ள ஏற்பாடுகள் எவ்வளவு குறைபாடுள்ளவைகளாயிருப்பினும், எம்முடைய அன்பின் பெருக்கை எண்ணி அவைகளைப் பொறுத்தருளுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நாம் மேற்கொண்டுள்ள பணியோ பெரியது. அதன் விரிவை நோக்கிச் சற்றே உளந்தடுமாறவும் இடமுண்டு. ஆயினும் கலைவல்லாரின் மிகுதியையும், அவருக்கு இத்தொழிலின்கண் ஏற்பட்டுள்ள ஊக்கத்தையும் எண்ணிப் பார்க்குமளவில், வேலை எளிதில் முடியுமென்று எண்ணுகின்றேன். இத்துறையில், பிறமொழிகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை நோக்கில், மிகப் பழமையான நம் தமிழ் மொழி மட்டும் பிற்பட்ட நிலையில் நிற்பது, நமக்கு மனப்புண்ணை யுண்டுபண்ணும். மேனுடுகளில் துருக்கியர் முதலானோரும் நமது நாட்டில் ஐதராபாத் நவாப்பும், இக்காரியத்தில் கருத்தைச் செலுத்தித் தமது மொழிகளில் பற்பல கலைச்சொற்களைச் சேர்த்து மொழிகளைப் பண்படுத்தி யவற்றை யுயர்பதவி யடையச் செய்திருக்கின்றனர். ஜப்பான் நாட்டிலும் மற்றைய ஊர்களிலும், புதிது புதிதாய்ச் சேர்க்கப்படுகின்ற வார்த்தைகளுக்குத் தக்க சொற்கள் அவரது மொழியிலும் உண்டாக்கப்படுகின்றன. நமது நாட்டில் தமிழ் அரசாங்க மொழியாய் இல்லாக் குறையாலே அது முன்னடைவதற்கு இயலாமல் இடர்ப்படுகின்றது. நீதி மன்றத்திலும் கல்லூரிகளிலும், அரசாங்கத்தைச் சேர்ந்த கச்சேரிகளிலும், தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டிய கட்டாயம் ஏற்படுமானல் தமிழ்மொழி வெகு எளிதில் ஓங்கி வளரும். தமிழ், வளர்ச்சி குன்றியிருப்பதை எண்ணுது பலர், வேறு புதுமொழிகளை நாட்டிற் புகுத்த வேண்டுமென முயல்கின்றனர். அது தாய் வறுமை வாய்ப்பட்டுத் தயங்க, பிள்ளை பலருக்கு ஆவின் நன்கொடை அளித்தது போலாம்! தென்னிந்தியர் வங்காளிகளைப்போல் மொழிப்பற்று உள்ளவர்களாகி, தமது ஒவ்வொரு நாளைய நடவடிக்கைகளிலும் ஆங்கிலம் முதலிய பிறமொழிகளை நீக்கித் தமிழிலேயே வார்த்தைசொல்ல உறுதி கொள்வாராகில், நம்மொழியும் விரைவில் வளரும்.

இனி, நாம் நம் வேலையை ஆரம்பிக்குமுன் சிற்சில பொதுத் தீர்மானங்களைச் செய்துமுடித்துக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் தமிழ்ச் சொற்களை யுண்டுபண்ண வேண்டுமா என்பது முதற் கேள்வி. சைகிள், (Cycle) மோட்டார் (Motor) என்றால் இன்ன வென்பதை நுண்மாண் நுழைபுலம் இல்லாப் பாமர னெவனும் எளிதில் அறிந்துகொள்கின்றான். அங்ஙனமாயின் அவற்றை வேறு தமிழ் மொழியிற் சொல்வது, அறிந்தபொரு ளொன்றை அறியாப் பொருள் கொண்டு விளக்குவது போலாகுமெனக் கூறுவர் சிலர். ஒவ்வொரு நாளும் பழகும் பொருட்கள் அவ்வாறு யாவருக்கும் விளங்கக்கூடும். ஆனது கொண்டு ஆங்கில வடிவிலேயே சொற்களை வைத்துக் கொள்வ தாயின் இம்மாநாட்டைக் கூட்டியிருக்க வேண்டா. துருக்கி யில் மொழிச்சீர்திருத்தத்தைப்பற்றிய மூன்றாவது மாநாடு இப்போது கூடினது; 1,58,304 தூய துருக்கியச் சொற்கள் திரட்டப்பட்டனவாம். அவற்றில் 20,000 சொற்களைத் துருக்கிய நிகண்டில் சேர்த்துக்கொண்டார்களென்பதும், 20,000 அரபிச் சொற்களையும், பாரசீகச் சொற்களையும் அந் நிகண்டிலிருந்து நீக்கிவிட்டார்களென்பதும் தெரியவருகிறது. அதோடு பாரசீக அரபிய எழுத்துக்களையும் நீக்கி, லாதின் (Latin) எழுத்துக்களைச் சேர்த்துக்கொண்டதாயும் அறி கிறோம். சொற்களிலும் தூய்மை வேண்டுமெனப் பாடுபடு மிந்நாளில் பிறமொழி வடிவுகளை வைத்துக் கொள்வது சிறந்ததாய்த் தோன்றவில்லை. உண்டாக்கப்படும் வேறு சொற்கள் புதுமையிற் சற்றே விபரீதமாய்த் தோன்றினும், நாளடைவில் அவைகளும் பழக்க வழக்கங்களுக்குட்பட்டுப் போம் என்பது திண்ணம். எவ்வாற்றானும் மொழிபெயர்க்க முடியாத சொற்களை ஆங்கில வடிவில் வைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததே.

தமிழ்ச்சொற்களை ஆக்குங்கால் வடமொழியைச் சேர்த் துக்கொள்ள வேண்டுமா வென்பது இரண்டாவது கேள்வி. "வளரும் மொழியைக் கட்டுப்படுத்தி, இயற்கையிற் பரிண மித்து விரியாவண்ணம் செய்வது அழகல்லவென்றும், அது மொழிக்கு எவ்வகையிலும் நன்மை பயக்காதென்றும்" கூறு வர் ஒரு சாரார். "தமிழ்த் தாய் வயிற்றிற் பிறந்த தெலுங் கும், மலையாளமும் வடமொழியைப் பெரிதும் ஏற்றுத் தம் முருமாறி நிற்கின்ற நிலையைக் கண்டபின்னும், அக்குற்ற முள்ள வழியை நாடி நிற்பதழகோ?" வென்பர் மற்றொரு சாரார். அரசாங்கத்தார் ஆக்கியுள்ள கலைச்சொற்களும் இதே பிழையுடைத் தென்பர் வேறொரு சாரார். உற்றுநோக்கு

மிடத்து, இடுகுறிப் பெயர் நீங்கலாகக் காரணப் பெயர்களாயுள்ள சொற்களுக்குத் தமிழிலும் கூடியவரை காரணப் பெயர்களைப் புனைந்தெழுதுதலே நலம். அவ்வாறு சிறு சொற்கள் அமையாவிடின், நீண்டதோர் தொடரை ஆக்குவதைவிட்டு, வடமொழியால் வார்த்தைகளை யாத்தல் நலம். இவ்விரு வழிகளும் நேர்படாவிடத்து, ஆங்கில மொழிகளையே தமிழில் எழுதுவது ஏற்புடையதாம். ஆங்கிலக் கட்டுரைகளில், லாதின், கிரீக் முதலிய மொழிகளிலிருந்து கொள்ளப்பட்ட சொற்களை நீக்கி, ஆங்கிலோ சாக்சன் என்று சொல்லப்படும் தூய ஆங்கிலச் சொற்களையே பிரயோகித்து எழுதப்படும் கட்டுரையே நடையிற் சிறந்ததென்று கொண்டாடப் படுகின்றது. அவ்வாறு எழுதப்படும் கட்டுரைகள் நடையழகும், சொன்னயமும் இன்னோசையும் உள்ளவை. நிற்க, நம் தமிழ் மொழியில் ஆங்கிலத்தில் இருப்பதுபோல்தொடர் மொழிகள் (Compound words) கிடையா. கருத்துக்களை முட்டுப்பாடின்றி எளிதில் வெளியிடுவதற்கு இத்தொடர்மொழிகள் நற்கருவிகளாகும். இக்கூட்டத்தில் இதையும் ஆய்ந்தறிந்து பயன் படுத்தல் நலம்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் சிலகலைச் சொற்களைத் திரட்டி வெளியிட்டதால் அவர்கள் தமிழிற்குச் செய்துள்ள தொண்டு மிகவும் பாராட்டத் தக்கது. அவர்கள் அதனை நிறைவுடையதொரு நூலென்று கூறவில்லை. அவர்களுக்கு முன் பலர் தமிழ்க் கலைச்சொற்களை யாக்க முயன்றிருக்கின்றனர். 1885-ம் ஆண்டிலேயே யாழ்ப்பாணத்து கிறித்தவப் பாதிரிமார் உடல் நூற்குரிய சொற்களை யாக்கியதாயும், மனோன்மணீயம் எழுதிய சுந்தரம் பிள்ளையவர்கள் நூற்றொகை விளக்கமென்றொன் றெழுதியதாகவும், சில வாண்டுகளுக்கு முன் 'தமிழர் நண்பன்' என்னுமோர் பத்திரிகையில் சிற்சில சொற்கள் வெளியிடப் பட்டதாயும் தெரிய வருகின்றது. அரசாங்கத்தாரும் சிலமொழிகளை யச்சிட்டிருக்கின்றார். இவையாவும் தனித்தனி வெளியிடப்பட்டமையாலும், எல்லாராலும் ஒப்பமுடித்து ஏற்றுக்கொள்ளப் படாமையாலும், அவைகள் செல்வாக்கை யிழந்தன. ஆதலால் நுண்ணிய அறிவுடைய நந் திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தார் சில சொற்களைத் தொகுத்து வெளியிட்டு, அவைகளை மாற்றவோ, வேறு மொழிகளைச் சேர்க்கவோ, தகுந்த வழிகளைக் காட்டித் தெருட்டுவார்க்குப் பரிசளிப்பதாய் வாக்குறுதி அளித்திருந்தார்கள். அதனோடு அமையாது, இப்போது இம் மாநாட்டைக் கூட்டி, தமிழ்ச்சொற்களை மீட்டும் ஆராய்ந்து திரட்டி, அரங்கேற்றிப் பொதுவாய்த் தமிழ் நாடு

முழுவதும் இச்சொற்களையே ஆளும்படி செய்ய முயன்றிருக்கின்றனர். ஆங்கிலத்தில் முதன் முதலில் அகராதியை ஆக்கிய டாக்டர் ஜான்சனுக்குரிய புகழும் பெருமையும் இவருக்கும் உரியனவாகுக. முதன் முதலில் அடிகோலிக் கட்டடம் எழுப்பியபின், அதனை அழகுபடப் புனைவதும், அதற்கு மேன் மாடங்கள் அமைப்பதும் எளிதாம். அதேபோல் இச்சொற்களும், நிலையாகி இம் மாநாட்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், இனிவரும் தமிழர் இதனைப் பெருக்கிப் பயனடையட்டும்.

இச்சொற்கள் பள்ளியிறுதித் தேர்வுக்குரிய மாணவர்க்குப் பயன்படுமாறு தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஆறுவது வகுப்புவரையில் தமிழ் மொழியிலேயே கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சிக்கு இது தக்க பக்கத் துணையாய் நிற்கும். ஆங்கில மொழிகளுக்கு நேரான தமிழ் மொழிகளின்றிப் பள்ளிப் பிள்ளைகட்குப் பாடமோதுதல் அரிது. ஆகவே இஃது அக்குறையை நீக்க வந்திருக்கின்றதென்று நாம் உவப்படையவேண்டும். ஆறுவது வகுப்புவரை நின்று விட்டதால் இச்சொற்கள், தத்துவ ஆராய்ச்சிக்குரிய மொழிகளை ஏற்று நிற்கவில்லை. அன்னோரன்ன சொற்களுக்கு வடமொழியிற் பல சொற்கள் ஏற்பட்டிருக்கின்றமையால், அச்சொற்களைத் தொகுத்தல் எளியதோர் பணியென்று எண்ணற் கிடமுண்டு. இம் மாநாடு அதையும் ஆராய்ந்து தீர்மானிக்குமென்று எண்ணுகின்றேன். அது மாகாணத் தமிழ்ச்சங்கத்தாரால் செய்யப்படாத புதியதோர் பணியாயினும், அதனை இக்கூட்டம் செய்து முடித்தால், பின் வருபவர்களுக்கு அது பயன்படுமாகையால், அவ்வேலையைப் புறக்கணிக்கக் கூடாதென்பது என் உள்ளக்கருத்து.

உடன் பிறப்பாளர்களே! இன்னும் என் புன்மொழிகளை யுமது செவியிற் புகுத்தி யும்மை யவலக் கவலையிற் படுத்த நான் விருப்பவில்லை. மீட்டுமோர் முறை உங்களனைவரையும் பெருமகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். சென்னையிற் பல ஏற்பாடுகளைச் செய்து இம்மாநாடு நடந்தேற வருந்தி யுழைத்த வரவேற்புக் கழகத்தாருக்கும், கண்ணுங் கருத்துமாய் இதைச் சிறப்பாக நடத்திவைக்கும்சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தாருக்கும், இம் மாநாடு சிறப்புற நடந்தேறப் பொருளுதவி செய்த பல பெரியோருக்கும், எம்முடன் ஒத்துழைத்த மாது சிரோமணிகள் பலருக்கும் நாம் நன்றி காட்டாவிடில், செய்ந் நன்றி கொன்ற பாவத்திற் குள்ளாவோம். இவர்கள் உவந்தளித்த மெய்ப்பாட்டாலும், பொருளுதவியாலும் இம்மாநாடு சிறப்புடன் நடைபெற ஏற்பட்டது. இவர் யாவருக்கும்

எமது வந்தனம் உரித்தாகுக. அன்புடைய மக்கள் பலரையும் பலதிக்கிற் போக்கித் தனியே கிடந்து துயருழந்த தமிழணங்கு, இன்று அனைவரையும் ஒருங்கே சேரப்பெற்ற பெருமிதத்தால் நகைமுகங் காட்டி மகிழ்வெய்தித்தோன்றும் நிலையை யுன்னி, இன்று முதல் அக்களிப்பு அவள் முகத்தை விட்டகலா வண்ணம் மக்களாகிய நாம் அவளுக்குச் செய்யுங் கடமைகளை ஒவாதென்று முளுற்றி, நம்மொழிக்கும், நம் நாட்டிற்கும், நமக்கும் பெருமைவரப் பெறுவோமாக!

தமிழ்க்கலைச் சொல்லாக்கன் மாநாடு

இலங்கை உயர் திரு. விபுலாநந்த சுவாமிகள்

தலைமையுரை

I

சென்னை மாகாணத் தமிழர் சங்கத்தாரது பெருமுயற்சியினாலே, பலப்பல அறிவுத்துறையிற் புலமை வாய்ந்தோரும், உயர்ந்த ஆராய்ச்சித் துறைகளில் முயன்றுழைப்போரும், இளைஞர்க்குரிய கல்வி பயிற்றும் சிறந்த தொழிலினை மேற்கொண்டோரும், தமிழ்மொழி வளர்ச்சியில் ஆர்வமிக்கோரும், கல்வி யிலாகா, பல்கலைக்கழகம் என்றித்தகைய அதிகார சபையாரால் அனுப்பப்பட்டோரும், பிறரும் ஈண்டுக் குழுமியிருக்கின்றனர். நவிலுந்தோறும் நூல்நயம் போலப் பயிலுந்தோறும் இனிமை பயக்கும் பண்புடையாளராகிய இப் பெருமக்களைக் காணுதலினாலே என்னுள்ளம் களிகூருகின்றது.

தமிழ்மொழி வளர்ச்சியைச் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு, இன்றைக்கு மூன்றாண்டுகட்கு முன்பு நிறுவப் பெற்ற சென்னை மாகாணத் தமிழர் சங்கமானது கலைச்சொல் லாக்கமென்னும் துறையிலே, சென்ற மூன்றாண்டுகளாக முயன்றுகொண் டிருக்கின்றது. இதுவரையும் செய்த வேலையை மதிப்பிட்டுத் திருத்தஞ் செய்தலும், இனி நடத்தற்குரிய இவையெனத் தீர்ப்பிட்டு முடிவு செய்தலும் இம்மா நாட்டின் நோக்கங்களாகும்.

மேனாட்டுத் தொடர்பு ஏற்பட்ட காலம் முதலாக அந் நாட்டினரது உயர்வுக்குக் காரணமா யிருக்கின்ற கலைத்துறைகளைத் தம் மொழிப்படுத்த வேண்டுமென்னும் ஆர்வம் இந்திய

மக்களிடையே இருந்துவருகின்றது. தொன்றுதொட்டுத் தமக்கு உரிமையாக வருகின்ற உண்மை நூல்களின் நிறைவையும் குறைவையும் நன்குணர்ந்த கலைவல்லுநர், குறைவாய துறைகளை நிறைவு செய்யும் வழிகளைத் தேடிநிற்பது இயல்பேயாம். அஃதன்றியும் கலைத்துறைகள் காலதேச விகற்பங்களால் வேறுபடாது எந்நாட்டினருக்கும் எக்காலத்தும் வேண்டப்படுவ வாதலின், அவை உலகிற்குரிய பொதுவுடைமைகளாகக் கொள்ளும் தகுதி வாய்ந்தன. மேலும் இந்நாட்டின் கல்வி முறை இங்குள்ள பல்கலைக் கழகங்களை அநுசரித்து ஒழுங்கு செய்யப்படுவது. இற்றைக்கு ஏறக்குறைய எண்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற சென்னைச் சர்வகலாசாலையின் விதிகளுக்கிணங்கக் கல்விகற்றுத் தேறிய அறிஞர்களே இந்நாளிற் கலைத்துறைகளிலும் அரசியற் றுறைகளிலும் முன்னின்று இந்நாட்டின் நிர்வாகங்களை நடத்தி வருகின்றனர். இவர் தாம் பயின்ற மேற்றிசைக் கலைத்துறைகளின் சிறப்பினை யுணர்ந்து அவை எப்பாலாரிடத்தும் பரவவேண்டுமென விழைந்து நிற்பது முறையேயாம்.

II

"சையன்ஸ்" என்னும் ஆங்கில மொழி ஒருவாறு நோக்குமிடத்து அறிவுத்துறை யனைத்தினையும் குறிக்குமெனினும், "நிலந் தீ நீர் வளி விசும்போடைந்துங் கலந்த மயக்கமாகிய" உலகத்திற் பொறியுணர்வாற் சுட்டியுணரப்படுபவற்றை அளந்தும் இனங்கூட்டியும் ஆராய்கின்ற பூதபௌதிக நூற்றுறைகளே "சையன்ஸ்" என்னும் மொழியாற் சிறப்பாகக் குறியீடு செய்யப்படுகின்றன. அஃது அப்பரிசாக அமைந்ததெனினும், அறநூல், பொருணூல், இன்பநூல், வீட்டுநூல் என வழங்கும் பாகுபாட்டினோடு Faculty, Laws, Science, Arts, Divinity என நாற்பாற்படுத்தி யமைத்த மேனாட்டு மரபினை ஒப்பவைத்து நோக்கும்போது "சையன்ஸ்" என்னும் மொழி பொருட்பா லனைத்தினையுங் குறியீடு செய்வதெனக் கொள்ளுதலும் ஒருதலை. அளத்தலும், இனங்கூட்டுதலும், வரையறை செய்தலும், பொதுமை காண்டலும், இலக்கணங் கூறலும் என்றிவை யனைத்தும் கலைத்துறையனைத்தினுக்கும் ஏற்பட்டவாதலின், தனித்தனித்துறைகளை ஆராய்ந்து அவை தமக்கு வேண்டிய சொற்களை அமைத்துக் கொள்ளுமுன் கலைத்துறை யனைத்தினுக்கும் பொதுவாக வேண்டப்படுவவாகிய சொற்களை ஆக்கிக்கொள்ளுதல் நலமாகும். கலைத்

துறைகள் இவை என வகுத்துக்காட்டுவதும், கலைவல்லுந ராகிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியது மாகிய "நாற்ருெகை விளக்கம்" என்னும் நூல் சூத்திரமும் உரையுமாக வமைந்து சிறந்த முடிபுகள் பலவற்றைத் தெளிவு பெற எடுத்துக் காட்டுகின்றது. புத்தம் புதிய கலைகளை இயற்றும் முயற்சியி லீடுபடுவோருக்கு இந்நூல் இன்றியமை யாத கருவியாகும்.

III

தமிழ் மொழியிலே ஆட்சியிலிருக்கும் சொற்களை ஆராய்ந்து கண்டறிதல் நாம் செய்தற்குரிய முதற்பணியாகும். "வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழிக்கும் இலக்க ணம் ஒன்றேயென்றே யெண்ணுக" என்னும் கூற்றினை நாம் முற்றிலும் ஒப்புக்கொள்ளாவிடினும், வடமொழியிலிருந் தெடுத்துத் தமிழான்ருேராலே தமிழுருவாக்கி வழங்கப்பட்ட சொற்களைப் பிறமொழிச் சொற்களெனக் கடிந்தொதுக்குதல் மேற்கொள்ளாது அவைதம்மை ஆக்கத் தமிழ்மொழியாகத் தழுவிக் கொள்வதே முறையாகும். இமயம்முதற் குமரி வரையும் பரந்து கிடக்கும் பரதகண்டமெனும் பெரு நிலப் பரப்பின் அறிவுச்செல்வம் பிளவுபடாத ஒன்றேயாம் என் பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. சாதி சமய வேறு பாடின்றி இந்திய நாட்டுப் பேரறிஞர் கலைத்துறையிலே ஆழப் புகுந்து ஆராய்ந்து கண்ட சிறந்த முடிபுகளை வடமொழியி லெழுதும் வழக்கம் தொன்றுதொட்டு இந்த நாட்டிலே யிருந்துவருகிறது. இதனுல் வழக்கு மொழிகள் கலைத்துறை களிலே பெருக்கமடையாது ஒழிந்தன. உதாரணமாகச் சிற் பக்கலையினை எடுத்துக்கொள்வோம். தேவர் கோட்டம், மன் னன் கோயில், மக்களில்லம் என்னுமிவை தம்மை யமைக்கும் முறைகளையும், தெய்வச் சிலையுருவங்களை யமைக்கும் கணித நுட்பங்களையும் பண்டைத் தமிழர் நன்குணர்ந்திருந்தன ரென்பதற்குத் தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்களே சான்று பகருகின்றன. இவை தம்மை யமைக்கும் ஆற்றல் வாய்ந்த சிற்பியர் தமிழ் நாட்டில் இன்றும் உளர். அங்ஙன மாயினும் இக்கலை நுட்பங்க ளனைத்தினையும் உணர்த்தும் ஆகம நூல்கள் வடமொழியிலேதான் எழுதப்பட்டிருக்கின் றன. இவை தம்மை வழக்கு மொழிகளிலே பெயர்த்தெழுது தல் சாலவும் வாய்ப்புடைத்து. இம்முயற்சியிலே வடமொழி வல்ல தமிழறிஞர் இனிமேலாவது ஈடுபடுவாராக.

IV

சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகமாகிய நான்கு சாத்திரங்களிலும் கலைநூலுணர்ச்சிக்கு வேண்டிய பொருள் மலிந்து கிடக்கின்றது. பாரதநாடு செய்த அருந்தவப்பயனுகத் தோன்றிய சுவாமி விவேகாநந்தரியற்றிய இராஜயோக நூலினை மொழிபெயர்க்குந் தொழிலில் யான் ஈடுபட்டிருந்த காலத்திலே யோக சாத்திரத்திற்கு முதனூலாகிய பதஞ்சலி யோக சூத்திர நூலினைத் தமிழில் மொழிபெயர்த்தெழுத நேரிட்டது. அம்மொழி பெயர்ப்பு சுவாமி விவேகாநந்தரியற்றிய நூல்களின் தமிழ் மொழி பெயர்ப்பாகிய "விவேகாநந்த ஞானதீப" முதற்றொகுதியிலே வெளியிடப்பட்டிருக்கிறது. அதனைப் படித்த அன்பர் பலர் மிகவுயர்ந்த நுண்ணிய கருத்துக்களைத் தூய தமிழிலே எழுதுதல் கூடும் என்னும் முடிபிற்கு வந்தனர். நியாய வைசேடிக நூல்களையும் மொழிபெயர்த்தெழுத முயன்றேன். ஓய்வு ஏற்படாமையால் அம்முயற்சி நிறைவு பெற்றிலது.

ஓரோவிடத்து ஆட்சிப்பட்ட வடமொழிப் பதங்களைத் தமிழில் வழங்குதல் குற்றமாகாது. பிங்கலந்தை, திவாகரம், சூடாமணி நிகண்டு என்னும் நிகண்டுகளிலே வந்த பதங்களையெடுத்தாள்வது எவ்வாற்றானும் பொருத்த முடையதாகும். சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய உண்மை நூல்களில் வழங்கிய வடமொழிப் பதங்கள் ஆன்றோர் வழக்காதலின் எம்மால் உவந்தேற்றுக் கொள்ளப்படுவனவேயாம். சித்தர் நூல், வைத்திய நூல், சோதிட நூல் என்னும் இவை தம்முள்ளும் தலையாயினாரியற்றிய நூலில் வரும் மொழிகளில் தமிழில் வழங்குதற் குரியவேயாம். இவையெல்லாம் புதுச் சொல்லாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

சொற்களைப் பொருள் பற்றுக்கோடாக வகைப்படுத்தி வழங்க முயன்ற நிகண்டு நூல்கள் புதுச் சொல்லாக்கத்திற்குப் பேருதவி புரிவன. டாக்டர் றோஜெட் என்பார் ஆங்கில மொழியிலியற்றிய "தெசாறுஸ்" என்னும் நிகண்டு நூலினை நோக்குவாருக்கு இவ்வுண்மை நன்கு புலப்படும். கலைச் சொல்லாக்கத்திற்கென வடமொழி, ஆங்கில மொழி, தமிழ் மொழியாகிய மும்மொழியினும் பொருட்பாகுபாடு செய்யும் ஒரு மும்மொழி நிகண்டினை வகுத்தமைத்தல் பெரும்பயன் றருவதாகும்.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

தமிழ்க்கலைச் சொல்லாக்கன் மாநாடு

இம்மாநாடு 20-9-36 ஞாயிற்றுக்கிழமை சென்னைப் பச்சையப்பன் காலேஜ் மண்டபத்தில் திருநெல்வேலி, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளை, திருவாளர் S. வையாபுரிப் பிள்ளை, திரு. R. P. சேதுப்பிள்ளை, திரு. S. இராமசாமி ஐயர் (கொழும்பு), திரு. K. C. வீரராகவையர், K. தெய்வசிகாமணி முதலியார், திரு. G. A. நடேசன், திருமதி அலர்மேன் மங்கைத் தாயாரம்மாள், திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார், திரு. க. ப. சந்தோஷம் முதலியோர் வந்திருந்தனர். திருவாங்கூர் திவான் ஸர். சி. பி. இராமசுவாமி ஐயரவர்கள், தமிழ்மொழி தென்னாட்டில் மிகச்சிறந்த பழமையான மொழி என்றும், அதில் மேனாட்டுக் கலைகள் எல்லாம் மொழிபெயர்த்து அமைப்பது எளிதே என்றும், புதிய சொற்களைத் தேடியமைத்தும், ஆக்கியும் மொழியை வளம்படுத்துவது இக்காலத்துக்கு இன்றியமையாததாகுமென்றும், வடமொழி தமிழிலிருந்து சில சொற்களைக் கடன் வாங்கி இருக்கிறதென்றும், அதேபோல் தமிழ்மொழியும், வடமொழியிலிருந்து கடன் வாங்கியிருக்கிறதென்றும், தமிழில் சொல் அமைக்க வாயாதபோது தகுதியான வடசொல்லை அமைத்துக்கொள்ளுதலே சால்புடைத்தாகுமென்றும் பேசி மாநாட்டைத் திறந்து வைத்தார்கள்.

பிறகு வரவேற்புக் கழகத்தலைவர் திருவாளர் T. S நடராஜ பிள்ளை அவர்கள் வரவேற்புரையைப் படித்தார்கள். அஃது இப்பரலின்கண் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன்பின் திருவாளர்கள் S. சச்சிதானந்தம் பிள்ளை, டாக்டர் P. வரதராஜலு நாயுடு, S இராமசுவாமி ஐயர். அருள் தங்கையா முதலியோர் தலைவரவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசித் தலைமை தாங்குமாறு வேண்டிக்கொண்டபடி உயர்திரு. சுவாமி விபுலாநந்தரவர்கள் தலைவராய் எழுந்தருளினார்கள். அவர்கள் தலைமையுரையினொருபகுதியை இப்பரலில் வெளியிட்டிருக்கின்றோம். அதன்பின் கலைச்சொற்களை ஆய்ந்து திருத்தியமைப்பதற்கு மூன்று உட்கழகங்கள் அமைக்கப்பெற்றன. பின்னர்க் கூட்டம் கலைந்தது.

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க மூன்றுவது மாநாடு

இம்மாநாட்டின் விழா 27-9-36 ஞாயிற்றுக்கிழமை சென்னைப் பச்சையப்பன் காலேஜ் மண்டபத்தில் திருவாளர் K. தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தலைமையில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது.

வித்துவான்கள் முன்னேற்றத்துக்குரிய தீர்மானங்கள் சில நிறைவேற்றப் பட்டபின் தேர்தல் நடைபெற்றது. அதன் பின் கூட்டம் கலைந்தது.

குறிப்பு: தமிழ்க் கலைசசொற்களை இரண்டாம் முறை அச்சிடுவதற்குள் பொருள் உதவுவார் அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி என்றனுப்புக.

மதிப்புரை.

"தமிழைப் பிழையின்றி எழுதும் முறை"
(How to write Correct Tamil)

இஃது உயர்தரக் கல்விச் சாலைகளுக்கு மிகவும் பயனுள்ளது. இதனை ஆக்கியுதவிய சென்னைப் பச்சையப்பன் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் ஆ. வீ. கன்னைய நாயுடு அவர்கட்குத் தமிழுலகம் பெரிதுங் கடப்பாடுடையது. நம் தமிழ் மக்களில் பெரும்பாலார்க்குத் தமிழைப் பிழையின்றி எழுதத் தெரியாது என்பது யாவருமறிந்ததே. மாணவர்கள் கட்டுரைகள் எழுதுவதில் ஏராளமான பிழை. தமிழ்மக்கள் கடிதங்கள் எழுதுவதில் பிழை; தட்டுமுட்டுச் சாமான்கள், உணவுப்பொருள்கள் முதலியவற்றை எழுதுவதில் பிழை; திருமண வழைப்பு, காதுகுத்து அழைப்பு முதலிய அழைப்புகள் அச்சிடுவதில் பிழை; வண்ணான் கணக்கு எழுதுவதிலும் பிழை; விளம்பரங்கள் எழுதுவதிலும் பிழை; எங்கே பார்த்தாலும் பிழைகளைத்தான் பார்க்கலாம். இவ்வாறு ஆங்கிலம் எழுதுகிறவர்கள் பிழைகள் போடுவதில்லை. மாணவர்கள் நூல்களைப் படிக்கிறபோது சொற்களிற் கருத்தைச் செலுத்துவதில்லை. அதனால் தாம் படித்தசொற்களை எழுதுகிறபோது பிழையின்றி எழுதத் தெரிகின்றார்களில்லை. தமிழ்ச்சொற்களில் றகர ரகர வேறுபாடுகளாலும், லகர ளகர வேறுபாடுகளாலும் பொருளே மாறுபட்டுவிடும். கூடியவரை பிழையில்லாமல் எழுதுவதற்கு ஓராசிரியனாய் இந்நூல் உதவும்.

இதன்விலை அணா 8.

குறிப்பு: இது நம் கழகத்திலும், ஆசிரியரிடத்திலும் கிடைக்கப் பெறும்.



திருநெல்வேலி, இந்துகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்
பேராசிரியராயிருந்து காலஞ்சென்றவரும்
அறிவுரைத்திரட்டு ஆசிரியருமாகிய

தி. பா. சிவராம பிள்ளையவர்கள்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] தாது—ஐப்பசி [பரல்-ரு

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

திருச்சாய்க்காடு

மங்குறோய் மணிமாட மதிதவழு நெடுவீதிச்
சங்கெலாங் கரைபொருது திரைபுலம்புஞ் சாய்க்காட்டான்
கொங்குலா வரிவண்டி னிசைபாடு மலர்க்கொன்றைத்
தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே.

பதவுரை :—

மதிதவழும்—திங்கள் தவழும்படியாகவும்,

மங்குல்தோய்—மேகந் தொடும்படியாகவும்,

மணிமாட நெடுவீதி—(அவ்வளவு உயரமாயுள்ள) அழகிய வீடுகள் (இரு பக்கங்களிலும் நெருங்கியிருக்கின்ற) நீண்ட தெருக்களை உடையதாயும்,

திரை—அலைகள்

சங்கு எல்லாம் கரைபொருது புலம்பும்—சங்குகளை யெல்லாம் கரையில் மோதி ஒலிசெய்கிற (கடலருகிலுள்ளதாயுமிருக்கிற),

திருச்சாய்க்காட்டான்—திருச்சாய்க்காட்டில் வீற்றிருக்கிறவனும்,

வரிவண்டின் இசைபாடும்—வரிகளையுடைய வண்டுகள் இசையோடு பாடுகின்ற,

கொங்குஉலா கொன்றை மலர்த்தொங்கலான்—மணம்பொருந்திய கொன்றைமாலைகளை அணிந்திருக்கிறவனுமாயுள்ள சிவபெருமானுடைய

அடியார்க்கு—அடியார்களுக்கு,

சுவர்க்கங்கள்—துறக்க உலக இன்பங்கள்,

பொருளல—தாங்கள் அடையவிரும்பும் பொருள்களல்ல.

விளக்கவுரை :—

சங்கு எல்லாம் கரை பொருது திரைபுலம்பும்—புலம்பும் என்ற சொல்லுக்குப்பின் கடல் என்ற சொல்லை வருவித்துப் பொருளாக்கப்பட்டது ; சொல்லெச்சம்.

பொருதல்—மோதல்.

சுவர்க்கங்கள்—சுவர்க்கம் என்பது துறக்க உலகம். அஃது இங்கே ஆகுபெயராய்த் துறக்க உலக இன்பங்களைக் குறிக்கின்றது. துறக்க உலகத்தில் உயிர்கள் நுகரும் இன்பங்கள் தாம் தாம் செய்த பலவகைப் புண்ணியங்களுக்குத் தக்கவாறு இருத்தலால் 'சுவர்க்கங்கள்' என அடிகள் பன்மையிற் கூறினார்.

என்றும் நிலையாயுள்ள சிவபோகம் அடையக்கருதும் சிவனடியார்களுக்கு சில காலத்தில் அழிவனவாகிய சுவர்க்க போகங்கள் விரும்பத்தக்க பொருள்களல்ல. ஆதலின் 'பொருளலவே' என்றார். ஏ-அசை.

அடியார்களுக்குத் துறக்க உலக இன்பங்கள் தாம் அடைய விரும்பும் பொருள்களல்ல என்றதனால் துன்பங்களோடு கூடிய உலக இன்பங்கள், பொருள்கள் அல்ல என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்பாட்டில் சிவனடியார்கள் விரும்பத்தக்கது சிவபோகம் ஒன்றே என்பது கூறப்பட்டது.

— மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

சித்திரக்குள்ளன்

"உலகத்திலேயே மிக்க குள்ளமான மனிதன் துருக்கி வம்சத்தானான ஹுசேன் பே என்பவன். இவன் 14 அங்குலம் உயரமுள்ளவன் ; வயது 36." ('விடுதலை')

புதுக் கவிகள்-Original Poetry

தமிழர் கடமை

[கொடுமுடி வித்வான் பெ. கோவிந்தன் அவர்கள்]

உண்ணுமுண வாடையிடம் உணர்வுதவும்
உதவியேமே லுதவி ; நன்றி
எண்ணியொன்றுக் கெழுநூறும் இயற்றுஞ்செந்
தமிழ் நாட்டீர் ! இசையின் மிக்கீர் !
தண்ணளியோ டவையுதவுந் தமிழ்த்தாய்க்கும்
நாட்டினுக்குந் தலைமை சான்ற
பண்ணமரும் பாமாலை பூமாலை
பலசூட்டிப் பணிகு வீரே. (1)

வெள்ளநெருப் பரசுபகை கள்வர்களால்
பொருட் செல்வம் வீயும் ; மாசு
தள்ளியுயிர்க் குறுதிகொளுந் தமிழ்நாட்டீர் !
தண்ணளியுஞ் சால்பும் மிக்கீர் !
கொள்ளுகின்றார்க் கெந்நாளுங் கொடுக்கின்ற
தமிழ்த்தாயைக் குறுகி உள்ளக்
கள்ளமறுத் தெழுமைக்கு முதவுங்கல்
விச்செல்வங் கைக்கொள் வீரே. (2)

அணியழகும் உடையழகும் உறுப்பழகும்
அழகாகா ; அழகு மிக்குப்
புணர்பொருள்கண் டுவப்பெய்துந் தமிழ்நாட்டீர் !
மாசகத்தும் புறத்து மில்லீர் !
பணமுடைய மாந்தர்களும் உறுப்புநலம்
படைத்தோரும் பணிந்து நோக்கும்
அணியமருந் தமிழ்க்கல்வி அழகுடைய
ராய்ப்புகழும் அடைந்து வாழ்மின். (3)

ஒன்றினேடொன் றெவ்வாத அறுசுவையும்
நோய்செய்யும்; உறுநோ யின்றி
என்றுமிவண் உயிர்வாழ எண்ணுஞ்செந்
தமிழ்நாட்டீர்! ஏத மில்லீர்!
தொன்றுதொட்டிங் கொன்றிவரும் உள்நோயைக்
கெடுத்துயிரைத் தூய்மை செய்யும்
தென்றமிழ்த்தே னுண்டுண்டு தெளிவெய்திச்
செம்மாந்து திரிகு வீரே. (4)

பொன்றாத பொருளில்லை புகழொன்றே
நின்றுலவும்; புவியின் மீதே
குன்றாத புகழ்வாய்ந்த தமிழ்நாட்டீர்!
அருள்மிகுந்த குடியில் வந்தீர்!
நன்றாகுந் தொண்டுபல தமிழ்த்தாய்க்கும்
நாட்டினுக்கும் நாளுஞ் செய்து
பொன்றாத புகழ்நிலவப் புலவர்களால்
புகழ்மாலை புனைவிப் பீரே. (5)

உறுப்பொத்த லால்மக்க ளாகின்ருர்
என்றுரையா துலகம்; பண்பின்
சிறப்பியல்பால் பொருட்குயர்வு தெரியுஞ்செந்
தமிழ்நாட்டீர்! செம்மை சான்றீர்!
அறத்திறனல் பொருள்தேடி அன்பாலின்
பந்துய்க்க அரிய கல்வி
பெறற்குரிய கேள்விகளால் செந்தமிழ்நூ
லறிவெய்திப் பெரிய ராமின். (6)

பெரியவரைப் பேணமை பேதைமையிற்
பேதைமையாம்; பெரியார் தங்கட்
கரியபல தொண்டுசெயுந் தமிழ்நாட்டீர்!
அறிவொழுக்கம் ஆற்றல் மிக்கீர்!
தெரியவரும் அறிஞர்களுக் கறிவுமுர
வோர்க்குரமும் செல்வர்க் காக்கம்
வருநெறியுந் தெரிவிக்குந் தமிழ்க்கன்னி
நெறிப்பட்டு வாழ்க்கை செய்மின். (7)

வானுலகம் நிலவுலக வாழ்க்கைமாண்
பாலாகும் ; மானம் நீங்கின்
ஊனுடலோ டுயிர்வாழ்தற் கிசையாத
தமிழ்நாட்டீர் ! ஒழுக்கம் மிக்கீர் !
தேனனைய மொழியால்நன் னெறிகாட்டுந்
தமிழ்த்தாய்க்குச் சிறுமை தோன்றின்
மானநமக் கழியாதோ வானுலகம்
புகுவீரோ மானங் காமின். (8)

பிள்ளைகளுக் குயர்தெய்வம் பெற்றெடுத்த
தாயரென்பர் ; பெற்ற தாயர்
உள்ளமகிழ் வுறத்தொண்டும் உதவியுஞ்செய்
தமிழ்நாட்டீர் ; ஊக்கம் மிக்கீர் !
தெள்ளமுத மனையமொழித் தமிழ்த்தாயை
வணங்காமை தீமை யாகும்.
கள்ளமிகும் பகைவர்செயும் இடர்க்குளகப்
படுத்தாமல் காவல் செய்மின். (9)

வேற்றுமையால் சிறுபயனும் விளையாது ;
வேற்றுமையை விரும்பிப் பூசல்
ஆற்றஇசை யாதடங்குந் தமிழ்நாட்டீர் !
ஆண்மையுநல் லறிவும் மிக்கீர் !
ஏற்றமிகும் வண்ணமழ கணியமரும்
தமிழ்த்தாயின் இசையைப் பாரின்
நாற்றிசையும் ஏற்கும்வணம் ஒற்றுமையால்
வள்ளுவர்போல் நவிலு வீரே. (10)

இருநூறுண்டு சென்ற பெரியார்

இமயமலைக் குகைகளொன்றில் வாழும் சமாதிநாதர் என்ற பெரியார் இலண்டனில் நடக்கப்போகிற முடிசூட்டு விழாவிற்குப்போக எண்ணியுள்ளாராம். அவருக்கு வயது 200 ஆகிவிட்டதாம். உலகில் வழங்கும் எல்லா மொழிகளிலும் அவருக்குப் பயிற்சியுண்டாம்.

—"லோகோபகாரி"

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

வடசொல்லென மயங்குந் தொல்காப்பியத் தென்சொற்கள்

[பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்]

1. படிமை.

உலகத்திலுள்ள மக்களெல்லாம் ஒருதாய் வயிற்றின ரென்று சரித்திர ஆராய்ச்சியால் தெளிவாகின்றது. தமிழர், தெலுங்கர், கருநடர், மலையாளர், துளுவர் முதலிய திராவிட வகுப்பினரெல்லாம் எங்ஙனம் ஒரு காலத்தில் ஒரு வகுப்பின ராயிருந்தனரோ, அங்ஙனமே துரேனியர், சேமியர், ஆரியர் என்னும் முப்பெருங்கிளையினரும் ஒரு காலத்தில் ஒரே வகுப் பினராயிருந்திருக்கின்றனர். மக்கள் வகுப்புத் திரியத் திரிய அவர்கள் மொழியுந் திரிந்துகொண்டே வந்திருக்கின்றது. படைப்புக் காலந்தொட்டு ஒரு வகுப்பார் பிறவகுப்பாருடன் கலவாது பிரிந்திருந்தாலொழிய அவர்கள் மொழி தனிமொழி யாயிருத்தல் எட்டுணையும் கூடாதாகும். பெற்றோர் மொழி களையே பிள்ளைகளும் பேசுகின்றனர். உறவினரெல்லாம் ஒரு மொழியே பேசுதல் இயல்பு. ஆகவே இயைபுடைய வகுப் பினரெல்லாம் இயைபுடைய மொழிகளையே பேசல் வேண்டும் சமஸ்கிருத ஆரியர் மூவகை மொழிகளும் கலக்கின்ற மேலை யாசியாவின் வடபுறத்தில் ஆதியிற் குடியிருந்தனர். அங் கிருந்து அவர்கள் வடஇந்தியாவிற்கு வருமுன்னரே அவர்கள் மொழியில் பிறமொழிச் சொற்கள் எண்ணிறந்தன கலந்துவிட் டன. ஆரிய வருகைப்போது இந்து தேய முழுதும் வழங்கி வந்தவை திருந்தினவும் திருந்தாதனவுமான திராவிட மொழி களே. ஆரியர்கள் வடஇந்தியாவிலிருக்கும்போது பல திரா விடச் சொற்களும் தென்னாட்டிற் குடியேறிய பின் வேறு பல திராவிடச் சொற்களும் சமஸ்கிருதத்திற் கலந்துவிட் டன. தமிழ்க்கல்வி தலைதாழ்த்துச் சரித்திர அறிவும் மொழி நூலாராய்ச்சியும் இல்லாத இடைக்காலத்து, சமஸ்கிருதமே இந்தியமொழிகட்கெல்லாம் தாய் என்னுமோர் படிற்றுரை தமிழ்ப் பகைஞரால் தமிழ் நாட்டிலும் பரப்பப்பட்டது. சமஸ்கிருத அகராதியிலுள்ள சொற்களெல்லாம் சமஸ்கிரு தமே யென்னுங் குருட்டு நம்பிக்கை தமிழருள்ளத்திலும்

குடிகொண்டது. மேனாட்டுக் கலைச்சுடர் மேம்பட்டுத் திக ழும் இக்காலத்துங்கூடப் பல தூய தென்சொற்களை வடசொல் லென மயங்குகின்றனர் பேரறிஞராயினோரும். தமிழ், உலகத் தாய்மொழியின் இயற்கை வடிவும் சமஸ்கிருதம் அதன் செயற்கை வடிவுமாதலின், அவ்விருமொழிக்கும் பொதுவான சொற்களுள், தமிழில் மூலப்பொருள் தருவனவெல்லாம் தமிழென்றே பெரும்பாலுங் கொள்ளற்பாலன. சமஸ்கிரு தம் என்னும் பெயரே 'நன்றாய்ச் செய்யப்பட்டது' என்று பொருள்படுதலின் சமஸ்கிருதத்தின் செயற்கையை யுணர்த்தும்.

தமிழிற் பிற்காலத்து வடசொற்கள் பெரிதுங் கலந்திருப் பினும் பண்டைத்தமிழ் நூல்கள் அத்துணைக் கலப்பினவல்ல. காலத்திற் பின்னோக்கிச் செல்லச் செல்லத் தமிழ் நூல்களில் வடசொல் வழக்கு அருகிக்கொண்டே செல்லும். இற்றை முழுத்தமிழ் நூல்களுள் முன்னையது தொல்காப்பியமாதலின் அதில் வந்துள்ள வடசொற்கள் ஆசை, வைசியர் போன்ற ஐந்தாறேயாகும். வடசொல்லென மயங்கும் அதன் பிற சொற்களெல்லாம் தூய தென்சொல்லே யாதல் வெள்ளிடை மலை. ஆயினும் ஆராய்ச்சி யில்லார்க்கு அறிவிப்பான் வேண்டி அவற்றை முறையே ஒவ்வொன்றுயெடுத்து மொழிநூற்படி விளக்குவாம்.

படிமை :

"பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

(தொல். பாயிரம்)

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய"

(தொல். அகம். 30)

படிமை என்னுஞ் சொல் படி என்னும் வினையடியாகப் பிறந்தது. படி என்பது படு என்பதன் மறுவடிவம். இவ்விரண் டும் பட் என்னும் ஒலிக்குறிப்பினின்றும் தோன்றியவை.

படுதல்=படிதல்=i. வீழ்தல். ii. ஒலித்தல்.

வீழ்தற்பொருளின் அடிப்படையாகப் படி என்பதனின் றும் பல கருத்துக்களும் சொற்களும் பிறக்கும்.

படிதல்=1. விழுதல்: கீழ்த்தங்கல், நிலைபெறுதல். பழகுதல், பேசி முடிவாதல். (உ-ம்.) விலை படிந்தது.

2. விழுதல்—ஒருவரின் அடிவணங்கல், அடிப்படுதல், கீழ்ப்படிதல், தாழ்மையாயிருத்தல்.

3. விழுதல்: சாய்ந்து அல்லது மடங்கி விழுதல், நிலத்தில் அல்லது உடம்பிற் படுதல்.

(உ-ம்.) பயிர் நிலத்திற் படிந்திருக்கிறது.
சடை நாயின் உரோமம் நிலத்திற் படிகிறது.
மயிர் தலையிற் படிந்திருக்கிறது.
பன்றியின் வயிறு நிலத்திற் படிகிறது.

4. விழுதல்: ஒன்றில் ஒன்று விழுந்து அதன் உருவம் அமைதல்.

படி (பெயர்)=ஒன்றிலொன்று விழுந்ததனாலான உருவம், அதன் வடிவம், அளவு, மாதிரி, வகை.

படி =1. a Copy (உ-ம்.) படியோலை opposed to மூலவோலை "மூட்சியிற் கிழித்தவோலை படியோலை மூலவோலை" (தடுத்தாட்கொண்ட புராணம்)
an article, உருப்படி.

2. அளவு (பொது) grade. படிப்படியாய், வாயிற்படி, படிக்கட்டு, படி, படிக்காசு.
நிறை—படிக்கல்.
முகத்தல்—ஒரு படி, படியளக்கிறவன்=காக்கிறவன்.
படி=bata, allowance.

3. விதம் அல்லது வகை.

அப்படி, இப்படி, எப்படி, அதன்படி, சொன்னபடி, மேற்படி.

"எல்லாப் படியாலும் எண்ணினல் இவ்வுடம்பு" ஔவையார்.

சொன்னபடி கேளாதவன்.

எனக்கொரு படியாய் வருகிறது. படியாய்—வடியாய். (போலித் திரிபு)

4. Form. படி+வு=படிவு +அம்=படிவம் (ப—வ போலி) Eng. body; Ang.-Sax. bodig; Hind. बदन.

படி—(n.) copy. duplicate, anything of equal value, exchange, answer, return, substitution.
படி—படில் cf. குடி—குடில், விட்டி—விட்டில்
படில்—பதில்—வதில் (corruption)
பதில்=return, answer, substitution.
பதிலாள்=substitute பதிலாளி=representative.

படி என்னும் சொல்லே வடமொழியில் ப்ரதி (प्रति) என்றாகும். வடசொற்களின் மெய்ம்முதல்களை ரகரம் சேர்த்தெழுதுவது பெருவழக்கு.

(உ-ம்.) பவளம்—ப்ரவாளம் (प्रवा (वा) लः) தமிழம்—த்ராவிடம் (द्रवः)

ட—த. cf. படாகை—பதாகை. படி—ப்ரதி.

ப்ரதி என்னும் சொல்லுக்கு வடமொழியில் மூலமில்லை. ப்ரதி என்னும் உபசர்க்கம் பெற்று, ப்ரதிநிதி (प्रतिनिधिः) என்னும் பெயருண்டாகும்.

படி. (v. imp.)=விழு.

படி—வடி. to fall down, to filter, to select—வடிகட்டுதல். to cast, as moulten metal—வடித்துச் செய்தல். to abate, as water—நீர்வடிதல். to hang low, as the lobe of the ear-காது வடிதல்.

படி—பதி (v. imp.)—to fall, to make impression on the mind, to be comprehended, to be memorised-மனதிற் படியவில்லை, மனதிற் பதியவில்லை.

பதி=to fall down, to settle down, to dwell-பதிதல்—வதிதல்=தங்குதல், வசித்தல்.

பதி=(N.) An abode, a town.

"பதிபெயர் வினுதல்" (அகப்பொருள்), காசியம்பதி.

Eng. Abide (v.) a+bide; bide=to wait

A. S. abidan=a+bidan, bidan=to wait.

பதி—bide. cf. மதுரை—Madura.

Abode (n.) from abide.

Hind. Ahamad*abad*, Allah*abad*.

இவற்றில் abad என்று பிரித்து (आवाद), நிர்மாணிக்கப்பட்ட என்று பொருள்கூறுவது சிறப்பாய்த் தோன்றவில்லை. "इलाहावाद இலாஹியால் நிர்மாணிக்கப்பட்ட, हैदरावाद ஹைதரால் நிர்மாணிக்கப்பட்ட"—ஹிந்தி தமிழ் ஸ்வபோதினி.

பதி=to register; பதிவு=impression, registration, to make impression.

பதிப்பு=printing, edition. அச்சிற் பதித்தல், பதிப்பித்தல்.

பதிபோடு—to crouch, to transplant.

பதியம் போடுதல் அல்லது வைத்தல்—to transplant a cluster of saplings, to graft, to heap up cowdung in a regular shape.

பதி—to sink in, to print; பதி+அம்=பதம் (1) கால் (2) நிலை.

பதி+அம்=பாதம், foot (முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற்பெயர், ஆகுபெயர்).

cf. படி+அம்=பாடம்.
தவி+அம்=தாவம், தாகம்.
கொள்+தல்=கோடல்.
செல்+தல்=சேறல்.

Eng. foot; A. S. fot; L. pedis; Gr. podos; Sans. पादः
L. pedis—pedal, pedestrian, pedestal.
Gr. podos—tripodstand.
பாதம்—பாதை; Telugu பாட்ட; Eng. Path.

Sans. पादः—पादप, the root of a tree, a tree.
Eng. Botany, Lit. the science of trees.

படி—பாடி, a cluster of low-roofed huts, a military encampment.

படி=form, image, likeness.
படி+மை=படிமை. மை an abstract noun suffix.
cf. அடி+மை=அடிமை; குடி+மை=குடிமை.

படிமை—1. Form, Image.
2. Appearance.
3. Robe of an ascetic.
4. Religious conduct of an ascetic.

படிமை—(பதிமை)—பதுமை.

இகரம் உகரமாய்த் திரிவது பெரும்பான்மை.

(உ-ம்.) பிள்ளை—புள்ளை
பிட்டு—புட்டு
பிண்ணாக்கு—புண்ணாக்கு
பிடு—புடு
} இழிந்தோர் வழக்கு

இழிவழக்கேனும் உயர் வழக்கேனும் சொற்றிரிபு விதி ஒன்றே. உயர் வழக்காயின் கொள்ளப்படும்; இழி வழக்காயின் தள்ளப்படும். இதுவே இவை தம்முள் வேற்றுமை,

(உ-ம்.) கொள்ளப்படுவன தள்ளப்படுவன
அ-எ பரு—பெரு (கத்தரிக்காய்)—கெத்தரிக்காய்
ப-வ பதி—வதி (பதில்)—வதில்

படிமை என்னும் சொல்லே வடமொழியில் ப்ரதிமா (प्रतिमा) என்றாகும். வடமொழியில் ப்ரதி என்ற சொற்கு மூலமில்லை. மா என்பது பண்புப்பெயர் விகுதியன்று. ப்ரதிமா, அணிமா, மகிமா முதலிய மாவீற்றுப் பெயர்களையெல்லாம் பகாப்பதங்களென்றே கொள்ளுவர் வடநூலார்.

வடவெழுத்துத் திரிபைக் கூறுஞ் சூத்திரத்து 'ஆவீறை யும்' என்றார் பவணந்தியார். வடமொழி யாகாரம் தமிழில் ஐகாரமாவது போன்றே, தமிழ் ஐகாரமும் வடமொழியில் ஆகாரமாகும். ஆங்கிலப் பவுன் இந்திய ரூபாயாக மாறினால் இந்திய ரூபாய்களும் ஆங்கிலப் பவுனாக மாறுமன்றோ? அது போன்றே.

உ-ம்.	தமிழ்	வடமொழி
(சாய்-பகுதி)	சாயை	சாயா छाया
(மால்-பகுதி)	மாலை	மாலா माला

பலர் 'ஆவீறையும்' என்பதன் மறுதலையை யுணராது ஐகாரவீற்றுத் தமிழ்ச்சொற்களையெல்லாம் 'குர்ரம்' வாய்பாட்டில் ஆகாரவீற்று வடசொற்றிரிபாகக் கொள்ளுவர்.

தென்சொற்களை வடசொற்களாக்கும் முறைகள் பலவுள. அவற்றுள் ப்ரதிமா என்னுஞ் சொல்லிற் கொண்டன மூன்று.

அவையாவன:—

1 ப—ப்ர
2 டி—தி (ட—த)
3 மை—மா

மொழிமுதன் மெய்யொடு ரகரம் சேர்த்தவளவானே தூய தென்சொற்களையும் வடசொல்லென மயங்குகின்றனர் தமிழறிஞர். இனி வேறுபல மாறுதல் கூடின் அவர் மயங்கு தலைச் சொல்லவும் வேண்டுமோ?

"பிறக்கு—பிருதக்கென்னும் வடமொழிச் சிதைவென்க" என்றார் அடியார்க்கு நல்லார். (சிலப். பக் 162)

பின்—பின்பு, பின்று, பிறந்து—பிற, பிறகு, பிறக்கு.

இத்துணைத் தெளிவாகப் பிறக்கு என்பதன் மூலமும் பிறவடிவும் தமிழிலிருந்தும் அடியார்க்குநல்லார் அதனை வட

சொல்லெனப் பிறழவுணர்ந்தமைக்கு ஊழ்வினை யல்லது வேறொரு காரணங் கண்டிலம். 'பிறக்கொழிய' என்பதற்குப் 'பின்னிட்டொழிய' என்று அரும்பதவுரைகள் உரைத்ததையும் அவர் உற்று நோக்கிலர்.

இனி, படி என்னும் சொல் ஒலித்தற் பொருளில் படித்தலையும் வாசித்தலையும் குறிக்கும்.

படி—to read, to learn, to sing, to memorise.

Sans. पठ् படி + அம் = பாடம்.

இதுகாறுங் கூறியவற்றால் படிமை என்பது தென் சொல்லேயென்றும், ப்ரதிமா என்பது அதன் திரிபேஎன்றும், இருமொழிக்கும் பொதுச்சொற்களை வடிவுபற்றி மயங்காது பகுதிப் பொருளறிந்து இன்ன மொழியெனத் துணிதல் வேண்டுமென்றும் அறிந்து கடைப்பிடிக்க.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

மருதம்

தலைவிக்கும் தலைவனுக்கும் களவுக்கூட்டம் உளதாக, அதனையறியாத தலைவியின் சுற்றத்தார் அயலான் ஒருவனுக்குத் தலைவியை மணம் செய்து கொடுப்பதற்குப் பொருந்திய காலத்தில், அதனைத் தடுக்கும்பொருட்டுத் தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்றல் வேண்டுமெனக்கருதி அவளுக்குத் தலைவி உண்மை யுரைத்தது.

ஆதிமந்தியார் பாடியது

31\. மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை;
யானுமோ ராடுகள மகளே; யென்கை

கோடீ ரிலங்குவளை ஞெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

என்பது நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

பதவுரை:—

மள்ளர் குழீஇய விழவினானும்—வீரர்கள் கூடிய விழா விடங்களிலும்; மகளிர் தழீஇய துணங்கையானும்—பெண்கள் கூடியாடும் துணங்கையாடும் இடங்களிலும், யாண்டும்—வேறெந்த விடத்திலும், மாண் தக்கோனைக் காணேன்—மாட்சிமை பொருந்திய பெருங்குணமுடையோனை நான் கண்டிலேன்; யானும் ஓர் ஆடுகளமகளே—அத்தகையோனைத் தேடித்திரிதலால் யானும் ஆடுகளத்து மகளை யொப்பாவேன்; என் கை—என்னுடைய கையிலுள்ள, கோள்தீர் இலங்குவளை ஞெகிழ்த்த—குற்றமற்ற விளங்குகின்ற வளைகளை நெகிழும்படி செய்த, பீடுகெழு குரிசிலும்—பெருமை நிறைந்த தலைமகனும், ஓர் ஆடுகளமகனே—ஓர் ஆடுகளத்து மகனை ஒப்பாவான்.

மள்ளர்—வீரர். விழவு—அவர்கள் படைக்கலத்திற்கு எடுக்கும் விழா. மகளிர் பலர் கூடி இரண்டு கைகளையும் மடக்கி விலாப்புறத் தடித்துக்கொண்டு ஆடும் கூத்துத் துணங்கை எனப்படும். விழவு, துணங்கை—ஆகுபெயர்கள்.

கோடு + ஈர் + வளை = கோடீர்வளை = சங்கினை யறுத்துச் செய்த வளை என்றும் கூறலாம். கோடு = சங்கு. கோள்—குற்றம். கோள் + தீர் = கோடீர். குரிசில்—ஆண்களிற் சிறந்தோன்.

"யாண்டும் காணேன் மாண்டக்கோனை" என்பதனாலும்,

"குரிசிலு மோர் ஆடுகள மகனே" என்பதனாலும்,

"யானுமோர் ஆடுகள மகளே" என்பதனாலும் தம்மிருவருக்கும் உண்டாய கூட்டுறவைத் தோழிக்கு அறிவித்து அவளைச் செவிலிக்கு அறத்தொடு நிற்குமாறு செய்தமை யறிக.

மேற்கோள் விளக்கம்:—

1. "மள்ளர் குழீஇய விழவினானும்"—"அதன்புறம் எனவே அதற்கு அயலாகிய நொதுமலர் வரைவாயிற்று" என்பதற்கு மேற்கோள். —(தொல். களவு. பக். 430)

2. "மள்ளர்.........மகனே"—"யாண்டும் காணேனென அவனுள் வழிபட்டுக் கூறினமையிற் கற்பின் பாலதாய்த் தோழியும்

தலைவனும் பெண்டன்மையிற் றிரியக் கருதாது நன்கு மதித்தவாறு காண்க" என்பது மேற்கோள். —(தொல். களவு. பக். 486-7)

3. "மள்ளர் குழீஇய விழவினானும்' 'அருங்கடி யன்னை (நற். 365) 'பாம்பு மதனழியும்' (அகம் 8) 'பானகுவளை' என்பனவற்றுள் தலைவி தேடிச்சென்றதும், செல்வாமென்றதும் சிறைப்புறமாக வரைவுகடாயது. அறப்பயன் றருதலின் அறக்கழிவுடையவேனு மமைந்தன. இது, 'பல்வேறு கவர்பொருணாட்டத்தான்' (தொல். கள. 23) அறக்கழிவுடையனவும் கூறப்பெறுமென் றமைப்பது பெரும்பான்மை. இஃது அதிகாரத்தால் தோழிக்குந் தலைவிக்குங் கொள்க". —(தோல். பொருள். பக். 813)

4. "கன்று முண்ணாது கலத்தினும் படாது—நல்லான் றீம்பா னிலத்துக்... ...கவினே' (குறுந். 27). இது வெள்ளிவீதியார் பாட்டு. 'மள்ளர் குழீஇய விழவினானும்......மகனே' இது க்லுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த—ஆதிமந்திபோல (அகம். 236) காதலற்கு எடுத்த ஆதிமந்தி பாட்டு. இவை தத்தம் பெயராற் கூறிற் புறமாமென் றஞ்சி வாளாது கூறினர்." —(தோல். அகத். பக். 146)

5. "மகளிர் தழீஇய துணங்கை யானும்" துணங்கை—என்பது ஈண்டு மகளிர் ஆடும் ஓர்வகைக் கூத்து; இதனைச் சிங்கிக்கூத்து என்றும் கூறுவர்; இதனை மகிழ்ச்சியுண்டான காலத்தில் சுற்றத்தாரோடு ஆடுவார்கள். இதற்கு முழவு முதலிய வாச்சியமும் பாட்டும் உண்டு.

(1) "தமர்பாடும் துணங்கையு ளரவம்" —(கலி. 70-14)

(2) "துணங்கையந் தழூஉவின் மணங்கமழ்சேரி"

(3) "இலங்குவளை மடமங்கையர், துணங்கையஞ்சீர்" —(மதுரை. 329, 359, 360)

(4) "கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்"

(5) "முழாஅவிழ் துணங்கைக்குத் தழூஉப் புணையாக" —(பதிற். 13: 5; 52: 14)

(6) "முழவமிழ் துணங்கை தூங்கும்" —(அகம். 336-16)

(7) "நிரைதொடி நல்லவர் துணங்கையுள் தலைக்கொள்ள" —(கலி. 73-16)

(8) தளரிய லவரொடு துணங்கையாய்" —(கலி. 66-17.)

"பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத்
துடக்கிய நடையது துணங்கை யாகும்"—என்பது இதன் இலக்கணம். வீரர் வெற்றிகொண்டு ஆடும் துணங்கையும், பேய்கள் ஆடும் துணங்கையும் இதனின் வேறு.

6. "கோடீரிலங்குவளை நெகிழ" —(குறுந். 11)

(a) 'யானுமோர்'—'யானுமொர்'—பிரதிபேதம்
(b) 'குரிசிலுமோர்'—'குரிசிலுமோர்'—பிரதிபேதம்

தலைவனைத் தலைவி தேடிச்சென்றதாகக் கூறுவது உலக வழக்கன்று எனினும் பொருட்பயம் படவருதலின் உலக வழக்கென்றே கொள்க. என்னை? "அறக்கழிவுடையன பொருட்பயம் படவரின், வழக்கென வழங்கலும் பழித்தன்றென்ப"—(தொல்-பொருளியல் 24) என்பாராகலின்.

வீரர் விழவினும் மகளிர் விழவினும் பலரும் கூடுவர்—இதனை,

"வில்லார் விழவினும் வேலாழி சூழுலகி
னல்லார் விழவகத்து நாங்காணே—நல்லா
யுவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்ப னுப்பாரைச்
சுவர்க்கத் துளராயிற் சூழ்"

—(திணைமாலை 150. நெய்தல் 31)

என்பதால் அறிக.

மெய்ப்பாடு—இறைபற்றிய அச்சம்.
பயன்—அறத்தொடு நிற்கத் தோழிக்குணர்த்தல்.

குறிஞ்சி

தலைவியின் கூட்டத்தைத் தோழியால் பெறவிரும்பிய தலைவன், அவளை இரந்து பின்னின்று, அவன் தன் குறையை மறுக்காமலிருக்கும்பொருட்டுத் தன்னை மடலூருமாறு செய்தல் அவட்குப் பழியாம் என்பது தோன்றச் சொல்லியது.

அள்ளூர் நன்முல்லையார் பாடியது

32. காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்;
மாவென மடலொடு மறுகிற் றோன்றித்
தேற்றெனத் தூற்றலும் பழியே;
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

என்பது பின்னின்றான் கூறியது.

பதவுரை:—

காலையும், பகலும், கையறு மாலையும்—காலைப்பொழுதும், பகற்பொழுதும், செயலற்றுச் சோர்வினை யடையும் மாலைப்பொழுதும், ஊர்துஞ்சு யாமமும்—ஊரிலுள்ளோர் ஆழ்ந்து நித்திரை செய்யும் நள்ளிரவும், விடியலும்—வைகறை எனும் விடியற்காலமும், என்று—என்று சொல்லப்பட்ட, இப்பொழுது இடைதெரியில்—இப் பொழுதுகளும் அவை

களின் வித்தியாசமும், அக்காலங்களில் செய்யப்படவேண்டிய கருமங்களும் உணரக்கூடுமேயானால், காமம் பொய்யே—அந் நிலையையுடைய ஒருவன் கொண்டிருக்கும் காமம் பொய்க் காமமே; (உண்மையான காமம் ஆகாது); என மடலொடு மறு கில் தோன்றி—குதிரை என்று பனைமடல் மீதேறிக்கொண்டு தெருவில் தோன்றி, தெற்றென—உண்மைக் காமத்தைத் தெளியக்காட்டு என்று, தூற்றலும்—என்னைப் பழித்தலும், பழியே—உமக்குப் பழியே; (என் எனில் என் காமம் மெய்க் காமம் ஆதலின் பொழுதுகளும் அவற்றின் வித்தியாசங்களை யும் நானறியேன்) பிரிவு தலைவரின்—தலைவிக்கும் எனக்கும் பிரிவு தலைப்பட்டு வந்தால், வாழ்தலும் பழியே—அவ்வாறு தலைவியைப் பிரிந்து நான் வாழ்தலும் பெரும்பழியேயாகும். (ஆதலின் நீ தலைவியை என்பால் கூட்டுவிப்பாயாக.)

மக்கள் பகற்பொழுதெல்லாம் வேலைசெய்து களைத்திருக்கும், நேரமும், அக்களைப்பு நீங்க ஒய்வுகொள்ளும் நேரமும் மாலையாதலின் 'கையறுமாலை' என்றார்.

ஊர் துஞ்சியாமம்—"நள்ளென் றன்றே யாமம் — சொல்லவிந்து இனி தடங்கினரே மாக்கள் முனிவின்று,—நனந்தலை யுலகமும் துஞ்சும்" (குறுந். 6) என்று கூறியிருத்தல் காண்க.

இடை—இடையிற்பட்ட பொழுது; அதன்கண் நிகழும்செயல்—ஆகுபெயர். பொய்யே காமம்—ஏகாரம் தேற்றப்பொருளது. உண்மையாகக் காமநோயால் வருந்துவார் காலை, பகல், மாலை, நள்ளிரவு, விடியல் என்னும் பொழுதுகளையும் அவற்றினிடை நிகழ்வுறத் தக்க கருமங்களையுமுணரார் என்க; எக்காலத்தும் அந்நோயான் மிக வருந்துவராதலின் பொழுது வேற்றுமைகளையும் உணரவல்லார் அல்லர் என்க. தேற்று-தெளிவி.

யாமம்

யாமம்-இடை இரவு.

"யாமத்துந் துயிலலளலமரு மென்றோழி" —(கலி. 45-18)

"யாம நடுநாட் டுயில்கொண் டளித்த, காமநோயின்" —(கலி. 122-21-2)

"பலர்த்துயிற்றும் யாமநீ துஞ்சலைமன்" —(கலி. 146-36-7)

"தீயவனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம்—நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடன்" —(நள வெண்: கலி. 94.)

"நள்ளென் றன்றே யாமம்" —(குறுந். 6)

1. 'தேற்றென'—'தோற்றென'—பிரதிபேதம்.
மெய்ப்பாடு—வருத்தம் பற்றிய இளிவரல்.
பயன்—ஆற்றாமை அறிவித்தல்.

தமிழ் மொழியில் சகர முதன்மொழி

[துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்]

(௭௰-ம் பக்கத் தொடர்ச்சி)

சகர முதற்சொற்கள் அவர்காலத்தில் வழங்கியிராவிட்டால் "சகரக் கிளவியும்" என்று சூத்திரம் செய்யமாட்டார்.

இவ்வழக்குக்கு விரோதமாக உரையாசிரியர்களோ, பதிப்பாசிரியர்களோ உதாரணங் காட்டுவது பொருந்தாது.

"அங்கிக்குத் தகுந்த மாதிரி அங்கத்தை வெட்டுவது அழகாகாது".

ஏட்டிலிருந்து புத்தகங்களில் எழுதும்போது எழுதுகிறவன் ஏட்டுவழக்கங்களை நன்றாய் உணர்ந்தவனாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பல வழுக்கள் உண்டாவது சகசம்.

"அவை" என்ற கடைசி அடியின் முதற்சொல்லை, "அ—ஐ" என்றும், அதற்குத்தக "ஒன்றலங் கடையே" என்பதை "மூன்றலங்கடையே" என்றும் ஏடு எழுதுகிறவன் மாற்றி எழுதிவிட்டபடியால் இவ்வளவு தப்பான எண்ணங்கள் பண்டிதர்கள் மனதில் உதித்தன.

"அ—ஐ—ஔ வெனும் மூன்றலங்கடையே" என்ற கடைசி அடி, க்—த்—ந்—ப்—ம்—ச் என்ற ஆறு மெய்யெழுத்துக்களுக்கும் சேர்ந்ததாயிருக்க, உரையாசிரியர்களும் ஏனைய பண்டிதர்களும், ச் என்ற மெய்யெழுத்துக்கு மாத்திரம் சேர்த்துப் பொருளுரைத்தது வியப்பினும் வியப்பே.

ஔ என்ற ஓர் உயிர் எழுத்தோடுமாத்திரம் க்—த்—ந்—ப்—ம் எழுத்துகள் மொழிக்கு முதலில் வராது என்று ஒத்துக்கொண்டவர்கள் அ—ஐ இரண்டு எழுத்துக்களையும் விட்டுவிடக் காரணம் என்ன?

"கௌ"—"மௌ" என்ற எழுத்துக்களை இப்போது சில பதிப்பாளர்கள் மொழிக்கு முதலாகக்கொண்டு பதிப்பிக்கிறார்களே யெனில், அவர்களும் "தௌ—பௌ—நௌ" எழுத்துக்களை மொழிக்கு முதலாகக் கொள்வதில்லை. ஆகையால் அவர்கள் கௌ—மௌ என்ற எழுத்துக்களை முதலில் அமைத்ததும் போலிக் கொள்கையாம் என விடுக்க.

ஆகையால் அ-ஐ-ஔ என்னும் மூன்று எழுத்துக்களும் சூத்திரத்தில் கூறிய ஆறு மெய்யெழுத்துக்களுமே சேரும்.

அப்படிச் சேர்த்துப் பொருளுரைப்பாரேல், அவர்களுக்கே அவ்வடியின் போய்மை வெளிப்பட்டிருக்கும். அப்

படி அவர்களுக்கு அது தோற்றுமற் போனது தமிழ்மொழி செய்த பாவமே.

இனி ஐயங்கார் அவர்கள் கூறிய முதல் முடிவை எடுத்துக் கொள்வோம் :—

(1) "தொல்காப்பியர் காலத்தே சகர முதற் சொற்கள் தமிழில் வழங்கவில்லை" என்பது. அப்படித் தமிழ் இலக்கியங்களில் அவர் காலத்தில் வழங்கி இராவிட்டால், அவர் "சகரக் கிளவியும்" என்று சூத்திரம் செய்திருக்கமாட்டார். ஆகையால், தொல்காப்பியர்காலத்தே தமிழில் சகர முதற்சொற்கள் உண்டு என்பது போதருகின்றது. ஆகையால், ஐயங்கார் அவர்களுடைய முதற் கோள்கை வலியுடைத்தன்று.

(2) இரண்டாவது, "சங்க இலக்கியங்களில் காணப்படும் சகர முதற்சொற்கள் எல்லாம் வடமொழிச் சிதைவுகளாம்" என்றார்.

அப்படி வடமொழிச் சிதைவுகளாயிருந்தால், நச்சினார்க்கினியரும், இளம்பூரணரும் "சட்டி—சள்ளை—சமை—சமழ்ப்பு"—என்பன தமிழ்ச் சொற்களே என்று கூறுார்கள்.

சமழ்ப்பு என்ற பதத்திலுள்ள ழகரம் வேறு மொழி எழுத்தாக இருக்கமுடியாதென்பதும், அது தமிழ்ச்சொல்லே என்பதும் யாவரும் ஒப்புக்கொண்ட முடிபுகள். ஆகையால், இரண்டாவது முடிவும் வலியுடைத்தன்று.

(3) மூன்றாவது, "பிற்கால இலக்கியங்களில் சிதைக்காமல் பிறமொழிகளில் உள்ளபடியே சகர முதற்சொற்கள் உபயோகிக்கப் படலாயின" என்கிறார்.

பிற்கால இலக்கணமாகிய நன்னூலில் வடசொல், திசைச் சொற்களைத் தமிழில் எப்படிவழங்குவது என்பதற்கு பவணந்தி முனிவர் சூத்திரம் செய்திருக்கிறார். அப்படி இருக்கத் தமிழர் பிறமொழிச் சொற்களை அப்படியே வைத்து வழங்கினார்கள் என்று ஐயங்கார் அவர்கள் கூறுவது பொருத்தமற்றது. அந்த வழக்கம் என்றும் தமிழர்களிடம் இல்லை. அப்படி இல்லை என்பதே இக்காலத்தில் தமிழர்கள் மேல் ஏற்றும் குற்றம் என்று யாவரும் அறிவர்.

ஆகையால், சொற்கள் சிதையாமல் உபயோகப்பட்டிருக்கின்றன என்றால், அவை எல்லாம் தூய தமிழ்ச் சொற்களே என்று கூறத் தடை இல்லை. ஆகையால் மூன்றாவது கோள்கையும் வலியற்றதே.

நான்காவது, பிறமொழிக்குரிய ரகர லகர முதற் சொற்கள் தமிழில் வந்து வழங்கும்போது அ—இ—உ என்ற எழுத்துக்களில் ஏதாயினும் ஒன்றை முதலில் உபயோகிக்கிறோம். இது தமிழ் வழக்கு. அப்படிக் கில்லாமல் சங்கப் புலவர்கள் சகரமுதற் சொற்களைச் சுட்டு எழுத்துக்கள் இல்லாமலே உபயோகப்படுத்தியிருப்பதால், அவை தூய தமிழ்ச் சொற்களே என்று கொள்ள வேண்டியிருக்க, அதனை விடுத்துத் தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்ட சங்கப் புலவர்களையும் தொல்காப்பியருக்குக் காலத்தாற் பிற்பட்டவர்கள் என்று இவ்வொரு நியாயங்கொண்டே ஐயங்கார் அவர்கள் கூறுவது பொருந்தாது என்பது வெள்ளிடைமலை.

இனி, ஐந்தாவதாக, "தமிழ்மொழியிலுள்ள சகர முதற் சொற்கள் எல்லாம் வடசொல்லாகவோ திசைச்சொல்லாகவோ இருத்தல்வேண்டும்" என அவர் கூறுகிறார். அப்படி அவர் கூறுவதற்கு இப்பொழுது அச்சுப் புத்தகங்களில் இருக்கும் 29-வது சூத்திரத்தில் மாற்றப்பட்ட கடைசி அடியேதான் காரணம். அந்த அடியே தவறுடைத்து என்று மேலே காட்டியதால் அவ்வடியை ஆதாரமாகக்கொண்ட அவருடைய கொள்கையும் ஆதாரமற்றது என்பது கூறாமலே அமையும்.

இனி ஆறுவதாக, "சகர முதற்சொற்களில் ஒன்றும் தனித் தமிழ்ச்சொற்களாக (தூய தமிழ்ச்சொல்லாக) இருத்தல் இயலாது" என்று ஐயங்கார் அவர்கள் கூறுவது பிடிவாதமாக (dogmatic) இருக்கிறதேயொழிய காரணம் ஒன்றும் இல்லை.

சகர ஒலியைப்பற்றி மேனாட்டு ஆராய்ச்சியாளர் கூறுவதையேனும் அவர் உற்று நோக்கினார் இல்லை. அது வருமாறு:—

(1) The cerebral "s" which begins the word 'Siva' is a Tamil Sound which crept into the Aryan alphabet as a result of Dravidian contact.

(Ragozin's Vedic India.)

(2) Professor Rapson says, "The cerebrals are foreign to Indo-European languages while they are characteristic of Dravidian tongues".

(3) Dr. Grierson says, "I am of opinion that the cerebral sound 's' belongs to Tamil language."

அதாவது 'ச' என்ற ஒலியே தமிழ் மொழிக்குரியது. தமிழ்ப் பாஷையிலிருந்துதான் மற்றப்பாஷைகள் அவ்வொலியைக் கடன்வாங்கின என்று கூறுகின்றனர்.

ஆகையால், ஒலி இலக்கணத்தை நன்முய் உணர்ந்த தொல்காப்பியர், க்—ச்—த்—ந்—ப்—ம் என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரா என்று சூத்திரம் செய்யமாட்டார்.

ஆகையால், அவரது 6-வது கோள்கையும் இற்றுப் போயிற்று.

இனி அடுத்தபடியாக ஐயங்கார் அவர்கள், "இதுவுமன்றி, மொழிக்கு முதலாகாது என்று தொல்காப்பியர் விதந்து கூறிய சூத்திர விதிக்கு மாருகத் திருவள்ளுவர் சகர முதற் சொற்களைப் பிற மொழிகளில் உள்ளபடியே உருத்திரிக்காமல் தாம் கூறும் குறள் வெண்பாக்களிலே முதற்சொல்லாக அமைத்திருக்கிருர். ஏனைய கடைச்சங்கப்புலவர்களாயினும், அச்சொற்களைத் தமிழ் ஒலி இலக்கணத்திற்கு ஏற்பக் கூடியவரை திரித்துச் செய்யுளின் இடையே பெய்திருக்கின்றனர். இதனுலும் திருவள்ளுவர் தொல்காப்பியருக்கும் கடைச்சங்கப் புலவர்கட்கும் காலத்தாற் பிற்பட்டவர் எனக் கருத இடம் தருகின்றது" என்று பகுதி 7-ல் கூறிக்கொண்டே போகிருர்.

இங்கே ஐயங்கார் அவர்கள் திருவள்ளுவரைக் கடைச் சங்கப்புலவர்கட்கும் காலத்தாற் பிற்பட்டவரென்று சரித்திர விரோதமாகக் கருதினதுமல்லாமல் திருவள்ளுவர் ஒலி யிலக்கணம் அறியாது, தொல்காப்பியச் சூத்திரத்துக்கு மாருகவும் நூல் செய்துள்ளார் என்ற குற்றத்தையும் அவர்மேல் சுமத்தியுள்ளார்.

திருவள்ளுவர் தொல்காப்பியத்தைப் பாராதவர் அல்லர். ஒலி யிலக்கணம் அறியாதவர் அல்லர். நூலாசிரியர்களில் அவருக்கு இணையான புலவர் எத்தேயத்திலும் இல்லை. ஆனுல் அடிமாற்றப்பட்ட, உருமாற்றப்பட்ட தொல்காப்பியச் சூத்திரங்களை நம் திருவள்ளுவர் படிக்கவில்லை. உண்மையான வடிவத்தில் தொல்காப்பியச் சூத்திரங்களைத் திருவள்ளுவர் படித்துப் பிறகு நூல்செய்தாரே யொழிய வேறின்று.

ஆகையால், அத்தகைய இணையற்ற புலவர் சகர முதற் சொற்களைத் தம் குறட்பாக்களில் முதலில் பெய்து பாடி இருப்பாரானுல், அச்சோற்கள் எல்லாம் தூய தமிழ்ச்சொற்களே

ஆகும். என்பதில் தடையொன்றில்லை. அதனைவிட்டுத் திருவள்ளுவர்மீது குற்றம் சாட்டுவது அறியாமையாம்.

திருவள்ளுவர் நூலில் பிறபாஷைச்சொற்கள் ஒரு சொல்லேனும் கிடையாது. அது கொண்டன்றே வைணவ ஆச்சாரியர்கள் எல்லாம் திருவள்ளுவரைக் குறிக்குமிடத்துத் "தமிழர்" என்றே கூறிப்போந்தார். இதனையேனும் ஐயங்கார் அவர்கள் உற்றுநோக்குவாராக.

ஆகையால், இதுகாறும் கூறியவாற்றால் "க—த—ந—ப—ம எனுமாம் ஐந்தெழுத்தும் எல்லா உயிரோடும் செல்லுமார் முதலே சகரக் கிளவியும் அவற்றோரற்றே அவை ஔவெனும் ஒன்றலங்கடையே"

என்பதுதான் சரியான தொல்காப்பியச்சூத்திரம் என்றும்,

"அ—ஐ—ஔ எனும் மூன்றலங்கடையே" என்ற அச்சுப்புத்தகத்திலுள்ள சூத்திரத்தின் கடைசி அடி தவறுதலாய் ஏற்பட்ட அடி என்றும்,

கவ்வு—தவ்வல்—நவ்வி—பவ்வியம்—மவ்வல்—சவ்வரிசி என்றே எழுதுவது முறைமை யென்றும்,

கௌ-தௌ-நௌ-பௌ-மௌ-சௌ-என்ற எழுத்துக்கள் மொழிக்கு முதலாக வாரா என்றும்,

உரையாசிரியர்களும் அடிமாற்றத்தைக் கவனியாது உரையெழுதிச் சென்றார்கள் என்றும், அதற்குத்தக உதாரணச் சொற்களையும் வழக்குக்கு விரோதமாகக் கூறிப்போந்தனர் என்றும்; அன்றேல், உரையாசிரியர்கள் சரிவரக் கூறியிருக்கப் பதிப்பாசிரியர்கள் தான் அம்மாதிரி செய்தார்களோ என்பது ஆராயத்தக்கதென்றும்,

மெய்யெழுத்துக்கள் அ ஒழிந்தால் மற்ற உயிர்களோடு மொழிக்கு முதலில் வாரா என்பது சாத்திரக் கொள்கை யென்றும்,

ச என்ற ஒலியே தமிழ் ஒலிதான் என்று மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள் என்றும், அதனானே, பிறமொழிகளில் உள்ள சகரமுதற்சொற்கள் எல்லாம் தமிழில் இருந்துதான் போயின என்றும், தமிழ் இலக்கியங்களில் உள்ள சகர முதற்சொற்கள் எல்லாம் தூய தமிழ்ச்சொற்களே என்றும் நிறுவினாம்.

"வெண்பாவிற் புகழேந்தி"

[பண்டிதர். திரு. கா. போ. இரத்தினம் அவர்கள்]

(முன் எஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நள வெண்பாவிலுள்ள வெண்பாக்களெல்லாம் ஒன்றி ணென்று மிக்க சுவையுடையனவாய் "வெல்லப் பிள்ளை யாருக்கு இந்தப்பாகந்தான் இனிப்பு" என்று சொல்ல முடியாததுபோல் அமைந்திருக்கின்றன. புலவர் காதலனைப் பட்டார்க்குரிய குணங்களையும் அவற்றின் செயல்களையும் உலக வியற்கைக்கு மாறின்றி முறைப்பட நன்கு உரைத்திருக் கின்றார். நள மகாராஜன் அன்னத்தை யனுப்பிவிட்டு, "இவ் வளவிற் செல்லுங்கொல், இவ்வளவிற் காணுங்கொல், இவ் வளவில் இயம்புங்கொல், இவ்வளவில் மீளுங்கொல்" என்றெல் லாம் படிப்படியா யெண்ணுகிறானும். அன்னம் தமயந்தி யிடம் சென்றபின் அவன் நிலைமையைக் கூறுமாசிரியர்,

"வழிமேல் விழிவைத்து வாணுதலாள் நாமமொழிமேற் செவிவைத்து
மோகச்சுழி மேற்றன்னஞ் சோடவைத்து அயர்ந்தான்"

என்றும் கூறினர். விழியும், செவியும் மாத்திரம் அயரா திருந்தன வாகையாற்றான் அன்னத்தை எதிர்பார்த்திருந்த வழியில் மயில் தோகையை விரித்தாடுதலையும், தமயந்தியின் இடைக்குப் பேருவமையாகப் பொருந்திய கொடிகள் இருத் தலையுங் கண்டு வருந்துவதற்கும் சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறு குரலைக்கேட்டு ஆவியுருகி அழிதற்கும் ஆளானான். இனித் தமயந்தியின் நிலையை "உள்ளம்போய், நாண்போய், உரைபோய், கண்ணீர்போய் ஆவிபோனாலும் ஆசைபோகாது வருந்திக்கிடந்தா"ளென்றனர். நளனது நெஞ்சு தமயந்தியிடம் போனதாகவும் அதனைக் காண்பான் வந்த நளன்பின் தமயந்தி யின் நெஞ்சு சென்றதாகவும் இருவர்க்கும் ஒரு நெஞ்சே உளதெனப் பொருள்படக் கூறியிருக்கின்றனர்.

இன்னும் தமயந்தியின் கோலத்தைக் கண்ட வணிகன் அவளது தோற்றத்தால் அவளை எக்குலத்தாளென முதலும் யார் மடந்தை, யாதுன்னூர் எனவும் முறையாக வினவின னாகக் கூறப்பட்டிருத்தலும் கற்போர் உள்ளத்தைக் கவருந் தகையது.

நமது புலவர் கொடியவர்களையும் தீங்கு செய்பவர்களை யும் அழைக்கும் பொழுதெல்லாம் அவர்களின் கொடுமையை விளக்கும் அடைகளைக் கொடுத்தே அழைக்கின்றனர். 'கன்

ணிறத்த சிந்தைக்கலி' 'தீதுதருகலி' 'வஞ்சகக்கலி' 'தீங்கு தருகலி' 'புன்னெறியிலார்க்குங் கலி' என்றிவ்வாறெல்லாம் கலியையும், 'வெங்கோலரசன்' 'வன்னெஞ்சன்' 'கொடியான்' 'அரசறியா வேந்தன்' முதலியவற்றால் புட்கரனையும் அழைத்திருக்கின்றார்.

நளவெண்பாவில் 'பாரதப்போர் செற்றானும்' 'ஆழி வடிம் பலம்ப நின்றானும்' 'சூழிசை நாற் சங்கத்திருந்தானும்' 'நற்றேவர் தூது நடந்தானும்' 'மேருமலையைச் செண்டால் திரித்தானும்' 'காமனைப் பொடியாடி கொன்றதெல்லாம் பொய்' எனச் சில சரிதச் செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன.

புகழேந்தியார் தம் நூலிலே இடையிடையே சில உண்மைகளைப் பொதிந்திருக்கின்றனர். நாராயணாயநம வென்று அவனடியிற் சாராரை வினைசாரு மென்றதையும், செம்மை நினையாமை பூண்டார்நெறி இவைகள் என்றதையும், சூதின் தீமையையும், பிள்ளைகளின் அருமையையும், கடுவினையை எவர் கடப்பார் என்பதையும் மகப்பெறு மானிடர்கள் வானவர் தம்மூர்க்குப் புகப்பெறுரென்பதையும், பிறரை ஈயெனக்கேட்டல் தானந்துடைத்து தருமத்தை வேர்பறித்து மானந்துடைப்பதோர் வாளென்பதையும் பிறவற்றையும் கூறியிருத்தல் காண்க.

இனி இவரது வெண்பாக்களில் சில சொற்களும் சொற்றொடர்களும் பல விடங்களில் திரும்பத் திரும்ப வந்துள்ளன. அவற்றுள் சில வருமாறு:—

'காந்தாரம் பாடிக்களி வண்டாற்றும்'......
'கார்வண்டு காந்தாரம் விட்டுரைக்கும் தார்வணிகர் வேந்து'
'தன்னுடு பின்னாகக் கடற்றானை முன்னாக'
'பொன்வாயில் பின்னாகப் போயினான் முன்னானில்'
'விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்ல'
'காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்டு'
'கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டு'
'காரிருளிற் பாழ்மண்டபத்தே தன் காதலியை'

நிற்க. புலவரது வெண்பாக்களெல்லாம் சொல்லணி பொருளணி நிறைந்து மிளிர்கின்றன.

'கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்'
'காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்டு'
'கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டு'
'அழுவார் விழுவார் அயிர்ப்பார் உயிர்ப்பார்'
'கருங்குழலார் செங்கையினால் வெங்கவரிப் பைங்கான்'
'முன்னாகப் பின்னாக'

இவ்வடிகளிலுள்ள தொடை நயங்களை எடுத்துக்காட்டாகக் கொள்க. பெரும்பாலும் உவமையணி உருவக அணிகளோடு பரியாயம், திரிபதிசயம் முதலிய அணிகளும் இவர் வெண்பாக்களை அணி செய்கின்றன.

"கன்னி நறுந்தேறன் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட நீயென்பால்
எய்தற் கவாவியவா றென்"

இது பரியாயவணி.

"பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை யையுற்று மந்தி
தெளியா திருக்குந் திருநாடா வுன்னை
ஒளியாது காட்டுன் னுரு"

இது திரிபதிசயவணி.

நளன் மடைப்பள்ளியிற் சென்று சமைக்கப் புகுதலும் அஃது உடனே ஒருவராலும் நிரப்பாமல் நிரம்பியதை 'ஆதி மறைநூல் அனைத்துந் தெரிந்து உணர்ந்த நீதி நெறியாளர் நெஞ்சம்போல் நிரம்பிய' தென்கிறார். நளனைவிட்டுக் கலி நீங்கியதைச் சந்திரன்சுவர்க்கி கொண்டாடும் பாவலன்பால் நின்ற பசிநீங்கியதற்கு உவமித்தார். நளனது தேர்ப்பாகன் வடிவு, மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்பாகப் புக்கோர் அருவினைபோல் நீங்கிற்று என்றார். நளனைவிட்டுப் புட்கரனை இலக்குமி அடைந்தது தமது கற்புமிக்க மனைவியரை விட்டுவிட்டுத் தாசிகளிடத்துச் செல்வதைப் போலிருந்தது புலவருக்கு. 'இரா உள்ளம் புதைய வைத்த பொதுமகளிர் தங்கள் இதயம் போன்றது' எனவும், 'மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப் புன்காகம் கொள்ளத் தான்போனாற் போல்' நளன் புட்கரனுக்குப் பார்கொடுத்துப் போனான் எனவும், 'அடம்பின் கவட்டிலைகள் மானின் குளம்பு ஒத்தன' எனவும் தமயந்தியை விட்டுப்பிரிந்த நளன் மனம் 'தோயல் கடைவார் கைபோலப்போ யொருகால் மீளும் புகுந்து ஒருகால் மீண்டேகும்' எனவும் கூறியிருக்கின்றார்.

புலவரது வெண்பாக்களுக்கும் மற்றையோர் செய்யுள்களுக்கு மிடையில் அதிக ஒற்றுமை இருக்கின்றது. 'பாவையர் கைதீண்டப் பணியாதார் யாரே!' என்று புகழேந்தியார் கூற, 'வஞ்சிபோன் மருங்குலார்மாட்டு யாவரே வணங்கலாதார்' எனக் கம்பர் கூறுகின்றார். கம்பர் சீதையைத் 'தழலிடு

வல்லி போலச் சாம்பினுள்' எனப் புகழேந்தியார் தமயந்தியை 'வேகின்ற தளிர்போலச் சோர்ந்தாள்' எனவும், நளனை 'தழலிற்படு தளிர்போற் காய்ந்து' எனவும் உரைக்கின்ருர். "செழுநீல நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாள் முழுநீல மென்றயிர்த்துக் கழுநீரைக் கொய்யாது போவாள்" எனும் புகழேந்தியார் கூற்றுக்கும் "கைக்கொள் நீரிற் கண்ணிழல் கயலென மெய்க்கண் மேவாள் மெல்லெனச் சொரிய" எனும் கொங்குவேளிர் கூற்றுக்கும் இடையிலுள்ள பொருள் ஒற்றுமை எத்தகையது!

"செங்கால் மடப்புறவம் பெடைக்குப் பேசுஞ்
சிறுகுரலுக் குடலுருகிச் சிந்தித்தாங்கே"

இது திருமங்கையாழ்வார் கூற்று.

சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட் டாவியுருகி யழிந்திட்டான்.

இஃது புகழேந்தியார் கூற்று.

"கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந் தென்ன
விறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு"

"வான்முகிலும் மின்னலும் வறுநிலத்து வீழ்ந்தபோற்
ருனுங்குழலுந் தனிவீழ்ந் தாள்"

இவற்றுள் முன்னையது சீத்தலைச் சாத்தனர் கூற்று; பின்னையது புகழேந்தியார் கூற்று.

"வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய்
பொருதி புலம்புதி நீயுங்—கருதுங்காற்
பண்டினை யல்லையாற் பாழித்தோட் கைதையைக்
கண்டனை யோவாழி கடல்"

"போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்று மென்போல வார்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொ லின்று"

இவையிரண்டில் முதலாவது சங்கச் செய்யுள். இரண்டாவது நளவெண்பா.

"அப்புடைய லங்குமீன மருமாக்கலி
உப்புடையிந்து வென்றுதித்த வூழித்தீ
வெப்புடை விரிகதிர் விரிப்பமெய் யெலாம்
கொப்புளங் கொண்டதோ கொதிக்கும் வானமே"

"செப்பிளங் கொங்கை மீர்திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங்கொண்ட குளிர்வானை—யிப்பொழுது

மீன் பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து"

இவை முறையே கம்பர் புகழேந்தியார் கூற்றுக்கள்.

"விரிந்த பசு நெட்டிலைக் கமுகின்
மேவிக் கனத் தருவையதன்
மீது படர்பூங் கொடிவழி போய்
மிதித்துக் குனித்து விளையாடி
வந்தகளையின் நெடுங்கயிற்று
வழிபோய் நடிக்கும் பொருநர்திறம்"

—சிவஞான சுவாமிகள் கூற்று.

"மாநீர் நெடுங்கயத்து வள்ளிக் கொடிமீது
தானேகு மன்னந் தனிக்கயிற்றில்—போநீள்
கழைக் கோதையரேய்க்குங் காந்தாரநாடன்"

—புகழேந்தியார் கூற்று.

"அங்கண் விசும்பினவிர் நிலாப்பாரிக்கும்"

—நாலடியார்.

"அங்கண் விசும்பினவிர் மதி"

—நளவெண்பா.


"அந்தாமரை யன்னமே"

—திருக்கோவை.

"அந்தாமரையி லவளே"

—நளவெண்பா.

சுருங்கக் கூறுமிடத்து நளவெண்பா ஓதற்கெளிதாய் சிந்தைக்குஞ் செவிக்கும் நல்லின்பம் பயப்பதாய் நவில்தொறும் நவில்தொறும் நயம் பெருக்குவதாய் கடுந்தமிழ்ப் பதங்களும் இறுக்கமும், மயக்கமுமின்றி முழு வெண்பாக்களும் செப்பமும் செம்மையும் வாய்ந்து இன்னோசை யுடைத்தாய்ப் பேரறிவினரையே யன்றிச் சிற்றறிவினரையும் சிந்தை மகிழ்விக்கும் செம்பாகமான ஓர் நூலெனக் கூறலாம். செந்தமிழ் பயில்வார் தமிழின் இனிமை காண முதலிற் பயிலும் முதன்மை படைத்த நூலும் இதுவேயாகும்.



சிவஞான போதக் கருத்து

ஆறுவது சூத்திரம்-முதல் அதிகரணம்

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்]

(சிலம்பு 15: பரல் 1: 47-ம் பக்கத்தொடர்ச்சி.)

29. ஆசிரியர் கூறின மேற்கோள் உரையைக் கேட்ட சாங்கியன் கூறுகிறதாவது:— சைவ சித்தாந்தம் போலச் சாங்கிய தத்துவமும் சற்காரிய வாதத்தை ஒப்புக்கொள்கிறது. சற்காரிய வாதத்தின்படி எல்லாப் பொருள்களும் சத்தேயாம்; காணப்படும் உலகமும் சத்தேயாம். காணப்படும் உலகத்தை நீர் அசத்து என்று கூறியது சற்காரிய வாதத்துக்கு முரணாகும். ஆதலால் நீர் கூறியது உண்மைக்குப் பொருந்தாது.

30. சாங்கியர் கூறின தடை உரையைக்கேட்ட ஆசிரியர் நையாயிகனுக்குக் கூறின ஏதுவையே சாங்கியனுக்குப் பொருந்துமாறு வேறொரு பொருள்படக் கூறுகின்றார். அந்த ஏதுவானது முன் 23-வது பந்தியிற் கூறப்பட்டபடி "சுண்டு அறிவினலறியப்பட்ட சுட்டு அசத்து" என்பது. நையாயிகன் *அபாவமும் (இன்மையும்) ஏழு பதார்த்தங்களி லொன்று எனக் கூறும் தார்க்கிகனாதலின், அவன் கூறும் தடைஉரைக்கு மறுப்பாகப் பொருந்துமாறு பிரகாசம் என்ற சொல்லுக்கு உண்டு என்றுணரும் உபலத்தி அறிவு என்றும், அப்பிரகாசம் என்ற சொல்லுக்கு இல்லை என்றுணரும் அநுபலத்தி அறிவு என்றும் தார்க்கிகப்பொருள்பட ஆசிரியர் கூறினார். சைவசித்தாந்தத்தின்படி அபாவம் என்பதொன்றில்லை என்ற உண்மையை அவன் அறியமாட்டானாதலின், ஆசிரியர் அவ்வாறு கூறவேண்டியதாயிற்று (16-வது பந்தி பார்க்க.) சாங்

*சிவஞான சுவாமிகள் மொழிபெயர்த்தருளிய தருக்க சங்கிரகம் ௫-வது பக்கம்—ஆறுமுகநாவலர் இரண்டாவது பதிப்பு.

கியன் சற்காரியவாத உண்மையைக் கொள்கிறவனாயினும் அவன் சைவசித்தாந்தம் கூறுகிறபடி சற்காரியவாத உண்மையை அறியமாட்டானாதலின் அவ்வறியாமைபற்றி அவன் கூறுகிற தடைஉரைக்கு மறுப்பாகப் பொருந்துமாறு ஏது வில் பிரகாசம்* என்ற சொல்லுக்கு விளக்கம் என்றும், அப்பிர காசம் என்ற சொல்லுக்கு விளக்கமின்மை என்றும் பொருள் கொண்டு ஆசிரியர் அதே ஏதுவைக் கூறுகின்றார். இங்ஙனம் ஓர் ஏதுவை நையாயிகனுக்கும் சாங்கியனுக்கும் அவனவன் கூறுகிற தடை உரைக்குப் பொருந்துமாறு மறுப்பாக இரட் டுறமொழிதல் என்ற உத்தியாற் கூறுதல் ஆசிரியர் கருத்து என்பது, அவர் அவ்வேதுவை விளக்கப் பின்கூறும் எடுத்துக் காட்டு வெண்பாவை இரு தொடர்களாகப் பிரித்து முற் றொடரில் நையாயிகனை "அசத்தறியாய்" என்று விளித்தும் பிற்றொடரில் சாங்கியனை 'அசத்தலாய்' என்று விளித்தும்; முற்றொடரில் 'ஆயின்' என்று சொன்ன கருத்தையே பிற் றொடரில் 'ஒரின்' என்று மொழிந்தும் கூறியதனால் நன்கு புலனாகும். அசத்து என்ற சொல்லுக்குத் தருக்க நூல் கூறு கிற அபாவம் என்ற பொருள்கொண்டு பிணங்குகிற நையாயி கனை 'அசத்தறியாய்' என்றும், சற்காரியவாத உண்மையை நன்கு அறியாது பிணங்குகிற சாங்கியனை சற்காரியவாதி என் றாவது அசற்காரியவாதி என்றாவது கூறாது 'அசத்தலாய்' (அசற்காரியவாதி அல்லாதவனே) என்றும் ஆசிரியர் கூறுதல் பொருந்துமாறு காண்க.

31. சாங்கியன் கூறிய தடை உரைக்கு மறுப்பாகப் பொருந்துமாறு ஏதுவின் பொருள் வருமாறு:—சாங்கியனே, நீ சற்காரியவாத உண்மையை நன்கு அறியாது மயங்கி உனது தடைஉரையைக் கூறுகின்றாய். நீ நினைத்தல் போலக் காணப் படுமுலகம் இல்லை என்று கொண்டு நான் அதனை அசத்து என்று கூறவில்லை. சற்காரியவாத உண்மைப்படி உள்ளது என்றும் இல்லது ஆகாது; இல்லதிலிருந்து என்றும் ஒன்று

---

*நான்காவது சூத்திரம் முதலாவது அதிகரணத்தில் ஆசிரியர் கூறும் "அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்ற லான்" என்னும் ஏதுவில், 'பிரகாசம்' 'அப்பிரகாசம்' என்னுஞ் சொற்களுக்கு முறையே சித்து என்றும் அசித்து என்றும் சிவஞான சுவாமிகள் கூறியிருத்தலை நோக்குக. தத்துவங்கள் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கப்படுமிடத்து மேலுள்ள சூக்கும தத்துவம் அதற்கு அடுத்துக் கீழுள்ள தூல தத்துவத்தைத் தன் ஒளியால் விளக்குதலால் முன்னையது சித்து என்றும் பின்னையது அசித்து என்றும் கூறப் படுகின்றன.

உண்டாகாது. காணப்படும் இந்தத் தூலஉலகம் காரியநிலை (காரியாவத்தை) யிலுள்ளது; காரியநிலையிலுள்ள இந்தத் தூல உலகம் அதன் காரண நிலையில் மாயையிலொடுங்கி நிற்பதாயுள்ளது. காரண நிலையிலுள்ள மாயை ஒன்றாயும், பாகங்களில்லாத முழுமையாயும், எங்கும் நிறைந்திருப்பதாயும், அளவை அறிவாலறியப்படாததாயும், உருவமில்லாததாயும், என்றுமொருதன்மைத்தாய் அழிவில்லாததாயும், மலம் விரவியதாயும், இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியாயுமுள்ளது. சத்தி உடைமை காரணத்தன்மை: வியத்தி உடைமை காரியத் தன்மையாகும். வியத்தி உடைமை என்பது புலனுமாறு வெளிப்பட்ட தன்மை. இந்த மாயையே இறைவனுடைய அருட்சத்தியால் பலவகைச் சூக்கும தத்துவ உலகங்களும், காணப்படுந் தூல தத்துவ உலகமும் அருவமாயும் அருஉருவமாயும் உருவமாயுமுண்டாதற்கு முதற் காரணமாயுள்ளது. இந்த மாயை முழு ஒளி விளக்கமுடைய தூவெளியிலடங்கி அதனிடம் மலம் விரவாதிருக்குங்கால் முழுப்பிரகாசம் உடையது. இந்த ஒளிதான் பலவகைச் சூக்கும தத்துவங்களிலும் அவற்றின் சூக்கும நிலைக்குத் தக்கவாறு விளங்குகின்றது. தூல தத்துவத்திலும் தூலஉலகிலும் அவ்வொளி இல்லை எனும்படி மிகக் குறைந்து விளங்குகின்றது. இங்ஙனம் மாயையும், காணப்படும் தூலஉலகம்வரை மாயையிலிருந்து உண்டான பலவகை உலகங்களும் அமைந்திருத்தலால், மாயை ஒன்றே முழுப்பிரகாச அருளொளியை உடையதாயும் அதிலிருந்து உண்டாகிய பலவகை உலகங்களும் சூக்கும தூலங்களுக்குத் தக்கவாறு மலம் விரவியிருத்தல்பற்றி ஒளி குறைந்தனவாயுமுள்ளன. முழுஒளிப் பிரகாசமுடைய மாயையே என்றும் மாறாது நிலைத்திருக்கும் தன்மையுடையதாயிருத்தலால், சத்து (absolutely permanent) என்று கூறப்படுகிறது. அதில் அசத்துத்தன்மை சிறிதுமில்லை. மாயையிலிருந்து உண்டான உலகங்கள் அவற்றின் சூக்கும தூலநிலைகளுக்குத் தக்கவாறு குறைந்த ஒளிப்பிரகாசமுடையவைகளாயிருத்தல்பற்றிப் பிரகாசமும் அப்பிரகாசமுமுடையவையாயிருத்தலின் அவையெல்லாம் மாயையை நோக்க அசத்து (relatively permanent) என்று கூறப்படுகின்றன. தோன்றிய பொழுது சிறிதுகாலவெல்லை உள்ளனவாகிய நீர்மேலெழுத்து, கனுக்காட்சி, பேய்த்தேர் என்ற மூன்றுஞ் சடுதியில் மறைந்து போம் தன்மைபற்றி அசத்து என்று கூறப்படினும், அவை சிறிதுகாலவெல்லையில் நிலைத்திருக்கும் பொருட்டன்மைபற்றி சத்து என்றுங் கூறப்படுகிறது. நீர்மேலெழுத்து முதலியன அவை நிகழுங்கால் மெய்யே (சத்து) அன்றி ஏகான்மவாதி

கூறுகிறபடி பொய் (அசத்து) அன்று. கனவிலொருவன் புலி யொன்றைக் கண்டு அச்சமிக்குடையவனானபொழுது, அவ் வநுபவக்குறி அவன் தூல உடம்பினுங் காண்டலால் கனக் காட்சி மெய்யென்பது துணியப்படும். அதுபோலத் தோன்றி மறைவதாயுள்ள தூலஉலகம் அதன் நிலையாமைத் தன்மை பற்றி அசத்து என்று கூறப்படினும் அதன் பொருட்டன்மை பற்றிச் சத்து என்றுங் கூறப்படும். தூல உலகத்தின் பொருட் டன்மையானது, சற்காரியவாத உண்மைப்படி, என்றும் உள் ளது என்பதை நீ யறிவாயாக.

32. மேலே கூறப்பட்ட கருத்துக்களை யெல்லா முள் ளடக்கி ஆசிரியர் "அவை தாம் பிரகாசமாய் நின்றே அப் பிரகாசமாய் நிற்றலான்" என்று ஏதுவைச் சுருங்கிய சொற் களாற் கூறினர். வழிநூலாசிரியரும் "மண்டனிலரசர் வாழ் வும் வானத்தரசயன் மாலார் வாழ்வும்—எண்டரு பூதபேத யோனிகளியாவுமெல்லாம்—கண்டவிந்திரமாசாலங்கனக் கழு திரதங்காட்டி—உண்டுபோலின்றும் பண்பினுலகினை யசத்து மென்பர்" என்று கூறினர். இச்செய்யுளில் வரும் 'அசத் தும்' என்ற எதிர்மறை உண்மையால் சத்தும் ஆகும் என்பது பெறப்படும்.

33. இங்ஙனம் சைவசித்தாந்த உண்மைக்கு மாறு பாடாயுள்ளனவாகிய நையாயிகர் கொள்கையும் சாங்கியர் கொள்கையும் கூறப்பட்டு மறுக்கப்பட்டன. வைசேடி கரும், நையாயிகரைப்போல ஏறக்குறைய ஒத்த தத்துவக் கொள்கைகளை உடையவர் ஆதலின் மறுக்கப்பட்டவர் ஆவர். கிரேக்கர் ஆகிய 'அரிஸ்டாட்டில்' (Aristotle) ஐரோப்பா நாட்டுக்கு அளவை நூலறிவு உதவியதுபோல நையாயிகரும் வைசேடிகரும் தத்துவநாடு ஆகிய நமது இந்தியா நாட்டுக்கு வடமொழியில்* அளவை நூல்கள் எழுதி உதவியவர். சாங் கியர் தத்துவக்கொள்கைகளிற் சில வடமொழிப் பகவத் கீதை (அத்தியாயம் II சுலோகங்கள் 11—39) யிலும் வட மொழி மகாபாரதத்திலும் (XII, 1107, 1198) மைத்திரேய உபநிஷத்திலும் (III, 2, 5) கூறப்பட்டிருக்கின்றன. சாங்கி யருடைய சற்காரியவாதம் பகவத்கீதை இரண்டாவது அத் தியாயம் பதினாறுவது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

---

* The Hindu syllogism of five parts is more complete than the Aristotlean system of three parts" (P. 226: Six Systems of Philosophy by Maxmuller.)

† No Knowledge is equal to that of the Sankhyas, no power to that of the yogas.

இத்துணைச் சிறப்புக்களை உடைய இந்த மூன்று தத்துவக் கொள்கையரும் பிரகிருதிமாயைக்குச் சேர்ந்த இருபத்தினறு தத்துவங்களை அறிவாரேயன்றி யதற்கு மேலேயுள்ள வித்தியா தத்துவக் கூறுபாடுகளையும், சிவதத்துவக் கூறுபாடுகளையும் அறியார். ஆதலின் அவர்கள் தங்கள் ஆராய்ச்சி அறிவு அளவில் அசத்தினிலக்கணத்தை ஒருவாறு அறியவல்லவரே அன்றி முப்பத்தாறு தத்துவங்களுக்கு மேற்பட்டு மெய்யறி வருடைய அநுபவ மெய்யறிவில் விளங்கக்கூடிய சத்தினிலக் கணத்தை அறியவல்லவரல்லர். அதுபற்றி ஆசிரியர் தாங் கூறிய எடுத்துக்காட்டு வெண்பாவில் "மெய்கண்டான் ஆரா யின்" என்றும் "(மெய்கண்டான்) ஓரின்" என்றும் கூறினர் என அறிக. இங்ஙனமாகலின் இம்மூன்று தத்துவக்கொள்கை யரும் அடுத்த இரண்டாவது அதிகரணப்பொருளை உணர மாட்டார் என்பது குறிப்பிடப்பட்டது.

பப்பு

பப்பு என்பது பரப்பு. பரப்பு என்றால் பரவுதல். பரவுதலாவது சொற் பலகூறிப் பலபடப் புகழ்தல். இப்புகழ்ச்சி வஞ்சப்புகழ்ச்சி யாங்கால் பகடிபேசி ஏமாற்ற முயலல் என்று பொருள்படும். "ஏமாற்றம்" என்னும் இப்பொருளில் வருவது குறித்தே "அந்தப் பப்பு பலிக்காது" என்னும் வழக்குத் தமிழில் தோன்றியிருத்தல் வேண்டும். நிற்க,

தெலுங்கில் பப்பு என்றால் பருப்பு என்று பொருள்படுவது கண்டு அப்பொருளே அடிப்படையாக "அந்தப் பப்பு வேகாது" என்றும் "வல்லத்துப் பப்பும் வலங்கிமான் தண்ணீரும்" என்றும் வழங்குவன பொருள் மயக்கமேயாகும்போலும்.

—(கா. சிவ. க.)

ஆராய்ச்சிப் பகுதி : Research

இளங்கோவும் பாவிகமும்

[வித்துவான் S. ஆறுமுக முதலியார், எம். ஏ., எல். டி.]

(முன் கூஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்புடைமை என்னும் பெயரைக்கேட்ட அளவிலேயே அது பெண்ணுக்குத்தான் பொருந்துமென்றும், பெண்களே கற்புடையரா யிருத்தல் வேண்டுமென்றும் சில அறிவிலிக ளாகிய குணக்கேடர்கள் பிதற்றித் திரிகின்றனர். சிறிது கூர்ந்து நோக்கின் ஒழுக்கமுடைமை அல்லது கற்புடைமை யென்பது, ஆண், பெண், முதியோர், இளைஞர், இல்லறத்தோர், துறவறத்தோர் முதலிய எல்லோர்க்கும் இன்றியமையாதென் பது விளங்கும். ஆசிரியர் திருவள்ளுவனர் கருத்தும் இதுவே யாகுமென்பர். நற்குடிப் பிறப்பினும் கற்புச் சிறப்புடையது; மயக்கம் நீங்கிய அறிவினையுடைய ராகும்படி செய்வது கற்பு; சொன்னசொல் தவறுமையே கற்பு என்ற பொருள்களை முறையே தரவல்ல, "குலனுடைமையிற் கற்புச் சிறந்தன்று," "இருள்தீர்ந்த கண்ணராச் செய்வது கற்பு," "கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை" என்ற ஆன்றோர் மொழிகளை நோக்கின், கற்பு பெண்பாலுக்கே உரியதன்றி ஆண்பாலருக் குரியதன்றும் என்பது எவ்வாறு பொருந்தும்? மயக்கம் நீங்கிய அறிவும், சொல்தவறுமையும் பிறகுணங்களும் ஒவ்வொரு வருக்கும் இன்றியமையாதனவாயிருக்க, கற்பு பெண்பாலுக்கே உரியது என்று கூறுவது தகுமோ?

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"
>
> "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை, யஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"
>
> "மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
> பழித்த தொழித்து விடின்"

என்னும் குறள்கள் கற்புடைமையை இல்லற துறவற நெறி நிற் போருக்கும் பெண்களுக்கும் தொகுத்துக் கூறுவன.

> "ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
> உயிரினு மோம்பப் படும்"

என்பது ஒழுக்கமுடைமை அனைவர்க்கு முரியதென்பதைக் காட்டுவதாகும்.

12. கற்புடைமை என்னுஞ் சொல் கற்றவாறு ஒழுகும் ஒழுக்கம் என்னும் பொருளைத் தருகின்றது. ஆண் பெண் ஆகிய இருபாலாரும் கற்கவேண்டியவற்றை ஆசிரியர், பெரியோர், தாய்தந்தையர், கணவர் முதலிய பெரியோரிடம் கசடறக் கற்று, அதற்குத்தக நிற்றல் வேண்டும். இவ்வொழுக்க முறையை, ஆன்றோர் ஆண்பாலருக்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்றும், பெண்பாலருக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்றும் வகுத்துக் கூறுகின்றனர். இவ்விரு திறத்தாருள்ளும் கற்பில்லாதவர் ஒருவாற்றானும் மேம்பாடடையார் என்க.

13. நம்நாட்டில் மக்கள் பண்டுதொட்டு இன்றுகாறும் ஒழுக்க மேம்பாடும் குணநலமும் ஒருங்கே வாய்க்கப்பெற்றுச் சிறந்த ஒழுக்க சீலர்களாக இருந்து வருகின்றனர். பலமொழி இலக்கியங்களைக் காட்டிலும் அதிகமாகத் தமிழ் இலக்கியத்தில் உலகமுழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடிய திருக்குறளும், நாலடியார், நன்னெறி, நல்வழி போன்ற அறவுரை நூல்களும் மல்கிக்கிடப்பது இதற்கொரு சான்றுமாகும். மக்களது உள்ளக்கருத்தை உள்ளபடி வெளிக்காட்டுவது அன்னார்தம் நூல்களல்லவோ? ஒரு நாட்டாரின் நூல்களே அன்னார்தம் நாகரீகத்தையும், உயர்ந்த குறிக்கோள்களையும், பழக்கவழக்கங்களையும் பிறவற்றையும் பிரதிபிம்பித்துக் காட்டும் கண்ணாடியாகும். கடைச்சங்க இறுதிக்காலத்தில் எழுந்த சிலப்பதிகாரத்தினின்றும் கற்புடைப் பெண்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாய்த் திகழும் கண்ணகி தேவியின் தெய்வத்தன்மையும், கற்புடைமையும், வீரச்செயல்களும் விளங்கும். இக்கற்புக்கரசியை மக்கள் அன்றும் "கற்புடைத் தெய்வம்" என்று போற்றிப் புகழ்ந்து, கோயில் சமைத்துத் தெய்வமாகப் பரவிப் பயன் பெற்றனர். இன்றும் கண்ணகியைக் கற்புடைத் தெய்வமெனப் பொற்புடன் போற்றுகின்றோம்.

14 கணவன் மாட்டுக் கரைகடந்த அன்புடையளாய்த் தன் கற்புடைமைக்கு ஏற்ப, தக்கமுறையில், தக்கசமயத்துத் தன் கணவன் குற்றத்தை அறிவுறுத்தவேண்டிய இடத்து அறிவுறுத்தி, தான் கணவனையன்றிப் பிறதெய்வம் பேணாதவள் என்பதையும், கற்புடைப்பெண் தெய்வத்தன்மையுடையவள் என்பதையும், பிற பெண்கள் செய்யமுடியாத வீரச்செயல்களையும் செய்யவல்லள் என்பதையும் எவ்வாறு கண்ணகி தன் வாழ்க்கையின் மூலம் உலகுக்கு எடுத்துக்காட்டினாள் என்று, இளங்கோ அமைக்கும் விதத்தை நோக்குவோம். அவர் முற்கூறியபடி,

" அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉ
முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்"

உலகத்தாருக்குக் காட்டவேண்டியே கண்ணகி வரலாற்றை எழுதினார் என்பது நாமறிந்ததொன்றே. தமிழன்னையின் திருவடிச் சிலம்பாகிய இதனை மக்களின் செவியகத்தே என்ஞான்றும் ஒலித்துக் கொண்டிருக்குமாறு சிலப்பதிகாரம் என்னும் பெயரால் ஆசிரியர் அமைத்தனர் என அறிஞர் கூறுகின்றனர். மூன்று நீதிகளை அவர் நூலுக்கு உள்ளுறை யாகக் கொண்டனரேனும் இடைக்கண் நின்றதாகிய "பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்" என்பதிலேயே அவர் பெரு நோக்குடையார் என்று தோன்றுகிறது.

15 காவியம் முழுவதும் ஊடுருவிச்செல்லும் ஒரு பாவிகமாகக் கண்ணகியின் கற்புடைமையையும் தெய்வத் தன்மையையும் ஆசிரியர் அமைத்துள்ளது, பல்லாற்றானும் வெளிப்படுகிறது. கண்ணகியின் செயல்களாலும், அவள் கற்புடைமையைப்பற்றி கவுந்தியடிகள், கோவலன், ஐயை, தேவந்தி முதலியோர் உயர்த்திப்பேசி சான்றுபகவர்வதா லும், கண்ணகியின் வீரமுழக்கத்தில் வரும் மொழிகளாலும், அரசர்கள் அவளைத் தெய்வமாக்கிச் சிறப்பித்தலாலும் பிற வற்றாலும் இப்பாவிகம் புலப்படுத்தப்படுகிறது.

" உயிரினுஞ் சிறந்தன்று நாணே, நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

என்னும் தொல்காப்பியர் இலக்கணத்துக்குக் கண்ணகி இலக் கியமா யமைக்கப் பட்டுள்ளாள்.

16 நூல் தொடக்கத்தில் பதிகத்தின் பின்னர் வரும் உரைபெறு கட்டுரையில் தமிழ் நாட்டரசரும், கடல் சூழிலங் கைக் கயவாகு மன்னனும் கண்ணகியைத் தெய்வமாகவே கொண்டு கோட்டஞ் சமைத்துத் திருவிழா முதலியன புரிந்த தன்மையையும், அதனால் அந்நாடுகளில் மழைவளம் பெருகி நோயுந் துன்பமும் நீங்கினமையையும் ஆசிரியர் கூறியது, கண்ணகியின் கற்புடைமையைப் படிப்போருள்ளத்தில் முதற் கண்ணேயே பதியவைத்தற்காம். கோவலன் கொலையுண்ட பின் வையைக்கரைவழியே மலைநாடு புக்குத் திருச்செங்குன்று என்னும் மலையையடைந்து தெய்வ வடிவத்துடன் வந்த கோவலனுடன் வானவூர்தியேறிச் சென்றபின் நிகழ்ந்த, கோயில் சமைத்து விழாக்கொண்டாடியதைத் தொடக்கத்தி லேயே ஆசிரியர் கூறிவைத்தது கண்ணகியின் கற்புடைமை புலப்படுவதற்கே. அடியார்க்கு நல்லாரும் மங்கலவாழ்த்துப்

பாடலுரைக்கண் "கண்ணகியை முற்கூறினார், பத்தினியை யேத்துதல் உட்கோளாகலான்" என்றனர்.

17. காவிரிப்பூம்பட்டினத்தில் பெருஞ்செல்வமும் வண்மையும் படைத்த மாநாய்கனுகிய "பெருங்குடி வாணிகன் பெருமட மகளாய்"ப் பிறந்து உருவிலுந் திருவிலுங், குண மேன்மையிலுந் தலைசிறந்து விளங்கி, பெண்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்து அரசரோடு ஒருங்கு வைத்து எண்ணத்தகும் செல்வமும், ஈகையுமுடைய மாசாத்துவானின் மகனுய்த் தோன்றிய கோவலனின் மனைக்கிழத்தியாய் இல்லறம் நடாத்தி, பல இடையூறுகளுற்று, மதுரையிற் கணவனைப் பறிகொடுத்துக், கற்பின் திறத்தால் மதுரையை எரித்து, மலைநாடு புக்குக் கணவனோடு விண்ணுலகேறிய கண்ணகியினது கற்பின்றிறத்தையும் வீரச் சரிதையையும் அறியாதார் நம் நாட்டிலுளரோ?

18. இப்பத்தினித் தெய்வம் வீரபத்தினியாய் விளங்கிற்று. கண்ணகியின் வீரக்கற்பின்முன் பாண்டியன் நெடுஞ்செழியனும் நிற்க வல்லனல்லன் என்றால், பின் என் சொல்வது? கோவலன் கொலையுண்டபின், கண்ணகி பொறுக்க முடியாத துயருற்றுத் தெய்வமுற்றாள் போன்று ஆயினள். அப்பொழுதைய நிகழ்ச்சிகள் மக்கட்டன்மையில் வைத்து ஆராய்தற் குரியனவல்ல. எனினும் அந்நிகழ்ச்சிகள் கண்ணகியை உலகத்தார் அறிந்துகொள்வதற்கும், வீரபத்தினி என்று கொண்டாடுவதற்கும் காரணமாயிருந்தன. அவற்றுள், கண்ணகி காய்கதிர்ச் செல்வனை விளித்துக் கூப்பிட்டுத் தன் கணவன் குற்றவாளியோ என்று கேட்ட வீரமுழக்கமும், அரசன் முன் அஞ்சாது சென்று நின்று, அவனை நற்றிறம்படராக் கொற்கை மன்னனென்றும் தேராமன்னனென்றும் இடித்துரைத்து வழக்காடிப் பெற்ற வெற்றியும், பத்தினிப் பெண்களைக் கூவியழைத்துக் கூறிய நெடுமொழியும் மதுரையை எரியகப்படுத்தியதும் நினைக்க நினைக்க நம்முள்ளத்தைக் கலக்குகின்றன. "ஆரஞருற்ற வீரபத்தினி" என்று ஆசிரியர் கண்ணகியைப்பற்றிக் கூறுவது முற்றிலும் பொருத்தமுடையதே.

19. இனி, எரிக்கடவுள் அந்தண உருவந்தாங்கி வந்து யார்யாரை அழிக்கவேண்டும் என்று கேட்டு அவள் பணித்த வழிநின்றதும், மதுரைத்தெய்வம் தோன்றி அவள் பழம்பிறப்புணர்த்தியதும், காய்கதிர்ச் செல்வன் நின் கணவன் குற்றவாளி யல்லவென்று மறுமொழி கூறியதும் கற்புடை மகளிரின் உரைவழி தெய்வங்களும் நிற்கும் என்னும் உண்மையைப் புலப்படுத்துகின்றன. பின்னர், கண்ணகி சேரன் செங்குட்டு

வனுக்குத் தெய்வவடிவத்தோடு வஞ்சியில் வெளிப்பட்டுக் காட்சிகொடுத்ததோடு, ஆரிய மன்னருக்கும், மாளவ வேந்தனுக்கும், கயவாகு மன்னனுக்கும் அவர்கள் பூசையில் எழுந்தருளி அருள்செய்வேனெனக் கூறினாள். மீட்டும் தேவந்திமேல் வெளிப்பட்டு இளங்கோவடிகளின் வரலாற்றைக் கூறினாள். இவையெல்லாம் தன்னை வழிபடுவோர்க் கருளும் தெய்வமாயினாள் கண்ணகி என்பதைப் புலப்படுத்துகின்றன.

20. இவை போக, கற்புக் காரணமாகக் கண்ணகியிடத்தில் சிறந்து விளங்கிய வேறு குணங்களையும் ஆசிரியர் ஏற்ற முறையில் புலப்படுத்துகின்றன ரன்றோ? கற்புடைமகளிர், தம் கணவர் தம்மைவிட்டுப் பிரிய ஆற்றார். அதுவும் தங்கணவர் பரத்தைபாற் பிரிந்தனர் என அறியின் அவர்களுக் குண்டாகும் செற்றமும், சினமும், ஊடலும் கூறும் தகையன அல்ல. தமக்குரிய உடனுறை இன்பத்தைப் பிறர் பெறுவதோடு, தம் கணவரின் ஒழுக்கக் கேட்டையும் அதனால் தம் மனையறத்துக்கு நிகழ்ந்த பழியையும் உள்ளுங்கால் அவர்கள் உள்ளம் உருகாதோ? கோபத்தீ பொங்கி எழாதோ? ஆனால், இந்நிலையில் கண்ணகியின் நடை எவ்வாறிருந்தது? மாதவி என்னும் கணிகை வயத்தனாய்க் கோவலன் கண்ணகியைப் பிரிந்துசென்று அவள் தன் எண்ணரிய கலன்களைக்கொண்டு போய் மாதவிக்குக் கொடுத்துத் தன் "குலந்தரு வான்பொருட் குன்ற"த்தை முற்றிலு மழித்தான். "கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும்" கொண்டானைத் தம்முல்லை சான்ற கற்பால் பொறுத்தாற்றுவதன் மூலமாகவே தன் பக்கம் திரும்பிய பெருமை கண்ணகிக்கே உரியது. பொறுமைக்கு அணிகலனாகிய கண்ணகி கணவன் பிரிவாற்றாமையினால் தான் உற்ற வருத்தமிகுதியைப் பிறரறியாதபடி வெளிக்குக் காட்டாமல் மறைத்து வைத்துக்கொண்டிருந்தாள். அதோடு பொருள் அனைத்தும் இழந்தானாய் வீடுதிரும்பிய கணவனைக் கண்ணகி கோபித்து வெருட்டி அனுப்பினளோ? அன்று. தன் அன்புள்ளத்தால் பிணித்து, அவன் மனம் மாறும்படி செய்தாள். "சலம் புணர்கொள்கைச் சலதியோடாடிக், குலந்தருவான் பொருட்குன்றந் தொலைத்த, இலம்பாடு நாணுத் தருமெனக்கு"......என் றன்பாற் கழிவிரங்கிக் கூறிய கணவனுக்குக் கண்ணகி, "நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டி" சிலம்புள, கொள்ளும் என்றனள். அச்சிலம்பைப்பெற்று மீட்டும் மாதவிபாற்செல்லுந் துணிவு இந்நிலையிலும் கோவலனுக்கு ஏற்படுமோ? இச்சொல் அவன் உள்ளத்தை ஊடுருவிப் பாய்ந்தது. அன்றுமுதல் வேறு கோவலனாக மாறிவிட்டானன்றோ?

(தொடரும்)

அறிவியற் பகுதி - Science

ஊமைகளைப் பேசுவித்தல்

[திரு. S. நடராஜன் அவர்கள் B. A,. L. T.]

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் மக்கள் கண்டுள்ள புதுமைகள் பல. இவற்றுள் ஊமைகளைப் பேசச்செய்வதும் ஒன்று.

இக்காலத்தில், இயற்கையில் ஊமைகளாய்ப் பிறந்துள்ள குழந்தைகளுக்கு ஒரு தனிப்பட்ட முறையில் கல்வி கற்றுக் கொடுத்துப் பேசப் பழக்கப்பட்டு வருகிறது. மேனாடுகளில் சிறப்பாக அமெரிக்கா தேசத்தில் ஊமை மாணவர்கள் சில காலம் அவர்களுக்கு என்று ஏற்பட்டுள்ள தனிப் பள்ளிகளில் பயின்று பின்னர்ப் பொதுப் பள்ளிக்குச் சென்று உயர்தரக் கல்வியும் பெறுகிறார்கள். நம்நாட்டில் சில காலமாக ஊமைகளுக்குக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது.

முதல் முதலாக நம் நாட்டில் இத்துறையில் தீவிரமாய் இறங்கியவர்கள் வங்காளிகளே யாவர். கல்கத்தாவில் இருக்கும் ஊமைப்பிள்ளைகள் பள்ளிக்கூடம் 1893-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. நம் நாட்டில் இது காலை 25 பள்ளிக்கூடங்கள் ஊமை மாணவர்களுக்குப் பணியாற்றி வருகின்றன.

தென்னாட்டில் முதல் முதல் இத்துறையில் இறங்கியவர்கள் கிறித்தவ மிஷனரிகள். இவர்கள் சுமார் 1901-ம் ஆண்டில் C. E. Z M. சார்பில் பாளையங்கோட்டையில் ஒரு பள்ளிக்கூடம் தொடங்கினார்கள். இந்தியநாட்டில் இம்மாணவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் மிகச் சொற்பமே எனினும், இவை நல்ல தொண்டாற்றிவருகின்றன.

ஊமைகளுக்குக் கல்வி போதிப்பதென்பதையும், அவர்களுக்கு அவர்கள் இழந்து தவிக்கும், பேச்சுக் கற்றுக்கொடுக்கக் கூடும் என்பதையும் பொதுமக்களுக்கு எடுத்து விபரமாகக்கூறப் போதிய வசதி கிடைக்கவில்லை. ஆங்காங்கு அவ்வப்போது சிற்சில ஆசிரியர்களும் பிறரும் செய்துள்ள சொற்பொழிவுகள் தவிர கட்டுப்பாடாகச் செய்தித் தாள்கள் வாயிலாய் இப்பொருள்பற்றிப் பொதுமக்கள் கவனத்திற்கு

கொண்டுவரும் கட்டுரைகள் வந்தில. ஈண்டு நம் செந்தமிழ்ச் செல்வி இப்பணிக்கு இடந்தந்து, புலன் குறைந்து வருந்தும் மக்கள் இனத்திற்குத் தொண்டு புரிய முன்வந்துள்ளமை சாலவும் பாராட்டத்தக்கதாம். அன்பெனும் இத்தாண்டு கோல் காரணமாக, சென்ற 12 ஆண்டுகளாய் ஊமை மாண வர்களுக்குக் கல்வி போதித்து வந்துள்ள எமது அநுபவங் களைச் செல்வியின் மூலம் வெளிப்படுத்த எண்ணியுள்ளோம்.

1. ஊமைகள் யார்?

ஊமைகள் யார்? இவ்வினு வியப்பாகத் தோன்றலாம். ஏன் எனில் நாம் யாண்டும் ஊமைகளைக் காண்கின்றோம். பொதுவாக "வாய் பேசாதவன் ஊமை" எனக் கேட்டும் படித்தும் இருக்கிறோம். ஊமை ஏன் பேசாது இருக்கிறான்? இவ்வினு சாலவும் நகைப்பைத் தரலாம். ஊமையாகப் பிறந்த தால் ஊமையாய் இருக்கிறான் என விடைதந்து வினவியவரை எள்ளி நகையாடலாம். நாம் எப்படிப் பேசக் கற்றுக்கொள் கிறோம் என ஒரு நிமிடம் சிந்தித்தால் இவர்கள் ஏன் ஊமை யாய் இருக்கிறார்கள் என்பது எளிதிற் புலப்படும். நாம் ஒவ் வொருவரும் சீனதேசத்துப் பாஷைகளுக்கு ஊமைகளே யாவோம்! நமக்கு அம்மொழி பேசத் தெரியாது. ஆண்டுச் சென்றாலும் நம் தேவைகளைத் தெரியப்படுத்த ஊமைச்சா டையே காட்டுகிறோம். அத்தேய மக்கள் பேசுவது நமக்கு விளங்குவதில்லை. ஏன்?

நாம் எவ்வாறு பேசக் கற்றுக்கொள்கிறோம் எனச் சற்றுக் கவனியுங்கள். ஐம்புலன்களும் நிறைவுபெற்று வளர்ச்சியுற்றுப் பிறந்த ஒரு குழந்தையை எடுத்துக்கொள்வோம்.

இவ்வுலகில் பிறந்ததும் அஃது என்னசெய்யத் தொடங்கு கிறது? கீழே குழந்தை தரையில் விழவும், சத்தமிடுகிறது. அதன் மெய்யுணர்வும், காதும் வேலைசெய்யத் தொடங்கு கின்றன. பின்னர்க் கண்ணும், நாவும், மூக்கும் [வாசனை அறி தல்] தத்தம் வேலையைச் செய்கின்றன. இக்குழந்தையானது தன்னைச் சுற்றித் தாய் தந்தையரும், உற்றாரும், மற்றோரும், பேசும் குரலைக் கேட்கின்றது. இக்குரல் குழந்தையின் காதின் வழியே மூளையை அடைகிறது. மூளையில் ஐம்புலன்களுக்கும் தனித்தனியே ஐந்து இடங்கள் இருக்கின்றன. இவ்விடங்கள் புலன்களின் வழிவரும் செய்திகளை வாங்கி அவைகளைப் பகுத்து அறிகின்றன. பகுத்து அறிந்தசெய்தி குழந்தையின் அறிவாகும். இவ்வறிவின் தன்மையைப் பொறுத்தே அதின் வெளிச்செயல்கள் நிகழும்.

இதற்கு எடுத்துக்காட்டு ஒன்று கூறுவோம். தமிழர் வீட்டிற்பிறக்கும் குழந்தை தாயை "அம்மா" என அழைக்கிறது. ஆங்கிலேயர் வீட்டில் பிறந்த குழந்தை தன் தாயை "மம்மா" (Mamma) என அழைக்கிறது. இதற்குக் காரணம் என்ன? தமிழர் வீட்டில் பிறந்த குழந்தை "அம்மா" என்ற சத்தத்தைக் கேட்கின்றது. இச் சத்தமாகிய செய்தியானது காதின் வழியே பல முறையும் மூளையிலுள்ள கேள்விமையத்தை (Hearing Centre) அடைகிறது. இங்கு மூளையால் இச் சத்தம் பகுத்தறியப்பட்டு, குழந்தை "அம்மா" என்ற சத்தத்தைக் கண்டுகொள்கிறது. பின்னர் "அம்மா" எனத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பழகுகிறது. "அம்மா" என்பதைப் பிழைபடக் குழந்தைகள் பலமுறை மழலை மொழிவதை நாம் கேட் டானந்தப்படுகிறோ மன்றோ! பின்னர் "அம்மா" எனக் குழந்தை அழைக்கும்போது தாய் திரும்பிப் பார்க்கின்றாள். குழந்தைதான் சொல்லும் "அம்மா" என்றவொலி தன் தாயின் கவனத்தை இழுத்துத் தன் பசி ஆற்றுவதை உணர்கிறது. பின்னர் "அம்மா" என்ற சொல்லின் பொருள் முழுவதும் அறிந்து தன் பேச்சில் "அம்மா" என உபயோகப்படுத்துகிறது. இவ்வாறே ஆங்கிலேயர் வீட்டில் ஆங்கிலமும், தெலுங்கர் வீட்டில் தெலுங்கும், சீனர் வீட்டில் சீனமும் பேசக் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன. பேசுவதற்கு நாம் முதலில் சத்தத்தைக் கேட்கவேண்டும். இரண்டாவதாகச் சத்தத்தைப் பகுத்து அறிய வேண்டும். மூன்றாவதாக அதைச் சொல்லிப் பழகவேண்டும். இம்மூன்று நிகழ்ச்சிகளும் முறையே இயற்கையின் உதவியால் நடைபெற நாம் பேசுகிறோம். ஒருவன் காதில் விழாத ஒரு மொழியை ஒருவன் பேசமுடியாது எனத்திட்டமாகக் கூறலாம். நாம் காதின் வழியே பேசக் கற்றுக்கொள்கிறோம். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நந் தமிழ் நாடு பரப்புக் குறைந்தது எனலாம். இங்கு வடதிசையில் பேசும் தொனிக்கும், தென்றிசையில் திருநெல்வேலியில் பேசும் தொனிக்கும் வேறுபாடுகள் காண்கின்றன. இதற்குக்காரணம், செவியேயன்றோ!

இது காறும் கூறியவாற்றால் செவியின் மூலம் நாம் பேசக் கற்கின்றோம் என்பது தெளிவுபெறும். ஒருவன் பிறவியில் கருவிலோ, கருவுயிர்க்கும் பொழுதோ அல்லது கருவுயிர்த்த உடனே, செவிடானால் அவன் பேச்சைக் கேட்கக் கூடாமையால், பேசும் தன்மையை முழுதும் இழந்து ஊமையனாகின்றான். சில குழைந்தைகள் 3 வயது 4 வயது வரை காது கேட்டு மழலை பேசி, விளையாடி யிருந்து பின்னர் அம்மை, மலேரியா, முதலிய நோய் வாய்ப்பட்டும்;

மேலிருந்து விழுதல், கன்னத்தில் அடிபடுதல் முதலிய எதிர்பாரா நிகழ்ச்சிகளாலும் செவிடானால் அவர்களும் ஊமையாய் விடுகிறார்கள்.

அமெரிக்கா நாட்டில், இடையில் உண்டாகும் செவிட்டினால் ஊமையாய் உள்ளவர்களைப்பற்றிக் கணக்கெடுத்துள்ள புள்ளி விபரங்களைப் படித்தபொழுது அங்கு 10 வயதிற்குள் ஒருவன் செவிடானால் அவன் கற்ற பேச்சையும் இழந்து ஊமையனாய் விடுகிறான் எனக்கண்டோம். இக்கூற்றுக்கு எடுத்துக்காட்டாக எம்முடைய 12 ஆண்டுப் பழக்கத்தில் இரண்டு இடத்தில் காணநேரிட்டது. மதுரைமா நகரில் உள்ள ஊமைப் பிள்ளைகள் பள்ளிக்கு 7 வயது சென்ற ஒரு மாணவன் ஒரு நாள் கொண்டுவரப்பட்டான். அவன் 6 வயது வரை நன்றாய்ப் பேசிக்கொண் டிருந்தவன். அந்நகரின்கணுள்ள சேதுபதி உயர்தரக் கலாசாலையில் ஆரம்ப வகுப்பில் பயின்றவன். அவன் தந்தையும் அப்பள்ளியில் ஆசிரியராய் இருந்தவர். அவனது ஆறும் வயதில் அம்மை கண்டதாயும், அவ்வம்மைநோய் அவனது கேட்கும் சத்தியைக் கொள்ளை கொண்டு விட்டதாயும், அம்மை குணமானதில் இருந்து பையன் செவிடனாய் வரவரத் தன் தேவைகளை சாடைகாட்டித் தெரியப்படுத்தத் தொடங்கி ஊமையாய் விட்டான் எனத் துயரத்துடன் அவன் தந்தை கூறினார். இரண்டாவதாக, கோவைமா நகரில் உள்ள ஊமைப் பிள்ளைகள் பள்ளிக்கு 4 திங்கட்கு முன்னர் ஒரு மாணவன் கொண்டுவரப்பட்டான். இவன் வயது 11. இவன் பத்தாம் வயதுவரை இந்நகரினுள்ள ஆரம்ப பாடசாலையில் மூன்றாவதுவரை படித்ததாகவும், பின்னர் மலேரியாக் காய்ச்சலின் காரணமாகச் செவிடானதாயும், செவிடானதிலிருந்து சாடைகாட்டி வருவதாயும் இவன் பாட்டனார் கூறினார். இம்மாணவனும் பள்ளியிற் சேர்த்துக்கொள்ளப்பட்டுத் தனிமுறைப்படி கல்வி பயின்று வருகின்றான். காது கேளாமையால் ஒருவன் ஊமையாகிறான் என்பதற்கு இவைகளே போதிய சான்றாம்.

உள்நாக்கு இல்லாததால் ஒருவன் ஊமையாகின்றான் என்ற தவறுதலான எண்ணம் மக்களிடையே நிலவக் காண்கின்றோம். பேசுவதற்கு வேண்டிய உறுப்புக்கள் ஊமைகளுக்குக் குறைவுபட்டனவாய் இல்லை. பேசுவதற்கு வேண்டிய உறுப்புக்களாவன:— குரல்வளை or சங்கு (Larynx), தொண்டை (Pharynx), உண்ணாவு (உள்+நாவு) (Epiglottis), அண்ணாவு (அண்ணத்தின் அடிப்பாகத்திலுள்ள நாவு) (Uvula), அண்ணம் (Palate), நா (Tongue), உதடு (Lip),

மூக்கு (Nose). பொதுவாக நாம் ஊமைகளென ஒதுக்கியுள்ள கூட்டத்தினரில் இவ்வுறுப்புக்களில் குறைகள் காணப்படுவதில்லை. ஊமைகள் நன்றாய்ச் சத்தமிடுவது அவர்களின் குரல்வளை நன்றாய் இருப்பதைக் காட்டுகிறது. உண்ணாவானது மனிதனுக்கு இன்றியமையா உறுப்பாகும். இது காற்றுக் குழாயை (Wind Pipe) மூடுவதற்காக ஏற்பட்டுள்ளது. இது சரியாய் இராவிட்டால் மனிதன் நோயின்றி வாழமுடியாது. இவ்விரு உறுப்புமே கட்புலனுக்கு எளிதில் தோன்றாதவை. மற்றவைகளைப் பார்த்த உடனே அவைகளின் மிகை, குறைவு அறிந்து கொள்ளலாம். ஊமைகள் என்று சொல்லப்படுவோருக்குப் பேசுவதற்கு வேண்டிய உறுப்புக்கள் ஈனமடையவில்லை. ஆனால் அவர்கள் ஊமையாய் இருப்பதற்குக் காரணம் காது கேளாமையே. இயற்கை அவனைச் செவிடனாக்கியது. சமூகம் அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்காது ஊமையாக்கிவிட்டது.

ஒருவனுக்குக் காது கேளாவிட்டால் அவன் மிகவும் பரிதாபகரமான நிலையை அடைகின்றான்; விலங்குணர்ச்சிபெறுகின்றான். மனித உணர்ச்சி பெறுவது மிகவும் கடினமாகிறது. அறிவு வளர்ச்சிக்குச் சாலவும் இன்றியமையாத புலன் செவியேயாகும். செவிக்குறைவு செவிட்டுத் தன்மையையன்றி ஊமைத் தன்மையையும் உண்டாக்கி, அறிவையும் முன்னேறவிடாமல் மனிதனை மானிட விலங்கென வாழவிடுக்கிறது. இதனாலன்றோ நம் செந்நாப் போதாரும்,

> "செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
> செல்வத்துள் எல்லாம் தலை"

எனக் கூறிப்போந்தார்!

காதிழந்து அது காரணமாய்ப் பேச்சிழந்து அவதியுறும் மக்கள் ஊமை எனப்படுவார் என நாம் அறிதல்வேண்டும். மேனாடுகளில் செவிட்டின் காரணமாய் ஊமையான இச் செவிட்டூமைகளை Deaf and Dumb எனக் கூறுவதில்லை. இவர்களுக்கென இருக்கும் தனிப்பள்ளிகளைச் செவிடர் பள்ளிக் கூடம் (Schools for the Deaf) எனப் பெயரிட்டுள்ளார்கள்.

செவிடுகளில் பலவகைகள் காணலாம். அடுத்த அதிகாரத்தில் இவை விளக்கப்படும்.

(தொடரும்)

"வீரரும் வீரரைப் போற்றலும்"

[திருமதி குணஜனார்த்தனம் M. A., L. T.]

(௯க-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் முதலெழு வள்ளல்களில் ஒருவனாகிய கன்னனும் உண்மை வீரனுக்கோர் உயரிய சான்றுவன். மாற்றார் பக்கல் இருந்த கன்னன் தன்மகனென அறிந்த அவன்தன் அருமைத்தாய் அவன்பாற் சென்று, 'வருக என் மதலாய்! வந்து நின்னிளைஞர் ஐவரும் மனமொத்து நினக்கு ஏவலே புரிய தனிஅரசு செலுத்துவாய்', என மொழிந்தாள். ஆனால் கன்னன் அவள் மொழிக் கிசையாமல், 'இராசராசனுக்காகச் செருமுனைச் சென்று செஞ்சோற்றுக்கடன் கழிப்பதுவே யெனக்கினிப் புகழும், கருமமுந் தருமமும்;" என்றான். கன்னனும் கும்பகன்னனும் போரில் வெற்றியடைந்தார்களில்லையே! அவர்கள் போரில் தோற்றழிந்தும் அவர்களை வீரராகக் கருதுவதென்? உண்மை நெறியை உறுதிநெறியாக அவர்கள் ஒழுகினதாலன்றோ அன்னோரை யின்றும் இவ்வுலகம் போற்றிப் புகழ்கின்றது?

பண்டைக்காலத்து மன்னர்கள் எத்தகை வீரர்களாய் விளங்கினார்கள்? அவர்கள் வீரம் என்னே! ஆற்றல் என்னே!! அவர்கள் இற்றைநாளைய போராகிய கொடும்போர் புரிந்தார்களல்லர். அந்தோ! ஒன்றுமறியாப் பசுங்குழந்தைகள் மீதும், பெண்கள் மீதும், இன்னும் எளியோர் மாட்டும் சினந்து சென்றனரா? தாம் படையெடுத்து வரும்போதே,

> "ஆவுமானியற் பார்ப்பன மாக்களும்
> பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
> தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரு
> மெம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
> வறத்தாறு நுவ" லுவர் பண்டைவீரர்.

தன்வலிக்கு ஒப்பானவரிடத்திலே போரிடுதல் அறமென்றும் எளியோர்பால் எதிர்த்துச்செல்வது கொடுங்கோலையென்றும் உண்மை வீரன் எண்ணுவான். அஃதேபோல் நமது பண்டைய மன்னர்களும் ஒழுகிவந்தனர்.

மேலும் போருக்குச்சென்ற வீரன் தோல்வியுறின் வீடு திரும்பான். போரில் தோற்றால் அப்போர்க்களத்திலேயே உணவின்றிப் பட்டினிகிடந்து உயிர்துறப்பதே வீரனுக்கு

அழகு எனக் கருதுவான். புறநானூற்றுச் செய்யுள்கள் பல இதற்குச் சான்று பகர்கின்றன.

இத்தகைய வீரரை விடுத்துத் தெய்வபக்தியிற் சிறந்து விளங்கிய வீரரைச் சிறிது ஆராய்வாம். ஆண்டவன்பால் அன்பு மேலிட்டுத் தெய்வத்தொண்டு புரிபவர் எங்ஙனம் வீரராவர் என ஐயுறலாம். வீரம் என்பதின் உண்மைப் பொருளை உன்னுவீர்களாயின் அவ்வாறு நினைக்க இடமிராது. உண்மையெனக் கண்ட நெறிபற்றிப் போகுங்கால் இடையூறுகள் பல நேர்ந்த போழ்தும் அந்நெறியினின்று சிறிதும் பிறழாது இருப்பதே வீரமாகும். தம்பக்தியின் பொருட்டு அல்லல் பட்டவர் எத்துணைபேர்! வீரமென்னும் ஓர் உயரிய பண்பு அவர்பால் வேரூன்றி யிருந்ததாலன்றோ அத்துணை ஊறுகளுக்கும் ஈடுகொடுத்து மனந்தளராமலிருந்தனர்?

நால்வருள் ஒருவராகிய அப்பரின் அருஞ் சரிதையினைக் கருதுவாம். அவர் முதலில் சமணராயிருந்து, பின்பு தந் தமக்கையாரின் திருவருளால் சைவப்பெரியாராயினர். இப்படிச் சைவரானதை யறிந்த சமணர்கள் வெகுண்டு அரசனிடம் முறையிட, அரசனும் சமணனாகலின், அவரைத் துன்புறுத்தத் தொடங்கினான்.

அரசன் அப்பரை நீற்றறையில் விடுத்தான். அவர் அதனுள் முகமலர்ச்சியோடு சென்றார். அந்த நீற்றறையும் அவருக்கோர் குளிர்ந்தசோலைபோன்றிருந்தது. பின்பு அவருக்கு நஞ்சு கலந்த பாலைக் கொடுத்தான். அப்போதேனும் அப்பர்பெருமான் அஞ்சினாரோ? இல்லை. இல்லை. தன்னெறி உண்மை நெறியென அவர் தெளியத் தெரிந்தாராதலால், எதற்கும் அஞ்சா நெஞ்சினராய் அரசனுடைய ஒறுத்தல்களனைத்தையும் உவகையுடன் ஏற்றார்.

பின்னர் அவரைக் கல்லிலே பிணித்துக் கடலிலே விடுத்தனர். அவருக்கு உறுதியான மனவலிமை யில்லாதிருப்பின் அப்போதேனும் தான் செய்தது தவறென்றும், தன்னெறி பொய்யென்றும் கூறியிருப்பாரன்றோ? நேர் நிலை வழி நின்ற அவர் இதற்கும் அஞ்சினாரில்லை. எம்பெருமான் திருவருளால் கல்லுந் தெப்பமாக மிதந்தது.

துருவன் ஐயாண்டுக் குழந்தையாயிருந்தும் மனத்துணிவுடன் கானகஞ் சென்று அக்காட்டிலுள்ள விலங்குகள் வெருட்டவும் சிறிதும் அஞ்சாது தான் கொண்ட தவநிலையில் மனதைச் செலுத்தினான். எத்துணைத் துணிவு! எத்துணை வீரம்!! பிரகலாதனும் ஓர் அரும்பெரும் வீரனே. ஊரார்

அனைவரும் தன் தந்தைக்குப் பயந்து அவனிட்ட ஆணைக்கேற்ப இரணிய நாமமே முழங்கி வர, அவன் துணிவுடன் நாராயணா வென்றே மொழிந்து வந்தான். நஞ்சுக்கு அஞ்சினனோ? மதயானை கண்டு மயங்கினனோ? தந்தையின் உருட்டல் மிரட்டல்களுக்குப் பயந்தானோ? மலைமேலிருந்து கீழே உருட்டியபோது மனங்கலங்கினனோ? அத்தகையோனை வீரனென்னுது வேறென்னென்று இயம்புவது?

புலவர்களும் வீரராக விளங்கலாம் என்பதற்குப் போதிய சான்று நக்கீரனாரேயாவர். அவர் சிவபெருமான் பாடிய ஒரு பாட்டில் குறைகண்டு கூற, அப்பெம்மான் புலவர் வடிவாகத்தோன்றி வாதித்தும், நக்கீரர் தான்கொண்ட கொள்கையைக் கைவிடாதது கண்டு, அவர்தம் நெற்றிக் கண்ணைக் காட்டினாராம். தாம் மெய்யல்லவென்று கண்ட ஒன்றைத் தமக்குவரும் ஏதம் குறித்தாயினும் மெய்யெனக் கொண்டாரில்லை. "நீர் நெற்றிக்கண்ணைக் காட்டினாலுங் குற்றங் குற்றமே" என வாதித்த அவர்தம் மனச்சான்று என்னே!

இனி, இயேசுநாதரைச் சிலர் தெய்வமாகப்போற்றுகின்றனர். இன்னுஞ் சிலர் அவர் தெய்வமல்லரென்றும், தங்கள் தெய்வத்தைத் தவிர்த்து வேறு கடவுளே கிடையாதென்றுஞ் சாதிக்கின்றனர். அஃது எப்படியாயினு மாகுக.

இயேசுநாதர் கடவுளின் கூறு எனக் கூறப்படுகின்றார். மேலும் அவர் இறந்தவரை உயிர்ப்பித்தல், குருடனுக்குக் கண்ணளித்தல், பிணிவாய்ப்பட்டோரைத் தம் வாய்மொழி யாலே பிணி நீக்குதல் முதலிய வியத்தகு செய்கைகள் நிகழ்த்தினரெனக் கூறப்படுகிறது. அவர் சிலுவையில் அறையப் பட்டு உயிர் போகுந் தருவாயிலிருந்தபோழ்தும், பொதுமக்கள் அவர்பால் அலர் தூற்ற அவ்வருந் துயரத்தினும் அவர்களுக்குக் கெடுதி நினைத்தாரல்லர். "எந்தையே! இவர்கள் அறியாமையினால் என்னை இவ்வாறு துன்புறுத்துகிறார்கள். ஆகவே அவர்களைப் பொறுத்தருளல் வேண்டும்," என அவர் பேரிரக்கங்கொண்டு ஆண்டவனை வேண்டுவது நம்மனத்தை உருக்குவதாகும்.

விலங்கு நீர்மைமிக்க கொடியோர் அவரைப்பற்றிச் சென்று பலவாறு அவருக்கு இன்னல் விளைத்தார்கள்; அவர்மீது எச்சிலுமிழ்ந்தார்கள்; கன்னத்தி லறைந்தார்கள்; தலையி லடித்தார்கள்; முட்களால் முடிசெய்து சூட்டி எள்ளி நகையாடினர்; இன்னும் எத்துணையோ கொடுமைக ளியற்

றினர். பின்பு சிறுவையில், ஆணிகொண்டு கையிலும் காலிலும் அறைந்தனர். இத்துணையும் பொறுத்துக்கொண்ட அவர் ஒரு கடுஞ் சொல்லும் செப்பினாரல்லர். கருணைக் கடலாகவும் பொறுமைக் களஞ்சியமாகவும் விளங்கிய அவர் அது போழ்தும், "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை," என்ற குறளுக்குப் பொருந்திய சான்றாக விளங்கினார்.

தம் பகைவர் உறுத்தல்களுக்குப் பயந்து தாம் மெய்யெனக் கண்டதைப் பொய்யாகக் கொண்டனரோ? தன்னைக் கொல்லும்பொருட்டு வழிதேடும் போழ்தும், 'யான் ஆண்டவனின் திருமகனே,' என்று உறுதியாகக் கூறினார். அம்மாற்றம் என்று வெளிவருமோவென அமயம் பார்த்திருந்த அவர்தம் பகைவர் அவர்மீது குற்றஞ்சாட்டிச் சிலுவையிலறைந்தனர். இறுதிவரை அவர்தாம் கண்ட நெறியினின்றும் பிறழாது ஒரே நிலையின் தலைநின்றார்.

இங்ஙனம் ஒரே நிலையில் தாங்கண்ட உண்மையை நிலைநாட்டுவதில் எத்துணை யிடர்ப்பாடுகள் நேரிட்டபோழ்தும் இவ்வுண்மையினின்றும் வழாது நின்று கருணையே உருவாகவும், பொறுமையே கலனாகவும் பெற்ற இயேசு பெருமானை வீரனென்னாது பின்னை யென்னென்றியம்புவது! வீரனுக்காம் வாய்மை, கருணை, தியாகம், பொறுமை, மனவலிமை ஆகிய இவை அவர்பால் மிளிர்ந்த தன்மையை நோக்கின் அவரை ஓர் வீரனல்லவென்றுங் கூறுதலியலுமோ?

(தொடரும்)

தமிழ்க்கலைச் சொல்லாக்கன் மாநாடு

இலங்கை உயர்திரு. விபுலாநந்த சுவாமிகள்

தலைமையுரை

(முன் க0உ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறமொழியிலிருந்து எடுத்த பதங்களைத் தமிழில் வழங்குமிடத்து அவைதம்மை எவ்வாறு தமிழாக்கிக் கொள்ளுதல் வேண்டுமென்பதைக் குறித்து ஒருசில குறிப்புக் கூறுவாம். ஒவ்வொரு மொழிக்கும் சிற்சில சிறப்பியல்புகளுள. அவைதம்மை மாறுபடாது பாதுகாத்தல் ஆன்றோர்க் கியல்பு. யாப்பியலிற் கூறிய காசு, நாள், மலர், பிறப்பு எனும் நால்வகை வாய்பாடும்பற்றி நடப்பன, ஓரெழுத்தொரு மொழியும்

ஈரெழுத்தொரு மொழியும், இரண்டிறந்திசைப்பன வினைத்தும் தொடர்மொழியே யாம். அவைதாம் ஈரசை கொண்டும் மூவசை புணர்ந்தும் சீரியைந்திறுவன. ஈரசை மொழிகளே பெருவரவின. மூவசையின் மிக்க மொழிகள் தமிழிற் பயில்வதில்லை. மொழி முதலினும் இறுதியினும் நிற்றற்குரிய எழுத்து இவையாமெனவும் இன்ன இன்ன எழுத்துக்களின் முன்னர் இன்ன இன்ன எழுத்துக்கள் மயங்காவெனவும் இலக்கண நூலாசிரியர் வகுத்துக்காட்டி யிருக்கின்றனர். அவர் ஆராய்ந்தமைத்த விதிகளுக்கு இயைவாகச் சொற்களை யாக்கிக் கொள்ளுதல் முறையாகும். உயிருள்ள மொழியானது பிறமொழித் தொடர்புகொண்டு தனக்குரிய சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ளுதல் வேண்டும் வினையெஞ்சுகிளவி, பெயரெஞ்சு கிளவி, தொகைமொழி; தொடர்மொழி என்றின்னவற்றிற்கு இலக்கண நூலாசிரியர் கூறிய வரம்பினைக் கடைப்பிடிப்பது எவ்வாற்றானும் இன்றியமையாததேயாம்.

வாங்கு, மேசை, கதிரை என்னும் மொழிகள் Bench, Table, Chair என்னும் ஆங்கிலச்சொற்களின் மொழிபெயர்ப்பாக ஈழநாட்டில் வழங்கப்படுகின்றன. இவை போர்த்துகீசமொழியிலிருந்து தமிழில் வந்து வழங்குந் திசைமொழிகளாமென்பதைப் பெரும்பாலார் அறிந்துகொள்வதில்லை. இச்சொற்கள் தமிழுருவுடையவாதலின், வேறுபாடின்றி வழங்கப்படுகின்றன. ஒரேயினப் பொருள்களைக் குறிக்குஞ் சொற்கள் ஒரே விகுதிபெற்று நிற்றலும், முரணிய இனச்சொற்கள் ஒரே வாய்பாட்டால் நடந்து பெரும்பாலும் ஒரேயெதுகையவாக நிற்றலும் தமிழ் வழக்கு. அறம், மறம் எனும் முரணிய வினைச்சொற்கள் ஒரே யெதுகையவாக அமைந்து நிற்றலை நோக்குக. இம்முடிபுகளுக்கு எடுத்துக்காட்டாக "மின்சார சாத்திர வரலாறு" என்னும் பொருள்பற்றி யானெழுதிய கட்டுரையி னொருபாகத்தைப் படிக்கின்றேன்.

"ஊசிக் காந்தத்தினியல்பு மிகப்பழைய காலந்தொட்டுப் பல தேசத்துப் பண்டிதர்களாலும் அறியப்பட்டு வந்து, காந்தக் கோட்டையினருகே சென்ற கப்பலொன்றிலிருந்த ஆணிகளெல்லாங் கழன்று போகக் கபபல் அழிந்து போயிற்று எனக் கூறும் பழங் கதையும் உண்டு. காந்தக் கட்டியினால் உரிஞ்சப்பட்ட இரும்புத் துண்டு காந்தத்தினியல்பினைப் பெறுமென்பதை முன்னோ ரறிந்திருந்தனர். யவனபுரத்திலே மிலேத்துஸ் என்னும் பகுதியில் வதிந்த தாலேஸ் என்பாரொருவர் பொன்னம்பர் என்னும் ஒருவகைப் பிசின்

கையினால் உரிஞ்சப்படின் கடிதத்துண்டு போன்ற பாரமற்ற பொருள்களைக் கவரும் வன்மையைப் பெறுமெனக் கண்டறிந்தனர். பின்னாளிற் பதினேழாம் நூற்றாண்டி னாரம்பத்திலே இலண்டன் பட்டினத்தில் வசித்த கில்பேர்ட் என்பார் ஓராசிரியர் பலவகைப் பொருள்களையும் பரீக்ஷித்ததன் பயனாகக் கண்ணாடி, கந்தகம், முத்திரை மெழுகு, வைரம், கோமேதகம், குங்கிலியம் ஆதிய பொருள்கள் பட்டுத்துணி முதலியவற்றால் உரிஞ்சப்படின், ஒருவகைக் கவரும் சக்தியைப் பெறுமெனக் கண்டுபிடித்தனர். இப்பொருள்களையெல்லாம் பொன்னம்பரைக் குறிக்கும் யவனபுர மொழியினாலே "எலேக்ரிறிக்ஸ்" எனக் குறியீடு செய்தனர். இவருக்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின்பு வாழ்ந்த ஸ்டீபன் கிரே(1670—1736) என்னும் ஆங்கிலேயர் மேற்கூறிய கவருஞ்சக்தி உலோகப் பொருள்களாலான தந்திகள் வழியாக எளிதிற் பாயுமென்றும் பட்டுத்துணி முதலியவற்றினாலே தடைப்படுமென்றுங் கண்டனர். ஆங்கதுபற்றி இவர் பொருள்களை உகைவன (Conductors), தகைவன (Non-Conductors, insulators) என இருதிறப்படுத்திக் கூறினர். [ஊர்தல், உய்த்தல், உகைதல், ஒட்டல், நடத்தல், செலுத்தல் என்பன ஒரு பொருட் சொற்கள்; தகைதல், தடுத்தல், சிறைப்படுத்தல் என்பன ஒரு பொருட் சொற்கள்]. இவர் காலத்தில் வசித்த டேபே (1698—1739) (என்னும் பிராஞ்சியர் உரிஞ்சுதலாற் பிறக்குஞ் சக்தி இருவகைப்படுமெனக் கண்டு அவற்றினை Vitreous கண்ணாடியைச் சார்ந்த) Vemous (குங்கிலியத்தைச் சார்ந்த) என வெவ்வேறு அடை கொடுத்து வழங்குவாராயினர். 1746-ம் ஆண்டிலே பீட்டர்வன் முஸ்சேன் புறாக் என்னும் ஒல்லாந்த தேசத்து ஆசிரியர் லேடன் சால் என வழங்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். லேடன் என்பது ஒல்லாந்து நாட்டிலுள்ள நகரின் பெயர்; சால் (ஜாடி). ஈங்கு கண்ணாடியாற் செய்த ஒரு பாத்திரத்தைக் குறிக்கும். உள்ளும் புறம்பும் உலோகத் தகட்டினால் மருவப்பட்ட ஒரு கண்ணாடிப்பாத்திரத்தினால் அமைத்தது இவ்வியந்திரம். இதனைப்பற்றிப் பின்னர்க் கூறுவாம். இவ்வியந்திரத்திலிருந்து எழுந்த சக்தியின் தாக்கல் பலருக்கு அதிசயத்தை விளைத்தது. அக்காலத்திலே அமெரிக்க நாட்டில் வாழ்ந்த பெஞ்சமின் விறுங்கிளின் (1706—1790) என்பார் லேடன் சாலிலிருந் தெழுந்த தாக்கலும் (Discharge) ஒளிவீச்சும் (Light effect) மேகத்திலிருந்தெழும் இடியேற்றையும் மின்னலையும் நிகர்த்தலாமெனக் கண்டனர். இவர் மின்னலின் தன்மையைப் பரீக்ஷிக்கக் கருதி உலோகப் பொருளினாலான

தந்தி யொன்றினைக் காற்றாடிப் பட்டத்திற் கட்டி மேலேற்றி ஆராய்ச்சி செய்தார். இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனாகப் பொன்னம்பர் கண்ணாடி முதலியவற்றை உரிஞ்சுதலாற் பிறக்குஞ் சக்தி மின்னற் கொடியாக மேகத்திற் றோன்றுகிற மின் சக்தியோடு ஒன்றாகிய நீர்மையதே எனக் கண்டறிந்தார். டுபே முதலியோர் கூறியது போல இச்சக்தி இருவகைப் படாது ஒருவகையேயா மெனவும், அது மிகை (Positive) குறை (Negative) என்னும் வேறுபாட்டினாலே இருவேறு நீர்மையதாகிக் கூட்டு (Plus) மின்சக்தி, கழி (Minus) மின் சக்தியென இரண்டாகு மெனவுங் கண்டார். தகைவு செய்யப் பட்ட ஒரு பாத்திரத்தினுள்ள உலோகக் கோலொன்றில் இரண்டு மெல்லிய பொற்றகடுகளைத் தொங்கவிட்டபின் குறித்த கோலினை மின்சக்தி யேறிய ஒரு பொருளினாற் றொட்டாற் பொற்றகடுகள் அகன்று நிற்பனவா மெனக் கண்ட ஹாக்ஸ்பி (1706) என்பார் மின்காட்டி (Electroscope) என்னுங் கருவியை யமைத்தார். ஹென்றி கலேண்டிஷ் (1731—1810) என்னும் ஆங்கிலேயரும் சார்ள்ஸ் அகுஸ்தின் கூலம்ப் (1736—1806) என்னும் பிராஞ்சியரும் மின் சக்தியின் கவர்ச்சி, தாக்கல் என்னு மிவற்றின் அளவுகளைக் கணித்தறியும் மார்க்கங்களையும் கருவிகளையும் அமைத்தனர்.

மேற்குறித்த ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்குங் காலத்திலே இத்தாலி தேசத்து வைத்திய பண்டிதரான லுய்கி கல்வானி (1737—1898) என்பார் ஒருவகை மீன்கள் மின் சக்தியின் தாக்கலையொத்த தாக்கலைத் தருகின்றனவெனக் கண்டு அப்பொருளைத் தொடர்ந்து விசாரித்து நீர்வாழ் சந்துக்களின் நரம்பு மண்டலங்களை ஆராய்வாராயினர். ஒரு நாள் அவர் ஒரு தவளையின் பின்னங்கா லிரண்டையுஞ் சேர்த்துச் செப்புக் கம்பியிற் கோத்துத் தூக்கியிருந்தார். காற்று வீசத் தவளையின்கால் அணித்தாகவிருந்த இருப்புச் சலாகையிற் பட்டது; பட்டவுடனே அவை தவளை பாயும்போது ஒடுங்கி நிமிர்வது போல ஒடுங்கி நிமிர்ந்தன. நரம்பிலிருந்தே அம் மின் சக்தி தோன்றியதெனக் கல்வானி நினைத்தார். அவர் தேயத்தவரான அலேக்சாந்திரோ வோல்தா (1745-1827) என்பவர் கல்வானி கொண்ட முடிபு சரியன்றெனவும் இரு வேறு உலோகங்கள் ஒன்றினையொன்று தீண்டுவதனால் மின் சக்தி பிறக்கிறதெனவுங் காட்டித் துத்தநாகம் செம்பு என்னும் இவற்றாற் செய்த தகடுகளை ஒன்றின்மே லொன்றாக மாற்றி யடுக்கி அவற்றிடையே உப்பு நீராற் றோய்த்த ஊறுதாள்களை வைத்து அடியிலிருந்த செப்புத் தகட்டோடு மேலே யிருந்த துத்தநாகத்தைச் செம்புக்கம்பியினா லிணைத்து அவற்றின் வழி

யாக மின்னருவி பாய்வதைக் காட்டினர். பல கண்ணாடிப் பாத்திரங்களில் உப்பு நீரை நிறைத்து அவற்றினுள்ளே செப்புத் தகடு துத்தநாகத் தகடு என்னு மிவற்றை நிரைபட வைத்துச் செம்புக்கம்பியினலிணைத்து மின்னருவிபாயு மியல்புகளைக் காட்டினர். இங்ஙனம் பிறப்பிக்கப்படுகின்ற மின்னருவியானது நீரினை நாரம் அனலம் என்னும் இருவேறு வளிகளாகப் பிரித்துவிடும் என்பதை 1800-ம் ஆண்டிலே நிக்கல்ஸன், கால்லைல் என்னும் இவர்கள் கண்டு பிடித்தனர். 1802-ம் ஆண்டிலே ஸேர் ஹம்பிரிடேவி என்பார் மின்னெகிழ்வு முறையினலே நீரினைப் பிரித்து அதனிடையேயுள்ள நீரகம் தீயகம் என்னும் இரண்டு வளிகளிலும் இரண்டு பங்கிற்கு ஒருபங்கு விகிதமாக அமைத்துளவாமெனக் காட்டினர்.

மின் சக்திக்கும் காந்தசக்திக்குமிடையேயுள்ள தொடர்பினைக் கண்டுபிடித்த பெருமை டென்மார்க் தேசத்துச் சாஸ்திர பண்டிதராகிய ஹான்ஸ் கிறிஸ்தியன் ஒயர்ஸ் ரெட் (1777-1857) என்பவருக் குரியது. இவர் கொப்பனேஜன் நகரத்துப் பல்கலைக் கழகத்திலே பேராசிரியரா யமர்ந்திருந்தார். கல்வானிமின்னருவித்தொடர் ஒன்றின் மீது இவர் பரீக்ஷை செய்துகொண்டிருக்கும்போது தற்செயலாக ஒரு காந்த ஊசியை மின்னருவி பாயுங் கம்பிக்குச் சமீபமாகக் கொண்டுவந்தார். வடக்குத் தெற்காக நின்ற கம்பி தன்னிலையினின்று விலகியது: அருவிபாயுங் கம்பியை எதிர்த்திசையாகப் பிடித்தார். கம்பி மறுபுறமாக விலகியது.

இந்தச் சோதனைக்கிரியையை ஒயர்ஸ் ரெட் வெளியிடுதலும் புதியதோர் ஆராய்ச்சித்துறை ஏற்பட்டிருப்பதைக்கண்ட ஐரோப்பிய அறிவுநிலையங்கள் இத்துறையை விசாரிக்கத் தொடங்கின. இதனைப் பெருகவாராய்ந்து சிறந்த முடிபுகளைக் கண்டவர் அந்திரேமாரி அம்பியர் என்னும் பிரஞ்சிய விஞ்ஞான சாஸ்திரியார் ஆவார். இவர் 1775-ம் ஆண்டிலே பிறந்து 62-ம் வயதிலே 1836-ல் உயிர் துறந்தார். தொடுத்துக் கணிதசாஸ்திரத்தில் வல்லவராகிய இவ்வறிஞர் ஒயர்ஸ் ரெட் வெளியிட்ட உண்மையினைப் பூரணமாக ஆராய முற்பட்டார். இவர் கண்டுபிடித்த விதி: காந்த ஊசியைப் பார்த்த வண்ணமாக ஒருவன் மின்னருவியோடு நீந்துகிறுனென்று வைத்துக்கொள்வோமாயின் ஊசியின் வட்கோடி அவனது இடக்கைப் பக்கத்திற்கும் தென்கோடி வலக்கைப் பக்கத்திற்கும் விலகும். மேற்செல்வதன்முன் மின்னருவித் தொடர்களைப் பற்றிச் சில

குறிப்புச் சொல்வது இன்றியமையாததாகின்றது. மின்னருவித் தொடர் முழுவதும் ஒரு வலயமாக அமைந்து நிற்கும்பொழுதுதான் மின்னருவி பாயும். அவ்வலயத்தைத் தொடுத்தலினாலும் வெட்டி விடுதலினாலும் மின்னருவிப் பாய்ச்சலை ஓடவும் நிற்கவுஞ் செய்தல் கூடும். வட்டாகாரமாக அமைந்த செப்புக்கம்பியின் நடுவிலே காந்த சக்தி தாக்கும். அச்சக்தி தாக்கலினளவு மின்னருவியின் வேகத்தைக் கணிப்பதற்குச் சாதனமாகும். பல சுற்றுக்களாலமைந்த செப்புக்கம்பி நாளத்தினுள்ளே இரும்புத் துண்டினை வைத்தால் அது காந்த சக்திபெறும். உருக்கு நிலைபேறுகிய காந்தமாகும். மின்னருவியின் காந்த சக்தியினாலே அவ்வருவியின் வேகத்தை யளப்பதற்கு அமைந்த கருவி கல்வேனோமானி யெனப்படும். மின்னருவி வேகத்தை யளப்பதற்குரிய அலகு விஞ்ஞான சாஸ்திர பண்டிதருடைய பெயரினால் அம்பியர் என வழங்கப் பெறும். இதைக் குறித்துப் பின்னர்க் கூறுவாம்.

இனி ஜோர்ஜ் சைமன் ஓம் என்பவர் செய்த ஆராய்ச்சிகளைப்பற்றிச் சிறிது சொல்லுவாம். இவர் ஜெர்மானியர். ஏர் லங்கன் நகரத்தில் (1789-1854) பிறந்தார். அனற்பெருக்கமானது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தினுக்கு ஓடுதலைப் பற்றிய முடிபுகளை 1822-ம் ஆண்டிலே ஜோஸெப் பூரியர் என்பவர் ஆராய்ந்து வெளியிட்டார். குறித்த கால வெல்லையிலே யோடுகிற அனலின் மொத்த அளவு அனலோடுகிற உலோகக் கோலின் எல்லைகளில் ஏற்பட்ட மதுகை வேறுபாட்டுக்கு நேர் விரோதமாகும் என்பது பூரியர் கண்ட முடிபு. ஓம் இம்முடிபைக் குறித்துச் சிந்தித்து மின்னருவியின் பாய்ச்சளவு அவ்வருவி பாய்கின்ற கோலின் ஈரந்தத்திலு மேற்பட்ட மின்மதுகை வேறுபாட்டிற்கு நேர் விகிதமாக அமையும் என்பதைக் கண்டார். இதைக் குறித்து ஓம் செய்த சோதனைகளிலே ஒரே உலோகத்தினாலமைந்து ஒரே கண்ணறையளவுடையவாய்ப் பலவேறு நீளங்களையுடைய தந்திகளின் மூலம் மின்னருவியைப் பாய்ச்சினார். உலோகமும் நீளமும் மாறுபாடற்றிருக்கக் கண்ணறை யளவை வேறுபடுத்திச் சில பரீக்ஷைகளைச் செய்தார். இவற்றின் பயனாக அவருடைய நாமத்தினால் வழங்குகிற ஓம் விதி என்பதனைக் கண்டுபிடித்தார். வேறு வேறாகிய உலோகங்கள் வேறு வேறளவாக மின்னருவியை உகைக்கும் என்பது இவரது முடிபு. உகைப்புந் தகைப்பும் ஒன்றினுக்கொன்று விலோமமாவன.

அருவி வேகமானது முடுக்கத்திற்கு நேர்விகிதமாயும் தகைப்புக்கு விலோம விகிதமாகவும் அமைந்து நிற்கும்

தகைப்பு வலயத்தின் தகைப்பும், மின் காலத்தின் தகைப்பும் ஒன்று கூடிய கூட்டுத்தொகையாகும். இவ்விதியைக் கொண்டு மேற்குறித்தவற்றை அளந்தறிதல் கூடும்".

VI

கலைநூல்களை நாட்டு மொழியிலெழுதும் பெருமுயற்சி இந்தியாவின் பலபாகங்களிலும் நடந்துகொண்டிருக்கின்றது. ஐதராபாத் சமஸ்தானத்தினுதரவிலே நடைபெறும் ஒஸ்மானியா சர்வ கலாசாலையானது நாட்டுமொழியாகிய உருது பாஷையிலே எல்லாக் கலைத்துறைகளையும் பயிற்றுதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றது. இந்தியாவின் பல பாகங்களிலும் உயர்ந்த விஞ்ஞானக்கலையாராய்ச்சிக்குப் பொது மொழியாக ஆங்கிலமொழி யமைதலும் ஒவ்வொரு மாகாணத்தினும் ஏழைமக்கள் தாமும் எளிதிற் பயின்று கொள்ளவேண்டிய கலைத்துறைகளனைத்தும் நாட்டுமொழியிலமைந்து நிற்பதும் பொருத்தமாகும்.

தொகுத்துரைக்கு மிடத்துக் கலை நூல்கள் நாட்டிற் பரவுவதற்கு எவ்வெச்சாதனங்கள் வேண்டப்படுபவோ ஆங்கவற்றைத் தாமதமின்றி ஆக்கித்தருவது அறிஞரது கடனாகும்.

இற்றைக்கு ஒரு நூற்றாண்டின் முன் யாழ்ப்பாணத்திலே ஆங்கிலக் கல்விச்சாலை நிறுவி உயர்தரக் கல்வி பயிற்றுவித்த அமெரிக்க மிஷன் குருமார் செய்த முயற்சியினாலே வெளிவந்த வீசகணிதம், நியாயசாத்திரம், வானசாத்திரம், அங்காதிபாதம், சுகரணவாதம், உற்பாலனம், கெமிஸ்தம் முதலிய நூல்கள் ஒரு குறித்த மரபுபற்றிச் சொற்களை யமைத்துச் செல்லுகின்றன. அம்மரபு நமக்கும் பயன்படுமென்னு மெண்ணத்தினாலே ஈண்டு அதனைத் தருகின்றாம்.

சீனா

சீனா தேசத்தில் சின்கியாங் மாகாணத்தில் முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் எல்லோரும் கட்டாயம் படிக்க வேண்டுமென்று அதிகாரிகள் உத்தரவு செய்திருக்கிறார்கள். செல்வர் வீட்டு மாதர்கள் பலர் படிக்கத் தொடங்கி விட்டார்களாம்.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

இராமலிங்க அடிகளாரின் 114-ம் ஆண்டுப் பிறப்பு விழா சென்ற அக்டோபர் 16-ம் நாளிற் சென்னையில் பல விடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் கூடிய மாபெருங் கூட்டத்தில் பல்லாவரம் சுவாமி வேதாசலம் என்னப்படும் உயர் திருவாளர் மறைமலை அடிகளார் தலைமை தாங்கி ஆற்றிய ஆராய்ச்சிமிகுந்த அரிய சொற்பொழிவு வருமாறு:—

இன்று இராமலிங்க வள்ளலின் 114-வது பிறந்தநாள் விழாவாகும்.

ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்கு முன் இராமலிங்க அடிகளைப் பற்றி, வேண்டிய பகுதியொன்றும், வேண்டாத பகுதியொன்றுமாக இருபெருங் கூட்டத்தார் தோன்றினர். சுவாமிகள் மிகப் பெரியார் என்றும், சிறியார் என்றும் வழக்குக்கள் தோன்றின. இப் போட்டிக் கொள்கைகள் அக்காலத்தில் பலமாயிருந்தன. அப்போது நான் இளைஞனாயிருந்தேன். எவ்வழக்குடையாரிடத்தும் நான் சேரவில்லை. இராமலிங்க அடிகளிடம் எனக்குப் பெரிய நன்மதிப்பு உண்டு. என் ஆசிரியர் சோமசுந்தர நாயகர் எனக்கு இப்பெரும் எண்ணம் உண்டாகுமாறு செய்துவைத்தார்.

ஆறுமுக நாவலர் எழுதியிருந்த நூல்களைப் படித்த காலை எனக்கு அருவருப்பே ஏற்பட்டிருந்தது. ஆனால், அதுபோது என் ஆசிரியராயிருந்த நாராயணசாமி பிள்ளை என் மனநிலையைத் திருத்தினார்கள். இலக்கிய இலக்கணங்களை முறையே பயிலாமல் அருள் கொண்டு பாக்கள் பாடிய அருளாளர் இராமலிங்கம் என்பதை என் ஆசிரியர் எனக்குக் கூறி, அருவருப்பை அகற்றிவிட்டார். எனக்குத் துலக்கம் உண்டாயிற்று. ஆனாலும் திரும்பவும் ஆறுமுக நாவலர் இராமலிங்க சுவாமிகளை இழித்துப் பேசவே, எனக்குக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அவருடைய வரலாற்றைப் பற்றிப் பலர் பலவாறாகக் கூறினார்கள். அவருடைய பாக்களைப் பார்க்கவேண்டுமென்று எனக்கு அவா உண்டாயிற்று. பிறகு, ஒரு நல்ல பதிப்பாக வெளியாகியிருந்த அருட்பாவை வாங்கிப் படித்தபோது, அருட்பாக்களின் உயர்வு தோன்றியது. ஆனால், அப்போதுங்கூட சுவாமியாருடைய பாடல்கள் உயர்வாயிருக்கலாம், அவருடைய வாழ்க்கை சரியா யிருக்காதுபோலும் என்று மனக்குழப்பம் கொண்டேன்.

பிறகு. கிறித்தவக் கல்லூரியின் ஆசிரியராக அமர்ந்தபோது ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரின் பழக்கம் எனக்கு ஏற்பட்டது. அவரிடம் "இராமலிங்கர் உயர்ந்தவரா? தாழ்ந்தவரா? நீங்கள் சொன்

ஞல் சரி" என்று வினவினேன். அதற்கு நாயகர் பின்வருமாறு கூறினார்கள்:—

"ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பெரியவர்கள்தாம். இராமலிங்க சுவாமிகளும் பெரியவர்களே. ஆனால் ஆறுமுக நாவலரவர்களைவிட இராமலிங்க சுவாமிகள் அளவுக்கு மேற்பட்டு உயர்ந்தவர்கள்."

இதைக் கூறுகிறபோது, ஸ்ரீலஸ்ரீ நாயகரவர்களின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய் ஒழுகிற்று.

பிறகு, நாயகரவர்கள் சிறிது நேரம் சும்மாயிருந்துவிட்டுத் திரும்பவும்,

"அவருடைய அன்பின் சிறப்பை என்னால் சொல்லமுடியாது. மாணிக்கவாசகரின் அன்புக்கு அடுத்தபடி இராமலிங்க சுவாமிகளின் அன்பு; இவ்வளவுதான் நான் சொல்ல முடியும்" என்றார்.

"ஆனால் நாவலர் இழித்துக் கூறியதேன்?" என்று நான் கேட்டேன். அதற்கு நாயகரவர்கள்,

"உள்ளபடியே ஆறுமுக நாவலரவர்கள் இராமலிங்க சுவாமிகளை இழித்துக் கூறவில்லை. இராமலிங்க சுவாமிகளின் கூட்டத்தார் தேவார திருவாசகங்களின் உயர்வை அறியாமல் அவற்றைச் குறை கூறிக்கொண்டு திரிந்ததைக் கண்டித்து, அவர்களுக்குத் தேவார திருவாசகங்களின் உயர்வை எடுத்துக் காட்டித் திருத்தவே முயற்சி செய்தார்கள்" என்று கூறினார்கள்.

பிறகு நான் இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவை ஒழுங்காக முறையே படித்தேன். தேவார, திருவாசகங்களுக்கும், அருட்பாவுக்கும் வித்தியாசமே காணவில்லை. அதன் பின்னர், தேவார திருவாசகங்களென்னும் தெவிட்டா அமுதங்களையீந்த அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர் ஆகிய நால்வரிடத்தும் உள்ள மிகுதியான அன்பு ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளிடத்தும் எனக்கு உண்டாயிற்று.

திரும்பவும் முன்போல இராமலிங்க சுவாமிகளைச் சேர்ந்தவர்களுக்கும் சேராதவர்களுக்கும் கலகம் உண்டாயிற்று. நான் எதிலும் கலந்துகொள்ளாமல் தனித்திருந்தேன். இராமலிங்க சுவாமிகளை இழித்துரைக்கும் கூட்டத்தினர் பெருகினர். சென்னை அன்பர்கள் என்னிடம் வந்து பெரியவர் ஒருவரை இழிவாகக் குறைத்துப் பேசுகையில் அக்குறையைத் தவிர்க்க உதவிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அக்காலத்தில் எங்களுக்கு உதவியாக ஸ்ரீ தங்க வேலு முதலியார் அவர்களுமிருந்தார்கள். அப்போது கலகம் மும்முரமாயிருந்தது. பிறகு, எதிர்பக்கத்தார் சொல் மாற்றம் மறைந்து இறைவன் அருளால் இராமலிங்கப் பெருமானின் பெருமை 'குன்றிலிட்ட மணிவிளக்கே போல' நிறுத்தப்பட்டது. அன்றுமுதல் நாளுக்கு நாள் அவருடைய அருட்பாவின் பெருமை பெருகிக்கொண்டே வருகிறது.

—" ஜனமித்திரன் "

புத்தகசாலைகளைச் சமூகக் கல்வியென்னும் சங்கிலியைப் பிணைக்கும் சக்திவாய்ந்த இணைப்புகளாகக் கருதவேண்டும். புத்தகசாலைகளை வலுப்படுத்தி நல்ல நிலைமையில் வைத்திருப்பதானது ஸ்தல ஸ்தாபனங்கள், முனிசிபல் சபைகள், பிரதேச கவர்ன்மெண்டுகள் முதலியவைகளின் கடமையாகும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு மத்திய பொதுப் புத்தகசாலையையும், தாலூகாக்களில் அதற்கு உபகரணங்களாகச் சிறு புத்தகசாலைகளையும் நிறுவ முயற்சி செய்யவேண்டும். தாலூகாக்களில் ஏற்படுத்தப்படும் புத்தகசாலைகள் பிரதேச அளவைகளாக இருக்கவேண்டும்; அவை, மேனாட்டில் கிராமாந்தர ஜில்லாக்களில் உபயோகத்தில் இருப்பது போல், சுற்றுப் பிரயாண வண்டிகளை அளிப்பதின் மூலம் சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமங்களுக்கும் சிறிய டவுன்களுக்கும் பிரயோஜனப்படும்படி ஏற்பாடுசெய்யலாம். பெரிய நகரங்கள் ஒவ்வொரு டிவிஷனிலும் ஜனுபிமானம் வாய்ந்த புத்தகசாலைகளை ஏற்படுத்தவேண்டும்; இப்புத்தகசாலைகளில் ஜனங்கள் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் இலவசமாக வாசிக்கும்படியும் சிறிய தொகைகளை டெபாஸிட் செய்பவர்கள் இரவல் வாங்கி வாசிக்கும்படியும் ஏற்பாடுகள் செய்யலாம்.

படிப்பு, பணம், செல்வாக்கு மிகுந்த ஆடவரும் பெண்டிரும் இவ்வியக்கத்தின் உதவிக்கு முன்வரவேண்டும்.

கட்டாயக் கல்வியுடன் அகில உலக புத்தகாலய இயக்கமும் ஏற்படுமானால், இந்தியாவானது மீண்டும் அதன் பண்டைய மனப்பண்பின் புகழ்களைப் பெறுவதுடன், உலகின் தேசங்களில் முற்போக்கும் நவீனமும் வாய்ந்த ஒரு தேசமாகவும் ஆகலாம்.

—டாக்டர் B. V. நாராயணசாமி நாயுடு.

—"ஜனமித்திரன்"

* * *

தமிழ்க்கலைச் சொல்லாக்கன் மாநாடு

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தார் செய்துள்ள பணி பாராட்டற்பாலது. சின்னாட்களாக அவர்களோடு உழைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. ஊண், உறக்கம் என்பன பற்றிச் சிறிதும் நினையாமல் அவர்கள் ஒவ்வொரு நாளும் நெடுநேரம் உட்கார்ந்து கலைச்சொற்களைக் கருத்தாய் ஆராய்ந்தார்கள். அவர்கள்பால் காணப்பெற்ற ஊக்கத்தை மறக்க முடியாது. சங்கத்தின் பொறுப்பாளர்கள் எத்தகைய தன்னலமும் இன்றித் தங்கடனாற்றி வருகிறார்கள் என்பது எனக்குத் தெளிவாகத் தோன்றிற்று. தமிழ் வளர்ச்சி யொன்றே அவர்களது குறிக்கோள். தமிழ்மக்கள் அவர்களை முற்றும் நம்பலாம். அவர்கள் தொடங்கியுள்ள முயற்சி இடையூறின்றி இனிது நடைபெறுமாறு வேண்டிய பொருளுதவி முதலியன செய்யவேண்டுவது தமிழ்மக்கள் கடமையாகும்.

கலைச்சொற்களை ஆக்கல் வேண்டுமென்று சொல்வது பொருந்தாது. தமிழில் சொற்கள் இருக்கின்றன. மேனாட்டுக் கலைக் குறியீடுகளை உணர்த்தும் தமிழ்ச்சொற்கள் தமிழ் மொழிக்கண் உள்ளன. நாம் ஒன்றும் புதிதாய் ஆக்க வேண்டுவதில்லை. இருக்கும் சொற்களைக் கண்டுபிடித்து வழங்கவேண்டுவதே நமது கடமை. தமிழ்மொழியில் கலைச்சொற்காண்டல் என்று சொல்வதே பொருத்தம்.

கலைச்சொற்கள் யாவற்றிற்கும் தமிழ்ச்சொற்கள் காணல் எளிதே. சொற்கள்யாவும் எளிதில் காணப்பெற்று, யாவராலும் வழங்கப்பெறும் என்பது உறுதி.

(திரு. ச. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரமாகிய இது திரு. அருள்தங்கையா அவர்களால் எழுதியனுப்பப்பட்டது.)

இராஜராஜன் திருவிழா

தஞ்சைப் பெரியகோயில் என்ற பிரகதீசுரன் கோயில் ஏற்பட்ட 927-ம் ஆண்டு விழாவைச் சென்ற வாரத்தில் தஞ்சையில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அப்பொழுது பிரகதீசுர சுவாமியுடன், அவர் கோயிலைக் கட்டி முடித்த இராஜராஜ சோழனின் படத்தையும் ஊர்வலமாகக் கொண்டு போனார்கள். சென்னை நகர் நாட்டாண்மைக் கழகக் கல்வித்துறை அதிகாரி திரு. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் 'இராஜராஜ தேவரும் தமிழ் வாழ்க்கையும்" என்பதுபற்றி அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள்.

திருப்பனந்தாள் தமிழ்ப்பரிசு

திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர் காசிவாசி உயர்திரு. சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் தமிழ்மொழி வளர்ச்சி கருதி சென்னைப் பல்கலைக் கழகத்தினர் நடத்திவரும் தனித்தமிழ்த் தேர்வில் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறும் தமிழ் வித்துவானுக்கு ஆண்டுதோறும் ஓர் ஆயிரம் வெண்பொற்காசுகள் பரிசு வழங்கிவருவது தமிழ்நாடு போற்றத்தகும் அருஞ்செயலாகும்.

இப்பரிசை இந்த ஆண்டில் பெற்ற புலவர் உத்தமபாளையம் உயர்தரக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் வித்துவான் T. சங்குப்புலவர் அவர்கள் எனவறிந்து மகிழ்கின்றோம்.

27-8-'36 தேதியன்று சென்னை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் (Vice-Chancellor) திருவாளர் Dr. A. இலக்குமணசுவாமி முதலியார் அவர்கள் தலைமையில் பேரறிஞர்கள் குழுமிய கூட்டத்தில் துணை வேந்தர் அவர்களாற் பரிசு வழங்கப்பட்டது. அதுகாலை, தானும் கழகத்தினரும் தமிழ்வளர்ச்சியில் கருத்தூன்றி ஆக்கந்தரும் பணிகளை மேற்கொள்ளவிருக்கும் நற்செய்தியை வெளியிட்டனர்.

மதிப்புரை :

திருக்கோவையார் இயல்பு:—திரு தை. ஆ. கனகசபாபதி முதலியார் அவர்கள் எழுதியது. சென்னை ஜார்ஜ்டவுன் பழனியாண்டிப்பிள்ளை கம்பெனியார் பதிப்பித்தது. விலை அணு 5.

அழகிய இச்சிறுநூல் திருக்கோவையார் இறைநூலேயன்றி அறியாதார் பிறழக்கூறுமாறு சிற்றின்பந் தெரிக்குமோர் இழிநூலன்று என்று நன்கெடுத்து விளக்குவதாகும். மணிவாசகரியற்றிய மணிக்கோவையிலிருந்து சில மணிகளைப் பிரித்தெடுத்து ஒவிய வகையில் விளக்குவதாகும் இச்சிறு ஆராய்ச்சி நூல். இதற்குத் திரு வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் அணிந்துரையெழுதியுள்ளார்கள்.

மகாபாரத சதகம்:—சிதம்பரம் நாவலர் கல்லூரி ஆசிரியர் N. கிருஷ்ணமூர்த்தி ஐயர் இயற்றியது. விலை ரூ. 1.

பல அறிஞர்களின் பாராட்டுரையைக்கொண்டுள்ள இந்நூல் மிக விரிவான பாரதகதையைச் சுருக்கி நூறு செய்யுளாகப் பாடப்பட்டதொன்றாகும். ஆசிரியரின் அரிய முயற்சி பாராட்டற்பாற்று.

உயிரிளங்குமரன் (நாடகம்)—நவாலியூர் திரு க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் இயற்றியது. திரு க. வேலுப்பிள்ளை அவர்கள் பதிப்பித்து வெளியிட்டது. எம்மிடங் கிடைக்கும்.

சைவசித்தாந்தக் கருத்துக்களை நாடகமுறையில் அமைத்தற்கென எழுந்த இவ்வழகிய நூல் இயன்றவரை பிறமொழிகலவாச் செந்தமிழாலியன்றிருப்பது பாராட்டற்குரியதாகும். இத்தகைய முயற்சியால் வெளிவந்த முதல் நூல் இதுவேயாகும். சைவசித்தாந்தக் கருத்துக்கள் பன்னூல்களிலும் பல்வகையானும் பரப்பப்படுதல் வேண்டும் என்பது ஆராய்ச்சிவல்லார் முடிபு. ஆகவே அவ் இலக்கு கருதி வெளிவந்துள்ள இவ் வொப்பற்ற நூலைத் தமிழ்மக்கள் ஏற்றுப் படித்து இன்புற்று நலமெய்துவார்களாக.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] தாது—கார்த்திகை [பரல்-ச

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

திருக்கருகாவூர்த் திருத்தாண்டகம்

பூத்தானும் பூவினிறத்தானுமாம் பூக்குளால்
வாசமாய் மன்னிநின்ற
கோத்தானுங் கோல்வளையாள் கூறனுங் கொண்ட
சமையத்தார் தேவனாகி
யேத்தாதார்க் கென்று மிடரே துன்பமீவானு
மென்னெஞ்சத் துள்ளேநின்று
காத்தானுங் காலனடையா வண்ணங் கண்ணுங்
கருகாவூ ரெந்தைதானே.

பதவுரை :—

கருகாவூர் எந்தைதான்—திருக்கருகாவூர்ப் பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற எங்கள் தந்தையாகிய சிவ பெருமான் ஒருவனே,

பூத்தான் ஆம்—தன்னியல்பில் (சொரூப இலக்கணத்தில்) பூவின் உருவம்போல உண்மை (சத்து) ஆகும்,

பூவின் நிறத்தான் உம் ஆம்—அப்பூவின் கண்ணுள்ள நிறம்போல அறிவு (சித்து) ஆகும்,

பூக்குள் ஆல் வாசமாய் மன்னிநின்ற கோ தான் ஆம்—அப்பூவினுக்குள் நிலைபெற்றிருக்கின்ற மணம்போல இன்பம் (ஆநந்தம்) ஆகிய சிறப்பாகும்,

கோல்வளையாள் கூறனுகும்—பொதுவியலில் (தடத்த இலக்கணத்திலே) திரட்சியான வளையல்களை அணிந்திருக்கிற உமாதேவியை இடதுபாகத்தில் வைத்திருக்கிறவனுகும்.

கொண்டசமையத்தார் தேவனாகி—எவர் எந்தச்சமயத்தைப் பின்பற்றி எவ்வுருவில் எத்தவம் செய்து வழிபடுகிறாரோ அவ்வுருவில் அவர் வழிபாட்டை ஏற்றுக்கொண்டு தக்கவாறு அருள் செய்யுங் கடவுளாகும்,

எத்தாதார்க்கு என்றும் இடரே துன்பம் ஈவானும்—தன்னைச்சார்ந்து வழிபடாதவருக்கு அவர் தன்னைச் சாரும்படி செய்தற்கு எப்பொழுதும் இடரையும் துன்பத்தையும் கொடுப்பவனாகும்,

என்நெஞ்சத்துள்ளே நின்று—எனது நெஞ்சினுள்ளே நிலையாக நின்று,

காலன் அடையா வண்ணம்—உயிரை உடலினின்றும் பிரிக்குஞ் செயலைச் செய்கிற காலன் என்னை அவ்வண்ணஞ் செய்ய அணுகாதபடி,

காத்தாளும் கண்ஆம்—என்னை அடிமையாகக்கொண்டு காத்து ஆளுகின்ற எனது உயிர் போன்றவனுமாகும்.

விளக்கவுரை :—

கருகாவூர் எந்தை தானே—உயிர்களுக்கெல்லாம் அறிவு விளங்கும்படி செய்கிறவன் என்பார் 'எந்தை' என்றார். தான்—அசை. ஏ-பிரிநிலைப்பொருள் தந்து-நிற்கிறது.

பூதான் ஆம்—இங்கே பூ என்றது பூவினது உருவகத்தைக் குறிக்கிறது, உருவமின்றிப் பூ என்ற பொருளுளதாதலில்லையாதலின் பூவினுருவம் உருவகமாக இறைவனது உண்மைத் தன்மையை, அதாவது, என்றுமுளதாந் தன்மையை (சத்துத்தன்மையை)க் குறிக்கிறது. உலகிலுள்ள பொருள்களெல்லா முளவாதற்கு இறைவனது உண்மைத்தன்மை நிலைக்களனாகின்றது. அவனது உண்மைத்தன்மையின்றி உலகப்பொருள்கள் உலகில் உளவாகி இயங்கா. திருஞான சம்பந்த அடிகள் இறைவனை, உள்ளது என்று திருவிளநகரத் தேவாரம் எட்டாவது பாட்டிற் கூறுதல் காண்க. ஆகும் என்ற பயனிலை வினைமுற்று ஆம் எனக் குறுகியது. இவ்வாறே கூற்றாகும் என்பதிலன்றி ஏனைய பயனிலை முடிபு வினைமுற்றுகளிலும் ஆகும் குறுகி நிற்கிறது.

பூவின் நிறத்தான் உம்ஆம்—நிறம் + அத்து + ஆன் = நிறத்தான்; அத்து, ஆன் சாரியைகள். உம் = அசைநிலை. சாரியை, அசைகளைக் கழித்த பின் பூவின்நிறம் ஆம் என நிற்கும். பூவின் நிறம் உருவகமாக இறைவனது அறிவுத்தன்மை (சித்துத்தன்மை) யைக் குறிக்கிறது. உலகிலுள்ள உயிர்களில் விளங்கும் அறிவுக்கு இறைவனது அறிவு நிலைக்களமாயிருக்கிறது. அவன் அறிவிக்காவிடில் உயிர்கள் ஒன்றையும் அறியா.

பூக்குள்ளால் வாசமாய் மன்னி நின்ற கோதான் ஆம்—பூ + கு + உள் + ஆல் = பூக்குள்ளால், கு, ஆல் சாரியைகள். உருவமும் நிறமும் புறத்திற் காணப்படுவனபோல அல்லாது மணமானது மோப்பார் மூக்கினுள்ளே அறியப்படுதலால் பூவில் வாசம் என்னாது பூக்

குள் வாசம் என்றார். பூக்குள் வாசம் உருவகமாய் இறைவனது இன்பத்தன்மை (ஆநந்தத்தன்மை)யைக் குறிக்கிறது—உயிர்கள் தாம் அடையும் இன்பத்திற்கு இறைவனுடைய இன்பத்தன்மை நிலைக்களனா யிருக்கிறது. இறைவன் உலகப்பொருள்களோடு கலந்திராவிடின் உயிர்கள் அவற்றால் வருஞ் சிற்றின்பம் நுகரா; உயிர்கள் வீட்டுநிலையில் இன்ப உருவனாகிய இறைவனைச் சார்ந்தாலன்றி, பேரின்பம் நுகரா—இன்பத்தன்மை இறைவனுக்கே தனியாக உரிய சிறப்பாயிருத்தலின் வாசமாய் மன்னி நின்ற கோ ஆம்என்றார். கோ=சிறப்பு; கோத்தான் என்பதில் தான் அசை.

பூவின் உருவம் பூவின்நிறம் பூவின் மணம் மூன்றுஞ்சேர்ந்து பூ என்ற பொருளின் சொரூபமாயிருத்தல்போல, உண்மை, அறிவு, இன்பம் (சச்சிதானந்தம்) மூன்றுஞ்சேர்ந்து இறைவனுடைய சொரூபங்களாயுள்ளன. அவை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாதனவாயுள்ளன. பூவின் உருவம், நிறம், மணம் மூன்றும் வெளியுலகில் இயற்கையிற் காணப்படும் இறைவனுடைய அருட்சத்தி வெளிப்பாடுகள் (Expression of God's energy as seen in Nature) உண்மை அறிவு இன்பம் மூன்றும் இறைவனிடம் விளங்கும் அருட்பண்புகள் ஆதலின் பூவின் உருவம், நிறம், மணங்கள் மூன்றும் முறையே உண்மை அறிவு இன்பங்களுக்கு ஒப்புமைகளாகக் கூறப்பட்டன.

இக்கருத்தைத் திருமூலர் திருமந்திரம் 2829-வது பாட்டில்

> உருவுற் பலநிற மொண்மணம் சோபை
> தரநிற்ப போலுயிர் தற்பரந் தன்னின்
> மருவச் சிவமென்ற மாமுப் பதத்தின்
> சொரூபத்தன் சத்தியாதி தோன்ற நின்றானே

என்று கூறினர். பரஞ்சோதி முனிவர் தாமியற்றிய திருவிளையாடற் புராணப்பாயிரத்தில், "பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப் போத வின்பமா வண்ணம் மெய்கொண்டவன்" என்று கூறினர்.

கோல்வளையாள் கூறன்—உண்மை அறிவு இன்பமாகிய சொரூப இலக்கணங்களையுடைய இறைவனே உயிர்கள் உய்யும்பொருட்டு ஐந்தொழில் செய்தற்கு அருட்சத்தியோடு கூடிய பொது இலக்கணத்தைக் கொண்டான் என்பார் 'கோல்வளையாள் கூறனும்' என்றார்.

கொண்ட சமயத்தார் தேவனாகி—அங்ஙனம் அருட்சத்தியோடு பொது இயல் வடிவங்கொண்ட இறைவன், மக்கட் பருவமடைந்த உயிர்களின் பலதிற அறிவு நிலைகளுக்கு ஏற்பச்செய்யப்பட்ட பல சமயங்களில் நின்று அவர்கள் தன்னைப் படிமுறையில் வழிபட்டு உயிர்வளர்ச்சி பெற்றுப் பின் சைவசமயத்தில் சரியை கிரியை யோகங்களை அநுட்டித்து அறிவு முதிர்ந்து மெய்யறிவுபெற்று முடிவில் பேரின்பமடையுங் கருத்துடையன் என்பார் "கொண்ட சமயத்தார் தேவனாகி" என்றார்.

"நூலறிபேசி நுழைவிலாதார் திரிக
நீலமணி மிடற்றான் நீர்மையே—மேலுலந்த
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள்
செய்வார்க்கும் அக்கோலத் தவ்வுருவே யாம்."

என்று காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதியில் கூறி யிருத்தல் காண்க.

ஏத்தாதார்க்கு என்றும் இடரே துன்பம் ஈவான் ஆம்—இறைவன், மக்கள் உயிர்கள் உய்யும்படி பல சமயங்கள் வகுத்து முறை செய்திருந்தும் அம்முறையை அறிந்து அதன்படி ஒழுகாத மக்களுக்கு அவர்கள் மேற்கொண்ட மறக்கருணையால் உலக வாழ்வில் துன்பங்களைக் கொடுத்து அவர்களை உய்விக்க வேண் டும் என்ற தன்கருத்தை நிறைவேற்றுவான் என்பார் 'ஏத்தா தார்க்கு என்றும் இடரே துன்பமீவாரும்' என்றார்.

இடர் என்பது சிறு துன்பம். துன்பம் என்பது பல இடர்கள் கூடிய பெருந் துன்பம்—தீய வழியில் ஒழுகுகின்ற மக்களை அதனை விட்டு நல்வழியில் ஒழுகச்செய்தற்குத் துன்பமே ஏதுவாயுள்ளது. 'இடரே'—ஏ-அசை.

என்னெஞ்சத்துள்ளே நின்று காலனடையா வண்ணம் காத்தாளும் கண்ணும்—பசுத்தன்மை நீங்கிச் சிவகரணமாக மாறிய நெஞ்சில் இறைவன் நிலையாக வீற்றிருத்தலால் எல்லா நற்குணங்களும் அக்குணங்களாலுண்டாகும் ஆற்றலும் ஒருவர்க்கு உண்டாதல் பற்றி அடிகள் 'என்னெஞ்சத்துள்ளே நின்று காலனடையா வண்ணம் காத்தாளும் கண்ணும்' என்றார்.

நமனையஞ்சோம் (312—1) என்றும்
சாவாமேகாத் தென்னையாண்டாய் போற்றி (246—9)

என்றும் அடிகள் பிறவிடங்களிலும் கூறியிருத்தல் காண்க. தாயுமான அடிகளும் 'அந்தகாநீ யொருபகட்டாற்பகட்டுவதடாதடா, காசுநம்பாற் செல்லாதடா. என்று பேசவாய்தந்த செல்வமே' (119) என்று கூறுதல் காண்க. கண் உடலுறுப்புகளிற் சிறந்த உறுப்பு ஆதலின் 'கண்ணும்' என்பது உயிர்போன்றவன் என்ற பொருளில் வந்தது.

என்னெஞ்சத்தினுள்ளே நின்று காலனடையா வண்ணம் காத் தாளும் கண்ணும் என்றதனால் அடிகள் இப்பாட்டிற் கூறிய உண்மை கள்தாம் அநுபவத்தில் அறிந்து கூறிய உண்மைகள் என்று குறிப்பா லுணர்த்தினர்.

எந்தை—எழுவாய்; பூவாகும் என்பதுமுதல் கண்ணாகும் என்பது வரையிலுள்ள ஆறு, 'ஆகும்'கள் பயனிலைகள்.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை.

புதுக் கவிகள்-Original Poetry

பேதைமை

[கோடுமுடி வித்வான் பே. கோவிந்தன் அவர்கள்]

பெற்ற தாயினும் பேணி வளர்க்கின்ற
நற்ற மிழ்க்கனும் நாட்டினும் முற்றிய
பற்றி லாதான் பதடி; பசிகொண்டு
சுற்றிச் சுற்றிவீண் சோறுணும் பொம்மையே. (1)

வேந்த ராகி விளங்கினும் என்பயன்?
மாய்ந்து மண்ணில் வீழினும் வறுமைஎன்?
தீந்த மிழ்க்கனும் செந்தமிழ் நாட்டினும்
ஆய்ந்த ஆய்வினொ டன்புமில் லாதவர். (2)

பெற்ற நாட்டிற்கும் பேசுந் தமிழுக்கும்
நற்பு கழ்திற்க நற்செயல் செய்கலார்
புற்ற லைப்பனி போலழி வெய்துக;
மற்றிஞ் ஞாலத்து மாள்க அவர்பெயர். (3)

கங்கை யைக்கொண்ட சோழன் கனகன்மேல்
செங்க லேற்றிய சேரன்செங் குட்டுவன்
எங்குத் தோன்றினன்? இத்தமிழ் நாடெனின்
உங்கள் வீரம் உரைமின்; உரமிலீர்! (4)

மண்ணிற் பாரம் மருவப் பிறந்திரோ?
உண்ணும் ஊணை ஒழிக்கப் பிறந்திரோ?
பெண்ண லமுண்டு மாயப் பிறந்திரோ?
எண்ணு மின்; தமிழ்க் கென்செய்தீர்? ஏழைகாள்! (5)

குற்ற மீது; குணமிது; கொண்டுணும்
நற்சு வைப்பொரு ளீதென் றறிவிரோ?
சிற்று ணர்விர்காள்! செந்தமிழ்த் தேனுண்ணு
தெற்றுக் கிங்குளிர்? இச்சுவைக் கீடுண்டோ? (6)

விட ணன்போல் விரகியற் றித்தமிழ்
நாட ழிதலை நாடினி ரோ? கிழீர்!
பீட ழிந்து பிறர்க்கடி மைப்பட்டுக்
கேட ழிந்த பழங்கதை கேட்டிரோ? (7)

விடு விடெனும் மேன்மையில் லீர்! தமிழ்
நாடு தாயொடு நாமுறை வீடன்றோ?
பீடு ணர்ந்திரோ? பேறடைந் திரோ? நீர்
தேடும் வீட்டிற்குஞ் செல்லத் தகுவிரோ? (8)

கன்ன டந்தெலுங் கம்மலை யாளமாம்
நன்மொ ழிகளும் நற்றமி ழேமுன்பு.
வன்சொ லாரியம் வந்து பிரித்தது;
பின்னும் மாற்றுமால் பேதையீர்! காண்மினோ. (9)

தக்க சீர்த்தமிழ் நூலைக்கல் லாதகீழ்
மக்கள் மாக்களை மானுவ ரென்பரால்
மிக்க சீர்க்குறள் வேத முணர்கலார்
குக்க லையொப்பர்; வேற்றுமை கொள்ளலால். (10)

பழனியாண்டவர்

[நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்]

தேனா ரிதழி நறுந்தொடையுங்
திங்கட் கொழுந்துந் திருக்ககற்றுந்
தெய்வப் புனலுஞ் சுமந்தசடைச்
சிவனார் கருணைத் திருவுருவே!
வானா டருளுங் கற்பகமே
மண்ணா டவர்க்கு மலைமருந்தே
மலையத் தலைவி யபரபர
வனசக் களப மணிக்குடத்துப்
பானா றமுதக் குதலைமொழிப்
பாலா குமர குருபரனே
பச்சைக் கலப மயிற்புரவி
பரிக்குஞ் சதங்கைத் திருத்தாளா

ஆறு வருளே ! அருட்பெருக்கே
அன்பே அன்பி லூறிவரும்
அளியே தளிசேர் பழனிமலை
ஐயா சரணஞ் சரணமே. 1

சீரார் சதங்கை செஞ்சிலம்பு
சிலம்பும் தாளும் அழகொழுகுஞ்
செவ்வா யரும்புந் திருநகையுஞ்
சென்னி மன்னுந் திருமுடியும்
கூரார் கணிச்சி நெடும்படைபோற்
குலவும் பொற்கோ வணத்தண்டும்
கொண்ட கரமு மொக்கலிலே
கொடுத்த கரமு மாயெழுந்த
பாரார் முனிவர் தேவர்தொழும்
பாலா குமரா பழையோனே
பயிலும் யோக ரருட்கண்ணிற்
பலவாய்த் தோன்றும் பரஞ்சுடரே
ஆரா வமுதே யருட்கடலே
அன்பு மலையே யின்பருளும்
அரைசே யுரைசேர் பழனிமலை
யத்தா அபயம் அபயமே. 2

பைம்பொன் னழுத்தும் நவமணியின்
பத்தி நிரைத்த சுடர்முடியும்
பருவத் திங்கட் டிருமுகமும்
பவள விதழுஞ் சிறுநகையும்
நம்புங் கடக மணித்தோளும்
நகைநூன் மார்பும் பட்டுடையும்
நாதச் சிலம்பு புலம்புமிரு
நளினத் தாளும் வடிவேலும்
செம்பொன் னொழுக வழகொழுகச்
சேர்ந்த புழுகு மணமொழுகும்
தெய்வ வுருவுங் கொண்டுவருஞ்
செல்வக் குமரா வமரர்தொழும்
அம்பொற் குவையே மணித்திரளே
யமுதே யமுதி லூறிவரும்

அளியே தளிசேர் பழனிமலை
யரசே யருள்க வருள்கவே. 3

மாவின் பழமு மோர்பழமோ
மறையிற் பழுத்த வுபநிடத
மரத்திற் பழமீ சைவமுதல்
மதுரப் பழமீ வண்டமிழ்ப்பொற்
றேவின் றருவிற் கனிந்தவருட்
டெய்வப் பழமீ யெனவுமையுஞ்
சிவனு முரைத்துக் கரமீட்டிச்
செல்வா வருக குல்லைநறும்
பூவுங் கடம்பு மணியுமணிப்
புயனே வருக முச்சங்கப்
புலவா வருக வெனப்பருவம்
புகன்று புகன்று சீராட்ட
ஆவும் பொழியுங் கதிருமுள
மகிழும்படியே யருள்புரியும்
அண்ணு! விண்ணுர் பழனிமலை
யரைசே வருக வருகவே. 4

முருகா போற்றி மெய்ஞ்ஞான
முதல்வா போற்றி தேவர்குறை
முடித்தாய் போற்றி யுலக—மெலா
முடையாய் போற்றி திருமாலின்
மருகா போற்றி குன்றுதொறும்
வருவாய் போற்றி யெழிற்கலப
மயிலா போற்றி யிருள்கெடுக்கும்
வடிவேற் படையா யடிபோற்றி
குருகார் முன்கை மடப்பிடியும்
குறவர்மானு மிடம்பகிர்ந்த
குன்றே போற்றி யுயிர்படருங்
கொம்பே போற்றி யடியேனுக்
கருகாய் வந்து தடுத்தாளு
மப்பா போற்றி யொப்பாரும்
ஆகாய் போற்றி பழனிமலை
யமலா போற்றி பொற்றியே. 5

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழ்மொழியில் சகர முதன்மொழி

[துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்]

(முன் கஉ௫-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தொல்காப்பியர் காலத்தை "தமிழ்ச்சொல்லாராய்ச்சி நிரம்பாத காலம்" என்கிறார்.

அவர் அப்படிக் கூறுவதற்கு "மொழிப்பொருட் கிளவி விழிப்பத் தோன்றா" என்ற தொல்காப்பியச் சூத்திரம்தான் காரணமோ என்னவோ தெரியவில்லை.

அச்சூத்திரம் காரணமாயிருக்குமானால் அச்சூத்திரமே தொல்காப்பியர் காலத்துக்கு முந்தித் தமிழில் மொழி ஆராய்ச்சி நிரம்பியிருந்தது என்பதைத் தெரிவிக்கின்றது.

தொல்காப்பியருக்கு முந்தியகாலம் தமிழ் ஐந்திர இலக்கணம் வழக்கில் இருந்த காலம். அதற்கு முந்தியது அகத்தியர் காலம். அவருக்குப் பன்னூறாண்டுகளுக்கு முற்பட்ட இலக்கணங்கள் பேராற்று நெடுந்துறையன் பெருநூல் என்ற இலக்கணமும், இடைகழிச் செங்கோடன் இயல்நூல் என்ற இலக்கணமும் ஆகும்.

தலைச்சங்க காலத்துக்கு முற்பட்ட காலமாகிய, பெருவள நாட்டுச் செங்கோ என்னும் பேரரசன் காலத்தில், சக்கரன் என்னும் பேருடைய பெரும்புலவனைத் தலைமையாகக்கொண்ட தமிழ்ச்சங்கத்தில் மேற்சொன்ன இரண்டு நூல்களும் இலக்கணங்களாய் இருந்தன.

அவை சுவடி உருவமாக இருக்கின்றனவேயொழிய இன்னும் புத்தகங்களாக வெளிவரவில்லை.

ஆகையால் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே தமிழ்மொழி ஆராய்ச்சி நிரம்பியிருந்ததென்றும், தொல்காப்பியர் காலத்தில் சிறிது மலினமடைந்து இருந்ததென்றும் அறிகிறோம்.

தலைச்சங்கத்துக்கு முந்திய தமிழ்ச்சங்கத்திலேயே தலைமை வகித்த புலவன் பெயர் சக்கரன் என்று சகர முன்

மொழிச் சொல்லாயிருக்க, தலைச்சங்கத்துக்குப் பிற்பட்ட ஆசிரியராகிய தொல்காப்பியர் ச் என்ற மெய் அகரத்தோடு மொழிக்கு முதலாகாது என்று சூத்திரம் செய்வாரா என்று உன்னிப்பாருங்கள்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் சொல்லுகிறபடி ச என்ற ஒலி க என்ற ஒலியினின்றுமே பிறந்தது என்பதூஉம், க என்பதே முதல் ஒலி என்பதூஉம் உண்மையே. ஒலி நூலும் அப்படியே கூறுகிறது.

ஆனால் அ என்ற ஒலியினின்று 11 உயிர்களும், க—ர—ம் என்ற ஒலிகளினின்று 15 மெய்களும் தோன்றின பிற்பாடே

"எழுத்தெனப் படுப
அகரமுதல னகர இறுவாய்
முப்பஃ தென்ப"

எனத் தமிழ் நெடுங்கணக்கை வரிசைப்படுத்துவார் ஆயினர்.

அப்படி வரிசைப்படுத்தியபொழுதே ச என்ற எழுத்தும் தமிழ் நெடுங்கணக்கில் உட்படுத்தப்பட்டது.

ஆகையால், சகர முதன்மொழிச்சொற்கள் தமிழ்மொழியில் ஆதிமுதற்கொண்டே இலக்கியங்களில் சிறு வரவிற்றாய் விரவி வந்திருக்கின்றன.

இன்னும் அவர், "சகரத்தைத் தலையிற்கொண்ட சொற்களும் பரவை வழக்கில் இருந்தனவாகலாம். ஆயினும், அவை இலக்கியங்களில் ஏறுதனவாயிருக்கலாம். ஆகையால் ஆசிரியர் அவற்றை விலக்கினர்போலும்; அல்லது, சில சொற்கள் மாத்திரம் ஏறிக்கொண்டமையால், தமிழ்ச்சொல்லாராய்ச்சி நிரம்பாத அக்காலத்தில் இருந்த அவர் அவற்றைத் தமிழ் அன்று, வடமொழி என வைத்தனர்போலும்" என்று கூறுகின்றார்.

சகர முதன்மொழிச்சொற்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னும், தொல்காப்பியர் காலத்திலும் இலக்கியங்களில் விரவி இருந்ததினாலேதான் தொல்காப்பியரும் ஏனைய இலக்கண ஆசிரியர்களும் சூத்திரம் செய்திருக்கிறார்கள். ஆகையால், தொல்காப்பியர் சூத்திரம் செய்யாமல் விலக்கினார் இல்லை. அச்சுப்பிரதியின் பிழையினால் ஏற்பட்டதே இக்குழறுபடைகள். இந்த ஒரு சூத்திரம் மாத்திரம் அன்று. இன்னும் பல சூத்திரங்கள் இம்மாதிரி பிழைபடப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக:—

ஞ—ய—வ என்ற எழுத்துக்களுக்காக ஏற்பட்ட நன்னூற் சூத்திரங்களைக் கவனியுங்கள்:—

ஞ்

"அ—ஆ—எ—ஒவ்வோடாகும் ஞம்முதல் என்றும்

ய்

அ—ஆ—உ—ஊ—ஒ—ஔ யம்முதல் என்றும்

வ்

உ—ஊ—ஒ—ஓ அலவொடு வம்முதல்" என்றும்

தெளிவாக, முன்னோர் இலக்கணங்களை ஒட்டி பவணந்தியார் கூறியுள்ளார். இவர் தொல்காப்பியத்துக்கு மாறாகச் சூத்திரம் செய்திருந்தால் அவ்வாறு கூறியிருப்பாரா? ஆகையால், தொல்காப்பியத்தை ஒட்டியே சூத்திரம் செய்திருக்கிறார் என்பது போதரும்.

இங்கே, வாசகர்கள் ஒன்றைக் கவனிக்கவேண்டும். எல்லா உயிர்களோடும் மொழிக்கு முதலாக வராத ஞ—ய, வ என்ற எழுத்துக்களுங்கூட அ என்ற எழுத்தை விட்டபாடில்லை. ஏனென்றால், அகரத்தை விட்டால் மற்ற எழுத்துக்களோடு வர இயலாது. ஆகையால், எந்த எழுத்தும் அகரத்தைத் தவிர மற்ற எல்லா எழுத்துக்களோடுங்கூடி மொழிக்கு முதலில் வராமல் இருந்தாலும் இருக்கலாம். அகரத்தோடு மாத்திரம் சேர்ந்து வராமல் இருக்கமுடியாது. அப்படி அகரத்தோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வராவிட்டால் அந்த எழுத்துக்கு வாழ்வே இல்லை. அது தமிழ் நெடுங்கணக்கில் இருக்க நியாயம் கிடையாது.

இனித் தொல்காப்பியர் இந்த ஞ—ய—வ என்ற மூன்றெழுத்துக்களுக்கும் என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்ப்போம்.

சுவடியில் உள்ளபடி கீழே தருகின்றேன்:—

ஞ்

"அ—ஆ—எ—ஒ எனுமுயிர் ஞகாரத்துரிய" என்றும்

ய்

"அ—ஆ—உ—ஊ—ஒ—ஔ எனுமுயிர் ஆறோடல்லது யகரமுதலாது" என்றும்

வ்

"உ—ஊ—ஒ—ஓ எனு நான்குயிரும் வ என்னெழுத்தோடு வருதல் இல்லை" என்றும் தெளிவுபடக் கூறியுள்ளார்.

பவணந்தியார் இவைகளை ஒட்டியே சூத்திரித்திருப்பது இப்போது தெளிவாகும்.

இன்னணம் கூறியிருக்கப்பட்ட சூத்திரங்களைத் தற்காலப் பதிப்பாளர்கள்

ஞ்

"ஆ—எ—ஒ எனுமூவுயிர் ஞகாரத்துரிய" என்று அகரத்தை விடுத்தும்,

ய்.

"ஆவோடல்லது யகரமுதலாது" என்று முதலடியை அடியோடே ஒழித்துவிட்டு "ஆறே" என்பதை "ஆவோ" என்று மாற்றியும் பிழைபடப் பிரசுரித்துள்ளார்கள். பதிப்பாளர்களுக்குக் கிடைத்த ஏட்டில் முதலடியைக் கறையான் அரித்திருக்கலாம். அதைக்கொண்டு ஏடு எழுதுகிறவன் முதலடி இல்லாததால் "ஆறே" என்பதை "ஆவோ" என எழுதிச் சூத்திரத்தைப் பூர்த்திசெய்துவிட்டான். அவன் அப்படிச் செய்ததால் இலக்கிய வழக்குகள் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. வழக்குகள் இருந்துகொண்டுதான் இருந்தன, இப்பொழுதும் இருக்கின்றன.

வ்

வ் என்ற எழுத்தின் சூத்திரம் மாறுதல் அடையவில்லை.

ஆகையால், மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டிய, ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் சரிவரச் சூத்திரங்களைச் செய்திருக்க, ஏடு எழுதினவர்களின் குழறுபடையால் தமிழ்மொழியில் விபரீத உணர்ச்சிகள் ஏற்படக் காரணமாயிற்று.

இனிமேல், தொல்காப்பியத்தைப் பதிப்பிக்கும் ஆசிரியர்கள் இவைகளை எல்லாம் பார்த்து, சீர்திருத்திக்கொண்டு பதிப்பார்களென நம்புகின்றோம்.

ஆராய்ச்சியாளர்கள் எதனையும் ஆராய்ந்து பார்த்த பிறகே ஒரு முடிவுக்கு வரவேண்டும். அச்சுப் புத்தகத்தில் இருக்கிறதேயென்று அப்படியே ஒன்றையும் விசாரியாமல்

எடுத்துக்கொள்ளுவதில் பல அல்லல்கள் உள. ஆராய்ந்து அறிவுக்குப் பொருந்தியதையே கொள்ளவேண்டும்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்ற திருக்குறளை எல்லோருக்கும் ஞாபகப்படுத்திக்கொண்டு இவ்வுரையை முடிக்கின்றோம்.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

மருதம்

தலைமகனது புறவொழுக்கங் கண்ட தலைவி அவனொடு புலந்து கொள்வ துணர்ந்த தலைவன் அவளூடலைத் தணிப்பான் வேண்டிப் பாணனைத் தலைவியிடத்தனுப்பத் தலைவி பாணனை இழித்துக் கூறிய தாகத் தோழியை நோக்கி வாயில் நேர்பவள் கூறியது.

படிமத்து மோசிகீரனர் பாடியது

(படுமரத்து மோசி கீரன்—பிரதிபேதம்)
(படுமரத்து மோசி கீரனர்—பிரதிபேதம்)
(படுமாற்றூர் மோசி கீரனர்—பிரதிபேதம்)

33. அன்னா யிவனோ ரிளமா ணக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெரும்செம் மலனே.

என்பது வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது.

பதவுரை:—

அன்னாய்—தோழி, இவன் ஓர் இளமாணக்கன்—இவன் கல்வியும் அறிவும் நிரம்பப்பெறாத ஒரு இளமாணவனை

ஒப்பவனுயுள்ளான்; தன்னூர் மன்றத்து—தன் ஊரிலுள்ள பரத்தையர் சேரியில், என்ன கொல்லோ—என்ன காரணத்தாலோ, இரந்து ஊண்நிரம்பா மேனியொடு—இரந்து உணவைப்பெற்றும் நிரம்பப்பெருத இளைத்த சரீரத்தோடு, விருந்தின்ஊரும்—புதிய வேறிடங்களிலும்இரந்துசெல்லும், பெரும் செம்மலனே—மிக்க பெருமையையுடையவனுக வுள்ளான்.

தோழியை அன்னுய் என்று விளித்தது அன்புடைமை பற்றி என்க. காமுகர்க்குத் தூதாய்ப் பரத்தையரில்லந்தோறும் சென்று யாழ்வாசித்துப் பிச்சை ஏற்கும் பெற்றிநோக்கி மாணுக்கன் என்றும், அதிலும் முதிர்ச்சிபெருது கற்றுக் கொடுத்தளவே கூறும் தன்மையனுதலின் இளமாணுக்கன் என்றுங் கூறப்பட்டது. மாணுக்கன்—பயில்வோன்; இங்கு அறியாதவன் என்ற குறிப்பில் வந்தது. மன்றம்—பொதுவிடம்; பரத்தையர் சேரி. விருந்து—புதுமை; புதிய விடங்கள். செம்மலன் என்பது பிறகுறிப்பு; இழிவானவன் என்றவாறு.

மேற்கோள் விளக்கம்:—

1. "தோழி தலைவியை அன்னை என்றலும், தலைவி தோழியை அன்னை என்றலும், இருவரும் தலைவனை என்னை என்றலும், உளவென்று கூறுவர் புலவர்."

—(தொல். பொருளி. 246 சூ. உரை: பக். 858)

"எனக்கு மாகாது என்னைக்கு முதவாது" என்றது தலைவனைத் தலைவி என்னை என்றது. —(குறுந். 27)

2. "அன்னு...............செம்மலனே"—இது பாணன் சொல் வன்மைக்குத் தோற்று வாயில்நேர்ந்த தலைவி தோழிக்கு உரைத்தது.

—(தொல். கற்பு. 675-6)

"அன்னு யிவனே ரிளமா ணுக்கன்"

"அன்னுய் இவனே ரிளமாணுக்கன்.........செம்மலனே" இது பாணன் வாயிலாக வந்துழிக் கூறியது.

—(தொல். கற்பு. இளம்பூ. பக். 247)

2. "அன்னு யிவனே ரிளமாணுக்கன்"—என்பது தோழிக்குக் கூறியது"—என "அன்னை யென்னை யென்றலுமுளவே, தொன்னெறிமுறைமை சொல்லினு மெழுத்தினுந், தோன்ருமரபின வென்மனார்புலவர்" என்பதற்கு மேற்கோள்.

—(தொல். பொருளியல். பக். 310)

வாயில்களாவார்:—பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர்.

'இளமாணுக்கன்'—'இன்மாணுக்கன்'—பிரதிபேதம்.

மெய்ப்பாடு—எள்ளல் பற்றிய நகை.
பயன்—வாயினேர்தல்

மருதம்

தலைமகளை அவள் தமர்கள் தலைமகனுக்கு மணம் செய்து கொடுக்க நேர்ந்ததைத் தோழி ஊர்மேல் வைத்துத் தலைவிக்குக் கூறியது.

கோல்லிக்கண்ணன் பாடியது

34. ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றாய்
இனியது கேட்டின் புறுகவிவ் வூரே;
முனாஅ தியானையுண் குருகின் கானலும்
பெருந்தோட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை யன்னவெங்
குழைவிளங் காய்நுதல் கிழவனு மவனே.

என்பது வரைவு மலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழி கிழத்திக்குச் சொல்லியது.

பதவுரை:—

முனாஅது—முன்பக்கத்தே, யானையுண் குருகின் கானலும்—யானைகள் வந்து உண்கின்ற குருக்கத்திச் சோலையையுடைய கடலும், பெரும்தோட்ட—பெருந்தொகுதியான, மள்ளர் ஆர்ப்பு இசை வெரூஉம்—வீரர்களின் ஆரவாரிக்கும் ஒலியைக்கேட்டு அஞ்சும், குட்டுவன் மாந்தை அன்ன—குட்டுவன் சேரலாதனது நகராகிய மாந்தையையொத்த, எம் குழை விளங்கு ஆய்நுதல்—என்னுடைய காதணிகள் விளங்குகின்ற (ஆராய்ந்த) அழகிய நெற்றியையுடைய தோழி, ஒறுப்ப ஓவலர்—தாய் முதலியோர் கோபித்து அடக்கவும் வருத்தம் தணியாராய், மறுப்பத் தேறலர்—வருந்துதல் தகாதென வற்புறுத்தவும் தெளியாராய், தமியர்—தனிப்பட்டவராய், உறங்குங் கௌவை இன்றாய்—துயிலுதலுமற்றுப் புலம்பு கொள் துன்பமும் அலர்மொழியும் இல்லாதவராய், இனியது கேட்டு—வதைரவுமலிந்த இனிய செய்தியைக் கேள்விப்பட்டு, இவ்வூர் இன்புறுக—இவ்வூரினுள்ளார் இன்பமடைவாராக. கிழவனும் அவனே—உனக்குக் கணவனும் உன்னைக் களவினிற் கலந்த தலைவனே.

கௌவை—அலர்மொழி, துன்பம். ஒறுத்தல்—தண்டித்தல். குருகு—குருக்கத்தி. கானல்—கடற்கரைச்சோலை. தோடு—தொகுதி. குட்டுவன்—கடல்பிறக்கோட்டிய குட்டுவன் சேரலாதன். மாந்தை—ஒரு நகர்; 'மரந்தை' எனவும் காணப்பெறும். ஆய்நுதல்—அன்மொழித்தொகை; ஆய்—ஆராய்தற்குரிய அழகு. குழை நெற்றியால் விளங்கியதென்பதற்குக் 'குழைவிளங்காய்நுதல்' என்றார். கிழமை—உரிமை.

"கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்."—

"கோடுநரல் பவ்வம் கலங்க வேலிட்டுடைதிரைப் பரப்பிற் படுகடலோட்டிய வெல்புகழ்க் குட்டுவன்" (பதிற் 46). மாந்தை—

'மரந்தை' என்பதே பொருந்தும் . இது குட்டுவனுடையது.

"குரங்குளைப் புரவிக் குட்டுவன் மரந்தை யன்னவென் நலந்தந்து சென்மே" (அகம் 376).

தலைமகளைப் பாட்டுடைத் தலைவனது நகரை யன்னாள் என்று கூறல் கவிமரபு. திருக்கோவை, களவியல் முதலியனவற்றில் காண்க.

மேற்கோள் விளக்கம்:

1. 'யானையுண் குருகின்'—'யானையங் குருகின்'—பிரதிபேதம் 'யானையங் குருகின்' —(மதுரை 674)

2. "களிமயில், குஞ்சரக் குரல குருகோடாலும்"—(அகம் 145)

3. "ஒறுப்ப......அவனே"—"தமரான் ஒறுக்கப்பட்டு ஓவாராய்த்துயருழத்தல் ஆகாதென ஆற்றுவிக்கும் சொற்களான் மறுத்துரைப்பவும், தேறுராய்த் தனித்து இருப்பார் உறக்கங் காரணமாக எழுந்தகௌவை கேளாது வரைந்தெய்திய மாற்றங்கேட்டு இவ்வூரும் இன்புறுக என்பதாம்" —(தொல். களவு. பக். 428)

வெங்குழை யாய்நுதல் என்பதை, என் குழை ஆய்நுதல் என்றும், வெம் என்பது பருத்த அல்லது பரிய என்னும் பொருளில் வந்தது என்றும் கொள்ளலாம். 'முனாஅ தியானை யுண்குருகின் கானலும்'—'முனா அது யானையங் குருகின் கானலம்'—பிரதிபேதம்.

தோட்ட=தொகுதியுடைய.

"கடிதோட்ட கவளகத்தே"—(திருக்கோவை : 8) என்பதினுங் காண்க.

மாந்தை சேரநாட்டிலுள்ளதோர் நகர். இதனை "இலங்கு நீர்ப் பரப்பின் மாந்தையோர் பொருக" (பதிற்றுப்பத்து-9 பத்து-10- 8) என்பதாலறிக.

மெய்ப்பாடு—புலன்பற்றிய உவகை.

பயன்—வரைவுமலிவு தோழிக்கு உரைத்தல்.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்

இவன் ஓர் சேரவரசன். இவனைக் கடல் பிறக்கோட்டிய குட்டுவன் சேரலாதன் என்றும், சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் என்றும் கூறுவர். இவனைப் பாடிய புலவர் பரணர். இவர், குட்டுவன்மீது பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தைப் பாடி உம்பற் காட்டுவாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றார். இக்குட்டுவன் கடலோட்டிய வரலாற்றினை,

"கோடு நரல் பௌவங் கலங்கவேலிட், டுடைதிரைப்
பரப்பிற் படுகட லோட்டிய வேல்கெழு குட்டுவன்"

—(பதிற். 46)

"மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன், பொருமுரண் பெறுஅது விளங்கு சினஞ்சிறந்து, செருச்செய் முன்பொடு முன்னீர் முற்றி, யோங்குதிரைப் பௌவநீங்க வோட்டிய, நீர்மா ணெஃகம்"

—(அகம். 22)

"கொடும்போர் கடந்து நெடுங்கடலோட்டி" —(சிலப். 28-119)

"பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக்கோட்டி"—(சிலப். கட்டுரை 19) என்பவற்றாலறிக.

பரணர் என்னும் புலவர் இவனைக்குறித்து ஏர்க்களஉருவகம் பாடிப் பரிசில் வேண்டிநின்றார்.

இவனே சேரன் செங்குட்டுவன் ஆவன் என்பதைப் பதிற்றுப் பத்தில் ஐந்தாம் பத்தை யூன்றிப்படிப்பார் அறிவர்.

இலண்டனிலும் உரோமா புரியிலும் தமிழ்ச்சங்கங்கள்

உரோமாபுரியில் வீரமாமுனிவர் தமிழ்ச்சங்கம் என்றபெயருடன் 1934-ஆம் ஆண்டில் ஒரு சங்கம் நிறுவப்பெற்று அதன் மூன்றுமாண்டு நிறைவு விழா சில திங்கட்குமுன் கொண்டாடப்பெற்றதாம். இலண்டனிலுள்ள தமிழ்ச்சங்கத்தார் சென்ற கலைமகள் விழாவைக் கொண்டாடினார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் ஏதாவது ஒரு பொருளைப் பற்றிப் பேசுபவர் தமிழிலேயே பேசுதல் வேண்டுமாம்.

வரலாற்றுப்பகுதி: History & Biography

இரகுநாத நாயக்கர் (கி. பி. 1614—1644)

[திருவாளர் வித்துவான் கி சாமிக்கண்ணு அவர்கள்]

தோற்றுவாய்:—இரகுநாத நாயக்கர், தஞ்சாவூர் நாட்டை ஆண்ட நாயக்க அரசவழியின் மூன்றாவது மன்னர். இவர் அச்சுதப்ப நாயக்கரின் குமாரர். நாயக்க மன்னர்களுள் இவரே பொன்றாப் புகழ்படைத்தவர்; இளமையிலேயே நன்றாய்க் கற்றுத் தேர்ந்தவர். இவருக்கு இவர்தம் தந்தையார் பட்டஞ்சூட்டு விழாவை நான்முறைகளுக்கிணங்க நடத்தினர். தம் தந்தையாரின் அமைச்சராயிருந்த கோவிந்த தீட்சிதரையே தம் அரசாட்சியிலும் இவர் சிலகாலம் அமைச்சராகக் கொண்டிருந்தார். இவரது மனைவி, பாண்டியநாட் டரசனுடைய மகள். இவருக்கு விசயராகவ நாயக்கர், இராமபத்திர நாயக்கர் என இரண்டு மக்கள் இருந்தனர்.

காலம்:—தம் தந்தையாரால் இவர் கி. பி. 1614-ல் முடிசூட்டப்பட்டார். இவர் கி. பி. 1644 வரையில் செங்கோல் செலுத்தினர்.

இறைமாட்சி:—கர்நாடகக் காவலரான வேங்கடதேவர் கி. பி. 1614-ல் இறந்தார். அவருக்குப் பிள்ளையில்லாமையால் அவருடைய விருப்பப்படி அவரது உடன்பிறந்தான் மகன் பட்டத்துக்கு வந்தான். ஆனால் வேங்கடதேவருடைய மனைவியும் அவள் தகப்பன் சக்கராசனும் சூழ்ச்சிசெய்து புதிய அரசனைக் குடும்பத்துடன் தூங்கும்போது கொலைபுரிந்தனர். எனினும் கொலையுண்ட அரசனின் சிறுபிள்ளை ஒருவன் எஞ்சியிருந்தான். அச்சிறுவனை அரசனாக்க விரும்பி, யாசபூபதி என்னும் எச்சமநாயக்கன் என்ற படைவீரனுடைய தலைமையில் கர்நாடக மக்கள் சக்கராசனை எதிர்த்துப் போர்செய்யத் தஞ்சை யரசரைத் துணைவேண்டினார்கள். இரகுநாத நாயக்கர் அவர்களுக்குதவிசெய்து சக்கராசனை வென்று சிறுவனைக் கர்நாடக அரசனாக்கினர். தோல்வியுற்ற சக்கராசன் சொற்கேட்டுப் பாண்டியநாட்டரசன் காவிரியாற்றுக் கல்லணையை உடைத்துவிட்டான். ஆகவே, இவர், பாண்டியநாட் டரசன்மீது படையெடுத்துச் சென்று வாகை புனைந்தார். பின்னரே பாண்டியநாட்டரசன் தன் மகளை இவருக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

கல்வி நிலை :—பாரிசாதகரணம், நளாப்பியுதயம், அச்சுதாப்பியுதயம், இராமயண சாரசங்கிரகம், மகாபாரத சாரசங்கிரகம் முதலிய பல நூல்களை இவர் தாமே இயற்றினர். கற்றோர் பலரைத் தம் அவையிலிருக்கச்செய்து கல்வியைப் பரப்பினர். அமைச்சராகிய கோவிந்த தீட்சிதரைக்கொண்டு அரிவம்சசார சரித்திரம் என்ற காவியமும், சங்கீத சுதாநிதியென்ற இசை நூலும் இயற்றுவித்தார். இவருடைய பேராதரவுபெற்று எஞ்ஞநாராயண தீட்சிதர், இவருடைய வரலாறு கூறும் சாகித்தியரத்நாகர காவியம், இரகுநாத பூபவிசயம், இரகுநாதவிலாச நாடகம் ஆகியவைகளை இயற்றினர். வார்த்திகாபரணம், சதுர்த்தண்டிப் பிரகாசிகை ஆகியவைகளையியற்றிய வேங்கடேசுவர தீட்சிதரையும், பல நாடகங்கள், பல காவியங்கள், பல அணி நூல்கள் முதலியவை இயற்றிய சூடாமணி தீட்சிதரையும் இரகுநாத நாயக்கர் ஊக்கினர். இவரது அரசாட்சிக் காலத்தில், குமாரதாதாசாரியர், தாம்செய்த பாரிசாதகரண நாடகத் துவக்கத்தில் தஞ்சாவூரையும் இரகுநாத நாயக்கரையும் புகழ்ந்துள்ளார். கீர்த்திமான் ஆற்றோரத்திலுள்ள கோனேரி ராயபுரத்திலிருந்த பாச்கர தீட்சிதர் இவருடைய ஆட்சியில் மிக்க செல்வப்பெருக்குற்றார்.

கடவுட்கோட்பாடு:—தம் தந்தையாரைப்போலவே இவரும் துலைபுக்கார். பொற்குதிரை, பொற்பசு, பொன்யானை முதலிய தானங்களும், ஆயிரங்கோதானமும் செய்தார். இராமசேது, திருவரங்கம், விசயராகவபுரம் முதலிய இடங்களில் இராமசாமி கோயில் கட்டிவைத்தார். அறச்சாலைகளில் வைகலும் இருபத்து நாலாயிரம் மக்கள் உணவுபெற ஏற்பாடு செய்தார்.

நாட்டினளவு :—இவரது நாடு சிராப்பள்ளிமுதல் ருணகடல்காறும், இராமசேதுமுதல் பழமலை வரையிலும் பரவியிருந்தது.

முடிவுரை :—இவர், தம் தந்தையாருதவிய நாட்டையிழக்காமல், பாதுகாத்து முறை நிரம்பிய அரசு செய்து தம் குடிகளைக் காப்பாற்றினர்; தம் குடிப்பெயர் மேன்மேலோங்கச்செய்து நாட்டை வளமுறுத்தினர்.

முற்கால நூல் நிலயங்கள்

[திரு. காழி. P. சுப்பையா அவர்கள்]

கல்வி ஞானம் எங்கெங்குப் பரவியிருக்கிறதோ ஆங்காங்கு அதற்கு அடிப்படையான நூல் நிலயங்களைப் பற்றியும் நூல் நிலய இயக்கத்தைப் பற்றியும் பேசி வருகின்றனர். ஒரு நாடு கல்விஞானம், மொழிவளர்ச்சி, ஆராய்ச்சி அறிவு, நாகரிகம் இவைகளில் முன்னணி பெறவேண்டுமானால் அதில் அரும்பெரும் நூல்நிலயங்க ளிருந்தாகவேண்டும். மேலும், மக்கள் தங்கள் பொது அறிவை வளர்ப்பதற்கும், தங்கள் நாட்டுப் பண்டைய வரலாறுகளையும் உலகத்து நிகழ்ச்சி களையும் தெரிந்து கொள்வதற்கும் நூல் நிலயங்கள் இன்றி யமையாதனவே. நூல்களைச் சேமித்து வைத்திருக்கச் செங் கல்லினாலும் சுண்ணும்பினாலும் செய்யப்பட்ட பெட்டியென வும், வேலையற்றோர்களுக்கும், செவிடு, ஊமை முதலிய குறை புலனுடையோர்களுக்கும் ஓர் அடைக்கலமெனவும் இது காறும் கருதப்பட்டு வந்த நூல்நிலயம் இன்று உயிருக்கே அமைதியளிக்கும் பிணிதீர் மருத்துச்சாலையாக இருந்து வருகிறது. நூல் நிலயக்காரன் தேர்ந்த மருத்துவனாக விருந்து, கல்வியறிவுச் சுடரால் கொளுத்தப்பட்டு அறியா மைப் பிணியைத் தீர்க்க அவ்விடம் நாடி வருபவர்களுக்குச் சிறந்த மருந்தாக நூல்களை யுதவுகிறான்.

இது நிற்க, இக்காலம் போலவே முற்காலத்திலும் கல்விச் செல்வம் உலகெங்கும் தழைத்தோங்கி இருந்ததென நாம் நூல்வாயிலாக அறிகிறோம். ஆகவே அக்கல்விச் செல்வத் திற்கு இன்றியமையாதனவெனக் கருதிவரும் நூல் நிலயங் களும் அக்காலத்திலு மிருந்திருக்கக்கூடும். ஏனென்றால் நூல் நிலயங்களின்றிக் கல்வி வளர்ச்சி யடைந்ததெனின் அஃது உயிரில்லாத ஒரு மனிதனை நினைப்பதொக்கும். ஆத லின், முற்காலத்தில் நூல் நிலயங்கள் எவ்வித நிலைமையி லிருந்தனவென இவண் ஆராய்வோம்:

பாபிலோனியாவும் அஸிரியாவும்

பாபிலோனியாவும் அஸிரியாவும் அரேபியாவின் பண் டைய முக்கிய பட்டணங்களாகும். இந்நகரங்களை ஆராய்ச்சி செய்தவர்கள் கிறித்து பிறப்பதற்குப் பல்லாயிர ஆண்டு களுக்கு முன்னரே அங்கு நூல் நிலயங்களிருந்து வந்தன வாகக் கூறுகின்றனர். 1850-ல் திரு. லாயார்டு (Mr. Layard)

என்னும் ஆராய்ச்சியாளர் களிமண்ணுலாகிய பல சிறு தகடுகளைக் (tablets) கண்டு பிடித்தார். அவற்றில் ஆப்புரு வினவான (cuneiform) எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந் தன. இச்சிறு தகடுகள், அஸிரிய அரசனும் கல்வி வளர்ப் பவனுமாயிருந்த, அசர்பானிப்பால் (Assurbanipal) என்பவ னுடைய நூல் நிலயத்திலிருந்தனவாகக் காணப்படுகின்றன. அந்நிலயத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வெவ்வேறு வித மான நூற்றகடுளிருந்தனவென்றும் தெரிகிறது. இவையெல் லாம் ஒழுங்காக அடுக்கப்பட்டும் பட்டியில் எழுதப்பட்டும் அந்நாட்டு மக்களுக்குக் கல்வியறிவை வளர்க்கும் நோக்கங் கொண்டு கொடுக்கப்பட்டு வந்தனவாம். "அஸிரிய அரச னை அசர்பானிப்பாலினுடைய நூல் நிலயத்தில் ஒரு நூற் பட்டி (Catalogue) இருந்தது. அஃது இருபத்தைந்து சிறு தகடுகளில் பொறிக்கப்பட்டிருந்தது. உலக அறிவைப் புகட் டக்கூடிய பதினன்கு நூல்களும் சமய அறிவைப் புகட் டக்கூடிய பதினொரு நூல்களும் அதிற் காட்டப்பட்டிருந் தன" என W. C. பிரிக் ஸேயர்ஸ் (W. C. Brick Sayers) என்னும் துரைமகனர் தம்முடைய "நூனிலய வகுப்பினை" (Library classification) என்ற புத்தகத்தின் முகவுரையில் கூறுகிறார்.

எகிப்து (Egypt)

இஃது ஆப்பிரிகாவின் வடகிழக்கிலுள்ள நாடாகும். இது கல்வி ஞானத்தில் தலைசிறந்து விளங்குவது. இத்தேசம் ஆதி காலம் முதற்கொண்டே நாகரிக மடைந்திருந்ததாகத் தெரி கிறது. இத்தேசத்தினின்றே உலகம் சீர்திருத்த மடைந்த தெனச் சொல்வது மிகையாகாது. இத்தேசத்தில் காணப் படும் இருதலைக் குந்தாலியும் (Pick axe) மண்வெட்டியும் (Shovel) சரித்திர காலத்திற்கு முந்திய பழங்காலத்து ஆயுதங்களைக் காட்டுகின்றன. இப்பழங் கருவிகளால் அங்கு அக்காலத்தில் நூல் நிலயங்களிருந்து வந்தனவெனக் கூற ஏதுவுண்டு. நூல் நிலயங்களெல்லாம் ஆலயங்கள் போல் கருதப்பட்டு வந்தன. நூல்கள், அவைகளுக்காகத் தனியாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் மட்டுமன்றிக் கல்லறைகளி லும் (tombs) வைக்கப்பட்டன. இவ்வாறு புகழ்பெற்ற நிலயங்களில் (institutions) மிகவும் சிறப்பையுடையது எகிப்திலுள்ள ஒஸிமாண்டியாஸ் நூல்நிலயம் (Library of Ozymandias) என்பதே. இம் மாபெருஞ் செய்திட்டத்தின லேயே அப்பெயர் என்றுமழியாது இன்றும் நிலைத்திருக் கிறது.

மெம்ஃபிஸ் (Memphis)

இஃது அமெரிக்க ஐக்கிய மாகாணத் (U.S.A.) திலிருந்த ஒரு சிறு பட்டணமாகும். இதில் பெரிய நூல் நிலயமொன் றிருந்தது. அதைப் பாரசிகர்கள் (Persians) நாசமாக்கினர்.

அலெக்ஸாண்ட்ரியா (Alexandria)

அலெக்ஸாண்ட்ரியா எகிப்திலுள்ள ஒரு சிறந்த நகர மாகும். இந்நகரையாண்ட தாலமி (Ptolemy) என்னும் புகழ்பெற்ற அரசனுடைய ஆட்சியின்கீழ் இந்நகரம் நாமகளின் நாடேபோல் விளங்கிற்று. இந்நாட்டிலிருந்த நூல் நிலய மானது உலகத்திலுள்ள மற்றெல்லா நூல் நிலயங்களைக் காட்டிலும் தலைசிறந்து சீரும் சிறப்புமுற்று விளங்கிற்று. தாலமி பிலடெல்பஸ், (Ptolemy Philadelphus) நூல் நிலயங் களுக்காக மாபெருங் கட்டிடங்கள் பல கட்டினன். அங் நிலயங்கட்கு நூல்கள் திரட்டும்பொருட்டு உலகத்தின் பல பகுதிகட்கும் தன் மனிதர்களை யனுப்பினன். அவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தவனும் நூல்கள் தொகுக்கவேண்டி அந்நாட்டிற்கு வந்துபோகும் வெளிநாட்டு மக்கள் வைத் திருந்த நூல்களை யெல்லாம் பறிமுதல் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இவ்வரசன் காலத்தில் இரண்டு பெரிய நூல் நிலயங்கள் இருந்தன. அவற்றில் 6,00,000 நூல்க ளிருந்தனவாம். உலகத்திலேயே சிறந்தவைகளெனக் கூறப் படும் ட்ரினிட்டி (Trinity), டப்ளின் (Dublin), லண்டன் (London) முதலிய பெரிய நகரங்களிலுள்ள நூல் நிலயங் களைவிடப் பெரியவை அலெக்ஸாண்ட்ரியாவி லிருந்த அவ் விரு நிலயங்களே. தாலமிகள் நூல் நிலயங்களில் கருத்துச் செலுத்திவந்ததைக் கண்ணுற்ற பெர்காமஸ் (Pergamus) அரசர்கள் தங்கள் நாடுகளிலும் போட்டியாகப் புத்தக நில யங்களை யேற்படுத்தினர்கள்.

அட்டலாய் (Attalai)

இந்நகரத்திலும் ஒரு பெரிய நிலயமிருந்தது. இதில், இப்போது சென்னைப் பல்கலைக் கழக நிலயத்திலிருப்பதைக் காட்டிலும், நான்கு மடங்கு அதிகமான நூல்களிருந்தன.

உரோமாபுரி (Rome)

எகிப்து தேசத்துத் தாலமிகளைப்போல உரோமாபுரி யில் ஜூலியஸ் ஸீஸரும், அகஸ்டஸூ மிருந்தனர். (Julius Caesar and Augustus). வாரோ (Varro) என்பவரை

ஜூலியஸ் ஸீஸர் நூல் நிலயத்திற்கு வேண்டிய நூல்கள் சேகரிப்பதற்கும் அவற்றை ஒழுங்காக அடுக்கிவைப்பதற்கும் அமர்த்தினர். வாரோ என்பவர் கல்வித் தேர்ச்சியுற்ற பண்டிதராதலின், அவர் "நூல் நிலயங்கள்" என்பதுபற்றி நூலொன்று எழுதினர். நூல் நிலயங்களில் சில சீர்திருத்தங்களைச் செய்து அவைகளைப் புதுப்பித்தார். அவர் செய்த சீர்திருத்தங்களிற் சிறந்தவை நூல் நிலயங்களில் புகழ்பெற்ற அறிஞர்களின் சிலைகளையும் (Statues) மார்பளவுள்ள உருவப் படங்களையும் (Busts) நிரப்பி வைத்ததேயாம். அகஸ்டஸ் காலத்திலும் நூல்நிலய இயக்கம் ஆதரவடைந்து வந்தது. ஆக்டேவியன் (Octavian), பாலட்டைன் (Palatine) என்னும் இரு பெரிய நூல் நிலயங்களை நிறுவியபுகழ் அகஸ்டஸுக்கே உரியதாகும். இவ்விரண்டும் அவனுடைய தமக்கையின் நினைவறிகுறியாகவும் அப்பாலோவின் நினைவறிகுறியாகவும் நிறுவப்பட்டன.

இந்தியா (India)

மற்ற தேசங்களைப் போலவே இந்தியாவும் நூல் நிலய இயக்கத்தில் அரும்பாடுபட்டு வந்திருக்கின்றதெனச் சொல்லாமலே விளங்கும். ஸர் ஜான் மார்ஷல் (Sir John Marshal) முதலிய அறிஞர்களின் ஆராய்ச்சியால் இந்தியாவில் பழங் காலத்தில் பல நூல் நிலயங்கள் இருந்தனவென்று தெரிய வருகிறது. இதற்குத் தக்க ஆதாரங்களுமிருக்கின்றன. அக் காலத்தில் இந்தியாவில் சிறந்து விளங்கின பல்கலைக் கழகங்கள் தக்ஷசீலம், நாளந்தா, உஜ்ஜினி (Taxila, Nalanda and Ujjain) முதலிய இடங்களிலே இருந்து வந்தன. இந் நகரங்களிலிருந்த நூல் நிலயங்களெல்லாம் அலெக்ஸாண்ட்ரியா நிலயத்தின் மாதிரியே யாகும். நாளந்தா நகரத்து நூல் நிலயம் இரத்தின சாகரம் என்று அழைக்கப்பட்டு வந்ததே முற்காலத்தில் இந்தியாவிலிருந்த நூல் நிலயங்களின் மேன்மையை நன்கு விளக்கும்.

இந்தியாவிற்கு வந்த பிறநாட்டு மக்கள் தங்கள் ஊருக்குத் திரும்பும்போது இங்குள்ள நூல் நிலயங்களிலிருந்து வேதத்திற் கிசைவான பல நூல்களை (canonical literature) எடுத்துச் சென்றனர். முற்காலத்திய அரசர்களும் இவ்வித இயக்கத்திற்கு உதவி பல புரிந்து வந்தனர். இட்ஸிங் (Itsingh) என்பவர் இந்தியாவிலிருந்து சீனவுக்கு முதன் முதலாக ஐநூறு மொழிபெயர்ப்பு நூல்களை யனுப்பினர்.

ஜார்ஜ் ஸ்டீபென்சன்*

N. குழந்தைவேலன் B. A.

சற்றேறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன்னர் மக்கள் ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்குச் செல்வது மிகவும் கடினமாக இருந்தது. அக்காலத்தில் இருப்புப்பாதைபோன்ற போக்குவரவிற்குரிய வசதிகள் குறைவாயிருந்தமையால் மக்கள் நெடுந்தொலைப் பயணங்கள் செய்யமுடியாது வருந்தினர். இப்பொழுது இருப்புப்பாதையின் உதவியால் குறித்த காலத்திற்குள் மிகத் தொலைவிலுள்ள ஊர்களுக்குப் போய்ச்சேருகிறோம். முதன் முதலில் இருப்புப்பாதையை ஏற்படுத்தியவர் ஜார்ஜ் ஸ்டீபென்சன் என்னும் பேரறிஞராவர்.

இவர் 1781-ஆம் ஆண்டில் ஆங்கில நாட்டின் நியூகாஸில்† என்னும் நகரில் ஓர் ஏழைக்குடும்பத்தில் தோன்றினர். இவர் தம் தந்தையார் தமது மக்கள் எண்மரையும் காப்பாற்றுதற்குப்போதிய பொருளின்றிவருந்தினர். ஆகவே, ஸ்டீபென்சன் தமது எட்டாம் ஆண்டிலேயே கூலிவேலைக்குப்போக நேர்ந்தது. இவர் மாடுமேய்த்தும் உழவுதொழில்செய்தும் நாளொன்றுக்கு இரண்டுபேன்ஸ் பெற்றுவந்தார். இவருக்குப் பதினறு ஆண்டு நிரம்புவதற்குள் ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைக்கு அமர்ந்து சுரங்கப்பொறிகளை (இயந்திரங்களை) ஒட்டுவதற்கு வாரம் பன்னிரண்டு பேன்ஸ் சம்பளம் பெற்றுவந்தார். இவர் தமதுமேற்பார்வையிலிருந்தபொறிகளை ஆராய்ச்சிசெய்வதில் மிகுந்த ஆவல்கொண்டிருந்தார். ஸ்டீபென்சன் சில வேளைகளில் அவற்றைத் துண்டுதுண்டாய்க் கழற்றிப்பார்த்து மீண்டும் பழையபடி பூட்டிவிடுவார். இதனல் அப்பொறிகளின் பல்வேறு பகுதிகளின் நுட்பங்களையும் அவற்றின் வேலைகளையும் இவர் நன்கு அறிந்துகொண்டார். ஆயினும் பொறிகளைப்பற்றிய எல்லா நுட்பங்களையும் தெரிந்துகொள்வதற்கு அவற்றிற்குரிய புத்தகங்களை ஊன்றிப் படிக்கவேண்டுமென்பதை இவர் உணர்ந்தார். ஆகவே ஸ்டீபென்சன் தமக்கு ஓய்வுகிடைத்தபோதெல்லாம் கற்பதிலும் எழுதுவதிலுமே காலங்கழித்து வந்தார்.

ஒருநாள் அருகிலுள்ள ஒரு சுரங்கத்தில் ஊற்றுப் பெருக்கெடுத்து வெள்ளம் நிறைந்திருந்தது. சுரங்கத்தினின்றும் நீரை வெளிப்படுத்தும் நீருருஞ்சு பொறி சீர்கேடான நிலையிலிருந்ததால் எவரும் அதைச் செம்மைப்படுத்த இயலாது தவித்தனர். அத்தொழிலிற் றிறமைவாய்ந்தோர் பலர் முயன்றும் அது வீணயிற்று. ஸ்டீபென்சன் பல நாட்களாய் இடைவிடாது உழைத்து முடிவில் அப்பொறியைச் செம்மைப்படுத்திச் சுரங்

* George Stephenson. † New-Castle.

கத்திலிருந்த நீரை உறிஞ்சும்படி செய்தார். இவர் மெய்வருந்திச் செய்த முயற்சிக்குக் கூலியும் கைமேல் கிடைத்தது. இவரது திறமையைச் சுரங்கத் தலைவர்கள் மிகவும் பாராட்டி இவரை ஒரு பெரிய சுரங்கத்திற்கு மேற்பார்வையாளராக அமர்த்தினர். அஞ்ஞான்று இவர்தம் புகழ் நாடெங்கும் பரவத் தலைப்பட்டது.

பெருஞ்சுமைகளை விரைவில் இழுத்துச்செல்வதற்கு ஏதேனும் ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று ஸ்டீபென்சன் நெடுநாட்களாய் எண்ணிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் சுரங்கவேலை முடிந்தவுடன் இழுக்கும் ஆற்றல்நிறைந்த ஒரு நீராவிப்பொறியைக் கண்டுபிடிக்கவேண்டுமென முயற்சி செய்தார். அத்தகைய பொறி அமைக்கப்பெற்றால் தங்கள் சுரங்கங்களில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரியைக் குறைந்த செலவில் துறைமுகத்திற்கு அனுப்பிவிடலாம் என்பதையுணர்ந்த முதலாளிகள் ஸ்டீபென்சனுக்குப் பொருளுதவிசெய்தனர். ஓராண்டுவரை ஆராய்ச்சிசெய்து முடிவில் ஸடீபென்சன் ஒரு நீராவிப்பொறியைச் செய்துமுடித்தார். அது மூப்பதுடன் எடையுள்ள சுமையை மணிக்கு ஆறு கல் தொலைவு மேட்டுப்பாங்கான இடத்திலும் இழுத்துச்சென்றது. இதுவே அங்குள்ள மக்களுக்குப் பெருவியப்பை உண்டாக்கிவிட்டது. ஏனெனில் இதைவிட விரைவாகச் செல்லக்கூடிய சுமைவண்டிகள் அக்காலத்தில் இல்லை.

சின்னாட்கழித்து நீராவிப்பொறியை இருப்புப்பாதையின் மேல் ஓட்டினால் அதன் விரைவு இன்னும் மிகுதிப்படுத்தல் கூடும் என்பதை ஸ்டீபென்சன் உணர்ந்தார். உணரவே, இவர் தம்நண்பர்களின் உதவிகொண்டு 1885-ஆம்ஆண்டில் *ஸ்டாக்டன், *டார்லிங்டன் என்னும் இரண்டு நகரங்களுக்கிடையில் முதன்முதலாக ஓர்இருப்புப்பாதையை ஏற்படுத்தினர். இதன் வழிச்செலுத்திய புகைவண்டித்தொடர் பெருஞ்சுமைகளை மிக எளிதில் இழுத்துச்செல்வதைக் கண்டார். ஆயினும் அது மணிக்குப் பதினறு கல் தொலைவுதான் ஓடிற்று.

மீண்டும் ‡லிவர்பூல் நகருக்கும் §மாஞ்செஸ்டர்நகருக்கும் இடையில் ஸ்டீபென்சன் பிறிதொரு பெரிய இருப்புப்பாதை அமைக்கத் தொடங்கினர். அப்பாதை சதுப்புநிலங்களின் வழியாகச்சென்றதால் தண்டவாளம் பதிப்பது மிகவும் கடினமாக இருந்தது. ஆதலால் அவ்விடங்களைக் கற்களாலும் மரக்கட்டைகளாலும் நிரப்பி நிலத்தை இறுகச்செய்து அதன்மேல் இருப்புப் பாதையை அமைத்தார். இதன் உண்மை உணரமாட்டாத மக்கள் ஸ்டீபென்சனது அருந்தொண்டுகளை இழித்

*Stockton †Darlington ‡Liverpool §Manchester

துப்பேசி நகையாடினர். அவர் கண்டுபிடித்த நீராவிப்பொறி சூட்டினால் வெடித்துப் போகுமென்றும், அஃது இழுத்துச் செல்லும் வண்டித்தொடர்களையும் பிரயாணிகளையும் நொறுக்கித் தள்ளி விடுமென்றும் சிலர் கூறினர். இன்னுஞ்சிலர் புகை வண்டியினின்று கிளம்பும் தீப்பொறிகள் பாதையோரங்களிலுள்ள ஊர்களையெல்லாம் கொளுத்திவிடுமென அஞ்சினர். மற்றுஞ்சிலர் நீராவிப் பொறியினால் ஏற்படும் புகை நஞ்சுப் பொருள் நிறைந்ததென்றும், அப்புகை வயல்களில்மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுமாடுகளைக் கொன்று விடுமென்றுங் கூறிப்போந்தனர். நீராவிப்பொறிகளும் புகைவண்டிகளும் பீரங்கிகளைப்போன்று உயிருக்குத் தீங்கு விளைவிப்பன வென்றும் அவற்றை நம்பி ஏமாந்து போகவேண்டா மென்றும் புதினத்தாள்களெல்லாம் எச்சரிக்கைசெய்தன. ஸ்டீபென்சன் சிறிதும் ஊக்கம் குன்றாது இருப்புப்பாதையை ஒருவாறாகப் போட்டு முடித்தனர். புகைவண்டித்தொடரை முதன் முதலில் நாட்டுப்புறங்களிற் செலுத்தியபொழுது மக்கள் பலர் அதை ஒரு பெரும் பூதமெனக்கருதி அஞ்சினரென்றும், அது சினக்குறிகளுடன் தங்களை நோக்கி ஓடி வருவதாக எண்ணி நடுநடுங்கினரென்றும் கூறப்படுகிறது.

நீராவிப்பொறியின் பெரும்பயனை மக்கள் நன்குணர்வதற்குச் சிறிதுகாலஞ்சென்றது. 1830-ஆம் ஆண்டில் அப்பொறியை மிகச்சிறந்த முறையிற் செய்து முடிப்பவருக்கு ஐந்நூறு பவுன் பரிசளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அறிஞர் பலர் இப்பரிசுபெற விரும்பித் தம்மாலியன்ற அளவு முயற்சி செய்து நீராவிப்பொறிகள் அமைத்தனர். ஒன்றரைக் கல் நீளமுள்ள இருப்புப்பாதையில் முறையே ஒவ்வொரு பொறியையும் முன்னும் பின்னுமாகப் பத்துமுறை ஓட்டவேண்டுமென்றும், இடையே பொறியிற் கோளாறு ஏற்பட்டு நின்றுபோய்விடில் பந்தயத்தை இழந்து விடவேண்டுமென்றும் முடிவுசெய்து நாள் குறிப்பிட்டிருந்தனர். குறிப்பிட்ட நாளில் மக்கள் திரள்திரளாகக் கூடி வேடிக்கை பார்க்க வந்திருந்தனர். ஸ்டீபென்சனால் அமைக்கப்பெற்றிருந்த புதிய நீராவிப்பொறியே பத்து முறையோடு நில்லாமல் இருபதுமுறை முன்னும் பின்னுமாக ஓடிற்று. அதுவுமன்றி அப்பொறி தன்னைப்போல் மும்மடங்கு சுமையை இழுத்துக் கொண்டு மணிக்கு முப்பது கல் தொலைவு விரைந்து சென்றது. இதோடு போட்டியிட்ட ஏனைய பொறிகள் மணிக்குப் பத்துக் கல்லேனும் போகமாட்டாது இடையிலேயே நின்றுவிட்டன. ஆதலின் ஸ்டீபென்சனுக்கே அப்பரிசு வழங்கப்பெற்றது. அவ் அரிய பரிசுபெற்ற நீராவிப்பொறிக்கு (Rocket) வெடிகுண்டு எனப்பெயர் சூட்டினர்.

ஸ்டீபென்சனால் ஏற்படுத்தப்பட்ட லிவர்பூல் மாஞ்சேஸ்டர் இருப்புப்பாதை 1830-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 16-ஆம் நாள் திறக்கப்பெற்றது. ஸ்டீபென்சன் துறை மகனாரே அப்புகைவண்டியைச் செலுத்தினார். வண்டித் தொடர்கள் பூக்களாலும் பிறவற்றாலும் மிகவும் அழகுபெற ஒப்பனை செய்யப்பெற்றிருந்தன. ஆங்கிலப் பேரறிஞர் பலர் முதன் முதலாகப் இப்புகைவண்டியில் ஏறிச்சென்றனர். ஆதலால் அவ்வண்டி விரைந்து செல்வதைக்கண்டு அனைவரும் இறும்பூதெய்தினர். இதன்பின் புகைவண்டியின் பெருமை ஆங்கில நாடெங்கும் பரவியது. சில ஆண்டுகளுக்குள் எங்கு பார்த்தாலும் இருப்புப்பாதைகள் அமைக்கப்பெற்றன. தொலை வழிச் செல்வதற்கு மிகவும் இன்றியமையாததாகிய இப்புதிய வசதியைக் கையாள்வதில் ஏனைய நாடுகளும் முனைந்து நின்றன.

தவக்கத்திற் பிரயாணிவண்டிகள் மூடியின்றி மேலே திறந்திருந்தன. செல்வர்கள் தங்களுக்கே உரிமையான வண்டிகள் செய்து அவற்றை வேண்டும்போது புகைவண்டித் தொடரில் இணைத்துப் பிரயாணம் செய்து வந்தனர். நாளடைவில் புகைவண்டிகள் மிகச்சிறந்த முறையிற் செய்யப்பெற்று உண்பதற்குப், உறங்குவதற்குங்கூட அதிற் பல வசதிகள் ஏற்படுத்தப்பெற்றிருக்கின்றன. இப்போது மணிக்கு எண்பது கல் தொலைவுக்குமேல் விரைந்து செல்லக்கூடிய புகைவண்டிகள் ஓடுகின்றன. இவ்வண்டிகளினுதவியால் நாம் மலைகளைத் துளைத்தமைத்த வழிகளின் ஊடேயும், யாறுகளைத் தாண்டியும், பள்ளத்தாக்குகளைக் கடந்தும் மிக எளிதிற் செல்லுகின்றோம். இவையனைத்தையும் தமது தளரா ஊக்கத்தால் எமக்கு எளிதாக்கித்தந்த ஜார்ஜ் ஸ்டீபென்சனுக்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றோம். ஏழைக்குடியிற் பிறந்த ஸ்டீபென்சன் தம் அறிவியன்முயற்சியினால் ஆங்கிலப் பொறிவலாளராக விளங்கி உலகத்தார்க்கு அளவிலாப் பெருநன்மைகளைச்செய்து மங்காப் பெரும்புகழடைந்தனர். இவர் தம் அருமைத்திருமகனார்*ராபர்ட் ஸ்டீ பென்சன் தம் தந்தையாரைப்போலவே சிறந்த பொறிவலாளராகி லிவர்பூல் மாஞ்சேஸ்டர் இருப்புப்பாதை போடும்போது தம் தந்தையார்க்குத் தம்மாலியன்ற உதவியைச்செய்தார். இவர் பல்வேறு இருப்புப்பாதைகளை ஏற்படுத்தியும் அரும் பெரும் பாலங்களைக் கட்டியும் தமது புகழை நிலைநாட்டினார். ஜார்ஜ் ஸ்டீபென்சன் தன் மகன் தனக்காற்றிய உதவியை நேரிற்கண்டு களித்து 1848-ஆம் ஆண்டில் தமது 67-ஆவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.

ஆராய்ச்சிப் பகுதி : Research

இளங்கோவும் பாவிகமும்

[வித்துவான் S. ஆறுமுக முதலியார், எம். ஏ., எல். டி.]

(முன் கசo-ம் பக்கத் தொடர்ச்சி)

21. மேலும் கற்புடை மகளிர் தம் கணவர் எந்நிலையி லிருப்பினும், எக்குற்ற முடையராயிருப்பினும், இயற்கையி லேயே தம்மாட்டுள்ள கருணை மிகுதியால், அக்குற்றங்களை யெல்லாம் மன்னித்து விட்டு, அவர்களைத் தம்மாருயிரினு மினி யராய்க் காதலிப்பர். ஈருடல் ஒருயிராகின்றனர். அவரின்ப துன்பங்களைத் தம்மதாகப் பாவித்துப் பங்கிட்டு அவற்றை ஏற்றுக்கொள்வதே கற்புடை மகளிரின் தன்மையாம். "தற் காத்துத் தற்கொண்டாற்பேணி, தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்," என்பது திருவள்ளுவரின் பெண்மைச் சித்திரம். தோன்றற்குந் தோகைக்கு மொன்ருய் வருமின்ப துன்பங்களே யென்று வாதவூரடிகளுங் கூறியுள்ளனரே! இவர்கள் தங்கணவரையே தெய்வமாகப்பாவித்துத்தொழுவர். தெய்வந் தொழாது கொழுநற்றொழுதெழும் பெண் பெய்யென மழை பெய்யும் என்பர் பெரியோர். இதேபோன்று கணவரும் தம்மனைவியரை நேசிப்பது இயல்பு என்பதை மறுப்பாரு முளரோ?

22. இக்குணங்கள் எல்லாம் கண்ணகிபாலும் அவள் தன் கணவனிடமும் நிறைந்துகிடந்தன. கண்ணகியின் தோழி யாகிய தேவந்தி, கோவலனைப் பிரிந்து கண்ணகி வருந்தும் நிலையில்,

"சோமகுண்டஞ் சூரிய குண்டந்துறை மூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநா
ளாடுதும்"

என்று அறிவுறுத்தினள். ஆனல், கற்புடைத் தெய்வமாகிய கண்ணகி, அது "பீடன்று" என்று வாளா இருந்தனள்.

"இன்னிசை யெழிலியை யியம்பவு மிசைவதோ
கனைகதிர்க் கனலியைக் காமுற வியைவதோ
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவு மியைவதோ"

என்ற பாலைக்கலியடிகள் இங்கு ஒப்பிட்டு நோக்குதற் குரியன.

23. கண்ணகி, தன் கணவனைத் தெய்வமாகக் கருதியதோடு தன் ஆருயிர்த் துணைவனாகவும், தன் உள்ளன்புக்குரியவனாகவுங் கருதியிருந்தாள். பொருளைத் தொலைத்தாலென்? பரத்தையின்பாற் பிரிந்தாலென்? தன்னுள்ளத்தைக் கவர்ந்த கள்வனன்றோ கோவலன்? எவ்வாற்றானும் மனந்திரும்பி, மீட்டுந் தன்பால் வந்துவிடுவான் என்பதே அவள் எண்ணம். கண்ணகியும் கோவலனும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த அன்புக்கு எல்லையுமுண்டோ? அது கரையிறந்தது. அதை ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளால் விளக்குதும். பரத்தையின்பாற் பிரியாததன்முன் காதலிருவரும் ஒருவரையொருவர் காதலித்த விதத்தையும், அன்னார்தம் இன்பம் பொருந்திய இல்வாழ்க்கையையும் மனையறம் படுத்த காதையில் மிகக் காணலாகும். கோவலன் தன் ஆருயிர்க் காதலியைப் பார்த்து,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா யமுதே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையால்"..........

என்னும் காதல் கனிந்த மொழிகளால் அவள் அன்பு நலத்தையும், அழகையும், குணமேன்மையையும் புகழ்கின்றான். இதே அன்பைக் கண்ணகியும் கோவலன்மாட்டுச் செலுத்தினாள் என்று கூறவும் வேண்டுமோ?

24. கோவலன் பரத்தைபாற் பிரிந்தபின்பு கண்ணகியின் தோற்றமும் அவள் அன்பு நிலையைப் புலப்படுத்தும். அவனையே நீள நினைந்து நினைந்து நெக்குருகும் கண்ணகி, தன் கணவன் செயலைப் பிறருக்குக் கூறினாளல்லள். தன் வருத்தமிகுதியை வெளிப்படுத்திக்கொள்ளாது, தன் மாமன் மாமியருமறியாது மறைத்து வைத்த பெருமை அதைவிடச் சீரியதாம். அதோடு கணவன் சென்ற விடமெல்லாம் தானும், இடையூறுகளைக் கவனியாது 'உடன்சென்றாளன்றோ. இச்செயல்களையெல்லாம் கம்பரின் காவியத்தில் சீதையின் செயல்களோடு ஒப்பிட்டுப் படித்தின்புறுவர் காவியநலந் துய்ப்போர்.

25. அடுத்து மதுரைக்குச் செல்வோம். மாதரி வீட்டில் காதலரிருவரும் உண்டபின், கோவலன் சிலம்பு விற்பதற்குப்

பிரிகின்றான். இச்சமயத்தூக் கூறப்படும் செய்திகளைப் படிப்போர் தம் உள்ளத்தைப் பறிகொடுப்பது திண்ணம். கடைசியாகக் காதலர் பிரிகின்றனர். பிரிந்தவர் பிறகு கூடினாரில்லை. பிரியும்போது பிரியா விடைபெற்றுச் செல்கின்றான் கோவலன். "உள்ளகம் வெதும்பி வருபனி கரந்த கண்ண"னாகிப் பிரிந்து சென்றான். இத்தருணத்து இவர்கள் உரையாடல்கள் இவர்களின் உள்ளங்களினூடு பாய்ந்து செல்லும் அன்பு வெள்ளத்தை விளக்குவனவாம். பின்னர், கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேள்வியுற்றாள் ஒருத்தி குரவையாடு மிடம் போந்து, நிகழ்ந்ததனை வாக்காற் சொல்லலாற்றாதவளாய், மெய்ப்பாட்டாற் புலப்படுத்தி நின்றபொழுது கண்ணகியின் மனம் உடனே கோவலனைக் குறித்து நடுங்கியது.

> "நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்
> அன்பனைக் காணாது அலவுமென் னெஞ்சன்றே
> அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சாயின்
> மன்பதை சொன்னதெவன் வாழியோ தோழி"

என்று கலக்கமுற்றாள். கொலையுண்டதைக் கூறக்கேட்ட பிறகு கண்ணகி, "பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த், திங்கள் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச், செங்கண் சிவப்ப அழுதாள் தன் கேள்வனை, எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்." பின்னும், தம்மோடு இன்புற்ற தம் கணவர் எரியின்மூழ்க, அவரோடு தாமும் மூழ்காது, துன்புறும் தன்மையதாகிய கைம்மை நோன்பு நோற்று இடர்ப்படும் உயவற் பெண்டிரைப்போல, "அன்பனை இழந்தேனாகியான் இருந்தழுவாள் ஒருத்தியோ" என்று புலம்பினாள். இவையெல்லாம், கணவன்பால் அவட்கிருந்த அன்பின் திறத்தைத் தெரிவிப்பனவாம்.

26. கண்ணகி கணவன்மீது மட்டும் அன்புடையளாயிருந்து, அவன் பெற்றோர்களை அவமதித்தனளோ? அன்று. அது கற்புடைமகளிர்க் கழகல்ல. அவர்களிடத்தும் அன்பு கொண்டொழுகி, கண்ணகி அன்னாரையும் பேணினள் என நாம் அறிகின்றோம். இல்லறக் கடன்களில் இழுக்கியாளானேன் என்று கண்ணகி வருந்தியதாக வைக்குமிடமொன்றில், தன் மாமன் மாமிகளைப் பேணும் பேற்றையும் இழந்ததாக ஏங்கிக் கண்ணகி இரங்கியது, சிறப்பாக இக்காலத்துப் பெண்கள் நோக்கத்தகுந்ததொன்றாம். எத்துணைக் குடும்பங்களில் இக்காலத்து மாமி மருகி மனவேற்றுமைகளினாலும், ஒருவருக்கொருவர் செய்யுங் கொடுஞ் செயல்களாலும் பூசல் விளைந்து, இல்லறத்தின் மாட்சியும், தெய்வத்தன்மையும் பயனும்

குலைந்து அறம் கொல்லப்படுகிறது. குடும்பத்தில் ஒற்றுமையின்றி மனைவியும் கணவனும் ஒத்த அன்புடையராயிருந்தும் யாது பயன்? இல்லறமெங்கே! சுகமெங்கே! மாதரி வீட்டின் கண்ணின்றும் சிலம்பு விற்கக் கோவலன் புறப்படுமுன்னர், கழிந்ததற்கிரங்கிய கண்ணகி, கோவலனைப்பார்த்து,

"..ரும்
பெருமகள் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தான்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்,
முந்தை நில்லா முனிவிகந் தனனா
வற்புளஞ் சிறந்தாங் கருள்மொழி யளைஇ
எற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமும் நொடிவது போலுமென்
வாயின் முறுவற் கவருள்ளகம் வருந்த,"

நீர் போற்றா ஒழுக்கத்தை மேவினீர் என்று கூறினாள். இங்கே கோவலனுடைய தாயும் தந்தையும் தம்மகனைக் குறித்து வருந்துதலின்றிக் கண்ணகியுற்ற துன்பத்திற்கே வருந்துதலும் அவளது பொறையைப் பாராட்டுதலும் அவர்களின் உயர் குணத்தைப் புலப்படுத்துகின்றன. "மாமன் மாமிகளாயுள்ளோர் தம் மருகி திறத்து எத்தகைய அன்புடையராயிருக்க வேண்டுமென்பது இதனாற் பெறப்படும். கண்ணகியோ தனக்குண்டான வருத்தத்தைச் சிறிதும் கருதாது, தன் மாமன் மாமிகளுக் குண்டாய வருத்தத்திற்கு இரங்குகின்றாள். இதைப் பார்க்கினும் அவள் உயர்குணத்திற்கு வேறு என்ன சான்று வேண்டும்?"

27. தொடர்புடையார்கண் அன்புடையளாய கண்ணகி பிற உயிர்களிடத்தும் காரணமின்றி இயல்பாகவே செல்லும் அருளுடையாளா யிருந்தாளென்றும் நாமறிகின்றோம். இதுவே கற்புடைத் தாய்மார்களுக் கழகாம். காதலரிருவரும் கவுந்தியடிகளோடு காவிரியின் தென்கரையை யடைந்து ஒரு பொழிலகத்து இளைப்பாறியிருந்தபொழுது ஆண்டுச் சென்ற வம்பப்பரத்தை யொருத்தியும் வறுமொழியாள னொருவனும் கோவலன் கண்ணகியைப் பார்த்துச் சில தகாத வார்த்தைகளைக் கூறக்கேட்டுச் சீற்றங்கொண்ட கவுந்தி அவர்களைக் குறுநரியாகும்படி சபித்தனர். ஆனால், இதைக்கண்ட கண்ணகியுங் கோவலனும் நடுநடுங்கி அவர்களுக்காகப் பரிந்துபேசி அவர்களுக்கு உய்திக்காலம் உரைக்கவேண்டுமென்றும் கவுந்தியை வேண்டினர். இந்நிலையிற் பிறராயிருப்பின் அடிகள் செய்தது பொருத்தமுடையதே என்று கருதி மகிழ்வுற்றிருப்பார். கண்ணகியோ தம்மால், பிறருக்கு ஒரு துன்பம் நிகழ்ந்ததே என்று வருந்தி அதற்காக இரங்கினாள்.

"நெறியி னீங்கியோர் நீரல கூறினும் அறியாமையென் றறிதல் வேண்டும்," என்று அவ்விழி பிறப்புற்றோர்க்காகப் பரிந்தும் பேசினாள் பெண்தகைமைசான்ற கண்ணகி. அவளுடைய உயர்ந்த மனப்பான்மையும், பிற உயிர்கள் மாட்டுக் காட்டிய அருளும் சிறந்து விளங்குமிடம் இதுவன்றோ?

இனி, இல்லறமாகிய நல்லறம் நடத்தும் கற்புடை மகளிர்க்குரிய கடமைகளையும் கண்ணகி நன்கறிந்திருந்தாள். தானமுறைப்படி கணவனோடு இருந்து இல்லறம் நடத்தி இல்லறக் கடமைகளைச் செம்மையாய் ஆற்ற முடியவில்லையே யென்று வருந்தின இடமொன்றை ஆசிரியர் அமைத்து, அவள் அவற்றை நன்கு அறிந்திருந்ததையும், கோவலனைப் பிரிந்து இருந்த நாட்களில் அவள் மனநிலை இருந்த விதத்தையும் நமக்குக் காட்டிச் செல்கின்றார். இங்கும் கண்ணகியை மாதரி வீட்டில்காண்கின்றோம். கோவலன் தன் மனைவியைப் பார்த்து, "உனக்கு யான் இழைத்த இடுக்கண்கள் எண்ணில. மண்மகளறிய நின் வண்ணச் சீரடிகள் வருந்த கல்லதரத்திற் பலகாவதத்தூரம் நின்னை நான் நடத்திக் கூட்டி வந்தேனே! இது வல்வினைப் பயனோ," என்று வருந்தியபோது, கண்ணகி, வழிநடையினாலும், வறுமையினாலும் உற்ற துன்பத்தைவிட இல்லறக் கடமைகளின்றும் வழுவியதனாலுறுந்துன்பமே பெரிதெனக் காட்டினள். "யான் உம்முடன் வந்தது கற்புடை மனைவி செய்யவேண்டுவதே. ஆனால், இல்லறக் கடமைகளினின்றும் வழுவித் தாங்கள் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்," என்று தன் கணவனுக்கு அறிவுறுத்தினாள்.

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் களித்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை,"

என்பன கழிபே ரிரக்கத்தால் வெளிப்பட்ட கூற்றுக்கள். மேலும், "நும் பெற்றோர்கள் உள்ளகம் வருந்தவும் நீர் 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்'," என்றாள். இச்சமயத்துக் கண்ணகி உண்மைக்கு மாறாகமலும், சமயம் நேர்ந்துழி கணவன் தன் பிழையை நன்குணரும்படி செய்து அவனைத் திருத்த வேண்டிய தன் கடமைக்கும் கற்புக்கும் பொருந்தவும், கணவனுக்கு இன்னமை மிகுதற் கேதுவாகாமலும், தன் மனையறம் ஆற்றப்படாமைக்கு வருந்திக் கூறுவது படிப்போர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுவதோடு, அவள் கற்பு மேம்பாட்டையும் விளக்குகின்றது. அப்போது கோவலனது உள்ள நிலையை யாரே கணித்தறிய வல்லார்? அவனுக்கு மனமாற்றம் திண்ணமாய் ஏற்பட்டிருக்கவேண்டும்.

"சிலம்புள கொள்ளும்," என்று கூறியபோதே, அது பசு மரத்தாணிபோற் பதிந்திருக்கவேண்டும். ஆயினும் பயனென்? ஊழ்வினை அவனைப் பிடர்பிடித்துந்தி மதுரைக்கும், பின் கொலைக்களத்திற்கும் அழைத்துக்கொண்டு செல்கின்றது. இதனை யாரே தடுக்கவல்லார்? மேற்கூறிய மனையறங்களெல் லாம் ஒத்த அன்பினராய தலைவனுந் தலைவியும் சேர்ந்து செய்ய வேண்டுவன. தனியாயிருந்ததனால் இவற்றை ஆற்றமுடிய வில்லையே என்று வருந்துதல் கற்புடை மகளிர்க் கியல்பே. கற்புக்கரசியாம் சீதாபிராட்டியும் இலங்கையில் சிறைவைக்கப் பட்டிருந்தபோது இவ்வாறே இல்லறக் கடைமைகளில் வழுவ நேர்ந்ததே என்று வருந்தியதாகக் கவியரசர் தீட்டிய செய் யுள் ஓவியம் நம் மனக்கண்முன்னே வந்து நிற்கின்றது. அதனை இதனோடு ஒப்பிடலாம்.

" அருந்து மெல்லட காரிட அருந்த மென்றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென வெதும்பும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்றுமயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண்டெழாதாள்,"

என்பதே கம்பரின் ஓவியம்.

இவ்வாறே கண்ணகியின் கற்பெனப்படும் பாவிகம் நூல் முழுவதும் ஊடுருவிச் செல்வதைப் பார்க்கலாம். கண்ணகியின் கற்புடைமை நூலின் முதலிலிருந்து முடிவுவரையில், பலவழி களிலும் வெளிப்படுத்தப்பட்டுக் காவியத்தினின்றும் பிரிக்க முடியாத பண்பாய், நடுநாயகமாய் விளங்குகின்றது. கண்ணகி யின்கூற்றுக்களாலும் கோவலன், கவுந்தியடிகள், மாதரி. ஐயை முதலிய பலரின் உரையாடல்களாலும், ஆசிரியர்தம் கூற்றுக்களாலும் இன்னோரன்ன வேறு சில முறைகளாலும் இக்கற்புடைமை நமக்கு அறிவிக்கப்படுகிறது. கவுந்தி கோவ லன் ஆகிய இருவர்களின் கூற்றுக்களிலிருந்து கண்ணகியின் கற்புடைமைக்கு இரண்டு சான்றுகள் தந்து கட்டுரையை முடிப்பாம். மாதரிபால் கண்ணகியை அடைக்கலமாகக் கவுந்தியடிகள் அளிக்கும்பொழுது, கண்ணகியின் கற்புக்குச் சான்றுபகர்கின்றார் :—

"கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்கு துயரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்"

என்பது அவர் சான்று. இம்மொழிகள் தூய துறவொழுக் கத்தில் நின்ற கவுந்தியடிகளின் வாய்மொழிகளாம். கண்ண

கியின் ஆருயிர்க்காதலனும் அவள் கற்பு மேன்மையை உணர்ந்து சான்று பகர்கின்றான்.

"நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
வென்றொடு போர்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்"

என்று அவளைப் போற்றுகின்றான்.

கல்வி பயிற்றுமுறை நாட்டுமொழியிலா ஆங்கிலத்திலா?

[ஹானரபிள் ஸர் பிரோஸ் சேத்னா]

"கீழைநாட்டு மொழிவளர்ச்சிக்கென்று தனிப்பட்ட ஒரு திட்டத்தை நீங்கள் வகுத்துள்ளீர்கள். இஃது உண்மையிலேயே பாராட்டற்குரிய தொன்றாகும். ஏனைய இந்தியப் பல்கலைக் கழகங்களும் இம்முறையை விரைவிற் பின்பற்றுமென உண்மையாய் நம்புகிறேன். இந்தியத் "தேசீயம்" நாட்டுப் பொதுமொழியொன்றை நிறுவ விழைகிறது. 'தேசீய' இயக்கமென்ற ஒன்றிற்கு "தேசீய"ப் பொதுமொழி ஒன்று இன்றியமையாததே; ஆகவே இந்தியப் பெருநாடனைத்திற்குமே பொதுப்படையான ஒரு மொழியும் அம்மொழியிலியன்ற இலக்கியமும் இருத்தல் வேண்டுமென்ற நோக்கம் இயற்கையா யெழுவதொன்றே யாகும். ஆனால், இந்நோக்கம் எளிதிற் கைகூடுவதொன்றன்று. தென்னிந்திய மொழிகளையெடுத்துக்கொண்டு பார்த்தாலோ, அவை தனிப்பட்ட ஓரினத்தைச் சேர்ந்தவை. எனவே, இந்நாடனைத்திற்கும் ஏற்றதும் பொதுப்படையானதுமான மொழியொன்றைக் கொள்வதென்பதும் அம்மொழியிலேயே இலக்கியங்களையாக்கிக்கொள்வதென்பதும் இயலுமோ என்பது ஐயப்பாட்டிற்குரியதாகும். பல்கலைக் கழகங்கள் நிறுவப்படத் தொடங்கியகாலத்தில் நாட்டுமொழி வளர்ச்சி ஏற்றவாறு கண்காணிக்கப்பட்டு வந்ததென்பது உண்மையாயினும் வரவர அச் சீரியகொள்கை கைநழுவவிடப்பட்டு நாட்டு மொழிப் பயிற்சி எடுப்பாரும் பிடிப்பாருமின்றிப் புறக்கணிக்கப்பட்டு வருவதாயிற்று.


"இஃதிவ்வாறாக, இவ் (அண்ணாமலை) பல்கலைக்கழகத்தார் தொடக்கத்திலிருந்தே தமிழ்மொழியையும் தமிழிலக்கியத்தையும் வளர்க்கவேண்டும் என்ற குறிக்கோளின் சிறப்பியல்பையுணர்ந்துகொண்டமை மகிழ்தற் குரியதொன்றாகும். தமிழுக்கென்றே ஒரு தனித்துறை வகுக்கப்பட்டு அதன்கண் ஆராய்ச்

சிக்கெனப் பல வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன; தமிழ் மொழியிலும் தமிழிலக்கியத்திலும் தேர்ச்சியுற்றுத் திறமை தெரிப்போர்களுக்கு "வித்வான்" என்ற பட்டமும் வழங்கப் பட்டு வருகிறது.

"இவையெல்லாம் மிகவும் சீரிய முறைகளே. எனினும், நாம் இக்காலை யிருக்கும் நிலையில் இந்நாட்டிற்கு ஆங்கிலமொழி யும் இன்றியமையாது வேண்டப்படுவ தொன்றாகும் என் பதை எவரும் மறுக்கமுடியாது. இன்னும் வருங்காலத்தி லும் ஆங்கில மொழி இன்றியமையாது வேண்டப்படுவதொன் றாக இருந்தே தீரும். அம்மொழி வளர்ந்துசெல்லும் விரைவை நோக்கின், உலகமுழுதுமே ஒரு காலத்தில் ஆங்கில மொழி யையே பேசக்கூடும்; இப்பொழுதுகூட அது பரவியுள்ள பரப்பை நோக்குமிடத்து உலகத்தைச் சுற்றிவர விழைவோர்க் குறுதுணையான மொழியாக அதைத் தவிர வேறொன்று வேண்டுவதின்றெனக் கூறலாம். ஸர் எட்வின் ஆர்னால்டு என்பவருடன் பேசிக்கொண்டிருந்த காலையில் டெனிஸன் பிரபு ஒரு முறை பின் வருமாறு கூறினாராம்:—'ஆங்கிலம் எக்காலத்திலும் பேச்சுவழக்கிலுள்ள ஒரு மொழியாக இருக்கு மென்பதை நினைத்தால், அது நமக்கு நலந்தருவதொன் றன்று என்ற முடிபிற்கே வரல்வேண்டும்; ஏனெனில், அவ்வாறு பேச்சு வழக்கி லிருக்கவிருக்க அது மாறிக்கொண்டேபோகும்; போகவே, நீங்களும் நானும் எழுதியவை படிப்போருக்கு, இன்று சாஸர் இருப்பதுபோன்று, ஒரு காலத்தில் கடின மானவையாய் விளங்காதிருக்கக்கூடும் என்பதே'. சாஸர் என்று குறிப்பிட்ட பண்டைய ஆங்கிலப் புலவரைப்பற்றி ஆர்ட்டெம்ஸ் வார்டு என்ற பெரியார் 'அவர் புகழ்மிகுந்த புலவர்தான்; எனினும் (ஆங்கிலத்தைப்) பிழையிலாதெழுதுவ தென்பது அவருக்குத் தெரியவே தெரியாது' என்று கூறியுள் ளமை நினைவிருக்கக்கூடும். ஆங்கிலம் மாறிக்கொண்டேபோகி றதோ இல்லையோ என்பது ஒருபுறமிருக்கட்டும். இற்றைக் காலத்திற்கு ஆங்கில மொழியானது பண்டைக்காலத்தில் கிரே க்கமொழி எவ்வாறிருந்ததோ அவ்வாறிருக்கிறது. அம்மொழி யின் அளப்பிலாவாற்றலும் கவர்ச்சியும் அதன் உரப்பொலியி லும், அதன்பேராற்றல் அதன் உயிர்ப்பொலியிலும், அதன் மாட்சி அதன் அடைமொழிப் பெருக்கத்திலும், அதன் சிலே டைத்திறன் அதன் சொல்வளப்பத்திலும், அதன் பெருமை சொற்சுருக்கத்திலும், செறிவிலும் அமைந்துள்ளனவென்று கூறுவதுண்டு. ஆகஸ்போர்டு ஆங்கில அகராதியில் மட்டும் 4,00,000 சொற்கள் எடுத்தாராயப்பட்டு வரையறுக்கப்பட் டுள்ளன. வேறெம்மொழியிலுள்ள அகராதிகளிலும் இத்தனை

சொற்கள் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. ஐரோப்பிய மொழிகளைச் சீர்நோக்கிப் பார்த்தவர்கள் இத்தாலிய மொழி ஆற்றொழுக்குப்போன்ற இனிமை வாய்ந்ததென்றும், ஸ்பானிய மொழி பெருமிதத்தோடு கூடிய செய்யுண்மை நலம் வாய்ந்ததென்றும், ஜெர்மன் மொழி அளப்பற்ற செறிவு மேம்பாடுடையதென்றும், பிரெஞ்சு மொழி சதுரப்பாடும், பேசும் எளிமையும் வாய்ந்ததென்றுங் கூறினும், ஆங்கிலமே ஒப்பற்ற வலிவும், உயிராற்றலும் உள்ளதென விதந்தெடுத்துக் கூறுவதோடு, அம்மொழி தேர்ந்த சொற்பொழிவாளனல்லாத ஒரு பேச்சாளன் பேசினும் கேட்பாரைப் பிணிக்கத் தக்க ஒரு கவர்ச்சி யுடையதாய் இருக்கின்றதென்றுங் கூறுவர். எனவே, பல துறைகளிலும் மலிந்து காணப்படும் எண்ணற்ற நூல்களை நம் சிறுவர்களும் சிறுமிகளும் படித்துணர்வதற்கு ஆங்கிலமே இன்னும் சிலஆண்டுகள் காறுமாவது ஏற்ற கருவியாக இருக்குமென்பதற் கையமில்லை. உலகத்தில் இற்றை நாள் வரையப்படுங் கடிதங்களில் முக்காற்பங்கு ஆங்கிலத்திலேயே எழுதப்படுகின்றன. உலகத்தில் அச்சிடப்பெறும் செய்தித் தாள்களிற் பாதிக்கு மேற்பட்டன ஆங்கில மொழியிலேயே அச்சிடப்படுகின்றன. உலகத்திலுள்ள ஒலி பரப்பு நிலையங்களில் ஐந்தில் மூன்றுபங்கு வீதம் ஆங்கில மொழியே வழங்கப்படுகின்றது. இதுகாறும் எக்காலத்துமில்லாதபடி இக்கால இந்திய நாடானது பெரியதொரு அரசியற்றுறை வளர்ச்சியிலும், வாணிபத்துறைவளர்ச்சியிலும் ஈடுபட விருக்கின்றது. இந்த வளர்ச்சிகளில் ஈடுபட்டுழைப்பதிற் பங்குகொள்வது உங்களுக்குப் பெருமையளிப்பதாயிருக்கலாம். அவ்வாறு உழைக்குங் காலத்தில் அவ்வுழைப்பின் பெருமைக் கேற்றவாறு உங்கள் கல்விப் பயிற்சியின் வெற்றியும் உடன்கணித்தறியப்படும். நம் நாட்டு முன்னேற்றம் நம் கல்விவளர்ச்சிமுறையையே பொறுத்ததாகும். வயிறு வளர்ப்பதற்கான வகையில் கல்விபயிற்றப்படுவது பயன் தருவதாக விருக்கும். அதற்கிருக்கும் மதிப்பு இகழ்ந்தொதுக்கப் படுவதொன்றுகாது. நகரவாழ்க்கை யமைப்பைச் சீர்ப்படுத்துவதும் கல்விப்பயிற்சிமுறையேயாகும். கல்வி யளவிற்கேற்பவே நம் மக்களும் விளங்குவர். நம்நாடும் நம்மக்களின்கல்வி யளவிற்கேற்பவே சிறந்து விளங்கும். ஆகவே, நம் நாடு எத்தகைய கல்விமுறையைப் பின்பற்றி வளர்க்கிறதோ அதைப் பொறுத்ததே அதன் முன்னேற்றம் என்பது உணர்தற்பாற்று.''

இது சென்னைப் பெரியார் சென்ற நவம்பர்த் திங்கள் 20-ம் நாள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலாற்றிய பல்கலைக்கழக ஆண்டுவிழாவுரையில் ஓர் பகுதியின் மொழிபெயர்ப்பு. (காழி. சிவ. க.)



குறுந்தொகை மொழிபெயர்ப்பு

[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]
(District Educational Officer, South Arcot.)

(முன் கச-ஆம் சிலம்பு, சஙஅஆம் பக்கத்தொடர்ச்சி)

கரு. பாலை

பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

—ஔவையார்

O! friend, how true is the love of the maid with plenty of bangles in her forearm, unto that young man who wears the anklet of heroism and bears the spear of victory shaped as the tender leaf of the *Asoka*, true as the good words of the Kosar of Nallur who to the beat of the drum and the blow of the conch, appeared at the assembly under the shade of the old-time banyan! (15)

—Auvvayar

கசு. பாலை

உள்ளார் கொல்லோ தோழி கானவர்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ

O! friend, will not he, who is wandering in the forest of beautiful-bladed EUPHORBIA, think of me

when he hears the red-legged rock-lizard call for his mate, with a sound like to that of blacksmiths, when they turn with their nails the arrow that is being shaped on the anvil? (16)

—Palai-Padia-Perunkadung-Ko

௧௭. குறிஞ்சி

மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே.

—பேரெயின் முறுவலார்

He who is obsessed by love, will ride a palm-frond horse, will wear the budded *madder* blossom, shout out his grievance in the street, and might do even worse. (17)

—Per-Eyin-Muruvalar

௧௮. குறிஞ்சி

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

—கபிலர்

O! Lord of the bamboo-fenced mountain slopes, where at the roots the jack fruits grow, rectify your conduct by making public what you keep so secret. The evil of such secrecy, who can estimate adequately? Like unto a heavy fruit hanging from a slender branch, her slender life bears a heavy burden of love. (18)

—Kapilar

௧௯. மருதம்

எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.

—பரணர்

O! heart, be not poor and dejected like the poor poets, who have lost their patron Evvie, and lack the flower of gold to adorn their head, but be of good cheer, like the household *Mullai* whose teeth-like buds open with fragrance. Will not some dark-haired damsel look graciously on us? (19)

—Paranar

௨௦. பாலை

அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்
உரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே.

—கோப்பெருஞ் சோழன்

If those that in search of fortune give up grace and love and friendship, be considered wise, let them be wise; we are content to be foolish. (20)

—Koperum-Cholan

௨௧. முல்லை

வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங் கலரே.

—ஓதலாந்தையார்

Though the forests hung with fresh blossoms of *konrai*, seem like women wearing among their ornaments of gold, bunches of *mullai* haunted by hordes of bees, I cannot yet believe that the season of rain has come, for I cannot help believing my Lord (who said he would return at such a time). (21)

—Odhal-Anthayar

௨௨. பாலை

நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து

வேனி லஞ்சினை கமழுந்
தேமூ ரொண்ணுத னின்னொடுஞ் செலவே.

—சேரமானெந்தை

The citizens of this delightful place, where the mountain slope has taken the white cedar tree with its right-whirled blossom-laden boughs as an ornament, think of going with you, feeling for your separation from her, whose eyes are ever dropping tears. (22)

—Seraman-Enthai

௨௩. குறிஞ்சி

அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே யவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.

—ஔவையார்

O! singer with long grey hairs, like rows of cowries strung together, sing in praise of our King's lovely long range of mountains, sing of it again and yet again! (23)

—Auvvayar

௨௪. பாலை

கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகளிறு மிதித்த வொருபழம் போலக்
குழையகக் கோடியோர் நாவே
காத லரகலக் கல்லென் றவ்வே.

—பரணர்

Could my lord be without me, seeing that spring has called forth the lovely blossoms on the black babul tree? He left me helpless as the ripe fruit from the tall fig tree on a river bank which an elephant rising from its waters has trampled mercilessly. Shall he not feel sorry for it and come to me now? (24)

—Paranar

அறிவியற் பகுதி - Science

வீரரும் வீரரைப் போற்றலும்

[திருமதி குணஜஞர்த்தனம் எம். ஏ., எல். டி.]

(முன் ௧௯௰-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாம் அரிச்சந்திரனை இன்றும் போற்றிப் புகழக் காரணமென்னை ?

அவன் உண்மையை நிலைநிறுத்தும்பொருட்டுப் பன்னற்கரிய இன்னலுக் குட்பட்டானன்றே? தன் நாடு இழந்தான்; தலைவியை யிழந்தான்; பின்னர், தன் மகனையு மிழந்தான். அந்நிலைமையினும் தன் வாய்மை தவறினன்கொல்? அப்பெற்றி வாய்ந்த வாய்மையோரும், மன வலியுடையோரும் நம்முள்ளும் எத்துணைபேர் இருக்கின்றேம் !

ஆண்களேயன்றிப் பெண்களும் வீரராகத் திகழ்ந்தார்கள் என்று நமது பண்டைய நூல்கள் கூறுகின்றன.

முதல்நாள் போரில் தன் தந்தையையும் தலைவனையும் இழந்த ஓர் முதியோள், இரண்டாம் நாள் மாற்றார் செருப்பறை கேட்டுத் தனது ஒரே பிள்ளையைப் போர்க்கோலஞ் செய்து, "செருமுக நோக்கிச் செல்க" எனக்கூறி அனுப்பினள் என்றால் அவள்தம் வீரம் இருந்தவாறு என்னே! சிறந்த வீரர் தம் நாட்டின் பொருட்டுத் தமது உயிரையுங் கொடுப்பர்; அஃதே ஓர் ஆண்மகனுக்குற்றதொரு சிறந்த வொழுக்கம் என்ற உண்மையை உணர்ந்தன்றே தனது ஒரே ஒரு அருமந்த மகனை அமர்க்களம் போக்கினள்?

தாமே வாளேந்திப் போர்முனை சென்று மிக்க திறமையுடன் போர்புரிந்த வீரப்பெண்மணிகள் பலரை அறிந்திருக்கலாம்.

இஃதன்றியும், சீதையும் சாவித்திரியும் உண்மை நெறி தவறாது நின்று உலையாப் புகழ்நிறுத்தியதூஉம் அறியாததன்று. தன்னை வஞ்சகமாகக் கவர்ந்துசென்ற அரக்கர் தலைவனிடம் கூறும் சீதையின் வீரஞ்செறிந்த மாற்றம் வியப்புறுத்துவதாகும். அவளை யடையும்பொருட்டுச் செய்த அரக்கர்கோனின் சூழ்ச்சிகளெல்லாம் வீணாயின.

'நின் தந்தையைக் கொன்று விடுவேன்', என்று அச்சுறுத்தினால் தன்வழி வருவாளெனக் கருதிய இராவணன், ஓர்

அரக்கனை சனகனாகச்செய்து சானகி முன்னிலையில் அவனை அலங்கோலமாக இழுத்து வரும்படி செய்தான். அவனைத் தன் தந்தையென்றே கருதிய சீதைப் பெருமாட்டி நெஞ்சம் நைந்துருகி, 'தந்தையே பெண்பெற்றாய், அதனால் நீ இத் துயரம் பெற்றாய்; யான் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற் குங் கேடுவிளைவித்துவிட்டேனே,' என்று புலம்பினாள்.

அதுபோழ்து இராவணன், 'நீ என் விருப்பத்திற் கிசைந்தால் நின் தந்தையை விடுவித்து அவனுக்கு யான் அடிமையாகுவேன்,' என்றனன். பொய்யான சனகனும்,

"பாவியான் பயந்த நங்கை நின்பொருட்டாகப் பட்டேன்
ஆவிபோயழிய வன்றே யமரர்க்கு மரசனாவான்
தேவியா யிருத்தநீதே சிறையிடைத் தேம்புகின்றாய்
என்னையென் குலத்தினோடு மின்னுயிர்த் தாங்கியீண்டு
நன்னெடும் செல்வந் துய்ப்பேனாக்கினை நல்கினாளும்
உன்னை வெஞ்சிறையினீக்கி யின்பத்து ளுய்ப்பா யென்னைப்
பொன்னடி மருங்கு வீழ்ந்தா னுருமுகப் பொருமுகின்றான்"

அதனைச் செவிமடுத்த சீதை அடங்கா வெகுளிகொண் டாள்.

"அவ்வுரை கேட்ட நங்கை செவிகளை யமையப் பொத்தி
வெவ்வுயிர்த் தாவி தள்ளி வீங்கினள் வெகுளி பொங்கி
இவ்வுரை யெந்தை கூறா னின்னுயிர் வாழ்க்கைபேணிச்
செவ்வுரை யன்றி தென்னாச் சீறினளுளையச் செப்பும்"

என்று கம்பர் கூறுமாறு சீதையின் நிலைமை உணர்க. அங்ஙனம் சீறிய சீதை மாயசனகனை நோக்கி, 'அடாத மொழிகள் கூறினாய். நீயும் உன் சுற்றமும் மற்றும் இவ் வுலகிலுள்ளோர் அனைவரும் இறப்பதாயினும் யான் என் னெறியினின்றும் தவறமாட்டேன்' என்று வீரவுரை பகர்ந் தாள்.

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்னும் ஓர் அம்மையார் நமக்கு வெகு நெருங்கிய காலத் திருந்தவர். அவர்தம் வீரம் விளங்கியமை சில்லாண்டுகட்குமுன் நடந்த மாபோரில் (Great War) தான். அவ்வம்மையார் அப்போர்க்களத்தில் அஞ்சா நெஞ்சினராய், புண்பட்டவர்க்கும், நோய்கொண்ட வர்க்கும் மருத்துவத் தொண்டுபுரிந்து வந்தார். எந்நேரத்தி லேனும் ஆகாயத்தினின்று வெடிகுண்டு விழக்கூடிய அவ் விடத்திலே மக்கள்பாற்கொண்ட பேரன்பினால் அவர்கள் இன்னலுற்ற காலத்துப் பொறாமல் ஆண்டிருந்து அவ்வின்னல் களைக் களைந்து வந்தாரென்றால் அவர் வீரம் பொருந்தியவ ரன்றோ?

இவ்வாறெல்லாம் ஆண்மக்களிலும் பெண்மக்களிலும் வீரஞ்செறிந்த நமது நாடு இப்போது எந்நிலைமையிலிருக்கிறது; தமே வீரராகயிருக்க வியலாமற்போனாலும் வீரராயிருப் போரையேனும் போற்றுதல் கூடாதோ?

இயேசுவுக்கு மாணாக்கர் பலர் உண்டு. அம்மாணாக் கர்கள் அவர்மேல் மிக்க அன்பு பூண்டொழுகினார்கள். இவ்வாறிருக்கு நாளில் இயேசுநாதர் காவலாளரால் கைப் பற்றப் பெறுவதற்குச் சற்றுமுன், இயேசுபெருமான் தம் மாணாக்கரை நோக்கி, 'என்னிறுதிக்காலம் கிட்டிற்று; நீங் கள் யான் கூறியவற்றை மறக்காது அதன்படி ஒழுகுங்கள். நீவிர் யாவரும் அன்பே உருவாகத் திகழவேண்டும்,' என்று அறிவு கொளுத்தினார்.

அச்சமயம் பீட்டர் (Peter) என்ற மாணாக்கன், 'உமக்காக என்னுயிரையும் கொடுக்கவல்லேன்,' என உறுதி கூறினான். அப்படி உறுதிகூறிய அவன் சற்று நேரத்திற்குப் பின் செய்த தென்னையெனக் கவனியுங்கள்.

ஒரு நள்ளிரவில் இயேசுநாதரைக் கொடியவர் கொண்டு போய் காவலிலிட, என்ன நடக்கிறதென்று பார்க்க பீட்ட ரும் பின்சென்றான். ஏசுநாதரைச் சிறையிட்ட முரடர்கள் அவரை இழிப்பதும் பழிப்பதுமா யிருந்தனர். வெளியே உட்கார்ந்திருந்த பீட்டரைக் கண்ட ஒரு வேலையாள், 'இவனும் அவனைச் சேர்ந்தவன்,' எனலும் இயேசுபெருமானுக்காகத் தன் இன்னுயிரையுங் கொடுப்பதாக உறுதிகூறிய பீட்டர் தன்னுயிருக்கஞ்சி இயேசுநாதரைத் தனக்குத் தெரியவே தெரியாது என்று ஆணையுமிட்டான்.

என்னே அவன்றன் இழிவான தன்மை! தன்னுயிருக் கஞ்சி, உலகமே உய்யப்பிறந்த உத்தமரை மறுத்தான். இதுவோ ஆண்மை! இஃது இழிவினும் இழிவான செய லன்றோ? நம்மவருள்ளும் பெரும்பாலோர் இந் நீர்மைய ராகவே இருக்கின்றார்கள். இதனைக் குறித்து யாம் பெரிதும் வருந்தவேண்டும். ஒருவர் பேரறிஞராயும் பெரு வீரராயும் விளங்கக்கண்டும் பிறர் அவரைப் போற்றாத காரணத்தினால் நாமும் அவரைப் பாராட்டுகின்றோமில்லை. இதைவிட இழி வானது வேறொன்றுமில்லை.

நம்மனத்திற்பட்ட உண்மையை வெளிப்படையாகக் கூறுவோமாயின் நாமும் வீரத்தன்மை சிறிது வாய்ந்தவ ராவோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வீரரைப் போற்றுதல் வேண்டும்; போற்றுதல் என்றால் அவரைத் தெய்வமாகத் தொழல்வேண்டுமென்பதல்ல அவர் தம் அரும்பெருங்குணங்களை மனத்திற்கொண்டு அவரைப் போல் நாமும் நம்மவரும் நடக்க முயல்வதே வீரரை உண்மையாகப் போற்றுதலாகும். அதை விடுத்து அவர்கள் வீரர் தாமென ஒத்துப் பாட்டுப் பாடுவது போற்றுதலாகாது.

நம் பிள்ளைகளுக்கும் அடிக்கடி வீரர் சரிதங்களைக் கூறி அவர்தம் அரும்பெருங் குணங்களை யெடுத்துக்காட்டல் வேண்டும். சிறுவயதிலிருந்தே வீரச் செயல்களைப் பற்றியும் வீரரைப்பற்றியுங் கேட்டுவந்த ஒரு மகன் வீர உணர்ச்சிப் பெறுகிறான். சிறு பருவத்திலிருந்தே வீரம் பிள்ளைகளின் மனதில் பதியவேண்டும். வெறுங்கதை சொல்வதிற் பயனில்லை. அவரவர் எவ்வெவ்வகையில் வீரராக விளங்கினரென்று நாம் எடுத்துக்காட்டுவோமாயின் நம்பிள்ளைகளும் அச்சொற்களிலே ஊறி அத்தகைத்தாய உணர்ச்சி அடைவது திண்ணம். இவ் வீரம் என்று நம்மனோர் மனத்தில் வேரூன்றிப் பதிகின்றதோ அன்றே நமது நாடும் முன்னேறக்கூடும்.

> ''பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்''

என்ற குறளையும்,

> 'இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
> நடுக்கற்ற காட்சி யவர்'

என்ற குறளையும் நாமனைவரும் நன்குணர்ந்து அதன் வழி நடப்போமாயின் நாம் மேம்பட்ட நிலைமையை எய்துவது எளிதன்றோ?

தமிழர்க்கு இந்தி வேண்டுமா?

[புதுவை, சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள்]

தமிழுக்கு வேண்டிய அருட்செல்வம் உள்ளது. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ், திருக்குறள், பெரிய புராணம் போன்ற அருள்வாக்குகள் மனிதவாழ்விற்குக் கடவுளொளி காட்டுவன. அவை தமிழருக்குப் போதும். அருங்கலைச் செல்வத்திற்கு மேனாட்டைத்தான் எதிர்பார்க்கும் நிலைமையில் இந்தியா உள்ளது. தாய்நாட்டின் அருட்செல்வமும் மேனாட்டின் பொருட்செல்வமும் சேர்ந்தே இனி நம்மை ஆளாக்கவேண்டும். இந்த இரண்டிற்கும் இந்தி எவ்வாறு பயன்படும் என்பதை அறிஞர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தியினின்று தமிழர் கற்றுப் பயனடையக்கூடியது ஒன்று உண்டு. அதாவது அம்மொழி எவ்வளவு ஆர்வமுடனும் ஆதரவுடனும் முன்னேறி வருகிறதோ அவ்வளவு ஆர்வமுடனும் ஆதரவுடனும் தமிழை முன்னேற்ற ஒவ்வொரு தமிழனும் விரதம்பூண்டு முயற்சி செய்வது. கோரக்பூர் கீதா அச்சுக்கூடம் செய்யும் வேலையைத் தமிழர் செய்தால், இந்தியாவிற்குத் தமிழையே தாய்மொழியாக்கலாம் என்பது கனவாகாது; உறுதியாக நடக்கும். தமிழுக்கு இயல்பாக அவ்வளவு பெருமையுள்ளது. அப்பெருமை தென்குமரிக்கும் வட வேங்கிடத்திற்கும் இடையே சிறைப்பட்டுள்ளது. இனித்தான் விரிந்து உலகளாவவேண்டும். ஆங்கிலத்திற்கு அடுத்த படியாக 30 எழுத்துக்களில் முற்ற முடிந்த ஒரு அரிய பெரிய தொன்மொழி தமிழே. அஃது இப்போது காலவெள்ளத்தில் வடக்கு, மேற்கிலிருந்து மோதும் அலைகளால் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தமிழனின் கையும் தமிழ் முன்னேற்றத்திற்குக் கைதந்து, இப்பெரிய அரிய அருள்மொழியை அதற்குரிய அரியணையில் ஏற்றி இலக்கவேண்டிய காலம் இது. இன்னும் ஐந்தாண்டுகளில் வீடுதோறும் தமிழ்மணம் கமழும்படி செய்யவேண்டும். மேனாட்டிற்குப் பெருமை தரும் கலைகளெல்லாம் நம் தமிழர் நன்கு பயின்று அறிந்து பயன்பெறும்படி செய்யவேண்டும். இல்லேல் மேற்சொன்ன அலைகள் மீண்டும் விழுங்கும்! தமிழர் விழித்தெழுக!

இந்தியைவிட ஆங்கிலமே நமக்கு இப்போது இன்றியமையாதது. ஆங்கிலத்தினால்தான் ஜப்பான் முன்னேறிப் பொருட்செல்வம் பொலிந்து விளங்குகிறது. வெறும் மொழிப்பயிற்சிகளிலேயே ஆயுள் வீணாகக்கூடாது. ஒவ்வொருவனும் தனது தாய்மொழியை நன்கு கற்கவேண்டும். உலகுடன் பழகுவதற்கும் தொழில் நடத்துவதற்கும் பெரும்பான்மையோர் உலகெங்கும் நன்கு அறிந்த ஒரு மொழியையும் கற்றறியவேண்டும். அத்தகைய மொழி இப்போது ஆங்கிலமே என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. மக்களுக்கு வேண்டுவன இரண்டு அருள், பொருள். அருட்செல்வம் தமிழில் மலிந்துகிடக்கிறது. உலகிற்கெல்லாம் வழங்கலாம். பொருட்செல்லத்திற்கு ஆங்கிலத்தின் அறிவுந் துணையும் வேண்டும். ஆங்கிலத்தில்

நமக்கெய்தும் பயனைத் தமிழுக்கே உரிமையாக்கவேண்டும். அத்த கைய முயற்சியால்தான் நாம் தலை நிமிரமுடியும். இந்தி காற்றினும் கடிய வேகத்துடன் முன்னேறி வருகிறது. கலைகளெல்லாம் இந் தியில் ஆக்கப்பட்டு வருகின்றன. புதிய புதிய நாவலர்களைக்கொண்டு புதுப்புது நூல்களை யாத்து அம்மொழியை நாட்டின் முதன்மொழி யாக்க முயல்கின்றனர். அம்முயற்சி தமிழுக்குத் தமிழ்நாட்டில் நடை பெறவேண்டும். சைவ சித்தாந்தக் கழகம் ஒன்றுதான் இப்போது அத்தகைய பெருமுயற்சியில் தலையிட்டுச் சென்ற பல ஆண்டுகளாக மிகவும் அரிய பெரிய நூல்களை வெளியிட்டு சொற்ப விலைக்குக் கொடுத்துதவி வருகிறது. இத்தகைய முயற்சிகளைத் தமிழர் ஒரு மித்து ஆதரிக்கவேண்டும். தமிழ் இப்போதிருக்கும் நிலைமையில் நமக்கு வேறு மொழிகளில் ஈடுபட நேரமில்லை. பிற மொழிகளை நாம் வெறுக்கவில்லை. அதனிடத்தில் அததது உயர்வே. அவரவர்க்கு அவரவர் தாய்மொழி உயிர். தமிழின் உயிரைக் காப்பாற்றும் பணி நமக்கு இப்போது வந்துள்ளது. பிற மொழிகளின் முன்னேற்றத் திற்குத் தக்கவாறு தமிழ் முன்னேறியாகவேண்டும். அதற்கு மாறாக, நம் பள்ளிச்சிறார், தமிழைப் புறக்கணித்து வேறொரு மொழிக்கு முதன்மை தரும்படியான எத்தகைய முயற்சியும் தமிழுக்கு ஆக்கந் தராது. தமிழ், இந்தி, ஆரியம், ஆங்கிலம், தெலுங்கு முதலியன அத்தனையும் கற்றால் நல்லதுதான். இன்னும் பல மொழிகளையும் கற்கலாம். ஆனால் நேரம்? நமக்கு வேண்டுவது எது? மொழிப் பயிற்சியின் நோக்கமென்ன? மனிதர் ஒருவாரோடொருவர் கலந்து உறவாடிப் பயன் பெறுவதே. அதற்கு முதன்மையாகத் தாய்மொழி வேண்டும். அது நமது தாயகத்திற்கு ஒருமைப்பாட் டுணர்ச்சியைத் தரும். இரண்டாவது, உலகறிந்த ஒரு மொழி வேண்டும். தற்போது அத்தகைய மொழி ஆங்கிலம் பிரஞ்சு இரண்டும். எந்த நாட்டிற் குப் போனாலும் இந்த இருமொழிகளுக்கும் செல்வாக்கு உண்டு. இந்த இரண்டிலும் மேம்பட்டது ஆங்கிலமே. அதனால்தான் ராஜாராம் மோகன்ராய் போன்ற பெரியார் பலர் நம் நாட்டிற்கு ஆங்கிலத்தின் முதன்மையை வற்புறுத்தினர். இன்று உலகிலுள்ள இலக்கியச் செல்வமெல்லாம், கலையறிவெல்லாம் ஒருங்கே ஆங்கிலத்தில் காண லாம்: ஒருசிறு தீவினர் பேசும் அம்மொழிக்கு வந்த பெருமைதா னென்னே! அதன் பெருமை அசைக்க முடியாதபடி மென்மேலும் ஓங்கி வளருகிறது. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததனாலன்றே தாகூ ரின் கீதாஞ்ஜலி உலகப்பரிசுபெற்றது! விவேகானந்தர் சிகாகோ மேடையில் ஆங்கிலத்தில் பேசியதாலன்றே இன்று நமது நாட்டு வேதாந்தம் கடல் கடந்தொலிக்கிறது! அதுபோலவே சித்தாந்தமும் கடல் கடந்தொலிக்கச் செய்யவேண்டும். தமிழ் உலகறிய விளங்க வேண்டுமாயின் ஆங்கிலத்துணை வேண்டும். மொத்தமாக எந்த இந் திய மொழிக்கும் தற்போது ஆங்கிலத்தின் துணைவேண்டும். வங்க மொழி ஆங்கிலத்தின் கூட்டுறவால் மிகவும் முன்னேறியுள்ளது. தமி ழின் அருட்செல்வத்தை ஆங்கிலத்தில் ஆக்கி உலகெங்கும் பரப்ப வேண்டும். ஆங்கிலத்திலுள்ள பொருட்செல்வத்தைத் தமிழாக்க வேண்டும். இந்த இரண்டுதான் தமிழருக்குப் பெருமைதரும்.

இந்தப் பணி நிறைவேறிய பிறகு தமிழர் எத்தனை மொழிகளைவேண்டு மானாலும் கற்கட்டும்.

இந்தியை நாம் வெறுக்கவில்லை. கற்பவர் கற்கட்டும், கட்டாயப் படுத்தவேண்டாம். மாணவருக்குத் தமிழறிவு பாழ்படும்படியான போட்டி மொழிகளை முதன்மையாக்க வேண்டாம். இந்தி கற்றவரும் என்ன செய்யவேண்டும்? அம்மொழியிலுள்ள நயங்களைத் தமிழிற்கு உரிமையாக்கவேண்டும். அப்படித்தான் நமக்கு அருகேயுள்ள வடுகு முன்னேறி வருகிறது. எம்மொழியில் புதுமை காணினும் அதை உடனே தம்மதாக்கி வருகின்றனர் வடுகர். தற்போது தெலுங்குப் பேரகராதி ஒன்று தயாரிக்கின்றனர். அதில் வெறும் பேசும் மொழி களேயன்றி உலகிலுள்ள பெரியார் வரலாறுகள், புதுமைகள், நாட்டு வரலாறுகளைப் படங்களுடன் அச்சிட்டு வருகின்றனர். தக்காரை அதற்குக் கட்டுரை எழுதச்சொல்லி ஆதரிக்கின்றனர். உதாரணமாக, உயிரெழுத்துத் தொடக்கத்தில் அரவிந்தர் வரலாற்றை இங்குக் கேட்டு ஐந்து பக்கம் படத்துடன் வெளியிட்டுள்ளனர். தமிழர் சுற்றிலும் உலகைப் பார்க்கவேண்டும்; பெருமுயற்சி செய்யவேண்டும்; அதற்குத் தக்காரை ஆதரிக்கவேண்டும்.

எம்மொழி பயின்றாலும் அதன் நயத்தைத் தமிழாக்கவேண்டும். அப்துல் பாகர் என்ற தீர்க்கதரிசி, 'ஒவ்வொருவரும் தாய் மொழியும் உலகறிந்த ஒரு பொது மொழியும் கற்றால் போதும். பல மொழிப் பயிற்சியில் நேரம் போக்கவேண்டாம்' என்கிறார். மேனாட்டார் தமது தாய்மொழியுடன் எஸ்பிராண்டோ என்னும் உலகப் பொதுமொழி யையும் கற்கின்றனர். எஸ் பிராண்டோ மிகமிக எளிது. இலக் கணம் சுருக்கம். பத்தே விதிகள். ரஷ்ஷியா, பிரான்ஸ், அமெ ரிக்கா, இங்கிலாந்து எங்கிலும் இப்போது எஸ்பிராண்டோ கற்கின் றனர். பல மொழிகளின் தேவையின்றி இருமொழிகளிலேயே உலகை யாளுகின்றனர். தாய்மொழி, பொதுமொழி இரண்டு கற் றால் போதும் என்பது அறிஞர் கொள்கை. வடநாட்டிலேயே ஆரியம் மிகைபடக்கலந்த இந்திக்கும், அரபி, பார்சி மிகுந்த உருதுக்கும்போட்டி யுள்ளது. ஆதலால், விருப்பமும் நேரமும் இருந்து கற்பவர்கற்கட்டும். அஃது அவரவர் மனப்பான்மை. ஒருவர் லத்தீன் கற்பேனென்று முனைந்தால் அவர்களைப் பிறர் தடுத்தல் பான்மையன்று. கற்பவர் கற் கட்டும். கட்டாயமாகக் கற்றே தீரவேண்டும்; இல்லேல் வாழ முடி யாது என்று தடபுடல் செய்யவேண்டாம். பள்ளிச்சிறார்க்குத் தமிழும் ஆங்கிலமும் மென்மேலும் வளரும் நன்முயற்சிகளை இடையறாது செய்வோம். இதுதான் எமது விருப்பம். உள்ள மட்டும், தமிழ்க்கே உயிர்க்கிறேன், பிற்காலத்திலாயினும் தமிழர் அதன் பயனைப் பெறுக.

குறிப்பு: தமிழ்மக்கள் பொன்னேபோல் போற்றத் தகுந்த கட்டுரையாகும்.

—பதிப்பாளர்.

"தினமணி" மதிப்புரைக்கு எதிர்ப்புரை

[ஈழத்துச் சிவானந்த அடிகள் எழுதியது]

தாது—ஐப்பசி 13-ம் நாளி (28-10-'36)ல் வெளிவந்த தினமணிப் பத்திரிகையில் ஒருவர் திருநெல்வேலிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்படும் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் பத்திரிகைமீது சீற்றங்கொண்டு அதைப்பற்றிச் சில அபிப்பிராயங்கள் கூறியதின் வாயிலாகத் தமக்கிருக்கும் ஆராய்ச்சி யின்மையையும் பொறுமை யின்மையையும் குறிப்பால் உணர்த்துகிறார். இதைத் தினமணிப் பத்திரிகையை நடாத்தும் அதன் சொந்தக்காரர் நன்கு சிந்திக்க விரும்புகின்றேன்.

அவர் செந்தமிழ்ச் செல்வியைப்பற்றித் தமது அபிப்பிராயங்களைக் கூறியதில், செந்தமிழ்ச் செல்வி இலக்கியத்தை வளர்ப்பதற்காக அக்ஞாதவாசம் புரிந்துகொண்டு இருக்கிறதென்றும், அதில் காணப்படுங் கட்டுரைகளில் முழுவதும் குறுகிய நோக்கமும் பிற்போக்கான மனப்பான்மையும் நிறைந்திருக்கின்றன வென்றும், அதன்கண் வெளியிடப்பட்ட "தமிழும் இந்தியும்" என்னுங் கட்டுரையில் காணப்படுங் கேள்விகளெல்லாம் அசட்டுக் கேள்விகளென்றும், அவற்றிற்கு விடையளிக்கக்கூடிய பொறுமையான சிறந்த குணம் தமக்கு இயல்பாக இல்லையென்றுங்கூறுகிறார். புத்தியுள்ளவருக்கல்லவா பொறுமை உண்டாகும். ஏனையோர் பொறுமையற்றுச் சிறுமையைத் தாமே தேடிக்கொண்டவர். இத்தகையினர்க்குப் பொறுமை ஏற்படவேண்டுமானல், செந்தமிழ்ச் செல்விபோன்ற சிறந்த கருத்துக்கள் அடங்கிய பத்திரிகைகளை இடைவிடாது பயிலல்வேண்டும்.

செந்தமிழ்ச் செல்வி என்னுஞ் சிறந்த பத்திரிகையில், மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத் துணைக்கருவியாகவுள்ள இலக்கியத்தை வளர்த்து, மக்கள் மனம் நிலையான அமைதியில் நுழையும் வண்ணம் எழுதப்படுங் கட்டுரைகளின் திட்ப நுட்பங்களை ஆராய்ந்தறியவேண்டுமானல், பொறுமையோடு கூடிய அறிவு வேண்டும். அஃதில்லார்க்கு அவை கசப்பாகவே தோன்றும். உண்மையாகவே உலக முன்னேற்றத்தைக் கருதிப் பாடுபடுவோர் அதற்கு அடிப்படையானவும், இன்றியமையாது வேண்டப்படுவதுமான இலக்கியப் பயிற்சியை இகழ்ந்து தள்ளவோ அல்லது அதனையும் அதனைப் பயில்வோரையும் கண்டு வெகுண்டு சீற்றங்கொள்ளவோ முன்வரார். உலகியலில் பெரும் நன்மையை விளைக்கக்கூடியது இலக்கியம் ஒன்றே என்பதனை நன்குணர்ந்தே மேல்நாட்டுப் பேரறிஞர்களாகிய மில்டன், மெக்காலே, மார்லி, பேக்கன் முதலியோர் அவ்விலக்கியத்திற் சிறந்த பயிற்சி உடையவர்களாய், அரசாங்கத்தில் பெரும் பதவிகளை வகித்து நாட்டிற்கு நலம் பல செய்துள்ளார்கள். அன்றியும், நந் தமிழ்நாட்டை அரசுபுரிந்த சேர சோழ பாண்டியருட் பலரும், அவர்களிடம் அமைச்சராய் இருந்து அலுவல் பார்த்த தாயுமானவர், சேக்கிழார், மாணிக்க வாசகர் முதலியோரெல்லாம் சிறந்த இலக்கியப் பயிற்சி உடையாராய் இருந்தமையினலன்றோ தமிழ்நாடு வான்புகழ்கொண்டு சிறந்து

விளங்கியது. அத்தகைய இலக்கியப் பயிற்சியுள்ள அறிஞர்கள் இக் காலத்தில் இல்லாது போனதினுல் அல்லவா நம் நாடு அயல்நாட்டவ ரால் ஆளப்பட்டு வருகின்றது.

மக்கள் அறியாமை இருளினின்றும் விலகவும், அறிவென்னும் ஒளியைப் பெறவும், அவ்வறிவின் வாயிலாக நாட்டின் குறைகளை உணரவும் உணர்ந்து அதற்கேற்ற துறைகளில் இறங்கிப் பாடுபடவும் கருவியாகவுள்ள பல அறிவுக் கட்டுரைகளை, மக்களின் வாழ்க்கைக்கு ஊன்றுகோலாகவுள்ள இலக்கிய உறவுகொண்டு எழுதி உதவும் செந் தமிழ்ச் செல்விபோன்ற உயர்வான பத்திரிகைகளைக் குறை கூறித் திரிபவர்தாமா நாட்டிற்கு நலந்தேட உழைக்க முடியும்! "நூற்றைக் கெடுத்தது குறுணி" என்பதுபோல, இவர் போன்றவர்கள் அல்லவா அறிவுடையோரால் தழுவப்படாது தள்ளப்படுகின்றனர்.

பத்திரிகைகள் எழுதி வெளியிடல் பல்லாற்ருனும் மக்கள் முன் னேற்றம் அடையும் பொருட்டேயன்றி, வேறன்று. மற்று, அவை தாம் ஓரிடத்திற்கே ஒரு காலத்திற்கே உரியவாதலின்றி, இவ்வுல கெங்கும் பரவி என்றென்றும் நிலைபெற்று விளங்குவதால், அவற்றை இயற்றி வெளியிடுவோர் அவை எழுதுவதன்கண் எவ்வளவு கவனம் செலுத்துதல் வேண்டுமென்பதனை அவர் தமக்குத்தாமே ஆராய்ந்தறி தல் நலம். ஒன்றன் உண்மையை உணராமலும், உணர விருப்பந்தா னும் இல்லாமலும் மனம் போனவாறே எழுதி மக்களின் மனஅமைதி யைக் குலைத்தல் அறிவுடையோருக்கு அழகன்று. உண்மையை அறிய வேண்டுவோர் எப்பொழுதும் அவ்வுண்மையையே பார்க்கவேண்டும். அப்படிப் பார்ப்பதுதான் அறிவுடையோர் செயல். அறிவுடை யோர்க்கு எப்பொழுதும் எப்பொருளிலும் அவ்வுண்மைதான் தோன் றும். உண்மை அல்லாதது அவர்கள் அறிவுக்குத் தப்பிவிடும். ஆனுல், உண்மையை உணரமுடியாது செந்தமிழ்ச் செல்வியைக் குறைகூறிய அன்பர் போன்றவர்கட்கு முதல்முதல் உண்மை அல்லாததுதான் தோன்றும்போலும்! இவர்போன்ற உண்மை அறியாதவர்களும் உண்மை உணர்ந்தவர்கள்போல வெளியே நடிக்கின்ருர்கள். அந்நடிப் பும் வேறு. உண்மை உணர்ந்தவர்களது ஒழுக்கமும் வேறு. அந்நடிப் பொழுக்கத்திற்கும் உண்மை ஒழுக்கத்திற்கும் எவ்வளவோ வேறு பாடுகள் உண்டு. அவ்விரண்டையும் ஒன்றென்று அறிவுடையோர் கொள்ளார். அவ்விரண்டாலும் ஒரே பயன் விளைதலும் இல்லை. வெவ் வேறு பயனே விளையும். ஆதலால் உண்மை உணர்ந்தே அதனைக் கடைப்பிடித்தல் வேண்டும். இதற்காகவேதான் செந்தமிழ்ச் செல்வி போன்ற சிறந்த பத்திரிகைகளில் காணப்படும் இலக்கியச் சுவைததும் பிய இனிய கட்டுரைகளை, அத்தகைய பத்திரிகைகளுக்குக் குறை கூறித் திரிபவர்கள் நன்கு பயின்று பழகவேண்டுமென்று மீண்டும் மீண்டும் இடித்திடித்துக் கூறவேண்டியதாய் இருக்கிறது.

செந்தமிழ்ச் செல்வியில் கட்டுரைகள் எழுதுவோர் எத்தகைய மேம்பட்ட அறிவுடையோர் என்பதை நாடு நன்கறியும். ஈண்டு நான் அவர்களைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. பகலவனை அறியாதவர்கள் இருப்பாராயின் அவர்களை அறியாதவரும் இருப்பர். சைவ சித்தாந்த

நாற்பதிற்றுக் கழகத்தார் நாட்டின் நலத்தைக் கருதிச் செய்யுந் தொண்டில் ஆயிரத்தில் ஒருபங்குதானும் அவர்களை இகழ்ந்து கூறும் "அறிஞர்கள்" பலர் செய்கிறதாகத் தெரியவில்லை. "தினமணி" ஆசிரியருக்குத்தான் பொறுமையில்லையே! பொறுமையில்லாதவர் புத்திசாலித்தனமான செயல்களை எங்ஙனஞ் செய்யமுடியும்?

இனிச், செந்தமிழ்ச் செல்வியில் வெளியிடப்பட்ட "தமிழும் இந்தியும்" என்னுங் கட்டுரையில் காணப்படுங் கேள்விகளை அசட்டுக் கேள்விகளென்றும், அவற்றிற்கு விடை கூறத்தக்க பொறுமை தமக்கில்லையென்றும் அவ்வாசிரியப் பெருந்தகை கூறுகிறார். அசட்டுக் கேள்விகளுக்கு விடைகூற வேண்டுமாயின், அதற்குரிய அசட்டறிவும் அசட்டுக் குணமும் உடையார்க்கே இயலும். அவ்வாசிரியர் போன்ற சட்டறிவும் சட்டுக்குணமுமுள்ள சட்டுக் கிரியைக்குட் கிடந்து உழலுவோருக்கு எங்ஙனம் அசட்டுக் கேள்விகளுக்கு விடை கூறத்தக்க ஆற்றலும் பொறுமையும் ஏற்படும்? அசட்டுக் கேள்வி என்பது அழிவில்லாத புகழுடம்போடு நின்று விளங்கக் கூடியவர்கள் கேட்குங் கேள்வி. அத்தகையோர் இறந்தும் இருப்பவராவர். அவர் வாய்மொழிகளையும் வையகம்போற்றும். இனிச் சட்டுக் கேள்வி என்பது அழியுந் தன்மையுடைய புலால் உடம்போடுமட்டும் நிற்கக்கூடியவர்கள் கேட்குங்கேள்வி. அவர் இருந்தும் இறந்தவராவர். அவர் வாய்மொழிகளையும் வையகம் தூற்றும். எனவே, "தமிழும் இந்தியும்" என்னுங் கட்டுரையிற் காணப்படுங் கேள்விகளெல்லாம் அசட்டுக் கேள்விகளாய், என்றைக்கும் அழியாதனவாய் நிலைபெற்று விளங்கும் கேள்விகளாம் என்பதை எல்லாரும் உணர்ந்து, இனிமேலாவது அவற்றிற்குத் தக்க விடைகள் கூற முன்வருவார்களா! இவர்களுக்குப் பொறுமை பெரிதும் உண்டாவதாக!

இனித், தினமணிப் பத்திரிகை இச் சிறந்த பொருளை அறியாமல் அக் கேள்விகளை இகழ்ந்து கூறப்பார்த்தார். ஆனால் அவை அவரை அறியாமலே புகழ்ந்து கூறப்பட்டுவிட்டன. தமிழ் மக்களின் முன்னேற்றத்தை விரும்பி உண்மையாகவே தந்நலங் கருதாது உழைப்பவர்கட்குத் "தமிழ்த் தாய்" இடம் அறிந்து உதவி புரிவது ஒரு வியப்பல்ல.

—நகரதூதன்

நோபெல் பரிசு (The Nobel Prize)

அறிவியல் வளர்ச்சிக்கும் உலக அமைதி ஏற்படுத்துவதற்கும் வழங்கப்படும் சுவீடன் நாட்டுப் பரிசு

[1] சுவீடன் நாட்டில் ஆண்டுதோறும் அளிக்கப் பெற்றுவரும் நோபேல் பரிசு பற்றிய வரலாறு உலகமுழுவதும் நன்கறிந்த தொன்றேயாம். அறிவியல் வல்லாரும், நூலாசிரியரிற் சிறந்தாரும், ஏனைய தகுதிவாய்ந்த பெரியாரும் அவரவர்கள் செய்த முயற்சியின் பெற்றிநோக்கி அப் பரிசுபெற்று வருவதை நாம் அடிக்கடி செய்தித்

1. Sweden.

தாள்களில் கண்டு வருகின்றேம். தற்காலத்தில் எவருக்கும் கிடைக்கக்கூடிய பெரும்பேறுகளில் அஃது ஒன்று என்பதை எவரும் நன்குணர்வர். ஆயினும் அதன் பெருமையை அறிந்தார் சிலரே யாவர்.

இந்த நோபெல் பரிசை ஏற்படுத்திய பெரியார் சுவீடன் நாட்டில் 1833-ஆம் ஆண்டிற் பிறந்து 1896-ஆம் ஆண்டில் தமது 63-வது அகவையில் இம்மண்ணுலகைத் துறந்த [1]பொறிவலாளராகிய [2]ஆல்ப்ரெட் நோபெல் என்பார் ஆவர். இப்பெரியார் தாம் இறப்பதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னரே அதாவது 1895-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ஆம் நாள் நல்வினைப்பயனாக தாம் தேடியபொருளில் சிறுபான்மை நீக்கிப் பெரும்பான்மையான பொருளைக் கல்வி அறத்திற்கும் உலக நன்மைக்கும் பயன்பட வேண்டுமென்ற பெருநோக்குடன், ஷை பரிசு வழங்குதற்காக இறுதிக்காலமுறி (உயில்) ஒன்று எழுதி வைத்திருந்தார். அதில் உலக நலத்திற்காக, [3]இயற்கைப் பொருள்நூல், [4]இயைபு நூல், [5]மருத்துவம், [6]இலக்கியம், [7]உலக அமைதி வளர்ச்சி முதலியவற்றில் தேர்ச்சிமிக்க அறிஞர்க்குப் பரிசுகள் வழங்குவதற்கெனக் குறிப்பிட்டிருந்தது. இதற்காக அங்கே [8]நோபெல் கழகம் என ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசுகள் வழங்குவதுமட்டுமன்றி ஏனைய முறைகளிலும் அப்பெரியாரது கருத்துக்களை நிறைவேற்றுவதே அதன் முதன்மையான குறிக்கோளாகும்.

1900-ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டு அரசியலார் அக்கழகத்தின் அடிப்படையான விதிகளை ஒப்புக்கொண்டனர். அதன் பின்ஆண்டில் முதன் முதலாகப் பரிசுகள் வழங்கப்பெற்றன. அப்பரிசுகள் ஐவகைப்படும். அவை இறுதிக்கால முறி(உயில்)யிற் கூறப்பட்டிருக்கும் நிறைவேற்றற் கழகத்தார் முடிபுக்கு உட்பட்டவையாகும். இயற்கைப் பொருள்நூல், இயைபுநூல் என்னும் இவ்விரண்டு துறைகளிலும் பரிசு பெறுவதற்குரியாரைத் தேர்ந்தெடுப்பதற்கு [9]ஸ்டாக்ஹாம் நகரத்திலுள்ள [10]அரசாங்க அறிவியற் கழகத்தையும், மருத்துவப் பரிசுத்தேர்வுக்கு சுவீடன் நாட்டிலுள்ள [11]அரசாங்க மருத்துவக் கல்லூரியாகிய [12]"கரோலின்ஸ்கா கழகத்"தையும், இலக்கியப் பரிசுத்தேர்வுக்கு சுவீடன் நாட்டு [13]அரசாங்க இலக்கியக் கழகத்தையும், உலகஅமைதி வளர்ச்சிக்கு [14]நார்வே நாட்டுப் பாராளுமன்றாகிய [15]"ஸ்டார்ட்டின் ஜெற்"றால் அமைக்கப்பட்ட கூட்டுக்கழகத்தையும், துணைக்கொண்டே பரிசுகள் வழங்கும் உரிமையை சுவீடன் நாட்டு நோபெல் கழகத்தார் நிறைவேற்றுவார்கள். ஒவ்வொரு வகைப் பரிசுக்கும் அவ்வப் பரிசுக்குரியாரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட அவ்வக்கழகத்தாரே உரிமையுடையவராவர். மேற்குறித்த பரிசுகள் பெறுவதற்குரியவர்கள் இன்னார் இன்னார் என்பதனைத்

---

1. Civil Engineer. 2. Alfred Nobel. 3. Physics. 4. Chemistry. 5. Medicine. 6. Literature. 7. Peace Promotion. 8. Nobel Institute. 9. Stockholm. 10. Royal Academy of Science. 11. Government school for medical students. 12. "Karolinska Institute". 13. Royal Academy of Literature. 14. Norwegian Parliament. 15. "Stortinget."

தீர்மானிப்பதற்குரிய நன்முடிபுகள் இன்றியமையாதவை. அவ்வாறு முடிபுகள் கூறுவதற்குப் பரிசுவழங்கும் நிறைவேற்றுக்கழக விதிகளின் படி சுவீடன் நாட்டிலும் ஏனைய நாட்டிலுமுள்ள அறிவியல் வல்லார் நற்சான்றுகளே பயன்படுவனவாகும். ஒவ்வொருவகைப் பரிசும் இருவருக்குப் பிரித்துக்கொடுக்கலாம். ஆனால் இருவருக்கு மேற்பட்டவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கக்கூடாது. மேலும் இருவரோ அதற்கு மேற்பட்ட எண்ணத்தினரோ சேர்ந்து ஒரு தொழிலை முடித்திருந்தால் அவர்களுக்குக் கொடுக்கலாம். பின்னும் ஓர் ஆராய்ச்சி நிலையத்திற்கோ, அல்லது ஒரு கழகத்திற்கோ பரிசுகள் வழங்கப்படலாம். சென்ற பல ஆண்டுகளிலும் பரிசுகள் ஒவ்வொன்றிற்கும் நூற்று முப்பதினாயிரம் (130,000) [1]குரோனர் முதல் நூற்று ஐம்பதினாயிரம் (150,000) குரோனர்வரை வழங்கப்பெற்றிருக்கின்றன. அத்தொகை தவிர பரிசுபெறும் ஒவ்வொருவருக்கும் [2]பெருந்தகுதிச் சீட்டும், பரிசு ஏற்படுத்திய பெரியாரின் உருவப்படமும் பரிசுகுறித்த நன்மொழிகளும் அமைந்த தங்கப்பதக்கமும் வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட பல்வேறு பரிசுகட்கும் தக்கவர்கள் அமையவில்லையெனக் கண்டால் அவ்வாண்டுப் பரிசுத்தொகையைப் பின் ஆண்டுக்கு ஒதுக்கிவைக்கப்படும். பின் ஆண்டிலு மவ்வாறே பரிசு பெறுதற்குரியவர் எவருமிலராயின் அத்தொகை முதலுடன் சேர்த்துக்கொள்ளப்படும்; அல்லது அதனை வேறாக வைத்து அதிலிருந்து கிடைக்கும் வருவாய் மேற்குறித்த பல்வேறு வகைகளுக்கும் வழங்கப்பெறும். இத்தகைய புது நிதி இப்போது உலக அமைதிவளர்ச்சிப் பரிசுக்குமட்டுமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

1901-ஆம் ஆண்டு முதல் 1934-ஆம் ஆண்டு வரை சென்ற 33 ஆண்டுகளில் பரிசுத்தொகைகளாக மொத்தம் இரண்டாயிரத்து எழுபத்து நான்கு கோடியே பன்னிரண்டு இலக்ஷத்து முப்பத்தாறு யிரத்து நானூற்று இருபது (20,741,236,420) குரோனர் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் டிசம்பர் திங்கள் 10-ம் நாள் இப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. அந்நாளே பரிசுக்கழகத்தின் ஆண்டு நிறைவு நாளாகும். பரிசு ஏற்படுத்திய பெரியாரின் பிரிவு நாளாகக் கொண்டாடும் நாளும் அந்நாளேயாகும். சுவீடன் நாட்டில் அப்பரிசு வழங்குதற்கென்று பரிசுக்கழகத்தாரால் நடத்தப்படும் விழாவன்றே பரிசுகள் வழங்குவது வழக்கம். அவ்விழாவின் போது சொற்பெருக்குகளும், இசையரங்குகளும் ஸ்டாக்ஹாம் நகரத்திலுள்ள [3]இசைக்கலைக் கழக மண்டபத்தில் நடைபெறும். அன்று சுவீடன் நாட்டுமன்னரே அப்பரிசுகளை வழங்குவது வழக்கம். நார்வே நாட்டில் அந்நாட்டுப் பாராளுமன்றாகிய "ஸ்டார்ட்டின் ஜெற்"றில் அப்பரிசுகளைப்பற்றிய தீர்மானம் அறிக்கை மூலம் வெளியிடப்படும்.

குறிப்பு:—Educational Review என்ற திங்கட் டாளில் வந்த கட்டுரையைத்தழுவி இஃது எழுதப்பட்டது.

S. சங்கரநாராயணபிள்ளை, திருநெல்வேலி.

---

1. Kronor (one kronor = one shilling $1\frac{1}{2}$ pence = $13\frac{1}{2}$ = annas).
2. Diploma. 3. Musical Academy Hall.



ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

செய்திகளும் குறிப்புகளும் :
News and Notes

மதிப்புரை :

ஹோமியோ குடும்ப வைத்தியம் என்னும் நூல் நமது பார்வைக்கு வந்துள்ளது. ஹோமியோபதி என்னும் உயரிய மருத்துவ முறை மேனாட்டு செருமனிய மருத்துவ முறையாகும். இஃது அலோபதி என்னும் ஆங்கில மருத்துவ முறைக்கு மாறானது. வள்ளுவர் கூறியாங்கு 'நோய் நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச்செய்த'லாகிய முறையே ஹோமியோபதியின் உயரிய முறை என்னலாம்.

இம்முறையின் சிறப்பாவன :—

(1) கூட்டு மருந்துகளின்மை.
(2) நஞ்சற்ற மருந்துடைமை.
(3) கொடுத்த மருந்தால் நோயற்றபாகம தாக்கப்படாமை.

இம் மருந்துமுறை பிரான்சு, செருமனி, ஆலந்து, இத்தாலி அமெரிக்கா, இந்தியா முதலிய நாகரிக நாடுகளிலெல்லாம் வேரூன்றித் தளைத்துப் பூத்துப் பலன் தருவதாகின்றது. இம்மருத்துவ மா நாடொன்றில் நம்மையாளும் மாட்சிமை தங்கிய 8-வது எட்வார்ட் சக்கரவர்த்தியவர்கள் தலைமை தாங்கி சிறப்புரை வழங்கியிருப்பதும், இந்திய நாட்டுப் பரோடா கெய்க்குவார் மன்னர் மருந்து முறையைக் கைக்கொண்டு பாராட்டியிருப்பதும் யாவருங் கொண்டாடத்தக்கதென்பதை எளிதில் விளக்கும்.

நந் தமிழ்நாட்டில் குடும்பப் பெண்களும் எளிதில் இந்நூலைக் கற்றறிந்து சிகிச்சை செய்துகொள்ள வேணுமென்ற பெருநோக்குடன் முதன் முதல் எளிய தமிழ் நடையில் எழுதி 36 அத்தியாயங்களில் வெளியிட்டிருக்கும் இந்நூலாசிரியர், டாக்டர் A. Diraviam L. M. S., அவர்கள் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

நோயற்ற வாழ்க்கை நடாத்த விரும்பும் மக்கள் யாவரும் இதனை வாங்கிப் போற்றத்தக்க முறையில் இந்நூற்குக் குறைந்த விலை அணா 10 ஆக ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது.

வேண்டுவோர் பாளையங்கோட்டை, தமிழகம், பிராவிடெண்டு இன்சுரன்சு பாங்க் லிமிடெட், மானேஜர், என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி முதலியன

இந்நூல் தமிழறிஞர் ம. ஆ. நாகமணி அவர்களால் வெளியிடப் பட்டது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆராய்ச்சி செய்வார்க்கு இந்நூல் பெரிதும் துணையாயிருக்கும். இத்தகைய நூலைத் தொகுத்த ஆசிரியரது உழைப்பும், துன்பமும் தமிழ் மக்களால் பெரிதும் பாராட்டுதற்குரியன.

இதன்கண் பொருளதிகார உரையிலுள்ள மேற்கோள் விளக்கம் பொருட்குறிப்பு முதலியனவும், பேராசிரியர் நச்சினார்க்கினியர் வரலாறுகளும் அடங்கியன. இம்மாதிரி ஏனைய அதிகாரங்கட்கும், ஏனைய உரைகட்கும் குறிப்புக்கள் வெளிவரின் தமிழ் ஆராய்ச்சியாளர்க்குப் பெரும்பயனுயிருக்கும். (316 பக்கம்)

இதன் விலை ரூ. **1—4—0**

[இந்நூல் ஆசிரியரிடத்திலும், கழகத்திலும் கிடைக்கப்பெறும்.]

ஆயுர்வேத ஔஷத முறைகள்

இந்நூல் டாக்டர் A. R. S. சுந்தரம் அவர்களால் இயற்றிப்பட்டது. இதன்கண் குறிக்கப்பெற்ற மருந்து முறைகள் யாவும் தமிழ் மருத்துவ ஆசிரியர்கட்கும், பொதுமக்களுக்கும் பெரிதும் பயன் படும் என்பதில் ஐயமில்லை. வடமொழிக் கருத்துக்கள் யாவர்க்கும் எளிதில் விளங்கும் வகையில் மொழி பெயர்க்கப்பெற்றிருக்கின்றன.

இது புதிய எழுத்துக்களில் நல்ல காகிதத்தில் திருத்தமான முறையில் அச்சிடப்பெற்றிருக்கின்றது. அழுத்தமான கலிக்காக் கட்டடம் செய்யப்பட்டுளது. பிரதி 1-க்கு விலை ரூ. **2.**

அமிர்தபிந்து உபநிஷத்

இதுவும் டாக்டர் திரு. A. R. S. சுந்தரமவர்களால் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டது. விலை அணு **2.**

குறிப்பு: இந்நூல்கள் ஆசிரியரிடத்திலும், கழக நிலையங்களிலும் விலைக்குக் கிடைக்கப்பெறும்.

தமிழ்மொழி நூல்

இது வித்தியாரத்னம் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களால் இயறறப்பெற்று, திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்துத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் பொருளுதவியைக்கொண்டு வெளிவந்துளது. இதன்கண் வெளிவந்துள்ள கருத்துக்கள் ஆராய்ச்சிக்குரியன. இதன் விலை ரூ. ஒன்று.

தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி

தனித்தமிழ்த் தேர்வுகளின் முடிபு

இற்றைக்கு ஈராறாண்டுகளின் முன் இவண் ஏற்பட்டு, ஆண்டு தோறும் தனித்தமிழ்த் தேர்வுகள் நடத்தித் தேர்ந்தவர்க்குப் பரிசுந் தேர்ச்சி இதழும் உதவிப் பெருமைசெய்துவரும் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் தனித்தமிழ்த் தேர்வுகள் 1936-ம் வருடம் ஜூன்மீ 24, 25, 26-க்குச் சரியான மெய்கண்டான்யாண்டு எ௱௰௩, ஆனித் திங்கள் ௰௧, ௰௨, ௰௩, புதன் வியாழன் வெள்ளி இந்நாட்களில், ஆரணி, யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஆகிய மூன்று தலைநகர்களிலும் தக்கார் மேற்பார்வையில் நடைபெற்றன. இவற்றில் தமிழ்த்தேர்வுக்கு விண்ணப்பித்தவர் நால்வர். எழுதியவர் மூவர், தேர்ந்தவர் ஒருவர். இளந்தமிழ்ப் புலவர் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் மூவர், எழுதியவர் இருவர், தேர்ந்தவர் ஒருவர். இத்தேர்வுகட்குரிய பாடமுறைகளை நன்கு பயின்று தேர்வுகட்குப் பலராக விண்ணப்பித்துத் தேர்ச்சி பெறின், கலாசாலைகளிற் றமிழாசிரியராக அமர்தற்குத் தகுதி பெற்றவராவர். ஆங்காங்குள்ள தமிழன்பர்கள் தமிழறிஞர்களைப் பெருக்குவதற்கு வேண்டுவன புரிய முன்வருவார்களாக.

தமிழ்த்தேர்வு 3-வது வகுப்பு

பதிவெண்-139 K. நடேசன், M. குப்புசாமி முதலியார் புதல்வர், ஆசிரியர், தேவாங்க வீதி, ஆற்காடு.

இளந்தமிழ்ப்புலவர் 3-வது வகுப்பு

பதிவெண்-140 க. ஞானசேகரம், மு. கணபதிப்பிள்ளை மகன், சண்டிருப்பாய் வடக்கு, மாணிப்பாய், யாழ்ப்பாணம்.

திருநெல்வேலி
12-11-36 } பு. சி. புன்னைவனநாதன், அமைச்சர்.

தமிழ்ப்பெரியார் இருவர் பிரிவு

காலஞ்சென்ற திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள்

இவர்களை அறியாதவர் நம் நாட்டில் இரார் என்றே நினைக்கிறோம். இவர்கள் புகழ்பட வாழ்ந்து தமது அறுபத்தைந்தாம் அகவையில் 18-11-36 புதன்கிழமை யன்று இறைவனடி சேர்ந்தமை தமிழ்நாட்டிற்குப் பெருந்துயரை விளைத்துளது. இவர்கள் மக்களிடத்து அளவிலா அன்பும் இரக்கமும் உடையவர்கள். கொண்ட கொள்கையில் மிகவும் உறுதியாய் நிற்பவர்கள். இவர்கள் தேர்ந்த


வழக்கறிஞராய் விளங்கினர்கள். கேட்டார்ப்பிணிக்கும் வகையில் பேசும் ஆற்றல் வாய்ந்தவர்கள். இவர்கள் பேச்சுக்களில் நகைச்சுவை நிரம்பித் ததும்பும். இவர்கள் தமது பிற்கால வாழ்க்கையில் தமிழ்ப் பணி யாற்றிவந்தார்கள். திருக்குறள் மணக்குடவருரையை முதன் முறை வெளியிட்டவர்கள் இவர்களே. தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணருரையைத் திருத்தமாக வெளியிட்டிருப்பதோடு பொருளதிகாரத்தையும் இளம்பூரண ருரையுடன் வெளியிட்டுள்ளார்கள் அகமேபுறம், வலிமைசேரு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம், மனம் போல வாழ்வு ஆகிய நான்கு நூல்களை ஆங்கிலத்தினின்றும் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்கள். மெய்யறம், மெய்யறிவு முதலிய நூல்களைத் தாமே இயற்றி வெளியிட்டுள்ளார்கள். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்ருகக் கருதப்படும் இன்னிலையை உரையுடன் முதன்முதல் வெளியிட்டவர்கள் இவர்களே திருக்குறளுக்குத் தாமே புத்துரை ஒன்று எழுதியிருப்பதில் அறப்பால் உரைமட்டும் வெளி வந்துளது.

இவர்கட்குத் தமிழ்மக்கள் செய்யுங் கைமாறு யாதெனின், இவர்கள் பதித்த நூல்களை வாங்கிப் போற்றுதலேயாகும். முனிசிபல் தலைவர்களும், ஜில்லாப்போர்டு தலைவர்களும் தங்கள் தங்கள் பள்ளிக் கூடங்கட்குப் பிள்ளையவர்கள் நூல்களைத் தொகுதியாக வாங்கிக் கொடுத் துதவுவார்களாக!

இவர்கள் பதிப்பு நூல்களெல்லாம் எமது கழக நிலயங்களில் கிடைக்கப்பெறும்.

வித்துவான் கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

காலஞ்சென்ற வித்துவான் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் வேதாந்தப் பேராசிரியராவர். தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத் திலும் மிகவும் ஆராய்ச்சி யுடையவர்கள். கைமாறு கருதாமல் தம்மை யடைந்தவர்கட்குப் பாடஞ்சொல்லி வந்தவர்கள். யாவரும் கேட்டு மகிழ்வடையும்படி இனிமையாய்ப் பேசுவார்கள். அவர்கள் எழுதிய திருக்குறள் விருத்தியுரை தமிழுலகம் மிகவும் மதிக்கற்பாலதாய் விளங்குகின்றது. சென்னை இந்து தியாலஜிகல் கலாசாலைத் தமிழாசிரியராக இருந்து விடுதியில் பெற்றுத் தமது எழுபத்து மூன்ரும் அகவையில் 24-11-36 செவ்வாய்க்கிழமையன்று எல்லாம்வல்ல இறைவனடி சேர்ந்தார்கள். பழுத்த வயதில் பிரிந்தார்களாயினும் இவர்கள் பிரிவு தமிழுலகம் வருந்துதற்குரியதே.



மேரி இராணி (Queen Mary)

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] தாது—மார்கழி [பரல்-ரு

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

திருப்பாம்புரம்

துஞ்சுநா டுறந்து தோற்றமு மில்லாச்
        சுடர்விடு சோதியெம் பெருமான்
நஞ்சுசேர் கண்ட முடையவென் னாதர்
        நள்ளிரு ணடஞ்செயு நம்பர்
மஞ்சுதோய் சோலை மாமயி லாட
        மாடமா ளிகைதன்மே லேறிப்
பஞ்சுசேர் மெல்லடிப் பாவையர் பயிலும்
        பாம்புர நன்னக ராரே.

பதவுரை:—

மஞ்சு தோய் சோலை—மேகம் தவழும்படி நீண்டு வளர்ந்திருக்கின்ற மரங்களடர்ந்த சோலையில்,

மாமயில் ஆட—பெரிய மயில்கள் (அம்மேகத்தைக் கண்டு) களிப்புடன் ஆட (அதனைப் பார்த்து),

மாளிகை மாடம் மேல் ஏறி—வீடுகளின் மேலுள்ள உப்பரிகை மேலேறி,

பஞ்சுசேர் மெல்லடிப் பாவையர் பயிலும்—பஞ்சுக்குழம்பு ஊட்டப் பெற்ற மென்மையான அடிகளையுடைய பெண்கள் நடனம் பயில்கின்ற,

பாம்புரம் நல் நகரார்—திருப்பாம்புரம் என்னும் நன்மை பொருந்திய நகரத்திலுள்ள திருக்கோயிலில் வீற்றிருக்கும் சிவபெருமான்.

துஞ்சும் நாள் துறந்து—இறக்கும் நாளில்லாது,

தோற்றமும் இல்லா—பிறக்கும் நாளுமில்லாத,

சுடர்விடு சோதி எம்பெருமான்—பேரொளிப் பொருளாயிருக்கிற எங்கள் தலைவராயும்,

நஞ்சுசேர் கண்டம் உடைய என் நாதர்—(திருப்பாற் கடலினின்று மெழுந்த நஞ்சைத் தேவர்களும் பிறஉயிர்களும் உய்யும்பொருட்டு உண்டு.) உண்டதனாலாகிய கறுப்புக்கறையை அடையாளமாகத் தமது கழுத்திலே உடைய எனது தலைவராயும்,

நள்இருள் நடம்பயில் நம்பர்—உயிர்களுடைய நெஞ்சுத் தாமரையில் அவற்றின் மலஇருள் நீங்கும்படி இருள் செறிந்துள்ள நடு இரவி லும் நடனஞ்செய்யும் அன்பராயும் இருக்கின்றார்.

விளக்கவுரை :—

மாளிகை மாடம் தன்மேலேறி—மாளிகை என்பது வீடு; மாடம்—அவ் வீட்டின் மேலுள்ள உப்பரிகை; தன்-அசை. மாடம் மாளிகை என்பதை மாளிகைமாடம் என மாறுக. மயில்கள் ஆடுதலைப் பார்க்க ஏற்ற இடம் உப்பரிகை ஆதலின் 'மாளிகை மாடம் மேல் ஏறி' என்றார்.

பஞ்சுசேர் மெல் அடிப் பாவையர் பயிலும்—கால்களுக்குப் பஞ்சுக் குழம்பு ஊட்டி அவற்றைச் செந்நிறமாகச்செய்தல் முற்காலத்துப் பெண்கள் வழக்கு. பாவை—சித்திரப்பதுமை. அது பதுமை போன்ற அழகுள்ள பெண்களுக்கு ஆதலால், ஆகுபெயர். பயிலுதல்—பலகால் பழகல். குடிப்பெண்கள் நடனஞ்செய்தல் முற்காலத்துத் தமிழ்ப்பெண்கள் வழக்காயிருந்தது என்பதைத் தேவாரத்தினும் பெரிய புராணத்தினும் நாமறியலாம்.

துஞ்சும் நாள் துறந்து தோற்றமும் இல்லா—துஞ்சுதல்—இறத்தல்; துறந்து—இல்லாது. தோற்றம் என்பதுதோற்றும் நாள் அதாவது பிறக்கும் நாள். உம் இறந்தது தழீஇய எச்சவும்மையாம். இல்லா என்ற குறிப்புப் பெயரெச்சம் சோதி என்ற பெயரைக்கொண்டு முடிகிறது—பெருமான் என்ற பெயரைக்கொண்டு முடிகின்றது எனினும் பொருந்தும். இல்லாத என்பது இல்லா எனக் கடை குறைந்து நின்றது. சோதியும் சோதியுடைய பெருமானும் எப் பொழுதும் ஒருதன்மைத்தாயுள்ள நித்தியப்பொருள்கள். ஆத லின் 'துஞ்சுநாடுறந்து தோற்றமுமில்லா' சோதி எம்பெருமான் என்றார். சைவசமயக் கடவுளுக்குப் பிறப்பு இறப்புகளில்லா திருப்பது முதன்மையான இலக்கணம். பிறப்பு இறப்புகளில் லாத கடவுள்தான் பிறப்பு இறப்புகளில் உழலுமுயிர்களை அவற் றினின்று நீக்கி வீட்டின்பம் அருள்செய்ய வல்லவன் ஆவன்.

"செத்துச் செத்துப் பிறப்பதே என்று—பத்தி செய்
மனப் பாறைகட்கேறுமோ—அத்தனென் றரியோடு
பிரமனும்—துத்தியஞ் செய நின்ற நற்சோதியே"

என்று திருநாவுக்கரசு அடிகள் கூறினது காண்க.

சுடர்விடு சோதி எம்பெருமான்—பேரொளிப் பொருளாகிய சிவபெருமானது ஒளியினாலே உலகில் ஞாயிறு திங்கள்களும் பிற ஒளிப் பொருள்களும் தத்தமக்குரிய ஒளியோடு விளங்குகின்றன. அவ்வொளியினாலே தான் மக்களுக்கு உலக நெறியில் கருவி அறிவினாலாகும் ஆராய்ச்சி அறிவும், - வீட்டு நெறியில் அருள் அறிவும் உண்டாகின்றன. அடிகள் அடியார்களையும் தம்முடன் சேர்த்து எம்பெருமான் என்றார். இதனாற் சிவபெருமானுடைய பேரறிவு கூறப்பட்டது. அடிகள் திருப்பாசுரம் 5-வது பாட்டில் "சுடர் விட்டுளன் எங்கள் சோதி" என்று கூறினமை காண்க.

நஞ்சுசேர் கண்டமுடைய என் நாதர்—நஞ்சு என்பது இங்கே ஆகு பெயராய் நஞ்சினாலுண்டாகிய கறுப்புக் கறையைக் குறிக்கின்றது. சிவபெருமான் தேவர்களுக்கும் பிறஉயிர்களுக்கும் நேரிட்ட துன்பத்தைச் சகியாது அத்துன்பத்தைத்தானே ஏற்றுக்கொண்டு அவர்களை அதனின்றும் விடுவித்து அந்நஞ்சினையும் அமுதாகச் செய்யவல்ல பேராற்றலுடைய தலைவன் என்பது இதனாற் குறிப்பிடப்பட்டது. இதுபற்றி அவனுக்கு நீலகண்டன் என்ற பெயர் வழங்கப்படுகின்றது. "தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர்தங் கடனாவதுதான்" (1-4) என்று திருநாவுக்கரசு அடிகளும், "தொழுவாரவர் துயராயின தீர்த்தலுனதொழிலே" (1-9) என்று சுந்தரமூர்த்தி அடிகளும் கூறுதல் காண்க. இதனால் சிவபெருமானது பேராற்றலாகிய செயல் கூறப்பட்டது.

கள் இருள் நடம் பயில் நம்பர்—நள்-நடு; செறிவையுங் குறிக்கும். சிவபெருமான் ஆணவமல இருள் நிறைந்திருக்கின்ற மாயா உலகிலும் மக்களுடைய உள்ளத்திலும் அவ்விருள் நீங்கி ஒளிவிளக்கமுண்டாகும்படி ஓயாது நடனஞ் செய்கின்றான் என்பது கூறப்பட்டது. அவன் நடனஞ் செய்யாவிட்டால் உலகிலுள்ள உயிர்ப் பொருளும் உயிரில் பொருளுமியங்கா.

> "தில்லை மூதூராடிய திருவடி—பல்லுயிரெல்லாம்
> பயின்றனனாகி எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி"

என்று மாணிக்கவாசக அடிகள் திருவாசகம் கீர்த்தி அகவலிலும் 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே' என்று அவர் சிவபுராணம் அகவலிலும் கூறியருளினமை காண்க.

நம்பர்—நண்பர் என்ற சொல்லிலுள்ள ணகர வொற்றுப் பின்வரும் பகர உயிர்மெய்க்கு இனவெழுத்து ஆகிய மகரவொற்றாய்த் திரிந்தது. தன் இனந்தழுவல் எழுத்துக்களிலுங் காணப்படுகின்றது. உயிர்கள்மேல் வைத்த அன்பினால் ஐந்தொழில் குறித்து நடனஞ் செய்தலால் அடிகள் அவரை 'நம்பர்' என்றார். இதனால் சிவபெருமானது பேரன்பு கூறப்பட்டது.

—மா. வே நெல்லையப்பபிள்ளை.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழிலக்கணத் தத்துவக்கிடை

[ஈப்போர். திரு. த்யாகராஜன் அவர்கள், G. M. V. C.]

உலக உற்பத்தி, தோற்றம், வேற்றுமை முதலியவைகளுக்கு ஒப்பவே இலக்கணத்தையும் தமிழில் நம்முன்னோர் அமைத்தனரோ?

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" (திருக்குறள்)

"அகரவுயி ரெழுத்தனைத்து மாகிவேறு யமர்ந்ததென
வகிலாண்ட மனைத்துமாகிப்
பகர்வன வெல்லாமாகி........" (தாயுமானவர்)

என்னும் பாக்களில் நம் சான்றோர் எடுத்துரைத்த உபமானங்கள் முற்று முண்மையயோவென ஆராய்வோம்.

உலக உற்பத்தி (அல்லது பிறப்பு)

"மூதவா வென்குணமவை மூன்றினும்
பேதமாகும் பிரகிருதி தன்னிலே
காதலால் வைப்பன்யான் கருவக்கருப்
பூதம்யாவும் புலப்படுகின்றவே"

(பகவத்கீதை 14-அத்தியாயம் 4-ம் பாட்டு)

"இந்த வண்ணத்தினலிவ் வுலகிடை
வந்த யோனியெலாம் வருவித்திடுந்
தந்தையானவை யீன்றளிக் கின்றதா
யந்த வென்னுடை மாயைய தாகுமால்"

(ப. கீ. அ. 14 : 5.

"மண்ணு நீரு மெரிதீயும் வாயுவுமவ்
வானிளேடு மனபுந்தியு
மெண்ணு நீர்மைகளில் யானெனும் பதமுமென்னு
மெட்டு மிவையன்றியே
பண்ணு நீர்மைகளின் மேலதா யுலகி
லியாவையுங் கொடுபெரித்துடற்
கண்ணு நீடுயிரு மாகியென்னுடைய மாயை
நிற்பது கைவேலினேய்" (ப. கீ. அ. 7 : 3)

என்பதாகக் கண்ணபிரான் பகவற் கீதையில் கூறினர்.

எழுத்தின் பிறப்பு

"நிறையுயிர் முயற்சியினுள் வளிதுரப்ப வெழும
ணுத்திர ளுரங்கண்டமுச்சி மூக்குற்றிதழ்
நாபல்லணத் தொழிலின் வெவ்வேறெழுத் தொலி
யாய்வரல் பிறப்பே"

(பவண—எழுத்து : 4)

எனப் பவணந்தியார் தம் இலக்கணத்தில் கூறினர்.

முற்கூறிய வுலகப் பிறப்பிற்கும், பிற்கூறிய எழுத்தொலியின் பிறப்பிற்குமுள்ள ஒப்பமைப்புகளை ஒப்பிட்டு நோக்குவாம்.

எங்கும் பராபரமாய் நிறைந்து விளங்கும் மூலபுருஷனைப் போன்ற நிறையுயிர், மூலப்பிரகிருதி யல்லது மாயையாகிய உள்வளியை (Cosmic matter) முயற்சியெனும் கிரியையால் துரப்ப, எழும் அணுத்திரள் மாயையின் முக்குணங்களை யடைந்து, எட்டுத் தத்துவங்களாகிய மனமெனும் உரம், யானெனு மகங்கார தத்துவமாகிய கண்டம், புத்தியெனு முச்சி, பிருதுவித் தன்மைவாய்ந்த பல், அப்புத்தன்மை வாய்ந்த நா, தேயுபோன்ற (அழல்போன்ற) வுதடு, வாயுத் தன்மையேற்ற மூக்கு, ஆகாயமாகிய (Empty space) அண்ணம் என்னும் எட்டுத் தத்துவங்களின் பஞ்சிகரணத்தால் அல்லது கலப்பால் வெவ்வே றெழுத்தொலிகள் பிறந்தன.

"மன்னவுடல் யாவையினு மன்னியறிவாய்நின்
றுன்னுமுயி ரியான்"

(ப. கீ. அ. 13 : 3)

என்று கோபாலன் கூறியதற்கேற்க, தன்னியக்கமற்ற மெய்களுக் காதாரமாயிருக்கும் எழுத்துக்களை உயிர் எனவும், அவ்வுயிரெழுத்துக்களுக் கிடந்தரும் எழுத்துக்களை மேய் அல்லது உடல் எனவும் பெயரிட்டனர்.

உயிரு முடலும் புணர்ந்து ஸ்தூல சரீரமுண்டாவதற்கு முன் காரண சரீரமும், சூட்சும சரீரமு முளதாதற்கேற்ப, ஆயுதவெழுத்தைக், காரண சரீரமெனவும், மெய்யெழுத்தை சூட்சும சரீரமெனவும் கூறலாம்.

இவ்வெழுத்துக்களின் உச்சரிப்பை யோர்ந்துபார்க்கின், தூரத்திலுள்ள காரண சரீரத்தையுணர்த்த, தூரத்தை யுணர்த்தும் அகரச்சுட்டை ஆயுதவெழுத்துடன் சேர்த்தொலித்தும், இது வியக்த—அவ்வியக்தநிலையெனவிளக்கத், தனிநிலையெனப் பெயரிட்டும், முக்குணங்கள் வாய்ந்ததென்பதைக் காட்ட ஆயுதத்தை முப்புள்ளியிட்டு மெழுதினர்போலும்.

சூட்சும சரீரமோ ஸ்தூல சரீரத்திற்கருகே யுளதாதலால் சூட்சும சரீரத்திற் கொப்பிட்ட மெய்களை, அருகேயுளதைக் காட்டும் இகரச்சுட்டைச் சேர்த்து இயங்கச்செய்தனரெனலாம்.

> " மும்மல வெழுத்தாம் மூவாறு மெய்யையும்
> தனித்தியக்கும் முயிர் இகார மென்க
> தனிநிலை தானே யியங்கா தமரிற்
> தனித்தியக்கு முயிர் அகார மென்க "

(P. V. மாணிக்க நாயக்கர்)

மெய்களில் மூக்குணங்களாகிய சத்வ, ரஜஸ், தமஸ் என்பவை ஒன்றின்ஒன்று மேலாகித் தடித்திருப்பதற்கொப்ப மெய்யெழுத்துக்களிலும் இக்குணங்களின் மேன்மையைக்காட்ட அவ்வெழுத்துக்களை மூவினமாகப் பிரித்தும், அவ்வாறு பிரிந்தவெழுத்துக்கள் மும்மலை யுடையனவாதலால் அவைகளை (பிரிவுகளை) வல்லினம் (ஆணவமலம்) மெல்லினம் (காமிய மலம்) இடையினம் (மாயாமலம்) எனவும் பெயரிட்டனர்.

ஆணவம் மிகுந்தபோது வல்லினம் மிகுதலையும், காம முற்றபோது மெல்லினம் மேலிடுதலையும், மாயையுற்றபோது இடையினம் பெருகுதலையும் விளக்க, திருவாளர் P. V. மாணிக்க நாயக்கரவர்கள் அவர் எழுதிய "The Tamil Alphabet: Its mystic Aspect" என்னும் நூலில் கம்பராமாயணத்திலிருந்து பாக்களை உதாரணமாகக் காட்டியுளார்.

Primary Creations

இவ்வகையாகப் பிறந்து, மாயையின் குணங்களையுமேற்று நிலைத்த வெழுத்துக்களை

> " உயிரு முடம்புமா முப்பது முதலே "

யெனப் பெயரிட்டு, இவை Primary Creations எனவும் காட்டினர்.

உயிர் மெய்யெழுத்துக்களையும், ஆய்தம், அளபெடை, குறுக்க மிவற்றையும் சார்பெழுத்து (Secondary Creations) எனவும் பெயரிட்டனர்.

மேற்கூறியதுபோல் தமிழ் எழுத்துக்கள், நம் சாஸ்திரங்களுக்கேற்ப பிறப்பு முதலியன வேற்றதுமன்றி, தற்கால அறிவியன் முறைக்கேற்க, உயிரை Energy எனவும், மெய்யை Elements எனவும், உயிர்மெய்யை Compounds எனவுங் கூறினும் பொருந்தும்.

இவ்வாறுன Energy, Elements and Compounds-கள் புணர்ந்தும், பிரிந்தும் வெவ்வேறு பொருள்களாக நிலவுதலுக்கான புணர்ச்சி விதிகளையும் தற்கால சாஸ்திரங்கள் வரம் பறுத்துக் கூறுகின்றன.

அஃதேபோல் நம் முன்னோரான இலக்கணத்தாரும் உயிரும், மெய்யும் எவ்வாறு புணர்ந்தும், பிரிந்தும் உலகப் பொருள்களைக் குறிக்கும் சொற்களாயின வென்பதற்கு விதிகள் வரைந்தார்.

புணர்ச்சி

இதைக் குறித்தவிதிகளில், உயிரெழுத்துக்கள் ஆத்மாவைப்போன்றவையாகையால், அத்தன்மையை யுணர்த்த,

"மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே" என்னும் விதியால் உயிரைக்காட்டுவது மெய்யேயெனவும், உயிர் அழியாது, திரியாது என்பதை யுணர்த்த உயிர்விட்டோடும்" உயிர்நீங்கும்" என்ற, சூத்திரங்களை இயைத்தும், உயிர்நீங்கிய பின் அதனுல் இயக்கப்பட்ட உடல் தன்னிலையையடைவது போல (Dust thou art and to dust thou returneth) "மெய்யுயிர் நீங்கின் தன்னுருவாகும்" எனவும் சூத்திரங்களில் தத்துவ உண்மைகளை நன்குவிளக்கிக் காட்டினர்.

"ஊறுபடவொன்றினுளே பிறத்தல், பிறந்துளவாதல்
வேறுபட வளர்தல், வளர்ந்தயலொன்ருய் விளைந்தமைதல்
மாறுபடத்தேய்தல், அறமாய்தலென வருகின்ற
வாறியல்பும், உடம்பன்றி யறிவடையாவாதலினுல்"

[ப. கீ. அ. 2 : 23.]

என்றுரைத்த கண்ணரின் வாக்கிற்கேற்க நன்னூலாரும் மெய்க்கே தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்கள் கூறினர். இத்துடன்விடாது, உலக இயற்கையைத் தழுவி இப்புணர்ச்சியை இயல்புப்புணர்ச்சியெனவும், விகாரப் புணர்ச்சியெனவும் பகுத்தனர். இது எவ்வாறெனின், இயற்கையிலேயே இருவாயுக்கள் புணர்ந்து (Co_2) கரியமலவாயுவெனவும், H_2O நீரெனவும் நிலவனபோல்வன இயல்புப் புணர்ச்சி; விகாரப்புணர்ச்சியோ, $Ca\,Co_3 + 2Hcl$ என்னுமிருவஸ்துக்கள் புணருங்காலத்தில் $Co\,Co_3$ என்பது திரிந்து $Ca\,Cl_2$ என்பதாக நிலத்தும், $H_2o\,Co_2$ என்பவை தோன்றியும் $_2H\,Cl$ என்பது கெட்டும் (ஒழிந்தும்) போவது போல இயலுவன.

மேற்கூறியவாறுEnergyயும், Elementsம்,Compounds- புணருவதால் நிலவன பொருள்கள். இஃதேபோல் நம்மொழி யினெழுத்துக்களும் தனித்தும் புணர்ந்தும் குறிப்பது பொருளே யென்பதைக்காட்ட,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

[தொல்காப்பியம், சொல்லதிகாரம்., 155.]

எனச்சூத்திரம் விதித்தனர். (தொடரும்)

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

மருதம்

தலைமகனது பிரிவாற்றாது வருந்திய தலைவி தோழிக்குச் சொல்லியது.

கழார்க் கீரனெயிற்றியார் பாடியது

35. நாணில மன்றவெங் கண்ணே; நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண் ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே.

என்பது பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

பதவுரை:—

நாள் நேர்பு—முதிர்ச்சியுறும் காலையடையப் பெற்றதால்; பாம்பின் சினைச்சூல் முதிர்ப்பு அன்ன—பாம்பினுடைய முட்டையாகிய முதிர்ந்த கருவைப்போல, கனைத்த கரும்பின்—திரட்சிபெற்ற கரும்பினது, கூம்புபொதி அவிழ—தலைக் குவிவு கட்டவிழும்படியாக, நுண்உறை—நுணுகிய உறைத் தலையுடைய, அழிதுளி—மிக்க மழைத்துளி, தலைஇய—சொரியப்பெற்ற, தண்வரல் வாடையும்—குளிர்ச்சி பொருந்திய வருகையையுடைய வாடைக்காற்றும், நம் பிரிந்தி

பிரிந்திசினோர்க்கு—நம்மைவிட்டுப் பிரிந்து சென்ற தலைவர்க்கு, அழலே — நெருப்பைப்போல் வருத்துவதாமோ? (ஆகா; ஆயின் வந்திருப்பார்) (ஆதலின்); மன்ற—உறுதியாக, எம் கண்ணே—எம்முடைய கண்கள், நாணில—வெட்கமற்றன.

தண்வரல் வாடையும் (வந்தது); நம்பிரிந்திசினோர்க்கு அழலே; கண்ணே; மன்றநாணில என்று பொருத்துவோமாயின் அழலே என்பதற்கு அழலில்லை என்பது பொருள்; பிரிந்திசினோர்க்கு என்பதில் நான்கனுருபு பொருட்டு என்னும் பொருளில் வந்தது என்க.

மன்ற—நிச்சயமாக. கண் கலுழுந் தன்மையதாதலின் இங்ஙனம் கூறப்பட்டது. நாள் + நேர்பு=நாணேர்பு. சினைப் பசும் பாம்பு என்பதற்குக் கொம்பிலுள்ள பச்சைப்பாம்பு என்பாருமுண்டு. சினைச்சூல் எனின் உறுப்பாகிய முட்டையைக் கொண்ட கருப்பம் என்க. கனைத்த—திரண்ட, செறிந்த. உறை—உறைத்தல், மழைத்துளி. தலைஇய—சொரிய; "தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து" (முருகு.9.) அழிதுளி—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை: அழிக்கத்தக்க மிக்கதுளி. "அழிதுளி தலைஇய புறவு" (ஐங். 413). வாடை—வடகாற்று. ஆகுபெயராய் அக்காற்று வீசும் முன்பனிக் காலத்தை யுணர்த்திற்று. அழல்—அழுதல்—தீ; பசும் பாம்பின் சூல் கரும்பின் கூம்பிற்கு உவமை கூறப்பட்டது. வாடை வந்தும் தலைவன் வந்திடாமையால் தலைவி ஊடல் தோன்ற, அவன் வரவை எதிர் நோக்கிகின்ற கண்கள் நாணில என்றாள் 'வண்ணம் பசந்து புலம்புறு காலை, உணர்ந்தபோல உறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே"—(தொல். பொருளி. 8 சூ. 1147). என்பதனால் தலைவி கண்ணை உணர்ந்தனபோல நாணில என்றாள் என்க.

மேற்கோள் விளக்கம்:—

"நாணில மன்றவெம் கண்ணே"—"வண்ணம் பசந்து" (தொல்-பொருள்-சூ. 8) என்பதற்கு மேற்கோள்.

"தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க்கே"—இதில் ' "அழலானது' என்று வேற்றுமை யுருபுகள் ஈற்றினும் தொகுமாலோ எனின், அது ஒரு பெயரனையதாய் உருபு முதலாயின ஏலாமையின், தொகை விதியாற் றொக்கதாகா; செய்யுள் விகார வகையால் தொகுக்கப்பட்டது என்க" என்பதற்கு மேற்கோள்.

இச் செய்யுளை இயற்றியவர் கழார்க்கீர னெயிற்றியார் என்றிருக்கிறது. சில விடங்களில் கிழார்க்கீரன் எயிற்றியார் என்றும் காணப்படுகின்றது. கழார்—ஓரூர். கிழார்—வேளாண் மரபினர்.

மெய்ப்பாடு—வருத்தம் பற்றிய இளிவரல்.

பயன்—ஆற்றாமை அறிவித்தல்.

குறிஞ்சி

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் குறித்த காலத்து வாராது பிரிவு நீட்டித்தவழி, தலைமகள் ஆற்றாளே என வருந்திய தோழிக்குத் தலைவி கூறியது.

பரணர் பாடியது

36. துறுக லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவரும் குன்ற நாடன்
நெஞ்சு களனாக 'நீனையலேன்யான்' என
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
தாவா வஞ்சின முரைத்தது
நோயோ, தோழி, நின்வயி னானே.

என்பது வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாளெனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகளாற்றுவித்தது.

பதவுரை:—

தோழி — தோழியே; துறுகல் மாணை மாக்கொடி— திண்ணிய கற்பாறையினிடத் துள்ளதாகிய மாணைக்கொடி, அயலது துஞ்சுகளிறு இவரும்—அயலே உறங்கும் யானையின்மீது தாவிப்படரும், குன்றநாடன்—மலைநாட்டுத் தலைவன், நல்தோள் மணந்த ஞான்றை—எனது நல்லனவாகிய தோள்களைப் பொருந்திப்புணர்ந்த அந்நாள்; (நீ)நெஞ்சுகளன் ஆக—(நீ) என் நெஞ்சத்தை இடமாகக் கொண்டனையாதலின், நீனையலேன் யான்—நீயலாது (நின்னினும் வேறுபட்டவன்) நான் அல்லேன்; என—என்று, அவன்—அத்தலைவன், தாவாவஞ்சினம் உரைத்தது—பொய்க்காத சூளுரை கூறியது; நின்வயின்—உன்னிடத்து, நோயோ—துன்பம் தருவதோ?

மற்று, ஆன், ஏ—அசைகள்.

துறுகல்-வலிமை செறிந்த கற்பாறை.

மாணை—ஒரு கொடிவிசேடம். துஞ்சுகளிறு—வினைத்தொகை. துறுகலயலது துஞ்சுகளிறு எனக் கூட்டுக. களன்—இடம். மணத்தல்—தழுவுதல், பொருந்தல். தவா என்பது தாவா என நின்றது என்பாரும் உண்டு. தவா—பொய்க்காத, தவறாத, கெடாத.

ஞான்றை—ஐ—சாரியை. மற்று—அசை. தோழி—அண்மைவிளி. நின்வயின்—நினக்கு எனின் உருபு மயக்கம்.

மேற்கோள் விளக்கம் :—

"உயிரினும் சிறந்தன்று நாணே" என்னும் சூத்திரத்தில் "ஆவகை பிறவுந் தோன்றுமன் பொருளே" என்றதனால், இவள் கூற்றுத் தோழிக்கும் தலைவற்குமே தோன்றுவதென்க; என்றுகூறி, "இன்னும் அதனானே தோழியைத் தலைவி ஆற்றுவித்தலும் கொள்க" என்பதற்கு மேற்கோள். —(தொல். களவு. பக். 490)

மானை மாக்கொடி:—

(1) "மானையின் கொடியால் வீக்கி"—(கம்ப. யுத்த ஒற்றுக் கேள்வி 27)

(2) "வாங்கு வேய்ங்கழை துணித்தனன் மானையின் கொடியால்" —(கம்ப. அயோ. வனம் புகு. 36)

1. "நெஞ்சுகளனாக நீனையலேன் யான்என"
   (அ) நெஞ்சுகளனாக நீயலன் யான்என.
   (ஆ) நெஞ்சுகளனாக நீயலென் யான்என
   (இ) நெஞ்சுகளனாக நீயலேன் யான்என (பிரதிபேதம்)

2. "தாவா வஞ்சின முரைத்தது"
   (அ) தவாஅ வஞ்சினமுரைத்தது (பிரதிபேதம்)

இறைச்சி:—மலையின் பக்கத்துப் பிறந்த மானைக்கொடி தங்கிய யானைமீது படருவதுபோலும் குன்றநாடன் என்றது வரைந்து கொள்வதற்கு வேண்டிய பொருள் கொணர்ந்து வரைந்துகொண்டு கூடியிருக்கப் பிரிந்த பிரிவும், மறந்து கைவிட்டுப் பிரிந்தாற்போன்று நினைக்குத் துயர் தந்தது என்னை எனின் உண்மையை அறிய முடியாததே ஆம் என்பது.

மெய்ப்பாடு—வருத்தம்பற்றிய இளிவரல்.

பயன்—தோழியை ஆற்றுவித்தல்.

தகர்

"தகர்" என்னுஞ் சொல்லுக்கு ஆட்டுக்கடா என்றும், உடைத்தெறி என்றும் இரண்டு பொருளுண்டு. ஆங்கிலத்தில் இச் சொல்லுக்கு நேர் சொல்லான (Ram) ரேம் என்ற சொல்லுக்கும் இவ்வாறே இரண்டு பொருள்கள் காணப்படுவது வியக்கற்பாலதாம். ரேம் என்பது ஆட்டுக்கடாயையும், பகைவர் அரண்களை உடைத்து அழிக்கப் பயன்படுத்தப்பட்டுவந்த கடாயின்தலையுடைய மோதுவாரையையும் குறித்து, அதன்வழி பின்னர், "இடித்து உடை" என்னும் பொருளையுங் கொடுக்கும்.

(கா. சிவ. கு.)

வரலாற்றுப் பகுதி: History & Biography

சர். ஹம்ப்ரி டேவி

(1778—1829)

[திரு. என். குழந்தைவேலன் அவர்கள், B. A.]

மின்சாரத்தால் ஒளியுண்டாக்கியும் அதன் உதவியால் விளக்குகள் எரியும்படி செய்தும் உலகிற்கு முதன் முதலாகக் காட்டியவர் ஸர். ஹம்ப்ரி டேவி என்னும் († இயைபுநூற்) புலவராவர். இவர் இளமையிலேயே புதிய கதைகள் இயற்றுவதில் வல்லுநராய் இருந்தார். ஆகலின் பள்ளிச் சிறுவர்கள் இவரது கதைகளைக்கேட்க விரும்பி எந்நேரமும் இவர் வீட்டில் ஆவலோடு குழுமியிருப்பார்கள். டேவி எவரும் அறியாத புதிய விளையாட்டுக் கருவிகளைக் கண்டுபிடித்து அவற்றைத் தமது தோழர்களுக்கு வழங்கி அவர்களை மகிழ்விப்பார். இவர் கல்வி பயின்ற பள்ளிக்கூடத்தின் ஆசிரியர் குறும்புசெய்யும் பிள்ளைகளின் செவிகளைக் கிள்ளிவிடுவது வழக்கம். டேவி ஒரு நாள் தமது இரு செவிகளிலும் ‡ பசைத் துணிகளை ஒட்டிக்கொண்டு பள்ளிக்கு வந்தார். ஆசிரியர் இதுகண்டு ஏன் இவ்வாறு செய்தாய் என்று கேட்டபோது டேவி சிறிதும் தயங்காது தமது செவிகளைத் துன்பப்படாது காத்தற்குத் தாம் அவ்வழி கண்டுபிடித்ததாய்க் கூறினர்.

டேவி எதையும் நுட்பமாய் ஆராய்ந்து அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்திருந்தார். இவருக்கு ஓவியம் வரைவதிலும் புத்தகங்கள் படிப்பதிலும் மிகுந்த விருப்பம் உண்டு. ஆயினும் கல்வி பயில்வதற்குப் போதிய பொருளில்லாது இவர் பள்ளியை விட்டு அகன்று தனது பதினேழாவது அகவையில் பேன்ஸான்ஸ் என்னும் இடத்தில் ஒரு மருத்துவரிடம் வேலைக்கு அமர்ந்தார். இவர் மருத்துவ நூலிற் பயிற்சி பெறவேண்டுமென்று பெரிதும் ஆவல்கொண்டார். இவர் தமது ஓய்வு நேரங்களில் மருந்துக்கடையின் மேடைக்குச் சென்று தனிமையாக இருந்து பல்வேறு || ஆய்வுகள் செய்து கொண்டிருப்பார்.

---

* Sir Humphry Davy. † Professor of Chemistry. ‡ Plaster. || Experiments.

* டாக்டர் கில்பெர்ட் என்னும் ஓர் அறிவியற் புலவர் பென்சான்ஸ் நகருக்கு வந்திருந்தபோது டேவியைத் தற்செயலாய்க் கண்டார். மிக்க இளமையிலேயே டேவிக்கு இயைபு (ரசாயன) நூலாராய்ச்சியில் இருந்த ஆர்வத்தைக்கண்டு டாக்டர் கில்பெர்ட் அவரைத் தமது உறைவிடமாகிய † பிரிஸ்ட்டல் நகருக்கு அழைத்துச்சென்றார். கில்பர்ட் ஆராய்ச்சிக்குரிய புத்தகங்களையும் மற்றும் பல வசதிகளையும் டேவிக்கு மிகுந்த அன்புடன் உதவினார். இவையுமன்றி கிளிவ்டன் மருத்துச் சாலையில் (Clifton Hospital) டேவியை உதவி மருத்துவ வேலையில் அமர்த்தினார். டேவி அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு ஊக்கத்தோடு உழைத்துவந்தார்.

கிளிவ்டன் நகரில் இவர் பல அறிஞர்களுடன் பழகிவந்தார். சதே (Southey), காலரிட்ஜ் (Coleridge) என்னும் ஆங்கிலக் கவிஞர்களும் இவருக்கு அறிமுகமாயினர். இவர் பலதிறப்பட்ட அறிவியல் ஆராய்ச்சிகள் நடத்தியதன் பயனாக இவர்தம் புகழ் நாடெங்கும் பரவத் தலைப்பட்டது. இவர் 1807-ஆம் ஆண்டில் பொட்டாசியம் (Potassium) என்னும் ஓர் உப்பைக் கண்டுபிடித்தார். இதைத் தண்ணீரில் போட்டவுடன் தீப்பிடித்து வெடிப்பதையும் அங்கு மிங்கும் மீன் போல் நீந்திச் செல்வதையும் கண்டு மக்கள் வியப்புற்றனர். இவ்வுப்பு வெடிமருந்து, தீக்குச்சி முதலியன செய்வதற்கு இன்றியமையாததாக இருக்கின்றது. டேவி நீரில் மின்சாரத்தைப் பாய்ச்சி அதினின்றும் உயிர்வளி (Oxygen)யையும் நீர்வளி (Hydrogen) யையும் வேறாகப் பிரித்துக்காட்டினார். இவ் இரண்டு வளிகளும் சேர்ந்தது நீர் ஆகின்றதென்னும் உண்மையை இவர் நன்கு விளக்கிக்காட்டினார். இவரது ஆராய்ச்சிகளின் முடிவுகளைக் காண ஆங்கில அறிஞர் பலர் ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர்.

சின்னாட்கழித்து இவருக்கு இலண்டன் அரசர்கல்லூரியில் (Royal Institution) இயைபுநூற்புலவர் (Professor of Chemistry) பதவி கிடைத்தது. இவர் தமது வாழ்நாள் முழுவதையும் அறிவியல் ஆராய்ச்சியிலேயே கழிக்க வேண்டுமென உறுதி செய்துகொண்டார். கல்லூரியில் இவருக்கு ஓய்வு மிகுதியாக இருந்ததால் இவர் பழையபடி ஆய்வுகள் நடத்தத் தொடங்கினார். இவர் பல இடங்களுக்கும் சென்று தாம் ஆய்ந்துணர்ந்த உண்மைகளை எடுத்து விளக்கினார். இவர்தம் சொற்பொழிவுகளைக்கேட்கப் பல்லாயிரக் கணக்கானமக்கள் குழுமினர். இவருக்கு வரவேற்புகளும் வாழ்த்துக்களும் பரிசுகளும் ஏராள

*Dr. Gilbert. † Bristol.

மாய் வந்து குவிந்தன. இவர் வயதிற் குறைந்தவரேனும் அறிவில் முதிர்ச்சியுற்றிருந்தது கண்டு யாவரும் போற்றிப் புகழ்ந்தனர். சில ஆண்டுகள் கழித்து இவர் அரசர் கழகத்தின் அங்கத்தினராகத் (Fellow of the Royal Society) தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

டேவி புகழொடு தோன்றிய அக்காலத்திற்றான் மின்சார ஆராய்ச்சியில் ஈடுபட்டார். மின்சாரத்தால் சிறந்த ஒளி உண்டாக்கலாமென்பதை இவர் முதன்முதலாகக் கண்டுபிடித்தார். மின்சாரத்தை இரு கம்பிகளின் வழியாகப் பாய்ச்சி அக் கம்பிகளின் மேல்முனைகள் ஒன்றையொன்று நெருங்கும்படி செய்தவுடன் அம்முனைகளின் இடையே ஓர் ஒளி தோன்றிற்று. இம் மின்சார ஒளியினால் ஏற்பட்ட வெப்பம் கம்பிகளையும் எரிக்கும் ஆற்றல் உடையதாக இருந்தது. ஆகவே டேவி அக்கம்பிகளின் இரு முனைகளிலும் கரிக்கம்பிகளைப் பொருத்தி மீண்டும் தமது ஆய்வுகளைச் செய்துபார்த்தார். கரிமுனிகள் மின்சாரத்தால் சூடேறிப் பின்னர்ச் சுடர்விட்டு எரிந்தன. டேவிக்குமுன் பல அறிஞர்கள் மின்சாரத்தின் வியத்தகு செயல்களை ஆராய்ந்துவந்தனர். ஆயினும் டேவியே முதன்முதலாக 1812-ஆம் ஆண்டில் மின்சாரத்தின் உதவியால் விளக்கெரித்துக் காட்டினார்.

டேவியால் கண்டுபிடிக்கப்பட்ட இவ்விளக்கில் தோன்றிய வெளிச்சம் சிறிதுநேரமே நிற்கவல்லதாக இருந்தது. அறிஞர் பலர் மின்சாரவிளக்கு அவியாமல் நீண்டநேரம் எரியும்படி நல்ல முறையில் அமைக்க முயன்றனர். தாமஸ் ஆல்வா எடிசன் (Thomsa Alva Edison) என்னும் மின்சார அறிஞர் தமது சிறந்த திறமையை இவ்வாராய்ச்சியிற் செலுத்தினார். இவர் ஊனுறக்கமின்றி மிகவும் வருந்தி உழைத்து முடிவில் 1879-ஆம் ஆண்டில் ஒரு சிறந்த மின்சார விளக்கைச் செய்து முடித்தார். காற்று நீக்கப்பட்ட கண்ணாடிக் குமிழிக்குள் நூல்போன்ற மெல்லிய கரிக்கம்பியை (Carbon wire) அமைத்து அதன்வழி மின்சாரத்தைப் பாய்ச்சியபோது அக்கம்பியிற் சூடேறி வெளிச்சம் உண்டாயிற்று. கரிக்கம்பி செய்வதற்கு ஒருவகை மூங்கில்நாரைப் பயன்படுத்தினர். இதற்குப்பின் 1908-ஆம் ஆண்டுமுதல் மூங்கில் நாருக்குப் பதிலாக செயற்கைக்கரி பயன்படுத்தப்பட்டது. டேவியால் கண்டுபிடிக்கப்பட்ட மின்சாரவிளக்கு சற்றேறக்குறைய நூறு ஆண்டுகள்வரை பல்வேறு மாறுதல்கள் அடைந்து இறுதியில் பொதுமக்களுக்குப் பயன்படும் முறையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது

—டேவி 1813-ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். வெனிஸ்

(Venice) நகரத்தில் இவர்தம் அறிவுரைகளைக் கேட்க பைரன் (Byron) என்னும் ஆங்கிலக் கவிஞரும் வந்திருந்தார். அக் கூட்டத்தில் அவருக்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு மாது டேவி எதில் வல்லவரென வினவினள். அதற்கு பைரன் என்னும் அப்புலவர்பெருமான் டேவிக்குத் தெரியாதது ஒன்றுமில்லை யென்றும், அறிவுடையார் எல்லாமுடையர் என்றும் கூறினராம். இதனால் டேவியின் பெருமை நன்கு உணரப்படும். இரண்டு ஆண்டுகள் கழித்து டேவி ஸ்காட் லாந்து (Scotland) நாட்டிற்குச் சென்றார். அஞ்ஞான்று நார்த்தம்பர்லாந்து (Northumberland) என்னு மிடத்தி லுள்ள சுரங்கங்களில் அடிக்கடி தீப்பிடித்ததால் ஆங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் வெந்தணலின் கொடுமைக்கு அஞ்சி நடுக்கங்கொண்டிருந்தனர். சதுப்புநிலத்தில் உண்டா கும் ஒருவகை ஆவி (Marsh gas) தீப்பிடித்து வெடித்து மக்க ளுக்குத் தீங்கு விளைவித்தது. இதனால் விளக்கு முதலியவற் றைச் சுரங்கத்தினுள் எடுத்துச்செல்ல இயலாதுபோயிற்று. இதனைக் கேள்வியுற்ற டேவி மிகவும் இரக்கமுற்றுத் தீக்கோ ளைத் தடுத்தற்கு ஒருவழி கண்டுபிடிக்க முயற்சிசெய்தார். மெல்லிய இரும்புவலைக்குள் (Wire gauze) எரிகிற தீ, வெளியி லுள்ள அனற்காற்றைப் பற்றவைக்கமுடியாது என்பதை இவர் தமது ஆராய்ச்சியாற் கண்டுபிடித்தார். முடிவில் 1815-ஆம் ஆண்டில் ஒரு விளக்கைச் செய்துமுடித்தார். இதைச் சுற்றிலும் மெல்லிய இரும்புக்கம்பிகளால் ஆகிய வலை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இவ்விளக்கைச் சுரங்கத்தினுள் எடுத்துச்சென்றபோது தீப்பிடித்தல் வெடித்தல் முதலிய இடையூறுகள் ஒன்றும் நேரிடாதது கண்டு மக்கள் அளவிலா ஆனந்தமடைந்தனர். இவ்விளக்கு தீக்கோளைத் தடுத்தது மன்றிச் சுரங்கத்தில் வேலைசெய்பவர்களின் உயிர்களைப் பாது காத்தற்கும் உற்ற துணையாக இருந்தது. சுரங்கத்தொழிலா ளர்கள் டேவிக்குத் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்தற் பொருட்டு அவ்விளக்கிற்கு அவரது பெயரையே சூட்டினர். அஃது இற்றைக்கும் டேவி விளக்கு (Davy's Safety Lamp) என்னும் பெயராலேயே வழங்கிவருகின்றது. டேவி இதனால் திரண்ட பொருள் சம்பாதித்திருக்கலாம். ஆயினும் டேவி ஏனைய பெருமக்களைப்போன்றே "கைம்மாறு வேண்டா கடப்பாடு" உடையவராகலின் தமது அரிய ஆராய்ச்சியின் பயனை உலகத்திற்கே அளித்துவிட்டார்.

மைக்கேல் பேரடே (Michael Faraday) என்னும் ஓர் அறிவியற் புலவரைத் தமக்கு உதவியாளராக டேவி அமர்த்தி இருந்தார். ஒருநாள் நைட்ரஜன் குளோரைட்

(Chloride of Nitrogen) என்னும் ஒரு புதிய பொருளை ஆராய்ந்து பார்க்கையில் அது வெடித்துப் பெரியஅதிர்ச்சியை உண்டாக்கிற்று. இருவரும் தங்கள் நல்வினைப் பயனால் உயிர் தப்பிப் பிழைத்தனர். இவர்களது அரிய ஆராய்ச்சிகளின் பயனாகச் சாயம் காய்ச்சுவதற்கு இன்றியமையாதனவாகிய ஹைட்ரோ கார்பன் (Hydrocarbon), பென்சால் (Benzol) முதலியன புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. டேவி நைட்ரஸ் ஆக்சைட் (Nitrous Oxide) என்னும் ஒரு வளியைக் கண்டு பிடித்தார். இவ்வளியை மக்கள் உட்கொண்டால் முதலில் சிரிப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டுப் பின்னர் மயக்கம் உண்டாகும். இதனாலேயே அதற்குச் "சிரிப்புவளி" (Laughing gas) எனப் பெயர் உண்டாயிற்று. இது குளோரோபாம் (Chloroform) போன்று இரண மருத்துவத்தில் மயக்கம் மருந்தாகப் பயன்படுகிறது.

டேவி 1829-ஆம் ஆண்டு மேத்திங்களில் தமது 51-ஆவது அகவையில் இம்மண்ணுலகை விட்டு மறைந்தார். ஆயினும் இவர்தம் புகழ் இவரது மின்சார விளக்கைப்போன்று இன்றும் சுடர்விட்டு மிளிர்கின்றது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

இவர் தமது 19-ஆம் ஆண்டிலேயே "ஒளி"யின் தன்மைகளையும் "வெப்ப"த்தின் (Heat) மாறுபாடுகளையும் ஆராய்ந்தறிந்து பல அரிய கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். இவர் ஆய்வுகள் அனைத்தையும் தம் நண்பர் டாம்கின்ஸ் (Tomkins) என்பவரது வீட்டிலேயே நடத்திவந்தார். சிற்சில வேளைகளில் இவர் வெடிமருந்துகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அவை வெடிப்பதால் மிகப்பெரிய ஓசைகளும் வெடிகளும் உண்டாயின. டாம்கின்ஸ் தம் வீட்டிலுள்ளார் யாவர்க்கும் வெடிமருந்துகளால் தீங்குநேரிடுமென அஞ்சி நடுங்கினார். டேவி தமது காலத்தைப் பயனற்ற ஆராய்ச்சிகளிற் கழிப்பதாக டாம்கின்ஸ் அவரைக் குறைகூறியதுமன்றி, அவற்றை உடனே நிறுத்திவிடும்படியும் வற்புறுத்திக் கூறினார். ஆயினும் டேவி தாம் மேற்கொண்ட காரியத்திலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தார்.

டேவி "மக்னிஷியம்" (Magnesium) என்னும் ஒரு புதிய பொருளைக் கண்டுபிடித்தார். அதைச் சூடேற்றினால் அது வெண்மையான ஒளியுடன் சுடர்விட்டு எரிவதைக் காணலாம். இரவில் புகைப்படம் எடுப்பதற்கு இது மிகவும்

பயன்படுகிறது. சுரங்கங்களிலும் வெளிச்சமில்லாத ஏனைய இடங்களிலும் படம்பிடிக்க இஃது உதவுகிறது.

இவையுமன்றி வெடிமருந்து (வாணம்) செய்வதற்கு உதவும் ஸ்ட்ரான்ஷியமும் (Strontium) சாயம் வெளுப்ப தற்குப் பயன்படும் "க்ளோரீனும்" (Chlorine), மருந்து செய்வதற்கு இன்றியமையாததான "அயோடீனும்" (Iodine) இவரால் கண்டுபிடிக்கப்பட்டன.

வள்ளல் நள்ளி

[வித்துவான் இ. சிவகுருநாதன் அவர்கள்]

தமிழ்நாட்டின்கண் வள்ளல் பலர் வாழ்ந்து வந்தனர். அவருள் சிறந்தோர், முதலெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் எனப்படுவோராவர். கடையெழு வள்ளல்களுள் ஒருவன் நள்ளி.

வண்மையிற் சிறந்த தண்ணளியோரின் தன்மை என்னை? இரப்பவர் உவப்புற இன்முக மலர்ந்து நன்மொழிகூறி, வரையாது கொடுத்தலும்; இடம்படு ஞாலம் வியக்க உடல்பொருள் ஆவி அனைத்தையும் இரப்பவர்க்கு உவந்தளித்தலும் வள்ளல்களின் இயற்கையாம்.

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய பாரியும், மடத்தகை மாமயில் பனிக்குமென்றஞ்சி, பொற்போர்வை ஈந்த பேகனும் செந்தமிழ் நாட்டு வள்ளல்களல்லரோ! அவ்வள்ளல்கள் வாழ்ந்த தமிழகம் இன்று எந்நிலையிலுள்ளது? தமிழனே! பாரி வண்மையும், பேகன் இரக்கமும் என்று நின்மக்கட்கு வாய்க்கும்?

வள்ளல்களின் வரலாறுகள் பற்பல அறிஞர்களால் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஈண்டு யான் நள்ளியின் வரலாற்றை நவில்கின்றேன்.

வள்ளல் நள்ளி வாழ்ந்த இடம் தோட்டி மலையாகும். அம்மலை அளக்கலாகா அளவும், பொருளுமுடையது; துளக்கலாகா நிலையுந் தோற்றமும் கொண்டது; வான்போலகன்று விளங்குவது; வான்கண் மீன்போன்று சின்னஞ்சிறிய பன்னருஞ் சுனைகளைத் தாங்கியது; பளிங்கெனத் தெளிந்த அருவி இடையறுதோடும் இயல்பினது. நன்மரஞ் செறிந்த நறுந்தண் சாரலினது.

இத்தகைய மலையும், மலைநாடும் நள்ளியின் ஆட்சியில் இருந்து வந்தன. நள்ளி தன்னுயிரென மன்னுயிரையும் புரந்து வந்தான். காட்டுவாழ் விலங்குகளால் நாட்டு மக்கட்கு இடையூறு நேரிடுமென எண்ணி வேட்டையாடுவது நள்ளியின் வழக்கம். நல்லிசைப்புலவர் நட்பும், வில்வாட் பயிற்சிவன்மையும் விளங்கப்பெற்ற நள்ளி, ஒருநாள் வேட்டையாட விழைந்து காட்டை நோக்கிச் சென்றான்.

ஆண்டு, வறுமையால் வதங்கி, பசியால் வாடி, பலாமரத்தடியில் வருந்தியிருந்த வன்பரணரெனும், நன்புலவர் ஒருவரைக் கண்டான். கண்டவன் கடிதின் புலவர் இருக்கை நண்ணினான். புலவரின் இலம்பாடு கண்டு உள்ளங்குழைந்து உருகினான். வருந்தியிருந்த புலவரும் வள்ளல் வருகையைக் கண்ணுற்றார். வள்ளல், வில்லும் வாளும் ஏந்தியகையினனாய், கழல்யாத்த காலினனாய், கதிர்விடு திருமணி கட்டிய கொண்டையனாய், முத்துமாலை யணிந்த மார்பினனாய் விளங்கக் கண்டார். கண்ட புலவரும் இரு கையையும் எடுத்துவணங்கி எதிர் வரவேற்றார். வள்ளல் நள்ளியும், புலவரை வணங்கினான். தன்னை வணங்கிய புலவர் கையைத் தாழ்த்தி, இனிய இருக்கையளித்து அமரச்செய்தான். பின்னை, வாடிய புலவரின் பசி போக்க முயன்றான்.

அருளுடை நள்ளி தன் ஏவலாளரது வருகையையும் எதிர் நோக்காது, தானே திரிந்து, தக்க உணவை ஆக்கிப் புலவரை உண்பித்தான். புலவரும் ஒக்கலுடன் உண்டு உவப்புற்றார். வள்ளல் நள்ளி "இப்புலவர்க்கு யான் விருந்தளிக்கப் பெற்ற பெருந்தவம் என்னையோ!" என எண்ணி இன்புற்றான்.

நள்ளியளித்த உணவை, அமிழ்தின் மிசைந்து காய் பசி நீங்கிய புலவர், வேறிடஞ்செல்ல விழைந்தார். விழைந்தவர், வள்ளல் நள்ளியிடம் விடைபெற நண்ணினார். விருந்தளித்த நள்ளி, புலவரை நோக்கி, "அன்புடைப்புலவீர்! யான் காட்டு நாட்டினன். என்னிடம் முத்துமாலை யன்றி வேறு நன்கலன் இல்லை. என் மார்பிலணியும் முத்து மாலையைப் பெற்று மகிழ்க!" என்றுகூறி, தன் மார்பிலணிந்திருந்த மாலையையும், கையிற் கட்டியிருந்த கடகத்தையும் புலவருக்கு உவந்தளித்தான்.

பரிசில் பெற்ற புலவருக்குத் தனக்கு நன்மைசெய்த நள்ளியை இன்னாரெனத் தெரியவில்லை. ஆதலின் புலவர் பெருமான் நள்ளியை நோக்கி, "நிழல் அற்ற நீளிடையில்

தழைத்து வளர்ந்த தனிமரம்போல இம்மரஞ் செறிந்த காட்டில் எம்மை மகிழ்ந்து போற்றிய நும் நாடு யாது? நீவிர் யாவிர்?" என வினவினர்.

வினவிய புலவருக்கு நள்ளி விடையளித்திலன். பிறர் துன்பம் துடைத்தலையே பெருங் குறிக்கோளாகக்கொண்ட நள்ளி தன் நாடும் பெயரும் நவில்வான் கொல்? வாளா இருந்தனன். பின்னைப் பிறரால் அவன் "நள்ளி" என்பதைக் கேள்வியுற்று நனி மகிழ்வெய்தினர்.

என்னே! நள்ளியின் வள்ளன்மை. புலவர் இடும்பை கருதி ஈந்த வள்ளல் நாடும் பெயரும் நவில ஒருப்படுவனோ? வள்ளல்கள் 'தம் பெயர் விளங்க'க் கொடுத்தலைக் கனவிலும் கண்டறியார். உயிர்களின் துயர்போக்கும் ஒன்றையே எண்ணி ஈந்துவப்பார்கள். அவ்வள்ளல்க ளல்லவோ வள்ளல்கள்! அவர்கள் புகழல்லவோ என்றும் நின்று நிலவும்!

தமிழ்ச் செல்வர்காள்! நள்ளியின் வள்ளன்மையை வன் பரணர் பலவாறு புகழ்ந்து போற்றுகின்றார். அவற்றுள் ஒரு சிலவற்றை உரைக்குவல்:

"......பெறுதற்கரிய வீறுசால் நன்கலம்
பிறிதொன் றில்லைக் காட்டு நாட்டேமென
மார்பிற் பூண்ட வயங்கு காழாரம்
அடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்.
எந்நா டோவென நாடுஞ் சொல்லான்
யாரீரோ வெனப் பேயருஞ் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிகேட் டிசினே
....
நளிமலை நாடன் நள்ளிய வனெனவே

—(புறம்-150.)

இப்பா நள்ளியின் வள்ளன்மையை நன்கு விளக்குகின்ற தல்லவா? ஏனையதொரு பாவால் அவன் கொடைமிகுதியைக் கூறுவார் தன்னியற்கையையும் எடுத்துரைக்கின்றார். என்னே?

"கறங்குமிசை யருவிய பிறங்குமலை நள்ளி
...............பரிசின் முற்றளிப்ப
பீடின் மன்னர் புகழ்ச்சி வேண்டி
செய்யா கூறி கிளத்தல்
எய்யா தாகின்று எஞ்சிறு செந்நாவே"

—(புற-144.)

பண்டைப்புலவர் பெருமக்கள் ஒருவர் செய்யாதவற்றைச் செய்வதாகக்கூறும் இயல்பினரல்லர் என்பதை இப்பா இனிது உணர்த்துதலை ஊன்றி நோக்குமின்!

இத்தகைய வள்ளல்களும் புலவர்களும், தமிழ்நாட்டின் மீண்டும் பிறத்தல் என்றோ! தமிழன்னை! அருள்பாலிப்பா யாக!

விசயராகவ நாயக்கர் (கி. பி. 1644—1673)

[திருவாளர் வித்துவான் கி. சாமிக்கண்ணு அவர்கள்]

தோற்றுவாய் :—விசயராகவ நாயக்கர், இந்த நாயக்க அரசவழியின் நாலாவது அரசர். இவர் இரகுநாத நாயக்க ருக்குக் குமாரர். இவருக்கு அச்சுத நாயக்கர், அச்சுத விசய ராகவ நாயக்கர் என்ற மறுபெயர்கள் வழங்கிவந்தன. இவரு டைய மகன் பெயர் மன்னாரப்ப நாயக்கர். இவருக்கு ஒரு பெண்ணும் உண்டு.

வரலாறு :—விசயராகவ நாயக்கர் கி. பி. 1669-ல் டச்சுக் காரருக்கு நாகபட்டினத்தை இனம் செய்தார். அந்த இனம் சாசனப்பட்டயம் வெள்ளித்தகடுகளில் வரையப்பட்டு இப்பொழுது பட்டேவியா என்னும் ஊரிலுள்ள பொருட் காட்சி சாலையில் இருக்கிறது.

விசயராகவ நாயக்கருடைய அரசாட்சியின் கடைசிக் காலத்தில், மதுரையில் அரசு செலுத்திவந்த சொக்கநாத நாயக்கர், சிராப்பள்ளியைத் தலைநகராக்கி அவ்விடத்திலேயே குடியிருந்தார். அவ்விடத்தி லிருந்துகொண்டு தஞ்சாவூரைக் கைப்பற்ற வேண்டுமென்று அதன்மேல் கண்ணாயிருந்தார். அவ்வாறிருக்கையில், சொக்கநாத நாயக்கர், விசயராகவ நாயக்கருடைய அருமைச்செல்வியைத் தமக்கு மணம் செய்து கொடுக்கும்படி தஞ்சாவூருக்குத் தூதுவிடுத்தார். அச்சம்பந் தம் ஏலாதென்று நினைத்து அதற்கு விசயராகவ நாயக்கர் மனங்கொள்ளவில்லை. அதையே ஒரு காரணமாகப் பாராட்டி, சொக்கநாத நாயக்கர் தமது தளவாய் வேங்கடகிருஷ்ணப்ப நாயக்கரின்கீழ் ஒரு படையெடுப்புத் தயார் செய்து தஞ்சாவூரின்மீது அனுப்பினர். தளவாய் வேங்கடகிருஷ் ணப்ப நாயக்கருக்கு உதவியாகச் சொக்கநாத நாயக்கர் தம்முடைய செவிலித்தாயின் மகனை அளகிரியையும் அனுப் பினர். சிராப்பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட சேனைத்தலை

வர்கள் திடீரென்று படையெடுத்துச்சென்று கி. பி. 1673-ல் தஞ்சாவூரைத்தாக்கினார்கள். தஞ்சாவூர்ச்சேனைகள் உறுதியுற நின்று சண்டைசெய்து கடைசியாய்த் தோல்வியடைந்தன. தளவாய் அரங்கப்ப நாயக்கர், தளவாய் சொக்கநாதவீரபானு, தளவாய் சின்னராசா, தளவாய் அக்கிராசா முதலியவர்களும் போர்புரிந்து உயிரிழந்தார்கள். ஒன்னார் கோட்டைக்குள் நுழைந்துவிட்டார்கள் என்ற செய்தி காதுக்கெட்டவே, விசயராகவ நாயக்கர் தமது மகன் மன்னாரப்ப நாயக்கருடன் கையும் கத்தியுமாய்ப் போர்க்களத்தில் குதித்துப் பகைவர்களுடன் அமராற்றி அவர்களில் அநேகரை வெட்டிக் கண்ட துண்டமாக்கிக் கடைசியாய் மாற்றாரின் வாளுக்கு இரையானார். அவருடன் அவருடைய குமாரர் மன்னாரப்ப நாயக்கரும் சண்டையில் மடிந்தார். இச்சண்டை தஞ்சாவூர் வடக்குக் கோட்டை வாசலுக்கடுத்த இராசகோபாலசாமி கோவில் வாசலில் நடந்தது.

தமக்குப் பிறகு தமது பெண்டு பிள்ளைகள் எதிரிகளால் எவ்விதமான அவமானத்திற்கும் உள்ளாகக் கூடாதென்பது விசயராகவ நாயக்கரது கருத்து. மேலும் தமக்குப் பிற்காலத்திலுங்கூடத் தமது மகள் சொக்கநாத நாயக்கருக்கு மனைவியாகக் கூடாதென்பது அவருடைய எண்ணம். ஆகையால் அவர் போர்க்களத்திற் புகுவதற்கு முன், தமது அந்தப்புரத்திலுள்ள மாதர்களையெல்லாம் அரண்மனையில் ஒரு அறையில் ஒன்றுசேர்த்து வைத்தார். தாமும் தமது மகனும் சண்டையில் உயிரிழப்பதைவிடத் தங்களுக்கு வேறு வகையில்லையென்று கண்டால் உடனே ஒரு அடையாளம் காட்டுவதாகச் சொல்லியிருந்தார். அப்பொழுது அவ்வறையிலிருப்பவர்களையெல்லாம் நெருப்பு வைத்துக் கொளுத்திவிடும்படியாக ஏற்பாடு செய்திருந்தார். அம்மாதர்கள் கத்திகளை உருவிக் கைகளில் பிடித்துக்கொண்டு அவ்வறையில் அரசனது கட்டளையை எதிர்பார்த்து நின்றார்கள். சற்று நேரத்திற்குள் போர்க்களத்திலிருந்து கொற்றவனுடைய ஆணையும் வந்துவிட்டது அவர்கள் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு தங்களுயிரை மாய்த்துக்கொண்டார்கள். அவர்களிருந்த கட்டிடமானது வெடிமருந்திட்டு நெருப்பு வைத்துக்கொளுத்தப்பட்டது. அங்கிருந்த மாதுசிரோமணிகள் யாவரும் தீவாய்ப்பட்டு நீறாயினர்.

இக்குழப்பங்கள் நடந்த காலத்தில் விசயராகவ நாயக்கருடைய குமாரர் மன்னாரப்ப நாயக்கருக்கு இளவயதுள்ள செங்கமலதாசு என்ற ஓர் ஆண்குழந்தை இருந்தது. அக்

குழந்தையின் தாய், தன் அருமைக் குழந்தையையும் அருமையான நகைகளையும் தனக்கு அந்தரங்கமாயிருந்த ஒரு தாதியின் கையில் ஒப்பித்துக் குழந்தையைக் கேளாருடைய கண்ணுக் கெட்டாத தூரமான இடத்திற் கொண்டுபோய் வளர்க்கும்படி சொன்னாள். அந்தத் தாதி குழந்தையை எடுத்துக் கொண்டு நாகபட்டினம் போய்ச் சேர்ந்து யாரும் அறியாமல் ஒரு செட்டிவீட்டில் அந்தக் குழந்தையை வளர்த்துவந்தாள். அக்குழந்தை பன்னிரண்டு வயதுவரையில் அங்கேயே வளர்ந்து வந்தது.

காலம்:—விசயராகவ நாயக்கர் அரசுகட்டில் ஏறியகாலம் கி. பி. 1644-ஆம்ஆண்டு. கி. பி. 1673ல் போர்க்களத்தில் உயிர் நீத்தார். இவர் இருபத்தொன்பது ஆண்டுகள் இடையீடின்றி அரசு செலுத்தியவர்.

நாட்டினளவு :—இராமசேது முதல் பழமலை வரையிலும், குணகடல் முதல் சிராப்பள்ளி வரையிலும் பரந்துள்ள இடங்கள் இவரது ஆட்சியி லடங்கியிருந்தன.

முடிவுரை :—இவர் தெய்வ நம்பிக்கை நிறைந்தவர். அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்டகை. மானமிழந்தபின் வாழாமை முன்னினிதென்ற சீரிய கொள்கையினர். நாட்டை அமைதியுடன் ஆண்டவர். வெளிநாட்டினின்றும் தம் நாடு போந்த வணிகர்களுக்கு உதவிசெய்தவர். தாராள மனப்பாங்குடையவர். தன்னாட்டுக் குடிகளால் பெரிதும் நேசிக்கப்பட்டவர்.

மிகவும் பழைய துப்பாக்கி

வெடிகருவிகளில் மிகவும் பழையதாகக் கருதப்படுவது சீனநாட்டுக் கைத்துப்பாக்கி யொன்றாகும். அஃது 1377-ல், அதாவது ஏறக்குறைய 500 ஆண்டுகட்குமுன் செய்யப்பட்டதாகும். இப்பொழுது அது பெர்லின் நகரப் போர்க்கருவிக் கண்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிவியற் பகுதி - Science

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

திரு. பா. வே. மாணிக்கநாயக்கர் -. க. ப. சந்தோஷம் B.A., L.T.

[முன் சஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி]

உண்மை இயலை எழுத்தாற்காட்டும் முறையில் தமிழ் எழுத்துக்கள் ஐந்து பகுதிகளாய்ப் பிரிகின்றன. ஒற்றெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என வகுக்கப்பட்டு, பிருதிவி, அப்பு, தேயு என்ற பூதங்களையும்; உயிரெழுத்துக்கள் வாயு என்ற பூதத்தையும்; தனித்தமிழ் எழுத்தாகிய ஆய்தம், ஆகாயத்தையும் குறிக்கின்றன. ஆதலின் இவற்றைப் பஞ்சபூத எழுத்துக்களென்று கூறலாம். பஞ்சபூதங்கள் ஒன்றோடொன்று கலந்து நாமறியக்கூடிய பருப்பொருள்களனைத்தையுந் தோற்றுவிக்குமாறு, தமிழ் ஒலி இயலில் அடங்கிய பஞ்சபூத எழுத்துக்களைச் செவ்வனம் கூட்டுவதால் எம்மொழியினுந் தோன்றக்கூடிய எல்லா ஒலிகளையும் உண்டாக்கலாம். இங்ஙனம் யான் கூறுதல் கொண்டு, தமிழ் எழுத்துக்கள் தோற்றுவிக்கக்கூடிய ஒலிகளெல்லாம் தமிழ்மொழியில் வழங்குகின்றனவென்று நினைத்தல் கூடாது. மக்கள் எழுப்பக்கூடிய எல்லா ஒலிகளுக்குந் தமிழில் எழுத்துக்கள் உளவேனும், இவண் விரித்துரைக்க வியலாத சில காரணங்களால் சில ஒலிகளையே தமிழர் பொது வழக்கில் ஆண்டுவந்தனர். இவற்றைத் தவறாக உச்சரிக்கும் முறையைச் சரியென்று பதிவு செய்வதால், அறிவியலுக்கிசைந்த தமிழ் ஒலியியலின் பயன் அழியும்.

பொது அறிவைத் தழுவி மொழியை ஆராயப்புகுவோர்க்கித்துறையில் தங்கள் ஆராய்ச்சிக்குப் பயன் படக்கூடிய தொன்றுங் கிட்டிலது.. ஏனெனில், தமிழ் ஒலிகளைப்பற்றி யாண்டுங் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்படவில்லை. இலக்கணங்களில்தான் தமிழ்மொழிகள் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறன.

எழுத்துக்களின் வடிவங்களை இப்பொழுது கருதுவோம். உண்மை இயலை நன்கறிதற்கு எழுத்துக்களின் ஒலியைப் போலவே வடிவமும் பெரிதும் வேண்டப்படுவதாம். பல சித்திகள் கைகூடுமென்ற கருத்தால் மந்திர சக்கரங்களும், குளிசங்களும் இன்றும் வழக்கிலிருக்கின்றன. இவற்றில் பல எழுத்துக்களின் வடிவங்கள் ஒன்றாகச் சேர்க்கப்படு

கின்றன. இவ்வெழுத்துக்களில் ஒன்று சிதைபடுமாயின், அல்லது மாற்றப்படுமாயின், அதனால் எவர்பொருட்டு மந்திரம் உருச்செய்யப்படுகின்றதோ, அவருக்குத் தீமையோ நன்மையோ விளையலாமென்று நம்பப்படுகின்றது. சில சக்கரங்களில் ஒரு பெரிய எழுத்து நடுவிற் பொறிக்கப்பட்டு அத னுள்ளும்புறமும் சில சிறு எழுத்துக்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றை நோக்குங்கால், மந்திரங்கள் வழங்கிய காலத்தில் எழுத்துக்களுக்கு வரையறுக்கப்பட்ட வடிவங்களிருந்தனவென்றும், ஒவ்வொரு வடிவமும் சில கருத்துக்களைத் தன்பால் அடக்கிக்கொண்டிருந்ததென்று மறியலாம்.

தமிழ் எழுத்துக்களின் ஒலியை மிகத்தெளிவாக எடுத்துரைக்கின்ற இலக்கணங்கள் அவற்றின் வடிவத்தை அவ்வளவு தெளிவாகக் காட்டில. இதுகொண்டு, அவ்விலக்கணங்களெழுதப்பட்ட காலங்களில் மொழி எழுதப்படவில்லை என்ற முடிபிற்கு வரக்கூடாது. தொல்காப்பியத்தில் எழுத்தின் வடிவங்களைக் குறிக்கும் சிலவிதிகளுள.

"ஆய்தமென்ற முப்பாற் புள்ளியுமெழுத்தோரன்ன"
"மெய்யினியல்பு புள்ளியொடு நிலையல்"
"எகரஒகரத் தியற்கையு மற்றே"
"உட்பெறு புள்ளி யுருவா கும்மே"
"புள்ளியில்லா வெல்லா மெய்யும்"
"வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே."

இவற்றால் தொல்காப்பிய காலத்திற்கும் அதற்கு முந்தியும் எழுத்து வழக்கிலிருந்தனவென்பது வெளிப்படுகிறது. தொல்காப்பிய காலம் கி. மு. நாலாவது நூற்றாண்டுக்கு முற்பட்டதென்று துணிந்துகூற ஏதுக்களுண்டு. இஃது அசோகனுடைய காலத்திற்கு முற்பட்டதாகுமென்பதைக் கருத்தில் வைக்க.

தொல்காப்பிய முதற் சூத்திரத்தின் முதற்சொல் எழுத்தென்பதாகும். தமிழ்மொழியில் ஒலி என்ற கருத்தைக் கொண்டு எழுத்துக்கு இடப்பட்ட பெயரொன்றுமில்லை. பொறி, வரி என்று இரு கிளவிகளே எழுத்தென்பதற்கு மறுபெயர்களாகும். ஆனால், 'சொல்' என்ற கருத்தை வெளியிட 31 கிளவிகளுள இவையாவும் ஒலி என்ற அடிப்பொருளுடையனவாம்:—

அலசப்பு, அறை, இசை, இசைப்பு, இயம், உரை, கரை, கிளவி, குயில், கூற்று, செப்பு, தோல், தோற்றம், நுவற்சி, நொடி, பகர்ச்சி, பணி, பயில், பறை, பனுவல், பாணி, புகல், புகறல், பேச்சு, மறை, மாற்றம், மொழி, வாய்மை, விளம்பு, வினா.

சொல், எழுத்து என்ற இரு கிளவிகளினால் குறிக்கப்படுகின்ற பொருள்களை உற்று நோக்கின், எவரும் மறுக்கமுடியாத ஓருண்மை வெளியாகும்:—எழுத்தென்ற கிளவி வழக்கில் வருவதற்கு மிகமிக முன்னரே, சொல்லென்றகிளவி வழங்கியிருத்தல் வேண்டும். அற்றாயின், எழுத்தென்கிளவி வழக்கில் வந்த காலத்தில் தமிழர் மிக வியக்கத்தக்கதொரு நாகரிகம் எய்தியிருத்தல்வேண்டும். சொல்லென் கிளவியின் பொருள்களாவன:—

[1]வார்த்தை, [2]குறியீடு, [3]சொற்றொடர், [4]வாக்கியம், [5]பல வாக்கியங்களாலமைந்த ஒரு பகுதி, [6]பிரகடனம், [7]பொருப்பு மொழி, [8]கட்டளை, [9]அனுபவத்திற்கண்ட உண்மை, [10]ஐயமகற்றல், [11]போற்றுதல், [12]நெல், [13]கள். இஃதின்னனமாக எழுத்தென்ற சொல்லால் குறிக்கப்படும் பொருள்களாவன:-

[1]நெடுங்கணக்கு, [2]வரைதல், [3]எழுதப்பட்ட கடிதம், [4]எழுதிய ஒரு குறிப்பு, [5]புள்ளியிடுதல், [6]எழுதிய கணக்கு, [7]எழுதிய ஒப்பந்தம், [8]ஆவணம், [9]தஸ்தாவேஜு, [10] பெயரெழுதுதல், [11] பதிவுசெய்தல், [12] வருணித்தல், [13] பொறித்தல், [14]ஓவியம், [15]இலக்கிபம், [16]அறிவியல், [17]மந்திர எழுத்துக்கள், [18]சக்கரங்களிலும் குளிசங்களிலுமுள்ள எழுத்துக்கள், [19]தலையெழுத்து. இவற்றுட் பல வழக்கற்றன.

எழுத்தென்ற சொல்லின் வழக்குத் தொல்காப்பிய காலத்துக்கு மிக முந்தியதென்பதை மறுக்கொணாது. ஏனெனின், தொல்காப்பியம் எழுத்தென்ற சொல்லை வழங்குகின்றது. தொல்காப்பிய காலம் கி. மு. நாலாம் நூற்றாண்டுக்கு முன்னாகும். ஆதலின், அக்காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே தமிழர்கள் மிக மேலான நாகரிகமடைந்திருத்தல் வேண்டும்.

தொல்காப்பியத்திற்கு முந்திய இலக்கியங்கள் நமக்குக் கிடைக்கப்பெறாமையின், தொல்காப்பியத்தின் வாயிலாகவே தமிழர் கண்ட பேருண்மைகளை நாமறியவேண்டியதாயிருக்கிறது. தொல்காப்பிய வாயிலாய் காணக்கிடக்கின்ற இவ்வுண்மைகள், முன்னாளிலிருந்த ஒழுங்குபட்ட அறிவையும், தமிழ்மொழியின் மறைப்பகுதியை அறியவேண்டிய முறையையும் நமக்கு நன்கு விளக்குகின்றன. மறைத்தன்மையே தமிழின் அடிப்படையாகு மென்பதைத் தெற்றெனக் காண்கின்றோம். மறைத்தன்மை என்பதை நாமுற்றுநோக்கிப் படிப்படியாய் அதை அறியத் தொடங்கும்பொழுது மறை என்ற சொல்லாற் குறிக்கப்படுகின்ற திரைநீங்கி அது நுண்ணிய இயற்கை முறைகளைக் குறிக்கும் என்பது வெளியாகும்.

உண்மை இயலை அடிப்படையாகக்கொண்டே தமிழ் மொழியுந் தமிழ் இலக்கணமும் வந்தன.

பண்டை இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தைச் சிறிதேனுங் கற்றவர் அதில் வழங்கப்படும் இலக்கணக் குறியீடுகள் உயிரைப்பற்றிய உண்மைகளை வெளியிடுவதற்கு வேண்டிய குறியீடுகளாமென்பதை எளிதிலறிவர். இலக்கணத்திற் கூறப்படும் எழுத்து, சொல், வாக்கியம் என்பவற்றிற்குப் பதிலாக உண்மை இயலில் இவற்றிற் கொத்திருப்பவற்றைப் புகுத்துவோமாயின் தொல்காப்பியத்திற் கூறப்பட்ட விதிகள் மொழியிலக்கணத்திற்குப் பதிலாய் உயிரிலக்கணத்தை விரிக்கின்றனவென்பது தெளிவாம். பின்வருவன கொண் டிதையறியலாம்:—

தாமே இயங்கும் ஆற்றலுடைய எழுத்துக்கள் தமிழில் உயிர் அல்லது ஆவி என்று கூறப்படுகின்றன. உயிர், ஆவி என்பன ஜீவாத்மாவைக் குறிக்கும். உயிரோடு கலந்தாலன்றித் தாமே இயங்கலாற்றாத எழுத்துக்கள் உடல் அல்லது மெய் என்று பெயர் பெறுகின்றன: உடல், மெய் என்பன திரிமலகோசம் அல்லது ஜடத்தைக் குறிக்கும். தானே இயங்கும் எழுத்தும், இயங்கலாற்றாவெழுத்தும்கூடிப்பிறக்குமொலியைக் குறிக்குமெழுத்தும், உயிர்மெய்யென்று பெயர் பெறுகின்றது. உயிர் மெய்யென்பது உடம்பில் உயிர் அடைபட்ட நிலையைக் குறிக்கும். இது திரிமல கோசத்தில் ஜீவாத்மா இயங்குவதாகும். திண்ணிய ஓசையையுடைய எழுத்துக்கள் வல்லினமெய்யெனப்பட்டுத் தானென்ற அகங்காரத்தின் உருவத்தைக் குறிக்கும். இஃது ஆணவமல கோசமாகும் திண்மை மென்மையாகிய இரண்டிற்குமிடையேயுள்ள ஓசை நிலையைக் குறிக்குமெழுத்துக்கள் இடையினமெனப் பெயர்கொண்டு, மயக்கத்தைக் குறிக்கும். இது மாயாமல கோசமாகும் மென்மைத் தன்மையவாய ஓசையைக் குறிக்குமெழுத்துக்கள் மெல்லினமெனக் குறிக்கப்பெற்று, உயிரைப் பல்வகையில் ஈர்க்கும் அவாக்களைக் குறிக்கும். இது காமியமல கோசமாகும்.

ஒற்றெழுத்துக்கள் ஒன்றோடொன்று கூடுவதைக் கூறுமதிகாரம் புள்ளி மயங்கியல் அல்லது மெய்மயங்கியல் எனத் தலைப்புப் பெற்று உடம்பு அல்லது திரிமல கோசத்தின் மயங்குவதை விளக்கும். (மயக்கம்=மாயை)

உயிர்கள் ஒன்றோடொன்று கூடுமியல்பை விரிக்கின்ற அதிகாரம் உயிர்மயங்கியல் என்று பெயர்பெற்று உயிருக்கு நேரும் மயக்கத்தை விளக்கும்.

எழுத்துக்களின் ஒலியை வரையறுக்கின்ற அதிகாரம் பிறப்பியல் என நின்று பிறப்பின் முறையைக் காட்டும். பிறப்பென்பது ஜனனம், ஜன்மம்.

(தொடரும்

செய்திகளும் குறிப்புகளும் :
News and Notes

"செந்தமிழ்ச் செல்வி" இரட்டைமணிமாலை

[யாழ்ப்பாணத்து நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்]

(புதுக்கவி)

காப்பு

வெண்பா

அணிமாலை பாவா லணிவாட் கிரட்டை
மணிமாலை நாவால் வழங்கப்—பிணிமாலை
ஓட்டுமிரு கோட்டம் பிறையிதழி யோங்குசடை
காட்டுமொரு கோட்டனடி காப்பு.

நூல்

வெண்பா

வெண்டா மரைமேல் விளையுந் தமிழ்ச்செழுந்தேன்
கண்டா லினிக்குமிரு கட்கரும்பு—கொண்டார்க்கு
வஞ்சத் திருக்கு மறுத்தொழியா வாழ்வுதவி
நெஞ்சத் திருக்கு நிறைந்து.

கலித்துறை

நிறைவான் மலர்முக மும்பஉணத் தோளு நிலவிளெளி
குறைவா ணகையு மிருட்குழற் காடுங் கொடியிடையும்
அறைவா னமுத மொழியு மரவிந்தத் தாள்களுமாய்
உறைவா ளுரைமகள் வெண்கம லத்துமென் னுள்ளத்துமே.

வெண்பா

உள்ளத்தா லுள்ள வமுதூறித் தித்தித்தென்
கள்ளத்தை நீக்கியின்பங் காட்டுமே—வெள்ளைக்
கலையு மணியுமணி காமரன மென்போற்
றலையு மணியு மணித் தாள்.

கலித்துறை

தாடலை வைத்தவெண் டாமரை மேவித் தனதருட்சித்
தாடலை வைத்தம் புவியா ளரசி யளிகள்சுவைத்
தாடலை வைத்த குழலாளென் னன்னைதன் னம்புயப்பொற்
றாடலை வைத்தெனை யாண்டா ளழிந்தன சஞ்சலமே.

வெண்பா

சஞ்சலம்போ மின்பந் தழைக்குந் தருமனையும்
அஞ்சலம் போய்வாவென் றதட்டலாம்—வஞ்சகர்செய்
தந்திரமோ தாதகலை வாணிதமிழ் மூன்றெழுத்து
மந்திர மோதி வரின்.

கலித்துறை

வரிக்கோல வாழ்விழி பானலம் போது மதன்கரத்த
வரிக்கோல வாரிதி யீயும் மருந்து மதுரமொழி
வரிக்கோல மாமுலை வாரணக் கோடு மலர்க்கரத்து
வரிக்கோ லமரிசை யாழுடைச் செந்தமிழ் மாமயிற்கே.

வெண்பா

மயிலே மடவனமே வண்டமிழ்ப்பூங் காவிற்
குயிலே மலயமலைக் கொம்பே—மயலேதந்
தீர்க்கும் பழைய வினையிரண்டு மின்னினியே
தீர்க்குந் திருவருளைச் செய்.

கலித்துறை

செல்லாத செல்வியைத் தமாரை யாட்டியைத் தீயவர்பால்
நில்லா தமர்ந்தெங்கு நின்றுளை நித்யகல் யாணியை நூல்
கல்லா தவர்மனம் போலிருட் கூந்தற் கனங்குழையை
அல்லா தருளுடைத் தெய்வந் தமிழகத் தார்க்கில்லையே.

வெண்பா

தாய்போ லுணவருளித் தந்தைபோற் கல்விகொடுத்
தாய்வளைபோ லின்ப மகத்துதவிச் சேய்போல்
இளங்குதலைத் தீஞ்சொல் செவிக்கீவா ளென்றும்
வழங்குதலை யுற்றதமிழ் மாது.

கலித்துறை

மாவாழ் பொதிய மலையிற் பிறந்து வரமுனிவன்
பூவாழ் கரமெனும் பொற்றெட்டி லாடிப் புலவர்சங்கப்
பாவாழ் பலகை யிருந்தேட்டி லேதவழ் பாவையென்றன்
நாவாழ் வுகந்தமை நான்முன்பு செய்திட்ட நற்றவமே.

வெண்பா

தவந்தரு மோங்குந் தனந்தரு மின்புஞ்
சிவந்தரும் பேரின்புஞ் சேர்க்கும்—நவந்தருமிப்
பூவா மெழுபிறப்பும் நற்றுணையாய்ப் புல்லுமே
பாவாழ் கலைமான் பதம்.

கலித்துறை

பண்டங்கு தீஞ்சொற் பனுவற் பிராட்டி பவளவிதழ்
விண்டங் கெழுந்த செழுந்தமிழ்க் கங்கை வியனதியிம்
மண்டங்கி முட்டி நிவந்துவிண் ணோரும் மனமறுகக்
கண்டங் கறுத்த பெருமா னிருசெவிக் கட்டுண்டதே.

வெண்பா

கடையமுதிற் றென்பொதியக் கல்லிற் பிறந்த
நடையமுத நல்ல வமுதம்—கடையமுதம்
உண்டா லினிக்கு முணர்ந்தாலுங் கேட்டாலுங்
கண்டா லினிக்குமிது காண்.

கலித்துறை

காவர சங்க மயலும் பிணியுங் கடிந்துகமழ்
பூவர சங்கமர் பொன்னன மேபுக லும்பிடிக்கை
மாவர சங்கனுங் கும்நடை யாய்மணிக் கூடலிலும்
தாவர சங்கம மெங்கு நிறைந்த தமிழ்த் தெய்வமே.

வெண்பா

தெய்வமுனைப் போல்வேறு தெய்வமிலை நீயுரைக்குஞ்
சைவசம யம்போற் சமயமிலைப்—பொய்யன்று
மாமறையு மாறில் மறையு மறையுமென்றால்
நாமறையு மாறு நகை.

கலித்துறை

கையது புத்தகம் யாழக்க மாலை கவிரிதழ்ந
கையது முத்தமு முல்லை யரும்புங் கமழுமைவ
கையது பூங்குழல் காலொன் றீரண்டீ கமலநன்மு
கையது கொங்கை கருத்ததென் மேற்கொண்ட காரிகைக்கே.

வெண்பா

காரியமன் மேதிக் கடாவினெதிர்ந் தாலுமது
காரியமன் றன்று கடத்தெனும்பைச்—சீரியசம்
பந்தனுயர் பூம்பாவை யாக்கவருள் பாமகள்முன்
தந்தமி ழின்றுமுண்டு தான்.

கலித்துறை

தாதுறை தாமரை யோபுன லோதரை யோவிரைசேர்
போதுறை சோலைப் பொதியங்கொ லோபுல வோருலகோ
சூதுறை கொங்கைத் துடியிடைச் சுந்தர வல்லியன்ன
மாதுறை கின்ற விடந்தா னறியும் வழியில்லையே.

வெண்பா

வண்ணப் புனலும் வளியும் நெடுவிசும்பும்
மண்ணுமன லும்மறைந்து நின்றாலும்—எண்ணுமிரு
கண்ணும் மனமுமுருக் காட்டி வெளியாக
நண்ணும் தமிழரசி நன்று.

கலித்துறை

நங்கைக் கிடந்தரு நாண்மல ரேமுக நாகிளவேய்
அங்கைக் கிடந்தரு தோளா மடியில வந்தளிரே
கொங்கைக் கிடைந்தொல்கு நுண்ணிடைக் கொப்புமை கூறினது
சங்கைக் கிடமிட மேதட மேவுவெண் டாமரையே.

* திருவள்ளுவரும் பெண்களும்

[திருமதி பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்]

திருவள்ளுவர் பிறப்புச், சமயம் முதலியன இன்னும் பெரியோர் ஆராய்ச்சியில் உழன்றுகொண்டிருக்கும் பெரும் பொருள்களாகும். அன்றியும் தெய்வப்புலவராகிய திருவள்ளுவரின் பெருமிதங்களை நுணுகி ஆய்ந்தறிந்துள்ள தலைவரும், பெரியோர் பலரும் எழுந்தருளியிருக்கும் இவ்வவையின்கண் அற்ப அறிவையுடைய யான் அவர் சீர்மைகளை இயம்பப்புகுவது, கொல்லன் தெருவில் ஊசி விற்பதற்கு ஒப்பேயன்றிப் பிறிதில்லை. ஆயினும் எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப இரண்டொன்றை இயம்பி மேலே செல்கிறேன்.

திருவள்ளுவர் பொருள்களின் சிறப்புகளையும், பாகுபாடுகளையும் பலரறிய கெம்பீரமாய் எடுத்தியம்புகின்றவர் பலர். ஆனால் தாம் கூறியபடி செயலாற்றுகின்றவரோ மிகச் சிலர். இஃது உலகறிந்த ஓர் இரகசியம். நம் செந்நாப்போதாரோ அவ்வகுப்பைச் சார்ந்தவரல்லர்.

"சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்"

என்னும் தெய்வ வாக்கிலமைந்த அருமை, எளிமையாகுமாறு தம் வாழ்க்கையை நடாத்தியவர். இதற்கு, இல்லறம், துறவறமாகிய இரண்டு அறங்களில் எது சிறந்தது எனத் தம்மை வினவிய பெரியாருக்குத் துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே சிறந்தது என அப்பெரியார் நன்கு உணருமாறு நம் செந்நாப்போதர் தம் செயன்முறையில் காட்டியதே தக்க சான்றாகும்.

அவர் திருவாக்குப் பாவில் முதன்மைபெற்ற குறள் வெண்பாவில் அமைந்துள்ளது. அதுமாத்திரமேயன்றிப் படிப்போர் மனத்தில் எளிதில் பதியக்கூடிய சிறுமையையும், ஆராய்வோர் அறிவிற்குப் பெருவிருந் தளிக்கக்கூடிய பொருட் செறிவையும் பெற்றிருப்பதை அறிவுடையார் நன்கு அறிவர். ஒவ்வொரு மதத்தினரும் இதைத் தம்நூல் என வழங்கிட்டுக் கொண்டிருத்தலே இந்நூலின் பொருளருமையை வெளிப்படுத்தவில்லையா? வேதக்கருத்து முழுதும் இந்நூலில் அமைந்திருத்தலின், கற்றோர் இதைத் தமிழ்வேதம் எனக் கழறுகின்றனர். இத்துணைச் சிறப்புவாய்ந்த இத்தமிழ்

---

* இஃது 1936-ஆம் ஆண்டுத் திருவள்ளுவர் திருநாள் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் சுருக்கமாகும்.

வேதம் குடிப்புகாத மொழி எது? தேசம் எது? படித்தவர் மனத்திற் படிந்து பயன்தருவது திருக்குறளன்றி வேறு எந்த நூல்? அன்றியும் இம்மை, மறுமை, வீடு ஆகிய மூன்றிற்கும் இன்றியமையாத சிறந்த பொருள்கள் பலவும் இந்நூலின்கண் அமைந்துள்ளனவென்பது அறிவுடையோர் கருத்து. இதைச் செவ்விதின் உணர்ந்த உங்கள் முன்னிலையில் இன்னும் விரித்துக்கூறுதல் வெற்றுரையேயாகும்.

இனிப், பெண்களைப்பற்றி ஆராய்வாம்:-அடக்கம், மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு ஆகிய இக்குணங்கள் பெண்களுக்கு இருத்தல் வேண்டும் என அறநூல்கள் அறையாநிற்கின்றன. இவற்றைப் பெற்றிருப்பவரே பெண்களில் நல்லார் என உலகம் கூறுகின்றது. ஆனால் இக்குணங்கள் மங்கையர்க்கு இயற்கையா என வினவில் அன்று என்னும் விடைதான் நமக்குக் கிடைக்கும். ஒரு பொருளை விட்டுப் பிரிக்க முடியாத பண்பு எதுவோ அதுதான் இயற்கையாகும். பாகற்காயை விட்டுப் பிரிக்கமுடியாத கசப்பை நோக்குக. எங்ஙனம் பாகலுக்குக் கசப்பு இயற்கையாக அமைந்துள்ளதோ, அங்ஙனமே பெண்ணுலகத்திற்கு இயற்கையாக அமைந்த குணங்கள் சில உண்டு.

பெரும்பொருள் ஈட்டுகின்ற ஆடவர் ஒருவர், தம்மேலதிகாரி தீயவார்த்தை ஒன்றினால் தம்மைக் கோபித்தவுடன் அதைப் பொறுக்கலாற்றாது உடனே தம்வேலையை விட்டுவிட நினைக்கின்றனர். உத்தியோகத்தை விடுவதால் தமக்கு ஏற்படும் துன்பங்கள் பல அவர் முன் தோன்றினும் அவற்றைக் குறித்துப் பொறுமையுடன் சிந்திக்க அவர் மனம் அப்போது இடந்தருவதில்லை. இதை மனத்தி லிருத்திக்கொண்டு நம் பெண் மகளிரிடம் செல்வாம். நம்மகளிர், கணவர், குடும்பத்தார், குழந்தைகள் முதலியோர் கொடுக்கும் தொல்லைகளுக்கு மனம் பதறிக் காரியஞ்செய்யத் தொடங்கின் ஒரு குடும்பமேனும் சீரியமுறையில் நடைபெறுமா? அன்றியும் கருத்தாங்கல், கரு உயிர்த்தல் முதலியவற்றில் நம் அருமை மகளிர்படும் துன்பங்கள் அளவுடையனவோ? எத்தெய்வக் குணத்தைக்கொண்டு இப்பொறுப்புகளை அவர் தாங்கித் திரிகின்றனர் எனக் கூர்ந்து நோக்கின், அறிவுடையோர் எண்ணமும் ஆராய்ச்சியில் நுழையும். அது சாமானிய மக்களால் கைக்கொள்ளக்கூடிய பண்பன்று; மனன சீலமுடைய முனிவரும் சில நேரங்களில் கைவிடக்கூடியது; அச்சீரிய குணத்தை விடுவதால் தம் தவமுழுதும் அழியுமென உணரினும் அதை நழுவவிடாமல் பற்றுதற்கு அம்முனிவர்க்கும்

இயலுவதில்லை; சத்தியம், சீலம் முதலிய உயர்குணங்கள் பல ஒருவரிடம் தங்கி நிலைபெறுதற்கு ஊன்றுகோலாயிருப்பது; பாண்டவர்போன்ற பெரியார் புகழை நிலைநிறுத்துவது. இத்தகைப் பெருமை வாய்ந்த குணம் இன்னது என இது காறுமே சிலர் அறிந்திருக்கலாம். அத் தூயகுணம், சீரியர் பலரால் புகழ்ந்து போற்றப்படுகின்ற "பொறுமை" என்பதே யாகும். பலராலும் மேற்கொண்டொழுக முடியாத இப் பெருங்குணம் நம்மகளிரிடம் அடிமை பூண்டொழுகுகின்றது. இன்றேல் நம் சகோதரியர் பல கடின காரியங்களையும் மிக்க பொறுமையுடன் தாங்கி முகமலர்ச்சியுடன் காலந்தள்ள இயலாது. அன்றியும் உலகம் உயர்நிலையில் நடைபெறவும் முடியாது. இதனால் உலகம் உயர்முறையில் செல்லுதற்குப் பொறுமை காரணம் என்றும், அப்பொறுமையைக் கொள் கலனாய்க் கொள்ளுதற்குப் பெண்மகளிர் காரணம் என்றும் உணர்ந்தாம்.

உலகப் பொருள்கள் யாவும் குணம், குணி ஆகிய இரு பொருள்களினாலேயே உருக்கொண்டுள்ளன என்பது யாவரும் அறிந்ததே. மகளிர் பொறுமையைக்கொண்ட கலன் எனில், மகளிர் பண்பி என்றும், பொறுமை பண்பு என்றும் புலப்படவில்லையா? இங்ஙனம் பண்பாக உள்ளதைத்தானே இயற்கை எனக்கூறுவது! இவற்றால் பண்பி மகளிர் என்றும், அவர்தம் பண்பு பொறுமை என்றும் அறிந்தாம்.

தம் மக்களுக்காக இரவு விழித்தல், பத்தியமிருத்தல் அவர்களுக்கேற்ற அரிய உணவு, உடைகளை ஈதல், தம் நலத்தை இழந்தேனும் கணவரைப் பேணல், பிற்காலம் தம் கணவன் சொத்தில் சிறிதும் தமக்கு உரிமையில்லை யென்பதை நன்குணர்ந்திருந்தும் கொஞ்சமும் வீணாக்காமல் செட்டுடன் செலவழித்து மீதப்படுத்தல், கணவன் மக்கள் துன்புறுங் கால், அத்துன்பம் தம்மைச் சார்ந்ததெனவே உள்ளூர நினைத் துப் பாடுபடல், குடும்பத்திற்குப் புகழுண்டாக்கமுயலல் முத லிய தெய்வக் குணங்களுக்கு என்ன பெயரிடலாம்!

ஒருவர் எத்தனை பிறவிகளில் பண்பட்டிருந்தால் இவ் வுயர் குணங்கள் அவருக்கு அமையும்? இதில் இன்னுமொரு அதிசயம் உண்டு. நம் மகளிர் மனச்சலிப்புடன், அன்றி முணுமுணுப்புடன், 'பிறருக்கு வந்ததை நாம் அநுபவிக்க நேர்ந்ததே' என்ற வெறுப்புடன் இத்துன்பங்களை மேற் கொள்ளுகின்றனரா? இல்லை. இல்லை. காய்தல் உவத்தல் இன்றி நோக்குவார்க்கு இது புலனாகாமலிரா. இன்னும், கணவ னும் மக்களும் துன்புறுதற்குக் காரணம் தம் ஊழ்வினை யென்

பதன்றோ அவர்கள் கருத்து. அதை வாய்விட்டுச் சொல்லித் தம்மைத்தாமே வெறுத்துக் கொள்வதையும் கேட்கின்றோம்.

இவையாவும் தன்னலம்பாராத் தகைமையாளர் பண்புகளல்லவா? இதைத்தானே சிறந்த குணம் என்று உலகம் புகழுகின்றது! இதற்குத்தானே தியாகம் எனப் பேரமைந்துள்ளது! இவற்றால் நம் சீரிய மங்கையர்க்கு இயற்கையாக அமைந்த குணங்கள் இன்னவை எனத் தெள்ளிதின் விளக்க முறுகின்றன வல்லவா? அவற்றை வெளியிட்டுக் கூறின் யோகிகளும், சான்றோரும் மேற்கொண்டொழுகும் பொறுமையும் தன்னலங்கருதாத் தகைமையுமே யாகும். ஆற்றொணாப் பல துன்பங்களையும் ஆற்றியிருந்த சந்திரமதியாரைப் பொறுமைக்கும், தன்னலஞ் சிறிதுங்கருதாது வறியோர்க்கு உண்டி உதவுதலையே இன்பமெனக் கருதிய அருமை மணிமேகலையாரைத் தியாகத்திற்கும் சான்று பகரலே பொருத்தமுடைத்தாகும். இவ்விரு குணங்களுக்கும் கண்ணகியார் ஒருவரே சான்றாக நிற்பர் எனக் கூறின் குறை என்ன?

இனித் திருவள்ளுவருக்கும், பெண்களுக்கும் உள்ள தொடர்பை ஆராய்வோம். செந்நாப்போதாரின் மனமாகிற துலை நம் அருமை மகளிரை எம்முறையில் நிறுத்திக் காட்டிற்று என்பதை நோக்கல்வேண்டும். அதற்கு இவர் நூலில் நுழைதல் இன்றியமையாதது.

"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவலன்று"

இஃது ஒரு நூலுக்குப் பாயிரம் இருந்தே யாகவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது. அது பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என இருவகைப்படும். இவ்வின்றியமையாத பண்பு நம் தெய்வப்புலவர் நூலில் உள்ளதா என நோக்குவாம். அவர் முதலில் நான்கு அதிகாரங்களைக் கூறிப் பின்பே நூலைத் தொடங்குகின்றார். அவை, மக்கள் தவறாது கடைப்பிடிக்க வேண்டிய இறைவணக்கமும், அவ்விறைவன் அருளை வெளிப்படுத்தும் வான்சிறப்பும், அவன் முழு அருளையும் பெற்று விளங்கும் நீத்தார் பெருமையும், இவையாவும் குறைவின்றி நடத்தற்கேதுவாகிய அறன் வலியுறுத்தலுமாகும். முதல் மூன்றும் பொதுப் பொருள்களாகவும், இறுதி ஒன்று நூலின் உட்பொருளைக் குறிக்கும் சிறப்புப் பொருளாகவு மிருத்தலின் முன்னவற்றைப் பொதுப்பாயிரமெனவும் பின்னின்ற அறத்தைச் சிறப்புப்பாயிர மெனவும் பகரல் மிக்க பொருத்தமுடையதாகும். அறன் வலியுறுத்தலிலுள்ள பத்துக் குறட்பாக்களையும் நுணுகி நோக்குவோர்க்கு இது நன்கு விளங்கும்.

இத்தகைய சிறப்புப்பாயிரத்தைப் பெற்றுத் தெய்வத் தன்மை வாய்ந்த திருக்குறள் அறம், பொருள், இன்பமாகிய முப்பாலையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. இவற்றுள் எப்பால் சிறந்தது எனக் காண்பாம். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பொதுவாக அறம் எனவே பகரப்படும். இவ்வுண்மையை,

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு"

"அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில"

என்பவற்றால் அறியலாம்.

அன்றியும் அறத்திற்குப் பலபொருள்களிருப்பினும், நன்னெறி என ஒரு சிறந்த பொருளுண்டு. நன்னெறியில் ஈட்டிய செல்வமும், துய்த்த இன்பமுமே பயன்படுவனவாகும். இக் கோட்பாடுகளை நுணுகி நோக்குங்கால், நம் தெய்வப்புலவர் திருவாய்மலர்ந்தருளிய முப்பால்களில் பொருளின்பங்களைக் காட்டினும் அறமே சிறந்ததெனவும், மேற்கூறிய இரண்டும் அறத்தில் அடங்குமெனவும் தெள்ளிதின் புலப்படவில்லையா? நிற்க,

அத்துணைச் சிறந்த அவ்வறப்பாலில் இல்லறவியல் துறவறவியல் என இரண்டு இயல்கள் அமைந்துள்ளன. இவை இரண்டினும் எது சிறப்புடையது என நோக்குவாம்:

"இல்லறமல்லது நல்லறமன்று"

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்"

"ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின்"

என்னும் திருவாக்குகளால் துறவறத்தைக்காட்டினும் இல்லறமே மேன்மையுற்றதெனத் தெள்ளிதின் புலப்படும். இது திருக்குறளை ஓதிய ஒவ்வொருவரும் நனகு உணர்ந்ததே.

ஒரு பொருளைச் சிறப்பித்துக்கூறும் பகுதிகள் பல வாயினும் அவற்றுள் சிலவே அதன் உண்மைத்தத்துவத்தை நிலைபெறச்செய்யும். அம்முறையில் இல்லற இயலில் இயம்பியுள்ள இருபது அதிகாரங்களில் அதன் உண்மைக்கொள்கையை நிலைநாட்டுவன யாவை எனக் காணுதல்வேண்டும். அவையே இல்லறத்திற்கு உயிர்நிலைகளாகும். மற்ற அதிகாரங்கள் யாவும் அவற்றை நன்கு விளக்க எழுந்தனவே.

இதனால் திருக்குறளின் முப்பாலினும் அறத்துப்பாலே கண்ணியமுடையதெனவும், அதில் இல்லறவியலே மேன்மை யுற்றதெனவும், அவ்வில்லறவியலினும் சில அதிகாரங்களே குறளுக் குயிர்நிலையெனவும் உணர்ந்தாம். இனி அவ்வுயிர் நிலை அதிகாரங்கள் யாவை? அவற்றுள் உயிருக்குயிராய் ஒளிரும் அதிகாரம் எது? என அறிய முற்படல் வேண்டும்.

மேற்கூறிய உயிர்நிலை அதிகாரங்கள் சிலவற்றுள், ஒன்று காரியங்கள் நடைபெறவேண்டிய முறையைக் கூறுவது. மற்றொன்று முறையோடு செய்யும் அக்காரியங்களை அழிய விடாமல் தன் கல்வியறிவினால் மேன்மேலும் பெருகச்செய்து நிலைநிறுத்தி அக்காரியத்தைப்பயன்பெறச் செய்வது. இன்னொன்று, செயல்கள் முறையாக நடைபெறுதற்குத் துணை புரிதல் மாத்திரமேயன்றி நற்காரியங்களை நிலைநிறுத்தும் முதற் கருவியைத் தக்க முறையில் உருப்படுத்தித் தன் நற்குண நற்செயல்களினால் அவற்றிற்கு மங்கல மூட்டவல்லது. இவை எவை எனவும் இவற்றுள் சிறந்தது எது எனவும் நீங்கள் ஒருவாறு யூகித்திருக்கலாம். அவை இல்வாழ்க்கை, மக்கட் பேறு, வாழ்க்கைத்துணைநலம் ஆகிய மூன்றேயாம்.

இவையே இல்லறத்திற்கு உயிர்நிலைகளாகும். ஆயினும் இவைமூன்றிற்கும் உள்ளொளியாய், உயிர்க்குயிராய் நின்று மிளிர்வது ஒன்றுளது. அதுவே நடுநிலைத் தீவகம்போன்று இரண்டிற்கும் இடையே நின்று இரண்டையும் பண்புறச் செய் கிறது. இன்னும் மற்ற பொருள், இன்பம் முதலியவற்றை ஒளி பெறச் செய்கின்றதும் அஃதே. அதைத்தான் வாழ்க்கைத் துணை நலம் எனக்கூறுகின்றோம்.

இதுகாறும் கூறியவாற்றான் திருக்குறளுக்கு உயிர்க்குயி ராய் மிளிர்வது வாழ்க்கைத்துணைநலம் எனத் தெளிந்தாம். இங்ஙனம் ஒளிரும் வாழ்க்கைத்துணை நலத்தில் நம் மாதானு பங்கியார் யாரைப்பற்றிப் பேசுகின்றனர், யாருடைய பண்பு அதில் தவழுகின்றது என நோக்கின், முன் இயம்பிய சிறப்பு கள் பலவும் வாய்க்கப்பெற்ற நம் பெண்மணிகளின் தூய தன்மையையே அவர் அதில் இயம்புகின்றனர் என்றும், அவர்தம் சீரிய நல்லியல்புகளே அதில் உருக்கொண்டெழுந்து ஒளிருகின்றனவென்றும் யாவரும் நன்குணர்வர். இவற்றை மறுக்க ஒருவராலும் இயலாது. இங்ஙனம் தெய்வப்புலவர் மனத்துலையில் பெருமதிப்போடு தூக்கப்பட்ட நம் பெண்ணு லகம் இப்போது என்ன நிலையில் உள்ளது என்பதை ஊன்றி நோக்கின் எவரேனும் வருந்தாமலிருக்க முடியுமா!

ஒருவர் வன்மையறியாது அவர்மாட்டு ஒரு பொறுப்பைச் சுமத்த அறிவற்றவரும் முன்வருவதில்லை. வரினும் அக்காரியம் பயன்படுதலுமில்லை. அங்ஙனமாயின் தெய்வப் புலமை வாய்ந்த நம் சான்றோரா வன்மையறியாது உயர் பொறுப்பை ஒருவர் மேலேற்றுவர்? ஒருகாலும் அங்ஙனம் செய்யார் என்பது திண்ணம்.

இம்முறையில் பெண்கள்மாட்டு என்ன பொறுப்புகளை இப்பெரியார் ஏற்றியுள்ளார் என நோக்குவாம்:—

இல்வாழ்க்கையை நடாத்தும் ஓர் ஆண்மகனுக்குத் துணையாய் அமையும் பெண்மணிக்கு வாழ்க்கைத்துணை என்று பேரிடலே போதியதாகும். ஆனால் செந்நாப் போதாரோ அங்ஙனம் பேரிடாது "வாழ்க்கைத்துணை நலம்" எனப் பேரமைத்துள்ளார். இதனால் இல்லறத் துணைவியாகிய பெண்மணிக்கு நற்குண நற்செய்கைகளும் பொருந்தியிருத்தல் வேண்டும் என்பது பெரியார் கருத்து எனப் புலப்படவில்லையா? இச்சீரிய குணச்செயல்களே உயரிய பொறுப்புகளை ஏற்று உண்மைவழியில் நடக்க இடந்தருமல்லவா? இப் பொறுப்பினிடத்திலேயே இல்லறத்திற்கு வேண்டிய யாவும் அடங்கியிருக்கின்றன எனக் கூறல் மிகையாகாது. ஈண்டு

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்னும் குறட்பாக்களை நோக்குக.

இல்லறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகளை மேற்கொள்ளல், வரவிற்குத் தக்க வாழ்க்கையை நடாத்தல், உண்டி, உடைகளாலும், பெண்மைக்குரிய சீரிய குணங்களாலும் தன்னைக் காத்துக்கொள்ளல், தன்னைக்கொண்ட கணவர்கொடியராயினும் தன் பொறுமையினாலும், நற்குணங்களினாலும் சான்றோர் புகழிற்கும், தெய்வ அருளிற்கும் பாத்திர ராமாறு அவரைத் திருத்திக் காத்தல், குடும்பத்திற்குள்ள புகழை மேன்மேலும் வளர்த்தல், தன் கடமைகளில் மறதியும், சோர்வும் இல்லாதிருத்தல் முதலிய சீரிய பொறுப்புகளை நம் பெரியார் அருங்குண அரிவையர்மேல் ஏற்றியுள்ளார்; இத்தகைய பெண்மணியும், அவள் நற்பண்புகளுமே இல்லறத்திற்கு மங்கலப்பொருள்கள் என்கின்றார். இக்கடின பாரங்களைத் தெய்வப்புலவர் நம் பெண்மணிகளின்மேல் ஏற்றியதற்குக் காரணம் என்னை? மங்கையர் அவற்றைத் தாங்கும்

பெருந்தகையாளர் என்னும் கருத்தினாலன்றோ! இஃதன்றோ நம் தமிழ்நாடும், நம் பெண்மணிகளும் செய்த தவப்பேறு! இது நிற்க.

தாம் ஈன்ற அருமை மக்களின் சான்றாண்மையை அறியும் கல்வியும், மதிநுட்பமும் தாயுலகத்திற்கில்லை, அறிவுடையோர் கூற்றே அவரைத் தட்டி எழுப்பித் தம் மக்கள் பெருமையை உணரச்செய்கின்றது என்பது பலர் கருத்து. இதற்கு

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்னும் செந்நாப்போதார் வாக்கையும் சான்று காட்டுகின்றனர்.

ஊன்றி நோக்கவேண்டிய பொருள்களுள் இஃதும் ஒன்று. அறிவுநூல் பல கற்று நுண்ணறிவு வாய்ந்த மதியூகிகளும், தம்மைப்பற்றிய சீர்மைகளையோ அன்றித் தமக்கு அன்புடையாரைப்பற்றிய நன்மைகளையோ தாமே உய்த்துணருங்காலத்தைக் காட்டினும் சான்றோர் எடுத்தியம்புங்கால் மிக்க இன்பமடைவர் என்பது உலகறிந்த உண்மை. இக்கருத்தை ஏன் தாய்மாரிடங் கொள்ளுதல் கூடாது? அன்றியும் சிலர் நினைக்கிறபடி பண்டைத் தாய்மார் கல்வியறிவற்றவர்களாயிருப்பின் தம்மக்களைக்குறித்துப் பெரியோர் கூறும் புகழ்மொழிகளின் இயல்பையும், அவற்றின் மேம்பாட்டையும் உள்ளபடி உணர்தல் யாங்ஙனம்! அவ்வுண்மை உணர்வின்மையால் அவர்களுக்கு இன்பம் உண்டாதல்தான் எவ்வாறு? தம்மக்களின் சான்றாண்மையை அறிவுடையோர் வாயிலாகக் கேட்ட தாய் உவக்கின்றனள் எனப்பகர்ந்த செந்நாப்போதார் வாக்கே பெண்களை உயர்நிலையில், அறிவு ஆசனத்தில் நிறுத்தியுள்ளது என்பதைத் தெரிவிக்கவில்லையா?

நம் தெய்வப்புலவர், நம் அருமை மங்கையர்க்கு எத்தகைய மதிப்பை யீந்தனர்; எம்முறையில் அவர்களை அளந்து காட்டினர்; அவர்கள்மாட்டு எவ்வித பொறுப்புகளை ஏற்றி உலகநடையைச் சீர்மைபடுத்தினர் என்பதற்குச் சிற்சில குறிப்புகளை மாத்திரம் ஈண்டு எடுத்துக்காட்டினேம். இன்னணமாகிய சான்றுகள் திருக்குறளில் பல உண்டு. அவை யாவையும் இயம்ப இக்குறித்தகாலம் இடந்தராதென்பது யாவரும் நன்குணர்ந்ததே. இங்ஙனம் திருவள்ளுவரும் பழந் தமிழ்நாடும் உச்சிமேல்வைத்துப் போற்றிய பெண்ணணங்குகளைத் தற்காலம் என்ன நிலையில் வைத்துள்ளோம்! அதனால் உலகம் அடையும் நஷ்டம் என்ன!

அவர்களிடம் தோன்றும் பிள்ளைகள் அடையும் சீர்கேடுகள் யாவை! என்பன அறிவுடையோர்க்குப் புலனுகாமலிரா. எங்ஙனமேனும் உலகம் இவற்றை உணர்ந்து பெண்களின் நிலையை உயர்த்த முயலின் நம் நாடு முன்னேற்ற நாடுகளில் ஒன்றாகத் திகழும் என்பது திண்ணம்.

இதுகாறும் கூறியவற்றால் திருவள்ளுவர், பல மதத்தினரும், பல தேசத்தினரும் உச்சிமேல்வைத்துக் கொண்டாடத் தக்கதும், அழிவற்றதும், உலகநடைக்கேற்ற அறநெறிகளை உள்ளடக்கிக் கொண்டிருப்பதுமான சிறந்த நூல் ஒன்றை இயற்றித் தந்தவரென்றும், கூறியவண்ணம் செய்யுங்கோமான் என்றும், பலருக்கும் எளிதில் அமையாத பொறுமையையும், தன்னலம்பாராத் தியாகத்தையும் பெற்றிலங்குகின்றவர் மங்கையர் என்றும், இக்குணங்கள் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ளனவென்றும், பெண்களின் பெருந்தன்மையினாலேயே உலகம் நடைபெறுகின்றதென்றும், பொருட்பாலும், இன்பப்பாலும் அறத்துப்பாலில் அடங்கியுள்ளதுமன்றி அவற்றினும் சிறப்புற்று நிற்கிறதென்றும், அவ்வறத்துப்பாலில் உள்ள இல்லறம், துறவறங்களில் இல்லறமே சீரியதென்றும், அவ்வில்லற வியலிலும் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு ஆகிய மூன்று அதிகாரங்களே உயிர்நிலையில் உள்ளன என்றும், அம்மூன்றிலும் வாழ்க்கைத் துணைநலமே உயிர்க்குயிராய், உள்ளொளியாய் விளங்குகின்றதென்றும், அதில் தெய்வப்புலவர் பெண்களின் மேல் சுமத்தியிருக்கும் சீரிய பொறுப்புகளின் தன்மைகள் இன்னவென்றும், இவற்றால் பெண்மணிகள் தெய்வப்புலவர் மதிக்கோலில் எத்துணைக் கனமுள்ள பொருளாகத் தூக்கப்பட்டார்கள் என்றும், அத்துணைப் பெண்ணுலகம் தற்காலத்தில் நன்னிலைமையை எவ்வாறுஇழந்திருக்கிறதென்றும், அவர்களை நல்வழிப்படுத்தின் உலகம் பல நன்மைகளையடையும் என்றும் என் புல்லறிவிற்கு எட்டியமாத்திரம் கூறி முடித்தனன்.

தொழில்நிலையத் தலைவர்:—“இதென்ன தொல்லை? காலையிலிருந்து மாலைவரையிலும் “இல்லை; இல்லை” என்று வேலை கேட்பவர்களுக்கு மறுமொழி சொல்வதற்கே ஓர் ஆள்வேண்டும்போலே இருக்கிறதே!”

வேலை தேடிவந்தவர்:—“அந்த வேலைக்காவது என்னை எடுத்துக்கொண்டால் போதும்.”

*அன்பும் மகவும்

[திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்கள் M.A.]

(தாவுகோச்சகக்கலிப்பா)

ஏனென்னைப் பிடித்திழுத் திறுகவர மணைக்கின்றாய்?
ஏனென்னைப் பரிந்தணைத்தே எக்கழுத்தம் கொள்ளுகிறாய்?
நான்விரும்புஞ் சில்காலே நான்விரும்பப் படவேண்டும்;
நானுன்பால் 'விட்டி'டென நவில்கின்றேன் விட்டிலையேல்
நான்மிகவும் வெகுண்டிடநீ யாவாய்தான் காரணமே.'

ஆசிரியத்தாழிசை

என்றேயிப்படி யிளையதோர் குழவி
யன்பின் நீட்டிய கரத்தெதிர் மறுத்தே
அன்றொரு நாட்செய் அழுகையைக் கேட்டேன்.

ஆசிரியத்துறை

கருணைக் கடவுள்! கழிபே ரருளே!
அருள்க பொறுத்தே யரசே!
அருள்க பொறுத்தே; அறிந்தேன், நுமவே
கரமவை, யானம் மகவு.

---

* Translated from Francis Thompson's **Love and the Child**

'Why do you so clasp me,
And draw me to your knee?
Forsooth, you do but chafe me,
I pray you let me be:
I will but be loved now and then
When it liketh me!'

So I heard a young child,
A thwart child, a young child
Rebellious against love's arms,
Make its peevish cry.

To the tender God I turn:—
'Pardon, Love Most High!
For I think those arms were even Thine,
And that child even I!'

குலசைத்தமிழறிஞர் திரு. ச. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களின்

இலங்கைச்செலவும் விரிவுரைக் குறிப்பும்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி.

நமது கழக நிறைவேற்றற்கூட்ட உறுப்பினரும், குலசேகரபட்டினம் சித்தாந்தப்புலவரும் தமிழ் வித்துவானுமாகிய திருவாளர் ச. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள், இலங்கையிற் செய்த சுற்றுப்பயணத்தில், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பாய், 'சித்தாந்தத்தையும் தமிழையும்' பொருளாகக்கொண்டு சுவைகொளச் சொற்பொழிவாற்றி வந்த வரலாற்றின் குறிப்பு:—

1935-நவம்பரில் கொழும்பு சென்று 1936-செப்டம்பரில் 'திருநெல்வேலி' திரும்பினார்கள். கொழும்பில் (The Kumaran Press) 'குமரன்' அழுத்தகத்தின் உரியாரும், 'தனலெட்சுமி' எனப் பெயரிட்டுப் பெருவணிகஞ்செய்து வருவாரும், தமிழ்ப்பற்று, அடியார்ப் பற்று, சைவப்பற்று முதலியவற்றில் ஆர்வமுற்றவருமாகிய ஆழ்வார்திருநகரி திரு. அன்புடையாரவர்களின் நன்முயற்சியால், கொழும்பு ஜிந்தும் பிட்டித்தெரு ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோவில் மண்டபத்தில் 'கந்தபுராணமும் வேள்வியும்' என்னும் பொருள்பற்றி அரியதொரு சொற்பொழிவு நடைபெற்றது. அக்கூட்டத்துக்கு வந்திருந்த யாழ்ப்பாணப் பெரியார் திரு கைலாச பிள்ளை அவர்கள், இச்சொற்பொழிவில் மிகவும் ஈடுபட்டவர்களாய், இந்தியத்தாய் நாட்டிற் பற்றுமீதூர்ந்து, விவேகானந்த சபையின் பேரவையில் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

கொழும்பு விவேகானந்த சபையில் 'பாற்கலமேற்பூனை' என்னும் அடியைப் பொருளாகக்கொண்டும், திரு. இராமநாதர் அவர்களின் சிவன்கோவிலில் 'மாசிவராத்திரி'யன்று 'ஆலய வழிபாடு' என்னும் பொருள்பற்றியும், பல்லோர் குழுமிய அன்பர் கூட்டத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்

கொழும்பு (Zahira college) சகிராக்கலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதரும், இலங்கை தமிழ்ப்பாடப் புத்தகக்கமிட்டியினும், தேர்வுக்கூட்டத்திலும் ஓர் உறுப்பினராய்த் திகழுபவருமாகிய திருவாளர் மு. நல்லதம்பி அவர்களின் நட்புரிமை பெற்றும், அவர்கள் வாயிலாய், திருவாளர் முதலியார்

J. P. செ. இராசநாயகம் (Retired C. C. S. Officer) அவர்கள் பேரன்பிற்கும் உரியரானார்கள். திரு. முதலியாரவர்கள் ஆங்கிலப்பெரும்புலமையுடன், தமிழிலும் சிங்களத்திலும் நிறைந்த புலமைவாய்ந்தவர்கள். மேலும், இவர்கள் பன்னூல்களின் ஆசிரியராயும், ஆராய்ச்சித்திறன்மிக்கு விளங்குபவர்களாயும் உள்ள பெரியாராவர்.

அன்னவர்கள், நமது பிள்ளையவர்களின் இனிய சொற்பொழிவிலும், பணிந்த நல் இயற்கையிலும், விரிந்த புலமையிலும் ஈர்ப்புண்டு கொழும்பில் (Radio) ஒலிபரப்புங்கருவியில் மூன்று சொற்பொழிவுகள் மூன்று திங்கள் "திருநாவுக்கரசர்" 'இனியார்', 'தமிழர்' என்னும் பொருள்களைப்பற்றி முறையே பேசச்செய்து, இலங்கை முழுவதும் தமிழ்மணமும், சித்தாந்த மணமும் மிளிரச்செய்தார்கள். பின்னர், வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்திலும், கருவக்காட்டில் திருமதி லேடி அருணாசலத்தார் சைவமங்கையர்கட்கெனக் கூட்டிய ஒரு தனிக்கூட்டத்திலும் இரண்டு விரிவுரைகள் நிகழ்த்தச்செய்து மங்கையர்களைச் சைவப்பற்றில் திளைக்கச்செய்தார்கள்.

வெள்ளவத்தை 'சைவமங்கையர் கழகச்'சார்பில் நடத்தப்பெற்று வருகின்ற 'சைவமங்கையர் பெண் பாடசாலை' மாணவிகளுக்குத் திருவிளையாடலிலுள்ள 'மாமனாக வந்து வழக்குரைத்த' படலத்தை நாடகவடிவில் எழுதிப்பயிற்றுவிக்கவேண்டிக்கொண்டதற்கு இணங்கி ஷை பிள்ளையவர்கள் இரண்டு மாதங்கள் தொடர்பாய் ஷை மாணவிகளை நடித்துக்காட்டுதற்குரிய முறையில் பயிற்றுவித்தார்கள். அப்பயிற்சியின் பெரும்பயன் கண்டு காணிக்கையாக சைவமங்கையர் கழகத்தார், பொருளுதவ முன் வந்தமையும், ஆசிரியரவர்கள் அதனை வாங்கமறுத்தமையும் கேட்டுமிக மகிழ்ந்தேம். ஆயினும் மாணவிகள் மனமுவந்து அளிக்கும் நற்பொருளை ஆசிரியரவர்கள் ஏற்று அறவழியிற் பயன்படுத்தலாமன்றோ? அப்படியிருந்தும் அவர்கள் அதனை ஏற்க மறுத்தது சைவநற்பணிக்குப் பொருள் பெறுதலாகாதென்று எண்ணினார்கள்போலும். 'முனிவரும் மன்னரும் முன்னுவபொன்னின் முடியும்' என்ற பெரியார் திருமொழியை எண்ணியேனும் அந்நற்பொருளைப் பெற்றுச் சைவஅறப்பணிக்கே அதனைப் பயன்படுத்தியிருத்தலாகாதா? இச்செயலானது, சைவசித்தாந்தத்தையும் தமிழையும் நூல்வாயிலாகவும் விரிவுரைவாயிலாகவும் புத்துயிரளித்துப்போற்றிவரும் திருநெல்வேலித் தென்னிந்தியசைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் நற்பெருந்தொண்டிற்கு மாறுமென்று எண்ணி மறுத்தனரோ அறியேன். இது நிற்க.

பின்னர் (Galle) காலி யென்னும் துறைமுகப்பட்டினத்தில், நாட்டுக்கோட்டைத் தனவணிகர்கள் நிறுவியுள்ள திருநாவுக்கரசர் வாசகசாலையார் அழைப்பிற்கிணங்கி இவர்கள் மும்முறை ஆங்குச்சென்று சொற்பொழிவுகள் பல ஆற்றியும் இருமுறை தலைமை தாங்கிச் சிறப்புவிழாக்களை இனிது நடாத்தியும் அங்குள்ளாரை இன்பக்கடலில் மூழ்குவித்தனர். மேற்படி வாசகசாலை நிறுவியபெரியாரும், நல்லவருமான (தூத்துக்குடி) திருவாளர் ச. முருகையா பிள்ளை அவர்கள் காலஞ்சென்றமைக்காக அவர்கள்மீது இரங்கற்பாக்கள் இயற்றியுதவினார்கள். அவ்வாசகசாலையில் நடந்த இரங்கற்கூட்டத்தன்று அங்குள்ள தமிழன்பர்கள் அனைவரும் கூடி, காலஞ்சென்ற பிள்ளையவர்களின் அருஞ்செயல்களை யெல்லாம் நிரல்படக்கோத்தமைத்த இரங்கற்பாக்களை ஆசிரியரவர்கள் எடுத்துமொழியக் கேட்டு, உளமுருகி அன்னாரின் பிரிவுக்கு வருந்தி அவ்வுயிர் மறுமையுலகில் நல்வாழ்வு பெறுமாறு ஒருங்கே வழுத்திச் சிறிது நேரம் மனஅமைதியுடனின்றார்கள்.

பின்னர், திருவாளர் முதலியார் செ. இராசநாயகம் J.P. அவர்களின் அழைப்பிற்கிணங்கி, தனித்தமிழ் நாடாம் ஈழநாடு (யாழ்ப்பாணம்) சென்று, அங்கு வண்ணார் பண்ணையிலுள்ள 'கலாநிலையத்தில்' புலவர் பெருமக்கள் நிறைந்த பேரவையில் இரண்டு சொற்பொழிவுகளும், யாழ்ப்பாணம், இந்து கலாசாலையில் ஒரு சொற்பொழிவும் நிகழ்த்தினார்கள்.

பின்னர், வேலணை யென்னுந் தீவில் உயிர்ப்பலியின்றி விழாக்கள் நடைபெற்றுவரும் 'முத்துமாரியம்மன் கோவிலின்' முன்மண்டபத்தில், 'கோயில் வழிபாடு' என்னும் பொருளைப் பற்றி மூன்றுமணிநேரம் கேட்டார்ப் பிணிக்குந் தகைய ஓர் அரியசொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

யாழ்ப்பாணத்தில் 'கலாநிலைய' ஆசிரியராக விளங்கும் உயர்திரு. சுவாமி உருத்திர கோடீஸ்வரர், திரு. முதலியார் திருச்சிற்றம்பலமுடையார், திரு. பண்டிதர் மயில்வாகனனார், திரு. பண்டிதர் கதிரேச பிள்ளை முதலிய அன்பர்கள் பிள்ளையவர்கள்பாற் காட்டிய அன்பும், நல்வரவேற்பும் பெரிதும் போற்றுதற் குரியதேயாம்.

கொழும்பு, ஜிந்தும்பட்டித்தெரு ஸ்ரீசுப்பிரமணியசாமி கோவிலில் கந்தபுராணம்படித்து உரைநிகழ்த்திவந்த ஆசிரியர் திரு. முருகேசபிள்ளை அவர்கள் வேண்டுகோட்கிணங்கி, இவர்கள் இடைப்பட்ட சிற்சிலநாட்களில் மேற்படிபுராணத்திற்குத் தக்கவாறு உரைநிகழ்த்தினார்கள். கும்பெனித்தெருவில் ஸ்ரீ கந்தசாமி கோவிலில் திருவாளர் அத்தி அருணசலத்தார்

(Store-keeper, The Colombo Commercial Company Ltd.) வேண்டுகோட்கிணங்கி, "புராணங்களின் பெருமையும் நம்மவர் கடமையும்," என்னும் பொருள்பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தி அவையாரை மனமுருகச் செய்தார்கள்.

திருவாளர் முதலியார் செ. இராசநாயகம் J. P., அவர்கள், தாம் இயற்றிய 'Ancient Jaffna' "யாழ்ப்பாணம் ஆங்கிலேயர் காலம்" என்ற நூல்களையும்; தமிழ்ப் பெரும் புலவர், யாழ்ப்பாணம் திருவாளர் ந. வை செல்லையா அவர்கள், தாம் இயற்றிய 'கதிரை நான்மணி மாலை,' 'திருமால் மருகன்,' முதலிய நூல்களையும்; யாழ்ப்பாணம் திருவாளர் முதலியார் திருச்சிற்றம்பலமுடையார், தாம் இயற்றிய 'பாக சாத்திரம்' என்ற நூலையும்; யாழ்ப்பாணம், பழந்தமிழ்ப் புலவர் திரு பொன்னம்பலத்தாரவர்கள், தாம் இயற்றிய "அருணாசல மான்மியம்" என்னும் நூலையும், நம்முடைய பிள்ளையவர்களுக்குத் தங்களன்பின் நினைவுப்பரிசிலாக வழங்கியிருக்கின்றார்கள். இதனையும் அறிந்து மிக மகிழ்கின்றோம்.

தமிழ்ப்புலவர் திருவாளர். ந. வை. செல்லையா அவர்கள் திரு. முதலியார், செ. இராசநாயகம் J.P. அவர்களின் தூண்டுதலானும் பொருளுதவியானும் வெளியிட்ட 'கதிரை நான் மணிமாலையை' கதிர்காமத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் திருமுருகன் திருமுன்னிலையில் ஆடிவேல்விழாவின் போது அரங்கேற்றுங் காலத்தில், நம் பிள்ளையவர்களே, 'கேட்போர் குழு'வுக்குத் தலைவராய் விளங்கினமை கேட்டுக் களிப்புறுகின்றோம்.

நம் பிள்ளையவர்களை இந்திய நாட்டினின்று இலங்கை போந்து வாணிகம் நடத்திவரும் சைவமக்கள் பலரும் ஆதரித்ததோடு, நாட்டுக்கோட்டைத் தனவணிகப் பெருமக்களும் ஆதரிக்க முன்வந்ததும் பெருங்களிப்பினைத் தந்தது. பழந்தமிழ் மக்களாய் விளங்கும் யாழ்ப்பாணச் சைவப்பெருமக்கள் தாங்கள் தமிழினுஞ் சைவத்திலும் வைத்திருக்கும் பெரும் பற்றின் அறிகுறியாக நம் புலவர்களை அன்புடன் வரவேற்றுப் பேரவை கூட்டிப் பேருரை கேட்டுச் சிறப்புச் செய்தமை என்றும் மறக்குந் தகையதன்று.

நம் பிள்ளையவர்கள் இலங்கை வந்து, புரிந்த அறத்தொண்டுகளில், வெள்ளவத்தை 'சைவ மங்கையர் பெண் பாடசாலை' மாணவிகட்கு, இயற்றிய, திருவிளையாடலிலுள்ள 'மாமனாக வந்து வழக்குரைத்த' வரலாறென்னும் இனியதொரு நாடக நூலைக் கண்ணுற்ற, யாழ்ப்பாணப் பெரும்புலவர்

திருவாளர். கா. முருகேச பிள்ளை அவர்கள் மகிழ்ந்து இயற்றியுள்ள அணிந்துரை வெண்பாவைக், கீழ்க்குறித்திருக்கின்றோம்:-

'மாமனும் வந்து வழக்குரைத்த மான்மியத்தை
நாமனு மின்னிசைசேர் நாடகமாய்த்—தாமனு
முத்துக் குமார சுவாமியெனு மூதறிவோன்
பத்தியொடு செய்தளித்தான் பார்''

இதனைப் போல அறிஞர்பலர் புகழ்ந்து எழுதிய அணிந்துரைகளும், பாக்களும் பலப்பல வுள்ளன.

நம் பிள்ளையவர்கள் தமது சொந்தச் செலவில் இலங்கை வந்து, நம் தமிழ் நாட்டையும், தமிழ் மொழியையும், சைவ சமயத்தையும், சிறப்பாகச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தொண்டுகளையும் நிறைவேற்றிப் பெருமைப் படுத்தியதற்காகவும், உலகப் பொதுச் சமயமாம் சைவ சமயத்துக்கும் தாய்மொழியாந் தமிழ்மொழிக்கும் இதுபோல் என்றும் பெருந்தொண்டு ஆற்றிவருமாறு எல்லாம் வல்ல இறைவன் அவர்கட்கு நீண்ட பெருவாழ்வையும் நிறைபெருஞ் செல்வத்தையும் குறைவிலா ஊக்கத்தையும் அருள்வாராக.

—K. S. மணியம், கொழும்பு.

"குவீன் மேரி"

[இங்கிலாந்தின் இணையிலாக் கப்பல்]

நீராவியால் இயக்கமுற்று முதன்முதலாகக் கடலில் இயங்கிய கப்பல் "கிளேர்மாண்டு" என்பதாம். அஃது அமெரிக்க நாட்டைச்சேர்ந்த இராபர்ட் புல்டன் என்பாரின் கப்பலாகும். 1807-ம் ஆண்டில் அஃது அமெரிக்கநாட்டு ஹட்சன் ஆற்றின் மீது உருப்பெற் றியங்கியது. அக்காலத்தார் அதனை உலக விந்தையி லொன்றாகவே கருதினார்கள். மணியொன்றிற்கு ஐந்துகல் விழுக்காடு அது நீர்மேற் சென்றது. ஏறக்குறைய அதேகாலத்தில் இங்கிலாந்திலுள்ள தேம்ஸ் ஆற்றின் மீது "மார்கரி" என்ற மற்றொரு நீராவிக்கப்பலும் இயங்குவதாயிற்று. இவையிரண்டும் மரத்தினாற் கட்டப்பட்டு நீராவியா லியங்கிய கப்பல்களே.

1807 முதல் 1845-ஆம் ஆண்டு வரையில் மரத்தாலியன்ற கப்பல்களே இயங்கிவந்தன. 1845 முதல்தான் மரத்தை விடுத்து இரும்பினாலும் எஃகினாலுமியன்ற கப்பல்கள் தோன்றுவவாயின. இது நிற்க.

இங்கிலாந்திலிருந்து நேரே அத்லாந்திக் கடலைக் கடந்து அமெரிக்கநாட்டைச் சென்றடைதல் என்பது முடியாது என்றே ஒரு காலத்திற் கருதப்பட்டு வந்தது. நீராவிக்கப்பலொன்றில் அவ்வாறு அத்லாந்திக் கடலைக்கடந்து செல்வதைவிட மண்ணிலிருந்து நேரே மதி மண்டலத்திற்குச்சென்று வருவது எளிதாகும் என்றுகூடச் சிலர் கூறிவந்ததுண்டு. எனினும், 1838-ல் இங்கிலாந்திலுள்ள லிவர்பூல் என்னும் துறைமுகப்பட்டினத்திலிருந்து "ஸீரியஸ்" என்ற ஒரு கப்பலும், பிரிஸ்டல் பட்டினத்திலிருந்து "கிரேட் வெஸ்டெர்ன்" என்ற மற்றொரு கப்பலும் நீராவியின் உதவியால் இயக்கமுற்று, அத்லாந்திக்கடலைக் கடந்து அமெரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டினத்தைச் சென்றடையும் நோக்கத்துடன் புறப்பட்டன. புறப்பட்ட அவ்விரண்டும் நற்காலமாக இடையூறேதுமின்றி, முறையே 18½ நாட்களிலும், 15 நாட்களிலும் தங்கள் பயணத்தை முடித்து வெற்றிபெற்றன. "ஸீரியஸ்" மணிக்கு ஏறக்குறைய எழுகல் விழுக்காடு 320 குதிரை வேகத்துடன் சென்றது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அதுமுதல் பல கப்பல்கள் அவ்வழி கடந்து செல்வவாயின. 1910ஆம் ஆண்டில், ஆங்கிலக் கப்பலான "மெஅரிட்டானிபா" அத்லாந்திக்கடலை 4 நாள் 10 மணி 1 நிமிஷத்திற்கடந்து நியூயார்க்கை அடைந்தது. அதனால், விரைந்த செலவில் அத்லாந்திக்கடல் கடப்பவர்க் களிப்பதற்கெனக் குறித்து வைக்கபபட்டிருந்த "நீலநாடா" (Blue Riband) என்னும் பரிசை அது முதன்முதல்பெற்றது. 1932-ம் ஆண்டு வரையில் அச்சிறப்பை அக்கப்பலே வகித்திருந்தது. 1933-ஆம் ஆண்டில் ஜெர்மனியைச்சேர்ந்த "பிரீமன்" என்னும் நீராவிக்கப்பல் பயணத்தை 4 நாள் 1 மணி 1 நிமிஷத்தில், அஃதாவது 9 மணிநேரங் குறைவாகச் செய்துமுடித்து, "நீலநாடா" அளிக்கப்பெற்றது.

இஃதிவ்வாறாக 1930-ஆம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள "குனர்டு" கம்பெனியார் மலைபோன்றதொரு மாபெருங் கப்பலுக்கு அடித்தளம் கட்டுவிப்பாராயினர். எனினும் தொடங்கிய அவ்வேலை பொருள் முட்டுப்பாட்டால் அவ்வாண்டுடன் நின்றுவிடுவதாயிற்று.

1932-ஆம் ஆண்டில் பிரஞ்சு அரசியலார் "நார்மண்டி" என்ற பெரிய கப்பலொன்றைக் கட்டிமுடித்தார்கள். அதன் மொத்த எடை 75,000 டன்கள். மேலே குறித்த "மெஅரிட்டானியா" என்ற கப்பலைவிட 2½ மடங்கு நிறை மிகுதியுடையது "நார்மண்டி". அதன் நீளம் 1020 அடி. அகலம் 117

அடி. இக்கப்பலே நீலநாடாவைப்பெற்றுச் சிறப்புற்று விளங்கி வந்தது.

1930-ஆம் ஆண்டில் வேலையை நிறுத்தியிருந்த குனார்டு கம்பெனியார் மீண்டும் 1934-ல் அரசாங்கத்தாரின் உதவி கொண்டு வேலையைத் தொடங்கினர். இரண்டு ஆண்டுகளில் கப்பல் கட்டி முடிக்கப்பட்டது. அதன் பெருமைக்கேற்ற வாறு "குவீன் மேரி" என்ற பெயர் அதற்குச் சூட்டப் பட்டது. அதன் சிறப்பையும் பெருமையையுந் தெரிக்கவல்ல அமைப்புக் குறிப்புக்கள் சிலவற்றைக் கீழே தருவாம்:—

கப்பலின் நீளம் 1019 அடி 6 அங்குலம், அகலம் 118 அடி, மொத்த எடை 80,774 டன்கள். கப்பல் அலுவலாளர்களின் மொத்தத்தொகை 1101. 2139 மக்கள் அக்கப்பலிற் பயணஞ் செய்வதற்குரிய வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நீர்மட்டத்திற்கு மேல் 9 தட்டுகள் அக்கப்பலுக்குண்டு. கப்பலின் பெரிய சுக்கானின் நிறைமட்டும் 150 டன்கள். மணிக்கு 40 கல் விழுக்காடு செல்வதற்கான 2,00,000 குதிரை வேகங் கொண்டது. கப்பலின் பெரிய புகைக்கூண்டின் வாய் வழி, உலகிலேயே பெரிய புகைவண்டிப் பொறியாகக் கருதப் படும் "ராயல் ஸ்காட்" என்ற பொறிகள் மூன்று ஒரேகாலத் தில் ஒருங்கே உட்செல்ல முடியும். அப்புகைக் கூண்டின் உய ரம் கப்பல் மேற்றட்டிலிருந்து 70 அடி. கப்பற் செலுத்திகள் (Propeller) ஒவ்வொன்றின் எடை 35 டன்கள். நீராவியுண்டு பண்ணுவதற்கென 27 கொதிகலன்கள் (Boilers) உள்ளே அமைக்கப்பட்டுள்ளன. மேற்றட்டின் அகலம் மட்டும் 70 அடி. நீளம் 96 அடி. நங்கூரத்தை ஈர்க்கும் சங்கிலியின் கணு ஒவ்வொன்றின் நீளம் 2 அடி.

இனி, கப்பலில் தொலைபேசி நிலையம், நாடக அரங்கம், பேசும் படஅரங்கு, 1700 நூல்கள் கொண்ட நூல்நிலையம், குழந்தைகள் விளையாடும் தனியறை, குளிக்கும் குளங்கள் இரண்டு, ஒரு செய்தித்தாள் நிலையம், கடைத்தெரு முதலி யவை அமைக்கப்பட்டுள்ளன.

இக்கப்பலைக் கரையி லணைப்பதற்கென 18,000,000 பவுன் செலவுசெய்து நியூயார்க்கில் ஒரு துறையும் 2,000,000 பவுன் செலவு செய்து சவுதாம்ப்டனில் ஒரு துறையுங் கட் டப்பட்டன.

தெரிவரும் பெருமையும் திண்மையும், அளக்கலாகா வள மும் பொருளும், தோற்றமும் கொண்டு இலங்கும் இம்மா பெருங் கப்பல் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்

பும் பயணப்போட்டியில் சென்ற ஆண்டு வெற்றிகொண்டு நீல நாடா அளிக்கப்பெற்றது.

கப்பற் கட்டடச் சிறப்பிற்கும், பொறியமைக்கும் பெருமைக்கும் இன்றுகாறும் இக்கப்பலே மேன்மையுந் தலைமையும் பெற்று விளங்கிவருகிறது.

—காழி சிவ. கண்ணுசாமி

மதிப்புரை :

கிறிஸ்தவமும் தமிழும்

இந்நூல் மயிலை திரு சீனி. வேங்கடசாமி அவர்களால் இயற்றப்பெற்றது. வீரமாமுனிவர், சீகன் பால்கு ஐயர், டாக்டர் போப், டாக்டர் கால்டுவேல், முதலிய கிறித்தவப்பெரியார்கள் தமிழ்மொழிக்குச்செய்த அரியபெரிய உதவிகளை எடுத்து நுவல்வது இந்நூல். மேனாட்டினர் இந்தியாவுக்கு வந்த வரலாறும், தமிழில் உரைநடை ஏற்பட்டதன் வரலாறும், முதன் முதல் அச்சுப்புத்தகம் ஏற்பட்டதன் வரலாறும், தமிழ் மொழிக்கு நன்மைசெய்த மேனாட்டுப் பெரியார் வரலாறுகளும் இதன்கண் நன்கு விளக்கப்பெற்றிருக்கின்றன. இந்நூலைப் படிக்கிற தமிழ்மக்கள் தாம் தமிழ்மொழிக்கு இதுகாறும் என்ன செய்தோம் என்பதை நினைத்து நாணுவர் என்பதில் ஐயமில்லை. மேற்குறிப்பிட்ட பெரியார் உருவப்படங்களுடன் இதன் விலை அணா 12.

நமது கழகத்தில் கிடைக்கப்பெறும்.

சமஸ்கிருத சுய போதினி (முதற்பாகம்)


ஆசிரியரின்றித் தாமே சமஸ்கிருதத்தைச் சிறிதளவு கற்பதற்குத் துணை புரியும் இந்நூல். இதன்கண் பெயர்ச்சொற்கள் மர வகை, பறவை வகை, விலங்கு வகை முதலிய நூறு பாடங்களில் குறிக்கப்பெற்றிருக்கின்றன. மேலே அமர சுலோகங்களும், கீழே பதம்பிரித்துத் தாதுக்களைக் காட்டிப் பொருள் குறிக்கப்பெற்றிருக்கிறது. இதன் இரண்டாம் பாகம் விரைவில் வெளிவரும்.

இதன் விலை ரூபா 1.

கிடைக்குமிடம் :—

சென்னை ஆண்டாள் தனசேகர சாச்வதநிதி லிமிடெட், மானேஜர்,
109, சைனாபசார் ரோடு, சென்னை.

நமது கழகத்திலும் கிடைக்கப்பெறும்.



ஆப்ரஹாம் லிங்கன்

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] தாது—தை [பரல்-சு

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

திருக்குறுந்தொகை

திருச்சேறை

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெல் லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே.

பதவுரை:—

நெஞ்சமே—எனது நெஞ்சே

வேதம்—அருள்மறைகளிற் கூறப்பட்டிருக்கிற

மின்னு வார் சடை—ஒளிவீசும் நீண்ட சடைகளையுடைய

விழுப்பொருள்—மேலான பொருளும்

செந்நெல் ஆர் வயல்—செந்நெல் விளைகின்ற வயல்களாற் சூழப்பட்ட

சேறையுள் செந்நெறி—திருச்சேறைத் தலத்தில், செந்நெறி என்ற திருக்கோயிலில்

மன்னுசோதி—நிலையாக வீற்றிருந்தருளும் ஒளிப்பொருளுமாகிய சிவபெருமான்

நம்பால் வந்து வைக—நம்மிடத்தில் (நமது மலஇருள் முற்றிலும் நீங்கும்படி) அருள் ஒளியுடன் விளங்குதற்கு

என்ன மாதவம் செய்தனை—நீ முற்பிறவிகளில் உண்மைச் சரியை கிரியை யோகங்களாகிய பெரிய தவங்களைச் செய்திருக்கின்றாய் (அத்தவங்களின் பயனாக நீ இப்பொழுது மெய்யறிவை அடைந்திருக்கிறாய். இல்லா விட்டால், சிவபெருமான் நம்மிடத்தில் விளங்குதற்குக் காரணமில்லை.)

விளக்கவுரை:—

வேதம்—வேதம் என்பது இங்கே பொதுவாக எல்லா அருள் மறைகளையுங் குறிக்கிறது.

விழுப்பொருள்—தனக்கு மேலானதொரு பொருள் இல்லையாதலின் சிவபெருமான் விழுப்பொருள் என்று கூறப்படுகின்றார்—பரம்பொருள் என்பதும் அக்கருத்தையே குறிக்கிறது.

சேறையுள் செந்நெறி—திருச்சேறை என்பது தலத்தின் பெயர்; செந்நெறி என்பது அத்தலத்திலுள்ள திருக்கோயிலின் பெயர்; அக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் பெயர் செந்நெறியப்பர், நெல்லையப்பர் என்பது போல.

மன்னுசோதி—தோற்றக் கேடுகளின்றி என்றும் ஒருதன்மைத்தாய் விளங்கும் சோதியாதலின் மன்னுசோதி என்றார். மாணிக்கவாசக அடிகள் திருவெம்பாவை முதலாவது பாட்டில், 'ஆதியும் அந்தமுமில்லா வரும்பெருஞ் சோதி' என்று கூறியது காண்க. சோதி என்பது திருச்சேறைச் செந்நெறித் திருக்கோயிலில் வீற்றிருக்கும் சிவலிங்கப்பெருமானை (சதாசிவமூர்த்தியைக்) குறிக்கிறது. சிவலிங்கத் திருவுருவமானது மலப்பற்றுடைய நம்போல்வாருடைய புறக்கண்ணுக்குச் சிலை யுருவமாகத்தோன்றுவது போலன்றி, அடிகளுடைய அகக்கண்ணுக்கு அச்சிலைக்கு ஆதாரமாயும் அதற்கு உள்ளும் புறம்பும் ஊடுருவியு மிருக்கிற தூவெளி (பரமாகாசம்) ஒளியாகத் தோன்றும். பதார்த்தங்கள் பாராது பரமே பார்த்திருக்கும் அடிகளுக்கு சிவலிங்கச் சிலையுருவம் தோன்றாது. ஆதலின், அடிகள் அச்சிவலிங்கத் திருவுருவத்தை மன்னு சோதி என்றார்.

> "அல்லும் பகலும் அருளுடன் தூங்கினல்
> கல்லும் பிளந்து கடுவெளி யாமே"

என்று திருமூலர் திருமந்திரம் 2303-வது பாட்டிற் கூறியது காண்க.

நம்பால் வந்து வைக—அடிகள் முதற்கண் தமது நெஞ்சை, 'நெஞ்சே, என்ன மாதவஞ் செய்தனை' என்று முன்னிலையில் விளித்துக்

கூறிப் பின் அதனைத் தம்மோடு உளப்படுத்தி நம்பால் வந்து வைக என்று பன்மையில் வைத்துக் கூறியதை நோக்குக; இத ஞல் ஆன்மா நெஞ்சினை (மனதை)த் துணையாகக் கொண்டுதான் தவங்கள் செய்தல் வேண்டும் என்பதும் அத்தவங்களின் பயன் ஆன்மா தன்னுடனென்று சேர்ந்து தன்னுள் ளொடுங்கிய நெஞ் சுடன் அத்தவங்களின் பயனுகிய மெய்யறிவை அடைகின்றது என்பதும் குறிப்பிலுணர்த்தப்பட்டன. உலக நெறியில் புற விடயங்களைப்பற்றச்செய்து ஆன்மாவைச்சிறுமைப்படுத்துவதும், வீட்டு நெறியில் சிவத்தைப் பற்றச்செய்து ஆன்மாவைப் பெரு மைப்படுத்துவதும் நெஞ்சு ஆகலின் அடிகள் என்ன மாதவஞ் செய்தனை என்று நெஞ்சைப்பார்த்துக் கூறினுர். நெஞ்சின் துணை யின்றி ஆன்மா மாதவஞ்செய்ய முடியாது என்பது கருத்து. தவத்தைச் செய்வது நெஞ்சு, தவப்பயனடைவது ஆன்மா ஆத லின் அடிகள் நம்பால் வைக என்ருர். தவஞ் செய்தற்கு நெஞ்சின் துணையின்றி ஆன்மா தவஞ்செய்ய முடியாது என்பது கருத்து. தவத்தைச் செய்வது நெஞ்சு, தவப்பயனடைவது ஆன்மா ஆத லின் அடிகள் நம்பால் வந்து வைக என்ருர். தவஞ்செய்தற்கு நெஞ்சு முதன்மை; தவப்பயனடைதற்கு ஆன்மா முதன்மை. "சிந்தையு மென்பாற் செயலற் றடங்கிவிட்டால் வந்ததெல்லா நின் செயலா வாழவே பராபரமே" என்று தாயுமான அடிகள் கூறுதல் காண்க. வந்து—இங்கே விளங்கி என்ற பொருளில் வந்தது. 'வைகவே' என்பதிலுள்ள ஏ—அசை.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

தமிழ்க் காதலர்

ஓவியர்நீள் சுவரேழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியையாம் அழைத்திடஆண் சித்திரமேல் நான்பாரேன்
பாவையர்தம் உருவமெனில்நீர் பார்க்கமனம் போறேனென்ருள்
காவிவிழி மங்கையிவள் கற்புவேற்பின் வற்புளதால்.

—வேதநாயகம் பிள்ளை

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

பாலை

தலைமகளைவிட்டுப் பொருள்வயிற்பிரிந்த தலைமகன் பிரிவு நீட்டித்தவழி ஆற்றாது கவன்ற தலைவியைக் கடிது வருவர் என்று கூறித் தோழி ஆற்றுவித்தது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.

37. நசைபெரி துடையர் நல்கினு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின, தோழி, அவர்சென்ற வாறே.

என்பது தோழி 'கடிது வருவர்' என்றாற்றுவித்தது.

பதவுரை:—

தோழி—தோழியே, நசை பெரிது உடையர்—தலைவர் நம்மிடத்து மிக்க அன்பானுய விருப்பமுடையவர்; அவர் சென்ற ஆறு—அவர் போய வழியில், பெருங்கை வேழம்—பெரிய துதிக்கையை யுடைய ஆண் யானை, பிடி பசி களைஇய—பெண் யானையின் பசியை நீக்கும் பொருட்டு, மென்சினை—மெல்லிய கொம்புகளையுடைய, யாஅம்பொளிக்கும் அன்பின—யாமரத்தை முறிக்கின்ற அன்புடையனவாகக் (காணக் கண்டு), நல்கினும் நல்குவர்—(தாமும் அன்புகொண்டு சேணகன்று தங்கும் தம் கருத்தைவிடுத்து) நம்மாட்டு அருள் புரியினும் புரிவார். (ஆதலின் கவலற்க) ஏ—அசை.

நசை—விருப்பம், அன்பு. களைஇய—களையும்பொருட்டு. நல்கல்—அருளல். யா + பொளிக்கும்—யா + அ + ம் + பொளிக்கும் = யாஅம் பொளிக்கும் என்றாயிற்று.

பொளிக்கும் என்பது பிளக்கும் எனவும் காணப்படும். "குறிய தன் முன்னரு மோரெழுத்து மொழிக்கு மறியத் தோன்று மகரக் கிளவி" என்னும் விதிப்படி அகரச்சாரியையும், "யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும் ஆமுப் பெயரு மெல்லெழுத்து மிகுமே" என்னும் விதிப்படி இனமெல்லெழுத்தும் பெற்றது. (தொல்—எழுத்து—உயிர் மயங்கில். 24, 26) யா—பாலைவனத்திற் காணும் மரம்.

இறைச்சி:—

பிடியின் பசியைக் களையும்பொருட்டு அன்பின் மிகுதியால் வேழம்யாமரத்தின் கிளையை முறித்தலைத் தலைவர் காணுவாராதலில் தாமும் அன்புகொண்டு நின்துயர் களைய வந்து, அருள்புரிவர் என்று தோழி வற்புறுத்திக் கூறினாள். இதற்கு,

"அன்புறு தகுநன இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே"

என்பதால் அறிக. (தொல். பொருளி. 37)

அன்பின—அன்பையுடையன. அன்பின் எனக் கொண்டால், அன்பைக் கண்டதனால் என்க. சென்ற ஆறே—சென்ற ஆற்றின் கண் என ஏழனுருபு விரிக்க.

"நெருப்பவி கனலி உருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாஅத்து வரிநிழல் இரீஇ"

என்பது ஈண்டு நோக்கத் தக்கது.

மேற்கோள் விளக்கம்:—

"நசைபெரிது..........சென்றவாறே"——இதனுள் முன்பே நெஞ்சகத் தன்புடையார் அதன்மேலே களிறு தன் பிடியின் பெரும் பசி களைதற்கு மென்றோலையுடைய ஆச்சாவைப் பிளந்து அந்நாரைப் பொளித்தூட்டும் அன்பினையுடைய அவர்சென்ற ஆறதனைக் காண்பர் காண் என்று அன்புறு தகுந கூறிப் பிரிவாற்றாதவளை வற்புறுத்தவாறு காண்க. நம்மேல் இயற்கையாக அன்பிலனென்று ஆற்றாளாவளென்று கருதாது இவளை ஆற்றுவித்தற்பொருட்டு இவ்வாறு கூறலின் வழுவாயமைந்தது."

(—தொல்: பொருளி—சூ. 37-பக்கம் 831)

'தேம்பட மலர்ந்த மராஅ மெல்லிணரு
மும்ப லகைத்த வொண்முறி யாவும்"—(மலைபடுகடாம் 28-29)

"இலை இலவோங்கிய நிலையுயர் யாஅத்து" —அகம் 31.

"யானை யொடித்துண் டெஞ்சிய யாஅ" —(குறுந். 232)
"களிறு, யாஅந்தொலையக் குத்தி" —(குறுந். 308)

"வருகுவர் மீண்டெனப் பாங்கிவலித்தல்"
என்பதற்கு மேற்கோள். —(நம்பியகப்—சங்கம்)

1. "நல்கினு நல்குவர்"—"நல்கலு நல்குவர்"—பிரதிபேதம்.
2. மென்சினையா அம்பொளிக்கும்—"மென்சினையா அம்பிளக்கும்" பிரதிபேதம்.
3. 'அன்பின' 'அன்பின்'—பிரதிபேதம்.
"மரஞ்செல மிதித்த மாஅல்போலப்
புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை
நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்
படிஞிமிறு கடியுங் களிறே"—அகம் (59-6-9)

யானை யாமரத்தை முறித்தல் இதில் கூறப்பட்டதும் காண்க. பிடி நீருண்ணும் பொருட்டுக் குளத்தில் படிந்த வண்டுகளை யாமரத்தின் சினைகளை முறித்து வீசி நீக்கும் ஆண் யானை என்றபொருளும் ஈண்டு அறியத்தக்கது.

"உருகு காதலிற் றழைகொண்டு மழலைவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினை முழைநின்றும் வாங்கிப்
பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப் பியானை
பருக வாயினிற் கையினின் றளிப்பது பாராய்"
—(கம்ப: சித்திரகூட. (அயோத்) 10)

இங்கு ஆண்யானை பெண்யானைக்கு உதவிபுரிதலைக் கூறியுள்ளதும் நோக்கத்தக்கது.

"சினையாரும் பிளக்கும்" என்ற பாடத்திற்குக் கிளைகளையுடைய ஆத்தி மரத்தையும் பிளக்கும் என்க. பாலையில் ஆத்தி காணல் அரிதாதலின் அது சிறந்ததன்று.

"பிடிபசி களைஇய பெருங்கை வேழம்"—என்பது களிற்றுக்குப் பிடியின்பால் அன்பு அதிகம் என்பது. இதனைக் கீழ்வருவற்றாலும் காண்க:—

1. "மடப்பிடி யுயங்குபசி களைஇயர், பெருங்களிறு"
2. "பிடி யூட்டிப் பின்னுண்ணுங் களிறு"
3. "இரும்பிணர்த் தடக்கைநீட்டி நீர்கொண்டு, பெருங்கையானை பிடியெதிரோடும்"
4. "மடப்பிடி தழீஇய பெருங்கைவேழம், தேன்செய் பெருங்கிளை இரிய வேங்கைப், பொன்புரை கவழப் புறந்தரூட்டு மாமலை'
5. "மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்,
னுயங்குநடை மடப்பிடி வருந்த நோனது.
நிலையுயர் யாஅத் துலையக்குத்தி,
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணாந்
தழுங்க னெஞ்சமொடு முழங்கு
மத்த நீளிடை யழப்பிரிந் தோரே"

6. "தொடுகுழி மருங்கிற் றுவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு"

7. "யானைதன், கொன்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந்,
தின்னுவேனி லின்றுணையார, முளிசினை மராஅத்துப்
பொளிபிளந் தூட்ட"

8. "வீழ்பிடி கெடுத்த வெண்கோட் டியானை,
யுண்குளகு மறுத்த வுயக்கத் தன்ன"

9. "செந்தினை கவர்ந்த பைங்கண் வேழம்,
கருவரைப் பிரசங் கையின் வாங்கி,
யீயின மிரிய வீசி வயவுப் பிடியின்,
வாயுறக் கொடுத்த செவ்வி நோக்கி"

10. "அழற்பட் டசைந்த பிடியை யெழிற் களிறு,
கற்சுனைச் சேற்றிடைச் சின்னீரைக் கையாற்கொண்;
டுச்சி யொழுக்குஞ் சுரம்"

11. "குழவிப் பிடி குஞ்சர மாழ்குமெனத்,
தழுவிச் சுடு வெவ்வழ ருங்குவன"

12. "உழையுடைக் கற்பின ருரையிற் சென்றிடா,
தழையுடைப் பிடிக்குநீர் தணிக்கும் வேட்கையாற்
புழையுடைத் தனிக்கரம் போக்கிப் பொங்குசுன்
மழையுடைத் திடுவன மதங்கொள் யானையே"

13. "ஒருத்தற் குலம்பிடிக் கூண்பல வூட்டியுண் டோங்குநிழற்,
பொருத்தற் குகைப்பது நின்னக நாடு"

இவை, "தானுமுண்ணும் விருந்துண்டு மிகினே" என்பதை நினைப் பூட்டுதல் அறிக.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம்.

பயன்—ஆற்றுவித்தல்.

தமிழிலக்கணத் தத்துவக்கிடை

[ஈப்போ. திரு. தியாகராஜன் அவர்கள், G. M. V. C.]

வேற்றுமை

விசேஷ சக்தியால் ஒன்றே பலவாய் வேற்றுமைப்பட் டனவென, தத்துவ நூலார் சொல்வதற் கேற்றுப்போல் நன்னூலாரும் வேற்றுமை இயல் நிறுவினர்.

உலகப்பொருள்கள் நாம ரூபத்தால் வேற்றுமைப்பட்டனவெனச் சாஸ்திரிகள் கூறுவர்; அஃதேபோல், நாம வேற்றுமையைப் பெயர்வேற்றுமையெனவும், ரூபவேற்றுமையை உருபு வேற்றுமையெனவும் புகன்றனர் நம் இலக்கணத்தார்.

இத்துடன் விடாது எழுவகைத் தோற்றமென்று தத்துவ நூலார் சொல்வதுபோல "வேற்றுமை தானே யேழென மொழிப" என உருபேற்கும் வேற்றுமையையும் பிரித்தனரெனலாம்.

ஆவரண சக்தி

விக்ஷேப சக்தியின் நிர்ணயமிவ்வாறாயின் ஆவரண சக்தியின் நிலைமையெத்தகையது? வேற்றுமை மயங்கியலை ஆவரண சக்திக் கொப்பிடலாம்.

இவ்வியலை உயிர் மயங்கியல், மெய் மயங்கியலென இருவகைத்தெனச் சாற்றி, அவற்றில் உயிர் மயங்கியலை உலகஇயல்பில் எதையொக்குமெனில்;—ஒருவகைச் சக்தியே (Energy) Hydro electric energy எனவும், Electro Magnetic energy எனவும் உலகில் நிலவதை நாம் நாள்தோறு மநுபவிக்கிறோம். நீரிலுள்ள நெகிழ்ச்சிச் சக்தியே Electricity யாகவும், பின் Magnetic energy யாகவும் மயங்கி நிற்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. எனவே இச்சக்திகளின் மயக்கத்தை உயிர் மயங்கியல் ஒக்கும்

நீரே பனிக்கட்டியாகவும், ஆவியாகவும், அஃதாவது ஒரு மெய்ப்பொருளே (matter) பிருதிவி, அப்பு, வாயுத்தன்மையேற்று மயக்கமடைவதை யொக்கும் மெய்மயங்கியல்.

உயிர் மயங்கியலை illusion of the soul எனவும், புள்ளி மயங்கியலை illusion of the body எனவும் கூறினர் திரு. மாணிக்க நாய்க்கரும்.

சொல்

முற்கூறியவாறு வியாபகமாகிய சொற்களை உலகப்பொருள்களுக்கொப்பிட்டு அதற்குச் சான்றாக "எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே" எனத் தொல்காப்பியனார் மொழிந்ததையும் காட்டினேன்.

உலகப்பொருள்களைப்போல் இச்சொற்களுக்கு அமைப்பும், குறிப்பும் உளவோ வெனில்:—

> "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லானாகு மென்மனார் புலவர்"

என்று தொல்காப்பியனார் சொன்னதே போதிய சான்றாகும்.

மேலும், உலகில் பிண்டப்பொருள், அபிண்டப்பொருள்கள் (concrete and abstract) உளவே யாகையால், அவைகட்கு

"தெரிபு வேறுநிலையிலுங் குறிப்பிற் றோன்றலு
மிருபாற் றென்ப பொருண்மை நிலையே"

[தோல்: சொல்—157]

என்னும் விதியைக்காட்டி ஒப்புவமை காட்டலாம்.

(உ-ம்) மரம், மக்கள் முதலியன வெவ்வேறுகத் தோற்றத்தால் தெரியலாம். ஆனால் மனம், புத்தி முதலியவற்றைக் குறிப்பாலுணரலாம்.

பதம்

"Elemental substances singly or in combination become the material cause of the products of the world" —(*Indian Philosophy Vol. II. Page 189*) என்பதாக Sir இராதாகிருஷ்ணன் கூறினர். இதைப்போலவே,

"எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற் பதமாம்—அது பகாப்பதம், பகுபதமென இருபாலாகி இயலுமென்ப"

என்று பவணந்தியாரும் பதவியல் 127-ம் சூத்திரத்தில் சொன்னர். இதில் பகாப்பதமென்பதை unicellular எனவும் பகுபதமென்பதை multicellular எனவும் ஒப்பிடின் ஒவ்வாதோ?

The things of the world, material and immaterial, must have being or existence, must function in time and space and should possess attributes or characteristics.

எனவே—நம் மொழியின் சொற்களைப் பெயர், வினை, இடை, உரியென நான்காப் பகுத்தனர்.

"சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப வறிந்திசி னோரே"

[தோல்: சொல்—358]

என்று விதித்து, அப்பெயர்களும், வினைகளும், காலம், இடம், உரி (attributes) இன்றி நிலையாவாகையால்

"இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப"

தோல்: சொல்.—159]

என்றும் விதித்ததால் சொற்கள் நான்காயின.

பெயர்

"பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கு மோரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே" [தொல்: சொல்—160]

ஆங்கிலேயர் உலகப்பொருள்களை உயிருள்ளவை, உயிரில்லவை (Animates and Inanimates) யெனப் பிரிக்க, நம்மவரோ அஃறிணை, உயர்திணையென ஏன் பிரித்தனரெனின், உயர்திணைப் பகுதிக்குரியவரே தம் வினைகளுக்குப் பொறுப்பாளராவார். அஃறிணைப் பெயர்க்குரியவை தம்வினைக்கும்பொறுப் பற்றவை. இது, வினையியல் கூறுங்கால் நன்கு விளங்கும்.

அன்றியும் உயர்திணை, அஃறிணையென்பன சமஷ்டிநோக்கத்தைக் குறிக்கும்.

இதற்கேற்க, வியஷ்டி நோக்கத்தைத் தழுவியது போலப் பால் குறித்தனர்.

இவ்வியட்டி நோக்கமில்லையேல் (Individualistic conception) ஆண், பெண், பொது, ஒன்று, பலவெனப் பால் (பான்மை) தோன்ரு. எனவே இத்திணை, பால், பாகுபாடுகளும் தத்துவத்திற் கொத்ததே.

இச்சமஷ்டி, வியஷ்டி நோக்கங்களைத் தன்னிடத்திலும், எதிரிலும், பல்வகையிலுமுணரலா மாகையால் இத்தன்மையை விளக்கத் தன்மை, முன்னிலை, படர்க்கை யெனும் மூவிடமும் கூறினர் நன்னூலார்.

வினையியல்

"தினையிட்டவன் தினையறுப்பான், வினையிட்டவன் வினையறுப்பான்" எனும் முதுமொழியில் எவ்வாறு வேற்றுமையின்றி, ஏற்றகாலத்தில் வினைப்பயனை யநுபவிப்போமென்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறதோ அதைப்போலவே

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

[தொல்: சொல்—198]

என்றும்—

"என்று கூற விசைய னியம்புவா
னின்று யோகத்திலே நெடுநா ளெலாம்
பொன்றுங் காலத் தயர்ந்துயிர் போயினுற்
சென்று நற்கதியே யன்று சேருமோ"

"யோக மேவ வினைக ளொருவினுன்
மோக மேவலின் யோக முடிந்தில
னேக மேயிரு பாலும் விடாநிற்க
மேக மேயென வீய்ந்து கழியுமோ"
[ப. கீதை: அ. 6—பா. 27, 28]

என்று விசயன் கேட்டதற்கு, கண்ணபிரான்

"யோக முடியா திடையே யிறந்தவன்
யாக வினைபல செய்தாங் கிசைந்திடுஞ்
சோகமி ஞடெய்தித் துன்பந் தொடராதே
போக நுகர்ந்து பல்காலங்கள் போயபின்"

"சிறந்தவரசர் திருக்குலத்தாத
லறந்தருயோகிகடங் குலத்தாதல்
பிறந்து பெறுவதெல்லா மெய்திப் பின்னு
மறந்த வியோக மகிழ்வுட னெய்தும்"
—[ப. கீதை: அ. 6: பா 31—32]

என, முன் இயற்றிய வினையழியாது அவ்வினைக்கேற்ற இடமும் காலமும் மற்றும் பெற்று அவ்வினையை மறுபடியும் எய்து மென்று கூறியதற்கொப்ப

" குறிப்பினும் வினையினு நெறிபடத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினை"
[தோல்: சோல்—201]

எனவும்,

"செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே"
[பவண. நன்னூல்: சூ.—319]

எனவும்,

இலக்கணத்தார் கூறிய விதிகளையும் ஓர்ந்து பார்க்கின், இவ்வியலும் தத்துவத்திற்கொத்ததே யெனத்தோன்றுகிறது. இன்னும்,

"அவைதாம்
முற்றும், பெயர் வினையெச்சமு மாகி
ஒன்றிற் குரியவும் பொதுவு மாகும்"
[பவண.—321]

என்று பவணந்தியார் கூறியது எவ்வாறெனில்:—முற்கூறிய வினைகள் ஒரு பிறவிக்கே காரணமாகி அப்பிறவியில் முற்றுறினு முற்றும், அல்லது நம் எச்சமாகிய நம்மக்களை நம்வினைகள் தழுவியும்,

"கொண்டு பயிலுங் குணமில னாகினு
முண்டு தெளிவென் றுணர்ந்த வியோகந்தான்
பண்டு பயின்ற பயிற்சியி னான்றனைத்
தண்டுத லின்றிமுன் றானே தலைப்படும்"

[ப. கீதை: 6 அ. 33 பா]

என்பதற்கிணங்க நம் வினையெச்சம் பிற்பிறவியில் நம்வினைக் காதாரமாயும் நிற்கும்.

இவ்வாறான தத்துவக்கொள்கைகளைப் பூண்டதாலோ வினைச்சொற்களைப் பிற்காட்டுமாறு பகுத்தனர் ?

Grammatical Expressions or terminology	Philosophical Expressions or terminology
1. இறந்தகாலவினை	1. சஞ்சித கர்மம்
2. நிகழ்காலவினை	2. பிராரப்த கர்மம்
3. எதிர்காலவினை	3. ஆகாம்மிய கர்மம்
4. தன்வினை	4. ஆதிஆத்மீக கர்மம்
5. பிறவினை	5. ஆதிபௌதீக கர்மமும் ஆதிதெய்வீக கர்மமும்
6. குன்றியவினை	6. சஞ்சித கர்மத்தில் அநுபவித்ததுபோக இன்னும் அநுபவிக்கவேண்டிய வினை
7. குன்றாவினை	7. அனுபவிக்காமல் விடுபட்டதால் இனி முற்றும் அனுபவிக்கவேண்டிய வினை
8. முற்றுவினை	8. இப்பிறவியில் இயற்றி இப்பிறவியிலேயே அனுபவித்து முடிந்த வினை.
9. குறைவினை	9. இப்பிறவியில் இயற்றி இப்பிறவியில் முற்றும் அனுபவியாத வினை.
10. தெரிநிலைவினை	10. இப்பிறவியில் அனுபவிக்கும் பலாபலன்களுக்காதார மின்னதெனத் தெரிந்த வினை.
11. குறிப்புவினை	11. இப்பிறவியில் அனுபவிக்கும் பலாபலன்களுக்கு .

	ஆதாரமின்னதெனத் தெரியாமல் குறிப்பாக நிற்கும் வினை.
12. துணைவினை	12. இப்பிறவியில் இயற்யிருக்கும் வினைக்குத்துணையாகும் வினை.
13. எதிர்மறைவினை	13. பின்வரும் வினைப்பயனை மறைக்கவியற்றும் வினை

"புலனவை பொறிவழி போக்கு மாற்றியே
பலனற வினைகள் என்பொருட்டுப் பண்ணுவாய்
நலனுறு மவ்வினை நாச மின்றியே
சலமுறு பிறவியுந் தவிர்க்குந் தன்மைகேள்"

[ப. கீதை. அ. 3 பா: 5]

என்பதற்கேற்க, பிறவியைத் தவிர்க்க இயற்றும் வினையே எதிர் மறைவினை.

ஏனெனில்,

" செய்தெ னெச்சத் திறந்த கால
மெய்திட னுடைத்தே வாராக் காலம்"

[தொல். சொல். 239]

[முன்விளக்கியவைகளை P. V. M. Naicker நூலிற் காண்க]

பழந்தமிழ் அகப்பாட்டு

ஆஅ அளிய அலவன்றன் பார்ப்பினோடு
ஈஇர் இரையுங்கொண்டு ஈர்அளைப் பள்ளியுள்
தூஉந் திரைஅலைப்பத் துஞ்சாது இறைவன்தோள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால் !
ஓஒ உழக்குந் துயர்.

THE FORSAKEN WIFE

Ah ! the loving crab with its young ones, sharing its dripping food, in its wet hollow chamber, amid the buffeting of the foam-besprinkling waves, sleepless, agitated with desire for its lord's embrace, suffers affliction as I do,—Alas !—O thou of fragrant brow.'

Dr G. U. Pope

வரலாற்றுப் பகுதி: History & Biography

கிறீன் வைத்தியர்

(Dr. Samuel Fisk Green)

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி எழுதியது]

அமெரிக்கன் மிஷன் என்னும் கிறிஸ்தவச்சங்கம் 1816-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது. இந்த அமெரிக்கன் மிஷன் சங்கத்தார் உயர்தரக் கல்வியையும் சையன்ஸ் என்னும் சாத்திரங்களையும் கற்பிப்பதற்காக 1823-ல் வட்டுக் கோட்டை என்னும் இடத்தில் "செமினரி" யொன்றை ஏற்படுத்தினார்கள். இந்தச் செமினரி அக்காலத்தில் சர்வகலா சாலைக் கொப்பாகச் சிறப்புற்று விளங்கிற்று. உயர்தரக் கல்வியைக் கற்பித்த இந்தச் செமினரியின் விசேஷம் என்னவென்றால், இதில் தமிழ், சமஸ்கிருதம், கிரேக்கு, எபிரேய பாஷைகளும், நில அளவை சாஸ்திரம், வான சாஸ்திரம், மானுமி சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களும் கற்பிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க, இதில் வாசித்த பிள்ளைகளுக்கு உணவு முதலியவை இலவசமாகக் கொடுக்கப்பட்டதும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பட்டதுமே யாகும். இந்தக் கலாசாலை, அக்காலத்தில் ஆசியாகண்டத்திலே யிருந்த கலாசாலைகளில் தலை சிறந்து விளங்கிற்று. இவ்விதம், அமெரிக்கன் மிஷன் சங்கம் தமிழிலங்கையில் அக்காலத்திற் செய்துவந்த தொண்டு போற்றற்பாலது.

இந்த அமெரிக்கன் மிஷன் சார்பாக கிறீன் வைத்தியர் (Dr. S. F. Green) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மானிப்பாய் என்னுமிடத்தில் ஒரு வைத்தியசாலையை 1847-ல் நிறுவி நோயாளர்களுக்குச் சிகிச்சைகள் செய்துவந்தார். அஃதன்றியும் அநேக மாணவருக்கு மேல்நாட்டு முறைப்படி வைத்திய சாஸ்திரத்தைக் கற்பித்துவந்தார். அமெரிக்கமிஷன் சங்கத்தார் எல்லாக்கல்வியையும் சாஸ்திரங்களையும் தேசபாஷையில் கற்பிக்கவேண்டும் என்னும் உயர்ந்த கருத்துள்ளவர்களாயிருந்தார்கள். அக் கொள்கையைப் பின்பற்றி கிறீன் வைத்தியரும் வைத்திய சம்பந்தமான சாஸ்திரங்களையெல்லாம் அறிஞர் பலரின் உதவிகொண்டு தமிழில் மொழிபெயர்த்து எழுதினர். வைத்திய சம்பந்தமான "சையன்ஸ்" நூல்களை முதல்முதல் தமிழில் வெளிப்படுத்தியவர் இவர்தாம். இதன்

பொருட்டுத் தமிழுலகம் இவருக்கு நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

1856-ல் கிறீன் வைத்தியர் வைத்தியநூல் ஒன்றைத் தமிழில் எழுதி அதனை அச்சிடும் செலவை அரசாங்கத்தாரை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டார். அரசாங்கத்தார், அந்த நூலை ஆங்கிலமொழியில் எழுதினால் தமது செலவில் அச்சிடுவதாகத் தெரிவித்தார்கள். அமெரிக்க மிஷன் சங்கத்தின் நோக்கம் எல்லா சையன்ஸ்களையும் சாத்திரங்களையும் தேச பாஷையில் எழுதப்படவேண்டும் என்பதாகையால் கிறீன் வைத்தியர் அந்த வைத்தியநூலை ஆங்கிலத்தில் எழுதமறுத்துவிட்டார். ஆகையால், அரசாங்கத்தார் அந்த நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவிசெய்ய முடியாதென்று சொல்லிவிட்டார்கள்.

கிறீன் வைத்தியர் தமிழ்மொழியில் இயற்றிய வைத்திய சம்பந்தமான நூல்கள்:—

அங்காதிபாதம் (Human Anatomy), சுகரணவாதம், உற்பாலனம். இம் மூன்று நூல்களும் ஒரே புத்தகமாக 1872-ல் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டன. கெமிஸ்தம் (Chemistry) "இது வெல்சு பண்டிதர் இங்கிலீஷில் இயற்றிய நூலிலிருந்து, பாஷாந்தரமாக்கலில் த.வி. சப்மன் வைத்தியனுடைய உதவியையும் பரிபாஷையாக்கலில் ர. சுவாமிநாதன் வைத்தியனுடைய உதவியையும் கொண்டு சமுபல், பி. கிறீன் வைத்தியனால் மொழிபெயர்க்கப்பட்டது. யாழ்ப்பாணம் அமெரிக்க இலங்கை மிஷனுக்காக] நாகர்கோவில் லண்டன் மிஷன் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது: 1875"

Vocabularies of Malaria Medicate and Pharmacy. இந்தநூல் 1875-ல் நாகர்கோவில் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதனையும் கிறீன் வைத்தியர் தமிழில் எழுதி வெளியிட்டார். இந்நூலை யான் பார்த்ததில்லை. ஆகையால் இதன் தமிழ்ப்பெயர் இன்னதென்று தெரியவில்லை.

கிறீன் வைத்தியர் வைத்திய சம்பந்தமாக, மேலைத்தேசத்துச் சிகிச்சை முறைப்படி ஒன்பது நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டார் என்று தெரிகிறது. அவற்றில் மேற்சொன்ன ஐந்து நூல்கள் இப்போது அருமையாகச் சிற்சிலரிடத்தில் கிடைக்கும். ஏனைய நான்கு நூல்களின் பெயர்தானும் தெரியவில்லை. அந் நூல்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியது தமிழ்மொழி முன்னேற்றத்தில் கருத்துடையவர்களின் கடமையாகும். அன்றியும் கிறீன் வைத்தியர் எழுதி வெளி

யிட்ட அந்த ஒன்பது நூல்களும் மீண்டும் அச்சிடப்படவேண்டும். இத்தகைய வேலையை, சென்னை மாகாணத் தமிழர் சங்கம் போன்ற பெரிய சங்கங்கள் செய்ய மேற்கொள்ள வேண்டும்.

இவையன்றியும்,இலங்கையிலிருந்த அமெரிக்கன் மிஷன் சங்கத்தாரின் சார்பாக வீசகணிதம், நியாயசாஸ்திரம் (தர்க்க நூல்), வானசாத்திர முதலிய நூல்களும் தமிழில் பல ஆண்டுகளுக்குமுன் அச்சிடப்பட்டன. அந்த நூல்களும் இப்போது கிடைப்பது அருமை.

அளகிரி

(கி. பி. 1673—1685)

[திருவாளர் வித்துவான் கி. சாமிக்கண்ணு அவர்கள்]

தோற்றுவாய்:—விசயராகவ நாயக்கரும் மன்னாரப்ப நாயக்கரும் போரிலிறந்த பிறகு தஞ்சாவூர் நாட்டை ஆளும்படி சொக்கநாத நாயக்கர் தமது செவிலித்தாயின் மகனை அளகிரியை ஏற்படுத்தினர்.

வரலாறு:—அளகிரி, சின்னாட்களுக்கெல்லாம், தாமே தஞ்சாவூருக்கு மேலதிகாரியாய் விட்டார். செலவு சிற்றாயங்கள் போக எஞ்சிய தொகையைச் சொக்கநாத நாயக்கருக்கு அனுப்புவதை நிறுத்திவிட்டார். கடிதப்போக்கு வரவுகளில் நட்பரசர்கள் ஒருவருக்கொருவர் எழுதுவதுபோ லெழுதினர். இதைப்பற்றிச் சொக்கநாத நாயக்கர் கண்டித் தெழுதினர். அளகிரி, தஞ்சாவூர் அரசர் திருசிராப்பள்ளி யரசருக்கு எழுதுவதுபோலத் தாமும் எழுதினதேயொழிய வேறில்லையென்றெழுதினர். சொக்கநாத நாயக்கருக்கு அளகிரியை வென்று மறுபடியும் தஞ்சாவூரைக் கைப்பற்றிக் கொள்வது முடியாதென்று தோன்றிற்று. மேலும், அளகிரியை அண்ணன் என்று அதுவரையில் அவர் உறவாடி வந்துவிட்டார். ஆகையால் அவர் பிற்காலத்தில் தஞ்சாவூரையும் அளகிரியையும் கவனிக்கவில்லை.

இவ்வாறிருக்கையில் முன் விசயராகவ நாயக்கரிடத்தில் திருமந்திரவோலை வேலைபார்த்துவந்த வெங்கண்ணா என்ற நியோகி பிராமணர், அரசவழியிற் பிறந்த செங்கமலதாசு செட்டிவீட்டில் வளருவதையும் வாழ்க்கை நடத்துவதற்குத்

தடுமாறுவதையும் அறிந்தார். தாதியின் மகனை அளகிரி கொலுவிலிருந்து அரசு செலுத்துவதைக் கண்டு உள்ளம் கொதித்தார். அப்பொழுது பன்னிரண்டு ஆண்டினனாக இருந்த செங்கமலதாசை யழைத்துக்கொண்டு அவர் பீசப்பூர் சுல்தானிடம் சென்றார். சுல்தானிடத்தில் செங்கமலதாசைப் பற்றிய வரலாறனைத்தையும் உள்ளதுள்ளவாறெடுத்துரைத் தார்.

சொக்கநாத நாயக்கர் தஞ்சாவூரை அறநெறி திறம்பிக் கைப்பற்றியதாகச் சுல்தானுக்கு மனதில் படும்படி செய்தார். சுல்தான், ஷாஜியின் குமாரரும், ஆதி சிவாஜி மன்னனின் தம்பியுமாகிய வெங்காஜியை வருவித்துத் தஞ்சாவூருக் கனுப்பிச் செங்கமலதாசுக்குப் பட்டங்கட்டி அரியணையில் அமர்த்தி விட்டுத் திரும்பும்படி சொன்னார். செங்கமலதாசு, வெங்காஜியுடன் தஞ்சாவூருக்குத் திரும்பினார்.

வெங்காஜி திரண்ட குதிரைப்படையுடன் படையெடுத்துச் சென்று தஞ்சாவூருக்கு ஏறக்குறைய ஆறேமுக்கால் நாழிகை தூரம் கிழக்கிலுள்ள ஐயம்பேட்டையில் பாளையம் இறங்கினார். இஃதறிந்த அளகிரி நாயக்கர், சொக்கநாத நாயக்கருக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் பிற தேசத்துத் திருந்தார் தஞ்சாவூரைப் பறித்துக் கொள்ளாதவாறு அவர்களை முறியடித்துச் சொக்கநாத நாயக்கரே நாட்டுக்கு நல்லரசு செலுத்தவேண்டும் என்று வணக்கமாய்த் தெரிவித்திருந்தார். சொக்கநாத நாயக்கரது அமைச்சர்களும் அளகிரிக்கு உதவிசெய்தல் தக்கது என்று தமது கருத்துக்களை வெளியிட்டார்கள். ஆயினும் சொக்கநாத நாயக்கர் அளகிரியினிடத்தில் தீரா வெறுப்புக்கொண்டு வாளா யிருந்துவிட்டார். ஐயம்பேட்டையில் நடந்த சண்டையில் அளகிரி தோல்வியடைந்து முறியடிக்கப்பட்டுத் தஞ்சாவூருக்கு ஓட்டம் பிடித்தார். வெங்காஜி அவரைத் துரத்திக்கொண்டு பின்றொடர்ந்தார். அளகிரி தஞ்சாவூரை நீத்துப் போனவிடம் தெரியாமல் ஓடிப்போனார்.

செங்கமலதாசு நாயக்கர் கி. பி. 1685—1687

தோற்றுவாய் :—செங்கமலதாசு நாயக்கர், இந்த நாயக்க அரசவழியின் ஐந்தாவது மன்னர். அவர் மன்னாரப்ப நாயக்கருக்கு மகன். விசயராகவ நாயக்கருக்குப் பேரன். நாகபட்டினத்தில் ஒரு செட்டிவீட்டில் தன் தாயின் வேலைக்காரி ஒருத்தியால் வளர்க்கப்பட்டவர். வெங்கண்ணு

வின் முயற்சியால் வெங்காஜியின் துணைகொண்டு அளகிரியை வென்று தமது அரசுரிமையைக் கைக்கொண்டார்.

வரலாறு:—ஐயம்பேட்டையில் நடந்த போரில் வெற்றி பெற்றவுடன் செங்கமலதாசை யானையின் மேல் வைத்துத் தஞ்சாவூருக்கு அழைத்துக்கொண்டுபோய் அவருக்கு முடி சூட்டினார்கள். வெங்காஜிக்கும் மற்றோருக்கும் பரிசுகள் அளிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் ஏறக்குறைய கி. பி. 1685-ல் நடந்தன. கும்பகோணம் கோட்டத்திலிருந்து துரைத்தனத்துக்கு ஆண்டுதோறும் சேரும் வரும்படி முழுவதும் சேனைச் செலவுக்கென்று வெங்காஜியிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது. அவர் அவ்வரும்படியைத் தாமே வசூல்செய்துகொண்டு தமது சேனையுடன் திருக்குடந்தையில் தங்கியிருந்தார்.

இவ்வாறிருக்கையில், கோமகனுக்கு உற்ற அமைச்சராக யாரை ஏற்படுத்தலாம் என்ற கேள்வி பிறந்தது. அப்பொழுது செங்கமலதாசு தம்மை வளர்த்துவந்த தாயினிடத்தில் யோசனை கேட்டார். அவள் தங்களை நாகபட்டினத்தில் காப்பாற்றி வந்த செட்டியே அமைச்சராயிருக்க ஏற்றவர் என்றாள். செங்கமலதாசு அவளது கருத்துக்கிசைந்து செட்டியை அமைச்சராக ஏற்படுத்தித் தமது முத்திரையையும் அவரிடத்தில் ஒப்புவித்து அமைச்சருக்குரிய வெகுமதிகளையும் அவருக்களித்து அவரைப் பட்டத்து யானைமேலேற்றி ஊர்வலம் செய்துவைத்தார். வெங்கண்ணுவினது முயற்சியினாலல்லது செங்கமலதாசுக்கு அரசுரிமையே கிடைத்திராது. அவர் விரும்பியது அமைச்சரது அதிகாரம். அது செட்டியி னுடைமையாயிற்று. அவருங்கூட செட்டியின் சொல்லுக்கு அஞ்சி நடக்கவேண்டியதாயிற்று. ஆனதுபற்றி அவர் மிக்க மனவருத்தம் உற்றுத் திருக்குடந்தைக்கு வெங்காஜியினிடத்தில் ஏகித் தஞ்சாவூரைப் பிடித்துக் கொண்டு அவ்விடமிருந்து அரசு செய்யும்படி வெங்காஜியைத் தூண்டுதல் செய்தார். வெங்காஜி, இச்சங்கதி சுல்தானுடைய காதிற்பட்டால் தம்மையவர் கோபித்துக் கொள்வாரென்று சொல்லிச் சிலநாள் பயந்தார். பிறகு சில நாளைக்கெல்லாம் சுல்தான் காலஞ்சென்று விட்டாரென்னும் செய்தி காதுக் கெட்டிற்று. வெங்காஜி அச்சமற்றுத் தம்மைத் தஞ்சாவூரில் நிலைநாட்டிக்கொள்ளத் தீர்மானித்தார்.

செங்கமலதாசு அச்செய்திகேட்டுப் பயந்து, கொள்ளிடத்துக்கு வடகரையிலுள்ள அரியலூருக்கு ஒட்டம்பிடித்துத் தப்பித்துக்கொண்டார். பிறகு தஞ்சாவூர் நாயக்க அரசவழியைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை.

முடிவுரை:—வெங்காஜி தமது சேனையுடன் தஞ்சாவூருக்கு வந்துசேர்ந்தார். தாமே தஞ்சாவூர் நாட்டுக்குக் காவலனானர். இவ்வாறு நாயக்க அரசவழி அழிபட்டு மகாராட்டிர அரசவழி தஞ்சாவூரில் கால்கொண்டது.

சாமுவேல் மோர்ஸ் (Samuel F. B. Morse)

[நெல்லை திரு. குழந்தைவேலன் அவர்கள் B. A.]

மின்சாரத்தின் உதவியால் செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பும் (தந்தித்தபாலைக்) கம்பிச்செய்தியைக் (Telegraph) கண்டுபிடித்தவர் சாமுவேல் மோர்ஸ் என்னும் பேரறிஞர் ஆவர். இவர் 1791-ஆம்ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாள் அமெரிக்காவில் சார்ல்ஸ் டவுன் (Charles Town என்னும் ஊரிற் பிறந்தவர். *இவர் இளமையில் ராண்ட் (Rand) என்னும் ஓர் ஆண்டுமுதிர்ந்த அம்மையாரிடம் கல்விபயின்று வந்தார். அவ் வம்மையார் குறும்புசெய்யும் சிறுவர்களை அடக்குவதற்கு மிகவும் நீண்ட பிரம்பு ஒன்று வைத்திருந்தார். இதன் உதவியால் அவர் தமது இருப்பிடத்தைவிட்டு எழுந்திராமலே பிள்ளைகளை அடிப்பது வழக்கம். ஒருநாள் மோர்ஸ் தமது மேஜையின்மேல் ஆசிரியரைப்போன்று வேடிக்கையான படம் ஒன்று வரைந்து வைத்தார். இதுகண்ட ஆசிரியர் மிகவும் சினந்து மோர்ஸின் சட்டைத் துணியைத் தமது ஆடையுடன் சேர்த்து ஓர் ஊசியினால் தைத்து அவர் தம்மை விட்டு அகலாது இருக்கும்படி செய்தனர். ஆயினும் மோர்ஸ் துணியைக் கிழித்துக்கொண்டு தப்பி ஓடிவிட்டார்.

இவருக்கு ஓவியம் வரைவதில் இளமைப்பருவத்திலேயே ஏற்பட்ட பேரவா நாளடைவில் முதிர்ச்சியுற்றது. இவர் கலாசாலையிற் கல்விபயின்று வருங்காலையில் தம்முடன் பயின்ற மாணவர்களது படங்களை வரைந்து கொடுத்து அதனாற் கிடைத்த பொருளைத் தமது செலவிற்குப் பயன்படுத்திவந்தார். இவர் மாணவராக இருக்கும்பொழுதே அறிவியல் ஆராய்ச்சிகளில் மிகுந்த திறமையுடையவராய்க் காணப்பட்டார். இவர் தமது கல்விப்பயிற்சி ஏல் பல்கலைக்கழகத்தில் முடிந்தவுடன் ஓவியம் வரைவதிலேயே தம் வாழ்நாளைச் செலவிட எண்ணி மூவாயிரம் கல் தொலைவிலுள்ள லண்டன்மா நகருக்குச்சென்று அங்கு ஓவியப்பெரும்புலமையும்பெற்றார். ஆங்கு ஓவியம்வரை

---

* இவர் தந்தையார் பாடபுத்தக ஆசிரியராயும் பேராசிரியராயும் விளங்கிய ஒரு பெரியவராவர்.

வதில் இவருக்குச் சிறிது பொருளே கிடைத்தது. இவர் சிறிதும் சோர்வின்றி ஊக்கத்துடன் உழைத்து வந்ததால் இவர் அரசர் கல்லூரியில் (Royal Academy) ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

லண்டன்மா நகரில் இவருக்குப் போதிய வருவாயின்மையால் இவர் அமெரிக்காவுக்குத் திரும்பிச்சென்று படங்கள் எழுதி விற்றுவந்தார். இவர் ஓவியம் வரையாத நேரங்களில் அறிவியல் ஆராய்ச்சிகள் செய்வது வழக்கம். இவற்றின் பயனாக இவர் ஒரு புதிய தண்ணீர் குழாயைச் (pump) செய்து அதனாற் சிறிது பொருள் சேர்த்தார். இவர் மீண்டும் ஐரோப்பாவிற்குச்சென்று சிலகாலம் தங்கியிருந்து 1831-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதலாம் நாள் சல்லி (Sully) என்னும் கப்பலிற் புறப்பட்டு அமெரிக்காவுக்கு மீண்டும் வந்து சேர்ந்தார். வரும் வழியில் கப்பலில் பாரடே (Faraday) என்னும் அறிஞரைப்பற்றியும், அவர் மின்சாரத்தால் உண்டாகும் மின் ஆற்றலைக் (Electro-magnetism) கண்டு பிடித்தது பற்றியும் கேள்விப்பட்டார். உடனே மோர்ஸுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று: "என் மின்சார ஆற்றலால் நம் எண்ணங்களை ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்கு அனுப்பக்கூடாது?" என நினைக்கலாயினர். ஆதலால் அன்றிரவு முழுவதும் அவர் உறங்கவே இல்லை. ஒரு தாளில் ஆங்கில எழுத்துக்கள் 26-க்கும் (Dash) புள்ளிகளாலும் (Dot) கோடுகளாலும் பின்வருமாறு அடையாளங்கள் எழுதினார்:—

A என்னும் எழுத்திற்கு ஒரு புள்ளியும் ஒரு கோடும் (. —)
B எழுத்திற்கு ஒரு கோடும் மூன்று புள்ளிகளும் (— . . .)
C எழுத்திற்கு (— . — .)
D எழுத்திற்கு (— . .)

இங்ஙனமாகப் புள்ளிகளையும் கோடுகளையும் 26 வகைகளாக மாற்றியமைத்துத் தந்திக் குறிகளைக் கண்டுபிடித்தார்.

நியூயார்க் (New york) நகருக்கு வந்து சேர்ந்தவுடன் மோர்ஸ் (தந்திக்கம்பிக்) கருவி ஒன்று அமைத்தார். இக்கருவியில் காகிதம் குறுக்கே நகர்ந்து செல்லும்படியும் எழுதுகோல் (pencil) மேலுங்கீழும் செங்குத்தாய் அசையும்படியும் செய்யப்பட்டிருந்தது. காகிதம் கடிகாரச் சக்கரங்களின் உதவியால்சுழன்றது. எழுதுகோல் மின்சாரக் கம்பியோடு இணைக்கப்பட்டு அதன் உதவியால் இயங்கிற்று. (தந்திக்) கம்பிக்கருவி எவ்வாறு வேலைசெய்கிறதென்பதைச் சற்று ஆராய்வோம்:—

எழுதுகோல் காகிதத்தின்மேல் பொருந்தியிருக்கும்பொழுது புள்ளி அல்லது கோடு விழுகிறது. இவ்வாறு ஒருகண்ணிமைப் பொழுது பொருந்தி இருந்தால் ஒரு புள்ளி விழும். நேரம் சற்று மிகுதிப்படின் ஒரு கோடு விழும். அயலிடத்தினின் றும் தந்தி அடிப்பவர் மின்சாரப்பொத்தானை "கடகட" "கட் கட" என்று நிறுத்தி நிறுத்தி அடிப்பதால் கம்பியின் மற் றொரு முனையிலிருக்கும் பென்சில் புள்ளிகளாலும் கோடுகளா லும் பல்வேறு தந்தி எழுத்துக்களை வரைகின்றது. இதனால் நெடுந்தொலைவிலிருந்து நமக்கு மிக எளிதிற் செய்திகள் மின் சாரக்கம்பி வழியாக வந்து சேருகின்றன. இங்ஙனமாக நிமி டத்திற்கு 60 முதல் 100 வார்த்தைகள் (சொற்கள்) வரை அனுப்பலாம்.

மோர்ஸ் தாம் கண்டுபிடித்த கம்பிச்செய்தியை மக்களுக் குப் பயன்படும்முறையில் அமைப்பதற்கு அரும்பாடுபட்டார். அதற்கு வேண்டிய பொருளுதவியின்றி இவர் மிகவும் வருந்தி னார். இதனால் இவர் தமது ஆராய்ச்சியையும் நிறுத்திவிட எண்ணினார். நல்வினையின் பயனாக 1835-ஆம் ஆண்டில் இவ ருக்கு நியூயார்க் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆசிரியர் பதவி கிடைத்தது. ஆகவே இவர் மீண்டும் தம் ஆராய்ச்சிகளை நடத்தத் தொடங்கினார். மின்சாரச் செய்தியை நெடுந்தொலை வுக்கு அனுப்பும்போது அதன் ஆற்றல் குறைந்து தந்தி அடிப் பதற்குத் தடை ஏற்பட்டது. மோர்ஸ் தளரா ஊக்கத்துடன் வருந்தி உழைத்து மின்சார ஆற்றல் குன்றாதிருக்கவும், அதனை மேன்மேலும் புதுப்பித்துக்கொண்டு நெடுந்தொலைவிற்குச் செலுத்தவும் வழிகளைக் கண்டுபிடித்தார். 1837-ஆம் ஆண் டில் ஆல்பிரெட் வெய்ல் (Alfred Veil) என்பவரது உதவி கொண்டு மோர்ஸ் தம் தந்திக்கருவிகளை நல்ல முறையில் அமைத்து அவற்றை வாஷிங்டன் (Washington) நகரில் நடந்த பொருட்காட்சிச் சாலைக்கு எடுத்துச்சென்றார். மக்கள் அவற் றைக் கண்டு வியப்பெய்தினர். ஆயினும் தந்திக் கம்பிகள் அமைப்பதில் தங்கள் பொருளைச் செலவிட எவரும் துணிய வில்லை.

மோர்ஸ் மூன்றும் முறையாக ஐரோப்பாவிற்குச்சென்று லண்டன், பாரிஸ் (Paris) முதலிய நகரங்களில் தமது ஆராய்ச் சியாற் கண்டுணர்ந்த உண்மைகளை வெளியிட்டார். ஆங்கில அறிஞர்கள் அனைவரும் இவர்தம் திறமையைப் போற்றிப் புகழ்ந்தனர். ஆயினும் மோர்ஸின் வறுமை நீங்குதற்கு வழி ஏற்படவில்லை. ஆகவே இவர் கையில் ஒரு காசுமின்றி நியூயார்க் திரும்ப நேர்ந்தது. இவர் தமது உணவிற்குங்கூடக் கடன்

வாங்க வேண்டியதாயிற்று. அந்தோ! வறுமையின் கொடுமை தான் என்னே! இன்மையின் இன்னாதது யாது உளது?"

மோர்ஸ் வாஷிங்டன் நகருக்கு மீண்டும் ஒரு முறைசென்று நகரமன்றத்தினரை யணுகித் தமக்குப் பொருளுதவிபுரியுமாறு வேண்டினர். ஆங்கு இவருக்கு மிகுந்த எதிர்ப்பு ஏற்பட்டும் இவர் தமது விடாமுயற்சியால் வெற்றிபெற்றார். வாஷிங்டனுக்கும் பால்ட்டிமோருக்கும் (Baltimore) இடையில் தந்திக் கம்பி அமைக்கும்படி மோர்ஸுக்கு உத்தரவு கிடைத்தது. இச்செலவிற்கு முப்பதாயிரம் டாலர்கள் அளிக்கப்பட்டன. இந்நற்செய்தியைக் கேட்டு மோர்ஸ் இன்பக்கடலில் மூழ்கினர். தந்திக்கம்பி வேலை முடிவுபெற்றதும் அதற்குரிய கருவிகள் வாஷிங்டன் உயர்முறைமன்றத்தின் (Supreme Court) ஓர் அறையில் வைக்கப்பட்டன. வேடிக்கை பார்ப்பதற்காக நகர மாந்தர் அனைவரும் கூடி இருந்தனர். மோர்ஸ் இறைவனிடத்து இடையறாப் பேரன்புபூண்டு ஒழுகுபவர். ஆகலின் முதன்முதலாக "எல்லாம் இறைவனால் ஆக்கப்பட்டவை" என்னும் செய்தியைத் தந்திமூலமாய் பால்ட்டிமோர் நகருக்கு அனுப்பினர். வெய்ல் என்னும் அறிஞர் அச்செய்தியைப் பால்ட்டிமோரில் பெற்றுக்கொண்டு மீண்டும் அதனைத் தந்தி மூலம் வாஷிங்டனுக்கு அனுப்பினர். அங்குக் குழுமியிருந்த மக்கள் அனைவரும் இப்புதிய வியத்தகு செயலைக் கண்டு பேருவகை எய்தினர். மோர்ஸ் 1832-ஆம் ஆண்டில் தொடங்கிய ஆராய்ச்சி 12 ஆண்டுகளுக்குப்பின் முடிவுபெற்றது. மோர்ஸின் புகழ் நாடெங்கும் பரவத் தலைப்பட்டது.

மோர்ஸினல் கண்டுபிடிக்கப்பெற்ற தந்திமுறை எடிசன் (Edison) முதலிய மின்சார வல்லுநர்களின் முயற்சியால் மிகச்சிறந்த முறையில் மாற்றி அமைக்கப்பட்டது. ஒரே தந்திப்பாதை உள்ள இடங்களில் ஒரு செய்தி கம்பியின் வழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது அதற்கு எதிராக மற்றொரு செய்தியை அனுப்பும் வழிகண்டுபிடிக்கப்பட்டது. இதற்குப்பின் ஒற்றைக் கம்பியில் ஒரே நேரத்தில் நான்கு செய்திகளை அனுப்பும் முறையும் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் தந்திப் போக்குவரத்துக்குரிய கம்பிகளின் தொகை குறைந்து செலவும் சுருங்கிற்று. இவையுமன்றிக் குறைந்த நேரத்தில் மிகுந்த செய்திகள் எளிதாய் அனுப்பமுடிந்தது.

வாஷிங்டன் தந்தி நிலையம் நிறுவிய சில ஆண்டுகளுக்குள் அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் எங்கே பார்த்தாலும் தந்திக்கம்பிகள் அமைக்கப்பட்டன. மோர்ஸுக்குச் செல்வம் வந்து குவிந்தது. இவர் தமக்கு ஓர் அழகிய மாளிகை

கட்டினர். அம்மாளிகையில் தமது அறையில் தந்திக்கருவி களை யமைத்து அவற்றின் உதவியால் இவர் உலகின் பல்வேறு இடங்களிலுள்ள மக்களோடும் தந்திப் போக்குவரத்து வைத் துக்கொண்டார். அரசியலார் இவர்க்குச் சிறந்த பட்டங்கள் வழங்கினர்கள். நகரங்கள்தோறும் இவருக்கு வரவேற்பு களும் வாழ்த்துக்களும் அளிக்கப்பட்டன. "பணியுமாம் என் றும் பெருமை" என்பதற்கிணங்க மோர்ஸுக்குச் செல்வம் வந்துற்ற காலையும் செருக்கின்றி மிகவும் பணிவுடன் நடந்து கொண்டார். இவர் தாம் வறுமைப்பிணியால் துன்புற்றதை ஒருபொழுதும் மறந்துவிடவில்லை. இவர் ஓவியம் வரைபவர் களைப் பெரிதும் ஆதரித்துவந்தார். அவர்களது படங்களைப் பெரும் பொருள்கொடுத்து வாங்கி ஊக்கிவந்தார். 1871-ஆம் ஆண்டில் அறிஞர் பலர் ஒருங்குசேர்ந்து நியூயார்க் நக ரில் இவரது உருவச்சிலை ஒன்று அமைத்து இவரைப் பெரு மைப்படுத்தினர். கொடை வள்ளலாகிய மோர்ஸ் 1872-ஆம் ஆண்டில் இறைவன் திருவடிநிழலை எய்தினர்.

> "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
> ஊதிய மில்லை உயிர்க்கு"

ஆனைந்து

[திரு. துடிசைகிழார் அ. சிதம்பரனர்]

I முகவுரை அல்லது எல்லோருக்கும் பொதுவான ஆனைந்து.

"ஆனைந்து" என்பது தமிழ்மொழி. தென்தமிழாளர் ஆனைந்து என்றும், வடதமிழாளர் "பஞ்ச கௌவியம்" என் றும் கூறுவர்.

"ஆன் ஐந்து" "பஞ்ச கௌவியம்" என்ற பதங்களுக்குச் சாதாரணமாக எல்லாரும் பசுவினிடத்திலிருந்து உண்டாகும் ஐந்து பொருள்கள் என்றுதான் பொருள் கொண்டிருக்கி ருர்கள்.

ஒருவரும் ஐந்து பொருள்கள் என்னென்ன என்று நிதா னித்துப் பார்த்தவர்கள் அல்ல. ஆவினிடத்திலிருந்து ஐந்து பொருள்கள் தனித்தனியாக ஐந்து இடங்களிலிருந்து உண் டாகவேண்டும். அப்படி உண்டாகின்றனவா அப்பொருள் கள் என்று பார்த்தவர் தாமும் இல்லை.

ஆனைந்தோ சிவபெருமானுக்கு உகந்தது. அவன்

"ஆவிலைந்துகந்தாடும் பரமன்" ஆனைந்து இல்லாவிட்டால் சிவபிரானுக்கு வேறு எதனைக்கொண்டு முழுக்காட்டினாலும் பயன் இல்லை.

தமிழ்வேதங்களிலும், ஆகமங்களிலும், ஆனைந்தைப்பற்றியே சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

இத்தகைய சிறப்புவாய்ந்த ஆனைந்தை, உலகில் சிலபேர் "சாணிச்சாறு" என்று ஒதுக்கிவைத் திருக்கிறார்கள்.

வைணவர்கள் கங்கையைச் "சடைச்சார்" என்று கூறி அதனில் முழுகாதும் அதன் பயனைப் பெறுதும் போவது போல என்று கூடச் சொல்லுவதற்கில்லை. ஏனென்றால் சாணி சேர்ந்த ஆனைந்து "சாணிச்சாறே".

தமிழ் நாட்டில் சைவர் இல்லங்களிலும் ஏனையோர் இல்லங்களிலும் எல்லாச் சுப அசுப காரியங்களிலும் ஆனைந்து இல்லாமல் முடியாது.

திதிகாரியங்களிலும் ஆனைந்து உண்டு.

ஆனால், ஆரியர் இல்லங்களிலும் ஆரிய மதத்தைப் பின்பற்றின தமிழர் இல்லங்களிலும் திதிகாலங்களில் ஆனைந்து உபயோகிப்பதே இல்லை.

தீட்டைப் போக்குகிறதற்கு மாத்திரம் உபயோகிக்கிறார்கள். தீட்டு என்பது இழவுத்தீட்டு, குழந்தை பிறந்த தீட்டு முதலியன.

சிவபெருமானுக்கு உகந்த ஒன்றை ஒரு வகுப்பார் "சாணிச்சாறு" என்று இகழ்வதற்கும், பிராமண மதத்தை அநுசரித்தவர்கள் திதிகாரியங்களில் உபயோகப்படுத்தாமல் இருப்பதற்கும் காரணம் என்ன என்று ஆராயத்தொடங்கினேன்.

ஆனைந்து (=பஞ்ச கௌவியம்) என்பது சாதாரணமாக (1) பால் (2) தயிர் (3) நெய் (4) கோசலம் (5) கோமயம் இவ்வைந்துமே என்று தற்காலம் பலர் கொண்டிருக்கிறார்கள். அவ்வண்ணமே கூட்டியும் உபயோகிக்கிறார்கள்.

ஆனைந்தின் ஐந்து பொருள்களை மேற்சொன்ன பிரகாரம் தெரிந்துகொண்டவுடன், சிலபேர் அதனைச் "சாணிச்சாறு" என்று தள்ளிவைத் திருப்பதற்குக் காரணம் விளங்கிவிட்டது; ஏனென்றால் பசுவின் சாணியும் மூத்திரமும் சேர்ந்ததனாலே தான்.

ஆனைந்தை ஒதுக்கிவைத் திருப்பவர்களைத் தவிர உபயோகப்படுத்துகிறவர்களைக் கவனித்துப் பார்த்து வந்தேன்.

அவர்களும் வேண்டா வெறுப்பாகக் கையில்வாங்கி வாயில் விடும் பாவனையாய்க் கீழே விட்டுவிடுகிறார்கள். ஆசாரியரும் அதனைக் கவனியாது இருந்து விடுகிறார்.

போகட்டும், இதுதான் இப்படி என்றாலோ! கோயில் களில் சிவபெருமானுக்கு ஆனைந்தைக்கூட்டி (அஃதாவது சாணி, மூத்திரம் இவைகளைக் கூட்டி) உபயோகப் படுத்து கிறார்களா என்றால் அதுவும் காணோம்.

பால், தயிர், நெய், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், இவை களைக்கூட்டி ஆட்டுகிறார்களேயன்றி, எந்தச் சிவன் கோயிலி லும் ஆனைந்து கூட்டி ஆட்டுகிற வழக்கமே இல்லை.

நானும் பல குருக்கள்மாரைக் கேட்டேன். அவர்கள் "பஞ்ச கௌவியம் கூட்டி ஆட்டும் வழக்கம் இல்லை. ஆனால் யாகசாலையில் உபயோகப்படுத்துவது உண்டு. அது வேள்வி செய்யும் குருக்களின் சுத்தியின்பொருட்டு. சிவபெருமா னுடையை முழுக்குக்கு பஞ்ச கௌவியம் கிடையாது" என்று கூறினார்கள்.

ஆவிலைந் துகந்தாடும் பரமனுர்க்கே ஆனைந்து இல்லையென் றால் இந்தக் குருக்கண்மார் செய்யும் முழுக்குக்களெல்லாம் அவமேயாகும். ஏன் அப்படி ஆயிற்று என்றால் குருக்கள் மார்கள் எல்லாம் ஆரிய ஸ்மிருதியைப் பின்பற்ற ஆரம்பித்தார் கள். அந்தக் காலந்தொட்டு ஆனைந்து நின்றுவிட்டது. ஆகை யால், இன்னும் எனக்கு இதில் சந்தேகம் அதிகமாயிற்று.

மேலும், இன்னொரு ஐயமும் உண்டாயிற்று. அஃதாவது, ஆவினிடத்திலிருந்து ஐந்து பொருள்கள் உண்டாக வேண் டுமே; அவை ஐந்து இடங்களிலிருந்து வந்தவையா யிருக்க வேண்டுமே; என்பது.

பசுவின் மடியிலிருந்து பாலும், பசுவின் நீர்த்தாரையி லிருந்து கோசலமும், பசுவின் குண்டியிலிருந்து கோமயமும் ஆக மூன்று இடங்களிலிருந்து மூன்று பொருள்களேதானே பெறுகிறோம்; ஐந்து பொருள்கள் எப்படி ஆயிற்று? மூன்று ஐந்தாகுமா?

ஒரு சமயம் பசுவின் மூக்குநீர், வாய்நீர், இரண்டையும் சேர்த்தால் ஐந்து ஆகலாம்; அப்படியும் காணோம். மூன்று பொருள்களை ஐந்தாக உலகத்துக் காட்டும் மாயவித்தையே வித்தை.

தற்காலம் ஆரியக் குருக்கள்மாரும் அவர்களைப் பின்பற் றின தமிழ ஆசாரியர்களும் இம்மூன்றிடங்களில் இருந்து

உண்டாகும் மூன்று பொருள்களோடு, பாலின் திரிபாகிய தயிர், நெய் இரண்டையும் சேர்த்து ஐந்து என்ற கணக்குக்கு ஒப்படைத்துவிட்டு அதனைப் பஞ்ச கௌவியம் என்று வழங்கு கிறார்கள். பாலின் திரிபு தயிர், மோர், வெண்ணெய், நெய், என்று நான்காயிருக்க அவைகளில் இரண்டைமாத்திரம் எடுத்துக்கொண்டு, பாக்கி இரண்டையும் தள்ளிவிடுவானேன்?

சிவதருமோத்திரமோ பால், தயிர், நெய், கோசலம், கோமயம், கோரோசனை இவ்வாறையும் பஞ்ச கௌவியம் என்று கூறுகிறது. இஃது ஐந்தை ஆறாகக் காட்டுகிறது. இது வும் ஒரு விந்தையே. ஒரு காலத்திலும் ஐந்து ஆறு ஆகாது, மூன்றும் ஐந்து ஆகாது. ஆறு பொருள்களைக்கூறி பஞ்சகௌவி யம் என்பது எப்படி என்பது தெரியவில்லை. வாசகர்களே அறிந்து கொள்ளுவார்களாக. சிவதருமோத்திரப் பிரகாரம் பார்த்தாலும் பால், கோசலம், கோமயம், கோரோசனை நான்கு பொருள்களே ஆகின்றன; ஐந்து ஆகவில்லை. நான்கும் ஐந்து ஆகாது.

மேலும் வழக்கத்தில், ஒருவரும் பஞ்ச கௌவியத்திற்குக் கோரோசனை சேர்ப்பது கிடையாது. வழக்கத்திலில்லாத பொருள்களைச் சிவதருமோத்திரம் கூறுவது ஏட்டுச் சுரைக் காயாய் முடிந்தது.

இதுவரை கூறிவந்தவைகளைக் கொண்டு உலகத்தில் "சாணிச்சாறு" என்று ஆனைந்தை அறவே நீக்கிவிட்டவர்கள் ஒரு பிரிவார். அந்தச் "சாணிச்சாறை" உபயோகப்படுத்து பவர்கள் இன்னொரு பிரிவார் என்று கண்டோம். மேற் சொன்ன இரு பிரிவார்களைத்தவிர சுத்தத் தமிழ் முறையைக் கையாண்டுவரும் சிலபேர்களைக் கவனித்துவந்தேன். அவர் கள் எல்லாம் கோசலம், கோமயம் இவைகளை உபயோகிப் பதே இல்லை. ஆனால், அவர்கள் பால், தயிர், நெய், மோர், வெண்ணெய், இவைகள் ஐந்தையும் ஆனைந்தாகக் கொண் டிருக்கிறார்கள்.

இவ்வைந்து பொருள்களும் ஒரே இடத்திலிருந்து உண் டானவைகள்.

இவ்வழக்கமானது ஒருவாறு ஒத்துக்கொள்ளக் கூடிய தாயிருக்கிறது.

ஆவின் மூன்றிடங்களில் இருந்தோ, நான்கிடங்களில் இருந்தோ உண்டாகும் "மூன்று" அல்லது "நான்கு" பொருள் களை "ஐந்து" என்று கூறுவதைவிட ஒரே இடத்திலிருந்து

உண்டாகும் ஒரு பொருளை அஃது ஐந்தாக மாறும்போது ஆனைந்து என்று கூறுவது இயற்கையாகும்.

இவ்வழக்கத்திற்கு ஆதாரமுண்டா? என்று தமிழ்மறைகளை ஆராயப்புக்கேன். ஆராய்ந்தபோது,

"ஆடினாய் நறு நெய் யொடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலத்தே"

"நல்வெண்ணெய் விழுது பெய்து
ஆடுதிர் நாடொறும்"

"வெண்ணெய் ஆடிய பெருமானடி"

என்ற வாக்கியங்கள் அச்சுப் புத்தகங்களில் அகப்பட்டன. பால், தயிர், நெய், வெண்ணெய் இந்த நான்கு பொருள்களுக்குத் தமிழ்மறை ஆதாரங்கள் கிடைத்தன. மோருக்கு மாத்திரம் அச்சுப் புத்தகங்களில் அகப்படவில்லை.

வெண்ணெயை எப்போது சமயாசாரிகள் சொன்னார்களோ அப்போதே அவர்கள் கோசலம் கோமயத்தைக் கூறியிருக்க மாட்டார்கள் என்ற தீர்மானம் எனக்கு உண்டாயிற்று.

ஆகையால், தமிழ் மறைகளின் ஏட்டுச் சுவடிகளை ஆராயப்புக்கேன்.

அவைகளில்:—

"பாலு நற்றயிர் நெய் வெணெய் மோர் பல வாட்டி"
(அப்பர்—கடலூர் வீரட்டம்—9)

"பாலொடு நெய் தயிர் மோர் பயின்றாடும் பரமேட்டி"
(சம்ப—ஆரூர்—2)

"பாலுள் நெய் முதலாமிக்க பசுவிலைந்தாடு வோனே"
(அப்பர்—அண்ணாமலை—9)

என்ற வாக்கியங்கள் காணப்பட்டன. இவைகள் வறுமையாளன் ஒருவனுக்குப் புதையல் கிடைத்ததுபோல ஆயிற்று. இவ்வாக்கியங்கள் ஆனைந்து இன்னதென்பதை தெள்ளத் தெளிய ஐயமற விளக்கிக் காட்டின.

பாலுள் நெய் முதலாமிக்க என்றதால் பாலிலிருந்து உண்டாகும் தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலிய பொருள்களோடு பாலும் சேர்ந்து பசுவில் ஐந்து ஆடுவோனே என்று அப்பர் பெருமான் கூறியதாகக் கொள்ளக் கிடைக்கின்றது.

ஆகையால் ஆனைந்து இன்னதென்றே அறியாது ஆரியர்களுடைய ஸ்மிருதி மயக்கில்கிடக்கும் தமிழர்களுக்கு அறிவு கொளுத்துவான் இந்நூல் எழுதத் தொடங்கினும்.

சைவர்களாகிய தமிழருக்குச் சமயாசாரிகளும் சந்தானசாரியர்களுமே குருமார்கள் ஆவார்கள்.

தமிழ் நாட்டிலுள்ளோரை உய்வித்தற் பொருட்டே அவர்கள் எல்லோரும் அவதாரம்செய்து, சைவசமய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு, அவ்வொழுக்கங்களைப் பலரும் காணும்படி நடத்திக்காட்டிப் போனார்கள்.

அவர்களைப் பின்பற்றி நடப்பதே தமிழர்களாகிய நம்மவர் கடமை.

ஸ்மிருதி ஆசாரம் தமிழர்களுக்கு ஒவ்வாது; ஆரியபிராமணருக்குத்தான் ஸ்மிருதி முக்கியம்.

மகமதியன் குரானின் படியும், கிறிஸ்துவன் பைபிளின் படியும் தான் நடப்பான்.

மகமதியனை நாம் குருவாகக் கொண்டால் அவனுடைய குரான்படிக்குத்தான் கிரியைகளைச் செய்வான். அதுபோல, ஸ்மார்த்தர்களைக் குருவாக வைத்துக்கொண்டால் அவர்கள் ஸ்மிருதிப்படிக்குத் தான் செய்வார்கள்.

ஆகையால் தமிழர்களாயிருப்போர் தமிழ்மறை ஆகமங்கள் தெரிந்து தமிழர் முறைப்படி நடக்கும் ஒருவனைக் குருவாகக் கொள்ளவேண்டுமேயொழிய வேறின்று.

ஆகையால் சமயாசாரிகள் கூறியவண்ணம் ஆனைந்தைக் கூட்டி உபயோகிப்பதே தமிழர் கடமை.

தமிழ் மறைப்படி ஆனைந்தானது எல்லாருக்கும் பொதுவானது. பால், தயிர், நெய், மோர், வெண்ணெய் இவைகளை உபயோகிக்காத மகமதியனாவது, கிறிஸ்தவனாவது கிடையாது.

கோசலம் கோமயம் சேர்ந்த ஆனைந்தோ பல பேருக்குப் பகை. மகமதியனும் கிறிஸ்துவனும் தொடமாட்டான். தமிழ் நாட்டில் உள்ள வைணவர்களே அதனைச் "சாணிச்சாறு" என்று ஒதுக்கிவைத்து விட்டார்கள். ஆனால் ஒதுக்கிவைத்த அவர்களும் தமிழர் ஆனைந்தாகிய பால், தயிர், நெய், மோர், வெண்ணெயை உபயோகிக்கிறார்கள்.

ஆகையால், எல்லா மதத்தாருக்கும் பொதுவானதும், எல்லாராலும் அருவருக்கப்படாததும் ஆன தமிழர் ஆனைந்தே சிறந்தது. அதுதான் சிவபெருமானுக்கும் உகந்தது.

தமிழ்நாட்டில் உள்ளவர்களுடைய ஐயம் நீங்கும்படி அடுத்த இயல்களில் ஸ்மிருதியில் சொன்னவைகளையும், பத்ததிகளில் கூறியவைகளையும், தமிழ்மறைகளில் கூறியவைகளையும் கூறுகின்றோம். அப்போதாவது அவர்கள் ஐயம் தெளிவார்களென்று நம்புகிறோம்.

ஆனைந்து=(ஆன் + ஐந்து)

எனப் பிரித்து, ஆன் என்பதை ஆகுபெயராகக்கொண்டு பால் எனப் பொருள்செய்து, ஐந்து ஆக்களின் பால், அதாவது, நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை, என்ற பசுக்களிலிருந்து கறந்தெடுத்த பால் என்று கொள்வாருமுண்டு.

இந்த மாதிரி பொருள் கொள்ளுவது, "பாலாம் ஐந்துடனும் பரமனார்" என்னும் சம்பந்தர் தேவாரத்துக்கு ஒத்து இருக்கிறது.

ஆக்களின் ஐந்து பிரிவுகள் அவைகளின் நிறபேதத்தால் உண்டானவை.

நந்தை—கபிலநிறமும்
பத்திரை—கருப்பு நிறமும்
சுரபி—வெண்ணிறமும்
சுசீலை—புகை நிறமும்
சுமனை—சிவப்பு நிறமும் உடையன.

இதனைச் சண்டேசுர நாயனார் புராணத்திலும் அறியலாம்.

2. ஆரியர் ஸ்மிருதிப்படி-ஆனைந்து

கலியுகத்துக்கென எழுதப்பட்ட 18 ஸ்மிருதிகளில் ஒன்றாகிய பராசர ஸ்மிருதியில் பிராயச்சித்த காண்டம் 8-ம் அத்தியாயத்தில் பஞ்சகௌவியத்தைப் பற்றிக் கூறும் தமிழ் மொழி பெயர்ப்பை ஈண்டு வரைகின்றோம் :—

(சுலோகம் 28)

கோமூத்ரம், கோமயம், பசுவின்பால், பசுவின் தயிர், பசுவின்நெய், தர்ப்பை ஜலம் ஆகிய இவைகள் கூடியது பாபத்தைப் போக்குவதும் பரிசுத்தமும் ஆன பஞ்சகௌவியம் என்று பெரியோர்களால் சொல்லப்பட்டது.

(சுலோகம் 29—30)

கருத்த பசுவின்மூத்திரமும், வெளுத்த பசுவின் சாணியும், சிவந்த பசுவின்பாலும், அதிக ரத்த நிறமுடைய பசுவின் தயிரும், கபிலைப் பசுவின் நெய்யும், கிரகிக்கத்தகும்.

இவ்விதமான பசுக்கள் கிடையாத பட்சத்தில் கபிலைப் பசுவினுடைய நெய், தயிர், முதலிய சகலமும் கிரகித்துக் கொள்ளத்தகும்.

பஞ்ச கௌவியப் பிரமாணம் 30—31

கோமூத்ரம், 1 பலமும், பெருவிரலின் மேற்பாதி பாகத்தளவு கோமயமும், ஏழுபலம் பாலும் மூன்றுபலம் தயிரும் ஒருபலம் நெய்யும், ஒருபலம் தர்ப்பை ஜலமும் சேர்க்கத் தக்கனவாம்.

(சுலோகம் 32—33)

கோமூத்ரத்தைக் காயத்திரியினாலும், கோமயத்தை "கந்தத்துவாரம்" என்ற இருக்கினாலும், பாலை "ஆப்பியாஸ்வ" என்னும் மந்திரத்தாலும், தயிரை "ததிக்ராவண' என்னும் மந்திரத்தாலும், நெய்யை "சுக்கிரமஸி" என்ற மந்திரத்தாலும், தர்ப்பை ஜலத்தை "தேவஸ்யத்வா" என்ற மந்திரத்தாலும் செபித்து பஞ்சகௌவியத்தை ஒன்றாகச்சேர்த்து ஓமத்திற்காக அக்கினியின் சமீபத்தில் அதை ஸ்தாபிக்கவேண்டும்.

(சுலோகம் 33—34)

அக்கினியின் சமீபத்தில் வைக்கப்பட்ட பஞ்ச கௌவியத்தை "ஆபோ ஹிஷ்டா" என்று தொடங்கியுள்ள மூன்று இருக்குகளினால் ஒன்றாகக் கலக்கி "மாநஸ்தோகே" என்னும் ஓர் இருக்கினால் அபிமந்திரிக்கவேண்டும்.

(சுலோகம் 34—35)

குறைந்தபட்சம் ஏழு தர்ப்பைகளை உடையவைகளும், அறுக்கப்படாத நுனியை உடையவைகளும் ஈரமுள்ளவைகளும், அல்லது நிழலில் உலர்த்தப்பட்டவைகளா யிருக்கையால் கிளியின் வர்ணம்போன்ற வர்ணத்தை அடைந்தவைகளுமாயுள்ள தர்ப்பைகளால் விதிப்படி ஓமம் செய்யவேண்டும்.

தர்ப்பங்களால் எடுத்து பலாச இலைகளால் தேவதைகளை உத்தேசித்து பஞ்சகௌவியத்தை ஓமம் செய்யவேண்டும் என்று பிரஜாபதி சொன்னார்.

(சுலோகம் 35—36)

"இராவதி" என்று தொடங்கியுள்ள மூன்று இருக்குகள் "இதம் விஷ்ணு" "மாநஸ் தோகே" "சமக்னி" என்னும் இருக்குகள் ஆகிய இவைகளானும் ஓமம்செய்து மிகுந்ததை பிராமணன் பானம் செய்யக்கடவன்.

(சுலோகம் 36—37)

பிரணவத்தைச் சொல்லிக் கையிட்டுக் கலக்கி, பிரணவத்தைச் சொல்லி சமித்தினால் கடைந்து, பிரணவத்தைச் சொல்லி எடுத்து, பிரணவத்தைச் சொல்லிப் பானம் செய்ய வேண்டும்.

(சுலோகம் 37—38)

மனிதர்களுடைய சரீரத்தில் எலும்பு, தோல் இவைகளைப் பற்றியதாகிய எல்லாப் பாபங்களையும் கிளர்ந்து எரிகிற அக்கினியானது கட்டையைத் தகிப்பதுபோல பிரமகூர்ச்ச பஞ்ச கௌவியமானது கொளுத்தும்.

கோவத முதலிய தோஷமானது அதிர்ஷ்டரூபமாகிய ஆத்மாவைப்பற்றி இருந்து பிராயச்சித்தத்தினால் உண்டாகின்ற அதிர்ஷ்டத்தால் நசிக்கிறது.

அதுபோல, புசிக்கலாகாத அன்னத்தை புசிப்பதனால் உண்டாகும் தோஷமானது தோலாகவும் அஸ்தியாகவும் சரீரத்தில் அமைந்திருக்கையில், பஞ்சகௌவியமும் அப்படியே சரீரத்தில் அமைந்து, காஷ்டத்தைப்பற்றிய அக்கினியானது அதைத் தகிப்பதுபோல அந்தத் தோஷத்தைத் தகிக்குமென்றறிக.

பிர்ம கூர்ச்சத்திற்குக் கால நிர்ணயம்

சதுர்த்தசியில் உபவாசமிருந்து, பௌர்ணமியில் பிர்ம கூர்ச்சத்தைச்செய்து பானம் செய்யவேண்டுமென்று பிரஜாபதியும், அப்படியே ஜாபாலியும், நதிதீரத்திலாவது, பசுத்தொழுவத்திலாவது புண்ணியகரமான ஸ்தானங்களிலாவது பிர்ம கூர்ச்சத்தைச் செய்யவேண்டுமென்று சாதாதபரும் சொன்னார்கள்.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

தலைமைப் பேருரை*

காஞ்சிபுரமாகிய இத்திருத்தலம் மிகப் பழைமையுடையது; அயோத்தி, மாயா, மதுரா, காசி, காஞ்சி, துவாரகை, அவந்திகை என்னும் ஏழு திருத்தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது; உமாதேவியார் "கரந்தரும் பயனிதுவென வுணர்ந்து கம்ப மேவிய உம்பர் நாயகனைப்" பூசிக்கப் பெற்றது; அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய திருக்குறிப்புத்தொண்ட நாயனார் திருத்தொண்டு செய்து வீடு பெற்றது; பாங்கினொடு பலதளிகளும் விளங்கப் பெறுவது; திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சமய குரவர் நால்வர்களாலும் போற்றப்பெற்றது; முடியுடைத் தமிழ்வேந்தர் தலைநகராகக்கொண்டு அரசு செலுத்தியது; ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியாரால் குமரகோட்டத்து முருகப்பெருமான் திருவருள்பெற்று ஸ்ரீ கந்தபுராணம் பாடப்பெற்றது. ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் இத்திருத்தலத்திலிருந்தே சிவஞானமாபாடியம் இயற்றியருளியதாகச் சொல்லப்பெறுகின்றது. இன்னும் அளப்பிலாப் பெருமைவாய்ந்த இத்திருத்தலத்தின்கண் சைவசித்தாந்த மகா சமாஜம் தனது முப்பத்தோராம் ஆண்டு நிறைவுவிழாவை நிகழ்த்தப் பெறுதல் கழிபேருவகை பயப்பதாகும்.

க. சைவசமயத்தின் பெயர்கட்குரிய காரணம்

நமது சமயம் சைவம், வைதிக சைவம், சித்தாந்தம் என்னும் பெயர்களால் வழங்கப்பெறுகின்றது. "சைவம்" என்னும் சொல் சிவத்தொடு சம்பந்தமுடைமையானும், "வைதிக சைவம்" என்னும் சொல் வேதம் ஆகமம் என்னும் இரு முதனூல்களையும் பிரமாணமாகக் கொண்டொழுகுதலானும், "சித்தாந்தம்" என்னும் சொல் முடிந்த முடிபாகிய உண்மைகளை விளக்குதலானும் போந்த காரணப்பெயர்களாகும்.

[*இஃது 1, 2, 3-1-'37-ல் காஞ்சிபுரத்தில் கூடிய சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 31-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அவைத்தலைவர் சித்தாந்த ஆசிரியர் உயர்திரு. ந. சிவதருநாத பிள்ளையவர்கள் நிகழ்த்தியது.]

உ சைவசமயத்தின் பழைமை

சைவசமயம் இன்ன காலத்துத் தோன்றியது என்று அறியவாராத பழைமையுடையது. பழந் தமிழ் நூல்களாகிய சங்க இலக்கியங்களில் சைவக் கொள்கைகளும், சிவபிரானது உயர்வும் ஆண்டாண்டுக் காணப்பெறுகின்றன. மணிமேகலையில் சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதையில்,

"இருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையு முயிருமாக் கையுமாய்க்
கட்டிநிற் போனுங் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறுதா னொன்றில் லோனும்
அன்னோ னிறைவ னாகுமென் றுரைத்தனன்"

எனச் சைவக் கடவுள் இயல்பு விளக்கப்பெற்றிருத்தல் காண்க. இன்னோரன்ன பல சைவ உண்மைகளைச் சங்க இலக்கியங்களிற் பரக்கக் காணலாம்.

இனிச் சைவ சித்தாந்தத்திற் கொள்ளப்படும் தத்துவ உண்மைகளிற் பலவற்றைத் தமிழ் மொழி எழுத்துக்களின் அமைப்பிலும் இனிது காணலாம். அகரமாகிய தனி உயிர் கடவுளாகவும், ஏனைய கடவுள் அடிசார்ந்த நான்மூறி மூவகை உயிர்களாகவும், மெய் அறிவில் பொருளாகவும், சார்புயிர் இரண்டும் நல்லார் பொல்லார் என்னும் இருவகை உயிர்களாகவும், ஆய்தம் மெய்யின் நுட்பமாகிய நுண்ணுடலாகவும் கொள்வது பொருத்தமுடையதாகின்றது. ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய நூன்மரபு "ஔகார விறுவாய்ப் பன்னீரெழுத்தும் உயிரென மொழிப" என்னும் சூத்திரவுரையுள் "அகர உயிரைப்பற்றிக் கூறுங்கால், மெய்பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்று மெய்களை இயக்குமேல் உயிரென வேறோர் எழுத்தின்றாம் பிறவெனின், மெய்யினிற்கும் உயிரும் தனியே நிற்கும் உயிரும் வேறென உணர்க" என்பன முதலாகச் சைவசித்தாந்தத்திற் கூறப்படும் உயிர், மெய் (உடம்பு) என்பன வாதிய பொருள்களில் வைத்து உரைத்தல் காண்க. இதனால் அநாதி இயற்கையாகிய தமிழ் மொழியும் சித்தாந்தமும் ஒன்றோடொன்று தொடர்புற்று விளங்குதலால் தமிழ் முந்தியதோ சித்தாந்தம் முந்தியதோ என்று ஐயுறுதற் கிடனாகின்றது.

ரு. பொருளாராய்ச்சியும் இலக்கணமும்

சித்தாந்தம் பொருளுண்மைகளை உரைப்பிரமாணம் ஒன்றேகொண்டு நிச்சயிக்கவில்லை. காட்சியோடு கருதல் அளவையுங் கொண்டே நிச்சயித்திருக்கிறது. உலகில் காணப்படும் பொருள்களிற் சில அசைவித்தால் அசையும் சடப் பொருள் (அறிவில் பொருள்)களாகவும், சில அறிவித்தால் அறியும் சித்துப்பொருள் (அறிவுப் பொருள்)களாகவும் இருத்தலானும், இவ்விரு பொருள்களையும் ஒன்றாக இணைத்துக் காரியப்படுத்துவான் ஒருவினைமுதல் பேரறிவும் பேராற்றலு முடையோனாய் இருத்தல்வேண்டுமாதலாலும், ஆகவே அறிவுடைப் பொருள் ஒன்று, அறிவித்தால் அறியும் அறிவுடைப் பொருளொன்று, அறிவித்தாலும் அறியமாட்டாத அறிவில்பொருளொன்று ஆக மூன்று பொருள்களின் உண்மை தெள்ளிதிற் புலனாகின்றது. இவற்றையே பதி பசு பாசம் எனச் சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன. இன்னும் சடப்பொருள்களை நுணுகி ஆராயும்வழி காணப்படும் உடம்பு, கருவி, உலகம், போகம் எனக் கூறப்படும் தனுகரண புவன போகங்கள் உயிரின் அறிவு விளக்கத்திற்கு ஏதுவாகக் காணப்படுதலானும், உயிரின் அறிவோடு ஒற்றித்து நின்று அறியாமையைச் செய்யும் பொருள் தனுகரண போகங்கள் என்று கூறுதல் பொருந்தாமையானும், அறியாமையை விளைக்கும் பொருள் வேறொன்று வேண்டப்படுவதாகின்றது. இனி உயிர் வருக்கங்கள் இன்பம் துன்பம் என்னும் இரண்டனையும் கலந்து அநுபவித்தலால் அவைகட்குக் காரணமும் வேண்டப்படும். தனுகரண புவனபோகங்கள் காரியமாயிருத்தலின் அவற்றிற்குக் காரணம் மாயை என்று கொள்ளப்படும். தனுகரண புவன போகங்கள் சுத்தமும் அசுத்தமுமாக இருவகைப்படக் காணப்படுதலின் அவற்றிற்குக் காரணமாகிய மாயையும் சுத்த மாயை அசுத்த மாயை என இருவகையாகக் கொள்ளப்படும். இவ்வாராய்ச்சியால் புலனாவது பதி என ஒரு பொருளும், பசுவென ஒரு பொருளும், பாசத்தின் வகையாக ஆணவம், கன்மம், சுத்த மாயை, அசுத்த மாயை என நான்கு பொருள்களும் ஆக மொத்தம் ஆறு பொருள்களேயாம். இதனை "ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை யிரண்டு - ஆக விவை யாறு தியில்" என்று திருவருட் பயன் என்னும் சித்தாந்த நூல் விளக்குகின்றது. ஏகன் என்னும் பதிப்பொருள் ஒன்றே. அநேகன் என்னும் பசுக்கள் எண்ணிறந்தன. இங்ஙனம் ஆராய்ச்சி முறையில் பொருள் உண்மைகளைச் சித்தாந்தம் உணர்த்தும் முறைமையினை ஒருதாரணத்தால் கண்டு கொள்ளலாம்

சிவஞானசித்தியார், உயிரையும், உடல் முதலியவற்றையும் கூட்டுவிக்கும் பொருள் அவை இரண்டற்கும் வேருக வேண்டப்படும் என்பதனை,

"புத்திமற் காரி யத்தால் பூதாதி புருடன் ருனும்
அத்தனு கரணம் பெற்ருல் அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடு மதனுல் மாயைக் குணர்வொன்று மல்லை யென்றே
வைத்திடு மதனு லெல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்"

—சித்தியார்

என்று பரிசேட அளவைகொண்டு எவ்வளவு அழகாகக் கூறியிருக்கின்ற தென்பதை நோக்குங்கள்.

இனிச் சித்தாந்தம் இங்ஙனம் பொருளுண்மைகளை ஆராய்ச்சி செய்த பின்னர், பொருள்களின் இலக்கணங்களை யும் தெள்ளிதின் உணர்த்தும். இறைவன் தன்னுண்மையில்,

"சிவனரு வுருவு மல்லன் சித்தினே டசித்து மல்லன்
பவமுதற் ெருழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
தவமுற் லியோக போகந் தரிப்பவ னல்லன் ருனே
இவைபெற யியைந்து மொன்று மியைந்திடா வியல்பி னுனே"

—சித்தியார்

என்று சொல்லப்படினும், ஆன்மாக்களை உய்வித்தற்பொருட் டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் அவன் செய்து போதருகின்ருன். ஆகவே, இறைவனுக்கு யாதொரு தொழிலும் செய்யாது அறிவே சொரூபமாயிருக்கும் நிலை சொரூப இலக்கணமும், ஆன்மாக்கள் பொருட்டு ஐந்தொழில் செய்யும் நிலை தடத்த இலக்கணமும் ஆகின்றன. இங்ஙனம் பசு, பாசங்களுக்கும் இலக்கணம் வரையறை செய்யப்பெற்றிருக்கிறது. இவ்விரு வகை இலக்கண முணராக்கால் "இருநிலனய்த் தீயாகி நீரு மாகி இயமான ஞயெறியுங் காற்று மாகி" என ஓரிடத்திலும் "விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர் விண்ணு நிலனுந் திரிதரு வாயுவல்லர் செறிதீயுமல்லர் திகழ்நீரு மல்லர் தெளிவின்" என மற்ருேரிடத்திலும் ஒன்றுக்கொன்று மாறு தலான வாக்கியங்கள் காணப்பட்டபொழுது ஒன்றனைக் கொண்டு மற்ருென்றனை இகழவேண்டிவரும். இவ்வித இலக் கண ஆராய்ச்சி மற்றைச் சமயத்தினும் காணப்படவில்லை. சில சமயங்கள் விவகாரத்திற்காகச் சில இலக்கணங்களைக் கூறிப் பின்னர் பாரமாத்திகத்தில் அவைகள் இல்லையென்று கூற நிற்கும்.

௪. சித்தாந்த நூல்களும் பாடியமும்

சித்தாந்த உண்மைகளை விளங்கும் நூல் வடமொழியில் சிவாகமங்களும், தென்றமிழ் மொழியில்,

"உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மைப் பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமில்லா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

என்றபடி திருவுந்தியார் முதலிய பதினான்கு நூல்களாகும். இவற்றுள் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்னும் இருநூல்களும் தலைசிறந்தவையாகும். இவற்றின் சார்பாகப் பிற்காலத்து ஆன்றோர்களாற் பல நூல்கள் இயற்றப் பெற்றிருக்கின்றன. வடமொழியில் வியாசரால் இயற்றப்பெற்ற வேதாந்த சூத்திரத்திற்கு ஏகான்மவாதபரமாக ஸ்ரீ சங்கராசாரியராலும், விசிட்டாத்வைதபரமாக ஸ்ரீ இராமாநுஜாசாரியராலும், சிவாத்வைதபரமாக ஸ்ரீநீலகண்ட சிவாசாரியராலும் பாடியங்கள் இயற்றப் பெற்றிருப்பதுபோல வடமொழிச் சிவஞான போதத்திற்கு ஸ்ரீசிவாக்கிரயோகிகளாலும், தென் மொழிச் சிவஞானபோதத்திற்கு ஸ்ரீமாதவச்சிவஞானயோகிகளாலும் பாடியங்கள் இயற்றப்பெற்றிருக்கின்றன. வடமொழியில் இயற்றப்பெற்றுள்ள பாடியங்கள் வடமொழிப் பிரமாணங்களையே பிரமாணமாகக் கொண்டியற்றப் பெற்றுள்ளன. ஸ்ரீ மாதவ சிவஞானயோகிகளால் இயற்றப்பெற்ற திராவிட மாபாடிய மொன்றே வடமொழிவேதாகம உபநிடதங்களையும் தென்றமிழ் மொழியிலுள்ள பன்னிருதிருமுறைகள், திருக்குறள் முதலிய நூல்களையும் தழுவித் திட்பமும் நுட்பமும் செறிய இயற்றப் பெற்றிருக்கிறது. திராவிடமாபாடியத்தால் விளக்கப்படாத பொருள் யாதுமில்லை. தேவார முதலிய பன்னிரு திருமுறைகளும் சைவசமயத்திற் பிரமாணமாகக் கொள்ளப்படுவன.

௫. சைவத் தனிப்பெருங் கடவுள்

சைவத்திற் கொள்ளப்படுங் கடவுள் சிவபெருமானே. சிவம் என்னும் சொல், வடமொழியில் மங்களம், ஒளி, எல்லாவற்றிலும் இருத்தல் என்பன வாதிய பொருளையும், தமிழ் மொழியில் செம்மை, சிவப்பு என்னும் பொருளையுந்தரும். சிவபெருமான் தீயும் சூடும் போலச் சிவமும் சத்தியுமாக விளங்குவர். சிவபெருமானுடைய சத்தி இச்சா சத்தி, கிரியா சத்தி ஞானசத்தியென மூவிதமாய்த் திகழும். சிவ

பெருமான் தனது சத்தியைக் கொண்டே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிலையும் செய்தருளுவர். சிவபெருமானே பரமபதி என்பது வேதம் உபநிடதம் புராணம் இதிகாச முதலிய எல்லாக்கலைகளாலும் உணர்த்தப் பெறுகின்றது. இவ்வுண்மையைச், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் இராமாயண தாற்பரிய சங்கிரகம், பாரத தாற்பரியசங்கிரகம் என்னும் நூல்களால் அறியலாம். சிவபிரானைப் பிரமன், விண்டு, உருத்திரன் என்னும் மூவருள் ஒருவரான உருத்திரனென்று சிலர் மயங்குவர். "மூவரு முப்பத்து மூவருமற்றொழிந்த தேவருங் காணாச் சிவபெருமான்", "மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்" என்பன முதலாகக் கூறப்படும் பிரமாண வாக்கியங்கள் அம் மயக்கத்தைத் தீர்க்கும் மருந்தாகும். அப்பையதீக்ஷிதர் அருளிச் செய்த சிவதத்துவவிவேகம் என்னும் நூலில் சிவபெருமானது பரத்துவநிலை வேதோபநிடத முதலிய பிரமாணங்கள் கொண்டு நன்கு விளக்கப்பெற்றிருக்கின்றது. சிவபெருமான் உலகிற்கு அதீதனாகவும், காரணனாகவும், உயிராகவும், உலகமாகவும் நிற்கும் இயல்பினை,

> " உலகினை யிறந்து நின்ற தானுரு வென்ப தோரார்
> உலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரார்
> உலகினுக் குயிரு மாகி உலகமாய் நின்ற தோரார்
> உலகினு ளொருவ னென்ப உருவினை யுணரா ரெல்லாம் "

எனச் சிவஞான சித்தியார் எவ்வளவு அழகாக எடுத்துரைக்கின்றது பாருங்கள். சிவபெருமான் பெருமை அளவிடற் கரியது.

> " கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோர்
> இற்புறத் தவரை நாடார் யாங்களு மின்ப வாழ்வும்
> தற்பொறி யாக நல்குந் தலைவநின் னலதோர் தெய்வம்
> பொற்புறக் கருதோங் கண்டாய் பூரண னந்த வாழ்வே "

எனத் தாயுமான சுவாமிகள் கூறியருளிய திருவாக்கைச் சைவ மக்கள் கடைப்பிடித் தொழுக வேண்டியது இன்றியமையாததாகும்.

கூ. சைவ அடையாளங்களும் மந்திரமும்

சைவ சமயிகள் அணிய வேண்டிய அடையாளங்களிற் சிறந்தவை இரண்டு. அவை திருநீறும், உருத்திராக்கமுமாம். இவ்வடையாளங்கள் உரிய தத்துவ உண்மைகளை விளக்குவன. திருநீறு சிவபெருமான் சங்கார காரணனாய் விளங்கும் உண்மையினையும், உருத்திராக்கம் அவனது பேரருளையும் விளக்கு

வனவாகும். இன்னும் பலவுள. சைவத்தில் உயர்ந்ததாகக் கூறப்படும் மந்திரம் பஞ்சாக்ஷரம் அல்லது திருவைந்தெழுத்தென்று சொல்லப்படும். திருவைந்தெழுத்து முறையே சிவம், சத்தி, ஆன்மா, திரோதம், மலம் என்னும் ஐவகைப்பொருளைக் குறிப்பதாகும். இதன் பெருமையைத் தேவார முதலிய திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் பரக்கக் காணலாம்.

எ. சிவதீக்கை

தீக்ஷை என்னும் வடசொல் மலத்தைக்கெடுத்து, சிவத்துவத்தை விளக்குதல் என்னும் பொருளைத்தரும். சைவத்திற் கூறப்பட்ட தீக்கைமுறை, வேறு எச்சமயத்தினும் கூறப்படவில்லை. கிரியா சத்தியால் ஞானத்தை உதிக்கச் செய்வதற்குத் தக்க உபாயங்கள் தீக்கையில் விதிக்கப்பெற்றிருக்கின்றன. தீக்கை சமயம், விசேடம், நிருவாணம் என மூவகைப்படும். சைவசமயிகள் அனைவரும் சமய தீக்கையையாவது பெற்றுக் கொள்ள வேண்டும். பாலர்களும் விருத்தரும், பிணியாளரும், மாதரும், பல போகத்தவரும் பெற்றுக் கொள்ளுதற்குரிய எளிய தீக்கை முறைகளும் சைவ சமயத்தில் விதிக்கப் பெற்றிருக்கின்றன. ஏனைச்சமயிகள் எல்லாம் தத்தம் சமயத்தில் விதிக்கப் பெற்றுள்ள சமயப் பிரவேசக் கிரியைகளைக் கைக்கொண்டுவரவும், நம் சமயிகள்மட்டும் வேறு எச்சமயத்தினும் காணப்பெறாத அருமையுடைய தீக்கையைக் கைக்கொள்ளாதிருப்பது வருந்தத்தக்கதாகும்.

—தொடரும்

தமிழ்த் திருநாட் கொண்டாட்டம்

தலைமையுரையும் பிறவும்

சென்னைப் புரசைக் கம்பர் கழகத்தின் சார்பில் அன்னதான சமாசக் கட்டடத்தில், 16-1-'37 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் வரிவுரையாளர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில், தமிழ்த்திருநாள் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

கடவுள் வாழ்த்துப்பாடிய பின், தமிழாசிரியர் சி. ஆர்., கோவிந்தராஜ முதலியாரவர்கள், தலைவரவர்கட்கு வரவேற்புரைத்தாள் படித்து அளித்தார்கள். பின் தலைவரவர்கள் எழுந்து, சேர சோழ பாண்டிய அரசர்கள் காலத்தில் தமிழ் மொழி மிகவுஞ் சீரிய நிலையில் இருந்ததென்றும், அகத்திய முனிவர் தென்னாடுவந்து என்றுமுள தென்றமிழைப் பயின்று

தமக்குப் புகழ் தேடிக்கொண்டார் என்பது கம்பர் பாடிய "என்றுமுள தென்றமிழ்" என்ற அடியை முதலாகவுடைய பாட்டில் 'இசைகொண்டார்' என்ற தொடரால் பெறப்படுகிறதென்றும், இறைவனுக்கு எப்பணிகளையும் விடப் பாமாலை பாடி வணங்குதலே சிறந்த பணியாகுமென்பது 'அருச்சனை பாட்டேயாகும்' என்று சேக்கிழார் பெரியபுராணத் திருப் பாட்டினால் விளங்குகிறதென்றும், தமிழ்மொழி இயல்பினுள், புகுந்து ஆராயின் அம்மொழியின் சிறப்பு இனைத்தெனச் சொல்லமுடியாத அளவிற்றதென்றும், கருதிய பொருள் களைத் தெளிவுற விளக்குவதில் தமிழ்மொழி ஒப்பற்றதென் றும், தமிழ்நூல்களை அகம், புறம் என்று பிரித்து வகுக்கப் பட்டிருக்கிறமுறை தமிழுக்கே உரியதென்றும், அகம் காமச் சுவையினையும் புறம் வீரச்சுவையினையும் விளக்குவனவென்றும் திருக்குறள் காமத்துப் பாலிலுள்ள 25 அதிகாரங்களின் அருமைப்பாட்டினை என்னென்று சொல்வதென்றுங் கூறி,

"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை"

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து"

என்னும் இரண்டு குறள்களை எடுத்து அவற்றின் புதை பொருள்களை இனிது விளக்கிக் காட்டியது பாராட்டுதற் குரியது.

தமிழ்க் காவியங்களை யாவரும் நன்கு கற்று அச்சிறப் புக்களை நன்கு பயிலுதல் வேண்டும். அக்காலப் புலவர்கள் இக்காலத்தினர்போல, பல நூல்களிலிருந்து சொற்களையும், சொற்றொடர்களையும் பொறுக்கியெடுத்துக் கவி முடைவ தில்லை. அக்காலப் புலவர்கட்குச் சொல்லும் பொருளும் மதுஒழுக்குப்போலத் தாமே தட்டுத்தடையின்றி நினைத்த பொழுதே வரும்.

இக்காலத்தவர்போல வித்துவான், தமிழ்ப் புலவர் போன்ற பட்டங்களைக் கொடுப்பாரின்றித் தாமே சூடிக் கொள்ள நாணுவர் பண்டைப் புலவர்கள் என்பதை,

"அறமுரைத் தானும் புலவன் முப்பாலின்
திறமுரைத் தானும் புலவன்-குறுமுனி
தானும் புலவன் றரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனில்"

என்ற பொய்யா மொழிப் புலவர் பாடிய செய்யுளைக்கொண்டு விளக்கினார்கள்.

பின்பு தமிழ்க்காதலர் சிறப்பினை, "ஒரு போர் வீரன் போர்க்களத்தில் எதிரியினது அம்பினால் தாக்குண்டு கீழே விழக்கூடிய சமயத்தில் அவனுடைய இன்னுயிர்த் துணைவி ஓடி வந்து, தன் கணவன் நிலமகள்மேல் விழுதலாகாது என்று அவர் உடலைத் தன்மேற் றாங்கியும், தனக்கு முன் அவர் உயிர் விடுவராயின் விண்ணாட்டில் அரம்பையர் அவரை வரவேற்கவும் விட லாகாது என்று அவர் உயிர்துறக்குமுன் தானே உயிர் நீத்து விண்ணாடுசென்று அவரை வரவேற்றல் வேண்டுமென்று கருதி உயிர் விட்டனள்" என்ற கருத்தடங்கிய பழந்தமிழ்ப் பாடலின்வழி விளக்கியது எல்லோரையும் மகிழ்வித்தது.

ஒரு தலைவன் தன் காதலியிடம் 'என்னுடைய ஓவியப் புலவன் நல்லதொரு சித்திரம் வரைந்திருக்கின்றான்; அதனைப் பார்க்க வா' என்று சொல்லி அவளை அழைத்தான். அதற்கு அவள், 'அச்சித்திரம் ஆண் மகனுருவமெனின் யான் பார்க்க விரும்பேன். அது பெண் மகள் உருவமெனின், அதனை நீர் பார்க்கவும் நான் பொறேன்' என்று கூறிய தமிழ்க்காதலர் மாண்பினை விளக்க வேதநாயகம் பிள்ளை அவர்கள் பாடிய பாட்டினை* எடுத்துக் கூறியது யாவரையும் இன்புறச் செய்தது.

பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்| விரிவுரையாளர் திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் பின்வருமாறு பேசினார்கள்.

தமிழ்நாட்டில் இப்போது சட்டசபைத் தேர்தல் நடைபெறப்போகின்றது. அதற்கு நண்பர் பலர் உங்களுடைய ஓட்டுக்களைக் கேட்க வருவார்கள். அப்போது நீங்கள் அவர்களைப் பார்த்து, "ஐயா நீங்கள் தாய்மொழியாகிய தமிழ் மொழியை ஆதரிக்க வேண்டும். சட்டசபையிலும் பிற இடங்களிலும் தமிழ் மொழியிலேயே காரியங்களை நடத்துதற்கு ஏற்பாடுசெய்தல் வேண்டும். தமிழ் நாட்டுக்கு இந்தி போன்ற மொழிகளைக் கட்டாயப் பாடமாக்குதல் கூடாது என்பதை ஒத்துக் கொள்ளுங்கள். இங்ஙனம் உறுதி சொல்லுவீர்களானால் எங்கள் ஓட்டுக்களைப் பெறலாம்; இல்லையேல் ஓடிப் போகலாம்" என்று சொல்லி அவர்களை ஓட்டிவிடுங்கள் என்று இவ்வாறாக உணர்ச்சி உண்டாகுமாறு பேசினார்கள்.

---

* செய்யுளை உகஎ-ஆம் பக்கம் பார்க்க.

அதன்பின் சென்னை நகராண்மைக் கழகக் கல்வித் தலைவர் திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்கள் பின்வருமாறு பேசினார்கள்.

தென்னாட்டார் இந்தியைக் கற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்றும், அதனைக் கல்லூரிகளில் கட்டாயப் பாடமாக வைத்தல் வேண்டுமென்றும் கிளர்ச்சி நடைபெறுகின்றது. அதனை எழுதவும் பேச்வும் வேண்டிய அளவுக்குக் கற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்று விரும்புவோர் படிக்கட்டும். தமிழிலேயே எழுதவும் பேசவும் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கட்குத் தெரியாது. இத்தகைய நாட்டில் இந்தியைக் கட்டாயமாய்க் கற்றல் வேண்டுமென்று புகுத்துவது அடாத செயலாகும். தமிழ் நாட்டில் யாண்டும் வீடுதோறும் தமிழ் மணங் கமழுதல் வேண்டும். இந்தியை ஓரளவு எழுதவும் பேசவும் கற்பதில் குற்றமில்லை. எனினும் கட்டாய பாடமாக அமைக்க எழுகின்ற கிளர்ச்சியைத் தமிழ் மக்கள் எதிர்த்தே தீருதல் வேண்டும்.

அதன்பின்னர்த் திரு E. K. நடேச சர்மா அவர்கள் தமிழ் வாளர்ச்சியைப் பற்றிச் சிறிது பேசினார்கள்.

பின்பு தலைவரவர்கள் தனித் தமிழில் நூல்கள் எழுதுவதை எல்லாரும் பாராட்டுதல் வேண்டும் என்றும், வழக்கு வீழ்ந்த தமிழ்ச் சொற்களையெல்லாம் உரை நடையில் பயன் படுத்தி ஆட்சிக்குக் கொண்டுவருதல் வேண்டுமென்றும், அதுவே தமிழாசிரியன்மாரின் சிறந்த கடனாகுமென்றும், தேகப்பயிற்சிச்சாலை, தொழிற்சாலை, படக்கிருகம் முதலிய சொற்களுக்குப் பழந்தமிழ் நூல்களில் முரண்களரி, பணிக்களரி களாக இல்லம் போன்ற சொற்கள் காணக் கிடைக்கின்றன என்றும் தனித்தமிழ்க் கொள்கையினை மிகவும் பாராட்டிப் பேசினார்கள். அதன்பின், தலைவர் திரு. பண்டித மணியவர்கள், 'பந்திக்குமுந்து, படைக்குப் பிந்து' என்ற பழமொழி தமிழ்நாட்டில் இடைக்காலத்தில் தோன்றியதென்றும், பண்டைக்காலத்தில் அப்பழமொழி வழங்கியிருத்தற்குக் காரணமில்லை என்றும் "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" என்றும், "புட்பகைக்—கேவானாகலிற் சாவேம் யாமென—நீங்கா மறவர் வீங்கு தோள் புடைப்ப" என்றும் கூறிய புறநானூற்றுச் செய்யுட்களே அதற்குச் சான்று பகரும் என்றும் இவை போல்வன அரிய கருத்துகளை விளக்கினர்.

தமிழ்த்தெய்வ வணக்கம்

[கோடமுடி வித்துவான் பெ. கோவிந்தன்]

(புதுக்கவி)

அன்னையும் அப்பனையும் அறத்தினையும்
பொருளினையும் அகத்தின் பையும்
தன்னையுந்தன் னடிவணங்கும் என்னையுமிங்
கறிவிக்குந் தமிழ்த்தெய் வத்தைச்
சென்னிபல முறைவணங்கும்; வாய்வாழ்த்தும்;
கைகள்தொழும்; சேரும் நெஞ்சம்;
பொன்னடிவாழ் தென்னாட்டை வலம்வருங்கால்;
மெய்விழுந்து புரண்டு போற்றும். 1

அடியிடையிற் சிலம்புமணி மேகலையும்
அணிந்துதன தங்கை மார்பு
முடிமிசைச்சூ ளாமணிசிந் தாணிமுப்
பால்கொள்தமிழ் மூவா மாதைப்
படிமிசைவாழ் சின்னாளும் பயன்பெறுநா
ளாமாறு பணிந்து வாழ்வாம்;
வடுவிலவள் இயல்காண்பாம்; இசைகாண்பாம்;
நாடகமும் மகிழக் காண்பாம். 2

வண்ணமழ கமைந்துயர்ந்த கலையாலும்
அணியாலும் வனப்பு வாய்ந்திங்
கெண்ணுமெழுத் துங்கொண்டு முப்பொருளுங்
கற்பிக்கும் இறைவி தன்னைப்
பண்ணமருஞ் செந்தமிழே! பழத்தினுந்தீஞ்
சுவைத்தமிழே! பயிலுந் தோறும்
நுண்ணறிவு தருந்தமிழே! பல்லூழி
வாழ்கஎன நுவன்று வாழ்வாம். 3

ஈரடியால் நடந்துபழ மொழிபேசி
ஐந்திணையி லிருந்து கோவை
சீருடைநான் மணிக்கடிகை காஞ்சியணிந்
துலாக்கொள் தமிழ்த் தெய்வ மாதைப்
பாரிடைநோக் கிப்பத்துப் பாட்டிசைத்தார்;
காப்பியங்கள் பகர்ந்தார் பல்லோர்;
நேரடைந்து பலவெட்டுத் தொகையீந்தார்;
நாம்தொழுவம் நினைந்து நெஞ்சே!. 4

உயர்வினுமெய் யறிவினுநல் லொலியினுஞ்செல்
வடிவினுமே லோங்கி முன்பே
இயலினுநல் லிசையினுநா டகத்தினும்பேர்
கொண்டதமிழ் இறைவி தன்னை
மயலறநெஞ் சே!நினைந்து வணங்குக;வா
யே!வாழ்த்தி வணங்க மெய்யே
செயலறமண் மிசைவீழ்ந்து வணக்குக;நாம்
பேரன்பு செய்து வாழ்வாம். 5

சிந்தைக்குந் தித்தித்து நாவினுக்குந்
தித்தித்துச் செவிக்குந் தித்தித்
தெந்தமயக் கறுத்தெம்மை வாழ்விக்குந்
தமிழணங்கை எமது தாயைக்
கொந்தெடுக்குஞ் செங்கழுநீர் மந்தாரை
மல்லிகைவெண் கொல்லை முல்லைச்
செந்தொடைக்கீ ரடிக்காக்கிச் சீருரைத்தின்
னசையினெடுஞ் சென்னி சேர்ப்பாம். 6

மன்னரடி தொழுமாந்தர் படைசூழப்
பலபுலவர் மகிழ்ந்து பாட
மின்னிடையார் தொடைசூடச் சங்கமிருந்
திசைகொண்டு விளங்கும் மாவை

முன்னணுகிக் காணாத கண்ணென்ன
கண்? தமிழாம் மூவா மாதைப்
பண்ணியிசை பாடாத நாவென்ன
நா? நா! கண்! பாடு; காணே. 7

கடலழுந்தித் தென்குமரி கழியுமுனும்
கரியபெருங் கடற்கு மேலே
வடயிமயம் எழுமுன்னும் கலைகளோடும்
வாழ்ந்ததமிழ் மாது தன்னை
உடனுறுமெய் யறிவெமக்கும் பெற்றோர்க்கும்
முன்னோர்க்கும் உதவிப் பின்னும்
தொடருறுமெங் குலத்தோர்க்கும் உதவும்பே
ருதவியுனித் தொழுதல் செய்வாம். 8

பண்டைமொழி பலசாவ அவற்றினுக்கும்
முன்தோன்றிப் பலசே யீன்று
மண்டலமெங் குங்கன்னிச் செந்தமிழென்
றுரைசெய்ய வாழும் மாதைத்
தண்டமிழோர் கண்டஇறை சாவாது
வாழ்வதுபோல் தமிழே வாழ்க
கொண்டுறையும் வளநாடு வாழ்க என
வாழ்த்தியன்பு கூர்ந்து வாழ்வாம். 9

சில்லெழுத்தால் சொல்லாக்கிச் சிலசொல்லால்
பலபொருளைச் சிறிய யாப்பில்
பல்லணிசேர்த் தறிவித்த வள்ளுவனை
ஈன்றதமிழ்ப் பழந்தெய் வத்தை
மெல்லொலிசேர் சொன்மலரால் பன்மாலை
யாத்தன்பு மீதூர் நெஞ்ச
நல்லணையின் மீதிருத்தி வைகறையி
லெழுந்திருந்து நயந்து வாழ்வாம். 10

குறுந்தொகை மொழிபெயர்ப்பு

[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B. L.
(District Educational Officer, South Arcot.)

25 குறிஞ்சி

யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங்கால
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே.

—கபிலர்.

25. Himself the thief ; none heard his oath ; what shall I do if he prove false? When we wedded, only the stork, with legs slender as the millet blade, waiting for ARAL fish at the ever flowing water, saw anything.

—Kapilar.

26 குறிஞ்சி

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்றீது மொழியினுந்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே.

—வெள்ளி வீதியார்

26. Though the Lord of the land—where the Peacock on the up-rising huge branch of the fully blossomed VENGAI of the dark-trunk resembles a maiden plucking flowers,—spoke harsh words like an unworthy person, yet his behaviour betrayed nothing improper.

The sharp-toothed red-mouthed sweet-margo-eating monkey father of the young one disporting among the branches knows, for it saw the cruel person!

—Velli Veedhiyar.

27 பாலை

கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டுந்
திதலை யல்குலெம் மாமைக் கவினே.

—கொல்லனழிசி

27. It feeds not the calf, it falls not the pot, the sweet cow's milk that runs to waste on the ground; like wise my soft-glowing beauty-like tender mango leaf— profiteth me not, nor my husband, but feeds the disease of fruitless longing!

—Kollanalisi.

28 பாலை

முட்டு வேன்கொ றாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவு வேன்கொல்
அலமர லசைவளி யலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே.

—ஔவையார்

28. In this town, alas! that sleeps heedless of the passion that tosses like a tempest and consumes me quite what shall I do? Knock my head against the wall or a ttack the first comer, or howl for any assumed or affected cause!

—Auvaiyar.

உலகப் போக்கு

மரநூல் ஆடை

ஜெர்மனியில் துணி விஷயத்தில் பிறநாட்டாரை எதிர்பாரா திருக்குமாறு 100-க்கு 15 வீதம் மரநார் அடங்கிய துணிகளையே ஜனங்கள் அரையாடைக்கு உபயோகிக்கவேண்டுமென்று அதிகாரிகள் உத்தரவு செய்திருக்கிறார்கள். மரநார்—(நூல்) உற்பத்தி செய்வதற் காக ஜெர்மனியில் பத்து பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தியிருக் கிறார்கள்.

இலக்கணப்பிழைக்குத் தண்டனை

யுகோஸ்லாவியா நாட்டில் செரஜோவா நகரத்தில் இலக்கணப் பிழைக்கு இடம்கொடுத்து பாஷையைக் கெடுக்கலாகாதென்று அதி காரிகள் முடிவுசெய்திருக்கிறார்கள். கடைக்காரர்கள் இலக்கணப் பிழையுள்ள விளம்பரங்களோ விளம்பரப் பலகைகளோ போட்டிருந் தால் அவர்களுக்கு உடனேபோலீஸார் அபராதம் விதிக்கலாம். பகிரங்கமாகக் கெட்ட தூஷணமான வார்த்தைகளை உபயோகிக்கிற ஆண்பெண்களுக்கும் அபராதம். வீதிகளிலே செல்லுகிற மக்களைப் பற்றி முரட்டுத்தனமாகவோ வருந்தத்தக்க விதமாகவோ பேசுகிற கடைவியாபாரிகளுக்கும் அபராதம் விதிக்கலாம்.

சோல்லுக்கு 6000 போன்

அமெரிக்காவில் ஒரு புஸ்தக வியாபாரி தாம் வெளியிட்டிருக்கிற ஒருபுஸ்தகத்தில் உள்ள ஓர் அச்சுப் பிழையை முதலில் கண்டுபிடித் துச் சொல்லுகிறவர்களுக்கு 25,000 டாலர்—6,000 பொன் பரிசு கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிறார். அதன் பயனாக 7½ ஷிலிங், சுமார் ஐந்து ரூபாய் விலையுள்ள அந்தப் புஸ்தகம் முதல் வாரத்திலே சுமார் இரண்டு லக்ஷம் பிரதிகள் விற்பனையாய் விட்டனவாம்.

103-ல் இளமை

எண்பது வருஷங்களுக்குமுன் இத்தாலி வாசியான ஒருவர் ராணுவ வேலைக்கு மனுச்செய்துகொண்டார். அவர் அதற்கு லாயக் கில்லையென்று வைத்தியர்கள் நிராகரித்துவிட்டார்கள். அவர் இப் பொழுது 103-வது பிறந்த தினத்தைக் கொண்டாடியிருக்கிறார். டாக்டர்களிடம் போகாததே தீர்க்காயுளுக்குக் காரணமென்று அவர் சொல்லுகிறார். அவர் வெகுகாலம் சிங்கத்தைப் பழக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். இந்த வயதிலும் அவர் பயிர்த்தொழில் செய்து வரு கிறார்.

கோடி தர்மம்

இங்கிலாந்தில் கோடிக்கணக்கான பொன் தருமம் செய்து வரும் லார்டு நப்பீல்டு தமது மோட்டார்த் தொழிற்சாலைகளில் 21½ லட்சம் பொன் மதிப்புள்ள பங்குகளின் உரிமையைத் தொழிலாளர் களுக்கு விட்டுக்கொடுத்து விட்டார். தொழிற்சாலைகளில் கவரும் லாபத்தைப் பகிர்ந்து கொள்ளுமாறு செய்திருக்கிறார்.

தூத்துக்குடி சைவசித்தாந்தசபை ௫௩-ஆம் ஆண்டு விழா

26, 27-12-1935 ல் இவ்விழா சென்னை நகராண்மைக் கழகக் கல்வித் தலைவர் உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், பி. ஏ., எல். டி., தலைமையில் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அரிய பல பொருள்களைப்பற்றி அறிஞர் பலர் பேசினார்கள். ஆயிரக் கணக்கான மக்கள் மிகவும் ஆர்வத்துடன் கூட்டத்துக்குப் போந்திருந்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்வுற்றார்கள்.

சைவசித்தாந்த மகா சமாஜம் ௩௧-ஆம் ஆண்டு விழா

இவ்விழாக் காஞ்சிபுரத்தில் 1937-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1, 2,3 -ஆம் நாட்களில் தூத்துக்குடி சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் தலைமையில் மிகவுஞ் சிறப்பாக நடைப்பெற்றது. விழாவுக்காக அமைக்கப்பெற்றிருந்த பந்தர் கண்கவர் வனப்பதாய் அணிசெய்யப் பெற்றிருந்தது. ஆண் பெண் இருபாலாருமாய் ஆயிரக் கணக்கான மக்கள் கூட்டத்துக்கு ஆர்வத்தோடு வந்திருந்து சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெருமகிழ்வுற்றார்கள். இக்கூட்டம் இத்துணை சிறப்பாய் நடைபெறுதற்குக் காஞ்சி மெய்கண்டார் கழகம் செய்து வந்த பணியே காரணமாகும். மூன்று நாட்களிலும் தமிழறிஞர் பலர் பல அரிய சொற்பொழிவுகளைத் திறம்பட எடுத்துப் பேசினார்கள்.

பிரிவாற்றாமை

(௧). தேவகோட்டை சித்தாந்த சிவகாம சங்கத் தமிழாசிரியரும், சிவஞானபோதச், சிற்றுரை விளக்கமும் சிவஞான சித்தியார் சுபக்கப் புத்துரையும் எழுதியவரும் ஆகிய தூத்துக்குடி உயர்திரு பொ. முத்தையாபிள்ளையவர்கள் 30-12-36-ல் சிவபெருமான் திருவடி சேர்ந்த செய்திகேட்டுத் தமிழுலகமும், சைவவுலகமும் பெரிதும் வருந்துகின்றன.

(௨). சென்னை இறையாட்சி இந்திய மருத்துவக் கல்லூரியில் சித்தமருத்துவத் தலைமையாசிரியரும், நஞ்சு நூல், பாலவாகடம் முதலிய நூல்களைப் பரிசோதித்தவரும், திருக்குறள் பரிமேலழகருரை தாயுமானவர் பாடல், விநாயக புராணம் முதலிய பல அரிய தமிழ்நூல்களை வெளியிட்டவரும், சிறந்த தமிழறிஞருமாய உயர்திரு மருத்துவ சிரோமணி க. ச. முருகேச முதலியாரவர்கள் இறைவன் திருவடி சேர்ந்த துயரமான செய்திகேட்டுத் தமிழுலகமும் மருத்துவ உலகமும் மிகவும் வருந்தாநிற்கின்றன. இவர்களின் உருவப் படமும், வரலாற்றுச் சுருக்கமும் செல்வி கஉ-ம் சிலம்பின்கண் வெளி வந்திருக்கின்றன.



தேம்பாவணி, சதுரகராதி இயற்றிய

வீரமாமுனிவர்

(FATHER C. J. BESCHI)

(கஅகூ0—கஎசஉ)

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௫] தாது—மாசி [பரல்-௭

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதிற்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

பதவுரை:—

விழுமியார்கள்—மெய்யுணர்வில் நிலைபெற்றுநிற்கிற மெய் அடியார்கள்

நின்கழல்பாட வாயிலாய்—உனது இரண்டு திருவடிகளையும் புகழ்ந்து பாடுதலாகிய வழியில்

பரவநின்ற பண்பனே—துதிக்கும்படி நிலைபேறுயுள்ள எண்குணங்களையும் உடையவனே

வீடுஅலால் அவாஇலாய்—(அத்தகை அடியார்களுக்கு) மேலான வீட்டின்பமல்லாது அதற்குக் கீழாயுள்ள பிறிதொரு பேற்றினையும் கொடுக்க விருப்பமில்லாதவனே

காடுஅலால் அவாஇலாய்—நீ சுடுகாடல்லாமல் பிறிதோரிடத்திலும் தங்கியிருத்தற்கு விருப்பமில்லாதவனே

கபாலீ—நான்முகனுடைய உடைந்த தலைஓட்டில் இரந்துண்கின்றவனே

கடிநீள்மதில் கூடல்—காவலையுடைய நீண்ட மதில்களாற் சூழப்பட்ட கூடல் என்னும் மதுரைப்பதியிலுள்ள

ஆலவாய்இலாய் குலாயது—ஆலவாய் என்னும் திருக்கோயிலை நீ இருக்கும் வீடாகக்கொண்டு மகிழ்ந்து வீற்றிருத்தல்

என்னகொள்கை—என்ன கருத்துக்கொண்டோ? அதனை நீ எனக்குச் சொல்வாய்!

விளக்கவுரை:—

விழுமியார்கள்—விழுமம் என்பது சிறப்பு—சிறப்பு ஆகிய வீட்டினை அடைதற்குரிய மெய்யுணர்வினை நிலையாக உடையவர்கள் உண்மை அடியார்கள் ஆதலின், அடியார்களை விழுமியார்கள் என்று அடிகள் கூறினர்.—31-வது குறட்பாவில் வருகிற சிறப்பு என்ற சொல்லுக்கு வீடு என்று பரிமேலழகர் உரை கூறியிருத்தல் காண்க.

கழல்—என்பது கால்களில் அணியப்படும் வீரஅணி என்று பொருள் படும். அஃது இங்கே ஆகுபெயராய் அவ்வணி அணியப்படுகிற கால்களைக் குறிக்கின்றது.

பாடல் வாயிலாய் பரவநின்ற பண்பனே—பாடல்—சமய ஆசிரியர்கள் நால்வர்களும் சிவபெருமானைப் பாடிய பாடல்களைப்போன்ற பாடல்கள்—ஆல், அ—இரண்டும் அசைகள்.

சிவபெருமான் பல வழிகளில் அடியார்களால் துதிக்கப்படுதலின் இங்கே பாடல் வழியாய் என்று அடிகள் கூறினர். சிவபெருமான், அடியார்கட்கு வீட்டின்பமளித்தற்கு அவர்களிடம் தனது எண்குணங்களையும் பதியச் செய்தலால் "பரவநின்ற பண்பனே" என்றார்.

வீடுஅலால் அவாஇலாய்—உண்மையை வலியுறுத்த அடிகள் எதிர் மறையாற் கூறினர். அல்லாய் என்பது அலாய் என்றும் இல்லாய் என்பது இலாய் என்றும் இடையில் லகர ஒற்றுக்கள் தொக்கி நின்றன. இவ்வாறு தொக்கு நிற்றலை மூன்றாம் அடியில் வருகிற அலால்—இலாய் என்பவனவற்றுக்கும் கொள்க. வீடு என்ற சொல் இங்கே ஆகுபெயராய் வீட்டின்பத்தைக் குறிக்கிறது. வீட்டின்பத்துக்கு மேலான பேறு ஒன்றுமில்லையாதலானும், மெய்யுணர்வுடைய அடியார்கள் பிறிதொரு பேற்றினையும் விரும்பார் ஆதலானும் அடிகள் வீடலால் அவாயிலாய் என்றார். "வீடுதனை மெய்யடியார்க் கருள்செய்வானும்" என்று திருநாவுக்கரசு அடிகள் திருவெண்ணித் தாண்டகம் 6 வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. அவா—விருப்பம்.

காடுஅலால் அவாஇலாய்—காடு என்பது சுடுகாடு—உலகமெல்லாம் அழிக்கப்படுகின்ற சர்வசங்கார காலத்தில் சிவபெருமான்

எல்லா மாயா காரியப்பொருள்களையும் அழித்து நடனம் செய்கின்ற இடம் இங்கே சுடுகாடு எனக் கூறப்பட்டது.

கபாலி—கபாலம் என்பது உடைந்த தலையோடு; கபாலத்தை (க்கையில்) உடையவன் கபாலி. சிவபெருமான் நான்முகனுடைய அஞ்சு தலைகளிலொன்றைக் கிள்ளி அத்தலையோட்டில் பிச்சை எடுக்கிறதாகச் சிவபுராணங்கள் கூறுதலால் சிவபெருமான் கபாலி என்று கூறப்பட்டான்.

கூடல் ஆலவாய் இலாய்க் குலாயது—கூடல் என்பது மதுரைப்பதியைக் குறிக்கிறது. இது காரணப்பெயராய் வழங்கப்படுதலுக்குத் திருவிளையாடற் புராணம் நான்மாடக்கூடலான படலம் பார்க்க.

ஆலவாய் என்பது அப்பதியிலுள்ள திருக்கோயிலின் பெயர்.

இல் என்பது வீடு. வசிக்கும் இடம் இல்லாய் என்பது இலாய் என நிற்றல் தொகுத்தல் விகாரம்.

குலாயது—குலாவியிருத்தல், அஃதாவது, மகிழ்ந்து வீற்றிருத்தல்; தொழிற்பெயர்.

என்ன கொள்கையே (சொல்வாய்)—கொள்கை என்பது கொள்ளப்பட்ட கருத்து—மக்கள் குடியிராத சுடுகாட்டி லிருந்துகொண்டு நான்முகனுடைய தலையோட்டில் பிச்சை எடுத்துண்பவனாகிய நீ, மக்கள் நெருங்கி வாழும் மதுரைப்பதியிலுள்ள அரண்மனை போன்ற பெரிய கோவிலில் உமாதேவியோடுங்கூடி மகிழ்ந்து வீற்றிருத்தலுக்கு உனது கருத்து என்ன என்று சிவபெருமானைக் கேட்கும் கேள்வியாக நகைச்சுவைபட அடிகள் கூறினார்—அக்கேள்வியிலேயே ஆன்மாக்கள் பொருட்டுச் சர்வசங்காரத் தொழிலாகிய உனது கடன் செய்தற்கு நீ சுடுகாட்டிலிருந்துகொண்டு நடனம் செய்தாய் என்ற விடையும்; அந்த ஆன்மாக்களே உன்னை வந்து வணங்கி உலகபோகத்தையும் வீட்டின்பத்தையும் பெற்று உய்யும்படி ஆலவாயில் வீற்றிருக்கிறாயென்ற விடையும் குறிப்பாலுணர்த்தப்பட்டன. ஆன்மாக்கள் உய்யும்பொருட்டே, சுடுகாட்டில் வீற்றிருந்த நீ ஆலவாயிலும் வீற்றிருக்கின்றாய் என்பது கருத்து. அடிகள் பாடியருளிய,

மண்ணி னல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணி னல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலைக்

கண்ணி னல்லஃ துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணி னல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

என்ற பாட்டில் இக்கருத்துக் கூறப்பட்டது. இப்பாட்டு 3-4-ஆம் அடிகளிற் கூறப்பட்டிருக்கிற கருத்தை அடிகள் திருநள்ளாறும் திருவாலவாயும் என்ற பதிகம் (7—1) முதலாவது பாட்டிலுங் கூறியருளினமை காண்க, அது வருமாறு:—

பாடக மெல்லடிப் பாவையோடும் படுபிணக்காடிடம் பற்றிநின்று
நாடகமாடு நள்ளாறுடைய நம்பெருமானிது வென்கொல் சொல்லாய்
சூடகமுன்கை மடந்தைமார்கள் துணைவரொடுந் தொழுதேத்திவாழ்த்த
ஆடகமாட நெருங்குகூட லாலவாயின்க ணமர்ந்தவாறே.

ஈற்றிலுள்ள ஏ அசை. சொல்வாய் என்பது ஈற்றில் சொல்லெச்சமாய் வந்தது. நான்காவது அடியில் கூடலாலவாயிலாய் என்று வருதல்பற்றி முதலாவது அடியில் வீடலாலவாயிலாய் என்பதிலும் மூன்றாவது அடியில் காடலாலவாயிலாய் என்பதிலும் வகர உடம்படுமெய்க்குப்பதிலாக யகர உடம்படுமெய் வந்தது. 'மாயிருஞாலம்' என்பதில் ஆகாரவீற்று உரிச்சொல்லின் முன் யகரவுடம்படுமெய் வருதல் காண்க.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

அவனே இவனே யென்று ஆயிரம் உழைப்பதிலும்
சிவனே சிவனே யென்றாற் சேரலாம் சிவகதிக்கே.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

குறிஞ்சி

தலைவன் மணந்துகொள்ளாமல் களவொழுக்கத்தி னிடையே ஒருவழித்தணந்த காலத்தில் தலைவி ஆற்ருது வருந்தித் தோழிக்குக் கூறியது.

கபிலர் பாடியது

38. கான மஞ்ஞை யறையின் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி யுண்கண்
ணீரோ டொராங்குத் தணப்ப
உள்ளா தகறல் வல்லு வோர்க்கே.

என்பதுவரைவு நீட்டித்த வழித் தலைமகள் தனது ஆற்ருமை தோன்றத் தோழிக்குக் கூறியது.

பதவுரை :—

வாழி—; தோழி—தோழியே; கான மஞ்ஞை முட்டை காட்டிலுள்ள மயிலின் முட்டையை, வெயிலாடு முசுவின் குருளை—வெயிலில் விளையாடும் குரங்குக்குட்டி, அறையின் உருட்டும்—கற்பாறையை யுருட்டுவதுபோல் உருட்டுகின்ற, குன்ற நாடன் கேண்மை—மலை நாட்டை யுடையவனது நட்பு, என்றும் நன்றுமன்—என்றும் பெரிதாயிருந்தது; (இதுகாலை கழிந்தது) (அவர் ஒருவழித் தணந்திருப்ப) உண்கண் ணீரோடு ஓராங்குத் தணப்ப—மையுண்ட கண்கள் நீரைச்சொரிய ஒரு புறம் நீங்காத்துயரோடு வருந்தக் கைவிட்ட, உள்ளாது அகறல் வல்லுவோர்க்கு—நினைக்காமல் நீங்குதலில் வல்லவராகிய தலைவர்க்கு; என் துயர் கூறுவார் ஒருவரும் இலையே.

மஞ்ஞை மயில். முசு—குரங்கு. முசுவின் குருளை மஞ்ஞை முட்டையை அறையின் உருட்டும் என்க. அறையின்—இன் ஐந்தாம் வேற்றுமையுருபு ஒப்புப் பொருளில் வந்தது. மன்-இடைச்சொல். வாழி, அசை நிலையாகவந்த சொல்லுமாம். உண்கண்—மையுண்கண்—வினைத்தொகை அறை—கல். ஓராங்குத் தணப்ப—ஒருவழித் தணத்தல். "அகநல் வல்லுவோர்க்கு என்செய்தி கூறுவார் இலையே" என்பது சொல்லெச்சம். நீரோடு வருந்த என்று 'வருந்த' என்பதைச் சொல்லெச்சமாகக் கொள்ளவும்.

ஒருவழித் தணத்தலாவது: தலைவன் களவொழுக்கத்திலே தலைவியோடு கூடி ஒழுகிவருகையில் அக்களவு வெளியாகி ஊரில் அலர் எழுந்ததைத் தோழியா லுணர்ந்து அவ்வலர் அடங்குமட்டும் தலைவியை விட்டுப்பிரிந்து தனித்து ஓரிடத்தில் சிலநாள் தங்கியிருத்தல்.

மேற்கோள் விளக்கம் :—

"வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்ற நாடன் கேண்மை."

என்றாற்போல முசுவிற்குங் குருளைப் பெயர்கொடுக்க''

—(தோல்—மரபு. பக் 538, 541)

மயில் தானாகக் கூடுகட்டிக் கொள்ளாமல், நெருக்கமான புதர்களிடத்தும், வேலிக்கால்களிலும் முட்டையிடும். தனக்குக் கூடு இல்லாமையால் அது மரக்கிளையில் உறங்கும். அறையில் முட்டை என்பதற்குப் பாறையை இல்லாக வுடைய முட்டை எனலுமாம். முசு ஒரு வகைக் குரங்கு.

நன்று—பெரிது. "நன்று பெரிதாகும்"

—(தோல்-சொல்-உரி. 45)

"கான மஞ்ஞை.........குன்றநாடன்"—இதனோடு,

"வந்தாய் பவரையில்லாமயின் முட்டை யிளையமந்தி
பந்தாடிரும் பொழிற் பல்வரை நாடன்"—(திருக்கோவை-276)

என்பதோடு ஒப்பிட்டுக்காண்க.

உள்ளுறை: "மறைவிடத்தில்லா மயின் முட்டையை ஈனும்பொழுது உள்ளதாகிய துன்பத்தை யறியாத முசுக்குருளை மயிலின் வருத்தத்தையும் முட்டையின் மென்மையையும் கருதாது உருட்டுமாபோல, காதலர் கருத்தில் வைக்கப்படாத எனது காமத்தை, நீ இத்தகைத்தென்று உற்றுணராமையால், என் வருத்தத்தையும் காமத்தின் மென்மையையும் கருதாது உரைக்கின்றனை" என்பதாம்.

வந்தாய்பவர் தோழியாகவும், முசுக்குருளை தலைவனாகவும், உருட்டுதல் வேண்டியவாறு ஒழுகும் தலைவனது ஒழுக்கமாகவும் உரைப்பினும் பொருந்தும்.

மெய்ப்பாடு—அசைவுபற்றிய அழுகை.
பயன்—ஆற்றாமை அறிவித்தல்.

பாலை

தலைமகன் பிரிவால் தலைவி ஆற்றாது வருந்துகின்றாள் எனக் கவன்றதோழிக்குத் தலைவி, தன் வருத்தம் தலைவனின் பிரிவாற்றாமையால் அன்று அவன் சென்ற சுரநெறியின் கொடுமையைக் குறித்ததாம் என்று கூறியது.

ஔவையார் பாடியது

39. வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை யுழிஞ்சில் வற்ற லார்க்கும்
மலையிடை யருஞ்சுர மென்பநம்
முலையிடை முனிநர் சென்ற வாறே.

என்பது பிரிவிடையாற்றல் வேண்டுமென்ற தோழிக்கு யாங்ஙனம் ஆற்றுவேனெனத் தனது ஆற்றாமை மிகுதிதோன்றத் தலைமகள் கூறியது.

பதவுரை :—

நம்முலையிடை முனிநர் சென்ற ஆறு—நம்முலையிடத்துத் துயிலுதலை வெறுத்தகன்ற தலைவர் சென்றவழியை, மலையிடை—மலைகளினிடையில், வெம்திறல் கடுவளி—கொடிய வலிமையுடைய கடியகாற்று, பொங்கர்ப் போந்தென—மரக்கிளைகளின்மீது அடித்ததென்றலும், நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல்—முற்றியநெற்றுக்களை விளைவிக்கின்ற வாகைமரத்தின் உலர்ந்த காய்கள், ஆர்க்கும்—ஒலிக்கின்ற, அருஞ்சுரம் என்ப—கடத்தற்கரிய சுரநெறி என்று கூறுவர். (அதனால் யான் வருந்துகின்றேன் என்பது கருத்து.)

வளி—காற்று, பொங்கர்—மரக்கிளை. போந்தென—செய்தென என்னும் வாய்பாட்டு வினைஎச்சம். நெற்று—உலர்ந்தகாய். உழிஞ்சில்—வாகைமரம். முனிநர்—வெறுத்தவர்; முனிதல்—வெறுத்தல். ஆறு—வழி. ஆற்றின்கண் என்று ஏழனுருபு விரிக்க. 'ஆற்றை' என்று இரண்டன் உருபுவிரித்தலுமாம். நெற்றுவிளை யுழிஞ்சில்வற்றலார்க்கும், என்பதோடு 'வாகைவெண்ணெற் றொலிக்கும்' (குறுந்—7) ஒப்புநோக்குக.

மேற்கோள் விளக்கம் :—

"வெந்திறற் கடுவளி..............சென்றஆறே" பிரிந்துழி வழியருமைபிறர் கூறக்கேட்டுக் கூறுவன என்பதற்கு மேற்கோள்.

(—தொல்—கற்பி—669 பக்)

பொங்கர்—மரக்கிளை; "உயர்ந்தபொங்கருயர்மரமேறி"—
(கலி—மருதம்-10)

"பொரியரை யுழிஞ்சிலும் புன்முளிமூங்கிலும்"
—(சிலப்—காடுகாண் காதை-76)

மெய்ப்பாடு—அணங்குபற்றிய அச்சம்.
பயன்—ஆற்றுமைநீங்கல்.

தமிழ் யாப்பிலக்கண நூல்கள்

[வித்வான் மா. இராசமாணிக்கம் அவர்கள் P. O. L.]

உலகின் மிகப்பழைய ஹீப்ரு, இலத்தீன், கிரீக், சம்ஸ்கிருதம் போன்ற மொழிகளைப்போன்றது 'தமிழ்மொழி' என்பது சரித்திரங்கண்ட உண்மை. எனவே, அத்தகைய பண்டை மொழிக்குகந்த இலக்கிய இலக்கண நூல்கள் எண்ணிறந்தன இருந்திருத்தல் இயல்பே. அவற்றுள் மிகச்சிலவே இப்போதுள்ளவை. மிகப்பல நூல்கள் அரைகுறையாகக் கி பி. 12-ம் நூற்றாண்டுவரை இருந்தன என்பது யாப்பருங்கல விருத்தியுரை, காரிகையுரை, தொல்காப்பியச் செய்யுளியல் உரை, களவியல் உரை முதலிய உரைகளால் அறியக்கிடக்கிறது. பெயர்தானும் இன்றி அழிந்த நூல்கள் எண்ணில வாதல் வேண்டும் என்பதும் இனிது புலனாகும். இப்போதுள்ள தொல்காப்பியச் செய்யுளியல் உரையையும் யாப்பருங்கல விருத்தியுரையையும் பொறுமையோடு விடாது படிப்பவர் மனங்குளிரப் பல உயரிய இலக்கிய இலக்கண நூல்கள் இருந்தமை இனிதுணர்வர். சூத்திரங்களையும் உரையையும் ஆராயுமுன் அகத்தியர் காலம் தொல்காப்பியர் காலம் யாப்பருங்கலம் இயற்றிய அமிதசாகரர் காலம் இவை அறிதல் பெருந்துணை புரிவதாகும்.

ஆசிரியர் அகத்தியனார் காலம் குறைந்தது கி. மு. 2387-ஆக இருத்தல் வேண்டும். என்னை? கி. மு. 2387-ல் கடல்கோள் உண்டாகி, இலங்கையை இந்தியாவினின்றும் வேறு பிரித்தது. [1] அங்ஙனம் பிரித்த கடல்கோளே 'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோட்' டையும் இவற்

1 Vide. Tennents 'History of Ceylon.'

றின் இடைப்பட்ட நாற்பத்தெட்டு நாடுகளையும் அழித்ததாகல் வேண்டும்.[1] அப்போது பாண்டியனது தலைநகராக இருந்தது மதுரை.[2] பாண்டியன் துணையைக்கொண்டு புலவரை ஒன்றுகூட்டிச் சங்கம் நிறுவித் தமிழ்நூல்களைத் தொகுத்தும், தாம் ஓர் இலக்கணம் செய்தும் வெளியிட்டமை நோக்கி அக்காலப்புலவர் அவரை நோக்கி, 'இவன் தமிழுக்கு அகத்தியன்' (இன்றியமையாதவன்) எனப் பாராட்டியதே, அப்பெரியார் 'அகத்தியர்' என வழங்கப்பெற்றதற்கு உகந்த காரணமாக இருக்கலாம். இக்கருத்தினைத் தமிழறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் கொண்டிருத்தல் எமது கருத்தை வலியுறுத்தல் காண்க. அகத்தியர் காலத்திருந்த பாண்டியன் 'நெடியோன்' பஃறுளியாறு கண்டவன்.

இரண்டாம் கடல்கோள் கி. மு. 504-ல் ஏற்பட்டது; அப்போது இலங்கையின் பெரும்பகுதி கடலுள் ஆழ்ந்தது என்பர் டென்னேன்ட். இராமாயண பாரதக் கதைகளிற் கண்ட நிகழ்ச்சிகளின் காலம் கி. மு. 1400—கி. மு. 750 எனக் கொண்டனர் சரித்திரம் வல்லார். வால்மீகி இராமாயணம் முதலில் எழுதப்பெற்ற காலம் குறைந்தது கி. மு. 7-ம் நூற்றாண்டாக இருத்தல் வேண்டும் என்பது அறிஞர் கருத்து. அந்நூலில் பாண்டியன் தலைநகரம் 'கபாடபுரம்' எனக்கூறப்பட்டுள்ளது. முதற் கடல்கோளுக்குப் பின்னர்ப் பாண்டியன் இரண்டாம் சங்கம் கூட்டியது (அலைவாய் என்னும்) கபாடபுரத்தில் என்பது களவியல் கூற்று. அங்குத் தொல்காப்பியம் செய்யப்பட்டதென்றும் அது கூறுகிறது; அதுபோது கடல்கோள் உண்டாயிற்றென்றும் கூறுகிறது. இலங்கையின் பெரும் பகுதியை அழித்த கடல்கோளே குமரியாற்றுக்கு வடக்கே இருந்த சிறிதளவு நாட்டைக் (கபாடபுரம் உட்பட) அழித்ததென்பதில் வியப்பென்னை? எனவே, சரித்திரச் சான்றுகொண்டு காணின், தொல்காப்பியரது குறைந்த காலம் கி. மு. 504 எனக்கோடல் தவறாகாது. இதுவும் நிற்க.

வீரசோழியம், முதற் குலோத்துங்கன் மகனை 'வீரசோழன்' பெயரால் பாடப்பெற்றது. முதற் குலோத்துங்கன் அரசாண்ட காலம் கி. பி. 1070—கி. பி. 1118. வீரசோழன் வெங்கிநாட்டுப் பிரதிநிதியாக இருந்த காலம் கி. பி. 1078—கி. பி. 1088-9 எனச் சாஸனம் கூறுகிறது. முதற் குலோத்துங்கனுக்குப்பின் அவன் மகனை 'விக்கிரம சோழன்' கி. பி. 1118-ல் பட்டம் பெற்றான். எனவே, வீரசோழன் அரசப்

---

1. Vide. Silappathikaram, Adiyarkkunallar's commentary.
2. களவியல் உரை.

பிரதிநிதியாகவே இருந்தவந்தவனாதல் வேண்டும். இவன் அரசப் பிரதிநிதியாக இருந்த காலத்திற்றான் பெரும்பாலும் இவன் பெயரால் (கி. பி. 1088—1088-9) 'வீரசோழியம்' புத்தமித்திரனால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அதிகப் படியாகக் கொண்டாலும் அதன் காலம் கி. பி. 1078—கி. பி. 1120 கொள்ளலாம். இந்நூலுக்கு உரைசெய்த 'பெருந்தேவனார்' புத்தமித்திரனார் மாணவர். எனவே, அவர் காலமும் ஆசிரியர் காலமும் மேற்கூறப்பெற்ற வீரசோழன் காலமாதல் வேண்டும். எனவே, இம்மூவரின் அதிக கால எல்லை கி. பி. 1120 எனக்கோடல் தவறாகாது. பெருந்தேவனார் வீரசோழியத்துள் 'யாப்பருங்கல ஆசிரியர் அமிதசாகரர்' எனக்கூறியிருத்தலால், பெருந்தேவனார் காலத்துக்கு யாப்பருங்கலம் முற்பட்டது என்பது உணரக்கிடத்தல் காண்க. எனவே, யாப்பருங்கலத்தின் காலம் கி. பி. 11-ம் நூற்றாண்டின் முற்பகுதிக்கு முற்பட்டது எனக் கொள்ளலாம்.

யாப்பருங்கல விருத்தியுரை யாசிரியர் விருத்தியுள் எட்டாரைச் சக்கரத்துக்கு மேற்கோளாகக் காட்டிய செய்யுளில் பல்லவ மல்லனைப்பற்றிக் கூறியுள்ளார். பல்லவ மல்லன் காலம் கி. பி. 8-ம் நூற்றாண்டின் முற்பகுதி. அவன் மூன்றாம் பல்லவ மல்லனாக இருப்பின் கி. பி. 9-ம் நூற்றாண்டின் முற்பகுதி. எனவே விருத்தியுரையாளர் கி. பி. 9, 10-ம் நூற்றாண்டுகளில் ஒன்றின் முற்பகுதிக்குப் பிற்பட்டவர் என்பது போதரும். விருத்தியாசிரியரும் காரிகையாசிரியரும் ஒருவரேயாதல் பற்றியும், யா. கலக்காரிகை பத்தாவது செய்யுள் உரையில் "வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் வந்த மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா யாப்பருங்கல விருத்தியுரையுள் 'காமர் கடும் புனல்' என்னும் பழம்பாட்டில் கண்டு கொள்க" என்று குணசாகரர் கூறியிருத்தல் பற்றியும் குணசாகரரே விருத்தியுரையாசிரியருமாயிருத்தல் கூடும் என்பர் புலவர் பலர். காரிகை விருத்தி இரண்டன் உரைகளையும் நோக்குங்கால் இவ்வுண்மை நன்கு புலனாகும். இது நிற்க.

'யாப்பருங்கலம்' என்பதில் உள்ள 'அருங்கலம்' என்பதனை ஆராய்வோம். சாஸன பரிசோதகரான திரு. கோபிநாத ராயர் 'செந்தமிழ்த்' தொகுதி 5-ம் பக்கம் வரி 97-ல் கூறியுள்ளது நோக்கத்தக்கது. "ஜைன ஆசாரியர் பல சங்கத்தாராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு சங்கமும் பல கணங்கள் கொண்டது. தென்தேயச் சங்கங்களிற் சிறந்தது 'திரமிள (தமிழ்ச்) சங்கம்.' இதிற் பிரசித்தியடைந்தது 'நந்திகணம்'. இக்கணத்திற் சிறப்புற்றிருந்தது 'அருங்கலான்

வயம்' (அன்வயம்-பரம்பரை.) அருங்கலான் வயம், 'தீபங்குடியின் நிடும்பறை தீர்த்தத்தின் அருங்கலான் வயம்' என்று ஒரு சாஸனத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆதலின், இப்பரம்பரையினர் முதன் முதல் தீபங்குடியினரா யிருந்திருத்தல் வேண்டும். இத்தீபங்குடி திருவாரூர்ப் பக்கத்து 4 மைல் தூரத்தில் உள்ளது. இவர் தமிழரே ஆயினும், தமிழ்-கன்னடம்-சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் அதி நிபுணர்."

இதனால், 'அருங்கலம்' என்பது ஜைனாசாரிய பரம்பரையில் ஒரு பிரிவு என்றும், அது தமிழ்ச்சங்கத்தின் பகுதி என்றும், தீபங்குடியில் இப்பிரிவினர் முதலில் இருந்தனர் என்றும் தெளியலாம். அமித சாகரர் அருங்கலான் வயத்தைச் சேர்ந்தவர் ஆதலின், தம் யாப்பு நூல்கட்கு யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி எனப் பெயரிட்டனர். இவ்வருங்கலான் வயத்தார் சிறப்புற்றிருந்த காலம் கி. பி. 9,10-ஆம் நூற்றாண்டுகள் எனச் சாஸனத்தால் தெரிகிறது. எனவே இந்தக் காலத்தேதான் இவ்விரு நூல்கள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். எனவே, இதுகாறுங் கூறியவற்றால், அகத்தியர் காலம் கி. மு. 2400 எனவும், தொல்காப்பியர் காலம் கி. மு. 500 எனவும், யாப்பருங்கலக் காரிகை, விருத்திகளின் காலம் கி. பி. 800-1000-க் குட்பட்ட காலம் எனவும் கொள்ளச் சரித்திர அறிவும் நூலறிவும் பகுத்தறிவும் இடந்தருதல் காண்க.

இனி, யாப்பருங்கல விருத்தியுரையுள் காணப்படும் நூல்கள் யாவை எனக் காண்போம்: அவை, செயல்முறை, செயிற்றியம், அகத்தியம்; மயேச்சுரர் யாப்பு; கையனார் இலக்கணநூல், தொல்காப்பியம், பல்காயம், காக்கை பாடினியம், நற்றத்தம், அவிநயம், வாய்ப்பியம்; சிறுகாக்கை பாடினியம், பரிமாணனார் இலக்கணநூல், செய்யுளியல், நல்லாறனார் இலக்கண நூல்; நக்கீரர் நாலடிநாற்பது; சங்கயாப்பு, மாபுராணம், பாட்டியல் நூல், யாப்பருங்கலம், காரிகை முதலியன. இனி இவற்றின் காலவரையறை காண்போம்.

(கி. மு.—கி. மு. 2387)

"கலியுறுப்புக்குஅளவை செயல்முறையுள்ளும்செயிற்றியத்துள்ளும் அகத்தியத்துள்ளும் கண்டுகொள்க. அவை ஈண்டு உரைப்பிற் பெருகும்" (யா. வி. சூ. 82-ன் உரை) எனவும், "இஃதல்லாதன செயல்முறையோடும் செயிற்றியத்தோடும் அகத்தியத்தோடும் ஒக்கப்பாடின இல்லை என்ப" (யா வி. சூ. 83-ன்)உரை எனவும், "மற்றையன இவ்வாறு செயிற்றியத்

நுள்ளும் அகத்தியத் நுள்ளும் ஓதிய இலக்கணம் தழுவிக்கிடந்தன இல்லை என்பது. இவ்வாறு சொன்னார் நீர்மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர்'' (யா.வி. சூ. 84-ன் உரை) எனவும் உரையாசிரியர் கூறுவதை ஊன்றிக் கவனித்தல் வேண்டும். அவர் மும்முறை கூறியுள்ள நூற்பெயர்களுள் அகத்தியத்தை ஈற்றில்வைத்திருத்தல் நோக்கத்தக்கது. எனவே, செயல்முறை, செயிற்றியம் என்னும் இலக்கணநூல்கள் அகத்தியத்துக்கு முற்பட்டவை என்பதோர் உண்மை உணரக்கிடத்தல் உணர்க.

(கி. மு. 2387—கி. மு. 500)

அகத்தியத்தை முதனூலாகக்கொண்டு யாப்புநூல்கள் பல செய்யப்பட்டன என்பது, 'அகத்தியனார் ஆணையினால் செய்யப்பட்ட நூல்கள்யாவும்' வகையுளி சேர்த்துக என்பதனால்' (யா. வி. சூ. 95-ன் உரை) என்னும் உரை நோக்கி உணர்க.

யாப்பருங்கல விருத்தியுரையுள் கூறப்படும் பேராசிரியர் சிவபிரானுக்குரிய பல பெயர்களால் கூறப்படுதலையும், ஏடுகளில் அப்பெயர்களோடு 'மயேச்சுரர்' எனும் பெயர் காணப்படுதலையும் நோக்கப் பல பெயர்களைக் கொண்ட பேராசிரியர் 'மயேச்சுரர் என்பவரே என்பது உறுதிப்படுகிறது. இம் மயேச்சுரரே மேற்காட்டியபடி செயல்முறை, செயிற்றியம், அகத்தியம் எனக் கூறியவர். மயேச்சுரர் செயல்முறை, செயிற்றியம், அகத்தியம் என்ற மூன்றையும் தழுவி நூல்செய்தவர் என்பது மேற்காட்டியுள்ள மூன்றிடங்களில் அவர் கூறியன கொண்டு உணரலாம். எனவே, இவர் தோல்காப்பியர்க்கு முற்பட்டவராகவோ சமகாலத்தவராகவோ இருத்தல் வேண்டும்.*

இப்போதுள்ள தொல்காப்பியம் பண்டையது என்பதும் அதன் காலம் கி. மு. 504 அல்லது சிறிது முற்பட்டதெனவும் மேற்கூறினோம். அதன் பாயிரம் பகர்ந்த பனம்பாரனார் 'வடவேங்கடம் தென்குமரி' எனத் தெற்கெல்லை குமரியாறாகக் கூறியுள்ளார். அதேபோன்று காக்கைபாடினியாரும் தமது யாப்பு நூலில்,

> "வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
> வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்

---

* "அஃது ....சொன்னார் கையனார், தொல்காப்பியனார் முதலாகிய ஒருசார் ஆசிரியர்'' (யா. வி. சூ. 34-ன் உரை) என வருதலை நோக்க. தொல்காப்பியர்க்குமுன் கையனார் இலக்கணம் செய்தனராகல் வேண்டும், எனக்கொள்ளலாம்.

நிற்நான் கெல்லை அகவயிற் கிடந்த
நூலதின் உண்மை வாலிதின் விரிப்பின்''

எனக்கண்டிருத்தலால், காக்கை பாடினியார் குமரியாறு கடல் கோள்ளப்படாமுன் (கி. மு. 504-க்கு முன்) இருந்தவர் என் பர் பேராசிரியர் (தொ. செ. முதற்சூத்திர வுரை).

யாப்பருங்கல விருத்திமுதற் சூத்திர வுரையில்,

''தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்;
பல்காய னார்பகுத்துப் பண்ணினார்;—நல்யாப்புக்
கற்றார் மதிக்கும் கலைக்காக்கைப் பாடினியார்
சொற்றார்தம் நூலுள் தொகுத்து''

எனவரும் வெண்பாவில் காக்கை பாடினியார் இறுதியில் கூறப்பட்டுள்ளனர்; அவரே கடல் கோளுக்கு முற்பட்டவர் எனின், அவர்க்கு மேலாகக் கூறப்பட்டுள்ள 'பல்காயனார்' என்பாரும் குமரியாறு கடல் கோள்ளப்படாமுன் இருந்தவர் என்பதில் ஐயமென்னை? எனவே பல்காயனாரும் தொல்காப் பியர் காலத்தவர் (கி. மு. 504-க்கு முற்பட்டவர்) என்பது உண்மை.

காக்கைபாடினியாரை ;'தொல்லாசிரியர் மாபெரும் புல வர்' என யாப்பருங்கல விருத்தியுரையாளர் பாராட்டியுள் ளார். ''காக்கை பாடினியார் முதலிய தொல்லாசிரியர் மதம் பற்றி ஈண்டு நாலசைச்சீர் எடுத்தோதினார்'' (யா. வி. சூ. 10-ன் உரை) எனவும், ''......அவ்வாறு வரின், வெண்பா வழியும் செப்பலோசை தழுவி நில்லாதாகலின் என்று மறுத் தார் காக்கைபாடினியார் முதலிய மாபெரும்புலவர். அவரது துணிபே இந்நூலுள்ளும் துணிபென்று யாப்புறுத்தற்கு வேண்டப்பட்டதென்க'' (யா. வி. சூ. 22-ன் உரை) எனவும் கூறுவனவற்றால், இவர்தம் புலமையும் பெருமையும் பழமை யும் பாங்குற உணரலாம்.

தொல்காப்பியர் காலத்தில் பன்னிரு படலம் என்னும் புறப்பொருள் இலக்கணநூல் ஒன்று இருந்ததென்பது புறப் பொருள் வெண்பாமாலைப் பாயிரத்தானும், யாப்பருங்கல விருத்தியுரையானும் உணரலாம். அதனையும் உரையாளர், ''.........இவற்றின் விகற்பமெல்லாம் பன்னிரு படலத்துள் காண்க'' (யா. வி. பக். 562) எனக் கூறியிருத்தலை நோக்க அந்நூல் கி. பி. 11-ம் நூற்றாண்டு வரை இருந்ததாகத் தெரிகிறது.

தொல்காப்பியம்—செய்யுளியல்; சூ. 105-ன் உரையில் பேராசிரியர், ''.........பாவென மொழியினும் தூக்கினது

பெயரே' என்றார் இந்நூலின் (தொல்காப்பியத்தின்) வழிநூல் செய்த ஆசிரியரும் என்பர். இச்சூத்திரம் செய்தார் நற்றத்தனார் (நத்தத்தனார்) என்பது யா. முதற்சூத்திர வுரையில் காணப்படுகிறது. இந் நற்றத்தனார் தொல்காப்பியரோ டிருந்த பதினொருவருள் ஒருவர் எனக்கூறப்படுதலின், இவரும் தோல்காப்பியர் காலத்தவராகவே இருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது.

'அவிநயம் யாப்புக்கு நாலடி நாற்பதுபோல—யாப்பருங் கலம் என்னும் யாப்புக்கு அங்கமாய்' எனக்காரிகைத் தற்சிறப் புப் பாயிரத்தடியில் வருவதால், 'நாலடி நாற்பது' என்னும் யாப்புநூல் ஒன்று 'அவிநயம்' என்னும் யாப்பு நூலுக்கு அங் கமாய்ச் செய்யப்பட்டது என்பது இனிது புலனாகும். 'நாலடி நாற்பது' நக்கீரர் செய்ததென்பது யா. வி. உரையால் அறிய லாம்.

(தொடரும்)

தமிழிலக்கணத் தத்துவக்கிளை

[ஈப்போ. திரு. தியாகராஜன் அவர்கள், G. M. V. C.]

(முன் ௩௭௭-ம் பக்கத்தொடர்ச்சி)

இடை

TIME AND SPACE

"What we vaguely call being is nothing more than a series of things variously conditioned in time and space and distinguished from one another by different properties"

[Indian Philosophy by Professor Sir Radhakrishnan Vol. 2 Page 187.]

முற்கூறிய மேற்கோளில் Properties என்பதை விடுத்து மற்ற தன்மையைப் பின்வரும்,

"இடையெனப் படுபவ பெயரொடும் வினையொடு
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே"

[தோல். சோல். 249]

என்னும் சூத்திரத்தில் 'பெயரொடும்' என்பதற்கு "With the things" என்பதாகப் பொருள்கொண்டு ஆராய்ந்து பார்க்கின் இடை (Time and space) பொருளொடும், வினையொடும் தழுவிநிற்குமே யொழிய தானாய் நின்றியங்கின் பொருள் படாது. மேலும்,

"Space deals with co-existence, time with succession. Things move by virtue of time and hold together by virtue of space. While space and time cover the most comprehensive kind of relations, transition from place to place, or state to state, spatial locomotion and temporal alterations they are only formal and imply real things which move and change."

[Prof. Sir, Radhakrishnan, Indian Philosophy, Vol. 2, Page 192.]

இக்கூற்றை முற்கூறிய சூத்திரத்தோடும், தொல்காப்பியம்,250-ம் சூத்திரமாகிய

"அவைதாம்,
புணரியனிலை யிடைப் பொருணிலை குதநவும்
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப்பொருள் வயி னுருபாகுநவு
மசைநிலைக் கிளவி யாகி வருநவு
மிசைநிறைக் கிளவி யாகி வருநவுந்
தத்தங்குறிப்பிற் பொருள் செய்குநவு
மொப்பில்வழியாற் பொருள் செய்குநவுமென்
றப்பண்பினவே நுவலுங் காலை"

என்பதுடனும் ஒப்பமைப்பு நோக்கின் தத்துவக் கருத்துக்களுக்கு இச்சூத்திரங்கள் ஒப்பியிருக்கிறதாகத் தோன்றுகிறது. இன்னும்:—

"Space is an empty concept when not filled with perceived objects; 'Space' merely means that certain objects are for the perceiving mind, at such and such a position, or distance, with reference to other perceived objects, and no external perception is possible except of objects in space."

(The Story of Philosophy by Will Durant, Page 312)

1. Space is an empty concept etc. இடையெனப் படுபவ தமக் (கியலும்) இயல்பிலவே.

2. That certain objects are for the perceiving mind at such and such a position or distance. 'புணரிய னிலையிடைப் பொருணிலை குதாவும்' என்னு மொற்றுமைகளும் மற்றவையும் பெரும்பான்மையாயுளவே.

உரி

(Attributes or Characteristics)

"பலவகைப் பண்பும் பகர் பெயராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்குரியன வுரிச்சொல்"

[பவண. உரி. 441]

The words denoting attributes or characteristics are உரிச்சொல்.

Just as there are Special or particular characteristics and General or common characteristics there are- ஒரு குணத்திற்கே உரியவாயும் பலகுணத்திற்கே உரியவாயும், பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையுந் தழுவிய உரிச்சொற்கள்.

மற்றும் இவ்வுரிச்சொற்கள் தத்துவநோக்கங்களை யுடைத்தாயிருப்பதை பவணந்தியார் நன்னூலில் உரிச்சொல்லியலில் காண்க.

After all, the world is constantly changing in time and so,

"பழயன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையி னானே"

[பவண. நன்னூல். 461]

அறிவினும், ஆற்றலினும் குன்றிய யான் எனக்கெட்டிய வரையில் இவ்வொற்றுமைகளை யெடுத்துரைத்தேன். தமிழ் வல்லறிஞர் இத்தன்மையை நன்கு உற்று, ஓர்ந்து உணர்ந்து எடுத்துரைப்பாராயின் தமிழ் உலகத்திற்கும் பெருந்தொண்டியற்றியவராவார்.

Subject or எழுவாய்—The source of action.

Predicate—பயனிலை—The condition of state of the end in view i. e. the effect used for the cause in action. Thus the action is emphasised though not mentioned.

செயப்படுபொருள்—That which is being done.

ஆனைந்து

[திரு. துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள்]

(முன் உ௯௫-ஆம் பக்கத்தொடர்ச்சி)

தேவர்களால் வசிக்கப்பட்டதாகிய பஞ்ச கௌவியமானது மூன்று லோகங்களிலும் பரிசுத்தமானது.

கோமூத்ரத்தில்	வருணனும்
கோமயத்தில்	அக்கினியும்
தயிரில்	வாயுவும்
பாலில்	சந்திரனும்
நெய்யில்	சூரியனும்

வசிக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த முறையைத்தான் ஆரியப் பஞ்சாங்கப் பிராமணர்கள் கையாளுகிறார்கள்.

ஆரியர்கள் வருமுன் தமிழ்நாட்டில் இந்த முறை கிடையாது. தமிழ்நாட்டில் ஆரியப் புரோகிதர்கள் வந்துசேர்ந்த பிற்பாடு தமிழர்கள் அவர்களை, வேடத்தைப்பார்த்துச் சைவர்களென நம்பி, தங்கள் இல்லங்களில் கிரியையாதிகள் செய்ய அழைத்தபோது மேற்கண்ட முறையை மெல்ல மெல்ல நுழைத்துவிட்டார்கள்.

பராசரர் என்பார் வியாசருடைய தகப்பனார்; 1580 B. C.-யில் வாழ்ந்தவர்.

இவருக்குமுன் மனு ஸ்மிருதியை எழுதிய மனு என்பார் 2200 B. C -யில் இருந்தவர். 18 ஸ்மிருதிகளில் முதல் ஸ்மிருதி மனுவாகும்.

பராசரருடைய பிள்ளையாகிய வேதவியாசரும் ஒரு ஸ்மிருதியை எழுதியிருக்கிறார்.

2150 B. C, யில் இயமன் என்பார் ஒரு ஸ்மிருதி எழுதியுள்ளார்.

பராசரர் கூறும் பிரகஸ்பதியானவர் 2070 B. C.-யில் இருந்தவர்.

ஸ்மிருதிகளில் கூறிய பஞ்சகௌவியமானது வியாதியைப் போக்குகிறதற்கும், பாபங்களைப் போக்குகிறதற்கும், தீட்டைப்

போக்குகிறதற்கும் சொல்லியிருக்கிறதே யொழிய சிவபெருமா னுடைய முழக்குக்கு உகந்ததாகக் கூறவில்லை. இதனை ஒவ் வொருவரும் கவனித்தல்வேண்டும்.

ஆகையால், ஸ்மிருதிமுறை தமிழர்களுக்கு உரித்தான தல்ல.

ஆரியர்களுக்குள் ஆபஸ்தம்பம், போதாயனம், ஆஸ்வ லாயனம், வைகானசம், என்ற சூத்திரங்களின்படி நடவடிக் கைகள் உண்டு.

ஸ்மார்த்தப் பிராமணர்	ஆபஸ்தம்பம்
அவர்களில் சிலர்	போதாயனம்
மாத்வப் பிராமணர்	ஆஸ்வலாயனம்
வைணவர்கள்	வைகானசம், பாஞ்சராத்திரம்

இந்த சூத்திரங்களைப் பின்பற்றினவர்கள் பஞ்சகௌவி யம் கூட்டும் முறையும் வழங்கும் முறையும் ஒவ்வொரு சூத் திரக்காரருடைய அபிப்பிராயப்படி சிற்சில மாறுதல்களை உடைத்தாயிருக்கின்றன.

தமிழர்கள் எல்லாம் நந்தியெம்பெருமான் அருளிய சூத் திரப்படி நடவடிக்கை நடத்துபவர்கள்.

ஆகையால் ஆரியர் முறைவேறு, தமிழர் முறைவேறு என்பதனை அறிவாராக. தமிழர்கள் தங்களுக்கு அனாதியே ஏற்பட்டிருக்கும் "நந்தி சூத்திர"த்தை மறந்துவிட்டு இப்போது தங்களை போதாயன சூத்திரக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அது அறியாமையினாலேயேதான். எப்ப டித் தமிழர்கள் தங்களை இன்னார் என்று அறியாமல் ஆரிய நான்கு சாதிப் பகுப்புக்களில் ஒன்றாகிய சூத்திரசாதியில் நுழைத்துக் கொள்ளுகிறார்களோ அதுபோலவே என்க. இம் மயக்கங்களெல்லாம் அறவே ஒழியவேண்டும், அப்போதுதான் உண்மை தெரியும்.

3. தமிழ்-ஆரியர் பத்ததிகளின்படி ஆனைந்து

தமிழ்நாட்டு ஆதிசைவர்களில் சிறுபான்மையோர் பிரா மண மதத்தைத் தழுவிக்கொண்டு ஸ்மிருதியை அநுசரித்துக் கிரியைகள் ஆரம்பித்தபொழுது, ஆரியாசாரம், தமிழாசாரம். இரண்டையும் சேர்த்து விதிகள் எழுத நேர்ந்தது. ஏனென் றால், உடனே தமிழ் ஆசாரங்களை அவர்கள் விடுவதற்கில்லை. பழக்கம் கொடிது. என்செய்வர்!

ஆகையால் பத்ததிகள் எழுதப்பட்டன. பத்ததிகள் 18 ஆகும். ஸ்மிருதிகளில் எப்படி மனு ஸ்மிருதியும் பராஸர ஸ்மிருதியும் அதிகமாய் வழக்கத்திலிருக்கின்றனவோ, அப்படியே பத்ததிகளிலும் அகோர சிவாசாசியார் பத்ததி சோமசம்பு சிவாசாரியார் பத்ததி, இவ்விரண்டும் அதிகமாய் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் அதிகமாய் அகோர சிவாசாரியார் பத்ததியே வழங்கப்படுகின்றது.

அகோர சிவாசாரியார் பத்ததியில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

"கவ்வியம் என்பதின்கருத்து பசுவிலிருந்து பெறப்படுவேது என்பது பொருள். அவை பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பவைகளாம்.

"பசுவானது புண்ணிய வடிவத்தை உடையதாதலால் அதிலிருந்து தோன்றுவன மந்திரத்தைப் பதித்தற்குத் தகுதியுடையன. மந்திரத்தைப் பதித்தபின் பஞ்ச கௌவியத்தைப் பருகுவதினால் மனம் சுத்தமடையும். பொருள்களிலே தெளித்தால் அவற்றிலே மந்திரம் பதிந்து அவைகளும் சுத்தமாகும்.

"கவ்வியத்தில் பஞ்சபிர்ம மந்திரங்களும் தண்ணீரில் சிவ மூலமந்திரமும் பதிக்கப்படும். பின்பு எல்லாம் சேர்க்கப்படும்"

சிருஷ்டிக் கிரமம்

வட

	பிரகிருதி தத்வம் அவ்யக்த பாத்ரம் மூலமந்திரம்-6 தண்ணீர்	சாதாக்கிய தத்வம் சுசாந்த பாத்ரம் தத்புருஷம்-2 தயிர்		
மேற்	புருடதத்வம் ரத்னோதக பாத்ரம் வாமதேவம்-4 கோசலம்	சிவதத்வம் சுப்பிரதிஷ்ட பாத்ரம்ஈசானம்-1 பால்	வித்யாதத்வம் தேஜோவத் பாத்ரம் அகோரம்-3 நெய்	கிழ
		காலதத்வம் அமிர்தாத்மக பாத்ரம் சத்தியோசாதம்-5 கோமயம்		

தெற்

திதிக் கிரமம்

வட

மேற் | கிழ

நீர் 6	தயிர் 2	
கோமயம் 4	நெய் 1	கோமூத்திரம் 3
	பால் 5	

தெற்

சம்ஹாரக் கிரமம்

வட

மேற் | கிழ

நீர் 6	கோமயம் 2	
பால் 4	கோமூத்ரம் 1	நெய் 3
	தயிர் 5	

தெற்

பஞ்சகௌவியம் கூட்டும் முறை மூன்று விதமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அவை:—

1. சிருஷ்டிக் கிரமம்
2. திதிக் கிரமம்
3. சம்ஹாரக் கிரமம்

ஆனல் பெரும்பாலும் சிருஷ்டிக் கிரமமே வழக்கத்தில் இருக்கிறது.

மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் (நிருதி திக்கில்) அரிசி அல்லது நெல்லைப் பரப்பி, அதில் மேலே காட்டியபடி ஒன்பது கோட்டங்கள் வகுத்து, மேலே சிருஷ்டிக்கிரமவடிவத்தில் உள்ளபடி 6 பாத்ரங்கள் வைத்து, கோட்டத்துக்கும் பாத்திரத்துக்கும் பூசைசெய்து, அந்தந்தப் பொருள்களை அந்தந்தப் பாத்திரத்தில் விட்டு, அதற்குரிய மந்திரத்தைக் கோட்டத்தில் குறித்துள்ளபடி அவ்வளவுதரம் செபிக்கவேண்டும்.

செபிக்கும்போது மூடுதல் (அப்யுக்சகணம்) என்னும் முத்திரையுடன் செபிக்கவேண்டும்.

பால், தயிர், நெய், கோசலம், கோமயம், என்ற முறைப்படி பூசிக்க. பின்பு கோமயத்தைக் கோசலத்திலும், பிறகு அவ்விரண்டையும் நெய்யிலும், பிறகு அம்மூன்றையும் தயிரிலும், பிறகு அந்நான்கையும் பாலிலும் சேர்த்துப் பிறகு தர்ப்பை ஜலத்தோடு சேர்க்கவேண்டும்.

சம்ஹிதா மந்திரங்களைச்சொல்லி செபித்து, இரட்சை-அவகுண்டனம்செய்து தேனுமுத்திரை கொடுக்கவேண்டும்.

பிராயச்சித்தத்துக்காயின் மூலமந்திரம் 108 உரு செபிக்க வேண்டும்.

அளவு

பால்	5 பலம்
தயிர்	3 பலம்
நெய்	2 பலம்
கோசலம்	1 பலம்
கோமயம்	கைப்பெருவிரற் பாதி

பால் அளவுக்குத்தக்க பிரகாரம் மற்றப்பொருள்களைக் கூட்டியும் குறைத்தும் கொள்ளலாம். ஆனால் வீதாசாரம் சரியாயிருக்கவேண்டும்.

தற்காலம் சைவமடாதிபதிகளும் சைவ கிரியாகுருக்கள் மார்களும் இந்தப் பத்ததி முறையையே பின்பற்றுகிறார்கள்.

ஆனால் பழய குடும்பத்தைச்சேர்ந்த சைவர்கள் தொன்றுதொட்டுவரும் பழக்கத்தினால் இந்த முறையைக் கைக்கொள்ளாமல் பழய வழக்கத்தையே கொண்டிருக்கிறார்கள்.

இந்த பத்ததிமுறையானது தமிழ்நான்மறை வழக்கோடு முற்றும் மாறுபட்டது என அறிக.

சிவதருமோத்தரம்

ஆரிய ஸ்மிருதிகளை அநுசரித்து எழுதிய நூலாகிய சிவதருமோத்தரத்தில் பரம தருமாதியியலில் சிவபூசைக்குவேண்டும் உபயோகங்களில் தலைமையாகிய பஞ்சகௌவியத்தின் முறைமை பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது :—

அறைந்தனம் அமலன் வாக்கை ஆனிடையாறும் சொல்வாம்
சிறந்தறி சிவபூசைக்குத் தேடரும் பொருள்கள் என்றே

இறந்தவர் என்போடாமை யீண்டெழின் மார்பிற் பூண்டு
புறம்புனத்தாடி பொற்றாள் புரிந்து மாதவபோதத்தில்

(இ-ள்) வாராய் மிகுந்த தபசினையுடையோனே சிவனது திருவாக்கின் மகிமையைச் சொன்னோம். இனிமேல் பசுவின் கண் உளவாகிய கௌவியங்கள் ஆறினையும் சொல்லாநின்றோம். இவற்றைச் சங்காரகாலத்தில் இறந்துபோன அரி-அயன் முதலினோருடைய எலும்புடன் ஆமை ஓட்டையும் எழில்பெருகிய மார்பின்கண் அணிந்து, சுடலையின்கண் ஆடாநின்ற சிவனது பொற்பாதத்தை விரும்பிச்செய்யும் சிவார்ச்சனைக்குத்தேடும் அரிய பொருளென்று நின்னறிவின்கண் சிறப்பினோடும் அறியக்கடவை.

அந்தக் கௌவியம் உண்டாவதற்குக் காரணம் உணர்த்துகிறார்.

அமரரும் அசுரர்தாமும் அமிர்துணக் கருதி வெற்பைத்
தமதுயர் பலத்தாற்றாங்கிக் கடைந்த பாற்கடலிற் றங்கிப்
பவமுறு மரியதேனுப் பஞ்சகம் பரமனாலே
அவன் முடிக்கருக மான வாறுமவ் வைந்தினாமே

(இ-ள்) தேவர்களும் அசுரர்களும் அமிர்தமுண்ண விரும்பித் தங்களுடைய அதிபலத்தினாலே மகமேருவை மத்தாக எடுத்து, வாசுகி என்னுங் கயிற்றாற் கடையப்பட்ட திருப்பாற்கடலிலே நின்றும் சிவனருளினாலே நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை எனக்கூறிய ஐவகைப் பசுவும் தோன்றிப் பின்பு பூமியின்கண்ணே சிவபூசைக்கும் யாகாதி கன்மங்களுக்கும் ஆக உற்பவித்தன.

வந்த ஐந்து பசுவின்கண் சிவனது திருமுடிக்கு உரிமையான கோசலம், கோமயம், பால், தயிர், நெய், கோரோசனை ஆகிய கௌவியங்கள் ஆறும் உண்டாம்.

பஞ்சகம்—ஐந்தின் கூட்டம்.

கௌவியம்—பசுவின்கண் உண்டாயது.

உத்தம ரோசனாந்தம் உரைத்திடும் ஆறும் ஓரின்
வித்தகம் பொருள்கள் வேண்டும் பலத்தினை விளைக்கும் என்றும்
அத்தனை அமலன்றன்னை ஆதரிப் பாருமார
இத்திறத் திசையத் தோன்றும் பொருள்களுமியம்புவாமே.

(இ-ள்) பால்முதல் கோரோசனை ஈறாக உரைத்த ஆறும் ஆராயின் சுத்தமாகிய பொருள்களே. ஜெகத்பிதாவாகிய சிவனை அர்ச்சிக்கும் அவர்களுக்கும் புசிக்க அவரவர் விரும்பிய போகங்களை எக்காலமும் உண்டாக்கும். இப்படிக் கூறப்பட்ட

கௌவியங்கள் ஆறினும் பொருந்திநின்று தோன்றும் பொருள்களையும் மேற்சொல்லுவாம் :

கோரோசனையை—ரோசனை என்றது தலைக்குறை	
கோசலத்துக்குத்	திருவுண்டாகையாலும்
கோமயத்துக்கு	வியாதி போகையாலும்
பாலுக்குச்	சத்துரு நாசமாகையாலும்
தயிருக்குப்	புத்திர ருண்டாகையாலும்
நெய்க்கு	யாவராலும் அதிக பூச்சியதை உண்டாகையாலும்

கோரோசனைக்கு வயது அதிகமுண்டாகையாலும் வேண்டும் பலத்தினை விளைக்கும் என்று சிறப்பித்தார்.

கோமய மதனில் வில்வம் குறுமுனி கூடத்தோன்றும்
பூமக ளந்தவில்வம் புரிந்ததிற் பொருந்து மாற்றால்
தாமமார் வில்வந்தானும் சீபல மென்றே சாற்றும்
நாமமும் புணரும் ஈசர் திருமுடிக்கணி எந்நாளும்.

(இ-ள்) கோமயத்தினின்றும் வில்வம் தளிருடன் தோன்றும். அந்த வில்வத்தைத் திருமகள் விரும்பி அதன்கண் இருக்கும் முறையாலே மாலையாகக் கட்டப்படாநின்ற இந்த வில்வம் சீபலம் என்னும் பெயரைப்பெறும். சிவனது திருமுடிக்கு எக்காலமும் அணிதற்கு உரியதாயும் விளங்கும்.

மற்றுமுள்ள புட்ப சாதிகளைப்போலக் காலகற்பனையின்றி எக்காலமும் சாத்துதற்கு உரித்தாகையால் 'எந்நாளும்' எனச் சிறப்பித்தார்.

உற்பல கமலமூலம் பின்பதி னுதிக்கு நீரில்
பொற்புறு குங்குலியம் பொலிந்தெழும் புரியயாரும்
அற்புதன் றனக்கும் மற்றை அனைவர்க்கும் உணவதாகக்
கற்புறு செந்நெல் பாலில் கதிரொடு கலந்து தோன்றும்.

(இ-ள்) வில்வந் தோன்றியபின் நீலோற்பலக் கிழங்கும் தாமரைக்கிழங்கும் அந்தக் கோமயத்தின்கண் உண்டாம்.

கோசலத்தின் கண்ணின்றும் எழின்மிக்க குங்குலிய மானது எல்லாரும் விரும்ப விளங்கித் தோன்றும்; பாலிலே நின்றும் சிவனுக்கும், மற்றுமுள்ள தேவர், மானிடர் முதலிய யாவர்க்கும் உணவாகிய செஞ்சாலி முதலிய சாலி பேதங்கள் கதிரோடு பொருந்தி உற்பவிக்கும்.

சந்தன முதலாயுள்ள மங்கலம் ததியினுகும்
மந்தரத் தமருண்ணும் அமிர்தமும் நவநீதத்தாம்

சிந்தையார் சித்திபேதம் சிறக்கரோ சனையும்செய்யும்
அந்திவான் வண்ணன் மேனிக்கு அருகமிவ் வாறுமாமே.

(இ-ள்) தயிரினிடத்திலே சந்தனமுதலிய மங்கல பதார்த்தங்கள் தோன்றும். வெண்ணெயினின்றும் விண்ணிலுள்ள தேவர்கள் அருந்தும் அமிர்தம் உண்டாம். கோரோசனை யாவரும் விரும்பிய சித்திபேதங்களைத் தலைமைபெறத் தோற்றுவிக்கும். இன்னனம் கூறிய ஆறும் செக்கர் வானம்போன்ற நிறத்தையுடைய சிவனது திருமேனியில் ஆட்டிப் பணிதற்குரியனவாம்.

சந்தனம் முதலாய என்பதனால் அகில் குங்குமம் முதலிய வெனக் கொள்க.

நவநீதம்—வெண்ணெய்

திடீரென்று இப்பாட்டில் வெண்ணெய் வந்ததற்கு காரணம் ஒன்று இருக்கவேண்டும்.

பால், தயிர், நெய், கோசலம், கோமயம், கோரோசனை இவ்வாறையும் பஞ்சகௌவியம் என்று முன்னே கூறிய நூலாசிரியர் இங்கே வெண்ணெயைக் கூறுவானேன். வெண்ணெயையும் சேர்த்தால் பொருள்கள் ஏழு அல்லவோ ஆகும்? ஆகையால் இவர் கூறியதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. இந்நூலைச் செய்த மறைஞான சம்பந்த நாயனர் தமிழர் முறையை அறிந்தவர். பால், தயிர், நெய் மோர், வெண்ணெய் தான் பஞ்சகௌவியம் என்று அறிந்தவர். ஆகையால் அவரும் அறியாமல் இப்பாடலைப் பாடிவிட்டார். என்ன முயன்றாலும் உண்மையை மறைக்க இயலாது.


ஆதலால் நெய்யாற் பாலால் ஆமில மற்றுமற்றும்
கோதறு ததியினாலும் குழகனன் முடிமேலாட்டிச்
சீதம தகன்ற நீரால் திளைப்புற வாட்டிச்சேர்ந்த
ஆதர வதனாலாட்டி ஆமல காதியாவும்

(இ-ள்) வெளி. இதனுள் ஆமிலம் என்பது புளிப்பு. மற்றுங் கோதறுததி-என்றது பால் காயாது நூலிழைவது, சீண்டு நாறுவது, முதலிய குற்றங்கள் இல்லாத தயிர்.

சீத மகன்றநீர்—இளஞ்சூடான வெந்நீர்.

ஆமலகாதி என்றதனால் நெல்லிக்காப்பு, மாக்காப்பு, மஞ்சட்காப்பு எனவறிக.

யாவும் என்பதனால் இளநீர், பஞ்சாமிர்தம் முதலாயின என்க. (தொடரும்)



திருவாவடுதுறையாதீனச் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியர் சுலோகபஞ்சக
மொழிபெயர்ப்பிற்குத்

திருமயிலை சண்முகம் பிள்ளை யவர்கள் செய்த உரை.

உயிர் காயத்திரிக்கு உரியபொரு ளாகலின்—பெருமை பொருந்திய காயத்திரிமாமந்திரத்துக்கு அதனுக்குரிய சிறப்புப்பொருளேயா மாகலானும்,

தயரதன் மதலை தாபித்து ஏத்தலின்—தயரத மாராசன் கான்முளையாய சீராமன் தனைத்தொடர்ந்த இராவணனாலாய பிரமச்சாயை தொலைதற்பாலதாய்ச் சேதுவின்மாட்டு ஓர் சிவக்குறி தாபித்து வணங்கலானும், (இதனைச் சேதுமான்மியத்தானுந் திருவானைக்காமான்மியத்தானுங் காண்க.)

கண்ணன் கயிலையில் நண்ணி நின்று இரப்ப—கிருட்டினன் வடகயிலாயப் பெரும் பொருப்பின்பா லடைந்து ஏற்ப,

புகழ்ச்சியின் அமைந்த மகப்பேறு உதவலின்—அங்ஙனம் ஏற்புழிச் சாம்பனென்னும் பெயரிய சொல்வளன் பொருந்தும் பல்வகைச்சிறப்பி னல்வழிப்புத்திரப்பேறு நல்கலானும்; (இதனைப் பாகவதபுராணத்தாற் காண்க.)

தனது விழியுடன் ஓர் ஆயிரம் புதுகமலமலர்கொண்டு—தனது விழியாய சிவந்த பங்கயமலரோ டொழிந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பானென்னு மெண்ணின அன்றலர்ந்த தாமரைமலரைக் கைக்கொடுவந்து,

அரி பூசனை ஆற்றலின்—திருமால் சிவாகமத்துட் கிரியா காண்டத்திற் கூறிய விதிவழி தவறாது விதிமார்க்க பூசனையை யியற்றுவான் புக்கபோது,

அவற்கு இரங்கி ஆழி ஈந்து அருடலின்—அன்று சலந்தரற்பிளந்த திருவாழியினைக் கருணைகூர்ந்து அன்னோற்கு

உதவலானும்; (இதனைப் 'பங்கயமாயிரம் பூவினி' லென்னுந் திருவாசகத்தானு முணர்க.)

ஐங்கணைக்கிழவனை அழல் விருந்து ஆக்கலின்—ஐந்தென்னு மெண்ணினைய மலர்ப்பகழிக்குரியோனைய மதனைத் தனது நெற்றிமேலதாம் ஒற்றைநாட்டத்து அனற்கு விருந்து நுகரச் செய்தலானும்; ('கரத்தாமே—வெற்பன் மடப் பாவை கொங்கைமேற் குங்குமத்தின், கற்பழியும் வண்ணங் கசிவிப்பான்—பொற்புடைய, வாமன் மகனைய் மலர்க்கணை யொன் றொட்டியவக், காம னழகழித்த கண்போற்றி' யென்பதூஉம் இக்கருத்தே பற்றியென்க.)

அமைப்ப அரும் கடு விடம் அமுது செய்திடுதலின்—அன்று வேலையிற்றோன்றி அமைத்தற்கரிய கூரிய ஆலகால விடத்தினை அமரரைக் காத்தற்பொருட்டுப் போனகமாக் கோடலானும்; (இதனைக் 'கோலாலமாகி' யென்னுந் திருவாசகத்தாற் காண்க.)

தென்றிசைத் தலைவனைச் செகுத்து உயிர்பருகலின்—அவாசிக்கண்ணதாய்த் தென்புலத்தார்க் கரசுபுரியும் இயமனை மிருகண்டு முனிவனார் மகனார் மார்க்கண்டேயனார் பொருட்டுக் காலானுதைத்து அவனுயிர் கோடலாலும்; (இதனைக் கந்த மான்மியத்தானும், 'மறையவனொருமாணி வந்தடைய' வென்னுந் திருப்பாட்டானுங் காண்க.)

அவுணர் முப்புரம் அழிய வில் வாங்கலின்—நிருதர்புர மூன்றும் நீறெழச்செய்வான் வளையாமாமேரு வரையைச் சாப மா வளைத்துக்கோடலானும்; ('மேருவிலா' யென்றார் பிறரும்)

தக்கன் வேள்வி தகர்த்து அருள்செய்தலின்—சிறுவிதி மகத்தைச் சிதைத்து அவன் புன்றலைக்கு ஆட்டின்தலையே தலையாப் பொருத்தலானும்; ("திக்கமர்தேவர் திருந்தாச் செய்கைத் தக்கன்வேள்வி தளரச்சாடினை" யென்றார் பிறரும்.)

தனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்—பற்குநன் தவநிலையைக் காண்பான் கிராதவுருக்கொண்டு அமலன் அமராடி அவனுக்குத் தனது பாசுபதப்படையே பரிசா நல்கலானும்; (இதனை மாபாரதத்துங் காண்க.)

மானுடமடங்கலை வலிதபக் கோறலின்—இரணியனென்பானைச் செற்றற்பொருட்டு நரமடங்கலா வந்து உகிரான் அவனுடலம் பிளந்து உடலினின் றுயிர் நீக்கி அவன் சோரியைக் கவர்ந்தமையான் கள்ளுண்டு களித்தானைப்போலுங் களித்து உல

குயிரை வருத்த அவனைச் சிம்புள்வடிவாச் சென்று நிக்கிரகம் புரிதலானும்; ('கேசரியை வல்லுகிராற் கீண்டவரா' ரென்பதூ உம் அது.)

மாயோன் மகடூஉ ஆகிய காலை—திருமால் பெண்ணுருப் புணர்ந்தாங்கு சென்றகாலை,

தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்—அங்ஙனம் வந்தானின் பருத்த தனத்தை யணைந்து மாசாத்தாவென்னுங் குருந்தை நல்கலானும்; (இதனைக் கந்தமான்மியத்துங் காண்க.)

ஆழ்கடல்வரைப்பின் ஆன்றோர் அநேகர்—ஆழ்ந்த கடலி ஞற்சூழப்பட்ட இந்நிலவுலகத்தின்கண்ணதாய்ப் பதிபசு பாசமென்னுந் திரிபதார்த்தமே யதார்த்தமெனக்கொண்டொ ழுகும் பல்லோரும்,

அன்பு மீதூர அருச்சனை ஆற்றலின்—அற்புப்பெருக்கான் சிவார்ச்சனையை இகபரத்திச்சையற் றியற்றலான்,

நான்கு இருசெல்வமும் அவர்க்கு அருடலின்—சித்தி யெட்டனையுந் தெரிந்து அங்ஙன மியற்றினருக்கு அருடலானும்;

ஐ இரு பிறப்பினும் அரி அருச்சித்தலின்—திருமாலா வான் தனது ஈரைந்தவதாரத்தினுஞ் சிவபூஜை செய்தமையானும்; (இதனைக் காஞ்சிமான்மியத்தானு முணர்க.)

இருவரும் அன்னமும் ஏனமும் ஆகி அடிமுடி தேட அழற்பிழம்பு ஆகலின்—அரி பிரம ரிருவரும் தாமே பிரம மென்று உளந்தடுமாறும் பசுஞான மேற்கொள்ளும் மாயாவா திகளைப்போன்று உளமயக்குற்று அலமந்திருந்த அமராடிய வேலை அவர்நாப்பண் ஒரழற்பிழம்பாய் நிற்ப அவர் ஏனமும் எகினமுமாகிக் கீண்டும் பறந்துந் தேடகில்லாது வருந்த அவர்க்குண்மையை விளக்கி யருள்புரிதலானும்; (இதனைப் 'பிரமனரியு' மென்னுந் திருவாசகத்தானுங் காண்க.)

பிறப்பு இறப்பு ஆதி உயிர்க்குணம் இன்மையின்—பிறப் பிறப்பினனுழலும் இவ்வுடம்பினேடு உயிர் கூடியிருப்புழி அறிவுமுதலாய முப்பானிரண்டு மிவைபோல்வன பிறவுமாய வுயிர்க்குணங்களுடைமையாந்தன்மை யின்மையனகலானும்;

கங்கை சூழ்கிடந்த காசிமால் வரைப்பில்—கங்கையாற் ரூற் சூழப்பெற்ற காசிக்ஷேத்திரத்தினிடத்து,

பொய்புகல் வியாதன் கை தம்பித்தலின்—அநாதி மலமுத்த சித்துருவாய பதிப்பொருளைப் பொருளென்னுது பசுத்துவமுடைய ஒன்றனைப் பொருளென்னும் பராசரன் மதலையின் கரமும் நாவுந் திருநந்திதேவராணையா னெழாமற் செய்தமையானும்; (இதனைக் காசி கண்டத்தானுமுணர்க.)

முப்புரம் இறுப்புழி—செம்பொன் வெண்பொன் கரும் பொன்னென்னும் இம் முத்திறத்துப் பொன்னினுய முக் கோட்டைகளையும் அவற்றின் தலைவராய தாருகாக்ஷன் கமலாக்ஷன் வித்துன்மாலி யென்பாரையும் பொருது செயிப்பான் வந்தகாலை,

முகுந்தப்புத்தேள் மால்விடையாகி ஞாலமொடு தாங்கலின்—முகுந்தனென்னும் பெயரையுடையனுய திருமால் பெருமைதங்கிய விடபமாக வைதிகத்தேரினை அதன் பீடமாய பிருதிவியோடு தாங்கலானும்; ('கடகரியும் பரிமாவு' மென்பதூஉம் இக்கருத்தேபற்றி யென்க.)

அயன் சிரமாலை அளப்பு இல அணிதலின்—அரிப்பிரமாதியர் சிரமாலைக ளளவிறந்தன அணிதலாந் தன்மையானும்; ('நங்காயிதென்னதவ' மென்றூர் ஆசாரியரும்.)

ஞானமும் வீடும் பேணினர்க்கு உதவலின்—ஆகமஞானமும் திருவடி ஞானமுமாய இருதிறத்து ஞானங்களும் சீவன் முத்தி பரமுத்தியென்னும் இருதிறத்து முத்திகளும் தன்னை அன்போடு உள்ளூன்றியடைந்தார்க்கு அருளுவதாந் தன்மையானும்;

பசுபதிப்பெயரிய தனி முதல் கடவுள்—பசுபதியென்னும் பெயரினையுடையனுயுந் தனக்கோ ரொப்புமையு மோர் முதலு மின்மையனுயும் யாவருள்ளுங் கலந்துங் கடந்தும் நின்ற இறைவன்;

உம்பர்கள் எவர்க்கும் உயர்ந்தோன் என்பது—எவ்வகைப்பட்ட இலக்கணங்களையுடைய கடவுளருள்ளும் மிக மேலாயவனெனப்படுமியல்பினை; ('செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவான' என்பதூஉம் அது.)

இயல்பு உணர்ந்தோரே—எவ்வகைப்பட்ட கடவுளரிலக்கணங்களையுங் குருமுகத்தானுராய்ந்து உணரும் அறிவினையுடையோரே;

தெளிக—சுருதிகுரு சுவானுபவத்தாற் றெளிந்துணர்க.

உயர் காயத்திரிக்குரிய பொருளாகலினென்புழி, சிறப்புப் பொருந்திய காயத்திரி மந்திரத்தில், பார்க்கசத்தப் பிரதிபாதகம், சங்கார கிருத்தியத்தின்மேற் கிருத்திய மின்றாகலானுஞ், சங்கரற்கு மேற்றெய்வ மின்றாகலானுஞ் சங்கரனென்றே கோடும். இதூஉமன்றிச் சங்காரகிருத்தியத்தில் எவ்வகைப்பட்ட கிருத்தியங்களும் ஒடுங்கலானும் மீண்டும் ஆண்டுநின்றே விரிதலானுமென்க. இதனைச் சிவஞான போதத்து முதற்சூத்திரத்தானும், இதன் பொருளை விரித்துக் கூறிய சித்தியார், சிவப்பிரகாசமிவற்றின் சூத்திரங்களானும் தாயுமானூர் பாடலில், 'தேன்முகம்பிலிற்'றென்னும் பதிகத்தானுமுணர்க. பர்க்கசத்தத்திற்குச் சோதியெனப் பொருள் கூறி அதன் பொருளாவான் வாசுதேவனெனப் பாஞ்சராத்திரிகள் கூறுவாருமுளராலோவெனின், அற்றன்று, அவன் கருவந்திபோலுந் திருமேனியனாகலானும் இவன் செவ்வந்திபோலும் திருமேனியனாகலானுஞ் செவ்வந்தியே ஒளியுடைமையானும் அவர் கூற்றுக்குப் பொருளின்மையை யுணர்க. செம்பவள வண்ணர், செந்தீவண்ணர், செவ்வானவண்ணரென்பதூஉம் அது. இது நிற்க, உபநிடதத்தும் மிருதிநூலினுஞ் சிவாகமத்தும் ஆதித்த மண்டலாந்தரதேவதை அட்டமூர்த்தியாய வுருத்திர மூர்த்தியென்றுரைக்கப் படுதலானும், தருக்கநூலினும் ஆதித்த மண்டலத்தில் வன்னியிருப்பதென்றோதுபவாகலானும், அஃது அதனுக்கு இன்றியமையா ஒளியாகலானு மென்பதூஉந் துணியப்படுதலானும் அவர் அங்ஙனங்கூறுதல் அத்துணைச் சிறப்பின்றென மறுக்க. இதனை 'உளற்கரும்பரிதி மண்டலத்துறையும் பொருட்குண' மெனச் சிவதத்துவ விவேக விருத்தியிற் கூறியவாற்றானு முணர்க.

உம்மைகள் தொக்கு நின்றன.

ஆங்கென்பதிரண்டும் அசை. அமைப்ப அரும் எனற்பாலது அமைப்பருமெனச் செய்யுள் விகாரம்பெற்று நின்றது. நண்ணிநின்றென்பது—இருசொல்லொரு நீர்மைப் பட்டுவந்த செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம். கமலப்புது மலரென்பதனைப் புதுகமல மலரென நிலைமாற்றிப் பொருளுரைத்துக் கொள்க. பற்குனனென்னும் பெயர்—பார்த்தன் பால்குனமாதத்தின் சனனமாயினமையின் அப்பெயரிடப்பட்டது: இது சித்திரையா னென்பதுபோலும். சித்தி யெட்டாவன, அணிமா, இலகிமா, கரிமா, மகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவமாகிய விவை யெண்வகையெனக் கொள்க.

ஐங்கணையாவன பங்கயம், அசோகு, மா, மல்லிகை, நீலோற்பலமாகிய விவை ஐவகையெனக் கொள்க.

வியாதன்கை யென்பதனுன்—நாவென்றது வருவித் துரைக்கப்பட்டது. வீடு துறவு முத்தி மோக்கமென்பன ஒரு பொருட்பல்பெயர்க்கிளவி. இவை நீக்கமென்னும் பொருட்டு. இதனை 'வீடென்றுரைதரு சொற்குப் பொருளோ விடுதலை' யென்பதனுனுமுணர்க.

ஆகம ஞானமெனினும் அபர ஞானமெனினும் வாசக ஞானமெனினு மொக்கும்.

திருவடி ஞானமெனினும் அநுபவ ஞானமெனினும் பர ஞானமெனினுந் திருவருண் ஞானமெனினு மொக்கும். இவற் றினையே ஒரு சாரார் பரோக்ஷா பரோக்ஷ ஞானமென்ப.

ஞானமிருவகை யென்பதனை 'இயம்பிடு ஞானமோரிருவ கைப்படும்—பயன்றரு மபரமும் பரமுமென்னவே-நயந்தகலை களே யபரஞானமா-முயர்ந்திடுபரஞ் சொலினுணர் வென்றே துவாருளரென' றுதலிப்போந்த சுவாயம்பு சூத்திரத்தானு முணர்க. முத்தி இருவகையென்பதனைச் 'சீவன்முத்தியே திகழ் பரமுத்தியே யென்ன—மேவுமுத்தியோரி ரண்டினு' மெனத் திருவானைக்கா மான்மியத்திற் கூறியவற்றானுமுணர்க.

என்பதெனற்பாலது என்று சொல்லுதற்றொழிலையுணர்த் தும் பொருட்டு. ஈண்டைச் சொல்லுதற் றொழில்தொக்கு நின்றது. இங்ஙனஞ் சொற்றொக்கு நிற்பது சொல்லெச்ச மன்றெனக்கூறிய ஆசிரியர் தொல்காப்பியர், பரிமேலழகர் முதலிய வுரையாசிரியர் கருத்துணராது அவர்க்குக் குற்றமுங் கூறினர் ஆசிரியர் பவணந்தியார். ஆகலின், சொல்லெஞ்சியிருத் தலே சொல்லெச்சமென்க. இதனை விரிப்பிற் பெருகும். இஃதொருவாறு முடிந்தது.

வரலாற்றுப் பகுதி: History & Biography

குக்லியல்மோ மார்கோனி
(Guglielmo Marconi)

[திரு. N. குழந்தைவேலன் B.A. அவர்கள்]

உலகப்புதுமைகள் யாவற்றினும் மேலாக விளங்குவது ரேடியோ (Radio) என்னும் கம்பியில்லாத் தந்தியாகும். இக்கருவி நெடுந்தொலைவிலுள்ள இடங்களுக்கு இடையில் கம்பி ஒன்றும் இணைக்காமலே மின்சாரத்தின் உதவியால் செய்திகளை அனுப்புவதற்குப் பயன்படுகின்றது. ரேடியோவின் மூலம் பல்லாயிரக்கணக்கான (மைல்) கல்லுக்கு அப்பாலுள்ள வர்கள் பேசுவதையும் பாடுவதையும் கேட்கின்றோம். இஃது எங்ஙனம் இயலும்? இவ்வியத்தகு செயல் மின்சார அலையினாலேயே நடைபெறுகின்றது. மின்சார அலை என்பது யாது? இதனை மிகத்தொலைவிலுள்ள ஓர் இடத்திற்கு அனுப்பி ஆங்குள்ள கருவியை இயக்குவது யாங்ஙனம்? ஒரு நீர் நிலையில் ஒரு கல்லை வீசி எறிவோமாகில் அந்நீரில் அலை தோன்றி நெடுந்தொலை பரந்து சென்று மறைகின்றது. மின்சார அலைகளையும் ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்குத் தாங்கிச்செல்ல நீரைப்போன்று வேறு ஏதேனும் ஒரு பொருள் வேண்டும். இத்தகைய பொருள் வான் வெளியெங்கும் பரவியுள்ளதும் மிகவும் நுண்ணிய அணுத்திரள்களால் ஆகியதுமான (Ether) ஈதர் என்னும் ஒரு வளி ஆகும். இவ்வியத்தகு வளியில் மின் அலைகள் ஒரு விநாடிக்குச் சற்றேறக்குறைய 186,000 (மைல்), கல் தொலைவு விரைந்து செல்கின்றன. இவ் அலைகள் ஈதர் வளியின் உதவியால் வானில் தோன்றும் எல்லாப்பொருள்களையும் தங்குதடையின்றி ஊடுருவிச் செல்கின்றது.

செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஈதர் மூலமாய் அனுப்புதற்கு முதலில், ஒலியானது மின்சார ஆற்றலாக மாற்றப்படுகின்றது. இம்மின்சார ஆற்றல் ஈதர் அலைகளின் உதவியால் குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பப்பெறுகின்றது. ஆங்கு இம்மின்சார ஆற்றலை மீண்டும் பழைய ஒலியின்வடிவாக மாற்றிச் செய்திகளை யாவரும் அறிகின்றனர். இங்ஙனமே இசைவாணர் ஒருவர் பாடினால் (Electro-magnet) மின்காந்தத்தால் ஆகிய ஒரு கருவி அப்பாடலை

னுள்ள பலதிறப்பட்ட ஓசைகளை மின் அலைகளாக மாற்றி வான் வெளியிற் செலுத்துகின்றது. இவ் அலைகளைத் தொலைவிலுள்ள (Receivers) மின்வாங்கிகள் ஏற்றுக்கொண்டு அவற்றை (Loudspeaker) ஒலிபெருக்கியின் மீது பாய்ச்சி அப்பாடலைத்தெளிவாய்க் கேட்கும்படி செய்கின்றன.

இவ் அரிய ரேடியோ என்னும் கருவி குக்லியல்மோ மார்கோனி என்னும் பேரறிஞரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் 1875-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள் இத்தாலி நாட்டிற் பிறந்தார். இவர் இளமையிலேயே ஆய்வுகள் நடத்துவதில் மிகுந்த ஊக்கங்கொண்டிருந்தார். இவர் தமது வீட்டிற்கு அருகிலுள்ள குன்றில் வளரும் கள்ளிப்பழங்களை விடுவதில்லையென்றும், அவற்றின் சாற்றைப்பிழிந்து தாம் எழுதுவதற்கு மை ஆக்கிக்கொள்வார் என்றும் கூறப்படுகின்றது. இவர் மாணவராக இருக்கும்பொழுதே (Edison) எடிசன் என்னும் மின்சார வல்லுநரின் ஆராய்ச்சிகளையும், அவற்றால் விளையும் பயன்களையும் கேள்வியுற்றுத் தாமும் மின்சார ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

இவர் தமது 14-ம் ஆண்டிலேயே வான்வெளியெங்கும் கண்ணுக்கு எட்டாது மறைந்து கிடக்கும் ஈதர் என்னும் வளியைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். கதிரவனின் ஒளி ஈதர் அலைகளின் உதவிகொண்டு நம்மைச்சேர்கின்றதென்றும், ஒளி அலைகளைப்போன்று அதே விரைவுடன் மின்சார அலைகளையும் இவ்வளியின் மூலம் செலுத்தக்கூடுமென்றும் இவர் கண்டுணர்ந்தார். அன்றியும் இவ் அலைகளின் உதவியால் செய்திகளை ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்கு அனுப்பக்கூடுமென இவருக்குத் தோன்றிற்று. இவர் ஈதர் அலைகளைத் தமது விருப்பம்போல் இயக்குவதற்கும் அவற்றை நெடுந்தொலைவிலுள்ள மின்சாரக்கருவியில் தாக்கும்படி செய்வதற்கும் வழிதேடலானார். இவர் இதன் பொருட்டுப் பல திறப்பட்ட ஆய்வுகள் நடத்தியதன் பயனாக 1896-ஆம் ஆண்டில் கம்பியின் உதவியின்றியே தந்தி அடிக்கும் வியத்தகு கருவிகளைச் செய்து முடித்தார்.

ஆயினும் இம்முறைப்படி அனுப்பும் செய்திகள் மிகவும் அருகிலுள்ள இடங்களுக்கே எட்டக்கூடியனவாக இருந்தன. மார்க்கோனி தாம் கண்டுபிடித்த இப்புதிய முறையைப் பரப்புதற்பொருட்டு இங்கிலாந்துக்குச் சென்றார். முதன் முதலில் இலண்டன் (தபால்) அஞ்சல் நிலையத்திலிருந்து 300 அடி தொலைவிலுள்ள ஓரிடத்திற்குச் செய்திகள் அனுப்பப்

பட்டன. மார்க்கோனியின் அரும்பெரும் முயற்சியினால் இக்கலை சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று 1899-ஆம் ஆண்டில் 200 கல் தொலைவுவரை செய்திகள் அனுப்பப்பட்டன. மறு ஆண்டின் தொடக்கத்தில் உலகம் போற்றும்* மார்க்கோனி தந்திச்சாலை நிறுவப்பெற்றது. மார்க்கோனி அல்லும் பகலும் இடைவிடாது வருந்தியுழைத்து நெடுந்தொலைவிலுள்ள இடங்களுக்குச் செய்திகளை அனுப்பும் ஆற்றல் நிறைந்த கருவிகளைச் செய்து முடித்தார். இவர் கார்ன்வால் (Cornwall) என்னும் இடத்தினின்றும் அட்லாண்டிக் கடலுக்கு அப்பாலுள்ள நியூஃபௌண்ட்லாந்துக்கு (Newfoundland) எவ்வாறேனும் செய்திகளை அனுப்பவேண்டுமென முயற்சி செய்தார். ஒரு வேளை தமது எண்ணம் நிறைவேறாவிடில் நகைப்பிற்கிடமாகும் என அஞ்சி இவர் தமது கருத்தை எவரிடமும் வெளியிடாது மறைத்து வைத்துக்கொண்டார்.

இவர் கார்ன்வால் தந்தி நிலையத்தில் எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்தவுடன் தமது உதவியாளர்களான கெம்ப் (Kemp), பேஜெட் (Paget) என்பார் இவருடன் புறப்பட்டு நியூஃபௌண்ட்லாந்துக்குச் சென்றார். ஆங்கு கடற்கரையோரமாக இருந்த பழைய கட்டிடமொன்றில் தமது கருவிகளை அமைத்துக்கொண்டார். அவ்வமயம் காற்று மிகுதியாக இருந்ததால் இவர்தம் ஆராய்ச்சி சிறிது பொழுது தடைப்பட்டது. ஆயினும் ஊக்கம் குன்றாது எல்லாவற்றையும் சீர்படுத்திவைத்தார். இங்கிலாந்தை விட்டுப் புறப்படுவதன் முன் கார்ன்வால் தந்திநிலையத்திலுள்ள தமது ஆட்களிடம் ஒரு நாளைக்குறிப்பிட்டு அன்று மாலை 3 மணி முதல் இடைவிடாது 3 சிறிய மின்சார அலைகளை அனுப்பிக் கொண்டிருக்கும்படி கட்டளையிட்டிருந்தார். 3 சிறு அலைகள் அல்லது புள்ளிகள் தந்திமுறைப்படி S. என்னும் ஆங்கில எழுத்தைக் குறிப்பன ஆகும். குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் மார்க்கோனி தமது செவியில் மின்சாரக்கருவியை வைத்துக்கொண்டு உற்றுக்கேட்டார். காற்றோ மிகவும் கடுமையாக வீசிக்கொண்டிருந்தது. இதனால் அன்று முழுவதும் இவருக்கு ஓர் ஓசையும் கேட்கவில்லை. மறுநாள் மாலை சிறிது ஓசைகேட்கத் துவங்கிற்று. உடனே மார்க்கோனி தமது உதவியாளரின் செவியில் அக்கருவியை வைத்துக் கேட்கும்படி செய்தார். எனினும், சிறிது பொழுதிற்குள் அவ்வொலி நின்றுபோயிற்று. அனைவரும் பொறுமையோடு காத்திருந்தனர். நெடுநேரத்திற்குப்பின் அவ் ஓசை மீண்டும் கேட்கத்தொடங்கிற்று. இவ்வண்ணம் தந்திச்செய்தி கம்பி

* Marconi's Wireless Telegraph Company.

யின் உதவியின்றி அட்லாண்டிக் கடலை முதன் முதலாகக் கடந்து சென்றது. உலகிற் பெரியதொரு புதுமையைக் கண்டுபிடித்தோ மென்பதையுன்னி மார்க்கோனி அளவிலா மகிழ்வெய்தினர்.

மார்க்கோனி தமது அரிய ஆய்வுகளாற் கண்டறிந்த உண்மைகளைப் புதினத்தாள்களில் வெளியிட்டார். துவக்கத்தில் மக்கள் பலர் அவற்றை உண்மையன்றென மறுத்தனர். (Kelvin) கெல்வின் என்னும் ஆராய்ச்சியாளரும் அவர் போன்றவர்களும் இவர்தம் அறிவுரைகளைப்போற்றிப் புகழ்ந்தனர். இதன் பின்னரே மார்க்கோனியின் பெருமை மக்களுக்குத் தெரியலாயிற்று. 27 ஆண்டுகளும் நிரம்பப்பெறாத இளைஞராயிருக்கும் பொழுதே இவ் அரிய ஆய்வுகளை நடத்தியதற்கு அறிஞர் அனைவரும் இவரைப் பாராட்டினர். அறிவியல் வளர்ச்சியின் பொருட்டு ஆண்டுதோறும் ஸ்வீடன் (Sweden) நாட்டில் வழங்கப்படுவதும் நூறு ஆயிரம் ரூபாய்க்குமேல் மதிப்பிடக் கூடியதுமான நோபெல் பரிசு (Nobel Prize) இவருக்கு 1909-ஆம் ஆண்டில் கிடைத்தது. தற்காலத்தில் எவரும் பெறுதற்கு அரிய பெரும்பேறுகளில் இஃது ஒன்று ஆகும். கம்பியில்லாத் தந்தியின் அருமைபெருமைகளை இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகள் நன்குணர்ந்து பல்வேறு இடங்களிலும் புதிய முறையில் தந்திநிலையங்கள் அமைத்துக் கொண்டன.

மார்க்கோனி தமது ஆராய்ச்சியை இவ்வளவோடு நிறுத்திவிடவில்லை. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மறைபொருளாய் அனுப்பும் செய்திகளைப் பகைவர் எவரேனும் அறிந்துகொள்ளாமற் தடுப்பதற்கு வகைதேடலானார். இவர் பல்லாண்டுகளாய் ஓயாது உழைத்து "ஒலிதிருத்தல்" (Tuning) ஒன்னும் முறையைக் கண்டுபிடித்தார். இம்முறையில் மின்சார அலைகளின் அளவும் விரைவும் ஏறக்குறைய 200 வகைகளாய் மாற்றி அனுப்பப்படுகின்றன. செய்திகளைப்பெற்றுக்கொள்ளும் மின்வாங்கிக் கருவிகள் (Receivers) இவற்றிற்கேற்ப அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகலின் அனுப்பப்படும் மின் அலைகளின் அளவு, விரைவு இவற்றை முன்னால் அறிந்து அதற்கு ஏற்றவாறு மின்வாங்கியைத் திருகிவிட்டாலொழிய ஓசை ஏனைய இடங்களுக்கு எட்டாது. அன்றியும் அயலான் ஒருவன் குறுக்கிட்டு இவ் அலைகளிற் செய்தியைத் தாங்கிச் செல்லும் அலை இன்னதென எளிதில் அறிந்து கொள்ள முடியாது. ஒரு விநாடிக்கு நூற்றெண்பத்தாறாயிரம் கல்தொலைவிற்கு மேல் விரைந்து செல்லும் இவ் அலை ஒவ்

வொன்றையும் சோதித்துப்பார்ப்பதற்குள் செய்திகள் குறிப்பிட்ட இடங்களுக்குப்போய்ச் சேர்கின்றன.

ரேடியோவை மக்களுக்குப் பயன்படும்படி சிறந்த முறையில் அமைப்பதற்கு (Edison) எடிசன் (Flemming ஃபிளெம்மிங் (De Forest) டிஃபாரஸ்ட் முதலிய மின்சார வல்லுநர்கள் உதவியாக இருந்தனர். 1914-ஆம் ஆண்டில் மார்க்கோனிக்கு அரசாங்கம் ஓர் அரியபட்டத்தை வழங்கிற்று. 1930-ஆம் ஆண்டில் இவர் இத்தாலி நாட்டின் பல்கலைக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

ரேடியோவின் வியத்தகு செயல்கள் அளவற்றன ஆகும். இது பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றிவருகின்றது. திசைதப்பிச்செல்லும் கப்பல்களுக்கு இது வழிகாட்டியாக உதவுகின்றது. 1909-ஆம் ஆண்டில் ரிபப்ளிக் (Republic) என்னும் கப்பல் கடலில் மூழ்கத்தொடங்கியவுடன் ரேடியோ நிலையங்கள் இச்செய்தியை அறிந்து உதவிப் படகுகளை அனுப்பின. இதனால் 200 உயிர்கள் வரை காப்பாற்றப்பட்டன. ரேடியோவின் உதவியால் பல்வேறு நாடுகளும் ஒன்றோடொன்று எளிதில் இணைக்கப்பெற்று மக்கள் அனைவரும் ஒரே வீட்டில் இருப்பதுபோன்று எல்லாவசதிகளையும் பெறுகின்றனர்.

ரேடியோவினால் தொலைவில் உள்ளவர்களது பேச்சையும் பாட்டையும் மட்டும் கேட்கமுடியும். "டெலிவிஷன்" (Television) என்னும் தொலைநோக்கித்தந்தியின் வாயிலாக நம் வீடுகளில் இருந்துகொண்டே அயல்நாடுகளிற் பேசுகிறவர்களையும் பாடுகிறவர்களையும் நேரிற்காணலாம். இக்கருவியினால் நாம் உள்ளூரில் இருந்துகொண்டே இங்கிலாந்து முதலிய நாடுகளில் நடக்கும் பந்தயங்களையும் விழாக்களையும் கண்கூடாகக் காணலாம். இஃது என்ன புதுமை? ரேடியோவினால் எங்ஙனம் தொலைவிலிருந்து பேச்சும் பாட்டும் நம் செவிக்கு எட்டுகின்றனவோ அங்ஙனமே அங்குள்ள ஒளியும் நம் கண்ணுக்கு வந்துசேர்கின்றது. கண்போன்ற மின்சாரக் கருவியானது பாடுகின்றவர் மேல் விழும் ஒளிக்கதிர்களைப் பொறுக்கி எடுத்து மின் அலைகளாய் மாற்றி வான் வெளியிற் செலுத்துகின்றது. இவ் அலைகளைத் தொலைவிலுள்ள மின்வாங்கிகள் ஏற்றுக்கொண்டு அவற்றை மீண்டும் ஒளியாக மாற்றித் திரையின்மேல் வீசுகின்றன. இங்ஙனமாக நெடுந்தொலைவில் நிகழ்வனவற்றை நாம் கண்டுங் கேட்டும் இன்புறுவதற்கு ஏதுவாகின்றது.

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

தலைமைப் பேருரை

சித்தாந்த ஆசிரியார் ந. சிவகுருநாத பிள்ளை யவர்கள்.

(முன் ௩௦௨ ஆம்- பக்கத் தொடர்ச்சி)

அ. சித்தாந்த முத்தி

சித்தாந்தத்திற் கொள்ளப்படும் முத்தி இருவகைப்படும். அவை பத முத்தி பர முத்தி யென்பனவாம். தாதமார்க்கமாகிய சரியையினை அநுட்டிப்போர் சிவசாலோகத்தையும், சற்புத்திரமார்க்கமாகிய கிரியையினை அநுட்டிப்போர் சிவசாமீபத்தினையும், சகமார்க்கமாகிய யோகத்தை அநுட்டிப்போர் சிவ சாரூபத்தையும் அடைவர். இம்மூன்றும் பதமுத்தி யென்று சொல்லப்படும். இனிச் சிவஞானத்தை அநுட்டிப்போர் இறைவனுடைய எண் குணங்களும் தம்மாட்டுப் பதியப் பெற்றுச் சிவசொரூபமாய் விளங்கும் சிவசாயுச்சியப் பேற்றையடைவர். இந்திரலோகம், பிரமலோகம், விண்டுலகம் என்று சொல்லப்படும் உலகங்களை யடைதல் முத்தியில்லை யென்று சொல்லத்தக்கதன்று; அவை சொர்க்கங்கள் என்று சொல்லப்படும். "தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே" என்னும் தேவாரத் திருவாக்கும், "மாலயன் பெறு பதத்தையும் பொருளென மதியேன்" என்னும் கந்த புராணத் திருவாக்கும் ஈண்டு சிந்திக்கத்தக்கன.

௯. வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்

திருமூல நாயனர் திருமந்திரத்தில்;

" வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்பு மென்றுள்ளன
நாத னுரையிவை நாடிலிரண் டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே "

எனக் கூறியுள்ளார். இவ்வுண்மை கடைப்பிடிக்காத வைதிக சமயத்தார்கள் வேதத்தைமட்டும் கைக்கொண்டு சிவாகமங்களைக் கைக்கொள்ளாத காரணத்தால் வேதோபநிடதங்களிற் கூறப்படும் உண்மைகளைத் தெள்ளிதின் உணர்ந்துகொள்ளக்

கூடாதவர்களா யிருக்கின்றூர்கள். அவர்களா லறியப் படாத உண்மைகள் சித்தாந்தத்தில் விளங்க உரைக்கப் பெற்றிருக்கின்றன. "ஏகம் பிரமம்" என்னும் ஒரு வாக்கியம் உபநிடதத்திற் காணப்பெறுகின்றது. இவ்வாக்கியத் திற்கு வைதிகர்கள் "பிரமப் பொருள் ஒன்றைத் தவிர வேறு பொருள்கள் கிடையா" வென்று ஏகான்மவாதஞ் சாதிப்பாராயினர். ஏகம் பிரமம் என்னும் வாக்கியத்தின் பொருள் அஃதன்று என்பதை நமது மெய்கண்டசிவம் சிவஞானபோதத்தில் "ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே பதி" அதாவது பிரமங்கள் பல இல்லை, பிரமம் ஒன்றே யுள்ளது என விளக்கியருளினூர். இனி "ஏகமேவாத்வி தீயம் பிரமம்" "சிவமத்வைதம் சாந்தம்" என்பனவாதிய வாக்கியங்களினுள்ள அத்வைதம் என்னும் சொல்லினுள்ள அகரத்திற்கு இன்மைப் பொருள்கொண்டு ஏகம் பிரமம் என்ற பொருளிலேயே இதனையும் வழங்குவாராயினர். சிவ ஞானபோதத்தில்,

> " பண்ணையு மோசையும் போலப் பழமதுவும்
> எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம்—அண்ணல்தாள்
> அத்துவித மாதல் அருமறைக ளொன்றென்னாது
> அத்துவித மென்றறையு மாங்கு "

என, அதாவது பண்ணும் அதன் ஓசையும், பழமும் அதன் சுவையும் எங்ஙனம் பிரிக்கப்படாத குணகுணிப் பொருள்களா யிருக்கின்றனவோ அவற்றைப்போல இறைவன் உலகுயிர்களை இயக்குதற் பொருட்டு அவற்றெடு பிரிக்கப்படாத நிலையிற் கலந்து நிற்றலே அத்வைத சம்பந்தமென்று விளக்கி யிருக்கும் வாய்மை பாராட்டற்குரிய தன்றே? இது பற்றியே தாயுமான சுவாமிகள் "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித-மெய்கண்ட நாதனருள் மேவுநாளெந்நாளோ" என மெய்கண்டசிவத்தைப் போற்றுவாராயினர். மாதவச் சிவஞானயோகிகள் சிவஞான போதச் சிற்றுரையிலும், சிவ ஞானமாபாடியத்திலும் அத்துவித உண்மை பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்து உண்மைப் பொருளை வெளியிட்டிருக்கின்றூர்கள். அவற்றைச் சைவ மக்களுணர்ந்து இன்புறுவாராக. இனிப் "பிரமாகமம்" "சிவோகம்" எனச் சீவர்கள் தம்மைப் பிரமமாகச், சிவமாகப் பாவிக்க உபநிடதங்களில் விதிக்கப்பெற்றிருக்கின்றது. வைதிகர்கள், சீவர்களெல்லாம் பிரமசொரூபமே யாதலின் தான் பிரமம் என்பதை உணர்ந்து கொள்ளுவதற்காகவே இங்ஙனம் பாவிக்கும்படி விதிக்கப்பெற்றிருக்கின்றதென்று கூறுகின்றூர்கள். பிரமம் தன்னையே தான் என்று பாவிப்பதனல் வரும் பயன் யாதுமில்லை. அல்லதூஉம்

பாவனையென்னுஞ் சொற்குப் பொருளாமாறுமில்லை. இனி இப் பாவனையின் விசேடத்தை,

"கண்டவிவை யல்லேனு னென்றகன்று காணுக்
 கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்ரு னின்றகலப் பாலே
 சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலு மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
 விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா னுனே னென்று
 பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே."

எனச் சிவஞானசித்தியார் திருவிருத்தம் சிவோகம் பாவனையி னுண்மையையும், பயனையும் எவ்வளவு தெளிவாக விளக்கியிருக்கின்றது காண்மின் அன்பர்களே.

கo. சைவ சமையாசாரியர்கள்

அருமையும் பெருமையும் வாய்ந்த நமது சைவ சமயத்தை வளர்த்தருளிய ஆசாரியர்கள் இருவகையினராவர். அவர் சமயாசாரியர், சந்தானுசாரியர் என்பவராவர். சமயாசாரியர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வராவர். இந்நால்வரும் இறைவன் திருவருள் நேரே கைகூடப்பெற்றவர். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமிழ்நாடு முற்றிலும் பரவியிருந்த புறச்சமய இருளைக் களைந்து சைவ சமயத்தை நிறுவியருளினுர். திருநாவுக்கரசு சுவாமிகள் மாற்ருர்கள் தமக்குச் செய்த கொடுமைகளை யெல்லாம் வென்று சைவசமயத்தை நிலைநாட்டி யருளினுர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சைவ சமயத்தை நன்கு பாதுகாத்து அறுபான்மும்மை நாயன்மார் வரலாறுகளைத் திருத்தொண்டத்தொகையால் விளக்கி யருளினுர். மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்று சைவ சமயத்தை நிலைநிறுத்தி யருளினுர். அன்றியும், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முதலிய மூவரும் தமிழ் நாடெங்குஞ் சென்று திருத்தலங்களை வழிபட்டு வேதாகம உண்மைகளைத் தேவாரத் திருமுறைகளால் வெளியிட் டருளினுர்கள். மாணிக்கவாசக சுவாமிகள் பத்திச்சுவை ததும்பும் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் பாடி யருளினுர்கள். சைவசித்தாந்த உண்மைகள் திருவாசகத்தில் பொன்னே போல்மிளிர்ந்துகொண்டிருக்கின்றன. இனிச் சந்தானுசாரி

யர்கள் மெய்கண்ட சிவாசாரியார், அருணந்தி சிவாசாரியார், மறை ஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் என்னும் நால்வராவர். கல்லாலின்புடையமர்ந்த தென்முகக் கடவுள் திருநந்திதேவருக் கருளிச்செய்த ஞான உபதேசத்தைத் திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்கும், அவர் சத்தியஞான தரிசினியாருக்கும், அவர் பரஞ்சோதி முனிவருக்கும் உபதேசித்தருளினர். பரஞ்சோதி முனிவர் அவ்வுபதேசத்தைத் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருந்த மெய்கண்டதேவருக்கருள, அவர் அருணந்திசிவாசாரியாருக்கும் அவர் மறைஞானசம்பந்தருக்கும் அவர் உமாபதிசிவாசாரியாருக்கும் உபதேசித்தருளினர். இங்ஙனம் ஒருவருக்குப் பின் ஒருவர் குருவும் மாணவருமாக வந்த முறைமையால் சந்தானசாரியர் என்று சொல்லப்படுவர். மெய்கண்டதேவர் சிவஞானபோதம் என்னும் ஒப்புயர்வற்ற நூலையும், அருணந்திசிவாசாரியார் சிவாகமங்களுக்கெல்லாம் உரையாணியாகத் திகழும் சிவஞானசித்தியார், இருபாவிருபஃது என்னும் இரு நூல்களையும், உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாச முதலிய எட்டு நூல்களையும் செய்தருளினர். இந்நூல்களெல்லாம் சைவசித்தாந்த உண்மைகளைத் தெள்ளிதின் விளக்கும் ஞான நிலையங்களாகவுள்ளன.

கக. வேண்டுதல்

அன்பர்களே, நமது சைவசமயத்தின் பெருமைகளையும், முறைமைகளையும் ஒருவாறு உங்கள் திருமுன் தெரிவித்தேன். நமது சமயம் குருட்டு நம்பிக்கையுடைய கொள்கைகளையாவது, வெறும் புராணக் கதைகளையாவது போதிப்பது அல்ல. அதன் ஒவ்வொரு கொள்கையும் அளவைப் பிரமாணங்கட்கு ஒத்ததே. மேலைநாட்டாரால் புதிதுபுதிதாக நுணுகி ஆராய்ந்து உரைக்கப்பெறும் தத்துவ உண்மைகளையெல்லாம் சைவசித்தாந்த சாத்திரங்களிற் கண்டறியலாம். சைவ சமயம் விரிந்த கொள்கைகளை யுடையதென்பது, நாத்திக சமயத்தையும் ஒதுக்கித் தள்ளாது அதனையும் தன்னை யடைவதற்குப் முதற்படியாகக் கொள்ளுவதால் நன்கு விளங்கும். விண்ணவர் இந்திரன் பிரமன் முதலிய தேவர்களும், அகத்தியர் முதலிய முனிபுங்கவர்களும், பிற்காலத்துப் பட்டினத்தார் முதலிய ஆன்றோர்களும் சைவ சமயத்தையே கைக்கொண்டொழுகி யுள்ளார்கள். நமது தமிழ் வேந்தர்கள் சைவ சமயத்தை வளர்ப்பதற்குக் கோடி கோடியாகப் பொருட்செலவு செய்து சிவாலயங்களையும், சைவ மடாலயங்களையும் நிறுவி யிருக்கின்றார்கள்

சைவ சமயத்தில் சாதி குலம் பிறப்பென்னும் தடஞ்சுழி யில்லையென்பது அறுபான் மும்மை நாயன்மார் சரித்திரங் களால் நன்கு விளங்கும்.

நமது சைவ சமயத்தில், ஆண்மக்கட்கு எவ்வளவு உரிமைகளுண்டோ அவ்வளவு உரிமைகளும் பெண்மக்கட்கு முண்டு. நாம் தொழும் தெய்வங்களாக மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக்காலம்மையார் முதலிய பெண்பாலர் நமது சமயத்திற் போற்றப்படுகின்றனரன்றோ? ஆதலின் நமது சைவ மங்கையர்கள் சைவத்தை வளர்ப்பதற்கு வேண் டும் துணைபுரிதல் வேண்டும். இனி, இளைஞர்களுக்கும் நமது சமயத்தில் பங்குண்டு. திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி கள், மெய்கண்டதேவர் முதலியோர் இளைஞர்களன்றோ? அவர்கள் நமது சைவ சமயத்திற்குச் செய்த தொண்டுகளைச், சைவ இளைஞர்களே! நோக்குங்கள். நீங்கள் தற்காலத்தில் முனைந்து செய்யும் பல தொண்டுகளுள்ளும் உயிர்க் குறுதி பயக்கும் சமயத் தொண்டினைத் தலைமையாகக் கொண்டு உங் கள் சைவ சமயத்தைப் போற்றுங்கள்.

இனி, இக்காலத்தில் நமது சமயமக்களின் நிலை மிகப் பரிதபிக்கத் தக்கதாயிருக்கிறது. ஒருவர் நுமது சமயம் யாதென்றால் இந்துசமயம் என்று சொல்வார்களே யல்லாமல் சைவசமயம் என்று சொல்ல அறியார்கள். நமது சமயக்கட வுளர் பெயரோ, ஆசாரியர்கள் பெயரோ, சாத்திரங்களின் பெயரோ சொல்ல அறியார்கள். என்னே பரிதாபம்!

சைவ அன்பர்களே,

உங்கள்பால் அடியேன் சிறு விண்ணப்பம் ஒன்று செய்து கொள்ளுகின்றேன். உங்கட்குப் பிறப்புரிமையுடைய சைவ சமயத்தைப் போற்றுங்கள். உத்தியோகத் துறையினின்றும் திரும்பிய பின் கிளப்புகளிலோ, பந்தடி மேடையிலோ, சினி மாவிலோ கழிக்கும் நேரத்தில் ஒரு சிறுகூறு சைவநூல்களைப் படிப்பதற்கு என்று ஒதுக்கி வைத்துக்கொண்டு இயன்ற தொரு நூலைப் படியுங்கள். நமது ஆண்டவனாகிய சிவபெரு மானை ஒரு கணமாவது சிந்தியுங்கள். திருநீறு உருத்திராக்க முதலிய சிவசின்னங்களைக் கூசாது அணியுங்கள். அங்ஙனம் அணிவோரையும் சமயாசாரங்களில் ஒழுகுவோரையும் இகழா தீர்கள். உங்கள் சமயத்தைப் பிறர் இகழ்வாராயின் அதனைச் செவியில் கேளாதீர்கள். இயன்றவரை ஒழுங்கான முறையில் அதனைத் தடுக்க முயலுங்கள். எந்தெந்த வழிகளிலெல்லாம் சைவ சமயத்தை வளர்க்க இயலுமோ அவ்வவ் வழிகளிலெல்

லாம் வளருங்கள். உங்கள் சமயமக்களைப் பிறசமயிகள் கொள்ளை கொள்வதைத் தடுக்க முந்துங்கள். இங்ஙனமெல்லாம் செய்வீர்களாயின் ஆண்டவன் உங்கட்கு எல்லா நலன்களையும் தந்தருளுவான்.

க௨. முடிவுரை

பெரியோர்களே,

உங்கள் திருமுன்பு தலைமைக்குரிய கடப்பாட்டை நிறைவேற்றுவான் என் சிற்றறிவுக்கு எட்டிய அளவில் பதினொரு பொருள்களைப் பற்றிப் பேசியிக்கின்றேன். நான் முன்னரே விண்ணப்பித்துக் கொண்டபடி அவற்றிலுள்ள குற்றங்களை நீக்கிக் குணமுளவேல் அவற்றை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். நமது சமயம் அதன் சிறப்புக்கேற்பச் சமய அரசாய்த் திகழும்படி செய்யவேண்டியது சமாஜத்தையும் உங்களைப்போன்ற மெய்யன்பர்களையும் பொறுத்த கடமையாயிருக்கின்றது. நமது சமய நூல்களும் பெரும்பாலும் தென்றமிழ் மொழியிலேயே அமைந்திருக்கின்றன. வடமொழி நூல்களாகிய சிவாகமமுதலியவைகளும் கிரந்தலிபியில் இருப்பதால் வடநாட்டார் அவற்றின் உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. நம் தமிழ்நாட்டின் அண்மையிலுள்ள தெலுங்கு, மலையாளம், கன்னட முதலிய நாடுகளிலுள்ளவர்கட்குங்கூட நமது சமயஉண்மையோ, சரித்திரங்களோ தெரிவதில்லை. காலஞ்சென்ற பெரியார்களாகிய ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையவர்களும், முதலியார் சபாரத்தினம் அவர்களும் சிவஞானபோதம், சித்தியார், திருவருட்பயன் முதலிய நூல்களையும் சித்தாந்த உண்மைகளை விளக்கும் நூல்களையும் முறையே ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார்கள். இப்பொழுது ஆங்கில மொழி உலகமெல்லாம் பரவியிருப்பதால் ஆங்கிலத்தில் நமது சமய உண்மைகளை வெளியிடுவோமானால் உலகமெல்லாம் அது பரவுதற்கு ஏதுவாயிருக்கும். நமது சமாஜம் சைவ சாத்திரங்களையும், திருமுறைகளையும் அச்சிட்டு அடக்க விலைக்குத் தமிழ் நாடெங்கும் பரவச்செய்த நன்றிக்குச் சைவ உலகமும் தமிழ் உலகமும் என்றும் மறவா நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றன. இனி வரும் ஆண்டில் ஆங்கிலத்தில் நமது சமய உண்மைகளை வெளியிடவேண்டிய திருத்தொண்டை நமது சமாஜம் கைக்கொள்ள வேண்டுகிறேன்.

சைவசித்தாந்தமும் ஆங்கிலமும் நன்குணர்ந்த திருவாளர்கள் ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் போன்ற பெரியார்கள் பலர் சமாஜ முக்கிய உறுப்பினர்களாக விருப்பதால் அவர்களெல்லாரும் அவ்

வேலையை எளிதில் செய்யக் கூடும். எல்லாச் சைவமக்களும் சமாஜத்திற்கு வேண்டும் துணைபுரிவார்களாக.

பெரியோர்களே,

இதுகாறும் என் புன்மொழிகளைச் செவிமடுத்த உங்களனைவருக்கும், தலைமைப் பதவியை எனக்கு அளித்த சமாஜத்தார்கட்கும் என் முழுநன்றியையும் செலுத்துவதுடன், என்னையாட்கொண்ட திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளையும், எல்லாவற்றிற்கும் நிமித்த காரணமாயிருந்து முடித்துவைக்கும் எல்லாம் வல்ல கச்சியேகம்பப் பெருமான் கழலிணைகளையும் முப்போதும் இறைஞ்சுகின்றேன்.

"என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்"

திருச்சிற்றம்பலம்

[புதுக்கவி]

"செந்தமிழ்ச் செல்வி" கலித்துறை.

[யாழ்ப்பாணத்து நவாலியூர். க. சோமசுந்தரப் புலவர்]

காப்பு

பூமகள் கேள்வன் மணியுந்தித் தாமரை பூத்தவயன்
மாமறை நாவினும் வெண்டா மரையினும் வாழுமெங்கள்
பாமகள் சேவடி போற்றிப் பசுந்தமிழ்ப் பாப்பகர
ஓமரு வாதி விநாயகன் பொன்னடி யுச்சியவே.

அஞ்சு தலையுடைத் தாறு தலையடைந் தன்பருய
அஞ்சு தலையுடை யாறு தலையடைத் தாரருளும்
அஞ்சு தலையுடை யாறு தலையுடை யாற்றொழுதே
அஞ்சு தலையுடை யாறு தலைப்பா வறைகுவனே.

வாடும் பயிருக்கு மாமழை போலென் மலக்கொடுமை
ஓடும் படிக்கும் கருணை சுரந்த வுயர்குருவின்
தேடுந் திருவடி சிந்தையிற் கொண்டு செழுந்தமிழாற்
பாடும் பணிதந்த பாரதி பாதங்கள் பாடுவனே.

நூல்

திருவளர் தாமரை போலும் முகமுஞ் செழுங்குவளை
மருவளர் நோக்கமுஞ் செந்துவர் வாயும் மதிநுதலும்
தருவளர் செங்கரம் நான்குஞ் சிலம்பணி தாள்களுமாய்
உருவளர் பூங்கொடி யொன்றென் விழிக்கு ளொளிர்கின்றதே.

தாமரை போலுங் கரத்தா லெடுத்துத் தழுவியிரு
தாமரை போலும் விழியாற் குறித்துச் சலங்களழித்
தாமரை நாழிகை யும்மற வாவர மங்கமலத்
தாமரை நாவிற் பசுங்கொடி யேயென்றுந் தந்தருளே. 2

பழகிய பைந்தமிழ்ப் பாவாணர் கூறும் பனுவலினும்
வளவிய நான்முகன் நாவினும் நான்கு மறையகத்தும்
இளகிய வன்பர்கள் நெஞ்சினும் பூத்தென் சிரத்தொளிரும்
அழகிய "செந்தமிழ்ச் செல்வியின்" நூபுரத் தம்புயமே. 3

தூண்டா விளக்கம் பிறவாத முத்தஞ் சுடரரவந்
தீண்டா மதியம் கடையாது தோற்றிய தெள்ளமுதம்
மாண்டாலுங் கூடத் தொடரும் வழித்துணை வஞ்சனெனை
ஆண்டா தரித்தவெண் டாமரைத் தண்டமி ழாரணங்கே. 4

குணந்தரும் மெய்யன்பர் கூட்டந் தருங்கொடுக் கக்குறையாப்
பணந்தரும் பைந்தமிழ்ப் பாவொரு நான்கும் பகரத்தரும்
கணந்தருங் கல்வி தருஞ்சிவ மான கதியுந்தரும்
மணந்தரும் வெண்டா மரைவாழு மன்னை மலர்ப்பதமே. 5

சுணங்கும் வடமுஞ் சுமந்திறு மாந்த துணைமுலையும்
இணங்குந் துடியிடை யும்பணைத் தோளு மெழிலமுதம்
பிணங்கும் மொழியு மடித்தா மரையும் பெரிதுமன்பால்
வணங்கும் வரமருள் வாய்தென் பொதிய வரைமயிலே. 6

விற்காட்டி வேறிரு வேல்காட்டிப் பொல்லா வினைவிடிய
எற்காட்டும் வாணி முகமதிப் பேடகத் தின்மதுரச்
சொற் காட்டுந் துப்பிதழ்ச் செப்பிலுன் முத்தந் தொகுத்திருக்கப்
பற்காட்டிச் செல்வர்கள் பாற்போ யிரத்தல் பழவினையே. 7

குடையுந் தனுவும் புரவியும் மன்மதன் குஞ்சரமும்
படையுந் திருமுக மும்நுத லும்சுவைப் பான்மொழியும்
மிடையுங் குழலும் மெனவுடை யாண்மழை மின்னலஞ்சி
இடையு மிடையுடை யாள்கலை வாணி யிளமயிலே. 8

மயிலே மடப்பிடி யேதமி ழூறும் மழலைமொழிக்
குயிலே குலக் கொடி யேவினை வேலை குடித்தெழுந்த
வெயிலே நிலவுமிழ் மேனிமின் னேயென் மிடிகெடுக்கும்
அயிலே யுனதிரு தாளன்றி யில்லை யடைக்கலமே. 9

காரே நறுங்குழல் வில்லே திருநுதல் காமரயிற்
கூரே கயல்விழி கொம்பே துடியிடை கோங்கரும்பின்
சீரே வனமுலை பாகே சுவைமொழி தீங்ககற்றிப்
பாரே மதிக்க வெனையாண்ட வெள்ளைப் பசுங்கிளிக்கே. 10

வார்க்குங் குமக்கொங்கை யும்பணைத் தோளும் வலியமிடி
தீர்க்குங் கருணை விழியுஞ்செவ் வாயுந் திருமுகமும்
ஆர்க்குந் தமிழ்மறைக் கிண்கிணிக் கால்களு மாகவியான்
பார்க்குந் திசைதொறு நிற்பாள்சொற் பாவை பயங்கெடுத்தே. 11

பூமகள் கூறும் புகழ்மக ளின்பம் புரியுமகள்
பாமகள் யாரும் பணியும் மகள்பனி போனிறத்து
நாமகள் நல்லுயிர் நாவினி நன்கு நடனமிடும்
மாமகள் தாமரைக் கண்ணனுக் கென்றும் மருமகளே. 12

தூக்குந் தமிழ்த்துறை யேறிய தொண்டர்க டுன்பமெலாம்
போக்கு மலர்மிசைப் புத்தமு தேபுன்மைப் பொங்கிருளை
நீக்குஞ் செழுஞ்சுட ரேயென்று நாவினி னின்றுரையை
ஆக்கு முயிர்த்துணை யேமடி யேனுன் னடைக்கலமே. 13

நாவா லெடுத்துச் செவியா லருந்தநன் னெஞ்சகமே
மேவா வினிப்ப துயிர்ப்பிணி தீர்ப்பது விண்ணவர்க்கும்
ஆவா கிடைத்தற் கரியது பாற்கட லன்றுபெறா
மூவா மருந்தது வெண்டா மரைமேன் முளைத்ததுவே. 14

வாசப்பட் டாடை யுடையுந் திருமுக மண்டலமும்
பூசப்பட் டேயொளிர் பூங்குழற் காடும் புதுநகையும்
ஓசைப்பட் டோதிம மென்ன மிழற்றுஞ் சிலம்படியும்
ஆசைப்பட் டேனன்னை யேயினிக் காட்டி யருளுதியே. 15

காமன் கரத்தது செந்துவர் வாயது கட்டுவது
பூமன்னு திங்கண் முகத்திற் பொலியும் புயல்நிறத்து
மாமன் கரத்தது கண்டமிருக் கையும் மாமதலைத்
தாமன் குளித்ததும் மார்பின செந்தமிழ்த் தையலுக்கே. 16

திருவுறை செங்கரம் நான்கி னொருகை செகமுணர
அருமறைப் புத்தக மேந்திய தன்ப ரகம்விளங்க
உருவுறை மாலை யிணைக்கரங் கொண்ட துவையிரண்டும்
வருமுறை யாழின் நரம்பு தெரித்து வருடியவே. 17

எப்போதும் போகாக் கலைவாணி பாத மிரண்டுமென்றும்
முப்போதும் போதுகொண் டேத்துவி ரேல்முடி மன்னரெலாங்
கைப்போதுங் கூப்புவர் செல்வங் கதிக்குமிக் காசினியில்
எப்போதுஞ் சீருண் டிறந்தால் மறுமையி லின்பமுண்டே. 18

திருமுத்த மாலையுஞ் சந்தனச்சே றுந்திளைக் குங்கொங்கை
உருமுத்த வெண்ணகைச் சூடகச் செங்கை யுயர்கருணை
தருமுத் தமகுணத் தாயே யெனையெடுத் துத்தழுவி
ஒருமுத்தந் தாவறி யாமையும் நோயு மொழிந்திடவே. 19

ஒப்பிதழ்த் தாமரைப் பூவென் றுரைக்கு மொளிமுகத்துத்
துப்பிதழ்ச் செப்புத் திறந்து சுடர்முத்தங் காட்டி. முன்செய்
தப்பித மெலாம் பொறுத்தூன் மடிமிசைத் தந்துவினை
வெப்பித மாக வருளமு தீகலை மெல்லியலே. 20

வானும் புவியும் புனலுங் கனலும் வளியுமிய
மானு மிருசுட ருங்கலந் தென்விழி மன்னிநின்றாள்
தேனுங் கரும்பு மமுதும் புறங்கண்ட தெய்வமொழி
மானுஞ் சுரும்பும் விரும்பும் விழிக்கலை வாணுதலே. 21

ஆவிக் கருந்துணை யாந்தமிழ்ச் செல்வி யருள்வடிவிற்
காவிக் கருங்கணும் வள்ளைக் குழையுங் கதிர்முகமும்
தூவிக் குலமயிற் சாயலும் பாதத் துணையுநெஞ்சிற்
பாவிக்குந் தோறு மமுதூறி யின்பம் பயந்திடுமே. 22

ஊனா ருடம்பிற் பிணிக்கொரு கோடி மருந்துரைத்தார்
ஆனா வுயிர்ப்பிணிக் கேற்ற மருந்தொன் றறிந்துரைப்பேன்
மானார் விழியுங் குயிலார் மொழியும் மருவிவெள்ளைத்
தேனார் கமலத் திருக்கும் பிராட்டி திருவடியே. 23

வஞ்சந் திருத்திப் பொறாமையுங் கோபமும் மாற்றியென்றன்
நெஞ்சந் திருத்தி யொளிவிளக் கேற்றி நினதுபதக்
கஞ்சம் பொருத்திக் கதிதரு வாய்கம லத்துறையும்
அஞ்சந் திருத்து நடையாய் பலகலை யாய்மயிலே. 24

ஒருகணப் போதுந் தரியாத வின்பத் துழலுமென்னை
அருகணைத் தென்று மழியாத வின்பத் தழுத்திவைப்பாய்
இருகணு ணின்ற வொளியே யினமென வெண்ணியனக்
குருகணை கோல நடையாய் நறுந்தமிழ்க் கோமளமே. 25

மாதங்க மேனி வடிதங்கு வேலிரு மைவிழிகள்
சூதங் கெழுந்த புணர்முலை மின்னல் துடியிடையாம்
ஏதங் கெடுத்தெனை யாண்ட பனுவற் பிராட்டியிரு
பாதங்கள் நீரினிற் பூவா தலர்ந்திடும் பங்கயமே. 26

தண்டே னொழுக்கி யரியுறல் போற்றண் ணளிபிலிற்றிக்
கொண்டாடு மன்பினர் கூடுத லாற்குலத் தாமரையும்
வெண்டா மரையாள் பதமுமொப் பென்னினும் மென்மலருக்
குண்டே விரிந்து குவிகின்ற தாகுமொரு குறையே. 27

பண்டே குறைகொண் டெடம்பிற் கறைகொண்டு பாம்பொருநாள்
உண்டே யுமிழ்கின்ற வெச்சிலை யோவுயர் பாவலர்கள்
கண்டே கனிந்து பவளம் விரிந்து கதிரரும்புந்
தண்டா மரையாள் முகதா மரைக்கொப்பு சாற்றியதே. 28

அவியாச் செழுஞ்சுட ராய்நெஞ் சகத்தே யமர்ந்தெனது
கவியா தரிக்குங் கலைப்பெரு மாட்டி கதிர்முகத்தே
குவியாக் குவளையுங் கோவாத முத்துங் குரைகடலுற்
பவியா வமுதும் பவளமுங் கூடிப் பயில்கின்றவே. 29

போகாத செல்வம் புரிவாளைப் புத்தமு துக்குவமை
ஆகாத செஞ்சொ லருள்வாளை யன்றழன் மீதமர்ந்து
வேவாது நின்று விளையாடினாளை விரும்பினல்லாற்
றேகாதி வஞ்சஞ் துறக்கரி தென்பர்செந் நாவலரே. 30

தனியன்

தவந்தரும் மேலாந் தனந்தரும் இன்பந் தருந்தணியா
நவந்தரு சீர்தரும் நட்புத் தரும்நல்ல வாழ்வுதரும்
பவந்தரு தீவினை வேரும் மரமும் பறித் தழியாச்
சிவந்தருஞ் "செந்தமிழ்ச் செல்வியின்" ஞானத் திருவடியே.

:: சில அறிவுரை ::

1. உனது நினைப்பின் தொகுதியே உன் வாழ்வில் அமையும் ஒழுக்கம்.

2 காரணம் இன்றிக் காரியம் தோன்றாமைபோல நினைப்பின்றிச் செயல் உண்டாகாது.

3. நினைப்பில்லாச் செயல்போல சில தோன்றினும் உற்று ஆராயின் அவை நெடுநாள் பழக்கத்தால் அடங்கி நிற்கும் நினைப்பிலிருந்தே தோன்றுகின்றன வென்றுணர்க.

4. நேர்மையான—செம்மையான நினைப்புக்களை இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருந்தால் நேர்பட ஒழுகும் வன்மை ஏற்படும்.

"பெருமையும் சிறுமையும் தான்தர வருமே"

5. மிக மேன்மையான—செல்வநிலையுள்ள எவரையும்—முயன்று பேறுபடைத்த எவரையும்—ஒழுக்கத்தால் உயர் நிலையுற்ற எவரையும்—விட மேலான செல்வவாழ்வு, முயற்சிப் பேறு, உயர்நிலை அடைய விரும்புவையாயின் உனது விருப்ப நெறியில் வெற்றியடைந்த பெரியார் வரலாறுகளை மன அமைதியொடு படித்து ஆழ்ந்து சிந்திக்க.

6. உயர்வான—மேன்மை யடையத்தக்க—செம்மையான நிலையினையேபற்றி சிந்திக்க. இடைவிடாது உன்னுக.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"—வள்ளுவர்.

7. உயர்வான நினைப்பினை இடைவிடாமல் நினைக்க மறவாதே. ஆனால் உன்னைப் பற்றியும், உனது நிலையினைப் பற்றியும் வியந்து, புகழ்ந்து முனைப்புறாதே.

8. நன்மைமிக்க பயன் நல்காத—பயன் அற்ற வறிய—தொழில்களை நினைந்தெண்ணி உள்ளத்தை வீணாகப் பாழ்படுத்தாதே. 'வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை, நயவற்க நன்றி பயவா வினை'—வள்ளுவர்.

—பா. ரா. பரமசிவ முதலியார்,
நாவரசனம்பலம்
சங்கரன்கோவில்.

முத்தம்

காழி. சிவ. கண்ணுசாமி B. A.

ஒன்றும் ஒருவர்க் கொருபயன் நல்காய்;
அன்றி யிருவர்க் காயின் நீயே
தன்னே ரில்லாத் தனிப்பே ரின்பம்!
என்னே நின்றிறல், எழில்முத் தம்மே!!
அறியாச் சிறுவ(ன்)நிற் பெறுவா னெளிதிற்
சிறியார் பெரியா ரேவர்மாட் டும்மே;
நிறங்கிளர் காளைச் செவ்விய ஞயின்
புறமறைந் தேயுனைப் பற்றிடல் வேண்டும்;
மருள்சால் முதுமை மலிந்தோ ஞயின்
பொருள்நனி கொடுத்தே பெறுதல் வேண்டும்;
ஆ! ஆ!
பாலர்தம் முரிமையே! காதலர்ப் பேறே!
வஞ்ச மனத்தாற் கொரு தஞ்ச(ம்)மே!
வஞ்சியர் வாழ்விற் குறுசேம(ம்)மே!
சாற்றவும் போமோ, ஆற்ற நின்பெருமை!!!

(கருத்து: *தனிப்பட ஒருவராயிருந்தால் முத்தத்தின் நலம் எய்தல் முடியாது. இருபாலராயின் அதனாற் பேரின்பம் பெறுவர். குழந்தைகள் அதனை எச்செலவுமின்றி ஆண் பெண்ணிருபாலார் மாட்டும் எளிதிற் பெறுவர்; வயது வந்த கட்டிளங்காளையாயின் அதனைத் தன் காதலியின்மாட்டு ஒருவரும் அறியாவகைக் கள்ளமாய்க் கவர்ந்திடல் வேண்டும்; வயது முதிர்ந்த கிழவனாயின் அதனைப் பொருள் மிகுதி கொடுத்துத் தேடிப்பெறுதல் வேண்டும். முத்தம் குழந்தைகளின் பிறப்புரிமை! பிறர்மனை நயக்கும் வஞ்ச மனத்தானுக்குத் தன் கள்ளம் மறைக்கும் முகமூடி; காதலிகட்கோ காதலர் தங்கண் கொண்டுள்ள மாறுவன்பிற் கறிகுறி!*).

இந்தி மொழிப்பயிற்சி ஏற்புடைத்தாகுமோ?

[பல்லாவரம் மறைத்திரு. மறைமலையடிகளார்]

இவ்விந்திய நாட்டின் வடக்கே பல ஊர்களிற் பல வகை மாறுதல்களுடன் பேசப்படும் 'ஹிந்தி' மொழியை, இவ்விந்திய நாடு முழுதுமுள்ள மக்கள் எல்லாரும் பயின்று அதனையே பொதுமொழியாக வழங்கிவரல் வேண்டுமென்று, இந்நாட்டின் நன்மைக்காக உழைக்கும் வடநாட்டு அறிஞர் பலருந் தென்னாட்டறிஞர் சிலரும் பேசியும் எழுதியும் வருவதுடன் ஆங்காங்கு இந்திமொழிப் பள்ளிக்கூடங்களுந் திறப்பித்து நடத்திவருகின்றார்கள் ஆகையால் இந்திமொழி நம் நாட்டவர்க்கு நன்மை செய்யத்தக்க நலனும் ஆற்றலும் உடையதுதானா என்பதனை முதற்கண் ஆராய்வாம்.

இப்போது, ஆங்கிலக் கல்விக் கழகங்களிற் கல்வி பயின்று வெளிவரும் நம் இந்திய மக்களிற் பெரும்பாலார் பொருள்வருவாய்க்கு வேண்டுமளவு சிறிது ஆங்கிலம் பயின்றவராயும், அதனோடு சேர்த்துச் சிறிதே கற்பிக்கப்பட்ட தமிழ் முதலான மொழிகளைத் தப்புந்தவறுமாய்ப் பேச எழுதத் தெரிந்தவராயும் வெறும் போலிவாழ்க்கையிற் சில்லாண்டுகளே உயிர்வாழ்ந்தொழிதலால், இந்நாட்டின்கட் பெருந்தொகையினராய் வெற்றுயிர் வாழ்க்கை செலுத்துங் கல்லா மாந்தர்க்குந், தமிழ் முதலான நாட்டு மொழிகளை வருந்திக் கற்றும் வறியராய்க் கார்த்திகைப் பிறைபோல் ஆங்காங்குச் சிதறிச் சிற்சிலராய்க் காலங்கழிக்குந் தாய்மொழி கற்ற மாந்தர்க்கும் ஆங்கிலங் கற்றவரால் மிகுதியான பயன் ஏதும் விளைகின்றிலது. இப்படியிருக்க, இத் தமிழ் நாட்டிலும், பிறமொழி பேசும் பிறநாடுகளிலும் அயல்மொழியான இந்திமொழிப் பயிற்சியை நுழைத்தால் அதனாற் பயன் விளையுமோ என்பதனை அறிஞர்கள் ஆழ்ந்தாராய்ந்து பார்த்தல்வேண்டும்.

இவ்விந்தியதேயத்தின் பற்பல நாடுகளிலும் உயிர்வாழும் மாந்தர்கள் பற்பல மொழிகளைப் பேசுவாராய் இருத்தலின், இந்நாட்டவரெல்லாரும் ஒரு பொது நன்மையின்பொருட்டு ஒருங்குகூடிப் பேசவேண்டிய காலங்களில் இந்தியை அவரெல்லாரும் பொதுமொழியாய்க் கையாளுதலே நன்று என்று தேயத்தொண்டர் சிலர் கூறுகின்றனர். இவரது கூற்றுப் பொருந்தாதென்பது காட்டுவாம்.

இந்தி மொழியானது வடக்கே பற்பல நாடுகளிற் பற்பல மாறுதல்களோடு பேசப்படுகின்றதே யல்லாமல், அஃ

தெங்கும் ஒரே வகையாகப் பேசப்படவில்லை. இங்ஙனம் பலவகை மாறுதல்களுடன் பெசப்படும் இந்திமொழியை ஆராய்ச்சி செய்த ஆசிரியர்கள் அதனை 'மேல்நாட்டு இந்தி', 'கீழ்நாட்டு இந்தி', 'பிகாரி' என்னும் மூன்று பெரும் பிரிவுகளாகவும், அப்பெரும் பிரிவுகளினுள்ளே முறையே 'பாங்காரு', பிரஜ்பாஷா, 'கனௌஜ்', 'பந்தேலி' உருது; 'அவதி', 'பகேலி', 'சத்தீஸ்கரி', 'மைதிலி', போஜ்புரி', 'மகதி' என்னும் பல சிறு பிரிவுகளாகவும் பகுத்திருக்கின்றனர். இன்னும் இந்தி மொழியின் பிரிவுகளாகப் பேசப்படுஞ் சிறு சிறு மொழிகள் மேலும் பற்பல உள. இவ்வாறு இந்தி மொழியின் பல பிரிவுகளாக வழங்கும் பற்பல மொழிகளைப் பேசும் பற்பல நாடுகளில் உள்ளாரும், ஒரு நாட்டவர் மொழியை மற்ற நாட்டவர் அறியாராய் உயிர்வாழ்ந்து வருதலின், இந்தி அவரெல்லார்க்கும் தெரிந்த பொதுமொழி என்றுரைப்பாருரை எங்ஙனம் பொருந்தும்? இங்ஙனம் பற்பல நாடுகளில் பற்பல மாறுதல்களுடன் வழங்கும் பலவேறு இந்தி மொழிகளில் எதனை இத்தென்னாட்டவர் கற்றுத் தேர்வது? எதனை இவர் கற்றாலும் அதனுதவிகொண்டு இவர் வடநாட்டவரெல்லாரோடும் பேசுதல் இயலுமா? இயலாதே. மேற்குறித்த இந்தி மொழிகளேயன்றிச், 'சிந்தி', 'லந்தி', 'பஞ்சாபி', 'குஜராத்தி', 'ராஜபுதானி', 'குமோனி', 'கடுவாலி', 'நேபாலி', 'உரியா', 'பங்காளி', 'மராட்டி', 'சிணு', 'காஸ்மீரி', 'கோகிஸ்தானி', 'சித்ராலி', 'திராகி', 'பஷை', 'கலாஷா', 'கவர்பாவ' முதலான இன்னும் எத்தனையோ பல மொழிகளும் வடக்கே பற்பல நாட்டின்கண்ணுள்ள பற்பல மாந்தர்களாலும் பேசப்பட்டு வருகின்றன. இம்மக்கட் பெருங் கூட்டத்துடனெல்லாம், இந்தி மொழியில் ஒன்றைமட்டுந் தெரிந்த தென்னாட்டவர் உரையாடி அளவளாவுதல் கூடுமோ? சிறிதுங் கூடாதே; வடநாட்டவரிலேயே இந்தி மொழியை அறியாமற் பலதிறப்பட்ட பன்மொழிகளை வழங்கும் மக்கட் கூட்டம் பலவாயிருக்க, இத்தென்னாட்டவர் மட்டும் இந்தி மொழியைக் கற்றுப் பேசுதலால் யாது பயன் விளைந்திடக் கூடும்? இவ்வியல்புகளை யெல்லாம் நடுநின்று எண்ணிப் பார்க்கவல்ல அறிஞர்க்கு, இத்தென்னாட்டவர்கள் தமக்கு எவ்வகையினும் பயன்படாததுந் தெரியாததுமான இந்தி மொழிகளில் ஒன்றைப் பொதுமொழியென வருந்திக் கற்றலால் வீண்காலக் கழிவும் வீண் உழைப்பும் வீண் செலவும் உண்டாகுமேயல்லாமல் வேறேதொரு நன்மையும் பயனும் உண்டாகாதென்பது நன்கு விளங்கும்.

இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுத் தமிழ்மொழியை நன்கு கற்ற ஆசிரியர்கள் முதுகுருகு, முது

நாரை, களரியாவிரை, பெரும்பரிபாடல், தொல்காப்பியம், பெருங்கலித்தொகை, குருகு, வெண்டாளி, வியாழமாலை, முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுனூறு, குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, பதிற்றுப்பத்து, எழுபதுபரிபாடல், குறுங்கலி, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், திருக்கோவையார், சீவகசிந்தாமணி, திருத்தொண்டர் புராணம், சிவஞானபோதம் முதலான அரும்பெரும் தமிழ் இலக்கண இலக்கிய வீட்டு நூல்களும், அவை தமக்குச் சொற்பொருள் நுட்பமுஞ் சுவையும் மலிந்த சிற்றுரை பேருரைகளும் இயற்றித், தமிழை மாறாத நாகரிக இளமை வளத்தில் இன்றுகாறும் இனிது வழங்கச் செய்துவருதலால், அதனை வழங்குந் தமிழ் மக்களெல்லாரும் ஒருவர் ஒருவர்க்கு நெடுந்தொலைவில் இருப்பினும் அதனாற் பேசியும் எழுதியும் அளவளாவி ஒரிடத்திலுள்ள ஒரே மக்களினம்போல் உயிர்வாழ்ந்து வருகின்றனர்.

மற்று, இந்தி, உருது முதலான வடநாட்டு மொழிகளோ தமிழைப்போற் பழமையானவைகள் அல்ல; மகம்மதிய மதத்தவரான மொகலாய அரசர்கள் வடநாட்டின்மேற் படையெடுத்துப் போந்து, தில்லிப்பட்டினத்தைத் தலைநகராய்க் கைக்கொண்டு, அதன்கண் அரசு வீற்றிருக்கத்துவங்கிய பின்னரே அம்மொழிகள் தோன்றியனவாகும். அக்காலத்தில் தில்லி நகரிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் பிராகிருதச் சிதைவான ஒரு மொழி வழங்கிக்கொண் டிருந்தது. தில்லியில் துலுக்கரரசு நிலைபெற்றபின், அவர் கொணர்ந்த அராபிமொழி பாரசீகமொழிச் சொற்கள் அம்மொழியின்கண் ஏராளமாய்க் கலக்கப்பெற்று அவரால் அஃது உருது எனவும் பெயர் பெறலாயிற்று.

இதன்பின் நூல் வழக்குடையதாய் இஞ்ஞான்று வழங்கும் இந்தி மொழியானது 'லல்லுஜிலால்' என்பவரால் உருது மொழியினின்றும் பிரித்துச் சீர்திருத்தஞ் செய்யப்பட்டதொன்றாகும். இதற்கு முன் உள்ளதான பிராகிருதச் சிதைவுமொழியிற் கலந்த பாரசிக அராபிச்சொற்களை அறவேயொழித்துச் சமஸ்கிருத மொழிச்சொற்களை மிகுதியாய் எடுத்துச் சேர்த்து அவர் இந்தி மொழியைப் புதிதாய் உண்டாக்கினர். ஆகவே, வடசொற்கலப்பினால் ஆக்கப்பட்டுச் சிறிது காலமாக இப்போது நூல் வழக்கிற் கொணரப்பட்டிருக்கும் இந்தி மொழியை நம் தென்னாட்டவர் கற்றுத் தெரிந்து கொள்வதனால், இவர் வடநாட்டவரெல்லாருடனும் பேசி அளவளாவி விடக்கூடும் என்று சிலர் மடிகட்டி நின்று கூறுவது நம்மனோரை ஏமாற்றும் பொய்யுரையேயாம்.

கி. பி. 1400-ஆம் ஆண்டு முதல் 1470-ஆம் ஆண்டு வரையில், அதாவது இற்றைக்கு 467 ஆண்டுகளுக்கு முன்னிருந்த 'இராமானந்தர்' எனப்பெயரிய துறவி இராமனையே முழுமுதற் கடவுளாக வைத்து வழிபடல் வேண்டுமென்றகொள்கையை வடநாட்டிற் பல இடங்களிலும் பரவச்செய்து வந்தார். இவர் இராமன்மேற்பாடிய பாடல்கள்தாம் முதன்முதல் இந்திமொழியில் உண்டானவை. அதனால் அவருடைய பாடல்கள் அடங்கிய இந்திமொழி நூல் 'ஆதிகிரந்தம்' என வழங்கப்படுகின்றது.

இனி, இராமானந்தர்க்குப் பின் அவர்தம் மாணக்கருள் ஒருவரான கபீர்தாசர் என்பவர் கடவுள் பல பிறவிகள் எடுத்தார் எனக் கூறுவது அடாதென்றும், இறைவனைக் கல் செம்பு கட்டை வடிவில் வைத்து வணங்குதல் பெருங்குற்றமாமென்றும் இந்து சமயக் கிரியைகளுஞ் சடங்குகளும் பொருளற்ற புன்செயல்களென்றும் இந்தி மொழியின் ஒரு பிரிவான 'அவதி' மொழியிற் பாடல்களைப் பாடியிருக்கின்றார்.

இனிக் கபீர்தாசருக்குப் பின் அவர்தம் மாணக்கரான 'நானக்' என்பவர் தம் பாடல்களைப் பஞ்சாபியும் இந்தியுங் கலந்த கலப்பு மொழியில் அமைத்துச் 'சீக்கிய' மதத்தைப் பரப்பினர்.

இனி, இற்றைக்கு 480 ஆண்டுகளுக்குமுன் தர்பங்கா மாகாணத்தின் கண்ணதான 'பிசபி' என்னும் ஊரில் 'வித்யாபதி தாகூர்' என்ற வைணவர் ஒருவர் இந்தி மொழியின் மற்றொரு பிரிவான 'மைதிலி' மொழியில் கண்ணனுக்கும் அவன் காதலி இராதைக்கும் இடையே நிகழ்ந்த காதல் நிகழ்ச்சிகளை விரித்துப் பல பாடல்களைப் பாடியிருக்கின்றார். இப்பாடல்களையே பின்னர்ப் 'பங்காளி' மொழியில் 'சைதன்யர்' என்பார் மொழிபெயர்த்து, அவற்றை வங்காள தேயமெங்கும் பரவ வைத்தனர். இதுகொண்டு, இந்தி மொழி வங்காள தேயத்தி லுள்ளார்க்குள் வழங்காமை அறியப்படுகின்றதன்றோ? வடநாட்டிற் பெரும்பரப்பினதான வங்காள தேயத்தார்க்கே தெரியாததான இந்திமொழியைத் தென்னாட்டிலுள்ளவர்கள் பயின்றாலும், இவர்கள் வங்காள மக்களுடன் அதிற் பேசி உறவாட முடியாதன்றோ?

ஆதலால், இதுவரையிற் கூறியதுகொண்டு, இந்தி மொழியானது 500 ஆண்டுகளுக்குமுன் நூல் வழக்கில்லாமற், கல்வியறிவில்லா வடநாட்டு மக்களால் அந்நாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு திரித்துப் பேசப்பட்டு, ஒருபாலார் பேசும் மொழி மற்றொருபாலார்க்குத் தெரியாதவண்ணம் வழங்கினமையால், அஃது இஞ்ஞான்றுங் கூடப் பற்பல மொழிகளாகவே பிரிந்து வழங்குகின்றதென்பதும், அதனால் இந்தியை வடநாட்டவர் எல்லார்க்கும் பொதுமொழியெனக் கூறுவா

ருரை மெய்யாகாதென்பதும், ஆகவே தென்னாட்டவர் இந்தியைப் பயிலுதலால் அதனுதவிகொண்டு வடநாட்டவரெல்லாரோடும் உரையாடி உறவாடல் இயலாதென்பதும் நன்கு விளங்காநிற்கும்.

இனி, இந்தி மொழிகள் நாலுகோடி மக்களாற் பேசப்படுதலாகிய தொகை மிகுதியை வற்புறுத்திக் காட்டுவார்க்கு, வங்காள மொழி ஐந்துகோடி மக்களாலும், தமிழுந் தமிழோடினமான மொழிகளும் ஆறுகோடி மக்களாலும் பேசப்படும் பெருந்தொகை எடுத்துக் காட்டப்படும். இந்தியைப் பொதுமொழியாக்க வேண்டுமென்று ஒரு சாரார் கூறுவரேல், அதனினும் பெருந்தொகையினரான மக்களாற் பேசப்படும் 'வங்காள' மொழியைப் பொதுமொழியாக்க வேண்டுமென்று வங்காளரும், இவ்விந்திய நாட்டின் நால் எல்லை வரையிலும் பரவியிருக்குந் திராவிட மக்கள் எல்லார்க்கும் முதன் மொழியாவதும், இந்தியாவின் மட்டுமேயன்றி இலங்கை, பர்மா, மலாய் நாடு, தென்ஆப்பிரிக்கா முதலான நாடுகளிற் குடியேறி, வாணிகவாழ்க்கையிற் சிறந்தாராயிருக்குந் தமிழ்மக்கள் அனைவராலும் வழங்கப்படுவதும் ஆன தமிழையே பொதுமொழியாகப் பயிலல் வேண்டுமென நந்தமிழ் மக்களும் வலியுறுத்துவரல்லரோ? மேலும், வடநாட்டு இந்தி முதலான மொழிகளின் பாடல்களிற் பெரும்பாலன, நம்போற் பல பிறவிகள் எடுத்துழன்று இறந்துபோன சிற்றரசர்களான இராமன், கிருஷ்ணன், பலராமன், வசுதேவன் முதலானவர்களைக் கடவுளாக வைத்து உயர்த்துப் பாடியிருத்தலால், அவை பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற் கடவுளாகிய எல்லாம் வல்ல சிவத்தை மக்கள் அறிந்து வழிபட்டுத் தமது பிறவியைத் தூய்மைசெய்து உய்தற்குதவி செய்யாமையோடு, அவை உண்மைச் சிவ வழிபாட்டை அவர் அடைய வொட்டாமலுந் தடைசெய்து மக்கட் பிறவியைப் பாழாக்குகின்றன. மற்று, கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை திருவாசகம், திருக்கோவையார், தேவாரம், பெரிய புராணம், சிவஞானபோதம் முதலான தமிழ் நூல்களோ மெய்யான ஒரு தெய்வஞ் சிவமேயாதலை விளங்கத் தெருட்டி மக்களுக்கு மெய்யறிவையும் மெய்யன்பையும் ஊட்டி, அவர் இம்மையிலும் மறுமையிலும் அழியாப் பேரின்பத்திற் றிளைத்திருக்குமாறு செய்து, அவரது பிறவியைப் புனிதமாக்குந் திறத்தன. அதுவல்லாமலும், இந்தி முதலான வடநாட்டு மொழிகள், தமிழைப்போற் பழையன அல்லாமையாலும், அவற்றை வழங்கும் மக்கள் பழமைதொட்டு நாகரிக வாழ்க்கையில் வாழ்ந்த தமிழ் மக்களைப்போல் நாகரிக வாழ்வு வாயாதவர்களாகையாலும், சென்ற 400 அல்லது 500 ஆண்டுகளாகத்

தோன்றிய வடநாட்டுப புலவர்கள் பலரும், பண்டு தொட்டுத்தனித்த பேரறிவு வாய்ந்த தமிழ்ப் பெரும்புலவர்போலாது சமஸ்கிருத புராணப் பொய்க்கதைகளை நம்பி அவற்றின் வழிச்சென்ற மயக்க வறிவின ராகையாலும், உயிர்க்கொலை, ஊனுணவு, கட்குடி, பல சிறுதெய்வவணக்கம், பலசாதி வேற்றுமை முதலான பொல்லா ஒழுக்கங்களை அகத்தடக்கிய ஆரிய நூல்நெறிகளைத் தழுவிய வடவர் அவற்றை விளக்கி அருளொழுக்கத்தையும் முழுமுதற் கடவுள் வணக்கத்தையும் வற்புறுத்தும் அருந்தமிழ் நூல்நெறிகளைத் தழுவாமையாலும், அவருடைய மொழிகளையும், அவற்றின்கட் புதிதுதோன்றிய நூல்களையும் நந்தமிழ் மக்கள் பயிலுதலால், இவர்கள் ஏதொரு நலனும் பயனும் எய்தார் என்பது இனிது பெறப்படும்.

இங்ஙனம் எல்லா வகையாலுஞ் சிறந்த தமிழ்மொழி இவ்விந்திய நாடு முழுமைக்கும் பொதுமொழியாதற்குரிய நலங்கள் எல்லாம் வாய்ந்ததாயிருந்தும், அதனைப் பொதுமொழியாக்க முயலாமல், நானூறு ஐந்நூறு ஆண்டுகளாகவே தோன்றிப் பழைய சிறந்த நூற் செல்வமின்றி வறியனவாய்ப் பலகைக் குறைபாடுகள் உடையனவாய்ப் பெரும்பாலும் நாகரிகமில்லா வடவர்களாற் பேசப்படும் இந்தி முதலான சிதைவுக் கலப்புமொழிகளை இத்தேயத்திற்குப் பொதுமொழியாக்கவேண்டுமென்று கூக்குரலிட்டு முயல்வோர் உண்மையான தொண்டர்களாவரா வென்பதனை அறிவுடையோர் ஆழ்ந்து நினைத்துப்பார்த்தல் வேண்டும். இதுகாறுங் காட்டிய உண்மைகளால் இந்திமொழிப்பயிற்சி நந்தமிழ்நாட்டிற்கு ஒரு சிறிதும் பயன்படாமையினை யறிந்து, அதன் பயிற்சினைத் தடைசெய்து, நம் தனித் தமிழ்ப் -யிற்சியினையே எங்கும் பரவச்செய்து நந்தமிழ்மக்களைத் தம் தாய்மொழி யறிவில் விளங்கச் செய்வீர்களாக !

தாகூரின் தாய்மொழி வேட்கை

கல்கத்தாப் பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழாச் சொற்பொழிவு

கல்கத்தாப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா இவ்வாண்டு பிப்ரவரி 13-ந்தேதி நடைபெற்றது. டாக்டர் இரவீந்திரநாத தாகூர் தமது பட்டவிழாப் பிரசங்கத்தை வங்க பாஷையிலேயே செய்து முடித்தார். சர்வ கலாசாலைச் சரித்திரத்தில் இப்போதுதான் முதன் முதலாக, வங்காள மக்கள் தாய்மொழியின் வாயிலாய், பட்டமளிப்புப் பிரசங்கம் செய்யப்படுகின்றது. கவியரசர் தமது பேருரையில் கூறியிருப்பதன் சாரம் கீழ் வருமாறு :—

மாணவர்களின் தாய்மொழியை நிராகரித்து, அன்னவர்களுக்கு அயல்மொழியின் வாயிலாகப் போதனை செய்யும் முறையை இந்தியாவைத் தவிர வேறெங்குங் காண இயலாது. ஜப்பான் தேசம், மேல் நாட்டுக் கல்வியைப் பயிலத் துவங்கி ஒரு நூறு வருடங்களும் ஆகிவிடவில்லை. ஆரம்பத்தில் அவர்களுக்கு அயல்மொழிகளில் எழுதப்பெற்ற பாடபுத்தகங்களின் உதவியையே நாட வேண்டியதாயிற்று. ஆனல் கற்கவேண்டிய விஷயங்கள் அனைத்தும் தமது நாட்டு மொழியின் வாயிலாகப் போதிக்கப்படல் வேண்டும்என்ற கொள்கை

ஆதிமுதலே அவர்கள் கைக்கொண்டு வந்திருக்கிறார்கள். கல்வி, குறிப்பிட்ட சில வகுப்பாரை மட்டிலும் அழகு செய்யத் தோன்றவில்லை. அஃது நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் சக்தியும், அறிவு வளர்ச்சியும் அளிக்கக்கூடியதா யிருக்கவேண்டும்; ஆதலால் நாடெங்குமுள்ள மக்கள் கல்வி யறிவுடையோரா யிருக்கவேண்டும் என்பதை ஜப்பானியர் நன்றாய் உணர்ந்து கொண்டனர்.

சமூகத்தின் முன்னணியிலிருக்கும், ஒரு சிலருக்கு மட்டிலுமே, 'இந்தியருக்குக் கல்வியளித்தல்' என்ற பிரமாதமான பெயருடன், மிகுந்த லோபகுணத்துடன் கல்விபெறும் வசதி அளிக்கப்பட்டு வருகின்றது. நமது பாக்யத்தை நிர்மாணிப்பவர்கள் தம்மைத் தாழ்த்தி வரும் முறைகளுக்கு கருணையுடன் நாம் ஆதரவு நல்கி வருகிறோம்.

நம் தேசமக்களிற் கற்றோர் கல்லாதார் ஆகிய இருவகுப்பினர்க்குமிடையே நிலவும் வேற்றுமை சகாரா பாலைவனத்திற்கும், அதன்கண் காணப்படுகின்ற சிறு ஜீவ பூமிகளுக்குமுள்ள வேறுபாட்டைப்போலவிருக்கின்றது—ஆம், அளவிலும், தன்மையிலும் அத்தகைய வித்தியாசமே காண்கின்றோம். எனவே, நாம் அனைவரும் ஒரே அரசியல் ஆதிக்கத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தாலும் ஒரே வகைத்தான மனோநிலையால் வசப்படுத்தப் பெற்றோமில்லை. சமீபத்தில் துர்ப்பாக்கியம் நிறைந்த நம் இந்தியாவைத் தவிர, ஜப்பான், பர்ஷியா, அரேபியா, துருக்கி முதலான மற்றெல்லா நாடுகளும், உள்நாட்டில் பிளவுகள் பிறப்பித்து மக்களின் தேசீய ஆர்வத்தை அடக்கிச் சிதைத்து வரும் மனோநிலையை அகற்றப் பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

பெரிய பிராணிகளின் இரத்தத்தை உறிஞ்சி வாழும் ஒட்டுப் பூச்சிகளைப்பற்றி நாம் அறிவோம். இவை தாம் பற்றிக்கொண்டிருக்கும், பிராணிகளின் உடம்பிலேயே வாழ்ந்து மடிகின்றன. இவை எவ்வழியாலாயினும் தம் உயிரைக் காப்பாற்றிக்கொண்ட போதிலும், இவற்றின் அவயவங்கள் எல்லாம் வளர்ச்சி அற்று ஒரு போதும் பயன்படா நிலைமைக்கு வந்துவிடுகின்றன. நமது தற்போதைய சர்வ கலாசாலையிலுள்ள மாணவரின் வாழ்க்கையும் இவ்வண்ணமே இருக்கின்றது. இந்நாட்டுக்கல்வி அயல்மொழியின் துணையைக்கொண்டே வளர்ச்சிபெற வேண்டியிருப்பதால், அதற்குப் போதிய ஆதரவு இருந்தபோதிலும், பல துறைகளிலும் பெற வேண்டிய வளர்ச்சி குன்றிப் போய்விட்டது. எனவே கலாசாலைக் கல்வியின் பூரணமற்ற நிலைமையை உணரப்பெறாமலே கலாசாலைகள் வேலைகளை நிகழ்த்திக்கொண்டு வருகின்றன.

நாம் உட்கொள்ளும் ஆகாரத்தின் சத்தான அம்சங்கள் நமது சரீரத்துடன் கலந்து கொள்ளுவதற்கு மெல்லுகின்ற பற்களும் உணவை செரிக்கச் செய்யும் நீர்சுரப்பும் தேவைப்படுவதேபோல் கல்வி பயில ஒருவரது தாய்மொழி பயன்படுகிறது.

நான் இவ்வாறு கூறுவதால் நமது சர்வகலாசாலைகளில், ஆங்கிலத்திற்கு, அளிக்கப்பட்டிருக்கும் உயர்வு அழிந்து போகுமென நினைத்துவிடலாகாது. ஆங்கிலம் இன்று உலகத்தவரால் மதிக்கப்பட்டு வருவது ஜீவனோபாயத்திற்கு அஃது ஓர் வழிகாட்டியாய் இருப்பதாலன்று. மேல் நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்டு வரும்


புதுமைகளை யாண்டு பரப்புவதற்கு அம்மொழி ஓர் கருவியாயிருப்ப தால் தேசபக்தியின் பெயரால் அதை வெறுப்பது அறிவுடைமை யாகாது. அதனல் நாம் நமது அபிவிருத்திக்குரிய வழிகளை அடைத் துக்கொண்டவர்களே யாவோம்.

மேனாட்டுக் கல்வியின் பொருளையும் நுட்பங்களையும் ஏற்றுக் கொள்ளுஞ் சக்தியற்ற அறிவானது, குறுகிய நோக்கம், அறியாமை, பலவீனம் ஆதியவற்றால் மழுங்கிவிடும். அறிவுச்சுடர் எங்கிருந்து உதயமாயினுஞ் சரியே, அநாகரிக மனப்பான்மை, யெனுங் கரிய மேகங்களே அதனை மறைக்கத் துணிகின்றன. உண்மை எச் சமுகத்தாரிடை தோன்றினும், என்ன? அஃது எல்லா வகைப்பட்ட. மக்களுக்கும் பொதுவேயன்றோ ?

இன்று நான் உங்கள் முன்னிலையில் ஓர் முக்கியமான செய்தியை விடுக்கின்றேன். அஃது மகிழ்ச்சியும், கௌரவமும் ஊட்டக்கூடி யது. உங்கள் தாய் மொழியின் வாயிலாக மாகாண மக்களுடன் நெருங்கி வாழ்ந்து வங்காளம் தனது புகழை நிலைநாட்ட வேண்டு மென்பதே அச்செய்தியாகும். எனது மாணவப்பருவம் இக்கல்லூரி யின் கீழ் வகுப்புகளில் சுருங்கிய காலத்திற்குள் முடிந்துவிட்டது. எப். ஏ. வகுப்பில் ஓர் நாள் மட்டுமே காலடி எடுத்து வைத்தேன். வழக்கமாய் கலாசாலைக்குச் சென்று வரும் மாணவர்களுக்கு எனது பார்வையும், நடத்தையும் விபரீதமாகத் தோன்றின. அவர்கள் என்னைக் கண்டு நகைப்பதுண்டு. மறுநாள் முதல் கலாசாலைக்குச் செல்ல என் மனம் துணியவில்லை. எனது தாய்மொழிக்கு யான் செய்த தொண்டின் பயனுகவே இன்று இப் பெருமையான பொறுப்பை வகிக்க நேரிட்டது. —"ஊழியன்"

செவியில் நுழைந்திலதோ ?

இவ்வாண்டு கல்கத்தா சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழா சென்ற புதன்கிழமை நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவின் போது சொற்பெருக்கு ஆற்றியவர் கவீந்திரரான ரவீந்திரர். அவர் எம்மொழியில் சொற்பெருக்கு நிகழ்த்தினர் என்று நினைக்கிறீர்கள்? அவர் தம் தாய்மொழியாகிய வங்காளியிலேயே அதை நிகழ்த்தினர். கல்கத்தா சர்வகலாசாலைச் சரித்திரத்திலேயே முதன் முதல் தாய் மொழியில் பட்டமளிப்புவிழாப் பிரசங்கம் நிகழ்ந்தது இதுவே. நந்தமிழ்நாட்டில் இரு சர்வகலாசாலைகள் உள. ஒன்று சென்னைச் சர்வகலாசாலை. மற்றொன்று அண்ணமலைச் சர்வகலாசாலை. இக் கலாசாலைகளின் பட்டமளிப்பு விழாப் பிரசங்கங்கள் தாய் மொழியில் நிகழ்வுறலாகாதா? தாய் மொழிப்பித்துக்கொண்டோர் நம் நாட்டில் இல்லையா ? தாய் மொழியில் பட்டமளிப்புவிழாப் பிரசங்கம் செய்யும் ஆற்றல் உள்ளவர் இலரா? அன்றேல் நம்நாட்டு மாணவர்கள் தாய் மொழிப்புற்று அற்றவர்களா? தமிழ்த்தாய் விம்மி விம்மி யழுங்குரல் உங்கள் செவியில் நுழைந்திலதோ? தமிழ் மக்காள்! தாய் மொழிப் பற்றுடைய தமிழ் மக்காள்! எழுங்கள்! விழியுங்கள்! தாய்க்கு உங்கள் கடனாற்ற விரைந்து எழுங்கள்! ('நவசக்தி')



சீகன்பால்கு ஐயர்

(௧௬௮௨—௧௭௧௯)

[முதன் முதல் தமிழ் அச்சு எழுத்துக்களைக் கொணர்ந்தவர்.]

ஸ்ரீ
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] தாது—பங்குனி [பரல்-௪

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

திருநல்லூர்ப் பெருமணம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே.

பதவுரை:—

நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே—திருநல்லூர்ப் பெருமணம் என்ற திருப்பதியில் திருக்கோயில் கொண்டருளியிருக்கின்ற சிவபெருமானே

கல்லூர்ப் பெருமணம் வேண்டா—மணமகன், மணமகளுடைய காலைக் கல்லின்மேல் வைத்துச் செய்யப்படுவதாகிய சடங்கோடு கூடிய பெரியமணத்தினுலாவதாகிய இல்லறவாழ்க்கை எனக்கு வேண்டா

கழுமலம் பல்ஊர் பெருமணம் பாட்டு மெய் ஆய்த்தில—(நான் உலகில் இல்லறவாழ்க்கையில் வாழ்வேனுயின்) திருக்கழுமலம் முதலிய பல தலங்களில் நான்பாடிய தேவாரப்பாட்டுக்களின் கருத்துக்கள் (எனது இல்லறவொழுக்கத்துக்கு மாருயிருக்குமாதலால்) உண்மையாகாமற் போய்விடும் (அதாவது உண்மை என்று உலகினரால் நினைக்கப்படாமற் போய்விடும்.)

தொண்டர் சொல் ஊர்பெருமணம் சூடலர்—அங்ஙனம் தேவாரப் பாட்டுக்களின் கருத்துக்கள் உண்மை என்று உலகினரால் நினைக்கப்படாதிருத்தில்பற்றி துறவறவொழுக்கம் பூண்டொழுகும் சிவத்தொண்டர்கள் அத்தேவாரப்பாட்டுக்களை மேன்மை

யாகத் தலைமேற்கொண்டு ஓதிப் பொருளுணர்ந்து அவற்றால் விளையும் பேரின்பச்சுவையை நுகரமாட்டார். ஆதலின் நான் இந்த உலகிற் பிறந்து சிவபெருமானால் ஆண்டருளப்பெற்று சிவத்தலங்கள்தோறும் போய்த் தேவாரம்பாடிய சிவத்தொண்டும் பிறதொண்டுகளும் மக்களுக்கு நான் எண்ணுகிற நற்பயன்களை விளைக்காமற்போகும் என்பது குறிப்பெச்சம்.

திருஞான சம்பந்த அடிகள் மணப்பருவமடைந்தபொழுது அவருடைய தந்தையார் சிவபாத இருதயரும் சுற்றத்தாரும் பிறரும் அவரை அறுதொழிலின் வைதிகமாநெறி ஒழுக்கம் உலகிற்குக் காட்டவேண்டி ஒரு கன்னியை மணஞ்செய்தருளல் வேண்டுமென்று கேட்டனர். அடிகள் அதற்கு முதலாவது இசையாது மறுத்துப் பின் மணஞ்செய்தற்கு இசைந்தருளினார். தந்தையார் முதலிய மறையோர், அடிகளுக்கு மணஞ்செய்ய வேண்டி திருநல்லூர்ப்பெருமணம் நம்பாண்டார்நம்பி மகளைக் கேட்டு நம்பாண்டார் நம்பியும் இசைந்தருளினார். பின் நல்லோரையோடு கூடிய ஒரு மணத்திருநாள் குறிப்பிட்டு மறையோர் அடிகளைச் சீகாழியிலிருந்து கூட்டிக்கொண்டு திருநல்லூர்ப் பெருமணத்தில் மணமகள் மனைக்குச் சென்றனர். அடிகள் மணப்பந்தலுக்கு முன் வளர்க்கப்பட்ட எரியை மணமகளைக் கையிற்பிடித்துக்கொண்டு வலம்வரும்பொழுது விருப்புறு மங்கியாவார், விடையுயர்த்த சிவபெருமானே என்று சிந்தையில் நினைந்து இந்த இல்லொழுக்கம் வந்து சேர்ந்ததே இவளோடுஞ் சிவன்தான் சேர்வன் என்ற கருத்துடையவராய்த் திருநல்லூர்ப் பெருமணம் சிவபெருமானைப் பாடிய பதிகத்தின் முதற்பாட்டு இது.

விளக்க உரை:—

நல்லூர்ப்பெருமணம் மேய நம்பானே—மேவிய என்றசொல் மேய என இடைக்குறைந்து நின்றது. நம்பானே என்பதின் ஈற்றிலுள்ள ஏகாரம் விளிவேற்றுமை உருபு. நம்பான்—சிவபெருமான். பெருமணம் என்பது திருநல்லூரிலுள்ள திருக்கோயிலின் பெயர்.

நல்லூர்ப்பெருமணம் வேண்டா—அம்மிமிதித்தலும் அருந்ததிபார்த்தலும் ஆகிய மணச்சடங்குகள் மணப்பந்தலின்முன் வளர்க்கப்படுகிற வேள்வித் தீயை வலம்வரும்பொழுது மணமகள் கற்புநெறியை வற்புறுத்துதற்குத் தமிழ்நாட்டு மக்களால் இன்றுஞ் செய்யப்படுகின்றன. "மங்கலம் புனைந்த செம்பொன் அம்மி

மேல் மணுட்டிபாத—பங்கயமலரைக் கையால் பரிபுரஞ் சிலம்பப்பற்றி—புங்கவன் மனுவாலேத்திப் புண்ணிய வசிட்டன் தேவி—எங்கெனச் செங்கைகூப்பி யெதிர்வர வருட்கண் சாத்தி'' என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் திருமணப்படலம் 188-வது பாட்டிற் கூறுதல் காண்க.

ஓர் ஆண்மகனும் ஒரு பெண்மகளும் ஈருடலோருயிர்போல் வாழ்ந்து உலகில் நல்லறஞ்செய்யப் பெறும் இல்லற வாழ்க்கையைக் கூட்டுவிக்கு மணம் ஆதலின் அடிகள் அம் மணத்தைப் பெருமணம் என்றார். பெருமணம் என்பது நல்லறஞ் செய்யு மேம்பாடுடைய மணம். ''வையகம் போற்றுஞ் செய்கை மனைஅறம் புரிந்து வாழ்வார்'' என்று சேக்கிழார் திருநீலகண்ட நாயனார் புராணம் 2-வதுபாட்டிற் கூறுதல் காண்க.

வேண்டா என்ற சொல் ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். வேண்டும் என்ற உடன்பாட்டுச் சொல்லின் எதிர்மறை வினை, வேண்டாம் என்று சாதாரணமாய் உலகவழக்கில் வழங்கப்படுகின்றது. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் 'வேண்டா' என்ற சொல்லையே பல விடங்களில் வழங்குகின்றனர்.

கழுமலம் பல் ஊர்ப்பெருமணம் பாட்டு மெய் ஆய்த்தில—பெருமணம் என்ற சொல் இங்கே அடிகள் பாடிய தேவாரங்களைக் குறிக்கிறது. தேவாரங்கள் அவற்றை அன்புடனினைந்து ஓதுகிறவர்களிடம் சிவமணமாகிய திருவருளை விளங்கும்படி செய்தலால் 'பெருமணம்' என்றார். ''ஆறதேறுஞ் சடையானருள் மேவவனியர்க்கு வீறதேறுந் தமிழால் வழிகண்டவன்.'' என்று நம்பியாண்டார் நம்பி தாம்பாடிய திருச்சண்பை விருத்தம் 5-வது பாட்டில் அடிகளுடைய தேவாரங்களைப்பற்றிக் கூறுதல் காண்க. பாட்டு என்பது சாதி ஒருமைப்பெயராய்ப் பாட்டுக்களைக் குறிக்கிறது.

ஆய்த்தில என்ற சொல் ஆயிற்றில என்றசொல்லின் மரூஉ. ஆயிற்றில என்பது ஆயித்தில என மருவிப் பின் ஆயித்தில என்பது ஆய்த்தில என மருவியது. தெளிவுபற்றி அது ஆய்த்தில என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. மெய் ஆய்த்தில—மெய் ஆகமாட்டா, அதாவது, உண்மை என்று தேவாரங்களை ஓதுகிறவர்களால் நினைக்கப்படா. அங்ஙனம் அவர்களால் நினைக்கப்படாதிருத்தற்குக் காரணம் எனது இல்லறவொழுக்கம் நான் பாடிய பல தேவாரப்பாட்டுக்களின் கருத்துக்களுக்கு மாறாயிருத்தல் ஆகும்.

அப்பாட்டுக்களிற் சில அடியில் வருவன:—

1. "கருவைக்கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகுமலர் கொடுவந்து மையேத்துது நாமடியோம்."
—சம்பந்தர் தேவாரம் கழகப்பதிப்பு 116—8.

2. "சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடியே அடைந்தோம்"
—ஷை 116—5.

3. பிறவியால் வருவன கேடுளவாதலாற் பெரியவின்பத்
துறவியார்க்கல்லது துன்ப நீங்காதெனத் தூங்கினுயே.
—ஷை 215—5.

4. தந்தை தாய் தன்னுடன்றோன்றினர் புத்திரர்தாரமென்னும்
பந்த நீங்காதவர்க் குய்ந்துபோக்கில் லெனப்பற்றினுயே.
—ஷை 215—9.

மேலே கூறப்பட்ட முன் இரண்டு தேவாரப்பாட்டுக்களும் அடிகள் உலகவாழ்க்கை யொழுக்கத்தைத் துறந்து சிவபெருமானுடைய திருவடிகளைச் சேர்ந்ததாகக் கூறுகின்றன. பின் இரண்டு தேவாரப் பாட்டுக்களும் உலகப்பற்று நீங்கித் துறவறவொழுக்கம் பூண்டவரே பேரின்ப மெய்தப்பெறுவர் என்று கூறுகின்றன. தாம் உலகில் இல்லற ஒழுக்கி லொழுகுதற்கு நேரே மாறாக இந்தத் தேவாரப்பாட்டுக் களின் கருத்துக்களிருத்தலால் அக்கருத்துக்கள் உண்மை அல்ல என்று உலகினராற் கருதப்படும் என்பதுபற்றி அடிகள் 'கழுமலம் பல்லூர்ப்பெருமணம் பாட்டு மெய்யாய்த்தில' என்றூர். இதனை நினைந்து அடிகள் தாம் மணமகளைக் கைப்பற்றி வேள்வித்தீயை வலம் வரும்பொழுது "இந்த இல்லொழுக்கு வந்து சேர்ந்ததே" என்றூர். இப்பிறவிக்கு முன் அடிகள் அடைந்திருந்த சாமுசித்தத்தன்மை நிலையிலும், பிறந்த பின் சிவபெருமானு லாட்கொள்ளப்பெற்று உணர் வரிய மெய்ஞ்ஞானம் பெற்ற நிலையிலும் "சாக்கிரத்தே அதீதத்தைப் புரியுஞ் சர்வசங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள் வாக்கு முடிகவித் தரசாண்டரிவையரோடனுபவித் தங்கிருந்திடினு மகப்பற்றற்றிருப் பார்" என்று சிவஞானசித்தியார் கூறுகிறபடி அடிகள் மக்களொழுக்கத் துக்கு எடுத்துக்காட்டாக இல்லறவாழ்விலே இருவகைப்பற்றுக்களு மின்றித் துறவறவொழுக்கம் பூண்டொழுகவல்லர். ஆனுல் இவ்வுண் மையை உலகினர் அறியவல்லுநர் அல்லராதலின் தேவாரப்பாட்டுக் கருத்துக்கள் அவர்களால் உண்மையாகக் கொள்ளப்படமாட்டா என்று அடிகள் கூறுகின்றூர்.

தொண்டர் சொல் லூர்ப்பெருமணம் சூடலர்—தொண்டராவார் உலகப்பற்றுடைய இல்லறவொழுக்கத்தினை நீத்துத் 'துறவற

வொழுக்க மேற்கொண்டு பேரின்பமடைதற்கு வேண்டப்படும் மெய்யறிவைப் பெறுதற்கு நற்றவங்கள் பழகிக்கொண்டு திருக் கோயில்களிலும் பிற இடங்களிலும் பயன் கருதாத சிவத் தொண்டுகள் செய்துகொண்டிருப்பவர்கள்.

"உள்ளமோ ரிச்சையினு லுகந்தேத்தித் தொழுமின் ருெண்டீர்" என்று அடிகளும் (105—3) "துறவிநெஞ்சினராகிய தொண்டர்காள்" என்று திருநாவுக்கரசு அடிகளும் (186—6) தேவாரங்களிற் கூறுதல் காண்க.

சூடல் என்பது பூக்கள் முதலிய இனிய பொருள்களைத் தலைமேல் அணிதல். அது இங்கே தேவாரப்பாட்டுக்களிற் கூறப்பட்ட உண்மை களை உள்ளமுவந்து மேன்மையுடையனவாக நினைத்து அவற்றின் வழி ஒழுகுதலைக் குறிக்கிறது—சிவப்பணி செய்யும் தொண்டர்கள் அடிகள்பாடிய தேவாரப்பாட்டுக்களின் கருத்துக்கள் அவர் உலகி லொழுகிக்காட்டும் இல்லறவொழுக்கத்துக்கு மாருயிருத்தலை நினைந்து அவற்றை உண்மையாகக்கொண்டு அவற்றின் வழியொழுகி நற்பயன டையமாட்டார்கள் என்ற கருத்தை அடிகள் 'தொண்டர் சொல்லூர்ப் பெருமணஞ் சூடலர்' என்ருர்.

'பெருமணம்' என்பது இங்கே தேவாரப்பாட்டுக்களிலடங்கியுள்ள சைவசித்தாந்த உண்மைகளைக் குறிக்கிறது. அவ்வுண்மைகள் வீடு பேறு ஆகிய பெரும்பயனைத் தருதலால் 'பெருமணம்' என்றும் அவை பூவின் மணம்போலச் சொற்களாலே பெறப்படுதலால் 'சொல்லூர்ப் பெருமணம்' என்றும் 'அடிகள் கூறினர். "சொற்பாவு பொரு டெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதானை" என்று (281—2) திருநாவுக்கரசு அடிகள்கூறுதல் காண்க. தொண் டர்களும் உலகிலுள்ள இல்வாழ்வாரும் தாம்பாடிய தேவாரங்களி லடங்கியிருக்கிற உண்மைகளின் வழி ஒழுகி நற்பெரும்பயன் அடைய மாட்டார் ஆதலின், அடிகள் தாம் உலகில் பிறந்து தேவாரம்பாடிய தொண்டு செய்ததனுல் வரும் பிற்கால நற்பயன் தாம் இல்லற வொழுக்கி லொழுகினுல் இல்லாமற்போகும் என்பது அடிகள் கருத்து.

அடிகள் உலகிற் பிறந்தது சிவத்தொண்டு செய்தற்காகவே என்பது அவர் பாடிய திருத்துருத்தித் தேவாரப்பதிகம் 5-வது பாட் டால் (234—5) நன்குபுலனும். அது அடியில் வருமாறு:—

துறக்குமா சொலப்படாய்து ருத்தியாய் திருந்தடி
மறக்குமாறி லாதவென்னை மையல்செய்திம் மண்ணின்மேற்
பிறக்குமாறு காட்டினுய் பிணிப்படு முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினுய்க் கிழுக்குகின்ற தென்னையே.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழ் யாப்பிலக்கண நூல்கள்

[வித்வான் மா. இராசமாணிக்கம் அவர்கள் P. O. L.]

(முன் ௩௨௯-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடமொழி தமிழகத்திற் பலப்பட்டது சமணராலும் பௌத்தராலும் வடமொழிப் பண்டிதராலுமே என்பதை அனைவரும் ஒப்புவர். பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சிக் காலத்தும், தொண்டை சோழ நாடுகளில் பல்லவர் காலத்துமே வடமொழி நடம்புரியலாயிற்று. இதற்குப் பல்லவர் வடமொழிச் சாஸனங்களே சான்று பகரும். பல்லவர் காலத்தில் காஞ்சிபுரமும் கோயில்களும் வடமொழிக்கு நிலைக்களங்களாக இருந்தன என்பதை எவரே அறியார்? கி. பி. 5-ம் நூற்றாண்டில் மதுரையில் களப்பிரர் காலத்தில் 'சமணர் சங்கம்' ஒன்று கூடியது என்பது சரித்திர வாயிலாக உணர்கிறோம். சமணர் வடமொழிப் பண்டிதர். அவரும் வைதிக மதத்தினரும் பௌத்தரும் 'வடநூல்வழித் தமிழாசிரியர்' எனப்பட்டனர். அக்காலத்தில் கி. பி. 3 முதல் 12-ம் நூற்றாண்டு முடிய ஏறக்குறைய சமணம், பௌத்தம், வைதிக மதம் இவை ஒன்றோடொன்று போரிட்டுவந்தன. சமணர் செல்வாக்கு உயர்ந்திருந்த 3, 4, 5, 6-ம் நூற்றாண்டுகளில் பல வடமொழி தழுவிய தமிழ் நூல்கள் வெளிவந்தன. அவையே நாலடியார், சிந்தாமணி முதலியன. அக்காலத்தே தான் மேற் கூறப்பெற்ற நான்காந்தர இலக்கண நூல்கள் வெளிவந்திருத்தல் வேண்டும். அவற்றை 'நான்காம் சங்க கால நூல்கள்' எனினும் பொருந்தும்.

தமிழகத்தின் நிலை குலைந்த 3, 4, 5, 6-ம் நூற்றாண்டுகளில் சேர சோழ பாண்டியர் ஆட்சி ஒழிந்து பல்லவர் ஆட்சியும் களப்பிரர் ஆட்சியும் வலுப்பெற்றிருந்த அக்காலத்தில்*—சமணர் மதப்பிரசாரம் உச்ச நிலையில் இருந்த அக்காலத்தில்—மூவேந்தர் வலிகுன்றி அடிமைப்பட்டுக் கிடந்த அந்த இருண்ட காலத்தில்—தூய தமிழ் நூல்கள் வெளிவந்தன; அவற்றுள்ளும் இலக்கண நூல்கள் வந்தன எனக் கூறுதல்

* Vide Dr. S. Krishnaswamy Iyengar's valuable Introduction to 'The Pallavas of Kanchi' by R. Gopalan.

முற்றும் அசம்பாவிதமே யாகும். அக்காலத்தே மொழி பெயர்ப்பு நூல்களே வெளியிடப்பெற்றன. மதச் சண்டை நடந்த பிற்காலத்தும் (7, 8, 9, 10-ம் நூற்றாண்டுகளிலும்) தேவார திருவாசகம் போன்ற மத நூல்கள் வெளிப்பட்டன; 'யாப்பருங்கலம்' போன்ற சமணரை ஆசிரியராகக்கொண்ட 'சார்பு நூல்கள்' இரண்டொன்று பின்னர் வெளி வந்தனவே யன்றி, வேறில்லை. எனவே கி. பி. 3-ம் நூற்றாண்டிலிருந்து 10-ம் நூற்றாண்டு முடிய, செயல் முறை முதல் நக்கீரர் நாலடி நாற்பது ஈறாகவுள்ள இலக்கண நூல்கள் வெளிவந்திருத்தல் இயலாதென்பது வெள்ளிடை மலை. மேலும் கடைச்சங்கத் தின் இறுதிக்காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டின் இறுதியோடு முடிந்து விடுதல் † சரித்திரங்கொண்டு காண்க.

'சங்கம்' என்ற சொல் 'பௌத்தர்' அல்லது 'சமணர்' இடத்திலிருந்தே தமிழர் கொண்டிருத்தல் கூடும். முதல்-இடைச்சங்கங்கட்குக் 'கழகம்' போன்ற சொல் ஏதேனும் வழங்கியிருத்தல் கூடும். கடைச்சங்க காலத்தில் 'சங்கம்' என்ற சொல் தமிழகத்தில் பௌத்தராலும் சமணராலும் வழங்கப்பட்டிருக்கலாம். அதிலிருந்து அச்சொல் வழக்காறு பெற்று, களவியல் உரையிலும், சின்னமனூர்ப் பெரிய சாஸனத்தும், இளம்பூரணர் போன்றவர் உரைகளிலும் வழங்க லாயின; எனவே, 'சங்கம்' என்னும் சொல் கடைச்சங்க காலத்திலோ அதற்குப் பின்னரோ இருந்தே (தமிழ்ச்) சங் கத்துக்கு வழங்கியதாதல் வேண்டும். ஆதலின், 'சங்கயாப்பு' என்னும் பெயர்கொண்ட யாப்புநூல் கடைச் சங்கத்தது அல்லது அதற்குப் பிற்பட்டதாதல் வேண்டும். அது ஜைனர் கூட்டிய நான்காம் சங்ககாலத்தில் செய்யப் பெற்றதாக இருத்தலும் கூடும். அதற்கும் பிற்பட்ட காலத்திற்றான் மாபுராணமும் செய்யப் பெற்றதாதல் வேண்டும். என்னை?

முதல்—இடை—கடைச்சங்க நூல்களில் 'புராணம்' என் னும் பெயருடன் இலக்கண நூலோ, இலக்கிய நூலோ இருந்த தில்லை—இருந்திருத்தலும் இயலாது, 'புராணம்' என்ற சொல்லே வடசொல் ஆதலின் என்க. மேலும், யா. வி. உரையாளர், சந்தம் தாண்டகம் பற்றிய உரையில், "நான்கடி ஒத்து வருவனவும், நான்கடியும் ஒவ்வாது வருவனவும்,........ பிறவாற்றால்வருவனவும்—மாராச்சையும்........முதலாகிய சாந் தோபிசிதிகள் உள்ளும் பாட்டியல் மரபு, மாபுராணம் முதலா கிய தமிழ்நூல் உள்ளும் புகுதியுடையார் வாய்க்கேட்டுணர்க" (யா. வி. பக். 474) எனவும், ".......இவற்றை எல்லாம்

† Vide Dr. S. K. Iyengar's Introduction to his 'Manimekalai'

சரணுச்சிரையமும் சயதேவமும்.........குணகாங்கி என்னும் கருநாடகச் சந்தமும் 1, வாஞ்சியார் செய்த வடுகச்சந்தமும் 2 ஆகியவற்றுள்ளும்; மாபுராணம் முதலாய தமிழ் நூலுள்ளும் புகுதியுடையார்வாய்க் கேட்டுணர்க'' (யா. வி. பக். 514) எனவும் வருவனவே மாபுராணத்தின் காலம் மிகப் பிற்பட்டதென்ற முடிவை உறுதிப்படுத்தப் போதியது. இப்பிற பாஷை நூல்களோடு மாபுராணத்தைப் புணர்த்துக் கூறியதிலிருந்தே மாபுராணத்தின் காலம் குறைந்தது கி. பி. 6-ம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டதுதான் எனத்துணிந்து கூறலாம். மேலும், சந்தம் தாண்டகம் எனத் தொல்காப்பியர் எதனையுங் கொண்டிலர்; இனமுங் கொண்டாரில்லை. யாவற்றையும் கொச்சகக்கலியுள் அடக்கினர். எனவே, அவர்க்கு முற்பட்டதாக மாபுராணம் (களவியல் கூறுமாப்போல) இருப்பின், சந்தம், தாண்டகம் எனத் தனித் தனியாகவும், பல்வேறு விகற்பங்களோடும் இலக்கணம் வகுத்துக் கூறியிருத்தல் இயலுமா? சந்தமும் தாண்டகமும் பெருகிவழிந்த காலத்தேதான் அவற்றின் இலட்சணமும் விகற்பங்களும் மல்கியிருத்தல் வேண்டும். தமிழகத்தில் சந்தம், தாண்டகம் என்பவை தோன்றி வேரூன்றிய காலம் அப்பர் காலத்திருந்தே (கி. பி. 7-ம் நூற்றுண்டு) என்பதை மறுப்பார் எவர்? மேலும், இத்துணை வடநூல்களோடு ஒப்பிடக்கூடிய இலட்சணங்களையும் விகற்பங்களையும் பெற்றிருக்கக்கூடிய காலம் இதற்கு முந்தியதாயிருத்தலும் இயலாதன்றே? ஆகவே, மாபுராணம் கி. பி 7, 8, 9-ம் நூற்றுண்டுகளில் செய்யப்பெற்றதாதல் வேண்டும். அது களவியல் உரைக்கு முற்பட்டது. அதன் பெயரைக் கண்டு மயங்கியோ, அக்காலத்தவர் தயவைப் பெற விழைந்தோ மாபுராணத்தை முதற்சங்க வரிசையிற் கூறினர் களவியல் உரையாளர். இதைப் போன்றதே பூதபுராணமும் கால அளவில். பாட்டியல் மரபும் அக்காலத்ததே. பாட்டியல் நூல்கள் பல, சமணரால் செய்யப்பெற்றவை என்பதைத் தமிழ்ப் புலவர் நன்குணர்வர். மேலும், சமண நூலாக 'மகாபுராணம்' என ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. அம் மகாபுராணம், தமிழ் இலக்கண மாபுராணம், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம்

---

1. கன்னடத்தில் மிகப் பழையநூல் எனக் கருதப்படும் 'கவிராஜ மார்க்கம்' கி. பி. 9-ம் நூற்றுண்டினதாதலின், அதற்குப் பிற்பட்டதே கர்நாடகச் சந்தமாகிய 'குணகாங்கியம்' என்பதை யுணர்க.

2. தெலுங்கில் மிகப் பழையநூல் கி. பி. 11-ம் நூற்றுண்டினதான 'நன்னையபாரதம்' என்பது. சாஸனங்களுள் பழமையானது கி. பி. 6-ம் நூற்றுண்டினதாதலாலும், 'வடுகச்சந்தம்' கி. பி. 6-ம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டதே என்பதை ஐயமற வுணரலாம்.

இம்மூன்று பெயர்களையும் கூர்ந்துநோக்குக. முன்னவை சமணர் உச்ச நிலையுற்றிருந்தபோது செய்யப்பட்டவை. பின்னது சைவம் ஓங்கப்பெற்ற காலத்தது. சுருங்கக்கூறின், வடநூல்வழித் தமிழாசிரியர் செய்த நூல்களே சங்கயாப்பு, மாபுராணம், பாட்டியல் மரபு முதலாகிய இலக்கண நூல்கள் என்பது இதுகாறுங் கூறியவற்றால் அறியலாம். இவை யாவற்றையும் உரையிற் குறித்திருத்தலின், இவற்றுக்குப் பிற்பட்டனவே யா. காரிகை, விருத்தி என்பதும், அமிதசாகரரைக் குறித்திருப்பதால், இவற்றுக்குப் பிற்பட்டதே வீரசோழியம் என்பதும் நன்கறியக்கிடத்தல் காண்க.

வடமொழி யாப்பிலக்கணப் பகுதிகள் கி. பி. 3-ம் நூற்றுண்டுக்குப் பின்னரே தமிழ்நூல்களில் இடம்பெற்றன என்பதை ஒருவாறு மேல் விளக்கினேம். இதனைப் பேராசிரியர் கூற்றும் வலியுறுத்துதல் காண்க: யா. விருத்தியுரையுள், 'காலத்திற்கேற்றன கோடல்' என்ற முறைப்படி, 'குரு—லகு' என்பனவும் பிறவும் (பக். 464 முதலாகவரும் பக்கங்கள்) காணலாம். இவற்றைப்பற்றிப் பேராசிரியர் தொல். செ. சூ, 51-ன் உரையில், "வடநூலாசிரியர் அறுவகைப் பிரத்தியங்களால் எழுத்துக்களைக் குருவும் லகுவும் என இருகூறு செய்து, உறழ்ந்து பெருக்கிக் காட்டுவதோர் ஆறு (வழி) உண்டு. அவரும் இருபத்தாறு எழுத்தளவும் உறழ்ந்து காட்டி, ஒழிந்தன ஒெகிழ்ந்து போவார்", எனக் கூறியிருத்தலை நோக்க, 'குரு, லகு, பிலிகாமத்திமம்' முதலியவை வடநூலாசிரியர் இலக்கணங்கொண்டு சேர்க்கப்பட்டவை என்பது வெளிப்படை, இவை தொல்காப்பியம் முதலிய தொன்னூல்களில் இல்லை என்பது, இவை கூறுமிடத்து யா. வி. உரையாசிரியர் தொல்லாசிரியர் சூத்திரங்களை ஆதாரமாகக் காட்டாமையானும் உணரலாம்.

யா. வி. உரையிற் காணப்பெற்று இப்போழுதில்லாப் பண்டை நூல்கள் :

1. முத்தொள்ளாயிரம் (2700 செய்யுட்களில் 105 கிடைத்துள்ளன.)

2. புராண சாகரம். 3. கலியாண கதை. 4. குடமூக்கிற்பகவர் செய்த வாசுதேவனர் சிந்தம். 5. பெருஞ்சித்திரனர் செய்யுள் (சங்க நூல்களிள் உள்ளவை அல்ல). 6. ஒளவையார் செய்யுள் (சங்க நூல்களிள் உள்ளவை அல்ல). 7. பத்தினிச்செய்யுள். 8. அடிநூல். 9. அணி இயல். 10. அமிர்தபதி.

11. அரச சந்தம். 12. அவிநந்தமாலை. 13. ஆசிரிய முறி. 14. காலகேசி. 15. இரணியம். 16. சயந்தம். 17. தும்பிப்பாட்டு. 18. தேசிகமாலை. 19. நாலடி நானூறு. 20. பசந்தம். 21. பாவைப் பாட்டு. 22. பிங்கல கேசி. 23. புணர்ப்பாவை. 24. பெரிய பம்மம். 25. பொய்கையார் நூல். 26. போக்கியம். 27. மணியாரம். 28. மந்திர நூல். 29. மார்க்கண்டேயனார் காஞ்சி. 30. வதுவிச்சை. 31. வளையாபதி முதலியன. இவற்றுள் இரண்டொன்று தவிர ஏனைய கடைச் சங்கத்துக்குப் பிற்பட்ட காலத்தேதான் செய்திருத்தல் கூடும் என்பது அவற்றின் பெயர்களைக் கொண்டே எளிதில் கூறிவிடலாம். இது நிற்க.

கம்பராமாயணத்துக்கு முற்பட்ட தமிழ் இராமாயணம் ?

யா. வி. உரையாசிரியர் "இன்னும் பல தொடையால் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும் புராண சாகரமும் முதலாகவுடைய செய்யுட்களில் கண்டுகோள்க" எனச் (சூ. 62-ன் உரை) கூறியுள்ளதை நோக்க, வெண்பாவில் இராமாயணம் ஒன்று இருந்திருத்தல் கூடுமெனத் தெரிகிறது. கம்பராமாயணம் விருத்தப்பாவால் ஆகியதென்பதை "விருத்தமெனும் ஒண்பாவில் உயர் கம்பன்" என்ற தொடரே உறுதிப்படுத்துதல் காண்க. இப்போது அரைகுறையாக உள்ள 'பாரத வெண்பா'வைப் பாடிய பெருந்தேவனார் மூன்றும் நந்திவர்மன் காலத்தவர் என்பது, அவர் பாரத வெண்பாவில் 'தெள்ளாறு' என்னுமிடத்தில் பல்லவன்கொண்ட வெற்றியைக் குறிப்பிடுவதால் உணரலாம்.* இங்ஙனம் கி. பி. 9-ம் நூற்றாண்டில் பாரதம் வெண்பாவிற் செய்யப்பட்டதைப் போன்றே இராமாயணமும் வெண்பாவிற் செய்யப்பட்டிருத்தலும் கூடுமோ, இரண்டும் இதிகாச நூல்கள் ஆதலின்? இன்றேல், 'பஃறொடை வெண்பாவிற் குதாரணம் இராமாயணச் செய்யுட்களிற் காண்க' என உரையாசிரியர் கூறிப் போந்ததேன்? வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சமணர் காலத்தே சிந்தாமணி, சூளாமணி, பாரதம் போலவே இராமாயணமும் மொழிபெயர்க்கப் பட்டிருத்தல் கூடாதோ? இந்நிலையில், களப்பிரர் காலத்திலோ பல்லவர் காலத்திலோ பாரத வெண்பாவைப் போலவே 'இராமாயண வெண்பா' ஒன்று செய்யப்பட்டிருத்தல் கூடியதே என்ற முடிபேகொள்ள வேண்டுவதாயுளது. இது, மேலும் ஆராய்ச்சிக்குரியது.

---

* Vide P. 232 'Pallavas of Kanchi' by R. Gopalan.

தொல். செய்யுளியல் உரையிற் காணப்பெறும் இப்பொழுதில்லாப் பண்டை நூல்கள் :

1. யாழ்நூல். 2. தகடூர் யாத்திரை. 3. பாரதம். 4. பருப்பதம். 5. சிறுகுரீஇயுரை. 6. தந்திர வாக்கியம். 7. வஞ்சிப் பாட்டு. 8. மோதிரப் பாட்டு. 9. கடகண்டு. 10. கந்தர்வ நூல். 11. விளக்கத்தார் கூத்து. 12. மூவடி முப்பது முதலியன.

இவர் உரையால், அக்காலத்திய கூத்து வகையினையும் கூத்த நூல்களையும் நன்குணரலாம்: 'சேரிமொழி' என்பது பாடி மாற்றங்கள். அவற்றானே செவ்விதாகக் கூறி ஆராய்ந்து காணாமைப் பொருட் டொடரானே கொடுத்துச்செய்வது புலன். அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வன என்பது கண்டுகொள்க' (சூ. 241 உரை).

யா. காரிகை உரையால் அறியப்படுவன:

1. உரையாசிரியர் குணசாகரர் மேற்கோளாகக் காக்கை பாடினியார் யாப்பிலக்கணத்தினின்றும் சுமார் 27 சூத்திரங்களையும், மயேச்சுரர் யாப்பினின்றும் சுமார் 10 சூத்திரங்களையும், அவிநயர் யாப்பினின்றும் 10 சூத்திரங்களையும், பல்காயனார் யாப்பினின்றும் 5 சூத்திரங்களையும் சிறுகாக்கை பாடினியார் யாப்பினின்றும் இரண்டொன்றும், நற்றத்தனார் யாப்பினின்றும் நான்கும், கையனார் யாப்பிலிருந்து இரண்டும், சங்க யாப்பினின்று ஒன்றும், கலிதயனார் யாப்பினின்று ஒன்றும், பெயர் தெரியாத புலவர் ஒருவர் யாப்பினின்றும் சுமார் 41 சூத்திரங்களையும் காட்டியுள்ளமை, மேற்கூறப்பெற்ற நூல்கள் அவர் காலத்தில் சிதறுண்டிருந்த நிலைமையைச் செவ்விதாகக் காட்டுவதாகும்.

2. யா. வி. உரையிற் கூறப்பெறாத யாப்புநூற்புலவர் மூவர் இவ்வுரையில் இடம் பெற்றுள்ளார். அவருள் 'கலிதயனார்' என்பவர் ஒருவர்; 'பாடலனார்' என்பவர் ஒருவர் (இவர் 'மாடலனார்' என்பவர் போலும்; பெயர் நாளடைவில் ஏடெழுதுவோர் கவனக்குறைவால் இக்கதியடைந்திருத்தல் கூடும்.); பெயர் தெரியாப் புலவர் மூன்றாமவர்.

3. இவ்வுரையிற் காணப்பெறும் புதிய நூல் 'திருவள்ளுவப்பயன்' ஒன்றே. இஃது இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்வான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

குறிஞ்சி

இயற்கைப் புணர்ச்சியின் இறுதியில் தலைவன் பிரிதலுற்றது கண்ட தலைவி பின்னும் தலைவனைக் கூடப்பெறுவதாமோ என்று ஐயுற்றுக் கவன்ற நிலைக்கண், தலைவன் அவளை வற்புறுத்தித் தேற்றிக் கூறியது.

செம்புலப் பெய்ந்நீரார் பாடியது

40. யாயும் ஞாயும் யாரா கியரோ ?
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர் ?
யானுநீயு மெவ்வழி யறிதும் ?
செம்புலப் பெய்ந்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

என்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பின்னர்ப் பிரிவரெனக் கருதி யஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறியது.

பதவுரை:—

யாயும்—என்னுடைய தாயும், ஞாயும்—உன்னுடைய தாயும், யாராகியரோ—என்ன உறவினையுடையார்? எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்—என்னுடைய தந்தையும் உன்னுடைய தந்தையும் என்ன முறைமையையுடைய சுற்றத்தவர்? யானும் நீயும்—நானும் நீயும், எவ்வழி அறிதும்—இதற்கு முன் எவ்விடத்து ஒருவரை ஒருவர் கண்டறிந்துள்ளோம்? (இவை யாவும் இல்லை) (இங்ஙனமாக), செம்புலம் பெய்நீர்போல—செந்நிறமுள்ள இடத்தில் பெய்த நீர் அந்நிறமே யடைதல்போல, அன்புடை நெஞ்சம்—அன்பினையுடைய நமது நெஞ்சம், தாம் கலந்தனவே—பிறர் உதவியின்றித் தாமே கலந்து ஒன்றுபட்டன. (ஆதலின் இது தெய்வ வசத்தால் இயைந்ததோர் கூட்டமாகலின் இதற்கு இடையூறு நேராதென்பது குறிப்பு.)

எனவே தெய்வவசத்தான் இயைந்ததா மிக்கூட்டம் என்றும் பிரிதலுரு தெனத் தலைவன் தலைவியின் அச்சமகற்றினுனுதலின் பிரிவச்ச மகற்றலாம் என்க.

செந்நிலத்தில் பெய்தநீர் இயல்பாகச் செந்நிறமே யுறுதல் போலத் தாமே அன்புகாரணமாக நமது மனம் ஒன்றுபட்டன எனக் கூறிய உவமை நயம் வியக்கத்தக்கது. இவ்வுவமை காரணமாக இச்செய்யு ளியற்றினூர்க்குச் செம்புலப் பெயந்நீரார் என இத் தொகை தொகுத்தார் குறித்தது பாராட்டத்தக்கது. யாய்—தாய். எந்தை—என்தந்தை. நுந்தை—உன்தந்தை—மரூஉ மொழி. கேளிர்-கேள் + இர்—சுற்றம்.

மேற்கோள் விளக்கம்:—

(1) "யாயும் யாயும்............கலந்தனவே" — "இது பிரிவ ரெனக்கருதிய தலைவி குறிப்புணர்ந்து தலைவன் கூறியது"

(—தொல்—களவு. பக். 372)

(2) "தெய்வத்தின் ஆதலின் ஏதம் பயவா தென்றான். "யாயும் யாயும்......கலந்தனவே" இது நம்மானன்றி நெஞ்சந்தம்மில் தாம் கலத்தலின் தெய்வத்தானுயிற்றெனத் தெருட்டியது"

(—தொல்—கற்பி. பக். 614)

(3) ஞாய்—நின்தாய். யாய் என்பது தன்மைப் பெயரடி யாகவும், ஞாய் என்பது முன்னிலைப் பெயரடியாகவும் பிறந்த முறைப்பெயர்கள். இதனை 'ஞாயர் பயிற்ற' 'ஞாயர் பாலுண்டி' 'ஞாயர் மாட்டைப்பால்' 'ஞாயையு மஞ்சுதி' எனக் கலித்தொகை 81-12; 85-28; 36; 7-25, என்னும் செய்யுட்களின் அடிகளாலும் அவற்றின் குறிப்பாலும் அறிக

(4) யாய்—என் தாய்—என்பதற்கு "எந்தையும், யாயுமறிய வுரைத்தீயின் யானுற்ற நோயுங்களை குவைமன்" என்பது மேற் கோள். —(கலி. முல்லை, 11, 2-4.)

(5) இச்செய்யுள் தலைவன் பிரியேன் என்றற்கு மேற்கோள்.

(—நம்பி. அகம்—சங்கம்)

(6) "இன்ன வுவகை பிறிதியாதி யாயென்னை"

—(கலி. முல்லை. 5·62)

(1) 'யாயும் ஞாயும்'—'யாயும் யாயும்' —(பிரதிபேதம்)

(2) 'செம்புலப் பெய்ந்நீர்போல—செம்புலப் பெயனீர்போல'

—(பிரதிபேதம்)

மெய்ப்பாடு—உவகை.

பயன்—அச்சமகற்றல்.

"அல்லல்தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருளின் கண்ணும்" என்றது "தலைவி தன் துன்பந்தீர ஆர்வத்தோடு பொருந்தச் சொல்லப்பட்ட பொருண்மைக்கண்ணும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு, என்றது களவுக்காலத்து வருந்திய வருத்தந் தீரத் தனது காதன் மிகுதிதோன்றச் சொல்லுதற் பொருளின் கண்ணும் என்றவாறு, (உ-ம்) "யாயும்......கலந்தனவே" எனவரும்.
—(தொல்-கற்பி-144 சூ. இளம்பூ. பக். 225)

பாலை

தலைவன், தலைவியை விட்டுப் பிரிந்தானாகத் தலைவி அவன் பிரிவாற்றாது வேறுபாடுற்று வருந்துதலைக்கண்டு தோழி கவன்றாளாக, அதனையுணர்ந்த தலைவி, தலைவனுடனிருந்தால் மகிழ்வதும், பிரிந்தால் வருந்துவதும் தனதியல்பெனத் தோழிக்குக் கூறியது.

அணிலாடுமுன்றிலார் பாடியது

41. காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
புலம்பில் போலப் புல்லென்
றலப்பேன் றோழியவ ரகன்ற ஞான்றே.

என்பது பிரிவிடை வேறுபாடுகண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

பதவுரை :—

காதலர்—நம்மிடத்து அன்புள்ள தலைவர், உழையர் ஆக—அருகிலுள்ளவராகுங்கால், பெரிது உவந்து—மிகவும் மகிழ்ந்து, சாறுகொள் ஊரின்—திருவிழாவினைக்கொண்டுள்ள ஊரைப்போல, புகல்வேன்—மகிழ்ச்சியுற்றிருப்பேன்; மன்ற—இது நிச்சயம்; தோழி—தோழியே, அவர் அகன்றஞான்று—அவர் நம்மை விட்டுப் பிரிந்துசென்ற காலத்தில், அத்தம் நண்ணிய—காட்டு வழியையடைந்த, அம்குடி சிறு ஊர்—அழகிய குடியையுடைய சிறிய ஊரிலுள்ள, மக்கள் போகிய அணில் ஆடு முன்றில்—மக்கள் அகன்றதும், அணில்கள் விளையாடுவதான முன்னிடத்தையுடையதுமான; புலம்பு இல்போல—தனிமையான பாழ்வீட்டைப்போல, புல் என்று அலப்பேன்—அழகுகெட்டு நான் வருந்துவேன். (இதுவே என் இயல்பு.)

உழை—பக்கம். புகல்வேன்—மகிழ்ச்சியுறுவேன். சாறு—திரு விழா. ஊரில்—ஊரைப்போல. அத்தம்—சுரம்; காட்டுநெறி. புலம்பு—தனிமை. புலம்பு + இல் = புலம்பில்; புலப்பில். இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்க தொகை. மென்றொடர் மொழியாதலின் வேற்றுமையில் வன்றொடராகிப் புலப்பில் எனப் புணர்ந்து நிற்கும்.

ஊரில் மக்கள் நீங்கிவிட்டால், தனிப்பட்ட பாழ்வீட்டில் அணில் விளையாடும். மக்களில்லாமையால் வீடு பொலிவற்றிருக்கும். அணில் அச்சமின்றித் திரியும்.

தலைவன் பிரிந்தவழி வருந்தும் தலைவிக்கு மக்கள்போகிய அணிலாடு முன்றிலையுடைய தனிமைப்பட்ட வீட்டை உவமை கூறிய திறன் நோக்கத்தக்கது. அணிலாடு முன்றில் முற்றத்திலும் முன் இறப்பிலும் அணில் விளையாடும் என இயற்கையை விளக்கிய தன்மை நோக்கத்தக்கது.

அணிலாடு முன்றில் என இவ்வழகிய தொடரை அமைத்த காரணத்தாலேயே இச்செய்யுளாசிரியரை 'அணிலாடு முன்றிலார்' எனக் குறிப்பிட்டனர் தொகுப்பாசிரியர்.

மேற்கோள் விளக்கம்:—

1. "பிரிவிடையாற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவ லெனக் கூறியது" என்பதற்கு, "காதலருழையராகப்............... ஞான்றே" என்பது மேற்கோள். —(தொல் கற்பு. பக். 73)

2. 'சாறுகோள் ஊர்'

(அ) "அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்சாறுகழி வழிநாட் சோறு நசையுறுது" (பொருந. 1—3)

(ஆ) "விழவுமேம்பட்ட வென்னலனே தண்ணந் துறைவனொடு கண்மாறின்றே" (—குறுந். 125)

(இ) "முழவொலி முந்நீர் முழுதுட னாண்டார் விழவூரிற் கூத்தேபோல் வீந்தவிதல் கண்டும்" —(பழமொழி 343)

(ஈ) "கல்லெனக் கவின்பெற்ற விழாவாற்றுப் படுத்தபிற், புல் லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ"

(கலி. பாலை. 4—10, 11)

3. "அங்குடிச்சீறூர் மக்கள்போகிய அணிலாடு முன்றில் புலம்பில்போல அலப்பேன்"

1. "தலைவரைப் பிரிந்தமகளிர் மக்கள்போகிய பாழூரை ஒப்பர்"—நச்சினார்க்கினியம்.

2. நால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற்
பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து

மன்னன் கரிகால் வளவனீங் கியநா
ளிந்நகர் போல்வதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவர்" —(மணி.1. 37—41)

3. "நல்குநர் பிரிந்து நலனுணப் பட்டோர்
அல்குநர் போகிய வூரோரன்னர்"
—(கலி.பாலை. 22: 10-11.)

சாறு—விழா—"சாறுதலைக்கொண்டென" —(புறம் 82)

அத்தம்—சுரம்—"அத்தம் நண்ணிய அங்குடிச்சீறூர்"
—(அகநானூறு—களிற். 9, 10)

புல்லெனல்—அழகுகெடல்—"புனிற்று நாய் குரைக்கும் புல்லெனட்டில்" —(சிறுபாணாற்—132)

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம்.

பயன்—ஆற்றுமாறு அறிவித்தல்.

திருவாசகத்தில் விடுபட்ட ஒரு வாசகம்

[ஒக்கூர் திரு வீர. ராம. நா. சாத்தப்பசெட்டியார்]

ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர் வாய்ப் பிறந்த வாசகத் தேனே

என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில் பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள மூழ்கிய புனிதனாகிய நம் மணிவாசகப்பெருமானையும், தம் அருட்டிறத்தால் கருங்கன் மனமுங் கரைந்துருகும்படியாக அவர் இனிய தமிழில் மிகவுந் தெளிவாய் மொழிந்த திருவாசகத்தையும் பற்பல விடத்தில் சிறப்பித்துக் கூறி இருக்கின்றார். இன்னும் எத்தனையோ அறிவிற்சிறந்த பெரியோர்தங்களாலும் புலவர்நன்மக்களாலும் அநேகவிதமாய் அநேகம் பாக்களாற் சிறப்பாய் எடுத்துரைத்துப் புகழ் மிக்குடையதாய் இருப்பது திருவாசகம்.

அத்தகைமை வாய்ந்த மறுவிலா மாணிக்கமென்னும் திருவாசகத்தைப்பற்றி எனதுயிர்த் தோழராகிய ஒருவருடன் நான் உரையாடிக் கொண்டிருக்கும்போது அவர் திருவாசகத்தின் கடைசிப்பதிகமாகிய அச்சோப் பதிகம் ௧0-வது வாசகம் (பாட்டு) ஒன்று பழைய காலத்து ஏட்டுப் பிரதியிலிருந்து

தமது பார்வைக்குவந்ததென்றும் அவ்வாசகமானது, அப்பதிகம் ஒன்று முதல் ஒன்பது எண் வரையுள்ள வாசகத்தைப் போலவே இசையும் பொருளும் ஒத்து வாதவூரடிகளுடைய வாக்காக மதிக்கத் தகுந்ததாயிருக்கிறதென்றும் அதை அடிகள் வாக்காகத்தான் இருக்குமென்று நிச்சயமாய்த் தாம் எண்ணி இருப்பதாயும் சொன்னார்கள். அன்னார் சொன்ன வாசகத்தையும் கீழ் தருகின்றனம் :

செத்திடமு பிறந்திடமு மினிச்சாவா திருந்திடமும்
அத்தனையு மறியாதார் அறியுமறி வெவ்வறிவோ
ஒத்தநில மொத்தபொருள் ஒருபொருளாம் பெரும்பயனை
அத்தனெனக் கருளியவா ரூர்பெறுவா ரச்சோவே.

நான் பார்த்தவரையில் திருவாசக அச்சுப்புத்தகங்களில் இவ் வாசகம் இருப்பதாய்த் தென்படவில்லை. நானும் இதில் ஐயங் கொண்டு பத்திரிகை வாயிலாக வெளியிட்டு எனது சந்தேகத்தை நீக்கிக்கொள்ளலாமென் றெண்ணி இச்செந்தமிழ்ச் செல்வி மூலம் எழுதி வெளியிடலானேன்.

மேலே காட்டிய திருவாசகத்தில் நான் கொண்டிருக்கும் சந்தேகத்தை நீக்கிக்கொள்ள இச்செந்தமிழ்ச் செல்வியெனும் பத்திரிகை வாயிலாக விடை எழுதி தெளிவுபடுத்துமாறு சைவ சமயமே சமயமென்பதை நன்குணர்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்யும் நூல் ஆராய்ச்சி வல்லுநராகிய பல்லாவரம் ஸ்ரீ மறைமலையடிகளையும், செந்தமிழ்ச் செல்விஇதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்களையும், மற்றும் நூல் ஆராய்ச்சியாளர்களையும் வித்வான்களையும் மிகவும் நயந்து கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இரண்டாங்குறள்

[ஐயா. பா. வே. பொன்னுசாமி நாய்க்கர் அவர்கள்]

கற்றதனு லாய பயனென்கோல் வாலறிவ
னற்ற டோழாஅ ரெனின்.

கற்றதனால் ஆயபயன் என்=உலகிற்றோன்றிய பன்னூல்களையும் கற்றதனால் உண்டாய பயன் யாது? ஒன்றுமில்லை வால் அறிவன் நல்தாள் தொழார் எனின்=சுத்தமான மெய்யுணர்வினை யுடையானது நல்லதாளைத் தொழார் ஆயின்.

விளக்கம்:—கற்றதனால் என்றமையால் உலகிற்றோன்றிய பன்னூல்களையும் கற்று அவற்றுள் பயனற்றவைகளை நீக்கி, பயனுடையவைகளை என்னாளும் கசடறக்கற்று, கற்றவண்ணம் நிற்றல்வேண்டும்; அப்படி நிற்கவேண்டியவைகளில் முதன்மை பெற்றது வாலறிவன் நற்றாள்தொழல். வாலறிவன் என்பதற்குச் சிறப்புவகையில் சுத்தமான மெய்யுணர்வினன் என்று பொருள். கல்வி கல்+வி கல்=கிண்ட (வருவது) வி= கண்—கல்=தோண்ட (வருவது) வி=அறிவு. (1) எண்ணும் எழுத்தும் கற்று முகத்திரண்டு புண்ணைக் கண்ணாக்கிக் கொளினும் தொழார் எனின் பயனில்லை, புறக்கண்ணிருந்தும் அந்தகராகும் பொருட்செல்வர்களைப்போல, இவர்களும் அகக்கண்ணிருந்தும் அகக்குருடர்கள் ஆகிறார்கள். (2) உடற்குறுதிதரும் உலகநூல் பலவற்றையும் உயிர்க்குறுதிதரும் அறிவுநூல் பலவற்றையும் நுண்ணிதாய்க் கற்றதனால் ஊறி அகன்ற அறிவால் தொழார் எனின் பயனில்லை. போதிய பொருள் இருந்தும் அறவழியிற் செலவிடாத அறிவற்ற பொருட்செல்வர்களைப்போல இவர்களும் கல்வி அறிவிருந்தும் அறிவற்றவர்கள் ஆகிறார்கள். இதுபற்றியே "கற்றும் அறிவில்லாதவர்களைவிடக் கல்லாதவர்களே நல்லவர்கள் நல்லவர்கள்" என்றார் தாயுமானவரும். (3) அறிவுநூல்களைக்கற்றுக் கடவுளைத் தொழுது மெய்யுணர்ந்து வீடுபேறடைதல் வேண்டும். 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்—செம்பொருள் காண்பதறிவு"—ஆதலின் தொழார் எனின் அறிவு நூல்களைக்கற்றும் மெய்யறிவற்றவர்கள் ஆகிறார்கள். வீடு பேறும் கிட்டுவதில்லை. "மடங்கொன்றறிவகற்றும் கல்வி" "அறிவறிவதறிவே" என்றார் பிறரும். தயரதன் "மன்னுயிர்க்குறுவதே செய்துவைகினேன். என்னுயிர்க்குறுவதும் செய்ய எண்ணினேன்"—என்கிறான். (4) கடவுள் இல்லை என்கிற கொள்கையார், கடவுள் உண்டென்று உறுதியாய் முடிவு கட்டிக்கூறும் அறிவுநூல்களைக் கற்றும் தம் கொள்கையை விட்டுத் திரும்பித் தொழார் எனின் இகபரத்திற்குச் சாதனமான இருவகை நூல்களையும் கற்றும் பயனில்லை; விழற்கிறைத்த நீராகும். (5) நாத்திகர் நாவரி கருவியாகவும் இக்குறள் விளங்காநிற்கும்.

கருத்துரை—"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே"—பொருளீட்டி அறத்தின்வழி செலவிட்டுப் புகழ் பெற்று இகத்தில் இன்புறுவதற்கும், மெய்யுணர்ந்து வீடடைதற்கும், கடவுளைத் தொழல்வேண்டும்.

குறிப்பு—தாள் என்றமையால் கையும் பெற்றாம்—திருமுருகாற்றுப்படை "உறுநர்த்தாங்கிய மதனுடைநோன்றாட்,

செறுநர்த்தேய்த்த செல்லுறழ் தடக்கை", அறியாமை (மதன்)யைப்போக்கி மெய்யுணரச்செய்யும் தாள் பிறவிப் பிணிக்கு மருந்தாதலின் 'நற்றாள்' என்றார். ஆரியவேதம் இத் தகைய நற்றாளிற்பிறந்த வேளாண் மாந்தரைச் சூத்திர ரென்று இழித்துக்கூறல் எற்றிற்கு? எவன், என்பது என் என்று தொகுத்தல் விகாரம்பெற்று இன்மை விளக்கிநிற் கிறது. கொல்—அசை. அளபெடை செய்யுள் நோக்கிவந்தது.

கம்பநாடரும், உடன்பிறப்புநோக்கத்தின் உண்மையும்

[வித்துவான் எஸ். ஆறுமுக முதலியார் M. A., L. T.]

(உரிமை ஆசிரியர்க்கே)

இப்பரந்த நிலவுலகத்தின் எப்பகுதியை நோக்கினும் இன்று மக்களிடையே அன்பும், ஒப்புரவும் நிலவாமல், அழுக்காறும், அவா வெகுளி இன்னாச்சொற்களும், பூசல்களும், பிற கெட்ட குணங்களும் குடிகொண்டு, ஒற்றுமை நீங்கி, பல வகை வேற்றுமைகளே வேரூன்றி நிலைத்திருப்பதை நாம் காண லாகும். இப்பூசல்கள் பலதிறப் படுகின்றன. முதலாளி தொழிலாளிகளின் பூசல்கள் ஒருபுறம். சாதிப் போர்கள் மற் றொருபுறம். சமயப் பூசல்கள் வேறொருபுறம். அரசியல் குழப் பங்கள் நான்காவதோர் புறம். இவைகளாலும் பிறகாரணங்க ளாலும் மக்களிடை ஒற்றுமை, மனஅமைதி, இன்பம், வாழ்க் கையில் விருப்பு, செல்வம் முதலியன வரவரக் குன்றி வேற் றுமை, மனக்கவலை, இடைவிடாத துன்பங்கள், வறுமை, பிணி, வாழ்க்கையில் வெறுப்பு முதலியன வளர்ந்துகொண்டு வந்து பல்வேறு நாட்டுமக்களும் மேல்நிலை யெய்துவதன்றிக் கீழ்நிலை யெய்துகின்றனர்.

மக்கள் இந்நிலை யெய்துவதற்குப் பல காரணங்கள் இருப் பினும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணம் அன்பு என்னும் அரியகுணம் மக்களிடை நிலவாமையும், தன்னல மொன்றையே பெரிதாகக் கருதி அதற்கெனவே வாழுதலும், பிறர்நலத்தையும் பேணுவதில் நம்பிக்கையும் ஆர்வமுமில்லா மல், பிறருக்குத் தொண்டாற்றல் என்னும் அருஞ்செயலை மேற்கொள்ளாமையும், பிறரையும் தன்னைப்போலவும், தன் உடன்பிறந்தோரைப் போலவும் கருதி அன்பு செய்யாமையும் பிறவுமாம் என்று சுருங்கக்கூறலாம்.

இவ்வன்பின் மாட்சியும், உடன்பிறப்பு நோக்கத்தினால் விளையும் ஆக்கங்களும் நம்மனோரா லளவிடற்பாலவோ? அன்

பென்ப தொன்றன்றன்மை அமரரும் அறியாததது அல்லவோ? அன்பென்னும் இவ்வரிய தெய்வ இயலானது மக்களிடை நிலவுமாயின் மேற்கூறிய பூசல்கள் எல்லாம் தலைகாட்டாது ஒடுமென்பதில் ஐயமென்ன இருக்கின்றது? இவ்வன்புடைமையும், உடன்பிறப்பு நோக்கமும் ஒன்றற்கொன்று இன்றியமையாததாய் ஒன்றையொன்று விட்டுப்பிரியாது அவாவி நின்று பயனைச் செய்கின்றன. தொடர்புடையார்களிடத்துக் காதலுடைமையாகிய இவ்வன்பு முதல்முதல் இல்லத்திலே பிறந்து ஆண்டுள்ளோர்பால் இயங்கிப் பின் கொஞ்சம் கொஞ்சமாய் விரிந்துசென்று, சுற்றத்தாரையும், விருந்தினரையும், ஊராரையும், நாட்டாரையும், தேசத்தாரையும், பிறதேசத்தாரையும், உலகிலுள்ள எல்லா மக்களையும், மக்களையேயன்றிப் பிற வுயிர்களாகிய விலங்குகள், செடிகொடிகள், ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன முதலியவற்றையும், இவற்றையெல்லாம்படைத்த இறைவனையுஞ்சென்று பற்றிவிடுகின்றது. தொடர்புடையவர்களிடத்துத் தோன்றிய இது வளர்ச்சியை அடையஅடைய, தொடர்புநீங்கி, தொடர்பில்லாத பிறரிடத்தும் பிறவுயிர்களிடத்தும் இயல்பாகவே காரணமில்லாமலே சென்றுவிடும். இவ்வாறு அன்பு பிற்காலத்து மாறுவதை அருள் என்றும் கூறலாம். இவ்வருள் அல்லது அன்பின் முதிர்ச்சி, கால, தேச, நிற, மொழி, சமய, வேற்றுமைகளை எல்லாம் கடந்து வெற்றிபெற்றுவிடும். அருளுடைச் செல்வர்களை ஒரு நாட்டினர், மொழியினர், காலத்தினர், சமயத்தினர் மட்டுமன்றி எல்லா நாட்டினரும், மொழியினரும், காலத்தினரும் சமயத்தினருமே போற்றிப் பின்பற்றுவர். இதற்குத் திருவள்ளுவர் வாழ்க்கையும் அவர் தம் திருக்குறளும் மலைபோன்ற சான்றுகளாகும். "அருள் என்னும் அன்பீன் குழவி" என்று சுருங்கச் சொல்லி அவ்வாறுவதைப் படிப்படியாகத் தமது இல்லற துறவற இயல்களில் விளங்கவைத்தவரன்றோ நம் நாயனார்!

இவ்வன்புடைமை மக்களது பிறப்புரிமையாகும். அஃதில்லார் மக்களாய்ப் பிறப்பினும் மக்களல்ல—நடைப் பிணங்களே. அவர்கள் உடம்பு எலும்புந்தோலும் சேர்த்துப் பண்ணப்பட்ட ஒரு கூடேயன்றி வேறல்ல. "அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலா ரென்புதோல் போர்த்த வுடம்பு" என்பர் ஆசிரியர் வள்ளுவனார். மேலும் இம்மையிலும் மறுமையிலும் இன்புற்றிருப்பது எல்லாம் அன்புற்றமர்ந்தவழக்கினாலன்றோ?

இவ்வன்புடைமை, இவ்வுலகத்துள்ளார் யாவரையும் உடன்பிறப்பு நோக்கொடு பார்ப்பதற்கு இன்றியமையாததென்று வற்புறுத்தவேண்டிய அவசியமில்லை. உடன்பிறந்

தோர் ஒருவரையொருவர் உள்ளன்போடு நேசித்து இன்பத்திலும் துன்பத்திலும் ஒற்றுமையுடையோராய், ஒருவருக்கொருவர் உற்றுழியுதவி, முன்னோர்கள் தேடிவைத்த பொருளைப் பங்கிட்டுக் கொள்வதாலுண்டாகும் வேற்றுமைகளுக்கும், குடும்பத்தில் ஏற்படும் இன்னும் பல வேற்றுமைகளுக்கும் அடிமைகளாகிப் பூசல்விளைத்து இல்வாழ்க்கையின் இன்பத்தையும் தெய்வத்தன்மையையும், மாட்சியையும் குலைத்து விடாமல் அவற்றைப் போற்றி வாழ்தற்குரியர். இதே ஒற்றுமையையும், அன்பையும் ஒருவர், தன்னுடன் பிறக்காது, தன் தந்தைக்கு வேறு மனைவியர்பால் பிறந்தோரிடத்தும் செலுத்துதற்குரியர். முற்கூறியாங்கு இவ்வுடன்பிறப்பு நோக்கமாகிய அன்பு பிறகு படிப்படியாய், பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் பெற்று, வீட்டின் எல்லையைக் கடந்துசென்று, சுற்றத்தாரையும், ஊராரையும், நாட்டாரையும், பிற தேயத்தவரையும், உலகமக்கள் முழுவதையும், பிறவுயிர்களையும் பற்றிச் சென்று உடன்பிறப்புத் தன்மை என்பதைஉலகம் முழுவதும் பரப்பி அரசு வீற்றிருக்கும். இந்நிலையில் இன்பமும், மகிழ்ச்சியும், வசியும் வளமும், செல்வமும், அறமும் ஓங்கி, துன்பம், பசி, பிணி, வறுமை, மறம் முதலியவை கொல்லப்படும். அன்பும் உடன்பிறப்பு நோக்கும் குடிகொண்டுள்ள நாட்டில் பல மக்கட்டொகுதிகளும், சாதிப்பிரிவுகளும் இருப்பினும், அவற்றிடையே ஒத்த உணர்ச்சி நிலவி அவ்வேற்றுமைகளை ஒழிக்கும். பொருட்செல்வமட்டுமன்றி அதோடு கல்விச்செல்வமும் குணமேன்மையும் ஒருங்கே சேர்வதால் சமுதாயத்தின் பலவித சாதிப் பிரிவுகளின்றிப் பல்வேறு சமயங்களிலும், குடிவாழ்க்கையிலும் ஒருவித அமைதியும் உடன்பிறப்புணர்ச்சியுங் குடிகொண்டிருக்கும். மக்கள் ஏற்றத் தாழ்வுணர்ச்சியின்றி எல்லோரையும் ஒருங்கே நேசித்து, எங்கெங்கு ஒழுக்கமும், விழுப்பத்தைத் தரவல்ல கொள்கைகளும் காணப்படுகின்றனவோ, அவற்றையெல்லாம் போற்றிப் பெருமைப் படுத்துவர். இந்நிலையில் பிறப்பினாலேதான் உயர்வுண்டு என்ற கொள்கைக் கிடமிராது. இவ்வுடன்பிறப்பு நோக்கின் அன்புத் தளை பலரையும் சேர்த்துப் பிணித்துவிடுவது ஒரு வியப்பன்று. ஒரு பொதுமொழி பல பிரிவினராயுள்ள மக்களையும் ஒருங்கு சேர்ப்பதைப் போலவே, உடன்பிறப்பு நோக்கமும் பல்வேறு நாட்டினரையும் சமயத்தினரையும், சாதியினரையும் ஒன்றுசேர்த்துவிடும். மகமதியன், கிறிஸ்தவன், சைவன், வைணவன், சமணன், பௌத்தன், பிராமணன், பிராமணனல்லாதான், ஆண், பெண், முதியோர், இளைஞர், உயர்ந்தோர், தாழ்த்தப்பட்டோர் என்ற பலரும் உடன்பிறப்பு

நோக்கத்தால், அன்பால் ஒன்றுபடுத்தப்படலாம். பல சமயங்களிலும் உயர்ந்த நிலையையடைந்த ஆசிரியர்கள் பலரும் சிறந்த சமரச ஞானச் செல்வர்களாய்த் திகழ்ந்து உலகுக்குத் தொண்டுபுரிந்ததை நாம் நமது நாட்டின் பண்டைவரலாற்றிலிருந்து படிக்கின்றோம். சமரச ஞானிகளாகிய தாயுமான சுவாமியும், இராமலிங்க அடிகளும் அளவிடமுடியாத, ஒப்பற்ற தொண்டை இம்முறையில் ஆற்றிச் சென்றுள்ளனர். கவியரசர் இரவிந்திரரும், அன்பின் பிறப்பிடமும் இருப்பிடமுமாகும் காந்தியடிகளும் இவ்வொப்பற்ற அன்புநெறியில் நின்று, அதை உலகில் பரப்புகின்றவர்கள் அல்லரோ? இத்தகைய ஒரு தெய்விக நிலையை இவ்வுலகில் நிலைநாட்ட முயற்சிப்பதே ஒவ்வொரு நாட்டாரும் மேற்கொள்ளவேண்டிய சிறந்த குறிக்கோள் என்பதை மறுப்பாரும் உண்டோ?

இவ்வுடன்பிறப்பு நோக்கத்தின் பெருமையும் அவசியமும், அதனை வாழ்க்கையில் கையாண்டு பயன்பெறுதலும் தமிழ்நாட்டிற்கும் தமிழர்களுக்கும் புதியதல்ல. பிறநாடுகளெல்லாம் அநாகரீகத்திலும் அறியாமையிருளிலும் மூழ்கிக் கிடந்த காலத்திலேயே நம் நாட்டினர் கல்வியிலும், கைத்தொழில்களிலும், வாணிகத்திலும், உழவுத்தொழிலும் அரசியலிலும் சமயநெறியிலும் பிறவற்றிலும் தலைசிறந்து விளங்கியதோடு, குண நலத்திலும், ஒழுக்க மேம்பாட்டிலும் மேன்மையுற்று விளங்கினர். நமது பண்டைப் பனுவல்களை மேலெழுந்தவாரியாய் ஒருமுறை படிப்போரும் இதை உணரலாம். மக்கள் இவ்வன்புநெறியில் நின்று ஒழுகினர். புலவர் பெருமக்களும் தத்தம் நூல்களில் இந்நோக்கத்தின் மாட்சியையும் பயனையும் பல வழிகளில் எடுத்துக்காட்டியும், தம் வாழ்க்கையில் நடத்திக்காட்டியும் வந்தனர்.

மிகப்பழங் காலமாகிய தொல்காப்பியர் காலத்திலேயே சாதிப்பிரிவுகளின் குறிப்புக்களை நம் தமிழ்நாட்டில் காணினும் அக்காலந்தொட்டும் அதற்குப்பிறகு கடைச்சங்க நாட்களிலும் மிகவும் அதிகமாக இவ்வுடன்பிறப்புநோக்கம் தமிழ் மக்களின் இல்வாழ்க்கையிலும், சமுதாய வாழ்விலும், சமய வாழ்விலும் கையாளப்பட்டுவந்தது. சாதிக்கொள்கைகளைக் கண்டிக்கவல்ல பல சிறந்த புலவர்கள் அக்காலத்துத் தோன்றினர். தம்மைப்போன்று பிறரை நேசித்தல், அன்பு, விருந்தோம்பல், அருள் முதலிய விழுமிய கொள்கைகள் நின்று நிலவி மக்களிடையே ஒற்றுமையைப் பரப்பி வந்தன. பிறரிடத்தில் நம்பிக்கையும் பிறர் கருத்துக்களையும் எண்ணங்களையும் போற்றி அவற்றிற்கும் நன்மதிப்புக் கொடுத்தல், பிறர்மனம் புண்ணுறும்படி நடக்கக்கூடாதென நினைத்தல் முதலியனவும் மேற்கொள்ளப்பட்டதனால் ஆராய்ச்சி மேலோங்கிற்று. (தொடரும்)

ஆனைந்து

[திரு. துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் அவர்கள்]

(முன் ௩௩௬-ஆம் பக்கத்தொடர்ச்சி)

கோரோசனையானது வாசனைத்திரவியங்களோடு சேர்ந்து குங்குமக் குழம்புசெய்ய உதவியாகும். அதனைச் சிவபெருமானுக்கு முழுக்குக்குப்பின் சாத்திப் பின் பூக்களை அணிவார்கள். கோரோசனை பஞ்சகௌவியத்தில் சேராது. இது "கோதில் கோரோசனாதி குங்குமக் குழம்புங்கூட்டி" என்ற வாக்கால் அறியலாம்.

ஆகையால் இந்நூல் செய்தகாலத்திலேயே ஆரியர் கலப்பால் தமிழ்நான்மறைகளை ஆராயாது பஞ்சகௌவியம் இன்னதென அறியத் தடுமாற்றம் உண்டாயிற்று என்று தெரியக்கிடக்கிறது.

4. தமிழ் வேதங்களின்படி—ஆனைந்து

ஆன் ஐந்து சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. தமிழ் வேதங்களிலும், தமிழ் ஆகமங்களிலும் ஆனைந்தைப்பற்றியும் அவைகளைச் சிவபெருமானுக்கு ஆட்டும் முறையைப்பற்றியும் ஆட்டினார் பெறும் பயன்களைப்பற்றியும் பல இடங்களில் கூறப்பட்டிருக்கிறது.

ஆகமப் பிரகாரம் திருக்கோயில்களில் இலிங்கத்திற்கும் ஏனைய திருவுருவங்கட்கும் ஆட்டும் ஆனைந்து வேறு, ஸ்மிருதிகளிலும் பத்ததிகளிலும் கூறிய ஆனைந்து வேறு.

தமிழ் நான்மறைகளின் ஆதாரங்களைக் காட்டிப் பின் விவகரிப்பாம்:—

1. ஆடினாய் நறு நெய் யொடு பால் தயிர்

(சம்—கோயில்—1)

2. நூலால் நன்று நினைமின்கள் நோய்கெடப்
பாலாம் ஐந்துடனா டும் பரமனார்
காலால் ஊன்றுகந் தான்கடம் பந்துறை
மேலால் நாஞ்செய்த வல்வினை வீடுமே.

(அப்—குறு—9)

3. ஆக்கள் ஏறுவர் ஆனஞ்சாடுவர்

(அப்—குறு—3)

4. ஆனிடை ஐந்துகந் தாடினானை

(சம்—கலிக்காமூர்—5)

5. ஆமலி பாலும் நெய்யும் ஆட்டி
(அப்—நேரிசை—6)

6. பாலொடு நெய் தயிர் பலவுமாடுவர்
(சம்—வெண்காடு—3)

7. பாலை ஆடுவர் பன்மறை ஓதுவர்
(அப்—வெண்காடு—10)

8. வஞ்சங்கொண்டார் மனம் சேரகில்லார்
நறு நெய் தயிர் பால்
அஞ்சுங் கொண்டாடிய வேட்கையினர்
(சுந்—நின்றியூர்—5)

9. ஆவினில் ஐந்துகந்தானை
(அப்—கஞ்சனூர்—1)

10. பாலொடு நெய் தயிர் தேன் ஆடிகண்டாய்
(அப்—கொட்டையூர்—3)

11. ஆவினில் ஐந்து மமர்ந்தாய் நீயே
(அப்—ஐயாறு—8)

12. ஆனிடை ஐந்து மாடுவர்
(அப்—குறுநெய்த்தானம்—3)

13. பாலொடு நெய்யாடிய பால் வண்ணனே
(சம்—ஆனைக்கா—3)

14. பால் நெய் பயின்றாடு பராய்த்துறை
(சம்—பராய்த்துறை—4)

15. பாலு நெய்யும் தயிரும் பயின்றாடி
(சம்—சோற்றுத்துறை—2)

16. பானெயாடுவர் பாலைத்துறையாரே
(அப்—குறு—1)

17. செய்ய மேனியன் தேனொடு பால் தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மையலால் மறவா மனத்தார்க் கெலாம்
கையி லாமலகக்கனி யொக்குமே.
(அப்—குறு—நீலக்குடி—2)

18. தேனெய் பால் தயிர் ஆட்டுகந்தானே
(சுந்—ஆவடுதுறை—9)

(அச்சுப்பிரதிப்பாடம்)

19. பாலு நற்றயிர் நெய்யொடு பலபல வாட்டி

(ஏட்டுப்பிரதிப்பாடம்)

பாலு நற்றயிர் நெய் வெணெய் மோர் பல வாட்டி
(அப்—கடவூர்—வீரட்டம்—9)

20. பாலினொடுதயிர் நறுநெய் யாடினன் காண்
(அப்—வீழிமிழலை—2)

21. நெய்யினொடு பாலிளநீர் ஆடினன் காண்
(அப்—வீழிமிழலை—5)

22. ஆவிலைந் தமர்ந்தவன் (சம்—சிவபுரம்—7)

23. பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்றாட்டி
(சம்—செங்காட்டங்குடி—5)

24. ஆனஞ்சு மாடியை
(அப்—கீழ்த்தேவூர்—1)

(அச்சுப்பிரதிப்பாடம்)

25. பாலொடு நெய் தயிரும் பயின்றாடும் பரமேட்டி

(ஏட்டுப்பிரதிப்பாடம்)

பாலோடு நெய் தயிர் மோர் பயின்றாடும் பரமேட்டி
(சம்—ஆரூர்—2)

அச்சுப்பிரதி

26. பாலொடு நெய் தயிரும் பயின்றாடிய பண்டரங்கன்

(ஏட்டுப்பிரதி)

பாலோடு நெய் தயிர் மோர் பயின்றாடிய பண்டரங்
(சம்—வெண்டுறை—2) [கன்

27. மடப்பால் தயிரொடு நெய் மகிழ்ந்தாடு மறையோதி
(சுந்—நாட்டியத்தான் குடி—6)

28. நல் வெணெய் விழுது பெய்தாடுதிர் நாடொறும்
(சம்—திருநெல் வெணெய்—1)

29. பாலும் நறு நெய்யும் தயிரும் பயின்றாடி
(சம்—வடுகூர்—2)

30. பாலு ணெய் முதலாமிக்க பசுவிலைந் தாடுவோனே
(அப்—அண்ணாமலை—9)

31. பற்றி வாளர வாட்டும் பரிசரே
பாலு நெய்யுகந் தாடும் பரிசரே (சம்—கச்சி—4)

32. நெய்யும் பாலும் தயிருங்கொண்டு (சுந்—ஒணகாந்தன்றளி—1)

33. ஆவிலஞ்சுகந்தாடுமேவன் கழல் (அப்—குறு—1)

34. ஆவாகி ஆவினிலைந்துமாகி (அப்—தாண்டகம்—8)

மேலே காட்டிய மறைமொழிகளைக் கூர்ந்து நோக்குமிடத்து, பால், தயிர், நெய், மோர், வெணெய் இவ்வைந்துமே ஆனைந்து என்றும், ஆனைந்தில் சிவபெருமானுக்கு மிகுந்த வேட்கை என்றும், அப்பொருள்களை ஆட்டினர் பெறும் பயன் இன்னதென்றும் தெளிவாக அறியக்கிடக்கின்றது.

இன்னமும் கோசலம், கோமயத்தைப் பற்றி ஒரு வரி யாவது காணோம் என்றும் அறியக்கிடக்கின்றது.

ஒரு சமயம் இறந்துபட்ட தேவாரங்களில் இருக்குமோ என நினைப்பதற்கும் இடமில்லை. ஏனென்றால் வெண்ணெயையும், மோரையும் கூறிவிட்டபடியால் கோசலம், கோமயம் ஆனைந்தில் சேர்க்கப்படவில்லை எனக் கண்டிப்பாய்க் கூறலாம்.

தமிழ் மறைகளில் பாலைத்தான் பெரும்பாலும் முதலில் கூறப்பட்டிருக்கிறது. சிறுபான்மை நெய்யை முதலில் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் இரு முறைகளே கூறப்பட்டிருக்கிறதே யொழிய பத்ததிகள் கூறும் வண்ணம் மூன்று விதங்கள் கூறப்படவில்லை.

ஆனைந்துடன் துணைப் பொருள்களாக இளநீர், பழம், தேன், இவைகள் கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால் சிவபெருமானுடைய முழுக்குக்கு ஆனைந்தே சிறந்ததென்றும் மற்றப் பொருள்கள் எல்லாம் இரண்டாம் பட்சம் என்றும் அறிகிறோம்.

5-ம் இயல்

மருத்துவ நூலின்படி-ஆனைந்தின் குணம்

பால்

பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணுளி
சூலையர் மேகத்தோர் துற்பலத்தோர்—ஏனு மிவர்
எல்லார்க்கும் ஆகும் இளைத்தவர்க்கும் சாதகமாம்
நல்லாய் பசுவின் பால் காட்டு.

தயிர்

பசுவின் தயிரால் பசிமிக வுண்டாம்
இசிவுறும் அசிரணநோ யேகும்—பசையகன்ற

தாக மிளைப்பு இருமல்தாங் கொணு மெய்யெரியும்
ஏகு மூலகில் இயம்பு.

மோர்

வீக்க மகோதரம் உள்வீறு குன்மம் பாண்டு பித்தம்
தாக்கு மருந்திட்டு அதிசாரமொடு—கூக்குரலே
மாறாத் திரிதோடம் மந்தம்அனற் றூகம்போம்
வீறுவின் மோருக்கு மெய்.

வெண்ணெய்

கண்ணிலெழு நோயும் கண்ணெரிவும் பீளையும் போம்
எண்ணும் பசியும் எழும்புங்காண்—கண்ணரிய
ஆவினறும் வெண்ணெய்க்கு அகலும் வண்மேகமெலாம்
பூவினரர்க் கெல்லாம் புகல்.

நெய்

தாகமுழலை சுட்கம் சர்த்தி பித்தம் வாயுபிர
மேகம் வயிற்றெரியும் விக்கலழல்—மாகாசம்
குன்மம் வறட்சி குடற் புரண்டல் அஸ்தி சுட்கம்
சொன்மூலம் போக்குகிரைத் துப்பு.

மருத்துவ நூலின்படி மேலே காட்டிய ஆனைந்துக்கும் பல வியாதிகளைப் போக்கக்கூடிய வல்லமையுண்டு என்பதை அறியலாம்.

அதனாலேதான், இவ்வைந்து பொருள்களையும் அடிக்கடி உபயோகப் படுத்தும்படி ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

இவ்வைந்து பொருள்களையும் ஒவ்வொருவரும் தனித் தனியாக நாள்தோறும் தமிழ்நாட்டில் உபயோகிக்கிறார்கள். ஆனால் தனித்தனியாக அருந்துவதிலும் ஐந்தையும் கூட்டி அருந்துவதோ முழுகுவதோதான் சிறந்தது; ஏனென்றால்,

> "வஞ்சங் கொண்டார் மனம் சேரகிலார்
> அஞ்சுங் கொண்டாடிய வேட்கையினார்"

என்ற சுந்தரர் வாக்கினால் சிவபெருமானுக்கு அஞ்சும்சேர்ந்ததுதான் பிரியம் என்று தெரிகிறது. தனித்தனி ஆடுவதில் சிவபெருமானுக்குப் பிரியம் அதிகம் இல்லை. அஞ்சும் சேர்த்தே முழுகுவதில் பிரியம். அதனாலேதான் "ஆனைந்து" என்று பேராயிற்று. தனித்தனியாக அப்பொருள்கள் இருந்தால் "ஆனைந்து" என்று சொல்லமுடியாது. ஆகையால் கோயில்களில் இவ்வைந்து பொருள்களையும் சேர்த்தே முழுக்காட்ட வேண்டும். அப்படி அந்த ஐந்து பொருள்களும் ஒன்றோ

டொன்று சேர்வதால் ஒருவித சேர்க்கைச் சக்தி (chemical action) உண்டாகிறது. அந்த சத்தியானது சகல வியாதிகளை யும் போக்கி தேகத்தைத் திடப்படுத்தி ஆயுளை நீட்டிக்கச் செய்கிறது. இந்த சத்தியோடு செய்பவனுடைய மனோசத் தியும் கூடுகிறது.

ஆயுளை நீட்டிக்கச் செய்வதில் மோர் மிகவும் சிறந்தது. உரோமனியா தேசத்தார் மோரையே அதிகமாக உபயோகப் படுத்துவதால் அதிக நாள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது சரித்திரம்.

வெண்ணெயினால் கண்வியாதிகளும் மேகவியாதிகளும் நீங்குகிறது.

சிறந்த பொருள்களாகிய இவ்விரண்டையும் விட்டுவிட்டு கோசலத்தையும் கோமயத்தையும் சேர்ப்பது,

"காய்ச்ச பலாவின் கனி அருந்த மாட்டாமல்
ஈச்சம் பழத்திற் கெய்த்தலைந்த வாறொக்கும்."

ஆவினது சாணத்தாலும் கோசலத்தாலும் சில வியாதி கள் நீங்குகின்றனவே என்றால் மனித மூத்திரம், கழுதை விட்டை, நாய்விட்டை, எருமைச் சாணி, முதலியவைகளும் கூட சில வியாதிகளைக் கண்டிக்கிறது. ஆகையால் அவைகளை யும் கூட்டிக்கொள்ளலாமே!

கோசலமும் கோமயமும் ஆவினுடைய கழிவாயில்களின் வழியாய் வந்த இழிபொருள்கள். அவைகள் உயர்ந்த பொருள் கள் ஆகா.

அமிர்தமயமான பாலினிடத்து இருந்து உண்டாகும் பொருள்களுக்கு அவை சமானமாகா. ஆகையால் அது கடா வன்றென மறுக்க.

சாணம்

ஆவினது சாணம் அடிபடு வீக்கம் உதிரம்
தாவிவரு கிருமி சார்ந்த கபம்—மேவுசுரம்
தங்கும் தாகம் போக்கும் சாற்றின் மெய்ச்சுத்தி அப்பால்
தெங்கின்பாலுக் குவக்கும் செப்பு.

கோமூத்ரம்

விடபாண்டு சோபை வீக்கம் சகல
விடமுதிர மாலௌன மெத்தப்—புடவிதனில்
பேசலக்க ணோடுதேர்த்தப் பீடையு மகன்றிடுமே
கோசலத்தால் ஆரணங்கே கூறு.

மனித மூத்ரம்

காணுக் கடிபோம் கதித்தெழுந்த வீக்கமது
காணுத காயசித்தி கைக்குணம்—பூணே
பதித்தசெங்கை மாதே பகர்மாந்த ருக்குள்
உதித்தசிறு நீருக்கென் ஞேது.

ஆப்பியும் ஆமூத்திரமும் போக்கக்கூடிய வியாதிகளை பால், தயிர், நெய், மோர், வெண்ணெய் முதலிய பதார்த் தங்களே போக்கக்கூடியதாயிருக்க இவ்விழிந்த பொருள் களைக் கொள்வானேன்?

கோசலம், கோமயம் சேருவதால் பால், தயிர், நெய்யின் குணங்களும் மாறுபடுமே அல்லாமல் குணத்தைச்செய்யாது. இயற்கையாகவே கழிக்கப்பட்ட பொருளை கழிக்கப்படாத அமிழ்தமயமான பொருளோடு சேர்த்தால் எல்லாம் கெட்டு விடும் என்பது சொல்லாமலே அமையும்.

6-ம் இயல்

ஆனைந்தின் பதப்பொருள்

"ஆன் ஐந்து" என்பது தென்தமிழ். இரண்டு பதங் களால் அமைந்த ஒரு தொடர்மொழி.

"பஞ்சகௌவியம்" என்பது வடதமிழ். பசுவினிடத் திலிருந்து உண்டாகும் ஐந்து பொருள்கள் என்று அவர்கள் பொருள் கொள்ளுகிறுர்கள்.

இந்தப்பொருளைக் கவனித்தால் "ஆன்ஐந்து" என்பது முதல் பதம் என்றும் "பஞ்ச கௌவியம்" என்பது மொழி பெயர்ப்பு மொழி என்றும் கருத இடம் இருக்கிறது. தமிழ் நன்ருய் அறியாத ஆரியன் ஒருவன் "ஆனைந்து" என்பதை "பஞ்சகௌவியம்" என மொழிபெயர்த்துவிட்டான்:

ஏனென்ருல் கூறுதும்;

"ஆனைந்து" என்பதற்கு "ஆவினிடத்திலிருந்து உண் டாகும் ஐந்து பொருள்கள்" என்பதுதான் வெளிப்படை யான பொருள். அதுதான் அவ்வாரியனுக்கும் பட்டது. அத ஞல் அவன் அப்படியே மொழிபெயர்த்துவிட்டான். ஆனல்,

"பாலாம் ஐந்துடனும் பரமனுர்" "ஆனிடை ஐந்து"
"ஆனைந்து" "ஆனைஞ்சு"
"ஆவினில் ஐந்து" "ஆவிலைந்து"

"ஆவாகி ஆவினிலைந்துமாகி"

என்ற பெரியார் வாக்கியங்களை எண்ணிப்பார்க்குமிடத்து "ஆனைந்து" என்னும் பதத்திலுள்ள "ஆன்" என்பதை ஆகுபெயராகக் கொள்ளவேண்டியிருக்கிறது. அப்படிக் கொண்டால்,

ஆன்=பால் என்றும் பொருளாகும் இடர்ப்பாடுகள் எல்லாம் ஒழியும். இந்தப் பொருள் அவ்வாசிரியனுக்குப் படவில்லை. ஆகையால் "ஆனைந்து" என்பதற்கு ஆவினிடத்திலிருந்து உண்டாகும் ஐந்து பொருள்கள் என்று பொருள் கொள்ளாமல் "பாலாம் ஐந்து" என்று பொருள் கொள்ளவேண்டும்.

"பாலாம் ஐந்து" என்றால் "பால்+ஆம்+ஐந்து" "பாலே ஐந்தாகஆகின்ற" என்று பொருள். பாலினுடைய திரிபேதான் மற்றைய நான்கு பொருள்களும் ஆகையால் அவைகளுடன் பாலையும் சேர்த்தால் ஐந்து பொருள்களாகின்றன.

"பால்+ஆன் ஐந்துடனுடும்" என்றும் பாடம். இது ஏட்டுப்பிரதியில் உள்ளது. "பாலாம் ஐந்து" என்பதே இது அச்சுப் பிரதி.

இதனாற்றான் திருஞான சம்பந்தரும் "பாலாம் ஐந்துடனுடும் பரமன்" என்றார்.

அப்பரும் "பாலுள் நெய் முதலா மிக்க பசுவில் ஐந்து ஆடுவானே" என்றார்.

ஆனைந்து என்பதற்கு ஆவினிடத்திலிருந்து உண்டாகும் ஐந்து பொருள்கள் என்று பொருள்கொள்ள இடம் இல்லை என்பது கீழ்க்காணும் காரணங்களால் வெளியாம் :—

I. ஆவினிடத்தில் ஐந்து பொருள்கள் உண்டாகவேண்டும். அப்படி இல்லை. மூன்று பொருள்களே உண்டாகக் காண்கிறோம். அவையாவன :—பால், கோசலம், கோமயம்.

ஒருகால் கோரோசனையைச் சேர்த்தாலும் நான்கே பொருள்கள் ஆகின்றன. அப்பொழுதும் ஐந்து பொருள்களைக் காணோம்.

II. தயிர், நெய் இரண்டும் கூட்ட ஐந்து பொருள்கள் என்றால், தயிர் நெய் இரண்டும் பாலின் திரிபு. தனித்து உண்டான பொருள்கள் அல்ல. இவ்விரண்டு திரிபுகளையும் எடுத்துக் கொண்டால் மற்ற இரண்டு திரிபுகளாய மோர் வெண்ணெயை என் விட்டுவிடவேண்டும்? (தொடரும்)

வரலாற்றுப் பகுதி: History & Biography

தாமஸ் ஆல்வா எடிசன் (Thomas Alva Edison)

[திரு. N. குழந்தைவேலன் அவர்கள் B. A.,]

தாமஸ் ஆல்வா எடிசன் என்னும் மின்சாரப் பேரறிஞர் 1847-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11-ஆம் நாள் அமெரிக்காவில் மிலான் (Milan) நகரில் பிறந்தார். இவர் மின்சார ஆற்றலின் உதவியால் பலதிறப்பட்ட வியத்தகு செயல்களை நிகழ்த்திக்காட்டினார் ஆகலின் இவரை "மந்திரவாதி" (Wizard) என்று அழைப்பதுண்டு. இவர் பல்வேறு புதிய கருவிகளைக் கண்டுபிடித்தார். இவற்றுள் "கிராமபோன்" என்னும் இசைக்கருவியும், "சினிமா" என்னும் அசைவுப் படமும் தலைசிறந்து விளங்குகின்றன.

எடிசனது அறிவு நுட்பம் இவரது இளமைப்பருவத்தின் விளையாட்டிலேயே நன்கு விளங்கிற்று. ஒரு நாள் இவர் தமது வீட்டிலுள்ள வாத்து அடைகாத்துக் குஞ்சுபொரித்தலைக் கண்டு வியந்து தாமும் ஏன் அதைப்போன்று செய்யக்கூடாதென எண்ணலாயினர். அங்ஙனமே எடிசன் சில முட்டைகளை அடுக்கிவைத்து அவற்றின்மேல் படுத்து அடைகாக்கத்தொடங்கினர். இவர்தம் அன்னையார் தம் மகனைப் பலவிடங்களிலும் தேடியலைந்து முடிவில் அவர் வாத்துக் கூண்டில் படுத்திருப்பதைக்கண்டு அக்கூட்டைக் கலைத்து எடிசனை அழைத்துச் சென்றனர்.

இவர்தந் தந்தையார் சாமுவேல் (Samuel) எடிசன் என்பார் விவசாயப்பொருள்கள் முதலியன விற்று அதனால் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு மிகவும் எளிய வாழ்க்கை நடத்திவந்தார். எடிசனது அன்னையாரான நான்ஸி எலியட் (Nancy Elliot) என்பவர் எடிசனுக்கு வீட்டிலேயே கல்விகற்பித்து வந்தார். எடிசன் ஒவ்வொரு புத்தகமும் படித்து முடித்தவுடன் தந்தையார் மகனுக்குத் தக்க பரிசு கொடுத்துக் கல்வியில் ஊக்கமுண்டாகும்படி செய்துவந்தார். இவருக்கு ஏழு ஆண்டுகள் நிறைவதன்முன் இவர்தம் தந்தையார் மிக்க வறுமையுற்றுக் குடும்பத்துடன் மிலானிலிருந்து உரான் (Huron) என்னுமிடத்திற்குச் சென்றார். இவரது பெற்றோர்கள் செல்வமின்றி வருந்தினர். ஆகலின் இவர் இளமையிலேயே பொருள்தேட நேர்ந்தது. இவர் முதன்

முதலில் புகைவண்டித் தொடரில் புதினத்தாள்கள் விற்கும் தொழிலில் அமர்ந்தார். இவர் பழைய அச்சுப்பொறி ஒன்றை விலைக்குவாங்கி புகைவண்டியின் ஒரு மூலையில் வைத்து "பெருவழித் தூதுவன்" (Grand Trunk Herald) என்னும் புதினத்தாளைப் பதிப்பித்து நடத்தி வந்தார்.

இவருக்கு மின்சார ஆராய்ச்சியில் மிகுந்த ஆர்வம் இருந்தது. ஆதலால் இவர் தமது ஓய்வுநேரங்களை அவ்வாராய்ச்சியிலேயே கழித்துவந்தார். இவர் தொகுத்து வைத்திருந்த பொருள்முழுவதையும் ஆராய்ச்சிக்கு வேண்டியவற்றை வாங்குவதிலேயே செலவழித்தார். இவர் பகற்காலங்களில் புதினத்தாள் விற்கும்பொழுது புகைவண்டி நிலையங்களிலுள்ள தந்தி அறைகளுக்குச் சென்று ஆங்குள்ளவர்களிடம் தந்தி அனுப்பும் முறைகளைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்வார். மவுண்ட் கிளெமென்ஸ் (Mount Clemens) என்னும் நிலையத்தில் வண்டி அரைமணி நேரம் நிற்பது வழக்கம். இந்த ஓய்வு நேரத்தை எடிசன் தந்திக் கருவிகளை ஆராய்வதிலேயே கழிப்பார். ஒருநாள் அந்நிலையத் தலைவரான மெக்கென்ஸி (Mackenzie) என்பவரது குழந்தை புகைவண்டிப் பாதைக்குள் இறங்கித் தண்டவாளங்களைத் தாண்டிச்செல்ல முயன்றது. அவ்வேளையில் திடீரென்று ஒரு சுமைவண்டி அப்பாதை வழியாக வந்தது. இதை எடிசன் கண்டதும் தமது உயிரையும் பெரிதென்று எண்ணாமல் கையிலிருந்த புதினத்தாள்களைக் கீழே எறிந்துவிட்டுக் குழந்தை இருக்குமிடத்திற்கு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தார். பாய்ந்த இவர் குழந்தையைத் தூக்கிக்கொண்டு பாதைக்கு வெளியில் குதித்தார். அதற்குள் சுமைவண்டி மிகவும் அருகில் வந்து எடிசனுடைய மிதியடிகளைப் பிய்த்துக்கொண்டு போய் விட்டது. ஆயினும் குழந்தையின் உயிர் காப்பாற்றப் பட்டது. இதற்குக் கைமாறாக அக்குழந்தையின் தந்தையார் எடிசனுக்குத் தந்திமுறைகளை நன்கு கற்றுக்கொடுத்தார்.

இவர் அல்லும் பகலும் ஓயாது மின்சார ஆராய்ச்சி செய்துவந்தார். ஒருநாள் பாரடே (Faraday) என்னும் மின்சார வல்லுநர் இயற்றிய பழைய நூல்கள் இவருக்குக் குறைந்த விலையில் கிடைத்தன. எடிசன் அவற்றை மிகுந்த ஆவலுடன் வாங்கிச்சென்று அன்று இரவு சிறிதும் உறங்காமல் படித்துக்கொண்டிருந்தார். இவர் தந்திக்கருவியைக் குறைந்த செலவில் மிகச்சிறந்த முறையில் அமைக்க வேண்டுமென முயற்சிசெய்துவந்தார். ஒருநாள் வழக்கம்போல் இவர் புகைவண்டியின் ஒரு மூலையில் ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கையில் வண்டியின் அதிர்ச்சியால் கண்ணாடிப்

பாத்திரத்திலிருந்த தீப்பாஷாணம் (Phosphorus) கீழே கொட்டிப்போய் வண்டியில் தீப்பிடித்துக்கொண்டது. எடிசன் சிறிதும் தாமதமின்றி அத்தீயை அணைத்துவிட்டார். ஆயினும் புகைவண்டிக் காவலன் (Guard) சீற்றங்கொண்டு எடிசனைச் செவியில் அறைந்து வெளியில் துரத்திவிட்டான். இதனால் எடிசனது செவிகளில் ஒன்று செவிடுபட்டது. அந்தோ! என்ன கொடுமை! எடிசன் மனமுடைந்து வீடு திரும்பினார். இவர்தம் அன்னையார் மகனைத்தேற்றி வீட்டிலேயே ஆய்வுகள் நடத்திக்கொள்ள இடங்கொடுத்தார்.

சின்னாட்கழித்து இவரது நண்பரான மெக்கன்ஸியின் உதவியால் புகைவண்டிப் பாதையில் இரவில் தந்தியடிக்கும் வேலை இவருக்குக் கிடைத்தது. இவர் பல்வேறு இடங்களில் தந்திவேலைபார்த்து வந்தார். இவர் இத்தொழிலில் இணையற்றவராக விளங்கினதால் இவரது சம்பளம் 25 டாலரிலிருந்து நூற்றைம்பது டாலர்வரை உயர்ந்தது. ஆயினும் தந்திவேலைக்காரர் பலர் பொறாமையினால் இவருக்குக் கேடு சூழ்வாராயினர். எடிசன் சிறிதும் ஊக்கம் குன்றாது தமது முயற்சியிலேயே கண்ணாயிருந்தார். இவர் பாஸ்டன் (Boston) நகரத் தந்திச் சாலையில் இருக்கும்பொழுது ஓட்டுகள் பதிவுசெய்யும் மின்சாரக்கருவி ஒன்று செய்தார். இதனால் எடிசனது புகழ் பாஸ்டன் நகரெங்கும் பரவிற்று. இதற்குப் பின் எடிசன் ஒரே தந்திப்பாதையில் ஒருசெய்தி போய்க் கொண்டிருக்கும்போது அதற்கு எதிராக மற்றொரு செய்தியை அனுப்பும் வழி கண்டுபிடித்தார். இதுவுமன்றி ஒற்றைக்கம்பியில் சேர்ந்தாற்போல எதிரெதிராக நான்கு செய்திகளை அனுப்பும் முறையும் இவரால் கண்டுபிடிக்கப் பட்டது. இதனால் தந்திச் செலவு சுருங்கினதுமன்றி மிகுந்த செய்திகள் காலத்தாழ்வுமின்றி அனுப்பவும் ஏதுவாயிற்று.

எடிசன் இம்முறைப்படி நியூயார்க் (New York) நகருக்குச் செய்தியை அனுப்பினார். அங்குள்ளவர்கள் இம்முறையை உணரமுடியாது போகவே இவர் நியூயார்க்கிற்குத் தாமே செல்லநேர்ந்தது. எடிசன் ஆங்கு வேலையகப்படாது ஏங்கி வருந்திநின்றனர். அக்காலத்தில் ஒரு பொன்கடையிலுள்ள மின்சாரப்பொறிகள் ஓடாது நின்றுபோயின. எடிசன் அவற்றை நுட்பமாக ஆராய்ந்து அவை முன்போல் இயங்கும்படி செய்தார். அந்நிலையத்தலைவர் அகமகிழ்ந்து எடிசனைத் தமது மின்சாரப்பொறிகளின் மேற்பார்வையாளராக அமைத்துக்கொண்டார். இவ்வேலையில் எடிசனுக்கு மாதம் 300 டாலர் சம்பளம் கிடைத்தது. சின்னாட்கழித்து

இவர் அந்நகரத் தந்திச் சாலையில் வேலைக்கு அமர்ந்தார். அங்கு இவரது அரிய ஆராய்ச்சிகளின் பயனாய் விலைகளை அச்சடிக்கும் கருவிகள் இவரால் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கருவிகளின் அருமையை உணர்ந்த முதலாளிகள் அவற்றைத் தமக்கே உரிமையாக்கிக்கொள்ள எண்ணினர். அவர்கள் அவ்வுரிமையைப் பெற எடிசனுக்கு நாற்பது ஆயிரம் டாலர் கொடுத்தனர்.

எடிசன் இத்தொகையிற் பெரும்பகுதியைச் செலவழித்து ஒரு தொழிற்சாலையைக் கட்டினார். இவரது தொழில் நாளடைவில் விரிவுற்றதால் 1873-ஆம் ஆண்டில் நீவார்க் (Newark) என்னுமிடத்தில் மற்றொரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தினார். ஒரு முறை எடிசன் விற்பனைக்காகச் செய்த புதிய தந்திக்கருவிகள் சரிவர வேலை செய்யவில்லை. இவர் தமது உதவியாளர்களையும் உறங்கவிடாது இடைவிடாமல் அறுபதுமணி நேரம் வருந்தியுழைத்து அக்கருவிகளின் குறைகளை நீக்கினரென்றும், இவ்அரிய முயற்சி கைகூடினவுடன் இவர் தொடர்ச்சியாக முப்பத்தாறு மணி நேரம் உறங்கினாரென்றும் கூறப்படுகின்றது.

இவரது தொழிற்சாலையில் மேரி ஸ்டில்வெல் (Mary Stillwell) என்பவர் வேலைபார்த்து வந்தார். இவரை எடிசன் காதலித்து 1873-ஆம் ஆண்டில் மணஞ்செய்துகொண்டார். இவருக்கு மேரியன் (Marion), ஆல்வா (Alva), லெஸ்லீ (Leslie) என்னும் மூன்று குழந்தைகள் இருந்தன. இவர் முதல் இரண்டு குழந்தைகளையும் முறையே புள்ளி (Dot) வரி (Dash) என்று தந்திக்குறிகளின் பெயரிட்டு அழைப்பது வழக்கம். இவர் தமது அன்புமிக்க மனைவியை 1881-ஆம் ஆண்டில் இழக்கும்படி நேரிட்டது. எனவே இவர் இரண்டாம் முறை மணஞ்செய்துகொண்டார். இவருக்கு இரண்டாவது மனைவியாரிடம் மேடிலீன் (Madeline) சார்ல்ஸ் (Charles) என்னும் இரு பிள்ளைகள் தோன்றினர்.

நீவார்க்தொழிற்சாலையில் இவரது வேலைகளுக்கு இடம் போதவில்லை, ஆகையால் இவர் மென்லோ பார்க் (Menlo Park) என்னுமிடத்தில் மிகப்பெரிய தொழிற்சாலையொன்று நிறுவினார். இங்கு எடிசன் பல்வேறு புதிய கருவிகளை இயற்றினார். பெல் (Bell) என்னும் ஆசிரியர் கண்டுபிடித்த டெலிபோன் (Telephone) என்னும் பேச்சுத் தந்தியினால் நெடுந்தொலைவிலுள்ள இடங்களுக்குப் பேச்சுகளைச் செலுத்த இயலாதிருந்தது. எடிசன் பலதிறப்பட்ட நுட்பமான ஆய்வுகள் நடத்தி இறுதியில் வன்மைமிக்க பேச்சுச் செலுத்தி

ஒன்று செய்துமுடித்தார். இதன் உதவியால் எவ்வளவு தொலைவானாலும் பேசும் ஓசை சிறிதும் வலிகுன்றாது போய்ச் சேர்ந்தது. இதன்பின் எடிசன் மிக நுண்ணிய வெப்பத்தையும் அளந்து காட்டும் கருவிகளையும், நுகர்தற்கரிய மணங்களின் தன்மைகளையும் அளக்கக்கூடிய கருவிகளையும், மைக்ரபோன் (Microphone) என்னும் ஒலிபெருக்கித் தந்தியையும் கண்டுபிடித்தார்.

எடிசன் நிகழ்த்திய வியத்தகு புதுப்புனைவுகளுக்கு ஓர் அளவில்லை. இவர் 1877-ஆம் ஆண்டில் கிராமபோன் (Gramaphone) என்னும் இசைக்கருவியைக் கண்டுபிடித்தார். இதன் உதவியால் மக்களின் பாடல்களையும் பேச்சுகளையும் பதிவு செய்து மீண்டும் வேண்டும்போது அவை வெளியிடப்படுகின்றன. எடிசன் ஒரு நாள் தந்திக்கருவிகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இயல்பாகப் பாடிக்கொண்டிருந்தார். அப் பாடலின் ஓசை தற்செயலாய் மின்சார ஒலிபரப்பியின் மேல் பட்டதால் அதன்மேல் மூடியிருந்த தாள் அசைவுற்று அதிலிருந்த ஊசி எடிசனது விரலிற் தைத்தது. 'ஒலியினால் ஊசியை அசைக்கக்கூடுமெனில் அவ் அசைவுகளை ஏன் ஒரு தட்டின்மேல் பதிந்துகொள்ளக்கூடாது' என இவர் எண்ணினார்; அங்ஙனம் பதிவான கோடுகள் மீண்டும் முன்போல் அவ் ஒலியைக்கொடுக்கக்கூடும் என இவருக்குத்தோன்றிற்று. எடிசன் இந்நுட்பத்தை ஆதரவாகக்கொண்டு வேலைசெய்யத் தொடங்கினார். இவர் முதலில் தகரத்தட்டிலும் பின்னர் மெழுகுத்தட்டிலும் ஓசையைப் பதிவுசெய்தார். இவர் நாளொன்றுக்கு இருபது மணிக்குமேல் உழைத்து ஆறுமாதங்களுக்குப் பின் வெற்றியடைந்தார். 1878-ஆம் ஆண்டில் பிரான்ஸ் (France) தேயத்தில் நடந்த பொருட்காட்சியில் கிராமபோனைக் காண மக்கள் திரள்திரளாக வந்தனர். அங்கு வந்திருந்த பெரியோர் பலர் தங்கள் பேச்சுகளையும் பதிவு செய்துகொண்டனர். எடிசனுக்கு இக்கருவியால் திரண்ட பொருள் கிடைத்தது. எடிசன் இக்கருவியை முதன் முதலாக இயற்றியபொழுது மக்கள் பலர் அதை ஓர் ஏமாற்றமெனக் கருதினர். ஓசைகள் அக்கருவியிலிருந்து உண்மையில் தோன்றவில்லையென்றும் எவனோ ஒருவன் மறைந்திருந்து குரலைப் பலவாறு மாற்றிப்பேசுகின்றான் என்றும் கூறினர்.

எடிசன் மின்சார இருப்புப்பாதை உண்டாக்கும் நோக்கத்துடன் நெடுநாட்களாக ஆய்வுகள் நடத்திவந்தார். இவர் தமது தொழிற்சாலையிலேயே மின்சார ஆற்றலை உண்டுபண்ணி இருப்புப்பாதையில் பாயும்படி செய்தார். இம்மின்சார

ஆற்றல் தண்டவாளத்தின்மேல் நிற்கும் வண்டி உருளையின் வழியாக உட்புகுந்து வண்டியை ஓட்டும் கருவியை இயங்கும்படி செய்தது. இவர் சில முதலாளிகளின் உதவிகொண்டு மின்சார இருப்புப்பாதைச் சங்கம் ஒன்று ஏற்படுத்தினர். இம்மின்சார வண்டி சிக்காகோ (Chicago) ஊவியில் முதலிய நகரங்களின் பொருட்காட்சி சாலைகளில் காட்டப்பட்ட போது யாவராலும் கொண்டாடப்பட்டது.

சர் ஹம்ப்ரி டேவி (Sir Humphry Davy) என்னும் புலவரால் மின்சார விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது. இவ் விளக்கில் தோன்றும் வெளிச்சம் சிறிது நேரமே நிற்கவல்லதாக இருந்தது. இவ்விளக்கு அவியாமல் நீண்ட நேரம் எரியும்படி நல்லமுறையில் அமைக்கவேண்டுமென எடிசன் முயன்றுவந்தார். இவர் நெடுநாட்களாக ஊணுறக்கமின்றி வருந்தியுழைத்து இறுதியில் ஒரு விளக்கைச் செய்துமுடித்தார். இவரது உதவியாளர்களும் அவ்விளக்கைச் செய்து முடிக்காது உறங்குவதில்லையென உறுதிசெய்துகொண்டிருந்தனர். ஆயினும் அவர்கள் அனைவரும் சில நாட்களில் தம் மன உறுதியை இழந்து தம்மால் உறக்கம் விழிக்க முடியாதெனக் கூறிவிட்டனர். எடிசன் சிறிதும் ஊக்கம் குன்றாமல் இருபத்தொரு நாட்கள்வரை கண் துஞ்சாது வேலைசெய்து முடிவில் அவ்விளக்கை எரியும்படி செய்தார். இவர்தம் உளத்திட்பத்தை என்னென்று கூறுதும்! எடிசனுடைய மின்சார விளக்குகள் உலகு எங்கும் பரவின. இதனால் எடிசனுக்குப் பொருள் ஏராளமாய் வந்து குவிந்தது. பொறாமையினாலும்பேராசையாலும் சிலர் எடிசன் அடைந்த ஊதியத்தில் தங்களுக்கும் பங்கு வேண்டுமென வழக்குத் தொடர்ந்தனர். ஆயினும் எடிசனே இறுதியில் வெற்றியடைந்தார்.

இதற்குப்பின் எடிசன் டைனமோ (Dynamo) என்னும் மின்சார உற்பத்திப் பொறியைக்கண்டுபிடித்தார். ஒரு நாள் இப்பொறியின் ஆற்றலை மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன் இவர் மிக விரைவாக இயங்கும்படி செய்தார். அதிலிருந்த நீராவிக் குழாய் இடிபோன்ற ஓசையுடன் வெடித்தது. நல்வினைப்பயனால் ஒருவருக்கும் தீங்கு நேரிடவில்லை. ஆயினும் இவரது உதவியாளர்கள் நடுநடுங்கி ஓட்டமெடுத்தனர். எடிசனது ஆராய்ச்சிகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போனதால் மென்லோ பார்க்கில் அமைக்கப்பெற்ற நிலயங்களும் போதாமற்போயின. இதனால் எடிசன் 1886-ஆம் ஆண்டில் ஆரஞ்சி மலையின் அடிவாரத்தில் புதிய நிலையம் ஒன்று ஏற்படுத்தினர்.

எடிசன் அசைவுகளையும் ஒசைகளையும் அங்ஙனமே படம் பிடித்துக் காட்டவேண்டுமென்று 1887-ஆம் ஆண்டிலிருந்து முயற்சிசெய்துவந்தார். சற்றேறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குப்பின் இவரது எண்ணம் நிறைவேறிற்று. இம்முறைப்படி நகர்ந்து செல்லும் மக்களின் பல்வேறு நிலைகளை ஒரு விநாடிக்கு நாற்பத்தாறு வீதம் புகைப் படங்கள் பிடிக்கப்படுகின்றன. இப்படச் சுருணைகளை விரைவாகச் சுழற்றி அவற்றின் நிழல் ஒரு திரையின்மேல் படும்படி செய்தால் மக்களும் ஏனைய பொருள்களும் அசைந்து ஆடுவதுபோல் கண்ணுக்குப் புலனாகின்றது. சினிமா (Cinema) என்னும் இப்படக்காட்சி மக்களுக்குச் சிறந்த வேடிக்கையாகவும் பாடங் கற்பிக்கும் வழியாகவும் அமைந்திருக்கின்றது. இங்ஙனம் அசைவுப்படங்கள் உண்டாக்கியபின் இயக்கத்துடன் ஓசையும் சேர்க்கப் பட்டது.

இவையுமன்றி மண்ணிலும் கல்லிலும் கலந்திருக்கும் இரும்பைக் குறைந்தசெலவில் பிரித்தெடுப்பதற்கு எடிசன் ஒரு வழி கண்டுபிடித்தார். ஆக்டென் (Ogden) என்னும் இடத்தில் 1895-ஆம் ஆண்டில் இவர் முதன்முதலாக இவ் வேலையைத் தொடங்கினார். பெரிய பாறைத்துண்டுகளை உருளைகளின் உதவியால் உடைத்துத் தூளாக்கி ஆற்றல் நிறைந்த காந்தங்களால் இரும்புத்தூள் மண்ணிலிருந்து வேறாகப்பிரித்தெடுக்கப்பட்டது. அங்கு கட்டிடங்கள் மின்சார ஆற்றலின் உதவிகொண்டு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நகர்ந்து செல்லும்படி அமைக்கப்பட்டிருந்தன.

எடிசன் விடுமுறை நாட்களில் வசிப்பதற்கென கென்மாண்ட் (Genmont) என்னுமிடத்தில் ஓர் அழகிய மாளிகை கட்டியிருந்தார். இம்மாளிகையில் இவர் தமது இரண்டாவது மனைவியுடனும் மக்களுடனும் இன்புற்று வாழ்ந்துவந்தார். இவருக்கு ரஷ்யா (Russia) ஜப்பான் (Japan) முதலிய நாடுகளிலிருந்து பல பரிசுகள் கிடைத்தன. மெல்போர்ன் (Melbourne) மிலான், (Milan) பாரிஸ் (Paris) முதலிய இடங்களில் நடைபெற்ற பொருட்காட்சிகளில் எடிசனுக்குப் பல பரிசுகள் வழங்கப்பெற்றன.

எடிசன் எல்லாம்வல்ல இறைவனிடத்து மாறாத அன்பு பூண்டிருந்தார். "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது இவரது முழு நம்பிக்கையாகும். இவர் ஏழை மாணவர்களுக்குக் கல்விகற்பிக்கும் பொருட்டுத் தமது பெயரால் ஒரு நிதி ஏற்படுத்தினார். அமெரிக்காவில் இந்நிதியிலிருந்து உதவி பெற்றுப் பல இளைஞர்கள் கல்விபயின்று வருகின்றனர். எடி

சன் ஒரு காரியத்தைத் தொடங்கினால் அது முடிவுபெறும் வரை அவர் மனம் ஓய்வதில்லை. இவர் இடைவிடாது ஆய்வுகள் நடத்திக் களைத்துப்போன போதெல்லாம் இசைபாடுவதில் தமது கருத்தைச் செலுத்துவார். இவர் பல கருத்துக்களை ஆழ்ந்து எண்ணிக் கொண்டிருக்கையில் தம்மையே மறந்து விடுவதும் உண்டு. புதிதாக என்ன கண்டுபிடிக்கலாம் என்பதே இவருடைய நோக்கமாக இருந்தது. இவர் தமது எழாவது ஆண்டிலிருந்து ஓயாது உழைத்து எண்பத்து நான்காவது அகவையில் விண்ணுலகு எய்தினர். இவர் "செயற்கரிய காரியங்களைச் செய்துகாட்டிய பெரியார்" ஆகலின் இவர்தம் புகழ் உலகம் எங்கணும் நிலைபெற்றிருக்கின்றது.

விசயநகர ஆட்சி (கி. பி. 1443—1565)

[திரு. வித்துவான் கி. சாமிக்கண்ணு முதலியார்]

விசயநகர ஆட்சி முளைத்துச் செழித்துப் பரவிவருங் காலத்தில் தஞ்சாவூர் நாட்டையும் தன்னகப் படுத்திக்கொண்டது. தங்களுடைய காரியக்காரர்கள் வாயிலாகத் தஞ்சாவூர் நாட்டை விசயநகர அரசர்கள் ஆண்டனர்.

விசயநகர முதல் மரபின் அரசரான பிரதாப தேவராயருடையனவாக, சகாப்தம் 1365-ல் (கி. பி. 1443) வரையப்பட்ட கல்வெட்டுக்கள் தஞ்சாவூருக்குச் சுற்றுப் பக்கங்களிலுள்ள கோவில்களில் உள்ளன.

தஞ்சாவூர்ப் பெரிய கோவில் தெற்குச் சூழலில், இரண்டாவது விசயநகர அரசவழியின் முதல் மன்னராகிய திருமலை தேவராயருடைய கல்வெட்டு, சகாப்தம் 1377-ல் (கி. பி. 1455) வரையப்பட்டுளது. இவ்விரண்டாவது வழியின் ஆறுவது அரசராகிய அச்சுத தேவராயருடைய ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1530—1541), சகாப்தம் 1454-ல் (கி. பி. 1532) வரையப்பட்ட ஒரு கல்வெட்டு, தஞ்சாவூர்த் தெற்கு அலங்கம் தொப்பாரங்கேட்ட பிள்ளையார் என்று சொல்லப்படும் அளகேசுவரப் பிள்ளையார் கோவில் கோபுரத்து முன் பக்கத்துச் சுவர்களிலும், சகாப்தம் 1461-ல் (கி. பி 1539) வரையப்பட்ட மற்றொரு கல்வெட்டு, தஞ்சாவூர் வடக்குக் கோட்டை வாசலுக்கடுத்த இராசகோபாலசாமிகோவில் உள்ளிருக்கையின் வெளிச்சுவர்களிலும் உள்ளன. தஞ்சாவூர்ப் புகைவண்டி நிலயத்துக்கடுத்த சமுசருப் பள்ளிவாசலில் ஒரு கற்கம்பத்தில் கல்வெட்டு ஒன்று வரையப்பட்டிருக்கிறது. அது வரையப்

பட்டகாலம் சகாப்தம் 1471 (கி. பி. 1549) என்பதாகத் தெரிகிறது. அக் கல்வெட்டால் அக்காலத்தில் சேவப்ப நாயக்கர், விசயநகர வேந்தர்களுக்கடங்கிய அதிகாரியாகவே இருந்ததாகத் தெரிகிறது.

கி. பி. 1565-ல் தலைக்கோட்டைப் போர்நடந்து, விசயநகர அரசியல் பொன்றியதன் பயனாக, அதுவரையில் அதன் காரியக்காரராகத் தஞ்சாவூரில் இருந்த சேவப்பநாயக்கர் தலைவரானார்

சேவப்ப நாயக்கர் (கி. பி. 1565—1577)

தோற்றுவாய்:—சேவப்ப நாயக்கர், தஞ்சாவூர் நாட்டை ஆண்ட நாயக்க அரசவழியைத் தோற்றுவித்தவரும், அவ்வழியின் முதல் மன்னருமாவர். இவருடைய தாதை மூதாதை முதலிய பெரியோர்கள், விசயநகர மன்னர்களின்கீழ்ப் படைத் தலைவர்களாயிருந்தார்கள். சேவப்ப நாயக்கருடைய தந்தை திம்மப்ப நாயக்கர்; தாய் வய்யமாம்பாள். விசயநகர இரண்டாவது அரசவழியில் வந்த அச்சுத தேவராயருடைய மனைவி திருமலையம்மனுக்குத் தங்கையாகிய மூர்த்திமாம்பாளை இவர் மணந்துகொண்டார். இவருடைய மகன் அச்சுதப்ப நாயக்கர்.

வரலாறு:—அச்சுத தேவராயர், தஞ்சாவூர் நாட்டுக்குச் சேவப்ப நாயக்கரைத் தம்முடைய அதிகாரியாக ஏற்படுத்தினார். தஞ்சாவூரின் சக்கரவர்த்தி என்று தங்களைக் கூறிக்கொண்டிருந்த விசயநகர வேந்தர்கள் கி பி 1565-ல் மறைந்தொழிந்தனர். சேவப்ப நாயக்கர் தமது வலிமையினால் தஞ்சாவூரைத் தமதாக்கிக்கொண்டார்; தஞ்சாவூர்அரசர் என்று பட்டம் சூட்டிக்கொண்டார்.

இறைமாட்சி:—தஞ்சாவூர்க் கோட்டைக்குள் வாழும் எல்லா மக்களுக்கும் குடிநீர் எந்நாளும் நிரம்பிநிற்கின்ற சிவகங்கைக் குளத்துக்குப் பாய்ச்சல் ஏரியாகச் சேவப்பனேரியை வெட்டிவைத்தார்.

கடவுட்கோட்பாடு:—திருவண்ணாமலையில் கோவிலுக்கு வெளியே கட்டிவைத்த ஆழ்ந்தகன்ற குளமும், கோவிலிலே கட்டிவைத்த, மிக்க உயரமான கோபுரமும் இவரது அறங்களேயாம்.

காலம்:—இவர் தஞ்சாவூரின் அரசராக ஆட்சிசெய்த காலம் கி. பி. 1565 முதல் 1577 வரையிலாகும். இவர் கி. பி. 1549 முதல் 1565 வரையில் விசயநகரத் துறைத்தனத்

றுக்கடங்கிய காரியக்காரராக இருந்தார். சேவப்ப நாயக்க ருடைய காலத்தை அறியத் துணைசெய்யும் கல்வெட்டுக்களுள் ஒன்று, இவர் விசயநகர அரசியலின் காரியக்காரராயிருந்த காலத்தது. மற்றொரு கல்வெட்டு திருவண்ணாமலைக் கோவி லிலுள்ளது; அதில், சேவப்பநாயக்கர் அரசு செலுத்து நாளில் சகாப்தம் 1494-ல் (கி. பி. 1572) சிவநேசன், உலகநாதன் என்ற இரண்டு உடன்பிறந்தோர்களால் திருவண்ணாமலைக் கோவிலின் கோபுரங்களுள் ஒன்று கட்டிமுடிக்கப்பட்டது என்ற செய்தி கூறப்பட்டுளது.

நாட்டினளவு :—இவர் காலத்தில் இவரது நாடு திருச்சி ராப்பள்ளி முதல் குணகடல்காறும், இராமசேது முதல் திருவண்ணாமலை வரையிலும் பரவியிருந்தது.

முடிவுரை :—போர்புரிந்து வெற்றி பெற்று வரும் கீர்த்தி யிலும், தெய்வபக்தியினாலும் நற்செய்கையினாலும் பெறும் புகழே புகழ்என்ற கோட்பாடு உடையவர். இவர் கி. பி. 1577-ல் தமது குமாரர் அச்சுதப்ப நாயக்கருக்குப் பட்டஞ் சூட்டித் தாந்தாங்கிய அரசியற் பொறையை அவருக் குரித்தாக்கினர்.

---

* பலகலை பயின்று பண்பிற் சிறந்தே
நலம்பல புரிந்த நமசி வாய!
என்பு தமிழா யியைந்த வாக்கைய!
அன்பு மறனு நீக்கி யளியொரீஇ
விண்படர்ந் தேகினுய் வியனெறி யுரவோய்!
புண்படர் நெஞ்சின் புலம்புறுந் தமிழே;
உரவோ யும்பர் வாழ்தி,
உரவ மியாமு முறங்குவ மீண்டே.

---

* செந்தமிழ்ப் புரவலராயிருந்த தமிழ்ப் பேராசிரியர் திரு. கா. நமச்சிவாய முதலியார் காலஞ் சென்றமை கருதி காழி. சிவ. கண்ணுசாமி B. A. பாடிய இரங்கற்பா.

அறிவியற் பகுதி - Science

தமிழ் எழுத்துக்களின் மறைப்பக்கம்

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்—க. ப. சந்தோஷம்]

(முன் ௨௪௨-ஆம் பக்கத்தொடர்ச்சி)

எழுத்துக்கள் அடைகின்ற எடுத்தல், நலிதல், படுத்தல் என்ற மாறுதல்கள் சிருஷ்டி, திதி, சங்காரம் என்ற முத்தொழிலைக் குறிக்கும். வகர யகரங்களாகிய இரண்டெழுத்துக்களும் உடம்படு மெய்யெனப் பெயர்பெறுகின்றன. உடம்படு மெய்யென்பதற்கு ஒருயிருடன் மற்றோருயிரை இணைக்கும் மெய் என்றுவது, பிறப்பையழிக்கும் மெய்யென்றுவது பொருள் கொள்ளலாம். வகர யகரங்கள் மந்திரங்களில் அருளையும் உயிரை (ஜீவாத்மாவை)யுங்குறிக்கும் எழுத்துக்களாய் நின்று, பிறப்பறுத்து உயிர் வீடு பெறுவதைக் காட்டுகின்றன. தொழிலை விளக்குஞ் சொற்கள் வினை எனப் பெயர்பெற்று கர்மம் என்பதனைக் காட்டும். பிறவினை என்பது மற்றவர்களுடைய கர்மமாகும். தன்வினை என்பது தான் செய்யுங் கர்மமாகும். குன்றிய வினை, வினையெச்சமெனப் பெயர்பெற்று, முற்றுப்பெறாத கர்மத்தை விளக்கும். முடிந்த வினை முற்றுவினை யெனப் பெயர்கொண்டு தீர்ந்த கர்மத்தைக் காட்டும். குறிப்பு வினை என்பது, தெரியாக் கர்மமாம். தெரிநிலை வினையாவது தெரிந்த கர்மமாம். உடன்பாட்டு வினை அல்லது விதி வினை என்பது மாற்றமில் கர்மமாம். எதிர்கால வினையாவது ஆகாமிய கர்மம். நிகழ்கால வினையாவது பிராரத்வ கர்மம். இறந்தகால வினையாவது சஞ்சித கர்மம். பெயர்களடையும் மாறுதல்கள் வேற்றுமை எனப்படும். இது வினைக்கேற்ப ஜன்மம் வாய்ப்பதைக் காட்டும்.

இங்ஙனம், இலக்கணச் சொற்றொடர்கள் உண்மை இயலை வெளிப்படுத்தும் திறமை வாய்ந்தனவாய் இருக்குந் தன்மையை விளக்குதற்கு எடுத்துக் காட்டுகள் மற்றும் பல கூறலாம். இதை விடுத்து, உண்மை இயலை எளிதாக எவருங் காணக்கூடிய முறையிற் கூறுகின்ற சில தொல்காப்பிய விதிகளை ஈண்டுக் கூறுதும்:—

"வேற்றுமை தாமே யேழென மொழிப"

என்பது வேற்றுமை இயலில் முதற் சூத்திரமாகும். பொதுவாக உயிர்களுக்குக் கர்மத்தால் விளைகின்ற ஏழ்பிறப் பிற்கும், இதிற் கூறப்படும் ஏழு வேற்றுமைகட்கும் இங்கு ஒரொற்றுமை காணலாம்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

இது வினையியலின் முதற்சூத்திரம். (வினையியலென்பது கர்மத் தின் கூறு). இச்சூத்திரத்தாற் குறிக்கப்படும் உண்மை யாதெ னின், உயிர் எடுக்கின்ற பல பிறவிகளோடே கர்மமென்பது மாறுவதில்லை; அது மாறாது அடங்கி நின்று ஆகாமிய பிரா ரத்வ சஞ்சித என்ற மூவகையில் எதைச் சார்ந்ததோ அதற் கேற்பக் காலம் பார்த்து நிற்கும், என்பது.

இதையொத்த கருத்து, "வேற்றுமை வழிய பெயர் புணர் நிலையே," என்ற புணரியற் சூத்திரத்தால் வெளியிடப்படு கின்றது.

"மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே"

இது முதலதிகாரத்திலுள்ள சூத்திரங்களி லொன்றாகும். இலக்கண முறையி லிதன் பொருள் வெளிப்படை. இதனாற் குறிக்கப்படும் உயிர்பற்றிய உண்மையுங் காண்பதற்கெளிதே. உயிர்களை நோக்குங்கால் அவைகளுக்குள்ள வேற்றுமை உடம்பைக் கொண்டல்லது வேறுவகையில் அறியப்படாது. க் என்ற மெய்யெழுத்து ஒரு குயிலின் உடலைக் குறிப்பதாக வைத்துக்கொள்வோம். இதில் 'ஊ' என்ற உயிரை ஏறச் செய்வோம். இதனால் பெறப்படுகின்ற உயிர்மெய் 'கூ' என் பது. ஈண்டுக் குயில் கூவு மென்பதைப் பார்க்கின்றோம். மகர ஒற்றை ஒரு பூனையின் உடம்பாக வைத்துக் கொள் வோம். இதில் நாம் முன்னெடுத்துக்கொண்ட ஊகார உயிர் ஏறுமாயின் மூ என்ற உயிர்மெய் பிறக்கின்றது. இரண் டிடத்திலும் ஊகாரமே உயிராயினும், புகு முடலிற்கேற்ப அது வேறுபடுகின்றது.

உயிர் அல்லது ஜீவாத்மா உடம்பின் வழியடங்குவதை, "மெய்யின் வழியதுயிர் தோன்று நிலையே" என்றுரைப்பதைக் காட்டிலுந் தெளியக் கூறலாங்கொல்? இவை எதிர்பாராது நேரும் ஒற்றுமைகளல்ல.

'புள்ளியீற்று முன்னுயிர் தனித்தியலாது
மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே"
"மெய்யுயிர் நீங்கிற் றன்னுருவாகும்".

இவை உயிரொடு உயிரும், உயிரொடு மெய்யும், மெய்யோடு

மெய்யும் சேர்கின்ற விதிகளைக்கூறும் புணரியலிற் காணப்படும் சூத்திரங்கள். இவற்றால் குறிக்கப்படுகின்ற உயிரை யொட்டிய உண்மைகளையும் நாம் தெற்றெனக் காணலாம். யாண்டாயி னும் உயிர் உடம்பிற் புகுமாயின், அது தன்னியல்பு கெடாது காத்தலரிது; உடம்போடு ஒன்றாகும். உயிர் உடம்பை விட்டு நீங்கிடுங்கால் உடம்பு தன் பழைய நிலையை யடையும்.

இலக்கண வகையில் எழுத்துக்களுக்குக் கூறப்படும் விதி கள், மந்திர வகையில் அவ்வெழுத்துக்களுக்குக் கூறப்படும் விதிகளோடு பொருந்தியிருப்பதை விளக்கச் சில எடுத்துக் காட்டுகள் கூற வேண்டியதாகின்றது.

"எல்லா மொழிக்கு முயிர் வருவழியே
யுடம்படு மெய்யி னுருவு கொளல் வரையார்"

இது நிலைமொழி ஈற்றினும், வருமொழி முதலினும் உயிரி ருந்தால் அவ்விரண்டு சொற்களும் புணருந் தன்மையைக் கூறு மொரு சூத்திரமாகும். வருமொழி முதலினுள்ள உயிர், நிலை மொழியீற் றுயிர்முன் மாறாது நிற்றல் கூடுமாயினும், வரு மொழி முதலினுள்ள உயிர் யகர வகரங்களாகிய உடம்படு மெய்களிற் புகுவதை மேலோர் விலக்கார் என்பது இலக்கண வகையி லிதன்பொருள். உயிரைப்பற்றிய உண்மை கூறும் வகையி லிதன் பொருள் யாதென்று பார்ப்போம். ஈண்டு வருமொழி முதலுயிர் ஜீவாத்மா அல்லது பசுவைக் காட்டு வதாகும். நிலைமொழியீற்றுயிர் பரமாத்மா அல்லது பதியைக் குறிப்பதாகும். பதிமுன் பசு தன்னியல்பு கெடா வண்ணம் நிற்றல் கூடுமாயினும், வருமுயிராகிய ஜீவாத்மாவை நிலையுயி ராகிய பரமாத்மா அல்லது பதியொடு புணர்த்த வல்ல யகர வகரங்களாகிய உடம்படு மெய்கள் அல்லது தனியுடம்புக ளில் அது புகுதல் விலக்கப்படாது. இங்கே உடம்படு மெய் யென்ற சொற்றொடர் இலக்கணத்திலும் உண்மையியலிலும் எப்பொருளில் வழங்கப்படுகிற தென்பதையும் விளக்க வேண்டியதாகின்றது. உடம்படு மெய்யென்பது 'உடன்படு மெய்' என்பதோடொன்றாகி நிலைமொழியீற்றுயிரையும் வரு மொழி முதலுயிரையும் உடன்படுத்தும் மெய்யாகுமென்று பொதுவாகப் பொருள் கூறுவர். இவ்விரண்டெழுத்துக்களும் மந்திர வகையில் கொள்ளும் பொருளைக்கருதுங்கால் உடம்படு மெய்யென்ற சொற்றொடரின் மற்றொரு பொருள் தோன்று கின்றது. உடம்படு மெய்யென்பது உடம்பு—அடும்—மெய் எனப் பிரிந்துநின்று, இலக்கணவகையில், மற்ற மெய்களை அழிக்கும் மெய்யென்றும், உண்மையியல் வகையில், பிறப் பறுக்கும் வடிவமென்றும் பொருள்படும்.　　(தொடரும்)

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

மகாத்மா காந்தி அடிகளுக்கு ஓர் பகிரங்கக் கடிதம்

ஐயா,

இப்போது இந்தியாவிற்கு ஓர் பொதுமொழி கோல வேண்டுமென்று பாடுபடுவோருள் தலையாயராய் நிற்பவர் தாங்களே என்று அறிகிறேன். உலகுடன் பழகுவதற்கும் தொழில் நடத்துவதற்கும் பெரும்பான்மையோர் உலகெங்கும் நன்கு அறிந்த ஒரு மொழியைக் கற்றறிதல் வேண்டுமென்ற தங்கள் கிளர்ச்சி பெரிதும் போற்றற்குரியதே. தாங்கள் கொண்ட இப்பொதுநலப் பெருநோக்கம் இப்போது இயங்கிக்கொண்டிருக்கும் இந்திமொழிக் கட்டாயக் கல்வியால் ஒரு வேளை சிதைவுறுமோ என்று நினைந்து வருந்துகின்றேன். தாங்கள் எடுத்துக்கொண்ட இவ்வரும்பெரும் இயக்கத்தின் இரகசியத்தை அறியாத சிலர் இந்திமொழியே இந்தியாவிற்குப் பொதுமொழியாக வேண்டுமென்ற பெருமுயற்சியில் ஈடுபட்டு விட்டனர்.

பொதுநலப் பிரியரான தாங்கள் இப்போது இந்திய மக்களிடத்துக் காணப்படும் ஏழ்மை நிலையை நன்குணர்ந்து, அவர்கள் அனைவரையும் உன்னத நிலைக்குக் கொண்டுவர ஒரு பெரும் அரிய முறையைக் கையாண்டீர்கள். அதன் உண்மை இதுவென உய்த்துணர மாட்டாத சிலர் "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததே" என்று தாங்கள் நினைந்து வருந்தக்கூடிய முறையில் இறங்கிவிட்டார்கள். இந்திமொழியைக் கட்டாயக் கல்வியாகக் கற்கவேண்டுமென்ற கிளர்ச்சியை உண்டுபண்ணியாவது இந்திய மக்களுக்குத் தங்கள் தங்கள் தாய்மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற உரிமை உணர்ச்சியை அடிகோலிவைக்கலாமென்ற தங்கள் பெருந்தன்மையான நோக்கத்தை அறியமாட்டாதவர்களாய் மலைவுறுகின்றனர்.

இப்போது இந்தியாவிற்குப் புதிதாக ஒரு பொதுமொழி வேண்டுவதில்லை யென்பதும், இதுபோழ்து பொதுமொழியாக இருந்துவரும் ஆங்கிலமே போதுமானதென்பதும், ஒரு மொழி பேசுவோரிடத்துக் காணப்படும் குறைபாடுகளையோ வெறுக்கத்தக்க செயல்களையோ அவர்கள் பேசும் மொழியின்

பாற் காட்டக்கூடாதென்பதும் நடுநிலை திறம்பாத தங்களுக்கு ஒத்த சம்மதமாகவே தோன்றுமென நம்புகிறேன். தங்கள் கிளர்ச்சியின் பயனால் ஏற்பட்ட இவ்விந்திமொழிக் கட்டாயக் கல்வியின் இரகசியத்தைத் தாங்களே மறுபடியும் எடுத்து விளக்கிச் சொன்னாலொழிய, இத்தீவிர முயற்சியினின்றும் சில விடாப்பிடியினர் விலகார் என்று கருதியே இதனைத் தாங்கள் அறியுமாறு வெளியிடுகின்றேன்.

எனவே, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மொழி பேசுவோரும் தத்தம் மொழிகளையே கட்டாயக் கல்வியாகக் கற்கவேண்டுமென்றும், தாய் மொழியில் தேர்ச்சிபெற்ற பின், பலமொழி பயில விரும்பும் தனி மனிதர்கள் இந்திமொழியையோ இன்னும் வேறுபல மொழிகளையோ கற்கலாமென்றும், இப்போது பொதுமொழியெனக் கருதப்பட்டு வழக்கிலிருக்கும் ஆங்கிலமே எதிர்கால இந்தியாவிற்கும் பொதுமொழியாக நின்று பயன்தரத் தக்கதென்றும், இந்திய மக்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள அரிய காலத்தை இந்திமொழிக் கட்டாயக் கல்வியில் செலவிடுதல் முறையல்லவென்றும் எழுதப்பட்ட ஓர் பொதுநல அறிக்கையைத் தாங்கள் வெளியிட்டு உதவுவீர்களானால், அது, இந்திய மக்களுக்காகத் தாங்கள் செய்துள்ளனவும் செய்யப் போவனவுமான பேருதவிகளில் தலைசிறந்து விளங்குவதோடு தங்கள் புகழ் வானளவும் அதற்கு அப்பாலும் சென்று என்றும் மாறா நிலைபேறுடையதாகும்.

1—3—'37
அறிவுதயக் கழகம்,
வஞ்சியம்மன் கோயிற் றெரு,
கருவூர்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள,
ஈழத்துச்சிவானந்த அடிகள்.

பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்தின்

27-ஆம் ஆண்டு நிறைவு விழா

அவைத்தலைவர் உயர்திரு.

சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் நிகழ்த்திய

முன்னுரை

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய வெடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே"

அறிவினும், திருவினும் சிறந்த பெரியீர்!

பொன்னாட்டினு முயர்ந்த நன்னாடிதுவெனப் பன்னுவலர் புகழும் சோழவளநாட்டிலே, செந்திருமாதும், வெண்டிருமாதும் சேர்ந்துறையுங் காரணத்தால் "பூவாளூர்" எனப் பெயரிய இத்திருநகரிலே எல்லாம்வல்ல இறைவன் திருவருட்டுணைகொண்டு நடாத்தப்பெற்று வரும் சைவசித்தாந்த சங்கத்தின் இருபத்தேழாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி மகிழ்தற்பொருட்டு நீங்களெல்லீரும் குழுமியிருக்கின்றீர்கள். இப்பேரவைக்குத் தலைமைபூணச் சங்கத்தார் அடியேனுக்கு ஆணைதந்தார்கள். அடியேன் வயதளவில் முதியோனாயினும் கல்வியறிவு ஆற்றலில் மிகச்சிறியேன் என்பதைச் சங்கத்தார் நன்கறிந்திருந்தும் இவ்வாறு பணித்தமைக்கு ஏது, அடியேன் பல ஆண்டுகளாக உயர்வொப்பில்லாச் செந்நெறியாகிய சித்தாந்த சைவத்துக்குச் சிறு தொண்டாற்றிவருவது பற்றியே யாகும் என்று துணிகின்றேன்.

இனி "ஏழைய ரிருகாற் பசுக்கண் மற்றிவரால் இயன்றிடத் தக்கதொன்றிலையே" என்றபடி அடியேனாற் செய்யத்தக்கது யாதுமில்லை. "கருவிகளனைத்துமென்னுட் கலந்துநின்றியக்காநின்ற, ஒருவனையின்றி யானே உஞற்றுதலின்மையாலே" அவன் காட்டும் வழிநின்று எனக்குக் கொடுத்த தலைமைப்பணியை ஆற்றத் துணிகின்றேன். பேரவையின் தலைவராவார் தலைமையுரை யொன்று நிகழ்த்துதல் ஆன்றோர் மரபாகலின் அம்முறைபற்றி யானும் ஒருரை நிகழ்த்தவேண்டியவனாதலின் முன்னுரை என்று பெயரிய இச் சிற்றுரையை இங்கே நிகழ்த்துகின்றேன். பிழைபொறுத்தல் சால்புடைய உங்கள் கடனாதலின் அவையடக்கம் மிகையேயாகும்.

அன்பர்களே!

நமது நாட்டில் சில ஆண்டுகளாக எங்குபார்த்தாலும் "சுயராச்சியம்" "சுயராச்சியம்" என்னும் ஒலிப்பெருக்கம் நமது காதுகளைச் செவிடுபடச் செய்கின்றது. சுயராச்சியத்தின்பொருட்டு நமது மக்கள் செய்யும் தியாகங்கள் அளப்பில; அடையும் துன்பங்கள் பலப்பல. கற்றோரும் மற்றோரும் இரவு பகலாய் அதன்பொருட்டே உழைத்து வருகின்றார்கள். இத்துணை அரும்பாடுபட்டு நாம் இனி அடையப்போகும் சுயராச்சியம் தான் யாதோ எனின்; நமது தேசத்தை நமக்கு வேறுபட்ட மற்றொரு நாட்டார் ஆட்சி செய்து, நம்மைக் கீழ்மைப்படுத்தி, நமது தேசத்துச் செல்வங்களையெல்லாம் தம் நாட்டுக்குக் கொள்ளைகொண்டு போகின்றார்களாதலின்

அவற்றைத் தடுத்து நமது தேசத்தை நமக்கே சொந்தமாக்கிக் கொள்ளல் வேண்டுமென்பதேயாம்.

இனி, நாம் சுயதேசம் என்று பாராட்டும் இந்தத் தேசம் நமக்கு எவ்வளவு காலமாகச் சொந்தமாகவுள்ளது? இந்தத் தேசத்தில் இனி நாம் எவ்வளவு காலம் வீற்றிருப்போம்? என்பனவற்றை உண்மையாக ஆராய்வோமாக.

நாம் என்னும் சொல்லுக்குரிய பொருள் ஆன்மாவே. ஆன்மா அநாதியிலேயே ஆணவமலத்தோடு சேர்ந்துள்ள காரணத்தால் அறியாமையுட்பட்டுத் துன்புறுவதால் அம் மலத்தைப் போக்குதற்கு கன்மம் மாயை என்னும் இருமலங்களையும் பேரருளுடைய இறைவன் ஆன்மாக்களுடன் கூட்டுவித்தான். ஆன்மாக்கள் மாயையின் காரியங்களாகிய தநு கரணம் புவனம் போகம் என்னும் உடல், கருவி, உலகம், புசிக்கப்பெறும் பொருள்களைச் சார்ந்து நல்வினை தீவினைகளாகிய கன்மங்களைச் செய்கின்றன. இவ்வினைகள் ஆன்மக்களால் ஆணவமலத்தின் சார்பால் 'யான்' 'எனது' என்னும் செருக்குடன் செய்யப்பெறுவதால் அவ்வினைகள் ஆகாமியம் என்னும் பெயருடன் அவற்றைச் சார்கின்றது. இங்ஙனம் ஈட்டப்படும் ஆகாமியங்களெல்லாம் சேர்ந்து சஞ்சிதம் என்னும் பெயரால் ஒரு களஞ்சியமாகத் தொகுக்கப்படுகின்றன. பின் பிராரத்தம் என்னும் பெயருடன் அவை அனுபவத்துக்கு வருகின்றன. "தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னைவீயாதடியுறைந்தற்று" "அழக் கொண்டதெல்லாம் அழப்போம்" என்னும் பொய்யாமொழிகளின்படி வினைகளைச் செய்தோர் அவரவர்செய்த வினைப்பயன்களை அனுபவித்தே தீரவேண்டும் என்பது வினைச்சட்டமாதலின் அவரவர்செய்த வினைகளின் பயனாக அவ்வவற்றிற்கேற்ப இறைவன் தனு கரண புவனபோகங்களைக் கொடுக்கிறான். இனி, தனு கரண புவன போகங்கள் ஒன்றுபோல் இல்லாமல் அவரவர் செய்த வினைகளுக்கேற்ப எத்துணையோ வேறுபட்டவைகளாக இருக்கின்றன. இம்முறையிலே நாம் இந்தத் தேகத்தையும் இந்தத் தேச முதலியவைகளையும் அடைந்திருக்கின்றோம். தேகம் எப்பொழுதும் நிலையாகவுள்ளதன்று "கருவினுள்ளழிவதாயும் கழிந்திடாதழிவதாயும், பரிணமித்தழிவதாயும் பாலனையழிவதாயும், தருணனையழிவதாயும் தானரைத்தழிவதாயும்" உள்ள நிலையாமையுடையது; "வினைப்போகமே யொரு தேகங்கண்டாய் வினை தானொழிந்தாற்றினைப்போதளவும் நில்லாது கண்டாய்" என்றபடி எடுத்த வுடலில் அனுபவிக்கவேண்டிய போகங்களை அனுபவித்து முடிந்தவுடன் உடல் நீங்கிவிடுகின்றது. உடல்

நீங்கவே அதனோடு தொடர்புடைய புவன போகங்களும் நம்மைவிட்டு நீங்கிவிடுகின்றன.

அன்பர்களே !

இவ்வுண்மையைக்கொண்டு நாம் நோக்குவோமாயின் இந்தத் தேசம் நமக்கு முன் சொந்தமாக இருந்ததில்லை; எதிர் காலத்திலும் நமக்குச் சொந்தமாக இருக்கப்போவதில்லை. நம்மைப்போல் எத்துணையோபேர்கள் முன் இந்தத்தேசத்தை தமக்குச் சொந்தம் சொந்தம் என்று நினைத்து நீங்கிப் போயிருக்கின்றார்கள். நமக்கும் அவ்வாறேதான் ஆகப்போகின்றது. ஆதலின் தேசப்பற்று ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியதும், தமது தேசத்தைப் சொந்த ஆட்சியில் வைத்துக்கொள்ள வேண்டியதும் ஒருவகையில் நமக்குக் கடப்பாடேயாயினும் நாம் செய்யவேண்டிய தலைமையாகிய கடமையை அறவே மறந்து நிலையில்லாச் சம்பந்தமுடைய தேசத்தின்பொருட்டே இரவு பகலாய் உழைத்து உழைத்து நமக்கு அருமையாகக் கிடைத்த இந்தப் பிறவியை இழந்து விடுதல் தக்கதன்றென் பதே எனது கருத்தாகும்

இனி, ஆன்மக்களாகிய நாம் தலைமையாகச் செய்யவேண் டிய கடமை யாது என்பதை ஆராய்வோம். அது நமது ஆன்ம சுயராச்சியத்தின் பொருட்டுப் பாடுபடவேண்டிய தேயாகும். ஆன்மாவின் உண்மையான நிலையை ஆராய்வோமானால் அது அறிவுடைய பொருள்; வியாபகமுடைய பொருள்; பிறப்பு இறப்பில்லாத பொருள் அங்ஙனமாகவும் நமது ஆன்மநிலை இப்பொழுது எவ்வாறிருக்கின்றது என் பதைச் சிந்தியுங்கள். இயற்கையில் அறிவுடையவர்களாக இருக்கவேண்டிய நாம், அறியாமையுடையவர்களாயிருக்கின் றோம். எங்கும் விளங்கவேண்டிய நமது வியாபகத் தன்மை மறைந்து ஏகதேசப்பொருளாக (கண்டப் பொருளாக) இருக் கின்றோம். பிறப்பு இறப்பு அற்றிருக்கவேண்டிய நாம் கொள்ளி வட்டமும் காற்றாடியும்போல ஒயாது பிறப்பிலும் இறப்பி லும் சுழன்றுகொண்டிருக்கிறோம். இவ்வாறு நமது இயல் புகளை ஒழித்து நம்மை அல்லற்படுத்தும் பொருள்கள் யாவை? அவைதான் ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படும் மும்மலங்களாகும். அவை நமக்கு வேற்றுச்சாதிப் பொருள் கள். நாம் அறிவுடைய சாதி; அவை அறிவில்லாத சாதி. வேற்றுச்சாதியாகிய மலம் என்னும் பகைஞர்கள் நமது ஆன்ம ராச்சியத்திற் புகுந்து செய்யும் கொள்ளைகளும், துன்பங்களும் அளப்பில. நமது இயல்பாகிய அறிவுத்தன்மையைக் கெடுத்து அறியாமையைச்செய்துவிட்டனர். நாம் வியாபகமாய் விளங்கி வியாபகத்துட்பட்ட எல்லாப் பொருள்களையும் அநுபவிக்க

வேண்டியவர்களாகவிருக்க நமது வியாபகத்தன்மையை அடியோடு கெடுத்து ஏகதேசத் தன்மையைச் செய்துவிட்டார்கள். சுதந்தரமாக இயங்கவேண்டிய நமது அறிவிச்சை செயல்களைக் கெடுத்துப் பரதந்திரப்படுத்தி விட்டார்கள். நம்முடைய சுய ரூபத்தையும் நடையுடை பாவனைகளையும் கெடுத்து தமது ரூபத்தையும் நடையுடை பாவனைகளையும் பற்றும்படி செய்துவிட்டார்கள். நமது அருட்குணங்களைக் கவர்ந்து தமது மருட்குணங்களை நம்மைப் பற்றும்படி செய்துவிட்டனர். பிறப்பும் இறப்புமின்றி இருக்கவேண்டிய நம்மைத் தரையிலும், கீழ் மேலுலகங்களிலும் ஓயாது பிறந்திறந்துழலும்படி செய்துவிட்டார்கள். இன்ப சொரூபராயிருக்க வேண்டிய நம்மை ஓயாக் கவலை பிணியென்றிவற்றுள் மூழ்கும்படி செய்துவிட்டனர். அந்தோ! இவை மட்டுமா! நமக்கு இனியராய், நம்மோடு யாண்டும் இமைப்பொழுதும் அகலாது அத்துவிதமாய்க் கலந்திருக்கும் சிவபரம்பொருளையே நமக்குத் தெரியாமல் மறைத்து விட்டார்கள். முடிவாகச் சொல்வோமானால் நம்மையே நாம் உணராவண்ணம் செய்துவிட்டார்கள்.

அன்பர்களே!

இங்ஙனம் மலமென்னும் பகைஞர்கள் நம்முடைய ஆன்ம ராச்சியத்தில் புகுந்து தமது மருட்குணங்களாகிய பீரங்கிகளாலும், ஆறுகோடி மாயாசத்திகளாலும் நம்மைக் கீழ்மைப்படுத்தி நமது வியாபாரத்தையெல்லாம் கெடுத்து தமது வியாபாரத்தை இறக்குமதி செய்து நாம் அடையவேண்டிய பேரானந்தப் பெருஞ்செல்வத்தை அடையவிடாமல் தடுத்து அல்லலே செய்துகொண்டு வருகின்றார்கள். இவற்றையெல்லாம் நாம் சிறிதும் சிந்தியாமலும், அவற்றைத் தடுப்பதற்கு முயலாமலுமிருக்கின்றோமே! ஒரு சிறிது காலம் நமக்குத் தொடர்புடைய இத் தேசத்தின் பொருட்டு அரும்பாடுபட்டு வரும் நாம் ஆன்ம சுயராச்சியத்தின் பொருட்டுச் சிறிதும் சிந்தனை செய்வதில்லையே! அன்பர்களே, இனி நம்மைக் கீழ்மைப்படுத்தும் நமது பகைஞர்களாகிய மலங்களை ஆன்ம இராச்சியத்தினின்றும் ஓட்டவேண்டாமா? அதற்கு நாம் யாது செய்தல் வேண்டும்? முன்னர் மலமாகிய பகைஞர்களை ஓட்டிய அனுபவமுடைய பெரியார்களின் அறிவுரையை நாம் கேட்டல் வேண்டும்; அவ்வழி யொழுகுதல் வேண்டும். இனி அத்தகைய பெரியார்கள்தான் யாவரென்னில்; அவர்கள் தான் நமது சமயாச்சாரியர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஸ்ரீசுந்தரமூர்த்திகள், ஸ்ரீமணிவாசகர் என்னும் நான்கு பெருமக்கள். அவர்களால் அருளிச் செய்யப்பெற்றுள்ள தேவாரம் திருவாசகம் என்னும் அருள் நூல்களில் மலமாகிய

பகைஞர்களை வெல்லுவதற்குரிய உபாயங்கள் பலப்பல கூறப் பெற்றிருக்கின்றன.

மலசத்தியும், நமது ஆன்மசத்தியும் ஒப்புடையனவாதலின் நம்முடைய சத்தியினாலே மலசத்தியை வெல்லமுடியாது. மலசத்திக்கு மேற்பட்ட அளவில்லாத ஆற்றலுடைய இறைவனது ஆற்றலைத் துணைக்கொண்டே மலமாகிய பகைஞர்களை, நாம் ஒட்டல்வேண்டும். ஆதலின் அன்பர்களே, இறைவன் திருவருட்சத்தியைத் துணையாகக் கொண்டு,

"ஞானவா ளேந்துமையார் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப் படைவாராமே"

என்று ஸ்ரீமாணிக்கவாசகப்பெருமான் கூறியபடி படையெடுத்துப் பகைஞரை ஒட்டி நாம் வெற்றிமாலை சூடுவோமாக. இங்ஙனம் நமது ஆன்மராச்சியத்தை நமதாகச் செய்து நமது ஒப்பற்ற தந்தையாராகிய சிவபரம்பொருளின் பேரானந்தப் பெருஞ்செல்வத்தையடைந்து இனிது வாழ்வோமாக. இதுவே நாம் அடையவேண்டிய உண்மையான சுயராச்சியம். இதுவே நமது மனிதப்பிறப்பின் குறிக்கோள். இதன் பொருட்டே நமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தல் வேண்டும்.

அன்பர்களே!

இதுகாறும் எனது புன்மொழிகளைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த நுங்கட்கும், சங்கத்தாருக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

" நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லைத்
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே" —அப்பர்

27—2—37

சிவஞான சித்தியார்

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்ப
ரூனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ.

புதுக் கவிகள்-Original Poetry

தமிழ்நாட்டு வணக்கம்

[கோடமுடி வித்துவான் பெ. கோவிந்தன்]

தாமரைநன் முகங்காட்டித் தண்டளவ
நகைகாட்டித் தளிர்க்கை யாட்டிக்
காமர்கரு விளைக்கணிமைத் தெமைமடிமேல்
விளையாட்டுங் கன்னி நாடே!
பூமருவு பொழில்மல்கு தமிழ்நாடே!
எமையீன்று போற்றும் நாடே!
தூமலர்தாய் நினதுதிரு வடியிணையை
முடிவணங்கித் தொழுதல் செய்தும். 1

ஒருபால்நன் னீராட்டி யெமக்கொருபால்
காய்கனிக ளூட்டி யோர்பால்
மருவார்மென் மலர்சூட்டி யிசைகாட்டி
மகிழூட்டி மகிழும் நாடே!
திருவார்செந் தமிழுணர்த்துந் தென்னாடே!
பொன்னாடே! தெய்வ நாடே!
ஒருவாதன் பாலடியாம் இருபோதை
முப்போதும் உளத்திற் கோடும். 2

மென்றழையால் மெய்தழைவித் தருமலரால்
முகமலர்த்தி விரையும் தேனும்
துன்றுகனி யால்நெஞ்சங் கனிவிக்கும்
எமதுதமிழ்த் தூய நாடே!
ஒன்றிதுவன் றுறைவிடமும் அணியுடையும்
தமிழறிவும் உதவும் நன்றை
இன்றுணர்ந்தேம்; கைம்மாறுக் கென்னுடையேம்?
இறைஞ்சலொன்றே ஈண்டுச் செய்தும். 3

மலைவளமுங் கடல்வளமும் வயல்வளமும்
பொழில்வளமும் வழங்கி மற்றை
விலைவளமுங் கலைவளமும் பொருள்வளமும்
எமக்களித்து விளங்கும் நாடே!
நிலைபெறுவான் வெங்கதிருந் தண்கதிரும்
வலியிழந்து நிலையில் மாறி
உலைவுறினும் நிலைபெறுக நீயுஞ்செந்
தமிழணங்கும். உளத்துக் கோடும். 4

உழுந்தோறும் உணவளித்தும் அகழ்ந்தோறும்
நீரளித்தும் உதவி மேலே
விழுந்தோறும் எமைத்தாங்கி எழுந்தோறும்
உயர்வித்து விளங்கும் நாடே!
செழுந்தேறல் வழிந்தோடச் சேலுளுவை
எதிர்ந்தோடச் செந்நெல் தென்றற்
கொழுந்தோட மகிழ்ந்தாடுந் தமிழ் நாடே!
தொழுதன்பு கொண்டு வாழ்தும். 5

பூவிரியும் மரமுதலா மனைத்துயிர்க்கும்
பலகாலால் போய்நீர் நல்கும்
காவிரிவை கைபெண்ணை பொருநையினை
ஒழுக்குதமிழ்க் கன்னி நாடே!
ஓவியமொன் றினில்நின்றன் ஒழுக்கினையும்
உதவியையும் உணர்த்தும் பாடும்,
பாவினுணர்த் தும்பாடும் பெற்றேமில்
லேந்; தாளைப் பணிதல் செய்தும். 6

அறநெறியில் முறைசெய்த அரசர்களை
ஈன்றெடுத்த அரிய நாடே!
பிறரைமனத் தெண்ணாத பெண்டிர்களை
ஈன்றெடுத்த பீடார் நாடே!
புறமகமாந் திறமுணர்ந்த புலவர்களை
ஈன்றெடுத்த புகழ்சால் நாடே!
மறமிகுந்த மள்ளர்களை ஈன்றெடுத்த
தமிழ்நாடே! வணக்கஞ் செய்தும். 7

கடல் கடந்தும் நிலங்கடந்தும் பகைவர் படைக்
கடல்கடந்த காமர் நாடே!
இடர்கடந்தும் பிடிகடந்தும் இலங்குதமிழ்க்
கடல்கடந்த இனிய நாடே!
தொடர்கடந்தும் மடங்கடந்தும் துலங்கறிவுக்
கடல்கடந்த தூய நாடே!
உடல்கடந்தெம் உளங்கடந்தெம் உயிர்கடந்த
புகழ்க்கடலில் உள்ளஞ் சேர்த்தும். 8

வடபுலத்துக் கடவுளர்கள் பிறக்குமுனம்
பிறந்துரமும் வனப்பும் வாய்ந்து
கடலுடுத்துப் பூப்பெய்தி மகவீன்று
கலையுணர்த்திக் களித்த நாடே
உடலெடுத்த எமக்குமெமைப் பெற்றோர்க்கும்
உற்றார்க்கும் உற்றாரோடு
தொடர்படுத்த தொல்குடிக்குந் தாய்நாடே
தமிழ்நாடே தொழுதல் செய்தும். 9

பொய்யுரையா வள்ளுவமெய்ப் புலவனைப்பெற்
றனைத்துலகும் புகழ வாழ்க்கை
செய்யுமுறை களையெல்லாந் தெரிவிக்குந்
தமிழ்நாடே தெய்வ நாடே!
பொய்யருரை மெய்யென்று மனத்திருத்தி
இகழ்வெய்திப் புகழ்விட் டேமுக்
கையமறக் குறளுணர்த்தி நெறிப்படுத்தென்
றுரைசெய்துன் னடியைக் கோடும். 10

குறுந்தொகை மொழிபெயர்ப்பு

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள், M. A., B. L]

(முன் ௩௯0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

29. குறிஞ்சி

நல்லுரை யிகழ்ந்து பல்லுரைத் தாஅய்ப்
பெயனீர்க் கேற்றன பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே என்றும்
பெரிதா லம்மநின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

—ஔவையார்,

29. Not heeding good advice and holding by evil, O heart, thou art like the fresh-made unbaked pot receiving rain water! with thee so full of grief, I am tired out swimming the ocean of misery. Would that you had comforters that would cling to thee like the young one to the mother monkey on the tall boughs, for great is thy affliction for ever and ever.

—Auvaiyar

30. பாலை

கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தரு பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியன் யானே.

—கச்சிப்பேட்டு நன்னாகையார்.

30. Hail comrade! hail and listen! deceived by the false dream of my charmer embracing me, I rose up

and searched the bed with my hands, and found myself alone! like the flower that the bee has despoiled, I am much to be pitied.

—Kachipettu Nan-Nagiar.

31. மருதம்

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங் கையானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோட ரிலங்குவளை ஞெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

—ஆதிமந்தியார்.

31. Neither in the gathering of Heroes, nor where women dance with arms akimbo, do I see the noble Hero! In so seeking and running after him, I seem to be a dancer; like-wise is He, full of nobility, love for whom has made my wrists shrink and the wristlets slip!

—Adi Mandhi-yar.

32. குறிஞ்சி

காலையும் பகலுங் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்
மாவென மடலொடு மறுகிற் றோன்றித்
தோற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

—அள்ளூர் நன்முல்லையார்.

32. Spurious is the love that can note clearly the distinction between Morn, Noon, restful Eve, Midnight when all are fast asleep, and the Early Dawn! It is a shame to challange me to prove my love by mounting the palm-frond like a horse in the open street as it would be a shame to me to out-live my Beloved!

—Allur-Nan-Mullai-yar.

ஈ தின்னிச் செடி

வட அமெரிக்காவில் "வீனஸ் ஈப்பொறி" என்ற ஒரு விதமான செடி வளருகிறது. அதன் இலைகளின் நீண்ட காம்பின் நுனியில் இரு பக்கங்களிலும் புத்தகத்தின் இதழ்கள் போன்றிருக்கின்றன. அவற்றின்மீது கூரிய கயிறுபோன்ற முனைப்புகள் காணப்படுகின்றன. ஈக்கள் அவற்றின்மீது உட்காரும்போது இலைகள் இரண்டும் மூடிக்கொண்டு ஈயைச் சாப்பிடுகின்றன.

நூல் வருவாய்

ஜெர்மனி தேசத்து வல்லரசான ஹிட்லர் ஒரு புத்தகம் எழுதி அவரே அதனை வெளியிட்டுப் பள்ளிக்கூடப் பிள்ளைகள், புத்தக சாலைகள், உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் படிக்கவேண்டுமென்று உத்தரவு செய்து விட்டார். இதுவரை சுமார் இருபத்தைந்து லட்சம் பிரதிகள் விற்பனையாய்விட்டன. அதனால் அவர் லட்சாதிபதியாய் விட்டார். புத்தகத்தின் பேர் மீன் காம்ப். நாசித் தலைவரான ரோசன்பர்க், கோபல்ஸ் இருவர் புத்தகங்களும் ஏராளமாக விற்பனையாகின்றனவாம்.

"ஒரு மொழியிலுள்ள அரிய பொருள்களையுங் கருத்துக்களையும் எல்லா மொழிகளுக்கும் பொதுவாக்கிக்கொள்ளுதல் சிறந்த நோக்கமாகும். இதற்கு நம்முடைய பொதுமொழியாக இந்தியை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்தியாவிலுள்ள பல மொழிகளிலும் இந்தி பொதுவாக இந்தியாவிற்கே உரியதென்பதை இதன் பெயரமைதியே குறிக்கின்றது. பழைய காலத்தில் ஸமஸ்கிருதம் இந்தியாவின் பொது மொழியாக இருந்ததென்று சில பழைய நூல்களால் அறியக்கிடக்கின்றது"

என்று சென்ற மார்ச்சுத் திங்கள் 29-ம் நாள் மாம்பலத்தில் கூடிய பாரதிய சாகித்ய பரிஷத்தில் வரவேற்புத் தலைவராக விருந்த மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் தமிழர் சார்பாகவே இவ்வாறு மொழிந்திருக்கவேண்டும் என நம்புகிறோம். பண்டைக்காலத்தில் ஸமஸ்கிருதம் இந்தியாவிற்குப் பொதுமொழியாக இருந்தமைக்குச் சில ஆதாரங்களை அவர்கள் குறித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். அவர்கள் கூறியவாறு சமஸ்கிருதம் பொதுமொழியாக இருந்த அளவிற்கே இன்று ஹிந்தி பொதுமொழியாக அமையவேண்டும் என்று ஐயர் அவர்கள் கருதியிருந்தால் அதற்குத் தமிழர்களும் உடன்படுவார்களென்றே நம்புகிறோம். ஆனால் தமிழ் மாணவர்களுக்கெல்லாம் இந்தியைக் கட்டாய பாடமாக அமைக்கவேண்டும்; தமிழ் நூல்களைக்கூட இந்தியில் மொழிபெயர்த்துப் படித்தால் அதன் நலம் சிறந்து விளங்கும் என்றெல்லாம் கூறி இந்திமொழியைப் பரப்ப முயல்வதைக் கண்டியாமலிருக்கமுடியாது. இதுவே தமிழ் மக்களின் உள்ளப்பான்மையாகும் என்று துணிந்து கூறலாம்.



திரு. S. சோமசுந்தரபாரதி யவர்கள், M.A., B.L.,

அண்ணமலைப் பல்கலைக்கழகத்

தமிழ்ப் பேராசிரியர்.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] ஈசுவர—சித்திரை [பரல்-கூ

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

திருக்கழிப்பாலைத் திருத்தாண்டகம்

செற்றதோர் மனமொழிந்து சிந்தை செய்து
    சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தை யுள்ளால்
உற்றதோர் நோய்களைந் திவ்வுலக மெல்லாங்
    காட்டுவா னுத்தமன்றா னோதா தெல்லாங்
கற்றதோர் நூலினன் களிறு செற்றான்
    கழிப்பாலை மேய கபா லப்பனார்
மற்றிதோர் மாயக் குரம்பை நீங்க
    வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே.

பதவுரை:—

தான் ஓதாது எல்லாம் கற்றதோர் நூலினன்—அநாதிமல முத்தனாதலின் தான் எந்த நூல்களையு மோதாது இயல்பாகவே எல்லாம் அறிகின்ற பேரறிவுடையவனும்

களிறு செற்றான்—யான் என்ற அகப்பற்றும், எனது என்ற புறப் பற்றுமாகிய செருக்கு முற்றிலும் இல்லாதவனும்

கழிப்பாலை மேய கபாலப்பனார்—திருக்கழிப்பாலை என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டருளியும் பிரமகபாலத்தைக் கையில் ஏந்தியும் எல்லா உயிர்களுக்கும் தந்தையாகியு மிருக்கின்ற சிவபெருமான்

செற்றது ஓர் மனம் ஒழிந்து—தாங்கள் முன் உலக நுகர்வுகளை வெறுத்த செயலை ஆராய்ந்து அறிகின்ற மனத்தை முற்றிலும் கெடுத்து (அதாவது வெறுத்தோம் என்னும் வாசனையுமின்றி முற்றிலும் அமைதியுள்ள மனத்தை உடையவராயும்)

சிந்தை செய்து—சிவபெருமானுடைய திருவடிகளையே எப்பொழுதும் மெய்யன்புடன் நினைந்துகொண்டிருந்தும்

சிவமூர்த்தி என்று எழுவார் சிந்தையுள்—இன்ப உருவனே என்று நிட்டை செய்தும் அவனுடைய திருவடிகளை அடைந்து வீட்டின்பம் பெற முயலுதற்கு முனைந்து எழுகின்ற அடியார்களுடைய சிந்தையினுள்ளே

உற்றது ஓர் நோய்களைந்து—முறையே, அச்சிந்தையைப் பற்றியிருக்கின்றதாகிய ஒப்பற்ற ஆணவமலத்தையும் (அதற்குத் துணைகளாயுள்ள வினை மாயை மலங்களையும்) அறவே ஒழித்து (தன்னை மெய்யறிவா லறியும்படி காட்டி அறிவித்தும்)

இவ்வுலக மெல்லாம் காட்டுவான்—(அவர்கள் முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து கேவல நிலையிலே புகாதும், தங்களிடம் அருள் ஞானம் விளங்கியபொழுது அந்த ஞானம் தங்களுடைய ஆன்மாவின் விளக்கம் என்று தன்முனைப்புக் கொள்ளாமலும், அங்ஙனம் விளங்கின அருள்ஞானத்தில் அடங்கி நிற்கும்பொழுது அவ்வருள்ஞானத்தில் சிவமாகிய முதல் அவர்களுடைய அகக் கண்ணுக்கு வெளிப்பட்டுத்) தான் உலகிலுள்ள எல்லா உயிரில் பொருள்களிலும் உயிர்ப்பொருள்களிலும் அத்துவிதமாய்க் கலந்து நின்று உயிர்கள் பொருட்டு அநுக்கிரகம் செய்து வருதலை அவ்வடியார்களோ டத்துவிதமாய்க் கலந்து நின்று கண்டு அவர்களைக் காணும்படி செய்வானாகியும்

உத்தமன்—அவ்வடியார்களிடம் தனது அருட்குணங்களைப் பதிவித்து அவர்களோடு உடனாய் நின்று அவர்கள் நுகரப்பெறும் சிவ போகத்தைத் தானும் அறிந்து நுகர்தல் காரணமாக அவர்கள் தனது சிவபோகத்தை அழுந்தி அறிந்து நுகரும்படி செய்கின்ற உத்தமனுமிருக்கின்றான்

இது—மேலே கூறுகிறபடி செற்றதோர் மனம் ஒழிதல், சிந்தை செய்தல், சிவமூர்த்தி என்றெழுதல் ஆகிய இந்தத் தவத்தை

ஓர் மாயக்குரம்பை நீங்க வழி வைத்தார்—(திருக்கழிப்பாலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமான்) அடியார்களாகிய நாம் ஒப்பற்ற வஞ்சனை நிறைந்துள்ள உடலினது தன்மையினின்று நீங்கித் தன்னை அடைந்து உய்யும் வழியாக அமைத்துள்ளான்

அவ்வழியே நாம் போதும்—அங்ஙனம் அவன் அமைத்த அந்த வழியிலேயே அடியாராகிய நாம் சென்று இன்பப் பேறு அடைவோமாக.

விளக்க உரை:—

தான் ஓதாது எல்லாம் கற்றதோர் நூலினன்—சிவபெருமான் எவ்வகை அறிவுக்கும் முதலாயுள்ளவன்; அவன் அறிகிற அறிவுக்கு ஒரு முதலுமில்லை. திருவள்ளுவர், அவனை 'வால்அறிவன்' என்றார். 'ஓதாதே வேதமுணர்ந்தாய் போற்றி'' (269—11) என்று திருநாவுக்கரசு அடிகள் கூறுதல் காண்க.

களிறு செற்றான்—களிறு என்பது யானை. அது இங்கே உருவகமாய் யான் எனது என்னும் செருக்கைக் குறிக்கிறது—''இருகை யானையை யொத்திருந் தென்னுள்ளக் கருவையான் கண்டிலேன்'' என்று மாணிக்கவாசக அடிகள் கூறியதும் இப்பொருள் பற்றியாகும்.

செறுதல் என்பது அழித்தல். மலரகிதனாகிய சிவபெருமானுக்கு யான் எனது என்னும் செருக்கு இயல்பாகவே இல்லாதிருப்பினும் அவனைச் செருக்கை அழித்தவன் என்று இங்கே அடிகள் கூறியது மலசகிதமாயுள்ள மக்களுடன் ஒப்பிட்டுநோக்கி என்க. அடிகள் திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் ௩-வது பாட்டில் 'நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந்தும் வென்றானை' என்று கூறியதும் இக்கருத்துப்பற்றியாகும். ''பொறிவாயிலைந்தவித்தான்'' என்று கடவுளைத் திருவள்ளுவர் கூறியதையும் நோக்குக.

கழிப்பாலை மேய கபாலப்பனார்—மேவிய என்பது மேய என இடைக் குறைந்து நின்றது. 'கபாலம்' என்பது நான்முகனது தலையினோடு. அச்சொல்லில் 'அம்' குறைந்து 'கபால்' என நின்று 'கபால்' என்பதனோடு 'அப்பனார்' சேர்ந்து கபாலப்பனார் என நின்றது. சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் தந்தையாதலின் அப்பனார் என்று கூறப்பட்டான். 'நூலினன்', 'களிறு செற்றான்'; 'கபாலப்பனார்' 'வழிவைத்தார்' எனக் கூறியன ஒருமைப் பன்மை மயக்கம். முன்னைய இரண்டு சொற்களும் சிவபெருமானுடைய ஏகனாகிய சிறப்பு இயல்பையும், பின்னைய இரண்டு சொற்களும் அவனுடைய அநேகனாகிய பொது இயல்பையும் குறித்தலால் அடிகள் அவ்வாறு கூறினார்போலும்.

செற்றது ஓர் மனம் ஒழிந்து—செற்றது என்பது இறந்த கால இடைநிலையோடு 'து' விகுதி கூடிய தொழிற்பெயர். செற்றது = வெறுத்தது. வெறுத்தல் = ஐம்பொறிகளால் நுகரப்பெறும் உலக நுகர்வுகளைப் பேய்த்தேர்போல் நிலையில்லாதனவெனக் கண்டு வெறுத்தல். இந்த வெறுப்பு மனதின்கண் நிகழ்தலால் மனம் ஒழிந்து என்றும், முன் செற்ற நுகர்வைப் பின் நினைத்தலால் அதன் வாசனை வந்து மனதைத் தாக்குமாதலின் செற்றது ஓர் மனம் ஒழிந்து என்றும் அடிகள் கூறினர். மனமானது பொய் ஆகிய உலகத்தை மெய் ஆகவும், மெய் ஆகிய சிவத்தைப் பொய் ஆகவும் மாறி எண்ணி, எண்ணில்லாத சங்கற்ப விகற்பங்களைச் செய்தலால் வீடுபேற்றை அவாவும் அடியார்கள் அத்தகைய மனத்தை அதன் வாசனைகூட இல்லாமல் அழித்து அமைதியுடன்

மெய்ப்பொருளாகிய சிவத்தையே நோக்கும் மனமாகச் செய்தல் வேண்டும் என்பார் செற்றதோர் மனம் ஒழிந்து என்ருர். ஒழிதல்-அழித்தல், கெடுத்தல் (The mind is the great slayer of the real.)

மனமிறுக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே என்று தாயுமான அடிகள் கூறியது நோக்குக. இஃது அடியார்களுக்கு ஞானசாரியரிடம் கேட்ட உண்மையைச் சிந்தித்தலால் உண்டாவது. இதன் பயனுக அவர்களுக்கு அருள்மேனியாகிய சிவரூபதரிசனமும் அதனுடன் நிகழும் ஆன்ம தரிசனமு முண்டாகும். ஆன்ம தரிசனம் காரணமாக ஆன்மா, தான் வேறு முப்பத்தாறு தத்துவங்களும் வேறு என்றும், தான் சடப்பொருள்களாகிய தத்துவங்களை அறிகிறவன் என்றும் அறிதலால் அச்சடத்தத்துவங்கள் தன்னுளடங்கி நிற்கக் காண்கின்ருன். இதனுல் ஆன்மாவின் அறிவுநிகழ்ச்சி கூறப்பட்டது.

சிந்தை செய்து—என்பது ஞானசிரியரிடம் உண்மைப் பொருளைக் கேட்டுச் சிந்தித்த அடியார் ஐயம் திரிபுகளறச் சிவமே மெய்ப்பொருளெனச் சிறிதும் கருவி அறிவுக் கலப்பில்லாத மெய்யறிவினுலே தேறித்தெளிந்து அச்சிவம், தம்பொருட்டு ஒழிவின்றிச் செய்துவரும் அருட்செயல்களை நினைந்து நினைந்து உருகி உருகி அவனிடத்து அன்பு மீதூர்ந்து அவனையே நினைந்து கொண்டிருத்தல். இங்ஙனம் அவர்கள் தெளிந்து சிந்தித்தலின் பயனுக ஆன்ம சுத்தியும் அதனேடு உடன் நிகழும் சிவதரிசனமும் உண்டாகும். மேலே கூறியவண்ணம் ஆன்ம தரிசனத்தின் பயனுக ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களும் தன்னுளடங்கி நிற்கக் கண்டபின் அறியாமையாகிய கேவல நிலையில் பொருந்தாது நிற்க, அதனிடத்து அருள்ஞானம் விளங்கித்தோன்றும்; அங்ஙனம் விளங்கித்தோன்றும் சுடரொளியை ஆன்மாத் தன்னுடையதென்று அகம்பிரம ஞானங்கொள்ளாது தன்னை விட்டு என்றும் நீங்காத அருட்சத்தியின் சுடரொளி என்றறிந்து அச்சத்தியினுளடங்கித் தற்போதமின்றி நிற்ப அந்த அருள் ஞானச் சுடரொளியில் ஞேயப்பொருளாகிய சிவம் ஆன்மாவின் அகக்கண்ணுக்கு வெளிப்பட்டுத் தோன்றும். இவ்வாறு சிவம் வெளிப்பட்டுத் தோன்றுதலே சிவதரிசனம் என்று கூறப்படும். சிவதரிசனத்தின்பின் ஆன்மாவுக்குச் சிவத்தோடு இரண்டறக் கலந்து நிற்கும் சிவயோகம் உண்டாகிறது. இதனுல் ஆன்மாவின் திருந்திய இச்சையாகிய அன்பு நிகழ்ச்சி கூறப்பட்டது.

சிவமூர்த்தி என்று எழுவார் சிந்தையுள்—சிவம் என்பது இன்பம் என்றும் மூர்த்தி என்பது உருவமுடையவன் என்றும் பொருள் படும். மேலே கூறியவாறு சிவமே மெய்ப்பொருளெனத் தெளிந்து அவனை மெய்யன்புடனுருகிச் சிந்தித்துக்கொண்டிருக்கும் அடியார்கள் அவனே தங்களுக்குப் பேரின்பம் தரவல்ல இன்ப உருவன் என்று உணர்ந்து நிட்டை கூடுதலால் அடிகள் சிவமூர்த்தி என்று எழுவார் சிந்தையுள் என்ருர்.

எழுதல் என்பது சிவப்பேறு அடைதற்கு முனைந்து நிற்றல். ஆல்-அசை. இதனால் ஆன்மாவின் நிட்டையாகிய செயல் நிகழ்ச்சி கூறப்பட்டது. திருந்திய அறிவு அன்பு செயல் ஆகிய மூன்றுமே முறையே காரண காரியங்களாய் நிகழ்ந்து ஆன்மாவுக்குப் பேரின்பந்தருதற்கு ஏதுக்களாயுள்ளன.

உற்றது ஓர் நோய் களைந்து—மேலே கூறுகிறபடி அடியார் செற்றதோர் மனங் களைந்ததைச் சிவபெருமான் நோக்கி அவர்களுடைய பக்குவத்தை அறிந்து அவர்களுக்கு வேறாய் நின்று அறிவித்து அவர்களை அநாதியே பற்றியுள்ள ஆணவமல வலியை நீக்குகின்றான் என்பார் உற்றது ஓர் நோய் களைந்து என்றார். ஆணவமலமானது ஆன்மாவினுடைய அறியாமைக்கும் அதுபற்றி உண்டாகும் எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமாயிருத்தலால் ஓர் (ஒப்பற்ற) நோய் என்றார். நோய் என்பது பிணி (வியாதி). ஆணவமலம் உயிர்களை நோய்போலப் பிணித்துத் துன்பஞ்செய்தலால் அதனை அடிகள் நோய் என்றார். இனம் பற்றி ஆணவமல நீக்கத்துக்காக இடையே வந்து ஆன்மாவைக் கூடும் வினை மாயை மலங்களும் கொள்ளப்படும். களைந்து என்பது சிறிதும் எஞ்சுதலின்றி முழுவதும் நீக்கி என்று பொருள்படும். இதனால் சிவபெருமானால் அடியார்களுக்கு உண்டாகும் மலநீக்கமும் அதுபற்றிவரும் அறிவு விளக்கமும் கூறப்பட்டன. மேலும் இதனால் சிவபெருமானுக்கும் ஆன்மாவுக்கு முளதாகிய அத்துவித நிலையில் சிவபெருமான் ஆன்மாவுக்கு வேறாய் நின்று அறிவித்துச் செய்யும் காட்டு முதவியும் கூறப்பட்டது.

இவ்வுலகமெல்லாம் காட்டுவான்—மேலே கூறுகிறபடி சிவரூபமாகிய அருள்மேனியையே நினைந்துகொண்டிருக்கும் அடியார்களைச் சிவபெருமான் நோக்கி அவர்களுடைய பக்குவத்தை அறிந்து அவர்களுக்குத் தான் அருளையே திருமேனியாகக்கொண்டு உயிர்கள் பொருட்டு உலகெலாம் நிறைந்து நின்று அருள்செய்து நிற்றலை அவர்களோடு ஒன்றாய்க் கலந்து நின்று கண்டு அவர்களையும் தனது எங்கும் நிறைந்துள்ள வியாபகத்தைக் காணும்படி செய்கின்றான் என்பார் உலகமெல்லாங் காட்டுவான் என்றார். அடியார்கள் தங்களோடு சிவபெருமான் ஒன்றாய்க்கலந்து நின்று கண்டு தங்களையும் காணச்செய்யும் மெய்யன்பால் சிவபெருமானுடைய வியாபகத்தை அறியாவிட்டால் அவனுடைய அருட்செயலை நினைந்துருகி அவனிடத்தில் அன்புமீதூர்ந்து அவனுடைய வியாபகத்தில் அடிமையா யடங்கிநிற்றல் முடியாது. இதனால் அறிவு விளக்கத்துக்குப்பின் அடியார்களுக்கு உண்டாகும் அருள்விளக்கம் கூறப்பட்டது. இந்த அறிவு விளக்கத்தினால் துரியநிலையின்கண் ணுளதாகும் பேரின்பப் பிரபை உண்டாகுமே அன்றித் துரியாதீதநிலைக்க ணுளதாகும் பேரின்ப அனுபவ முண்டாகமாட்டாது. மேலும் இதனால் சிவபெருமானுக்கும் ஆன்மாவுக்கு முளதாகிய அத்துவிதநிலை

யில் சிவபெருமான் ஆன்மாவோடொன்றாய் நின்று கண்டு ஆன்மாவையும் காணும்படி செய்கிற காணுமுதவியும் கூறப்பட்டது.

உத்தமன்—மேலே கூறுகிறபடி சிவமூர்த்தி என்று நிட்டைசெய்யும் அடியார்களைச் சிவபெருமான் நோக்கி அவர்களுடைய பக்குவமறிந்து அவர்களிடத்தில் தன் அருட்குணங்களைப் பதியச்செய்து அவர்களோடு உடனாய்த்தங்கி நின்று அறிந்து அவர்களையுந் தனது சிவபோகத்தை அறிந்து நுகரச்செய்யும் உத்தமனாயிருக்கின்றான் என்பார் உத்தமன் என்றார். தனக்கென ஒன்றும் வேண்டாது பிறரையும் தன்போல நோக்கி இன்பமடையச் செய்கின்றவன் உத்தமன் ஆதலின் அடிகள் இங்கே உத்தமன் என்றும், பெயர்க்குறிப்பு எதவினால் சிவபெருமான் அருள் விளக்கம் அடைந்த அடியார்களுக்கு ஆனந்தவிளக்கம் அருள் செய்ததைக் கூறியருளினர். உத்தமன் என்பது உத்தமனாயிருக்கின்றான். இங்கே ஆன்மா சிவபோகம் நுகர்தற்குச் சிவபெருமான் ஆன்மாவோடொடனாய்நின்று ஆன்மா நுகரப்பெறும் சிவபோகத்தை அறிந்தாலன்றி ஆன்மா சிவபோகம் நுகரமுடியாது என்னும் எச்சமயத்திலுங் கூறப்படாத அரிய சைவசித்தாந்த உண்மை குறிக்கத்தக்கது. இதுபற்றிச் சில ஆகமங்களில் சிவபெருமானும் தனது பேரின்பத்தை ஆன்மாவில் நின்று நுகர்வன் என்று கூறுகின்றன. ஆனால் சிவபெருமான், தனது இன்பம் நுகர்தற்கு ஆன்மாவைப்போல அழுந்தி அறிய வேண்டியதில்லை, அறிந்தால் மாத்திரம் போதுமானது.

ஓதாதெல்லாங் கற்றதோர் நூலினனாயும் களிறு செற்றானாயும் இருக்கின்ற கழிப்பாலைமேய கபாலப்பனார், உற்றதோர் நோய்களைந் திவ்வுலக மெல்லாங் காட்டுவானாகி உத்தமனாகியு மிருக்கின்றான் என்று இயைய உரைத்துப் பொருள் முடிவு செய்க. கபாலப்பனார்-எழுவாய்; உத்தமன் பயனிலை. இதனால் அருள் விளக்கத்துக்குப்பின் அடியார்களுக்கு உண்டாகும் ஆனந்த விளக்கமும் சிவபெருமானுக்கும் ஆன்மாவுக்குமுளதாகிய அத்துவித நிலையில் சிவபெருமான் ஆன்மாவோடுடனாய்நின்று ஆன்மாவைப் பேரின்பம் (ஆநந்தம்) நுகரச்செய்யும் நிலையும் கூறப்பட்டன.

மற்று இஃது ஓர் மாயக்குரம்பை நீங்க வழிவைத்தார்—மற்று—அசை. மேலே சொல்லப்பட்ட செற்றதோர் மனம் ஒழிதல்; சிந்தை செய்தல்; சிவமூர்த்தியென் றெழுதல் ஆகிய மூன்றும் அடியார் உலகப்பற்றை விட்டுத் துறவு நெஞ்சினராய்ச் சிவபெருமானை நோக்கிச் செய்யும் தவமாதலின் அடிகள் அவற்றைச் சாதியொருமையில் இஃது என்று குறிப்பிட்டார்.

மக்களால் நீங்குதற்கரிய மாயக்குரம்பை ஆதலின் ஓர் (ஒப்பற்ற) மாயக்குரம்பை என்றார். குரம்பை என்பது உடல்; அஃது இங்கே ஆகுபெயராய் உயிர்களை உலகநுகர்வுகளி விழுத்துச்செல்லும் வஞ்சப்பொறிகளோடு கூடிய உடலினது தன்மையைக் குறிக்கிறது. மாணிக்கவாசக அடிகள் குரம்பை நீங்க என்பதற்கு

ஊன் (உடல்) கெட்டு என்று கூறியதை நோக்குக. உடலினது தன்மை என்பது உடலை உயிரினின்று பிரியாது உடலையே உயிராக நோக்கும் தன்மை (Personality). மேலே வந்துள்ள கபாலப்பனார் என்பதை இதற்கு எழுவாயாக்கிக் கபாலப்பனார் இஃது (இதனை) ஓர் மாயக்குரம்பை நீங்கவழி (ஆக) வைத்தார் எனப்பொருள் முடிவுசெய்க.
வைத்தார் என்ற சொல்லோடு சேர்ந்திருக்கும் கு அசை.

அவ்வழியே நாம் போதும்—நாம் என்பது அடியார்களைக் குறிக்கிறது. அடிகள் தம்மை அடியார்களுடன் உளப்படுத்தி நாம் என்று கூறுகின்றார். போதும் என்பதில் தும் என்ற வினை விகுதி எதிர்காலத்தைக் காட்டுகின்றது. போதும் என்ற சொல் போய்ப் பேரின்பமடைவோமாக என்ற பொருளைக் குறிப்பாலே தந்துநின்றது. நாமே என்பதிலுள்ள ஏ அசை. அவ்வழியே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலையைக் குறிக்கிறது.

இந்த அருமைத் தேவாரப்பாட்டில் அடிகள் வீடுபேற்றை அவாவும் அடியார்களை நோக்கி அவர்கள் உய்யும்வழியைக் கூறுகின்றார், ஏனையோர்களுக்கு அதிற்கூறப்பட்ட தவங்கூடாமையின். இப் பாட்டில் ஒவ்வொரு கொத்திலும் மூன்று அடங்கிய மூன்று கொத்துக்கள் (Sets) கூறப்பட்டுள்ளன. பதவுரையில் உரை நடை செய்திருக்கிறபடி முதலாவது கொத்தில் சிவபெருமான் எல்லாம் அறியும் (1) பேரறிவும், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செய்யும் (2) பேரன்பும், அவ்வுயிர்களுடைய பக்குவ மறிந்து அவை இன்பநலமடைதற்கு வேண்டுவன செய்யும் (3) பேராற்றலும் உடையவன் என்பது கூறப்பட்டது. இரண்டாவது கொத்தில் துறவு நெஞ்சுள்ள அடியார்கள் சிவபெருமானை அடைதற்குத் தங்கள் (1) அறிவினாலே செய்யும் செற்றதோர் மனம் ஒழிதலும் (2) தங்கள் அன்பினால் சிந்தை செய்தலும் (3) தங்கள் செயலால் சிவமூர்த்தி என்றெழுதலும் கூறப்பட்டன. மூன்றாவது கொத்தில் அடியார்கள் செய்யுந் தவக் கூறுபாடுகளைச் சிவபெருமான் அறிந்து பக்குவம் நோக்கி அவர்களுக்குச் செய்யும் (1) உற்றதோர் நோய் களைதலும் (2) உலக மெல்லாங் காட்டுதலும் (3) உத்தமனாய்த் தந்தை முறைமையிற் பேரின்பமளித்தலுங் கூறப்பட்டன.

இரண்டாவது கொத்தில் அடியார்களுடைய தவக்கூறுபாடுகளும், மூன்றாவது கொத்தில் அத்தவங்ககளால் சிவபெருமான் அடியார்களுக்கு அளிக்கும் தவப்பயன்களும், முதலாவது கொத்தில் அத்தவப்பயன்களை அடியார்களுக்கு அளித்தற்கு வேண்டுவனவாயுள்ள சிவபெருமானுடைய வல்லமைகளும் கூறப்பட்டுள்ளன. இம்மூன்று கொத்துக்களும் முறையே ஒன்றுக்கொன்று நேர்மையாயும் பொருத்தமாயு மிருத்தலைச் சிவநேயர்க ளுற்றுநோக்கிச் சிந்தித்து அகமகிழ்வார்களாக.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழ் யாப்பிலக்கண நூல்கள்

[வித்வான் மா. இராசமாணிக்கம் அவர்கள், P. O. L.]

குறிப்பு: இதனை ௩௨௬-ஆம் பக்கத் தொடர்ச்சியாகவும், ௩௭௪-ஆம் பக்கத்தின் முற்பகுதியாகவும் வைத்துப் படிக்க.

அவர், "ஐஞ்சீர் வெள்ளையுட் புகாமை யெற்றாற் பெறுது மெனின்,

'ஐஞ்சீர் அடுக்கலும் மண்டிலம் ஆக்கலும் வெண்பா யாப்பிற்குரிய அல்ல'

என்று நக்கீரர் அடிநூலுள் எடுத்தோதினமையாற் பெறுதும்" (சூ. 40-ன் உரை) எனக் கூறினமையால் அறிக. இதனைப் பேராசிரியரும் செய்யுளியல் சூ 43-ன் உரையிற் கூறியுள்ளார். எனவே, அவிநயர் நக்கீரது காலத்திலோ முற்பட்ட காலத்திலோ இருந்தவராதல் வேண்டும். ஆனால், அவிநயர் தொல்காப்பியரோடிருந்த பதினொருவருள் ஒருவராகக் கூறப்பட்டிருத்தலின் இவரும் இரண்டாம் கடல் கோளுக்கு முற்பட்டவர் என்பதில் ஐயமில்லை. யா. வி. உரையாளர் 15-ம் சூத்திரவுரையுள், "அவிநயத்துள்ளும்...... எனப் பொதுவகையாற் கூறி இன்ன இடத்து இன்ன எழுத்துப் பிறக்கும் என்று 'கணக்கியலுள்' புறநடை எடுத்தோதினார்" எனக் கூறுவதிலிருந்து, 'கணக்கியல்' என்பது அவிநயத்துள் 'ஓர் இயல்' என்பது புலனாதல் காண்க.

வாய்ப்பியர் என்பவரும் தொல்காப்பியரோடிருந்த பதினொருவருள் ஒருவர் எனக்கூறப்படுதலின், அவரும் குமரியாறு கடலால் கோள்ளப்படாமுன் இருந்தவர் என்பது புலனாம்.

(கி. மு. 504—கி. பி. 200)

பேராசிரியர் செய்யுளியல் முதற்சூத்திர வுரையில்

"......'வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்திசை\யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்'

எனத் தொடங்கித் தென்திசையும் கடலே எல்லை எனக் கூறலால், சிறுகாக்கை பாடினியார் குமரியாறு கடல் கொள்ளப்பட்ட பின்னர் இருந்தவர்" என்பர். இடைச் சங்கத்துக் காக்கை பாடினியாரை நோக்கி, இவர் 'சிறு காக்கைபாடினியார்' என வழங்கப்பட்டனர் என்க. இவரன்றிப் பரிமாண

ஞர், நல்லாறனுர் செய்த இலக்கண நூல்களும், நக்கீரர் நாலடி நாற்பதும், செய்யுள் இயல் முதலியனவும் இக்காலத்திய நூல்களாம். மாதிரிக்கொரு சூத்திரமாகப் படித்துப் பார்ப்பினும் இவற்றின் பழமையும் அருமையும் நன்குணரலாம்.

(கி. பி. 200—கி. பி. 1120)

தமிழ்ப் புலவரும் வடநூல்வழித் தமிழாசிரியரும் செய்தவை சங்கயாப்பு, பாட்டியல்நூல், மாபுராணம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம் (இது யா. வி. உரையில் குறிக்கப்படவில்லை) முதலியனவாம்.

இதுகாறும் யாம் காலமுறையிற் பகுத்துக் கூறிய இந்நூல்கள் அவ்வக்காலத்தேதான் செய்யப்பட்டனவாதல் வேண்டும் என்பதற்கு வேண்டும் ஆதாரங்களைக் காட்டுதல் இன்றியமையாததாகும். முதல் இரு சங்கங்கட்குரிய நூல்களையும் அவற்றின் காலத்தையும் முன்னரே விளக்கினேம். பிற்பட்ட இருகால நூல்கள் அவ்விரு காலங்களிற்றான் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதைத் தக்க சரித்திரச்சான்று கொண்டு விளக்குவோம்: அதன் முன்னர்த் தமிழகத்தில் யாப்புநூலில் பரந்துபட்ட காலஅளவில் கருத்து வேறுபாடுகள் இருந்தன என்பதைக் கீழ்வருவன கொண்டு உணர்தல் நலமாகும்.

“அஃது ஈறுபற்றி அறியும் தன்மைத்தாகலின், இயைபுத் தொடைக்கு இவ்வாறு எட்டு விகற்பமும் சொன்னுர் கையனுர்—தொல்காப்பியனுர் முதலிய ஒருசார் ஆசிரியர். ஈண்டு அவர் மதவிகற்பம் பற்றிச் சொல்லப்பட்டது இது சார்பு நூலாகலின்” (யா. வி. சூ. 34-ன் உரை) எனவும், “...... வெண்சீரின் ஈற்றசை நிரையசையாகவும் இயற்றித் தொல்காப்பியனுரும் நற்றத்தனுரும் முதலாகிய ஆசிரியர் சொன்ன மதமெல்லாம் வல்லார்வாய்க் கேட்டுணர்க” (யா. வி. சூ. 95-ன் உரை) எனவும், “நான்கு பாவிற்கும் பெருமைக்கெல்லை பாடுவோனது பொருள் முடிபின் குறிப்பே, வரையறை இல்லை என்பாரும், அடிவரையறுத்துச் சொல்வாரும் என இருதிறத்தார் ஆசிரியர் என்பது அறிவித்தற்கென்க” (யா. வி. சூ. 32-ன் உரை) எனவும், “தொல்காப்பியனுர் நக்கீரனுர் முதலாகவுள்ள ஒருசார் ஆசியர் ஆசிரியத்துள்ளும் கலியுள்ளும் ஐஞ்சீரடியும் அருகிவரப் பெறும் என்று கூறினர்” (யா. வி. சூ. 95-ன் உரை) எனவும், “காக்கைபாடினியாரும் பாட்டியலுடையாரும் யாப்பியல் உடையாரும் முதலிய ஒரு சாராசிரியர் இவற்றையும் இனத்தின்பாற்படுத்தி வழங்குவர்.

தொல்காப்பியனார் முதலிய ஒருசார் ஆசிரியர் இவற்றையும் மேற்கூறப்பெற்ற பாவினங்களையும் கொச்சகக் கலிப்பாற் படுத்தி வழங்குவர் எனக் கொள்க. இனி ஒருசார் வடநூல் வழித் தமிழாசிரியர் 'ஒருபுடை ஒப்புமை நோக்கி இனமெனப் படா; மூவகைப்பட்ட விருத்தங்களுள்ளும் சந்தத் தாண்டகங் களுள்ளுமே பட்டடங்கும் என்பர். இந்நூலுடையார், காக்கை பாடினியார் முதலிய ஒருசார் ஆசிரியர் மதம்பற்றி எடுத்தோதி இவையும் உடன்பட்டார் எனக் கொள்க" (யா. வி. பக்கம். 475) எனவும் வருவன—அமிதசாகரர் காலத்தும் உரையாளர் காலத்தும் அவர்க்கு முற்பட்டுப் பரந்துபட்ட காலங்களிலும் பல யாப்பிலக்கண நூல்களும் கருத்து வேறு பாடுகளும் இருந்தமை கவினுறக் காட்டுகின்றன அல்லவா?

ஈண்டுக் காட்டப்பெற்றவருள் கையனார், தொல்காப்பி யனார், நற்றத்தனார், அவிநயனார், நக்கீரனார் முதலியோர் ஒரு சாரார்; காக்கை பாடினியார், யாப்பியலுடையார், பாட்டியல் உடையார், முதலியோர் பிறிதோரு சாரார்; வடமொழிப் புல மையும் தமிழ்மொழிப் புலமையும் ஒருங்கே பெற்ற 'வட நூல்வழித் தமிழாசிரியர் மூன்றும் பிரிவினர். இக்கடைப் பிரிவினர் கி. பி. 200—கி. பி. 1120-க்குட்பட்டவராவர்; என்னை?

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்வான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

குறிஞ்சி

தலைவன் தலைவியற்கிடையே நிகழும் களவொழுக்கம் அவ்வூ ரார்க்குப் புலனாக, அலர் பெரிதாயிற்று; அங்ஙனமாகியும் வரைந்து கொள்ள நினையாது இரவுக்குறி வேண்டிய தலைமகனுக்குப் பாங்கி இசைந்தாற்போல மறுத்தது.

கபிலர் பாடியது

42. காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென வருவி
விடரகத் தியம்பு நாட வென்
தொடர்புந் தேயுமோ நின்வயி னானே.

என்பது இரவுக்குறி வேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தது.

பதவுரை:—

யாமத்து—இரவில், கருவி மாமழை வீழ்ந்தென—உலகத்திற்குக் காரணமாகிய பெருமழை பொழிந்ததும், அருவி விடரகத்து இயம்பும் நாட—அருவி மலைமுழையில் பாய்ந்து ஒலிக்கும் மலைநாட்டுத் தலைவனே, காமம் ஒழிவது ஆயினும் (அறத்தின் வழித்தன்றி நிகழும்) களவொழுக்கத்துக் காமம் கைவிடத்தக்கதாயினும், நின்வயினானே, எம் தொடர்பும்—உன்னிடத்தில் பொருந்தியுள்ளதான எம்முடைய தொடர்ச்சிக்குக் காரணமாய பற்றும், தேயுமோ—குறைந்துவிடுமோ? (குறையாது).

யாமம்—நள்ளிரவு. கருவி மாமழை—உலகவாழ்விற்கு முதற்காரணமாய் மாட்சிமைப்பட்ட மழை. கருவி—தொகுதியுமாம். விடர்—மலைப்பிளவு, தேயுமோ—ஓகாரம் எதிர்மறை. காமம்—கற்பொழுக்கமில்லாது களவொழுக்கத்தில் பொருந்துவதாகிய காமம்.

இறைச்சிப்பொருள்:—

இரவில் மழை பெய்ததும் அருவிகள் விடரகத்து முழங்கும் என்றது தலைவன் களவொழுக்கத்தில் கூடித் தலைவிக்குக் கருணை செய்தது ஊரில் அலராயிற்று என்பதாம்.

மேற்கோள் விளக்கம் :—

1. 'யாமம்' 'நள்ளென்றன்றேயாமம்' —குறுந். 6
2. 'கருவிமாமழை வீழ்ந்தென அருவி விடரகத்தியம்பும்'—

(அ) 'அருவிமாமலைத்தக்கக்
கருவிமாமழை சிலைதருங் குரலே' —குறுந். 94

(ஆ) 'கருவிமாமழை' —கம்ப. அயோத். சித்திர. 14

(இ) 'கருவி மாமழை' —நைடதம். நாட்டு. 1

(உ) 'கருவிவானந் தலைஇயாங்கு' —புறம் 159-19

(ஊ) 'கருவி வானந்துளி சொரிந்தாங்கு' —பெரும்பாண் 24

(எ) 'கருவிமாமழை கனைபெயல் பொழிந்தென'
—சீவக. 2752

(ஏ) 'கருவிவானம் போல' —புறம். 204-13

கருவிமாமழை என்பதில் கருவி என்பதற்கு "மின் முதலிய தொகுதியையுடைய மழை' என்றும், "மின்னும் இடியும் முதலாகிய

தொகுதியையுடைய மழை" என்றும் புறநானூற்றுரையாசிரியர் கூறுவர்.

"கடவுளதாணையான் உலகமும் அதற்குறுதியாகிய அறம் பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழை" எனப் பரி மேலழகர் கூறியிருப்பதும், 'வானின்றுலகம் வருதலால்" என வள்ளுவர் வாய்மொழியும் ஈண்டு கருதற்பாலன.

"கருவி மாமழை கனைபெயல் பொழிந்தென வழிநாளருவி போற் றொடர்ந்து" என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளடிகட்கு நச்சினார்க்கினியர், "பெருமழை பெய்ததாகப் பின்னர்ச் சில கல்லிடையருவி இடையறு தொழுகுமாறு போலே" என்று எழுதி யிருப்பது நோக்கத்தக்கது. நாம் அலர் அஞ்சுவோம் என்பாள் "காமமொழிவதாயினும்" என்றும், நீ அலரஞ்சலே, இரவின் வரும் ஏதம் எண்ணலே என்பாள், "அருவி விடரகத்தியம்பும்நாட' என்றும் கூறியவாறும்.

மெய்ப்பாடு—அச்சம்.

பயன்—வரைவுகடாதல்.

பாலை

தலைவியிடம் கூறாது பிரிந்து சென்ற தலைவனது பிரிவு நீட்டித்தவழிப் பிரிவாற்றாது வருந்திய தலைவி தோழிக்குச் சொல் லியது.

ஔவையார் பாடியது

43. செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே;
விடுவா ளல்லளென் றவரிகழ்ந் தனரே;
ஆயிடை யிருபே ராண்மை செய்த பூச
னல்லார்க் கதுவி யாங்கென்
னல்ல னெஞ்ச மலமலக் குறுமே.

என்பது பிரிவிடை மெலிந்த கிழத்தி சொல்லியது.

பதவுரை:—

செல்வார் அல்லரென்று—தலைவர் என்னைவிட்டுப் பிரிந்து செல்லமாட்டாரென்று, யான் இகழ்ந்தனனே—நான் அலட்சியமாக இருந்தேனே, விடுவாள் அல்லள் என்று—தன் பிரிவைக் கூறின் போகவிடமாட்டாள் என்று கருதி, அவர் இகழ்ந்தனரே—அவர் என்னிடம் கூறாது இகழ்ந்து சென்றனரே, ஆயிடை—இவ்வாறிருவரிடையிலும் நிகழ்ந்தது, இரு பேர் ஆண்மை செய்த பூசல்—இரண்டுபேர்கள் தம்முள்

பகைத்து வலிமையோடு செய்த சண்டை, நல்லார்க் கதுவியாங்கு—அதில் தொடர்பிலா நல்லோரை வருத்தினாற்போல, என் அல்லல் நெஞ்சம்—என்னுடைய துன்பத்தையுடைய உள்ளம், அலமலக்கு உறுமே—(மிக்க துன்பத்தால்) கலக்கமடையுமே.

இகழ்தல்—பொருட்படுத்தாதிருத்தல். அ + இடை = ஆயிடை; 'தூக்காதலின் சுட்டு நீண்டது.' ஆண்மை—ஆகுபெயர். பூசல்—சண்டை. அலமலத்தல்—கலங்குதல். கதுவுதல்—பற்றி வருத்தல். கதுவியாங்கு—ஆங்கு—உவம உருபு. பூசல்—பிரிந்தவிடத்துண்டாகிய அலர்.

மேற்கோள் விளக்கம்:—

1. "ஆயிடை யிருபேராண்மை செய்த பூசல்" "என்புழி ஆயிடை என்பது உருபு ஆதலின், 'நீடவருதல் என்பதனான் முடியாது நீண்டு வகர ஒற்று வேறுபடமுடிந்தது."

—(தொல். எழுத். சூ. 483. உரை)

2. "என் என்பது சொல்லுதல் என்னும் தொழில் குறித்துப் பெயர்வினைகட்குரிய விகுதிகளுடனே வரும்" என்பதற்கு, "செல்வாரல்லர்......அவரிகழ்ந்தனரே" என்னும் முதலிரண்டடிகள் மேற்கோள். —நன். மயிலை. பக். 289

3. "அறியாமைப் பிரிந்த தலைமகனையுடைய கிழத்தி சொல்லியது" என்பதற்கு,

"செல்வாரல்லர்..........அலமலக்குறுமே" என்னும் இச்செய்யுள் மேற்கோள். —இறையனாரகப்பொருள் பக். 250

4. 'தலைமகளிரங்கல்' என்பதற்கு இச்செய்யுள் மேற்கோள்.

—நம்பியகப்-சங்கம்.

1. 'விடுவாளல்லளென்று'—'வீவாளல்லளென்று'

—பிரதிபேதம்.

இச்செய்யுளில் நான்காமடியிலுள்ள 'பூசல்' என்பது மூன்றாமடி யீற்றிலமைக்கப்பட்டு 'ஆயிடை' என்பதைக் கூன் எனக்கொண்டு வரைவாரும், 'ஆயிடை' என்பதைக் கூனாகக்கொள்ளாது வரைவாருமுண்டு.

மெய்ப்பாடு—இளிவரல்.

பயன்—ஆற்றாமை அறிவித்தல்.

ஆனைந்து

[திரு. துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் அவர்கள்]

(முன் ௩௯௮-ஆம் பக்கத் தொடர்ச்சி)

III. கோசலம், கோமயம் சேர்ந்த ஆனைந்தைக் கோயில்களில் உபயோகப்படுத்துவதில்லை. இது கண்கூடு. ஆனைந்து சிவபெருமானுக்கு நனி உகந்ததாயிருந்தும், உபயோகப் படுத்தாதற்குக் காரணம் என்ன?

IV. ஆகமத்தில் கோசலம், கோமயம் கூறப்பட்டிருந்தால் கோயில் குருக்கள்மார் விட்டுவிடக் காரணம் இல்லை. தமிழ் மறைகளில் இருந்தாலல்லவோ ஆகமங்களில் இருக்கும்? ஆகையால் ஆகமங்களில் கோசலம் கோமயம் கூறவில்லை என்பது திண்ணம்.

V. ஒவ்வொரு உடலுக்கும் ஒன்பது வாயில்கள் உண்டு. ஆக்களுக்கும் ஒன்பது வாயில்கள் உண்டு. அவையாவன:—

கண்கள்	2;	மூக்குகள்	2;
செவிகள்	2;	வாய்	1;
நீர்விடும் தாரை	1;	எருவிடும் வாயில்	1;

ஆக 9.

இவ்வொன்பது வாயில்களினின்றும் உண்டாகும் கசிவு நீர்களும், கழிவு பதார்த்தங்களும் யாதொன்றுக்கும் பயன்படா. அவை இயற்கையாகவே கழிக்கப்பட்டவை. கடவுளுடைய கருத்தும் அதுவே. ஆகையால் கழிவிடங்களிலிருந்து வரும் கோசலமும் கோமயமும் பயன்படமாட்டா.

ஆனால், ஆவின் மடியானது இவ்வொன்பது வாயில்களில் ஒன்றிலும் சேராது. அது கெட்ட நீர்களைக் கழிக்க ஏற்படுத்தப்பட்டதல்ல.

அமிழ்தமயமான பால் உற்பத்திக்காகக் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது.

தாய்ப் பாலுக்குப் பின் ஆருயிர்களுக்கு உலகில் ஆவின் பாலே சிறந்தது.

மனிதர்களுள்ளும் முலைக்காம்புகள் ஒன்பது வாயில்களில் சேரவில்லை. இந்தப் பாகுபாடு ஒன்றே கழிவிடங்களிலிருந்து உண்டாகும் பொருள்கள் சிவபெருமானுக்கு ஆகா. ஆகையால் நமக்கும் ஆகா என்று தெரிவிக்கிறது. ஆகையால் அமிழ்த

மயமான பாலுடன் கழிவு பதார்த்தங்களாகிய கோமயம், கோசலம் சேரா என்பது வெள்ளிடை மலையாம்.

VI. மேலும், மனிதர்கள் தாங்கள் எதனை விரும்பிப் புசிக்கிறார்களோ அதனையும், எதனை விரும்பி ஆடுகிறார்களோ அதனையும், எதனை விரும்பி அணிந்து கொள்ளுகிறார்களோ அதனையும் கடவுளுக்குப் புசிப்பித்து, ஆட்டி, அணிந்து வந்தார்கள்.

கொங்கு நாட்டின்கண் ஒருவன் ஊர்கள் தோறும் சென்று உற்றுநோக்குவானானால் கொங்கு வேளாளர்களும் ஏனைய குடிமக்களும் பால், தயிர், நெய், மோர், வெண்ணெய் இவற்றில் ஏதாவதொன்றையாவது அல்லது எல்லாம் சேர்ந்த கலவையையாவது தலைக்குத் தேய்த்து, ஊறவைத்திருந்து, பின் முழுகுவதைக் காணலாம்.

கோசலத்தையும் கோமயத்தையும் தேய்த்து முழுகுவாரைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. அவை முழுக்குக்கு உரிய பொருள்களென்று இதுவரை சொன்னவர்தாமும் கிடையாது. அப்படியிருக்க முழுக்குக்கு ஆனைந்தில் கோசலமும் கோமயமும் சேருவதெப்படி?

VII. வீடுகளில் மெழுகும்போது சாணிப்பால் கல்லின் மேல் படக்கூடாதென்பதும் கற்களை நீர்விட்டே கழுவ வேண்டும் என்பதும் தமிழ்நாட்டுப் பெண்களும் அறிந்தனவே. இந்த ஒரு வழக்கமே சிலாவிக்கிரகங்களின் மேல் சாணிப்பால் படக்கூடாதென்பதைத் தெரிவிக்கும். அதனாலேயே "ஆனைந்தில்" கோசலமும் கோமயமும் சேராது. வேறே இரண்டு பொருள்கள் அவைகளுக்குப் பதிலாக இருக்கவேண்டும் என்பது விளங்க வில்லையா?

ஆகையால் ஆன்=பால் "ஆனைந்து"=பாலும் பாலிலிருந்து உண்டான தயிர், நெய், மோர், வெண்ணெய் ஆக ஐந்தும் என்றே பொருள்கொள்ளவேண்டும். அப்போது ஆன் என்பது ஆகுபெயராகும். ஆனைந்து=பாலாம் ஐந்து என்பது பொருள்.

இனி ஆரியர்களுடைய இருக்குவேதத்தைத் துருவிப் பார்த்தால், முதல் மண்டிலம்—104-வது சுலோகத்தில்,

"குயவன் என்பவனின் மனைவியர் இருவரும் பாலிலேயே தலை முழுகுகிறார்களே. அவர்கள் சிபா ஆற்றின் ஆழத்திலே அமிழ்ந்தி இறவார்களா?"

என்று தமிழர்கள் இனிமையாக வாழ்தலைக்கண்டு மனம்பொறுமல் வயிறெரிந்து இந்திரனை நோக்கிப் பாடி இருக்கிறார்கள்.

இதனை நோக்குமிடத்து, ஆரியர் அக்காலத்தில் பாலிலே தலைமுழுகி அறியாதவர்கள் என்று தெரிகிறது. அதனாலேயே ஆனைந்தின் குணத்தை அறிந்து உபயோகப்படுத்தினவர்கள் அல்லர்.

பிற்காலத்தில் அவர்கள் தமிழர்களுடன் பழகினபிற்பாடு ஆனைந்தை உபயோகப்படுத்த முயன்றபொழுது தெரியாத்தன்மையாலோ வேறெந்தக் காரணத்தை முன்னிட்டோ ஆனைந்தில் மோர்—வெண்ணெய்க்குப் பதிலாகக் கோசலத்தையும் கோமயத்தையும் உபயோகப்படுத்தி வந்தார்கள். அந்த வழக்கத்தைத் தான் பிற்காலத்தில் ஸ்மிருதிகளில் நுழைத்துவிட்டார்கள்.

ஆனைந்து என்பதற்கு இன்னொரு பொருளும் கூறலாம். ஐந்து பசுக்களாகிய நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை இவற்றினின்றும் உண்டாகும் பால் என்பது.

7-ம் இயல்

தமிழர் கையாளும் முறை

ஆனைந்து என்பது இற்றென இதுகாறும் ஆதாரங்களானும் கடாவிடைகளானும் நிலை நாட்டினும். அது தான்:—

(1) பால்	(2) தயிர்	(3) நெய்	(4) மோர்	(5) வெண்ணெய்
ஆகாயம்	வாயு	தேயு	அப்பு	பிருதிவி

இவ்வைந்துமே ஆனைந்து. இவ்வைந்தும் அஞ்சு பூதங்களின் குணத்தைக் கொண்டனவாகும்.

உலகவழக்கில் தயிர் விட்டுக் கொண்டதால் வாயு உபத்திரவம் உண்டாயிற்றென்றும், மோர் விட்டுக் கொண்டதால் சளி பிடித்து விட்டதென்றும் கூறுவதே பஞ்சபூதங்களின் குணம் அவற்றிற்கு உண்டென்பதை நாட்டும்.

இவ்வைந்து பொருள்களையும் ஒன்றுசேர்த்து உபயோகிக்க வேண்டும். அவற்றை ஒன்று சேர்ப்பதற்குத் தமிழர் ஒரு வித முறையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள்.

உலகில் ஒவ்வொன்றுக்கும் ஓர் ஒழுங்கு வேண்டியிருக்கிறது.

ஒழுங்கில்லாத காரியம் வழுவே
ஒழுங்கையுடையது ஒழுக்கம் ஆகும்.

நம் வீடுகளில் நடக்கும் நடவடிக்கைகளை நாம் கவனிப்போமானால் இவ்வொழுங்கு நமது கண்ணுக்குப் புலப்படும்.

நம் வீடுகளை விட ஐரோப்பியர் வீடுகளில் இவ்வொழுங்குகள் செவ்வனே விளங்கும்.

சமையலுக்கு ஒரு இடம், குளிப்பதற்கு ஒரு இடம், மலசலம் கழிப்பதற்கு ஒரு இடம், பாத்திரங்களை வைக்க ஒரு இடம், தானியங்களைச் சேமித்து வைக்க ஒரு இடம், படுக்க ஓர் இடம், படிக்க ஓர் இடம், அதிதிகளை வரவேற்க ஒரு இடம், இப்படியாக ஒழுங்கு முறைகளைக் கவனிக்கலாம்.

ஒன்று செய்யும் இடத்தில் இன்னொன்று செய்தல் கூடாது. இப்படிச் செய்யக் கூடாதென்பதனை அவரவர்கள் அறிவே அவரவர்களுக்கு அறிவுறுத்தும்.

அதுபோல, ஆனைந்தைக் கூட்டுவதற்கும் ஒரு முறை வேண்டியிருக்கிறது.

தமிழர் தங்கள் பழைய முறையை மறந்துவிட்டார்கள். ஆரியர் முறையில் வெகுகாலமாய் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆரியர்கள் முறை இன்னதென்று 2-ம் இயலில் கூறினும்.

ஆரியர்கள் தென்னாட்டுக்கு வந்தபின் பத்ததிகள் ஏற்பட்டபிறகு தமிழ ஆரியர்கள் கைக்கொண்ட முறை இன்னதென்று 3-ம் இயலில் கூறினும்.

ஆகையால் முறைகள் அந்தந்தக் காலத்துக்குத் தகுந்தது போலும் இடத்துக்குத் தகுந்ததுபோலும் நடைபெற்று வந்திருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பார் கூறும் மந்திரங்களும் வித்தியாசப்படுகின்றன.

ஆகையால், இக்காலத்துக்குத் தக தமிழ்நாட்டார் அநுசரிக்கவேண்டிய முறையைக் கீழே கூறுகின்றும்:—

ஆனைந்து கூட்டுவதற்கு ஆரம்பிப்பதற்கு முன் விநாயகர் பூசையும் நீர் வழிபாடும் நடைபெறவேண்டும். அவ்விரண்டினையுங் குறித்துத் தனிநூல்களாக வெளியிட்டிருக்கிறபடியால் ஆண்டுக் கண்டுகொள்க

பிறகு மண்டபத்தின் (நிருதி) தென்மேற்கு மூலையில், அல்லது, விநாயகர் பூசைக்குப் போடப்பட்ட வாழையிலை

யின் தென்மேற்கு மூலையில் அரிசியையோ, நெல்லையோ பரப்பி அதில் கீழ்கண்ட பிரகாரம் 9 கோட்டங்கள் அமைத்து, அதில் 1-2 என்று காட்டிய வரிசைப்படி 6 சிறிய கிண்ணங்களோ அல்லது தொன்னைகளோ வைத்து, வட்டகையிலுள்ள நீரினால் பாத்திரங்களில் தெளித்து சுத்தியானதாகப் பாவித்து

6	2	
4	1	3
	5	

1-வது	தொன்னையில்	பாலும்
2-வது	,,	தயிரும்
3-வது	,,	நெய்யும்
4-வது	,,	மோரும்
5-வது	,,	வெண்ணெயும்
6-வது	,,	தர்ப்பையும் நீரும்

விட்டு, அந்தந்தக் கோட்டத்தில் காட்டிய எண்படிக்கு சிவ மூல மந்திரத்தை அத்தனை தடவை செபித்துப் பிறகு.

5-ல் உள்ளதை	4-லும்
அவ்விரண்டையும்	3-லும்
அம் மூன்றையும்	2-லும்
அந் நான்கையும்	1-லும்
பிறகு ஐந்தையும் சேர்த்து	6-லும்

விட்டு, தர்ப்பையால் நன்றாய்க் குழைத்து, சுற்றிவளைத்தல், திக்குக் கட்டு, தேனுமுத்திரை முதலிய முத்திரைகளைக் கொடுத்து மறுபடியும் மூடுதல் முத்திரையுடன் சிவமூல மந்திரத்தை 21 தரம் செபிக்க வேண்டும். தீட்டுக்காயிருந் தால் 108 தரம் செபிக்கவேண்டும்.

பிறகு ஆனைந்தைக் காதுபோல் மடித்த ஒரு மாவிலையால் எடுத்து மூன்று தரம் பருகவேண்டும். பருகும்போது தீட் டைப் போக்குகிறதற்காகச் செய்திருந்தால் "தீட்டுப் போய் விட்டதாகவும்" நோய் நீக்கத்திற்காகச் செய்திருந்தால் "நோய் நீங்கிவிட்டதாகவும்" பாவிக்கவேண்டும்.

சிவபெருமானுடைய முழுக்குக்கா யிருந்தால் செபித் தானதும் சிவபெருமானுக்கு நிதானமாக முழுக்காட்ட வேண்டும்.

முத்திரைகளும் பாவனையும் அவசியம் இருச்கவேண்டும். அவைகள் இல்லாமல் செய்யும் கிரியை அவமேயாகும்.

முத்திரைகள் என்பது ஆங்கிலத்தில் (Passes) பாஸஸ் என்று சொல்லப்படும். மெஸ்மெரிசம், ஹிப்னாடிசம் படித்தவர்களுக்கு இவை நன்ருய்த் தெரியும். பாவனைகள் என்பது தான் மந்திரங்கள். ஆங்கிலத்தில் அவைகளை (Suggestions) சஜெஸ்ஷன்ஸ் என்று கூறுவார்கள்.

முக்கரண சுத்தியாய் யாரொருவன் எதனை நினைத்து அதற்குரிய சைகைகளுடன் எதனைச் செய்கிருனே அதனுடைய பலனை அடைகிருன். அந்த மந்திரம் எந்த மொழியில் இருந்தாலும் இருக்கலாம். மனம் மந்திரத்தோடு ஒற்றுமைப்பட வேண்டும். பலனைச் சீக்கிரம் அடையத் தமிழ் மொழியே மந்திரங்களுக்குச் சிறந்தது.

இந்த முறையும் விரிந்துள்ளது என்று நினைக்கிறவர்கள் இன்னும் சுருக்கமாகவும் செய்யலாம். அதாவது ஒரு வாழையிலையில் அரிசியைப் பரப்பி, பிரணவத்தை வரைந்து அதன் பேரில் தொன்னை ஒன்றை வைத்து, அதிலேயே முதலில் பாலும், பிறகு தயிரும், பிறகு நெய்யும், பிறகு மோரும், பிறகு வெண்ணெயும், பிறகு நீரும் விட்டுத் தர்ப்பையால் குழைக்கவேண்டும். ஒவ்வொன்றையும் விடும்போது சிவ மூலமந்திரத்தை 1 க்கு ஒரு தடவையும் 2 க்கு இரண்டு தடவையுமாக முறையே செபித்துப் பிறகு முன்போலவே எண் வகை முத்திரைகளைக் கொடுத்து 21-தரம் மூலமந்திரத்தால் அபிமந்திரித்துப் பின் உட்கொள்ளவேண்டும்.

ஆனைந்தோடு சலம் சேர்ப்பதானது ஐந்து பொருள்களையும் நன்ருக ஒன்றுசேர்த்தற்கும் சேர்க்கப்பட்ட பொருள்களின் குணங்களைத் தேகத்திற்குத் தக்க பிரகாரம் மாற்றுகிறதற்கும் என்று அறிக.

. இது பாலுக்கு நீர் சேர்த்துக் குழந்தைகளுக்கு உபயோகிப்பதுபோல.

பாலோடு நீர் சேர்த்த போதிலும் "பால்" என்றே சொல்லுவதுபோல ஆனைந்தோடு நீர் சேர்த்தாலும் "ஆனைந்து" என்றே கூறப்படும். "நீர்" எண்ணிக்கையில் சேராது.

இந்த மாதிரி ஆனைந்தைக் கூட்டி உபயோகப்படுத்திக் கொள்வதற்குப் புரோகிதர்கள் வேண்டுவதில்லை. அவரவரே செய்து கொள்ளலாம்.

தானே செய்து கொள்ளுவது தான் சிறப்பானது; பலன் மிக உண்டாம்.

"தான்செய்வது உத்தமம்
மகன்செய்வது மத்திமம்
ஆள்செய்வது அதமம்"

என்ற பழமொழியைக் கவனிக்க.

சிவமூலமந்திரம்—சிவாயநம
பிரணவம்—ஓம்.

எண்வகை முத்திரைகள் ஆவன:—

(1) பார்த்தல் (நிரீக்ஷணம்)
(2) தெளித்தல் (புரோட்சணம்)
(3) தட்டுதல் (தாடனம்)
(4) மூடுதல் (அப்யுக்கணம்)
(5) முத்தட்டு (இடது உள்ளங்கையில் வலது விரல்களால் மூன்று தரம் தட்டுதல் (தாளத்திரயம்)
(6) திசைக்கட்டு (திக்குபந்தனம்)
(7) வளைத்தல் (அவகுண்டனம்)
(8) அமிர்தம் சொரிதல் (தேனுமுத்திரை)

மனத்திலிருந்து உண்டாகும் ஆத்ம சத்தியானது, மின்சார சத்திபோல, கண் பார்வையின் மூலமாகவும் கைவிரல்களின் மூலமாகவும் வெளிவந்து குறித்த பொருள்களின் மேல் பட்டு சுத்திகரிக்கும் என்பது தத்துவநூலின் கொள்கை. ஆகையால் முத்திரைகளைச் செய்தே தீரவேண்டும்.

(முற்றும்)

முருகன்

[திருச்சி, M. C. கல்யாணசுந்தரம் பிள்ளை, B. A., B L]

முருகு என்ற சொல்லுக்கு இளமை, அழகு, வாசனை என்ற பொருள்கள் ஏற்படும். ஆகவே முருகன் என்றால் இளமையுடையவன், அழகுடையவன், வாசனையுடையவன் என்று கொள்ளுதல் வேண்டும். அதற்கிணங்கவே முருகக் கடவுளும் என்றும் இளமையுடையவராயும், மிக்க அழகுடையவராயும் காட்சியளித்து வருகிறார். அவரிடம் எப்பொழுதும் நறுமணங் கமழ்ந்துகொண்டிருக்கும். இளமையும் அழகும் ஒருங்கு சேர்ந்திருக்குமிடத்து வாசனையில்லாதிருக்க முடியாது. முருகன் என்றவுடனே நம்மனக்கண்முன் தோன்று

வது ஓர் மிக அழகிய, கட்டிளமை வாய்ந்த தெய்வ மணங்கமழும் வடிவமன்றோ? இதுபற்றியே நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் "மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி" என்று மிக அழகுபடக் கூறியிருக்கிறார். முருகன் இளமையின் தெய்வம். அவனே அழகின் கடவுளும்.

முழுமுதற் கடவுளும், பதியுமாகிய பரம்பொருள் உயிர்களாகிய நாம் உய்யும்பொருட்டு முருகனைத் தோன்றியுள்ளது. முருகனும் சிவனும் ஒன்றே. முருகனே பரமசிவம். இது பற்றியே குமரகுருபரசுவாமிகள் கந்தர் கலிவெண்பாவில், 'மலர்க்கண் மூன்றும், தாழ்சடையும் வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல் மின்னிடத்துப் பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளி வெற்பில் வாய்த்தனைய தெய்வ வடிவாகி" என்று கூறியுள்ளார். அருணகிரிநாதரும் தெய்வத் திருப்புகழில் முருகனை "படைத்தளித்தழிக்கும் திரிமூர்த்திகள் தம்பிரானே" என்று புகழ்ந்துள்ளார். மலைமாதொடு கூடிய ஆதிப்பிரானுக்கும் வள்ளி தெய்வயானை அம்மைகளோடு கூடிய முருகப்பிரானுக்கும் யாதொரு வேறுபாடும் கிடையாது.

முருகன் அடியார்களுக்கு மிக்க எளியவன்; அவனை அன்புடன் வழிபடுவோர்கள் விரும்புவதை அக்கணமே அளிக்கவல்ல பேரருளாளன். அவன் "பதினுலகத்தினிலுற்றுறு பத்தர்கள் ஏது நினைத்ததும் மெத்த அளித்தருள் இளையோன்." அவனை வழிபட நாம் அவனைத் தேடி அலைய வேண்டியதில்லை. அவனிடம் அன்பு செலுத்துவோமாயின் அவனே நம்மை நாடிவந்து அருள்புரிவான். இது பற்றியே அருணகிரியப்பர் "மாசிலடியார்கள் வாழ்கின்ற ஊர் சென்று தேடி விளையாடியே அங்ஙனே நின்று வாழும் மயில் வீரனே, செந்தில் வாழ்கின்ற பெருமானே" என்று கூறியுள்ளார்.

தமிழ்க் கடவுளாகிய முருகன் விரும்பி ஏற்றுக்கொள்வது இனிய தமிழ்ப் பாடல்களே. அவன் தமிழினிடம் மிக்க விருப்புள்ளவன். அவனருளைப் பெறுவதற்குச் சுலபமான வழி அவனைத் தமிழ்ப் பாடல்களால் பாடித் துதித்தலேயாகும். அருணகிரியப்பர் கந்தரலங்காரத்தில் "முத் தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்" என்றும், தெய்வத் திருப்புகழில் "இனிதான முத்தமிழை ஆயும் வரிசைச்காரப் பெருமாள்" என்றும் முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி வெகு அழகாகக் கூறியுள்ளார். முருகனிடம் அழகுண்டு; தமிழிடம் இனிமையுண்டு. இவை

இரண்டும் ஒருங்கு சேருமிடத்து ஆனந்தமுண்டாகும். அந்த ஆனந்தத்தை அநுபவிக்கும் பாக்கியம் முருகன் திருவருளைப் பெற்ற நக்கீரர், அருணகிரிநாதர் போன்ற பெரியார்கள் பாடியருளிய தெய்வத்தமிழ்ப் பனுவல்களைத் தினந்தோறும் ஓதும் அன்பர்களுக்குத்தான் உண்டு. முருகனிடம் அன்பு பூண்டு ஒழுகும் அடியார்களுக்கு முருகன் எளிதில் காட்சியளித்து இம்மையிற் சுகத்தையும், மறுமையில் முத்திப்பேற்றையும் கொடுத்தருளுவான். ஆகவே மக்களாகிய ஒவ்வொருவரும் அநுதினமும் முருகப்பெருமானைத் தெய்வத்தமிழ்ப் பனுவல்களால் துதித்து, அவனுடைய அருளைப்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வை அடைய முயலவேண்டியது அத்தியாவசியமாகும்.

அர்ஜுனா! அர்ஜுனா!!

மாமழை பொழியுங்காற் பேரிடி இடிக்கக்கேட்ட நம் நாட்டு மக்கள் "அர்ஜுனா! அர்ஜுனா!!" என்று கூவியழைக்கக் கேட்டிருக்கலாம். பாண்டவர்களில் நடுவிலவனான அர்ஜுனன் இந்திரனின் மகனெனப் பிறப்புக்கூறப்படுமாகையால், அவன் பெயரைக் கூவியழைத்தல் அவன் உடனே தன் தந்தையாகிய இந்திரனிடம் கூறி, இடியினால் நேரும் தீங்கை விலக்குவான் என்று அதற்கு ஒரு காரணங் கற்பிக்கவுங் கேட்டிருக்கலாம். இஃதொரு வகையிற் சரியானதே.

"அர்ஜுனன்" என்ற வடசொற்கே மருது அல்லது மருதமரம் என்று பொருள். மருதமரங்கள் நிறைந்த இடைமருதூர் இதனாலேயே "மத்தியார்ஜுனம்" என்று வடமொழியில் அழைக்கப்படும். மருது நிறைந்த மருத நிலத்திற்குத் தமிழர் நிலப்பாகுபாட்டின்படி தலைவனாவான் இந்திரனே என்பது தொல்காப்பியத்திற் கண்டது. இந்திரன் மேகராசன்; அதாவது மேகங்களுக்குத் தலைவன்; இடியேறு அவன் கைப்படையாகும். ஆகவே அவனை "அர்ஜுனா!" அல்லது "மருதநாயகா!" என்று கூவியழைத்தால் அவன் பரிந்து வந்து உதவி செய்வான் என்பது நம்பிக்கை. இதனாலேயே இவ்வழக்கம் இந் நாட்டில் எழுந்ததுபோலும்!

—காழி. சிவ. கண்ணுசாமி B. A.

ஆராய்ச்சிப் பகுதி : Research

தனித்தமிழ் வளர்ச்சி

[சங்கரன்கோவில் திரு. பா. ரா. பரமசிவமுதலியார்]

தனித்தமிழ் வளர்ச்சி என்ற இக்கட்டுரையானது தமிழ் மொழியில் பிறமொழிக்கலப்பு பேணப்படுவது நன்று அன்று என்பது பற்றியும், எவ்வகையில் தனித்தமிழ் வளர்ச்சிக்குத் தமிழராகிய நாம் பாடுபடவேண்டுமென்பது பற்றியும் ஒருவாறு ஆராய முனைகின்றது.

நம்மவரில் ஒரு பகுதியார் 'தமிழ்மொழி ஆக்கமுற வேண்டுமாயின் பிறமொழிச் சொற்களையும் வேண்டு மளவு ஏற்றுக்கொண்டு வளம்பெறவேண்டும்' என்றும் உலகப்பொது மொழியாக வளர்ந்துவரும் ஆங்கில மொழியின் ஆக்க முறை நோக்குவார், பிறமொழிச் சொற்களைத் தடையின்றி எடுத்தாளும் ஒரு மொழிதான் செழித்துச் செம்மையாக வளர்ந்தோங்கும் என்பது விளங்குமென்றும் கூறுவர். இன்னோர் பரிமேலழகர், சிவஞானமுனிவர் உரைநடைகளில் வடமொழிச் சொற்கள் மிக்கிருப்பதைக் காட்டி, பிறமொழிச் சொற்கள் இடம் பெற்றால்தான் தமிழ்மொழி அழகுபெற்று மிளிரும் என்பதை நாட்டமுயலுவர். இன்னும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே' என்ற இலக்கண விதியையும் தமக்குத் துணையாக்க முயலுவர். மொழியானது கருத்தைப் பிறர்க்கு அறிவிப்பதன்றி வேறு வகையில் பயன்தருவதில்லை; ஆதலின் பலமொழியாளர் பழக்கம் ஏற்படும்போது அம்மொழிச் சொற்கள் சில தமிழ் மொழியினும் சில தமிழ்மொழிச் சொற்கள் அம்மொழிகளினும் கலந்து வழங்குதல் இயற்கை என்றும், அவ்வாறு கலத்தலைத் தடுத்தல் இயலாதென்றும் நிலையிடுவர். டிரெயின் (Train) கோர்ட்டு (Court) என்ற ஆங்கிலச் சொற்கள், தமிழ்பேசமட்டும் தெரிந்த பூரியார்க்கும் விளங்கி வரும்போது, அவற்றைப் புகைவண்டி, நீராவி வண்டி, இருப்புப்பாதை வண்டி என்றும், மன்றம், மன்று, நீதி மன்றம், நியாயகூடம் என்றும் மொழிபெயர்ப்பது தமிழ்மொழியில் சொல்லைப் பெருக்கல் அன்றி வேறு எப்பயனும் தருதற்கில்லை என்பதும் தெளிவு என்ப.

பெரியீர், தமிழறி பெரியீர்! தனக்கெனப் பகுதி அல்லது வேர்ச் சொற்கள் (Roots) அமையப்பெறாத ஆங்கிலமொழி வேர்ச் சொற்களையும், பிற சொற்களையும் மற்ற மொழிகளிலிருந்து ஏற்றுக்கோடல் பொருந்தும்; நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி பல பகுதிகளை யுடைத்தாயிருக்கின்றமையால் அன்றோ வண்டமிழ் என்று வழங்கப்படுகின்றது. அவ்வாறு எண்ணிறந்த வேர்ச்சொற்களைத் தனக்கெனப் பெற்ற தமிழ், பிறமொழிச் சொற்களைக் கடன்பெறல் நன்றாமா யென ஓர்க. பொருளில்லான் கடன்பெறல் வழக்கன்றி அஃதுடையான் அப்பொருளை எறிந்து—பயன் படுத்தாமல் கழித்து—வேறு பொருளைக் கடன்பெறல் யாண்டுமில்லையே? ஆதலின் தமிழ் வளமுறுதற்கு ஆங்கிலமொழியைப் பின்பற்ற வேண்டுமென்றல் பொருந்தாது. இனி, பரிமேலழகர், சிவஞானமுனிவரர் முதலியோர் உரைநடையில் வடமொழிக்கலப்பு மிக்கிருப்பதாகக் கூறிப் பலமொழிக் கலப்பே வளமுறுத்தும் வழியாகும் என்பதனையும் சிறிது ஆராய்வாம். பரிமேலழகர், 'தான, சாம, பேத தண்டம்', என்ற வடமொழிகளை, 'கொடுத்தல், இன்சொற்கூறல், வேறுபடுத்தல், ஒறுத்தல்' என்று வரைந்தும் வடமொழியாளர் பகைவர்க்கம் என்ற அறுவகைக் குணங்களையும் காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்று மொழிந்தும் தனித்தமிழ் பேண வழிகாட்டுவதாலும், இது போன்றே மாதவச் சிவஞான முனிவரரும் 'அநுபவம், அநுமானப் பிரமாணம்' என்பவற்றை அழுந்தியறிதல், வழியளவை என்றுணர்த்தியும் அம்முறை நிறுவுவதாலும் தனித்தமிழ் பேணவேண்டுமென்பதை ஒருவாறு நிலையிடத் தொடங்கியவர் அவர்களே ஆவர். இச்செய்தியை அவர் உரைகளை ஊன்றிப் படித்தறிக. ஆயின் அவர்கள் உரைநடையில் வடசொல் மிக்கிருப்பதற்குக் காரணம் யாதோவெனில், வடமொழியும் தமிழும் பல்லாயிரமாண்டுகள் நெருங்கிய பழக்கம் பெற்றமையாலும், சமயச் சார்பு பெற்ற அறிஞர் பலரும் இருமொழி வல்லுநராக இருந்தமையாலும், இருமொழி கலந்த நடையே சமயப்பொருளைத் தெள்ளிதில் உணர்த்தும் காலமாக இருந்தமையாலும் அவர்கள் உரைநடை அவ்வாறமைந்தது. ஆயினும் அவர்கள் தமிழ்மொழியின் தூயதன்மை நிலவ வேண்டுமென்று விரும்பித் தனித்தமிழ் முறைவளர அடிகோலினர் என்பதை மேற்கூறியதிலிருந்து அறிக. பல்வேறுமொழி பேசும் மக்கள் தமக்குள் நெருங்கிப் பழகும்போது, ஒரு மொழிச் சொல், அம்மொழியாளர் சைகை, செயல் முதலியவற்றால் அதனை அறியாத பிறமொழியாளர்க்கு ஒருவகையில் பொருள் விளங்கிடச் செய்யும். அப்பிறமொழியாளர் தம்

மொழியோடு சேர்த்துத் தாமுணர்ந்த ஒருபுடைப் பொருளோடு அதனைப் பயன்படுத்துவர். இவ்விதமாகவே தமிழ் மக்களும் பிறமொழியாளரிடம் இருந்து சைகை, செயல் முதலியவற்றால் ஒருபுடைப் பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களை ஆளுவர். அத்தகையவற்றைத் திசைச்சொல் என்பர் பெரியோர். இவ்விதமான திசைச்சொற்கள் அறிவு நிரம்பப் பெறுதாரிடமே முதலில் வெகுவிரைவில் பரவும். அப்படிப் பரவுவது தான் உலகியற்கை. ஆனால் சான்றோர் அத்தகைய சொற்களைத் தமது நூல்வழக்கில் வழங்குவதற்குமுன் அச்சொற்களின் வேர்ப்பொருளையும், அதற்குரிய மொழியில் அச்சொல் உணர்த்தும் பொருள்களையும் ஆய்ந்தறிந்து அவ்வாற்றல் அமைந்த தமிழ்ப்பகுதியால் சொல்லமைத்து வழங்குவர். அப்படிச்செய்வதால் தமிழ்மொழிமட்டும் தெரிந்த தமிழ் மக்கள் பொருள் ஆற்றலுடன் சேர்ந்த அறிவில் வளர்ந்து தம்மோடு பழகிய பிறருடைய நல்லியல்புகளையும் உணர்வர். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு தருகிறேன். Train (டிரெயின்) என்பதை ரயில் என்று தமிழர் வழங்கினாலும் 'வண்டித்தொடர்' என்று மொழிபெயர்ப்பதால் எழுத்துக் கூட்டிப்படிக்கத் தெரியாத் தமிழனும் பிழைபடப் பொருளை உணரான் என்பதை ஓர்க. இன்னும் கோர்ட்டு, ஆபீஸ் (Court, Office) முதலிய ஆங்கிலச் சொற்களுக்கு எல்லாம் கச்சேரி என்ற ஒரு சொல் வழங்கினாலும், நீதிமன்று அல்லது நியாயகூடம் என்றும் வேத்தவை, அல்லது வேத்தியல்நிலையம் என்றும் மொழிபெயர்ப்பின் அங்கங்கு நடக்கும் தொழில் வேறுபாடு நாளடைவில் எல்லா மக்களிடமும் விளங்க அதனால் மொழிவளர்ச்சி மிகும் என்பது அங்கை நெல்லிக்கனியன்றோ? செப்பு, கோப்பை, அச்சோ முதலிய திசைச் சொற்கள் நம்மிடை வழங்கினாலும், சொல்லு, குவளை, ஐயோ என்ற தமிழ்ச் சொற்களும் நிலைபெற்று வழங்கிவருகின்ற பெற்றியை நுணுகி உணர்க.

இன்னும் உலகியலில் மக்கள் பிறமொழியாளரிடைப் பழகும்போது மாறுபாடடைவது பழக்கத்தில் வராத சில சொற்கள் காலப்போக்கில் வீழ்ந்து ஒழியும் என்பதும், பழக்கத்தில் தோன்றும் புதுச்செயல், கருவி, எண்ணங்களை உணர்த்தும் புதுச்சொற்கள் முளைத்தெழும் என்பதும், அவற்றிற்கேற்ப இலக்கணமும் மாறும் என்பதும் உணர்த்துதற்கே. "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்ற விதி எழுந்தது இதனாலேயே. அரசு + அங்கம் என்ற புணர்ச்சி அரசங்கம் என்று சேரவேண்டியதிருக்க அரசாங்கம் எனப் புணர்ந்து நிலவுகிறது. இத்தகைய புணர்ச்சி இலக்கணப் பிழையல்ல என்று கண்டுகொள்ள இவ்விதி இடம்

தருமேயன்றித் தமிழ்ப் பகுதிகளை அழிக்கக்கூடிய திசைச் சொற்களை அப்படியே வழங்கவேண்டும் என்ற ஏற்பாட்டிற்கு அரண்செய்யாது. திசைச்சொல் என்றும், வடசொல் என்றும், வேறுபிரித்து இலக்கணவரையறை செய்திருப்பதாலும், நாம் மேலே கூறிய செய்தி உறுதிப்படும். இதனோடு கழிதலும் புகுதலும் எனத் தன்வினைகள் ஆண்டிருப்பதால் கழித்தலும் புகுத்தலும் செய்யக்கூடாது என்பது தேற்றம்.

இனி உலக வழக்கில் இடம்பெற்ற திசைச்சொற்களையே ஆண்டுகொண்டு தனித்தமிழ்ச்சொற்களைக் கொள்ளாமல் விட்டால் ஏற்படும் குற்றத்தையும் சிறிதுகாட்ட முயலுவேன்.

திசைச்சொற்கள் எந்தப்பொருளை உணர்த்த சைகை முதலியவற்றால் தமிழ்மக்களிடை வந்தனவோ, அப்பொருளை மட்டும் உணர்த்தும்; சிலசமயம் அதற்கில்லாத பொருளையும் உணர்த்தும். Hamilton Bridge என்பது அம்பட்டன் வாராவதி என்று வழங்கப்படுதல் இதற்குச் சான்று. இது போலவே, Shop, Compound, Gate (ஷாப், காம்பவுண்டு, கேட்) முதலிய ஆங்கிலச் சொற்கள் சில நேரங்களில் அவற்றின் உண்மைப் பொருளை இழந்து வழங்குதல் கண்டுகொள்க. இன்னும் மொழி பெயர்க்குப்போது வேர்ச்சொல்லை ஆராயாமல் மொழிபெயர்ப்பதால் பல கேடுண்டாம். Engine என்ற ஆங்கிலச்சொல் அதன் வேர்ப்பொருளோடு பொருந்த மொழிபெயர்க்கப்படாமையால் Engineer, Engineering, Enginery என்ற ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ் மக்கள் ஏற்ற பொருளைத் தெரிய முடியவில்லை. இவை Engine—எழுச்சிப்பொறி, Engineer—எழுச்சிவேள், Engineering—எழுச்சிக்கலை, Enginery—எழுச்சிப்படை) என்று மொழிபெயர்த்து வழங்கினால் இவற்றின் சிறந்த பொருள் தமிழ்மக்களிடை நாளடைவில் நிலைபெறும். அதனால் மக்கள் ஆராய்ச்சியறிவிலும் பொருளை உற்றுணர்வதிலும் சிறந்து விளங்கி நலம் பெறுவர். இவ்வாறன்றிச் சொற்களின் சிறப்பியல்களை உணர்த்தாத திசைச்சொற்களால் அறிவு வளர்ச்சியும் தடைப்படும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு கண்டுகொள்க. அவதாரம் என்ற வடசொல் கீழ் இறங்குதல் என்ற பொருளுளது. ஒரு பெரியார் கீழ் இறங்கு நிலைஎடுத்தார் என்றால் தேவர், முனிவர் ஆக விளங்கிய ஒரு அருளாளர், மற்றவர் படும் இன்னல் கண்டு இரக்கமுற்று, அவரைத் திருத்துவான் வேண்டி, கீழ்நிலையாகிய மனிதவுடலை ஏற்றார் என்று விளங்கும்; அதனால் அவர் சொல்லுவன, நடந்து காட்டுவன மக்கள் பின்பற்றக் கூடியவை என்று மனதிற்படும். அதனால் மக்கள்

அவரைப் பின்பற்றுவர். ஆனால் அச் சொல்லின் பொருள் மனதிற் படாமையால் அவதாரம் செய்த பெரியார் சொல்லுவன, நடந்து காட்டுவன எல்லாராலும் பின்பற்றக் கூடியன அல்ல என்று நினைக்கப்படுகின்றது. அதனால் பெரியோரைப் போற்றிப் புகழ்வதில் மட்டும் தமிழ் மக்கள் முனைகின்றனர்; பேணி வழிபட்டு ஒழுகுவோர் அரியராகின்றனர். ஆதலின் திசைச் சொற்கள் ஒருவகையில் அறிவு வளர்ச்சிக்கும் தடை செய்வதாகும் என்பதறிக. ஆதலின் அறிஞர் தனித்தமிழ்முறை பேண முற்படுவது போற்றத்தக்கதே.

இதுகாறும் கூறியதிலிருந்து தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுவது ஆன்றோர் காட்டிய வழி என்றும், ஆனால் வேர்ச்சொல்லறிந்தே மொழிபெயர்க்க வேண்டுமென்றும், அதனால் தான் தமிழ்மக்கள் அறிவு நிரம்பும் என்றும், திசைச் சொற்களைப் பேச்சுமுறையில் வழங்குவதும் குற்றமன்று என்றும் ஒருவாறு உணரலாம்.

பனையும் பழந்தமிழ் நூல்களும் பிறவும்

[மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்
பண்டிதர் ஸ்ரீமத் கா. பொ. இரத்தினம் அவர்கள்.]

மண்ணுலகின் கற்பகதருவெனப் புகழப்பெறும் பனையைப் பற்றியும் அதன் அளவில்லாத பிரயோசனங்களைப் பற்றியும் யாவரும் நன்கறிவர். உண்ண உணவையும் படுக்கப் பாயையும், பருக நீரையும், எழுத ஓலையையும், பிடிக்கக் குடையையும், இன்னும் பலவற்றையும் தந்து நந்தமக் கின்றியமையாத தொன்றாக விளங்குவது அஃதே. பெண்ணை, ஏடகம், கரும்புறம், தாலம், தாளி நீலம், புல், புற்பதி, புற்றாளி, போந்து, போந்தை முதலிய சொற்களெல்லாம் பனையைக் குறிப்பனவே. ஆரிய மொழியில் தால (तालः) எனவும், சிங்களத்தில் தால் எனவும், ஆங்கிலத்தில் 'பல்மேறு பாம், (Palmyra Palm) எனவும், மலையாளத்தில் 'றால்' எனவும், தெலுங்கிலும் கன்னடத்திலும் 'தாலி' எனவும் பனை அழைக்கப்படுகிறது. பனையைப் பற்றிப் பழந்தமிழ் நூல்களிற் காணப்படும் சிறந்த குறிப்புகளையும் பிறவற்றையும் எடுத்துக்காட்டலே இக்கட்டுரையின் நோக்கமென்க.

நம் முன்னோர் ஆறறிவுடைய மக்களையே ஆண் பெண்பாற் படுத்தி வழங்கியுள்ளர். சிறுபான்மை ஐந்தறிவும் அதிற்குறைந்

அறிவுமுடைய உயிர்களையும் அவ்வாறு பாற்படுத்தியுளர். ஓரறிவுயிர்களாகிய தாவரங்களுள் பனையை மாத்திரமே ஆண், பெண் பாற்படுத்தியிருக்கின்றனர். ஆண் பனை, பெண் பனை யென்றல் பெருவழக்கு. ஆண் கமுகு, பெண் கமுகு, ஆண் தென்னை, பெண் தென்னை எனக் கூறுவாருமுண்டோ? இப்பாற்பகுப்பு பனையின் பெருமையை நன்கு விளக்குவ தொன்றன்றே!

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கவும், பரசமய விருளீங்கவும், திருவவதாரஞ் செய்தருளிய திருஞான சம் பந்தமூர்த்திநாயனருடைய அற்புதச் செயல்கள் பலவாகும். அவற்றுள், திருவோத்தூரில் ஓர் சிவனடியார் வைத்த பனைகளெல்லாம் ஆண்பனைகளாக, அவற்றைப் பெண் பனைகளாக்கினமையும் ஒன்றாகும். சம்பந்த சுவாமிகளின் அற்புதச் செயலோடு சப்பந்தப்பட்ட பனையின் சிறப்பை யார்தான் கூறமுடியும்? 'திருப்பனையூரில் விருப்பனுகியும்' எனும் மணிவாசகர் கூற்றால் பனையென்னும் பெயரையுடைய ஓரூரும் உண்டென்பது பெறப்படுகிறது. அனுட நட்சத்தி ரத்தைப் பனையெனும் பெயராலுங் குறிப்பர். பனைமீன் என ஓர் வகைப் பெரிய மீனுக்குப் பெயருண்டு. பலதேவரும் வீட்டுமரும் பனையை யெழுதிய கொடியையுடைவர்கள். 'கடல் வளர்புரிவளை புரையுமேனி, யடல்வெந் நாஞ்சில் பனைக் கொடியோன்' என்பது புறநானூறு.

"காவோலைவிழக் குருத்தோலை நகைக்கும்' என்று ஒரு பழமொழியுண்டு. அரும்பொருளை விளக்கும் இப்பழமொழி யிலுள்ள ஓலைகள் பனையோலைகளே.

—"பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை ஒலி"

எனும் நாலடியார் அடிகளை அறியாதார் யாவர்?

இற்றை ஞான்றுள்ள தமிழ் நூல்களிலெல்லாம் காலத் தான் முற்பட்டதென யாவராலும் போற்றப்படும் தொல் காப்பியப் பொருளதிகாரத்தில் காணப்படும்

"புறக் காழனவே புல்லென மொழிப
அகக் காழனவே மரமென மொழிப"

எனுஞ் சூத்திரம் பனையைப் புல்லினத்தில் சேர்க்கிறது.

"இலையே தளிரே முறியே தோடே
சினையே குழையே பூவே யரும்பே

நனையுள் ளுறுத்த வனையவை யெல்லா
மரனொடு வரூஉங் கிளவி யென்ப"

எனும் சூத்திரம் புல்லினங்களின் உறுப்புக்களின் பெயரைக் கூறுகிறது. இவ்வுறுப்புக்கள் பனைக்குமுரியனவெனக் கூறல்வேண்டிய தின்று.

"பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்"

எனும் தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திர அடிகள் பனங்காய், பனம்பழம், பனஞ்செதிள், பனந்தோல் முதலிய சொற்களின் புணர்ச்சியைக் கூறுகின்றன.

"பனையின் முன்னரட்டு வருகாலை
நிலையின் றாகு மையெ னுயிரே
யாகாரம் வருத லாவயி னான"

எனுஞ் சூத்திரம் பனாட்டு எனுஞ் சொல்லின் புணர்ச்சியைக் கூறுகின்றது. பனை + அட்டு = பனாட்டு. பனாட்டு என்பதன் பொருள் பனையின் தீங்கட்டி என்பது. பனாட்டென்னுஞ் சொல் அக்காலத்துப் பெருவழக்கா யிருந்தமைக்கு இச் சூத்திரம் பெரியதொரு சான்றாகும். சான்றாகவே பனாட்டு அக்காலத்து உண்டாக்கப்பெற்று யாவராலும் போற்றி உண்ணப்பட்ட தென்பது வெள்ளிடை. மேலைத்தேச நாகரிகத்திலீடுபட்டுச் செல்லும் நம்மவர்கள் பனாட்டைக் கைநெகிழ விட்டுவிட்டார்கள். இன்னுஞ் சில காலத்தில் அச்சொல்லும் வழக்கிறந்து விடுமோ என்றெண்ண வேண்டியிருக்கிறது. தொல்காப்பியர் காலத்திலேயே யன்றி நன்னூலாசிரியர் காலத்திலும் அச்சொல் பெருவழக்கி லிருந்ததற்கு

"பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை"

எனும் நன்னூற் சூத்திரம் சான்றாகும்.

பனைக்கொடி எனுஞ் சொல்லின் புணர்ச்சியை உணர்த்தவே,

"கொடிமுன் வரினே யையவ ணிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி"

எனுஞ் சூத்திரம் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் எழுந்தது. பனைக்கொடி என்பது பனையை எழுதின கொடியை.

நன்னூலில் ஆசிரியராகத் தகாதவர்களை மடற்பனைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

"தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக் கொடாவிடத்தது மடற்பனை"

இச்சூத்திரம் மடற்பனையைப் பற்றி வர்ணிக்கின்றது. மடற்பனையாவது ஏறிக் கொள்ளமுடியாமல் மடல்கள் நிறைந்த பனை.

முடியுடை மூவேந்தர்களில் சேர அரசர்கள் பனைமாலையைத் தங்கள் குலத்தாருக்குரிய மாலையாகக் கொண்டிருந்தார்கள். "இரும்பனை வெண்டோடு மிலைந்தோனல்லன்" என்பது புறநானூறு. "போந்தைக் கண்ணி நின்னூங்கணோர் மரபில்" என்பது சிலப்பதிகாரம். பனைமாலையாவது பனங்குருத்தைத் தோடுதோடாக நறுக்கித் தொடுக்கப்படும் மாலை. புறப்பொருள் வெண்பா மாலை எனும் நூலில் போந்தை எனும் ஒரு துறையுண்டு. போந்தையாவது:—

"கலவா மன்னர் கண்ணுறு ஞாட்பிற்
புலவேல் வானவன் பூப்புகழ்ந் தன்று"

இ-ள்:—பொருந்தாத அரசர்கள் கிட்டினபோரில் புலால் நாறும் வேலினையுடைய சேரன் சூடும் பூவைப் (பனங்தோடு) புகழ்ந்தது. எ-று.

அழிசிகுடி

(நற்றிணை—கஅ௰)

[சீகாழி திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்]

பழங்காலத்தில் தமிழகத்தில் கொள்ளிட நதிக்கு வடபாலுள்ள தேசம் அருவா, அருவா வடதலை என இரண்டு பிரிவாகப் பிரிந்திருந்தது. அருவா நாட்டினிடையே வடவெள்ளாறும் தென் பெண்ணையும், அருவா வடதலையினிடையே பாலாறும் ஓடுகின்றன. இந்நாடுகளில் அருவாளர் என்னும் பெருங்குடிகள் வசித்து வந்தனர். இவர்களைக் கரிகாற்பெருவளத்தான் வென்று காஞ்சிபுரத்தில் அதிராஜ்யமொன்றை தாபித்ததாகத் தமிழ் நூல்களிற் காண்கிறோம். இவ்வருவாளருக்குக் காவல் மரம் ஆர் (ஆத்தி) ஆகும். சோழவரசர் தங்களுக்கு உரிய ஆத்திமாலையோடு இவ்வருவாளரது காவல் மரமாகிய ஆத்தியையும் வென்று அதற்கு அறிகுறியாக ஆரங்கண்ணிச் சோழர் எனச் சிறப்புப்பெயர் பெற்றனர். ஆதலின், இந்த நாடு ஆர்க்காடு என்னப்பட்டது.

இத்தேசத்தில் தில்லைவனம் முதல் ஆத்திவனம் வரையில் ஆறு காடுகள் முனிவர்களுக்கு வாசஸ்தலமாக இருந்தபடியால் இவ் வார்க்காட்டு நாட்டை ஆறுகாடுஎனவும் வழங்கி வந்தார்கள். மகா மொகலாயர் தென்னாட்டைக் கைப்பற்றியபோது இந் நாட்டை ஒரு சுபாவாக்கி அதற்கு ஆர்க்காட்டைத் தலை நகராக அமைத்து ஒரு நவாபின் ஆட்சிக் குள்ளாக்கினார். இங்ஙனம், கி.பி. 1799 வரையில் இந்நாட்டின் பெரும்பாகம் அவர்கள் வசமிருந்து பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்குள்ளா னது. இந்நாட்டின் மலையரண், காட்டரண், நீரரண் படையரண் இவற்றை நோக்குமிடத்து அதிபூர்வகாலத்தில் வடபுலத் தரசர் தென்னாட்டில் பிரவேசியாதிருப்பதற்கு அவை முக்கிய காரணங்களாயிருந்தனவென்பது விசிதமாகும். வட வெள் ளாற்றின் முகத்துவாரத்தில் பறங்கிப்பேட்டை (வருணபுரி, பிராங்கிப்பெட், பெரைங்கைப்பெட் மஹ்மூது பந்தர், போர்டோ நோவோ) என்னும் துறைமுகம் கிழக்கிந்தி யத் தீவுகளோடும் சோனகம், யவனம் முதலிய மேல் நாடுகளோடும் கடல்வழியாகப் பூர்வத்திலும், போர்த்து கல், டென்மார்க், உலாந்து, பிரிடானியா இவைகளோடு பிற்காலத்திலும் வாணிபம் செய்து வந்தது என்பதை பெரிபுளூஸ், டாலமி, பிளினி என்பவர்கள் எழுதிய நூல் களைக்கொண்டும், தென்னிந்திய சரித்திரத்தைக் கொண் டும், யானைகள் (மஹ்மூது) இறங்கி வருவதற்கேற்ற துறை முகமாக (பந்தர்) இருந்தது என்னும் திருத்தொண்டர் புராணத்தைக்கொண்டும் அறியலாம். இந் நகரத்தின் செல்வ நிலையைக் கருதி ராஜபுத்திரர் படையெழுச்சியும் ("ஆனந்த ரெங்கப் பிள்ளை' தினசரி), ஹைதர் அலி கலாபமும், சர் அயர் கூட் ஹைதரை மேட்டுப்பாளையத்தில் வென்ற வெற்றியும் நிகழ்ந்தன. இத் துறைமுகத்திற்கு மேற்கே 32 மைலில் விருத்தாசலம் என்னும் தலமும் வடக்கே 7 மைலில் சோபுரம் (நொச்சிக்காடு, தியாகவல்லி) என்னும் தலமும் உள் ளன. இந்தச் சோபுரம், கடற்கரையில் புன்னை, அடம்பு, இராவணன் மீசை இவைகளுக்கிடையே மணற் குன்றாகிய கோடுகளாலும் கழிகளாகிய கோட்டாறுகளாலும் மறைக் கப்பட்டிருந்து 130 வருடங்களுக்குமுன் சங்கரநாய்க்கர் சங்கரமூர்த்திப்பிள்ளை இவர்களால், வருணபுரிக் கோபுரத்தின் கண் மாலையில் வசித்துக் காலையில் அங்குச் சென்றுவந்த இரண்டு நாரைகளின் உதவியால் காணப்பட்டபின், புதிய திருப்பணி நடந்தது. பறங்கிப்பேட்டைக்கு 4 மைலுக்கு அப் பால் வட வெள்ளாற்றின் தென் கரையில் கணம்புல்ல நாய னார் அவதரித்த வேளூர் இருக்கிறது. அவ்விடத்தில் வெள்

ளாறு முட்டமாக வருதலால் இவ்வேளூரை முட்ட வேளூர் (முட்ளூர்) என்பர். இதற்கு மேற்கே ஏழு மைல் தூரத்தில் வெள்ளாற்றின் வடகரையில் விருத்தாசலம் ரஸ்தாவில் சேத்தியார் தோப்பு அணைக்கட்டுக்குக் கிழக்கே அழிசிகுடி யென்னும் பழைய ஊர் அமர்ந்திருக்கிறது. இதில் பழைய பலமான மண் கோட்டையும் அதைச் சுற்றி நொச்சி வேலியும் இருந்தனவாம். வீரணக்குடி முதல் புதுச்சத்திரம் வரையில் வேடரும் வில்லியரும் பழைய அரசர்களுக்குப் படையாளர்களாக அமர்ந்திருந்தனர். இவர்களின் சந்ததியார் இன்னும் இங்கு மிகுதியாகக் காணப்படுகின்றனர். அழிசிகுடி என்பது கந்தன் குடி. என்பது போல அழிசி என்னும் குறுநில மன்னர் வசிக்கும் இடம் எனப் பொருள்படும்; கிள்ளிகுடி என்பது போல கிள்ளியினது குடிகள் வசிக்கும் ஊர் எனினும் அமையும். இவ்வூரைத் தமது ஆண்மையால் வடபுலத்தரசர் ஆர்க்காட்டின் உதவியைக் கொண்டு தென்னாட்டில் புகாதபடி பாதுகாத்து வந்தவர் இவ்வழிசி யென்பார். இவர் ஆர்க்காட்டில் பெரும்போரொன்று நிகழ்த்தினர். இப்பெரும்போரின் விவரமே நற்றிணை கசுரு—வது செய்யுளில் குறிக்கப்பட்டிருக்கிறது. இச் செய்யுள் இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் பழந்தமிழ்ப் பாடல்களில் முற்பட்டது. அதிராச்சியங்கள் இப்பகுதியில் ஏற்படுவதற்கு முன்னரே இந்த அழிசியினது கண ராச்சியம் (வேள் நாடு) கி. மு. 50-ம் வருடத்திலிருந்ததென்றும், இவருக்குப் பின் உறையூரில் வெளியன் தித்தன் முதலிய வேளிரும், இவர்களுக்குப் பின் முடித்தலை மன்னரும் ஆட்சி புரிந்திருந்தனரென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இங்குக் காட்டப்பட்ட அழிசிகுடியே பண்டைத் தமிழ் நூலில் கூறப்பட்ட அழிசிகுடி என யாவரும் தேர்தல் வேண்டும்.

இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாள் வருகிற 25-5-37 செவ்வாய்க்கிழமையாகும். தமிழ் மக்கள் சிறப்பாக அதனைக் கொண்டாடுதல் வேண்டும்.

அறிவியற் பகுதி - Science

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

[பா. வே. மாணிக்க நாயக்கர்—க. ப. சந்தோஷம் B. A., L. T.,]

(முன் ௪௧௧-ஆம் பக்கத்தொடர்ச்சி)

உயிர்கள் எடுக்கின்ற பல பிறப்புக்கள் அல்லது உடம்புகள் திரிமலகோசமென்றும், மாயையின் வடிவமென்றுங் கூறப்படுகின்றன. இங்ஙனமாயினும், தேவர், நரர், மிருகம், பக்ஷி, கீடம் என்ற பல பிறப்புக்களில் மக்களுருவமே எல்லாவற்றினும், வானோர் வடிவம் பெறுவதினும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. தாயுமானவர் பாடல்களில் பின்வருவது மேற்கூறியதற் குதாரணமாகும்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதா
னியாதினும் மரிதரிது காண்
இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
வேது வருமோ வறிகிலேன்
கண்ணகநிலத்துநா னுள்ளபொழுதே யருட்
ககனவட் டத்தி னின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்து மதியவச முறவே
பண்ணுவது நன்மை........................"

மக்கட்பிறப்பு எல்லாவற்றினும் சிறந்ததாய் எண்ணப்படுவதற்குக் காரணம் தேவவடிவம் நிலையற்ற வின்பத்தை நுகர்வதற்கே ஏற்ற ஒரு கருவி என்பதும், விலங்கு, பறவை, புழுவினுருவங்கள் கடவுளை யறிதலாகிய ஞானம் பெறுதவை என்பதுந்தான். மக்கள் வடிவந்தான் உள்ளிருக்கும் உயிர் வீடுபெறத் துணைசெய்யும் வடிவமாம். உயிர்கள் தாங்குகின்ற வடிவங்கள் மொழிகளில் வழங்குகின்ற ஒற்றெழுத்துக்களை யொத்திருக்கின்றன. திரிமல கோசங்களில் மக்களுடம்பு சிறந்து விளங்குவதுபோல் மந்திரங்களில் வகர யகர மெய்கள் மற்ற மெய்களினின்றுந் தனித்து நிற்கின்றன. உயிர் வீடுபெறக் கருதிக் கூறப்படும் மந்திரங்களில் இவ்விரண்டெழுத்துக்களும்—ஜீவாத்மாவைக் குறிக்கும் யகரமும் அதற்குத் துணையாய் நிற்கும் கடவுளருளைக் காட்டும் வகரமும்—தனிச்சிறப்புடையனவாய் மிளிர்கின்றன. ஈண்டு இவ்விரண்டெழுத்துக்களும் மொழியிலக்கணத்தில் உடம்படு மெய்யென்ற வகையில் எத்தொழி லியற்றுகின்றனவோ,

அதற்கிணையான தொழிலை மந்திரங்களினு மியற்றுகின்றன வென்பதைக் காட்டுவதவசியமாகின்றது.

இறைவனதருளின் பெருமை 'திருவருட்பயன்' என்ற நூலில் பின்வருமாறு விளக்கப்பட்டுளது.

"அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல்"

ஒருவன் கருதிய பொருளினும் பெரிது உலகில் வேறில்லாதது போல் உயிர்கட் கிறைவன தருளைக்காட்டிலும் பெரிது வேறில்லை.

யகரத்தின் பொருள் ஜீவாத்மாவென்பது மேற்குறித்த நூலின் மற்றொரு சூத்திரத்திற் கூறப்படுகின்றது.

"விரியமனமே வியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரப் பெறும்"

இதனுரை:—

"மகார நகாரமாகிய மலமுந் திரோதமும் மிகவும் மிறுகப் புணர்ந்து யகாரமாகிய உயிர்களைத் திரும்பவிடா; அவ்வுயிர்கள் தம்பெரிய பிணியாகிய மலவிருள் தீருங்கால் சிகாரமாகிய சிவத்தினை யடையும்."

வகரத்தின் பொருள் இறைவனதருளென்பதைத் திருவருட்பய'னின் மற்றொரு செய்யுள் கூறுகின்றது.

"வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு"

உரை:—

வகாரமாகிய அருள் சிகாரமாகிய சிவத்தினைக்காட்டி, யகாரமாகிய உயிரினை வீட்டின்பத்திலே இருத்தும். அன்றியும், அவ்வருளே யந்தச் சிவத்திற்குக் குற்றந் தீர்ந்த (திரு மேனியா யிருப்பது.

இவற்றிலிருந்து ஓ நமசிவய என்ற பஞ்சாட்சரத்தில் யகர வகரங்களாகிய இரண்டெழுத்துக்களும் செய்கின்ற தொழில் பரமாத்மாவின் முன்னிலையில் ஜீவாத்மாவிற்கு விடளிப்பது என்பது புலனும். நிலையுயிர் பரமாத்மாவையும் வருமுயிர் ஜீவாத்மாவையுங் குறிக்கும்.


நச்சினார்க்கினியரால் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்ட இரண்டு சூத்திரங்களில் உடம்படுமெய் இத்தன்மைத்தென்று வரையறுக்கப்படுகின்றது. அவையாவன:—

"உடம்படு மெய்யே யகார வகார
முயிர்முதன் மொழிவரூஉங் காலை யான"

"இறுதியு முதலு முயிர்நிலை வரினே
யுறுமென மொழிப வுடம்படு மெய்யே"

'திருவருட் பய'னென்பது அண்மையில் தோன்றிய ஒருநூல். தென்னிந்தியாவில் சமஸ்கிருத மொழியின் செல்வாக்கு நன்கு நிலைபெற்றபின் இந்நூல் எழுதப்பட்டது. ஆதலின், தொல்காப்பியத்திற்கு முற்பட்ட ஓர் இலக்கண நூலிலிருந்து தாமெடுத்துரைப்பதாக நச்சினார்க்கினியர் கூறும் மேற்கூறிய விரண்டு சூத்திரங்களிலும் யகர வகரங்களுக்கு ஈண்டு நாம் கண்டபொருள் பொதிந்து கிடப்பது கருதத்தக்கது. இவ் விரண்டெழுத்துக்களும் இலக்கணவகையி லியற்றுந் தொழில் மந்திரவகையி லிவை இயற்றுந்தொழிலுடன் ஒன்றி நிற்பது ஒரு விந்தையாகுமெனின், (வியத்தற்குரித்தெனின்) ஈண்டு நாம் கண்ட உண்மைகள் வெளிப்படும் வண்ணம் தமிழ்மொழி அமைக்கப்பட்டிருப்பது அதனினும் விந்தையாம்.

வகரத்தின் வடிவத்தை ஆராய்வோமாயின் மந்திர முறையில் அதில் விளங்குமுண்மை வெளிப்படும். தலைகீழாய் நிறுத்திய மகரங்கீழும் உகரம்மேலும் பொருந்த வமைக்கப் பெற்ற அகரவெழுத்தினின்றும் மகரத்தின் தலையும் வாலும் வெட்டி அகற்றப்படுமாயின், மிகுந்து நிற்பது வகரமாகும். 'ஐந்து அகரங்களிலிருந்து பஞ்சாட்சரம் பிறக்கும் வகையைக் காட்டிய படத்துள் ஐந்தாவது அகரத்தின் வடிவத்தை நோக்க இது விளங்கும். இதை உளத்திற்கொண்டு வகர வடிவத்தை நோக்குவோமாயின், அது சிவத்தைக் குறிக்கும் லிங்கவடிவினதாகிய நெடுங்கோடு முழுமையையும், சத்தியைக் குறிக்கும் உகரத்தையுந் தன்னுளடக்கிச் சத்தியினின்றும் பிரிக்



கொணாத மலத்தைக் குறிக்கின்ற மகரத்தின் ஒரு சிறு பகுதியையும் மட்டும் உடையதாய் நிற்கின்றது. மந்திர நூற்படி, மகரத்தாற் குறிக்கப்படுகின்ற மும்மலங்களினின்றும் ஆன்மாவை விடுவிக்கும் இறைவனருள் வகரமாகும். வகர வடிவத்தில் மகரத்தின் தலையும் வாலும் நீங்கி சிவம் சத்தியாகிய இரண்டின் வடிவங்களும் பொருந்திக் கிடக்கின்றன. ஒகர அகரங்களின் வடிவத்தை முறையே தக்ஷிணாமூர்த்தத்துடனும், ஊர்த்தவ நடனத்துடனும் ஒற்றுமை செய்து

காட்டுங்கால் இவ்விரண்டு மூர்த்தங்களினும் மலத்தினின்று நீங்கிய பகுதிகளே வகரவடிவத்திற் குரியனவாவதைப் பார்ப்போம்.

இலக்கணத்தில் வெளிப்படும் மற்றொரு மந்திரப் பகுதியை யுரைப்போம். மந்திரங்களில் ம், ன், ண் என்ற எழுத்துக்கள் தோன்றுகின்றன. அகரத்திலிருந்து பிறவெழுத்துக்களைத் தோற்றுவிக்கும் முறையில் மகரத்தை யுண்டாக்குவதற்கு அகரத்தின் கீழ்ப்பகுதியிலிருக்கும் வளைவு ஒன்று வேண்டப்படுகின்றது. னகரத்திற்கு இரண்டு வளைவுகளும், ணகரத்திற்கு மூன்று வளைவுகளும் வேண்டப்படுகின்றன. (மூல மந்திரங்களை விளக்கும் பகுதியை நோக்க) பொதுவாக மந்திரமுறையில் மகரம் உயிர்களைப் பிணிக்கும் மலத்தைக் காட்டி நிற்கின்றது. ஆனால், னகர ணகரங்களோடு ஒப்பிடுங்கால் மகரம் ஒரே மலத்தைக் காட்டுவதாகி விஞ்ஞானகலரைக் குறிக்கும். னகரம் இருமலங்களைக் காட்டி, பிரளயாகலரைக் குறிக்கும். ணகரம் மும்மலங்களைக் காட்டி சகலரைக் குறிக்கும். இங்ஙனம் மந்திர முறையில் மலத்தைக் குறிக்குமளவில் மகரம் னகரத்தைவிடத் தாழ்ந்தது. மற்றும், வகரமாகிய அருள் வர மகரமாகிய மலம் மறையுமென்ற மந்திர விதியுமுளது.

இனி, இலக்கண வகையில் ஈண்டுக் கண்ட உண்மைகள் வெளிப்படுந் தன்மையைக் காண்போம். தொல்காப்பிய மொழிமரபில்,

'னகாரை முன்னர் மகாரங் குறுகும்'

என்பதொரு சூத்திரம். னகரத்தின் பின்வந்த மகரங் குறுகுமென்ப திதன் பொருள். இதற்குரை எழுதிய நச்சினார்க்கினியர், "இனித் தன்னின முடித்தலென்பதனான் ணகாரவொற்றின் முன்னும் மகாரம் குறுகுதல் கொள்க" என்றார்.

"வகார மிசையும் மகாரங் குறுகும்"

இது புள்ளி மயங்கியலினுள்ள தொல்காப்பிய சூத்திரம். வகரத்திற்கு முன் மகாரங் குறுகுமென்பது இதன்பொருள். பவணந்தியின் நன்னூலில் இவ்விரண்டு சூத்திரங்களும் ஒன்றாக்கப் பெற்றுப் பின்வருமாறு கூறப்படுகின்றன:—

"ணனமுன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்"

இங்ஙனம், ம, ன, ண, வ எனுமெழுத்துக்களைப் பற்றிய வளவில் மந்திரவிதியும் இலக்கணவிதியும் ஒன்றி நிற்பதை எளிதிற் காண்கின்றோம்.

(தொடரும்)

வரலாற்றுப் பகுதி: History & Biography

சர் ஐசக் நியூட்டன்
(Sir Isaac Newton) (1642—1727)

[திரு. என். குழந்தைவேலன் அவர்கள், B. A.]

சர் ஐசக் நியூட்டன் என்னும் பேரறிஞர் ஆங்கில நாட்டில் லிங்கன்ஷயர் (Lincolnshire) என்னுமிடத்தில் 1642-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் நிலத்தின் கவர்ச்சியையும் (gravitation), அதன் நுட்பங்களையும் ஆராய்ந்து அறிந்தவர். இவர் ஒளியின் தன்மைகளையும் நிறங்களின் தத்துவங்களையும் உலகிற்கு உணர்த்தியவர். இவர் கணித நூல் ஆராய்ச்சியில் தமக்கு ஒப்பார் எவருமின்றித் திகழ்ந்தவர் ஆகலின் இக்காலத்திலும் கணக்கில் வல்லவர்களை நியூட்டன் என்னும் புனைவுப் பெயரால் அழைப்பது வழக்கமாக இருந்து வருகின்றது.

நியூட்டனுக்கு மூன்று ஆண்டுகள் நிரம்புமுன் தந்தையார் இறந்துபடவே இவர்தம் அன்னையார் மறுமணம் செய்துகொண்டு வேறு இல்லத்திற்குப் போய்விட்டனர். இதனால் நியூட்டன் தம்முடைய பாட்டியின் பாதுகாப்பில் இருக்கும்படி நேர்ந்தது. இவரது தாய்மாமன் அயிஸ்கோ (Ayscough) என்பார் கிறித்துவமத குருவாக வேலைபார்த்து வந்தார். இவர் நியூட்டனிடம் மிகுந்த அன்பு பாராட்டி வந்தார். நியூட்டன் கிரந்தாம் (Grantham) என்னும் இடத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்று வந்தார். சில ஆண்டுகள் கழித்து இவருடைய சிறிய தந்தையும் காலஞ்சென்று விட்டதால், இவர் தம் அன்னையார் மற்றும் மூன்று குழந்தைகளுடன் வீடு திரும்பினர். நியூட்டன் அப்பிள்ளைகளிடம் மிகுந்த அன்புடன் பழகிவந்தார்.

நியூட்டன் இளமையிலேயே தம் ஊருக்கு அருகிலிருந்த ஒரு காற்றுப் பொறியை (Wind-mill) மிகவும் நுட்பமாய் ஆராய்ந்து அதைப்போல் சிறியதாகத் தாமே ஒன்று அமைத்தார். இவர் அதனுள் ஓர் எலியை அடைத்து அதன் உருளையைச் சுழலும்படி செய்தார். இவர் ஒரு பெரிய நீர்க்கடிகாரம் (Water clock) செய்தார். அது நான்கடி உயரம் இருந்தது. கடிகாரத்தின் முள்ளுடன் ஒரு சிறிய மரப் பலகை இணைக்கப்பட்டிருந்தது. மரப்பலகையின்மேல் நீர் சொட்டுவதால் அப்பலகை நகர்ந்து கடிகாரத்தின் முள் திருப்பப்பட்டது. இதனைக் கண்டோர் யாவரும் நியூட்டனுடைய அறிவு நுட்பத்தை வியந்து பாராட்டினர். நியூட்டன்

தம்முடைய நண்பர்களுக்கு மெழுகினால் விளக்குகள் செய்து கொடுத்து அவர்களை மகிழ்விப்பார். இவர் சில வேளைகளில் காற்றாடிகள் செய்து அவற்றின் வால்களில் விளக்குக்கூண்டு களைக் கட்டி இரவிற் பறக்கவிடுவார். நாட்டுப்புறத்து மக்கள் இவற்றை வால்மீன்களென நினைத்து என்ன தீங்கு நேரிடுமோ என அஞ்சினர்.

நியூட்டன் தமது காலத்தைப் புதிய விளையாட்டுக் கருவி கள் அமைப்பதிலேயே செலவிட்டதால் பாடப்புத்தகங்களை ஊன்றிப்படிக்க நேரமில்லாது போயிற்று. இதனால் இவர் தமது வகுப்பில் கடைசி மாணவராகவே இருந்தார். ஒரு நாள் தமக்கு மேலுள்ள பையன் ஒருவன் தம்மைக் காலா லுதைக்கவே இவர் சிறிதும் பொறுக்கலாற்றாது அவனை மற்போருக்கு அழைத்தார். அங்ஙனமே இருவரும் சண்டை யிட்டதில் ஆண்டிற் குறைந்திருந்த நியூட்டனே வெற்றி பெற்றார். இதற்குப்பின் இவர் படிப்பிலும் அப்பையனைத் தோற்கடிக்க உறுதி செய்துகொண்டு தம் விடா முயற்சியால் வெகு விரைவில் வகுப்பின் முதல் மாணாக்கராக விளங்கினார்.

சில ஆண்டுகள் கழிந்ததும் இவர்தம் அன்னையார் உதவிக்கு ஆள் இல்லாததால் இவரைப் பள்ளியிலிருந்து நிறுத்தியதுமன்றி வீட்டு அலுவல்களைப் பார்க்கும்படி ஏற் பாடு செய்தார். இவருடைய அன்னை தானியம் முதலியவற்றை விற்பதற்கும், வீட்டிற்கு வேண்டிய சாமான்களை வாங்குவதற் கும் நியூட்டனை ஒரு வேலையாளுடன் சந்தைக்கு அனுப்புவது வழக்கம். நியூட்டன் அவ் அலுவல்களை வேலையாளிடமே ஒப்புவித்துவிட்டு வேலியோரங்களில் உட்கார்ந்து புத்தகங் களைப் படிப்பார். ஒருநாள் இவர் வேலியோரத்தில் அமர்ந்து ஒரு கணிதநூலை ஆராய்வதை இவருடைய மாமன் கண்டார். உடனே அவர் நியூட்டனுக்குக் கல்வியில் இருக்கும் ஆர்வத்தை அன்னையாரிடந் தெரிவித்து இவரை மீண்டும் கல்விச்சாலைக்கு அனுப்பும்படி வற்புறுத்தினர். அங்ஙனமே இவர் கிரந்தாம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்.

இவருக்குச் சித்திரம் எழுதுவதில் மிகுந்த விருப்பம் உண்டு. இவர் எப்பொழுதும் அறிவியல் ஆராய்ச்சி செய்து கொண்டே இருப்பார். இவர் சிறு பிள்ளையாக இருக்கும் போதே உலோகங்களை எளிதில் உருக்கும் வழிகளையும், உடைந்துபோன கண்ணாடிகளை ஒட்டவைக்கும் தந்திரங்களை யும் கண்டுபிடித்தார். இவர் 1661-ஆம் ஆண்டில் டிரினிட்டி (Trinity) பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இவர் மிகவும்

எழ்மை நிலையில் இருந்ததால் கலாசாலையில் மாணவர்களுக்கு உணவு பரிமாறும் வேலையை ஏற்றுக்கொண்டார். இதனால் இவருக்கு உணவு இலவசமாகக் கிடைத்தது. இவர் மாணவராக இருக்கும்பொழுதே ஒலி அலைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து வந்தார். இக்காலத்தில் இலண்டன் நகரில் ப்ளேக் (Plague) என்னும் கொள்ளை நோய் பரவத்தொடங்கினதால் நியூட்டன் வீடு திரும்ப நேரிட்டது.

இவர் 1664-ஆம் ஆண்டில் வான நூல் ஆராய்ச்சியில் தமது எண்ணத்தைச் செலுத்தினார். இவர் இரவில் நெடு நேரம் வரை வானத்தை நோக்கி ஆராய்வார். இவர் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து தாமே ஒரு தொலை நோக்காடி (Reflecting Telescope) செய்தார். இது கலீலியோவின் கண்ணாடியைவிட ஆற்றல் நிறைந்ததாக இருந்தது. நியூட்டன் இதன் உதவியால் வியாழ மண்டிலத்தைச் (Jupiter) சோதிக்கத் துவங்கினார்.

மரத்தில் பழங்கள் பழுத்தவுடன் அவை ஏன் நிலத்தில் வந்து விழவேண்டுமென்றும், அவை ஏன் வானத்தை நோக்கிக் கிளம்பக்கூடாது என்றும் சில ஐயங்கள் இவருக்குத் தோன்றின. இதைப்போலவே வானத்தில் ஒரு கல்லை விட்டு எறிந்தால் அது மேலும் மேலும் உயரத்திலேயே போய்க்கொண்டு இருக்காமல் மீண்டும் ஏன் நிலத்திலேயே வந்து விழுகின்றது என ஆராய்ந்தார். நிலமும் நாம்காணும் ஏனைய பொருள்களும் ஒன்றையொன்று தம்பால் இழுக்கின்றன வென்றும், நிலம் கல்லையும் பழங்களையும் ஏனைய பொருள்களையும்விடப் பன்மடங்கு பெரிதாகையால் அவற்றைத் தன்னிடம் இழுத்துக் கொள்கின்றது என்றும் இவர் கண்டுணர்ந்தார். திங்கள் (சந்திரன்) அதன் பாதையை விட்டு அகலாமல் இருப்பதும் நிலத்தின் கவர்ச்சியினால் (Gravitation) தான் என்று நியூட்டனுக்குப் புலப்பட்டது. திங்கள் ஏன் நிலத்தைச்சுற்றி வருகின்றது? இங்ஙனமே ஏனைய கோள்களும் நிலை பிறழாது ஒன்றையொன்று எதனால் வட்டமிடுகின்றன? அவைகள் ஏன் நேராக ஓடிப்போவதில்லை? ஒரு கல்லைக் கயிற்றினால் கட்டிச் சுழற்றுவதாக வைத்துக்கொள்வோம். கயிறு உறுதியாக இருக்கும்வரை கல் சுற்றிச் சுற்றி வட்டமிடுகின்றது கயிறு அறுந்தவுடன் கல் எங்கேயோ போய்விழுகின்றது. நியூட்டன் தாம் கண்டுபிடித்த வையகத்தின் கவர்ச்சியை மேலே கூறிய கயிற்றின் இழுக்கும் ஆற்றலுக்கு ஒப்பிடுகின்றார். இக்கவர்ச்சியின்றேல் திங்கள்(சந்திரன்) பூமியைச்சுற்றி வட்டமிடாமல் ஏனைய கோள்களோடு மோதிக்கொள்ளும்படி நேரிடும்.

இவையுமன்றி நியூட்டன் படைப்பின் மற்றொரு வியத்தகு தோற்றத்தையும் உலகிற்கு விளக்கிக்காட்டினார். இவர் கதிரவன் ஒளியை ஒரு சிறு வாயிலின் வழியாக இருட்டறையினுள் கொண்டுவந்து முப்பட்டைக் கண்ணாடி (Prism) ஒன்றின்மேல் பாயும்படி செய்தார். அக்கண்ணாடியை ஊடுருவிச் சென்ற வெண்மை ஒளி கண்ணாடியைவிட்டு அகன்றவுடன் வானவில்லைப்போன்று பல்வேறு நிறங்களுடன் எதிரிலுள்ள சுவரில் விழுந்தது. அதுவரை எவரும் அறியாத இந்நுட்பத்தை நியூட்டன் தமது ஆராய்ச்சினால் விளக்கிக்காட்டினார். கதிரவன் ஒளி வெண்மையாகத் தோன்றினாலும் உண்மையில் அது பலநிறப்பட்ட நிறங்களால் ஆக்கப்பட்டது என்றும் நிற ஒளிக்கதிர்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மைகள் உடையன என்றும், அவற்றின் ஆற்றல்கள் ஒன்றிற்கொன்று மாறுபடுகின்றன என்றும் இவர் கண்டுபிடித்தார். நியூட்டன் விளக்கிக்காட்டிய இந்நிறக்கூட்டம் (Spectrum) ஒளி ஆராய்ச்சிக்கே அடிப்படையானது. நம் கண்ணுக்குப்புலப்படும் இச்சிறிய நிறக்கூட்டம் ஒரு பெரிய நிறக்கூட்டத்தின் சிறு பகுதியே என்பதும், அதன் இரண்டு முனைகளிலும் கண்ணுக்கு எட்டாத ஒளிக்கதிர்கள் இருக்கின்றன என்பதும், பிற்காலத்திய ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பெற்றன. நம் கண்ணுக்குத்தெரியும் நிறக்கூட்டம் சிவப்பு முதல் நீலம் வரை ஏழு நிறங்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது. சிவப்பு ஒளிக்குமேலும், நீல ஒளிக்குக்கீழும் ஆற்றல் மிகுந்த ஒளிக்கதிர்கள் இருக்கின்றன. (Infra red rays and ultra violet or x-rays) இவ் ஒளிக்கதிர்கள் கம்பியில்லாத்தந்தி முதலிய அரிய கருவிகளை இயக்குவதற்கும், பனியால் மூடப்பெற்ற இடங்களைப் படம் பிடிப்பதற்கும், பல்வேறு நோய்களைப் போக்குவதற்கும் உடம்பிற்குள் முறிந்துபோன எலும்புகளைப் படம் பிடித்து ஒட்டவைப்பதற்கும் உதவுகின்றன. இவ் ஒளிக்கதிர்கள் கல், மரம், சதை ஆகிய எல்லா திணிப்பொருள்களையும் தங்குதடையின்றி ஊடுருவிச் செல்கின்றன. ஒளிக்கதிர்களின் அரிய தன்மைகளைக் கண்டுபிடிப்பதற்கு நியூட்டனுடைய நிறக்கூட்டமே வழிகாட்டியாக இருந்தது.

1668-ஆம் ஆண்டில் நியூட்டன் எம். ஏ. பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகத்தில் இவர் ஓர் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பெற்றார். அடுத்த ஆண்டில் டாக்டர் பேரோ (Dr. Barrow) என்பவரின் உதவியால் இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கணிதநூற் பேராசிரியராக அமர்ந்தார். 1672-ஆம் ஆண்டில் இவர் அரசர் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவர்

தன்மைகளைப்பற்றியும், வானத்தின் நிறத்தைப்பற்றியும், ஒலி அலைகளின் போக்கைப்பற்றியும், கடல் அலைகளின் உற்பத்தியைப்பற்றியும், விண்மீன்களின் தோற்றங்களைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்து வந்தார். இவர் நெடுநாட்களாய் ஆராய்ந்து அறிந்த உண்மைகளை பிரின்ஸிப்பியா (Principia) என்னும் நூலில் வெளியிட்டார். 1688-ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் (Parliament) இவர் ஓர் உறுப்பினராக அமையப்பெற்றார்.

இவர் தமது வாழ்நாள் முழுவதையும் அறிவியல் ஆராய்ச்சியிலேயே கழிப்பதென உறுதிசெய்துகொண்டார். இவர் கண்களின் அமைப்பைப்பற்றியும் அவற்றில் ஒளிமாறுபடும் தன்மைகளைப்பற்றியும் ஆராய்ச்சி செய்தார். உலோகங்களின் உருகும் தன்மையைப்பற்றியும் இவர் ஆராய்ந்தார். நியூட்டன் தாம் கண்டறிந்த உண்மைகளை, அவ்வப்போது தமது கைப்பட எழுதிவைத்து அவற்றை அச்சிட எண்ணி இருந்தார். ஒருநாள் நியூட்டன் இல்லாத வேளையில், இவரது நாய் எரியும் மெழுகுவத்தியை அத்தாள்களின் மேல் இடறித் தள்ளி விட்டது. இதனால் அவற்றிற் பெரும்பகுதி தீக்கிரையாயிற்று. நியூட்டன் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் நடந்ததைக் கண்டு ஆறாத் துயருற்றார். ஆயினும் இவர் எல்லா உயிர்களிடத்திலும் மிகுந்த அன்புடையவராகலின் நாய்க்கு ஒரு தீங்கும் செய்யக் கருதினாரில்லை. இவர் பொறுமையுடன் பல ஆய்வுகளை மீண்டும் செய்து பார்த்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் அந்நூலை அச்சிட்டு வெளியிட்டார். இவர் மிகவும் வருந்தி உழைத்து வந்தமையால் இவரது உடல் நலம் குன்றியது.

1695-ஆம் ஆண்டில் நியூட்டனுக்கு நாணயச்சாலையின் மேற்பார்வையாளர் (Warden of the Mint) வேலை கிடைத்தது. இவ்வேலையில் நியூட்டன் ஆண்டு ஒன்றுக்கு ஐந்நூறு பவுன் சம்பளம் பெற்று வந்தார். இவர் நான்கு ஆண்டுகளுக்குள் ஆயிரத்து ஐந்நூறுபவுன் சம்பளத்தில் நாணயச்சாலைத் தலைவராக அமர்த்தப்பெற்றார். அக்காலத்தில் ஆங்கிலநாட்டில் கள்ள நாணயங்கள் மிகுதியாய் வழங்கி வந்தன. நியூட்டனின் முயற்சியால் இதை ஒடுக்குவதற்குச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. நாணயங்களும் அரசாங்கத்தாரால் புதிய முறையில் செய்யப்பட்டன. நியூட்டன் நாணயத்தாள்களுக்கு (Currency notes) நீர்க்குறி (Water mark) இடுவதையும், உலோகங்களை எளிதில் உருக்கும் நுட்பங்களையும் கண்டுபிடித்தார்.

இவர் ஆராய்ச்சியில் ஈடுபடும்போது பல எண்ணங்களில் ஆழ்ந்திருப்பார்; ஆகலின் சில வேளைகளில் தம்மையே மறந்து

விடுவார். ஒருநாள் நியூட்டன் தமது குதிரையின் கடிவாளத்தைப் பற்றிக்கொண்டு ஒரு குன்றின்மேல் ஏறிப்போய்க்கொண்டிருந்தார். இவர் பல நினைவுகளில் ஆழ்ந்திருக்கும் பொழுது குதிரை நழுவிப்போய்விட்டது. இவர் குதிரை போனதும் தெரியாமல் நெடுந்தொலைவரை கடிவாளத்தை மட்டிலும் கையிற் பிடித்துக்கொண்டே நடந்து சென்றார். முடிவில் குதிரைமேல் ஏறிச்செல்லலாமென எண்ணிப் பார்த்த போதுதான் அது நழுவிப்போனதை உணர்ந்தார். மற்றொருநாள் இவர் முட்டை சமைக்கத் தொடங்கியபொழுது தமது கருத்து வேறொன்றைப்பற்றி யிருந்தமையால் முட்டைக்குப் பதிலாகத் தமது சிறிய கடிகாரத்தை உலையிலிட்டன ரென்று கூறப்படுகின்றது. இவர் பல இரவுகளில் படுக்கையிலேயே உட்கார்ந்து உறக்கமின்றிப் பல்வேறு எண்ணங்களில் ஆழ்ந்திருப்பார்.

இவர் 1699-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பஞ்சாங்கத்தைத் திருத்தியமைத்தார். அடுத்த ஆண்டில் இவர் மாலுமிகளுக்கு இன்றியமையாததான (Sextant) அளவைக்கருவி ஒன்றைக் கண்டுபிடித்தார். 1703-ஆம் ஆண்டில் அரசர் கழகத்தின் தலைவர் ஆனார். அரசாங்கமும் இவருக்குச் சிறந்த பட்டங்களை வழங்கிற்று. நியூட்டனுக்குப் பெருஞ் செல்வம் பெருகிற்று. இவர் தமது செல்வமனைத்தையும் பிறருக்கு நன்மை செய்வதிலேயே செலவிட்டார். நியூட்டன் இறைவனிடத்து இடையறாத அன்பு பூண்டு ஒழுகிவந்தார். இவர் இயற்றிய நூல்களில் இறைவன்றன் முழுமுதற்றன்மையையும், அளவிலாற்றலையும் வற்புறுத்திக் கூறி இருக்கின்றார். இவர் உலகிற்காணும் விந்தைகள் அனைத்தும் எம்பெருமானது "அலகிலாவிளையாட்டே" ஆகும் என்னும் முழுநம்பிக்கை கொண்டவர். நியூட்டன் இளகிய மனமும் மிகுந்த பணிவும் உடையவர். இவர் "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்னும் உண்மையைத் தமக்குத்தாமே அடிக்கடி நினைவூட்டிக்கொள்வார். இவர் ஆண்டு முதிர்ந்த பின்னரும் அரசர் கழகத்திற்குச் சென்று ஆங்கு நடக்கும் அறிவியல் ஆராய்ச்சிகளிற் கலந்து கொள்வார்.

நியூட்டன் 1727-ஆம்ஆண்டு தமது 85 ஆவது அகவையில் இறைவனடி சேர்ந்தார். இவரது உடல் அரசகுடும்பத்தினர்க்கும் ஏனைய பெருமக்களுக்கும் உரிய வெஸ்ட்மினிஸ்ட்டர் சமாதியில் (West-minister Abbey) அடக்கஞ்செய்யப்பட்டது.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம், உள்ளத் தனைய துயர்வு"

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

[புதுக்கவி]

தமிழர் சிறப்பு

[கோடுமுடி வித்துவான் திரு. பெ. கோவிந்தன் அவர்கள்]

மெல்லியல் மகளிர் மேற்கணை யெறிந்து
வீழ்த்தலும் வில்லெடாப் பகையைக்
கொல்லுவா னெளிந்து வில்லினை லெறிந்து
கொல்லலும் ஆரியர் வீரம்;
எல்வளை மகளி ராக்களைப் போக்கி
எதிர்வரும் பகைஞரோ டெதிர்ந்து
வில்லில தாயின் வில்லையுங் கொடுத்து
வெல்லுதல் தமிழர்தம் வீரம். 1

பிறப்பினு லுயர்வு தாழ்வெனக் கூறிப்
பிறப்பித்த கடவுளைத் தொழவும்
அறத்தொடு செலவும் வேற்றுமை காட்டி
அலைவதே ஆரிய ரொழுக்கம்;
சிறப்புறு மொழுக்க அறிவினு லுயர்வு
தெரிவித்திங் கியாவர்க்கு மொப்ப
அறத்தொடு மொழுகி அறிவினை வணங்கி
அமைவதே தமிழர்த மொழுக்கம். 2

மெய்யினை வருத்துங் கைத்தொழி லின்றி
வெறுப்புறு மிரப்பினு லேய்ப்பால்
பொய்யினுற் பிறர்பாற் புகுந்திரந் துண்டு
பொலிவதே ஆரியர் வாழ்க்கை;
செய்தொழில் வருந்திச் செய்துபொன் னீட்டித்
தெரிந்ததஞ் சுற்றமுண் பித்து
வையகர்க் குதவி தாங்களு முண்டு
வாழ்வதே தமிழர்தம் வாழ்க்கை. 3

பொன்வரை வேண்டும் பொருளெலாம் பிறர்பால்
புகுந்திரந் தேற்பதே யன்றிக்
கன்மனங் கொண்டு நீருமே யீயாக்
கயமையே ஆரிய ரியல்பு;
துன்புறு முயிர்க்கு மெழுகென வுருகித்
துன்னுகை மாறெதிர் நோக்கா
தென்னையுங் கொடுத்துத் துன்பினைக் கெடுக்கு
மிரக்கமே தமிழர்த மியல்பு. 4

தம்மையே புகழ்ந்து பிறர்தமை யிகழ்ந்து
சார்பயனுண் டெனிற் சார்ந்து
வெம்மன வரைவின் மகளிரே போல
விலகுவ தாரியர் கேண்மை;
இம்மையி னன்மை தீமைவந் தணையின்
இரண்டையு முடனிருந் துண்டு
செம்மைசேர் நெஞ்சக் குலமகள் போலத்
திகழ்வது தமிழர்தங் கேண்மை. 5

முனிவராய்க் காம முதல்வரா தலும்பொய்
மொழிவதிற் பெரியரா குதலும்
மனிதருக் கரசாய்க் கொலைபுரி குதலும்
வடபுலத் தாரியர் பெருமை;
கனியிதழ் வெண்பற் பிறர்மனை நயக்குங்
காமம்பொய் கொலைகளைக் கடிந்து
மனவினை யடக்கிமெய்ப் பொருள் காணும்
மாட்சிமை தமிழர்தம் பெருமை. 6

எள்ளுறு மணங்க ளெழுவகை யானும்
எழில்பெறு கணவரைக் கொளலும்
உள்ளுதெய் வத்தால் முனிவராற் கருக்கொண்
டுயிர்த்தலும் ஆரியர் கற்பு
புள்ளுறு பொழிலிற் காதனெஞ் சத்தாற்
பொருந்தலுங் கணவரை யன்றி
உள்ளமுந் தெய்வ முள்ளுத லொழிய
ஒழுகலுந் தமிழர்தங் கற்பு. 7

தக்கவை செய்யா தல்லவை செய்து
தாய்வழிப் பிறந்துபின் செத்த
மக்கள்பல் பேரைக் கடவுளென் றேத்தி
வணங்குவ தாரியர் சமயம்;
முக்கரு விக்கும் மூவுல குக்கும்
மூன்றுகா லக்குமப் பாலாய்ப்
புக்கவை யாகிப் பிறப்புறுப் பொருளைப்
போற்றுதல் தமிழர்தஞ் சமயம். 8

இயல்வரம் பின்றி யினிமையொன் றின்றி
எடுத்தலும் படுத்தலு மிகுந்து
கயவரைப் போன்று கருத்துக ளமைந்து
கழிந்ததா லாரியர் வடசொல்;
நயம்பல பொருந்தி யியல்வரம் புற்று
நல்லர சறிவரைப் போன்று
மயலறுங் துயர்ந்த கருத்துக ளமைந்து
வாழ்வுறும் தமிழர்தம் தென்சொல். 9

வகுப்புக ளமைத்துப் பார்ப்பன ரன்றி
மற்றையார் கற்பதை விலக்கும்
நகைப்புறும் வேள்வி யியற்றியூ னுண்ண
நவின்றிடும் ஆரியர் வேதம்;
பகுத்துணர் மக்கள் யாவருங் கேளிர்
படிக்கஎல் லோர்களும் உயிரைச்
செகுத்தலும் உணலும் தீமையா மென்று
செப்பிடுந் தமிழர்தம் வேதம். 10

குலசேகரன்பட்டினத்தில் ஒரு பெரியாரின் சமாதி

('சாம்பிராணிச்சாமி' என்ற யாழ்ப்பாணம் பொன்னம்பலசாமி)

இப்பெரியார் இளம் வயதிலேயே திருவாவடுதுறை சென்று சந்நியாசம்பெற்று இவ்வூருக்குத் தமது 19-ம் வயதில் வந்தார்கள். சைவ நன்மக்களின் போற்றுதலால் (61) அறுபத்தொரு ஆண்டுகள் இவ்வூரிலிருந்து. சிவப்பணி புரிந்து, 5-3-'37 வெள்ளிக்கிழமை மாலை (தமது 80-ம் வயதில்) சிவயோகத் தமர்ந்தார்கள்.

ஊரிலுள்ள சைவப்பிள்ளைமார், சைவமங்கையர், பாலர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கூடிவந்து மந்திர நீராட்டம் செய்வித்து, தூபதீப அர்ச்சனை முதலிய முறையால் ஆற்றுவித்துச் சில ஒலி முழக்கத்துடன் கோலாகலத்தோடு திருமந்திர நூலில் அருளியிருக்கும் முறைப்படி, திருச்செந்தூர் உண்டியல்சாமி அவர்களின் துணைகொண்டு சிவயோக சமாதியில் அமரச்செய்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

'சந்தியாவந்தன இரகசியம்' முதலிய பயன்கொள் நூல்கள் இயற்றிய, யாழ்ப்பாணம் வித்வான் சி. தாமோதரம்பிள்ளையவர்களின் தமையனார் தாம், இந்தச் 'சாம்பிராணிச்சாமி' என்பவர்கள். இவர்கள் நால்வகைத்தொண்டும் நயமுடன் ஆற்றிவந்தார்கள். திருநந்தவனம் வைத்து பூமாலை புனைந்தேத்தலும், சிவபூசை யேற்று முறைவழாது புரிதலும், யோகநூல் முறையின் நிட்டைகள் கூடலும், ஞானநூல் சாத்திரம் பழுதற ஓதலும் ஆகிய தொண்டுகள் அமைவுறச் செய்து வந்தார்கள்.

'சைவ வினவிடை', 'சைவ பாலபாடம்' முதலிய பள்ளிக்கூட மாணவர்களுக்குக் கைம்மாறு கருதாது ஓதுவித்து வந்தார்கள். காமம், வெகுளி, மயக்கம் மூன்றும் கடிந்து நல்வாழ்வில் வாழ்ந்து வந்தார்கள் என்றும் சிவனடி மறவாத் தொண்டு ஆற்றி வந்தார்கள். படுக்கையிலுற்றுச் சமாதியாம் வரையும், ஞானநூல்களையும், சித்தாந்த சாத்திரம் பயன் இயல்களையும் ஓதிக்கொண்டிருந்த அருஞ்செயலே, அவர்களின் இடையறுத்தொண்டின் உறுதிப்பாட்டிற்குப் போதிய சான்றாகும்.

சமாதி விழாமுடிய இரவு மணி 12 ஆயிற்று. அம்முடிவு வரை சைவ மங்கையர், மாந்தர், பிள்ளைகள் சுமார் 500 வரை சிவநாம முழக்கத்தோடு இருந்து பணியாற்றிய தன்மை எவ்வெவர் மனத்தையும் சிவத்தொண்டில் ஈடுபடச்செய்தது.

ஓம்
தமிழ்த் தெய்வம் துணை.

செந்தமிழ் மா நாடு.

"கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழேனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிப்போல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"

நற்றமிழ் அன்பர்களே!

இப்போது தமிழ ரல்லாத ஏனைய நம் நாவலந்தீவு (இந்தியா) நாட்டிலுள்ள பற்பல பகுதியினரான பற்பலமொழி பேசுவோருந் தத்தம் மொழிகட்கு ஆக்கந் தேடி விட்ட-தேடுகின்ற, உண்மையைப் பலரும் நன்கு அறிந்ததே.

உலகம் போற்றும் உயரிய நாகரிக வாழ்க்கையிற் சிறந்த பழைமையானவர்களான நந்தமிழ் மக்கள் தஞ் சீரிய நாகரிக வாழ்க்கைக்கு உறுபெருந் துணைக் கருவியாகவுள்ள தாய் மொழியாந் 'தண்டமிழை'ப் போற்றி, அதனைக் கட்டாயக் கல்வி யாக்கும் முறையை இதுகாறும் மேற்கொள்ளா திருப்பது நனியும் வருந்தத் தக்கதே.

இப்போது தமிழ் நாட்டில் வீறு கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் 'இந்தி மொழிக்' கட்டாயக் கல்வி முறையின் விடாமுயற்சி உழைப்பைக் கண்டாயினும் நந் தமிழறிஞரும், தமிழ்மக்களும் நம் உயிரினுஞ் சிறந்த 'இன்றமிழ்'க்கான ஆக்க நிலை பேறுகளைக் கோலா திருப்பது இன்னும் பன்முறை சாலவும் வருந்தத் தக்கதாகவே இருக்கின்றது.

எனவே, இப்பழம் பதியாகிய 'கருவூரில் செந்தமிழ் மா நாடு' என்ற ஓர் மா நாட்டைத் திருவுடைத் தமிழன்பர்களின் துணைக் கொண்டு கூட்டவும், அக்குழூஉவில் தமிழறிஞர் பலரை வரவேற்றுச் செந்தமிழ் மொழியின் பெருமையைப் பற்றியும், அதனைக் கட்டாயக் கல்வி யாக்கும் இன்றியமையாமை யைப் பற்றியும், விரிவுரைகள் நிகழ்த்தச் செய்யவும், அம் மாநாட்டின் சார்பாகப் பொறுப்புள்ள பல தமிழ்ப் பெரியார் களின் கையெழுத்திடப் பட்ட ஓர் கட்டாயக் கல்வித் தீர் மானத்தை நிறைவேற்றவும், அதனை மாகாண அரசியற் றலை வர்க்கும், கல்வித்துறைத் தலைவர்கட்கும் அனுப்பவும் முடிவு செய்யப் பட்டிருப்பதால், இவ் விண்ணப்பத் தாளைக் கண்ணு

றும் தமிழன்பர்கள் எல்லாரும் உளமுவந்து தத்தம்மா லியன்றபொருளுதவியை விரைந்து செய்து, இம் மாநாட்டை மிக அண்மையில் கூட்டுதற்குரிய வசதிகளைப் புரிந்தும் இந் நற் பெரும் பணியை இனிது முடித்துத் தர வேணுமாக நனியும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
ஈழத்துச் சிவானந்த அடிகள்.

வித்வான். வை. பொன்னம்பலனார்,
தமிழாசிரியர், வேலூர்—சேலம்.

குறிப்பு:—இம் மாநாட்டைக் கூட்டும் நாள், விரிவுரையாற்று வோரின் பெயர்கள் முதலியன விரைவில் வெளியிடப் படும்.

பொருள் உதவி புரியும் அன்பர்கள் கீழ்க்குறிக்கும் முகவரிக்கு (விலாசம்) அனுப்பவும். 'முனிவரும் மன்னரும் உன்னுவ பொன்னால் முடியும்' மணிமொழி.

10—4—37 }
கருவூர் } ஈழத்துச் சிவானந்த அடிகள்,
அறிவுதயக் கழகம், வஞ்சியம்மன் கோயிற் றெரு, கருவூர்,

வயலூர் முருகப்பெருமான் கோவில் குடமுழுக்கு (கும்பாபிடேகம்)

திருச்சியிலிருந்து நான்கு மைலுக்கப்பாலுள்ள வயலூரில் அருணகிரிநாதரால் திருப்புகழ்ப் பாடல்பெற்ற முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் கோபுரம் ஒன்று புதிதாய் எழுப்பித்திருக்கிறது.

உட்புறம் முருகப்பெருமான் திருமுன் அருணகிரிநாதருக்கு ஒரு மண்டபம் அமைத்து, அதில் அவர்தம் உருவச்சிலை வைக்கப்பெறுகின்றது. இப்பெருஞ்செயல் சென்னைத் திருப்புகழாமிர்த ஆசிரியரும், பெருஞ்சொற் பொழிவாளருமாகிய உயர்திரு கிருபானந்தவாரி அவர்கள் நன்முயற்சியால் நடைபெறுகின்றது.

18-6-37-ஆனி 5உ வெள்ளிக்கிழமை குடமுழுக்கு (கும்பாபிடேகம்) மிகவுஞ் சிறப்பாக நடைபெறும். அவ்வகைக்கு முருகனடியவர்கள் வேண்டும் பொருளுதவி புரிவதோடு நேரில் விழாவினைக் கண்டு முருகப்பேற்றைப் பெற் றின்புறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருவள்ளுவர் திருநாள்

25-5-37 செவ்வாய்க்கிழமையன்று திருவள்ளுவர் திருநாள் வருகின்றது. சென்ற ஆண்டைப்போல இவ்வாண்டிலும் எல்லா ஊர் மக்களும் ஆங்காங்கே விழாவினைச் சிறப்பாக நடத்துவார்களாக,



ஜான் டேவிஸன் ராக்ஃபெல்லர்.



சிலம்பு-௧௫] ஈசுவர—வைகாசி [பரல்-௰

திருநாவுக்கரசு அடிகள்

கோயில் பெரிய திருத்தாண்டகம்

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தயனுங் காணா வண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கு
மேரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு
மேழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

பதவுரை:—

காரொளிய திருமேனிச் செங்கண்மாலும்—கருநிறத்தோடு கூடிய ஒளிபொருந்திய அழகிய உடலையும் செந்தாமரை மலர் போலுஞ் சிவந்த கண்களையுமுடைய திருமாலும்,

கடிக்கமலத்து இருந்து அயனும் காணாவண்ணம்—நறுமண முடைய வெண்டாமரைமேல் வீற்றிருந்துள்ள நான்முகனும், அடியும், முடியும் தேடியும் அவர்கள் காண எட்டாதிருக்கும் தன்மை யுடைய,

சீர் ஒளிய தழற் பிழம்பாய் நின்ற திகழ் தொல்லை ஒளியை—திருந்திய ஒளியுள்ள தீப்பிழம்பாய் அவர்களிருவர் நடுவிலே நின்றதும் ஒளிர்கின்ற பழமையாயுள்ளதுமாகிய இன்ப ஒளியாயும் (ஆநந்த ஒளியாயும்),

சிந்தைதனை மயக்கம் தீர்க்கும் எர் ஒளியை—(தன்னையே நாடித் தேடிக் கொண்டிருக்கும் அடியார்களுடைய) சிந்தையில் அவர்கள் தன்னைப்பற்றி நினைந்துகொண்டிருக்கும் மயக்க அறிவை முற்றிலும் நீக்குகின்ற அழகான அருள் ஒளியாயும்,

இருநிலனும் விண்ணும் எழுலகும் விசும்பும் கடந்து அண்டத்து அப்பால் நின்ற பேரொளியை—பெரிய நில உலகம், விண்ணுலகம். முதலிய எழுலகங்களையும் அவற்றின் திசைகளையுங் கடந்து அவற்றிற்கு அப்பாலாயுள்ள அண்டப்பரப்பையும் தாண்டி நிற்கிற தூவெளி (ஞானகாச) ஒளியாயும்,

பெரும்பற்றப் புலியூரானை—தில்லையில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் கூத்தப்பிரானை,

பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே—மக்களாகிய நாம் நமது வாழ்நாளில் நினைந்து அவன் புகழைப் பேசி வணங்காத நாள்களெல்லாம், அவை தோன்றிய நாள்களாயிருந்தும், பயனில்லாது கழிந்த வீண் நாள்களேயாகும்.

விளக்கவுரை:—

கார் ஒளிய திருமேனிச் செங்கண்மால்—திருமால் கார்நிற வண்ண மேனியையும் செந்தாமரை மலர்போலும் சிவந்த கண்களையுமுடையன் ஆதலின் அவனை அடிகள் 'காரொளிய திருமேனிச் செங்கண்மால்' என்றார்.

கடிக்கமலத்து இருந்து அயனும்—இருந்துள்ள என்பது, இருந்து எனக் குறைந்துநின்றது. தாமரை மலர்போன்ற உலகத்திலிருந்துகொண்டு படைப்புத் தொழில் செய்கிறவன் நான்முகன் என்பார், 'கடிக்கமலத்திருந்து அயனும்,' என்று உருவகமாய்க் கூறினார். தத்துவங்களாலாகிய உலகைத் தாமரை மலருக்கு ஒப்பிட்டிருத்தலை, சிவஞானபோதம் 9-வது சூத்திரம் "மண்முதளைமலர்" என்ற முதற் குறிப்பு வெண்பாவாலறிக.

சீர் ஒளிய தழற் பிழம்பாய் திகழ் தொல்லை ஒளியை—இது, திருமால் அயன் இருவர்களில் ஒவ்வொருவரும், யான்பெரியன், யான் பெரியன் என்று தங்களுக்குள் தருக்கிப் பூசலிட்டபொழுது, அவர்களின் நடுவே சிவபெருமான் அவர்களுடைய செருக்கை அடக்கும் பொருட்டுத் தனது அடியும் முடியும் காணவண்ணம் தழற்பிழம்பாய் நீண்டு வளர்ந்து நின்ற சிவபுராண வரலாற்றைக் குறிக்கிறது. இப்பாட்டிற் கூறப்பட்டிருக்கிற மூன்று ஒளிகளுள், இது "ஆதியு மந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி" (ஒளி) ஆதலின் இதனை அடிகள் 'திகழ் தொல்லை ஒளி' என்றார்.

திருமூலர் இந்த ஒளியைத் திருமந்திரத்தில் "தானந்தமாமேனி நின்ற தனிச்சுடர்" (2081) என்றும், "பேரறியாத பெருஞ்சுடர்" (109) என்றும், "ஆனந்தத்துள்ளொளி" (126) என்றும். "கரையற்ற

சோதி" (134) என்றும், "பேரொளியாய்ப் பெரிய பெருஞ் சுடர்" (1375) என்றுங் கூறுகின்றார். மாணிக்கவாசக அடிகள் இந்த ஒளியை "ஆநந்த மாக்குமென்சோதி" (395) என்றும் "முழுச்சோதி" (434) என்றும் "பெரிய வரிய பரஞ்சோதி (649) என்றும் கூறுகின்றார்.

சிந்தைதனை மயக்கம் தீர்க்கும் ஏர் ஒளியை—உலகம் அசத்தாயுள்ள பொய்ப்பொருள் என்பதைப்பற்றியும் சிவம் சத்தாயுள்ள மெய்ப் பொருள் என்பதையும்பற்றியும் அடியார்கள் தங்கள் சிந்தையிலே கொண்டுள்ள சிறு ஐயந்திரிபுகளை அடிகள் இங்கே 'மயக்கம்' என்று கூறினார். அடியார்கள் தங்கள் ஞானாசிரியன்பால் பதி பசு பாச உண்மைகளைக் கேட்டறிகிற அறிவிலும் கேட்டறிந்த உண் மைகளைச் சிந்தித்தறியும் அறிவிலும் மெய்யறிவோடு சிறிதளவு கருவி அறிவும் கலந்திருப்பதாலும், கருவி அறிவு சிறிதும் கல வாத மெய்யறிவிலன்றி முற்றிலும் அடியார்களுடைய சிந்தையி லுள்ள ஐயந்திரிபுகள் நீங்கா ஆகலானும், அடிகள் 'சிந்தைதனை மயக்கந் தீர்க்கும் ஏர் ஒளியை' என்றார். தெளிதல் அறிவிலே தான் கருவி அறிவு முற்றிலும் சிந்தையைவிட்டு நீங்கிவிடுகிறது. சிவபெருமான், முப்பொருள்களின் உண்மைகளை ஞானாசிரியன் பால் கேட்டுச் சிந்தித்த அடியார்களுடைய சிந்தையைச் சிறிதும் ஐயந்திரிபுகளின்றித் தெளிவித்தல் இங்கே கூறப்பட்டது.

ஆன்மா தெளிதல் அறிவிலேதான் சிறிதளவும் அந்தக்கரணங்க ளோடும் கூடி அறியாதிருக்கின்றது என்ற உண்மையைச் சிவ நேயர்கள் சிவஞான சித்தியார் 8-வது சூத்திரம் "அறியாமை அறிவகற்றி" என்ற முதற் குறிப்புப் பாட்டினாலறிக. இதனா லன்றோ மாணிக்கவாசக அடிகளும் திருவாசகம் கண்டபத்து முதலாவது பாட்டில் "சிந்தை தனைத்தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா வானந்தம்" என்றும், அச்சோப்பதிகம் முதலாவது பாட்டில் "சித்த மலமறுவித்துச் சிவமாக்கி யெனை யாண்ட அத்தன்" என்றும் கூறி யருளினார்! இதனால் ஆன்மாப் பேரின்ப மடைதலுக்குச் சிவமாதலும், சிவமாதற்குச் சிந்தைமல முற்றிலும் நீங்கித் தெளிதலும் இன்றியமையாதன என்பது தெளிவு.

ஏர் ஒளி—ஏர் என்பது அழகு. ஒளி என்பது இங்கே அடியார்க ளுடைய தகராகாச சிந்தையில் விளங்கும் அருள் ஒளியைக் குறிக்கிறது. ஞான சத்தியாகிய அருட்சத்தியானவன் அடி யார்களுடைய பக்குவமறிந்து அப்பக்குவத்துக்குத் தக்கவாறு அருள்செய்தலால், 'ஏர்ஒளி' யென்றார். ஓர் சிற்பன் தான் செய்த கல்லுருவத்தில் அதன் உறுப்புக்களெல்லா மொன்றுக் கொன்று பொருந்திய அளவுடன் செய்தலினாலே அதனை வெளி அழகு படச் செய்கின்றான். இறைவன் உயிர்களுடைய பக்குவமறிந்து அவற்றிற்குத் தக்கவாறு தண்ணருள் புரிகின்றவன் ஆதலின் அவனை 'அறவாழி அந்தணன்' (அழகிய தட்பமுடையவன்) என்று

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் கூறினர். உயிர்கள் நற்பய னடையும்படி அவற்றினுடைய பக்குவத்துக்குத் தக்கவாறு அருள் செய்யும் உள் அழகு இங்கே 'ஏர்' என்ற சொல்லால் குறிக்கப் பட்டது.

இந்த அருளொளியைத் திருமூலர் திருமந்திரத்தில் "நெஞ்சு நிறைந் தங்கிருந்த நெடுஞ்சுடர்" (2094) என்றும் "சீரொளியாகித் திகழ் தரு நாயகி" (1375) என்றும், "உள்ளறிந்துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்" (1797) என்றும். "அன்புறு சிந்தையின்மே லெழு மவ்வொளி" (282) என்றும், "உள்ளத்தொருவனை உள்ளூறு சோதியை" (431) என்றும், கூறுகின்றார். மாணிக்கவாசக அடி கள் இந்த ஒளியை "துண்ணென வென்னுள் மன்னிய சோதி" (641) என்றும், "அருட்டுறை யளிக்குஞ் சோதி" (604) என்றுங் கூறுகின்றார். திருநாவுக்கரசு அடிகள் திருவாரூர்த் திருத் தாண்டகம் முதலாவது பாட்டில் (245—1) "சுடரொளியாயுள் விளங்கு சோதி" என்று இவ்வொளியைக் கூறுகின்றார்.

இருநிலனும் விண்ணும் எழுலகும் விசும்பும் கடந்து அண்டத்து அப் பால் நின்ற பேரொளியை—இருநிலனும் விண்ணும் என்ற இரண்டு உலகங்கள் கூறப்பட்டபின் எழுலகம் என்று கூறப்பட் டதனல் இருநிலன் விண்முதலிய எழுலகம் என்று உரை செய் யப்பட்டது.

விசும்பு என்பது இங்கே திசை. அண்டம் என்பது எழுலகங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் முட்டை வடிவான அண்டப் பரப்பு. இந்த ஒளி ஞானகாச ஒளி அல்லது தூவெளி ஒளி என்று கூறப்படும். இஃது அண்டத்துக்குக் காரணமாயிருப்பதால் அண்டவொளி என்றும் கூறப்படும்.

இந்தத் தூவெளியிலிருந்து உலகங்களெல்லாந் தோன்றி அதிலே ஒடுங்குகின்றன. இந்தத் தூவெளி ஒளியிடம் இரவு பகலில்லாத இடமாகும். இந்த ஒளியைத் திருமூலர் திருமந்திரத்தில் "அண் டங்களேழுங் கடந்தகன் றப்பாலும் உண்டென்ற பேரொளி" (2388) என்றும். "அண்டவொளியும் கண்டவொளியுடன்" (2806) என்றும் "உலகாய் நின்ற ஒண்சுடர்" (2081) என்றும் "தானே உலகுக்குத் தண்சுடராய் நிற்கும்" (1978) என்றும் கூறு கின்றார்: திருநாவுக்கரசு அடிகள் "ஒரு சுடரா யுலகேழுமானான் கண்டாய்" (253-10) என்றும் "உலகுக்கொரு விளக்காய் நின் றான்" (249-3) என்றும் கூறுகின்றார்.

இந்தத் தேவாரப் பாட்டில் தூவெளி ஒளி (ஞானகாச ஒளி), அருள் ஒளி, ஆநந்த ஒளி என்ற மூவொளிகள் கூறப்பட்டிருக்கின்றன. திருமூலர் திருமந்திரத்தில் மேலே கூறப்பட்டபடி ஒவ்வொரு ஒளியையும் வேறுவேறு பாட்டுக்களிற் கூறியிருத்தலோடு மூவொளிகளையும் சேர்த்து 2081-வது பாட்டில்,

"தானந்த மாமென நின்ற தனிச்சுடர்,
ஊனந்த மாயுலகாய் நின்ற ஒண்சுடர்"—என்று கூறுகின்றார்.

திருஞானசம்பந்த அடிகள் திருவையாறு பதிகம் எ-வதுபாட்டில் "உலகெலாஞ் சோதியாய் நிறைந்தான், சுடர்ச் சோதியுட் சோதி" என்றும்,

திருநாவுக்கரசு அடிகள் சித்தத்தொகைத் திருக்குறுந்தொகைப் பதிகம் 3-வது பாட்டில் "பாதிபெண்ணுருவாகிய பரஞ்சுடர் சோதியுட் சோதியாய் நின்ற சோதியே" என்றும்,

ஒரு பாட்டில் மூன்று ஒளிகளையும் கூறுதல் காண்க.

இறைவன் இந்த மூவொளிகளையு முடையவன் என்று திருமூலர் 221 வது பாட்டில்,

ஒண் சுடரானை யுலப்பிலி நாதனை
யொண் சுடராகி யென்னுள்ளத் திருக்கின்ற
கண்சுடரோனுல கேழுங் கடந்தவத்
தண்சுடரோமத் தலைவனுமாமே

என்று கூறுகின்றார்.

திருமூலர் இறைவனுடைய முச்சொரூபத்தைச் சொல்லும்பொழுது உலகமொடுங்குங் காலத்தில் மூன்று ஒளிகளுமொன்றும் என்று 2480-வது பாட்டில்,

"உலகம் புடை பெயர்ந்தூழியும் போன
நிலவு சுடரொளி மூன்று மொன்றாய்
பலவும் பரிசொடு பான்மை யனீசன்
அளவும் பெருமையு மாரறி வாரே" என்று கூறுகின்றார்.

அவர் அருட்சத்தியாகிய பூரணசத்தியைச் சொல்லுங்கால், 1148-வது பாட்டில்,

நவிலும் பெருந்தெய்வ நான் மறைச் சத்தி
துகிலுமை யாடை நிலம்பொதி பாதம்
அகிலமு மண்ட முழுதுஞ் செம்மாந்து
புகலுமுச்சோதி புனைய நிற்பானே" என்று கூறுகின்றார்.

இதனாலே பாட்டின் 4-வது அடியிற் கூறப்பட்ட பேரொளியாகிய தூவெளியானது பாசமொடுங்குகிற ஒளி யென்றும், 3-வது அடியிற் கூறப்பட்ட "எரொளியானது" பசு (ஆன்மா) அடங்குகிற அருளொளி என்றும், இரண்டாவது அடியிற் கூறப்பட்ட தொல் ஒளியானது அவ்வருளொளி அடங்குகிற இறைவனுடைய முழுஒளி என்றும், உலகம் தோன்றும்பொழுது இறைவனுடைய முழு ஒளியிலிருந்து அருளொளி அதனின்றும் வேறுபடாமற் பிரிந்து தூவெளி ஒளியோடு கலந்து உலகிலுள்ள நானாவித உருவங்களையுடைய உலகமாக விரியுமென்றும், உலகமொடுங்கும்பொழுது இம்மூன்று சோதிகளுமொன்றும் என்றும் நாம் அறியலாம்.

இன்னும் இறைவன் சச்சிதானந்த சொரூபத்தன். இந்த முச்சொரூபங்களில் சத்துக்கு ஆதாரமாயுள்ளது பாட்டிற்கூறப்பட்ட பேரொளியாகிய தூவெளி ஒளி என்றும், சித்துக்கு ஆதாரமாயுள்ளது ஏரொளியாகிய அருளொளி என்றும், ஆநந்தத்துக்கு ஆதாரமாயுள்ளது தொல் ஒளியாகிய முழுஒளி என்றும் நாம் அறியலாம். சத்தாவது பதி பசு பாச மூன்றுக்கு முரியது; சித்து பதி பசு இரண்டிற்கு முரியது; ஆநந்தம் பதிக்கு மாத்திர முரியது.

இதனால் பதிபசுபாச மூன்றும் அநாதிநித்தியப் பொருள்களென்பதும் பதியாகிய சிவமொன்றே ஒரு பொருளினையுஞ் சாராது என்றும் ஒருதன்மைத்தாயுடைய அநாதிநித்திய வியாபக அறிவுடைய இன்பப் பொருள் என்பதும், உயிரில்லாத பாசமானது பதியைச் சார்ந்ததன் காரண நிலையில் அநாதி நித்திய வியாபகப் பொருள் என்பதும், உயிர்ப்பொருளாகிய பசு, பாசத்திலிருந்து நீங்கித் தன்முனைப்பு விட்டுப் பதியை அடைந்தபொழுது அநாதிநித்த வியாபக அறிவுப்பொருளாய்ச் சிவத்துக்குரிய பேரின்பத்தை அடைகிறது என்பதும், பதி பசு பாச முப்பொருள்களும் ஒடுக்க நிலையில் பதியாகிய சிவத்திலடங்கும் என்பதும் நன்குவிளங்கும்.

இக்கருத்தைத் திருமூலர் திருமந்திரம் 2410-வது பாட்டில்,

> நாடும் பதியுட னற்பசு பாசமு
> நீடுமா நித்த நிலையறி வாரில்லை
> நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்
> நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே—என்றும்,

தாயுமான அடிகள் 542-வது பாட்டில்.

> சித்துஞ் சடமுஞ் சிவத்தை விடவில்லையென்ற
> நித்தன் பரமகுரு நேசத்தாற்—சுத்தநிலை
> பெற்றோமே நெஞ்சே பெரும்பிறவி சாராமற்
> கற்றோமே மோனக் கரு" என்றும் கூறுதல் காண்க.

இங்ஙனம் ஆன்மாப் பேரின்பமடைதற்கு இப்பாட்டிற் கூறப்பட்டிருக்கிற மூவொளிகளும் வாயில்களாயிருத்தலால் அவ்வொளிகளாய் விளங்கும் கூத்தப்பிரானை மக்களாகிய நாம் நாடோறுந் தவறாது வழிபட்டு உய்தல்வேண்டும் என்ற கருத்தை அடிகள் இப்பாட்டிற் கூறியருளினர்.

மா. வே நெல்லையப்ப பிள்ளை.

பிழை திருத்தம்

"செந்தமிழ்ச் செல்வி" சிலம்பு கஙி: பரல். க.

தேவார உரை

பக்கம் சஉக வரி-39

பிழை	திருத்தம்
அறிவு	அருள்

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

பாடலியும் தமிழ் நூல்களும்

[வித்வான் திரு. மா. இராசமாணிக்கம் P. O. L.]

சோணையாறும் கங்கையாறும் கலக்கும் இடத்தில் அமைக்கப்பெற்ற அரண்மிகு நகரம் பாடலி. அதனை நிரு மித்தவன் சைசுநாக வமிசத்தரசனான (பிம்பிசாரன் மகனான) 'அஜாதசத்ரு' என்பவன். அவன் காலமுதல் அந்நகரம் மகத ராச்சியத்தின் தலைநகரமாக விளங்கியது. ஆனால் அஃது உலகப் புகழ்பெற்றது மோரியர் காலத்தேதான்; பின்னர்க் குப்தர் காலத்தேயும் புகழுடன் விளங்கியது. இந்நகரம் சுமார் கி. மு. 500-க்குச் சிறிது முன் கட்டப்பட்டதென உத்தேசமாகக் கோடல் தவறாகாது. சைசுநாக வமிசம் கி. மு. 400-உடன் அழிந்துவிட்டதாகச் சரித்திரம் கூறுகிறது.

பாடலியும் நந்தரும்

சைசுநாக வமிசத்தார் ஆட்சியை ஒழித்து மகதராச்சியத்தை ஆண்ட முதல் அரசன் மஹாபத்ம நந்தன் என்பவன். அவன் கோசலை, அவந்தி முதலிய நாடுகளைப் பிடித்து மகத ராச்சியத்தை விரிவாக்கினான்.[2] இவனுக்குப்பின் எண்மர் பாடலியை ஆண்டதாகக் கூறப்படுகிறது. 'நவநந்தர்' என்பவர் இவரே. இந்நவ நந்தர் காலத்தில் பாடலி சிறப்புற்று விளங்கியதாகத் தெரிகிறது. இவ்வேந்தரைப் பற்றித் தமிழர் நன்கறிந்திருந்தனர் என்பது மாமூலனார் பாடல்களால் விளக்கமாகும். தமிழகத்து வணிகர் வேதகாலத்திருந்தே வடநாட்டாரோடு வாணிபம் செய்து வந்தனர் என்பது வேதங்களில் புகழ்ந்து கூறப்பட்டுள்ள 'முக்தா' (முத்தம், முத்து) என்ற தமிழ்ச்சொல்லாலும், ஓடா (ஓடம்) முதலிய சொற்களாலும், அவர்கள் பலவற்றுக்கும் பயன்படுத்திய பொன், தந்தம் முதலியவற்றாலும் நன்கறியலாம்.[3] பின்னர் இராமாயண காலத்தில் வட நாட்டார் தமிழகம் வந்ததும்,

---

1. C. S. Srininvasachari's 'A History of India' p. 24 (2 ed.)
2, V. A. Smith's 'Oxford History of India' p. 58 (2 ed.)
3. P. T. S. Aiyangar's 'History of the Tamils', pp. 21-26.

பாரதகாலத்தில் அர்ச்சுனன் பாண்டியன் மகளை மணந்ததும் சஹதேவன் தமிழரசரிடம் திறைபெற்றுச் சென்றதும் பாரதப்போரில் மூவேந்தர் கலந்துகொண்டதும் போல்வன தமிழகத்துக்கும் வடநாட்டுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை நன்கு விளக்குவனவாகும். 'வடுகர்' எனவும், 'வடவடுகர்' எனவும், 'வடுகர் தேயம்' எனவும் தொகைநூற் பாடல்களில் வருஞ் சொற்கள் தமிழர், வடுகர் தேயத்தையும் அவர் நாட்டுக்கப்பாற்பட்ட 'வடவடுகர்' 1a —மகதராச்சியத்தார் தேயத்தையும் நன்கறிந்தவர் என்பதும், இச்சொற்களைப் பிரிவாற்றுத் தலைவி கூறுவதாகவும், தோழி ஆற்றுவதாகவும் பிறவாறும் வருங் குறிப்புகளையும் நோக்க, அக்காலத் தமிழர் வடுகரோடும் வட வடுகரோடும் புரிந்துவந்த வாணிபம் இனிது விளங்குவதாகும். எனவே, நெடுங்காலமாக இங்ஙனம் வடநாட்டாருடன் நடைபெற்றுவந்த வாணிபம் நந்தர் காலத்தும் நடைபெற்று வந்தது, மோரியர் காலத்தும் நடைபெற்று வந்தது என்பதில் வியப்பில்லை. இது நிற்க.

"நீகண் டனையோ? கண்டார்க்கேட் டனையோ ?
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ ;
வெண்கோட் டியானை சோனை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே ?"2

என வருஞ் செய்யுளில் பாடலி நகரம் சோணையாற்றின் அணித்தென்பதும், பொன்மலிந்த பாடலி என்பதும் காணத்தக்கன.

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு தோழி அவளை அகங்குழைய அணைத்து, "உன் தலைவர் நந்தன் செல்வம் பெறுவதாயினும் அங்குத் (வாணிபம் செய்யச் சென்ற இடத்தே) தங்கலர் ; விரைவில் வருவார் ; நீ கவலையுறாதே" எனக் கூறுமுகத்தான் 'நந்தன் செல்வச் சிறப்பைக் கூறுதல் கண்டு மகிழத் தக்கது :

"நந்தன் வெறுக்கை பெறினும் மற்றவண்
தங்கலர் வாழி தோழி"3

'நந்தர் பல்புகழ் எய்தியவர் ; போர்களிற் சிறந்தவர் ; அவர் காலத்தே அவர்தம் தலைநகராய பாடலி சீர் மிகுந்திருந்தது' என்னும் செய்தி கீழ்வரும் அடிகளால் அறியலாம் ;

1a Purananuru, 378; மகதராச்சியம் கி. மு. 550 முதல் கி. பி. 500 வரை சிறப்புற்றிருந்ததென்பது சரித்திரக்கூறும் சான்று.

2. Kurunthokai , 75

3. Agananuru , 251

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலி.....................[1]

கங்கையாற்றில் கரந்த செல்வம்:

இத்தகைய பாடலியை யாண்ட முதல் நந்தனன மகா பத்ம நந்தன் என்பவன் கங்கையாற்று நீரைத் தேக்கி இடையே மணலைத் தோண்டி அங்குண்டான குழியில், தான், பல வகையினும், சேமித்த பெருநிதியை ஐந்து பெட்டிகளில் (கோசங்களில்) இட்டு அவற்றைப்புதைத்து மேலே ஈயத்தை உருக்கி வார்த்து மூடிவிட்டான்; பின்னர் முன்போல நீரை ஓடவிட்டான். (இவ்வேலையில் ஈடுபட்ட ஏவலர் இரகசியம் வெளியிடுவர் என்றெண்ணி அவர்களைக் கொன்று விட்டதாக வும் கூறப்படுகிறது.) இதுவே அகம்—265 கூறுவதாகும். "தலைவனைத்தாழச் செய்தது, நந்தர் நீர் முதல் (அடியில்) கரந்த (மறைத்துவைத்த) செல்வமோ?" எனத் தலைவி தோழிக்குக் கூறினுள் என்பதே பொருந்துவது. இது கன்னட மொழியில் வரையப்பட்டுள்ள "சந்திரகுப்த—சக்கரவர்த்தி" என்னும் நூலின் 7-ம் பக்கத்தில் காணத்தக்கது.

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ?"[2]

இதன் பொருள்: "பல்புகழ் நிறையப்பெற்ற வெல்லும் போரைச்செய்யும் நந்தர், தமது சிறப்புமிகுந்த பாடலியிடத் துக் கூடிக் கங்கைநீரின் அடியில் மறைத்துவைத்த நிதியோ (தலைவனைத் தாழச் செய்தது)?"

வேறு கருத்து:

இவ்வடிகளில் வரும் செய்தி, பாடலிபுரம் கங்கையாற்றில் அழிந்தது எனப் பொருள் படுவதாகக்கொண்டு இது பாஹி யானுக்குப் பின்னும் (சுமார் கி. பி. 405) ஹிவான்ஸ்வாங் கிற்கு முன்னும் (கி. பி. 635) நடந்ததாகும், அதனையே மாமூலனர் குறித்தனர் எனப் பண்டிதர் மு. இராகவையங் கார் அவர்கள் கூறினர். அம்முடிபே பொருந்துவதாக விஜய நகரம் அரசர்—கல்லூரிச் சரித்திரப் பேராசிரியராகிய திரு M. S. இராமஸ்வாமி ஐயங்கார் அவர்கள் கூறியுள்ளார்.[3]

1. Ibid , 265
2. Agananuru , 265
3. Vide his 'Studies in South Indian Jainism' , pp. 124, 125

(சங்க காலம் கி. பி. 5-ம் நூற்றாண்டு என்பதற்கமைந்த காரணங்களுள் இதுவும் ஒன்றாகும் என்றும் கூறியுள்ளார்.)

இம்முடிபு பொருந்துவதா?

இம்முடிபுக்கு மாமூலனார் அடிகள் இடந்தரா என்பதைப் பேரறிஞர் நன்குணரக்கூடும். அப்பொருள் படுவதாகக் கொண்டே இதனை ஆராய்வோம்: பாஹியான் இந்தியா வந்தது 5-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலாகும் (கி. பி. 399—414)[1]. ஹிவான்ஸ்வாங் இந்தியா வந்து இருந்தது 7-ம் நூற்றாண்டின் முதற் பாதியிலாகும் (கி. பி. 629—645)[2]. இவை இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் (கி. பி. 415—628) பாடலிக்குற்ற அழிவையே மாமூலனார் குறிப்பதாயின் 'நந்தர் பாடலி' எனக் கூறுவானேன்? பாடலியை உண்டாக்கியவன் கி. மு. 550-ல் வாழ்ந்த சைசுநாக வமிசத்து அரசனான 'அஜாதசத்ரு' என்பது சரித்திரங்கண்ட உண்மை. அந்நகரம் உலகப் புகழ்வாய்ந்த நகரமாகப் பெருஞ் சிறப்போடு விளங்கியது சிறப்புற்ற மோரியர் காலத்திலும் குப்தர் காலத்திலுமே (கி. மு. 322—கி. மு. 232; கி. பி. (300—500). பாடலியை உண்டாக்கியவன் பெயரைப் புணர்த்தி 'அஜாதசத்ரு பாடலி' என்றேனும், உலகப்புகழ் பெற்று இருந்ததற்குக் காரணபூதர் என்ற காரணம் பற்றி 'மோரியர் பாடலி' என்றேனும், இன்னார் பாடலியாக இந்நகரம் விளங்கியபோது இவ்வழிவு ஏற்பட்டது என்பதைக் குறிக்க(குப்தர் காலத்தில் அவ்வழிவேற்பட்டிருந்து அதனையே குறிப்பது மாமூலனார் கருத்தாயின்) 'குப்தர் பாடலி' என்றேனும் கூறியிருந்தால், அதற்கு மேற்கண்டவாறு பொருள் வலிந்து கொள்ளினும் பொருந்தும். மாமூலனார் கி. பி. 5-ம் நூற்றாண்டில் நடந்த அழிவைக்கூறுவதாயின், 'குப்தர் பாடலி கங்கையாற்றில் அழிந்தது' என்றல்லவோ கூறியிருத்தல் வேண்டும்? அங்ஙனம் கூறாமல் கி. பி. 5-ம் நூற்றாண்டில் நடந்த அழிவினை, அதற்குச் சுமார் 800 வருடங்கட்கு முற்பட்ட 'நந்தர் பாடலி' என 'நந்தரைத்தொடர்புபடுத்துக்கூறி, அதன் செல்வம் கங்கையாற்றில் மறைந்தது என வற்புறுத்துக் கூறுவானேன்? மோரியரை (மௌரிய வமிசத்தவரை)ப் பற்றி விளக்கமாகக் கூறும் மாமூலனார்,

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலி"

---

1. Vide 'The Travels of Fa-Hian' by James Legge,
2. Vide 'Yuan Chwang's Travels in India' by Thomas Wattars.

எனத் தெளிவாக—ஐயத்திற்குச் சிறிதும் இடமின்றிக் கூறியிருப்பதும் நாம் மேற்கூறிய வரலாற்றையே குறிப்ப தாகும் என்பது ஈண்டு மீண்டும் உணரத்தக்கது.

"நந்தர், பாடலியை யாண்ட செய்தியை மட்டுமே தமிழர் உணர்ந்திருந்தனர்; பிற்காலத்தில் அந்நகரத்தைப்பற்றி ஏதுமே அறிந்திலர். எனவே, பிற்காலத்திய அழிவினை 'நந் தர் பாடலி அழிந்தது' எனக் கூறியிருத்தலும் இயலாதோ?" எனக் கடாவின், அஃதும் இயைவதன்று. என்னை? சந்திர குப்தன் அமைச்சனான சாணக்கியன் தான் எழுதிய அர்த்த சாஸ்திரத்தில் "தமிழகத்திலிருந்து இரத்தினங்கள், சேர நாட்டு வைடூரியங்கள், கருநிறமுள்ள பாண்டிநாட்டுச் சால் வைகள், மதுரை மஸ்லின் துணிகள் முதலியவை சந்திரகுப் தன் பொக்கிஷசாலைக்கு அனுப்பப்பட்டன"[1] என்பதி லிருந்து தமிழர் மகதநாட்டாரோடு வாணிபம் புரிந்தமை நன்குணரலாம். சந்திரகுப்தன் கி. மு. 322—கி. மு. 298 வரை ஆண்டவன். அக்காலத்தில் வாணிபம் செய்த தமிழர் 'பாடலியில் மோரியர் ஆட்சி நடந்தது' என்பதை அறியாமல் இருந்தனர் எனக் கூற இயலாது. கூறின், அறிவுடை உலகம் நகைக்கும். எனவே, நாமறிந்தவரை, தமிழர் 'நந்தர் பாடலி' யைக் கண்டிருந்தனர்; 'மோரியர் பாடலி'யையும் கண்டிருந் தனர் என்பதை முறையே மாமூலனார் கூற்றைக்கொண்டும் சாணக்கியன் அர்த்த சாஸ்திரத்தைக் கொண்டும் நன்கு ணரலாம். மேலும், நந்தர்க்குப் பின் வந்த 'மோரியர் தமிழ கத்தின்மீது படையெடுத்தனர்' என்பது மாமூலர் பாக்களால் அறியலாம்[2]. நந்தரைப்பற்றிக் கூறும் செய்யுளிலேயே மாமூல னார் மோரியர் படையெடுப்பையும் விளக்கமாகக் கூறுதல் கவனித்தற்குரியது. அம்மாமூலனாரே 'நந்தர் பாடலியின் செல்வம் கங்கையாற்றில் கரந்துள்ளது எனப் பிறிதோர்செய் யுளில் கூறியுள்ளார். இவ்வுண்மைகளைப் பகுத்தறிவும் தமிழ் நூலறிவும் உடையோர் நன்கறிதல் கூடும்.

மோரியரே தமிழகத்தின்மீது படையெடுத்தவர் என்பதைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்தனர் என்பது கீழ்வரும் பல புலவர் அடிகளால் அறியக்கிடக்கும் அருஞ் செய்தியாகும்;

1. "கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு."[3]

---

1. P. T. Sirninvasa Iyangar's 'History of the Tamil's', pp. 141, 142.
2. Agananuru, 251, 281.　　3. Agam, Mamulanar, 281

2. "மோகூர், பணியா மையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்"[1]

3. "விண்பொரு நெடுவரை இயறேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த."[2]

4. "வென்வேல்,
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த."[3]

இந்நான்கனுள் இரண்டாவதன்கண் வரும் 'வம்ப மோரியர்' என்ற தொடரைக்கொண்டு, "மோரியர் தமிழகத்தின்மீது படையெடுத்திலர்; குப்தர் தங்களையும் மோரியர் எனக் கூறிக் கொண்டமையின், அவர்களைப் 'புதிதாக வந்த மோரியர்' என்னும் பொருள்பட மாமூலனார் 'வம்ப மோரியர்' என்று குறிப்பிட்டார்" என மேற்சொன்ன அறிஞர் இருவரும் கொண்ட முடிபால், 'நந்தர் பாடலி'யைக் 'குப்தர் பாடலி' என்றும் கூற நேர்ந்தது. இதன் உண்மையை—'வம்ப மோரியர் யாவர்?' என்னும் பேருண்மையை—அடுத்த இதழில் ஆராய்வோம்.

பனையும் பழந்தமிழ் நூல்களும் பிறவும்

[மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்
பண்டிதர் ஸ்ரீமத் கா. போ. இரத்தினம் அவர்கள்.]

(சஙகூ—ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகப்பொருணூல்களில் மடலேறுதல் என்றோர் செய்தி கூறப்படுகிறது. மடலேறுதலாவது: தலைமகன் ஒவ்வாக் காமத்தால், பனைமடலால் குதிரையும் பனைமரத்துள்ளவற்றால் வண்டி முதலியவுஞ் செய்து அக்குதிரைமீதேறுதல் என்பர்.

"தென் புலியூரீசன் சாந்துமெருக்கு மணிந்தோர்
கிழிபிடித்துப் பாய்சினமா வெனவேறுவர்
சீறூர்ப் பனைமடலே"

என்பது திருக்கோவையார்.

---

1. Ibid „ 251
2. Ibid. Parankottranar 69
3. Puram, Kallil Athiraiyanar, 175

அன்றில் எனும் பறவை பனையில்தான் வாழ்வதாம். "என்றும் நீக்கமற அன்றில் பெடையொடு வாழ்வதன்றோ பனையாவதுவே" என்பது திருவெங்கைக் கோவை. "செயலார் குடம்பையில் செந்தலையன்றிச் சினையுள" என்பது தஞ்சைவாணன் கோவை.

"வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
அவையினும் பலவே சிறுகருங் காக்கை
அவையினும் அவையினும் பலவே குவிமட
லோங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூக்கணங் குரீஇக் கூட்டுள சினையே"

இச்செய்யுள் குருகு, காகம், தூக்கணங்குருவி முதலியனவும் பனையில் வாழ்வனவாகவும் பனையிலேயே கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சுபொரிப்பனவாகவும் கூறுகிறது.

"கல்லெறியும் கவண் வெரீப்
புள்ளிரியும் புகர்ப் போந்தை"

என்பது பட்டினப்பாலை. 'குவிமடலோங்கிரும் பெண்ணை' என்பது ஓரளவில் பனையின் உருவத்தைச் சித்திரிக்கிறது. அதிவீரராமபாண்டியரும் தாமியற்றிய வெற்றிவேற்கையில்,

"தேம்படுபனையின் திரள்பழத் தொருவிதை
வானுறவோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே"

என்று பனையினுயரமும், பனம்பழத்தின் இனிமையும், உருவமும், பிறவும் தோன்றக் கூறியிருக்கின்றார்.

"தினைத்துணை நன்றிசெய்யினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்"

எனவும்,

"தினைத்துணை யாங்குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்"

எனவும் திருவள்ளுவரும் பனையைத் திருக்குறளில் எடுத்தாண்டது அதன் தோற்றப் பெருமை கருதியேயாகும். தினை, பனை என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சிலவளவை.

"தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்"

என்ற நாலடியாரையுங் காண்க.

"கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
இடையாயார் தெங்கி னனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு."

என்ற நாலடியார்ச் செய்யுளில் உவமையாக எடுத்தாளுமுகத்தானே கமுகு, தென்னை, பனை இவற்றின் வேற்றுமையும் பெருமையும் தோன்றக் கூறப்பட்டிருக்கிறது. 'இட்டஞான்றிட்டதே' எனுந் தொடர் பனை இலேசில் உண்டாகு மாற்றை விளக்குகின்றது. பனம் வித்தை இட்டவளவிலேயே நாங்கள் அதன் பயனை எதிர்பார்க்கலாம் என்றால் பனையின் பெருமையையும், மற்றைய புல், மரம் முதலியவற்றிலும் பார்க்க அதற்குரிய தனிச் சிறப்பையும் எடுத்துரைத்த லொன்றுமா? நட்பினரில் தலையாயாருக்கே யன்றி, ஈதலிலும் தலையாயார்க்குப் பனையை ஒப்பிட்டிருக்கிறார்கள்.

"உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதம ரவர்களே
தேங்கதலியும் போல்வர் தேர்ந்து"

எனும் நீதிவெண்பாச் செய்யுளைக் காண்க.

முற்காலத்தில் சிறியோரும், பெரியோரும், புலவர்களும், அரசர்களும், ஆண்களும், பெண்களும் கள் குடித்த வரலாறுகளைப் புறநானூறு முதலிய சங்க நூல்கள் எடுத்துரைக்கின்றன.

"சிறிய கட்பெறினே எமக்கீயுமன்னே
பெரியகட்பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந்துண்ணுமன்னே"

எனுமடிகள் ஒளவையார் அதிகமான் நெடுமானஞ்சியைப் புகழ்ந்து பாடிய செய்யுளில் காணப்படுவன. அரசர்களுக்குப் பல சித்திர வேலைப்பாடமைந்த பொன்வள்ளங்களில் தாதியர்களால் கள்ளூட்டப்பெற்றது. கள்ளைக் குடித்துச் செருக்கியும், மயங்கியும், பலர் அறிவிழந்த செய்திகளுமுண்டு. பனங்கருக்கினால் மீனைச் சுட்டுண்டு அதனுடன் கள்ளையுங் குடித்து மகிழும் வழக்கமும், பனங்கள்ளுடன் ஆமை யிறைச்சியையுண்ணும் வழக்கமும் அக்காலத்தி லிருந்தன. கள்ளை வடிக்கப் பன்னாடையை உபயோகித்தனர். கள்ளுண்டோர் புளிச்சுவையை அதிகம் விரும்புவர். இன்னும் பல வரலாறுகளைப் புறநானூறு கூறுகிறது. விரிப்பிற் பெருகு மாதலின் விடுக்குதும்.

"தலையோர் நுங்கின் தீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்
கடையோர், விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்கு நுகர
நிலமலர் வையத்து வலமுறை வளைஇ
வேந்து பீடழித்த ஏந்துவேல் தானையோடு"

என்பது சோழன் நலங்கிள்ளியை ஆலத்தூர் கிழார் எனும் அருந்தமிழ்ப் புலவர் பாடிய செய்யுளின் முதற் பகுதியாகும். நுங்கையும் பனம்பழத்தையும் பனங்கிழங்கையும் தின்றார்கள் என்ற விரிவான செய்தி இதில் குறிக்கப்பட்டுளது. நலங்கிள்ளியின் சேனையின் தொகையையும் அது ஓரிடத்தைக் கடந்து செல்லுதற்குரிய காலத்தையும் உணர்த்தவே சேனையின் முதலிற் செல்வோர் நுங்கை அருந்துவர் என்றும், இடையில் செல்வோர் பனம்பழம் தின்பர் என்றும், கடையில் செல்வோர் சுட்ட பனங்கிழங்கைச் சாப்பிடுவர் என்றுங் கூறினர்.

"இரளரைப் பெண்ணை நுங்கொடுபிறவும்"

என்பது பெரும்பாணாற்றுப்படை.

"முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்
இரும்பனையின் குரும்பை நீரும்
பூங்கரும்பின் தீஞ்சாறும்
ஓங்கு மணற் குவவுத் தாழைத்
தீநீரோடுடன் விராஅய்
முந்நீருண்டு"

எனும் புறநானூற்றடிகளால் நுங்கின் நீரோடு கருப்பஞ் சாற்றையும், தெங்கின் இளநீரையும் கலந்துண்ணும் வழக்க முண்டென்பது பெறப்படுகிறது. பனங்குருத்தையும் சுவைக்கும் வழக்கம் உண்டு எனவும், அலங்கரிக்கப் பனையோலையையும் உபயோகித்தனர் எனவும், பனந்தோட்டுடன் வேங்கை, வெட்சிப்பூக்களையும் சேர்த்துத் தலையில் அணிவர் எனவும், இன்னும் பல வரலாறுகளையும் புறநானூறு கூறுகிறது. இறந்த யானைகளுக்குப் பனந்துண்டங்களையும், வரால் மீனுக்குப் பனை நுகும்பையும், பனை அரைக்கு முழாவையும், பனங் கருக்குக்கு அரத்தையும், உவமையாக அந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. யானையின் துப்பிக்கைக்குப் பனையை ஒப்பிட்டு "இரும்பனையன்ன பெருங்கையானை" எனக் கூறப்பட்டிருக்கிறது. திருநாவுக்கரசு நாயனாரும் "பனைக்கை மும்மதவேழ முரித்தவன்" என்றார். 'பனங்குடை' எனும் ஓர் சொல் புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, நாலடியார் முதலிய நூல்களிற் காணப்படுகிறது. அஃது பனையோலையாற்

செய்யப்பட்டு உண்கலமாகவும், குடிகலமாகவும் பாவிக்கப் பட்டது. "வேணீருண்ட குடையோரன்னர்" எனும் கலித் தொகை அடிகளுக்குத் தண்ணீர் வேட்கையாலே கோலித் தண்ணீர் குடிக்கப்பட்ட எச்சிலாற் பயன்படாத குடை ஓலையை ஒப்பர் என நச்சினார்க்கினியருரைத்தலால் அஃது நம் நாட்டிலுள்ள பிழாவையோ, பட்டையையோ ஒத்த தெனக் கூறலுஞ் சாலும்.

(தொடரும்)

கழிநெடிலடி இரட்டை ஆசிரிய விருத்தம்

[காழி. ப அ. முத்துத்தாண்டவராய பிள்ளை.]

அங்கிங்கெ னாதபடி யெங்கும்ப் ரகாசமா
யானந்த பூர்த்தி யாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக் கினிற்
றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக் காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெதுமேற்
கங்குல்பகலற நின்றதெது வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலா மோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய் குவாம்.

அருணகிரிநாதர் வேல் விருத்தமும், மயில் விருத்தமும், சிவப்பிரகாச சுவாமி, குமரகுருபர சுவாமி, தாயுமான சுவாமி, சிவஞான சுவாமி, இராமலிங்க சுவாமி முதலியோர் எழுதிய நூல்களிற் சில விருத்தங்களும் ஆசிரிய விருத்தத்தில் பதி னன்கு சீர்பெற்று முதலிரண்டு சீரும் ஒரு பக்கும், இடை இரண்டு சீரும் ஒரு பக்கும், கடை மூன்று சீரும் ஒரு பக்கு மாகப் பிளவுபட்டுவரும். பாடசாலைகளில் மாணக்கர்கள் அறப்பளீசுர சதகம் முதலிய சதகங்களையும், மஹாநவமியில் ஊர்வலம் வரும்போது ஐயவிஜயீபவ எனப் பாடிவரும் பாடல்களையும், கிராமங்களில் அமர்ந்துள்ள தெய்வங்களின் மேல் தோத்திரமாகப் பாடிவரும் பதிகங்களையும் கவனித்

தால் இவ்வாறு பிளவுபட்டு வருதல் புலப்படும். இப்போது கிடைக்கும் இவ்வகை விருத்தங்களில் முற்பட்டவை ஆந்திர பாஷையிலும் வல்ல டிண்டிமகவி அருணகிரிநாதர் பாடியன. இப்பாடலில் ஒவ்வோர் அடியும் இரண்டு அடியாக நான்கு வரியில் எழுதப்படும். ஒன்று மூன்று வரிகளில் நான்கு சீரும், இரண்டு நாலு வரிகளில் மூன்று சீரும் அமைந்திருக்கும். முதல் நான்கு சீரும் ஐந்து மாத்திரை அளவுள்ள ஒரு கணத்தால் அமைந்த நான்கு நான்கு சீர் உள்ளன. அவ்வாறே ஐந்தாம் சீரும் அமையும். ஆறு ஏழு சீர்கள் இரண்டும் சேர்ந்து ஏழு மாத்திரை அளவு உச்சரிக்கும். அரையடியில் ஒன்றுக்கும் ஐந்துக்கும், கூடுமானால் ஒன்று, மூன்று ஐந்துக்கும் மோனைவரின் நயமாகவிருக்கும். மாத்திரை கணக்கிடும்போது குற்றெழுத்துக்கள் தனித்தனி ஒரு மாத்திரையும், நெடில் தனித்தும் ஒற்றடுத்தும் குறில் ஒற்றடுத்தும் வரின் இரண்டு மாத்திரையும் ஒலிக்கும். ஒரு கணம் அதாவது ஒரு சீரில் தனதான தானதன என்பன போல மூன்றிடத்து விட்டொலிக்கும். அவை நெட்டெழுத்திலாவது ஒற்றடுத்த குற்றெழுத்திலாவது முடியா. ஈரசையில் நான்கு மாத்திரை அளவினதாக தானதனா தானன என்னும் சந்தத்தில் முடியுமானால் அடுத்த சீர் தனிக் குற்றெழுத்தில் ஆரம்பித்தல் வேண்டும். ஏழாவது சீர் பல்பால்பா என இரண்டு மாத்திரையிலும் ஆறுவது சீர் நான்கு மாத்திரையாக இருப்பின் பால என்றுற்போல மூன்று மாத்திரை பெற்றும் வரும். சீரின் முதலசை ஐகாரத்திலும் ஔகாரத்திலும் குறிலோடிணைந்த ஒற்றிலும் தொடங்குமாயின் அவ்வசை இரண்டு மாத்திரை அளவாகவே யுச்சரிக்கப்படும். மற்றும் வண்ணப்பாக்களில் கண்டபடி ஒற்றெழுத்துக்கள் அரை மாத்திரை கால் மாத்திரையாகவே சீரிடைக்கண் ஒலிக்கும். மகரக்குறுக்கம் முதலிய குறுக்கங்களும் அறிகுறி பெறாத உயிரளபெடை, ஒற்றளபெடைகளும் ஏற்றபெற்றித் தத்தமக்குரிய மாத்திரைகளைப் பெற்றுவரும். "ஐயரின் சென்னிமிசை யுறைகின்ற மடமங்கை" இவ்வடியில் சீரொன்றுக்கு ஐந்து மாத்திரையும் மொழி முதல் ஐகாரம் இரண்டு மாத்திரையும் ஏனைய ஐகாரங்கள் ஒன்று ஒன்றரை மாத்திரையும், "கௌமாரி" என்பதில் மொழி முதல் ஔ இரண்டு மாத்திரையும் கல்லேனும் என்பதில் கல் இரண்டு மாத்திரையும் கங்குல்பகல் என்பதில் குல் ஒரு மாத்திரையும் பெற்று வருவதைக் காண்க. ரகர வொற்று ஒரு சீரில் முதலசையாக அர் என ஒற்றடுத்து வாராது; அவ்வொற்று எவ்விடத்தும் மாத்திரை பெறாது.

"பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணானந்தமே." இவ்வடியில் முதல் அறுசீரும் ஐயைந்து மாத்திரையும் ஏழாஞ்சீர் இரண்டு மாத்திரையும் நிரம்பி நகர வொற்று அலகு பெறாமல் வருதல் காண்க. யழள ஒற்றுக்களுக்கும் மகர வகர வொற்றுக்களின் மிசைவரும் நகர வொற்றுக்கும் இஃதொக்கும்: "கண்மூடி யொருகணமிருக்க வென்றாற்பாழ்த்த கன்மங்கள் போராடுதே" என்னும் அரையடியில் விதிப்படி முப்பத்திரண்டு மாத்திரையும், ழகர ளகரங்கள் குறுகிய ஓசையும் பெற்று வந்தன. பரோட்சை ஞா என்னும் சீரில் குறில் நெடில் ஒற்றடுத்து வந்த முதல் அசையில் முதற்கண்நின்ற குற்றெழுத்து விட்டு இசையாமல் சிறுபான்மை அருகி மாத்திரை பெறாமலே வரும் இவ்வடிகளையே இரட்டித்து 28 முதல் 224 வரையில் சீருள்ள விருத்தங்களாகப் பெரியோர் பாடியிருக்கின்றனர். அறுசீரில் மாமாகாய் மாமாகாய் என்னும் கட்டளையை இரட்டித்து 12, 24 முதலியனவாகவும், விளம்மா விளம்மா விளம்விளம்மா என்பதை இரட்டித்து 14, 28 சீர்களாகவும் வரும் இரட்டையாசிரியங்கள் சில நூல்களிற் பயின்று வருகின்றன.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்வான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

பாலை

தலைவன் தலைவியை உடன்கொண்டு சென்றானாக, அதனைத் தோழியால் செவிலித்தாய் அறிந்து தேடிக் காணாளாய் வருந்திக் கூறியது.

வெள்ளிவீதியார் பாடியது

44. காலே பரிதப் பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

என்பது இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது.

பதவுரை:—

காலே—என் கால்களோ எனில், பரிதப்பின—விரைந்து செல்லுதலைத் தவிர்ந்தன; கண்ணே—கண்களோ எனில், நோக்கி நோக்கி—பார்த்துப் பார்த்து, வாள் இழந்தனவே—ஒளியை இழந்தன. இ உலகத்து—இந்த உலகத்தில், பிறர்—உடன்சென்றவரைத் தேடி வருந்ாதவர், அகல் இரு விசும்பின் மீனினும்—பரந்த பெரிய வானத்தில் காணும் நட்சத்திரங்களினும், பலரே—பலராவர்; மன்ற—நிச்சயம்.

பரி—செலவு, நடத்தல். தப்பல்—தவறல். வாள்—ஒளி. பிறர் என்றது தன்னைப்போல் உடன்சென்றாரைத் தேடிச்சென்றவர். இரு விசும்பு - பெரியவான்—இருமை—கருமை, பெருமை. மீன்—மின்னுவது என்னும் காரணப் பொருளது.

பரி—செல்லுதல் என்பதை "வண்பரி நெடுந்தேர் பூண்க நின் மாவே" என்பதனானு மறிக. பரி - முதனிலைத் தொழிற்பெயர்.

மேற்கோள் விளக்கம்:—

1. "காலே பரிதப்பின.........பிறரே"

"செவிலி கடத்திடைத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது"

—(தோல். அகத். நச். பக். 115)

2. "காலே பரிதப்பின.........பிறரே"

—"எனவருவது சுரத்திடை வினாஅயது நிகழ்ந்த பின்னர்க் கூறியது" —(தோல். அகத். இளம். சூ. 40 உரை)

3. 'வாள் ஒளியாகும்'—என்பதற்கு, "கண்ணே நோக்கி நோக்கி வாளிழந்தனவே" என்பது மேற்கோள்.

—(தோல். சோல். இளம். சூ. 361)

"கண்ணே நோக்கி நோக்கி வாளிழந்தனவே"—இதனோடு

(அ) "கோல வெற்பினன், மாலை வண்டின மாலைக்கண் கொண்டவே" —சீவக. 2397

(ஆ) "வாளற்றுக் கண்ணுங் காட்சி தவ்வின" —நற். 397

(இ) "வெளிறு கண்போகப் பன்னாட்டிரங்கி" —புறம். 177

'அகலிரு விசும்பின்'

1. 'அகலிரு விசும்பினானும்' —புறம். 8-9.

2. 'விசும்பின் மீனினும்' —புறம். 25-1.

'மீன்திகழ் விசும்பு' புறம். 7

இச்செய்யுள், 'செவிலி, புதல்வியைக் காணாது கவலை கூர்தல்' என்பதற்கு மேற்கோள்:— (நம்பியகப். சங்கம்)

மெய்ப்பாடு—அழுகை.
பயன்—ஆற்றாமை நீங்குதல்.

மருதம்

புதப் புனலாடப் பரத்தையரோடு சென்ற தலைவன், தன்பாங் காயினரால் தோழியை யணுகிப் புலந்து நின்ற தலைமகளைப் புலவி திருத்துமாறு வேண்டி நிற்பத் தோழி, தலைவியை யணுகி ஊடல் தணிவித்து வாயில் நேர்ந்தது.

ஆலங்குடி வங்கனர் பாடியது

45. காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல லூர னெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவன் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.

என்பது தலைமகற்குப் பாங்காயினர் வாயில் வேண்டியவழித் தோழி வாயில் நேர்ந்தது.

பதவுரை:—

காலை எழுந்து—காலைப்பொழுதில் எழுந்து, கடுந்தேர் பண்ணி—விரைவுடன் செல்லும் தேரைச் சிறக்கச் செய்து கொண்டு, வால் இழைமகளிர்—சிறந்த அணிகளை அணிந்த பொதுமகளிரை, தழீஇய சென்ற—தழுவிக்கொண்டு புதுப் புனலாடச் சென்ற, மல்லல் ஊரன்—வளப்பமுள்ள (செல்வ முற்ற) ஊரையுடைய மருதநிலத்தலைவன், பெரிது எல்லினன் என—மிகவும் விளக்க முற்றவன் என்று, மறுவரும்—மனம் வருந்துகின்ற, சிறுவன் தாயே—சிறுவனது தாயாகிய தலைவியே, இத்திணைப் பிறத்தல்—இந்த உயர்குடியில் பிறப்ப தானது, தெறுவது—கோபித்துத் தள்ளத்தக்கது. அம்ம—வியப்பிடைச்சொல்; முன்னிலையசையுமாம்.

தலைவன் பரத்தையரோடு புதப்புனலாடி மீண்டுவந்தானுயினும் பாங்காயினரைக்கொண்டு தலைவன், பரத்தையரைத் தேரேற்றிச் சென்று பொய்கைகளில் நீராடல் புரியும் தன்மையினன் என்று அவனை இழித்துக் கூறுவாளாய்த் தோழி, தலைவி ஊடினளென அவள் ஊடலைத் தணிக்கும்பொருட்டுப் பரத்தையர்பால் மருவி ஒழு கிய தலைமகன் அனுப்பிய வாயில்கட்கு

"நற்றேர்ப் பொய்கையூரன் கேண்மை" என்று (குறுந். 61) கூறி யிருத்தலும் உணரற்பாலது.

முனிதல் என்பது வெறுத்தல்.

"காலையெழுந்து ......தல்லே"—எனக் குடிப்பிறத்தலை வெறுத்த வாறு காண்க. —(தொல். இளம்பூ. மெய்ப் 326 பக்.)

வாயில் வேண்டி நிற்கின்றனுதலின் நாமும் இசையவேண்டிய தாக வுள்ளது. இதற்குக் காரணம் நற்குலத்தில் பிறந்தமையே. இத் தகைய பிறப்பு வெகுளத்தக்கது என ஊடல்தோன்றத் தோழி வாயி லுக்கு இசையுமாறு கூறினள். இதனுல் உயர்குடிப் பிறந்தார்க்குப் புலவி நீட்டம் தக்கதன்றெனக் கூறியவாறும். சிறுவன், தந்தையின் செய்கை யறியாது தலைவனை அணையச் சேர்தலைக்குறித்துச் 'சிறுவன் தாயே' எனக்குறித்தார் என்க.

வால்—சிறந்த. மல்லல்—செல்வம், வளப்பம். பண்ணுதல்—ஏற்பவமைதல். எல்லினன்—விளக்க முற்றவன். மறுவரல்—மனம் வருந்தல். மறுக்கம், மறுகுதல்—மனம் குழம்புதல். தெறுதல்—வெகுளல். திணை—குடி. பிறத்தல்லே—பிறத்தலே—விரித்தல் விகாரம்.

மேற்கோள் விளக்கம்:—

மருதத்திற்குக் 'காலை'ப்பொழுது வந்ததற்கு இச்செய்யுளின் முதலடி மேற்கோள். —(தொல். அகத்—பக் 21)

2. "தலைவன் பிறழ்ந்த இடத்து அவன்சென்றுசேரும் தகைமை இல்லாமைக்குக் காரணமாகிய புலவியின்கண் அழுந்திய தலைவி பக்கத்தனுய் நின்று அவள் புலவியைத் தீர்த்தற்கண்ணும் தோழி கூற்று நிகழ்த்தற்குரியள்" என்பதற்கு இச்செய்யுள் மேற்கோள்.

—(தொல். கற்பி. பக் 695.)

3. "தலைவியையும் தலைவனையும் உயர்த்துக் கூறும் கூற்றும் தோழிக்கு ஒரோவிடத்து உரியவாம்" என்பதில் தலைவியை உயர்த்திக் கூறியதற்கு இச்செய்யுள் மேற்கோள்.

—(தொல். பொருளி. பக் 850)

4. "காலை எழுந்து......தல்லே" என்பது "புறம்படு விளையாட்டுப் புல்லிய புகர்ச்சியும்" என்பதற்கு மேற்கோள்.

—(தொல். கற்பு. இளம்பூ. பக் 253)

5. 'சிறுவன் தாயே'—'புதல்வன்தாய்' —(குறுந். 8.)

6. 'பண்ணுதல்'—"புலவர், பூநுதல்யானை யொடுபுனை தேர் பண்ணவும்" —(புறம். 12)

1. 'வாலிழை மகளிர்த் தழீஇய'

(அ) 'வாலிழை மகளிர்க்கழீ இய'

(ஆ) 'வாலிழை மகளிர்த்தரீ இய'—பிரதிபேதம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம்.

பயன்—வாயினேர்தல்.

ஆராய்ச்சிப் பகுதி : Research

நுண்ணறிவு பெருக நூல்நிலையம் வேண்டும்

தமிழறம் பேணும் தகைமையாளர்

[திரு உ. அரு. அருணசலம் செட்டியார்.]

உலகில் மக்கள் உய்யவேண்டுமெனின் நுண்ணறிவு பெருகவேண்டும். அதற்கு உள்ளம் விரியவேண்டும். உள்ளம் விரிந்தால் நலமா? தீதா? இரண்டுமுண்டு.

"உளமெனப் படுவதோ அளவிலாப் பெருவெளி
கோட்டை யுமில்லை பூட்டுதா ழுதற்கிலை
நஞ்சே யனைய பஞ்சேந் திரியம்
அஞ்சோ வாயில் ஆயிர மாயிரம்
அரைநொடி யதனுள் நரகென நம்முளம்
மாற்றிடக் கணந்தொறும் வருந்தீ நினைவோ
சாற்றிடக் கணித—சங் கேதமே யில்லை
இப்பெரு விபத்தி லெப்படிப் பிழைப்பீர்—"

என்று மனேன்மணீயத்திற் கூறியபடி உடல் இருக்க உள்ளம் எங்கெங்கோ சென்றுலாவக் கூடியது. அவை ஐம்பொறி வேட்கையுட்பட்டு மாறுன வழிகளிற் செல்லுமேல் அதனல் விளைவது தீதே. ஆண்டவன் மக்களுக்கு ஐம்புலனைத் தந்தது அதனின்பத்தைப் பெறவேண்டித் தானே என்பது சிலரது துணிபு. அது உண்மை. அப்புலன்கள் எவ்வின்பத்தை அடைய வேண்டும்; எவ்வழிச்சார வேண்டுமென்பதை ஒவ்வொரு வரும் முன்னர் ஆராயவேண்டும்.

ஆராய்ந்து புலன்களின் விருப்பிற்கேற்ப நமது புத்தியைச் செலுத்தாது,

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு"

என்ற செந்நாப்போதார் திருவாக்கின்படி மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல்லவிடாது, அதனல் விளையும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, தீயவை நீக்கி நல்லவைகளில் அப்புலன்களைச்செலுத்த நாம் பழகவேண்டும். அவ்வாறு ஐம்புலன்களையும் அடக்கியாள்பவரே அறிவிற் சிறந்தோ ராவர்; ஆன்மலாபத்தைப் பெறுவர்; அரிய பிறவியின் பயனை யடைவர். அந்நர்தவஞ் செய்வோரந்த மேலாய் வாழ்வர்

இதை,

"புலனைந்தும் வென்றான்றன் வீரமே வீரம்"

என ஔவையாரும்

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

எனப் பொய்யில் புலவரும் விரித்துரைத்திருக்கின்றனர். அவ்வுண்மைகளை நாமுணர்ந்து அதன்படி நடக்கவேண்டுமெனின், ஆண்டவன்றிருவருளடைய வேண்டுமெனின், அறிவு வளர வேண்டும்.

அறிவு வளர்வதற்கு, உள்ளத்தைப் பெருக்குவதற்கு,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்ற தமிழ்மறைப்படி அருங்கல்வியைக் கற்றுக் கேட்டுத் தெளிந்தாற்றான் பலனுண்டு. கல்வி கற்பதெனின் இக்காலத்தில் இலகுவில் இயலுமா? கல்வியெனுங் கடலை இப்பிறப்பின் வாழ்நாள் முழுதும் எவ்வகையால் நீந்தினுங் கரையேற முடியுமா? முடியாது! "கல்வி கரையில கற்பவர் நாட்சில" என்ற முதுமொழிப்படியும், கல்வி யென்னும் பல்கடற்பிழைத்தும்" என்ற திருவாசகப்படியும் கல்வியோ கணக்கில. அதனை நம்போன்றார் கூடியவரை அறிய ஆன்றோரால் ஆனவரை வரிவடிவாலாக்கப் பெற்றுப் பல நூல்களாக வெளிவந்திருக்கின்றன. அந்நூல்களை அறிஞர் பல்லோர் அவரவர் ஆராய்ச்சித் திறனுக்கேற்ப விரித்திருக்கின்றனர். இன்னும் பெருக்கிவருகின்றனர்.

அந் நூல்கள் அத்தனையையும் அல்லது ஏதேனும் ஒரு பகுதியையேனும் நாம் வாங்கிக் கற்கமுடியுமோ? அதற்குக் காலமும் போதாது. எல்லோரிடமும் பொருளுமில்லை. பொருள் படைத்தோர் வாங்கலாம். அவர்களிற் சிலருக்கு மனமில்லை. மனமிருந்தாலும் பொருள் வளர்ச்சி கருதவே நேரமிருக்கும். மாபேறளிக்கும் மனத்தூய்மையை வளர்க்க காலம் கிடைக்காது. அறிவை வளர்க்கக் கருதுவோரில் அநேகருக்கு அதற்குறுதுணைபுரி நூற்களை வாங்கப் பொருள் கிடைக்காது. இவர்களிருபிரிவினரும் ஒருங்கே இன்பம் பெற, ஆன்மலாபமடைய, அறிவை வளர்க்க வழி காண வேண்டுமெனின் ஒவ்வொரு ஊரிலும் ஓர் பெருத்த, நூல் நிலையம் வேண்டும்

அதனில் ஒவ்வொருவரும் அங்கத்தினராகச் சேர வேண்டும். அதன் வளர்ச்சி கருதி,

"நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்—"

என்ற பாரதியார் வேண்டுகோட்படி அவரவரும் இயன்ற அளவு ஈந்து ஏற்ற தொண்டாற்ற வேண்டும்.

இந் நாளில் எதுவும் பொருளின்றே லியலாது. எடுத்ததற் கெல்லாம் பணம் வேண்டும். இதையே "பொருளில்லார்க் கிவ் வுலகமில்லை" என்றும்

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்"

என்றும் வள்ளுவர் பெருமானும் கூறிப் போந்தார். ஆகவே எல்லாவற்றினும் இவ்வுலகிற் சிறப்புச்செய்யும் பொருளீ வோரே மிகுதியும் வேண்டும். நூல் நிலையங்களுக்கு வழங்கும் பொருள் நிதிபடைத்தோருக்கு ஒரு பொருட்டல்ல.

"வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
றூங்குங் களிறோ துயருறா—ஆங்கது கொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று"

என்று குமரகுருபரர் கூறியபடி உணவுண்ணும் யானையின் வாய்க்குத் தப்பிய ஒரு கவளம் பல உயிர்களைக் காப்பது போல், பொருளாளர் வைப்புநிதிக் கேகும் பணத்தில் ஒரு பகுதி ஈவதால் ஒன்றுங் குறைந்துபோகாது. அப்பொருள் பல நூல்களை வாங்குவதற்காகி வறுமையால் வாடும் அறிஞருள்ளத் தருளமுதைப் பொழிகிறது. அதனாலவர்கள் ஆனந்தம் பெறுகின்றனர். எடுத்த பிறவியின் பயனை யெய்து கின்றனர். ஆகவே,

அருநிதி படைத்தோ ரதிகம்பொருளீந்து அறிஞர்களுந் தொண்டாற்ற முன்வந்தால் ஆன்றோரா லாக்கப்பெற்ற நூல்கள், அறிஞர்களா லாக்கப்பெறு நூல்கள் அத்தனையையும் வாங்கி நூல் நிலையத்தில் சேர்க்கலாம்; அதைக்கொண்டு அனைவோரும் நுண்ணறிவு பெருக்கலாம்; நூற்பயனை யடையலாம். ஆகவே,

"ஒண்ணுதற் செவ்வா யுமையவள் பங்க னுலகளிக்குங்
கண்ணுதற் பெம்மான் கழலிணை போற்றிக் களிப்புறவே
எண்ணுவோர்க் கின்பம தீந்திடு கல்வியு மின்னருள்சேர்
நுண்ணறி வும்பெற நூல்நிலையம் பல நோக்குவிரே"

என்ற கலித்துறைப்படி நூல் நிலையம் இல்லாத ஒவ்வொரு ஊரிலும் இன்றே ஏற்படுத்த முன்வாருங்கள்.

வரலாற்றுப் பகுதி: History & Biography

கம்பரும் வள்ளுவரும்

(௬அ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கட்பேறு

தசரதசக்கரவத்தி ஸ்ரீராமபிரானுக்கு முடிசூட்ட எண்ணித் தம்மிடமழைத்து தம்மார்புறத் தழுவி மனமகிழ்ந்து தன் பக்கத்து இருக்கச்செய்து 'போர்மழுவுடையவன் பெரும் புகழ் குறுக நீண்ட தோளினாய்! நிற்பயந் தெடுத்தயான் நின்னை வேண்டி விரைந்து எய்தவதொன்றுளது'; அது, பன்னாள் பூபாரத்தைத் தாங்கி யிளைப்புற்ற நிலைமையில் மூப்பும் மிகுதியாகத் தோன்றியதனால், இப்பாரத்தினின்று நீங்கி உய்யலாவதோர் நெறிபுக உதவிடவேண்டியதேயாகும். மைந்த! ஒருவன் மைந்தரைப் பெறுவது தான் உறுதுயர்நீங்கி இருமையின்பங்களையும் பெறுதற்பொருட்டாகும் என்று சொல்வது பெரியோர்களது இயற்கையாகும். ஆதலினால் அரிதினில் உரிமையாக உன்னைப்பெற்ற யான் தளர்வது தகவோ? துன்பத்தினின்றும் நீங்கியவர்கள் இவ்வுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் மாதவருமல்லர், தன் சொன்மறாத மகப்பெற்றவரே துயர் துறந்தாராவர்,

> "உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி
> யிருமை யும்பெறற் கென்பது பெரியவ ரியற்கை
> தரும மன்னநிற் றந்தயான் றளர்வது தகவோ
> கரும மென்வயிற் செய்யிலென் கட்டுரை கோடி"

> "மன்னர் வானவ ரல்லர்மேல் வானவர்க் கரசாம்
> பொன்னின் வார்கழற் புரந்தரன் போலிய ரல்லர்
> பின்னு மாதவந் தொடங்கினோன் பிழைத்தவர் பிறரார்
> சொன்ம றாமகற் பெற்றவ ரருந்துயர் துறந்தார்"

என்று மக்கட்பேற்றின் அருமைபெருமைகளைப் பாராட்டிக் கூறினார்.

உலகத்திலே ஒருவனால் அடையற்பாலனவாய அரிய பேறுகள் அனைத்துள்ளும் அறிவுமுதலாய நலன்கள் பல அடைதற்குரிய மக்களைப்பெறும் பேற்றினும் மிக்கபேறு பிறிதொன்றில்லை.

இல்வாழ்க்கையானது மக்களினாலேயே மிகுந்த சிறப்பை யடைகின்றது. ஆயினும் அம்மக்கள் கல்விகேள்விகளின் மிகுந்து உயரிய அறிவையடையும் உரிமை மைந்தரைப் பெற்றாலன்றி அவ்வில்வாழ்க்கையானது பெரிதுஞ் சிறப்படையாது. ஆதலினால் ஒருவன் பெறும் பேறாக எண்ணுதற்குரியது நல்லறிவுடைய மக்களைப்பெறும் பேறேயாகும். நுண்மாண் நுழைபுலமிலாத மக்கள் விலங்கோடு சமமாக எண்ணப்படுவர்.

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்று திருவள்ளுவ நாயனார் கல்லாதவர்களை விலங்குகளோடு ஒப்பவைத்துள்ளார். விலங்கினும் மக்கட்கேற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றார்கண்ணேயாகலின் கல்லாதவரும் கற்றவரும் ஒத்தவர்களல்லர் என்பதாம். கல்வியறிவில்லாதார் மாக்கள் என்று கூறப்படுவார். மாக்களுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாடு

"மாவும் மாக்களும் ஐயறிவினவே"
"மக்கள் தாமே ஆறறி வுயிரே"

எனவரும் தொல்காப்பியச் சூத்திரங்களால் இனிது விளங்கும். மா—நாற்கால் விலங்கு; மாக்களெனப்படுவார் மனவுணர்ச்சியில்லாத மனிதர்; மக்களென்னுஞ் சிறப்புப் பெயர்க்குரியார் ஐம்பொறி யுணர்வேயன்றி மனமென்பதோர் உயரியஅறிவினையுடையார். இவ்வறிவினை யிலாதார் பிறப்பான் மனிதராயினும் அறிவினால் மாக்களாகவே கருதப்படுவார். ஆதலின் இவர்களுக்கும் விலங்குகளுக்கும் அறிவில் வேற்றுமையில்லையேயாம்.

"நன்று தீதென் றியறெரி நல்லறி
வின்றி வாழ்வ தன்றோ விலங்கின்னிடை"

என்றும்,

"தக்கவின்ன தகாதன் வின்ன வென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின் னெறி
புக்க வேலவ் விலங்கும் புத்தேளிரே"

என்று கம்பர் பெருமான், விலங்குகளுக்கும் மக்களுக்கும் ஊண் உறக்கம் முதலாய தொழில்களும் ஐம்பொறியுணர்வும் சமமாயினும் விலங்குகளினும் பார்க்க மனிதர் சிறப்புடையராய் எண்ணப்படுதற்குக் காரணம் நல்லவை தீயவை இவ்விவையெனப் பகுத்து அவ்வவற்றின் நன்மையையுந் தீமையை

யும் அறியும் அறிவு விலங்குகளுக்கு இல்லையாக, மக்களுக்கு அவ்வறிவு முக்கியமாக இருத்தலேயாகும் என்று மக்களுக்கும் விலங்குகளுக்குமுள்ள வேறுபாட்டை நயம்பெற விளக்கினர். இவ்வேறுபாடு,

"நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லென் போர்"

எனவரும் புறநானூற்றடிகளாலும்

"அறிவாவது: நல்லதனலனுந் தீயதன் தீமையும்
உள்ளவா றறிதல்" (தொல்-பொருளி. 53,

எனவரும் தொல்காப்பியச் சூத்திர நச்சினார்க்கியர் உரையானும் இனிது பெறப்படும்.

ஆகவே உயரிய மனனுணர்வின்றி ஐம்பொறியுணர்வையேயுடையார் மாக்கள் என்று கருதப்படுதலே,

"மொழிபல பெருகிய பழிதேர் தேஅத்தும்
புலம்பெயர் மாக்கள்" (பட்டினப்.216-17)

என்பதன் விசேடவுரையில் 'மாக்களென்றார் ஐயறிவுடையராதலின்' என்றும்,

"மடக்குறு மாக்களோடு" (கலி. 82)

என்பதில் மாக்களென்பதற்கு அறிவில்லாத மகளிர் என்றும்,

"மையலங் கோயின்மாக்கள் மடைதிறந்திட்ட
தொத்தார்" (சீவ. 1278)

என்பதன் விசேடவுடையில் மாக்கள் என்பதற்கு.

"மக்கட்குரிய மனனின்றி அறிவு கெட்டமையின் ஐயறிவுடையயார் என்று மாக்கள் என்றார்."

என்றும் வருகின்ற மூலப்பகுதிகளானும் அவற்றிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரைப்பகுதிகளானும் அறியலாகும்.

ஆதலினல் மாக்கள் எனப்படுவார் ஐயறிவுடையார் என்பது அவர்களுக்குப் பகுத்தறியும் அறிவு இன்று என்பதும் அவர்களை மைந்தராகப்பெறுதலின் உறுதுயர் நீங்கி யிருமையின்பமும் பயவாதென்பதும் பெறப்படுதலின் 'உரிமை மைந்தரை' எனக் கம்பர்பெருமான் கூறியது அறியவேண்டியன அறிதற்கு உரிமையான மைந்தரையே யாமென்க. இவ்வாறே வள்ளுவரும்,

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"

என்னும் குறளிலே அறிவறிந்த மக்கள் எனச் சிறப்பித்துக் கூறினர் என்க.

உரிமை மைந்தர் என்பதற்கு, அறியற்பாலன அறியும் உரிமையுடைய மைந்தர் எனப் பொருள்கொள்ளுதலேயன்றி, மனிதர்களாற் பெறுதற்கேற்ற பொருள்களுள் இன்றியமையாது பெறுதற்கு உரிமையாய மைந்தர் எனவும் பொருள் கொள்ளலாம். ஏனெனில்,

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற"

எனவும்,

"தம்பொரு ளென்ப தம் மக்கள்"

எனவும்,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு"

எனவும் மக்கட்பேற்றையே பெறும் பேறுகளெல்லாவற்றுள்ளும் உயரிய பேறாகத் திருவள்ளுவர் கூறுதலானும்,

"பொன்னுடையரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்"

எனப் பொன் புகழ் முதலாய பொருள்களெல்லாவற்றினும் முதன்மையான உடைமையாகக் கருதப்படுதற்குரியார் மக்களேயாவர் எனப் புகழேந்திப்புலவர் கூறுதலானும்,

"படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுநடை நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களையில் லோர்க்குப்
பயக்குறை யில்லை தாம்வாழு நாளே"

எனச் செல்வராயினும் மக்களையில்லோர்க்கு வாழுநாள் பயனில்லை என மக்களையே பெறுதற்கு உரிய முதன்மையான பொருள் என்று புறநானூற்றுள் வருதலானும் என்க.

மைந்தர் கல்வி கேள்விகளான் நிறைந்தும் நற்குண நற்செயல்களுக் கிடனாகியும், சான்றோரால் புகழப்பெற்றும் சிறு

மையில் 'முறியிளமுல்லை மெல்லரும் பன்ன மூரல் வெண்டயிரனை பொதிந்து குறுகுறு நடந்தும்' அமிழ்தினுமினிய மழலை மொழிந்தும் அகங்களிக்கச் செய்தலின் இம்மையின்பத்தையடைகிறார்கள்.

> "மழலை மென்மொழி இனிதாதலை நயம்பெறப் பாராட்டி,
> குழலும் யாழு மினியவெனக் கூறுவண்ணமென் கனிவாய்
> மழலை மொழிந்து." (பிரபுலிங்க)

எனவும்,

> "யாமொடுங்கொள்ளா பொழுதொடும்புணரா
> பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
> கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை" (புறம்.92)

எனவும்,

> "ஐய! காமரு நோக்கினை யத்தத்தா வென்னுநின்
> றேமொழி கேட்ட லினிது" (கலி-80)

எனவும்

> 'அவர்மழலை கேட்டல் அமிழ்தி னினிதே' (இனியது. 15)

எனவும் ஆன்றோர்கள் கூறிய பகுதிகள் அறிந்து மகிழ்தற்குரியன.

எழுபிறப்பினுஞ் சென்று தீவினைவயத்தால் அனுபவித்தற்குரிய துன்பங்களானவை பெற்றோரின் நன்மையைக் குறித்து மைந்தர்செய்யுந் தான தருமம் முதலாய கருமங்களால் நீங்கி நற்கதியடையச் செய்தலின் மக்களால் மறுமையின்பத்தையும் பெற்றோர் அடைகிறார்கள். இதனாலேயே "மைந்தரைப் பெறுகின்றது உறுதுயர் நீங்கி இருமையும் பெறற்கு" என்று கம்பர் கூறினார். இவ்வாறே, மக்கட் பேற்றினால் இருமையின்பமும் பெறுதலை வள்ளுவரும்,

> "அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
> சிறுகை யளாவிய கூழ்"

> "மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
> சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு"

> "குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
> மழலைச் சொற்கேளா தவர்"

என்னுங் குறள்களினால் இம்மைப்பயன் பெறுதலையும்

> "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
> பண்புடை மக்கட் பெறின்"

"தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்"

என்னுங் குறள்களினல் மறுமைப்பயன் பெறுதலையும் கூறினர்.

மக்கட் பேற்றினல் துன்பம் நீங்கப் பெறுதலை,

இறந்த மேலோர்
துன்பமு நிரயஞ் சேர்வுந் துடைத்திடுந் தொன்மை நோக்கி
யன்புறு புதல்வர்க்காக அரிவையைக் கோடியையா (கந்த)

எனவும்,

பராவரும் புதல்வரைப் பயக்க யாவரு
முராவருந் துயரைவிட் டுறுதி சாண்பரால் (கம்ப)

எனவும் வருதலால் அறியலாகும்.

(தொடரும்)

விடுகதைகள்

1. ஆற்றிலே பிறந்து ஆற்றிலே வளர்ந்து
ஆற்றிலே வாழும் ஆற்று மீனே! எல்லா
ஆறிலும் போல்லா ஆறு எது?

—(அழுக்காறு)

2. பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்து
பூவிலே வசிக்கும் பூநாகமே! எல்லாப்
பூவிலும் போல்லாப் பூ எது?

—(எரிப் பூ—எரிப்பு)

(கா. சிவ. க.)

அறிவியற் பகுதி - Science

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

[பா. வே. மாணிக்க நாயக்கர்—க. ப. சந்தோஷம் B. A., L. T.,]

புரைபடா முறையொன்றைத் தழுவித் தமிழ்மொழி யமைக்கப்பெற்றிருக்க வேண்டுமென்பதை விளக்க விழைகின்றேன். இம்முறையுண்மைகொண்டு, இம்மொழி தனிப் புலமை வாய்ந்த ஒரு பெரியோரால், அல்லது ஒரு குழுவினரால் இயற்றப்பட்டதென்பது பெறப்படும். ஒருமொழி ஒருவரால் அல்லது ஒரு குழுவினரால் ஒரு முறைப்படி வகுக்கப்பட்டதென்பது பொதுவாக மொழிகளின் வளர்ச்சியொழுங்கிற்கும் வரலாற்றொழுங்கிற்கும் முரண்படுவதென்று தோன்றும். தமிழ்மொழியின் அடிப்படையாய் இலங்கும் முறை, மறைத்தன்மையும் உண்மையியலும் விரவியதொன்று என்பதைக் கருதின் அம்முரண்பாடு வலியுறுமாயினும், ஆழ்ந்து நோக்குவார்க்கிங்கு இடரொன்றும் எழக் காரணமில்லை. தமிழ்மொழியை ஆக்கப்பெற்ற ஒன்றாகக்கொண்டு, அதை ஆக்கினோன், அல்லது, ஆக்கினோரில் வளர்ச்சியொழுங்கு விளங்குகின்றதாவென் றாராய்தல் வேண்டும்.

தமிழ்மொழி ஒருமுறையைத் தழுவி இயற்றப்பெற்றிருத்தலை விளக்க இரண்டொரு சிறிய எடுத்துக்காட்டுகளைப் பார்க்கலாம். தமிழ்மொழியிலுள்ள எண்ணுப்பெயர்களைத் தமிழொடு தொடர்பிலா வேறு மொழிகளின் எண்ணுப் பெயர்களுடன் ஒப்பிடுவோம். தமிழில் ஒன்று, இரண்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, தொண்ணூறு, நூறு, தொள்ளாயிரம், தொள்ளாயிரத்துத்தொண்ணூற்றொன்பது, ஆயிரம், ஆயிரத்தொன்று, ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது, இரண்டாயிரம் முதலிய எண்ணுப் பெயர்களுள. ஆங்கிலத்தில், ஒன், டூ, த்ரீ, ஃபோர், ஃபைவ், ஃசிக்ஃச், எய்ட், ட்வென்டி, தௌஃசன்ட்ஃ, முதலியவற்றைப் பார்க்கின்றோம். ஹிந்துஸ்தானியில் ஏக், தோ, தீன், சார், பாஞ்ச், செ, சாத், ஆட், நௌ, தஃச், முதலிய எண்ணுப் பெயர்களுண்டு.

ஆங்கிலத்தில், ஒன் என்பது தவிர மற்றைய எண்ணுப் பெயர்கள் சமஸ்கிருதத்தோடு தொடர்புடையவை.

டு=two—twice, twain, த்வே;
த்ரீ=three த்ரீணி
∴போர்=Four சத்வாரி
(லத்தீன் மொழியிலுள்ள quater என்பதோடு ஒப்பிட இது விளங்கும்.)
∴பைவ்=Five பஞ்ச
∴சிக்∴ச்=Six ஷட்
∴செவன்=Seven சப்த
(லத்தீனில் ஏழு பக்கங்களுடைய ஒருருவத்திற்கு செப்டகன் என்று பெயர் வருதல் காண்க.)
எய்ட்=Eight அஷ்ட
நைன்=Nine நவ
டென்=Ten தச

ஹிந்துஸ்தானியிலுள்ள எண்ணுப் பெயர்கள் சிறிது மாறிய சமஸ்கிருதப் பெயர்களே என்பது விளங்கும்.

தோ=த்வே நௌ=நவ
தீன்=த்ரீணி தஸ்=தஸ
சார்=சத்வாரி
பாஞ்ச்=பஞ்ச
செ=ஷட்
சாத்=சப்த
ஆட்=அஷ்ட

ஆங்கிலத்திலும் ஹிந்துஸ்தானியிலும் எண்ணுப்பெயர்கள் முறையின்றி உயிரீறும் மெய்யீறும் பெறுகின்றன; தமிழிலோ எண்ணுப்பெயர்கள் உகரவிறுதி பெறுகின்றன. ஆயிரம் என்பதில் மாத்திரம் மகரவீற்றைப் பார்க்கின்றோம். உகரமும் மகரவொற்றும் நாம் நன்கறிந்த வெழுத்துக்கள். பிரணவத்தின் முப்பகுதிகளாய அ, உ, ம் என்பவற்றில் இடையுங்கடையும் முறையே உகரமும் மகரவொற்றுமாம். இவற்றுள், அகரம் எங்கும் நிறைகின்ற உயிராகிய இறைவனையும், உகரம் தனித்தனி உயிர்களையும், மகரம் உயிரைப்பற்றி நிற்கும் மலத்தையுங் குறிக்குமென்று முன்னே கண்டோம். அகரத்தாற் குறிக்கப்படுகின்ற பதி அல்லது இறைவன், எண்ணிற் கடங்கானென்பது கூறவேண்டுவதில்லை. உகரத்தாற் குறிக்கப்படுகின்ற ஆன்மா அல்லது உயிர் மல நீங்கிய நிலையில்

உருவுடையதன்றாதலின் அதுவும் எண்ணலளவைக்குட் படாது. மகரவொற்றால் விளக்கப்படும் மலங்களும் நுண்ணிய நிலையில் புலனுணர்வுகடந்தவையாதலின், எண்ணப் பெறா. பசு அல்லது ஜீவாத்மாவாகிய உகரம் பாசத்தாற் கட்டுண்டபொழுது உற்றுணரக்கூடிய வடிவமதற்குண்டு. ஆதலின், அது எண்ணற்கடங்கும். உகரமாகிய உயிர் திரிமலகோசமாகிய மெய்யெழுத்தில் புகும்பொழுது அது எண்ணலளவைக்குட்படும். இங்ஙனமாயின், ஒன்று என்பதற்கு ஒரு உகரமென்றும், பத்து என்பதற்கு எட்டிரண்டு உகரங்களென்றும் பொருள் செய்யலாங்கொல்? இஃதுண்மையாயின், ஆயிரம் எனுஞ்சொல்லின் ஈற்றிலுள்ள மகரவொற்றின் பொருளைப் பின்வருந் திருமந்திரச் செய்யுள்களுட் காணலாம்.

"அணுவு ளவனு மவனு ளணுவும்
கணுவற நிறை கலப்ப துணரார்
இணையி லீசனவ னெங்கு மாகி (த்)
தணிவர நின்ற சராசரந் தானே"

"அணுவி லணுவினை யாதிப் பிரானை
அணுவி லணுவினை யாயிரங் கூறிட்
டணுவி லணுவை யணுகவல் லார்கட்
கணுவி லணுவை யணுகலு மாமே"

இவ்வாறாயின், தமிழ் எண்ணுப் பெயர்களில் அமைந்து கிடக்கு முண்மையைக் கீழ்க் கண்டவாறு நவிலலாங்கொல்?

"பதிபசு பாச மெனுமுப்பொருள்களுள்
முதல திலக்கில விடையுங் கடையும்
புணர்வுழி யெண்ண லளவைக் கிணங்கலின்
எண்ணுப் பெயர்கள் எண்ணு முகரத்தையே"

பெரியீர், யான் புனையுமாற்றல் கொண்டு (கற்பனா சக்தி) இவ்வாறு பேசுகின்றேனென நினைப்பீர்களாயின், பொறுத்திடுமாறு உங்களை வேண்டுகின்றேன். எடுத்துக் கொண்ட பொருளை நன்கறிவதற்கு இத்திறமை பெரிதும் வேண்டப் படுவதொன்றே. விந்தை மிக்க இம்மொழியைக் கற்பதற்கு வழங்கப்படும் இத்திறம் வீண்போகாது.

தமிழ்மொழியி னமைப்பிற் கடிப்படையாய் நிற்கும் செவ்விய முறையை அதன் மெய்யெழுத்துக்களில் எளிதாய்க் காணலாம். இம்மொழியின் மெய்யெழுத்துக்கள் இம்மொழியின் சிறப்புக்களி லொன்றாம். இவை பகுக்க வொண்ணா எளிய ஒலிகள். ஆறெழுத்துக்கள் சேர்ந்த மூன்று பகுப்பினையுடையனவாய் இவை விளங்குகின்றன. இவைகட்கு உடம்பு,

மெய், உடல் (திரிமலகோசம்) என்று பெயர். மேற்கூறிய மூன்று பகுப்புகளும் முறையே வல்லினமெய், இடையின மெய், மெல்லினமெய் எனப் பெயர்பெறும். இப்பெயர்களே மொழியின் உண்மை இயலைத் தழுவிய அடிப்படையை விளக்குந்தகையவா யிருக்கின்றன. நமசிவய என்ற பஞ்சாட்சரத்தில் ந, ம, என்ற இரண்டு மெல்லின வெழுத்துக்கள் உள. இவ்விரண்டெழுத்துக்களால் குறிக்கப்படுவன த்ரோதமும் (மறைப்பு) மலமுமாம். எஞ்சி நிற்கும் சி, வ, ய என்ற மூன்றெழுத்துக்களில் வகரயகரங்கள் இடையினமெய்கள் இவையிரண்டும் வீடளிக்கும் எழுத்துக்கள் என்று மதிக்கப் படுகின்றன. சிகரவெழுத்து மொழிவகையில் வல்லினமெய் யாயினும், மந்திரங்களில் இதை முக்கூறுடைய ஒரெழுத்தாகக் கூறவேண்டும். இதில், ஆய்தவெழுத்தென்றும், திரி நேத்ரவெழுத்தென்றும், சிவவெழுத்தென்றும் சொல்லப்படுவதாகிய ∴ முதலில் வரவேண்டும். எங்ஙனமெனின், ∴ — ச் — இ = சி. இங்ஙனம் கூறப்படுங்கால் இது வல்லினமாகாமை காண்க. ஆதலின், பஞ்சாட்சரத்தில் சிகரமும் ஒரு இடையின வெழுத்தாகின்றது. ஐந்தெழுத்துக்களில் மூன்றெழுத்துக்கள் இடையினத்தையும், இரண்டெழுத்துக்கள் மெல்லினத்தையுஞ் சேர்ந்தவை. அகராதியிலுள்ள சொற்களை நோக்குங்கால் இடையினத்தில் தொடங்குகின்ற ஒரு சொல்லுக்கு, மெல்லினத்தில் தொடங்குகின்ற சொல் இரண்டும், வல்லினத்தில் தொடங்குகின்ற சொல் எட்டும் உளவென்பது வெளியாகின்றது. பொதுவானவற்றைப் பேசும் ஒரு தமிழ்நூலை எடுத்துக் கொண்டு அதிலுள்ள இடையின மெல்லின வல்லின வெழுத்துக்களை எண்ணுவோமாயின், இடையின வெழுத்துக்கள் தொகையில் மிகச் சுருங்கியும், வல்லின வெழுத்துக்கள் தனி பெருகியுமிருக்கக் காணலாம். இது கொண்டு நாமறிவதென்னையெனின், மகாமந்திரங்களில் எவ்வெழுத்துக்கள் பெருகித் தோன்றுகின்றனவோ, அவை பொது மொழியில் அருகித் தோன்றுகின்றன; மந்திரங்களில் அருகியுள்ளவை பொதுமொழியில் பெருகிக்கிடக்கின்றன. பொதுமொழியிலுங்கூடச் சிறப்பாக ஒரு பொருள் எடுத்து நுவலப்படுங்கால் அப்பொருளின் தன்மைக்கேற்ப மெல்லினம், இடையினம், வல்லினம் என்ற மாயா, காமிய, ஆணவ எழுத்துக்களின் தொகை முற்கூறிய முறைபிறழ வருகின்றன. ஒரு நூலின் ஒரு பகுதியில் வெளிப்படும் ஆணவ மலத்தினளவை அப்பகுதியிலுள்ள வல்லின மெய்களின் தொகையைக்கொண்டு கணக்கியல் வகையில் திருத்தமாகச் சொல்லி விடலாம்.

கம்பராமாயணத்தில் சடாயு உயிர்நீத்த படலத்தில் இராவணன் சடாயுவைப் பெருமிதத்துடன் நோக்கிக் கூறுஞ் செய்யுளை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

"கேட்டானிருதர்க் கிறை கேழ்கிளர்தன்
வாட்டாரை நெருப்புக வாய்மடியா
ஓட்டாயினி நீயுரை செய்குநரைக்
காட்டாய் கடிதென்று கனன்றுரையா"

இதில் வல்லினமெய் நூற்றிற் கைம்பத்து மூன்றும்; மெல்லின இடையின மெய்யிரண்டும் சேர்ந்து நூற்றுக்கு நாற்பத்தேழும் வந்தன.

கம்பராமாயணத்தில் வாலி வதைப்படலத்தில் சுக்கிரீவன் வாலியைப் போர்க்கழைக்குமிடத்தில் ஆணவம் முன்னினும் மிகுந்து வெளிப்படுவதால் வல்லின மெய்களின் தொகை மேலுமுயர்கின்றது.

"இடித்துரப் பிவந்துபோ ரெதிர்த்தியே லடர்ப்பனென்
றடித்தலங்கள் கொட்டிவாய் மடித்தடுத் தலங்கு தோள்
புடைத்து நின்றுளைத்த பூசல் புக்கதென் பமிக்கிடம்
துடிப்பவங் குறங்கு வாலிதிண் செவித்தொளைக்கணே"

ஈண்டு ஆணவ எழுத்துக்களாகிய வல்லினங்களின் தொகை நூற்றுக் கறுபத்துநாலு வரையிலேறி நிற்க, மற்றைய விரண்டினங்களின் தொகை நூற்றுக்கு முப்பத்தாறாகக் குறைந்து நிற்கின்றது.

கம்பராமாயணம், மாயா ஜனகப்படலத்தில் சீதையை இராவணன் தன் காமத்திற்கிணங்க வேண்டுகின்ற செய்யுளில் காமிய எழுத்துக்களாகிய மெல்லின மெய்களின் எண்ணிக்கை பெருக, ஆணவ, வல்லின மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை குறைவதைப் பார்க்கலாம்.

"வஞ்சனே னெனக்கு நானே மாதரார் வடிவுகொண்ட
நஞ்சுதோ யமுத முண்பா னச்சினே நாளுந் தேய்ந்து
நெஞ்சு நேரான தும்மை நினைப்புவிட் டாவிநீக்க
அஞ்சினே னடியனேனும் மடைக்கல மமுதின் வந்தீர்"

இதில் காமிய மெல்லெழுத்துக்கள் நூற்றுக்கு நாற்பத்தேழு வீதமும், ஆணவ வல்லெழுத்துக்கள் முப்பத்தாறு வீதமும், இடையினம் பதினேழு வீதமும் வந்தமை காண்க.

இஃதிங்ஙனமாக, நுவலப்படும் பொருள் நுண்ணியதாய்த் தூயதாயிருக்குமாயின், வேண்டப்படுவது வீடாயின், யாதாயினுமொன்று கருதி அகங்குழைந் திறைஞ்சுவதாயின்,

வீடுபே றளிக்கும் எழுத்துக்களைத் தம்மகத்திற்கொண்ட இடையின வெழுத்துக்கள் தொகையிற் பெருகுவதற்கு ஒரு தாரணமாயினுங் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"எழுவாயெவர்க்கு முதலாகி யீறேடிடையாகி
யெங்கு முளையாய்
வழுவாதவர்க்கும் வரமீய வல்லை யவரால்
வரங்கள் பெறுவாய்
தொழுவாயுணர்ச்சி தொடராத தன்மையுருவாய்
மறைந்து துயரால்
அழுவா யொருத்தனுளை போலுமாரிவ் வதிரேக
மாயை யறிவார்."

இராமன் மூர்ச்சையடைந்தபொழுது கருடன் இராமனை மன முருகிப்போற்றிய இச்செய்யுள் கம்பராமாயணம் நாகபாசப் படலத்தில் வருகின்றது. ஈண்டு, ஆணவவெழுத்துக்கள் தமது இயற்கைவீதங் குன்றி, நூற்றுக்கு இருபத்தொன்பதாகவும், காமிய வெழுத்துக்கள் அதனினுங் குறுகிப் பதின்மூன்றாகவும், இடையினவெழுத்துக்கள் வியத்தகுவண்ணம் நூற்றுக்கு ஐம்பத்தொன்பதாகவுந் தோன்றுகின்றன.

மந்திர விதியின்படி இடையின வெழுத்துக்கள் ஆறில் ய, ர, வ என்ற மூன்றுமே வீடுதரும் திறமைவாய்ந்தன. மேலெடுத்துக்காட்டிய செய்யுள் சிதம்பரத்திலொரு குழந்தை யிறந்த காலை, மீண்டுமஃதுயிர் பெற்றெழும் பொருட்டுக் கம்பன் பகர்ந்த இருபத்துநான்கு விருத்தங்களில் ஒன் றென்பர். இச்செய்யுளை மேலுங்கூர்ந்து நோக்கி, ஈண்டு நாம் காணும் இடையின வெழுத்துக்களுக்கும், யகர, ரகர, வகரங் களுக்குமுள்ள வீதப் பொருத்தமென்னவென் றாராய்வோ மாயின், அது நூற்றுக்கு எழுபத்தொன்றாகின்றது. இவ் வெழுத்துக்களின் எண்ணிக்கையை விடுத்து, மாத்திரை வகையில் இவை என்ன வீதம் பெறுகின்றனவென்று பார்த் தால் நூற்றுக்கு எண்பதாகின்றது. பொதுவாக வழங்கப்படும் மொழியில் இடையின வெழுத்துக்கள் தோன்றும் வீதத்தை மாற்றி, வேண்டுமென்றே கம்பர் இத்தகைய செய்யுட்களில் அவற்றின் தொகையைப் பெருக்கினரென்று சொல்லலியலா தாயினும், இச்செய்யுட்களில் நவிலப்பெறும் சுவைக்கும், பாம்பு கடித்து மாண்ட பிள்ளை மீண்டதென்னுங் கதைக்கும், இடையின வெழுத்துக்களுக்கும் உண்டாகுந் தொடர்பு பெரி தும் வியத்தற்குரியதே. பெரியீர், பொதுவறிவின் வரம்பைக் கடந்து நிற்குமொரு கருத்தை யுங்களிற் புகுத்த யான் முயல் கின்றேனென்று நீங்கள் தவறாக நினைத்தல்கூடும். அஃதென்

நோக்கமன்றென்று திண்ணமாய்க் கூறுகின்றேன். யான் விளக்கமுயல்வது, தமிழ்மொழியினமைப்பில் மறைந்து கிடக்கும் ஒரு முறைமையால் தூண்டப்பெற்று, அம்மொழியை வழங்குகின்றவர்கள், மலக்கட்டினின்றும் உயிர் நீங்கவேண்டுமென்ற விருப்பத்தோடு தொடர்புடைய உணர்ச்சிகளை வெளியிடுங்கால் இடையின வெழுத்துக்களைப் பெரிதும் பயன்படுத்துகின்றார்கள் என்பதாம். இங்ஙனம், மெய்யெழுத்துக்களின் ஒலியோடு ஒன்றி நிற்கும் உணர்ச்சி யொழுங்குகொண்டு செய்யுட்களில் வெளிப்படும் சுவைகளை அளக்கப் புகுங்கால் ஒருவகை யுணர்ச்சி மற்றோருணர்ச்சியின் வடிவந் தாங்கி வருகின்றதோவென்று ஆராய்தல்வேண்டும். எங்ஙனமெனின், ஒரடியவன் வீடுபேறு வேண்டித் தான் வழிபடுந் தெய்வத்தை இறைஞ்சுகின்றான்; இது செய்யுங்கால் வீடுபேறடைவதற்குத் தனக்குரிமையுண்டென்றவன் உளத்தடிப்புடையவனாகின்றான். ஈண்டு, உரிமையென்ற திட்பம் வருதலின், ஆணவமென்ற மலமுந் தோன்றுகின்றது. ஆதலின், இத்தகைய உணர்ச்சி வெளிப்படுதற்கேற்ப வல்லெழுத்துக்களே யாண்டு பெரிதும் வந்தேறும் என்பதறிக. மற்றோரடியவன் தன்னையொரு மங்கையாக நினைத்துத் தான் வழிபடு கடவுளைக் காதலனாய்க்கருதி வேண்டுகின்றான். ஈண்டும் விடுதலையே பொருளெனினும், காதலென்னும் சுவை வெளிப்படுதலால் அவன் வழங்கும் மொழியில் மெல்லெழுத்துக்கள் மிகும். இவ்வாறு பல்வேறு வகையில் சுவைகள் மொழியில் வெளிப்படுமாயினும் முன்கூறிய எழுத்துமுறை பிழைபடாதென்க.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

[புதுக் கவி]

ஆலயத்திறப்பு

அல்லது

க்ஷேத்திரப் பிரவேசனச் சதகம்

நோண்டிச் சிந்து

'இசைத்தமிழ்ச் செல்வர்'

[உயர் திரு T. லக்ஷ்மண பிள்ளை பி. ஏ. அவர்கள் பாடியது.]

கேளுமின், உலகோரே,—முன்னே
கேட்டறியா இந்த நாட்டகத்தில்
மூள்கின்ற முன்னேற்றம்,—செய்திகள்
முழுவதுங் கேட்டுக்கை தொழுமின்களே! 1
ஸ்ரீஜனகத்திருவும்—வாணியும்
சேரவிளங்கும் இந்தச் சேரநாட்டில்
ராஜாரவிவர்மன்—என்னும்
ராஜ, கலைஞன் உலகம் புகழ்வோன் 2
சித்திரக் கலைதனிலே—உலகிற்
சிறந்த*றபேலுக்கும் அஞ்சிலோவுக்கும்
ஒத்த சமத்துவனாய்—மண்டலம்
உள்ளளவும் திகழ்கலை வள்ளலவனே 3
தோன்றிய திருக்குலத்தில்—அன்னவன்
தூயதிரு மகளுக்குத் திருமகளாய்
ஆன்ற கல்வியும் அறிவும்—ஆழ
அகன்ற நோக்கமும் மனமுகந்த சொல்லும் 4
ஆய்ந்தறியுந் திறமும்—பெண்களின்
அவைகளிற் சொல்லெழுந்த சுவைத்திறமும்
வாய்ந்த செயலறிவும்—செய்வதில்
வருந்தடைகளை வெல்ல அருந்துணிவும், 5

* Raphael and Michael Anjelo, the famous painters.

மகிமையுந் தங்கியிடும்—செல்வி
மகாராணி ஸேது பார்வதி பாய்
வெகுநாள் தவமிருந்து—கடவுளை
வேண்டிக்கொண்டாளுக்கோர் ஆண்டகைச்சேய 6
சித்திரைத் திருநாளில்—உதித்த
சேரலர் மன்னன்செங் கோலரசன்
சத்தியந் தவறாத—வேந்தன்
சகல மனிதருக்கும் நிகரில் நண்பன் 7
ராஜ கலைகள் விளங்கும்—பால
ராமவர்ம னென்னும் நாமமுள்ளான்
தேசும் திருவுமுள்ளான்—சகல
தேசமும் தன்பெயர் வீச நிற்பான்; 8
பக்தியிற் சிறந்தோனே—நமது
பாரதமாண்ட ஸ்ரீராமன் நற்பேர்
சித்திக்க வல்லவனே—மேற்குச்
சீமையெல்லாங்கண்ட மேன்மையனே; 9
பேதிப் பொன்று மின்றி—மனிதர்
பிரிவினை வேற்றுமை தெரிகிலனாய்
ஜாதிப் பிளவுகளே—சற்றும்
சற்றும்சட்டை பண்ணேன் என்ற நிஷ்டையனாய்த்; 10
தோன்றியோன் இளமையிலே, ஸமஸ்க்ருதம்
தொல் தமிழ், ஆங்கிலம், மலையாளம்
ஆன்றனன் கல்வியிலே, விளங்க
அடுத்தது காட்டிய பளிங்கினைப்போல் 11
முகமலர்ந்தினிய சொல்வான்—தாயின்
முகதரிசனம் தெய்வ தரிசனமாய்
அகமலர்ந் தமைவுறுவான்—யார்க்கும்
அன்புநிறை செயல்புரிந்தின்புறுவோனே; 12
நீதிக் களஞ்சியமே—கருணை
நிருத்தம் செய்கின்ற பெருங்கருத்துடையான்
ஜாதிக் கடுமுறையில்—எண்ணில்
தலைமுறை தலைமுறை யாகக்கொண்டே, 13
கோவில் நடையதற்குள்—புகுந்து
கும்பிடுவ தென்பது விலக்கப்பட்டு

நாவில் கால் நடைக்கும்—கீழாய்
நடத்தப்பட் டவர்னர் என்றுடற்றப்பட்டு, 14
தொடுவதும் பாபமென்று—தூரத்தில்
துரத்தப்பட் டளவின்றி வருத்தப்பட்டு
கொடுவறுமைக் கிரையாய்—தாங்கள்
கொள்ளும் வருத்தங்களை விள்ளுதற்காய், 15
ஆண்டவன் முன்செல்லின்—அசுத்தம்
அவனுக்கும் உற்று மகத்துவங் குறையும்
தீண்டலும் பாவ மென்று—ராஜ
தெருவிலே நடப்பதும் ஒருவப்பட்டு, 16
நம்பனின் கோவிலுக்குள்—கடக்கும்
நாயும், வௌவாலும், பொன்வாயும், நத்தும்,
தும்பியும், காகமுமே—சென்று
தொடலாம் கழித்திடலாம் அசுத்தம், 17
ஆனால், அவர்னர் என்னும்—மனிதர்
அடித்தடம் படில் பாபம் பிடித்திடுமாம்
வானுள் பகவனுக்கு—தாழ்ந்த
மனிதரைக் கண்டிடிற் புனிதம் போமென் 18
றானாதி காலந்தொட்டு—மேலோர்
அடிபணிந் தவரிடும் பணிதொடர்ந்து
ஈன வினைகள் செய்து—வயிற்றுக்
கிரையிட்டு வெளிநிற்கும் ஹரிஜனங்கள், 19
செல்வமுங் கிடையாமல்—வேலை
செய்யினும், தகும்பலம் கைவராமல்
கல்வியும் அடையாமல்—கற்ற
கலைஞரைக் காணவுங் கிடையாமல், 20
பலகல்விச் சாலைகளும்—இருந்தும்
படிக்கப் பணங் கொடுக்க முடியாமல்,
கலையொன்றுந் தெரியாமல், முன்போல்
கடும்பணி தொடர்ந்திடும் ஹரிஜனங்கள், 21
கடவுளும் ஞானமுமே—அறியாக்
காட்டு மனிதரென ஒட்டப்பட்டு
அடைக்கலம் அதுவென்றே—மறுகி
அந்நிய மதம்புகும் ஹரிஜனங்கள்; 22

அலைக்கின்ற கொடும்பசிக்கும்—அடுக்கா
ஆணைக்கும் அஞ்சி வாணுளதனைத்
தொலைக்கின்ற மார்க்கமிதே—யென்று
தோன்றிப் பிறமதஞ்சேர் ஹரிஜனங்கள்; 23
இல்லாரை எவ்வெவரும்—எள்குவர்
என்ற வள்ளுவர்மொழி யொன்றின்படி
பொல்லாரென் றொறுக்கப்பட்டுப்—பிறமதம்
புகுந்து விடத்தகுந்த ஹரிஜனங்கள்; 24
சாகினுங் கேடில்லை—நெருப்பிலே
வேகினும் இதில் நலம், இதில் நலமென்
றேகிடப் பிறமதத்தில்—எண்ணி
யிருக்கின்ற நெருக்குற்ற ஹரிஜனங்கள், 25
படுகின்ற பாடுணர்ந்து—மன்னன்
பரதுன்பத்திற் கிரங்கும் பரிசுடையான்,
"சுடுகின்றதே யுள்ளம்"—ஓர்ந்திடில்
துக்க நிவர்த்திகள் செய்யத் தக்கதல்லவோ 26
"நம்மதம்? அதுவன்றேல்—அதனை
நயக்கு மனிதர்க்கென்ன பயக்கும்மது?
தம்மதம் துணைப்பதின்றேல்—அதனைத்
தழுவும் ஹரிஜனங்கள் நழுவுவரே; 27
"பொறுமை நிறைந்தமதம்—நமதே"
பொறுக்க முடியா திந்த ஒறுப்பறிவின்
வெறுமையைக் காட்டியதே!—இந்த
வெற்றறிவு நம்மதத்தில் உற்றதெங்ஙனம்? 28
"பரந்த உலகமெல்லாம்—நிறைந்த
பரம்பொருள் தனக்கொரு வரம்புளதோ?
நிரந்தர நேசம் சொன்ன—நல்லுப
நிஷத உண்மைக்கு வந்த விஷமமென்ன? 29
"அத்வைதம் சொன்னதென்ன?—உயிர்கள்
ஆதிப்பொருள் ஒன்றினதுபேதிப்பென்றல்லோ?
மித்தை யிவ் வித்தியாசம்—வீண், வீண்,
வெற்றுக் கற்பிதங்கள் அடியற்றுப் போகுமே, 30
"வேற்றுமைகள் பலவுமின்றி—மனிதர்
விரியுலகத்தில் வாழல் அரிதெனினும்

போற்றுந் தெய்வ சந்நிதிமுன்—நிற்கும்
போதுகுலம் வகுத்திடல் பேதைமை யன்றோ? 31
குடி ஜனங்களின் தாபம்—தீர்த்துக்
கொடுப்பவன் சிறந்த செங்கோலரசன்
முடியரசன் முறைக்கு—ஜனங்களில்
முன்பரிவர் பின்பரிவர் என்பதில்லையே, 32
"ஒரு நாடொரு குடும்பம்;—குடும்பத்தில்
உயர்ந்தவர், தாழ்ந்தவரெனப் பிரித்தல்
சரியோ? சிலர் தழைக்க—வேறுசிலர்
தாழ்வுற்றிடில் அக்குடும்பம் வாழ்வுற்றதுவோ? 33
"தந்தை குடிகட் கரசன்;—மக்களைத்
தரம் பிரித்தலும், அன்பில் வரம்பு வைத்துப்
பந்தனம் செய்திடலும்—உலகில்
பெருந்தன்மையாளர்க்குப் பொருந்துவதோ? 34
"யாவரும் ஈசன் மக்கள்;—ஈசன்முன்
எவர் பெரியவர், சிறியவர், எவரே?
தேவரென்றும் மனிதரென்றும்—ஈசனுக்குச்
சிறிதும் பேதமில்லை யென்றறிதல் நன்றே; 35
"மதிநலம் குல நலத்தால்;—ஆண்டவன்
மதிக்கிலன்; செயல்களை விதிக்கும் நெஞ்சின்
கதிநலம் ஒன்று கொண்டே—மனிதரைக்
கணக்கிடுவான் ஒரு சுணக்கின்றியே; 36
"மாமூல் என்பர் சிலர்;—பிசகுக்கும்
மாமூல் சொல்லலாமோ தோமுறவே?
ஆமெனில், அடிமைத்தனக்—கொடுமை
அகன்றிருக்கா தோன்றும் ஜகந்தனிலே; 37
"அரும்பெருந் தத்துவங்கள்—அடங்கிய
ஆதிஹிந்து மதத்திற்கோர் தீது வந்ததோ?
பெரும்பிணி யுறுத்தியதோ?—அது நின்று
பெருகிடில், அதன் உயிர் பருகிடுமே; 38
* "கோயிற் றிறப்பு யோகம்—என்றோர்
கூட்டு வயித்தியரைக் கேட்டு வைப்போம்!
நோயின் கூறறிந்து—மருந்து
நோய்க்குக் கொடுத்தல் நலமாக்குமன்றே!" 39
ஏழெட்டுக் கனவான்கள்—கூடியிருந்
தேக மனதாக அந்த ரோகிதனையே
சூழச் சூழ நோக்கினரே;—பலவகை
சூழ்ந்து சொல்லி ஆழ்ந்து சிந்தித்தோய்ந்தனரே; 40

* The Temple entry Committee.

சாஸ்திரம் பார்வையிட்டார்—அவற்றில்
தகைவதும் ஒட்டுவதும் வகை தெரிந்து
வாஸ்தவங் கண்டு பிடித்தல்—மிகவும்
வருத்தமே; ஒன்றுக்கொன்று விருத்த மென்றார். 41
மதவைராக்கியங்களும்—வகுப்பு
வழக்குகள் வளர்த்திடும் சழக்குக்களும்
சதவருஷம் தரினும்—மாற்றுதல்
சாதிப்பதில்லை மனங்கள் பேதிப்பதில்லை 42
என்ற முடிவுகண்டு—மனங்களும்
இளைத்தனர், பலபேசிக் களைத்தனரே;
மன்றதில் அறிஞர்களை—அழைத்து
வகையறிந்ததில் குணம் மிகவுமில்லை; 43
பொதுஜன அபிப்பிராயம்—கேட்டனர்
"போகும்பிணி ஒன்றலது சாகும் பிணியாள்
அது நிஜம்" என்றனரே; பற்பலர்
"அப்படிப்போம், இப்படிப்போம்" என்று குறித்தார்;
வருஷங்கள் இரண்டு சென்ற—பிணியும்
மாறவில்லை, கூறறியமாட்டவில்லை; ஓர்
பரிஷித்து வேண்டுமென்றார்—அதுவும்
பலத்துக்கு வரவில்லை, நலத்துடனே 45
புறமதப் பிரசாரம்—என்னும்
புற்றெழுந்து பல அங்கம் பற்றித் தின்பதால்
அறவழிந் தொழிகின்றவே—இதற்கொரு
ஆயுர்வேத மருந்தில்லை, அந்யமுமில்லை; 46

(தொடரும்)

தென்னிந்திய தமிழ்ச்சங்கம் திருநெல்வேலி

தனித்தமிழ்த் தேர்வுகள்

இச்சங்கத்தார் கடந்த பதினோராண்டுகளாக நடத்தி வரும் தனித்தமிழ்த் தேர்வுகள் [(1) தமிழ்த்தேர்வு (2) இளந் தமிழ்ப் புலவர் (3) தமிழ்ப் புலவர் பொது (சிறப்பு) ஆகிய நால்வகைத் தேர்வுகளும்] இவ்யாண்டு ஆடித் திங்கள் ௧௩, ௧௪, ௧௫ (1937-ஜூலை 28, 29, 30) புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் சென்னை, ஆரணி, திருச்சி, திருநெல் வேலி, திருவனந்தபுரம், யாழ்ப்பாணம் ஆகிய சிறந்த தலைநகர் களில் தக்கார் மேற்பார்வையில் நடைபெறும். மேற்படி தேர்வுகளுக்கு விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

தேர்வுகட்குப் பலவகை அறிஞர்களும் விண்ணப்பித்து எழுதித் தேர்ச்சியும் பரிசும் பெற்றுச் சிறக்க வேண்டுமென்ற நோக்கத்தினுல், 1937 ஜுன்மீ 14௳ வரை (ஆனித் திங்கள் வரை) விண்ணப்பங்கள் அனுப்பலாம் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். தேர்வும் இரண்டு மாதங்கழிந்து நடைபெற இருத்தலால், இதுவரை விண்ணப்பிக்காதிருப்பவர்களும் விண்ணப்பித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிற தென்பதையும் அறிவித்துக்கொள்கின்றனன். தமிழாசிரியர்களும் பல மாணவர்களை அனுப்பித் தமிழ்க் கல்வியைப் போற்றி வளர்ப்பார்களாக.

பு. சி. புன்னைவனநாத முதலியார்.
அமைச்சர்

மாண்மிகு மன்னராம் ஆரும் ஜார்ஜ் மன்னருக்கும் அவர்தம் மனைவியார் எலிஸபெத் மகாராணியாருக்கும் சென்ற மேத்திங்கள் 12-ஆம் நாள் முடிசூட்டு விழா இலண்டனில் நடைபெற்றது. முடிமன்னரும் கோப்பெண்டும் நீடூழி வாழ்க.

* * *

அமெரிக்க நாட்டு மண்ணெண்ணெய் மன்னரும், உலகப்பெருங் கோடீஸ்வரர்களில் ஒருவருமான ஜான் டேவிஸன் ராக்ஃபெல்லர் என்ற வணிக மன்னர் சென்ற மேத்திங்கள் 23-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் இறக்கும்போது அவருக்கு வயது 98.

* * *

சென்னைத் திருவள்ளுவர் திருநாட்கழகத்தினர் 1937-ஆம் ஆண்டு விழாவை இராமநாதபுரம் ஜில்லா பாகனேரி தனவைசிய இளைஞர் சங்க அழைப்பிற்கிணங்கிச் சென்ற மேத்திங்கள் 22-ஆம் நாள் பாகனேரியில் நடத்தினுர்கள். கோவை வழக்கறிஞரும் பெரிய புராண உரைகாரருமாகிய திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமை தாங்க, திரு. R. P. சேதுப்பிள்ளை, B. A., B. L. அவர்களும், பண்டிதர் A. நடராஜபிள்ளை அவர்களும் திருவள்ளுவர் சிறப்பைப்பற்றி சொற்பொழிவாற்றினுர்கள். இவ்விழாவைப் பாகனேரியில் சிறப்புடன் நடத்திவைத்தற்கு முன்னின்று முயன்ற திரு. காசி விஸ்வநாதஞ்செட்டியார் அவர்களுக்குத் திருவள்ளுவர் திருநாட்கழகத்தினர்தம் நன்றி உரியதாகும்.



ஜான் டேவிஸன் ராக்ஃபெல்லர்.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு] ஈசுவர—ஆனி [பரல்-கக

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

திருவையாறு

ஓதியாரு மறிவாரில்லை யோதியுல கெலாஞ்
சோதியாய் நிறைந்தான் சுடர்ச்சோதியுட் சோதியான்
வேதியாகி விண்ணாகி மண்ணொடெறி காற்றுமா
யாதியாகி நின்றானு மையாறுடை யையனே.

பதவுரை :—

உலகெலாம் சோதியாய் நின்றானும்—(தனது சிறப்பியல்பில்) உலக முழுவதும் விளங்குகிற பேரொளியாய் நிற்கின்றவனும்

சுடர்ச்சோதியுட் சோதியான் (நின்றானும்)—சிவகரணமாய் மாறித் தூய்மையடைந்த ஆன்மாக்களுடைய சிந்தையில் ஒளிரும் ஆன்ம ஒளியோடு விரவிய அருளொளியினுள்ளே விளங்குகிற ஆனந்த ஒளியுடையவனாய் நிற்கின்றவனும்

விண் ஆகி மண்ணோடு எறிகாற்றும் ஆகி நின்றானும்—(பொது இயல்பில்) வான் ஆகியும், மண் ஆகியும், வீசுகின்ற காற்றாகியும் (தீ, நீர் ஆகியும்) நிற்கின்றவனும்

ஆதி ஆகி வேதி ஆகி நின்றானும்—(மேலே கூறப்பட்ட, அஞ்சு பூதங்கள்தோன்றுதற்கும், அப்பூதங்களாகிய உலகம் தோன்றுதற்கும்) நிமித்தகாரணமா யிருத்தலுடன் அவற்றை அறிந்து இயக்குகின்றவனுமாய் நிற்கின்றவனும்

ஐயாறு உடை ஐயனே—திருவையாற்றிலே திருக்கோயில் கொண்டருளியிருக்கின்ற தலைவனாகிய சிவபெருமானே ஆவர்;

யாரும் ஓதி ஓதி அறிவார் இல்லை—(இங்ஙனம் ஐம்பூதங்களையும் உலகினையுந் தோன்றச்செய்து அவற்றிற்குக் காரணமாய் அவற்றை

அறிவுடன் இயக்குகிறவன் ஆகிய) சிவபெருமானை மக்களெவரும் அருள் நூல்களைப் பலகாலோதினாலும் அறிதல் முடியாது (சாதனங்களை அநுட்டித்து அநுட்டித்தலின் பயனாகத் தங்களுள்ளே உண்டாகிற மெய்யுணர்வினால் மட்டும் உணர முடியும் என்றபடி).

விளக்கவுரை:—

உலகெலாம் சோதியாய் நின்றானும்—ஈண்டு உலகு என்றது சட உலகையும் அறிவுலகையும். சிவபெருமான் உலக முழுவதும் பேரொளியாய் நிறைந்து நிற்கிற ஒளி தூவெளி ஒளி (ஞானாகாச ஒளி)யாகும்; இது சுத்தவெளி ஒளி, வெட்டவெளி ஒளி, சிற்பரவெளி ஒளி, சிதம்பர ஒளி, வியோம ஒளி முதலிய பெயர்களாலும் அருள் நூல்களிற் கூறப்படுகின்றது. இந்தப் பேரொளியானது மலமறைப்பு நீங்கிய அகக்கண்ணுள்ளவர்களுக்கு மட்டும் புலப்படும். மலமறைப்புடைய நம்மனோர்க்குப் புலப்படாது.

"அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்கு
இருட்கண்ணே பாசத்தார்க் கீசன்"

என்ற சிவஞானபோதம் 11-வது சூத்திர வெண்பாவில் இவ்வுண்மை கூறப்பட்டிருக்கிறது. நிற்கின்றானும் என முக்காலத்திலு மொத்தியல நிகழ்காலத்தாற் கூறற்பாலது தெளிவுபற்றி 'நின்றானும்' என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது.

சுடர்ச்சோதியுட் சோதியான் நின்றானும்—சுடர்ச்சோதி என்பது சுடர் ஆகிய சோதி; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. சுடர் என்பது ஆன்மசிற்சத்தி ஒளியையும் சோதி என்பது அந்த ஆன்ம சிற்சத்தி ஒளி சிவகரணமாய் மாறித் தூய்மை அடைந்தபொழுது அதனோடு வேறற ஒன்றுபட்டுவிளங்கும் அருட்சத்தியினொளியையும் குறிக்கின்றன. "சாதியா நான்முகனும் சக்கரத்தானுங் காணாச் சோதியாய்ச்சுடரானார் திருச்சோற்றுத் துறையனாரே" என்று திருச்சோற்றுத்துறை தேவாரம் 9-வது பாட்டில் திருநாவுக்கரசு அடிகள் சுடரையும் சோதியையும் கூறியிருத்தல் நோக்குக. ஒளியிழந்த கண், மாசு நீங்கியவழித் தன்னொளியையும் தன்னொளியுடன் வேறறக்கலந்து நிற்கும் (கதிரவன்) ஒளியையும் ஒருங்கே பெற்றாற்போல மலத்தினால் அருளொளியிழந்த ஆன்மா மல மறைப்பு நீங்கியவழி தனது சிற்சத்தி ஒளியையும் அதற்கு உள்ளொளியாய் விளங்கும் அருட்சத்தியினொளியையும் ஒருங்கே பெறுகின்றது என்பார், சுடர்ச்சோதி என்றார். ஆன்மசிற்சத்தியினொளியானது அருட்சத்தியினொளியை நோக்க அதனுளடங்குந் தன்மையதான சிறிய ஒளியாயிருத்தலால் அடிகள் அதனைச் சுடர் என்றும் அந்த ஆன்மசிற்சத்தியினொளியைத் தனக்குளடங்கச் செய்யும் அருட்சத்தியினொளி பேரொளியாயிருத்தலால் அதனைச் சோதி என்றும் அடிகள் கூறினார். மாணிக்கவாசக அடிகள்

"பரஞ்சோதி—நவமாய செஞ்சுடர் நல்குதலும்' (238) என்று கூறுதல்காண்க. ஆன்மசிற்சத்தி ஒளியும் அருட்சத்தி ஒளியும் ஒன்றென்னும்படி வேறறக்கலந்து நிற்றலால் 'சுடர்ச் சோதி' என்றார். சோதியான் என்பது அருளொளிக்கு உள்ளொளியாய் விளங்குகின்ற இன்ப ஒளியுடைய சிவபெருமானைக் குறிக்கின்றது "சுடரிழந்த—துங்கவிழிச்சோதியு முட்சோதியும் பெற்றாற்போல்—சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே" என்று சிவஞானசித்தியார் 8-வது சூத்திரம் 38-வது பாட்டு ஈற்று அடிகள் கூறுதல் காண்க.

நின்றானும் என்ற வினைமுற்றுச் சொல்லை 'சோதியான்' என்ற சொல்லின்பின் சேர்க்க.

விண் ஆகி மண்ணோடு எரிகாற்றுமாகி நின்றானும்—இனம்பற்றி இதில் கூறப்படாமலிருக்கிற தீ, நீர், பூதங்களும் சேர்த்து உரை கூறப்பட்டது.

ஆதி ஆகி வேதி ஆகி நின்றானும்—ஆதி என்பது காரணம். பூதங்களுக்கும் பூதங்களாலாகிய உலகிற்கும் ஆதி என்றதனால் சிவபெருமான் உலகிற்கு நிமித்தகாரணனாயுள்ளான் என்பது கூறப்பட்டது. வேதி=அறிவு. வேதியாகி என்றதனால் அவன் பூதங்களால் உலகிற்கு ஆவன அறிந்து அவற்றை இயக்குகின்றான் என்பதும் அறிவுலகினை அறிவித்து இயக்குகின்றான் என்பதும் கூறப்பட்டன. இவை மண்ணிற் றிண்மைவைத்தல் நீரிலின் சுவைவைத்தல், தீயில் வெம்மைசெய்தல் முதலியவை.

ஐயாறு உடை ஐயனே—ஐயன்—தலைவன் இங்ஙனம் சிவபெருமான் நிற்றல் உலகினைக் காக்கும் தலைமைபற்றி என்பார் ஐயாறு உடைய ஐயன் என்றார். ஏ-தேற்றம். அசை எனினும் பொருந்தும்.

யாரும் ஓதி ஓதி அறிவார் இல்லை—எத்துணை ஒருவர் ஓதினாலும் அவர் அவ்வோதுதல்பற்றிச் சிவபெருமானது சிறப்பியலை அறிய முடியாது என்பார். "யாரும் ஓதி ஓதி அறிவாரில்லை" என்றார். இல்லை என்பது மாட்டாமையைக் குறிக்கிறது. ஓதி ஓதி என்பது பலகாலோதுதலைக் குறிக்கிறது. இப்பாட்டில் ஓதியாருமறிவாரில்லை என்ற பகுதியில் அறிவார் எழுவாய், இல்லை பயனிலை. ஏனைப்பகுதிகளில் பதவுரையிற் கண்டபடி நான்கு எழுவாய்கள், ஐயன் என்ற பயனிலையைக்கொண்டு முடிகின்றன.

"ஓதியே கழிக்கின்றீர்க ளுலகத்தீ ரொருவன்றன்னை
நீதியால் நினையமாட்டீர் நின்மல னென்றுசொல்லீர்"

என்று திருநாவுக்கரசு அடிகள் திருச்சோற்றுத்துறைத் தேவாரம் 9-வது பாட்டில் இக்கருத்தைக் கூறுதல் காண்க.

ஆன்மாக்கள் சிவபெருமானது சிறப்பியலை அவன் அருளொளியோடு அத்துவிதமாய்க் கலந்துநின்று அவனைத் தம்முள்ளே உணர வேண்டுமே அன்றி ஓதி அறிதல் முடியாது என்று அடிகள் கூறினர்.

சென்ற சித்திரைத்திங்கள் செந்தமிழ்ச் செல்வி க-ஆம் பரலில் உரை கூறப்பட்ட "செற்றதோர்மனமொழிந்து" என்ற முதற்குறிப்புத் தேவாரத்தில் மூன்று ஒளிகள் கூறப்பட்டிருத்தல்போல இந்தத் தேவாரத்திலும் உலகெலாஞ் சோதியாய் நிறைந்தான் என்றதனுல் தூவெளி ஒளியும் சுடர்ச்சோதியுள் என்றதனுல் ஆன்ம சிற்சத்தியினொளிக்கு உள்ளொளியாக விளங்கும் அருட்சத்தியின் ஒளியும் சோதியான் என்றதனுல் சிவபெருமானுடைய ஆனந்த ஒளியும் கூறப்பட்டிருத்தலை நோக்கி உண்மை அறிக.

இம் மூவொளிகளில் தூவெளி ஒளிக்குள் பாசமும், அருள் ஒளிக்குள் பாசமும் பசுவும், ஆநந்த ஒளிக்குள் பாசமும் பசுவும் அருளும் முத்திகாலத்தில் ஒடுங்குவன ஆகும்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

திங்கள்

வான நூலளவைப்படி வரையறுத்துக் காணப்பட்டிருந்த வழிநிலையிலிருந்து திங்கள் விலகிச்செல்கிற தென்று கிரீனிச்சிலிருக்கும் அரசாங்க வானநூற் பேரறிஞர் டாக்டர். எச். ஸ்பென்ஸர் ஜோன்ஸ் கூறுகின்றார்.

வரலாற்றுப் பகுதி: History & Biography

உவில்லியம் மர்டாக் (William Murdock)

[திரு. N. குழந்தைவேலன் அவர்கள் B. A.]

உவில்லியம் மர்டாக் என்னும் பேரறிஞர் காஸ் விளக்கு (gas light) என்னும் ஆவி விளக்கைக் கண்டுபிடித்தவர். இவர் 1754-ஆம் ஆண்டில் ஸ்காட்லண்டு (Scotland) நாட்டில் ஓர் ஏழைக் குடியானவன் வீட்டிற் பிறந்தார். இவர் இளமையில் மாடு மேய்ப்பது வழக்கம். சிறு வயதிலேயே இவருக்குப் புதிய கருவிகள் அமைப்பதில் மிகுந்த விருப்பம் உண்டு. இவர் மாடு மேய்க்கும் இடத்திற்கு அருகிலிருந்த ஒரு குகையில் எந்நேரமும் புதிய விளையாட்டுக் கருவிகள் செய்துகொண்டிருப்பார். இவர் மரத்தினுள் பொறிகளையமைத்து ஒரு குதிரை செய்தார். அஃது அசைந்து ஓடுவது கண்டு சுற்றுப்புறங்களிலுள்ள மக்கள் வியப்புற்றனர்.

மர்டாக்கின் தந்தையார் ஒரு பொறிச்சாலையில் (இயந்திர சாலையில்) வேலைபார்த்து வந்தார். இவர்தம் தந்தையாருக்கு உதவியாகச் சிற்சில வேளைகளில் இவர் அப்பொறியினைச் செலுத்துவதுண்டு. ஜேம்ஸ் உவாட் (James Watt) என்னும் பேரறிஞரைப்பற்றியும் அவர் நீராவியின் ஆற்றலைக் கண்டுபிடித்ததைப்பற்றியும் இவர் அடிக்கடி கேள்வியுற்றிருந்தார். பர்மிங்காம் (Birmingham) நகரில் ஜேம்ஸ் அமைத்திருந்த புகழ்பெற்ற தொழிற்சாலையில் தாம் எவ்வாறாயினும் வேலை பெறவேண்டுமென இவர் உறுதி செய்துகொண்டார். அங்ஙனமே ஒருநாள் மர்டாக் தம் வீட்டை விட்டகன்று அத்தொழிற்சாலையை அடைந்தார். ஜேம்ஸ் அவ்வமயம் அங்கு இல்லை. அவரது கூட்டாளியான போல்ட்டன் (Boulton) மட்டும் இருந்தார். மர்டாக் அவரிடம் சென்று தம்மை வேலைக்கு அமர்த்திக்கொள்ளுமாறு வேண்டினார். போல்ட்டன் மர்டாக்கின் தொப்பி புது மாதிரியாகச் சாயம் ஏற்றி இருந்தது கண்டு அத்தொப்பி எதனால் செய்யப்பட்டதென வினவினார். மர்டாக் அது மரத்தால் செய்யப்பட்டதென்றும் அதைத் தாமாகவே புதிய முறையிற் செய்ததாயும் கூறினார். போல்ட்டன் இவர்தம் அறிவு நுட்பத்தைக் கண்டு வியந்து உடனே தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்திக்கொண்டார்.

மர்டாக் தம்முடன் வேலை பார்த்து வந்த ஏனைய தொழிலாளர்களைக் காட்டிலும் சுறுசுறுப்பிலும் திறமையிலும் தலைசிறந்து விளங்கினர். இவரது விடாமுயற்சியின் பயனாய் அத்தொழிற்சாலை பல துறைகளிலும் முன்னேற்றமடைந்தது. இவர் நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கமுடையவராதலின் தமது ஆராய்ச்சியால் விளைந்த பெருமைகள் அனைத்தையும் இவர் தம் முதலாளிகளுக்கே விட்டுவிட்டார். முதலாளிகளும் மனமுவந்து இவரைக் கார்ன்வால் (Cornwall) என்னுமிடத்திலுள்ள சுரங்கப் பொறிகளின் மேற்பார்வையாளராக நியமித்துப் பெருமைப்படுத்தினர்.

மர்டாக் தமது ஒய்வு நேரங்களைப் புதிய கருவிகள் கண்டுபிடிப்பதில் செலவழித்து வந்தார். நிலக்கரியை எரிப்பதால் உண்டாகும் ஆவியை (gas) எவ்வாறு பயன்படுத்தலாமென இவர் அல்லும் பகலும் ஆராய்ச்சி செய்து வந்தார். மர்டாக் ஓர் ஏனத்தில் நிலக்கரியை வைத்துக் காய்ச்சி அதினின்றும் வரும் கரிவளியை ஒரு பெரிய கொப்பரையில் நிரப்பினர். மீண்டும் அதனைக் கொப்பரையிலிருந்து ஒரு சிறு குழாயின் வழிச் செலுத்தியபோது அக்குழாயின் முனையிலுள்ள சிறு கண்களின் வாயிலாக ஆவி வெளிக்கிளம்பிற்று. இம்முனையில் தீப்பொறியைக் காட்டியவுடன் ஆவி மிகுந்த ஒளியுடன் எரியத் துவங்கிற்று. இதுவே மர்டாக்கினல் 1794-ஆம் ஆண்டில் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப் பெற்ற ஆவி (காஸ்) விளக்கு (gas light) ஆகும்.

மர்டாக் தமது வீடு முழுவதும் குழாய்கள் அமைத்து அவற்றின் வழியாய்க் கரிவளியைச் செலுத்தி வீட்டின் எல்லா அறைகளிலும் ஆவி (காஸ்) விளக்கு வேண்டும்போது எரியும்படி செய்தார். இவ்வியத்தகு செயலைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடினர். இதுவுமன்றி இவர் இரவில் வெளிச் செல்கையில் கையிற் கொண்டுபோக ஆவி விளக்கு ஒன்று செய்தார். சின்னட் கழித்து இவர் பர்மிங்காம் நகருக்குத் திரும்பிச் சென்ருர். ஆங்கு இவரது முதலாளிகளின் வீடுகளையும் ஆவி விளக்குகளால் ஒப்பனை செய்தார். 1802-ஆம் ஆண்டில் இங்கிலாந்தும் பிரான்சும் ஒற்றுமைப்பட்டபோது அவ்விழாவைக் கொண்டாடுவதற்கு எங்கே பார்த்தாலும் ஆவி விளக்குகள் போடப்பட்டன. மக்கள் அவற்றை வாணவேடிக்கைகள் போன்று கண்டு களித்தனர். மர்டாக்கின் முதலாளிகள் அவரது திறமையைப் போற்றிப் புகழ்ந்து, தங்கள் தொழிற்சாலையிலும் ஆவி விளக்குகள் அமைக்குமாறு ஏற்பாடு செய்தனர். காஸ் விளக்கு என்னும் ஆவி விளக்கு

மிக்க அழகாயும், ஒளி மிகுந்ததாயும், மாசற்றதாயும் இருந்ததால் அஃது எங்கே பார்த்தாலும் விரைவாகப் பரவலாயிற்று.

ஆயினும் தெருக்களில் ஆவி விளக்குகள் போடுவதற்கு மக்கள் உடன்படவில்லை. சிறந்த அறிவாளிகளும் கூட வெளிச்சத்தைத் தெருக்களில் குழாய் மூலம் எவ்வாறு அனுப்பமுடியும் எனக் கூறி ஏளனம் செய்தனர். மற்றும் சிலர் மார்டாக் கதிரவனையும் திங்களையும் செதுக்கிக் குழாயில் அடைத்துவைக்க முயல்கின்றனரென நகையாடினர். மார்டாக் சிறிதும் ஊக்கம் குன்றாது வருந்தியுழைத்து 1814-ஆம் ஆண்டில் வெஸ்ட்மினிஸ்ட்டர் (Westminster) பாலத்தின் மேல் காஸ் விளக்குகளை எரியச் செய்தார். குழாயினுள் தீயை அடைத்து வைத்திருப்பதாகவும், அதைத் திறந்தவுடன் அத்தீ வெளிக் கிளம்புவதாகவும் மக்கள் எண்ணி இருந்தனர். இதன்பின் ஆங்கிலப் பாராளுமன்றத்திலும் (Parliament) காஸ் விளக்குகள் அமைக்கப்பெற்றன. அங்கு முதன் முதலாகக் காஸ் விளக்குப் போடுகையில் குழாய்களைச் சுவரோரங்களில் வைக்கக் கூடாதென்றும், அதனால் கட்டிடம் ஒருவேளை தீப்பிடிக்க நேரிடும் என்றும் பலர் வழக்காடினர். மன்றத்தின் உறுப்பினர்கள் காஸ் விளக்குக் குழாய்கள் மிகுந்த சூட்டோடு இருக்குமென வெண்ணித் தம் கைகளில் தோல் மூடிகள் (gloves) அணிந்து அவற்றை மெள்ளத் தொட்டுப் பார்த்தனர் என்றும் அவை மிகவும் குளிர்ந்திருந்தது கண்டு இறும்பூதெய்தினரென்றும் கூறப்படுகின்றன.

நாளடைவில் வெஸ்ட்மினிஸ்ட்டர் நகரின் தெருக்களிலெல்லாம் காஸ் விளக்குகள் போடப்பட்டன. விளக்கு ஏற்றும் இப்புதுமையைக் காண மாலை நேரங்களில் மக்கள் திரள் திரளாய்ச் சென்றனர். விளக்கு ஏற்றுபவர்களின் பின்னால் மக்கள் கூடிச் சென்று வேடிக்கை பார்க்கும் ஆவலினால் அவர்களது வேலைக்கு இடையூறு செய்தனர். இதனால் அவ்வேலைக்காரர் பலர் வேலை நிறுத்தம் செய்யும்படி நேர்ந்தது. சில ஆண்டுகளில் காஸ் விளக்குகள் எல்லா நகரங்களிலும் பரவலாயின. மார்டாக்கினால் கண்டுபிடிக்கப் பெற்ற காஸ் விளக்கு தற்காலத்தில் மிகச் சிறந்த முறையில் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. எரியும் கரிவளியை ஒரு வகைத் திரியில் (Mantle) பாயச் செய்தால் அது மிகுந்த வெண்மையான பெரிய ஒளியை உண்டாக்குகின்றது. இவ்வொளி நூற்றுக்கணக்கான மெழுகுவத்தி விளக்குகள் ஒன்றாய் எரிவதனால் உண்டாகும் ஒளிக்கு ஒப்பாக இருக்கிறது. இதனாற்

றுன் இக்காலத்தில் மின்சார விளக்கு வந்த பிறகுங் கூட ஆவி விளக்கு மிகுதியாகப் பயன்படுகிறது.

மர்டாக் தாம் கண்டுபிடித்த இவ்வியப்பான விளக்கைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டிருந்தால் கோடிக்கணக் கான பொருள் சேர்த்திருக்கலாம். "இவர்யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் பரந்த நோக்குடையவராக லின் காஸ் விளக்கு மக்களனைவர்க்கும் பயன்படுமாறு உவந்து அளித்துவிட்டனர். மக்கள் பல்வேறு இடங்களில் காஸ் விளக் குக் கடைகள் வைத்துத் திரண்டபொருள் ஈட்டினர். பேரறி வாளரான மர்டாக்கின் செல்வம் ஊருணி நீர் நிறைந்தாற் போன்று உலகிற்கு எளிதிற் பயன்படுவதாயிற்று. இவர் பர்மிங்காம் தொழிற்சாலையிலேயே நீண்டகாலம் தொண்டு ஆற்றி 1839-ஆம் ஆண்டில் தாம் கண்டறிந்த ஒளியிற் கலந்தனர்.

அமெரிக்க அகத்தியர்

கிறீன் வைத்தியர். (Dr. Samuel Fish Green)

[வேள்ளவத்தை திரு. குல. சபாநாதன் அவர்கள்]

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு கரு பரல் கூ-ல் மயிலே. சீனி வேங்கடசாமி அவர்கள் கிறீன் வைத்தியரைப்பற்றி யெழுதிய வரலாறு நன்று யிருக்கின்றது. இந்தியாவிலுள்ள வரலாற்று ராய்ச்சி வல்லுநர் ஈழமண்டலத்தில் வைத்தியத் தொண்டு டன் தமிழ்த் தொண்டும் ஆற்றிய அறிஞரைப்பற்றிய குறிப்புக் களை அரிதின் முயன்று சேர்த்தெழுதியதனை யாம் பாராட் டாதிருக்க முடியாதன்றோ? சாமி அவர்கட்குத் தமிழகம் மிக வும் கடமைப்பட்டுளதென்பது கூறாதே யமையும். "கிறிஸ்தவ மும் தமிழும்" எனும் புதியதோர் துறையில் தமிழின் சிறப்பை யெடுத்துரைக்கும் இவ்வறிஞர்க்கு எமது நன்றியுரியதாக. இவ்வறிஞரும் வைத்தியர் அவர்களின் வரலாற்றை முற்றாக எழுதாது விட்டமையானும், இவரியற்றிய சில நூல்களின் பெயரே தமக்குத் தெரியவில்லையெனக் குறிப்பிட்டமையா னும், "ஈழமண்டலப் புலவர் வரலாறு" எனும் நூலுக்கு யாம் ஈட்டிய குறிப்புக்களி னுதவியொடு ஒருவாறு எழுத முயல் கின்றாம்.

இற்றைக்கு ஏறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன்னரே அமெரிக்க இலங்கை மிஷன் தமிழிலும் ஆங்கிலத்திலும் அரும்

பெரும் நூல்களை வெளியிட்டுத் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந் துளதென்பது யாவரானும் மறுக்க முடியாததோ ருண்மையாகும். இத்தகைய தொண்டினை ஈழத்து மக்களே மறந்துவிட்டன ரெனின், இந்தியாவிலுள்ளார் இதனை யுறியா திருத்தலில் வியப்பொன்றுமில்லை. அமெரிக்க இலங்கை மிஷன் வெளியிட்ட நூல்களை ஈழத்து மக்கள் ஓரிடத்து ஈட்டிவைத் திருப்பின் இற்றை ஞான்று அவை யாவும் விலைமதித்தற் கரிய பெரு நிதியாகவும், மிஷனின் தொண்டினை இற்றைப் பொழுதிலும் நினைவூட்டுங் கருவியாகவும் விளங்கும். வைத்திய மிஷனரியாக அமெரிக்காவிலிருந்து இலங்கைக்குவந்த கிறீன்* ஐயர் அவர்களின் வரலாற்றை யறிதல், வைத்தியத் துறையில் தமிழின் வளர்ச்சியை யறிதலாகு மாதலின், தமிழகத்திற்குப் பயன்படுமாறு 'செல்வி' வாயிலாகக் குறிப்பிட விரும்புகின்றும்.

இவர் ஊர் கிறீன் குன்றம். தந்தையார் பெயர் உவில்லியம் எலிசா கிறீன்; தாயார்—ஜீலியா பிளிம்ரன். கி. பி. 1822ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 10ம் நாட் பிறந்தவர். சிறிது காலம் எழுத்தாளராக வேலை கொண்டமர்ந் திருந்தாரேனும் அவரது உளம் வைத்தியத்தையே நாடி நின்றது. அங்ஙனமே இவருடைய கருத்து நிறைவேறி வைத்திய மாணவனுகி 1845ம் ஆண்டு வைத்தியப் பட்டம் பெற்றார். அடுத்த வாண்டில் பல மிஷனரிமார் இந்தியாவுக்குத் தொண்டாற்றும் நோக்குடன் செல்லவிருப்பதை யறிந்து தாமும் அப்பணியில் ஈடுபட விரும்பி அமெரிக்க கழகத்திற்குத் தெரிவித்தார். கழகம் இவரை இலங்கைக்கு வைத்திய மிஷனரியாக அனுப்பத் தீர்மானித்தது. இதனைக் கேள்வியுற்ற ஐயர் மிக மகிழ்வுற்று, இந்தியாவிலிருந்து மீண்ட ஒரு மிஷனரியிடம் தமிழ் கற்கத் தொடங்கிவிட்டார். முன்னரே இலத்தீன், பிரெஞ்ச், கிரீக், ஜேர்மன் முதலிய மொழிகளைக் கற்றுள்ளார். கப்பலிலும் தமிழைக் கற்பதில் அதிக நேரம் மிக்க ஊக்கமெடுத்து வருவார். 1847ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 20ம் நாள் புறப்பட்டு புரட்டாசித் திங்கள் 20ம் நாள் இலங்கை வந்து சேர்ந்தார். வந்தும் தமிழ் கற்பதில் ஊக்கமுடையராகி எட்டுத் திங்களுள் யாவர் தமிழிற் கூறினும் விளங்கிக்கொள்ளும் ஆற்றலுடையராயினர். வட்டுக்கோட்டையில் செமினரியோடு (Vaddukoddai Seminary) அமைக்கப்பட்ட வைத்தியசாலையிற் சிறிது காலமிருந்தார். பின்னர் 1848-ஆம் ஆண்டு மிஷனில் நடந்தேறிய தீர்மானப்படி

*[மேனாட்டுக் கிறிஸ்தவ மிஷனரிமாரை "ஐயர்" என இலங்கையில் அழைப்பது வழக்கம்.]

இவ்வைத்தியசாலை மானிப்பாயில் நிறுவப்பட்டது. அதற்கு ஐயர் அவர்களே தலைவராக விருந்தார். வைத்திய சாலையிலிருக்கும் பொழுது அங்கு வரும் நோயாளிகளுடன் தமிழில் உரையாடத் தொடங்கிய சிறிது காலத்திற்குள் சமயபோதனை செய்யக்கூடிய தமிழறிவைப் பெற்றுவிட்டார். சத்திர வைத்தியத்தில் மிகவும் கைதேர்ந்தவராதலின், இவரது புகழ் ஈழ மண்டலம் முற்றும் விரைவிற் பரவிற்று. 1859-ஆம் ஆண்டு இவரால் வைத்தியஞ் செய்யப்பட்டோர் தொகை 2217 எனின், இவருடைய வைத்தியச் சிறப்பினை யெடுத்தியம்பவும் வேண்டுமோ? ஐயர் அவர்கள் தமிழில் நன்கு உரையாடப் பழகிய தோடமைவுறாது தமிழ்ப் பழமொழிகளை அடிக்கடி உரிய விடங்களில் ஆளுவதில் தமிழர்களினும் ஆற்றல் மிக்குடையராயினர். புதிய சொற்கள், வைத்தியச் சொற்கள், முதலியவற்றைக் குறித்துக் கொள்வது இவருடைய வழக்கம்.

ஐயர் அவர்கள் தாமாக வைத்தியஞ் செய்துவந்ததோடு மாணவர்களைச் சேர்த்து வைத்திய முறைகளைக் கற்பித்தும் வந்தார்கள். அங்காதி பாதம், சத்திர வைத்தியம், மருத்துவம் முதலிய பகுதிகளில் அவர்களை நன்கு பயிற்றுவித்து, யாவரும் தமது மாணவர்களில் நம்பிக்கைவைத்து வைத்தியஞ் செய்விக்கும் தகுதிவாய்ந்தவர்களாக்கிவிட்டார். இலங்கையில் அக்காலத்தில் வைத்திய கல்லூரியின்மையால் ஐயர் அவர்களிடம் கற்றவர்களே வைத்தியர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஐயர் அவர்களே மேனாட்டு முறையை இலங்கையில் விளக்கமுறச் செய்தவரும், வைத்திய கல்லூரியின்பாற்பட்டதொன்றை முதன்முதல் நிறுவியவருமாவர். ஐயர் அவர்களின் வேண்டுகோட்படி, இவருடைய மாணவருள் ஒருவராய டான்வோத் பெரியதம்பி யவர்கட்கு அமெரிக்க வைத்திய கல்லூரி எம். டி. (M. D.) பட்டத்தை யளித்துப் பெருமைப்படுத்தியதெனின், ஐயர் அவர்களிடம் கற்ற மாணவர்களின் தகைமை வெள்ளிடைமலை. ஐயர் அவர்கள் தம் மாணவர்கட்கு வைத்திய முறைகளை முதலில் ஆங்கில மொழியிற் படிப்பித்து வந்தார். அம்முறைகளைத் தாய்மொழியிற் கற்பித்தால் இலகுவில் விளங்கிக் கொள்வார்களென் றெண்ணித் தமிழில் படிப்பிக்க முயன்றார். முயன்றபொழுது அவற்றிற்கேற்ற நூல்கள் தமிழில் இல்லாப் பெருங்குறையை யுணர்ந்தார். இம் மாணவர் பொருட்டு வைத்திய நூல்களுட் சிலவற்றைத் தமிழில் மொழி பெயர்க்கத் தொடங்கினார்கள்.

ஐயர் அவர்கள் அங்காதிபாத சுகரணவாத உற்பாலன நூலை மொழி பெயர்த்து அதனை யச்சிடுஞ் செலவை இலங்கை

யரசினரைத் தரும்படி 1856-ல் வேண்டுதல் செய்தபொழுது, ஆங்கிலந் தவிர்ந்த ஏனைய மொழிகளில் வெளியிடும் நூல்களுக்கு ஆதரவளித்தல் இலங்கைத் தேசாதிபதியவர்களின் கொள்கைக்கு முற்றும் முரணுகுமென அரசினர் விடையிறுத்தனர். ஐயர் அவர்கள் இத்தகைய விடையினை எதிர்பார்த்திருந்தவராதலின், தமது நூலைச் சென்னையில் அச்சிட ஒழுங்கு செய்தார். அடுத்த வாண்டிற்றுனே இந்நூல் பல படங்களுடன் வெளிவந்தது.

ஐயர் அவர்கள் தம்மிடம் முன்பு கற்ற சில மாணவர்களையும் நூல்கள் மொழி பெயர்த்தற்கு உதவியாகக் கொண்டனர். திரு. சாப்மன், டான்வோத், எவட்ஸ் முதலிய மாணவர் மிக்கவுதவி புரிந்தனர். சில சமயங்களில் இவர்கள் மொழி பெயர்த்தனவற்றை மீட்டும் வேறு வகையாகத் தாம் மொழிபெயர்த்து அச்சிட்டாலும் தமது மாணவர்களின் பெயரையே மொழி பெயர்ப்பாளராகக் குறிப்பிட்டுத் தாம் மேற்பார்வை செய்ததாக மட்டும் குறிப்பிடும் வழக்க முடையவர். இதனுல் மொழி பெயர்த்தலில் மாணவர்கட்கும் ஊக்கமுண்டாக்கி வந்தனர்.

ஐயர் அவர்கள் ஒரு நூலை மொழிபெயர்க்குமுன் அதன் கணுள்ள கடினமான சொற்களைத் தெரிந்தெடுத்து அவற்றிற்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைத் தமது மாணவர்களுடன் நன் காராய்ந்து குறித்துக் கொள்வர். பின்னர் இச்சொற்களை அகர வரிசைப்படுத்தித் தொகுத்து அவற்றிற்கேற்ற ஆங்கிலச் சொற்களையும் எழுதி ஒவ்வொரு நூலுக்கும் ஒவ்வோரகராதி தொகுத்து வைத்துக் கொள்வர். இங்ஙனம் தொகுத்து நூல் முற்றினையும் மொழி பெயர்த்த பின்னர் சிறந்த சொற்கள் அகப்படின், வேண்டிய விடங்களில் இவற்றையே பயன்படுத்துவர். அகராதி ஒவ்வொரு நூலுக்கும் தொகுத்து வந்ததன் நோக்கம் பின்னர் "தமிழ்—ஆங்கில வைத்திய அகராதி" யெனும் பெயருடன் மிக விரிவான ஓர் வைத்திய அகராதியினை வெளியிட வேண்டு மென்பதேயாம். இங்ஙனம் மேனுட்டு வைத்திய முறைகளைத் தமிழுக்களித்த வள்ளலை யாம் அகத்திய முனிவரின் அவதாரமெனவே பாராட்டல் வேண்டும்.

ஐயர் அவர்கள் தம்மிடம் கற்ற மாணவர்கள் வைத்தியர்களாக ஊருக்குட் புறப்படும் பொழுது கூறும் அறிவுரை மூன்று. அவையிற்றை இக்கால வைத்தியரும் உளத்திற் பதிக்குமாறு குறிப்பிடுகின்றும். (1) கற்றலை நிறுத்தாதே. (2) நல்லொழுக்க முடையவனுயிரு. (3) உனது மதத்தைக் கைவிடாதே.

இந்தியாவிற்றும் புகழ் நிறுவிய டாக்டர் மேடொக் அவர்கள் கிறீன் ஐயரின் உதவியைக் கொண்டே கலைநூல்கள் பலவற்றைத் தமிழில் வெளியிட்டனர். வைத்தியச் சொற்களைப் பற்றியறிய விரும்பின் ஐயர் அவர்கட்கே எழுதுவார். மொழி பெயர்ப்பாளர் அறிந்து கொள்ளவேண்டிய பல கருத்துக்கள் இவ்விருவரும் எழுதிய கடிதங்களில் பொதிந்திருக்கின்றன. டாக்டர் அவர்கள் எழுதிய கடிதமொன்றில், "பிற்காலத்தவர் இத்துறையில் நீங்கள் செய்த பெருந்தொண்டின் பயனை யனுபவிப்பார்கள். கலைச்சொல்லாக்கம் இன்பந்தருவதன்றெனினும் முக்கியமான தொன்றாம்" எனவும்.

"தங்கள் நூல்களில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பெரும்பாலான நூற்களிற் காணப்படும் கடினமான நடை, இல்லாதிருத்தல் மகிழ்ச்சிக்குரியதே. சிற்சில விடங்களிற் காணப்படும் கடினமான சொற்களையும் எளிதான சொற்களாக மாற்ற முயலுமாறு வேண்டுகின்றேன்" எனவும் ஐயர் அவர்களின் தொண்டைப் பலபடப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

1854-ம் ஆண்டிலும் அடுத்தவாண்டிலும் யாழ்ப்பாணத்திலே கொடிய பேதி நோய் பரவிற்று. மக்கள் பட்ட பெருந்துன்பத்திற்களவில்லை. சில இல்லங்களில் இறந்தவர்களை யெடுத்துச் செல்லவே ஆட்களில்லாதொழிந்தனர். இக்கொடிய நோய் பரவி யாழ்ப்பாணம் முற்றும் துன்பக்கடலுள் ஆழ்ந்துகிடந்த பொழுது ஐயர் அவர்கள் தனது உயிரைப் பெரிதென மதியாது பல்லாற்றானும் உதவிபுரிய முன்வந்தார். அக்காலத்திற்றான் இவருடைய வீரமும் வைத்தியத்தொண்டும் ஒருங்கு மிளிர்ந்தன. நோயணுகாது தப்பித்துக்கொள்ளும் முறைகளையும், நோய்வாய்ப்பட்டார் சுகமடைவதற்குரிய முறைகளையும், "பிராணோபகாரி" யெனும் நூலில் விரிவாகக் கூறி, அதன்பிரதிகளை யாவருக்கும் வழங்கினர். அரசாட்சியினரும் இவ்வீரரைக் கொண்டே துண்டுப் பத்திரங்கள் வெளியிட்டு நோயைத்தடுக்க முயற்சித்தனர். அக்காலத்தில் வடமாகாணத்துஏசண்டாய் (Government Agent) இருந்த டைக் (Dyke) துரையவர்கள் ஐயர் அவர்களின் பெருந்தொண்டினையும்வைத்தியத்தினையும் நன்கு பாராட்டினார்கள். அரசினரும் இவ்வேசண்டு வாயிலாக ஐயர் அவர்கட்கு ஆண்டுதோறும் 1000 ரூபா நன்சொடையளித்து வந்தனர். சிலவாண்டுகட்குப் பின்னர் 2000 ரூபா அளித்து வந்தனர்.

* 1855, 1856-ஆம் ஆண்டென்பர் சில யாழ்ப்பாணச் சரித்திராசிரியர்.

ஐயர் அவர்கள் 1875ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் ரு-ம் நாள் அமெரிக்கதேயஞ் சென்று நாலாண்டுவரை தங்கினர். 1862ம் ஆண்டு வைகாசி உஉம் நாள் மாகிறற் என்னும் நங்கையை மணமுடித்து அத்திங்கள் உகூ-ம் நாளன்று மீட்டும் யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டு ஐப்பசி ககூ-ம் நாள் வந்து சேர்ந்தார். ஐயர்அவர்கள் தம் இல்லக்கிழத்தியுடன் யாழ்ப்பாணம் வந்தபொழுது ஊரவர்கள் மகிழ்வுற்று அவர்களிருவரையும் சிறப்பாக வரவேற்ருர்கள். மீட்டும் வைத்தியத்தொழிலிலும் மாணவர்களைப் பயிற்றுவதிலும் ஐயர் அவர்கள் ஈடுபட்டார்கள். அக்காலத்திலிருந்த ஏசண்டரின் வேண்டுகோட்கிணங்கித் தமது வேலையுடன் ஆபத்துக்குதவிச் சங்கவைத்தியசாலை மேற்பார்வையாளராகவும் கடமை புரிந்துவந்தார். ஐயர் அவர்கள் மீட்டும் 1873-ம் ஆண்டு பங்குனி உகூ-ம் நாள் அமெரிக்காவுக்குச் சென்று பின்னர் வாராதிருக்கநேரிட்டது. ஐயர் அவர்கள் மீட்டும்வந்து தொண்டாற்றவிரும்பியும், அவருடைய உடம்பு நிலையைக்குறித்து மீட்டும் அனுப்புதல் நன்றன்று என அமெரிக்கக் கழகம் தீர்மானித்தது. இங்ஙனம் தடுக்கப்பட்டபொழுதும் மாணவர்கள் மொழிபெயர்த்த நூல்களைத் திருத்தியனுப்பவதில் தமது காலத்தைப் போக்கிவந்தனர். இன்னும் கண், கால், வாய், கை, கால், தோல், உடம்பு முதலியவற்றைப்பற்றிச் சிறுதுண்டுத் தாள்கள் வெளியிட்டு இலங்கையிற் பலரும் படித்துப் பயனடையுமாறு பரப்புதற்கு ஒழுங்கு செய்தார். இங்ஙனம் இலங்கையில் இல்லாதகாலத்தும் அவ்வூர்த் தமிழர்கட்குப் பிறிதொருவழியில் அமெரிக்காவிலிருந்தே தொண்டுபுரிந்துவந்த ஐயர்அவர்கள் இவ்வுலகவாழ்வை நீத்து இறைவனடிசேர்ந்தசெய்தி 1884-ம் ஆண்டு வைகாசித் திங்கள் உஅ-ம் நாளன்று ஈழமண்டலம் முற்றும் காட்டுத்தீபோற் பரவி யாவரையும் துன்பக்கடலுள் ஆழ்த்தியது. ஐயர் அவர்கள் சிலருக்குச்செய்த நுட்பமான சத்திரவைத்தியத்தையொட்டிய கதைகள் பலவற்றை இன்னும் யாழ்ப்பாணத்து முதியோர் பலரிடம் கேட்டுமகிழலாம்.

நூல்கள் :—

ஐயர் அவர்கள் வெளியிட்ட நூல்களைப்பற்றிய குறிப்புக்களை எமது நண்பரும் வட்டுக்கோட்டை 'யாழ்ப்பாணக் கல்லூரி' நூல்நிலையப் பொறுப்பாளருமாய திரு. கெ. செல்லையா அவர்கள் வாயிலாகத் தந்துதவிய ஆராய்ச்சியறிஞர் திரு. S. R. முத்துக்குமாரு அவர்கட்கும், ஐயர் அவர்களின் கடிதங்கள் பொதிந்த நூற் பிரதியொன்றினை யளித்து இவ்வரலாற்றை எழுதுமாறு தூண்டியவரும், 'ஈழகேசரி'ப் பத்திரா

திபரும் ஆய திரு. நா. பொன்னையா அவர்கட்கும் எமது நன்றியறிதலைச் செலுத்துங் கடப்பாடுடையம். ஐயர் அவர்கள் வெளியிட்ட நூல்களின் பெயர் யாவும் ஆங்கிலத்தில் அறிந்திருந்தும், சில நூல்களின் தமிழ்ப்பெயரை அறியமுடியவில்லை. இவற்றின் தமிழ்ப் பெயரை யறியவிரும்பி அமெரிக்காவுக்கு எழுதியிருக்கின்றோம். கிடைக்கப்பெறின் செல்வி மூலம் பின்னர் வெளியிடுவாம். ஐயர் அவர்கள் தமிழில் வெளியிட்ட நூல்கள் முற்றும் ஏறக்குறைய 4500-பக்கம் உண்டென ஒரறிஞர் குறிப்பிட்டிருக்கின்றார். இவையிற்றின் பெயர்களைக் கீழே காண்க:—

TEXT BOOK

1. Cutter's Anatomy, Physiology and Hygiene. அங்காதிபாத சுகரணவாத உற்பாலன நூல் A. M. C. Press சென்னை—1857—பக்கம் 204. 2. Maunsell's obstetrics.—பக்கம் 258—1857. 3. Druitt's Surgery.—இரணவைத்தியம்—மொழிபெயர்த்தவர் J-டான்வோத்; பதிப்பித்தவர் கிறீன் வைத்தியர்—அமெரிக்க இலங்கைமிஷின் அச்சியந்திரசாலை மானிப்பாய், 1867,—பக்கம் 504. 4. Gray's Anatomy—அங்காதிபாதம்—மொழிபெயர்த்தவர் D. W. சாப்மன்—1872—பக்கம் 838. ு. Hooper's Physician's Vade Macum—வைத்தியாகரம்; மொழிபெயர்த்தவர்—உவில்லியம்போல்— திருத்தியமைத்தவர் S. F. கிறீன்—லண்டன் மிஷன் அச்சியந்திரசாலை, நாகர் கோயில், 1872—பக்கம் 917. 6. Well's Chemistry—கெமிஸ்தம். கிறீன் வைத்தியர் இயற்றியது—D. W. சாப்மனும் S. சாமிநாதனும் உதவிபுரிந்துளார். ல. மி. அ., நாகர்கோயில்—1875, பக்கம் 516. 7. Dalton's Physiology—மனுஷசுகரணம். 1883—பக்கம் 590. 8. Waring's Pharmacopoeia of India—இந்து பதார்த்த சாரம்—மொழிபெயர்த்தவர் D. W. சாப்மன்—பார்வையாளர் S. F. கிறீன் வைத்தியர் இயற்றியது அ. இ. மி. அச்சியந்திரசாலை, மானிப்பாய், 1884—பக்கம் 574.

VOCABULARIES.

9. Physiological Vocabulary.—1872—பக்கம் 134.

10. Vocabulary of Materia Medica; Diseases of women and Children; Medical Jurisprudence.—1875—பக்கம் 161.

ஆராய்ச்சிப் பகுதி : Research

கந்தழி

[திரு. சேனுபதி நடேச செட்டியார் அவர்கள்]

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே

—தொல். பொரு. புறத். இயல் சூ. 88.

"கொடிநிலை", "கந்தழி", "வள்ளி" என்ற முதலன (ஆன) மூன்றும் வடுநீங்கு கடவுளின் சிறப்பொடு, வாழ்த்தொடு கண்ணிய வருமே" என்று கூட்டிப் பொருள்கொள்க.

கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற இம்மும்மொழிகளின் ஆட்சி தொல்காப்பியத்துப் பொருளதிகாரத்து (பாடாண்டிணை) கடவுள் வாழ்த்துக்கு விதித்த சூத்திரத்தும், (2) வீரசோழியம் பொருட்பால் ஈற்றுச் செய்யுளகத்தும், (3) இலக்கண விளக்கம் முதலிய இலக்கண நூலகத்துப் பாடாண் பகுதிக்கு விதித்த சூத்திரங்களிலும், இன்னிலைச்செய்யுளிலும் காணப்படுவது தவிர மற்ற வேறு யாவராலும், எந்த இலக்கிய நூலகத்தும் காணப்படாத தமிழ்மொழிகளாகும். இதன் பொருள்:—

1. கொடிநிலை:—ஒரு விளக்கில் அமைந்த திரியின் பொருளாகும் (விளக்குத்திரி). ஒரு கொடி தன் ஜீவசத்துவை பூமியிலிருந்து தன் முனைக்கொடிவரைக்கும் கொண்டு செல்லும் திறத்ததேபோல் ஒரு திரி அகலில் உள்ள நெய்யினைச் சுடர் ஒளியைத் தரும் ஒருமுனைக்குக் கொண்டு ஒளிதரும் திறத்தை ஒப்பிட ஒரு கொடியின் தன்மையான நிலையிலே உள்ளது திரி எனப்படுதலால் கொடிநிலை என்ற ஒரு சொற்கு விளக்குத்திரி என்றது பொருளாகும்.

உள்வி ரிந்த புகைக்கொடி உண்டென
எள்ளு கின்றனர் இல்லை விளக்கினை
உள்ளு கின்ற பொருட்டிறம் ஓர்பவர்
கொள்வர் எம்உரை கூறுதற் பாலதே.

—யசோதா காவியம். அவையடக்கம். செய்யுள் 2,

இதன் பொருள்:—உள்ளுகின்ற விளக்கினை ஓர்பவர் (ஆராய்பவர்) விளக்கொளியைத் தருவதான ஒரு அகலுள் வார்த்த, நெய்யுடன் அமைந்த, திரியாகிய விரிந்த கோடியுள் ளிருந்துவரும் ஒளியுடன் புகை உண்டென்று திரியாகிய அக்கோடியை எள்ளுகின்றனர் இல்லை. அஃதேபோல் சிறந்த தோன்றலான யசோதரனது சீரிய குணங்களைக் கூறும் இக் காவியத்தில் அமைந்த இக்காவியத்துள் அமைந்த பொருட்டிறம் ஓர்பவர் யாம் கூறும் சொல்லின் பொருட்செறிவைக் கொண்டு வழுக் களைவர் என்றே கூறுதல்வேண்டும் என்பது.

இதனால் விளக்கின் ஒளியைத் தரும் திரி, கோடி என்ற பொருளில் ஆண்டுள்ளதால் கொடிநிலை என்ற இம்மொழிக்கு விளக்கில் அமைக்கும் திரி என்றது பொருளாகும்.

2. கந்தழி:—மை தீர் சுடர் ஒளி. இது திரியின் ஒரு பக்கத்தில் விளங்கும் சுடர்க்கொழுந்து. பற்று அற்றது, ஏற்ற எரிவது அவியத்தணிவது, எல்லை எடை அற்ற தீ ஒளிப் பிழம்பு, முப்பெருஞ் சுடரில் தீச்சுடராவது, தட்பதமன தீப்பியமான முக்குணத்தில் தீப்பிய குணமாவது, இருள் நீக்குவது, தனித்து இயங்காதது, சார்ந்து ஒளி தருவது. ஆக்கல், அளித்தல், அழித்தலான முத்தொழிலில் அழிக்குந் திறத்தது.

இதனை விளக்க நச்சினார்க்கினியர் எடுத்தாண்ட ஒரு செய்யுள் :—

"சார்பு எனத்தோன்றாது தான்அருவாய் எப்பொருட்கும்
சார்பு எனநின்று எஞ்ஞான்றும் இன்பந்தகைத்தரோ
வாய்மொழியான், மெய்யான், மனத்தான், அறிவு இறந்த
தூய்மையதாம் மைதீர் சுடர்."

இதன் பொருள்:—தூய்மையான ஒளிதரும் மைதீர் சுடரானது எப்பொருளுடனும் சார்பு எனத் தோன்றாதும், உருவாயும், அருவாயும், விளக்கில் அமைத்த திரியின் சார்பு என எஞ்ஞான்றும் நின்று பேரொளியாய் இன்பந் தருவது. இதன் தோற்றம், சிறப்பு, ஈறு, அறிய முடியாத தன்மையதான சுடர் ஒளியாகும். அதன் உருவும், உணர்வும், அமைப்பும் எவ்வகை நுண்ணறிவாலும் விளக்க முடியாத தன்மையது.

"காதல் விரிநிலத்து ஆராவகை காணார்
சாதல் நன்றென்பர் தகைமையோர்—காதலும்
ஆக்கி, அளித்து, அழிக்கும், கந்தழியின் பேருருவே
நோக்கிலரை நோவ தெவன்."

இன்னிலை—செய்யுள். 30.

இதன் பொருள்:—ஒளிவிரிந்த மண்ணுலகத்து மக்கள் காதலைத் தீர்க்கும் வகை காணார். ஆதலால், சாதல் நன்று என்பர். ஆனால் தகைமையோர் அக்காதலும் பேருருவாம் கந்தழியைப்போல் ஆக்கி, அளித்து, அழிக்கும் திறத்தது என்பர்.

காதல் நோக்கின் திறம் அறியாதவரை நோவதால் யாது பயனுமில்லை என்பது.

தகைமையோர்: ஐந்து பொறிவாசல் போர்க்கதவம் சாத்தி உள் ஒளிகண்டு உவகை கொண்டு. தக்க ஆற்றல் உடையோர் தத்தம் தண்ணொளியாலும், பெருஞ்சினத்தாலும், முத்தொழிலும் செய்யவல்லவர்; இது செய்தற்கு முச்சுடரின் ஒளி உளவாக அமைந்த கண்ணோக்கத்தால் ஆகும். காதலாலும் தொழில் நிகழ்த்தலைக் குறள் ஆசிரியர்,

"கூற்றமோ, கண்ணோ பிணையோ மடவரல் நோக்கம்
இம்மூன்றும் உடைத்து" என்று கூறியுள்ளார்.

இதன் பொருள்—

ஒரு காதலன் ஒருகாதலியின் கண்வலைப்பட்ட காலத்து காதலியின் நோக்கால் அவன் உயிர் உடலுள் கட்டுண்டு தங்குவதாலும் (பிணை)-தண்ணளியால் உயிர் வாழ்தலாலும் (கண்-அருள்) ஊடலில் சற்றே பிரிவதாலும். (கூறு-பிரிதல்) ஆக்கல் அளித்தல் அழித்தல் என்ற முத்தொழிலும் காதலியின் நோக்கால்அமைவது.

இவ்வருமை நோக்கின் உண்மை அறியாதவரை நோவதால் என்ன பயன் என்றதால் தகைமையோரும் நிறைகாதல் உடையோரும் தம் கண்ணோக்கத்தால் முத்தொழிலும் செய்வது கந்தழியின் உருவான முச்சுடரின் தன்மை என்பது ஆதலால் கந்தழி—ஒளிஎன்ற பொருளதாயிற்று.

(3) வள்ளி :—வள்ளி என்ற மொழி வள்ளம் கிண்ணம் அகல் ஆல் தாளி, இடிஞ்சில், தாலம், என்ற பல உருக்கொண்டு அகல் என்ற பொருளதாகும். இது விளக்கமைக்க நெய்க் கொள்ளும் ஒரு கொள்கலனுவது. வெள்ளிவள்ளி — வெண்ணிறத்த சங்குவளைமலர்போன்ற உருவானது,

(4) வடுநீங்கு கடவுள் சிறப்போடு— சிவபெருமான், பிறவாயாக்கையன், தழும்பு அடையாளம் உருவு அற்றவன், தோன்றாத்திருமேனியன், அனல்வண்ணன், கழ்—நீர் =

கங்கை, தழி—தழீஇயவன், கங்காதரன்; கந்தழிக்கடவுள். இறைவனுக்குச் செய்யும் வழிபாடு, வணக்கம் திருவிழா முதலிய காலங்களில் இன்றியமையாப் பொருளாக விளங்குவது திருவிளக்காகும். இது திரி அகல் நெய் இம்மூன்றின் கூட்டுறவால் நிகழ்வது. இம்மூன்றும் முதன் முதல் நாடும் பொருளாயும், பிரித்து அமைவனவும் அல்ல. திருவிழாக்காலத்தில் (கண்ணியவருமே) என்றபடி, அண்ணிய ஒரு பொருளாகும் விளக்கு. கார்த்திகைக்கார்த்திகையில் பேர் எரிவிழாக் காட்சியே கந்தழியின் பெரியஉருவான கந்தழிவிழாவாகும். குன்றின் மேல் ஏற்றும் ஒளியே கந்தழி ஒளியாகும். எனவே கடவுள் சிறப்போடு கண்ணியவருமே என்றபடி ஒரு திருவிளக்கு என்ற பொருளில் அமைவதாகும்.

5. வடுநீங்கு கடவுளின் வாழ்த்தோடு:—கடவுளின் புகழ் பரப்பச் சொன்மாலை தொடுப்போர் தாம் இயற்றும் செய்யுளில், சொற்குற்றம், பொருட்குற்றம் முதலியன தோன்றுவண்ணமும், தாம் முன்னிய பொருள் முற்றுப்பெறவும் வாழ்த்துக் கவி அல்லது காப்புச் செய்யுள் செய்வது கவி மரபும், காவிய இலக்கணமும் ஆகும். இதனை வீரசோழியத்துள்—புகட்சி, பரவல், குறிப்பு என்பர் நூலாசிரியர். அதாவது வாழ்த்து, தெய்வ வணக்கம், வருபொருளுரைத்தல், எனும் ஆசி, நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம் என்பர் வட நூலார். இருமொழிப் புலவர்களும் தம் முதற் செய்யுள்களில் கோடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றினைத் திரி, நெய், அகல் என்பவையின் கூட்டுறவால் அமையும் திருவிளக்கு என்று பொருள் தோன்ற உண்மைப் பொருள் கண்டும் நல் கேள்வித் துறை போகிய நன்று அறி நல்லாசிரியர்களும், தத்தம் நூலகத்து அமைத்ததை நோக்க விளக்கமுறும்.

"இன்னார்க்கு இன்னது இயைக என்று தாம்
முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப" என்றதால்,

தாம் வழிபடு கடவுட்கும், ஏற்புடைக் கடவுட்கும் நூல் செய்வோரும், சொன்மாலை தொடுப்போரும், தாம் இயற்றும் காப்புச் செய்யுள்களில் இம் முப்பொருள்களை முறையே ஆண்டுள்ளனர் என்பது கீழ்வரும் செய்யுள்களால் விளங்கும்.

6. முதலன மூன்றும் கண்ணிய வருமே:—கோடிநிலை, கந்தழி, வள்ளி என்ற இம்மூன்றும். திரி விளக்கு அகல் என்ற பொருளில் அமைத்தனர் புலவர் பெருமக்கள்.

மேற்கோள் விளக்கம்:—

(1) "நெய்யொடு திரியொக்கச் செய்யானைச்
சேர்வார்க்குப் பொய்யாத உள்ளமே
மெய்யாதல் வேண்டுமே."

—தோல். போருள். செய்யுளியல். 147. ஆம் சூ. மேற்கோள்.

2. 11-ம் திருமுறை நக்கீரர் இயற்றிய "கைலை பாதி காளத்தி பாதி" அந்தாதி.

(1) சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன் கைலை மேலிருந்த
பெண்பாகர்க்கு ஏற்றினேன் பெற்று. (1)

(தொடரும்)

திருவள்ளுவர்

[4-6-36-இல் கோவைத் தமிழ்சங்கத்தில் திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்டத்தன்று]

துடிசை கிழார் திரு. அ சிதம்பரனார் அவர்கள் நிகழ்த்திய தலைமை யுரை

தமிழறிவு சான்ற பெரியோர்களே !

இன்று நாம் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதற்காகக் கூடியிருக்கின்றோம் என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்ததொன்றே.

திருநாட் கொண்டாட்டத்தில் இரண்டு வகைகள் உண்டு:—

(1) பிறந்த நாட் கொண்டாட்டம்

(2) இறந்த நாட் கொண்டாட்டம்

என்பன.

இன்று நாம் கொண்டாடுவது எந்த நாட் கொண்டாட்டம் என்பதை அறிந்துகொள்ள எல்லாரும் ஆவலுள்ளவராய் இருப்பர் என்பது சொல்லாமலே அமையும்.

"மாசியிலே உத்திரத்தில் வள்ளுவனார் மாநிலம் விட்
டாசில் பரமுத்தி யங்கடைந்தார்—காசினியில்
கொல்லா விரதம் குறிக்கொண்டார் எல்லாரும்
நல்லார்வம் செய்மினந்த நாள்"

என்ற பாசுரப்படி நம் பெருநாவலர் மாசி மாதத்தில் உத்திர நாளிலே பரமுத்தி அடைந்தார் என்று அறிகிறோம். அந்த நன்னாளில் அவருடைய குருபூசையானது திருவாரூர் அறுபத்துமூவர் மடத்திலும் இன்னும் மற்ற இடங்களிலும் செவ்வனே நடைபெறுகின்றது.

இறந்த நாட் கொண்டாட்டம் தமிழர் வழக்கு. பிறந்த நாட் கொண்டாட்டம் ஆரியர் வழக்கு. சைவர்களுக்கு நட்சத்திரம் முக்கியமானது. ஆரியர்களுக்குத் திதி முக்கியமானது.

தமிழ் நாட்டில் வைணவர்கள் பிறந்த நாட் கொண்டாட்டத்தையும் அனுசரிப்பது உண்டு.

நமது செந்நாப் போதாருடைய பிறந்த நாள் எதுவென அறிய ஆவலுடையவராய் இருப்பீர்கள்.

"வைகாசி மாதத்தில் மாநா ளனுடத்தில்
வைகா சியினிலே வந்துதித்தார்—வைகைநதி
செய்யார் பதியில் திருக்குறளைப் பாடியசீர்
தெய்வத் திருவள் ளுவர்."

என்ற பாசுரப்படி அவர் பிறந்த நாள் வைகாசி மாதம் அனுட நாளாகும்.

இந்த வைகாசிமாதமானது பல பெரியார்கள் செனித்த மாதமாகும். உதாரணமாக:—குன்ற மெறிந்த குமரவேள் வைகாசி விசாகத்திலும், கௌதமசாக்கியமுனி, நம்மாழ்வார், மகம்மதுநபி முதலிய பெரியார்களும், நமது காலம் சென்ற ஐந்தாம் ஜியார்ஜ் சக்கிரவர்த்தியும் வைகாசி விசாகத்திலேயே தான் பிறந்தவர்கள். பட்டந்துறந்த சக்கரவர்த்தியாகிய எட்டாம் எட்வர்டும் வைகாசிமாதத்திலேயே தான் பிறந்தவர். இன்னும் எத்துணையோ பெரியார்கள் இம்மாதத்தில் பிறந்தவராவர். ஆகையால், இவ்வைகாசி மாதமானது ஒரு சிறந்த மாதமாகக் கொண்டாடப்படும்.

ஆரியர்களில் ஒரு பிரிவாரான மேல்நாட்டார் தற்காலம் பிறந்த நாட் கொண்டாட்டத்தையே சிறப்பாகக் கொண்டுள்ளார்கள்.

அதுபோல, கவிச்சக்கரவர்த்தியாகிய வள்ளுவர் பிறந்த திருநாளைத் தமிழராகிய நாமும் கொண்டாடுவது முக்கியமானது.

அப்படிக் கொண்டாடுவதற்குத் தமிழராகிய நாம் சென்ற ஆண்டில் ஆரம்பித்துச் சிறக்கச் செய்தோம். இவ்வாண்டில் இரண்டாம் முறை நடத்தக் கூடியிருக்கின்றோம்.

இப்பிறந்தநாட் கொண்டாட்டத்தினுல், அவர் முத்தியெய்திய தினமாகிய மாசி உத்திரத்தையும் நாம் மறந்தோம் இல்லை. அத்தினத்தில் நம் தமிழ் ஆசாரப்படி குருபூசைகள் ஆங்காங்கே கொண்டாடப்பெறுகின்றன.

ஆகையால் அன்பர்களே! நாம் திருவள்ளுவரை எத்தனை விதமாகக் கொண்டாடவேண்டுமோ அத்தனை விதமாகவும் கொண்டாடவேண்டும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவள்ளுவருடைய சரித்திரத்தைச் சரியானபடி தெரிந்துகொள்ளுவது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

நம் பொய்யில் புலவருக்குச் சரியான சரித்திரம் இதுவரை ஏற்படாமல் இருந்த போதிலும், அவர் செய்திருக்கும் நூலிலிருந்தும், அவர் காலத்துப் புலவர்கள் அவரைப் பற்றிப் பாடியிருக்கும் பாக்களில் இருந்தும் சரித்திரத்தை ஒருவாறு தொகுத்துக் கொள்வது தான் நியாயமானது.

கர்னபரம்பரைக் கதைகள் இவ்வுட்சான்றுக்கு ஒத்ததாயிருந்தால் அவைகளை எடுத்துக் கொள்ளலாம். முரணுடையதாயிருந்தால் அவைகளைத் தள்ளிவிடுதலே நலம்.

(1) ஊர்

திருவள்ளுவர் பிறந்த ஊர் கூடல் என்கிற தென்மதுரை என்று வள்ளுவருடன் ஒரு காலத்திருந்த நல்கூர் வேள்வியார் என்னும் பெரும்புலவர்

"உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதானுபங்கி மறுவில் புலச் செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"

என்னும் பாசுரத்தால் விளக்கியிருக்க,* கபிலர் அகவலில்,

"தொண்டை மண்டலத்தில், வண்டமிழ் மயிலையில்
பறையரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்"

என்று கூறப்பட்டிருக்கிறது.

இதில் எது கொள்ளத்தக்கது என ஆராய்வாம். கபிலர் அகவல் ஒரு புனை கதை என்பது பல ஆராய்ச்சியாளர்களுடைய துணிபு.

---

* இச்செய்யுளில் வள்ளுவனுர் மதுரையிற்றன் பிறந்தார் என்று கொள்வதற்குள்ள ஆதாரங்களை எடுத்துச் சற்று விரிவாகத் திரு. முதலியார் அவர்கள் விளக்குதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். —[ப-ர்.]

"கபிலர்" என்னும் நூலியற்றிய அண்ணுமலைப்பல்கலைக் கழக ஆசிரியர் திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுவ தாவது:—

கபிலர் மற்ற ஆறுபிள்ளைகளும் போன்று பிறந்த அக் கணத்திலே செய்யுள் இயற்றும் அறிவு பெற்றவர் ஆகலின், வேறு வேறு இடத்தில் பிறந்து வளர்ந்த அப்பிள்ளைகளையும், பிற நாட்டின் இயல்புகளையும், பன்னூற் கருத்துக்களையும் ஒருங்கு உணர்ந்து கொண்டனர் போலும்.

இதிற் கூறப்பட்ட நீதிகளில் சில யாவரும் ஒத்துக்கொள் ளற்பாலனவே. வேறு சில கொள்கைகள் மேன்மையானவை அல்லது தவறுனவை என்று நாம் இங்குக் கூறத் துணிந்திலம்.

அவை நேர்மையுள்ளனவே எனினும் சங்கப்புலவராகிய கபிலருடைய கோள்கையல்ல, என்பது தேற்றம்.

இது சங்கப்புலவர் பாட்டு என்பதற்கு யாதோரு சான்றும் இல்லை.

சான்றோர் பாட்டுடன் சேர்த்து எண்ணத்தகும் நடைப் பெருமை முதலியன இதன்கட் சிறிதும் இல்லை.

சில தொன்னூற் கருத்துக்களையும் தொடர்களையும் ஒரோவழி அமைத்திருப்பதே இதிற் காணப்படும் அழகா கும்.

இப்பாட்டிற் கூறப்படும் எழுவர் வரலாறும் முதற்குறளில் உள்ள "ஆதிபகவன்" என்னும் தொடரைத் திருவள்ளுவ ருடைய தாய்தந்தையரின் பெயரெனத் திரிபுடக் கருதிக் கொண்ட ஒருவனது சூழ்ச்சித்திறனுல் விளைந்த புனைந்துரையே யன்றி வேறல்ல.

தன் கொள்கையினை உலகில் வெளிப்படுத்தற்கு ஏற்ற பெற்றியாக இக்கதையினை ஆக்கிக்கொண்டதே அவனது சூழ்ச்சித்திறனுகும்.

கபிலரது ஊர் பாண்டி நாட்டுத் திருவாதவூர் என்று பழைய திருவிளையாடற்புராணத்தில் பெரும்பற்றப் புலியூர் நம் பிகள் கூறுவதற்கு மாருக, சோணுட்டுத் திருவாரூர் என்றும், அதியனது ஊர் தகடூர் எனப் பழைய நூல்கள் கூறுநிற்க அதற்கு மாருக வஞ்சி என்றும், இவ்வகவல் கூறுவது பிழை யாகும்.

அதியர்குடி என்னும் பழங்குடியில் தோன்றி, வள்ள லாக விளங்கிய அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் சிற்

றரசனையும், அவனைப் பல பாட்டுகளால் புகழ்ந்து பாடிப் பரிசில் பலபெற்றுப் பல ஊர்களிலும் திரிந்து வாழ்நாள் நடத்திய ஔவை என்னும் தொன்மூதாட்டியையும், உடன்பிறந்தார் எனக் கூறுதற்கு அறிவுடையோர் எங்ஙனம் ஒருப்படுவர்!

ஔவையார், கபிலர் அதியமான் என்னும் மூவரும் ஒரு காலத்தினர் என்ற அளவே உண்மையாகக் கொள்ளலாம். வள்ளுவர் அக்காலத்தோ அதனின் முற்காலத்தோ விளங்கினவராவர்.

இவற்றால், ஆதிபகவன் என்னும் பெயர்களும், ஔவையும், அதியமானும் ஒருங்கு கேட்கப்பட்டமைபோன்ற சில செய்திகளும், பற்றுக்கோடாகக்கொண்டு இக் கதை புனைந்துரைக்கப்பட்டதென் றறிக''

ஞானமிர்தம் என்னும் நூலில் ஆதிபகவன் என்னும் பெயர்களை விடுத்து, அறிவில்லாத சண்டாளப்பெண் என்றும், யாளிதத்தன் என்னும் முனிவன் என்னும் கூறப்பட்டிருக்கிறது'' என்று ஆராய்ச்சிசெய்து கபிலர் அகவல் என்னும் நூலையும் ஞானமிர்தத்தையும் ஒதுக்கிவிட்டார்.

ஆகையால், நாம் சங்கப்புலவரில் ஒருவரான நல்கூர் வேள்வியாருடைய கூற்றையே உண்மையாகக் கொள்ளவேண்டியிருக்கிறது.

மேலும், மேலேகாட்டிய அவர் பிறந்த நாளைக் குறித்துப் பாடப்பட்டிருக்கும் தனிப்பாடலில், வள்ளுவர் திருக்குறளை வைகைநதி பாயும் மதுரையம்பதியில் பாடினதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால், நம் முதற்பாவலருடைய சொந்த ஊர், அதாவது பிறந்த ஊர், கூடல் என்கிற மதுரையேயாகும்.

(2) குலம்

கபிலர் அகவலையும் ஞானமிர்தத்தையும் புனைகதைகள் என்று ஒதுக்கிவிட்டால், வள்ளுவருடைய குலம் எது என்று ஒரு கேள்வி உண்டாகலாம்.

நம் நாயனர் பெருநூலாசிரியர் ஆவர். நூலாசிரியன்-உரைஆசிரியன்—போதகாசிரியன் என ஆசிரியர்கள் மூவகைப் படுவர். இவற்றில் நம் ஆசிரியர் நூலாசிரியர் ஆவர்.

நூலாசிரியர் முதலிய மூவகை ஆசிரியர்களுக்கு

"குலன், அருள், தெய்வங்கொள்கை, மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை

நிலம்-மலை-நிறைகோல்-மலர் நிகர் மாட்சியும்
உலகிய லறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரையாசிரியனனே".

என்ற இலக்கணப் பிரகாரம் மேற்கண்ட குணங்களெல்லாம். அமைந்திருக்க வேண்டும். அக்குணங்களில் முதன்மை வாய்ந்தது குலம்.

ஆகையால் நம் ஆசிரியராகிய வள்ளுவர் உயர்குடிப்பிறப்பினராய் இருத்தல் வேண்டும்.

நம் நூலாசிரியரைப் பெருவாரியாக அவருடைய பட்டப் பெயரைக்கொண்டே குறிப்பிட்டுள்ளார்கள். அதனுல் அவருடைய இயற்பெயரை எல்லாரும் மறந்து விட்டார்கள். "வள்ளுவர்" என்ற பெயர்ப்பொருளையும் மறந்து இயற்பெயராகக் கொண்டு விட்டார்கள். அதனுல் வந்த விளைவுதான் வள்ளுவரை வள்ளுவசாதிக்கு உட்படுத்தினது.

"வள்ளுவரென் பெயர்பொருளை மறந்தந்தோ தமிழ்மக்கள்
வெள்ளைமொழிப் பொருள்கொள்ள விதித்தவிதி கொடுவிதியே"

இந்த மாதிரித் தடுமாற்றம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தியே ஏற்பட்டுவிட்டது.

வள்ளுவர் காலத்தை ஒட்டிச் சங்கத்தில் புலவராயிருந்த மாமூலனுர்

"அறம் பொருள் இன்பமே வீடென்னும் நான்கின்
திறம் தெரிந்து செப்பிய தேவை-மறந்தேயும்
வள்ளுவனென்பானேர் பேதை அவன் வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்.

என்று கூறி மயக்கத்தை ஒழித்தார். அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியரான திரு. சோமசுந்தரபாரதியார் என்பார் நன்ருய் ஆராய்ந்து நம்முடைய வள்ளுவனுர் உயர்ந்த வேளாண்குல வள்ளல் என்று அறுதியிட்டுள்ளார். அவர் கூறியுள்ள நியாயங்களை அவருடைய கட்டுரையில் கண்டு கொள்க. நாம் இங்கு மீட்டும் கூற அவகாசமில்லை. ஆகையால், அவர் கொண்ட முடிவைமாத்திரம் நாம் எடுத்துக் கொள்வோம்.

ஆகையால், நம் வள்ளுவனுர் தமிழ்நாட்டில் உயர்ந்த குடியாகிய வேளிர் குலத்தைச் சேர்ந்தவர் என்பது வெள்ளிடைமலையாம்.

ஒவ்வொரு நாட்டினருக்கும் சாதிப்பிரிவினைகள் உண்டு. உதாரணமாக:—

(1) மகம்மதிய நாட்டில் ஷேக் -சையத்-சுன்னத்- பட்டான் என்ற நான்கு பெரும் சாதிகள் உண்டு.

(2) ஆங்கில நாட்டிலும் கிரீக்சர்ச் - ரோமன் கத்தோலிக்—புரோடஸ்டாண்டு என்ற மூன்று பெரும் ஜாதிகள் உண்டு.

(3) பழைய ஆரிய நாட்டில் பிராமணன் - க்ஷத்திரியன்-வைசியன் - சூத்திரன் என்ற நான்கு பெரும் சாதிகள் உண்டு.

(4) அதுபோல, நம் தமிழ் நாட்டிலும் "பள்ளுப்பறை பதினெட்டு சாதிகள்" என்ற 18 பெரிய சாதிப்பிரிவுகளும், 18 தொழிலாளர்களுடைய உபசாதிகளும் உண்டு.

வண்ணான் - நாவிதன் - முதலிய தொழிலாளிகள் 18உபசாதியில் சேர்ந்தவர்கள்.

பெரிய சாதி 18-லும் உயர்ந்த சாதி மருதநிலத்தலைவர் ஆவர். தமிழ் நாட்டில் சாதிகள் ஐந்திணையை ஒட்டி வகுத்து இருக்கிறார்கள்.

பிரம - க்ஷத்திரிய - வைசிய - சூத்திர சாதிப்பாகுபாடு தமிழ் நாட்டில் ஆரியர் வருவதற்குமுன் இல்லை.

ஆகையால், நம் வள்ளுவர் தமிழ்நாட்டில் உயர்ந்த குடியில் சேர்ந்தவராகிய வேளிர்கள் குலத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

அவர் அக்குலத்தைச் சேர்ந்தவர் என்பதற்குச் சான்று வேறு வேண்டியதில்லை. அவருடைய மனைவி எக்குலத்தினர் என்று கண்டுகொண்டால் போதும். அவருடைய மனைவியாகிய வாசுகி அம்மையார் என்பவர் மார்க்கசகாயர் என்ற வேளாண் பிரபுவின் புத்திரியாவர்.

அக்காலத்தில் தமிழ்நாட்டு வேளிர்கள் மிகுந்த செல்வந்தர்களாகவும் - காணியாளர்களாகவும் - கொடைவள்ளல்களாகவும்-சிற்றரசர்களாகவும் - சேனாதிபதிகளாகவும்-அமைச்சர்களாகவும் - பேரரசர்களாகவும் - புலவர்களாகவும் - தவம் கைவரப்பெற்ற யோகிகளாகவும் - ஞானிகளாகவும் விளங்கி உள்ளார்கள். அவர்கள் சிலர் நினைக்கும் மாதிரி கலப்புமணம் முதலியன செய்து வந்ததாகத் தெரியவில்லை.

"கோடிகொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மனையில்
கூடுதல் கோடி பெறும்"

என்ற பழமொழியைக் கடைப் பிடித்துத் தங்குலம் அல்லாத வேற்று மனிதருக்குத் தம்மகளிரை மணம் முடிப்பவர் அல்லர்- அப்படி வேற்றரசர் படை வலிமையாலும் வேறு சூழ்ச்சி

களாலும் பெண் கொள்ள முயற்சிப்பாரேல் அவர்களுக்குத் தகுந்த புத்தி புகட்டும் வன்மையாளராய் இருந்தார்கள்.

"பெண் கேட்ட வேந்தனுக்குப் பெண்ணையைப் பந்தலிலே
கட்டிவைத்த பண்பது போல்"

என்ற ஆத்திசூடி வெண்பாவின் சரித்திரத்தை உணர்ந்தவர்கள் தமிழ்நாட்டு வேளிர்களுடைய மனப்பான்மையை அறிவர்.

தமிழ்நாட்டு வேளிர்களை Conservatives அதாவது புராதன வழக்கங்களைக் கைவிடாதவர்கள் என்று கூறுவது வழக்கம்.

ஆகையால், நம் வள்ளுவர் எப்போது ஒரு வேளிருடைய மகளைக்கலியாணம் செய்தாரோ அப்போதே அவரும் வேளிர் குலத்தவரே என்று சந்தேகமின்றிக் கூறலாம்.

(தொடரும்)

பனையும் பழந்தமிழ் நூல்களும் பிறவும்

[பண்டிதர் ஸ்ரீமத் கா. போ. இரத்தினம் அவர்கள்.]
மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்

(சஅஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனிச் சேர அரசர்கள்மேற் பாடப்பெற்ற பதிற்றுப் பத்தில் 'போந்தைப் பொழில்' என்றோர் சொல் காணப் படுகிறது. இதிலிருந்து அக்காலத்தில் பனைகள் நிறைந்த பல இடங்களிருந்தன என்பதும், அவற்றை எல்லாம் பனஞ் சோலை, பனம்பொழில் என அழைத்தார்கள் என்பதும், பெறப்படுகிறது. பனைகள்நிறைந்த இடத்தைப் பனம்பொழில் என்று இக்காலத்துக் கூறின் நகைப்பார் பலருண்டன்றே!

"கூவற்றுழந்த தடந்தாள் நாரை
குவியிணர் ஞாழன் மாச்சினை சேக்கும்
வண்டிறை கொண்ட தண்கடற் பரப்பின்
அடும்பம லடைகரை யலவன் ஆடிய
வடுவடு நுண்ணயிர் ஊதை உளுற்றும்
தூவிரும் போந்தைப் பொழிலணிப் பொலிதந்து"

எனும் பதிற்றுப்பத்தடிகள் ஓர் போந்தைப்பொழிலைப்பற்றிக் கூறுகின்றன. இப்போந்தைப் பொழிலில் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் எனும் அரசன் பலருடன் தங்கியிருந்து விறலியரது பாடல் கேட்டு மகிழ்ந்தான் என்பது போதரக் காக்கை

பாடினியார் நச்செள்ளையார் எனும் நல்லிசைப் புலமை மெல்லியலார் பாடியிருக்கிறார். பனங்குருத்தைக் கிழித்துக் கூறுகநறுக்கி வாகைப்பூவோடு சேர்த்தும், கொன்றைப் பூவோடு சேர்த்தும், குவளை மலரோடு சேர்த்தும் இன்னும் பலவகைப் பூக்களோடு சேர்த்தும் மாலைதொடுப்பர் எனப் பதிற்றுப்பத்துப் பகர்கின்றது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் சேர அரசர்கள் பனைமாலையைச் சூடுபவர்கள் என்பதும், பனந்தோட்டுடன் வாகை, தும்பை, வஞ்சி முதலிய புறத்திணைப் பூக்களையும் சேர்த்துத்தொடுப்பர் என்பதும் கூறப்படுகிறது. "வட்கர்போகிய வான்பனந் தோடு" எனுஞ் சிலப்பதிகார அடியைக் கூறும்போது "வட்கர் போகிய வளரிளம் போந்தை" எனும் புறநானூற்றடி ஞாபகத்திற்குவரும். 'வட்கர்போகிய' என்பதற்குப் பகைவர் தொலைதற்கேதுவாகிய, அல்லது இடையில் முரியில்லாத என உரைக்குக.

சிந்தாமணியில் மலைப்பாம்புக்கு விழுந்துகிடக்கும் பனையையும் வீரரின் தோளுக்குப் பனையையும், பிச்சநிரைக்கு மடற்பனைக் குழாத்தையும், மாலைக்குப் பனையையும், உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. பனங்குரும்பையைப் பெண்களின் ஸ்தனத்திற்கு உவமையாகக் கூறுவது தமிழ்ப் புலவர்கள் மரபு. "கொழுமடற் பெண்ணையீன்ற குரும்பையுஞ் செப்புங்கொன்றை விழைமுலைத் தடத்தினாள்" என்பதும், "முலையீன்ற பெண்ணைத்திரள்" என்பதும் சிந்தாமணி.

"வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்த்தனபோல்
ஏரியவாயினும் என்செய்யுங்—கூரிய
கோட்டானைத் தென்னன் குளிர் சாந்தணியகலம்
கோட்டுமண் கொள்ளா முலை"

என்பது முத்தொள்ளாயிரம்.

"பொருங்களத் தாடவர் பொருவில் பைந்தலை
அரும்பெறற் கண்ணியோ டற்று வீழ்வன
கருங்கனிப் பெண்ணையங் கானங் கால்பொர
விருங்கனி சொரிவன போன்ற வென்பவே"

எனுஞ் சிந்தாமணிச் செய்யுளில் போர்க்களத்தே வீழும் வீரர்களின் தலைக்குப் பனையிலிருந்து விழுகின்ற பனம்பழங்களை ஒப்பிடப்பட்டிருக்கிறது. 'பனங்காடு' என்னுஞ் சொல்லும் அக்காலத்து வழங்கியதுபோலும். காற்றடிக்கப் பனம் பழங்கள் ஒருசேர வீழ்தலை இச்செய்யுளானேயன்றி "சூழ் குலைப் பெண்ணை நெற்றித்தொடுத்த தீங்கனிகள் ஊழ்த்து வீழ்வன" எனும்டிகளாலுமறியலாம். பரிபாடலிலும் அவுணர்

களின் தலையைப் பனம்பழத்துக்கும் அத்தலைகள் அறுபட்டு வீழ்தலைப் பனம்பழ வீழ்ச்சிக்கும் ஒப்பிட்டுரைக்கப்பட்டிருக்கிறது.

> "தலையிறுபு தாரொடு புரள
> மலைதொலைபு வேர் தூர் மடல்
> குருகு பறிய நீளிரும் பனைமிசைப்
> பலபதி னுயிரங்குலை தரை யுதிர்வபோல்"

இவை பரிபாடலடிகள். பெருங்கதையிலும் இக்கருத்துப்பட,

> "ஓங்கு மடற் பெண்ணைத் தீங்குலைத் தொடுத்த
> விளைவுறு தீங்கனி வீழ்ச்சி யேய்ப்பத்
> தளையவிழ் தாமொடு தலைபல புரளவும்"

என உரைக்கப்பட்டுளது. இப்பெருங்கதையில் பனையைப் பற்றிக் காணப்படும் குறிப்புகள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுதும். 'கொய்து அகை போந்தும்' எனும் அடி பனையில் இடையிடையே ஓலை வெட்டப்படுதலைப் புலப்படுத்துகிறது. 'மடலிவர் போந்தை மதர்வை வெண்தோட்டினும்............ இயன்ற பந்தர்' என்ற தொடர் பந்தல் முதலியவற்றிற்குப் பனையோலை உபயோகிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இக்காலத்தும் சிலர் அணிவதுபோல் முற்காலத்தும் பனந்தோட்டானியன்ற காதணியை அணியும் வழக்கமுண்டென்பதற்கு "இனமலர்ப் பெண்ணை ஈர்ந்தோடு திருத்தி" எனுமடி சான்றாகும். "பனஞ்செறும்பன்ன பன்மயிர் முன்கை" எனுமடி முன்கையிலுள்ள மயிருக்குப் பனஞ்செறும்பை உவமையாக்குகிறது செறும்பு இக்காலத்தில் சிறும்பு என வழங்கப்படுகிறது

> "பெண்ணைவன் செறும்பிற் பிறங்கிச் செறிவண்ண
> வன்மயிர் வார்ந்துயர் முனகையன்"

என்றார் கம்பரும்.

பனையோலையே முற்காலத்து எழுத உபயோகிக்கப்பட்டதென்பதை யாவரும் நன்கறிவர். அவ்வோலையில் கணக்கெழுதுதலும் உண்டென்பது பெருங்கதையால் பெறப்படுகிறது.

> "இரும்பனை யிளமடல் விரிந்துளர் வெண்டோட்
> டூர்க்கிடை யாத்த நூற்புரிப் பந்தச்
> செந்தோட் டணிமலர் சேர்ந்த வுச்சி
> அந்தோட் டம்பனை யரக்குவினை யுறீஇய
> சித்திரத் திண்கால் வித்தகக் குடையினர்"

எனுமடிகள் பனைமடலால் செய்யப்பட்ட ஓர் குடையைப்பற்றி மிக விரிவாக வர்ணிக்கின்றன. பனையோலையால் சக்கரமுஞ் செய்வர். நிற்க,

பனம்பழத்தொடு சேர்ந்த ஓர் நியாயமுண்டு. அஃது காகதாலியமெனப்படும் 'काकतालीयन्याय: காகமேறப் பனம் பழம் வீழ்ந்ததென்பது.

"மன்னிசை வெங்கையுடைய பிரான்வரை மாநுசுப்பைப்
பொன்னிசை கொங்கை யொடித்தாலு நின்தை பொருந்துநமை
மின்னிசை மென்குழ லேறன்மின் நீவிர் விளங்கிலிரோ
இன்னிசை வண்டினங்காள் காகதாலியம் என்பதுவே"

எனுந் திருவெங்கைக் கோவைச்செய்யுள் காகதாலிய நியாயத்தை விளக்கும்.

தமிழ்நூல்களில் பனையைப்பற்றிய குறிப்புகள் இன்னும் பலவுள. அவற்றை எடுத்துரைப்பின் பரந்து செல்லுமாதலின் பாரிமகளிர் திருமணத்துக்கு வந்த முடியுடைமூவேந்தரும் வேண்ட, அருந்தமிழ்ச்செல்வியாகிய ஔவையார் பனந் துண்டந் தளிர்த்துப் பழந்தரப் பாடிய செய்யுளை மாத்திரம் ஈண்டுத்தந்து இக்கட்டுரையை முடிக்குதும்.

"திங்கட்குடையுடைச்சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக்கறுகிட வந்துநின் றூர்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத்து ஈன்று பச்சோலை சலசலத்து
நுங்குக் கண்முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தரவேண்டும் பனந்துண்டமே."

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

கலித்தொகை உவமைக் காட்சிகள்

[வித்வான் திரு அ. மு பரமசிவானந்தம் அவர்கள்]

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைமல்கும் அருந்தமிழ் நாட்டகத்தே முப்பெருஞ்சங்கங்கள் மிக்கதோர் நிலையில் மிளிர்வடைந்து மேன்மையுற்றுத் திகழ்ந்திருந்தன. அப்பெரும் சங்கங்களிலமர்ந்த ஆன்றோர் பலர் இயற்றிய அருந்தமிழ் நூல்கள் கணக்கில. கடற்றிரைகளும், மற்றும் சிலவும் அவைகளிற் பெரும்பாலனவற்றை நம் கண்ணிற்காட்டாது மறைத்துவிட்டன. எனினும் அவற்றுள் ஒருசில இன்னும் நம்மிடை காணப்படுகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம் கன்னித் தண்டமிழ்நாட்டில் கூடலாம் மதுரையில் கடைச்சங்கம் நிலைத்தோங்கி இருந்தது. அக்காலத்தில் ஆன்றோர் இயற்றிய நூல்களும் பல. அவைகளுள் நம்மிடை காணப்படுவன சில. அவற்றைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று முப்பகுப்பாகப் பிரித்துள்ளனர். இவைகளது பிரிவுகளும் ஒவ்வொரு தன்மையாகத்தான் அமைந்தனவென்று வல்லோர் கூறுகின்றனர்.

இத்தகைய பிரிவாயமைந்துள்ள நூல்களை ஆராய்வோமாயின் அவைகளிலுள்ள சொல் நயங்களும், பொருள் நயங்களும் துதைந்துள்ள பகுதிகள் நம்மனதுக்கு அருமைமிக்கதோர் பெருவிருந்தாகும். 'விருந்தென்பது புதுமை மேற்றாதலின் இவ்விருந்தும் உன்னுந்தோறும், உணருந்தோறும் புதுமைமிக்கதாய் உன்னுவார் உளத்துக்கு விருந்தாகவே விளக்கமுறும். இவ்வர்று இனிமைபொருந்திய பாடல்களை அழகு செய்வது, மங்கையர்க்கழகு செய்வது மாபெரும் அணிகளாயவாறுபோல், சொல் அணிகளும் பொருளணிகளுமேயாம். இவ்வணிகள் பயில்வார் உள்ளத்தணிகளேயாம் என்று கூறுவதில் வியப்பில்லை. மக்கள்மேலணியும் அணிகள் பிறரால் கொள்ளப்பட்டும், பிறவாற்றானும் பேசுமிடமற்றும் பிழைப்பட்டுப்போகும். ஆனால் இச்செய்யுள் அணிகளே ஒருமுறை பயில்வார் உள்ளத்தமர்ந்து உன்னுந்தோறும் உவகை உணர்ச்சியை அளித்துநிற்கும்.

இந்த அணியிலக்கணம் இன்று நம்மிடையில் பலவாருகப் பல்கிக் கிடக்கின்றது. தண்டி ஆசிரியருடையதும், மாறன் மேற் பாடியதுமாகிய இருஅணி நூல்களும் விரிவை உடைய வைகளாகப் பல்வேறுவகையெனப் பரந்து கிடக்கின்றன. எனினும் பல ஆயிர ஆண்டுகட்குமுன் இச்சங்க நூல்களெல் லாம் தோன்றுதற்குச் சான்ருயிருந்த தொல்காப்பியத்தே அணி ஒன்ருகவே எண்ணப்படுகின்றது. அஃது உவமை என்பதாகும். அவ்வுவமை அணியிலிருந்தே பல்வேறு அணி களும் கிளைத்தனவென்பது உலகறிந்த உண்மையாகும். இதைத் தண்டியலங்காரத்தே உவமை அணியோடு வேறு சில அணிகளைச் சேர்த்துக் காட்டியுள்ளதிலிருந்து புலனுகும். எனவே உவமை அணி ஒன்றே நம் தமிழ்நாட்டில் நிலவிவந்த தென அறியக்கிடக்கின்றது. மற்றுவேறு அணிகள் இருந்து தொல்காப்பியனுர் கூருது விட்டாரோ எனின் அற்றன்று. இலக்கியங்கண்டதற்கு இலக்கணமியம்புதல் மரபாதலின் அவ் வாறு இருந்திருப்பின் ஆசிரியர் தொல்காப்பியனுர் அவற்றைக் கூருதுவிடார். உவமைக்கென்றே உவம இயல் எனத் தனியியல் அமைத்து அதன் சிறப்புகளை தம்நூலில் தெற் றெனக் காட்டியுள்ளனர். ஆதலின் நாமும் தமிழ்ச் சுவை யினைப் பருகவிரும்பின் அத் தொல்காப்பியர் கூறிய உவமை அணியினையே நாடல் வேண்டும் அன்பது நன்கு புலப்படும்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று இவ்வாருகப் பகுக்கபட்ட தமிழ்நூல்கள் எல்லாவற்றி னும் இவ்வுவமை அணிகாணப்படுகிறது. அகப்பொருளைப் பற்றியதும், புறப்பொருளைப் பற்றியதுமாகிய இருவகை நூல்களிலே இவ் வுவமை அணி சிறந்துள்ளது. அவ்வாருய நூல்களில் ஒன்ருகிய "கலித்தொகை"யை எடுத்துக்கொண்டு அதிலுள்ள உவமை அணிகளை உன்னுவாம்.

'கற்றறிந்தா ரேத்துங் கலி' என்ற தொடர் கலித்தொ கைக்கு உள்ள பெருஞ்சிறப்பைக் காட்டப் போதிய சான்ரு கும். கற்றறிந்தார் ஏத்துதற்கு ஆங்கு என்ன சிறப்புடையது என எண்ணின் நாம்மேற்கூறிய உவமை அணி அந்நூலை அணிபெறச்செய்கின்றது என அறியலாம். எனவே, அவ்வா ருய கற்றறிந்தார் கண்டு மகிழும்உவமை அணிகளை யாவரும் அறிந்து இன்புறப்பாலர் என்பதற்காகவே எழுந்தது இக் கட்டுரை.

இக்கலித் தொயில் நூற்றுஐம்பது பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு நிலத்துக்கும் தனித்தனியே செய்யுள்கள் காணப் படுகின்றன. அவற்றுள் முதலாவதாகப் பாலை கூறப்பட்டுள்.

ளது. 'போக்கெல்லாம் பாலை' என்றதனால் பாலை பிரிந்துபோ தலைப்பற்றியதாகும். இப்பாலைப்பகுதியில் முதலாவதாக வந்துள்ள பாவில் பொருள்வயிற் பிரிவேனென்ற தலைமகற்குத் தலைமகளது இளமைகூறி இப்பெற்றியளைப் பிரியாமையே பொருளாவதெனச் சொல்லிச் செலவழுங்குவித் தமையைத் தோழி தலைமகட்கு வந்து சொல்லியதைக் காட்டப்பட்டுள்ளது. இதில் உள்ள ஓர் உவமை நயம் உன்னற்பாலது.

தலைவன் செல்லும் வழி வெம்மைமிக்கது. அதில் வெப்பமே உதிர்ந்து நிற்பனபோல் கொடுமையுள்ளது. அத்தகைய தொலையாவழியிடைத் தலைவன், தலைவிதன் பிரிவால் இங்கே இறந்துபடும்படி செல்லல் நீதியல்ல என்று தோழி கூறுகின்றாள். இவ்வழிக்கொடுமைக்கு உவமையாக ஒன்று கூறப்பட்டுள்ளது. அஃதாவது, அவுணரைக் கடந்தட்ட அண்ணலாம் சிவபெருமான் தேவர்துயர் நீப்பான் வேண்டி மூன்று எயில்களையும் சினக்கையினாலே அம்முப்புரம் அழிதலைப் பெற்று உதிர்வனபோல ஒள்ளிய ஞாயிறு சுடுகையினாலே வெம்மை விழுந்து விளங்கும் தொலையாவழி என்று கூறுகின்றார். அவ்வடிகள் வருமாறு :

'தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர் வந்திரத்தலின்
மடங்கல்போல் சினைஇய மாயஞ்செய் அவுணரை
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
முடன்றக்கான் முகம்போல வெண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி
லேறுபெற் றுதிர்வன போல் வரைபிளந் தியங்குந
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை
மறப்பருங் காத லிவளீண் டொழிய
இறப்பத் துணிந்தனிர் கேண்மின்.'

இந்த உவமையில் உள்ள நயமாவது: முக்கணான் மூவெயிலை உடல அவன் முகந் தெறுமாறு போலக் கதிர்கள் தெறுகின்றன. அவன் சினக்கையினாலே அவ்வெயில் ஏறு பெற்று உதிர்வனபோல வரைபிளந்து உதிர்ந்து விளங்கிய வழி அது என்பது. முதலாகவந்த இச்செய்யுளில் இறைவனாரை உவமையாகக் காட்டிய நயம் மற்றொன்றுண்டு. எவ்வாறு அண்ணல் உடன்று அவுணரை அழித்தனனோ அத்தன்மையாகவே இக்கலித்தொகை என்னும் நூலிலும் உண்டாகும் பல்வேறு குறைகளாகிய அவுணரை அழித்தெரிப்பன் என்பது காணக்கிடக்கின்றது.

இனி, தலைவனை, தலைவியின் இயற்கை நலம் கூறி அவ்வாறாய தலைவி இறந்துபடக்கூடும் என்று தோழி போக்காகத் தடுக்கத் தலைவன் உடன்பட்டு நின்றான். அதற்கு உவமையாகக் கூறப்பட்டது இது. பரிக்கோலாற் குத்தவும் தன்னெறியினில்லாத செலவு கடகளிற்றொருத்தல் சொல்லிய யாழோசையின் எல்லையிற்றங்கியது போலாகும் என்பது இதைக் கலித்தொகை அடிகளாற் காண்போம்.

'புன்கண் கொண் டினையவும் பொருள்வயி னகற
லன்பன் றென் றியான் கூற, வன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுகளிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
றொல்கவின் றொலைதலஞ்சி யென்
சொல்வரைத் தங்கினர் காதலோரே'

மோரியர் படையெடுப்பு

[வித்வான் திரு. மா. இராசமாணிக்கம், P. O. L.]

மோரியர் படையெடுப்பைப்பற்றிய செய்யுளடிகள் சென்ற இதழில் தரப்பெற்றன. அவற்றை நன்கு ஆராயின், மோரியர்க்கு உதவியாக 'வடுகர்' என்பவரும் 'கோசர்' என்பவரும் ஆக இருவகைப் படைவீரர் இருந்தனர் என்பது பெறப்படுகிறது. இவ்விருவர் கொண்ட இருவேறு படைகளை மோரியர் முன் அனுப்பித் தாம் பிற்சென்றதாக மேற்கூறிய பாடலடிகள் பறையறைகின்றன. அடிமைப்பட்ட நாட்டு வீரரை, அவரை ஆட்கொண்ட பிற நாட்டார் தாம் படையெடுக்கும் முன்னர்ப் புகவிடுதல் இன்றை வழக்கமாகவும் இருந்து வருதல் கண்கூடு. மகத ராச்சியத்து மோரியர் தாம் வென்றடக்கிய வடுக வீரரையும் கோசரையும் இம் முறையில் தம் தமிழகப் படையெடுப்புக்குப் பயன்படுத்தினர்.

வடுகர்

வடுகர் என்போர் தமிழகத்துக்கு வடக்கே இருந்தவர் :

"பனிபடு சோலை வெங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்தர்." [1]

"கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்" [2]

---

1. அகநானூறு, 211. 2. ,, , 107.

"கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்" [1]

இன்னணம் பலவாறு வடுகர் இயல்புகள் தமிழ்நூல்களில் நன்கு குறிப்பிடப் பட்டுள்ளமையால், தமிழர் வடுகரோடு பழக்க முடையர் என்பதும், தமிழர் வடுகதேயம் தாண்டிப் பொருள் வயிற் பிரிதல் மரபென்பதும் பிறவும் நன்குணரலாம். இவ் வடுகர், வேங்கடத்துக் கப்பாற்பட்ட கன்னடரும் தெலுங் கருமே யாவர்.

கோசர்

கோசர் இன்ன நாட்டவர் எனத்தெளிவாகத் தமிழ்நூல் களில் கூறப்பட்டிலர். ஆயினும், சொற்படி நடப்பவர்;[2] அவர் நாடு 'நெய்தலஞ் செறு' எனப்படுகிறது. [3] அவ்விடம் தமிழ கத்த தாயின், கோசர் மோரியரோடு தமிழகம் புகுந்தனர் எனவரும் செய்யுளடிகட்கு முரண்பட்டதாகும்.

எனவே, போரில் அவர்தம் ஆற்றல் கண்ட தமிழ் வேந்தர் அவரைச் சேவகத்திற் பிற்றை நாளில் வைத்துக்கொண் டனர்; 'அவர்கள் நெய்தலஞ்செறு' என்ற இடத்தில் இருந்து வந்தனர் என ஒருவாறு கொள்ளலாம். கோசர், வடுகரைப் போலவே மோரியர் ஆட்சிக்கு உட்பட்டவராகத்தான் இருந் திருத்தல் வேண்டும். இன்றேல், அவர் மோரியர் படையில் இடம் பெறுதல் யாங்ஙன மியலும்? பாக்களில் வரும் 'வட வடுகர்'[4] 'வம்ப வடுகர்'[5] என்னும் தொடர்கள் இக்கோசரையே குறிப்பன என்பது சந்தர்ப்பம் நோக்கி அறிவுடையோர் அறியக்கூடும். இதனால், இவ்வீரர், டெக்கான் பிரதேசத்துக் கும் வடபாற்பட்டவர் எனவும், இவரைத் தமிழர் முன்னம் அறியாதிருந்தனர் எனவும் கூறலாம். இவ்வீரர் கிழக்கு வங் காளத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐய்யங்கார் அவர்கள் அபிப்பிராயப்படுதல் முற் றும் பொருத்தமானதேயாகும். [6]

மோரியர் படையெடுப்பு

வடுகர், கோசர் என்னும் படைவீரர் தவிர, மோரியர் படை ஒன்று தனியே இருந்தது. அப்படையில் தேர்கள் இருந்தன. எனவே, இத்தமிழகப் படையெடுப்பில் மோரியர் படை, வடுகர்படை, கோசர்படை என மூவகைப் படைகள்

1. நற்றிணை, 212.
2. அகம், 196.
3. ,, , 15,113,
4. புறநானூறு, 378.
5. அகநானூறு, 375.
6. Vide his 'Beginnings of South Indian History', pp. 94,59.

இருந்தன. (1) இம்மூவருள் முன்னுற வந்த கோசர் தமிழகத்தின் வடமேற்கெல்லை வழியாக நுழைந்து 'துளு' நாட்டையடைந்தனர்; அந்நாட்டரசனுன நன்னனைக் காட்டிற்கு விரட்டினர்; அவனது பட்டத்து யானையைக் கொன்றனர்; துளு நாட்டைக் கைப்பற்றினர்; நன்னனது; [1]காவல்மிகுந்த 'பாழி' என்னும் இடத்தே 'வடுகர்' தங்கி விட்டனர்.[2] (2) நன்னனை வென்ற கோசர், சேரன் தானைத்தலைவனும் முதிரமலைத் தலைவனும் ஆன 'பிட்டங்கொற்றனை'த் தாக்கினர்; போர் நடந்தது. முடிபுதெரியவில்லை.[3] (3) பின்னர் 'வாட்டாறு' என்ற ஊரையும் 'செல்லூ' ரையும் ஆண்ட 'எழினி ஆதன்' என்பானைக் கோசர் தாக்கினர். அவன் செல்லூர்க்குக் கிழக்கே கோசரோடு சண்டையிட்டு, வேல் மார்பில் தைக்கப்பெற்று மாண்டிருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.[4] (4) கோசர், சோணுடடைந்து அழுந்தூர் வேளான திதியனைத் தாக்கினர்; அதுபோது அவனைச் சேர்ந்த ஒரு வீரனது கண்ணைக் கோசர் அழித்தனர் என்பதை அவ்வீரன் மகளால் உணர்ந்த வேள், சினங்கொண்டு, போர்புரிந்து பகைவரைப் புறங்காட்டச் செய்தான்.[5] (5) பின்னர் அக்கோசர் பொதியமலை அருகில் இருந்த மோகூரைத் தாக்கினர்; மோகூர் பணிந்திலது; அப்பொழுது 'வடுகர்' படையை முன்விட்டுப் பின் புதிதாகவந்த (வம்ப) பெரிய தேர்களையுடைய மோரிய வீரர் மோகூரைத் தாக்கினர்; முடிபு தெரிந்திலது.[6] இப்படையெடுப்பில் மோரியர், தம் வரவிற்குத்தடையாக இருந்த மலையைக் குடைந்தோ,வெட்டியோ வந்திருத்தல் வேண்டும் எனத்தெரிகிறது.[7] (6) இங்ஙனம் பொதியம் வரைவந்த இவ்வீரர் வடக்குநோக்கிச் செல்லுங்கால், 'இளஞ்சேட் சென்னி' என்ற சோழமன்னன், தென் பரதவரான மோகூர் மன்னன் முதலியோரை வென்ற வட வடுகரை (கோசரை) வென்றுன்.[8] மேலும் இவன், 'குறைவினையை முடிப்பதற்காக (அறைகுறையாகப் பகைவரைத் தோற்கடித்து அத்துடன் விடாமல் அவர்களை முற்றிலும் தோற்கடிப்பதற்காக)ப் பாழி நகரை அழித்து 'வம்பவடுகர்' (புதிதாகக் குடிபுக்க வடுகர், கோசர்) தலைகளை அறுத்து அழித்தான்' என அழகாகவும் தெளிவாகவும் அகநானூற்றுச் செய்யுள் கூறுதல் கவனிக்கத் தக்கது. இவ்வாறு 'பாழி' யை

---

1. குறுந்தொகை, 73. 2. அகநானூறு, 375.
3. புறநானூறு, 169. 4. அகநானூறு, 90, 216.
5. ,, , 251, 281. 6. அகநானூறு, 196, 262.
7. ,, , 69, 251, 281; புறம்—175.
8. ,, ; 205; புறம்—378.

வென்றகாரணம்பற்றி அச்சோழன்: 'செருப்பாழி எறிந்த இளஞ் சேட் சென்னி' எனப்பட்டான்[1]

மோரியர் தோல்விக்குக் காரணம்:

இவ்வாறு வலிமிக்க சோழமன்னன் போர் தொடுத்து வென்றமையாற்றான், மோரியர் படை நிலைகுலைந்து தனது கருத்து நிறைவேறப்பெறாமல், தமிழகம் விட்டு மீண்டிருத்தல் வேண்டும். சோழமன்னன் எதிர்த்திராவிடின், தமிழகமும் மோரியர் ஆட்சிக்குட்பட்டிருக்கும். தமிழகத்தின் படைவலி யையும் இயற்கை அமைப்பையும் பிறவற்றையும் அறியாத வடநாட்டினர் ஆதலின், மோரியர், துளுநாட்டை முதலில் வென்று, சேரநாடு சென்று சேரர் தலைவனைத் தாக்கி, வாட்டாறு சென்று, பின்னர்ச் சோணாடடைந்து திதியனிடம் தோல்வியுற்று, பிறகு தெற்கு நோக்கிச் சென்று தாம் பெற்ற தோல்விகட்கீடாகத் தென்பரதவரை வென்றிருத்தல் வேண்டும். அவரை வென்ற மகிழ்ச்சியோடு, தாம் முன்னர்த் தோற்ற சோழநாட்டு வழியே வருகையில் சோழனால் முறியடிக்கப்பட்டு, தமக்கு முதல் வெற்றி கிடைத்த துளு நாட்டைநோக்கி ஒடி யிருத்தல் வேண்டும். சோழன், அங்கும் அவரைத் துரத்திச் சென்று பாழியை அழித்து வடுகரை வென்றான். சோழனது வெற்றியால், மோரியர், 'தமிழகப் படையெடுப்புப்போதும்' எனச்சலிப்புற்றும் போயிருக்கலாம்.

இப்படையெடுப்பு, மோரியர்க்கு வெற்றியைத்தராமையாலும், தமிழகம் சுயேச்சையாக அசோகன் காலத்தே விளங்கினமையாலும், சோழனால் அவர்கள் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்னும் சரியான முடிபுக்கு வரவேண்டியிருக்கிறது. பெரு வேந்தனான சோழன் இப் படையெடுப்பை எதிர்த்திராவிடின், தமிழகம் மோரியர் கைப் பட்டிருக்குமென்பதில் ஐயமில்லை. இப்படையெடுப்புச் சம்பந்தமாகப் பாண்டியர், சேரர் பெயர்கள் காணப்படவில்லை. இதற்கு, படையெடுத்தவர் தமிழகத்துக்கே புதியவர் ஆயினமையால், தம் மனம்போனபடி படையொடு சென்று, எதிர்ப்பட்டாரை எதிர்த்து வென்றும் தோற்றும் இறுதியிற் பயனடையாது மீண்டனர் என்னும் சமாதானம் தவிர வேறு யாது தான் இப்போதுள்ள நிலைமையிற் கூறல் இயலும்?

பிற்கால ஆரியர், கோசர், வடுகர்:

கோசர், வடுகர், மோரியர் சம்பந்தமான செய்யுட்களை ஒருங்கு கூட்டிப் பார்த்து நுணுகி ஆராய்பவர் மேற்காட்டப்

1. அகம்—375, புறம்—378.

பெற்ற எமது முடிபை ஒருவாறு அங்கீகரித்தல் கூடும். இப் படையெடுப்பிற் சம்பந்தம் பெறாத பிற்கால ஆரியர், கோசர், வடுகர், எனத்தமிழ்ப் பாக்களில் கூறப்பட்டவர் வேறு. கோசரையும் வடுகரையும் கொண்ட மோரியர் படை தமிழகத்துக்கு வடக்கே இருந்து வந்தது. கி. மு. 232-ல் அசோகன் இறப்ப, அவனுக்குப் பின் வடுகர் சுயாதீனம் பெற்றனர். எனவே, டெக்கான் பிரதேசம் முழுவதும் வடுகர் ஆட்சியில் இருந்தது. அப்போது தமிழகத்தின் வடக்கே வடஎல்லையில் வடுகர் படை இருந்தது. மோரியர் காலத்திய கோசர் சந்ததியார் எல்லைப்புறத்திலேயே நிலைத்து விட்டனராதல் வேண்டும். அங்ஙனம் நிலைபெற்ற அச்சந்ததியார், வடுகர், கங்கைச்சமவெளியினின்றும் வடுகர் நாட்டில் தங்கிய ஆரியர் (வடமொழியாளர்) இவர்கள் பிற்காலத்தே மலையமான், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முதலியோரால் தாக்கப்பட்டிருத்தல் வேண்டும். என்னை? ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலம் சிலப்பதிகாரகாலம்; கி. பி. 150-கி. பி. 175க்குட்பட்ட காலம். [1] மோரியர் படையெடுப்பின் காலம் கி. மு. 298-கி. மு. 272-க்கு உட்பட்ட பிந்துசாரன் ஆட்சிக் காலமாகும். எனவே, சுமார் 400 ஆண்டுகட்கு முற்பட்ட வரும் பிற்பட்ட வருமான கோசர், வடுகர் வேறு வேறானவர். இக்கருத்தினைச் சிறந்த சரித்திராசிரியராகிய டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் கூறுதல் எமது முடிபுக்கரண் செய்வதாகும். [2]

இதுகாறும் கூறியவற்றால், இம்மோரியர் படையெடுப்பு என்றது மோரியர் காலத்தேதான் நடந்ததென்பதும், மோரியர் என்பார் சந்திரகுப்தன் முதலாகக் கி. மு. 185 வரை ஆண்ட தசரதன் ஈறானவரேயாவர் என்பதும், வேறெக்காரணமுங் கொண்டு குப்தரைக் குறியாதென்பதும் அறியலாம். மோகூர்ப் படையெடுப்பிற்றான் 'வம்ப மோரியர்' என்ற தொடர் ஒரே முறை வந்துள்ளது. 'கோசர்க்கு மோகூர் பணியாமையின், வம்ப (புதிய) மோரியர் துணைக்கு வந்தனர்' என்பதே அச்சந்தர்ப்பத்தில் உள்ள செய்யுளடிகளின் கருத்தாகும். முன்படைக்கு எதிர்ப்புப் பலமாக இருப்பின் அதற்குதவியாகப் புதிய (வம்ப) படை வருதல் இயல்பேயன்றோ? அதுபோலக் கோசர்க்கு மோகூர் பணியாமையின், புதிய (வம்ப) மோரியர் படை வந்தது என்பதே கருத்து. இவ்வெளிய—சர்வ சாதாரணமான பொருள் யாங்ஙனம் வேறுபட்டுக் 'குப்தரை'க் குறிப்பதென்பது எமக்கு விளங்கவில்லை.

---

1. Vide K. G. Sesha Iyer's 'Ceras of the Sangam Period' pp. 121, 122.
2. Vide his 'Beginnings of S. I. History', p.p. 98, 99.

யாம் சென்ற இதழிற் கூறிய இரு பேரறிஞரும் தவருகக் கொண்டு, ஒரே இடத்தில் வந்துள்ள வம்ப மோரியரைக் குப்தராக எண்ணினர் போலும்!

'வம்ப மோரியர்'—குப்தர் எனக் கொண்டால், 'வம்ப வடுகர்' என்பவர் யாவர்? 'வடவடுகர்' என்பவர் யாவர்? இவர்க்கெல்லாம் புதிய பாரம்பர்யத்தை வீணே கற்பிக்க வேண்டிய துன்பமில்லைமை ஏற்படுமே! இது நிற்க.

இம்மோரியர் படையெடுப்பு எக்காலத்த தென்பதை அடுத்த இதழில் ஆராய்வோம்.

குறுந் தொகை

[வித்வான் இரா. சிவ. சாம்பசிவ சர்மா எழுதியது.]

மருதம்

பிரிந்துசென்ற தலைமகன் குறித்த பருவத்தின் மாலைப்பொழுதினைக்கண்டு ஆற்ருது வருந்திய தலைவி தோழிக்குச் சொல்லியது.

மாமிலாடனுர் பாடியது

46. ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி லுணங்கன் மாந்தி மன்றத்
தெருவி னுண்டாது குடைவன வாடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொ லோழியவர் சென்ற நாட்டே.

என்பது பிரிவிடை யாற்ருளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவ லென்பதுபடச் சொல்லியது.

பதவுரை

தோழி—தோழியே, அவர் சென்ற நாட்டே—தலைவர் சென்ற நாட்டின் கண், ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன—ஆம்பல் மலரின் வாடிய பழம் பூவைப்போல, கூம்பிய சிறகர்—குவிந்த சிறகினையுடைய, மனையுறை குரீஇ—மனையின்கண் வாழும் குருவிகள், முன்றில் உணங்கல் மாந்தி—வீட்டின்

முன்னிடமாகிய முற்றத்தில் உலர்த்தப்பட்ட தானியங்களை யுண்டு, மன்றத்து—ஊர்ப் பொது நடு விடங்களில், எருவின் நுண்தாது குடைவன ஆடி—எருவிலுள்ள நுண்ணிய புழுதி களைக் குடைந்து ஆடித் திளைத்து, இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையோடு வதியும்—வீட்டின் இறப்பில் தம் சேக்கை யில் குஞ்சுகளுடன் வசிக்கும், புன்கண் மாலையும்—துன்பந் தரும் மாலைப்பொழுதும், புலம்பும்—தலைவரைப் பிரிதலால் உளதாகும் துயரும், இன்று கொல்—இல்லையோ? (இருப்பின் தலைவர் இவண்வாராது அவண்உறைவாரல்லர் என்க.)

சாம்பல்—பழம் பூ. சிறகர்—அர். போலி. குரீஇ—குருவி. உணங்கல்—வற்றல்: ஆகுபெயர். மாந்தல்—உண்ணல். இறை—வீட்டின் தாழ் வாரத்தினுள்ள இறப்பு. குறியிறக் குடம்பை—புறம் 129) பள்ளி—துயிலிடம், சேக்கை. கொல்—ஐயப் பொருளது, இடைச்சொல். நாட்டே—நாட்டின் கண் எனவிரிக்க.

மேற்கோள் விளக்கம்:—

சாம்பல்—பழம்பூ—"அடலையொடுங்கல் பழம் பூவிவை சாம்பல்" —பிங்கலந்தை (468)

1. 'ஆம்பற் பூவின்.........நாட்டே"—
"இது சென்ற நாட்டு இவை இன்றுகொல் என்றது" என்பதற்கு மேற்கோள். —(தொல்—கற்பி. பக். 671)

2. "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை"
என்பதற்கு மேற்கோள்—"இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளை யொடு வதியும்" என்பது. —(தொல்—மரபி. பக் 534)

3. "ஆம்பற்பூவின்.........பிள்ளையொடு வதியும்"
—"மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
....குடம்பைப்
பெருஞ்செய் நெல்லி னரிசி யார்ந்துதன்
புன்புறப்பெடை யொடு வதியும்" —(புறம். 318-4-8)

4. "எருவினுண்டாது குடவைன ஆடி"—
மூவிடத்து ஐம்பாலினும் வினை முற்று வினையெச்சமாயின
—(நன்—சங்கர—பக். 185, சூ. 351)

5. "ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன"—
"மாதார் மயிலன்னவர் சண்பகச் சாம்பல்
(ஒத்தார்—சீவக. 2349)

மெய்ப்பாடு—பெருமிதம்.
பயன்—ஆற்றுமாறு அறிவித்தல்.

அறிவியற் பகுதி - Science

தமிழ் எழுத்துக்களின் நுண்மைவிளக்கம்

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்

திரு. க. ப. சந்தோஷம், B. A., L. T.,]

(முன் ௫0௬-ஆம் பக்கத்தொடர்ச்சி)

பெரியவற்றிலும் சிறியவற்றிலும், யாண்டும், இம்மொழியில் ஒழுங்கும் முறையுமே காணக்கிடக்கின்றன. க், ம், ன் முதலிய மெய்கள் எழுத்தாய் ஒலிபெறுதற்கு ஒருயிரின்துணை வேண்டப்படுகின்றது. இங்ஙனம் வேண்டப்படும் உயிர் எல்லாவிடத்தும் இகரமேயாகின்றது. இக், இம், இய் என்பவற்றால் இஃதறியப்படும். முப்பாற் புள்ளியாகிய ஆய்தவெழுத்தையு மியக்குதற்கோர் உயிர்வேண்டும். ஆனால், ஈண்டு இகரம் வருவதில்லை; அகரந் தோன்றும். ஆய்தத்தை, அஃகன்னா அல்லது அஃகேனா என்றுசொல்கின்றோம். கூர்ந்து பார்க்குந் திறனுடைய ஏவரையும் ஈர்க்குந் தகையதாகிய இம்முறை, தமிழ் எழுத்துக்கள் மறையியல்பற்றி வகுக்கப்பட்டனவென்பதைக் காட்டும். உண்மையியலையொட்டித் தமிழ் எழுத்துக்கள் மூன்று வகைப்படும். இம்மூன்று வகைகளும் சிவ, சத்தி, மாயா, அல்லது பதி, பசு, பாச எழுத்துக்களெனப் பெயர்பெறும். சிவ அல்லது பதி எழுத்தாவது, ஆய்தம் அல்லது தனிநிலை எனப்படும் ஃ; பசுவெழுத்துக்களாவன, உயிர் பன்னிரண்டும்; பதினெட்டு மெய்யும் பாசவெழுத்துக்களாம். இங்ஙனமிவற்றைக் கூறுசெய்வது பெருவகுப்பெனக்கொள்க. ஒவ்வொரு வகுப்பும் இங்ஙனமே முக்கூறுபடும். எங்ஙனமெனின், பதிஎழுத்தாகிய ஆய்தம், பதியிற் பதி, பதியிற் பசு, பதியிற் பாசம் என முக்கூறாகும். இந்த முக்கூறும் ஆய்தத்தின் மூன்று புள்ளிகளாற் குறிக்கப்படும். மேற்புள்ளி பதியிற்பதி, வலபாற்புள்ளி பதியிற்பசு, இடபாற் புள்ளி பதியிற்பாசம். இங்ஙனம் வகைசெய்தலின் அமைதி, ஆய்தத்தின் மூன்று புள்ளிகளும் சிவபிரானின் மூன்று கண்களுக்கு மறிகுறியாதல்கொண்டு தெளியப்படும்; முக்கண்களில் உயர்ந்து நடுவிலிருப்பது ஒளியையும், வலபாலது ஆற்றலின் ஊற்றாகிய கதிரவனையும், இடபாலது மாயை அல்லது காமியத்திற் குறைவிடமாகிய நிலவையுங் காட்டும்,

இவ்வாறே பசு அல்லது சக்தி எழுத்துக்களாகிய பன்னிரண்டு உயிர்களும் பசுவிற் பதி, பசுவிற் பசு, பசுவிற் பாசம் என முக்கூறுகும். இந்த உட்பிரிவில் வரும் மூன்று எழுத்துக்களில், அகரம் பசுவிற் பதி, உகரம் பசுவிற் பசு, இகரம் பசுவிற் பாசம். இதை யகத்திற்கொண்டு எழுத்துக்களை நோக்குவோமாயின், மெய் யெழுத்துக்களை இயக்குவதற்கு இகரவுயிரும், ஆய்தத்தைத் தொடங்குவதற்கு அகரவுயிரும் வேண்டப்படுங் காரணம் நமக்கு விளங்கும். மெய்யெழுத்துக்களெல்லாம் பெருவகுப்பில் மல அல்லது பாச வெழுத்துக்கள். இவைகளை இயக்குவதற் குயிரொன்று வேண்டுமாயின், அதற்கியைந்த உயிர் இகரமேயாகும். எற்றிற்கெனின், உயிரெழுத்துக்களின் உட்பிரிவில் இகரம் பாசத்தோடு தொடர்புடையது. இதுபற்றி மெய்யெழுத்துக்கள் இக்கன்னு, இம்மன்னு, இய்யன்னு என்றோசை பெறுகின்றன. இக்காரணத்தைக்கொண்டே பதி எழுத்தாகிய ஆய்தத்தின் முன், உயிரெழுத்துக்களிற் பதியைக் குறிக்கும் அகரம் வேண்டப்படுகின்றது. அஃகனு, அஃகேன்னு வென்பதும் இதனுலேயே. ஈண்டு நாம் காணும் ஒழுங்கைப் பின்வருமாறு தொகுத்துக்கூறல் சாலாதுகொல்?

> "மும்மல வெழுத்தாம் மூவாறு மெய்யையும்
> தனித்தியக்கு முயிர் இகார மென்க
> தனிநிலை தானே யியங்கா தமரில்
> தனித்தியக்கு முயிர் ஆகார மென்க."

இதிலிருந்து, மொழியின் அமைப்பில் தோன்றும் வேறுசில ஒழுங்குகளைக் காணப்புகுவோம். தமிழில் அ, இ, உ என்ற மூன்று சுட்டெழுத்துக்களுளவென் றறிவோம். இவற்றுள் அகரச்சுட்டு ஆங்கிலச் சொல்லாகிய That என்பதன் பொருளது; இகரச்சுட்டு This என்பதன் பொருளது; உகரச் சுட்டு இவையிரண்டிற்கு மிடைப்பட்டது. இதன் பொருளைக் குறிக்க ஆங்கிலத்தில் தனிமொழி யொன்றுமில்லை. ஆங்கிலத்தில் That எனுஞ்சொல் அகரவுயிர்பெற்று அகலவிருக்கும் பொருளைச்சுட்டுவதும், This எனுஞ்சொல் இகரவுயிர்பெற்று அண்மையிலுள்ளதைச் சுட்டுவதும் கருதத்தக்கனவாம். (சமஸ்கிருதத்தில் அயம், இயம் என்பவற்றை நோக்குக.) சுட்டெழுத்துக்கள் மூன்றுந் தமிழ்க்கே சிறப்பாயுரியன. இவை மூன்றும் உயிரெத்துக்களின் உட்பிரிவில் பதி, பசு, பாசத்தைக் குறிக்குமெழுத்துக்களாயின. இவற்றுள் இகரஉயிர் மலவெழுத்துக்களாகிய பதினெட்டு மெய்களையும் இயக்குதற்கு வேண்டப்படுகின்றது. ஓ என்ற பிரணவத்தில்

மலவெழுத்துக்களைக் குறிப்பது மகரவொற்றாகும். ஆதலின், இகரத்தை நீக்கி மகரத்தை வைப்போமாயின், பதி, பசு, பாசத்திற் கறிகுறியாகும் பிரணவத்தின் மூன்று பகுதிகளாய அ, உ, ம், என்பவை தோன்றுகின்றன. இந்த மூன்று சுட்டுக்களின் பொருள் இவற்றால் குறிக்கப்படும் பதி பசு, பாசத் தன்மைகளோடு ஒத்திருக்கின்றது. பதி என்பது கருதவொண்ணாததும் அணுகவொண்ணாததுமாய் நின்று, அகரத்தாற் குறிக்கப்படுமாறே, சுட்டகரமும் சேய்மைப்பொருளைக் குறிக்கின்றது. பாசம், திரிமலகோசம் அல்லது உடம்பு அண்மையிலுள்ளதும், நானென்ற உணர்ச்சியொடு தவறாக ஒன்றுபடக் கூடியதும், இதுவென்று சுட்டப்படக் கூடியதுமாகிய தன்மைகளை யுடையது. இதற்கிசையவே உண்மையியலில் பாசத்தைக் காட்டுகின்ற இகரம், மொழிவகையில் அண்மையிலுள்ளதைச் சுட்டும் எழுத்தாகின்றது. பசு அல்லது ஜீவாத்மா அல்லது உயிர், பதி அல்லது பரமாத்வைப்போல் அறியவொணாதொன்றுமன்று; பாசம் அல்லது உடம்பைப்போல் இதுவென்று சுட்டப்பட்டு எளிதில் உணரக் கூடியதுமன்று; ஆதலின், உயிர் பதியைப்போல் அவ்வளவு சேய்மையது மன்று, உடம்பைப் போல் அத்துணை அண்மையதுமன்று. இதுபற்றி அது, இது என்ற சேய்மையண்மை நிலைகளுக்கு இடைப்பட்டுநிற்பதாகிய உயிர் அல்லது ஜீவாத்மா உகரத்தால் குறிக்கப்பெறுவதாயிற்று. தமிழ்ச் சுட்டெழுத்துக்களாகிய அகர இகர உகரங்களின் பொருளை மறைப்பு வகையில் கூறுகிறேனென்று நீங்கள் நினைக்கலாகாது. எனது நோக்கமது வன்று. சுட்டெழுத்துக்களைச் சூழ்ந்த மறைப்பை நீக்கவே யான் முயல்கின்றேன். சுட்டெழுத்துக்களைப்பற்றித் தொல்காப்பியச் சூத்திரம் பின்வருமாறு:— "அ, இ, உ அம் மூன்றுஞ் சுட்டு" இதற் குரைவகுத்த இளம்பூரணனார், "குற்றெழுத்தெனப்பட்ட அம்மூன்றுஞ் சுட்டென்னுங் குறிய வென்றவாறு" என்று கூறுகிறார். நச்சினார்க்கினியரு மிவ்வாறே யுரைசெய்து ஒரு குறிப்புஞ் சேர்க்கின்றார். அஃதென்னவெனின், "இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய தோர்குறி, சுட்டியறிப்படும் பொருளை யுணர்த்தலின்." அறிவையும் ஆட்சியையுங் குறிப்பதற்கோ ரடையாளமாகச் சுட்டென்னும் பெயர் வந்தது. ஏனெனின், அறிவதற்குரிய பொருள்களையே சுட்டென்பது குறிக்கின்றது. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறியவற்றை ஈண்டெடுத்துக் காட்டிப் பின்னவர் கூறிய குறிப்பிற்கோர் விளக்கமுந் தந்ததெற்றிற்கெனின், சுட்டெழுத்தென்று சொல்லப்படுவனவற்றின் பெயர்க்காரணம், மறைத்தன்மையின்பாலதென்று இவ்விரு

வுரைகாரரும் நினைத்தனரென்று காட்டுதற்கே. சுட்டு என்னும் பெயர்க்குரிய மறைத்தன்மையையும் முதன்மையையும் இலக்கணத்திலன்றி வெளியிலுங் காணலாம். "பிறராற் பெருஞ் சுட்டு வேண்டுவான்" என்பது பொதுவழக்கில் மற்றோரால் புகழப்பட விரும்புபவனைக் குறிக்கும். ஈண்டுச் சுட்டென்பது புகழ். மற்றும், பொதுவழக்கில் சுட்டுப்பொருளென்பது, வழிபடுமொருவன் தன்னுள்ளத்தி லமைத்துக்கொள்ளும் கடவுளுருவத்தைக் காட்டும்; அக்கடவுள் வழிபடுவோனின் பக்குவத்திற் கிணங்கக் குருவடிவாய்க் கட்புலனாகவாயினும் உணர்ச்சிவாயிலாகவாயினுந் தோன்றுமென்பர். இங்ஙனமே, "சுட்டுவைக்க" என்ற தொடர், புலன்களை யடக்கிக்கொண்டு வணக்கத்திற்குரிய ஒரு கடவுள் வடிவத்தை யமைக்க, என்று பொருள்படும்.

இதுகாறும் சுட்டெழுத்துக்களைப்பற்றி யாம் கூறியவற்றைப் பின்வருமாறு விளக்கியுந் தொகுத்துங் கூறலாம்:—

"சுட்டத் தகுபொருள் மூலமுப் பொருளே
அவையுட் பதிதான் அகார மாகும்
உகாரம் பசுவாம் மகார மெய்ப்பாசமாம்
மகார மெய்யை யியக்கும் இகரத்துடன்
அ, இ, உ அம்மூன்றுஞ் சுட்டே."

தமிழ்மொழியி னமைப்பிற் காணக்கிடக்கும் வியத்தகுமுறையினை மற்றோ ருதாரணத்தாற் காட்டுதும். எம்மொழியிலும் ஒற்றெழுத்தை முதலினுடைய ஒரு சொல்லை உச்சரிப்பதிலும். தமிழொழிந்த பிறமொழிகளில் இத்தகைய சொற்கள் சிறந்தவற்றையும் இழிந்தவற்றையும் குறிப்பதற்குப் பெருவாரியாக வெடுத்தாளப்படுகின்றன. ஆங்கிலத்தில் Christ, Crime, Druid, Drunkard, Friar, Fret, என்ற சொற்கள் ஒற்றெழுத்தை முதலினுடையவாய்ச் சிறந்தவற்றையும் இழிந்தவற்றையுங் குறிக்கின்றன. சமஸ்கிருதத்தில் ஸ்ரீ, ஸ்ரார்த்த; க்ருபா, க்ரூர, ப்ரார்த்தன, ப்ராயஸ்சித்த ,ப்ரஹ்ம; ப்ரஷ்ட என்பவற்றைக் காண்கின்றோம். ஒற்றெழுத்தை முதலினுடையவொரு சொல்லை உச்சரிக்க முடியாதவர்களாய்த் தமிழரிருந்தார்கொல்? இல்லையெனின், "உயிர்மெய்யல்லன மொழி முதலாகா" என்ற விலக்கொணா விதியை வகுக்க அவர்களைத் தூண்டியது யாது? இவ்விதியைத் தமிழர் தம்மொழிக்கே யன்றிப் பிறமொழிக்கு மேற்றுகின்றனர். பிறமொழிகளிலிருந்து ஒற்றைமுதலினுடைய ஒரு சொல்லைக் கடன்வாங்குங்கால், அச்சொல்லைத் தமிழ்மொழியில் சேர்ப்பதற்குமுன் கழுவாய் (பிராயஸ்சித்தம்) தேடுகின்றனர். இதன்பயனாகத் தமிழில்

வந்தேறும், ஒற்றெழுத்தை முதலினுடைய சொல்லின் தலையில் ஒருயிரெழுத் தேறுகின்றது. எங்ஙனமெனின், க்ருப என்ற சமஸ்கிருத மொழி தமிழில் வரவேண்டுமாயின், கிருப அல்லது கிருபை என்று உயிரெழுத்தைத் தலையிலேற்கவேண்டும். ம்ருக என்ற சமஸ்கிருதமொழி மிருக வென்று தமிழில் வர வேண்டும். நம்மைச் சூழ்ந்துள்ள உயிர்த்திரளை நோக்குவோமாயின், செத்த உடம்பு ஒழுங்குபட்ட ஒரு தொகுதிக்கு முன்னிற்காதென்பது நமக்கு விளங்குகின்றது. தமிழிலக்கண நூலார் ஒற்றெழுத்துக்களைச் செத்தவுடம்பென்று கருதி அவைகளுக்கு உடலென்றும், இவற்றை யியக்குமெழுத்துக்களை ஆவியென்று கருதி உயிரென்றும் பெயரிட்டனர். உயிர் வகையில் நாம் காண்கின்ற முறையே மொழியினுமிருக்கவேண்டுமென்ற கருத்தவர்களுக்கில்லாதிருப்பின், "உயிர்மெய்யல்லன மொழிமுதலாகா" என்றவர்களிட்ட கட்டளைக்குக் காரணங் காணலரிது.

தமிழிலக்கணங்களில் முதன்மைபெற்றனவெல்லாம் பொருளிலக்கணமென்ற ஓரின்றியமையாப் பகுதியை யுடையனவாகத் திகழ்கின்றனவென்பதைப்பற்றி ஈண்டுக் கூறுதல் மிகையாகாது. பொருளிலக்கணமென்பது மக்கள் கருதுவதற்குரியனவும், அடைய முயல்வதற் குரியனவுமாகியவற்றின் இலக்கணமாம். தமிழிலக்கணங்களில் இஃது ஒரு பகுதியாயமைந்தது, பிறமொழியினின்று தமிழை ஒரு தனிநிலைக்குயர்த்துகின்றது. மக்கள் கருதுவதற் குரியனவும் அடைய முயல்வதற் குரியனவுமாகியவற்றை இலக்கணத்திலொரு பகுதியாக்கியது, வாழ்க்கையின் விதிகளை மொழியின் விதிகளோடு ஒன்றுபடுத்த வேண்டுமென்ற நோக்கம் தமிழிலக்கண நூலார்க் கிருந்ததென்பதைத் தெற்றென விளக்குகின்றது. இறையனாரகப் பொருளென்ற நூல் சங்ககாலத்திலெழுதப்பட்ட பழைய நூலென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதை ஆக்கியோன் சிவனே என்று நூல்வரலாறு கூறுகின்றது. எங்ஙன மிந்நூலெழுந்ததென்பதைப்பற்றிச் சங்கப் புலவரும் அதனுரைகாரருமாகிய நக்கீரர் கூறுவதை ஈண்டெடுத்துரைப்போம். "அரசனும் புடைபடக்கவன்று என்னை? எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின்பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான்; 'என்ன பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான் யாமதனைத் தீர்க்கற்பாலம்' என்று

இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து, மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.''

நக்கீரரது உரை பிற்காலத்திலெழுதிச் சேர்க்கப்பட்ட இடைச் செருகலுடையதென்று தோன்றுகின்றது. ஆயினும் மேற்கூறப்பட்ட கதை இடைச்செருகலென்று நினைக்கவிட மில்லை. வரலாற்றாசிரியர்க்கு இக்கதை பயனிலாதொழியினும், பண்டைத் தமிழர்கள் சரியாகவாதல் தவறாகவாதல் வையக வாழ்க்கையின் விதிகளுக்கிணங்க மொழியமைக்கப்படவேண் டுமென்ற கொள்கையுடையரா யிருந்தனரென்பதை விளக்கு வதற்கு இது மற்றோரெடுத்துக் காட்டா யிலங்குகின்றதன்றோ?

சத்திரத் தலைவர்

பிராமணருள்ளே மெய்யறிவும் நல்லொழுக்கமும் உடை யவர் சிலரொழிய, மற்றவர்கள், அறியாமையினாலும், பொறா மையினாலும், துரபிமானத்தாலும், பிராமணரல்லாத மற்றைச் சாதியாரெல்லாரும் சமசாதியாரென்றும், கல்வியறி வொழுக் கஞ் சிறிதும் இல்லாதவர்களாயினும், தாங்களே உயர்ந்தவர்க ளென்றும், கல்வியறிவொழுக்கமுடையவர்களே யாயினும் மற்றைச் சாதியாரெல்லாருந் தாழ்ந்தவர்களென்றும் பேசு வது எல்லாருக்குந் தெரியுமே. அவ் வியல்புடையவர்களைச் சத்திரத்துக்கு அதிகாரிகளாக்கினால், அவர்கள் சத்திர தரு மங்களை ஒழுங்காக எப்படி நடத்துவார்கள்.

ஆறுமுக நாவலர்.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

[புதுக் கவி]

ஆலயத் திறப்பு

அல்லது

க்ஷேத்திரப் பிரவேசனச் சதகம்.

இசைத் தமிழ்ச் செல்வர்

[உயர் திரு. T. இலக்குமண பிள்ளை, பி. ஏ. அவர்கள் பாடியது]

நொண்டிச் சிந்து

"மந்திரமும் உதவாது—மருண்டிடும்
வையத்தில் மாந்த்ரிகள் பலர் பொய்யவிழ்க்கின்றார்
தந்திரமும் ஒன்றுமில்லை—பண்டைச்
சாணக்கன் வந்தாலும் ஓர் செம்பாணிக்குதவான். 47
மன்னனே மருத்துவனும்—இதற்கு
மருந்தவன் கைபடவே பொருந்துவதாம்
பின்னொரு வழியுமில்லை—இனிமேல்
பிறரைக் கேட்பதில் பயன் பெறுவதில்லை, 48
சஸ்த்ர ப்ரயோகம் ஒன்றே—வருத்தம்
தணிக்கும் இப்பிணிக்கு மற்றொரு மருந்தால்
சொஸ்தமுங் கிடைப்பதில்லை—என்றே
துணிதலுற்றான் மன்னன் பணிதலுற்றான். 49
"ஜனாதிகாரிகள் பண்டு—ஏழை
ஜனங்களின் சுதந்திர மனங் கெடுத்தார்
அனாதிகாலம் அவர்தம்—சுகத்தை
அறுக்கும் மனவிலங்கைத் தறிப்பன்" என்றான். 50
ஆயிரத் தொருநூற்றுக்—கப்பால்
ஆறிரண் டாண்டதில் அற்பசித் திங்கள்
கோயில்கள் திறந்துவிடப்—பணித்தான்
குணமெழுஞ் சித்திரையிற் சித்திரை வேந்தன். 51
வேந்தன திருபத்தைந்தாம்—திருநாள்
விடிய விளம்பரமும் விடிந்ததுவே
காந்தியுடன் ஜொலித்ததுவே—அதிலே
கடவுளின் றிருவருள் நடமுளதால். 52

பிறப்பினால் நம்பிக்கையினால்—ஹிந்துமதம்
பெற்றவர்கள் எவ்வெவரும் உற்றுக்கோயில்கள்
மறுப்பின்றிப் புகுந்திடலாம்—என்று
மகாராஜன் விளம்பரம் வகை சொன்னதே. 53
ஆயிரம் வருஷவட்டத்தில்—செய்யொணு
அடிப்படைச் சீர்திருத்தம் நொடிப்பொழுதில்
சேயிருந் திப்படிச்செய்தான்—என்றே
சிந்தனை யுள்ளவரெல்லாம் வந்தனை செய்தார். 54
சுசியாய்க் கோயில் புகவே—இதற்குத்
துணைச் செயல் முறைகளை இணைத்தனனே
சசிவோத்தமன் ஸர். ஸி. பி.—ராம
ஸ்வாமி யென்பான் புகழ் மேன்மை மந்திரி. 55
ஓடக்குழற் கண்ணபிரான்—பண்டு
ஒற்றைக் குசேலன் உற்ற பசிதீர்த்தான்
கோடிக் குசேலர் தமக்குக்—கோமான்
கூடும் ஆத்ம பசிக்குறை நாடித்தவிர்த்தான். 56
பஞ்சத்தால் மிகவாடித்—தவிக்கும்
பாமர ஜனத்தினிடைக் கோமகன் சென்று
நன்சுவை நறுநெய்யுடன்—உள்ள
நாளளவும் சாப்பிடுங் கோளளித்ததுபோல், 57
திரண்டெழுங் கோடிவயல்—பாய்ந்து
தேறிடத் துளித்தண்ணீரும் ஊறிடாமால்
வறண்டிடும் பயிர்வகைகள் நன்கு
வாழ்ந்து தழைக்க முகில் தாழ்ந்ததுபோல்; 58
குடிநீரற்ற பாலை—வனத்தில்
கொடும்பசி தாகத்தால் இடும்பைப் பட்டோர்
மிடிதீர்தன் வயலும்—நிறைநீர்
வீழ்ச்சியும் காட்சியுற்ற விந்தையைப் போல். 59
"தேசமெங்கும் தலைவிரித்துத்—துள்ளிய
தீண்டாமை தொடலாமை யாண்டிடும் பேய்
நாசமுற்றுப் போயினதே" யென்று
நாடனைத்தும் களிப்புக் கொண்டாட வந்ததே. 60
ஈனவகுப்புக்கள் என்ற—பிறப்புற்ற
இழிவினையும் மதத்தின் வழுவினையும்
பேனுமுனை யோரசைப்பால்—ஒழித்த
பெருமை பொருந்து மன்னன் அருமையினைப் 61
பாட்டிலும் சிலையிலுமே—எங்கும்
பரப்பி மனிதருள்ளம் நிரப்பி நிலை
நாட்டி வழுத்திடவேண்டும்—என்று
நாட்டினர், ஹரிஜனங்கள் கூடினரே. 62

ஆனந்தக் கடல் அமிழ்ந்தார்—முன்னே
அமரர் கடைந்தெடுத்த அமிர்தமதைப்
பானஞ் செய்ததுபோலே—களித்தார்
"பகவன் அருள் பழுத்த வகையி" தென்றார். 63
"சரித்திர நிகழ்ச்சிகளில்—இதற்குச்
சமமாக மதிப்பிட அமையும் செயல்
தெரித்திடல் அரி"தென்றார்—விண்ணுலகத்
தேவர்களும் இப்பெருமை மேவரி தென்றார். 64
பற்பல சங்கங்கள் கூடினார்—ஜனங்கள்
பார்புகழ் மன்னரில் இவற்கார் நிகர்? என்றார்
"சொற்புகழ் அசோகன் மட்டுமே—விரிவுறுந்
தொல்லுலகில் இவற்கிணை சொல்லலாம்" என்றார். 65
பல்லாயிரம் ஹரிஜனங்கள்—அனந்தைப்
பட்டணத்திற் குழுமினர், திட்டப்படியே
எல்லாரும் வேந்தனைக் கண்டார்—நெஞ்சில்
எழும் நன்றியைப் பகர்ந்து தொழுது கொண்டார். 66
கோஷயாத்ரைக் காரர் எழுந்தார்—அனந்தையிற்
கோலாகல விசித்திர வேலைகள் செய்தார்
வேஷங்கள் பல புனைந்தார்—பாண
வேடிக்கைகள் மின்விளக்கு ஜோடித்தல் செய்தார். 69
பாட்டுக்கள் அனந்தம் பாடினார்—பற்பல
பஜனைக் கூட்டங்கள் புகழ் வசனஞ் சொன்னார்
ஆட்டங்கள் பல ஆடினார்—பற்பலர்
அந்தரத்தில் விளையாடி விந்தைகள் செய்தார். 68

(தொடரும்)

"காட்டுக காட்டுவாயே"

[திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் M. A.]

அருளுடை யரசே யிந்த
அடியனேன் உன்னைக்கண்டு
தெருளுறு தலைந்து கெட்டேன்
திக்கெலாஞ் சென்றுங் காணேன்
உருளுடைச் சகடந் தன்னில்
ஊர்ந்திடும் ஒருவனொத்தே
திருவினேய்! நினையா துன்னைத்
திருத்துவன் இல்லப் பணியே. 1

பணியெலாம் அறியேன் செய்யேன்
பகர்ந்திட ஒண்ணு விதத்தால்
அணிவது போலுஞ் செய்கை
அறிவிலேன் செய்து செல்வேன்
பணியிது செய்க என்று
பரமனீ காட்டில் அந்தோ
தணிந்துநான் இருப்பன் கொல்லோ
தாவியே எழுவன் அன்றோ. 2

ஓவியத் தெழுத ஒண்ணு
உத்தம உன்பால் அன்பு
மேவியே உன்னைக் காண
மோகமும் கொள்வன் என்னில்
ஆவியொ டாவி யாக
அமைந்தநீ அறிவாய் நன்றே
தாவிவந் தென்னை யீர்த்துத்
தந்திடு நின்னைத் தானே. 3

தானமுந் தவமுஞ் செய்யேன்
தருக்கியே செருக்கிச் செல்வேன்
ஆனையும் பாலும் உண்பேன்
அவைதமை யுனக்குத் தாரேன்
மேனியைப் பெரிதுங் காப்பேன்
மெத்தவும் உன்னைச் செப்பேன்
ஏனையா என்னைப் பாராய்
எழுந்திடு கதிரின் மிக்காய் ! 4

மிக்கது செயினும் ஐய
மிகுதியைத் தகுதி யாக்கல்
தக்கதே நினக்குத் தேர்ந்தேன்
தடையொடு சிறிதும் உண்டோ
ஒக்கவே உன்னோ டாங்கே
ஒருரு வெய்தி நிற்கும்
அக்கையும் அம்மை யான
அருளுரு தடைசெய் யாதே. 5

தடுப்பதும் உண்டே யானல்
அத்தடை யெனதே யன்றோ
விடுப்பதே குற்ற மென்று
விளம்பினை மறந்து விட்டேன

அடுத்தடுத் தென்ன குற்றம்
அறிவிலேன் செய்யப் புக்கால்
தடுத்துநீ ஆண்டா யன்றே
தந்தைநின் தகைமை யென்னே! 6

என்னரும் ஈச நேசா
எழிலுறும் அழகே யென்னைத்
துன்னரும் பாவக் காட்டில்
துவண்டிடச் செய்தி டாதே
உன்னருங் குணங்கள் பன்னி
உன்னையே நம்பி மேலும்
என்னுடைக் கருமந் தன்னை
யேற்பவே புரியச் செய்வாய். 7

செய்வதும் செய்விப் பானும்
செம்மலோய் நீயே நாளும்
உய்வது புரிய எந்தை
உகந்ததை உணர்த்து வாயே
பொய்யது போக்கி மெய்யாம்
புகழுதே யாக்கச் செய்வாய்
மெய்யதே யான மெய்யா
மேன்மையாய் ஓங்கி யுள்ளாய்! 8

உள்ளுளே விளங்கி நிற்கும்
உருவமே யுன்னை யந்தோ
பள்ளத்தின் இழியும் வெள்ளப்
பெருக்குபோல் செய்து காணேன்
கள்ளமோ கண்ணின் செய்தி
கசடனேன் அதற்கோ பெற்றேன்
தள்ளிடா தென்னைக் காப்பாய்
தாங்கியே காட்டு வாயே. 9

காட்டினு லன்றிக் காணுக்
கரியருள் ஒருவன் யானும்
காட்டுவை யென்னும் நோக்காற்
கருத்தழி யாம லுள்ளேன்
காட்டிடக் கடனுங் கொண்டாய்
காட்டெனக் கேட்பார் தமக்குக்
காட்டிடு காட்டி டென்றேன்
காட்டுக கருணை யானே. 10

வேள்ளகால், திருவாளர் ராவ் சாஹேப் V. P. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C., (Retired Dy. Superintendent of the Civil Veterinary Dept.) அவர்களுக்கு 1937-ம்ஹு ஆகஸ்டுமூ 1-உ ஞாயிற்றுக்கிழமை எண்பதாம் ஆண்டு பூர்த்தியாகின்றது.

திரு. முதலியார் அவர்கள் நம் தமிழ்நாட்டில் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தவர்கள். பழுத்த தமிழ்ப்புலமை வாய்ந்தவர்கள். சென்ற அறுபது ஆண்டுகளாகத் தமிழ்த்தாய்க்கு அருந்தொண்டு புரிந்தவர்கள். அவர்கள் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து பென்ஷன் பெற்றவர்களாயினும், தமிழ் நூல்களை ஆராய்வதையும் தமிழ்க் கவிகள் இயற்றுவதையும் அவகாசமாகக் கொண்டவர்கள். அவர்கள் புதிய நூல்கள் பல எழுதி, தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும் அபிவிருத்தியடையும்படி செய்திருக்கிறார்கள். ஆங்கிலக் கவியான மில்டன் எழுதிய சுவர்க்க நீக்கம் (Paradise Lost) என்னும் அரிய நூலைத் தமிழில் விருத்தப்பாவில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். கம்பராமாயணத்திலுள்ள இனிய கவிகளைத் திரட்டி அவைகளுக்கு விளக்கவுரை முதலியன எழுதி, கம்பராமாயண சாரம் என்று புத்தக வடிவில் வெளியிட்டு, தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் பெரியதொரு பணியியற்றி வருகிறார்கள். இன்னும் அவர்கள் நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம், அகலிகை வெண்பா முதலிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களும், தமிழ் மொழிப்பற்றுள்ள மற்றவர்களும், இத் தமிழ்ப் பெரியாரின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி, முதலியார் அவர்களிடம் தமக்குள்ள நன்றியறிவைப் புலப்படுத்தவும், தமிழ்த் தாய்க்கு அவர்கள் செய்துள்ள அருந்தொண்டைப் பாராட்டவும் விரும்புவார்கள் என்பது திண்ணம். ஆதலால், அவர்களது எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கீழ்க்கண்ட முறையில் நடத்த எண்ணியிருக்கிறோம்.

(i) திருநெல்வேலியில், பெரியார் ஒருவர் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டி, அக்கூட்டத்தில் முதலியார் அவர்களுக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தல்.

(ii) விழாவிற்குரிய பெரியாரை நன்கு அறிந்தவர்களைக் கொண்டும், அவர்களோடு பழகியும், அவர்களது நூல்களைப் படித்தும், குணாதிசயங்களை அறிந்து அனுபவித்துமுள்ளவர்களைக் கொண்டும் கட்டுரைகள் எழுதச்செய்து அவைகளை அப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றோடு எண்பதாம் ஆண்டு நிறைவு விழா மலர் ஒன்று வெளியிடுதல்.

(iii) அப்பெரியாரது பெயர், தமிழ் நாட்டில் என்றும் நின்று நிலைபெறும்படி இவ்விழாவில் வசூலிக்கும் பணத்தை, (சுமார் ரூ. 3000 வரை) ஒரு தமிழ்ப் பணிக்குச் செலவு செய்தல்.

அந்த விழாவிலே, தாங்களும் கலந்துகொள்ள விரும்புகின்றோம். இவ்விழாச் சம்பந்தமான தங்கள் கருத்தைத் தெரிவிப்பதோடு, தங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

பணம் அனுப்ப விரும்புவோர், திருநெல்வேலி, தென்னிந்தியா பாங்க் ஏஜெண்ட், திருவாளர் V. S. ஆறுமுகம் பிள்ளையவர்களுக்கு அனுப்பலாம்.

இப்படிக்கு,

S. குமாரசாமி ரெட்டியார் —தலைவர்.
V. S. ஆறுமுகம் பிள்ளை —பொக்கிஷதார்.
P. ஆவுடையப்ப பிள்ளை
J. சக்கரபாணி நம்பியார் —அமைச்சர்.

செந்தமிழ் மாநாடும் இந்திமொழியும்

திருச்சி ஜில்லா, கருவூரிலிருக்கும் ஈழத்துச் சிவானந்த அடிகளார் இந்திமொழியைத் தமிழ்நாட்டில் எக்காரணத்தைக் கொண்டும் புகுத்துவதற்குத் தமிழ் மக்கள் இடங்கொடுத்த லாகாதென்பது காரணமாக விரைவில் ஒரு மாநாடு கூட்ட முயற்சிசெய்து வருகின்றார்கள். அம்மாநாடு இனிதே நடைபெறுவதற்குப் பொருளில்லாமல் முடியாது. தமிழ்ப் புலவர்களும் தமிழ்மக்களும் பொருளுதவிசெய்து அம்மாநாட்டிற் கலந்து அதனை இனிது நடைபெறச் செய்வார்களாக.

இந்த ஜூலைத் திங்கள் ஏழாம்நாள் இந்தியப் பேரியக்கமாகிய காங்கிரஸ் கொள்கையினர் பதவியேற்றுப் பணிசெய்ய முடிவு கட்டியமை ஒத்துழைப்பியக்கத்தின் வெற்றிக்கு அறிகுறியாகும்.



கம்பராமாயண சார ஆசிரியர்

ராவ் சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.

எண்பதாம் ஆண்டு



சிலம்பு-௧௫]   ஈசுவர—ஆடி   [பரல்-௧௨

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

சித்தத்தொகைத்—திருக்குறுந்தொகை

ஆதி யாயவ னாரும் இலாதவன்
போது சேர்புனை நீண்முடிப் புண்ணியன்
பாதி பெண்ணுரு வாகிப் பரஞ்சுடர்ச்
சோதியுட் சோதியாய் நின்ற சோதியே.

பதவுரை:—

பரஞ்சுடர்—பேரொளிப் பொருளாயுள்ள சிவபெருமான் ஒருவனே

சோதியுள் சோதியாய் நின்ற சோதி—(தனது சிறப்பியல்பில்) தூவெளி ஒளியாயும், அத்தூவெளி ஒளியை வியாபித்து அதற்கு உள்ளொளியாக விளங்குகிற அருட்சத்தியினொளியாயும், அவ்வருட்சத்தி ஒளியை வியாபித்து விளங்குகிற இன்ப ஒளியாயுமிருக்கின்றான்;

அவன்—மேலே கூறப்பட்ட சிவபெருமான்;

பாதிபெண் உருவாகி—(உயிர்கள் பொருட்டு ஐந்தொழில் செய்தற்குப் பொது இயல்பில்) தனது திருமேனியின் இடது பாதியில் உமாதேவியை உருவாகக்கொண்டு

ஆதி ஆரும் இலாதவன் ஆய்—உயிருலகிற்கும் உயிரிலுலகிற்கும் தன்னைத்தவிர வேறே ஒரு தலைவனில்லாதவனாய்

போது சேர்புனை நீண்முடிப் புண்ணியன்—மலர்களணிந்திருக்கிற அழகிய நீண்ட சடையை உடைய அறவாளனாயிருக்கின்றான்.

விளக்கவுரை:—

பரஞ்சுடர்—பேரொளி; அது பேரொளிப் பொருளாகிய சிவபெருமானைக் குறிக்கிறது. சிவபெருமான் எவ்வகை ஒளிகளுக்கும் நிலைக்களமாயிருத்தலினால் அவனை அடிகள் பரஞ்சுடர் என்றார். மாணிக்கவாசக அடிகள் அவனைத் திருவெம்பாவை முதலாவது பாட்டில் "ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி என்று" கூறியிருத்தல் காண்க.

சோதியுள் சோதியாய் நின்ற சோதி—முதலாவது சோதி தூவெளி ஒளி (ஞானாகாச ஒளி)யையும், இரண்டாவது சோதி அருட்சத்தியின் ஒளியையும், மூன்றாவது சோதி சிவபெருமானது இன்ப ஒளியையும் குறிக்கின்றன. அருட்சத்தியி னொளியானது தூவெளி ஒளியை வியாபித்து நின்று அதனை விளக்கும் உள்ளொளியாக இருத்தலால் அவ்வொளியை அடிகள் 'சோதியுள் சோதி' என்றார்.

"அண்டங்க ளேழுங்க டந்தகன் றப்பாலும், உண்டென்ற பேரொளிக் குள்ளா முள்ளொளி, பண்டுறு கின்றப ராசத்தி யென்னவேகொண்டன னன்றிநின் றானெங்கள் கோவே," என்று திருமூலர் திருமந்திரம் 2388-வது பாட்டில் தூவெளிஒளிக்கு அருட்சத்தி ஒளியானது உள்ளொளியாக யிருத்தலைக் கூறியிருத்தல் காண்க. சிவபெருமானது இன்ப ஒளியானது வீடுபேறடைந்த ஆன்மாக்களுக்கு எப்பொழுதும் நிலைபேறான ஒளிவிளக்கமுடையதாயிருத்தலால் அடிகள் அதனை 'நின்ற சோதி' என்றார். நின்ற என்னும் பெயரானது ஒருநிலைத்தாயுள்ள இன்ப ஒளியினது பேரா இயற்கை அதற்கு இயல்பாயிருத்தல்பற்றி நிற்கின்ற என்று முக்காலத்திலும் ஒத்தியல் நிகழ்காலத்தாற் கூறற்பாலது, நின்ற என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது.

சிவபெருமான் இன்ப ஒளியனாயிருத்தல்பற்றி அவனை இன்ப உருவன் என்று உமாபதி சிவாசாரியார் திருவருட்பயன் இன்புறு நிலை அதிகாரம் கூ-வது பாட்டில், "இன்பதனை எய்துவார்க் கியுமவர்க் குருவமின்ப கனமாதலினாலில்" என்று கூறுகின்றார். அவன் இன்பநிறை உருவனாதலின் அன்றோ தன்னை அடைந்த எல்லா ஆன்மாக்களுக்கும் இன்பம் குறையாது அருள் செய்கின்றான். இதிற் கூறப்பட்ட தூவெளிஒளி முதலிய மூன்று ஒளிகளும் முறையே வியாபக வியாப்பிய பேதங்களுடையனவாயுள்ளன.

ஓதியாரும் அறிவாரில்லை என்ற முதற்குறிப்புடைய திருஞான சம்பந்த அடிகள் தேவாரப்பாட்டிற்போல இத்தேவாரப்பாட்டிலும் மூன்று ஒளிகள் கூறப்பட்டிருக்கின்றன.

இப்பாட்டில் "ஆதிமுதலாயவ னாருமிலாதவன் போது சேர்புனை நீண்முடிப் புண்ணியன் பாதி பெண்ணுருவாகி" என்ற பகுதியை அவன் பாதி பெண்ணுருவாகி ஆதி ஆருமிலாதவனாய்ப் போது சேர்புனை நீண்முடிப் புண்ணியன் என்று உரைநடை செய்க அவன்—எழுவாய்; புண்ணியன்—பயனிலை.

பாதி பெண் உருவாகி—சிவபெருமான் தனது திருமேனி இடது பாகத்தில் அருட்சத்தியாகிய பெண்ணுருவோ டமர்ந்திருப்பது உயிர்களுக்காக ஐந்தொழில் செய்து அநுக்கிரகம் செய்யும் பொருட்டு ஆதலின் அந்த மாதிருக்கும் பாதி உருவம் அவனது பொது இயல்பைக் குறிக்கிறது.

ஆதி ஆரும் இலாதவன் ஆய்—ஆதி - தலைவன் - இறைவன். சிவபெருமான் தனது அருட்சத்தியால் அறிவிலுலகினை இயக்கியும் அறிவுலகை அறிவித்தும் இயக்கியும் செய்கின்ற முழுமுதற் கடவுள் ஆதலின் அடிகள் 'ஆதியாருமிலாதவனாய்' என்றார்.

போது சேர்புனை நீண்முடிப்புண்ணியன்—புனை—அழகு.

முடி—தலையினுச்சி.

நீண்முடி என்றதனால் அது இங்கே தலை உச்சியிலுள்ள சடையைக் குறிக்கிறது ஆகுபெயர்.

புண்ணியன்—உலகினைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள்செய்யும் அறவாளன்—நீண்முடிப் புண்ணியன் என்றதனால் அவனது ஆற்றல் குறிக்கப்பட்டது. இங்ஙனம் சிவபெருமான் சிறப்பியல்பையும் பொதுவியல்பையுமுடைய முழுமுதற் கடவுளாயிருத்தலின் மக்களே நீங்கள் அவனை வழிபட்டு உய்மின் என்பது குறிப்பெச்சம்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

ஆராய்ச்சிப் பகுதி : Research

திருவள்ளுவர்

[4-6-36-இல் கோவைத் தமிழ்ச்சங்கத்தில் திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்டத்தன்று]

துடிசைகிழார் திரு. அ. சிதம்பரனுர் அவர்கள் நிகழ்த்திய தலைமை யுரை

(௩௪௨-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(3) பெயர்

நம் நாயனுடைய பெயர்கள்

(1) முதற் பாவலர்
(2) நாயனுர்
(3) தேவர்
(4) தெய்வப் புலவர்
(5) செந்நாப் போதார்
(6) நான்முகனுர்
(7) மாதானுபங்கி
(8) பெருநாவலர்
(9) வள்ளுவர்

என இலக்கியங்களில் விரவிவரக் காண்கின்றோம். இவைகளை எல்லாம் ஆராயுமிடத்து, இவைகள் அவருடைய காரணப் பெயர்களா யிருக்கின்றனவே யல்லமால் வேறல்ல.

இவ்வொன்பது பெயர்களுள் "வள்ளுவர்" என்பது அவருக்கு அரசரால் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர்.

ஆகையால், அவருக்கு உள்ள இயற்பெயர் என்ன என்று ஆராயுமிடத்து, அவரோடு ஒரு காலத்திருந்த புலவர் பெருமானுகிய கோடிஞாழல் மாணிபூதனுர் என்பவர்,

"அறன்அறிந்தேம் ஆன்ற பொருள்அறிந்தேம் இன்பின்
திறன்அறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறன்எறிந்த
வாளார் நெடுமாறன் வள்ளுவனுர் தம்வாயால்
கேளாதன வெல்லாம் கேட்டு"

என்று அவருடைய இயற்பெயரையும் பட்டப்பெயரையும் சேர்த்துப் பாடியுள்ளதைநோக்க நமக்கு உண்மை வெளியாகின்றது,

சில பிரதிகளில் "நெடுமாறன்" என்னும் தொடரில் உள்ள னகர வொற்றை விட்டுவிட்டு அச்சடித்துள்ளார்கள். அதனால் பொருள் கெட்டுவிட்டது. இம்மாணிபூதனார் பாடிய பாட்டால் இன்னும் என்ன தெரிந்துகொள்ளுகிறோம் என்றால், நெடுமாறன் என்று இயற்பெயரையுடைய நம் ஆசிரியருக்கு வள்ளுவர் என்ற பட்டம் உண்டென்றும், அப்பட்டம் பெற்றுப் பாண்டிய அரசனின் உள்மந்திரத் தலைமை வகித்திருந்தார் என்றும், சமயம் நேர்ந்தழி சண்டைக்கும்போய் வாள் என்னும் ஆயுதத்தைத்தாங்கிச் சண்டைசெய்து மறங் கடிந்து பாண்டியனுக்குக் கீர்த்தியை விளங்கச்செய்தவர் என்றும் அறிகிறோம்.

மாறன் என்னும் பெயரைத் தமிழ் நாட்டில் எல்லாரும் வைத்துக்கொள்வதைச் சர்வசாதாரணமாகப் பார்க்கலாம்.

(4) தொழில்

இனி நமது நெடுமாறன் வள்ளுவனார் நெசவுதொழில் செய்து வாழ்க்கை நடத்திவந்தார் என ஒரு சாரார் கூறு கின்றனர். இந்த வரலாறும் 'கபிலர் அகவலை'ப்போன்ற ஒரு புனைந்துரையே.

கபிலர் அகவலுக்கு "ஆதிபகவன்" என்ற சொற்றொடர் காரணமாயிருந்ததுபோல, இவ்வரலாற்றுக்கும் நம் நாயனார் பாடிய ஒரு தனிப்பாடலே காரணம்.

அப்பாடல் வருமாறு:—

"பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாமிருக்க—நாவில்
இழை நக்கி நூனெருடும் ஏழை யறிவேனோ
குழை நக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து"

இதில் நம் நாயனார் உவமையாகுபெயராகச் சொன்னஃது உள்ளபடி பொருள் செய்துகொண்டார்கள். அதனால் பொருள் மாறுபட்டது.

"பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாக
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன் முடியுமாறு"

என்ற இலக்கண நூற் செய்யுளைக்கொண்டு அத்தனிப் பாடலுக்குப் பொருள் கொண்டால் உண்மைப்பொருள் கிடைக்கும். அப்பாடலின் பொருள்:—

" நாவில் — நாப்பழக்கத்தால்
இழை நக்கி — பனுவல்களைச் செய்து
நூல்நெருடும் — நூற்களை முடிக்கும்
ஏழை — செஞ்சொற் புலவனாகிய நான்
அறிவேனோ — அறியக் கூடுமா ?"

என்பதே. அப்பாடலில் மற்ற அடிகள் வெளிப்படை.

ஆகையால், இப்பாடலை ஆதாரமாகக் கொண்டு வள்ளுவருக்குத் தொழில் நெசவு என்று தீர்மானிப்பது இழுக்குடையதே.

இது விஷயமாக நமது கோவைத் தமிழ்ச் சங்க அமைச்சரும், கொங்குமலர் ஆசிரியருமாகிய இராவ் சாகிப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம் :—

" ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட தொழிலைத் தன் வாழ்க்கைக்குரிய தொழிலாகக் கொள்வான் ஆனால், அவன் பேசும் பேச்சிலும், எழுதும் எழுத்திலும், அத் தொழிலைப் பற்றிய சில கருத்துக்களையேனும் குறிப்பிட்டே தீர்வான். கருத்துக்கள் இல்லாமற் போனபோதிலும், அத்தொழிலில் அவன் கையாண்ட உபகரணங்களைப்பற்றியாவது கூறி விடுவான்.

இவ்வகையில் திருவள்ளுவர் திருக்குறளில் என்ன காண்கின்றோம்? (ஒன்றுமே இல்லை).

திருவள்ளுவர் நெசவைப் பற்றியாவது, நெசவுத் தொழிலில் பயன்படும் தறி—தறியின் பாகங்கள், நூல்—துணி—அவைகளைப் பக்குவப்படுத்தும் முறைகள், துணி விற்பனை முதலான பல பொருள்களைப். பற்றியாவது தம் நூலில் எங்கேயாவது குறிப்பிட்டுள்ளாரா ?" (இல்லையே) என்று கூறுகிறார்.

ஆகையால், திருவள்ளுவர் நெசவுத்தொழிலை மேற்கொண்டிருந்தார் என்பது வெறும் கட்டுக் கதையாகும். உவமையாகுபெயரை உண்மையாகக் கொண்டு மோசம்போன கதையேயாகும்,

ஆனால், திருக்குறளில் என்ன காண்கின்றோம் ?

" உழவு" என்ற தனி அதிகாரமும் உழவின் சிறப்பைப் பற்றியும், உழுதுண்போர் உழுவித்துண்போர் ஆகிய வேளாண் பிரபுக்களுடைய "விருந்தோம்பலை"ப்பற்றியும் காண்கின்றோம்.

உழவுத் தொழிலைப்பற்றிய சிறப்புக்களை அவ்வாறு விரித்துக் கூறுவதற்கு உழவையே தம் மரபுத் தொழிலாகக் கொண்ட ஒருவரால் முடியுமேயொழிய வேறு எவராலும் முடியாது.

அதற்குத் தக அவர்தம் வாழ்க்கைத் துணைவியாரும் உழவுத் தொழிலைத் தம் மரபுத் தொழிலாகக் கொண்ட ஒருவருடைய புதல்வியாகையால், அவ்வம்மையார் நம் நாயனுருக்கு நெசவுத் தொழிலில் உதவி செய்து கொண்டிருந்தார் என்று கொள்வது பொருத்தமில்லை.

ஆகையால், நம் நாயனுருடைய குலத் தொழில் 'உழவு' என்பதும், உழுவித் துண்ணும் வேளாளர் அமைச்சராகவும், சேனாதிபதிகளாகவும், உள் மந்திரத் தலைவராகவும் இருப்பது அக்கால வழக்கு ஆதலால் அதன் பிரகாரம் உள் மந்திரத் தலைவராக இருந்து வாழ்ந்தவர் என்றும் அறிகிறோம்.

(5) சமயம்

இனி நம் நாயனுருடைய சமயம் யாது? என ஒரு ஆசங்கை நிகழும். "அவர் ஒரு சமயத்தையும் சேர்ந்தவர் அல்லர்" என்று சிலர் வாய் கூசாது மொழிந்து விடுகின்றனர்.

அப்படி அவர்கள் கொள்வதற்கு வள்ளுவருடைய பொது நோக்கே காரணமாகும். அப்படிப் பொது நோக்குடைய சமயம் யாது? என ஆராய்ந்தால்,

> "யாதொரு தெய்வங் கொண்டீர்
> அத்தெய்வ மாகியாங்கே,
> மாதொரு பாகனூர் தாம் வருவர்"

என்ற பொதுக் கொள்கையை உடைய சமயம் எதுவோ அதுதான் நம் நாயனுருடைய சமயமும். அதுதான் "சைவ சமயம்"

சைவசமயக் கொள்கைகளை உடையார் ஒருவரை எம்மதத்தினரும் தம்மவர் என்று கூற முடியும். ஏனென்றால், எல்லா மதக் கொள்கைகளையும் சோபான முறையால் தனக்குள் அடக்கிக் கொண்டிருப்பது சைவசமயமே.

நம் நாயனூர் பொதுப்படக்கூறிப் போந்தாரேனும் தாம் இன்ன சமயத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பாகக் காட்டாமல் இல்லை. அக்குறிப்பை முதற்குறளிலேயே வைத்திருக்கிறார்.

சங்கப் புலவர்களில் பலர் அம்மாதிரி செய்து காட்டியிருக்கிறார்கள்.

"பகவன்" என்னும் சொல்

"பகவனே, ஈசன்—மாயோன்—பங்கயன்—சினனே—புத்தன்"

என்ற ஐந்து பேர்வழிகளையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல் ஆகும்.

அப்படி நமது நாயனார், பகவன் என்ற சொல்லை மாத்திரம் உபயோகப்படுத்தி இருப்பாரேல் நாம் தடுமாற வேண்டியதுதான். ஆனால் அவர் பகவன் என்ற பொதுச்சொல்லுக்கு "ஆதி" என்ற அடைமொழியைக் கொடுத்ததுதான் சிறப்பு. அவருடைய ஆற்றல் இன்னதென அதனால் விளங்குகிறது.

சங்கநூல்களில் ஒன்றாகிய "இன்னா நாற்பதை" எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒரு அடி,

"முக்கட் பகவன் அடி தொழாதார்க்கு இன்னா" என்று வருவதைப் பார்க்கலாம்.

இங்கே பாருங்கள். பகவன் என்ற பொதுச்சொல்லையும், அச்சொல்லின் பொதுத்தன்மை போகும்படி "முக்கண்" என்ற அடைமொழியையும் கொடுத்திருக்கிறார். ஆகையால், இவ்வடிக்கு ஒருவர் "ஈசன் அடி தொழாதார்க்கு இன்னா" என்று பொருள் கொள்ள வேண்டுமேயொழிய வேறு விதமாய் பொருள் கொள்ளுவதற்கு முடியாது

அதுபோல, குறளிலும் "ஆதி" என்ற அடைமொழி "பகவன்" என்னும் சொல்லுக்கு இருப்பதால் ஆதிபகவன் என்னும் தொடருக்கு ஈசன் என்றே பொருள் கொள்ள வேண்டும். எப்படியென்றால், சிருட்டி ஆரம்பத்தில் நின்மல சிவத்திடமிருந்து பரை—ஆதி—இச்சை—ஞானம்—கிரியை ஆகிய ஐந்து சத்திகள் தோன்றும்.

பரை என்னும் சத்தி அபின்ன சத்தி, சூரியனும் கிரணமும் போல.

ஆதிசத்தியே பிரிந்து சிருட்டிக்கு ஆதாரமாயுள்ள சத்தி. அதனால் நமது நாயனாரும் "ஆதி பகவன்" என்றார். அகரம் எப்படி எழுத்துக்கள் எல்லாம் பிறப்பதற்குக் காரணமாயிருக்கின்றதோ அப்படியே "ஆதி சத்தியோடுங் கூடியபகவனும் உலகம் தோற்றுவதற்குக் காரணமாயிருக்கின்றான்" என்றார்.

ஆதி சத்தியோடுங் கூடியவர் மாயோன்—பங்கயன்—சினன்—புத்தன் ஆகியோர் ஆகமாட்டார்கள்.

ஆகையால், நமது நாயனர் ஆதி சத்தியோடுங்கூடிய ஈசனை வணங்கும் சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயத்தவர் என ஐயமின்றிக் கூறலாம்.

இனி இவர் தம் நூலில் ஏனைய சமயங்களைக் கண்டித்துக் கொண்டு போகும் முறையினைக் கூர்ந்து நோக்கினுலும், 'நாம் இந்த முடிவுக்கே வந்து சேர்வோம்' என்பது தேற்றம்.

(6) காலம்

இனி நம் நயனருடைய காலம் எதுவென ஆராய்வாம்.

சங்கப்புலவராகிய கபிலர் தம்முடைய நூல்களில் திருக்குறளின் கருத்துக்களையும், சொற்களையும் எடுத்து ஆண்டுள்ளார். உதாரணமாக:—

குறள்:—"சமன் செய்து சீர்தூக்குங்கோல்போல் அமைந்தொருபால்

கோடாமை சான்றோர்க் கணி" என்ற குறளை

கபிலர்:—"ஓர்வுற் றொருதிறம் ஒல்காத நேர்கோல் அறம்புரி நெஞ்சத்தவன்" என்னும் பாட்டில் அமைத்துள்ளார்.

குறள்:—"கூற்றுடன்று மேல் வரினும் கூடி எதிர்க்கும்
ஆற்ற லதுவே படை" என்ற குறளை

கபிலர்.—"கூற்றம் வரினும் தொலையான்றன் நட்டார்க்குத் தோற்றலை நாணுதேன்" என்ற பாட்டில் அமைத்திருக்கிறார்

இப்படியே இன்னும் பல உள. ஆகையால், திருவள்ளுவருடைய காலம் கபிலருடைய காலத்துக்குக் குறைந்தது ஒரு நூற்றாண்டாவது முந்தி இருக்கவேண்டும்

கபிலருடைய காலம் கி. பி. 50 முதல் கி. பி. 125 வரை என்று திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கண்டுள்ளார்.

ஆகையால், நெடுமாறன் திருவள்ளுவருடைய காலம் கி. மு. முதல் நூற்றாண்டு என்று நிச்சயிக்கலாம்.

நமது நெடுமாறர் காலத்தில் பாண்டிநாட்டில் அரசு புரிந்து வந்தவர் "பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்

வழுதி" என அறிகிறோம். இப்பெரும்பெயர் வழுதி கி. மு. 50 முதல் கி. பி. 30 வரை அரசாண்ட இணையற்ற வீரன். வாட் சண்டையில் கீர்த்திவாய்ந்தவன். இவ்வரசனைப்போலவே இவ்வரசனுடைய உள்மந்திரத் தலைவராகிய நம் வள்ளுவனாரும் வாட்சண்டையில் நிகரற்றவர். அதனாலேயே அவரை "வாளார் நெடுமாறன்" என்று மாணிபூதனார் கூறினார்.

இப்பெரும்பெயர் வழுதியும் சோழநாட்டில் அரசாண்ட முதலாங்கரிகாலனும் ஒருகாலத்தவர் ஆவர்.

ஏனென்றால், முதலாங்கரிகாலனின் நன்மாமனும் அரும் புலவனும் ஆகிய இரும்பிடர்த் தலையர் இப்பெரும்பெயர் வழுதியை புறம்—3-ம் பாட்டில் பாடியுள்ளார். ஆகையால், நம்நாயனாருடைய காலமும் கி. மு. முதல் நூற்றாண்டே என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

(7) திருக்குறள் பாடிய காரணம்

புறநானூற்றுப் பாட்டாலும், கல்வெட்டுக்களாலும், பாண்டியன் புத்தகசாலையில் அகப்பட்ட சான்றுகளாலும், நமது நெடுமாறன் வள்ளுவனார் வழுதி என்றபெயர் வாய்ந்த பாண்டிய அரசன் காலத்தில், அவ்வரசனுக்கு நெருங்கிய நண்பராகியும், உள்மந்திரத் தலைவராகியும் இருந்தவர் என்று ஏற்படுகிறது. அப்படி இருக்கும்பொழுது, 'வழுதி' என்னும் பாண்டிய மன்னன், நமது புலவர் சகலகலைகளிலும் வல்லவராகி ஒழுக்கத்திலும், புத்தியிலும், அரசாங்கக் காரியங்களிலும், செய்யுள் இயற்றுவதிலும், நீதிவழங்குதலிலும், வீரத்திலும், அறத்தைக் கடைப்பிடிப்பதிலும், மன்பதைகளின் மனோபாவத்தைத் தெரிந்துகொள்ளக்கூடிய உடல் நூல்—உள நூல் முதலிய நூற்களிலும், தத்துவநூற்களிலும் இணையற்று விளங்குவதை நோக்கி, ஒரு நூல் எக்காலத்திலும், எவ்விடத்திலும், எல்லாராலும் போற்றக்கூடிய முறையில் பாடிக் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள, அவ்வண்ணமே நம்நாயனார் பாடிமுடித்தார் என்பதை,

"தப்பா முதற்பாவால் தாமாண்ட பாடலினால்
முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள்ளுவர்".

என்ற கீரந்தையார் பாட்டால் அறிகிறோம்.

கீரந்தையாரும் வழுதி என்னும் பாண்டியன் காலத்தில் கி. மு. முதல்நூற்றாண்டில் வாழ்ந்தவர். மேலேகூறிய பாட்

டில் 'வழுதி' என்றசொல் பாண்டியர்களின் பொதுப்பெயர் அல்ல, பாண்டிய அரசன் பெரும்பெயர் வழுதியையே குறிக்கும்.

வழுதி என்னும் பாண்டிய மன்னன் கி. மு. முதல் நூற்றுண்டில் பாண்டியநாட்டில் அரசாண்டபோது, முதலாங் கரிகாலன் சோழநாட்டிலும், நெடுஞ்சேரலாதன் இமய வரம்பன் என்பவன் சேரநாட்டிலும் அரசாண்டார்கள். இவ்விமயவரம்பன் மனைவி வேள்மான் ஆவிக்கோ என்னும் வேளிர்குலத் தலைவருடைய மகள் பதுமன் தேவி. இவன் கி. மு. 46 முதல்-கி. பி. 12 வரை அரசாண்டவன். இவன் முதலாங் கரிகாலனோடு வெண்ணி என்னும் இடத்தில் சண்டையிட்டு முதுகில் புண்பட்டதால் வடக்கிருந்து, கி. பி. 12-ல் உயிர்துறந்தவன். (புறநானூறு).

(8) திருவள்ளுவருடைய பிற்காலம்

நமது நாயனர் பாண்டிய நாட்டில் பிறந்து, வளர்ந்து, அரசாங்க உயர் பதவியில் நின்று காலங்கழித்து, திருக்குறளையும் பாடி அரங்கேற்றியவுடன், பாண்டிய மன்னனிடம் உபகாரச்சம்பளம் பெற்று ஆறுதலடைந்திருக்கும் காலத்தில், தமது உண்மை நன்பனுகித் தொண்டைமண்டலத்தில் திருமயிலையில் இருந்த ஏலேலசிங்கன் என்பவரிடத்தில் சிலகாலம் வசிக்க எண்ணி அங்குச்சென்று, மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலையில் எழுந்தருளி யிருக்கும் கபாலீச்சரருடைய தரிசனம் செய்து கொண்டு, அவ்வேலேல சிங்கரோடு இனிது வாழ்ந்துவந்தார்.

அப்படி இருக்கும்போது, மயிலை ஒரு குருகுலமாக விளங்கிற்று. பல யோகிகளும், ஞானிகளும், புலவர்களும் ஏனையோரும் திரள் திரளாக வந்து ஐயம் தெளிந்து செல்லுவார்கள்.

தட்சணமூர்த்தி, எப்படி சொல்லாமற் சொல்லி குறிகளினலேயே பிறருடைய சந்தேகங்களை நீக்குவாரோ, அது போல நம் நாயனரும் சந்தேகம் கேட்க வருபவர்களுடைய ஐயங்களைத் தம்முடைய வாழ்க்கை நடவடிக்கைகளினலேயே நீக்கிவந்தார்.

இப்படிச் சிலகாலம் வாழ்ந்துவந்து, பெரும்பெயர் வழுதி இறந்தபின் மதுரையம்பதிக்குப்போக மனமிலராய், திருமயிலையிலேயே ஆசில் பரமுத்தியை அடைந்தார்.

இவர் முத்தியடைவதற்குச் சின்னாள் முன்னரே இவரது மனைவி வாசுகி அம்மையாரும் பரமுத்தி யெய்தினர் என்பதை நம் நாயனர் பாடிய "அடிசிற் கினியாளே......" என்ற பாடலினால் அறியலாம்.

கி. பி. 30-ல் பெரும்பெயர் வழுதி காலம் சென்றபின், நமது நாயனர் கி. பி. 36-ல் பரமுத்தி அடைந்திருக்கவேண்டுமென்று ஊகிக்க இடம் தருகின்றது.

நமது பெருநாவலர் பாடிய "மருந்து" என்னும் அதிகாரத்தைப் பார்க்குமிடத்து, அவர் உடல்நூல் நன்கு தெரிந்தவர் என்றும், மிதமான வாழ்க்கையை நடாத்தி நீண்டகாலம் இருந்தவர் என்றும் கொள்ளவேண்டியிருக்கிறது அப்படிக் கொண்டால், அவர் நூறுண்டுக்குக் குறையாமல் உயிர் வாழ்ந்திருக்க வேண்டும். அப்படியானல் அவருடைய காலம் கி. மு. 75 முதல் கி. பி. 36 வரை ஆகும்.

(9) முடிவுரை

மேல்நாடாகிய ஐரோப்பாவில் புலவர் வரலாறுகளை ஆராயும்போது, சரித்திரக் குறிப்புக்கள் கிடையாமற்போனபோதிலும், புலவர்கள் தம்நூலில் எழுதிய எண்ணங்களைக் கொண்டு அப்புலவர்களுடைய சரித்திரங்களை எழுதுவது உண்டு.

ஒவ்வொரு புலவனும் தன்னுடைய எண்ணங்களையும், தன்னுடைய வழக்க ஒழுக்கங்களையும், தன்னுடைய காலத்தில் உண்டான உலக நடவடிக்கைகளையும் தன்னுடைய நூலிற் புகுத்தியிருப்பான்.

அம்முறையையே இப்பொழுது நாம் கையாடி அவருடைய சரித்திரத்தை ஒருவாறு தொகுத்துக்கூறினும்.

இதுகாறும் கூறியதாவது :—

நம் நாயனர் மதுரையம்பதியில் வேளிர்குலத்தில் கி. மு. 75-ல் பிறந்து, மாறன் அல்லது நெடுமாறன் என்ற இயற்பெயரோடு விளங்கி, சகலகலைகளையும் கற்று, அதன்படி ஒழுக்கம் வாய்ந்து, மார்க்கசகாயப் பிரபுவின் குமாரத்தியான வாசுகி அம்மையாரை மணந்து, அக்காலத்தில் அரசாண்ட கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதியின் ஆசிபெற்று, அமைச்சராம் பதவிபெற்று, பிறகு உள்மந்திரத் தலைவர் ஆகி வள்ளுவர் என்னும் பட்டம்பெற்று, வழுதியின் வேண்டுகோளின்படி திருக்குறளைப் பாடிச் சங்கத்தில் அரங்கேற்றி,

பாண்டிய மன்னனிடம் உபகாரச் சம்பளம்பெற்று, பாண்டி நாட்டைவிட்டு நீங்கித் தம் உயிர்த்தோழராகிய, தொண்டை மண்டல திருமயிலைவாசியாகிய ஏலேலசிங்கரிடம் சிலகாலம் தங்கி, குருகுலம் நடாத்தி, பலபேர்களுடைய ஐயங்களைநீக்கி, தகுந்தமுறையில் இல்லறம் நடாத்தி, பல அறங்களைச்செய்து கொண்டிருந்து, வாசுகி அம்மையார் முத்தியெய்தியபின், கி. பி. 36-ல் பரமுத்தி எய்தினர் என்று கொள்ளக்கிடக்கின்றது என்பதே.

திருவள்ளுவ நாயனர் திருவடிவாழ்க.

தமிழ்மக்கட்கோரு வேண்டுகோள்

(சென்னை லயோலா காலேஜில் 29-7-37-ல் பேசியது).

தமிழ்மொழியைக் கைவிட்டு விடாதீர்கள். மணங்கமழும் மொழியாகும் தமிழ், இந்தியாவில் பண்டு தொட்டு இருந்து வருகிறது. தமிழ் மொழி என்றும் தனிமொழியாக விளங்கிவருகிறது. காலப்புயல்களும், மாறுதல்களும் இதனைச் சிறிதுகூட அசைக்கவில்லை. பலித்தீவிற்கும், இந்தியாவுக்குமிடையே பெரிய கடல் உண்டு. அத்தீவு நெடுந்தொலைவில் இருந்தும் அங்கு இன்னும் தமிழ்மொழி வாழ்கிறது.

அந்தக் காலத்தைய தமிழர் வீரத்தையும், நாட்டுப்பற்றையும் பற்றி நீங்கள் அறிவீர்களோ என்னவோ ! அவர்கள் உடல்வலிமை, போர்த்திறமை, அஞ்சாநெஞ்சுடைமை ஆகியவற்றை வரலாறுகள் கூறுகின்றன. வடநாட்டில் பல சிற்றரசுகள் மாற்ருர்க்கு அடிமையாய் விட்டன. ஆனல் தமிழ்நாட்டுச் சிற்றரசுகள் மட்டும் சிறிது காலத்திற்கு முன்புவரை தன்னுளுகையில் இருந்து வந்தன.

தமிழ்மக்கள் யாவரும் பொது வாழ்க்கையில் பெருமையடையத் தக்க சிறந்த பணி ஆற்றியிருக்கிருர்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஆகையால் தமிழில் பேச வெட்கப் படாதீர்கள்.

—டாக்டர் T. S. S. இராஜன்.
மக்கள் உடல்நலப் பாதுகாப் பமைச்சர்.

சேதுபதிகள் நாணயம்

[சீகாழி திரு. P. A. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்]

அனுபந்தம்

பால்வளைப் பற்ப நாபன் பங்கயப் பாதம் பாடிச்
சேல்விழித் திருவின் செல்வி செம்மலர் திகழச்செப்பி
நால்வகை நவின்று நாவின் நம்முதல் நாடி நற்செங்
கோல்புரி கொற்றக் கோமான் குவிதனம் குறித்துக்கொள்ள
சேதுபதிகள் திகழ்நா ணயச்செம்மை
ஓது பொருள்கூட் டுவேந்து.

சேதுபதி நாணயங்களின் உருவப்படத்தைப் பிரசுரிக்க அவகாசமின்மையின் அவற்றின் விவரம் சுருக்கமாய் இங்குக் காட்டப்பட்டுள்ளது. டாக்டர் டிரேவி, கேப்டன் டப்னல் முதலியவர்களது அபிப்பிராயத்தையும் நோக்கிக் கொள்க.

நிறை

அளவு	உத்தேசப் பிரமாணம்	திட்டப் பிரமாணம்
பெரிது	68 கிரேன்ஸ் (grs.)	50·58 கிரேன்ஸ்
நடுத்தரம்	34 ,,	34·40 ,,
சிறிது	17 ,,	17·20 ,,

மதிப்பு

சரியான சிங்கள நாணயம்	சரியான இந்திய டேனிஷ் நாணயம்	சரியான இந்திய டச்சு நாணயம்
8 மாஷா	20 காசு	20 காசு
4 ,,	10 காசு	10 காசு
2 ,,	4 காசு	5 காசு

1. சேதுபதி நாணயங்களின் விவரம்

தொடர்ச்சி எண்	செண்டி மீட்டரில் சுற்றளவு	ஓரத்தின் கனம்	நிறை: கிரேனில்	நிறை: செண்டி மீட்டரில்
	A. முற்காலத்தின் வர்க்கங்கள்			கிரேன்களை ·0648 ஆல் பெருக்கிக் கண்டுகொள்க.
1	2·15	·25	57	
2	1·8	·17	34	
3	2·1	·1	58	
4	1·9	·12	40	
5	1·9	·12	20	
6	1·6	·17	37	
7	1·8	·17	40	
8	1·6	·17	40	
	B. பிற்காலத்தின் வர்க்கங்கள்			
1	1·35	·22	54	
2	1·4	·2	58	
3	1·4	·2	58	
4	1·4	·2	58	
5	1·5	·2	53	
6	1·4	·2	58	
7	1·15	·3	20	
8	1·5	·2	52	
9	1·0	·2	17	
10	1·1	·17	18	
11	1·6	·17	19	
12	1·25	·2	26	
13	1·1	·17	17½	
14	1·25	·2	26	
15	1·25	·2	26	
16	1·25	·2	26	
17	1·1	·2	20	

1. மேலெழுத்தும் அடையாளமும்

தொடர்ச்சி எண்	சித்திரமும் மேல் வாசகமும்		ஷரா
	முன் பக்கம்	பின் பக்கம்	
	A. முற்காலத்தின் வர்க்கங்கள்		
1	அரசர் இருக்கும் நிலை. புஜத்திற்குக் கீழே சேது.	அரசர் நிற்கும் நிலை, வலப்பக்கம் முகமாக, வலப்பக்கம் நந்தி, இடப்பக்கம் உயர்ந்த விளக்கு.	இந்த நாணயம் பராக்கிரமபாகுவின் நாணயத்தைப் போன்றது.
2	ஷை	ஷை தவிர, நந்திக்குப் பதிலாக ஐந்து புள்ளிகள் உருவத்தின் வலது பக்கத்தில் உண்டு. சில சமயம் மத்தியில் புள்ளியோடு சுற்றுப் புள்ளிகள் வட்டமாகத் தோன்றும்.	ஐந்து புள்ளிகளும் முத்து முதலிய கடல்படு திரவியம் ஐந்தையும் உணர்த்தும். மன்னார் வளைகுடாவின் முத்துச் சலாபம் சேதுபதிகளுக்கு உரித்தாயிருந்தது; தங்கள் பேருக்குமுன் முத்து என்பதைச் சேர்த்துக்கொள்வார்கள். மற்றைப் பிற்கால நாணயங்களிலும் புள்ளிகள் முத்துக்களைக் குறிக்கும்.
3	ஷை	ஷை	
4	நந்தி இடப்பக்கம். சூரிய சந்திரர் மேலே, சேது கீழே. ஓரத்தில் இரண்டு கோடுகளுக்கு மத்தியில் புள்ளிகள். வெற்றிடத்தில் ஐந்து தொகுதியான புள்ளிகள்.	அரசர் இடது முகமாக நிற்கும் நிலை, வலதுகையில் வளைதடி, இடதுகையில் விளக்கு. முன்பக்கம் போலவே பின்பக்கத்திலும் ஓரங்கள்.	
5	ஷை	ஷை	
6	ஷை	ஷை	

7	இடப்பக்கம் நந்தி, அதைப் பார்த்துக்கொண்டு குக்குடம், கீழே சேது, மேலே சூரிய சந்திரர். ஓரத்தில் புள்ளிகள்.	அகன்ற மார்பும் இடையும், இடையில் பட்டிகை.	
8	நந்தி; கீழே சேது, மேலே சூரிய சந்திரர்கள். வெற்றிடத்தில் முப்புள்ளித் தொகுதிகள். இரண்டாவது எண்ணின் முன்பக்கம் போலவே ஓரம்.	இடம் முழுவதிலும் நிரம்பிய எட்டுக் கூர்களையுடைய நட்சத்திரம். இரண்டு கோடுகளி னிடையே புள்ளிகளையுடைய ஓரம்.	

சில நாணயங்களின் ஒரு பக்கத்தில் சேதுபதி என்பது நாகரி எழுத்தில் எழுதப்பட்டிருக்கும், மற்றப் பக்கத்தில் ஹனுமான் அல்லது கருடன் முதலியவை தோன்றும். இந்த நாணயங்கள் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவை. ஸ்ரீ தொண்டைமான் என்பது இங்குச் சேதுபதிகளைக் குறிக்கும். இப்படம் சோழர்களால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. புதுக்கோட்டை பிரிந்தபின் அம்மன்னருக்கே இப்படம் உரித்தாகிவிட்டது. இந்த அடையாளமுள்ள நாணயங்கள் இவ்வர்க்கத்தைச் சேர்ந்தவை.

B. பிற்காலத்தின் வர்க்கங்கள்

1	நந்தியின்மேல் சிவபிரான் இடதுமுகமாக முன்னே. இடப்பக்கம் சிவபிரான் குதிரையின் மேல் சேனை வீரராக.	சேதுபதி	சேது சிவஸ்தலங்களில் முக்கியமானது. இந்தத்தலத்தின் தெய்வங்கள் ஒன்று முதல் ஏழுவரை உள்ள நாணயங்களில் விளங்கும்.
2	கணேசர்.	ஷ	இது கணபதியைப் பூசித்த சேதுபதி காலத்தது. ஒன்றுமுதல் ஐந்துவரை யுள்ள நாணயங்களை ஒப்பு நோக்குமிடத்தில் பஞ்சமூர்த்திகளில் விநாயகப் பெருமானையே இது குறிக்கும் என்பது திண்ணம்.

தொடர்ச்சி எண்	சித்திரமும் மேல் வாசகமும்		ஷரா
	முன் பக்கம்	பின் பக்கம்	
3	ஐந்தாம் நம்பரின் வேறுபட்ட கணேசர்.	ஷை	
4	ஐந்தாம் நம்பரின் வேறுபட்ட மற்ருெரு கணேசர்.	ஷை	
5	மயிலின்மேல் முருகப்பிரான் முன்னே வலப்பக்கத்தில்.	ஷை	
6	முருகப்பிரான் மயிலின்மேல் இடப்பக்கத்தில்.	ஷை	
7	ஒரு தேள்.	ஷை	விருச்சிகராசி. இதனுல் இங்கு விதிப்படி ஸ்நானம் செய்பவர் கிரஹங்களால் நேரிடும் பீடைகளை நீக்கிக்கொள்வர்.
8	சிவபிரான் குதிரை வீரராகக் குதிரையின்மேல்.	ஷை	திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்ட லீலைகளில் ஒன்று. சிவபிரான் குதிரைகளைக் கொண்டு வந்தபோது இத்தலத்தின் கரையில் இறங்கினதையும் இதற்குக் காவலராகச் சேதுபதிகள் அமைந்ததையும் குறிக்கும். 8-10 நாணயங்களைப் பார்க்க.

9	ஷை இடப்பக்கமாக.	ஷை	
10	குதிரைக்குப் பக்கத்தில் சிவபிரான் குதிரை வீரராக.	ஷை	
11	ஸ்ரீராமபிரான் இடதுமுகமாக வில்லை வளைத்துக்கொண்டு.	ஷை	11-17 வரை ஸ்ரீராமபிரான் சேதுவைப் பூசித்த வரலாறு சேது புராணத்திற் காண்க.
12	இடப்பக்கம் சிவலிங்கப் பெருமானை ஸ்ரீராமர் பூசிப்பது.	ஷை	
13	மத்தியில் தாமரை ஓரங்களில் புள்ளி.	ஷை	தாமரை இலட்சுமி கடாட்சத்தையும் பதும நிதியையும் குறிக்கும். இத்தலத்தைத் தரிசிப்பவர் இந்த நற்பேறுகளைப் பெறுவார்.
14	ஸ்ரீராமர் வலது முகமாக.	ஷை	
15	பீடத்தின்மேல் சிவலிங்கம்.	ஷை	
16	இடப்பக்கம் ஹனுமான்.	ஷை	
17	சஞ்சீவியையுடைய பர்வதம்.	ஷை	இது துளசியைப் பூசித்த சேதுபதி காலத்தது. இது துளசியையாவது அமிர்த சஞ்சீவியையாவது சல்லிய கர்ணியையாவது குறித்து இத்தல வழிபாட்டால் இம்மை மறுமை இன்பங்கள் உண்டாகும் என்பதை விளக்கும்,

ப. அ. முத்துத் தாண்டவராயன்.

வரலாற்றுப் பகுதி: History & Biography

திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை

[வித்துவான், இரா சிவ. சாம்பசிவ சர்மா எழுதியது]

திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை என்னும் புலவர் பெருந்தகையார், சென்னைக் குயப்பேட்டையில் 1858-ம் ஆண்டில் பிறந்தவர். இவர் தந்தைக்கு இரு மனைவியர் இருந்தனர். அவர்களுள் இவர் மூத்த மனைவியாரின் புதல்வராவர். இவர் தந்தையும் பிறரும் வைணவமதத்தைச் சார்ந்த வன்னியர் குலத்தினராவர். இவர் காலத்தில், மிகவும் கீர்த்தி பெற்று விளங்கிய அஷ்டாவதானம் திருமயிலை சபாபதி முதலியாரும், கோமளபுரம் ராஜகோபால பிள்ளையும் தமிழ் மொழிக் கலைச்செல்வர்கள் என்று சொல்லலாம். சண்முகம் பிள்ளையவர்கள் முதலில் திருமயிலை சபாபதி முதலியாரிடம் சிறப்புறக் கல்வி பயின்று வந்தனர். அக்காலத்தில் இலக்கிய நூற்களின் எல்லையைக் கண்டறிந்த புலவர், சபாபதி முதலியார் அவர்களே ஆதலின் அப்புலவர்பெருமானிடம் விருப்புறச் சிறக்கக்கற்ற நம் பெரும்பேராசிரியராய்த் திகழ்ந்த சண்முகம் பிள்ளையவர்கள் பல இலக்கிய நூல்களைத் தெளிபொருள் விளக்கத்தோடு கற்றுணர்ந்தார். பின், இவர் இலக்கணக் கடலிற் படிந்து நீந்திக் கரை கண்டுணரவெண்ணித் திருவாளர் இராஜகோபால பிள்ளையவர்களிடம் சென்றார். இராஜகோபால பிள்ளையவர்கள் வைணவமதத்தினர். அவர் தம்மிடம் வரும் மாணவர்களுக்கு வைணவப் பரிநாமங்கள் இட்டழைப்பதை ஒரு விநோத விளையாட்டாகக் கொள்வார். அதன்படியே நம் புலவர்பெருமானார் சண்முகம் பிள்ளையவர்கள் சென்றதும் இவருக்குச் சீனிவாச சண்முகம் பிள்ளை என்ற பெயரைச் சூட்டினர். இங்ஙனமே வயித்திய நாத முதலியார் என்பார் வாசுதேவ முதலியார் எனப் பெயரிடப்பெற்று அப்பெயரே பின்னர் அவருக்கு வழங்கலாயிற்று.

சண்முகம் பிள்ளையவர்கள், இலக்கணக் கல்வியில் சிறப்புற்று விளங்கினர். சிறிதுகாலத்திற்குள் தமிழ் நாடெங்கும், சிறப்பாகச் சென்னையில் இலக்கணக் கல்வியில் திறம்படைத்தவர் சண்முகம் பிள்ளை என்பது யாவர்க்கும் தெரியலாயிற்று. பலர் தத்தமக்குறும் ஐயங்களை இவரிடத்து வந்து நீக்கிக் கொள்வார்கள்.

சண்முகம் பிள்ளையவர்கள், தொண்டமண்டலம் துளுவ வேளாளர் உயர்தரக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராக இருந்தார். இவர் கல்வி போதிப்பதில் மிக்க திறன் படைத்தவர். இவருடன் அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் மருகரான அப்பன் செட்டியாரும் தமிழ்ப் பண்டிதராயிருந்தார். அப்பன் செட்டியார் சிறிது கோபமுடைய குணத்தினர். சண்முகம் பிள்ளையோ சிறிதேனும் கோபமற்றவர். மற்று, பிள்ளைகளிடத்தில் மிக்க அன்பாயிருப்பார். அம்மட்டோ? பிறர் பிள்ளைகளை யடிப்பாராயின் இவருக்குக் கோபம் வந்து விடும். இதற்கெல்லாம் காரணம் இவருக்குப் பிள்ளையில்லாமையே யாகும். ஒரு சமயம், இவரிடத்தில் படித்துக் கொண்டிருந்த ராவ் பகதூர் சரவண முதலியார் அவர்கள் சிறு பிள்ளையாய்ப் படித்துக் கொண்டிருக்கையில் அப்பன் செட்டியார் அவர்கள் ஏதோ ஒரு காரணமாக அடித்தார். சிறுவர் அழுது கொண்டே நிற்கையில் சண்முகம் பிள்ளையவர்கள் அங்கு வந்து சிறுவரை நோக்கி, 'யார் அடித்தார்?' என்று வினவினர். "அப்பன் செட்டியார் அடித்தார்" என்று சிறுவர் கூறியதும் பிள்ளை யவர்கள் மிகச் சினங்கொண்டவராய், 'என் மாணவனை நீர் ஏன் அடித்தீர்? இதோ தலைமை உபாத்தியாயரிடம் போய்த் தெரிவிக்கின்றேன்' என்று சினந்து கொண்டார்.

சண்முகம் பிள்ளையவர்களை எப்பொழுதும் பெரியோர்கள் சூழ்ந்திருந்து தம் சந்தேகங்களைக்கேட்டுத் தெளிந்து கொள்வார்கள். இவர் தொண்டைமண்டலம் துளுவவேளாளர் பள்ளிக்கூடத்தைவிட்ட பின்பு திருமயிலையையடுத்த 'செந்தோம்' கல்லூரியில் தமிழ்ப்போதகாசிரியராயிருந்தார். அக்காலையில் இவர் திருமயிலையையே தமக்கு வாழ்விடமாகக் கொண்டனர். பிள்ளையவர்கள் துளுவவேளாளர் உயர்தரக் கல்லூரியில் இருக்கும் காலத்திலேதான், தமிழ்ப்பண்டிதர்களுக்கெல்லாம் பேராதரவு புரிந்துவந்தவரும் பண்டித சிகாமணியும், பேருபகாரியும், தமிழ்வள்ளலும், பேராசிரியருமான திருவாளர் கா. ரா. நமசிவாய முதலியார் அவர்கள் திருமயிலை சண்முகம் பிள்ளை அவர்களிடம் மாணவராய் அமர்ந்தொழுகினர். அதுமுதல் பிள்ளையவர்களின் இறுதிக்காலம்வரைத் திருவாளர், கா. ரா. நமசிவாய முதலியார் அவர்கள், பிள்ளையவர்களுக்குப் பிள்ளையைப்போல அவர் உள்ளம் களிப்ப ஒழுகிப் பல நூல்களைக் கற்றுணர்ந்து மேம்பாடுற்றனர். பிள்ளையவர்கள், திரு. நமசிவாய முதலியார் அவர்களை மாணவராக ஏற்றுக்கொண்டபொழுது தம்முடைய அந்திய காலத்தில் தமக்குச் செய்யவேண்டிய ஈமக்

கடன்களை மைந்தனைப்போலிருந்து செய்யுமாறு கட்டளையிட்டிருந்தார். 1905-ல் பிள்ளையவர்கள் இறைவன் திருவடி நீழலையடைந்தார். அப்போது ஆற்றெணுத்துயருற்ற ஆசிரியர் நமசிவாய முதலியார் தம் குருவின் கட்டளைப்படியே ஈமக்கடன்களைச் செய்தனர். மற்றும் அவர் மனைவியாருக்கு மாதாமாதம் செலவிற்கும் அளித்துவந்தனர். ஆசிரியர் நமசிவாய முதலியார் அவர்கள் சிறந்த நிலையை அடைந்ததற்குக் காரணம் தம்ஆசிரியரிடத்தில் கொண்டிருந்த பக்தியின் விசேடமே என்க. குருவின் அருள்நிரம்பிய மாணவராதலின் எந்நலமும் வாய்க்கப்பெற்று இனிதுவாழ்ந்தனர்.

பிள்ளையவர்களுக்கு இராமாயணத்தில் சிறந்த பயிற்சியும் பக்தியுமுண்டு. அவர் அயோத்தியாகாண்டத்தைப் படிக்குந்தோறும் கண்களில் நீர் ஊற்றெடுத்துப் பெருகக்கரைந்துருகும் நிலை வியத்தற்குரியது. பிள்ளையவர்கள் செம்பாகமாக செய்யுட்களைப் பாடவல்லவர்.

பிள்ளையவர்கள் அயோத்தியாகாண்டத்திற்கு ஓரரிய உரையும் இயற்றியளித்துள்ளார்கள். அவ்வுரையை உற்றுநோக்குமிடத்துப் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலியோர் உரைகளிலும் தமிழ் நூல்களிலும் இவருக்குள்ள பயிற்சியும் உரை தீட்டும் தன்மையும் நன்கு புலனாகும்; மற்றும் இலக்கணப் பயிற்சியின் தெளிவும் புலப்படும்.

பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களாவன :—

1. வடதிருமுல்லைப் பதிற்றுப் பத்தந்தாதி
2. திருப்போரூர் ஆண்டவன் பதிற்றுப் பத்தந்தாதி
3. சென்னை விநாயகர் பதிற்றுப் பத்தந்தாதி
4. கூவம் திரிபுரசுந்தரி பதிற்றுப் பத்தந்தாதி
5. கழுகாசல சதகம்
6. வேதகிரீசர்வண்ணம்
7. சந்தான குரவர் நான்மணிமாலை
8. பழநி மும்மணிக்கோவை
9. கந்தகோட்டமாலை
10. விநாயகர் இரட்டைமணிமாலை
11. திருத்தணிகைமாலை
12. இராஜராஜேஸ்வரிமாலை
13. வடிவுடையம்மைமாலை
14. மாசிலாமணிமாலை
15. சென்னைக் கந்தர்மாலை
16. கந்தரனுபூதியுரை

17. பிக்ஷாடன நவமணி மாலையுரை
18. கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம்உரை
19. திருமுல்லைவாயிற்புராணம்.

பிள்ளையவர்கள் காஞ்சிபுரம் ஞானப் பிரகாசரிடம் சிவ தீக்கை பெற்றவர் ஆவர். பிள்ளையவர்களின் நூல்களில் காணும் நயங்களையும் ஆராய்ச்சியையும் பற்றித் தெளிவாக விளக்கி ஒரு நூலியற்ற விருப்பமுள்ள எனக்கு அப்புலவர் பெருந்தகையின் நூற்களைப் பெற்றுள்ள பெரியோர்கள் அவற்றைக் கொடுத்துதவி புரிவாராயின் விரைவில் அங்ஙனமே செய்து முடிக்கும் எண்ணமுடையவனாகவுள்ளேன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஒப்பற்ற புலவர் சிகாமணியாய்த் திகழ்ந்த இப் புலவர் சிகாமணியைப் பற்றிக்கூறும் பின்னும் பலவாய அரிய செய்திகளை மற்றோரமயத்தில் விளக்கி எழுதக் கருதியுள்ளேன்.

பிள்ளையவர்கள் மீது அவர் தம் மாணவர் கா. நமசிவாய முதலியார் பாடிய சரமகவிகள்

(24—1—1905)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவாரும் வைதிகநற் சைவநெறி தழைத்தோங்கித் திகழவந்த, தருவாரும் பொழில்புடைசூழ் காழியர்கோ னங்நாளிற் சார்ந்த வென்பை, உருவாரும் பெண்ணாக வியற்றினனா லிஞ்ஞான்றுன் னுடலி னென்பைக் குருவாரு மொருவடிவா யெம்மனோர்க் காணக் கக் குறித்தி லானே. (க)

அவஞான மிரித்தருளுந் திருமயிலைப் பதிசெய்தவத் தவத ரித்துப்
பவஞான மகற்றகிலாப் பன்னூலு மாராய்ந்து பன்னாள் போக்கி
நவஞானம் விளைத்திடுநூற் சிவஞான போதமென நாடி யென்றுஞ்
சிவஞான மாதவனை முப்போது மெப்போதுஞ் சிந்தைசெய்வோன்.

அரிந்தமன்சீ ரெடுத்துரைக்குங் காப்பியத்தினரிவரிதா யகத்தி னுற்ற, விரிந்தபொரு ளெவ்வெவரு மிறும்பூது கொளப்புகலு மேதக்கேயே, பரிந்தமனத் தன்னையினு மினிதாகப் பன்னூலும் படி றனேற்குத், தெரிந்திடச்சொற் றெனையாண்ட சண்முகநற் பெயர்க் குரிய சீரி யோயே. (உ)

எவ்வெவர்கோட் படுபொருளு மைந்தெழுத்தி னடங்குமுறை யியல்பை யோர்ந்து, அவ்வியமெ லாமவித்தோர்க் கருண்மாசி லாமணியிங் கமரு முல்லைச், செவ்வியநற் சரிதமதைச் செந்தமிழ்ப்பா வினிற்புகன்று சீர்த்தி யெய்தி, நவ்வியமர் கரத்தெம்மான் செஞ்சரண முற்றின்பு நண்ணி னையால், (ங)

டேனியல் மாக்மில்லன்

[திரு. வ. சுப்பையா பிள்ளை எழுதியது]

மாக்மில்லன் கம்பேனி என்னும் பெரிய இலண்டன் நூற்பதிப்புக் கழகத்தை நிறுவியவர் டேனியல் மாக்மில்லன் என்பவரே. இவர் 1813-ஆம் ஆண்டில் ஸ்காத்லாந்துக் கருகி லுள்ள அருன் (Arran) என்னுந் தீவில் மாக்மில்லன் என் னுங் குடும்பத்திற் பிறந்தவர். இவர் தந்தையார் ஸ்காத்லாந் தைச் சேர்ந்தவர். இவருக்குப் பன்னிரு பிள்ளைகள் உண்டு. பயிர்த்தொழில் செய்து இவர் தம் பெரிய குடும்பத்தைப் பாதுகாத்துவந்தார். டேனியல் மாக்மில்லன் என்பவர் அவருக்குப் பத்தாவது பிள்ளையாவர்.

டேனியல் மாக்மில்லன் இளமையிலேயே கல்வியிற் பெரு விருப் புடையவராய் நூல்களை மிகவும் ஆர்வத்தோடு படித்து வருவார். வீண் விளையாட்டுக்களில் தம் அரிய நேரத்தில் ஒரு சிறிதுகூட அவர் செலவழிப்பதில்லை. தாய் தந்தையர்களிடத் தில் பேரன்புகொண்டு அவர்களின் கட்டளைப்படி அடங்கி நடந்து வந்தார்; தாம் எந்த வினையை மேற்கொண்டாலும் அதனை மிகவும் திருத்தமாகவும், செம்மையாகவும் மனந் தளர்வுறாமல் செய்வார்; ஒவ்வொரு பொருளையும் உற்றுப் பார்த்து அதன் நுண்ணியல்புகளை நன்கு ஆராய்ந்து தெரிவார்; தம் உடன் பிறந்தார்களிடம் மிகுநேய முடையவர்.

இங்ஙன மிருக்கையில் டேனியல் மாக்மில்லனுக்கு பத்து ஆண்டுகள் நிரம்பிற்று. இவர் தந்தையார் நோய்வாய்ப்பட்டு அந்நோய் தீராமல் விண்ணுலகெய்தினர். அவர் தம் பிள்ளை களுக்கு வேண்டிய பொருள் தேடித் தொகுத்து வைக்காமல் திடுமென இறந்துபோனமையால் அவர்தம் மனைவியும் பிள்ளை களும் பொருளில்லாமல் துன்புறலாயினர். எனவே மாக் மில்லன் என்பவர் தமது பதினோராவதாண்டில் பொருள்தேட வெளியூர் செல்லவேண்டியவரானார். பின்பு இவர் தம் குடும் பத்தோடு அருன் விட்டகன்று எர்வின் என்னும் ஒரு ஸ்காத் லாந்து நகரை அடைந்தார். அங்கே டேனியல் மாக்மில்லன் புத்தகவணிகர் ஒருவரிடம் ஏழாண்டுகள் சம்பளமில்லாமலே வேலைபார்க்க உடன்படிக்கை செய்துகொண்டு அதன்படி வேலையிலமர்ந்தார். இவர் ஒத்துக்கொண்ட வேலையைத் திறம் படச் செய்து தம் முதலாளியை மன மகிழும்படி செய்தார்.

டேனியல் மாக்மில்லன் தாம் நடத்திய செய்தித்தாள் ஒன்றில் அடியிற்கண்டவாறு எழுதியிருப்பது படித்தின்புறு தற் குரியது.

"என் பத்தாமாண்டு முதல் பதினேழாமாண்டு வரை நான் புத்தகங்களை நன்கு கட்டடஞ்செய்யக் கற்றுக்கொண்டேன்; புத்தகங்களை விலைக்குப்பெறுவதிலும், புத்தகங்களை விற்பதிலும் நல்ல திறமைபெற்றேன். என் முதலாளியினுடைய குதிரைகளைப் பாதுகாத்துப் பேணி வளர்ப்பதிலும், அவற்றின் மேலேறிச் சவாரி செய்வதிலும் நல்ல பழக்கமுடையவனுனேன். மரச்சாமான்களுக்கு மினுக்கெண்ணெய் ஊட்டிப் பளபளப்பாக்குவதில் கைதேர்ந்தவனுனேன். இவை போன்ற பல அரிய வேலைகளைச் செவ்வனே செய்யக் கற்றுக் கொண்டேன்"

டேனியல் மாக்மில்லன் தம் பதினெட்டாம் ஆண்டில் தம் குடும்பத்தினரை எர்வினில் வைத்துவிட்டு கிளாஸ்கோ (Glasgow) வுக்குச் சென்றனர். இவர் செல்லுகையில் இவர் தம் முதலாளி இவரது வேலையைப் பாராட்டி நன்மதிப்புச் சீட்டொன்று எழுதிக்கொடுத்தார். மாக்மில்லன் பின் கிளாஸ் கோவிலுள்ள புத்தகவணிகர் ஒருவரிடம் வேலைபார்த்து வரலானார். இவர் அப்போது அடிக்கடி நோய்வாய்ப்பட்டு மிகவும் உடல் நலிவுற்றிருந்தார். எனினும் இவர் தம் வேலைகளை மிகவும் ஆசையோடும், கருத்தோடும், ஊக்கத்தோடும் செய்து வந்தார். இவர் முதன்முதல் தம் குடும்பத்தைவிட்டுப் பிரிந்தது இப்போதுதான். தம் தாயைவிட்டுப் பிரிகிறபோது, " இவ்வுலகத்தில் தாயைப்போல ஒருவருமில்லை " என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்தனராம்.

இவர் கிளாஸ்கோவில் இருக்கும்போது இவருக்கு நூல்களின் மேலுள்ள விருப்பம் மேன்மேலும் பெருகிற்று. இவர் பின்பு இலண்டன்மா நகரத்திற்குப் போக விழைந்தார். அங்கே பேட்டர்நாஸ்டர் (Patter noster Row) கடைத்தெருவில் பல புத்தகக்கடைகள் இருந்தன. அக்கடைகளில் பெரும் புலவர்கள் எழுதிய நூல்களெல்லாம் கிடைக்கப்பெறும். டேனியல் மாக்மில்லன் தம் பதினெட்டாம் ஆண்டில் கிளாஸ் கோவைவிட்டு இலண்ட(London)னுக்குச் சென்றார். அங்கே பொருளீட்டித் தம் வாழ்க்கையை நடாத்தத் தீர்மானித்தனர். பேட்டர்நாஸ்டர் கடைத்தெருவிலுள்ள புத்தகக் கடைகளில் இவருக்கு அப்போது வேலையொன்றும் கிடைக்கவில்லை. எனவே, இவர் அங்கே சில நாட்கள்கூட வீணே தங்கியிருக்கக் கூடாதவரானார்.

பின்பு டேனியல் மாக்மில்லன் கேம்பிரிட்ஜ் (Cambridge) புத்தகவணிகர் ஒருவருக்கு ஓர் அலுவலாள் தேவை எனக் கேள்விப்பட்டு அங்கே சென்றார்; அவ்வணிகரிடம் உணவு

இருக்கைகளோடு ஆண்டு ஒன்றுக்கு முப்பது பவுன் சம்பளம் பேசி வேலையில் அமர்ந்தனர். அங்கே இவர் புத்தகங்களைப் பற்றிய பல்வகைக் குறிப்புக்களையும் நன்கு தெரிந்துவரலானார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலுள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் டேனியல் மேக்மில்லனுடைய அறிவிலும் அன்பிலும் ஈடுபட்டு, இவர்பால் மிக்க நேயமுடையவர்களாய் இவர் கடைக்கு அடிக்கடி வருவார்கள். இவரிடம் எப்போதும் புத்தகங்களைப்பற்றியே அளவளாவி உரையாடிக் கொண்டிருப்பார்கள்.

மறுபடியும் டேனியல் மாக்மில்லன் இலண்டனுக்குப் போக விரும்பினார். எனவே கேம்பிரிட்ஜை விட்டு இவர் இலண்டனுக்குச் சென்றார். அங்கே பிளீட் தெரு (Fleet Street) விலுள்ள சீலி (Messrs Seely) என்னும் பெரிய புத்தகவணிகரிடம் வேலை ஏற்று ஆறு ஆண்டுகள்வரை பார்த்து வந்தார். அவ்வமயம் இவருக்குப் பல துன்பங்கள் அடுக்கடுக்காய்த் தொடர்ந்துவந்தன. இவர் அடிக்கடி நோயுற்று உடல்நலமும் மாறி மாறிக் கெடலானார். இவர் தம் கல்விப் பயிற்சிக்கென விரும்பி வாங்கிவைத்திருந்த பல அரிய நூல்களை விற்றுத் தமக்கு நோய் தீர்த்த மருத்துவருக்குப் பொருள் கொடுக்கவேண்டியதாயிற்று. உயிரினுஞ் சிறந்தனவாய் மதித்துத் தொகுத்து வைத்திருந்த நூல்களை விற்பதெனின், இவர் எத்துணைத் துன்பம் அடைந்திருப்பர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ! எனினும் இவர் மனந் தளராது 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற அருள்வாக்கின்படி தமக்கு வந்த துன்பங்களை மகிழ்வாய் ஏற்றனர். இவருக்குத் திரும்பவும் நல்லகாலம் வரலாயிற்று. 'முயற்சி திருவினை யாக்கும்' என்ற மெய்ம்மொழிக்கு இவரது வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டாய் இலங்கிற்று.

பின்பு இவர் உடன்பிறந்தார் அலெக்சாண்டர் (Alexander) என்பவர் அப்போது இலண்டனுக்குவந்து இவரை அடைந்தார். சில நாட்கள் கழியவே இருவருஞ் சேர்ந்து தமக்குச் சொந்தமாக ஒரு புத்தகக்கடை திறப்பிக்க எண்ணினர். "வளர்ந்து பயன்றரத்தக்க ஒரு விதையை விதைப்பதே நல்லதாகும் என்று நான் நினைப்பதுண்டு" என்று டேனியல் மாக்மில்லன் தமது பத்திரிகையில் எழுதியுள்ளார். இலண்டனில் வெஸ்ட் எண்ட் (West End) என்ற இடத்தில் இவர் ஒரு கடை வைக்க முயன்றார். அங்கே கடைகளுக்கு வாடகை மிகவும் கூடுதலாகையால் அஃது இவருக்கு முடியாதாயிற்று. எனவே ஆல்டர்ஸ்கேட் (Aldersgate) தெருவில் ஒரு புத்தகக்

கடையைத் திறப்பித்து நடத்தினர். முதற்கண் இவர்கட்குச் சொந்தமாகக் கடை நடத்துவதென்பது மிகவும் மலேவாகத் தோன்றியது. அதனால் இவர்கள் பல இடுக்கண்களை மேற் கொண்டார்கள். எனினும் இவர்கள் உளந்தளராமல் புத்தக வணிகத்தைச் சிறப்பாக நடத்திவந்தார்கள். இலண்டனி லுள்ள பெருமக்கள் பலர் இவர்களிடம் புத்தகங்கள் வாங்குவ தற்கு வரலாயினர். நீண்ட காலமாகப் புத்தகங்களிற் பழகிய பழக்கத்தால் இவர்கள் அடைந்த அறிவுச்சுடர் அங்கே ஒளி வீசலாயிற்று. அதனை யறிந்த பெருமக்கள் இப்புத்தக வணிக உடன்பிறந்தார்களிடம் மிகவும் அன்பு காட்டினார்கள். அடிக் கடி அவர்கள் வந்து இவர்களிடம் புத்தகங்களைப்பற்றியே பேசி மகிழ்வார்கள். இவர்களிடம் அடிக்கடி வந்து போகும் பெருமக்களில் ஒருவர்." "எனக்கு இப்போது தெரிந்த பெரியார்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இருவர் உளர். அவர் களில் ஒருவர் டேவிட் லிவிங்ஸ்டனும் (David Livingston), மற்றொருவர் டேனியல் மாக்மில்லனு மாவர்" என்று சொன் னாராம். அதனால் மாக்மில்லன் அக்காலத்தில் கற்றறிந்த பெரியோர்களால் எத்துணை மதிக்கப்பட்டிருந்தார் என்பது விளங்கவில்லையா?

மாக்மில்லனும் இவர் தம் உடன்பிறந்தாரும் தங்கள் புத்தக வணிகத்தை மிகவும் பெருக்கமாய் விரிவுபடுத்தி நடத் தினார்கள். இலண்டனிலுள்ள கடையோடு கேம்பிரிட்ஜிலும் ஒரு கடை திறப்பித்து அதனையும் நடத்திவந்தார்கள். கேம் பிரிட்ஜில் பல்கலைக் கழக அறிஞர்கள் மாக்மில்லனார் கடைக்கு அடிக்கடி வந்து டேனியல் மாக்மில்லனோடு புத்தகங்களைப் பற்றி அளவளாவிச் செல்வார்கள். பின்னர் இவர் புத்தகம் விற்பது மட்டுமல்லாமல் புதிய புத்தகங்களை அறிஞர்களிடம் எழுதிவாங்கித் தாமே பதித்து வெளியிடவும் முயன்றனர். முதன்முதலில், "சார்லஸ் கிங்ஸ்லி"யின் (Charles Kingsley) "வெஸ்ட்வர்ட் ஹோ (Westward Ho)" என்ற நூலையும் இன்னுஞ் சில அருமையான நூல்களையும் பதித்து வெளி யிட்டார்கள்.

1857-ஆம் ஆண்டில் டேனியல் மாக்மில்லன் நோய் வாய்ப்பட்டு டார்க்வே (Torquay) என்ற ஊரில் சிலகாலம் இருக்கவேண்டியவரானார். பின்பு இவர் நோய் மிகுதிப் படவே பிழைத்தலரிது என்ற நிலையை அடைந்தார். எனவே இவர் கேம்பிரிட்ஜிலுள்ள தம் வீட்டுக்குப் போனார். அங்கே போய்ச் சில நாட்களில் இவர் உயிர்துறந்தார்.

"டாம் பிரௌன் பள்ளி வாழ்க்கை (Tom Browns' School Days) என்ற நூலியற்றிய ஆசிரியர் எழுதிய ஓர் அரிய நூலில் டேனியல் மாக்மில்லன் வரலாறு சொல்லப்படுகிறது. அதில் மாக்மில்லன் ஓர் உண்மையான கிறித்தவர் என்றும், எண்ணியதை முடிக்குந் திண்ணியர் என்றும், புத்தகவணிகர்களில் எவரும் இவரைப்போல் அறிஞர்களால் மதிக்கத்தக்கவர் இருந்ததில்லை என்றும், இவரே புத்தகவணிகத்தின் சிறப்பையும் அதன்பயனையும் மக்கட்கு முதன்முதல் நன்கு எடுத்து விளக்கியவர் என்றும் எழுதப்பட்டிருக்கின்றன.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தினருகே டேனியல் மாக்மில்லன் துவங்கிப் புகழ்பெற நடத்திய புத்தகக்கடை இன்றும் அதே இடத்தில் நடைபெறுகின்றது. அதிலிருந்து 'மாக்மில்லன் கம்பெனி' என்னும் மிகவும் பெரிய நூற்பதிப்புக் கழகம் இலண்டனில் நிலைபெற்று இன்றும் நடைபெற்றுவருகின்றது. இப்போது உலகத்தில் பல நகரங்களில் இதற்குக் கிளைக்கடைகள் இருக்கின்றன. இதன்வழிப் பல துறைகளில் பல்வேறு புலவர்களால் பல்வேறு மொழிகளில் நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதுகாறும் பதினுயிரக் கணக்கான நூல்களை இக் கழகம் வெளியிட்டிருக்கின்றது.

வேந்த கறி மணப்பதேன்?
வேந்தன் படை முறிவதேன்?

—பெருங்காயத்தால்.

இராமன் சீதையைப் பிரிந்ததேன்?
சூரியன் தீம்பை அடைந்ததேன்?

—அம்மானை யிட்டு.

கீரை விதையை விதைப்பதேன்?
கீழோர் செல்வரைச் சூழ்வதேன்?

—பிடுங்கித் தின்ன.

—கா. சிவ. க.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

குறுந்தொகை

[வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

குறிஞ்சி

தலைமகன் களவொழுக்கத்தில் இரவுக்குறிக்கண் சிறைப்புறத்தானாக, தலைமகள் குறியிடத்துச் சென்று தலைவனைக் கூடுதற்கு இயலாதவாறு ஏற்பட்ட இடையூற்றை அத் தலைவனுக்கு அறிவிப்பவளாய்த் தோழிக்குக் கூறியது. இதனை முன்னிலைப் புறமொழியாகத் தோழியுரைத்தது என்பதுமுண்டு.

நெடுவெண்ணிலவினார் பாடியது

47. கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

என்பது இராவந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாகத் தோழி யுரைத்தது.

பதவுரை:—

கரும்கால் வேங்கை வீஉகு துறுகல்—கரிய தாளையுடைய வேங்கைமரத்தின் மலர்கள் உதிரப்பெற்ற கற்பாறை, இரும் புலி குருளையில் தோன்றும்—பெரிய புலிக்குட்டியை ஒப்பத் தோன்றுகிற, காட்டிடை—காட்டினிடத்தில், எல்லி வருநர் களவிற்கு—இராப்பொழுதில் வருபவரான தலைவரின் களவொழுக்கத்திற்கு, நெடு வெண்ணிலவே—காலத்தால் நீடிய வெண்மையான நிலவே, நல்லை யல்லை—நீ நன்மையைப் புரிபவன் அல்லை. (அவன் வரவு தாய்தந்தையர் துஞ்சாமையாலும், காவலர் கடுகுதலாலும், நாய் துஞ்சாமையாலும், ஊர் துஞ்சாமையாலும் களவு வெளிப்பட்டு விடுமாதலினால் இடையூறு விளைப்பவனாவாய் என்பது கருத்து.)

இது சந்திரனைப் பழித்தவாறு. இதனைச் சந்திரோபாலம்பனம் என்பார் வடநூலார்

குறிஞ்சி

கருமை—நிறமும் வலிமையுமாம். கால்—தாள். வீ—மலர். துறுகல்—கற்பாறை. புலிக் குருளை—புலிக்குட்டி. (தொல். மரபி. சூ. 563) எல்லி—இரவு. களவு—களவொழுக்கம். கற்பாறையின்மீது விழுந்த வேங்கைமலர் புலியின்மேல் காணப்படும் கோடுகள்போல் காணப்படும் ஆதலின் 'கருங்கால் வேங்கை வீயுகுதுறுகல் இரும் புலிக் குருளையிற் ரோன்றும்' என்றார்.

மேற்கோள் விளக்கம்:—

1. "கருங்கால் வேங்கை"—"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை"
—(குறுந்—26)
—(புறம். 202, 18)

2. "கருங்கால் வேங்கை வீயுகு துறுகல் இரும்புலிக் குருளை யிற் ரோன்றும்"—"வேங்கைப்பூபரந்த பாறை புலிபோல் தோன்றும்.
—(பரிபாடல், 11—12 உரை)

(அ) அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ நாறு துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்"
—(புறம். 202, 18, 20)

(ஆ) "மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின
வழுகை மகளிர் குழுவை செப்ப"
—(பரி. 14: 11, 12)

(இ) "குறவ ரூன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலி செத்து" —(அகம் —12)

(ஈ) "கருங்காலின வேங்கை கான்றபூக் கன்மே
லிருங்கால் வயவேங்கை யேய்க்கும்"
—(திணைமாலை 150—26.)

(உ) "நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை
நாக நண்ணி,
மறமனை வேங்கையென நனியஞ்சும்"
—(திருக்கோவை 96)

"கருங்கால் வேங்கை"

(அ) 'அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை'
(ஆ) "கருங்கால் பொன்னிணர் வேங்கைப்பூ"
(இ) "சுரும் புணவிரிந்த கருங்கால் வேங்கை"
(ஈ)"வியன் மலைக் கவாஅன், அரும்புவா யவிழ்ந்த கருங்கால் வேங்கைப் பொன்மரு ணறுவீ கன்மிசைத் தாஅ"
—(நற்றிணை. 112, 151, 168, 257

3. "கருங்கால் வேங்கை.........நெடுவெண்ணிலவே"

—"தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், நாய் துஞ்சாமை போல்வனவற்றாற் றலைவன் குறியின் கண் தலைவிவரப் பெறாமல் நீட்டித்தல்" என்பதற்கு மேற்கோள்

—(தொல்.—களவு.—பக். 421)

4. "கருங்கால் வேங்கை.........நிலவே"

—"இது இராவந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாய் உரைத்தது. இக்குறுந்தொகையுட் குறிஞ்சியுள் வேனில் வந்தது." —(தொல்—அகத்—பக். 37)

5. "இரும்புலிக் குருளையிற் றோன்றும் காட்டிடை"
"நாயே பன்றி புலிமுய லான்கும்
ஆயுங் காலைக் குருளை என்ப" (தொல். மர. 563)

என்பதற்கு மேற்கோள். —(தொல்—மரபி. பக். 537)

(6) 'கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை"

இது "ஒற்றைக் கிளவி யிரட்டை வழித்தாய் வந்த வுவமை" என்பதற்கு மேற்கோள். —(மாறனலங்—பக். 155)

7. "கருங்கால் வேங்கை..................................காட்டிடை"

—"ஒற்றைக் கிளவியும் இரட்டை வழித்தாகி வருவன கொள்க. அது, "கருங்கால் வேங்கை......காட்டிடை" எனவரும். இரும் புலிக்குருளை யென்றதனையே துறுகல்லோடும் வேங்கை வீயோடும் ஒப்பித்தமையின் இப் பெயர்த்தாயிற்று."

—(தொல். உவமை. சூ. 297. பக் 125)

8. வேங்கைப் பூவிற்கு வேங்கைப் புலி உவமையாகக் கூறப்படும்—அதனைக் கீழ்வருவனற்றால் அறிக.

(1) "கருங்கால் வேங்கை வீயுகுதுறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றும்" —(குறுந். 47)

(2) "புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர்" —(ஐங். 396)

(3) "உறுபுலியுரு வேய்ப்பப் பூத்த வேங்கை"
—(கலி. குறிஞ். 26)

(4) "புலிப்பறழன்ன பூஞ்சினை வேங்கை"
—(தொல்—மா—சூ. 10—மேற்கோள்.)

(5) "புலியதள் போர்ப்ப, வெடுத்த நின்றதே போன்றதா
லிணர்விரி வேங்கை" —காஞ்சிப்புராணம்

(6) "புலியுரு மருளப்பூத்த பூந்துணர் வேங்கை யொள்வீ"
—(காஞ்சி—திருக்கண் 252)

(7) "வேங்கை யஞ்சினையென விறற்புலி முற்றியும்"
—(கலி. 46—5)

(8) "மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின
வழுகை மகளிர்க் குழுவை சேப்ப" —(பரி. 14)

(9) "குறவ ரூன்றிய குரம்பை புதைய வேங்கை
தாஅய தேம்பாய் தேற்றம் புலி செத்து" —(அகம் 12)

(10) "அரும்பறமலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்டொள்வீ தாயதுறுக
லிரும்புலி வரிப்புறங் கடுக்கும்" —(புறம் 202)

11. "கருங்காலின வேங்கை கான்றபூக் கன்மே, லிருங்கால் வேங்கை எய்க்கும்" —(திணைமாலை—26)

12. "நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாக நண்ணி, மறமனை வேங்கையென நனியஞ்சும்" —(திருக்கோவை. 96.)

:'. "கருங்கால் வேங்கை.........நெடுவெண்ணிலவே"
—இச்செய்யுள் "நிலவு வெளிப்படுதல்" என்பதற்கு மேற்கோள்
—(நம்பியகம்—சங்கம்)

(10) "நெடுவெண்ணிலவு"
'காலத்தால் நெடிய வெள்ளிய நிலவு' இதற்குக் காரணம் விரகம்.
"நெடுவெண்ணிலவின் நீர்மைக்கிரங்கி"

—(பெருங்கதை 1 காண். 35 பட,—அடி 235)

இச்செய்யுளில் "நெடுவெண்ணிலவே !" என்னும் தொடரை யமைத்தமையால் 'நெடுவெண்ணிலவினார்' என்று ஆசிரியரைப் பாராட்டினர் போலும்.

இறைச்சி:—

வேங்கைமலர்கள் வீழ்ந்த கற்கள் புலிக்குட்டிகள்போல் அச்சந்தரும் என்றமையால் வரைவுடன்படுபவராகிய தமர் வரைவுடன் படார்போல உனக்கு அச்சம் செய்கின்றனர். வேண்டின் வரைவுடன் படுவர் என்பதாம்.

மெய்ப்பாடு—அச்சம்.

பயன்—வரைவுகடாதல்.

தனக்குவமை இல்லாதது தமிழ்மொழி

இந்திமொழி இடையில் வந்தது

[கருவூர் அறிவுதயக்கழக ஆசிரியர் ஈழத்துச் சிவாநந்த அடிகள்]

இந்திகற்க முந்திநிற்கும் இளந்தமிழர்களே ! பழந் தமிழர்களே !!

நீங்கள் இளங்குழந்தைகளாய் இருந்த ஞான்று தனது இனிய ஓசைகொண்டு உங்கள் இளைப்பை ஆற்றியவள் யாவள்? பால்மண மாறாப் பச்சிளங்குழந்தைப் பருவத்தில் உங்கள் பசியை மாற்றிய இசைச்செல்வி யாவள் ? தொட்டிலில் இட்டுச் சீராட்டியபொழுது உங்களுக்கு உறக்கத்தை உண்டு பண்ணிய குயில்மொழிச் செல்வி யாவள்? உங்கள் பெற்றோரும் உற்றோரும் உளம் மகிழ உங்கள் இள நாவில் மழலைச்சொற்களை வழங்கியவள் யாவள் ? நீங்கள் தெருவிற்சென்று சிறு தேர் உருட்டி, மணற்சோறு பொங்கி, மகிழுரையாடி மனங் களிக்கச் செய்தவள் யாவள் ? ஐந்து வயதிலே அறியாப் பருவத்திலே உங்களை அறிவென்னும் ஓரிடத்தில் அமர்த்தியவள் யாவள்? நீங்கள் எம்மொழியிற்பேச விரும்புகின்றீர்களோ அம்மொழியிற் பேசுவதற்கு உறுபெருந் துணைக்கருவியாக உள் நின்று உணர்ச்சி அளிப்பவள் யாவள்? அவளே தனக்குவமையில்லாத் தோற்றமீறற்ற தனித் தமிழன்னையாவள். இத்தகையநன்றிபுரியும் நற்றாயை மறத்தலும் சாலுங்கொல் !

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது பொய்யாமொழிப் புலவரின் மெய்ம்மொழியன்றோ? இவ்வெடுத்துக்காட்டு மெய்ம்மொழி எம்மொழியில் உள்ளது! தொன்மொழியாம் தென்மொழியாகிய தமிழிலன்றோ உள்ளது! இன்றைக்கு உலகில் வழங்கப்படும் மூவாயிரம் மொழிகளில் ஒன்றிலேனும் இத்தகைய ஆழ்ந்து அகன்ற கருத்துக்களைப் பொருத்தமான சொற்களில் சுருக்கமாகக் கூறும் நூல் உளவோ? ஒளிமிளிர் கற்களைப் பைம்பொன்னிற் பதித்தாலன்ன தேர்ந்தெடுத்த தீஞ்சுவைச் செஞ்சொற்களிற் பொதிந்து காட்டவல்லது தமிழ்மொழி ஒன்று மட்டுமே என்பதை உணரவல்ல எந்தத் தமிழ்மகனும் இடைக் காலத்திற்றோன்றியதும், இசைப்பொருத்தமற்றதும், பல மொழிக் கலப்புள்ளதும், பயன் ஒரு சிறிதும் இலாததுமான இந்தியைக் கற்க முந்திநிற்பனோ! 'அரசனை (கணவனை) அகல விட்டு வம்பனைக் கைப்பிடித்த' வாறு போலன்றோ முடியும் இச்செயல்!

உலகத்திலே பல மொழிகள் நிலவுகின்றன. அவைகளுள் பெரும்பாலன காலவரையறைக்குக் கட்டுப்பட்டுக் கிடப்பன.

சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் முதலான மொழிகள் தோன்றிய காலங்களைச் சரித்திரங்கள் அளந்து கூறுகின்றன. தமிழ்மொழி சரித்திர காலத்தைக் கடந்து நிற்பது. தமிழ்மொழி இன்ன காலத்தில் இன்ன வரால் உண்டாக்கப்பட்டதென்று எவராலும் எந்நூலாலும் அளந்து கூறமுடியாது. அஃதொரு காலத்தில் குமரிமுனைக் கும் இமயமலைக்கும் இடையே உள்ள மக்கள் அனைவருக்கும் உரிய பொதுமொழியாகவும் பயன்பட்டு வந்தது. பழமையிற் சிறந்த இளமை குன்றா இப் பசுந்தமிழ், முன்னைப் பழமைக் குப் பழமையாயும், பின்னைப் புதுமைக்குப் புதுமையாயும் இலங்கும் சிவமென்னும் செம்பொருளின் தொடர்புடையது. தமிழெனும் இனிய சுவைகொண்டு அன்பெனுங் கயிற்றைத் திரித்துச் சிவமெனும் இன்பப் பொருளை இறுகக் கட்டிவிட லாம். இதனாற்றான் போலும் "தென்னாடுடைய சிவனே" என்றும், "தமிழ் நாடுடைய தலைவர்" என்றும், "தேசமுமை அறிவதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக்கொண்ட நாளே" என்றும், "தமிழ்த் தெய்வம்" என்றும் இன்ன பிற வாலும் சிவமெனும் செம்பொருளைத் தமிழுக் குரிமையாக்கி வழிபடுவாராயினர் நமது தமிழான்ற சான்றோர்!

தமிழ்மொழி தொன்மையிற் சிறந்துவிளங்குதலை மட் டும் பெரிதெனக் கொண்டு, அதனைப் போற்ற வேண்டு மென்று வலியுறுத்துவது அறிவுடைமையாகாது. மேன் மக்கள் தொன்மை கருதி ஒன்றைக் கொள்ளவும் மாட்டார் கள்; புதுமை கருதி ஒன்றைத் தள்ளவும் மாட்டார்கள். அவர்கள், ஒன்றை அறிவென்னும் கோலினால் அளந்து ஆராய்ந்து, அதன் உண்மைநோக்கவே முயல்வார்கள். அறி வுடைமக்கள் அவாவுவது எப்பொருளினும் மெய்ப்பொருள் ஒன்றே. தொன்மையுடன் மெய்ப்பொருள் உண்மையும், ஒப்புரிமையும், அன்பும், இன்பும், இரக்கமும் பொருந்த விளக்கிக் காட்டவல்ல ஒரு மொழி நிலவுமேல், அஃது அறிஞர் உடைமையாகும். தொன்மையோடு பிற பொருள் பொலிதல் பொன்மலரில் நறுமணங் கமழ்வது போலாம். தமிழ்மொழியில் தொன்மையோடு மெய்ப்பொருளுண்மை, ஒப்புரிமை, இனிமை, இரக்கம், அன்பு முதலியன காணப் படுவதால், அதனைப் போற்றி வளர்க்க வேண்டுவது தமிழ் மக்களாய்ப் பிறந்த எல்லோருடைய இன்றியமையாக் கடமையன்றோ?

இதைவிட்டுத் "தாய் தஞ்சையில் தன் கைப்பிச்சை எடுக்கத் தனயன் குடந்தையில் கோவீகை புரிந்தது" போலத் தாய்மொழியிற் றம் கையொப்பமேனும் இடத் தெரி

யாத பலர் இந்தி கற்க முந்தி நிற்பதுதான் வியப்பைத் தருகின்றது. சில நாட்களுக்கு முன் நான் இந்தி கற்கும் ஒரு தமிழ் நண்பரைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது நான் அவரை நோக்கித் தமிழ் மொழியில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன என்று கேட்டேன். அதற்கு அவர், "நான் இலக்கணமா படித்திருக்கிறேன்?" என்று விடையிறுத்தார். பின்னும் நான் அவரை நோக்கித் தாங்கள் இந்தி கற்பதன் நோக்கம் என்ன என்று வினவினேன். "இந்தியாவுக்குச் சுயராச்சியம் கிடைத்ததும் ஏதேனும் உத்தியோகம் பார்க்கலாம் என்றுதான் இந்தியைக் கற்கின்றேன்" என்றார். அதன் பின்னரும் அவருடன் உரையாட என் மனம் இடந் தரவில்லை. உத்தியோகக் கனவு கண்டுகொண்டு இந்தி படிப்பவருடன் என் உள்ளக் கிடக்கைகளை எடுத்துச் சொன்னால் பயன்படாதென்றே அவருடன் மீண்டும் உரையாடாது, தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு தமிழ் மகனாகிய அன்னாரின் அறியாமைக்காகப் பெரிதும் வருந்தினேன். நான், அவரிடம் உத்தியோக நோக்குடன் கல்வி பயிலுதல் கூடாதென்றும், அறிவு விளங்கப்பெற்றுத் தாமும் தம்மைச் சார்ந்தாரும் முன்னேற்றம் அடையும் பொருட்டும், இறைவனின் திருவருளைப் பெறும் பொருட்டுமே கல்வி பயிலுதல் நலம் என்று கூறியிருப்பேனாயின், அவர் என்மீது வெகுண்டு சீற்றங் கொள்ளாதொழியார் என்று கருதியே அவருடன் உரையாடாது சென்றேன். அவர்போன்ற உத்தியோகக் கனவு காண்பவர்கட்காகவே தான் இக் கட்டுரையை எழுத நேர்ந்தது. இதனை அத்தகையினர் நன்கு நோக்கிச் சிந்திக்க விரும்புகின்றேன்.

தமிழன்பர்களே! நந் தாய்த் தமிழணங்கை நாம் போற்ற வேண்டாமோ? பிறர் போற்றுவரோ? ஒருகாலும் போற்றார். அவளைப் பேணிப் போற்றி வளர்த்தல் நங் கடமையன்றோ! நமது தாய் மொழியாகிய தமிழ் எத்தகையது? அது காலங் கடந்தது! ஒப்புரிமையை உணர்த்துவது! அன்புநெறியை விளக்குவது! இன்பப் பொருளாம் இறைவனை எளிதில் அடையச் செய்வது! எல்லா மொழிகட்கும் முதன்மையாக வுள்ளது! கொலையைப் போதிக்கும் நூல்களைத் தம்மகத்தே கொண்டுள்ள மொழிகளெல்லாம் வளம் பெற்று வளர்கின்றன! கொல்லாமையைப் போதிக்கும் திருக்குறள் போன்ற நூல்களைத் தனக்கணிகலனாகப் பூண்டு நிற்கும் நமது தமிழ்மொழி என்ன நிலையை அடைந்திருக்கிறது? திருக்குறளைப் படித்தவர் எத்தனை பேர்? தமிழ் மக்களாய்ப் பிறந்த எத்தனை பேருக்கு அந்நூலின் பெயர் தெரியும்? வெட்கம்! வெட்கம்!! மேல் நாட்டவர் உங்கள்

அறியாமையைக் கண்டு நகைப்பதும் உங்கள் செவிகளில் நுழையவில்லையா? தன்னுயிர் போலன்றோ தன் தாய்மொழியைப் பேணுதல் வேண்டும். நீங்கள் உங்கள் அன்னையாகிய தமிழணங்கைப் போற்றி வளர்த்துப் பயன்பட முயலுங்கள்! தெருவெல்லாம் தீந்தமிழ் முழக்கம் செய்யுங்கள்! இந்தியைக் கற்று நொந்துபோகாதீர்கள்! "சந்தைக்கு வந்தவர் வழித்துணை யாகார்" என்னும் பழமொழியை உங்கள் மனத்தில் இருத்தித் தமிழன்னையை ஆதரியுங்கள்! அவளால் நீங்கள் அடையும் பயன்கள் அளவற்றனவாகும்.

இந்தியை இந்தியாவுக்குப் பொதுமொழி யாக்குதல் பொருந்தாது

அரசியற்கிளர்ச்சி காரணமாக இந்தியநாடு முழுதுக்கும் 'இந்தி'யைப் பொதுமொழியாக்க வேண்டுமென்னும் கொள்கையொன்று தோற்றுவிக்கப்பட்டு, அதன்பொருட்டுச் சில ஆண்டுகளாக வலிய முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. உலகிலேயே பெரியாராக விளங்கும் காந்தியடிகள்போன்றவர்களின் ஆதரவினால் இம்முயற்சி மிக்க வலிமையும், ஆக்கமும் பெற்றுவருகிறது. இந்நாடு உரிமை பெறுதற்குரிய சாதனங்களில் 'ஹிந்தி' பொதுமொழியாவதும் ஒன்றாகுமென்னும் சிறந்த எண்ணங்கொண்டே காந்தியடிகள் போல்வார் இதனைத் தோற்றுவித்திருப்பர். அவர்கள் கருதுமாறு இதனாலும் சிறிது பயன் விளையினும் விளையலாம். எனினும், இதனால் விளையக்கூடிய நலம் தீங்குகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து பாராது பிறர் சொல்லும் வழியெல்லாம் ஒழுகுவதென்பது பெரிதும். ஏதந்தருவதாம் 'இந்திய தேசீய மகாசபை' சம்பந்தப்பட்டவரையில் பார்க்கினும், சிலஆண்டுகளாகச் சென்னை மாகாணத்தினர் யாரும் செல்வாக்கில்லாதவர்களாய், நீர்வழிப்பட்ட புணைபோல் ஏனையோர் வழியில் ஒழுகுபவர்களாய்க் காணப்படுவது இரங்கத்தக்கதாகும்.

தமிழ்மக்களுக்குப் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவந்த தம்முன்னோர்களின் அறிவு, ஆண்மை, கொடை, நீதி முதலியவற்றை அறிந்துகொள்ளவும், இம்மை மறுமை வீட்டின்பங்களைப் பெறுதற்குரிய வழிகளைத் தெரிந்துகொள்ளவும், இறைவனை மனமுருகித் துதித்துப் பேரின்பமடையவும் கருவியாயிருப்பது தமிழ்மொழியாகும். தமிழ் மக்களில் இதனைப் பயிலாதவர் யாவரும் வாழ்க்கையின்பயனை இழந்தாராவர். அங்ஙனமாகவும் தமிழ்மக்களனைவரும் தமிழ் கற்க வேண்டுமென்பதற்குரிய முயற்சியைச் சிறிதும் மேற்கொள்

ளாது, அரசியற்கிளர்ச்சியாளர்கள் 'ஹிந்தி'யைப் பரப்புதற்கு முயல்வது அன்றாது நேர்மையின்மையைக் காட்டுகிறது.

காசி 'இந்து யூனிவர்சிட்டி'யில் படிக்கும் தமிழனொருவன் கட்டாயமாகத் தமிழ் படிக்கவேண்டுமென்ற விதி அங்கு உளது. ஆனால், சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களிலோ, தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களிலோ அத்தகைய விதியில்லை. இந்த நிலைமையில் 'ஹிந்தி'யைக் கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் விருப்ப பாடமாக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது. அங்ஙனமாகுமாயின், தமிழின் நிலை பின்னும் இரங்கற்குரியதேயாகும்.

ஹிந்தி இன்னும் 150 ஆண்டுகள் போதிக்கப்படினும் இப்பொழுது ஆங்கிலம் இருக்கும் நிலையைத்தான் எட்ட முடியும். யாவரும் அதனைக்கற்றல் இயல்வதன்று. அப்படியே இந்தியாவிற்கு அது பொது மொழியாயினும், உலகப் பொது மொழியாக ஆங்கிலம் கற்கப்படல்வேண்டும். தாய்மொழியோடு ஆங்கிலங் கற்பதே இயலாததாயிருக்க, ஹிந்தியும் கற்க வேண்டுமென்பது பொருந்துமா? எனவே 'ஹிந்தி'யைப் பொது மொழியாக்கும் முயற்சியானது பயனிலதாவதேயன்றிக் கேடு பயப்பதுமாகுமெனத் தோன்றுகிறது. யான் தமிழைக்குறிப்பிட்டுச் சொல்லிய சில செய்திகள் தெலுங்கு முதலிய நாட்டுமொழிகட்கும் பொருந்தும்.

—ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

தமிழ் நாட்டுக்கு இந்தி வேண்டவே வேண்டாம்

ஐயா, தாங்கள் "தமிழ் நாட்டுக்கு இந்தி வேண்டுமா?" என்ற தலைப்பில் எழுதி அனுப்பிய அச்சுத் தாளையும் அதனுடன் வந்த துண்டுப் பிரசுரங்களையும் படித்தேன். அது பற்றி எனது கருத்து வருமாறு:—

"ஹிந்தி மொழி சிறந்த கருத்துக்களை எளிதில் அறிவிப்பதாயிருந்தாலும், இம்மை மறுமைகளில் விடுதலையைத் தருவதாயிருந்தாலும் அது தமிழ் நாட்டினர்க்கு வேண்டியதொன்றன்று. அஃது எவ்வளவு உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் பிரசாரம் பண்ணப்பட்டாலும் தமிழ் நாட்டினர்க்குக் கற்பகாலத் திறுதியிலும் தாய் மொழியாக முடியாது. தாய் மொழியை யன்றிப் பிற மொழிகளைக் கட்டாயமாக்க முயலுவது கல்லில் நாருரிக்க முயலுவதை ஒக்கும்; நாமும் அஞ்சவேண்டா, ஹிந்தியும் நமக்கு வேண்டுவதின்று."

உ. ச.—வேங்கடராமையர், தண்டமிழ்த் தாசன்.

அறிவியற் பகுதி - Science

பூதலவீர இராம வர்மாவைப்பற்றிய ஓர் கல்வெட்டு A. D 1546

["தமிழன்"]

இக்கல்வெட்டானது சுசீந்திரம் தாணுநாதர் கோயிலிலுள்ள கோபுரவாயிலின் வடக்குச் சுவரிலுள்ளது. இது தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கிறது. பூதலவீர இராமவர்மா, இராமராஜ விட்டலேச்சுரர் பிறந்த தினமாகிய உரோகிணி நாளில் தென் திருவேங்கட விண்ணவர் பெருமானுக்குச் சில படித்தரங்களை ஏற்படுத்தியதாக இக்கல்வெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இராமராஜ விட்டலேச்சுரர் A. D. 1544—1555-ல் விஜயநகரத் தலைவராக இருந்தவர். A. D. 16-ஆம் நூற்றாண்டின் (மத்தியில்) இடைப்பட்ட காலத்தில் திருவிதாங்கூரின் அரசியல் நிலைமை மிகவும் கவனிக்கத்தக்கது.

திருவிதாங்கூரின்மீது விஜயநகர அரசர்கள் அடிக்கடி படையெடுத்தார்கள். முதன்முதலாக அச்சுதராயரின் தூண்டுதலின் பேரில் சாலக்கம் திருமலை என்பவர் படையெடுத்தார். இரண்டாவதாக, சதாசிவராயரின் தூண்டுதலால் இராமராஜவிட்டல் என்பவர் படையெடுத்தார். திருவிதாங்கூர் அரசன் திருநெல்வேலி ஜில்லாவை (ஆக்கிரமித்ததே) தன்னகப்படுத்திக்கொண்டதே இதற்குக் காரணமாகும். பாண்டியர்கள் விஜயநகர அரசர்களின் பாதுகாப்பில் திருநெல்வேலி ஜில்லாவை ஆண்டுவந்தார்கள்.

போர்த்துக்கீசியரின் மதாசாரியரில் ஒருவரான 'பிரான்சியஸ் சேவியர்' என்பவர், கன்னியாகுமரி, தூத்துக்குடி முதலிய இடங்களிலுள்ள பரதர்களை A. D. 1543-ல் மதமாற்றம் செய்தார். போர்த்துக்கீசிய கவர்னர்கள் மிகப் பொருள் வருவாயுள்ளதும் அணிவகைள் ஏராளமாகவுள்ளதுமான இந்துக்களின் முக்கியமான கோயில்களை நாசப்படுத்திப் பொருள்களையெல்லாம் தம் அரசனுக்கு அனுப்பிவிட்டார்கள். இச்செய்தியை விஜயநகர அரசர் அறிந்து உடனே இராமராஜ விட்டலேச்சுரரின் தலைமையின்கீழ் ஏராளமான படைகளைத் தென் திருவிதாங்கூருக்கு அனுப்பினர். இதில்

இவர்கள் வெற்றிபெற்றார்கள். போர்த்துகீசியர் அஞ்சி ஓடிவிட்டார்கள். விஜயநகர அரசரின் படையெடுப்பானது திருவிதாங்கூரின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது.

விஜயநகர அரசர்களின் பாதுகாப்பில் வீர இராமவர்மா, தக்க வலிமையுடையவராயும், நுண்ணறிவுத்திறன் வாய்ந்தவராயும் இருந்து நாட்டை அமைதியாக ஆண்டதாகத் தெரிகிறது. கன்னியாகுமரியில் வெளியான ஓர் கல்வெட்டிலிருந்து விதித்தல தேவர் வெற்றிபெற்று வெற்றிக்கொடியொன்று நாட்டியதாகத் தெரிகிறது. திருவிதாங்கூர் அரசர்களைப்பற்றிய பல கல்வெட்டுக்கள் திருநெல்வேலி ஜில்லாவில் ஏராளமாக உண்டு. தென் திருவிதாங்கூரில் பல கோயில்களிலுள்ள கல்வெட்டுகளிலிருந்து, பூதலவீர இராமவர்மாவும், பூதலவீர உதய மார்த்தாண்ட வர்மாவும், M. E. 722-ல் ஆண்டதாகத் தெரிகிறது. இவர்கள் தனியரசாக (சுவாதீனமாக) ஆண்டுவந்த அரசர்களாவார்கள்.

கல்வெட்டு

"1. ....ஸ்ரீகொல்லம் எாஉ0உ-ம் ஆண்டு துலா ஞாயிற்று பூறுவபக்சுத்து துதிகையும் மங்கல
2. வாரமும் பெற்ற அனுழத்தினாள் செதுங்கநாட்டு சங்கரநாராயணமூர்த்தி வேளைக்காறன் வென்றும
3. ன் கொண்ட பூதலவீர இராமவர்மர் என்று பேருடை செதுங்க நாட்டு மூத்தவராய நாம் நயி
4. னார் சிவிந்திரமுடைய நயினார் கோயிலுக்கு சீகாரியமும் சீகாரிய (க்) கணக்கும் மொழிய நயினார் தேசமாய்
5. உள்ளதுக் கெல்லாம் கேள்வியும் ஆச்சினையும் நாளது முதலுக்கு தவிர்த்து இதிலுண்டான கேள்வி உடை
6. மையும் ஆச்சினை உடமையும் ஆண்டு ஒன்றுக்குக் கோட்டை இருபதுக்கு திரு
7. நாள் படிக்கு பணமும் நெல்லும் உற்றபடியும் விட்டலேச்சுர மகாராசாவின் திருநற்கேத்திரமான உரோ
8. கணி நர்கேத்திரத்தில் பெருமாள் தென் திருவேங்கட விண்ணவர் பெருமான் அமுது செய்ய சிற
9. ப்புக்கும் மாயிதத்துக்கும் திரு ஆராதனை கூடினால் பிறத்தே சீவிலிப் பிறகாரத்திலே எழுந்தருளுகிற
10. வகைக்கும் விட்டுக் கொடுத்தோம். நயினார் தேசமாய் உள்ளதுக் கெல்லாம் வயிராவியயும் மு
11. றையம் பிள்ளையும் நயினார் சுசீந்திரமுடைய நயினா (ர்) ஆணவாளாகப் பார்த்துக் கொள்ளும்

12. படி எழுநூற்று இருபத்திரண்டா மாண்டு அற்பசி மாதம் இருபத்தாறுந் தெய்தி மலை மண்டலத்து
13. தலைக்குளத்தில் வீடாயிருந்து கற்பித்த அளவுக்கு ஆசந் தரதாரவற் செம்பிலும் கல்லிலும் வெட்டிப் பரிப்பித்துக் கொள்ளவும் இப்படிக்குக் கணக்கு வெங்கடக் கிட்டினன் எழுத்து."

சிலாசாசன ஆராய்ச்சி உலகில் திருவாளர் S. தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு விசேட ஆற்றல் உண்டு. கல் வெட்டுக்கள் சம்பந்தமாக இவரால் அரிய பெரிய ஆராய்ச்சிகள் வெளிவந்தநுண்டு. சமீபத்தில் காந்தளூர்ச்சாலையைப் பற்றி ஓர் ஆராய்ச்சி அவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சென்ற 3, 4 மாதங்கட்கு முன் நானும் அவருமாக நாகர் கோவில் பந்தடிக்கிளப்பின் பக்கத்தில் ஓர் கல்வெட்டு எடுப்பதற்காகச் சென்றோம். கல்வெட்டை எழுதி எடுத்தோம். ஒருவரியானது எங்களை மயங்கச்செய்துவிட்டது. அந்த வரியில் பொடிந்துபோன 1, 2 எழுத்துக்கள்மட்டும் உண்டு. இதை வைத்துக்கொண்டு யாருக்குத்தான் வாசிக்கமுடியும்? அவர் சிறிது பொழுதில் வாசித்துக்காட்டினார். பின் என்னை வாசித்துப்பார்க்கும்படி சொன்னார். நான் படித்துப் பார்த்து மிகவும் வியப்படைந்தேன்.

மேலே குறித்திருக்கும் கல்வெட்டானது சரித்திரத் தொடர்ச்சிகளுடனும், அரிய குறிப்புக்களுடனும் அவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டின் 13-வது வரியானது 'தலைக்குளத்தில் வீடாயிருந்து கற்பித்த' என்று தெரியவந்தது. இக்கல்வெட்டின்மீது நீறுபூசிய காரணத்தால் 'த'விலுள்ள வாலானது நீற்றினல் மறைக்கப்பட்டு இவ்வித மாறுபாட்டை உண்டுபண்ணி விட்டது. இம்மாறுபாட்டை அவரிடம் தெரிவித்தேன். அவர் என்னை வெளியிடுமாறு சொல்லியதால் இதை வெளியிட்டுள்ளேன். அவரது குறிப்புக்களையும் ஒருவாறு சுருக்கமாகக் கூறியிருக்கின்றேன்.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

[புதுக் கவி]

ஆலயத் திறப்பு

அல்லது

க்ஷேத்திரப் பிரவேசனச் சதகம்.

இசைத் தமிழ்ச் செல்வர்

[உயர் திரு. T. இலக்குமண பிள்ளை, பி. ஏ. அவர்கள் பாடியது]

நொண்டிச் சிந்து

(முன் ௬௯௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அயித்தம் இறந்த" தென்றார்—சமூக
அடிமைத் தனம், பொடிந்த தவர்ணர் உய்ந்தார்
ஜயித்தது ஹிந்துமதம்—எனவே
தீட்டின உயர்கொடிகள் நீட்டினரே. 69
ஐம்பது யானைகள்மேல்—நமது
அரசனுருவம் எழுந்தருள வைத்து
கொம்பு குழல் முழங்கவே—திவ்ய
கோஷ யாத்ரை தொடர்ந்தடர்ந் தார்ப்பரித்தார். 70
சப்பரங்கள் அலங்கரித்துத்—தம்பிரான்
சாயலை யமைத்தவற்றில் சார்ந்திடவைத்து
"அப்பன் எங்கள் ஐயன்" எனவே—பல்லாண்
டாசி மொழிந்து மகிமை பேசலுற்றார். 71
ஆயிரங் கதிர்காட்டிச்—சப்பரத்
தாதித்தன் உதித்த செஞ்சோதி ப்ரபை
ஏயு நற்கீர்த்தி ப்ரபை—எங்கள்
இறையணிந்தான் என அறைகுவரே. 72
குன்றுயர் மதயானைப்—புறத்தோர்
கோபுரம் அலங்கரித்த சோபை நடுவில்
நின்றநம் அரசுருவம்—காண
நேத்திரங்கள் ஓராயிரம் ஆத்திரமே. 73
காந்தி மகாத்மாவும்—இங்கே
கதித்திடும் விரைவில் என்றுதித்தது சொல்

சேர்ந்தது நாடெங்கும்—களிப்பால்
திளைத்தனர் வன்முழக்கம் விளைத்தனரே. 74
கடல்போற் பெருங்கூட்டம்—எல்லாக்
கரையுங் கடந்து திரண்டெழுந்தது போல்
அடலோ டனந்தை நகர்—அடைந்தனர்
அடர்ந்தனர் காந்தியைத் தொடர்ந்தனரே. 75
காந்தி மகாரிஷியும்—இவ்வரிய
காரியம் அறிந் துளத்தில் களிகூர்ந்தான்
வேந்தனை மிகமெச்சினான்—"தெய்வவருள்
மேலிட்டதனால் இச்செய்தி நேரிட்ட" தென்றான். 76
சீரனந்தை நகர் நடுவில்—இதையிட்டுச்
சேர்ந்த ஒரு பேரவையில் தான்றலைவனாய்
"வீரசிங்கம் நமதரசன்"—என்று
வியந்து வியந்துரைத்து நயந்து சொன்னான். 77
"மகாராணி பார்வதி பாயும்—நாட்டின்
மந்திரி சசிவோத்தமனும் இந்த வினையில்
சகாயம் நின்றார்" என்றறைந்தான்—கட்டளையைச்
சகலரும் ஒத்துழைத்துத் தகநடத்திப் 78
"போற்றிடுதல் வேண்டும்" என்றான்—"அதிலே
புண்யமுண்டு யாவருக்கும் கண்யமுண்" டென்றான்
"நாற்றிசையும் செல்க" என்றான்—"இந்திய
நாடு முழுவதும் ஒன்றுகூடலாம்" என்றான். 79
ஆலயம் தொழச் சென்றால்—அங்கே
அவர்ணர் சவர்ணர் என்ற கவர்கெடவே
சாலவும் நன்மனத்தராய்த்—தொழுக
தணிவுடன் பக்திதரும் பணிவுடனே. 80
பக்தியுடன் நம்பிக்கையுடன்—கோயிற்
படிகடந் திறைவன்றன் அடிபணிந்தால்
சுத்தியுற்ற மனத்துடனே—திரும்பலாம்
தூய நம்பிக்கையும் அங்கோர் தோயல்பெறுமே. 81
வாக்கும் மனமுங் கடந்த—கடவுளுக்கும்
மக்களுக்குள் ஞானமில்லா மிக்கவர்கட்கும்
போக்கு வரத்துக்குரிய—பாலங்கள்
போலும் இவ்வம்பலங்கள் சால நன்றே. 82
"ஏகமனதுடன் கட்டளை—யளித்த
இதமறிந் ததற்கொத்த விதம் நடப்பீர்
தேகசுத்தி, ஆத்மசுத்தி—விருத்தித்
தெய்வ வழிபாடு செய்தல் உய்வழி" யென்றான். 83
அவர்ணரும் சவர்ணருமாய்—ஆராய்ந்
தாத்ம அவஸ்தையைக்கொண்டு பார்த்து மனங்கள்

நவநிலை யடையுமென்றால்—நாட்டில்
நன்மை விளைவதுடனே வன்மை யகலும். 84
"சாம் நிலைமையிலிருந்த—ஹிந்துமதம்
தழைத்த திந்நாட்டினர் உழைத்த தென்றே
பூமியின் சரித்திரத்தில்—பொன்றாப்
புகழணிந் தெப்பொழுதும் திகழ்வீர்" என்றான். 85
தன்னாட்டில் இதுசெய்ததால்—நிருபன்
தாரணியிலெங்கும் உயர் பேரணிந்தானே
எந்நாடும் பின்பற்றியே—இதுபோல்
இயற்றி, ஹிந்துமதத்தை உயர்த்திடலாம். 86
"அம்பலங்கள் திறந்ததனால்—இவ்வரசன்
அறிவிலும் துணிவிலும் நெறியிலுமே
தன் பலங்கள் உறவைத்துச்—சாகாத்
தனியிசை நிறுவினன் இனிதின்" என்றான். 87
"ஆன்மீக முன்னேற்றத்தில்—கல்வி
யறிவும் பொருட்பெருக்கும் துறையிலெல்லாம்
மேன்மேல் கெழுவுதலும்—அடங்கும்
மெய்யறிந் ததற்குத் தகச்செய்மின் வகையே. 88
பல்லாயிரம் இடங்களிலே—இருளே
படிந்து, மனமடிந்த குடிசைகளில்
உல்லாச மனவெளிச்சம்—புகுந்திப்போ
தொளிர்வது காண மனங் குளிர்கின்றதே. 89
நாட்டுவளம் பெருகவே—இனியிங்கு
நானா சமுதாயங்களும் ஊனமின்றியே
கூட்டு முயற்சி செய்யலாம்—அதற்கேற்ற
கோட்டுறைகள் பலவுண்டிந் நாட்டினிடையே. 90
"இந்தப் பெருவிளம்பரத்தை—இனிமேல்
இலகுவில் மறக்குமோ உலகமதே?
எந்தப் பெருங் காரியத்தை—மறக்கினும்
இதை மறவா திறவாதி" தென்றான். 91
ஆலயம் புகுந்தனனே—மகரிஷி
அவர்ணர் எனப்பட்டோரும் சவர்ணருமாய்
மாலவன் சந்நிதிக்கே—சென்று
வணங்கினன் கர்மிகளும் இணங்கினரே. 92
அதிசயம் இந்நிகழ்ச்சி—எங்கும்
ஆரும் தடங்கலின்றி அடங்கிநின்றார்
இதுசெய ஈசனருள்—நன்று
யிருந்ததால் இப்படிக்கு நடந்த தென்றான். 93
கடவுளே வேலைசெய்தான்—வேந்தன்
கருத்திலே அவனருள் உருத்த தென்றான்

திடமுடன் வேலைசெய்தால்—ஹிந்துதர்மம்
திருந்தி உலகமெங்கும் பரந்திடுமே. 94
விளம்பரம் புதிய ஸ்மிருதி—அதன்
விடயம் மதமொட்டினும் அடையும் பயன்
களம்பல பரந்திடுமே—நலமுள்ள
காரியங்கள் வேறுந்தரும் வீரியமுண்டே. 95
வேற்றுமைகள் யாவு மறந்து—நம்மதத்தின்
மேலை நன்மைக்குணம் ஒத்து வேலைசெய்யுமின்.
போற்றிக் கொண்மின் விளம்பரத்தை—இந்தப்
பூமியெங்கும் பரந்திடும் க்ஷேம முள்ளதே. 96
" தீவினைகள் அகன்றிடுமே—மனிதர்
திசை முழுதிலும் சமரச நிலையை
மேவி யின்பம் நன்கு பெறலாம்"—என்று
விரித்தனன் உலகினைத் தெரித்தனனே. 97
கட்டளையின் தத்வ முணர்ந்து—நடந்தால்
கடிதெழும் ஹிந்துமதம் வடுவின்றியே
முட்டுத்தடை யொன்று மின்றி—முயல்வீர்
முற்றுப்பெறும் நல்லெண்ணங்கள் சற்றுப்பொறுமே. 98
கடவுளும் உமக்கிரங்கி—இந்தப்பெருங்
காரியத்திற் குரமும் நல்லார்வமுந் தந்து
சடைவின்றி யுழைத்திடவே—திருவுளம்
தணிந்து துணைபுரியப் பணிந்தன் என்றான். 99
நெடுநாள் வாழ்ந்திருக்க—அரசன்
நெடுநாள் திகழ்ந்திடும்படி இறைவன்
அடிபோற் றிடுவோமே !—மன்னவன்
ஆணையைச் சிரமேற்கொண்டு பேணிக்கொள்வமே. 100
றவன்றனன் லக்ஷ்மணனே—இந்த
நொண்டிச்சிந்துப் பாடிப்பல தொண்டிற் புகுவோம்
அவன்றன்நல் வந்தனங்கள்—கட்டளையின்
அடியில் வைத்தான், வேந்தன் அடித்தொண்டனே. 101

முற்றும்.

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு

மனக் கண்ணி

(கிளிக் கண்ணி—மெட்டு)

1. தெய்வமென்று வணங்கும்
   தேவிமுன் உயிர்ப் பலி
   செய்வது முறையாமோ—மனமே (அது நம்)
   சைவத்துக்கு அழகாமோ?
2. காளியம்மன் கோவிலிலே
   கையிரண்டும் கூசாமலே
   கோழிகளைக் கொல்லலாமோ—கொடையில்
   கொடும் பாவம் செய்யலாமோ?
3. நாமும் அம்மன் கோயிலிலே
   நள்ளிரவு வேளையிலே
   ஆடுகளை வெட்டலாமோ—அதனால்
   அரும்பாவம் கிட்டலாமோ!
4. வலிய இழுத்து வந்து
   வாயில்லாப் பிராணிகளைப்
   பலிசெய்ய நினையாதே—இனிமேல்
   பாவச்செயல் புரியாதே.
5. எல்லா விரதங்களும்
   ஏற்பதைப் பார்க்கிலும்
   கொல்லா விரதமொன்றே—தினம் நீ
   கொள்வது மிகவும் நன்றே.

—கா. பி. ஆவுடையப்பன்.

ஆடு, பன்றி, கடா அம்மனை வேண்டுதல்

('தேயிலைத் தோட்டத்திலே' என்ற மெட்டு)

(1) பாளையம் பராசக்தியே—உந்தன்
   பாதம் பணிந்துமே வீதிநின் றழுகின்றோம்
   கேளம்மா எங்கள் குறை—பலி
   கேட்டாய் நீ யென்றுன்மேல் சாற்றிப் பழியந்தோ
   வாளினு லெம்மை வெட்டி—மாந்தர்
   வரந்தர வேண்டுமென்றிரந்துன்னைப் பூசிப்பார்
   நாளையுன் கோயிலிலே—வேத
   நல்அறம் அழிவதை சொல்லவந் தோமடி (பாளையம்)

(2) மானிட ஜென்ம மொன்றே—இந்த
   மண்ணில்வாழ் உயிர்தமில் புண்ணிய ரென்பார்கள்
   கானகந் தன்னில் வாழும்—புலி
   கரடி சிங்கத்தினு முரடர்களா யெங்கள்

ஊனினை விரும்பித் தின்றே—அந்தோ
உந்தன் பெயரையும் நிந்தைக்குள் ளாக்குறார்
ஈனப் புலாலை உண்ணோம்—நாங்கள்
இறக்கநேரி னுமேலாந் துறக்கம் பெறினுமம்மா (பாலை)

(3) மக்களுக் குற்ற பிணி—நல்ல
மருந்தினால் தணிப்பதே முறையென் றறியாமல்
திக்கற்ற வெங்களையே—வெட்டி
தெய்வத்தின் முன்படைத் துய்வோமென் பாரந்தோ
துக்க மொடு நகைப்பே—எம்மைத்
தூண்டுகின்றதிவர் வேண்டுமுறைகண்டே
எக்காலம் வந்திடுமோ—பலி
இடுகின்ற கொடுமைக ளடியோ டழிந்திட (பாலையம்)

(4) எங்கள் தலைதனிலே—பிரமன்
இவ்வாறெழுதியுன் பவ்வியர் கையாலே
பொங்கலாகச் சமைத்தே—உன்னைப்
பூசிக்க வேண்டுமென் றூசித்தானோ பாவி
அங்க முருகுதடி—உந்தன்
ஆலயங்கண்டாலுங் காலுங்கைசோருதே
எங்கும் நிறைந்தவளே—பலி
ஏற்றுக்கொள்ளே னெனச் சாற்றிடலாகாதோ (பாலையம்)

(5) கோயில் முன்னே கொலைகள்—சற்றும்
கூசாமல் செய்திட வீசுகின்றார் வாளை
வாயில்லாப் பிராணிகளாய்—ஒரு
வழியுந் தெரியாமல் விழிக்கின்றோம் ஐயையோ
தாயுந்தந்தை யுமில்லை—எம்மைத்
தாவியணைத் துட லாவியைக் காத்திட
தூயவர்தாம் இல்லையோ—சிபி
தோன்றிய நாட்டினி லான்றோ ரறங்காக்க (பாலையம்)

—T. S. ஸ்ரீபால் அவர்கள்.

WIRE

FROM 14—7—'37

WARDHAGANJ,

TO **ANTI-SACRIFICE LEAGUE,**

PALAMCOTTAH.

Sacrifice of animals in name religion is remnant of barbarism.

GANDHI.

தந்தி

FROM 14—7—'37.

வார்டாகஞ்ச்.

TO

பலி விலக்குச் சங்கத்தினருக்கு, பாளையங்கோட்டை.

மதத்தின் பெயரால் உயிர்ப் பிராணிகளைப் பலியிடுதல் அநாகரிகத்தின் கையிருப்பு.

(கையிருப்பு என்றால் நம்மிடமுள்ள அநாகரிகப் பழக்க வழக்கங்களில் ஒழிந்தனபோக மீந்திருப்பது.)

காந்தி.

குறிப்பு:—உலகப் பெரியாராகிய மகாத்மா காந்திஜியின் கட்டளைப்படி, பலியை நிறுத்தவேண்டுமாய் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பலி விலக்குச் சங்கத்தார்,
பாளையங்கோட்டை.

பலி விலக்குதலைப் பற்றி
ராஷ்டிரபதி ஜவஹர்லால் நேரு அவர்களின்
அறவுரைக் கடிதம்

ALLAHABAD,
21—7—1937.

FROM
THE PRESIDENT.
ALL INDIA CONGRESS COMMITTEE,
'SWARAJ BHAWAN,' ALLAHABAD.

TO
THE SECRETARY,
ANTI-ANIMAL SACRIFICE LEAGUE,
PALAMCOTTAH (S. INDIA.)

Dear Sir,

I am grieved to learn that it is proposed to offer animal sacrifice in temples. I think that such sacrifices are barbarous and they degrade the name of religion. I trust that the authorities of the temple will pay heed to the sentiments of cultured people in this matter and refrain from such sacrifices.

(Sd.) JAWAHARLAL NEHRU.

FROM

தலைவர்,
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி,
சுயராஜ் பவனம், அலஹாபாத்.

TO

அமைச்சர்,

பலிவிலக்குச் சங்கம், பாளையங்கோட்டை.

அன்பார்ந்த ஐயா,

கோவில்களில் மிருகங்களைப் பலியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்று கேட்க மிகவும் வருந்துகின்றேன். அவ்வாறு பலியிடுதல் மிலேச்சத்தனமென்றும் சமயத்திற்கு இழுக்கென்றும் நான் கருதுகின்றேன். இவ்விஷயத்தில் கோவில் அதிகாரிகள் கற்றவர்களுடைய மனப்பான்மையைக் கவனித்து அவ்வாறு பலியிடுவதை விலக்குவார்களென்று நான் நம்புகின்றேன்.

(ஒப்பம்) ஜவஹர்லால் நேரு.

திரு. C N. முத்துரங்க முதலியார் அவர்கள், தலைவர்

தமிழ்மாகாண காங்கிரஸ் கமிட்டி, சென்னை.

ஸ்ரீ. வ. திருவரங்கம் பிள்ளை. பலிவிலக்குச் சங்கம், பாளையங்கோட்டை.

அன்புள்ள ஐயா,

கடவுளுக்குப் பிரீதி செய்வதாகப் பாவித்து ஜீவ வதைசெய்வது மிகவும் அடாதகாரியம். குறள் ஆசிரியர் திருவள்ளுவர் போன்ற பெரியார்கள் கொல்லாமையே சிறந்த விரதம் என்று நமக்குப் போதித்து இருக்க நம்மைப் படைத்த கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜந்துக்களைத் தெய்வத்தின் பேரால் கொலைசெய்வது பெரிய பாவம் என்று யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். கடவுள் சம்மதமான செயலும் ஆகாது. இதைக் கடவுள் முற்றிலும் வெறுப்பார் என்று நிச்சயமாகச் சொல்லலாம். பலிவிலக்குச் சங்கத்தார் இது விஷயமாக எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். உண்மையான சைவர்கள் சிவம் அன்புமயம் என்பதை மனதில் வைத்துப் பலியிடும் கொடிய வழக்கத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(Sd) C. N. முத்துரங்க முதலியார்.

25-7-37 திருநெல்வேலி சர்க்கிள் தேவஸ்தான கமிட்டியார் பிறப்பித்த நடவடிக்கை.

Resolution:—Committee considers that animal Sacrifice in the name of the deity is highly reprehensible unsastric and uncivilised and derogatory to humanity.

(Sd) Medai Dalavei Kumaraswamy Mudaliar.

President.

'தெய்வத்தின் பெயரால் உயிர்ப் பிராணிகளைப் பலியிடுதல் மிகவுங் கண்டிக்கத்தக்கதாகவும், சாஸ்திர விரோதமாகவும், அநாகரீகமாகவும், மனிதத்தன்மைக்கு இழிவைத் தரக்கூடியதாகவு மிருக்கிறதென்று கமிட்டியார் கருதுகிறார்கள்.

PROCEEDINGS OF THE PUBLIC MEETING OF TUTICORIN

under the auspices of

The Saiva Siddhantha Sabah, Tuticorin

(Established: 1883)

on 25—7—'37 under the Presidency of

M. R. Ry. M. A. Perumpadayan Pillai Avl., B. A., B. L.

Vakil, Tuticorin.

Subject:—திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் விஷயமாய் இந்துமத பரிபாலன போர்டார் பிரசுரித்திருக்கிற Notification விஷயம்:—

1. இந்த ஜில்லாவில் மிகப்பழமையானதும் பிரதானியமானதுமான தேவஸ்தானங்களில் ஒன்றாய் இந்த ஜில்லா வாசிகளின் ஆளுகையிலேயே தொன்றுதொட்டு இருந்துவரும் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தை சென்னை இந்துமத போர்டார் சமீபத்தில் தங்கள் நேர் ஆளுகைக்கு எடுக்க முயற்சிப்பதை இச்சபையார் பலமாய்க் கண்டிக்கிறார்கள்.

2. தலத்துப் பழக்க வழக்கங்களைத் தழுவி தலதேவஸ்தானங்களைத் தலத்தார் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளால்தான் செவ்வையாய்ப் பராமரிக்க முடியுமென்றும், அந்நியர் ஆட்சியில் அத்தகைய பராமரிப்பு இருக்க முடியாதென்றும், தொன்று தொட்டு இந்த ஜில்லா வாசிகளிடமேயிருந்து வருகிற ஷை கோயிலின் ஆளுகையைப் போர்டார் எடுத்துக்கொள்வதற்கு ஷையார்கள் சொல்லும் காரணங்களும் பொருத்தமற்றவையென்றும், போதியவை இல்லையென்றும் இச்சபையார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

3. ஷை காரணங்களில் அநேகம் தேவஸ்தானக் கணக்குவைப்பு முறையைப் பற்றினவையாயிருப்பதில் அவைகளுக்கெல்லாம் இப்பொழுது சூப்பிரண்டெண்டு பேரில் தர்மகர்த்தாவுக்கு effective control இல்லாததே முக்கிய காரணமென்றும், அதைச் சீர்திருத்தி ஷை சூப்பிரண்டெண்டைத் தர்மகர்த்தா, சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியார் இவர்கள் control-லில் வைத்துவிட்டால் தேவஸ்தான வேலைகள் செவ்வனே நடைபெறுமென்றும் இச்சபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவே அவ்விதம் சீர்திருத்தங்கள் செய்வதை விட்டு ஷை கோவிலை சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியின் control லிலிருந்து எடுக்கும்படியான நடபடிக்கைகளில் போர்டார் தலையிடுவதை இச்சபையார் கண்டிக்கிறார்கள்.

4. போர்டாரின் ஷை நடபடிக்கை பொதுமக்களுரிமையைப் பெயர்த்துத் தனிப்பட்ட கூட்டத்தாரிடம் கொடுக்கக் கூடியதாயிருப்பதால் அந்த நிலைமையிலும் அது மிகவும் ஆட்சேபகரமானதென்று இச்சபையார் கண்டிக்கிறார்கள்.

ஷை தீர்மானங்கள் கூட்டத்தில் ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டன.

(Sd.) M. A. Perumpadayan Pillai,
President.

(True copy.)

இசைத்தமிழ்ச் செல்வர்

திருவாளர் தி. இலக்குமண பிள்ளை, பி. ஏ. அவர்கள் பாராட்டப்பட்டார்

காரனேஷன் மெடல் அளிக்கப்பட்டது

இசைத்தமிழ்ச் செல்வர் திருவாளர் தி. இலக்குமண பிள்ளை அவர்களை யாவரும் அறிவர். தாமாகவே உருக்கமான தமிழ்க் கீர்த்தனங்கள் பாடியிருத்தலால் தமிழ்நாட்டுத் தியாகராயர் என இப்பெரியாரைக் கூறுவார்கள். தமிழ்த்தாய்க்கு இவர்கள் செய்த தொண்டு அளவிடற்கரியது. தமிழ்ச் சங்கீதத்திற்குப் பெருந்தொண்டு செய்த பெரியார். தமிழ்மொழியில் பொருட்பொலிவும் அழகும் நிறைந்த பல கீர்த்தனங்கள் அமைத்திருக்கின்றார்கள். இப்பெரியாரின் பாடல்கள் பல நம் 'செல்வியில்' வெளிவந்திருக்கின்றன.

திருவாளர் இலக்குமண பிள்ளை அவர்களுக்கு அண்மையில் மேன்மை தங்கிய சக்கரவர்த்தியின் காரனேஷன் மெடல் திருவிதாங்கூர் மகாராஜா அவர்கள் வழியாக வழங்கப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியை நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தமிழறிஞர் இராவ் சாஹிப்

வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்

எண்பதாவதாண்டு நிறைவுவிழா

1-8-'37 ஞாயிறன்று நெல்லையில் மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரியில் உயர் திரு. இராவ்சாகிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் எண்பதாவது ஆண்டுவிழா மகாமகோபாத்யாய டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் தலைமையில் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சர். S. குமாரசாமி ரெட்டியார், ராவ்சாகிப் P. ஆவுடையப்ப பிள்ளை, தூத்துக்குடி A. C. பால் நாடார், பி. ஏ., பி. ல்., R. P. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. ல்., வி. வி. சீனிவாசாசாரி, வி. எஸ். நடராஜ அய்யர், T. K. சிதம்பரநாத முதலியார் பி. ஏ, பி. எல்., M. V. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ. ஆகிய அறிஞர்களும் தமிழ் வித்வான்களும், பிற அன்பர்களும் விழாவிற்கு வந்திருந்தனர்.

திருவாவடுதுறை மகாசந்நிதானமவர்கள் தம் கட்டளைத் தம்பிரான்வழி ரூ. 300 கொண்ட பண முடிப்பும், சால்வை ஒன்றும் பரிசாக அனுப்பிவைத்தனர்.

விழாத் தலைவரவர்கள் தமது முன்னுரையில், உயர் திரு. வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் முதுபுலமையுடையவர்களென்றும் தமிழன்னைக்கு அவர்கள் செய்திருக்கிற தொண்டு மிகவும் பாராட்டுதற்குரியதென்றும், அகலிகை வெண்பா, நெல்லைச்சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம் முதலிய செய்யுள் நூல்கள் யாத்திருப்பதோடு கம்பராமாயண சாரம் உரை, கல்வி விளக்கம் முதலிய நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்களென்றும், நல்லியல்பு, நல்லொழுக்கங்களிற் சிறந்தவரென்றும், ஆண்டில் மிக முதியவராயினுங்கூட கல்வியிலும் ஆராய்ச்சியிலும் இளைஞர்களைவிட சுறுசுறுப்புடையவர்களென்றும் சிறந்து கூறினார்கள்.

பின்னர் வரவேற்புக் கமிட்டியாரால் வாழ்த்து இதழ் படித்து வெள்ளிப்பேழையில் வைத்துத் திரு. முதலியாரவர்கட்கு அளிக்கப்பட்டது. அதன்பின் பல சங்கங்கள் வாழ்த்துத்தாள்கள் படித்து அளித்தன. குமாரசாமி ரெட்டியாரவர்களும், திரு. R. P. சேதுப்பிள்ளையவர்களும் திரு. முதலியாரவர்கட்கு டி. லிட் (D. Litt.) என்னும் பட்டத்தை வழங்கும்படி சென்னைப் பல்கலைக் கழகத்தாரைக் கேட்டுக்கொள்வதாக ஆர்வத்தோடு பேசினார்கள்.

உயர் திரு. முதலியாரவர்கள் தமக்கு இத்தனைச் சிறப்புக்கள் செய்தமைக்காக வரவேற்புக் கமிட்டியார்க்கும், ஆண்டு முதிர்ச்சியைப் பொருட்படுத்தாமல் நெடுந்தொலைவு வந்து தலைவராய் அமர்ந்து சிறப்புச் செய்த டாக்டர் ஐயரவர்கட்கும், திருவாவடுதுறை திருப்பனந்தாள் மடாதிபதிகட்கும் நன்றிகூறுவதாகச் சொன்னார்கள்.

பின்பு தலைவரவர்கள் முடிப்புரையோடு கூட்டம் இனிது முடிந்தது.

ரேடியோ கண்ட *மார்கோனி மறைந்தார்

மார்கோனி என்னும் ரேடியோ கண்ட உலகப் பேரறிவியலறிஞர் இத்தாலியில் உரோம் என்னும் நகரில் 20-7-37 காலையில் நெஞ்சுநோயினால் தமது அறுபத்து மூன்றாவது அகவையில் தம்புகழுடம்பை இம்மண்ணுலகத்துக்காக்கி நுண்ணுடம்பில் விண்ணுடு புகுந்தனர். இவர் பிரிவைப்பற்றி உலகமக்களனைவரும் துக்கங்கொண்டாடினார்கள்.

இவருக்கு ஒரு மனைவியும் நான்கு மக்களும் உண்டு. இவர் இறக்கும்போது இவருடைய சொத்து அரைக்கோடிபவுன் ஆம். இவர் எலத்ரா (Elettra) என்னுந் தம் அருமை ஏழுவயது பெண் குழந்தைக்கு தம் சொத்தில் நேர்பாதியாகிய கால்கோடி பவுனை எழுதி வைத்து விட்டாராம். இத்தாலியாவின் சொத்துப் பிரிவினைச் சட்டப்படி நான்கு பிள்ளைகளுக்கும் சமஉரிமையானமையால் மீதியில் நான்கில் ஒருபங்கும் அந்த ஏழுவயது பெண்ணுக்குக் கிடைக்கப்பெறுமாம். மார்கோனியின் மனைவியார் எலத்ராவின் கால்கோடி பவுனிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டியைத் தம் வாழ்நாள்வரை எடுத்துக்கொள்ளல் வேண்டுமாம்.

---

*இவர் வரலாறு இச்சிலம்பின் 7-வது பரலில் காண்க.

எருமைக்கடா பலி நின்று விட்டது

பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோவில் திருவிழாவில் பத்தாம் நாள் இரவு சமாதானபுரத்துக்கு தெற்கேயிருக்கும் மைதானத்தில் 12 வருடத்திற்கு ஒரு தடவை ஒரு எருமைக்கடா, ஒரு கர்ப்பமான ஆடு, ஒரு பன்றி பலியிடுவது வழக்கம். இது சென்ற 48 வருடகாலமாக நடந்துவந்தது.

இவ்வருடம் சென்ற ஒரு மாதமாய் பலிவிலக்கு சங்கம் ஒன்று ஏற்படுத்திப் பலமாய் பிரசங்கங்கள் மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், பஜனைகள் மூலமாகவும் பலியிடக்கூடாதென்று பிரசாரம் நடந்துவந்தது. சென்னை ஜீவரட்சகப் பிரசார சங்கத்திலிருந்து ஸ்ரீ. டி. எஸ். ஸ்ரீபால், கோஷ்டியாரும், "திருப்புகழமிர்தம்" பத்திராதிபர், ஸ்ரீ. கிருபாநந்தவாரியும், கடைசிவாரத்தில் நாடோறும் பிரசங்கம் செய்து ஜனங்களுடைய மனதை, இக்கரோமான வழக்கத்திலிருந்து மாறுபாடடையும்படி செய்துவந்தார்கள்.

மகஜர்

மேற்படி கோவில் விழாவில் எருமை முதலிய விலங்குகள் பலியிடக் கூடாதென்று, பாளையங்கோட்டை திருநெல்வேலியிலுள்ள படித்த அறிவாளிகள் சுமார் 500 பேருக்குமேல் கையெழுத்திட்டு பாளையங்கோட்டை சப் மாஜிஸ்டிரேட்டுக் கனுப்பினார்கள்.

கோவில் தர்மகர்த்தா ஸ்ரீ. முத்துசாமி அய்யர், தான் கமிட்டி உத்திரவுப் படியும் படித்த அறிவாளிகளாயுள்ள பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்தும், செவ்வாய்க்கிழமை 27-7-'37 இரவு சமாதானபுரம் பக்க மைதானத்தில் நடக்கும் எருமைப் பலியை நிறுத்திவிட உத்தேசித்திருப்பதாகவும், அப்படி உத்தேசித்திருப்பதில், கட்டாயம் பலி கொடுத்துதான் தீரவேண்டுமென்று பாளையங்கோட்டையிலும் பக்கத்துக் கிராமங்களிலும் சிலர் இருப்பதால் அவர்கள் தர்மகர்த்தாவின் கோரிக்கைபடி திருவிழாவை நடக்கவொட்டாமல் கலகம்செய்து தடுத்துவிடுவார்களோவென்று பயப்படுவதால், சமாதானபங்கமேற்படாமல் கி. பி. கோ. 144 படி தடை உத்திரவுபோட்டு பந்தோபஸ்து கொடுக்கவேண்டுமென்றும், பாளையங்கோட்டை சப் மாஜிஸ்டிரேட், ஸ்ரீ டி. விஸ்வநாத முதலியார் முன் மனுப் போட்டதாகத் தெரிகிறது.

மாஜிஸ்டிரேட் விசாரணை

27-7-'37 காலையில் மாஜிஸ்டிரேட் மேற்படி கோவில் தர்மகர்த்தா. மற்றும் பலரிடமும் வாக்குமூலங்கள் வாங்கினார். மகஜரையும் பார்வையிட்டார். போலீசாரிடமும் கலந்துகொண்டார்.

144 உத்திரவு

சப் மாஜிஸ்டிரேட் நேற்று பகல் 11 மணிக்கு கி. பு. கோ. 144 படி ஒரு உத்திரவு பிறப்பித்தார். அவ்வுத்திரவின்படி பாளையங்கோட்டை வாசிகளும் சுற்று வட்டார கிராமங்களிலிருந்தும் இந்த

திருவிழாவுக்கு வந்திருக்கும் ஜனங்களும் மேற்படி கோவில் தர்மகர்த்தா, திருவிழாவை, நேற்று மிருக பலியில்லாமல் நடத்துவதாக தீர்மானித்திருப்பதை, எதிர்க்கக்கூடாதென்றும், அப்படி எதிர்ப்பதால் சமாதானத்துக்கு ஏதாவது பங்கமேற்படுமாதலால், சமாதான பங்க மேற்படாமலிருக்கும்படி எச்சரிக்கப்படுகிறார்களென்றும், மேலும் நேற்றும் இன்றும் இத்திருவிழா சம்பந்தமாய் பாளையங்கோட்டை சமாதானபுரத்துக்குக் கிழக்கே மைதானத்தில் இதற்கு முன் எருமைப் பலி கொடுக்குமிடத்தில், அரிவாள், கத்தி, முதலிய ஆயுதங்கள் சகிதம் ஒருவரும் அடிக்கடி நடமாடக் கூடாதென்றும், அப்படிச் செய்வதினின்றும் தடுக்கப்படுகிறார்களென்றும், மேற்படி தர்மகர்த்தாவின் யோசனைப்படி விழாவை நடத்தப் போதிய போலீஸ் பந்தோபஸ்து கொடுக்கப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தடை உத்திரவு, தண்டோரா மூலமும், பிரசுரம் மூலமும் எங்கும் தெரிவிக்கப்பட்டது.

விழா

நேற்று மாலை இவ்வுத்திரவின் பயனாய்க் கோவில் சிப்பந்திகளும், சாமியாடிகளும், கோவிலுக்கு வராமல் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

பூசாரி ஓதுவாமூர்த்தியைக் கொண்டு, ஸ்ரீ. ஆயிரத்தம்மனுக்கு அலங்காரம் செய்து, சப்பரம் சுமார் 5-30 மணிக்குக் கோவிலை விட்டுப் புறப்பட்டது. பலத்த போலீஸ் பந்தோபஸ்திருந்தது. சப் மாஜிஸ்டிரேட், ஸ்ரீ டி. விஸ்வநாத முதலியார், தாசீல்தார், ஸ்ரீ. கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. சீனிவாஸலு நாயுடு, உதவி சர்க்கார் வக்கீல் ஸ்ரீ. சக்ரபாணி நம்பியார் மற்றும் பலரும், சப்பரத்துடன் சென்றனர். சப்பரம் எட்டு வீதிகள் வழியாய்ப் போய், இரவு 9 மணிக்கு கோவில் வந்து சேர்ந்தது.

எருமை பிழைத்தது

பலி இடுவதற்காகக் கொண்டுவந்த எருமைக் கடா, போலீஸ் பந்தோபஸ்தில் கோவிலில், சௌக்யமாயிருக்கிறது. அதன் உயிர் பிழைத்தது.

திருவிழாவுக்குக் கூட்டம் சுமார் 25,000 மக்கள் வந்திருந்தார்கள். ஆணும் பெண்ணும் பலியிடுவது நின்றுபோனதைப்பற்றிப் பேசிக்கொண்டு திரும்பினர். ஊர் பூராவும் இதே பேச்சாயிருக்கிறது.

மதிப்புரை :

கதிர்காமப் பிள்ளைத் தமிழ் :—திரு. சிவங். கருணாலய பாண்டியப் புலவர் இயற்றியது. நூலும், ஆராய்ச்சிக் குறிப்புரையும், கதிர்காம வரலாறும் கொண்டது. 180 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1. கொழும்பு விவேகானந்த சபைப் புத்தகசாலையிற் கிடைக்கும்.

கதிர்காமம் என்னும் மூதூரில் திருக்கோயில் கொண்டுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவனாக எடுத்துக்கொண்டு அப் பெருமானைப் பிள்ளையாகப் புனைந்து பிள்ளைத்தமிழ்த் துறையிற் பாடிய அழகிய நூலாகும் இச் சிறு நூல். செந்தமிழ்த் துறையில் முற்றக் கற்று மூதறிவுடன் விளங்கும் ஆசிரியர்தம் தமிழ்ப்புலமை யும், செய்யுள் வன்மையும், உரைத்திறமும் இந்நூலெங்கணும் மிளிர் கிறது. செய்யுள்போதும் உரைநடையே சாலும் என்று கூறும். இக்காலத்திற் சிறந்த உயரிய செந்தமிழ் நடையில் பிள்ளைத்தமிழ் ஒன்றை, அதிலும் செவ்வேட்குரிசிலைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு மிளிரும் பிள்ளைத்தமிழ் ஒன்றை ஈந்தமிழ்நாட்டிற்பாடி யுதவிப் பெருமையளித்த ஆசிரியர் கருணாலய பாண்டியப் புலவர் அவர்களை நாம் உளமார வாழ்த்துகிறோம். கதிர்காமத்தைப் பற்றிய ஆசிரியர் ஆராய்ச்சியுரை ஆராய்ச்சிவல்லுநரான தமிழறிஞர்கள் பலர் கருத்தையும் பிணிப்பதாகும். தெய்வமென்பதோர் சித்தங்கொண்ட தேமொழித் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் இந்நூலை விரைந் தேற்று ஓதியுணர்ந்து முருகன் அருள்பெறுமாறு வேண்டுகிறோம்.

இந்துமத தெய்வக்கொள்கை:—திரு. ச. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்டு சென்னைக் காக்ஸ்டன் அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. 200 பக்கங்கள். விலை ரூ. 1. சென்னை சி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸிலும், ஆசிரியர் S. கல்யாணசுந்தரம் பிள்ளை, 260, திருவொற்றியூர் ஐரோட், வண் ணாரப்பேட்டை, சென்னை என்ற முகவரியிடத்திலுங் கிடைக்கும்.

அழகாகக் கட்டடஞ் செய்யப்பட்ட சிறுநூல்; மக்கள் உணரும் எளிய நடையில் உயர்ந்த கருத்துக்களை எழுதித்தெரிப்பது. பல படங்கள் கொண்டது. ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டது.

"இந்துமதத்தில் அவசியமில்லாததும் இக்காலத்திற்குப் பொருந் தாததும், உண்மையின்னதென அறியப்படாததுமான பல விஷயங் கள் அடங்கிக்கிடக்கின்றன. அவற்றுள் அறியப்படாததாயுள்ள உண்மைகளில் சிலவற்றையேனும்" வெளியிட வேண்டுமெனக் குறித் துக்கொண்டு, சமயம், உருவம், கடவுள், உலகத்தோற்றம், வளர்ச்சி முறை முதலிய பல உயர்ந்த பொருள்களை ஆராய்ந்து ' எழுதியுள்ள ஆசிரியர்தம் ஆற்றலைப் போற்றுகிறோம். "இந்துமத சாஸ்திரம் மகரிஷிகளால் வகுக்கப்பட்டது. அச்சாஸ்திரப்படி மனிதரிடையே வேற்றுமைக் கிடம் கிடையாது. அதைக் கையாண்ட ஆசாரியர்கள் அதன் உயர்வைக்கெடுத்து சமூகத்தில் பேதத்தை உண்டுபண்ணி விட்டனர். அறிவாளிகள் அதன் உண்மையையறிந்து மற்றவர் களுக்கும் வழிகாட்டவேண்டும்" என்று பணித்துள்ள இந்நூலா சிரியர் காட்டிய பொதுவறவழியில் ஒழுகி முன்னேற விரும்பும் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும், சிறப்பாகத் தமிழ் மாணவர் களும் இந்நூலைக்கற்றல் இன்றியமையாததாகும்.

தமிழ் நாட்டுக்கு இந்திவேண்டாம்

[அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தமிழ்ப் பேராசிரியர் S. சோமசுந்தர பாரதியார் எழுதியது]

இந்தியைக் கட்டாயபாடமாகத் தமிழ் நாட்டில் ஏற்படுத்துவதற் கவசியம் எதுவுமில்லை. அகில இந்திய மகாநாடுகளில் கலந்து வட நாட்டாரை வசப்படுத்த விரும்புந் தலைவர்கள் அதற்கு அவ்வப்போ தைக்கேற்ற பிற பொதுமொழிகளிற் பயிற்சி தேடிக்கொள்ளுவர். இந் தியாவில் வடபகுதிகளில் யாத்திரை செய்ய விரும்புபவர்களும் அவ் வரிய சம்பவம் ஒன்றுபற்றி எல்லாரும் இந்தியைக் கட்டாயம் பயின்று கொள்ளவேண்டும் என்பதும் பொருந்தாத காரியம். தாய்மொழி யாகிய தமிழே எல்லாரும் கட்டாய பாடமாகப் படியாத நிலையில் தமிழரனைவரும் இந்தியைக் கட்டாய பாடமாகப் படிக்கவேண்டு மென்பது தமிழர் நன்மையை விரும்பும் யாரும் ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. தற்காலநிலையில் தமிழைத் தவிர வேறெந்த மொழியை யும் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக்குவது தமிழ்மொழி வளர்ச் சிக்கு இடையூறுவதோடு தமிழ்க்கலை யுணர்வுக்கும் தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்திற்குமே நன்மை பயவாதென்பது என் கருத்து.

தமிழ்வளர்ச்சிக்கு உதவும் புத்துணர்வுகளும், புதுக் கலையறிவும், ஒட்பமும் உயர்வும் தரத்தகும் பௌதிக சமுதாய அரசியலாதிய நூலறிவும் பெறுதற்கும் ஆங்கிலமுதலிய மேனுட்டு மொழிகளைப் போல இந்திமுதலிய வட இந்தியமொழிகள் உபகாரப்படுவனவுமல்ல.

எனைத்துவகையானும் தமிழ்நாட்டில் தற்காலம் இந்தியைக் கட் டாய பாடமாக்க விரும்புவோர் தமிழ்நலம் விரும்பாத எதிலரேயாதல் வேண்டும் என்பதொருதலை. தமிழ்ப்பயிற்சி நாடெங்கும் நிரம்பித் தலைநின்றோங்கியபிறகே பிறமொழிப் பயிற்சிபற்றிப் பேசுதற்கிடம் ஏற்படலாம். அதற்குமுன் பிறமொழிப் பீடுபேசுவோர் தமிழ் மொழிக் கேடுதேடுவோராவர். இது என் சொந்தக் கருத்து.

தமிழ் நாட்டுக்கு இந்திவேண்டாம்

(பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள் எழுதியது)

சீரிய அறிவியல் நூல்கள் பல ஆங்கில மொழியில் வெளிவந் துள்ளமையின் அவற்றின் பொருளைத் தெள்ளிதின் உணர்தற்கோ, அவற்றைத் தமிழ் மொழியில் வெளியிட்டு நம் தமிழ் மக்களைப் பண் படுத்துதற்கோ ஆங்கில மொழி இன்றியமையாததாகும்.

தமிழில் இல்லாத சிறந்த இலக்கிய இலக்கணங்களும், அறிவியல் நூல்களும் ஹிந்தியில் இருப்பதாகத் தெரியவில்லை. அங்ஙனமாயின் அதைக் கற்பதன் பயன் என்ன?

ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைத்தால் தான் வடபுலத்தாரும், தென்புலத்தாரும் ஒருவர் கருத்தை மற்றொருவர் உணர்ந்து ஏற்றழைக்க இடந்தரும் என்பது சிலர் கூற்று. அதற்கேற்ற அறிவை ஹிந்தியில் அடைய சில மாதங்களே போதியதாகும்.

தமிழும் இந்தியும்

[வித்வான் ஆ வீ. கன்னைய நாயுடு]

நமது இந்தியாவில் சில வாண்டுகளாய் இந்தியைப் பொது மொழியாக்க வேண்டுமெனச் சிலர் முனைந்து நிற்பதை யாவரும் நன்கறிவர். தாய்மொழியாகிய தமிழ்மொழியையே மாணவர் பலர் இதுகாறும் போதிய ஆவலுடன் கற்றனரல்லர். சமீபகாலந் தொட்டே அவர்கள் தமிழ்மொழியில் தமது கருத்தை ஒருவாறு செலுத்தலுற்றனர். தமிழ்ப்பற்றுள்ள சில பேரறிஞர்களின் பெருமுயற்சியே இதற்குக் காரணமென்பது மிகையாகாது. 'வெண்ணெய் திரண்டுவருந் தருணந் தாழி உடைந்தது' என்பதுபோல், இதுகாலைத் தமிழ்மொழியைப் புறக்கணித்து இந்தியைத் தமிழ் மாணவர்களுக்குக் கற்பிக்க முயல்வது சற்றும் ஏலாது.

நமது நாட்டில் நூற்றுக்கு எத்தனைபேர் இந்தி மொழியை வழங்குகின்றனர்? அதனைக் கற்பதனால் தமிழருக்கு யாது பயன்? தமிழ் மாணவர்கள் ஆங்கிலமும் தமிழும் கற்பதன்றி, இந்தியையும் பயில வியலுமா? ஆங்கிலத்தை ஒழித்து இந்தியையும் தமிழையும் கற்பிக்க முயல்வதும் கூடாமையேயாம். ஏனெனில், ஆங்கில அரசாட்சி நிலைபெற்றிருக்குங்காறும் ஆங்கிலமும் பயிலவேண்டுவது இன்றியமையாததல்லவா? தமிழ்மொழியோடு அயல்மொழியாகிய ஆங்கிலங் கற்க அரும்பாடுபடும் மாணவர் தலையில் பிறிதோர் அயல்மொழியைச் சுமத்தலாமா? நமது இந்தியாவில் இந்தி பல மக்களால் வழங்கப் படுகிறதெனின் இந்துஸ்தானியும் வழங்கப்படவில்லையா? அன்றியும் ஒருவராலும் வழங்கப்படாத வடமொழி, லத்தீன் போன்றவற்றைக் கைவிடலாமா? தமிழ்மொழியையே பொதுமொழியாக ஏன் அமைக்கலாகாது என்னும் பல வினாக்கள் எழுகின்றன. ஆதலால், இந்தி மொழியைப் பொதுமொழி யாக்காது அம்மொழியை விழையும் மாணவர்மட்டும் அதனைக் கற்குமாறு விட்டுவிடுதலே சிறந்த கொள்கையாமென நான் கருதுகிறேன்.

இந்தியும் வந்துவிட்டதே!

சென்னை மாகாணக் கல்லூரிகளில் 1, 2, 3-ஆம் பாரங்களில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாகவைக்கவும், இந்ததேச சரித்திர நூலை இந்திமொழி வாயிலாகக் கற்பிக்கவும் புதிய அரசினர் தீர்மானித்து விட்டதாகத் தெரிகிறது. இளைதாக முள்மரங் கொல்க என்றபடி உடனே எதிர்த்தொழிக்க முயல்வது தமிழர் கடமை.

உயிர்ப்பலி கைவிடப்பட்டது

விலங்குகளையும் கோழிகளையும் கடவுளர்க்கும் இறைவியர்க்கும் பலியிடும் நாகரிகக் குறைவான பழக்கம் இந்துக்களில் சில பிற்போக்கான வகுப்பினரிடம் இருந்து வருகின்றது. மேல் வகுப்பினரிற் சிலரும் தன்னலங் கருதியோ அன்றிக் கீழ்வகுப்பினரின் விருப்பத்தைத் தணிக்கக் கருதியோ இம்மாதிரிப் பழக்கங்களி லீடுபடுவது நமது குறையே.

திருநெல்வேலி ஜில்லா, பாளையங்கோட்டையில் ஆயிரத்தம்மனுக்கு 12 ஆண்டுகட்கொருமுறை ஒரு எருமை, ஒரு சினைப் பன்றி, ஒரு சினையாடு முதலியவற்றைப் பலியிடுவதும் கொடிய இப்பழக்கங்களில் ஒன்றாகும். இது சிற்காலப் பழக்கமேயானாலும் ஜில்லா முழுவதிலிருந்தும் மக்கள் திரள்திரளாய் இதைப் பார்க்க வருவார்கள்.

சிலகாலமாக இப்பலியைத் தடுப்பதே அறிவுடைய மக்களின் ஆர்வத்துடன் கூடிய முயற்சியாயிருந்து வருகின்றது. பன்னிரண்டாண்டுகட்குமுன் இவர்கள் "திருநெறித் தொண்டர் குழாம்" என்னும் ஒரு கூட்டமாய்க் கூடினர். இக்கூட்டமும் பாளையங் கோட்டை சைவசபையும் சேர்ந்து இதற்கெதிராக ஊக்கமான கிளர்ச்சியை யுண்டுபண்ணினர். ஆனால் அது பயனற்றதாயிற்று.

இவ்வாண்டு இப்பலியைப் பிப்ருவரித் திங்களில் நடத்த வேண்டுமெனக் கோரப்பெற்றது. ஆனால் அறிவுடைய மக்களிடமிருந்து எதிர்ப்பை எதிர்பார்த்தமையாலும் அவர்களை அயரச் செய்யவிரும்பியமையாலும் இவ்வெறுக்கத் தகுந்த செயலைச் செய்பவர்கள் இதை ஜூலைக்குத் தள்ளி வைத்தார்கள்.

ஆனால் பொதுமக்கள் "உயிர்ப்பலி எதிர்ப்பு இயக்கம்" என ஒரு கூட்டமாய்ச் சேர்ந்துகொண்டு கருதப்பட்ட இப்பலிக் கெதிராக ஒரு ஊக்கமான கிளர்ச்சியை யுண்டுபண்ணினர். திருநெல்வேலி சைவசித்தாந்தக் கழகத்தினர், திருநெல்வேலி எஸ். பி. சி. ஏ., சென்னை தென்னிந்திய நன்மை நாடுவோர் சங்கத்தினர், பாளையங் கோட்டை சைவ சபையினர் முதலிய எல்லோரும் இயக்கத்தினருடன் துணை சேர்ந்துகொண்டு இயக்கத்தின் வெற்றிக்காக உள்ளூர முயற்சி செய்தனர். எல்லா வகுப்பினரிலுமுள்ள இருபாலாரையும் பலியை விட்டுவிடுங் கொள்கைக்குத் திருப்பி இயக்கத்திற்குத் துணையாகப் பொது உணர்ச்சியை எழுப்பக்கருதி வடக்கிலிருந்து விரிவுரையாளர் சிலர் தருவிக்கப் பட்டனர். பஜனைகளும், ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. படக்காட்சிகளுடன் கூடிய விரிவுரைகள் பல நிகழ்த்தப்பெற்றன. சுவர் விளம்பரங்

களும், துண்டு வெளியீடுகளும் பரப்பப்பெற்றன. பொது மக்களில் பெரும்பான்மையினர் இயக்கத்திடம் பற்றுதலுடையவராயினர். பலியிடுவோர் இவ்வியக்கங் கண்டவர்களை அச்சுறுத்துதலாலும், ஏளனஞ் செய்தலாலும், மெய்வலியாலும் அஞ்சும்படி செய்துவிட முனைந்தனர். ஆனால் இயக்கத்தினரும் அவர்தம் கூட்டாளிகளும் ஆண்மையுடன் தங்கள் கடமையை யாற்றினர். முடிவில் இவர்கள் திருநெல்வேலிக் கோவில் குழுவினரையும் ஆயிரத்தம்மன் கோவில் பாதுகாப்பாளரையும் கண்டு பேசினார்கள். இவ்வியக்கத்தைப் போற்றியபின், "கடவுளின்பேரால் பலியிடுதல் ஒறுக்கப்பட வேண்டுவதும், சாத்திர முரண்பாடானதும், நாகரிக மற்றதும், மன்பதைக் கிழிவுதருவதும் ஆகும்" எனக் கோயிற் குழுவினர் ஒரு தீர்மானஞ் செய்தனர்.

காந்தியடிகளிடமிருந்து "சமயத்தின்பேரால் பலியிடுதல் காட்டுமிராண்டித்தனத்தின் தொடர்பாகும்" என ஓர் தந்தி கிடைக்கப் பெற்றது. பண்டித ஜவஹர்லால் நேரு கீழ்வருமாறு எழுதினர்.—"கோவில்களில் உயிர்ப்பலியிடக் கருதுவதாக அறிந்து வருந்துகின்றேன். இவ்வகைப் பலிகள் காட்டுமிராண்டித்தனமானவையென்றும், சமயத்தை இழிவு செய்வதாகுமென்றும் நினைக்கின்றேன். கோவிலதிகாரிகள் நாகரிகமுடைய மக்களினுணர்ச்சியைக் கருதி இவ்வகைப் பலியிடுவதினின்றும் தவிர்வார்களென நம்புகின்றேன்." திரு. முத்துரங்க முதலியாரும் ஓர் நல்லுரை யனுப்பினர்.

இவையெல்லாம் பலியிடுவதை விரும்பிய ஒரு சிறு கூட்டத்தினரைத் தணிக்கவில்லை. பொது உணர்ச்சி பலியிடுவதற் கெதிராக மிக்கிருந்தமையாலும் சிறுபான்மையோர் பலியிட முனைவது அமைதிக்குப் பெருமிடையூறாக நேரும் என எதிர்பார்க்கப்பட்டமையாலும் கி. பு. கோ. 144-பிரிவின்படி சப் மாஜிஸ்டிரேடால் ஆணை பிறப்பிக்கப்பட்டுப் பலியிடுபவர்களில் தலைமையானவர்களுக் கறிவிக்கப்பட்டது. இப்படியாக இப்பலி தவிர்க்கப்பட்டது. கடைசி நாளில் இயக்கத்தினர் விழாவை நடத்தி அதன் செலவைத் தாமேற் றுக்கொண்டனர்.

கொடிய காட்டுமிராண்டித்தனமான பலிகளைத் தடுக்கச் சட்டசபை விரைவில் முயற்சியெடுக்கும் என நம்பப்படுகின்றது.

பெருமாள் மேலரத வீதி,
பாளையங்கோட்டை,
3-8-'37.

S. சதானந்தம்.

The Jupiter Press, Madras.

Animal Sacrifice Given Up.

The barbarous practice of sacrificing animals and fowls to Gods and Goddesses is in vogue among some of the backward classes of Hindus. It is unfortunate that a few members of higher classes also associate themselves with such practices either with some selfish motives or with a desire to pander to the taste of the lower classes.

One of such inhuman practices is the practice of sacrificing a buffalo, a pregnant pig and a pregnant sheep once in 12 years to Ayirathamman in Palamcottah. This practice, though quite recent usually attracts large crowds from the whole district.

To prevent that sacrifice has been the earnest endeavour of the enlightened public for some time past. Twelve years ago, they formed themselves into a Society called "THIRU NERI THONDAR KULAM." This Society and the Saiva Sabha, Palamcottah, stirred up a strong agitation against it. But it proved futile.

This year, the sacrifice was proposed to be made in February but the promoters of the obscene rite, postponed it to July as they apprehended opposition from the intelligent public and wanted to lull it asleep.

But the public once again banded themselves into a league called "Anti-Animal Sacrifice League" and set up a very strong agitation against the proposed sacrifice. The Saiva Siddhanta Society, Tinnevelly, the S. P. C. A., Tinnevelly, The South Indian Humanitarian League, Madras and the Saiva Sabha, Palamcottah joined hands with the League and worked whole-heartedly for the success of the movement. Lecturers were got down from the North with a view to convert the minds of the people of both sexes of all classes to the idea of giving up the sacrifices and thus create a very strong public feeling in favour of the movement. Bajana parties and processions were taken out. Magic Lantern lectures were

delivered. Wall posters and leaflets were distributed and a large section of the public became sympathetic with the movement. The sacrificers attempted to frighten away the promoters by threats, ridicule and the use of physical force. But undaunted, the League and its associates did their duty and at last the Tinnevelly Circle Temple Committee and the Trustee of the Ayirathamman Temple were approached. The Committee sympathised with the movement and passed a resolution that "Sacrifices in the name of the deity is highly reprehensible unsastric and uncivilised and derogatory humanity."

A telegram was received from Mahatma Gandhi as follows: "Sacrifice of animals in the name of religion is remnant of barbarism." Pandit Jawaharlal Nehru wrote as follows:— "I am grieved to learn that it is prepared to affer animal sacrifice in temples. I think that such sacrifices are barbarous and they degrade the name of religion. 1 trust that the authorities of the temple will pay heed to the sentiments of cultured people in this matter and refrain from such sacrifices." Mr. Muthuranga Mudaliar also sent a sympathetic message.

All these failed to satisfy a small clique that was in favour of the sacrifice. As public feeling was running high against the preformance of the Sacrifice and it was apprehended that any attempt by the minority to perform the Sacrifice may be attended by a serious breach of the peace, orders under section 144 Cr. P. C. were passed by the Sub-magistrate and served upon the chief leaders of the sacrificers and thus the sacrifice was stopped. The League conducted the festival on the last day bearing the subsequent expenses.

It is hoped that the legislature would take early steps to stop such inhuman and barbarous sacrifices.

Perumal West Car St.,
Palamcottah.
3—8—37.

S. SATHANANTHAM.